காரல் மார்க்ஸ்

# மூலதனம்

## இரண்டாம் பாகம்



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

## கார்ல் மார்க்ஸ்

# மூலதனம்

### அரசியல் பொருளாதார விமர்சனப் பகுப்பாய்வு

## இரண்டாம் பாகம்

### மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறை

பிரெடெரிக் எங்கெல்ஸ் பதிப்பித்தது

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

**கார்ல் மார்க்ஸ்**

**மூலதனம்** — இரண்டாம் பாகம்

மொழிபெயர்ப்பாளர்: தியாகு

பதிப்பாசிரியர் : ரா. கிருஷ்ணய்யா

## பதிப்பகத்தார் குறிப்பு

*கார்ல் மார்க்ஸ் மறைந்த பின்னர் மூலதனம் இரண்டாம் பாகத்தை பிரெடெரிக் எங்கெல்ஸ் தக்க வடிவில் அமைத்து, வெளியீட்டுக்காகப் பதிப்பித்தார். இரண்டாம் பாகத்தின் முதல் ஜெர்மன் பதிப்பு 1885இல் வெளிவந்தது.*

*1893ஆம் வருடத்தியதான இரண்டாம் ஜெர்மன் பதிப்பும் கூட எங்கெல்ஸ் தயாரித்தளித்ததுதான்.*

*இரண்டாம் ஜெர்மன் பதிப்பின் அடிப்படையில் வெளிவந்த ஆங்கிலப் பதிப்பின் மொழிபெயர்ப்பே இந்தத் தமிழ்ப் பதிப்பு.*

*மூலதனம் இரண்டாம் பாகத்தின் முதல் ஜெர்மன் பதிப்புக்கும் இரண்டாம் ஜெர்மன் பதிப்புக்கும் எங்கெல்ஸ் எழுதிய முன்னுரைகள் இந்தத் தமிழ்ப் பதிப்பில் இடம் பெறுகின்றன. புத்தகத்தின் முடிவில் ஆதாரங்களின் அட்டவணையும், பெயர் அட்டவணையும், பொருள் அட்டவணையும் தரப்படுகின்றன.*

முதல் பதிப்பு : ஏப்ரல், 1998
ISBN No. : 81-234-0588-X
CODE No. : A993
**விலை : ரூ.900.00** அனைத்து மூன்று பாகங்களும் சேர்த்து ஐந்து புத்தகங்கள்.

© தமிழ் மொழிபெயர்ப்பு

*நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்*
*சென்னை-600 098*

அச்சிட்டோர் :
***பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்***
***142, ஜானி ஜான் கான் ரோடு,***
***ராயப்பேட்டை,***
***சென்னை - 600 0014.***

# Das Kapital.

## Kritik der politischen Oekonomie.

Von

**Karl Marx.**

**Zweiter Band.**

**Buch II: Der Cirkulationsprocess des Kapitals.**

**Zweite Auflage.**

Herausgegeben von Friedrich Engels.

Das Recht der Uebersetzung ist vorbehalten.

Hamburg
Verlag von Otto Meissner.
1893.

# பொருளடக்கம்

பக்கம்

முன்னுரை ........................................................ 1

## இரண்டாம் பாகம்

## மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறை

### பகுதி I

### மூலதனத்தின் உருமாற்றங்களும் அவற்றின் சுற்றுகளும்

அத்தியாயம் I. பண-மூலதனத்தின் சுற்று ........................ 33
I. முதல் கட்டம். M — C ........................ 34
II. இரண்டாம் கட்டம். திறனுடை-மூலதனத்தின் பணி......... 45
III மூன்றாம் கட்டம். C' — M' ........................ 50
IV சுற்று அதன் முழு உருவில் ........................ 64
அத்தியாயம் II. திறனுடை-மூலதனத்தின் சுற்று ........................ 84
I. சாமானிய மறுவுற்பத்தி ........................ 85
II. திரட்டலும் விரிதிற மறுவுற்பத்தியும் ........................ 103
III. பணத் திரட்டல் ........................ 109
IV. சேம நிதி ........................ 111
அத்தியாயம் III. சரக்கு-மூலதனத்தின் சுற்று ........................ 114
அத்தியாயம் IV. சுற்றின் மூன்று சூத்திரங்கள் ........................ 131
இயற்கைப் பொருளாதாரம், பணப் பொருளாதாரம்,
கடன்-செலாவணிப் பொருளாதாரம் ........................ 150
வேண்டலும் வழங்கலும் சரியாதல் ........................ 152
அத்தியாயம் V. சுற்றோட்டக் காலம் ........................ 158
அத்தியாயம் VI. சுற்றோட்டச் செலவுகள் ........................ 168
I. முறையான சுற்றோட்டச் செலவுகள் ........................ 168
1. வாங்கல்-விற்றலுக்கு ஆகும் காலம் ........................ 168
2. கணக்குப் பதிவு ........................ 173
3. பணம் ........................ 176
II. சேமிப்புச் செலவுகள் ........................ 177
1. பொதுவாய்ச் சரக்கிருப்பு உருவாதல் ........................ 179
2. முறையான சரக்கிருப்பு ........................ 186
III. போக்குவரத்துச் செலவுகள் ........................ 193

## பகுதி II

## மூலதனப் புரள்வு


அத்தியாயம் VII. புரள்வுக் காலமும் புரள்வுகளின் எண்ணிக்கையும். 199

அத்தியாயம் VIII. நிலை-மூலதனமும் சுழல்-மூலதனமும் .............. 204

I. வடிவ வேறுபாடுகள் .............................................. 204

II. நிலை-மூலதனத்தின் அடக்கக் கூறுகளும் மாற்றீடும் மராமத்தும் திரட்டலும் .............................................. 220

அத்தியாயம் IX. முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் ஒட்டுமொத்தப் புரள்வு. புரள்வுச் சகடங்கள் ...................... 239

அத்தியாயம் X. நிலை-மூலதனம், சுழல்-மூலதனம் இவற்றின் தத்துவங்கள். பிசியோக்கிராட்டுகளும் ஆதாம் ஸ்மித்தும்........ 248

அத்தியாயம் XI. நிலை-மூலதனம், சுழல்-மூலதனம் இவற்றின் தத்துவங்கள். ரிக்கார்டோ .............................................. 283

அத்தியாயம் XII. வேலைக் காலம் .............................................. 302

அத்தியாயம் XIII. உற்பத்திக் காலம் .............................................. 316

அத்தியாயம் XIV. சுற்றோட்டக் காலம் .............................................. 330

அத்தியாயம் XV. முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் பருமன் மீது புரள்வுக் காலம் ஏற்படுத்தும் விளைவு ...................... 341

I. வேலைக் காலமும் சுற்றோட்டக் காலமும் சமமாய் இருத்தல்.............................................. 353

II. வேலைக் காலம் சுற்றோட்டக் காலத்தை விட நீண்டதாய் இருத்தல் .............................................. 358

III. வேலைக் காலம் சுற்றோட்டக் காலத்தை விடக் குறுகலாய் இருத்தல் .............................................. 363

IV. முடிவுகள் .............................................. 368

V. விலைகள் மாறுவதால் ஏற்படும் விளைவு ...................... 375

அத்தியாயம் XVI. மாறும்-மூலதனத்தின் புரள்வு ...................... 386

I. வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் .............................................. 386

II. தனிப்பட்ட மாறும்-மூலதனத்தின் புரள்வு ...................... 405

III. சமுதாய நோக்கில் மாறும்-மூலதனத்தின் புரள்வு .......... 411

அத்தியாயம் XVII. உபரி-மதிப்பின் சுற்றோட்டம் ...................... 420

I. சாமானிய மறுவுற்பத்தி .............................................. 428

II. மூலதனத் திரட்டலும் விரிதிற மறுவுற்பத்தியும் ............ 454


## பகுதி III

## மொத்தச் சமுதாய மூலதனத்தின் மறுவுற்பத்தியும் சுற்றோட்டமும்


அத்தியாயம் XVIII. முன்னுரை .............................................. 462

I. ஆய்வுப் பொருள் .. 462
II. பண-மூலதனம் வகிக்கும் பங்கு .. 466
அத்தியாயம் XIX. இப்பொருள் குறித்து முந்தைய விளக்கங்கள் ..... 473
I. பிசியோக்கிராட்டுகள் .. 473
II. ஆதாம் ஸ்மித் .. 478
1. ஸ்மித்தின் பொதுவான கண்ணோட்டங்கள் .. 478
2. பரிவர்த்தனை-மதிப்பை v+s ஆக ஆதாம் ஸ்மித் பகுத்திடுகிறார் .. 488
3. மூலதனத்தின் மாறாப் பகுதி .. 492
4. ஆதாம் ஸ்மித்தின் பார்வையில் மூலதனமும் வருவாயும். 499
5. தொகுப்புரை .. 508
III. பிற்காலத்திய பொருளாதார அறிஞர்கள் .. 514
அத்தியாயம் XX. சாமானிய மறுவுற்பத்தி .. 518
I. பிரச்சினை பற்றிய விளக்கம் .. 518
II. சமுதாயப் பொருளுற்பத்தியின் இரு துறைகள் .. 522
III. இரு துறைகளுக்கும் இடையிலான பரிவர்த்தனை. $II_c$ என்பதற்கு எதிராக $I_{(v+s)}$ .. 526
IV. துறை IIக்குள் பரிவர்த்தனை. அவசியப் பண்டங்களும் சொகுசுப் பண்டங்களும் .. 532
V. பரிவர்த்தனைக்குப் பணச் சுற்றோட்டம் துணை செய்தல் .. 544
VI. துறை Iஇன் மாறா-மூலதனம் .. 558
VII. இரு துறைகளிலும் மாறும்-மூலதனமும் உபரி-மதிப்பும் .... 562
VIII. இரு துறைகளிலும் மாறா-மூலதனம் .. 567
IX. ஆதாம் ஸ்மித், ஸ்டோர்ஹ், ராம்சே இவர்களைத் திரும்பிப் பார்ப்போம் .. 573
X. மூலதனமும் வருவாயும்: மாறும்-மூலதனமும் கூலியும் ...... 578
XI. நிலை-மூலதனத்தின் மாற்றீடு .. 594
1. தேய்மானத்தைக் குறிக்கும் மதிப்புப் பகுதியானது பண வடிவில் மாற்றீடு செய்யப்படுதல் .. 599
2. நிலை-மூலதனத்தின் பொருள் வகை மாற்றீடு .. 605
3. முடிவுகள் .. 618
XII. பணப் பொருளின் மறுவுற்பத்தி .. 622
XIII. தெஸ்தூத் டெ திரேசியின் 'மறுவுற்பத்தித் தத்துவம் .. 637
அத்தியாயம் XXI. மூலதனத் திரட்டலும் விரிதிற மறுவுற்பத்தியும் ... 650
I. துறை Iஇல் மூலதனத் திரட்டல் .. 654
1. பணச் சேர்ப்பின் உருவாக்கம் .. 654
2. கூடுதல் மாறா-மூலதனம் .. 659
3. கூடுதல் மாறும்-மூலதனம் .. 666
II. துறை IIஇல் மூலதனத் திரட்டல் .. 667
III. மூலதனத் திரட்டலின் குறிவரை விளக்கம் .. 673
1. முதல் எடுத்துக்காட்டு .. 678

2. இரண்டாம் எடுத்துக்காட்டு ........ 683
3. மூலதனத் திரட்டலில் $II_c$ இன் மாற்றீடு ........ 691
IV. கூடுதல் குறிப்புகள் ........ 694
பெயர் அட்டவணை ........ 697
மூலதனம், இரண்டாம் பாகத்தில் மேற்கோளாய்த் தரப்பட்டுள்ள ஆதாரங்களின் அட்டவணை ........ 699
பொருள் அட்டவணை ........ 703

# முன்னுரை

**மூலதனம்** இரண்டாம் பாகத்திற்குப் புத்தக வடிவம் கொடுப்பது எளிதான காரியமாய் இருக்கவில்லை; ஒரு புறம் கோவையான, கூடுமான வரை நிறைவான படைப்பாகவும் மறு புறம் பதிப்பாசிரியரின் படைப்பாக அல்லாமல் முழுக்க முழுக்க நூலாசிரியரின் படைப்பாகவும் அமையக் கூடிய விதத்தில் இவ்வேலையைச் செய்ய வேண்டியிருந்தது. வாசகங்கள் பலவும் இருந்தன; பெரும்பாலும் துண்டு துண்டானவை—இதனால் வேலை மேலும் கடினமாகி விட்டது. பார்க்கப் போனால், ஒரே ஒரு கையெழுத்துப் பிரதி மட்டுமே (எண் IV) முழுமையாகத் திருப்பிப் பார்த்துத் திருத்தப்பட்டு அச்சிலேறத் தயாராய் இருந்தது. இதிலும் கூட பெரும் பகுதி பிற்பாடு செய்யப்பட்ட திருத்தத்தால் காலாவதி ஆகியிருந்தது. சுவடிகளில் பெரும் பகுதியானவை சாரத்தைப் பொறுத்த வரை பெருமளவுக்கு முழுமையாக வகுத்தளிக்கப்பட்டிருந்தாலும், மொழியைப் பொறுத்த வரை இறுதியாக மெருகிடப்படாமல் விடப்பட்டவை. மொழி நடையானது குறிப்பெடுப்பதற்கு வழக்கமாக மார்க்ஸ் பயன்படுத்தியது: கவனக் குறைவானது; பேச்சு வழக்குகள் மிகுந்தது; ஆங்காங்கே நேர்த்தி பெறாத நகைப்பூட்டும் வழக்குகளும் தொடர்களும் கொண்டது; இடையிடையே ஆங்கில, பிரெஞ்சுக் கலைச் சொற்களை எடுத்தாள்வது; இங்குமங்குமாய் முழு முழு வாக்கியங்களும், ஏன், பக்கங்களும் கூட ஆங்கிலத்தில் அமைந்தது. நூலாசிரியரின் மனத்தில் உருப் பெற்றெழுந்த சிந்தனைகள் உடனுக்குடன் குறித்து வைக்கப்பட்டன. வாதங்களில் சில பகுதிகள் முழுமையாக எடுத்துரைக்கப்பட்டிருக்கும்; அதே அளவு முக்கியத்துவமுள்ள வேறு சில பகுதிகளோ சுட்டிக்காட்டப்படுவதோடு சரி. உதாரண விளக்கத்துக்கு வேண்டிய உண்மை விவரங்கள் சேகரிக்கப்பட்டிருந்தனவே தவிர, சரிவர ஒழுங்கு செய்யப்படவில்லை; இன்னும் கூடக் குறைவாகவே பகுத்தாயப்பட்டிருந்தன. பல சந்தர்ப்பங்களில் அத்தியாயங்களின் இறுதியில், அடுத்த அத்தியாயத்தைத் தொடங்க வேண்டுமென்ற ஆவலில் ஆசிரியர் பகுப்பாய்வுகளை அரைகுறையாக விட்டு விடுகிறார், பிற்பாடு பூர்த்தி செய்வதற்கு

உதவியாக ஒரு சில வாக்கியங்களை ஒன்றோடொன்று பொருந் தாத நிலையில் வரைந்து வைக்கிறார். இறுதியாக ஆசிரியரின் கையெழுத்து பிரசித்தமானது; சில சமயங்களில் அவராலேயே கூட படிக்க முடியாமற் போய் விடும் கையெழுத்து அது.

இந்தக் கையெழுத்துப் பிரதிகளை உள்ளது உள்ளபடி கூடுமான வரை அப்படியே எடுத்துக் கொடுப்பதோடு நின்று கொண்டேன். மார்க்சே மாற்றியிருப்பார் என்னும் படியான இடங்களில் மட்டுமே நடையை மாற்றியுள்ளேன்; முற்றிலும் அத்தியாவசியமான இடங் களிலும், அத்துடன் அர்த்தம் ஐயந்திரிபறத் தெளிவாய் இருந்த இடங்களிலும் மட்டுமே, விளக்க வாக்கியங்களையோ, இணைப் புக்கு வேண்டியவற்றையோ இடையிடையே சேர்த்துள்ளேன். பொருள்விளக்கம் தொடர்பாக மிகச் சிறு சந்தேகத்துக்கும் ஏது வான வாக்கியங்களை சொல்லுக்கு சொல் அப்படியே தந்து விடுவது மேலெனக் கொண்டேன். நான் மாற்றியமைத்துள்ள அல்லது இடையிடையே சேர்த்துள்ள பகுதிகள் அச்சில் பத்தே பத்து பக்கம்தான் வரும்; அவையும் கூட வடிவம் தொடர்பானவையே.

மார்க்ஸ் தமது மகத்தான பொருளாதாரக் கண்டுபிடிப்புகளை நூல் வடிவில் வெளியிடும் முன்னர், அவற்றைக் குற்றம் குறை யற்றனவாய்ச் சாத்தியமான முழு அளவுக்குச் செம்மை செய்வதற் காக எப்படி அளவுகடந்த அந்தரங்க சுத்தியோடும் கண்டிப்பான சுயவிமர்சனக் கண்ணோக்கோடும் பாடுபட்டார் என்பது இரண் டாம் பாகத்தைத் தயாரிப்பதற்கென அவர் கையெழுத்துப் பிரதி களாக விட்டுச் சென்றவற்றைப் பட்டியலிட்டாலே நிரூபணமாகி விடும். ஓயாத ஆராய்ச்சியின் பயனாய் மேலும் மேலும் விரி வடைந்து சென்ற அவரது அறிவெல்லைக்கு ஒப்ப ஆய்வுப் பொருளை உள்ளடக்கத்திலும் உருவத்திலும் வகுத்து அமைத்து வெளியிட அவரது இந்த சுயவிமர்சனக் கண்ணோக்கு எளிதில் இடமளிக்கவில்லை. மேற்சொன்ன கையெழுத்துப் பிரதிகள் வருமாறு:

முதலாவதாக, **அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு** என்ற தலைப்பு கொண்ட கையெழுத்துப் பிரதி— 1472 நான்மடிப் பக்கங்கள் அடங்கிய 23 குறிப்பேடுகள். இது 1861 ஆகஸ்டு முதல் 1863 ஜூன் வரையிலான காலத்தில் எழுதப் பட்டது. இதே தலைப்பில் முதல் பாகமாய் 1859இல் பெர்லினில் வெளிவந்த நூலின் தொடர்ச்சி இது. பக்கம் 1-220இலும் (குறிப் பேடுகள் I-V) மீண்டும் பக்கம் 1159-1472இலும் (குறிப்பேடு கள் XIX-XXIII), பணம் மூலதனமாக மாற்றமடைதல் முதல் முடிவு வரை, **மூலதனம்** முதல் பாகத்தில் ஆராயப்படுகிறவற்றைப் பற்றியது; இது **மூலதனம்** முதல் பாகத்திற்கு நம்மிடமுள்ள முதல் நகலாகும். பக்கம் 973-1158 (குறிப்பேடுகள் XVI-XVIII) மூலதன மும் இலாபமும், இலாப வீதம், வணிக மூலதனம், பண-மூலதனம்

ஆகியவற்றைப் பற்றியது; அதாவது பிற்பாடு மூன்றாம் பாகத்துக்கான கையெழுத்துப் பிரதியில் விரித்துரைக்கப்படும் ஆய்வுப் பொருட்களைப் பற்றியது. இரண்டாம் பாகத்தில் ஆராயப்படுகிறவையும், பிற்பாடு மூன்றாம் பாகத்தில் ஆராயப்படுகிறவற்றில் பெரும் பகுதியும் இன்னும் பிரித்தமைக்கப்படவில்லை. வழியில் வந்தவையாய் இவை பரிசீலிக்கப்படுகின்றன. குறிப்பாகச் சொல்வதெனில், கையெழுத்துப் பிரதியின் பிரதானப் பகுதியாகிய "உபரி-மதிப்புத் தத்துவங்கள்" என்ற தலைப்பு கொண்ட பிரிவில், அதாவது பக்கம் 220-972இல் (குறிப்பேடுகள் VI-XV) இந்தப் பரிசீலனை நடைபெறுகிறது. இந்தப் பிரிவில் அடங்கியிருப்பது அரசியல் பொருளாதாரத்தின் சாராம்சமான உபரி-மதிப்புத் தத்துவத்தின் விமர்சன முறையிலமைந்த விவரமான வரலாறு ஆகும். இத்துடன் கூடவே, இந்தப் பிரிவு முந்தைய உபரி-மதிப்புத் தத்துவாசிரியர்களை எதிர்த்து வாதம் புரிந்து, பிற்பாடு இரண்டாம், மூன்றாம் பாகங்களுக்கான கையெழுத்துப் பிரதியில் தனித் தனியாகவும், தர்க்க முறையிலான தொடர்பிலும் ஆராயப்படும் விவரங்களில் பெரும்பாலானவற்றை விரித்துரைக்கிறது. இரண்டாம், மூன்றாம் பாகங்களில் அடங்கக் கூடிய பல பகுதிகளையும் நீக்கி விட்டு, இக்கையெழுத்துப் பிரதியின் விமர்சனப் பகுதியை **மூலதனம்** நான்காம் பாகமாகப் பிரசுரிக்க எண்ணியுள்ளேன்.* இந்தக் கையெழுத்துப் பிரதி மதிப்புமிக்கதென்றாலும், இரண்டாம் பாகத்தின் இந்தப் பதிப்பில் அதனை அதிகமாய்ப் பயன்படுத்த முடியவில்லை.

கால வரிசைப்படி அடுத்து வரும் கையெழுத்துப் பிரதி மூன்றாம் பாகத்திற்குரியது. அது—எப்படியும் அதன் பெரும் பகுதி—1864இலும் 1865இலும் எழுதப்பட்டது. இந்தக் கையெழுத்துப்

---

* எங்கெல்சால் **உபரி-மதிப்புத் தத்துவங்களை**, **மூலதனம்** நான்காம் பாகமாகப் பிரசுரிக்க முடியவில்லை; மரணம் குறுக்கிட்டது. 1905-10இல் காவுத்ஸ்கி இப்புத்தகத்தின் ஜெர்மன் பதிப்பு ஒன்றை வெளியிட்டார்; மூலத்திலிருந்து தன்னிச்சையாக விலகும் பிறழ்வுகளும், இடமாற்றங்களும், விடுபாடுகளுமாகப் பல குறைகளைக் கொண்டதாய் இருந்தது இப்பதிப்பு. **உபரி-மதிப்புத் தத்துவங்களின்** நம்பகமான முதற் பதிப்பு 1954-61இல் சோவியத்து ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் குழுவின் மார்க்சிய-லெனினியக் கழகத்தால் ருஷ்ய மொழியில் வெளியிடப்பட்டது. மொழிபெயர்ப்பில் அவசியமான சில திருத்தங்களோடும் புத்தகத்தின் துணை விவரப் பொருளுக்கான சேர்க்கைகளோடும், அது மார்க்ஸ்-எங்கெல்ஸ் **தொகுப்பு நூல்கள்** (மாஸ்கோ 1962-64), இரண்டாம் ருஷ்யப் பதிப்பின் தொகுதி 26இல் மூன்று பகுதிகளைக் கொண்டதாய் இருந்தது. 1956-62இல், 1954-61ஆம் ஆண்டுகளது ருஷ்யப் பதிப்பின் அடிப்படையில் அமைந்த ஜெர்மன் பதிப்பு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் வெளியிடப்பட்டது. மார்க்ஸ்-எங்கெல்ஸ் **தொகுப்பு நூல்களின்** 26ஆவது தொகுதியாக **உபரி-மதிப்புத் தத்துவங்களின்** புதிய பதிப்பைத் தயாரிக்க இப்போது ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் வேலை நடந்து வருகிறது. மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகத்தார் இப்புத்தகத்தின் ஆங்கிலப் பதிப்பை வெளியிட்டுள்ளனர். —ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

பிரதியின் முக்கியமான பகுதிகள் பூர்த்தி செய்யப்பட்ட பிறகுதான், முதல் பாகத்தை விரித்தெழுதும் பணியை மார்க்ஸ் மேற்கொண்டார்; முதல் பாகம் 1867இல் வெளிவந்தது. மூன்றாம் பாகத்தின் இந்தக் கையெழுத்துப் பிரதிக்குப் புத்தக வடிவம் தரும் வேலையில் இப்போது ஈடுபட்டுள்ளேன்.

அடுத்து வந்த காலத்துக்குரியது—முதல் பாகம் வெளிவந்ததற்குப் பிற்பாடானது—I-IV என்று மார்க்சே எண்ணிட்டுக் குறித்த தொகுப்பாகும். இரண்டாம் பாகத்துக்கான நான்கு இருமடிக் கையெழுத்துப் பிரதிகளின் தொகுப்பு இது. 1865 அல்லது 1867இல் எழுதப்பட்டதாகத் தெரிகிற (150 பக்கம் கொண்ட) கையெழுத்துப் பிரதி I ஆனது இப்போது ஒழுங்கமைக்கப்பட்டுள்ள முறைப்படி இரண்டாம் பாகமாக இருப்பதன் தனித்த முதலாவது விரிவாக்கமாகும், ஆனால் பூர்த்தி செய்யப்படாமல் துண்டு துண்டாய் விடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரதியிலிருந்தும் எதையும் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. கையெழுத்துப் பிரதி IIIஇல் ஒரு பகுதி மேற்கோள்களின் தொகுப்பும், மார்க்ஸ் எடுத்த குறிப்புகள் அடங்கிய குறிப்பேடுகளுக்கான சுட்டுரைகளுமாகும்—பெரும்பாலானவை இரண்டாம் பாகத்தின் பகுதி I தொடர்பானவை. மற்றொரு பகுதியில் குறிப்பிட்ட சில விவரங்கள் விரித்துரைக்கப்படுகின்றன; குறிப்பாக, நிலை-மூலதனமும் சுழல்-மூலதனமும், இலாபத்தின் தோற்றுவாய் ஆகியவை தொடர்பான ஆதாம் ஸ்மித்தின் கருத்துரைகள் பற்றிய விமர்சனங்கள் தரப்படுகின்றன; மேலும் மூன்றாம் பாகத்துக்குரிய ஆய்வுப் பொருளான இலாப வீதத்தோடு உபரி-மதிப்பு வீதத்துக்குள்ள உறவு விவரிக்கப்படுகிறது. இந்தச் சுட்டுரைகளிலிருந்து புதிதாகத் திரட்ட முடிந்தது சொற்பமே; இரண்டாம், மூன்றாம் பாகங்களுக்கான விரிவாக்கங்களும் பிற்பாடு செய்யப்படும் திருத்தங்கள் காரணமாய் உதவாதவை ஆகி விடுவதால் இவற்றையும் பெரும்பாலும் ஒதுக்க வேண்டியதாகிறது.

கையெழுத்துப் பிரதி IV ஆனது இரண்டாம் பாகத்தின் பகுதி I, பகுதி IIஇன் ஆரம்ப அத்தியாயங்கள் இவற்றுக்கான விரிவாக்கமாகும், இது அச்சேறுவதற்குத் தயார் நிலையில் இருந்தது, தக்க இடத்தில் இது பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கையெழுத்துப் பிரதி இரண்டாவது பிரதிக்கு முன்னரே எழுதப்பட்டது என்பது விளங்கிய போதிலும், அதிகம் பூர்த்தியான வடிவில் இருந்ததால், தக்க இடத்தில் இந்தப் புத்தகத்தில் அதை உபயோகித்துப் பயன்பெற முடிந்தது. கையெழுத்துப் பிரதி IIஇலிருந்து ஒரு சில பகுதிகளை எடுத்து அதோடு சேர்ப்பதற்கு மேல் ஒன்றும் செய்ய வேண்டியிருக்கவில்லை. இரண்டாம் பாகத்துக்கு ஓரளவு பூர்த்தியான விரிவாக்கமாய் நமக்குக் கிடைத்திருப்பது இந்தக் கையெழுத்துப் பிரதி II மட்டும்தான்—1870இல் தொடங்கி எழுதப்பட்டது இது.

இறுதி நகலின் தயாரிப்புக்கான குறிப்புகளைப் பற்றி சிறிது நேரத்துக்கெல்லாம் சொல்லப் போகிறேன் — இந்தக் குறிப்புகள் "இரண்டாவது விரிவாக்கத்தை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்" என்று தெளிவாகவே கூறுகின்றன.

1870க்குப் பின்னர் மறுபடியும் வேலை தடைப் பட்டு நின்றது; இதற்கு முக்கியக் காரணம் மார்க்சின் உடல் நலிவே. வழக்கம் போல் மார்க்ஸ் இந்தக் காலத்தைப் படிப்பிற்காகச் செலவிட்டார். வேளாண்மைப் பொருளாதார இயல், அமெரிக்காவிலும் குறிப்பாக ருஷ்யாவிலும் கிராமப்புற உறவுகள், பணச் சந்தையும் வங்கித் தொழிலும், இறுதியாக நிலக்கூறியல், உடற்கூறியல் போன்ற இயற்கை விஞ்ஞானங்கள் ஆகியவற்றைப் பயில்வதற்காகச் செலவிட்டார். இந்தக் காலத்துக்குரிய ஏராளமான குறிப்பேடுகளில் சுயேச்சையான கணித ஆய்வுகளும் முக்கிய இடம் பெறுகின்றன.* 1877 தொடக்கத்தில் தமது பிரதானப் பணியை மீண்டும் தொடங்குமளவுக்கு அவர் நலம் பெற்று விட்டார். இரண்டாம் பாகத்துக்கு ஒரு புதிய நகலைத் தயாரிப்பதற்கான அடிப்படையாக 1877 மார்ச்சு முடிவிலிருந்தே மேற்சொன்ன நான்கு கையெழுத்துப் பிரதிகளிலிருந்தும் சுட்டுரைகளும் குறிப்புகளும் எடுக்கப்படுகின்றன. கையெழுத்துப் பிரதி V (56 இருமடிப் பக்கங்கள்) இந்தப் புதிய நகலின் தொடக்கத்தைக் குறிக்கிறது. முதல் நான்கு அத்தியாயங்கள் அடங்கிய இது இன்னமும் செப்பம் செய்யப்பட்டாகவில்லை. அத்தியாவசியமான விவரங்கள் அடிக் குறிப்புகளில் பரிசீலிக்கப்படுகின்றன. விவரப் பொருள் சேகரிக்கப்பட்டிருக்கிறதே அன்றி சலித்தெடுக்கப்பட்டிருப்பதாய்ச் சொல்வதற்கில்லை. ஆனால், பகுதி Iஇன் மிக முக்கியப் பிரிவானது இங்கேதான் கடைசியாக முழு வடிவில் வகுத்தளிக்கப்படுகிறது.

அதிலிருந்து அச்சேறத் தயாரான கையெழுத்துப் பிரதியைத் தயாரிப்பதற்கான முதல் முயற்சி, முதல் அத்தியாயத்தில் பெரும் பகுதியாகிய 17 நான்மடிப் பக்கங்களை மட்டுமே கொண்ட கையெழுத்துப் பிரதி VIஇல் (1877 அக்டோபருக்குப் பின்னர், 1878 ஜூலைக்கு முன்னர்) செய்யப்படுகிறது. 7 இருமடிப் பக்கங்களை மட்டுமே கொண்ட "1878 ஜூலை 2" தேதியிட்ட கையெழுத்துப் பிரதி VIIஇல் இரண்டாவதும் கடைசியுமான முயற்சி செய்யப்படுகிறது.

தமது உடல்நிலை அடிப்படையான முன்னேற்றம் காணாவிடில், இரண்டாம், மூன்றாம் பாகங்களின் விரிவாக்கத்தைத்

---

* சோவியத்து ஒன்றியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் குழுவின் மார்க்சிய-லெனினியக் கழகமானது, ருஷ்ய மூலங்களிலிருந்து மார்க்ஸ் எடுத்த குறிப்புகளில் ஒரு பகுதியை வெளியிட்டுள்ளது. (பார்க்கவும்: *Arkhiv Marksa i Engelsa* [மார்க்ஸ்-எங்கெல்ஸ் ஆவணத் தொகுதி], பாகம் XI., மாஸ்கோ, 1948; பாகம் XII., மாஸ்கோ 1952; பாகம் XIII., மாஸ்கோ, 1955.) — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

தமக்குத் திருப்தியளிக்கக் கூடிய விதத்தில் ஒருபோதும் முடிக்க இயலாது என்பதை மார்க்ஸ் இக்கட்டத்தில் உணர்ந்து விட்டதாகத் தெரிகிறது. மோசமாகி வந்த உடல் நலிவுக்கெதிரான கடும் போராட்டத்தின் அறிகுறிகள் V முதல் VIII வரையிலான கையெழுத்துப் பிரதிகளில் அடிக்கடி தென்படுகின்றன. முதல் பகுதியின் மிகக் கடினமான பிரிவு கையெழுத்துப் பிரதி Vஇல் புதிதாக வகுத்தளிக்கப்படுகிறது. பகுதி Iஇன் மீதத்திலும், அத்தியாயம் XVIIஐத் தவிர்த்து பகுதி II முழுவதிலும் தத்துவார்த்த சிக்கல் பெரிதாய் ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால் சமுதாய மூலதனத்தின் மறுவுற்பத்தியையும் சுற்றோட்டத்தையும் பற்றிக் கூறுகிற பகுதி IIIஐத் திருத்துவது மிகவும் அவசியம் என அவருக்குப் பட்டது. ஏனெனில் கையெழுத்துப் பிரதி IIஇல் முதலில் மறுவுற்பத்தி ஆராயப்பட்ட போது, அதனைச் செயல்படுத்தும் கருவியாகவுள்ள பணச் சுற்றோட்டம் கருத்தில் கொள்ளப்படவில்லை. பின்னர் பணச் சுற்றோட்டத்தைக் கருத்தில் கொண்டு மீண்டும் அதே பிரச்சினை ஆராயப்பட்டது. இப்போது இதனை அகற்றி விட்டு, இப்பகுதி முழுவதையும் நூலாசிரியரின் விரிவடைந்த அறிவெல்லைக்கு ஒப்ப புனரமைக்க வேண்டியிருந்தது. 70 நான்மடிப் பக்கங்களை மட்டுமே கொண்ட குறிப்பேடாகிய கையெழுத்துப் பிரதி VIII இப்படித்தான் பிறந்தது. ஆனால் மார்க்சால் எவ்வளவு விரிவான ஆய்வுப் பொருளை இந்த இடத்திற்குள் குறுக்கித் தர முடிந்தது என்பது, கையெழுத்துப் பிரதி IIஇலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டவற்றை அச்சிடப்பட்டிருக்கும் பகுதி IIIஇலிருந்து நீக்கி விட்டு எஞ்சுவதுடன் அதனை ஒப்பிட்டுப் பார்க்கும் போது தெளிவாகத் தெரிகிறது.

இந்தக் கையெழுத்துப் பிரதியிலும் கூட ஆய்வுப் பொருள் பூர்வாங்க முறையில்தான் பரிசீலிக்கப்படுகிறது; கையெழுத்துப் பிரதி IIஉடன் ஒப்பிடுமிடத்து, புதிதாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லாத விவரங்களை ஒதுக்கி விட்டு, புதிதாய்ப் பெற்ற கண்ணோட்டங்களை எடுத்துரைத்து வளர்த்திடுவதே அதன் முக்கியக் குறிக்கோளாகும். பகுதி II., அத்தியாயம் XVIIஇல் ஒரு முக்கியப் பிரிவு—எப்படியும் ஓரளவுக்குப் பகுதி IIIக்கு உரித்தானதாகிய இப்பிரிவு—மீண்டும் திருத்தியமைக்கப்பட்டு விரிவாக்கப்படுகிறது. தர்க்கவாதத் தொடர்ச்சி அடிக்கடி தடைபடுகிறது; ஆய்வுப் பொருளின் விவரணம் சில இடங்களில்—குறிப்பாக முடிவுரையில்—இடைவெளிகளோடு துண்டுதுண்டாக இருக்கிறது. ஆயினும், இப்பொருள் பற்றி மார்க்ஸ் சொல்ல விரும்பியது எப்படியோ ஒருவிதத்தில் சொல்லப்பட்டு விடுகிறது.

இரண்டாம் பாகத்துக்கான விவரப் பொருட்கள் இவையே. இவற்றைக் கொண்டு, இறப்பதற்கு சிறிது காலம் முன்னர் மார்க்ஸ் தமது புதல்வி எலீனாரிடம் கூறியது போல, நான் "ஏதாவது செய்ய

வேண்டும்'' என்றாயிற்று. இந்தப் பணியை அதன் குறுகலான பொருளில்தான் நான் அர்த்தப்படுத்திக் கொண்டேன். எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு, கிடைக்கக் கூடிய பல்வேறு வாசகங் களிலிருந்தும் ஒரு வாசகத்தைத் தெரிந்தெடுப்பதோடு என் பணி யைக் குறுக்கிக் கொண்டேன். கிடைத்தவற்றில் கடைசியாக சீரமைக் கப்பட்ட கையெழுத்துப் பிரதியை முந்தையவற்றுடன் ஒப்பிட்டு, எப்போதும் அதனையே என் வேலைக்கு அடிப்படையாகக் கொண் டேன். முதலாவது, மூன்றாவது பகுதிகளில் மட்டுமே மெய்யான சிக்கல்கள், அதாவது வெறும் செய்நுட்பம் தொடர்பானவை அல் லாத சிக்கல்கள் ஏற்பட்டன; எண்ணிக்கையில் இவை கணிச மாகவே இருந்தன. முழுக்க முழுக்க நூலாசிரியரின் மனப்பாங்கு கொண்டு இவற்றுக்குத் தீர்வு காண முயன்றுள்ளேன்.

வாசகத்தில் வரும் மேற்கோள்கள் உண்மை விவரங்களை உறுதி செய்யும் விதத்தில் எடுத்துக் காட்டப்படும் போதெல்லாம், ஆதாம் ஸ்மித்திடமிருந்து தரப்படும் மேற்கோள்களைப் போல் மூல வாசக மானது ஆழமாய் ஆராய விரும்புவோருக்கு எளிதில் கிடைக்கக் கூடியதாய் இருக்கும் போதெல்லாம், நான் அம்மேற்கோள்களை ஜெர்மனில் மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளேன்: அத்தியாயம் Xஇல் மட்டும் இது சாத்தியமாகவில்லை; ஏனென்றால் அங்கே விமர்சனத்துக்குள்ளாவது ஆங்கில வாசகமேதான்.

முதல் பாகத்திலிருந்து தரப்படும் மேற்கோள்களின் பக்க எண்கள், மார்க்சின் ஆயுட்காலத்தில் கடைசியாக வெளிவந்த பதிப்பான இரண்டாம் பதிப்பின் படி தரப்படுகின்றன.

அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு நூலின் கையெழுத்துப் பிரதி வடிவத்திலான முதல் விரிவாக்கம், கையெழுத்துப் பிரதி IIIஇல் மேற்சொன்ன பகுதிகள், பல்வேறு குறிப்பு நோட்டுகளில் சிதறிக் கிடப்பவையும் எப்போதாவது வரக் கூடியவையுமான சில சுருக்கமான குறிப்புகள் ஆகியவை தவிர்த்து, மூன்றாம் பாகத்துக்குப் பின்வரும் விவரப் பொருட்கள் மட்டுமே கிடைத்திருக்கின்றன: கிட்டத்தட்ட இரண்டாம் பாகத்தின் கையெழுத் துப் பிரதி IIஐப் போலவே முழுமையாக உருவமைக்கப்பட்ட மேற்கூறிய 1864-65ஆம் ஆண்டுகளது இருமடிக் கையெழுத்துப் பிரதி; மேலும், ஆய்வுப் பொருளைக் கணித முறையில் (சமன் பாடுகளில்) பரிசீலிக்கிற — இலாப வீதத்தோடு உபரி-மதிப்பு வீதத் தின் உறவு என்ற — 1875ஆம் ஆண்டுக்குரிய குறிப்பேடு. இந்தப் புத்தகத்தை வெளியிடுவதற்கான ஆயத்தப் பணி துரிதமாய் நடந்து வருகிறது. என்னால் இப்போது கணிக்க முடிந்த வரை, மிக முக்கிய மான ஒரு சில பிரிவுகள் தவிர்த்து பிறவற்றில் எழக் கூடிய சிக்கல் கள் பிரதானமாய் செய்நுட்பம் தொடர்பானவையாகவே இருக்கும்.

மார்க்சுக்கெதிராகக் கூறப்படுகிற ஒரு குற்றச்சாட்டை மறுப்பதற்கு இது பொருத்தமான இடமாய் இருக்குமென நினைக்கிறேன். இக்குற்றச்சாட்டு ஆரம்பத்தில் கிசுகிசுப் பேச்சுகளில் மட்டுமே இங்குமங்குமாக எழுப்பப்பட்டது. ஆனால் மார்க்ஸ் இறந்த பிறகு, சமீப காலத்தில், ஜெர்மனியில் கல்வித் துறையையும் அரசையும் சேர்ந்த சோஷலிஸ்டுகளும் அவர்களது பரிவாரங்களும் இதனை நிலைநாட்டப் பெற்ற உண்மையாகப் பறைசாற்றி வருகிறார்கள். ரோட்பெர்ட்டஸ் எழுதிய நூலிலிருந்து மார்க்ஸ் இலக்கியக் களவு புரிந்தார் என்பதே குற்றச்சாட்டு. இது தொடர்பாக அவசரமாய்க் கூற வேண்டியதை முன்பே வேறோரிடத்தில் கூறியுள்ளேன்.[1] ஆனால் இறுதி நிரூபணமாக அமையும் சான்றினை இப்போதுதான் என்னால் எடுத்துரைக்க முடிகிறது.

எனக்குத் தெரிந்த வரை, ரு. மெயர் எழுதிய *Emancipations-kampf des vierten Standes* என்னும் நூலின் 43ஆவது பக்கத்தில் தான் முதன்முதலாக இக்குற்றச்சாட்டு கூறப்பட்டது: ''மார்க்ஸ் தமது விமர்சன உரையில் பெரும் பகுதியை இந்தப் பிரசுரங்களிலிருந்து சேகரித்துள்ளார் என்று நிரூபிக்க முடியும்'' — முப்பதாம் ஆண்டுகளின் பிற்பாதியைச் சேர்ந்த ரோட்பெர்ட்டஸ் நூல்களே இந்தப் பிரசுரங்கள் எனப்படுகிறவை. இது இப்படித்தான் என்று திரு மெயரிடம் ரோட்பெர்ட்டஸ் வற்புறுத்தியிருக்கிறாராம்; இந்தக் குற்றச்சாட்டுக்குத் தரப்படுகிற ''நிரூபணம் எல்லாம்'' இதுதான். இதற்கு மேல் வேறு சான்றுகள் அளிக்கப்படாத வரை இவ்வாறே நான் அனுமானித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

1879இல் ரோட்பெர்ட்டசே களம் புகுகிறார்; 1842ஆம் வருடத்திய *Zur Erkenntniss unsrer Staatswirtschaftlichen Zustande* என்னும் தமது நூல் தொடர்பாக ஜே. செல்லருக்குப் பின்வருமாறு எழுதுகிறார் (*Zeitschrift fur die gesamte Staatswissenschaft,* தியூபிஞ்சன், 1879, பக்கம் 219):*

''இது'' (மேற்படி நூலில் வளர்க்கப்பட்ட சிந்தனையோட்டம்) ''என்னிடமிருந்து பெறப்பட்டதென்று குறிப்பிடாமலே, மிக அருமையாக மார்க்ஸ் இதனை எடுத்தாளக் காண்பீர்கள்.'' ரோட்பெர்ட்டஸ் இறந்த பின் அவரது நூல்களை வெளியிட்டவரான

---

[1] கார்ல் மார்க்ஸ் எழுதிய *Das Elend der philosophie. Antwort auf Proudhon's Philosophie des Elends* என்னும் நூலுக்கான முன்னுரை. ஜெர்மன் மொழியில் படைத்தோர்: இ. பெர்ன்ஸ்டீன் மற்றும் கா. காவுத்ஸ்கி, ஸ்டட்கார்ட், 1885. [ஆங்கிலப் பதிப்பு: கார்ல் மார்க்ஸ், **தத்துவத்தின் வறுமை, திரு புரூதோன் எழுதிய ''வறுமையின் தத்துவத்துக்கு''** பதில், மாஸ்கோ, 1962, பக்கம் 7-23. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.]

* ரோட்பெர்ட்டஸ் 1875இல் காலமானார். அவர் செல்லருக்கு எழுதிய கடிதம் — எங்கெல்ஸ் குறிப்பிடுவது — 1879இல் வெளியிடப்பட்டது. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

தி. கொசாக் சிறிதும் அசங்காமல் இக்குற்றச்சாட்டை அப்படியே எதிரொலிக்கிறார். (ரோட்பெர்ட்டஸ் எழுதிய Das Kapital. பெர்லின், 1884, முன்னுரை, பக்கம் XV.)

இறுதியாக, 1881இல் ரு. மெயர் வெளியிட்ட Briefe und Sozialpolitische Aufsatze von Dr. Rodbertus-Jagetzow என்னும் நூலில் ரோட்பெர்ட்டஸ் பட்டவர்த்தனமாகச் சொல்கிறார்: "ஷாஃபிளும் மார்க்சும் என் பெயரைக் குறிப்பிடாமலே என்னிடமிருந்து **களவாடியிருப்பதை** இப்போது பார்க்கிறேன்." (கடிதம் எண் 60, பக்கம் 134.) இன்னோரிடத்தில், ரோட்பெர்ட்டஸ் இன்னும் கூடத் திட்டவட்டமான முறையில் உரிமை கொண்டாடுகிறார்: "முதலாளியினது **உபரி-மதிப்பு** எங்கிருந்து பிறக்கிறது என்பதை மார்க்ஸ் எவ்விதம் காட்டியுள்ளாரோ, **அநேகமாய் அதே விதத்தில்**—அவரைக் காட்டிலும் சுருக்கமாகவும் தெளிவாகவும்—எனது மூன்றாவது சமுதாயக் கடிதத்தில் காட்டியுள்ளேன்." (கடிதம் எண் 48, பக்கம் 111.)

மார்க்ஸ் இந்த இலக்கியக் களவுக் குற்றச்சாட்டுகள் பற்றியெல்லாம் கேள்விப்படவே இல்லை. மார்க்சிடமிருந்த Emancipationskampf. பிரதியில் அகிலம் தொடர்பான பகுதி மட்டுமே வெட்டித் திறக்கப்பட்டிருந்தது. எஞ்சிய பக்கங்கள் திறக்கப்படவில்லை; அவர் இறந்த பிறகு நான்தான் அவற்றைத் திறந்தேன். தியூபிஞ்சன் Zeitschriftஐ அவர் பார்க்கவேயில்லை. ரு. மெயருக்கான Briefe, etc. பற்றியும் அவருக்குத் தெரியாது. "களவாடியதாகக்" குறிப்பிடுகிற வாசகத்தை டாக்டர் மெயரே தயைபுரிந்து 1884இல் என் கவனத்துக்குக் கொண்டுவரும் வரை அது பற்றி எனக்கும் தெரியாது. ஆயினும் மார்க்ஸ் கடிதம் எண் 48ஐ அறிந்திருந்தார். அன்புடன் டாக்டர் மெயர் மார்க்சின் கடைசிப் புதல்விக்கு இக்கடிதத்தின் மூலத்தை அனுப்பியிருந்தார். மார்க்சின் விமர்சன உரைக்கான இரகசிய மூலாதாரத்தை ரோட்பெர்ட்டசிடம் காண வேண்டும் என்ற இந்த மருமமான கிசுகிசுப் பேச்சுகளில் சில மார்க்சின் காதை எட்டிய போது, அவர் என்னிடம் அந்தக் கடிதத்தைக் காண்பித்தார்; நேரடியாக ரோட்பெர்ட்டஸ் தமதென உரிமை கொண்டாடுவது எது என்பது பற்றி முடிவில் நம்பகமான தகவல் இதோ கிடைத்திருக்கிறது என்றார். ரோட்பெர்ட்டஸ் தமதென உரிமை கொண்டாடுவது இவ்வளவுதான் என்றால், தாம் விளக்கிக் காட்டும் விதம்தான் அதிகம் சுருக்கமானது, தெளிவானது என்று தாராளமாய் ஆனந்தப்பட்டுக் கொள்ளட்டும், எனக்கு ஆட்சேபமில்லை என்றார்; ரோட்பெர்ட்டசின் இக்கடிதத்தோடு இந்த விவகாரம் முடிந்து விட்டதாகத்தான் உண்மையில் மார்க்ஸ் கருதினார்.

இதற்கு இன்னும் கூட முக்கியமான காரணம் ஒன்று உண்டு: ரோட்பெர்ட்டசின் எழுத்துகளைப் பற்றி அநேகமாய் 1859 வரை

மார்க்ஸ் கேட்டதே இல்லை; இது எனக்கு உறுதியாகத் தெரியும். மார்க்ஸ் தமது அரசியல் பொருளாதார விமர்சனத்தை—அடிப் படை உருவரைகளில் மட்டுமின்றி, முக்கிய விவரங்களிலும் கூட—1859க்கு முன்பே பூர்த்தி செய்து விட்டார். மார்க்ஸ் 1843இல் பாரிசில் தமது பொருளாதார ஆய்வுகளைத் தொடங்கினார்; இங்கிலாந்தையும் பிரான்சையும் சேர்ந்த மாபெரும் ஆசிரியர்களின் எழுத்துக்களிலிருந்து ஆரம்பித்தார். ஜெர்மானியப் பொருளாதார அறிஞர்களில் ராவ், லிஸ்ட் ஆகியோரை மட்டுமே அவர் அறிந் திருந்தார்; அதற்கு மேல் யாரும் தேவைப்படவில்லை. 1848 வரை ரோட்பெர்ட்டஸ் என்ற ஒருவர் இருப்பது பற்றி நானோ மார்க்சோ கேள்விப்பட்டதே இல்லை. ரோட்பெர்ட்டஸ் பெர்லின் பிரதி நிதியாக ஆற்றிய உரைகளையும் அமைச்சராகச் செய்த செயல் களையும் **நியூ ரைனிஷ் 'ஜைட்டங்*** ஏட்டில் 1848இல் நாங்கள் விமர்சிக்க வேண்டியிருந்தது. இப்படி திடீரென மந்திரியாகியி ருக்கும் இந்த ரோட்பெர்ட்டஸ் யார் என்று ரைன் பிரதேசப் பிரதி நிதிகளிடம் நாங்கள் விசாரிக்க வேண்டியிருந்தது; அந்த அளவுக்கு நாங்கள் இருவருமே அவரை அறியாதவர்களாய் இருந்தோம். ஆனால் இந்தப் பிரதிநிதிகளாலும் கூட ரோட்பெர்ட்டசின் பொரு ளாதார எழுத்துக்களைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் சொல்ல முடிய வில்லை. மறு புறம், ''முதலாளியின் உபரி-மதிப்பு'' எங்கிருந்து அவதரிக்கிறது என்பதை மட்டுமல்லாமல் **எப்படி** அவதரிக்கிறது என்பதையும் ரோட்பெர்ட்டசின் துணை இல்லாமலே அக்காலத் திலேயே மார்க்ஸ் மிக நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார்; அவர் எழுதிய **தத்துவத்தின் வறுமை**, 1847** என்ற நூலும், அதே ஆண்டில் கூலியுழைப்பும் மூலதனமும் என்பது பற்றி பிரசெல்சில் அவர் ஆற்றிய விரிவுரைகளும்***—1849இல் **நியூ ரைனிஷ் ஜைட்டங்** ஏட்டின் எண் 264-269 இதழ்களில் வெளிவந்த விரி வுரைகள்—இதற்குச் சான்றாகும். 1859இல்தான் லஸ்ஸால் மூலமாக, ரோட்பெர்ட்டஸ் என்ற பெயர் கொண்ட யாரோ ஒரு பொருளாதார அறிஞர் இருப்பது பற்றி மார்க்ஸ் தெரிந்து

---

* *Neue Rheinische Zeitung. Organ der Demokratie*—1848 ஜூன் 1 முதல் 1849 மே 19 முடிய மார்க்சை ஆசிரியராகக் கொண்டு கொலோனில் வெளி வந்த நாளேடு. பத்திரிகை ஆசிரியர்களில் பிரெடெரிக் எங்கெல்ஸ், வில்ஹெல்ம் வொல்ஃப், கியோர்கு வீர்த், பெர்டினாண்டு வொல்ஃப், எர்னஸ்ட் டுரோங்க், பெர்டி னாண்டு ஃப்ரைலிகிராத், ஹைன்ரிஹ் பியூர்ஜர்ஸ் ஆகியோரும் அடங்குவர். பிரஷ்ய அரசாங்கம் மார்க்சுக்கும், ஏனையோருக்கும் எதிராய்த் தொடுத்த அடக்குமுறை காரண மாய் இது வெளிவராமல் நின்று போனது.—*ஆங்கிலப் பதிப்பாசிரியர்.*

** கா. மார்க்ஸ், **தத்துவத்தின் வறுமை**, மாஸ்கோ, 1962.—*ஆங்கிலப் பதிப் பாசிரியர்.*

*** கா. மார்க்ஸ், **கூலியுழைப்பும் மூலதனமும்**, மாஸ்கோ, 1961.—*ஆங்கிலப் பதிப்பாசிரியர்.*

கொண்டார்; உடனே பிரித்தானிய அருங்காட்சியகத்தில் [British Museum] ''மூன்றாவது சமுதாயக் கடிதத்தைத்'' தேடிப் பிடித்தார்.

உண்மை விவரங்கள் இவைதாம். ரோட்பெர்ட்டசிடமிருந்து மார்க்ஸ் ''களவாடியதாகக்'' குற்றஞ்சாட்டப்படுகிறதே அதன் உள்ளடக்கத்தை இப்போது கவனிப்போம். ரோட்பெர்ட்டஸ் சொல்கிறார்: ''முதலாளியினது உபரி-மதிப்பு எங்கிருந்து பிறக்கிறது என்பதை மார்க்ஸ் எவ்விதம் காட்டியுள்ளாரோ அநேகமாய் அதே விதத்தில்—அவரைக் காட்டிலும் சுருக்கமாகவும் தெளிவாகவும்—எனது மூன்றாவது சமுதாயக் கடிதத்தில் காட்டியுள்ளேன்.'' அப்படியானால், இந்த விவகாரத்தின் உயிர்மையம் உபரி-மதிப்புத் தத்துவமே. மார்க்சிடமிருந்து இதையன்றி வேறு எதை ரோட்பெர்ட்டஸ் தமதென உரிமை கொண்டாட முடியும்? ஆக, உபரி-மதிப்புத் தத்துவத்தின் உண்மையான மூலகர்த்தா தாமே என்றும் மார்க்ஸ் தம்மிடமிருந்து அதனைக் களவாடிக் கொண்டார் என்றும் ரோட்பெர்ட்டஸ் இங்கே அறிவிக்கிறார்.

உபரி-மதிப்பின் தோற்றுவாய் பற்றி மூன்றாவது சமுதாயக் கடிதத்தில் அவர் சொல்வது என்ன? இதுதான்: ''வாடகை''—அவரது இந்தப் பதம் நில-வாடகையையும் இலாபத்தையும் ஒன்றாய்ச் சேர்க்கிறது—சரக்கின் மதிப்போடு ''மதிப்பைக் கூட்டுவதிலிருந்து'' பிறக்கவில்லை; ''கூலியிலிருந்து மதிப்பைக் கழிப்பதிலிருந்தே, வேறுவிதமாகச் சொன்னால், ஓர் உற்பத்திப் பொருளினது மதிப்பின் ஒரு பகுதியை மட்டுமே கூலி குறிக்கிறதென்னும் காரணத்திலிருந்தே'' பிறக்கிறது. உழைப்பு போதிய உற்பத்தித் திறனுடையதாய் இருந்தால், கூலியானது ''உழைப்பினது உற்பத்திப் பொருளின் இயற்கையான பரிவர்த்தனை-மதிப்புக்குச் சமமானதாய்'' இருக்கத் தேவையில்லை; ''மூலதனத்தை மாற்றீடு செய்வதற்காகவும் (!) வாடகைக்காகவும் இம்மதிப்பில் போதிய அளவு இவ்விதம் எஞ்சி நிற்கும்.''* ஓர் உற்பத்திப் பொருளின் ''இயற்கையான பரிவர்த்தனை-மதிப்பு'' ''மூலதனத்தை மாற்றீடு செய்வதற்காக,'' ஆகவே கச்சாப் பொருள், கருவிகளின் தேய்மானம் ஆகியவற்றின் மாற்றீட்டுக்காக ஏதும் எஞ்ச விடவில்லை என்றால், அது என்ன ''இயற்கையான பரிவர்த்தனை-மதிப்பு'' என்பது தெரிவிக்கப்படவில்லை.

ரோட்பெர்ட்டசின் அபாரமான கண்டுபிடிப்பு குறித்து மார்க்ஸ் என்ன நினைத்தார் என்று அதிர்ஷ்ட வசமாய் நமக்குத் தெரிய வருகிறது. அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பின் கையெழுத்துப் பிரதியில்—குறிப்பேடு X., பக்கம் 445

---

* ரோட்பெர்ட்டஸ்-ஜகெட்செள கார்ல், *Soziale Briefe an von Kirchmann. Dritter Brief: Widerlegung der Richardoschen Lehre von der Grundrente und Begrundung einer neuen Rententheorie*, பெர்லின், 1851, பக்கம் 87. —ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

முதலானவை — பின்வருவதைக் காண்கிறோம்: ''இடையிலே ஒன்று. திரு ரோட்பெர்ட்டஸ். புதிய நில-வாடகைத் தத்துவம்.'' இந்தக் கோணத்திலிருந்து மட்டுமே மூன்றாவது சமுதாயக் கடிதத்தைப் பார்க்க வேண்டுமென மார்க்ஸ் இங்கே கருதுகிறார். ரோட்பெர்ட்டசின் பொதுவான உபரி-மதிப்புத் தத்துவத்தை பின்வரும் கேலிக் குறிப்புடன் ஒதுக்கித் தள்ளி விடுகிறார்: ''முதலில் திரு ரோட்பெர்ட்டஸ் நிலவுடைமையும் மூலதன உடைமையும் பிரிந்து வெவ்வேறாகாத நாட்டிலுள்ள நிலவரத்தைப் பகுத்தாய்கிறார்; பிறகு, வாடகையானது (உபரி-மதிப்பு முழுவதையுமே இவர் வாடகை என்கிறார்) ஊதியமிலா உழைப்புக்கு அல்லது இந்த உழைப்பு எதன் உருவில் வெளிப்படுகிறதோ அந்த உற்பத்திப் பொருட்களின் அளவுக்குச் சமம் என்ற முக்கியமான முடிவுக்கு வருகிறார்.''*

முதலாளித்துவ உலகம் பல நூறு ஆண்டுகளாய் உபரி-மதிப்பு உற்பத்தி செய்து வருகிறது; அதன் தோற்றுவாய் பற்றி யோசிக்கும் கட்டத்துக்குப் படிப்படியாக வந்து சேருகிறது. முதன் முதல் வகுத்துரைக்கப்பட்ட கருத்து நேரடியாக வாணிப நடைமுறையிலிருந்து உதித்ததாகும். அக்கருத்தாவது: உற்பத்திப் பொருளின் மதிப்பு கூடுதலாக்கப்படுவதிலிருந்து எழுவதே உபரி-மதிப்பு. இந்தக் கருத்து வாணிப ஊக்கவாதிகளிடையே நிலவியது. ஆயினும் இக் கருத்து உண்மையானால், ஒருவருக்கு ஆதாயமாய் அமைவது பிறிதொருவருக்குத் தவிர்க்க முடியாமலே இழப்பாய் அமையும் என்று அப்போதே ஜேம்ஸ் ஸ்டுவர்ட் கண்டு கொண்டார். அதன் பிறகும் கூட நீண்ட காலத்துக்கு, குறிப்பாக சோஷலிஸ்டுகளிடையே இந்தக் கருத்து நீடித்தது. முன்பே ஆதாம் ஸ்மித் தொல்சீர் விஞ்ஞானத்திலிருந்து அதனை ஒழித்துக் கட்டியிருந்தார்.

நாடுகளின் செல்வம், முதல் பாகம், அத்தியாயம் VIஇல் ஸ்மித் சொல்கிறார்: ''குறிப்பிட்ட ஆட்களின் கையில் மூலதனம் திரண்டவுடனே, இயல்பாகவே அவர்களில் சிலர் அதனைப் பயன்படுத்தி முயற்சியுடையோரை வேலை செய்ய வைப்பார்கள்; இப்படி வேலை செய்வோருக்கு மூலப் பொருட்களையும் வாழ்வுத் தேவைகளையும் வழங்குவார்கள்; இவ்வாறு அவர்களது வேலையின் விளைவை விற்று, அல்லது மூலப் பொருட்களின் மதிப்போடு அவர்களது உழைப்பு எதைச் சேர்க்கிறதோ அதைக் கொண்டு இலாபம் பெறுகிறார்கள்.... தொழிலாளர்கள் மூலப் பொருட்களோடு சேர்க்கும் மதிப்பு இவ்விதம் இரு பகுதிகளாகப் பிரிகிறது; ஒரு பகுதி அவர்களின் கூலி ஆகிறது. மறு பகுதி அவர்களை வேலைக்கு அமர்த்தியவர் மூலப் பொருட்களுக்காகவும் கூலிக்காகவும் முன்னீடு

* கா. மார்க்ஸ், Theorien uber den Mehrwert (vierter Band des *Kapitals*) 2. Teil, பெர்லின், 1959, பக்கம் 7-8. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

செய்த மூலதனம் முழுவதன் மீதும் பெறுகிற இலாபம் ஆகிறது.''* அவர் மேலும் சொல்கிறார்: ''எந்த நாட்டிலும் நிலம் முழுவதும் தனியுடைமை ஆகியதுமே, நிலச் சொந்தக்காரர்கள் ஏனைய எல்லாரையும் போலவே தாம் விதைக்காத நிலத்தில் அறுவடை செய்ய ஆசைப்படுகிறார்கள்; நிலத்தின் இயற்கையான விளைச்சலுக்கும் கூட வாடகை கேட்கிறார்கள்....'' உழைப்பாளி ''தமது உழைப்பால் சேகரிப்பதில் அல்லது உற்பத்தி செய்வதில் ஒரு பாகத்தை நிலச் சொந்தக்காரருக்குத் தந்து விட வேண்டும். இந்தப் பாகம் அல்லது இந்தப் பாகத்தின் விலை — இரண்டும் ஒன்றுதான் — நிலத்தின் வாடகை ஆகிறது.''**

இந்த வாசகம் குறித்து மார்க்ஸ் மேற்சொன்ன அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு என்ற கையெழுத்துப் பிரதியில் எழுதுகிறார் (பக்கம் 253):

''இவ்வாறு, ஆதாம் ஸ்மித் உபரி-மதிப்பைப் பொதுக் கருத்தினமாகக் கொண்டு, இலாபமும் (கண்டிப்பான அர்த்தத்தில்), நில-வாடகையும் அதன் கிளைகளே ஆகுமெனக் கருதுகிறார். உபரி-மதிப்பு என்பது உபரி-உழைப்பாகும்; அதாவது செய்து முடித்து சரக்கில் ஈடேற்றம் பெறும் உழைப்பில், கூலியை சமதையாகப் பெற்றுக் கொண்டு விட்ட உழைப்பாகிய ஊதிய உழைப்பு போகக் கூடுதலாய் இருக்கும் மிகுதியாகும்.''***

ஆதாம் ஸ்மித் மேலும் சொல்கிறார் (முதல் பாகம், அத்தியாயம் VIII): ''நிலம் தனியுடைமை ஆனதுமே, உழைப்பாளி அதிலிருந்து விளைவிக்கக் கூடிய அல்லது சேகரிக்கக் கூடிய உற்பத்தியில் அநேகமாய் எல்லாவற்றிலுமே நிலச் சொந்தக்காரர் பங்கு கேட்கிறார். அவர் பெறும் வாடகை நிலத்தின் மீது ஈடுபடுத்தப்படும் உழைப்பின் உற்பத்தியில் முதல் வெட்டு ஆகிறது. நிலத்தை உழுபவர் விளைச்சலை அறுவடை செய்யும் வரை தம்மைப் பராமரித்துக் கொள்ளும் வசதி உடையவராய் இருப்பது அரிதே. அவரது பராமரிப்புக்கு ஆகும் செலவு பொதுவாக அதிபரின் மூலதனத்திலிருந்துதான் அவருக்கு முன்னீடு செய்யப்படுகிறது; இந்த அதிபர்தான் அவரை வேலைக்கு அமர்த்துகிறவர்; அவரது உழைப்பின் உற்பத்தியில் தமக்குப் பங்கு கிடைக்காதென்றால் அல்லது தமது மூலதனம் தம்மிடம் திரும்புகையில் இலாபத்தையும் உடன்கொணரா விட்டால் இந்த அதிபருக்கு அவரை வேலைக்கு அமர்த்துவதில்

---

* ஆதாம் ஸ்மித், நாடுகளின் செல்வம்: இதன் இயல்பும் காரணங்களும் பற்றிய ஆய்வு, லண்டன், 1843, முதல் பாகம், பக்கம் 131-32. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

** மேலது, பக்கம் 134. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

*** கார்ல் மார்க்ஸ், உபரி-மதிப்புத் தத்துவங்கள் (மூலதனம், நான்காம் பாகம்). மாஸ்கோ, 1963, பகுதி I., பக்கம் 80-81. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

அக்கறை இருக்காது. இந்த இலாபம் நிலத்தின் மீது ஈடுபடுத்தப் படும் உழைப்பின் உற்பத்தியிலிருந்து இரண்டாவது வெட்டு ஆகிறது. அநேகமாய் ஏனைய எல்லா வகை உழைப்பின் உற்பத்தியுமே இலாப வடிவிலான இது போன்ற வெட்டுக்கு உட்படுகிறது. எல்லாக் கைத்தொழில்களிலும் பட்டறைத் தொழில்களிலும் பெரும் பகுதி உழைப்பாளர்களுக்கு அதிபர் தேவைப்படுகிறார்; அவர்களது வேலைக்கு வேண்டிய மூலப் பொருட்களையும், வேலை முடியும் வரை கூலி மற்றும் பராமரிப்புச் செலவையும் அதிபர்தான் அவர்களுக்கு முன்னீடு செய்ய வேண்டும். அவர்களது உழைப்பின் உற்பத்தியில், அல்லது அந்த உழைப்பு எவற்றின்மீது பிரயோகிக்கப்படுகிறதோ அந்த மூலப் பொருட்களோடு சேர்க்கிற மதிப்பில் அவர் பங்கு பெறுகிறார்; இந்தப் பங்குதான் அவரது இலாபம் ஆகிறது.''*

இது பற்றி மார்க்ஸ் எழுதுகிறார் (கையெழுத்துப் பிரதி, பக்கம் 256): ''ஆக, இங்கே ஆதாம் ஸ்மித் மூலதனத்தின் மீதான வாடகையையும் இலாபத்தையும் தொழிலாளியின் உற்பத்தியிலிருந்து, அதாவது மூலப் பொருளோடு அவர் சேர்க்கிற உழைப்பின் அளவுக்குச் சமமான உற்பத்திப் பொருளின் மதிப்பிலிருந்து செய்யப்படும் வெட்டுகளாகவே தெளிவான சொற்களில் வர்ணிக்கிறார். ஆயினும், ஆதாம் ஸ்மித்தே முன்னர் விளக்கியிருப்பது போல, இந்த வெட்டானது தொழிலாளியின் கூலியை மட்டுமே தருகிற—அல்லது அவரது கூலிக்கான சமதைக்கு மட்டுமே வழி செய்கிற—உழைப்பின் அளவுக்கும் கூடுதலாகத் தொழிலாளி மூலப் பொருட்களோடு சேர்க்கிற உழைப்புப் பகுதியாலானதாகவே, அதாவது அவரது உழைப்பின் ஊதியமிலாப் பகுதியான உபரி-உழைப்பாலானதாகவே இருக்க முடியும்.''**

இவ்வாறு ''முதலாளியினது உபரி-மதிப்பு எங்கிருந்து வருகிறது'' என்பது, ஆதாம் ஸ்மித்துக்கே தெரிந்திருந்தது; அது மட்டுமல்ல; நிலவுடைமையாளரது உபரி-மதிப்பு எங்கிருந்து வருகிறது என்பதும் அவருக்குத் தெரிந்திருந்தது. 1861 இலேயே இதனை மார்க்ஸ் ஏற்றுக் கொண்டார்; ஆனால் ரோட்பெர்ட்டசும், அரசு சோஷலிசத்தின் கதகதப்பான கோடை மழைகளில் காளான்கள் போல் முளைத்து வதவதவென்று பெருகி மொய்க்கும் அவரது துதி பாடிகளும் இதையெல்லாம் மறந்து விட்டார்கள் போலும்.

மார்க்ஸ் தொடர்கிறார்: ''ஆனால், அவர் (ஆதாம் ஸ்மித்) உபரி-மதிப்பை இலாபமாகவும் வாடகையாகவும் அது ஏற்கும் பிரத்தியேக வடிவங்களிலிருந்து வேறுபடுத்தவில்லை; உபரி-மதிப்பு

* ஆதாம் ஸ்மித், நாடுகளின் செல்வம்: இதன் இயல்பும் காரணங்களும் பற்றிய ஆய்வு, லண்டன், 1843, முதல் பாகம், பக்கம் 172-73.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

** கார்ல் மார்க்ஸ், உபரி மதிப்புத் தத்துவங்கள் (மூலதனம் நான்காம் பாகம்). மாஸ்கோ, 1963, பகுதி I., பக்கம் 83.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

என்பதே தனியொரு கருத்தினமாக இருப்பதைப் பார்க்கவில்லை. அவரது ஆய்விலும் இன்னும் கூட அதிகமாகவே ரிக்கார்டோவின் ஆய்விலும் பெரும் பகுதியான குற்றங்குறைகளுக்கு இதுவே மூல காரணம்.''*

மார்க்ஸ் இங்கே கூறுவது ரோட்பெர்ட்டசுக்கு மிகக் கச்சித மாகப் பொருந்துகிறது. அவரது ''வாடகை'' என்பது நில-வாடகை, இலாபம் ஆகியவற்றின் கூட்டுத் தொகையே. அவர் உருவாக்கும் நில-வாடகைத் தத்துவம் முற்றிலும் தவறானது. இலாபம் குறித்து அவருக்கு முற்பட்டோர் கொண்டிருந்த கருத்தை அவர் சிறிதும் பரிசீலனையின்றி அப்படியே ஏற்றுக் கொள்கிறார்.

மாறாக, மார்க்சின் உபரி-மதிப்பு, உற்பத்திச் சாதன உடைமை யாளர்கள் சமதை ஏதுமின்றித் தமதாக்கிக் கொள்ளும் மதிப்புத் தொகையின் பொது வடிவத்தைக் குறிக்கிறது. இந்தப் பொது வடிவம் உருமாறி, விசேஷமான விதிகளின் படி இலாபமாகவும் நில-வாடகையாகவும் தனித்தனியே பிரிகிறது. இந்த விதிகளை முதன்முதல் கண்டுபிடித்தவர் மார்க்ஸ். இவை மூன்றாம் பாகத்தில் விவரிக்கப்படும். பொதுவாக உபரி-மதிப்பைப் புரிந்து கொள்வது என்ற நிலையிலிருந்து, இலாபமாகவும் நில-வாடகையாகவும் அது உருமாறிப் போவதைப் புரிந்து கொள்ளும் நிலைக்கு, அதாவது முதலாளி வர்க்கத்துக்குள் உபரி-மதிப்பு பங்கிடப்படுவதன் விதிகளைப் புரிந்து கொள்ளும் நிலைக்கு வந்து சேர்ந்திட அநேக இடைநிலைக் கண்ணிகள் தேவைப்படுகின்றன என்பதை அங்கே காண்போம்.

ஆதாம் ஸ்மித்தைக் காட்டிலும் ரிக்கார்டோ குறிப்பிடத்தக்க அளவு முன்னேறிச் சென்றார். உபரி-மதிப்பு பற்றிய அவரது கருத்தமைவு ஒரு புதிய மதிப்புத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்தத் தத்துவம் ஆதாம் ஸ்மித்திடம் கருநிலையில் இருந்தது; ஆனால், பெரும்பாலும் அதனைக் கையாளத் தவறி விட்டார். இந்த மதிப்புத் தத்துவம் அடுத்து வந்த பொருளாதார விஞ்ஞானம் அனைத்திற்கும் அடித்தளமாயிற்று. சரக்குகளின் மதிப்பு அவற்றில் உருக்கொண்ட உழைப்பின் அளவால் நிர்ணயிக் கப்படுகிறது என்ற தத்துவத்தை ரிக்கார்டோ ஆதாரமாய்க் கொள் கிறார். உழைப்பினால் கச்சாப் பொருளுடன் சேர்க்கப்படும் மதிப்பளவு முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே எப்படி வினியோகமாகிறது, இலாபமாகவும் (அதாவது, இங்கே, உபரி-மதிப்பாகவும்) கூலியாகவும் எப்படிப் பிரிகிறது என்று மேற்கூறிய தத்துவத்தின் அடிப்படையில் தெளிவுபடுத்துகிறார். இந்த இரண்டு பகுதிகளுக்கும் இடையிலான விகிதம் எதுவானாலும் சரக்குகளின் மதிப்பு மாறுவதில்லை என்று காட்டுகிறார். இந்த

* மேலது, பக்கம் 81. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

விதிக்கு மிகச் சில விலக்குகள் மட்டுமே உண்டு என்கிறார். கூலி, உபரி-மதிப்பு (இலாப வடிவில் எடுத்துக் கொள்ளப்படும் உபரி-மதிப்பு) இவற்றின் பரஸ்பர உறவுகள் பற்றி—பொதுப்படையான முறையில்தான் என்ற போதிலும்—அடிப்படையான சில விதிகளையும் கூட நிலைநாட்டுகிறார் (மார்க்ஸ், **மூலதனம்**, முதல் பாகம், அத்தியாயம் XVII., பிரிவு 1). நில-வாடகை இலாபத்துக்கும் மேலே கிடைக்கும் பகுதியாகும், குறிப்பிட்ட சில நிலைமைகளில் கிடைக்காமலும் போகலாம் என்று விளக்குகிறார்.

இவற்றில் எதிலுமே ரோட்பெர்ட்டஸ் ரிக்கார்டோவைத் தாண்டிச் செல்லவில்லை. ரிக்கார்டோவினது தத்துவத்தின் உள் முரண்பாடுகளை, ரிக்கார்டிய மரபின் வீழ்ச்சிக்குக் காரணமாய் இருந்த இந்த முரண்பாடுகளை ரோட்பெர்ட்டஸ் அறியாதவராகவே இருந்தார் என்றோ, இம்முரண்பாடுகள் பொருளாதாரத் தீர்வுகளைக் காணுமாறு அவரைத் தூண்டுவதற்குப் பதிலாக, கற்பனாவாதக் கோரிக்கைகளை எழுப்பும் தவறான பாதையில் செல்ல வைத்தன என்றோதான் சொல்ல வேண்டும் (அவரது Zur Erkenntnis, etc., பக்கம் 130).

ஆனால் மதிப்பு, உபரி-மதிப்பு ஆகியவை பற்றிய ரிக்கார்டோவின் தத்துவத்தை சோஷலிச நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு ரோட்பெர்ட்டசின் Zur Erkenntnis வரும் வரை காத்திருக்க நேரிடவில்லை. முதல் பாகத்தின் பக்கம் 789இல் மார்க்ஸ் ''உபரி-உற்பத்தி அல்லது மூலதனத்தின் உடைமையாளர்கள்'' என்னும் தொடரை தேச இடர்ப்பாடுகளின் மூல காரணமும் பரிகாரமும்—ஜான் ரஸ்ஸல் பிரபுவுக்கு ஒரு கடிதம் (லண்டன், 1821) என்று தலைப்பிட்ட பிரசுரத்திலிருந்து மேற்கோளாக எடுத்துத் தருகிறார். இந்த 40 பக்கப் பிரசுரம் ''உபரி-உற்பத்தி அல்லது மூலதனம்'' என்ற ஒரு தொடருக்காகவே முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. நினைவிலிருந்து மறைந்தொழிந்து போய் விடாமல் மார்க்ஸ்தாம் இதனைக் காப்பாற்றினார். இப்பிரசுரத்தில் மேலும் கூறப்படுவதாவது:

(முதலாளியின் நிலையிலிருந்து பார்த்தால்) ''...முதலாளிக்குச் சேர வேண்டியது எதுவானாலும், தொழிலாளியின் உபரி-உழைப்பையே அவர் பெற முடியும்; ஏனென்றால் தொழிலாளி வாழ்ந்தாக வேண்டும்'' (பக்கம் 23). ஆனால், தொழிலாளி எப்படி வாழ்கிறார் என்பதும், ஆதலால் முதலாளி தனதாக்கிக் கொள்ளும் உபரி-உழைப்பு எவ்வளவு இருக்கலாம் என்பதும் ஒன்றையொன்று சார்ந்தவையே. ''...மூலதனம் அளவில் பெருகுவதற்கேற்ப மதிப்பில் குறையா விட்டால், தொழிலாளி உயிர்வாழ்வதற்குத் தேவையான உழைப்புக்கு மேல் ஒவ்வொரு மணி நேர உழைப்பின் உற்பத்தியையும் முதலாளிகள் தொழிலாளர்களிடமிருந்து கறப்பார்கள்; ...தொழிலாளியிடம் முதலாளி முடிவில் இப்படிச்

சொன்னாலும் சொல்வார்: 'நீ ரொட்டி சாப்பிடக் கூடாது.... ஏனென்றால் உயிர்வாழ்வதற்கு சர்க்கரைக் கிழங்கும் உருளைக் கிழங்கும் போதும்.' இந்தக் கட்டத்துக்குத்தான் நாம் வந்துள்ளோம்!'' (பக்கம் 23-24.) ''ஏன், ரொட்டிக்குப் பதிலாக உருளைக் கிழங்கை உண்டு வாழும் நிலைக்குத் தொழிலாளியைக் கொண்டுவர முடியு மானால், அவரது உழைப்பிலிருந்து இன்னும் அதிகமாகவே கறக் கலாம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்; அதாவது, அவர் ரொட்டியை உண்டு வாழ்ந்த காலத்தில், தம்மையும், தமது குடும்பத் தையும் பராமரித்துக் கொள்வதற்கு திங்கள், செவ்வாய்க் கிழமை களின் உழைப்பை வைத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்தாரென்றால், உருளைக் கிழங்கை உண்டு வாழும் போது திங்கட் கிழமையில் அரை நேரம் மட்டுமே அவருக்குத் தேவைப் படும்; திங்கட் கிழமையில் மீதி அரை நேரமும் செவ்வாய் முழுவதும அரசுக்கோ முதலாளிக்கோ அவர் வேலை செய்திடக் கிடைக்கின் றன.'' (பக்கம் 26.) ''வாடகை என்ற விதத்திலானாலும், பணத் தின் மீதான வட்டி என்ற விதத்திலானாலும், அல்லது வர்த்தக இலாபம் என்ற விதத்திலானாலும், முதலாளிக்குச் செலுத்தப்படும் வட்டி பிறரது உழைப்பிலிருந்தே செலுத்தப்படுவதாக ஒப்புக் கொள்ளப்படுகிறது.'' (பக்கம் 23.) ''வாடகை'' பற்றி ரோபர்ட்ஸ் பெர்ட்டஸ் கொண்டுள்ள அதே கருத்தையே இங்கு காண்கி றோம்—''வாடகை'' என்பதற்கு பதில் ''வட்டி'' என்ற சொல் பயன்படுத்தப்படுவது ஒன்றுதான் வேறுபாடு.

மார்க்ஸ் இது பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார் (அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு, கையெழுத்துப் பிரதி, பக்கம் 852): ''மிகப் புலருக்கும் தெரியாத பிரசுரம் இது, 'அதிசயச் செம்மான்'* மக்குல்லோஹ் சலசலப்பு உண்டாக்கத் தொடங்கிய ஒரு நேரத்தில் வெளிவந்தது: இது ரிக்கார்டோவை விஞ்சும் படியான ஒரு முக்கிய முன்னேற்றத்தைக் குறிக்கிறது. உபரி-மதிப்புக்கு, அல்லது ரிக்கார்டோவின் மொழியில் (பல நேரங்களில் உபரி-உற்பத்தி என்றும் சொல்லப்படும்) 'இலாபத் துக்கு,' அல்லது இப்பிரசுரத்தை எழுதியவர் அதனை அழைப்பது போல, வட்டிக்கு, இப்பிரசுரம் நேரடியாகவே உபரி-உழைப்பு என்று பெயர் சூட்டுகிறது; உபரி-உழைப்பு என்பது தொழிலாளி இலவசமாகத் தருகிற உழைப்பாகும்; அவரது உழைப்புச் சக்தியின் மதிப்பினை ஈடு செய்கிற, அதாவது அவரது கூலியின் சமதையை உற்பத்தி செய்கிற உழைப்பின் அளவுக்கு மேல் மிகுதியாக அவர்

* *1826இல் எடின்பரோவில் வெளிவந்த திரு மக்குல்லோஹின் அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகளின் சில உதாரண விளக்கங்கள் என்ற பிரசுரத்தின் ஆசிரியர் மக்குல்லோஹுக்குச் சூட்டிய கேலிப் பெயர் இது; இந்த ஆசிரியர் பெயர் திரு முலியன் என்று தரபபட்டுள்ளது; இது ஜான் வில்சனின் புனைப் பெயர்.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.*

தருகிற உழைப்பாகும். மதிப்பை உழைப்பாகப் பெயர்த்திடுவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ, உபரி-உற்பத்தியால் குறிக்கப்படும் உபரி-மதிப்பை உபரி-உழைப்பாகப் பெயர்த்திடுவதும் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனை ஆதாம் ஸ்மித் ஏற்கெனவே சொல்லி விட்டார்; ரிக்கார்டோவின் பகுப்பாய்வில் இது ஒரு பிரதானக் காரணியாகிறது. ஆனால், அவர்கள் உபரி-உழைப்பு என்று தெளிவாகக் கூறவுமில்லை, எந்த இடத்திலும் அறுதியான வடிவத்தில் நிர்ணயிக்கவுமில்லை.''* கையெழுத்துப் பிரதியின் 859 ஆவது பக்கத்தில் கூறப்படுவதாவது: ''மேலும், நூலாசிரியர் வழிவழியாய் வந்த பொருளாதாரக் கருத்தினங்களின் கைதியாக இருக்கிறார். உபரி-மதிப்பையும் இலாபத்தையும் போட்டுக் குழப்புவது எப்படி ரிக்கார்டோவை சங்கடமான முரண்பாடுகளுக்குள் ஆழ்த்துகிறதோ, அதே போல் உபரி-மதிப்புக்கு 'மூலதனத்தின் வட்டி' என்று பெயர் சூட்டுவது இந்த நூலாசிரியரையும் அதே கதிக்கு ஆளாக்குகிறது. முதன்முதலாக உபரி-மதிப்பு முழுவதையும் உபரி-உழைப்பாகப் பெயர்ப்பதன் மூலம் அவர் ரிக்கார்டோவை விஞ்சி முன்னேறுகிறார் என்பது மெய்தான். மேலும் அவர் உபரி-மதிப்பை 'மூலதனத்தின் வட்டி' என்று அழைக்கும் அதே நேரத்தில், உபரி-உழைப்பின் பொது வடிவத்தைக் குறிக்கும் விதத்தில் இப்பதத்தைப் பயன்படுத்துவதாக வலியுறுத்திச் சொல்கிறார்; உபரி-உழைப்பின் தனி வடிவங்களாகிய வாடகை, பணத்தின் மீதான வட்டி, வர்த்தக இலாபம் ஆகியவற்றிலிருந்து அதனை வேறுபடுத்திக் காட்டுகிறார். எனினும், இந்தத் தனி வடிவங்களில் ஒன்றின் பெயரான வட்டியைப் பொது வடிவத்துக்கெனப் பொறுக்கியெடுக்கிறார். அவர் பொருளாதாரக் கொச்சை மொழிக்குள் சரிந்து வீழ்ந்திட இதுவே போதிய காரணமாய் இருந்தது.''**

இந்த விமர்சனம் ரோட்பெர்ட்டசுக்குக் கச்சிதமாய்ப் பொருந்துகிறது. அவரும் வழிவழியாய் வந்த பொருளாதாரக் கருத்தினங்களின் கைதியாக இருக்கிறார். அவரும் உபரி-மதிப்புக்கு அது உருமாறி ஏற்ற கிளை வடிவங்களில் ஒன்றான வாடகையின் பெயரைப் பயன்படுத்துகிறார்; மேலும் அதனைத் தெளிவற்றதாக்குகிறார். இந்த இரு தவறுகளின் விளைவாக, அவர் பொருளாதாரக் கொச்சை மொழிக்குள் சரிந்து வீழ்கிறார்; ரிக்கார்டோவைக் கடந்து தாம் காணும் முன்னேற்றத்தை விமர்சன முறையில் மேலும் வளர்த்துச் செல்வதற்கு பதில் தமது அரைவேக்காட்டுத் தத்துவத்தை—அது மேலோட்டிலிருந்து துண்டித்துக் கொள்வதற்கு

* கா. மார்க்ஸ், Theorien uber den Mehrwert (Vierter Band des Kapitals) 3. Teil, பெர்லின், 1962, பக்கம் 236-37.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

** மேலது, பக்கம் 252-53.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

முன்பே — ஒரு கற்பனைக்கு அடிப்படையாக்கிக் கொள்கிறார்; வழக்கம் போல் காலங்கடந்தே இதைச் செய்கிறார். மேலே கூறிய பிரசுரம் 1821இலேயே வெளிவந்தது; அப்போதே அது 1842ஆம் வருடத்திய ரோட்பெர்ட்டசின் ''வாடகையை'' முழு அளவில் விவரித்திருந்தது.

இந்தப் பிரசுரமும் கூட மதிப்பையும் உபரி-மதிப்பையும் பற்றிய ரிக்கார்டியத் தத்துவத்தை முதலாளித்துவப் பொருளுற்பத்திக் கெதிராகத் திருப்பி, பாட்டாளி வர்க்க நலனுக்காகப் போராடி இருபதாம் ஆண்டுகளில் வெளிவந்த நூல் வரிசையில் முன்னணிப் பாசறையே ஆகும்; இந்த நூல்கள் எல்லாம் முதலாளி வர்க்கத்தின் ஆயுதங்களைக் கொண்டே முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடியவை. ஓவனின் கம்யூனிசம் முழுவதும், பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றிய சர்ச்சைகளில், ரிக்கார்டோவையே அடிப் படையாகக் கொண்டுள்ளது. ஓவன் மட்டுமல்ல, இன்னும் ஏராள மான எழுத்தாளர்களும் இருக்கிறார்கள்; இவர்களில் சிலரை 1847இலேயே புரூதோனுக்கு எதிரான தமது நூலில் மார்க்ஸ் எடுத் துக் காட்டினார் (**தத்துவத்தின் வறுமை**, பக்கம் 49). எட்மண்ட்ஸ், தாம்ப்சன், ஹாட்ஸ்கின்...''இப்படி நான்கு பக்கங்கள்'' எழுதும் அளவுக்கு ஏராளமானோரைக் குறிப்பிடலாம் என்கிறார். ஏராள மான இந்த நூல்களிலிருந்து குருட்டாம்போக்கில் ஒன்றைக் குறிப் பிடுகிறேன்: வில்லியம் தாம்ப்சன் எழுதிய **மனித இன்ப வாழ்வுக்கு மிகவும் ஏற்றவையான செல்வ வினியோகக் கோட்பாடுகள் பற்றிய ஆய்வு**, புதிய பதிப்பு, லண்டன், 1850. 1822இல் எழுதப்பட்ட இந்நூல் முதலில் 1824இல் வெளிவந்தது. முன்பு பார்த்தது போலவே இதிலும், உற்பத்தியில் ஈடுபடாத வர்க்கங்கள் தமதாக்கிக் கொள்ளும் செல்வம் தொழிலாளியின் உற்பத்தியிலிருந்து செய்யப் படும் வெட்டாகவே எல்லா இடங்களிலும் வர்ணிக்கப்படுகிறது; ஓரளவு காட்டமான சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந் நூலின் ஆசிரியர் கூறுகிறார்: ''திறனுடைத் தொழிலாளியை அவரது உழைப்பின் உற்பத்தியில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறிதான ஒரு பகுதியைப் பெறுவதற்காக உழைக்க வைப்பதற்கு ஆசை காட்டித் தூண்டுவதும் பயமுறுத்தி நிர்ப்பந்திப்பதும்தான் சமுதாயம் எனப்படுவதன் ஓயாத முயற்சியாய் இருக்கிறது.'' (பக்கம் 28.) ''அவரது உழைப்பின் அறுதியான உற்பத்தி முழு வதையும் அவருக்கு ஏன் தரக் கூடாது?'' (பக்கம் 32.) ''திற னுடைத் தொழிலாளர்களிடமிருந்து முதலாளிகள் வாடகை அல்லது இலாபம் என்ற பெயரால் கறக்கும் இந்த இழப்பீட்டுத் தொகை நிலத்தையும் ஏனைய சாதனங்களையும் பயன்படுத்துவதற்காக அமைந்ததாகும் என்று சொல்லப்படுகிறது....தொழிலாளியின் உற் பத்தித் திறன்களை எவற்றின் அடிப்படையிலும் எவற்றின் துணை கொண்டும் பயன்படுத்த முடியுமோ, அந்தப் பௌதிகப்

பொருட்களெல்லாம் அவரது நலன்களுக்கு எதிரான நலன்களுடைய மற்றவர்களின் கையில் இருக்கின்றன. அவர்களது சம்மதமில்லாமல் அவரால் எம்முயற்சியும் செய்ய முடியாது. இந்நிலையில், இந்த முதலாளிகள் அவரது பாடுகளுக்கு ஈடாக அவரது உழைப்பின் பலன்களில் எவ்வளவு சொற்பமான பகுதியை அவர் வசம் விட்டு வைக்கலாமென நினைக்கிறார்களோ அதற்காக அவர்களது அதிகாரத்துக்கு முழுதும் உட்பட்டவராய்த்தானே என்றென்றும் அவர் இருந்தாக வேண்டும்?'' (பக்கம் 125.) ''இலாபங்கள் என்றோ, வரிகள் என்றோ, திருட்டு என்றோ எப்படிச் சொல்வதாயினும் சரி, உற்பத்திப் பொருளிலிருந்து இப்படி இருத்தி வைத்துக் கொள்ளப்படுவதன் அளவு விகிதத்துக்கு ஏற்ப...'' (பக்கம் 126); இப்படி இன்னும் பலவும் கூறுகிறார்.

இந்த வரிகளை எழுத வேண்டியிருப்பது குறித்து எனக்குக் கொஞ்சம் வெட்கமாகத்தான் இருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இருபதாம், முப்பதாம் ஆண்டுகளைச் சேர்ந்த இங்கிலாந்தின் முதலாளித்துவ-எதிர்ப்பு எழுத்துக்களை தமது தத்துவத்தின் வறுமை என்னும் நூலிலேயே மார்க்ஸ் பல முறை நேரடியாகக் குறிப்பிட்டார்; இவற்றிலிருந்து அநேக வாசகங்களைப் பல இடங்களில் மேற்கோளாய்த் தந்தார். மூலதனம் முதல் பாகத்தில் 1821ஆம் வருடப் பிரசுரத்திலிருந்தும் ராவென்ஸ்டோன், ஹாட்ஸ்கின் போன்றோரின் எழுத்துக்களிலிருந்தும் மேற்கோள் காட்டுவதை உதாரணமாய்க் குறிப்பிடலாம். இத்தனைக்கும் பிறகுங் கூட இவையெல்லாம் ஜெர்மனியில் யாரும் அறியாதவையாகவே இருந்தன. இதைக் கூட நான் பெரிதாகக் கருதவில்லை. ஆனால், ''உண்மையில் எதையும் கற்றறியாதவராய்'' நிர்க்கதியாக ரோட்பெர்ட்டசின் வாலைப் பிடித்துக் கொண்டு ஓடும் பாமரத்தனமான ஆசிரியர்* [Literatus Vulgaris] மட்டுமல்லாமல், ''தமது நூலறிவு குறித்துப் பெருமைப்படுகிறவரும்'' படாடோபத்துக்குரிய பதவி வகிக்கும் பல்கலைக் கழகப் பேராசிரியருமான ஒருவரும்** கூட மார்க்ஸ் களவாடியதாய்—ஆதாம் ஸ்மித்தும் ரிக்கார்டோவும் கூட எழுதி வைத்தவற்றை ரோட்பெர்ட்டசிடமிருந்து களவாடியதாய்—துணிந்து குற்றஞ்சாட்டுகிறார். அவரது துறையான தொல்சீர் அரசியல் பொருளாதாரத்தை அந்த அளவுக்கு அவர் அடியோடு மறந்து விடுகிறார். அதிகாரபூர்வ அரசியல் பொருளாதாரம் எத்தகைய இழிநிலைக்கு சரிந்து விட்டது என்பதையே இது காட்டுகிறது.

சரி, உபரி-மதிப்பு பற்றி மார்க்ஸ் புதிதாய்க் கூறியது என்ன? நாகரிக நாடுகளில் எல்லாம் மார்க்சின் உபரி-மதிப்புத் தத்துவம்

---

* எங்கெல்ஸ் குறிப்பிடுவது ரு. மெயரை.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

** எங்கெல்ஸ் குறிப்பிடுவது ஜெர்மானியக் கொச்சைப் பொருளாதார அறிஞர் ஏ. வாக்னரை.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

விண்ணதிர வந்து விழும் இடியைப் போல் கதிகலக்கம் உண்டாக்க, ரோட்பெர்ட்டஸ் உட்பட மார்க்சுக்கு முற்பட்ட சோஷலிஸ்டுகள் அனைவரது தத்துவங்களும் தடமில்லாமலே பிசுபிசுத்துப் போனது எப்படி?

இதனை விளக்கிட வேதியியலின் [chemistry] வரலாற்றிலிருந்து இதற்கு இணையான ஒன்றை எடுத்துரைக்கலாம்.

சென்ற நூற்றாண்டின் முடிவு வரையிலும் கூட பிளாஜிஸ்டான் [phlogiston] தத்துவம் வழக்கிலிருந்ததை நாம் அறிவோம். ஊகத்துக்குரிய குறிப்பிட்ட பொருள், பிளாஜிஸ்டான் என்ற பெயர் கொண்ட சுயேச்சையான தீப்பொருள் ஒன்று இருப்பதாகவும் எரிகின்றவற்றிலிருந்து அது பிரிந்து செல்வதே எரிதல் [combustion] நிகழ்வின் அடிப்படையாவதாகவும் அந்தத் தத்துவம் அனுமானித்துக் கொண்டது. அக்காலத்தில் அறியப்பட்டிருந்த இரசாயன நிகழ்வுகளில் சிலவற்றை இத்தத்துவத்தைக் கொண்டு விளக்குவது சிரமமாய் இருந்தாலும் பெரும்பாலானவற்றை விளக்குவதற்கு இத்தத்துவம் போதுமானதாய் இருந்தது. ஆனால் 1774இல் பிரீஸ்ட்லி ஒரு தனி வகைக் காற்றைத் தயாரித்தார்: "அதனுடன் ஒப்பிடுகையில் சாதாரணக் காற்றானது கலப்படமாகத் தெரிகிற அளவுக்கு அது இம்மியளவும் பிளாஜிஸ்டான் கலப்பற்று அவ்வளவு தூய்மையாய் இருந்தது." அவர் அதனை "பிளாஜிஸ்டான் கலப்பற்ற காற்று" என்றழைத்தார். சிறிது காலத்துக்கெல்லாம் ஸ்வீடனில் இதே வகைக் காற்றை ஷீல் என்பவர் தயாரித்தார். வளிமண்டலத்தில் இவ்வகைக் காற்று இருப்பதை அவர் ருசுப்பித்தார். ஏதேனும் ஒரு பொருள் இக்காற்றிலோ சாதாரணக் காற்றிலோ எரிக்கப்படும் போது, இவ்வகைக் காற்று மறைந்து போவதைக் கண்டதால் இந்தத் தனி வகைக் காற்றுக்கு அவர் "தீக்காற்று" என்று பெயரிட்டார்.

"இவ்வுண்மைகளிலிருந்து அவர் [பிரீஸ்ட்லி] இப்பொழுது பின்வரும் முடிவுக்கு வந்தார்: வளி மண்டலத்தின் அடக்கக் கூறுகளில் ஒன்றுடன் பிளாஜிஸ்டான் சேருவதால்" (அதாவது எரிதலால்) "பிறப்பதே தீ அல்லது வெப்பம்; இந்தத் தீ அல்லது வெப்பம் கண்ணாடி வழியே வெளியே சென்று விடுகிறது."[2]

பிரீஸ்ட்லியும் ஷீலும் தாங்கள் தயாரித்தது என்ன என்பதை அறியாமலே பிராண வாயுவாகிய ஆக்சிஜனைத் தயாரித்திருந்தார்கள். இருவரும் "மரபு வழியில் வரப் பெற்ற" பிளாஜிஸ்டான் "கருத்தினங்களின் கைதிகளாகவே இருந்து வந்தவர்கள்." பிளாஜிஸ்டான் தத்துவக் கருத்துகளையெல்லாம் ஒழித்துக் கட்டி, வேதியியலைப் புரட்சிகரமாய் மாற்றப் போகிற தனிமம் [element] மலடு

---

[2] ரோஸ்கோ-ஷொர்லெமர், *Ausfuhrliches Lehrbuch der Chemie*. பிரான்ஷ்வீக், 1877, I., பக்கம் 13, 18.

தட்டிப் பயனற்றதாய் அவர்கள் வசமிருந்தது. ஆனால் பிரீஸ்ட்லி பாரிசிலிருந்த லவாசீக்குத் தமது கண்டுபிடிப்பு பற்றி உடனே தெரிவித்தார்; லவாசீ இந்தக் கண்டுபிடிப்பைக் கொண்டு பிளாஜிஸ்டான் வேதியியல் முழுவதையும் இப்போது பகுத்தாய்ந்தார்; இந்தத் தனி வகைக் காற்றென்பது புதிய இரசாயனத் தனிமமாகும் என்றும், எரிதலென்பது மர்மமான பிளாஜிஸ்டான் எரியும் பொருளிலிருந்து பிரிந்து செல்லும் நிகழ்ச்சியல்ல, இந்தப் புதிய தனிமம் அந்தப் பொருளுடன் இணைந்திடும் நிகழ்ச்சியே என்றும் தீர்மானித்தார். இவ்வாறு பிளாஜிஸ்டான் தத்துவ வடிவில் தலைகீழாக நின்றிருந்த வேதியியல் முழுவதையும் முதன்முதல் சரிசெய்து நேர் நிலையில் நிறுத்தியவர் அவரே. அவர் பிற்பாடு உரிமை கொண்டாடியது போல ஏனைய இருவருடன் ஏககாலத்திலும், அவர்களைச் சாராமல் சுயேச்சையாகவும் ஆக்சிஜனைத் தயாரித்தவர் அல்ல என்றாலும் கூட, ஆக்சிஜனின் மெய்யான கண்டுபிடிப்பாளர் என்னும் சிறப்பு அவருக்கே உரியதாகுமே தவிர என்ன தயாரித்தோம் என்பது அறியாமலே தயாரித்தவர்களான ஏனையோருக்கு உரியதல்ல.

உபரி-மதிப்புத் தத்துவத்தில் தமக்கு முற்பட்டவர்களோடு மார்க்ஸ் கொண்டுள்ள உறவு, பிரீஸ்ட்லியோடும் ஷீலோடும் லவாசீ கொண்டுள்ள அதே உறவுதான். உற்பத்திப் பொருட்களின் மதிப்பில், நாம் இப்போது உபரி-மதிப்பு என்றழைக்கிற பகுதி இருக்கிறது என்பது மார்க்சுக்கு நெடுங்கால முன்னரே ஆய்ந்தறியப் பட்டிருந்தது. அது எதனாலானது என்பதும் — அதாவது உழைப்பின் உற்பத்திப் பொருளைத் தனதாக்கிக் கொள்பவர் சமதையேதும் தராமல் எதை எடுத்துக் கொள்கிறாரோ அந்த உழைப்பின் பலனால் ஆனது என்பதும் — ஓரளவு தெளிவாகவே கூறப்பட்டிருந்தது. ஆனால் இதற்கு மேல் ஒன்றும் இல்லை. சிலர் — தொல்சீர் முதலாளித்துவப் பொருளாதார அறிஞர்கள் — பிரதானமாய் ஆராய்ந்ததெல்லாம், உழைப்பின் உற்பத்திப் பொருள் தொழிலாளிக்கும் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளருக்கும் இடையே எவ்விகிதத்தில் பிரித்துக் கொள்ளப்படுகிறது என்பதே. மற்றவர்கள் — சோஷலிஸ்டுகள் — இந்தப் பாகப் பிரிவினை அநியாயமென்று இந்த அநீதியை ஒழிப்பதற்குக் கற்பனையான வழிகளைத் தேடினார்கள். அவர்கள் எல்லாருமே தமக்கு வந்து சேர்ந்த பொருளாதாரக் கருத்தினங்களின் கைதிகளாகவே இருந்து வந்தார்கள்.

அரங்கிலே இப்போது மார்க்ஸ் தோன்றினார். தமக்கு முற்பட்டவர்கள் எல்லாரது கருத்துக்கும் நேர்மாறான கருத்தை முன்வைத்தார். அவர்கள் எதைத் தீர்வு என்று கருதினார்களோ அது பிரச்சினையே ஆகும் என்றார் மார்க்ஸ். இங்கே பரிசீலனையில் இருப்பது பிளாஜிஸ்டான் கலப்பற்ற காற்றோ தீக்காற்றோ அல்ல, ஆக்சிஜன்தான் என்பதைக் கண்டார். அதாவது இங்கே செய்ய வேண்டியது பொருளாதார உண்மை ஒன்றை வெறுமனே

எடுத்துரைப்பதோ, இந்த உண்மையானது சாசுவத நீதிக்கும் மெய் யான ஒழுக்க நெறிக்கும் முரணாயிருப்பதைச் சுட்டிக்காட்டுவதோ அல்ல; பொருளாதார இயல் முழுவதையும் புரட்சிகரமாக மாற்றப் போவதும், முதலாளித்துவப் பொருளுற்பத்தி அனைத்தையும் புரிந்து கொள்வதற்கான திறவுகோலை—தக்க படி அதனைப் பயன் படுத்தக் கூடியவருக்கு—அளித்திடுவதுமான ஓர் உண்மையைத் தெளிவுபடுத்துவதே இங்கு செய்தாக வேண்டிய வேலை என்பதைக் கண்டார். இந்த உண்மையைத் தொடக்கமாகக் கொண்டு, வழக் கிலிருந்த பொருளாதாரக் கருத்தினங்கள் யாவற்றையும் பரிசீலித் தார்—ஆக்சிஜனைத் தொடக்கமாகக் கொண்டு, வழக்கிலிருந்த பிளாஜிஸ்டான் இரசாயனக் கருத்தினங்களை லவாசீ பரிசீலித் தாரே, அதே போல. உபரி-மதிப்பு என்பது என்ன என்று புரிந்து கொள்ளும் பொருட்டு, மதிப்பு என்பது என்ன என்று மார்க்ஸ் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. யாவற்றுக்கும் மேலாக, ரிக்கார்டோவின் மதிப்புத் தத்துவத்தை விமர்சனத்துக்குள்ளாக்க வேண்டியிருந்தது. ஆகவே அவர் உழைப்புக்கு உரித்தான தன்மை யாகிய மதிப்பு-உற்பத்தித் தன்மையினை அலசி ஆராய்ந்தார். எவ்வகைப்பட்ட உழைப்பானது மதிப்பை உற்பத்தி செய்கிறது, ஏன் உற்பத்தி செய்கிறது, எப்படி உற்பத்தி செய்கிறது என்பதை யெல்லாம் மார்க்ஸ்தான் முதன்முதல் ஆய்ந்தறிந்தவர். மதிப்பானது இவ்வகைப்பட்ட இறுகிய உழைப்பே தவிர வேறு எதுவுமல்ல என்ற உண்மையை அவர் தெளிவுபடுத்தினார்—ரோட்பெர்ட்சால் அவரது இறுதி நாள் வரை புரிந்து கொள்ள முடியாமற் போன உண்மை இது. மார்க்ஸ் இதன்பின் பணத்துடன் சரக்குகளுக்கு உள்ள உறவினை ஆராய்ந்தார். மதிப்புடையவையாக இருத்தல் சரக்குகளது உள்ளார்ந்த தன்மையாகும் என்பதால், சரக்குகளும் சரக்குப் பரிவர்த்தனையும் எப்படி பணத்துக்கும் சரக்குக்குமிடையே முரண் நிலையை உண்டாக்குகின்றன என்று விளக்கிக் கூறினார். இந்த அடிப்படையில் அவர் வகுத்தளித்த பணத் தத்துவம் பணத் தைப் பற்றிய முழுமையான முதலாவது தத்துவமாகும்; வாய் விட்டுச் சொல்வதில்லை என்றாலும் எல்லாரும் இத்தத்துவத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். பணம் மூலதனமாக உருமாறுவதைப் பகுத்தாய்ந்து, இம்மாற்றம் உழைப்புச் சக்தியின் வாங்கலையும் விற்றலையும் அடிப்படையாகக் கொண்டதென்பதை அவர் நிலை நாட்டினார். உழைப்புக்குப் பதில் உழைப்புச் சக்தியை மதிப்பு-உற்பத்தித் தன்மை வாய்ந்ததாகக் கொண்டார். ரிக்கார்டிய மரபின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்த ஒரு பெருஞ் சிக்கலுக்கு—உழைப்பே மதிப்பை நிர்ணயிக்கிறது என்னும் ரிக்கார்டிய விதிக்கு இசைவாய் மூலதனத்துக்கும் உழைப்புக்குமான பரஸ்பரப் பரிவர்த் தனை அமையாததால் எழுந்த இந்தச் சிக்கலுக்கு—ஒரே அடியில் மார்க்ஸ் இவ்விதம் தீர்வு கிடைக்கச் செய்தார். மூலதனத்தை

மாறா-மூலதனமாகவும் மாறும்-மூலதனமாகவும் வேறுபடுத்திக் காட்டியதன் மூலம், மார்க்ஸ் உபரி-மதிப்பு உண்மையில் எவ்வாறு உருவாகிறது என்பதை அதன் மிக நுண்ணிய விவரங்களும் புலப் படும் படி முதன்முதலாய் விவரித்து இந்த நிகழ்முறைக்கு விளக்க மளிக்க முடிந்தது — அவருக்கு முற்பட்டோர் யாராலும் இதனைச் செய்ய முடியவில்லை. மூலதனத்தினுள்ளேயே இப்படி ஒரு வேறுபாடு நிலவுவதை இவ்விதம் மார்க்ஸ் நிலைநாட்டினார் — ரோட்பெர்ட்டசோ முதலாளித்துவப் பொருளாதார அறிஞர்களோ நினைத்தே பார்த்திராத ஒரு வேறுபாடு இது. ஆனால் இந்த வேறு பாடுதான் மிகவும் சிக்கலான பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறவுகோலாகிறது — இந்த இரண்டாம் பாகம் மீண்டும் இதனைக் கண்கூடாக்குகிறது, இன்னுங்கூட அதிகமாய் மூன்றாம் பாகம் இதனைக் கண்கூடாக்கும். மேலும் தொடர்ந்து உபரி-மதிப்பை ஆராய்கையில் மார்க்ஸ் அதன் இரு வடிவங்களான அறுதி உபரி-மதிப்பையும் [absolute surplus-value] ஒப்பீட்டு உபரி-மதிப்பையும் [relative surplus-value] கண்டறிந்து கூறுகிறார். முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சி வரலாற்றில் அவை வெவ்வேறான, ஆனால் ஒவ்வொன்றும் தீர்மானகரமான பங்காற்றி யுள்ளதைப் புலப்படுத்திக் காட்டுகிறார். உபரி-மதிப்பை அடிப் படையாகக் கொண்டு மார்க்ஸ் கூலியைப் பற்றி நமக்குத் தெரிந்த வற்றுள் அறிவார்ந்த முதலாவது தத்துவத்தை வகுத்தளித்தார்; முதலாளித்துவத் திரட்டல் நடந்தேறும் வரலாற்றின் உருவரையை யும் வரலாற்று வழிப்பட்ட அதன் போக்கு என்ன என்பதன் விளக்கத்தையும் முதன்முதலாய் வரைந்தளித்தார்.

ஆனால் ரோட்பெர்ட்டஸ்? இவ்வளவையும் படித்து விட்டு, வக்கிரப் பார்வை கொண்ட பொருளாதார அறிஞரைப் போல — எப்போதுமே அவர் இப்படித்தானே இருந்து வந்தார் — இவற்றை எல்லாம் ''சமுதாயத்தின் மீதான தாக்குதலாக''* கருதுகிறார்; உபரி-மதிப்பு எங்கிருந்து உருவாகிறது என்பதை இவற்றைக் காட்டிலும் தெளிவாகவும் சுருக்கமாகவும் முன்பே தாம் கூறி விட்டதாகச் சொல்கிறார்; முடிவில் இவையெல்லாம் ''மூலதனத் தின் இப்போதைய வடிவத்துக்கு'' — அதாவது வரலாற்று வழியில் அது வந்தடைந்திருக்கும் வடிவத்துக்கு — பொருந்துவதாயினும் கூட, ''மூலதனம் என்னும் கருத்தினத்துக்கு'' — அதாவது மூலதனம் குறித்து திரு ரோட்பெர்ட்டஸ் கொண்டுள்ள கற்பனையான கருத் துக்கு — பொருந்தாதென அறிவிக்கிறார். இறுதி நாள் வரை பிளாஜிஸ்டான்தான் என்று பிடிவாதம் பிடித்து. ஆக்சிஜன்

---

* கா. ரோட்பெர்ட்டஸ்-ஜகெட்செள, *Briefe und sozialpolitische Aufsatze*, Herausgegeben von டாக்டர் ரு. மெயர். பெர்லின், 1881, புத்தகம் 1, பக்கம் 111. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

என்று பேசவே மறுத்து வந்தாரே. பெரியவர் பிரீஸ்ட்லி, அது போலவே செய்கிறார் இந்த ரோட்பெர்ட்டசும். ஒரே ஒரு வேறு பாடு என்னவெனில்: பிரீஸ்ட்லி உண்மையில் ஆக்சிஜனை முதலில் தயாரித்தவராய் இருக்க, ரோட்பெர்ட்டஸ் ஏற்கெனவே பிரசித்த மாகி விட்ட ஒன்றை அவரது உபரி-மதிப்பு வாயிலாய், சரியாகச் சொன்னால் அவரது "வாடகை" வாயிலாய்த் திரும்பவும் கண்டு பிடிப்பவர் ஆகிறார்; அதே போது மார்க்ஸ் லவாசீயைப் போல் அல்லாமல், உபரி-மதிப்பு என்பதாக ஒன்று இருக்கிறதென்ற எதார்த்த உண்மையை தாம்தான் முதன்முதல் கண்டுபிடித்ததாகக் கூறிக் கொள்ள எந்நாளும் விரும்பியதில்லை.

ரோட்பெர்ட்டஸ் புரிந்த இதர பொருளாதார சாதனைகளும் அநேகமாய் இதே போன்றவைதாம். உபரி-மதிப்பை அவர் கற்பனைக் கருத்தாக்குவதை முன்பே மார்க்ஸ் **தத்துவத்தின் வறுமை யில்**—இவரை மனத்தில் கொள்ளாமலே—விமர்சனம் செய்தார். அந்த நூலின் ஜெர்மன் பதிப்புக்கான எனது முன்னுரையில், இது பற்றி மேலும் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி விட்டேன். வாணிப நெருக்கடிகள் தொழிலாளி வர்க்கத்தின் குறைநுகர் வின் விளைவாகும் என்று ரோட்பெர்ட்டஸ் தருகிற விளக்கம் சிஸ்மொந்தியின் நூலிலேயே (*Nouveaux Principes de l'Economie Politique,* நான்காம் புத்தகம், நான்காம் அத்தியாயம்) இருக்கக் காணலாம்.[3] எப்போதுமே உலகச் சந்தையை மனத்திற் கொண் டிருந்தவர் சிஸ்மொந்தி; ஆனால் ரோட்பெர்ட்டசின் பார்வை பிரஷ்ய எல்லையைத் தாண்டிச் செல்லவில்லை. கூலியானது மூலதனத்திலிருந்து பெறப்படுகிறதா, வருமானத்திலிருந்து பெறப் படுகிறதா என்பது தொடர்பான அவரது ஊகங்கள் ஏட்டுப் புலமைவாதத்தின் [scholasticism] பாற்பட்டவை;. இவை **மூலதனம்** இரண்டாம் பாகத்தின் மூன்றாம் பகுதியில் முடிவாய் நல்லடக்கம் செய்யப்படுகின்றன. வாடகை பற்றிய அவரது தத்துவம் அவருக்கே யுரிய சொத்தாக இருந்து வருகிறது; அதனை விமர்சனத்துக் குள்ளாக்கும் மார்க்சின் கையெழுத்துப் பிரதி நூல் வடிவம் பெறும் வரை அது நிம்மதியாக உறங்கலாம்.* முடிவில், பழைய பிரஷ்ய

---

[3] "இவ்வாறு சிறு எண்ணிக்கையிலான உடைமையாளர்களின் கையில் செல்வம் குவிக்கப் படுவதானது உள்நாட்டுச் சந்தையை மேலும் மேலும் குறுக்கி விடுகிறது; தொழில் துறையானது அதன் சரக்குகளை விற்பதற்கு அந்நியச் சந்தைகளைத் தேட வேண்டிய நிர்ப்பந்தம் மேலும் மேலும் அதிகமாகிறது; அங்கே பெரும் புரட்சிகள் அதனை அச்சுறுத்துகின்றன." (பெரும் புரட்சிகள் என்பது 1817ஆம் வருட நெருக்கடி யைக் குறிக்கும்; அடுத்து வரும் வரிகளில் இது விவரிக்கப்படுகிறது.) *Nouveaux Principes,* 1819ஆம் வருடப் பதிப்பு, I., பக்கம் 336.

* *Theorien uber den Mehrwert* என்ற தலைப்பில் பின்னர் வெளிவந்த ஒரு கையெழுத்துப் பிரதியே இங்கு குறிப்பிடப்படுகிறது. பார்க்கவும். கா. மார்க்ஸ், *Theorien uber den Mehrwert* (Vierter Band des *Kapitals*), 2. Teil, பெர்லின், 1959, பக்கம் 7-151.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

நிலவுடைமையை மூலதனத்தின் ஒடுக்குமுறையிலிருந்து விடுவிப்பதற்கான அவரது யோசனைகள் முழுக்க முழுக்க கற்பனாவாதத் தன்மை வாய்ந்தவை. ஏனென்றால் இது தொடர்பாக நடைமுறையில் எழுகிற ஒரே ஒரு கேள்விக்கும் கூட அவை பதிலளிக்க முயலாமல் தட்டிக் கழிக்கின்றன. அக்கேள்வியாவது: பழைய பிரஷ்ய நிலவுடைமையாளரான யுங்கர் [junker] ஆண்டுதோறும், உதாரணமாக 20,000 மார்க்கு வருமானம் பெறுகிறார் என்றால், 30,000 மார்க்கு வரை செலவு செய்த பிறகும் அவர் கடனாளி ஆகாமல் இருக்கிறாரே, அது எப்படி?

1830ஆம் ஆண்டு வாக்கில் ரிக்கார்டிய மரபு உபரி-மதிப்பென்னும் பாறையில் மோதித் தகர்ந்து போயிற்று. இம்மரபினால் தீர்க்க முடியாததை அதற்குப் பின்னால் வந்த கொச்சைப் பொருளாதார இயலாலும் தீர்க்க முடியாமற் போனதில் வியப்பில்லை. ரிக்கார்டிய மரபின் தோல்விக்குக் காரணமாய் இருந்தவை பின்வரும் இரு விவரங்களாகும்:

1. உழைப்புதான் மதிப்பின் அளவையாகும். ஆயினும், உயிருள்ள உழைப்புக்கும் மூலதனத்துக்கும் நடைபெறும் பரிமாற்றத்தில், உயிருள்ள உழைப்புக்குள்ள மதிப்பு இந்தப் பரிமாற்றத்தின் விளைவாகிய பொருள்வடிவ உழைப்புக்குள்ள மதிப்பைக் காட்டிலும் குறைவாய் இருக்கிறது. உயிருள்ள உழைப்பில் ஒரு குறிப்பிட்ட அளவின் மதிப்பாகிய கூலியானது, உயிருள்ள இதே அளவு உழைப்பினால் உற்பத்தி செய்யப்படுகிற, அதாவது இந்த உழைப்பினை உருக்கொண்டிருக்கிற உற்பத்திப் பொருளின் மதிப்பைக் காட்டிலும் எப்போதுமே குறைவாய் இருக்கிறது. இவ்வடிவில் எழுப்புகையில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வழியே இல்லை. பிழையற்ற முறையில் மார்க்ஸ் இப்பிரச்சினையை எழுப்பினார்; உடனே தீர்வும் கிடைத்தது. மதிப்புடையதாய் இருப்பது உழைப்பன்று, மதிப்பைப் படைக்கும் செயலாகிய உழைப்புக்குக் குறிப்பிட்ட மதிப்பு என்பதாக ஏதும் இருக்க முடியாது—எப்படி புவிஈர்ப்புக்கு குறிப்பிட்ட எடையும், வெப்பத்துக்குக் குறிப்பிட்ட வெப்ப நிலையும், மின்சாரத்துக்குக் குறிப்பிட்ட செறிவும் இருக்க முடியாதோ அதே போலத்தான் இதுவும். சரக்காக வாங்கப்படுவதும் விற்கப்படுவதும் உழைப்புச் சக்திதானே தவிர உழைப்பன்று. உழைப்புச் சக்தி சரக்கானதுமே, அதன் மதிப்பு சமூக உற்பத்திப் பொருள் என்ற முறையில் அச்சரக்கில் உருக்கொண்ட உழைப்பினால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த மதிப்பு அச்சரக்கின் உற்பத்திக்கும் மறுவுற்பத்திக்கும் சமூக வழியில் அவசியமான உழைப்புக்குச் சமம். எனவே, இவ்விதம் வரையறுக்கப்படுகிற அதன் மதிப்பின் அடிப்படையில் உழைப்புச் சக்தியை வாங்குவதும் விற்பதும் பொருளாதார மதிப்பு விதிக்கு எவ்விதத்தும் முரணானதல்ல.

2. ரிக்கார்டிய மதிப்பு விதியின் படி, சம ஊதியம் பெறும் உயிருள்ள உழைப்பின் சம அளவுகளை வேலைக்கமர்த்தும் இரு மூலதனங்கள் — மற்றெல்லா நிலைமைகளும் சமமாயிருக்க — சம கால அளவுகளில் சம மதிப்புடைய சரக்குகளையும், அதே போல் சம அளவு உபரி-மதிப்பு அல்லது இலாபத்தையும் உற்பத்தி செய்கின்றன. ஆனால், உயிருள்ள உழைப்பின் சமமற்ற அளவுகளை அவை வேலைக்கமர்த்தினால், சமமான உபரி-மதிப்புகளை, அல்லது ரிக்கார்டியவாதிகள் கூறுவது போல, சமமான இலாபங்களை அவற்றால் உற்பத்தி செய்ய முடியாது. ஆனால் இதற்கு நேர்மாறானது எதார்த்தத்தில் நடைபெறுகிறது. உண்மையில் நடப்பது என்னவென்றால்: சம மூலதனங்கள், அவை உயிருள்ள உழைப்பை அதிகமாக அமர்த்தினாலும் சரி, குறைவாக அமர்த்தினாலும் சரி, சம கால அளவுகளில் சம அளவு சராசரி இலாபங்களை உற்பத்தி செய்கின்றன. இது மதிப்பு விதிக்கு முரணானது; இந்த முரண்பாடு ரிக்கார்டோவுக்குத் தெரிந்ததுதான்; ஆனால் அவராலோ அவரது மரபினராலோ இம்முரண்பாட்டை நீக்குவதற்கு வழி காண முடியவில்லை. இதே போல் ரோட்பெர்ட்டசும் கூட இந்த முரண்பாட்டைக் கவனியாதிருக்க முடியவில்லை. ஆனால் முரண்பாட்டை நீக்க வழி காண்பதற்கு பதில் அவர் தமது கற்பனையுலகின் அடிக்கோள்களில் இதனையும் ஒன்றாக்கிக் கொண்டார். (*Zur Erkenntnis*, பக்கம் 131.) இந்த முரண்பாட்டை நீக்குவதற்கு **அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பின்*** கையெழுத்துப் பிரதியிலேயே மார்க்ஸ் வழி கண்டு விட்டார். **மூலதனம்** நூலமைப்புத் திட்டத்தின் படி, இந்தத் தீர்வு மூன்றாம் பாகத்தில் தரப்படும் (மூன்றாம் பாகம், பகுதி I, II). அதனை வெளியிடுவதற்கு இன்னும் பல மாதங்களாகும். ஆகவே, மார்க்சுக்கு இரகசிய மூலவரான ஒருவரை, அவருக்கு மேம்பட்டவரும் முன்சென்றவருமான ஒருவரை ரோட்பெர்ட்டசின் உருவில் கண்டுபிடித்திருப்பதாகக் கூறிக் கொள்ளும் பொருளாதார அறிஞர்களுக்கு இதோ ஒரு வாய்ப்பு — ரோட்பெர்ட்டசினது பொருளாதார இயலின் கைவன்மையை அவர்கள் நிரூபித்துக் காட்டட்டும். சமமான சராசரி இலாப வீதம் கிடைப்பது எப்படி மதிப்பு விதியை மீறாததாகவும், அதோடு அவ்விதியையே அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்க முடியும், இருந்தாகவும் வேண்டும் என்று அவர்கள் நிரூபித்துக் காட்டட்டும்; அதன் பிறகு இது பற்றி விவாதிக்கலாம். அதற்கிடையில் அவர்கள் அவசரப்படுவது நல்லது. இந்த இரண்டாம் பாகத்தின் சுடர்மிகு ஆராய்ச்சிகளும், இது வரை அநேகமாய் யாரும் அடியெடுத்து வைக்காத துறைகளில் அவை காணும்

* கா. மார்க்ஸ், Theorien uber den Mehrwert (Vierter Band des *Kapitals*), 2. Teil, பெர்லின், 1959. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

முற்றிலும் புதுமையான முடிவுகளும் மூன்றாம் பாகத்தில் வரப் போகிறவற்றுக்குப் பீடிகைதான். மூன்றாம் பாகம் முதலாளித்துவ அடிப்படையிலான சமுதாய மறுவுற்பத்தி நிகழ்முறை பற்றிய மார்க்சினது பகுப்பாய்வின் இறுதி முடிவுகளை விரித்துரைக்கிறது. இந்த மூன்றாம் பாகம் வெளிவரும் போது ரோட்பெர்ட்டஸ் என்னும் பொருளாதார அறிஞரைப் பற்றிய பேச்சுக்கே இடமிருக்காது.

மார்க்ஸ் மூலதனம் இரண்டாம் பாகத்தையும் மூன்றாம் பாகத்தையும் தமது மனைவிக்கு சமர்ப்பணம் செய்வதாய் இருந்தார்; திரும்பத் திரும்ப இதை என்னிடம் கூறியிருக்கிறார்.

**பிரெடெரிக் எங்கெல்ஸ்**

*லண்டன், 1885 மே 5, மார்க்ஸ் பிறந்த நாள்*

## இரண்டாம் பதிப்புக்கு முன்னுரை*

இந்த இரண்டாம் பதிப்பு பெரும்பாலும் முதல் பதிப்பின் மறு அச்சுதான். அச்சுப் பிழைகள் திருத்தப்பட்டுள்ளன, நடை தொடர்பான சில குறைகள் களையப்பட்டுள்ளன, சொன்னதையே திரும்பச் சொல்லக் கூடிய சில சிறு பத்திகள் நீக்கப்பட்டுள்ளன.

சிறிதும் எதிர்பாராத சில இடர்களை எழுப்பிய மூன்றாம் பாகம் கையெழுத்துப் பிரதி வடிவில் இப்போது அநேகமாய்ப் பூர்த்தியாகி விட்டது; எனது உடல்நிலை தாக்குப் பிடித்தால், வருகிற இலையுதிர் காலத்தில் அச்சேறத் தயாராகி விடும்.

**பிரெடெரிக் எங்கெல்ஸ்**

*லண்டன், 1893 ஜூலை 15*

---

உதவியாய் இருக்கும் பொருட்டு, அந்தந்த நூற்பகுதியும் எந்தக் கையெழுத்துப் பிரதியிலிருந்து (II-VIII) எடுக்கப்பட்டது என்று காட்டும் சுருக்கமான தொகுப்பு கீழே தரப்படுகிறது.

### பகுதி I

பக்கம் 33-34 — கை. பி. II; பக்கம் 34-48 — கை. பி. VII; பக்கம் 48-53 — கை. பி. VI; பக்கம் 53-152 — கை. பி. V;

---

* ஆங்கிலப் பதிப்பாசிரியர் கொடுத்த தலைப்பு.

பக்கம் *152-157* — புத்தகங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்ட வாசகங்களிடையே காணப்படும் குறிப்பு; பக்கம் *158* முதல் முடிவு வரை, கை. பி IV; நுழைக்கப்பட்டவை: பக்கம் *168-170*, — கை. பி. VIII என்பதிலிருந்து ஒரு பகுதி; பக்கம் *174, 183* — கை. பி. II என்பதிலிருந்து குறிப்புகள்.

## பகுதி II

தொடக்கம், அதாவது பக்கம் *199-212* கை. பி. IV என்பதன் முடிவாகும். இது முதல் இப்பகுதியின் முடிவு வரை, பக்கம் *212-461* அனைத்தும் கை. பி. II என்பதிலிருந்தே.

## பகுதி III

அத்தியாயம் XVIII: *(பக்கம் 462-472)* கை. பி. II என்பதிலிருந்து.

அத்தியாயம் XIX: I, II *(பக்கம் 473-514)* கை. பி. VIII என்பதிலிருந்து; III *(பக்கம் 514-517)* கை. பி. II என்பதிலிருந்து.

அத்தியாயம் XX: I *(பக்கம் 518-522)* கை. பி. II என்பதிலிருந்து. கடைசிப் பத்தி மட்டும் கை. பி. VIII என்பதிலிருந்து.

II *(பக்கம் 522-526)* பெரும்பாலும் கை. பி. II என்பதிலிருந்து.

III., IV., V *(பக்கம் 526-557)* கை. பி. VIII என்பதிலிருந்து.

VI., VII., VIII., IX *(பக்கம் 558-578)* கை. பி. II என்பதிலிருந்து.

X., XI., XII *(பக்கம் 578-637)* கை. பி. VIII என்பதிலிருந்து.

XIII *(பக்கம் 637-649)* கை. பி. II என்பதிலிருந்து.

அத்தியாயம் XXI: *(பக்கம் 650-695)* முழுவதும் கை. பி. VIII என்பதிலிருந்து.

[illegible]

## II [illegible]

[illegible]

## III [illegible]

[illegible]

## இரண்டாம் பாகம்

# மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறை

பகுதி I

# மூலதனத்தின் உருமாற்றங்களும் அவற்றின் சுற்றுகளும்

## அத்தியாயம் I

### பண-மூலதனத்தின் சுற்று

மூலதனத்தின் சுழல் இயக்கம்[4] மூன்று கட்டங்களில் நடைபெறுகிறது; முதல் பாகத்தில் எடுத்துரைத்த படி, இக்கட்டங்களின் வரிசைத் தொடர் வருமாறு:

**முதல் கட்டம்:** முதலாளி சரக்கு மற்றும் உழைப்புச் சந்தையில் வாங்குபவராக நுழைகிறார்; அவரது பணம் சரக்குகளாக [commodities] மாற்றப்படுகிறது; அதாவது M—C என்னும் சுற்றோட்டச் செயல் [act of circulation] நடைபெறுகிறது.

**இரண்டாம் கட்டம்:** வாங்கிய சரக்குகளை முதலாளி உற்பத்தித் திறனுள்ள முறையில் நுகருதல். முதலாளித்துவச் சரக்கு-உற்பத்தியாளராக அவர் செயல்படுகிறார்; அவரது மூலதனம் உற்பத்தி நிகழ்முறைக்கு [process of production] உள்ளாகிறது. இதன் விளைவு: நிகழ்முறைக்கு உள்ளாகும் உற்பத்தி-அடிக்கூறுகளின் [elements of production] மதிப்பைக் காட்டிலும் அதிகமான மதிப்புடைய சரக்குகள்.

**மூன்றாம் கட்டம்:** முதலாளி விற்பவராக சந்தைக்குத் திரும்புகிறார்; அவரது சரக்கு பணமாக மாறுகிறது; அதாவது C—M என்னும் சுற்றோட்டச் செயல் நடைபெறுகிறது.

ஆக, பண-மூலதனத்தின் சுற்றுக்கான [circuit of money-capital] சூத்திரம் வருமாறு: M—C ... P ... C′—M′; சுற்றோட்ட நிகழ்முறையில் குறுக்கீடு நிகழ்வதைப் புள்ளிகள் சுட்டுகின்றன; உபரி-மதிப்பு [surplus-value] வந்தேறுவதால் Cஉம் Mஉம் அதிகமாகி விடுவதை C′உம் M′உம் குறிக்கின்றன.

முதல் கட்டத்தையும் மூன்றாம் கட்டத்தையும் இந்நூலின் முதல் பாகத்தில் ஓரளவுக்கு மட்டுமே, அதாவது மூலதனத்தின் உற்பத்தி நிகழ்முறையாகிய இரண்டாம் கட்டத்தைப் புரிந்து கொள்வதற்கு

[4] எங்கெல்ஸ் குறிப்பு: கையெழுத்துப் பிரதி II என்பதிலிருந்து.

அவசியமான அளவுக்கு மட்டுமே, பரிசீலித்தோம். மூலதனம் அதன் வெவ்வேறு கட்டங்களில் ஏற்கும் வெவ்வேறு வடிவங்களை— திரும்பத் திரும்பச் சுற்றி வரும் போது மூலதனம் ஒரு நேரம் ஏற்று பிறிதொரு நேரம் களைகிற இந்த வடிவங்களை—அங்கே நாம் ஆராயவில்லை. இந்த வடிவங்களை இப்போது நேரடியான பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறோம்.

இந்த வடிவங்களை அவற்றின் தூய நிலையில் கண்டறிந்து கொள்ளும் பொருட்டு, வடிவ மாற்றத்தோடோ வடிவச் சமைப் போடோ நேரடியாக எந்தத் தொடர்புமில்லாத எல்லாக் காரணி களையும் முதலில் நீக்கியாக வேண்டும். ஆகவே, சரக்குகள் அவற் றின் மதிப்புகளுக்கே விற்கப்படுவதாக மட்டுமல்லாமல், ஆரம்பத்தி லிருந்து கடைசி வரை ஒரே விதமான நிலைமைகளில் இது நடைபெறுவதாகவும் வைத்துக் கொள்கிறோம். அதே போல, சுழல் இயக்கத்தின் போது மதிப்பில் ஏற்படக் கூடிய மாற்றங்களையும் கருதாமலே விட்டு விடுகிறோம்.

### I. முதல் கட்டம். M—C[5]

பணத் தொகையானது சரக்குத் தொகுதியாக உருமாறுவதை M—C என்கிறோம். வாங்குபவர் தமது பணத்தைச் சரக்குகளாக மாற்றிக் கொள்கிறார்; விற்பவர் தமது சரக்குகளைப் பணமாக மாற்றிக் கொள்கிறார். பொதுவான சரக்குச் சுற்றோட்டத்தில் நிகழும் செயலாகிய இது, அதே போது ஒரு தனிப்பட்ட மூலதனத் தின் சுயேச்சையான சுற்றில் குறிப்பிட்ட பணி புரியும் ஒரு பகுதியும் ஆகிறது. இப்படி ஆவதற்கு செயலின் வடிவம் அல்ல பிரதான காரணம்; செயலின் உள்ளடக்கப் பொருட்களே, பணத்துக்கு பதிலாக வரப்பெறும் சரக்குகளது பிரத்தியேகப் பயனுடைமையே பிரதான காரணம். இந்தச் சரக்குகள் ஒரு புறம் உற்பத்திச் சாதனங் களாகவும் [means of production] மறு புறம் உழைப்புச் சக்தியாக வும் இருப்பவை, இவை சரக்கு உற்பத்திக்குப் பொருள் வடிவிலும் ஆள் வடிவிலும் அவசியமான காரணிகள் ஆகின்றன. இச்சரக்கு களின் பிரத்தியேகத் தன்மையானது உற்பத்தி செய்ய வேண்டிய பண்ட வகைக்கு ஏற்றதாய் இருப்பது அவசியம் என்பதைக் கூறத் தேவையில்லை. உழைப்புச் சக்தியை L என்றும், உற்பத்திச் சாதனங்களை mp என்றும் குறிப்போமானால், விலைக்கு வாங்க வேண்டிய சரக்குகளின் தொகுதியான C ஆனது L+mp என்பதற் குச் சமமாகும். இதைச் சுருக்கமாக $C<^{L}_{mp}$ எனக் குறிக்கலாம். எனவே M—C என்பது அதன் உள்ளடக்கப் பொருளைக் கொண்டு பார்க்கையில் $M-C<^{L}_{mp}$ என்று ஆகிறது. அதாவது M—C என்பது

[5] எங்கெல்ஸ் குறிப்பு: கையெழுத்துப் பிரதி VII என்பதன் தொடக்கம். தொடக்கத் தேதி 1878 ஜூலை 2.

M—L, M—mp ஆகிய இரு கூறுகளால் ஆனது. பணத் தொகையான M இரு பாகங்களாகப் பிரிந்து, ஒரு பாகம் உழைப்புச் சக்தியையும், மறு பாகம் உற்பத்திச் சாதனங்களையும் வாங்குகிறது. இவ்விரு வாங்கல்களும் இரு வேறு சந்தைகளில் நடைபெறுகிறவை. ஒன்று முறையான சரக்குச் சந்தையிலும் மற்றது உழைப்புச் சந்தையிலும் நடைபெறுகிறது.

M உருமாறுவதால் வரப்பெறும் சரக்குத் தொகுதியின் இந்தப் பண்புவழிப் பிரிவினை ஒரு புறமிருக்க $M—C<^{L}_{mp}$ என்னும் சூத்திரம் மிக அலாதியான அளவுவழி உறவையும் குறிப்பதாகும்.

உழைப்புச் சக்தியின் மதிப்பு [value] அல்லது விலை [price] அதனைச் சரக்காக விற்க முன்வருகிற அதன் உடைமையாளருக்குக் கூலியின் [wages] வடிவில் செலுத்தப்படுகிறது; அதாவது உபரி-உழைப்பு [surplus-labour] உள்ளிட்ட உழைப்பின் கூட்டளவுக்கான விலையாகச் செலுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, உழைப்புச் சக்தியின் [labour-power] ஒரு நாள் மதிப்பு ஐந்து மணி நேர உழைப்பினது உற்பத்திப் பொருளின் மதிப்பாகிய மூன்று ஷில்லிங்கிற்குச் சமமானால், வாங்குபவருக்கும் விற்பவருக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் இந்தத் தொகை (உதாரணமாக) பத்து மணி நேர உழைப்பிற்கான விலை அல்லது கூலியாகக் குறிக்கப் பெறுகிறது. இப்படியோர் ஒப்பந்தம் 50 தொழிலாளர்களுடன் செய்து கொள்ளப்பட்டால், வாங்குபவருக்காக அவர்கள் நாளொன்றுக்கு மொத்தம் 500 மணி நேரம் வேலை செய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது; இதில் பாதி நேரம், அதாவது ஒவ்வொன்றும் 10 மணி நேரம் கொண்ட 25 உழைப்பு நாட்களுக்குச் சமமான 250 மணி நேரம் உபரி-உழைப்பையே குறிப்பதாகும். வாங்க வேண்டிய உற்பத்திச் சாதனங்களின் அளவும் பரிமாணமும் இந்த உழைப்புத் திரளைப் பயன்படுத்திக் கொள்வதற்குப் போதுமானவையாய் இருக்க வேண்டும்.

அப்படியானால், $M—C<^{L}_{mp}$ என்பது குறிப்பிட்ட ஒரு பணத் தொகை—உதாரணமாக £422—அதற்கீடான உற்பத்திச் சாதனங்கள் மற்றும் உழைப்புச் சக்தியின் தொகைக்குப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுவதைக் காட்டும் விதத்தில் பண்புவழி உறவை [qualitative relation] தெரிவிப்பதோடு கூட, உழைப்புச் சக்திக்காகச் செலவிடப்படும் பணப் பகுதியான Lக்கும் உற்பத்திச் சாதனங்களுக்காகச் செலவிடப்படும் பகுதியான mpக்கும் இடையிலான அளவுவழி உறவையும் [quantitative relation] தெரிவிப்பதாகும். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் செலவிட வேண்டிய மிகுதி உழைப்பின், அதாவது உபரி-உழைப்பின் அளவுதான் ஆரம்பத்திலிருந்தே இந்த உறவை நிர்ணயிக்கிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு நூற்பாலையில் வேலை செய்யும் 50 தொழிலாளர்களின் வாரக் கூலி £50 என்றும், 1,500 மணி நேர

உபரி-உழைப்பைக் கொண்ட 3,000 மணி நேர உழைப்பை—ஒரு வார உழைப்பை—நூலாக மாற்றித் தரும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு £372 என்றும் வைத்துக் கொண்டால், உற்பத்திச் சாதனங்களுக்காக £372 செலவிட வேண்டும்.

பல்வேறு தொழிற் கிளைகளிலும் மிகுதி உழைப்பைப் பயன்படுத்திக் கொள்ள உற்பத்திச் சாதனங்களின் வடிவில் எவ்வளவு கூடுதல் மதிப்பு தேவைப்படுகிறது என்பது இங்கு முக்கியம் அன்று. உற்பத்திச் சாதனங்களுக்காக, அதாவது M—mp மூலம் வாங்கப்படும் உற்பத்திச் சாதனங்களுக்காகச் செலவிடும் பணப் பகுதி முற்றிலும் போதுமானதாய் இருக்க வேண்டும். அதாவது ஆரம்பத்திலேயே தக்கபடி அதைக் கணக்கிட வேண்டும், உரிய விகிதாசாரத்தில் கொள்முதல் செய்ய வேண்டும் என்பதுதான் முக்கியம். இதையே வேறுவிதமாகச் சொல்வதானால், உற்பத்திச் சாதனங்களின் அளவு உழைப்பின் அளவை உட்கிரகிக்கப் போதுமானதாய், அந்த உழைப்பினால் உற்பத்திப் பண்டங்களாக [products] மாற்றப்படுவதற்குப் போதுமானதாய் இருக்க வேண்டும். கைவசமுள்ள உற்பத்திச் சாதனங்கள் போதா விட்டால், வாங்குபவர் தமக்குக் கிடைக்கக் கூடிய மிகுதி உழைப்பைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது; அதனைப் பயன்படுத்திக் கொள்ள அவருக்குள்ள உரிமை பயனற்றதாகி விடும். கிடைக்கக் கூடிய உழைப்பைக் காட்டிலும் உற்பத்திச் சாதனங்கள் அதிகமாய் இருந்தால், பூரணமாய் அவற்றை உழைப்பால் நிரப்ப முடியாது, அவற்றை உற்பத்திப் பண்டங்களாக மாற்ற முடியாது.

$M-C<^{L}_{mp}$ என்னும் செயல் முடிக்கப் பெறுகிறது, வாங்குபவரிடம் இப்போது இருப்பது என்ன? பயனுள்ள பண்டம் ஒன்றின் உற்பத்திக்கு வேண்டிய உற்பத்திச் சாதனங்களும் உழைப்புச் சக்தியும் மட்டுமல்ல, இவற்றுக்கும் கூடுதலானவை அவரிடம் உள்ளன: உழைப்புச் சக்தியை இயங்க வைப்பதற்கான ஆற்றல் தேவையான அளவுக்கும் அதிகமாய், அதாவது இந்த உழைப்புச் சக்தியின் மதிப்பினது மாற்றீட்டுக்கு [replacement] வேண்டியதை விடவும் அதிக அளவிலான உழைப்பு அவர் வசம் உள்ளது. அதோடு இந்தக் கூடுதல் உழைப்பின் ஈடேற்றத்துக்கு [realisation] அல்லது பொருள்வடிவாக்கத்துக்கு [materialisation] தேவையான உற்பத்திச் சாதனங்களும் அவர் வசம் உள்ளன. வேறு விதமாகச் சொன்னால், உற்பத்தி-அடிக்கூறுகளின் மதிப்பை விடக் கூடுதலான மதிப்புடைய பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய உற்பத்திக் காரணிகள் [factors of production] அவர் வசம் உள்ளன. அதாவது, உபரி-மதிப்பைத் தம்முள் கொண்ட சரக்குத் திரளைத் தயாரிப்பதற்குத் தேவையான உற்பத்திக் காரணிகள் அவரிடம் இருக்கின்றன. பண வடிவில் அவர் முன்னீடு செய்த மதிப்பு இப்போது மூக்கும் முழியுமாய் தசையுரு [bodily form] எடுத்துள்ளது,

இவ்வுருவில் அது (சரக்குகளின் வடிவில்) உபரி-மதிப்பை உண் டாக்கும் மதிப்பின் அவதாரமாக முடிகிறது. சுருங்கச் சொல்லின், மதிப்பானது இங்கே, மதிப்பையும் உபரி-மதிப்பையும் படைக்க வல்லதாகிய மூலதனத்தின், அதாவது **திறனுடை-மூலதனத்தின்** [productive capital] நிலை அல்லது வடிவில் உள்ளது. இவ்வடிவில் இருக்கும் மூலதனத்தை P என்போம்.

இந்த Pஇன் மதிப்பு L+mpஇன் மதிப்புக்குச் சமம்; L மற்றும் mpக்குப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும் Mக்குச் சமம். மூலதன-மதிப்பு [capital-value] என்ற முறையில் Pஉம் Mஉம் ஒன்றுதான்; நிலவல் வடிவம் மட்டுமே வேறுபடுகிறது; அதாவது M என்பது பணத்தின் நிலையில் அல்லது வடிவில் உள்ள மூலதன-மதிப்பு ஆகும் — **பண-மூலதனம்** ஆகும்.

$M-C<^{L}_{mp}$ என்பது, அல்லது அதன் பொது வடிவமான M—C என்பது, விலை கொடுத்து சரக்கு வாங்கும் செயல்களின் தொகுதி யாகும், பொதுவான சரக்குச் சுற்றோட்டத்தில் நடைபெறும் செய லாகும். ஆகவே இது அதேபோது — மூலதனத்தின் சுயேச்சையான சுற்றில் ஒரு கட்டம் என்ற முறையில் — பண வடிவிலுள்ள மூலதன-மதிப்பு உற்பத்தித் திறனுள்ள வடிவத்தை அடையும் உருமாற்றமும் ஆகும். சுருங்கச் சொன்னால், **பண-மூலதனமாக** இருப்பது **திறனு டை-மூலதனமாக** உருமாறுவதை இது குறிக்கிறது. இங்கே நாம் பரிசீ லிக்கும் சுற்றின் வரையுருவில் பணம்தான் மூலதன-மதிப்பின் முதலா வது உறைவிடமாக விளங்குகிறது. ஆகவே பண-மூலதனம் என்பது மூலதனம் முன்னீடு செய்யப்படும் வடிவத்தைக் குறிப்பதாகும்.

மூலதனம் பண-மூலதனத்தின் வடிவிலுள்ள போது அது பணத்தின் பணிகளை ஆற்றக் கூடியதாய் இருக்கிறது. இங்கு நமது உதாரணத்தில், அது சர்வப்பொது வாங்கற் சாதன [universal means of purchase] பணிகளையும் சர்வப் பொதுக் கொடுப்புச் சாதன [universal means of payment] பணிகளையும் ஆற்றக் கூடிய தாய் இருக்கிறது. (இரண்டாவதாகச் சொல்லப்பட்ட பணிகள் இங்கு எழுவது எப்படியென்றால், உழைப்புச் சக்தி முதலில் வாங் கப்பட்டாலும் அது செயல்பட முற்பட்ட பிறகே அதற்கு விலை கொடுக்கப்படுகிறது; உற்பத்திச் சாதனங்கள் தயார்நிலையில் சந்தை யில் கிடைக்காத போது சரக்காணை கொடுத்துப் பெற வேண்டியிருப் பதால் M—mp என்பதில் பணம் கொடுப்புச் சாதனமாகப் பயன் படுகிறது.) பண-மூலதனத்துக்கு உள்ள இந்த ஆற்றல் அது பணமாக இருப்பதிலிருந்து வருவதுதானே தவிர, மூலதனமாக இருப்பதி லிருந்து வருவதன்று.

ஆனால், மூலதன-மதிப்பு பண வடிவிலுள்ள போது அது பணத்தின் பணிகளைத் தவிர வேறு எந்தப் பணியையும் ஆற்ற முடியாது. பணப் பணிகள் மூலதனப் பணிகளாக மாறுவது எதனால்? மூலதனத்தின் இயக்கத்தில் பணப் பணிகள் வகிக்கும் குறிப்பிட்ட

பாத்திரத்தாலும், ஆகவே இப்பணிகள் நடந்தேறும் கட்டம் மூல தனச் சுற்றின் பிற கட்டங்களுடன் கொண்டுள்ள பரஸ்பர உறவு களாலும் இது ஏற்படுகிறது. இங்கே நாம் பரிசீலித்துக் கொண் டிருக்கும் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். பணம் இங்கே சரக்குகளாக மாறுகிறது. இச்சரக்குகளின் தொகுதி திறனுடை-மூலதனத்தின் தசையுருவைக் குறிக்கிறது; ஏற்கெனவே இது முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையால் விளையும் பயனை உள்ளுறை நிலையில் தன்னுள் கொண்டுள்ளது.

$M-C <^{L}_{mp}$ என்பதில் பண-மூலதனமாகச் செயல்படுகிற பணத்தில் ஒரு பகுதி, இச்சுற்றோட்டச் செயலை நிறைவேற்றுவதன் மூலம், தனது பண இயல்பை இருத்திக் கொண்டு மூலதன இயல்பை இழக் கிறது. பண-மூலதனமான M—L என்பதன் சுற்றோட்டம் M—mp ஆகவும் M—l ஆகவும், அதாவது உற்பத்திச் சாதனங்களின் வாங்க லாகவும் உழைப்புச் சக்தியின் வாங்கலாகவும் பிரிகிறது. பின்னால் குறிப்பிட்ட நிகழ்முறையைத் தனித்து நோக்குவோம்.M—L என்பது உழைப்புச் சக்தியை முதலாளி வாங்குவதாகும்; உழைப்புச் சக் தியை—கூலி வடிவம் அனுமானித்துக் கொள்ளப்படுவதால் இங்கே நாம் உழைப்பை என்றே கூறலாம்—அதன் உடைமையாளராகிய தொழிலாளி விற்பதும் ஆகும். வாங்குபவருக்கு M—C(=M—L) ஆக இருப்பது—எல்லா வாங்கலிலும் எப்படியோ அதே போல இங்கும் —விற்பவருக்கு (தொழிலாளிக்கு) L—M(=C—M) ஆகிறது. இது அவரது உழைப்புச் சக்தியின் விற்றல் ஆகிறது. இது சரக்குச் சுற் றோட்டத்தின் முதல் கட்டமாகும், அல்லது முதல் உருமாற்றம் ஆகும் (மூலதனம், முதல் பாகம், அத்தியாயம் III., பிரிவு 2. அ). உழைப்பை விற்பவருக்கு இது அவரது சரக்கைப் பண வடிவத்துக்கு மாற்றிக் கொள்வதாகும். இப்படிக் கிடைக்கிற பணத்தைத் தொழி லாளி தமது தேவைகளின் நிறைவுக்குத் தேவைப்படும் பல்வேறு சரக்குகளுக்காக, நுகர்வுப் பண்டங்களுக்காக சிறிது சிறிதாய்ச் செலவிடுகிறார். எனவே அவரது சரக்கின் முழுச் சுற்றோட்டம் L—M—C ஆகிறது, அதாவது முதலில் L—M(=C—M) ஆகி, பிறகு M—C ஆகிறது; ஆகவே சாமானிய சரக்குச் சுற்றோட்டத்தின் பொது வடிவமாகிய C—M—C ஆகிறது. இந்த உதாரணத்தில் பணமானது இடையில் வருகிற சுற்றோட்டச் சாதனமாக மட்டுமே, ஒரு சரக்கு இன்னொரு சரக்குக்காகப் பரிவர்த்தனை செய்யப்பட வகை செய்யும் ஊடகமாக [medium] மட்டுமே பயன்படுகிறது.

M—L என்பது பண-மூலதனம் திறனுடை-மூலதனமாக மாற்றம் பெறுவதில் தனிப் பெரும் நிகழ்முறையாகும். ஏனென்றால், பணத்தின் வடிவில் முன்னீடு செய்யப்படும் மதிப்பானது மூலதன மாக, அதாவது உபரி-மதிப்பை உற்பத்தி செய்கிற மதிப்பாக மெய்யாகவே மாற்றம் பெறுவதற்கு இது இன்றியமையாத நிபந் தனை ஆகிறது. M—L என்னும் நிகழ்முறையின் போது எவ்வளவு உழைப்பு வாங்கப்படுகிறதோ அந்த உழைப்பின் ஈடேற்றத்துக்காக

மட்டுமே M—mp தேவைப்படுகிறது. மூலதனம், முதல் பாகம், பகுதி IIஇல் ''பணம் மூலதனமாக மாற்றமடைதல்'' என்ற தலைப்பில் இதனை இந்தக் கோணத்திலிருந்து பரிசீலித்தோம். இங்கே நாம் இதனை வேறொரு கோணத்திலிருந்தும், மூலதனம் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளும் வடிவம் என்ற முறையில் குறிப்பாகப் பண-மூலதனம் தொடர்பான கோணத்திலிருந்தும் பரிசீலித்தாக வேண்டும்.

பொதுவாக M—L ஆனது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்குரிய தனிக் குணமாகக் கருதப்படுகிறது. ஆயினும் இப்படிக் கருதப்படுவதற்கு மேற்கூறியது அல்ல காரணம். அதாவது உழைப்புச் சக்தியினை விலைக்கு வாங்கும் செயல் ஒரு வாங்கல்-ஒப்பந்தமாகி, உழைப்புச் சக்தியின் விலையாகிய கூலியை ஈடு செய்யத் தேவையானதற்கும் கூடுதலான அளவு உழைப்பு அளிக்கப் பட வேண்டும் என்று (முன்னீடு செய்யப்பட்ட மதிப்பு மூலதன மாக்கப்படுவதற்கு அல்லது உபரி-மதிப்பு உற்பத்தி செய்யப்படு வ்தற்கு — இரண்டும் ஒன்றுதான் — அவசிய அடிப்படையான உபரி-உழைப்பு இவ்விதம் அளிக்கப்பட வேண்டும் என்று) நிபந்தனை இடுவதல்ல காரணம். மாறாக, அதன் வடிவம் காரணமாகவே அது இப்படி கருதப்படுகிறது. ஏனெனில் கூலி வடிவிலான பணம்தான் உழைப்பினை வாங்குகிறது. பணப் பொருளாதாரத்துக்கு இதுதான் அடையாளக் குறி.

அறிவுக்கு ஒவ்வாத வடிவமாய் இருப்பதும் கூட வேறுபடுத்திக் காட்டும் தனிக் குணமாய்க் கொள்ளப்படுவதில்லை. அறிவுக்கு ஒவ்வாததைக் கவனியாது ஒதுக்குவாரே தவிர எவரும் கருத்துக்கு உரியதாய்க் கொள்ள மாட்டார். அறிவுக்கு ஒவ்வாதது ஆவது எப்படி? மதிப்பைப் படைப்பது உழைப்பே என்பதால் உழைப்புக்கு மதிப்பு ஏதும் இருக்க முடியாது, ஆகவே குறிப்பிட்ட அளவுடைய உழைப்பு மதிப்புடையதாகி, குறிப்பிட்ட அளவுப் பணத்துக்குச் சமதை என்ற முறையில் அதன் விலையில் தெரிவிக்கப்படுதலும் முடியாத காரியம். இருப்பினும் நமக்குத் தெரியும்: மாறுவேடம் பூண்ட ஒரு வடிவமே கூலி; உதாரணமாக, ஒரு நாளுக்கான உழைப்புச் சக்தியின் விலை அந்த உழைப்புச் சக்தி ஒரு நாளில் இயக்குகிற உழைப்பின் விலையாக வேடம் பூண்டு வெளிப்படு கிறது. இந்த உழைப்புச் சக்தியால் ஆறு மணி நேர உழைப்பின் போது உற்பத்தி செய்யப்படும் மதிப்பானது இவ்விதம் உழைப்புச் சக்தியின் பன்னிரண்டு மணி நேரச் செயற்பாடு அல்லது இயக் கத்தின் மதிப்பாகத் தெரிவிக்கப்படுகிறது எனலாம்.

M—L ஆனது பணப் பொருளாதாரம் எனப்படுவதன் தனிக் குணமாக, அடையாளக் குறியாக ஏன் கருதப்படுகிறது என்றால், இங்கே உழைப்பு அதன் உடைமையாளருடைய சரக்காகத் தோற்ற மளிக்க, பணம் அச்சரக்கை வாங்குகிறவராக விளங்குகிறது — ஆகவே

பண உறவுதான் (அதாவது மனிதச் செயற்பாடு விற்கப்படுவதும் வாங்கப்படுவதும்தான்) இதற்குக் காரணம். ஆனால், நெடுங்காலத் துக்கு முன்பே, M ஆனது பண-மூலதனமாக உருமாற்றம் பெறா மலே, பொருளாதார அமைப்பின் பொதுவான தன்மையில் எந்த மாற்றமும் இல்லாமலே, சேவைகள் என்பனவற்றை வாங்குகிற வராகப் பணம் தோற்றமளித்து வந்திருக்கிறது.

பணத்துக்கு அது எவ்வகைச் சரக்காக உருமாறுகிறது என்பது குறித்துக் கவலையில்லை, எல்லாம் அதற்கு ஒன்றுதான். பணம் எல்லாச் சரக்குகளுக்கும் சர்வப் பொதுச் சமதையாக [universal equivalent] இருப்பது. சரக்குகள் வேறு எதனாலும் இல்லா விட்டாலும் அவற்றின் விலைகளால் தெரியப்படுத்துவது என்ன வென்றால்: கருத்தளவில் அளவு குறிப்பிட்ட பணத் தொகையைக் குறிப்பவை, பணமாக உருமாற்றம் பெறுவதற்காகக் காத்திருப் பவை. பணத்துக்குப் பிரதியாக அவை கைமாறாத வரை அவற்றின் உடைமையாளருக்கு வேண்டிய பயன்-மதிப்புகளாக [use-values] மாற்றப்படுவதற்கு ஏற்ற வடிவம் பெறுவதில்லை என்பதே. உழைப் புச் சக்தியானது அதன் உடைமையாளரது சரக்காக சந்தையை அடைந்து, உழைப்புக்கு ஊதியம், அதாவது கூலி கொடுப்பதன் வடி வில் அதன் விற்பனை முடிவுற்றதும், அதன் விற்றலும் வாங்கலும் எவ்விதத்திலும் அதிசயமாய் இல்லாமல், மற்றெந்தச் சரக்கின் விற் றலையும் வாங்கலையும் போன்ற சர்வசாதாரணச் செயல்களாகி விடுகின்றன. இங்கே தனிவிசேஷமாகக் குறிப்பிட வேண்டியது உழைப்புச் சக்தி விற்பனைச் சரக்காவதே தவிர, சரக்காகிய உழைப் புச் சக்தி விற்கவும் வாங்கவும் கூடியதாவது அல்ல.

பண-மூலதனம் திறனுடை-மூலதனமாக மாறுவதன் $M-C<^{L}_{mp}$ என்பதைக் கொண்டு, முதலாளியானவர் உற்பத்தியின் பொருள் வகைக் காரணியையும் ஆள்வகைக் காரணியையும் (இவை சரக்கு களால் ஆனவையாக இருக்குமானால்) இணையச் செய்கிறார். பணம் முதன்முதலாய்த் திறனுடை-மூலதனமாக மாற்றப்பட்டால், அதாவது அதன் உடைமையாளருக்காக பண-மூலதனப் பணியை முதன்முதலாய் ஆற்ற வேண்டுமானால், அவர் உழைப்புச் சக்தியை வாங்குவதற்கு முன்னால், கட்டடங்கள், இயந்திர சாதனம் [machinery] போன்ற உற்பத்திச் சாதனங்களை வாங்கியாக வேண்டும். ஏனெனில் உழைப்புச் சக்தியை அவர் தமது அதிகாரத் துக்குப் பணிந்து செயல்படுமாறு நிர்ப்பந்தம் செய்ய தொடங்கு கையில் அந்த உழைப்புச் சக்தியை இயங்க வைப்பதற்கு வேண்டிய உற்பத்திச் சாதனங்கள் அவரிடம் இருக்க வேண்டும்.

முதலாளி இப்படித்தான் விவகாரத்தை எடுத்துரைக்கிறார்.

தொழிலாளி கூறுவது வருமாறு: அவரது உழைப்புச் சக்தி விற்கப்பட்டு உற்பத்திச் சாதனங்களோடு இணைப்பு பெறும் வரை அதனை உற்பத்தித் திறனுள்ள முறையில் பிரயோகிப்பது சாத்

தியமல்ல. விற்கப்படுவதற்கு முன்னால் உழைப்புச் சக்தி உற்பத்திச் சாதனங்களிலிருந்து—அதாவது அதன் பிரயோகத்துக்கு அவசிய மான பொருட் சாதனங்களிலிருந்து—தனியே பிரிந்திருக்கிறது. இப்படித் தனியே பிரிந்திருக்கையில் அதனை அதன் உடைமை யாளருக்குத் தேவையான பயன்-மதிப்புகளின் நேரடி உற்பத் திக்கோ, அவர் விற்றுப் பிழைப்பதற்கான சரக்குகளின் உற்பத் திக்கோ பயன்படுத்த முடியாது. ஆனால் விற்கப்படுவதன் பயனாய் அது உற்பத்திச் சாதனங்களோடு இணைப்பு பெறுகிறது. அத் தருணம் முதல், உற்பத்திச் சாதனங்களைப் போலவே அதுவும் அதை வாங்குகிறவரிடம் உள்ள திறனுடை-மூலதனத்தைச் சேர்ந்த பகுதியாகிறது.

M—L என்னும் செயலில் பண உடைமையாளரும் உழைப்புச் சக்தியின் உடைமையாளரும் வாங்குபவராகவும் விற்பவராகவுமே உறவு கொள்கின்றனர், பண உடைமையாளராகவும் சரக்கு உடைமை யாளராகவுமே ஒருவரையொருவர் எதிர்நோக்குகின்றனர் என்பது மெய்தான். இவ்விதம் அவர்கள் பண உறவு மட்டுமே கொள் கின்றனர். ஆயினும் அதே நேரத்தில் உழைப்புச் சக்தியை வாங்கு கிறவர் அச்சக்தியை அதன் உடைமையாளர் உற்பத்தித் திறனுள்ள முறையில் செலவிடுவதற்கு இன்றியமையாத பொருட் சாதனங் களாகிய உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளராகவும் ஆரம்பத் திலிருந்தே விளங்குகிறார். வேறுவிதமாகச் சொல்வதானால், இந்த உற்பத்திச் சாதனங்கள் வேறொருவரது உடைமையாதலால், அவை உழைப்புச் சக்தியின் உடைமையாளருக்கு எதிர் நிலையில் இருப் பவை. மறு புறத்தில், உழைப்பை விற்பவர் அதனை வாங்குகிற வரை வேறொருவரது உழைப்புச் சக்தியாக எதிர்நோக்குகிறார். வாங்குகிறவர் வேறொருவரது உழைப்புச் சக்தியான இதனை தம் சொற்படி நடக்கச் செய்து தமது மூலதனத்துடன் இணைய வைத்தாக வேண்டும்; அப்போதுதான் அது மெய்யாகவே திறனுடை-மூலதன மாக முடியும். எனவே இருவரும் M—L என்னும் செயலில் (தொழி லாளியின் நிலையிலிருந்து சொன்னால் L—M என்னும் செயலில்) ஒருவரையொருவர் எதிர்நோக்கும் தருணம் முதலாய் இவர்க ளிடையே முதலாளிக்கும் கூலித் தொழிலாளிக்கும் இடையிலான வர்க்க உறவு நிலவுகிறது, நிலவுவதாகக் கொள்ளவும் படுகிறது. வாங்கலும் விற்றலும்தான், பண உறவுதான் என்றாலும் இது, வாங்குகிறவர் முதலாளியாகவும் விற்பவர் கூலித் தொழிலாளி யாகவும் அனுமானித்துக் கொள்ளப்படுகிற வாங்கலும் விற்றலும் ஆகும். இந்த உறவு எங்கிருந்து எழுகிறது? உழைப்புச் சக்தியின் ஈடேற்றத்துக்குத் தேவையான சாதனங்கள், அதாவது வாழ்வுச் சாதனங்களும் [means of subsistence] உற்பத்திச் சாதனங்களும் உழைப்புச் சக்தியின் உடைமையாளரிடமிருந்து பிரிக்கப்பட்டு வேறொருவரது சொத்தாக இருக்கும் நிலைமையிலிருந்து எழுகிறது.

இந்தப் பிரிவினையின் தோற்றுவாய் எது என்பது குறித்து இங்கே நமக்குக் கவலை இல்லை. M—L நடைபெற முற்பட்டதுமே இருந்து வருவதுதான் இந்தப் பிரிவினை. இங்கே நம் கருத்துக்கு உரியதாய் இருப்பது இதுதான்: M—L ஆனது இங்கே பண-மூல தனத்தின் செயலாக, அதாவது மூலதனத்தின் நிலவல் வடிவமாய் இருக்கும் பணத்தின் செயலாகத் தெரிகிறதே, அது எப்படி? பயன் தரும் மனிதச் செயற்பாடு அல்லது சேவைக்கு விலை கொடுப் பதற்கான சாதனமாகப் பணம் இங்கே செயல்படுவது மட்டுமல்ல காரணம். ஆகவே அதை, கொடுப்புச் சாதனமாகப் பணம் ஆற்றுகிற பணியின் விளைவாய்க் கொள்வதற்கில்லை. இந்த வடிவில் பணத்தைச் செலவிட முடிவதற்கே காரணம், உழைப்புச் சக்தி அதன் உற்பத்திச் சாதனங்களிலிருந்து (உழைப்புச் சக்தியை உற்பத்தி செய்கிற சாதனங்களாகிய வாழ்வுச் சாதனங்களும் இவற்றில் அடங்கும்) பிரித்துத் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதும், உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளரிடம் உழைப்புச் சக்தியை விலைக்கு விற்பது ஒன்றே இந்தப் பிரிவினையை அகற்றுவதற்கான வழியாய் இருப்பதும்தான். ஆக, தனது விலையின் மறுவுற்பத்திக்கு வேண்டிய அளவு உழைப்போடு நில்லாமல் தொடர்ந்து இயங்கக் கூடியதாகிய உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குகிறவர் அதை இயங்க வைப்பதில் அக்கறையுடையவர் என்பதே இதற்குக் காரணம். மூலதன உறவானது சரக்குச் சுற்றோட்டச் செயலில், வாங் குகிறவரும் விற்பவரும் அடிப்படையில் வெவ்வேறான பொருளா தார நிலைமைகளில் ஒருவரையொருவர் எதிர்நோக்குவதில், அவர் களது வர்க்க உறவில் உள்ளார்ந்து இருப்பதால்தான், பொருளுற் பத்தி நிகழ்முறையின் போது இந்த உறவு எழுகிறது. பணம் அதன் தன்மையின் காரணமாய் உண்டாக்குவது அல்ல மூலதன உறவு; மாறாக மூலதன உறவு என்பதாக ஒன்று இருப்பதால்தான் வெறும் பணப் பணி மூலதனப் பணியாக உருமாற்றமடைய வேண்டிய தாகிறது.

பண-மூலதனம் என்ற கருத்துருவத்தில் (இப்போதைக்கு நாம் பண-மூலதனம் பற்றிப் பேசுவது இங்கு அது ஆற்றுகிற விசேஷப் பணியின் எல்லைகளுக்குட்பட்டே), ஒன்றுக்கொன்று இணையாகச் செல்லும், அல்லது ஒன்றையொன்று வெட்டிச் செல்லும் இரு பிழைகள் ஏற்படுகின்றன. முதலாவதாக, பண-மூலதனம் என்ற நிலையில் மூலதன-மதிப்பு ஆற்றுகிற பணிகள், பண வடிவில் இருப்பதாலேயே அதனால் ஆற்ற முடிகிற இந்தப் பணிகள், மூல தனம் என்ற அதன் தன்மையிலிருந்து விளைவதாய்க் கருதுவது தவறு; இப்பணிகளுக்கு மூலதன-மதிப்பின் பண வடிவமே, பணம் என்ற அதன் புறத் தோற்றமே காரணம். இதற்கு மாறான விதத் தில், இரண்டாவதாக, பணப் பணியை அதே நேரத்தில் மூலதனப் பணியும் ஆகும் படி செய்கிற பணப் பணியின் தனிவுகைப்பட்ட

உள்ளடக்கம் பணத்தின் தன்மை காரணமாய் எழுவதாகக் கருதப் படுகிறது (இங்கு பணமானது மூலதனத்தோடு குழப்பிக் கொள்ளப் படுகிறது). இந்தப் பணப் பணி இங்கே M—L என்னும் செயலினால் காட்டப்படும் சமூக நிலைமைகளை ஆதாரமாகக் கொண்டதாகும்; இந்நிலைமைகள் வெறும் சரக்குச் சுற்றோட்டத்திலும் அதற்குரிய பணச் சுற்றோட்டத்திலும் இருக்கக் கூடியவை அல்ல.

அடிமைகளை விற்பதும் வாங்குவதும் கூட வெளித் தோற்றத்தில் சரக்குகளின் விற்றலும் வாங்கலும்தான். ஆனால் அடிமை முறை நிலவாத போது பணம் இப்பணியை ஆற்ற முடியாது. அடிமை முறை நிலவினால்தான் அடிமைகளை வாங்குவதற்குப் பணத்தை முதலீடு செய்ய முடியும். வெறும் பண உடைமையே அடிமை முறையைச் சாத்தியமாக்கி விட முடியாது.

ஒருவர் தமது உழைப்புச் சக்தியை விற்பதானது (தமது உழைப் பினை விற்பதன் வடிவிலோ, கூலியின் வடிவிலோ) ஏதோ தனிப்பட்ட அரிய நிகழ்வாய் இல்லாமல், சரக்கு உற்பத்திக்கு சமூக வழியில் தீர்மானகரமான ஆதாரமாக வேண்டுமானால், இவ்விதம் பண-மூலதனம் மேலே நாம் பரிசீலித்த $M—C<^{L}_{mp}$ என்னும் செயலை சமுதாய அளவில் செய்ய வேண்டுமானால், உழைப்புச் சக்தியுடன் உற்பத்திச் சாதனங்களுக்கு உள்ள ஆதிப் பிணைப்பை அறுத் தெறியும் வரலாற்று நிகழ்முறைகள் நடந்தேறி விட்டதாக அனு மானித்துக் கொண்டாக வேண்டும். பெருந்திரள் மக்களான உழைப் பாளர்கள் இந்நிகழ்முறைகளின் விளைவாய் உற்பத்திச் சாதனங் களில் உடைமையற்றோராய் இச்சாதனங்களின் உடைமையாளர் களான உழைப்பாளரல்லாதாரை நேர் நின்று நோக்க வேண்டியதா கிறது. அறுத்தெறியப்படுமுன் நிலவிய பிணைப்பு எவ்வடிவிலும் இருந்திருக்கலாம், உழைப்பாளரையே ஓர் உற்பத்திச் சாதனமாக்கி பிற உற்பத்திச் சாதனங்களுக்குச் சொந்தமான உடைமையாக்கு வதாகவும் இருந்திருக்கலாம்; அல்லது அவரை இச்சாதனங்களின் உடைமையாளராக்குவதாகவும் இருந்திருக்கலாம், இங்கு நம் முன் னுள்ள பிரச்சினையைப் பொறுத்த வரை எல்லாம் ஒன்றுதான்.

$M—C|<^{L}_{mp}$ என்பதன் உட்பொருள் பங்கீடே அன்றி வேறு எதுவு மல்ல — சாதாரண அர்த்தத்திலான பங்கீடு அல்ல, அதாவது நுகர்வுப் பண்டங்களது பங்கீடு அல்ல; உற்பத்தி-அடிக்கூறுகளது பங்கீடு, அதாவது ஒரு புறத்தில் உற்பத்தியின் பொருட் சாதனங்கள் எல்லாம் குவிக்கப்பட்டிருக்க, மறு புறத்தில் உழைப்புச் சக்தி பிரித் துத் தனிமைப்படுத்தப்படும் பங்கீடு குறிக்கப்படுகிறது.

ஆகவே, M—L என்னும் செயல் சர்வப்பொதுவான, சமுதாய அளவிலான செயலாக மாற வேண்டுமானால் திறனுடைய-மூல தனத்தின் பொருட் கூறான உற்பத்திச் சாதனங்கள் மூலதன மாகத்தான் தொழிலாளியை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிலைநாட்டப் பெற்றதும், தொடர்ந்து அது மேலும் மேலும் அடைகிற வளர்ச்சியின் போது

இந்தப் பிரிவினை மறுவுற்பத்தி செய்யப்படுவதோடு, இதன் வீச்சு மேலும் மேலும் விரிவுபடுத்தப்பட்டு முடிவில் பொதுவான சமுதாய நிலைமையாக்கப்படுகிறது என்பதை முன்பே நாம் பார்த்தோம். (*மூலதனம்*, முதல் பாகம், பகுதி VII). ஆயினும் இந்தப் பிரச் சினையில் இதன்றி இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். மூலதனம் உயர்ந்தெழுந்து பொருளுற்பத்தியைத் தன் பிடிக்குள் கொண்டுவர வேண்டுமானால், வாணிபமும் வளர்ச்சியுற்று, குறிப் பிட்ட ஒரு கட்டத்தை அடைந்திருக்க வேண்டும். இதன் பொருட்டு சரக்குகளின் சுற்றோட்டமும், ஆகவே சரக்கு உற்பத்தியும் வளர்ந் திருக்க வேண்டும். ஏனெனில் பண்டங்கள் விற்பனைக்கென்று— அதாவது சரக்குகளாக—உற்பத்தி செய்யப்படா விட்டால், அவற் றால் சரக்காகச் சுற்றோட்டத்தில் நுழைய முடியாது. ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி அதன் அடிப்படையாக அமை யாத வரை சரக்கு உற்பத்தியானது பொது வழக்காய் ஆட்சி செலுத் துகிற உற்பத்தி வகை ஆவதில்லை.

விவசாயிகளது விடுதலை என்பதாக ருஷ்யாவில் நடந்த சீர் திருத்தத்தின் விளைவாய், பண்ணையடிமைகளின் கட்டாய உழைப் புக்குப் பதிலாக இப்போது கூலித் தொழிலாளர்களைக் கொண்டு பயிர்த் தொழில் செய்ய வேண்டியிருக்கும் ருஷ்ய நிலவுடைமை யாளர்கள் இரு நிலைமைகள் குறித்துப் புகார் சொல்கிறார்கள். பண-மூலதனம் போதவில்லை என்பது முதலாவது புகார். எடுத்துக் காட்டாக, அறுத்து விற்பதற்கு முன்பே தொழிலாளர்களுக்கு ஒப்பளவில் பெருந்தொகைகள் செலுத்த வேண்டியிருக்கிறது, பிரதானத் தேவையான ரொக்கப் பணத்துக்கு அந்த நேரத்தில் கடும் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்கிறார்கள். பண வடிவிலான மூல தனம் எப்போதும் கிடைக்கக் கூடியதாய் இருக்க வேண்டும், முக்கிய மாகக் கூலி கொடுப்பதற்கு இது கிடைத்தாக வேண்டும். அப்போது தான் முதலாளித்துவ முறையில் பொருளுற்பத்தி நடைபெற முடியும். ஆனால் நிலவுடைமையாளர்கள் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. காத்திருந்தால் எல்லாம் வரப்பெறும். தொழில் துறை முதலாளி யின் கைக்கு அவரது சொந்தப் பணம் மட்டுமல்லாமல் ஏனை யோரது பணமும் எட்டப் போகிற காலம் நெருங்கி வருகிறது.

இரண்டாவது புகார் இன்னும் கூடக் குறிப்பிடத்தக்கது. பணம் கிடைத்தாலும் போதிய தொழிலாளர்கள் எப்போதும் கிடைப் பதில்லை என்கிறார்கள். கிராமச் சமுதாயத்தின் பொது நில வுடைமை முறையின் காரணத்தால் இன்னமும் ருஷ்ய விவசாயத் தொழிலாளி அவரது உற்பத்திச் சாதனங்களிடமிருந்து முழு அளவுக்குத் தனியே பிரிக்கப்பட்டாகவில்லை, எனவே இன்னமும் அவர் முழு அர்த்தத்தில் ''சுதந்தரமான கூலித் தொழிலாளி'' ஆகவில்லை என்பதே காரணம். ஆனால் பணம் சரக்குகளாக அடையும் உருமாற்றமான M—C பண-மூலதனம் திறனுடை-மூல

தனமாக உருமாறுவதைக் குறிக்க வேண்டுமானால், சுதந்தரமான கூலித் தொழிலாளர்கள் சமுதாய அளவில் விரிந்து பரந்திருப்பது இன்றியமையாததாகும்.

எனவே, பண-மூலதனத்தின் சுற்றுக்கான சூத்திரமாகிய M—C ... P ... C′ — M′, வளர்ச்சி பெற்று விட்ட முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையில் மட்டுமே மூலதனச் சுற்றின் சகஜமான வடிவமாகிறது. ஏனென்றால் அதற்குக் கூலித் தொழிலாளர் வர்க்கம் சமுதாய அளவில் நிலவுவது அவசியமாகும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி சரக்குகளையும் உபரி-மதிப்பையும் படைப்பது மட்டுமன்றி, கூலித் தொழிலாளர் வர்க்கத்தை மேன்மேலும் அதிக அளவில் மறுவுற்பத்தி செய்வதையும், நேரடி உற்பத்தியாளர்களில் மிகப் பெரும் பகுதியோரைக் கூலித் தொழிலாளர்களாக மாற்றுவதையும் முன்பே பார்த்தோம். கூலித் தொழிலாளர் வர்க்கம் ஒன்று நிரந்தரமாக இருந்து வருவது அதன் ஈடேற்றத்துக்குரிய முதல் நிபந்தனையாக இருப்பதால், M—C ... P ... C′ — M′ நடந்தேற திறனுடை-மூலதனத்தின் வடிவில் அமைந்த மூலதனம் அவசியமாகிறது; இதனால் திறனுடை-மூலதனத்தின் சுற்றும் அவசியமாகிறது.

## II. இரண்டாம் கட்டம். திறனுடை-மூலதனத்தின் பணி

நாம் இங்கே பார்த்துள்ள மூலதனச் சுற்று [circuit of capital] பணம் சரக்குகளாக அடையும் உருமாற்றமான M—C என்னும் சுற்றோட்டச் செயலுடன், அதாவது வாங்கலுடன் ஆரம்பமாகிறது. ஆகவே, சரக்குகள் பணமாக அடையும் மாற்றமான C—M என்னும் எதிர்நிலை உருமாற்றத்தால்—விற்றலால்—சுற்றோட்டம் பூர்த்தி பெற வேண்டும். ஆனால் பணத்தின் வடிவில் முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பின் சுற்றோட்டம் இடைமறிக்கப்படுவதே $M—C<^{L}_{mp}$ என்பதன் நேரடி விளைவு. பண-மூலதனம் திறனுடை-மூலதனமாக மாறுவதன் மூலம் மூலதன-மதிப்பு தசையுரு பெறுகிறது. அது இவ்வடிவில் தொடர்ந்து சுற்றியோட முடியாது; நுகர்வுக்கே, அதாவது திறனுடை நுகர்வுக்கே உள்ளாக வேண்டும். உழைப்புச் சக்தியின் பயனாகிய உழைப்பை உழைப்பு நிகழ்முறையில்தான் பொருள்வடிவாக்க முடியும். முதலாளி தொழிலாளியை சரக்காக மறு விற்பனை செய்ய முடியாது; ஏனென்றால் தொழிலாளி அவருக்கு அசையுஞ் சொத்தாகிய அடிமையல்ல; குறிப்பிட்ட காலத்துக்கு அவரது உழைப்புச் சக்தியைப் பயன்படுத்திக் கொள்வதற்கான உரிமையைத்தான் முதலாளி வாங்குகிறாரே தவிர வேறு எதையுமல்ல. உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்தி உழைப்புச் சக்தியின் துணை கொண்டு சரக்குகளை உற்பத்தி செய்வதன்றி வேறு எவ்விதத்திலும் முதலாளி இந்த உழைப்புச் சக்தியை

உபயோகிக்க முடியாது. மூலதனம் உற்பத்தித் திறனுள்ளதாகச் செயல்படுகிற கட்டமான இரண்டாவது கட்டம் ஆரம்பமாகிறது. இதுவே முதல் கட்டத்தால் ஏற்படும் விளைவு.

இந்த இயக்கத்தை $M-C<^{L}_{mp}\ldots P$ என்று குறிக்கிறோம். இங்கே புள்ளிகள் மூலதனத்தின் சுற்றோட்டம் தடைபடுவதைக் குறிக்கின்றன. ஆயினும் மூலதனத்தின் சுழல் இயக்கம் தொடர்ந்து நடைபெறுகிறது. எப்படியென்றால் சரக்குச் சுற்றோட்டத் துறையை விட்டு உற்பத்தித் துறைக்கு அது மாறிச் செல்கிறது. பண-மூலதனம் திறனுடை-மூலதனமாய் மாறுவதாகிய முதல் கட்டம் இவ்விதம், திறனுடை-மூலதனம் செயல்படுவதாகிய இரண்டாவது கட்டத்துக்கான முன்னறிவிப்பும் பீடிகையுமே ஆகும்.

$M-C<^{L}_{mp}$ என்பது நடைபெற வேண்டுமானால், இச்செயலில் இறங்குகிறவர் வசம் ஏதேனுமொரு பயன்-வடிவிலான மதிப்புகள் இருந்தால் போதாது. இம்மதிப்புகள் பண வடிவில் அவர் வசம் இருப்பது அவசியமாகிறது; அதாவது, அவர் பண உடைமையாளராக இருப்பது அவசியமாகிறது. இச்செயலின் போது அவர் தம் கையை விட்டுப் பணத்தைக் கொடுக்கிறார். இந்தப் பணம் அவர் கைக்கே திரும்பி வந்தாக வேண்டும். இப்படித் திரும்பி வந்தால்தான் அவரால் பண உடைமையாளராக நீடிக்க முடியும். சரக்குகளை விற்பதுதான் பணம் திரும்பி வருவதற்கான வழி. எனவே, மேற்கூறிய செயல் நடைபெற அவர் சரக்கு-உற்பத்தியாளராக இருப்பது அவசியமாகிறது.

M—L. கூலித் தொழிலாளி தம் உழைப்புச் சக்தியை விற்று உயிர் வாழ்கிறவர். இந்த உழைப்புச் சக்தியைக் காப்பாற்றிக் கொள்ள — தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ள — அவருக்கு அன்றாட நுகர்வு அவசியம். ஆதலால் உழைப்புச் சக்திக்குத் தொடர்ச்சியாகத் திரும்பத் திரும்ப, ஓரளவு குறுகிய கால இடைவெளி விட்டுத் திரும்பத் திரும்ப ஊதியம் கொடுத்தாக வேண்டும். அப்போதுதான் தொழிலாளி L—M—C அல்லது C—M—C எனப்படும் செயல்களைத் திரும்பத் திரும்பச் செய்ய முடியும், தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்வதற்குத் தேவையானவற்றைத் திரும்பத் திரும்ப வாங்கிக் கொள்ள முடியும். இதனால் முதலாளி எப்போதுமே பண முதலாளியாக, தமது மூலதனத்தைப் பண-மூலதனமாக வைத்துக் கொண்டு தொழிலாளியை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மறு புறம், நேரடி உற்பத்தியாளர்களாகிய திரள் திரளான கூலித் தொழிலாளர்கள் L—M—C என்னும் செயலை நிறைவேற்ற வேண்டுமானால், அவசிய வாழ்வுச் சாதனங்கள் விலைக்கு வாங்கிக் கொள்ளக் கூடிய வடிவில், அதாவது சரக்குகளின் வடிவில், எப்போதும் அவர்களுக்குக் கிடைத்து வர வேண்டும். இந்நிலவரம் ஏற்படுவதற்கு, சரக்கு வடிவிலான உற்பத்திப் பொருட்களது சுற்றோட்டமும், ஆகவே உற்பத்தி செய்யப்படும்

சரக்குகளின் அளவும் பரிமாணமும் உயர் வளர்ச்சி கண்டிருப்பதும் அவசியமாகிறது. கூலியுழைப்பைக் கொண்டு நடைபெறும் பொருளுற்பத்தி சர்வவியாபகமாகும் போது, சரக்கு உற்பத்திதான் பொருளுற்பத்திக்கான மிகப் பரவலான வடிவமாகத் திகழும். இந்த உற்பத்தி முறை பரவலானதாகியதும் அதனுடன் கூடவே சமுதாய உழைப்புப் பிரிவினை மேலும் மேலும் அதிகரிக்கிறது; அதாவது குறிப்பிட்ட முதலாளி சரக்குகளின் வடிவில் உற்பத்தி செய்கிற பண்டங்களின் வகைப் பிரிவினை வளர்ந்து செல்கிறது; ஒன்றையொன்று பூர்த்தி செய்யும் உற்பத்தி நிகழ்முறைகள் சுயேச்சையான நிகழ்முறைகளாகப் பிரிந்து செல்வது மேலும் மேலும் அதிகமாகிறது. ஆகவே, M—L வளரும் அதே அளவுக்கு M—mpஉம் வளர்கிறது; அதாவது உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தி, அவற்றை உற்பத்திச் சாதனங்களாகக் கொண்டு தயாராகிற சரக்குகளின் உற்பத்தியிலிருந்து அந்த அளவுக்குப் பிரிந்து போகிறது. பிறகு அந்த உற்பத்திச் சாதனங்கள், ஒவ்வொரு சரக்கு உற்பத்தியாளரையும், அவரால் உற்பத்தி செய்யப்படாத, ஆனால் குறிப்பிட்ட உற்பத்தி நிகழ்முறைக்காக அவரால் வாங்கப்படுகிற சரக்குகளாக எதிர்த்து நிற்கின்றன. அவை அவரது உற்பத்திக் கிளையல்லாத வேறு சுயேச்சையான உற்பத்திக் கிளைகளிலிருந்து வந்து, அவரது கிளையினுள் சரக்குகளாக நுழைகின்றன; ஆகவே, அவற்றை விலைக்கு வாங்கியாக வேண்டும். சரக்கு உற்பத்தியின் பொருட் சாதனங்கள் ஏனைய சரக்கு உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களாக, சரக்குகளாக, அவரை எதிர்நோக்குவது மேலும் மேலும் அதிகமாகிறது. அதே அளவுக்கு முதலாளியும் பண முதலாளியாகச் செயல்பட்டாக வேண்டும்; வேறு விதமாகச் சொல்வதானால், மேலும் விரிவான அளவில் அவரது மூலதனம் பண-மூலதனத்துக்குரிய பணிகளை ஏற்க வேண்டியதாகிறது.

மறு புறம், முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கு இன்றியமையாத தேவையான கூலித் தொழிலாளி வர்க்கம் நிலவுவதற்கு வழி செய்யும் அதே நிலைமைகள் சரக்கு உற்பத்தி முழுவதும் முதலாளித்துவச் சரக்கு உற்பத்தியாக மாறுவதற்கும் ஊக்கமளிக்கின்றன. முதலாளித்துவப் பொருளுற்பத்தி வளர வளர, அதன் விளைவாகப் பொருளுற்பத்தியின் பழைய வடிவங்கள் எல்லாம் நலிவுற்று நசிக்க வேண்டியதாகிறது. இந்தப் பழைய வடிவங்கள் பெரும்பாலும் உற்பத்தியாளரின் நேரடித் தேவைகளை நிறைவு செய்வதற்கென்றே அமைந்தவை, இந்தத் தேவைகளுக்கும் கூடுதலாய் உற்பத்தி செய்கிற பண்டங்களை மட்டுமே சரக்குகளாய் மாற்றுகிறவை. உற்பத்திப் பொருட்கள் விற்கப்பட வேண்டும் என்பதே முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பிரதானக் குறி. ஆரம்பத்தில் உற்பத்தி முறை [mode of production] இதனால் பாதிக்கப்படுவதாகத் தெரிவதில்லை. எடுத்துக்காட்டாய், சீனர்கள், இந்தியர்கள், அராபியர்கள்

போன்ற பல நாட்டவரிடத்தும் முதலாளித்துவ உலக வாணிபத்தால் ஏற்பட்ட ஆரம்ப விளைவு இவ்விதமானதாகவே இருந்தது. ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி எங்கே வேரூன்றினாலும் அங்கே நாளடைவில் அது உற்பத்தியாளர்களது சுய வேலையின் அடிப்படையிலோ, மிகை உற்பத்திப் பொருளை மட்டும் சரக்காக விற்பதன் அடிப்படையிலோ அமைந்த பழைய சரக்கு-உற்பத்தி வடிவங்கள் யாவற்றையும் அழிக்கவே செய்கிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முதலில் சரக்கு உற்பத்தியைப் பொது வழக்கு ஆக்குகிறது. பிறகு படிப்படியாய்ச் சரக்கு உற்பத்தி அனைத்தையுமே முதலாளித்துவச் சரக்கு உற்பத்தியாக மாற்றியமைத்து விடுகிறது.[6]

உற்பத்தியின் சமூக வடிவம் எதுவானாலும், எப்போதுமே உழைப்பாளர்களும் உற்பத்திச் சாதனங்களும்தான் அதன் காரணிகள். ஆனால் ஒன்றிடமிருந்து ஒன்று பிரிந்துள்ள நிலையில், இவ்விரு காரணிகளில் எந்தவொன்றும் உள்ளுறையாக [potentially] மட்டுமே உற்பத்திக் காரணி ஆகிறது. இரண்டும் ஒருசேர இணைந்தாலன்றி உற்பத்தி நடைபெற முடியாது. இந்த இணைப்பு பல விதத்திலும் ஏற்படலாம். சமூக அமைப்பின் வெவ்வேறு பொருளாதார சகாப்தங்களையும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுத்திக் காட்டுவது இந்த இணைப்பு எவ்விதத்தில் ஏற்படுகிறது என்பதுதான். சுதந்தரத் தொழிலாளி [free worker]' அவரது உற்பத்திச் சாதனங்களிடமிருந்து தனியே பிரிக்கப்பட்டிருப்பதுதான் இங்கே நாம் பரிசீலிக்கும் நிகழ்வின் தொடக்க நிலை. இப்படிப் பிரிந்திருக்கும் இவ்விரு கூறுகளும் எப்படி, எந்நிலைமைகளில் முதலாளியின் கைவசம் வந்து ஒருசேர இணைகின்றன, அதாவது அவரது மூலதனத்தின் உற்பத்தித் திறனுள்ள நிலவல் வடிவம் ஆகின்றன என்பதை நாம் மேலே பார்த்தோம். ஆள் வடிவிலும் பொருள் வடிவிலும் அமைந்து சரக்குகளைப் படைக்கிற இவ்விரு காரணிகளும் இவ்விதம் ஒருசேர இணைக்கப்பட்டவுடன், இவை நம் கண் முன்னால் நடைபெறச் செய்யும் உற்பத்தி நிகழ்முறையானது, இவ்வாறு மூலதனத்தின் செயலாக, முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையாக நடந்தேறுகிறது. இந்த நிகழ்முறையின் தன்மையினை இந்நூலின் முதல் பாகத்தில் முழு அளவுக்குப் பகுத்தாய்ந்துள்ளோம். எந்தத் தொழில் முனைவாய் [enterprise] இருப்பினும், உழைப்புச் சக்தியைச் சுரண்டாமல் அதனால் சரக்கு உற்பத்தி செய்ய முடியாதுதான். ஆயினும் முதலாளித்துவச் சரக்கு உற்பத்தி முறையினால் மட்டுமே சகாப்தகர முக்கியத்துவம் வாய்ந்த சுரண்டல் முறையாக [mode of exploitation] முடிந்திருக்கிறது.

---

[6] எங்கெல்ஸ் குறிப்பு: கையெழுத்துப் பிரதி VII என்பதன் முடிவு; கையெழுத்துப் பிரதி VI என்பதன் தொடக்கம்.

வரலாற்று வழியிலான அதன் வளர்ச்சியின் போது, உழைப்பின் நிகழ்முறையை ஒழுங்கமைத்தும், தொழில் நுட்பத்தைப் பிரமாத மாய் மேம்படுத்தியும், இதற்கு முந்தைய சகாப்தங்களை எல்லாம் விஞ்சி வானுற உயர்ந்து விடும் விதத்தில் அது சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு அனைத்தையும் புரட்சிகரமான முறையில் அடியோடு மாற்றியமைக்கிறது.

உற்பத்திச் சாதனங்களும் உழைப்புச் சக்தியும் முன்னீடு செய்யப் படும் மூலதன-மதிப்பின் நிலவல் வடிவங்களாய் [forms of existence] உள்ள வரை, மதிப்பின் படைப்பில்—ஆதலால் உபரி-மதிப்பின் படைப்பிலும்—உற்பத்தி நிகழ்முறையின் போது அவை வகிக்கும் வெவ்வேறு பாத்திரங்களினால் மாறா-மூலதனமாகவும், மாறும்-மூலதனமாகவும் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. திற னுடை-மூலதனத்தின் வெவ்வேறு அங்கங்களான இவற்றை மேலும் வேறுபடுத்திக் காட்டுவது என்னவென்றால்: முதலாளியின் வச முள்ள உற்பத்திச் சாதனங்கள் உற்பத்தி நிகழ்முறைக்கு வெளியே யும் கூட அவரது மூலதனமாகவே இருந்து வருகின்றன; ஆனால் உழைப்புச் சக்தியோ இந்நிகழ்முறைக்குள் மட்டுமே ஒரு தனிப்பட்ட மூலதனத்தின் நிலவல் வடிவமாகிறது. உழைப்புச் சக்தி அதை விற்பவரான கூலித் தொழிலாளியின் கையில் சரக்காகத்தான் இருக் கிறது; அதைத் தற்காலிகமாய் வாங்கிப் பயன்படுத்திக் கொள்பவ ரான முதலாளியின் கையில்தான் மூலதனமாகிறது. திறனுடை-மூலதன நிலவலின் ஆள் வடிவமான உழைப்புச் சக்தி எப்போது உற்பத்திச் சாதனங்களோடு இணைய முடிகிறதோ, அப்போதுதான் அந்த உற்பத்திச் சாதனங்கள் திறனுடை-மூலதனத்தின் பொருள் வடிவங்களாகின்றன; திறனுடை-மூலதனம் ஆகின்றன. உற்பத்திச் சாதனங்களாயினும் சரி, உழைப்புச் சக்தியாயினும் சரி, அவை இயல்பினாலேயே மூலதனமாகி விடுவதில்லை. வரலாற்று வழியில் உருவாகி வளர்ந்த குறிப்பிட்ட நிலைமைகளில் மட்டுமே இவை எல் லாம் இந்தப் பிரத்தியேகச் சமூகத் தன்மையைப் பெறுகின்றன—குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளில் மட்டுமே உயர்நிலை உலோ கங்கள் பணத் தன்மையையோ, பணமானது பண-மூலதனத் தன் மையையோ பெறுவது போல.

திறனுடை-மூலதனம் தனக்குரிய பணிகளைச் செய்கையில், தனது அடக்கக் கூறுகளையே நுகர்ந்து, அவற்றினும் அதிக மதிப் புள்ள திரளான உற்பத்திப் பொருள்களாக அவற்றை மாற்றுகிறது. உழைப்புச் சக்தியானது இம்மூலதனத்தின் உறுப்புகளில் ஒன் றாகவே செயல்படுவதால், அதனுடைய உபரி-உழைப்பால் திற னுடை-மூலதன அடக்கக் கூறுகளின் மதிப்புக்கும் கூடுதலாக உண்டாக்கப் பெறும் மதிப்பும் கூட மூலதனத்துக்கு உரித்தான விளைபயனாகிறது. உழைப்புச் சக்தியின் இந்த உபரி-உழைப்பு இலவசமாய் மூலதனத்துக்குக் கிடைக்கும் உழைப்பாகும். இவ்விதம்

அது முதலாளிக்குக் கிடைக்கும் உபரி-மதிப்பாகிறது, எச்செலவும் இல்லாமல் அவருக்கு வந்து சேரும் மதிப்பாகிறது. ஆகவே உற்பத்திப் பொருளானது சரக்காய் இருப்பது மட்டுமல்லாமல், உபரி-மதிப்பைக் கருக் கொண்டிருக்கும் சரக்கும் ஆகும். இந்தச் சரக்கின் மதிப்பு P+s ஆகும்; அதாவது இந்தச் சரக்கின் உற்பத்திக்காக நுகரப்படும் திறனுடை-மூலதனத்தின் மதிப்பாகிய P, அது உண்டாக்கித் தருகிற உபரி-மதிப்பான s ஆகிய இரண்டின் கூட்டுத் தொகையாகும். இந்தச் சரக்கை 10,000 இராத்தல் நூலாகவும், இந்த நூலை உற்பத்தி செய்வதற்காக £372 பெறுமானமுள்ள உற்பத்திச் சாதனங்களும் £50 பெறுமானமுள்ள உழைப்புச் சக்தியும் நுகரப்படுவதாகவும் கொள்வோம். நூற்பு நிகழ்முறையின் போது நூற்பாளர்கள் தமது உழைப்பால் நுகரப்படுகிற உற்பத்திச் சாதனங்களின் மதிப்பாகிய £372ஐ நூலுக்குப் பெயர்த்திடுகிறார்கள். அதே போது அவர்கள் தாம் செலவிடும் உழைப்புச் சக்திக்கு ஏற்ற விகிதத்தில் புதிய மதிப்பையும்—இதை £128 பெறுமானமுள்ளதாகக் கொள்வோம்—படைக்கிறார்கள். ஆகவே இந்த 10,000 இராத்தல் நூல் £500 பெறுமானமுள்ள மதிப்பைக் குறிப்பதாகிறது.

## III. மூன்றாம் கட்டம். C′—M′

சரக்குகள் உபரி-மதிப்பை உற்பத்தி செய்து முடித்த மூலதன-மதிப்புக்கான பணிவழிப்பட்ட நிலவல் வடிவமாய்—நேரடியாக உற்பத்தி நிகழ்முறையிலிருந்தே எழுகிற நிலவல் வடிவமாய்—சரக்கு-மூலதனம் [commodity-capital] ஆகின்றன. சரக்கு உற்பத்தியானது சமுதாயம் முழுவதிலும் முதலாளித்துவ முறையில் நடைபெற்றால், கச்சா இரும்பானாலும் சரி, பிரசல்ஸ் சரிகையானாலும் சரி, கந்தக அமிலமானாலும் சரி, சுருட்டுகளானாலும் சரி, எல்லாச் சரக்குகளும் ஆரம்பத்திலிருந்தே சரக்கு-மூலதனத்தின் கூறுகளாய் இருக்கும். திரள் திரளாய்க் குவியும் வகைவகையான சரக்குகளில் எவ்வகைப்பட்ட சரக்குகள் அவற்றின் இயல்பினாலேயே மூலதனமாகத் திகழப் போகிறவை, எவ்வகைப்பட்டவை சாதாரண சரக்குகளாகப் போகிறவை என்ற பிரச்சினை ஏட்டுப்புலமைவாத அரசியல் பொருளாதாரம் தனக்குத் தானே உண்டாக்கிக் கொள்ளும் அதிவினோத வேதனைகளில் ஒன்றே அன்றி வேறல்ல.

சரக்கு வடிவிலான மூலதனம் சரக்காகச் செயல்பட வேண்டும். மூலதனமாய் அமையும் பண்டங்கள் விசேஷமாக சந்தைக்கென்றே உற்பத்தி செய்யப்படுகிறவை. அவற்றை விற்றுப் பணமாக உருமாற்ற வேண்டும். எனவே அவற்றுக்கு C—M என்னும் நிகழ்முறை நடைபெற்றாக வேண்டும்.

10,000 இராத்தல் பருத்தி நூலை முதலாளியிடம் இருக்கும் சரக்காக வைத்துக் கொள்வோம். £372 என்பது நூற்பு நிகழ் முறையின் போது நுகரப்படும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பைக் குறிப்பதாகவும், £128 புதிய மதிப்பு படைக்கப்படுவதாகவும் கொண்டால், நூலின் மதிப்பு £500 ஆகும். இந்த £500 தான் அதன் விலையாகக் குறிக்கப் பெறுகிறது. இந்த விலை C—M என்ற விற்றலின் மூலம் பணமாக வரப்பெறுவதாகக் கொள்வோம். சரக்குச் சுற்றோட்டச் செயல்கள் யாவற்றிலும் மிகச் சாதாரணமான இச்செயலை அதேபோது மூலதனப் பணியாக்குவது எது? அதன் அகத்தே ஏற்படும் எந்த மாற்றமும் அல்ல; சரக்கின் பயன்படும் தன்மையிலும் மாற்றம் இல்லை—ஏனென்றால் அது பயன்படக் கூடிய பொருளாகவே வாங்குபவரின் கைக்குச் செல்கிறது; சரக்கின் மதிப்பிலும் மாற்றம் இல்லை—ஏனென்றால் இம்மதிப்பு பருமனில் மாறவே இல்லை, வடிவத்தில் மட்டும்தான் மாறியுள்ளது. வடிவில் இந்த மதிப்பு முன்பு நூலாக இருந்தது, இப்போது பணமாகியிருக் கிறது. இவ்வாறு M—C என்னும் முதல் கட்டத்துக்கும் C—M என்னும் கடைசிக் கட்டத்துக்குமிடையே மிகப் பெரிய வேறுபாடு இருப்பது தெளிவாகவே தெரிகிறது. அங்கே முன்னீடு செய்த பணம் பண-மூலதனமாகச் செயல்படுகிறது; ஏனென்றால் சுற் றோட்டத்தின் வாயிலாக அது குறிப்பிட்ட பயன்-மதிப்புள்ள சரக்கு களாக உருமாற்றம் பெறுகிறது. இங்கே, சரக்குகள் அவற்றின் சுற்றோட்டம் ஆரம்பமாகு முன்னர் உற்பத்தி நிகழ்முறையிலிருந்து மூலதனத் தன்மை வாய்ந்தனவாய் வெளிவரும் அளவுக்கு மட்டுமே மூலதனமாகப் பயன்பட முடியும். நூற்பு நிகழ்முறையின் போது நூற்பாளர்கள் £128 பெறுமான நூல் மதிப்பைப் படைக்கின் றனர். இந்தத் தொகையில் உழைப்புச் சக்திக்காக முதலாளி முன்னீடு செய்ததின் சமதையை மட்டும் குறிப்பதை £50 ஆகக் கொள்வோம்; மீதமுள்ள £78 உபரி-மதிப்பாகிறது—உழைப்புச் சக்தி மீதான சுரண்டல்-கடுமை [degree of exploitation] 156 சதவீத மாக இருக்கிறது. ஆகவே, இந்த 10,000 இராத்தல் நூலின் மதிப்பில், முதலாவதாக, இந்நூலின் உற்பத்தியின் போது நுகரப் பட்ட திறனுடை-மூலதனமாகிய Pஇன் மதிப்பு அடங்கியிருக்கிறது. Pஇல் £372 மாறா-மூலதனம் [constant capital]; £50 மாறும்-மூலதனம் [variable capital]; இவற்றின் மொத்தம் £422 ஆகும். 8,440 இராத்தல் நூலின் மதிப்புக்கு இந்த £422 சமமாகும். திற னுடை-மூலதனமாகிய pஇன் மதிப்பு அதன் உள்ளடக்கக் கூறு களின் மதிப்பான C என்பதற்குச் சமம். Pஇன் இந்த அடக்கக் கூறு கள்தாம் முன்பு M—C என்னும் கட்டத்தின் போது அவற்றை விற்க முன்வந்தோர் வசமிருந்த சரக்குகளாக முதலாளியை எதிர்நோக் கியவை.

உற்பத்தி செய்யப்பட்ட நூலின் மதிப்பில், இரண்டாவதாக,

£78 உபரி-மதிப்பும் அடங்கியுள்ளது. இந்த உபரி-மதிப்பு 1,560 இராத்தல் நூலின் மதிப்பாகும். C என்பது 10,000 இராத்தல் நூலின் மதிப்பினது தெரிவிப்பு ஆகும். ஆகவே அது C+ΔCக்குச் சமம்; அதாவது C, இந்த Cஇல் ஏற்பட்ட பெருக்கம் (=£78) ஆகிய இரண்டின் கூட்டுத் தொகைக்குச் சமம். இந்தப் பெருக்கத்தை c எனக் குறிக்கலாம், ஏனெனில் இந்தப் பெருக்கம் ஆரம்பத்திலிருந்த Cஐப்போல் அதே சரக்கு-வடிவில்தான் இருக்கிறது. ஆகவே, £500க்குச் சமமான 10,000 இராத்தல் நூலின் மதிப்பை C+c=C′ என்பது குறிக்கிறது. 10,000 இராத்தல் நூலிற்குள்ள மதிப்பின் தெரிவிப்பாகிய Cஐ C′ ஆக மாற்றுவது அதன் அறுதியான மதிப்புப் பருமன் (£500) அல்ல; ஏனென்றால் வேறேதேனும் சரக்குத் தொகுதியின் மதிப்புத் தெரிவிப்பைக் குறிக்கும் வேறெந்த Cஇன் மதிப்புப் பருமனையும் போலவே, இந்த மதிப்புப் பருமனும் இதில் உருக்கொண்ட உழைப்பின் அளவாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. அதன் ஒப்பீட்டு மதிப்புப் பருமனே, அதாவது அதன் உற்பத்தியின் போது நுகரப்பட்ட மூலதனமான Pஇன் மதிப்புப் பருமனுடன் ஒப்பிடுகையில் அதற்குள்ள மதிப்புப் பருமனே Cஐ C′ ஆக மாற்றுகிறது. இந்த Pஇன் மதிப்பும், அத்துடன் கூடவே திறனுடை-மூலதனம் வழங்கிடும் உபரி-மதிப்பும் C′இன் மதிப்பில் அடங்கியுள்ளன. C′இன் மதிப்பு மூலதன-மதிப்பின் மதிப்பைக் காட்டிலும் c என்னும் இந்த உபரி-மதிப்பின் அளவுக்குக் கூடுதலாய், மிகுதியாய் இருக்கிறது. 10,000 இராத்தல் நூலானது இந்த உபரி-மதிப்பால் விரிவடைந்த, வளம் பெற்ற மூலதன-மதிப்பின் உறைவிடமாகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் உற்பத்திப் பொருளாய் இருப்பதால்தான் அது இப்படி ஆகிறது. C′ ஆனது ஒரு மதிப்புறவைத் தெரிவிக்கிறது; உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் மதிப்பு அவற்றின் உற்பத்திக்காகச் செலவிடப்படும் மூலதனத்தின் மதிப்போடு கொண்டுள்ள உறவைத் தெரிவிக்கிறது; அதாவது இச்சரக்குகளின் மதிப்பு மூலதன-மதிப்பாலும் உபரி-மதிப்பாலும் ஆனது என்பதைத் தெரிவிக்கிறது. 10,000 இராத்தல் நூலானது திறனுடை-மூலதனமான Pஇன் உருமாறிய வடிவமாய் இருப்பதால்தான், சரக்கு-மூலதனமான C′ஐக் குறிக்கிறது; ஆகவே, முதலில் இந்தத் தனிப்பட்ட மூல்தனத்தின் சுற்றில் மட்டும் நிலவக் கூடிய, அதாவது தமது மூலதனத்தின் துணை கொண்டு நூல் உற்பத்தி செய்த முதலாளிக்கு மட்டும் நிலவக் கூடிய ஓர் உறவில்தான் 10,000 இராத்தல் நூல் சரக்கு-மூலதனமாகிறது. மதிப்பின் ஊர்தியாகக் கூடியதான 10,000 இராத்தல் நூலை சரக்கு-மூலதனம் ஆக்குவது உள் உறவுதானே தவிர வெளி உறவல்ல எனலாம். அது தனது முதலாளித்துவப் பிறவிக் குறியை வெளிப்படுத்துவது அதனுடைய மதிப்பின் ஒப்பீட்டுப் பருமனில்தானே தவிர, அறுதிப் பருமனில் அல்ல.

அதாவது 10,000 இராத்தல் நூலின் மதிப்புப் பருமனை அதில் உருக்கொண்ட திறனுடை-மூலதனம் சரக்குகளாக மாறுவதற்கு முன்னால் பெற்றிருந்த மதிப்புப் பருமனுடன் ஒப்பிடும் போது தான் அதன் முதலாளித்துவப் பிறவிக் குறி புலப்படுகிறது. ஆகவே இந்த 10,000 இராத்தல் நூலும் அதன் மதிப்பாகிய £500க்கு விற்கப்படுகிறது என்றால், இந்தச் சுற்றோட்டச் செயலானது, தனிப்பட்ட அதன் அளவில், (மாற்றமில்லாத ஒரு மதிப்பு சரக்கு வடிவத்திலிருந்து பண வடிவத்துக்கு மாறுவதைக் குறிப்பதாகிய) C—M என்பதற்கு முழுதொத்ததாகிறது. ஆனால் இதே செயல் தனிப்பட்ட மூலதனத்தின் சுற்றில் தனியொரு கட்டம் ஆகும் போது, இச்செயல் சரக்காய் உருக்கொண்டிருக்கும் £422 மூலதன-மதிப்பும், அதோடு கூட அதே சரக்கு வடிவிலுள்ள £78 உபரி-மதிப்பும் ஈடேற்றம் பெறுவதைக் குறிப்பதாகிறது; அதாவது சரக்கு-மூலதனமானது அதன் சரக்கு வடிவத்திலிருந்து பண வடிவத்துக்கு உருமாறுவதான C′ — M′ என்பதைக் குறிப்பதாகிறது.[7]

இப்போது C′க்குள்ள பணி எல்லாச் சரக்குகளுக்குமுள்ள அதே பணிதான் — அதாவது தன்னைப் பணமாக உருமாற்றிக் கொள்வது தான், விற்கப்படுவதற்கு வகை செய்வதுதான், C—M என்னும் சுற்றோட்டத்தை நடைபெறச் செய்வதுதான். முன்னிலும் பெரிதாகி விட்ட இந்த மூலதனம் சரக்கு-மூலதனமாகவே இருக்கும் வரை, சந்தையில் இயக்கமற்றுக் கிடக்கும் வரை, உற்பத்தி நிகழ்முறை ஓய்ந்திருக்கிறது. சரக்கு-மூலதனம் உற்பத்திப் பொருட்களையோ மதிப்பையோ படைப்பதில்லை. குறிப்பிட்ட மூலதன-மதிப்பு வெகுவாய் வேறுபடும் அளவுகளில் உற்பத்திப் பொருட்களையும் மதிப்பையும் படைக்கக் கூடியது. அந்த மூலதனம் எவ்வளவு விரைவாய் சரக்கு வடிவத்தைக் களைந்து விட்டுப் பண வடிவத்தை ஏற்கிறது என்பதைப் பொறுத்து, அதாவது எவ்வளவு விரைவாய் சரக்கு விற்கப்படுகிறது என்பதைப் பொறுத்து, மறுவுற்பத்தியின் அளவு பெருகவோ குறுகவோ செய்கிறது. குறிப்பிட்ட எந்த ஒரு மூலதனத்தின் பயன் திறன் அளவும் உற்பத்தி நிகழ்முறையின் உள்ளாற்றல்களையே [potentialities] பொறுத்திருக்கிறது என்பதையும், இந்த உள்ளாற்றல்கள் அம்மூலதனத்தின் மதிப்புப் பருமனைச் சார்ந்திராமல் ஓரளவு சயேச்சை வாய்ந்தவையாய் இருப்பவை என்பதையும் இந்நூலின் முதல் பாகத்தில் தெரிந்து கொண்டோம். (முதல் பாகம், பக்கம் 804-18.) சுற்றோட்ட நிகழ்முறையானது மூலதனத்தின் மதிப்புப் பருமனைச் சார்ந்திராத புதிய சக்திகளைச் செயல்பட வைத்து, மூலதனத்தின் பயன்திறன் அளவையும், அதன் பெருக்கத்தையும் குறுக்கத்தையும் நிர்ணயிப்பதாக இப்போது இங்கே

---

[7] எங்கெல்ஸ் குறிப்பு: கையெழுத்துப் பிரதி VI என்பதன் முடிவு; கையெழுத்துப் பிரதி V என்பதன் தொடக்கம்.

தெரிய வருகிறது.

பெருக்கமடைந்த மூலதனத்துக்கு C′ என்னும் சரக்குத் திரள் தான் உறைவிடம். இந்தச் சரக்குத் திரள் முழுதும் இனி அப்படியே C′ — M′ என்று உருமாற்றம் அடைந்தாக வேண்டும். விற்கப்படுகிற சரக்களவு முடிவுகட்டும் படியான ஒரு காரணியாகிறது. தனித் தனியான ஒவ்வொரு சரக்கும் முழுத் திரளிலிருந்து பிரிக்க முடியாத அதன் பகுதியாகவே கணக்கிடப்படுகிறது. £500 பெறுமானமுள்ள மதிப்பு 10,000 இராத்தல் நூலின் வடிவில் இருக்கிறது. முதலாளி 7,440 இராத்தல் நூலை மட்டும் அதன் மதிப்பாகிய £372க்கு விற்பதில் வெற்றி பெறுவாராயின், செலவு செய்யப் பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்பான தமது மாறா-மூல தனத்தின் மதிப்பை மட்டும் ஈடு செய்து கொள்கிறார். 8,440 இராத்தல் நூலை விற்றால், முன்னீடு செய்யப்பட்ட மொத்த மூல தனத்தின் மதிப்பை மட்டும் மீட்டுக் கொள்கிறார். சிறிதளவேனும் உபரி-மதிப்பை ஈடேற்றம் செய்து கொள்ள வேண்டுமானால் அவர் இன்னும் கூட அதிகமாய் விற்க வேண்டும். உபரி-மதிப் பாகிய £78 (1,560 இராத்தல் நூல்) முழுவதையும் ஈடேற்றம் செய்து கொள்ள வேண்டுமானால் 10,000 இராத்தல் நூல் முழு வதையும் விற்றாக வேண்டும். அப்போது பணமாக அவருக்குக் கிடைக்கும் £500, அவர் விற்ற சரக்குக்கான சமதை மட்டுமே ஆகிறது. இதன் மூலம் சுற்றோட்டத்துள் அவர் செய்வதெல்லாம் C — M என்னும் செயல் மட்டுமேதான். தொழிலாளர்களுக்கு அவர் £50க்குப் பதில் £64 கூலி கொடுத்திருந்தால், அவருக்குக் கிடைக் கும் உபரி-மதிப்பு £78ஆக இருக்காது, £64ஆகக் குறைந்து விடும்; சுரண்டல்-கடுமை 156 சதவீதமாயிராது, 100 சதவீதமாகி விடும். ஆனால் நூலின் மதிப்பு மாறாமல் அப்படியே இருக்கும்; அதன் அடக்கக் கூறுகளிடையிலான உறவில் மட்டும் மாற்றம் ஏற்படும். சுற்றோட்டச் செயலான C — M என்பது இப்போதும் 10,000 இராத்தல் நூல் அதன் மதிப்பாகிய £500க்கு விற்கப்படுவதையே குறிக்கும்.

C′ என்பது C+c (அதாவது £422+£78) என்பதற்குச் சமம். Cஆனது திறனுடை-மூலதனமான Pஇன் மதிப்புக்குச் சமம்; இது உற்பத்தி-அடிக்கூறுகளை விலைக்கு வாங்குவதற்காக M — C என்னும் கட்டத்தில் முன்னீடு செய்யப்பட்ட பணமாகிய Mஇன் மதிப்புக்குச் சமம்; நமது உதாரணத்தில் இந்த மதிப்பு £422ஆகும். சரக்குத் திரளானது அதன் மதிப்புக்கு ஈடான தொகைக்கு விற்கப் படுகையில், Cஆனது £422க்குச் சமமாகிறது; cஆனது உபரி-உற் பத்தியாகிய 1,560 இராத்தல் நூலின் மதிப்புக்கு, அதாவது £78க்குச் சமம். cஇன் பண வடிவிலான தெரிவிப்பை m என்போ மானால், C′ — M′ = (C+c) — (M+m). ஆகவே M — C... P... C′ — M′ என்னும் சுற்றினை அதன் விரிவடைந்த வடிவில் பின்வருமாறு

எழுதலாம்: $M - C <^{L}_{mp} \ldots P \ldots (C+c) - (M+m)$.

முதல் கட்டத்தில் முதலாளி நுகர்வுப் பண்டங்களை [articles of consumption] முறையான சரக்குச் சந்தையிலிருந்தும் உழைப்புச் சந்தையிலிருந்தும் பெறுகிறார். மூன்றாவது கட்டத்தில் அவர் சரக்குகளைச் சந்தையினுள் திரும்பச் செலுத்துகிறார்; ஆனால் ஒரேயொரு சந்தையினுள் மட்டுமே, சரக்குச் சந்தையினுள் மட்டுமே செலுத்துகிறார். ஆயினும் ஆரம்பத்தில் அவர் சந்தையினுள் செலுத்திய மதிப்பைக் காட்டிலும் கூடுதலான மதிப்பை இப்போது அவர் தமது சரக்குகளின் வாயிலாகச் சந்தையிலிருந்து பெற முடிகிறது. ஆரம்பத்தில் அவர் சந்தையிலிருந்து பெற்ற சரக்கு-மதிப்பைக் காட்டிலும் கூடுதலானதை இப்போது அதனுள் செலுத்துவதே இதற்குக் காரணம். முதலில் அவர் M என்னும் மதிப்பை அதனுள் செலுத்தி அதற்குச் சமதையான Cஐ அதனிடமிருந்து பெற்றார்: இப்பொழுது C+cஐ அதனுள் திரும்பச் செலுத்தி விட்டு அதற்குச் சமதையான M+mஐ அதனிடமிருந்து பெறுகிறார்.

நமது உதாரணத்தில் M என்பது 8,440 இராத்தல் நூலின் மதிப்புக்குச் சமம். ஆனால் அவர் சந்தையினுள் 10,000 இராத்தல் நூலைச் செலுத்துகிறார்; அதாவது அதிலிருந்து பெற்றதைக் காட்டிலும் கூடுதலான மதிப்பைத் திரும்பச் செலுத்துகிறார். அவர் இந்தக் கூடுதலான மதிப்பைச் சந்தையினுள் செலுத்த முடிவதற்கு என்ன காரணம்? உற்பத்தி நிகழ்முறையில் உழைப்புச் சக்தியைச் சுரண்டி உபரி-மதிப்பை (உற்பத்திப் பொருளின் ஈவுப் பகுதியாக [aliquot part] உபரி-உற்பத்தியின் உருவில் தெரிவிக்கப்படுவதை) படைத்ததே காரணம். இந்நிகழ்முறையின் உற்பத்திப் பொருளாய் இருப்பதால்தான் சரக்குத் திரளானது பெருக்கமடைந்த மூலதன-மதிப்பின் உறைவிடமான சரக்கு-மூலதனம் ஆகிறது. முன்னீடு செய்யப்பட்ட மூலதன-மதிப்பும், அதோடு உபரி-மதிப்பும் C′—M′ என்பதன் மூலம் ஈடேற்றம் பெறுகின்றன. இரண்டின் ஈடேற்றமும் தொடர்ச்சியாக நடைபெறும் விற்பனைகளின் வாயிலாகவோ, சரக்குத் திரள் முழுமையின் ஒட்டுமொத்த விற்பனையின் வாயிலாகவோ ஒருங்கே நடந்தேறுகிறது. இந்த ஈடேற்றம் C′—M′ என்பதால் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் C′ — M′ என்னும் ஒரே சுற்றோட்டச் செயல் மூலதன-மதிப்புக்கும் உபரி-மதிப்புக்கும் வெவ்வேறு விதமானதாய் இருக்கிறது. எப்படியெனில், அச்செயல் அவை ஒவ்வொன்றுக்கும் சுற்றோட்டத்தில் வெவ்வேறான ஒரு கட்டத்தைக் குறிக்கிறது, சுற்றோட்டத் துறையில் அவை கடந்து செல்ல வேண்டிய உருமாற்றத் தொடரில் வெவ்வேறு பிரிவைக் குறிக்கிறது. உபரி-மதிப்பான c உற்பத்தி நிகழ்முறையின் போதுதான் அவதரித்தது. அது இப்போதுதான் முதல் தடவையாக சரக்குச் சந்தையினுள் நுழைகிறது; சரக்குகளின் வடிவில் நுழைகிறது. சரக்கு வடிவமே சுற்றோட்டத்தில் அதன் முதல் வடிவம்; எனவே c — m

என்னும் செயல்தான் அதன் முதல் சுற்றோட்டச் செயல் அல்லது முதல் உருமாற்றம் ஆகும்; இதனை இனி இதன் எதிர்நிலைச் சுற்றோட்டச் செயல் அல்லது தலைகீழ் உருமாற்றமான m—c என்பதால் நிறைவு செய்தாக வேண்டும்.[8]

C'—M'என்னும் இதே சுற்றோட்டச் செயலின் மூலம் மூலதன-மதிப்பு C நிகழ்த்தும் சுற்றோட்டம் வேறுவிதமானது. இச் சுற்றோட்டம் அதற்கு C'—M' என்னும் சுற்றோட்டச் செயலாகிறது; இதில் C ஆனது Pக்குச் சமம்; Pஆனது ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட்ட Mக்குச் சமம். மூலதன-மதிப்பு அதன் முதல் சுற்றோட்டச் செயலை பண-மூலதனமான Mஇன் வடிவில் தொடங்கி, C—M என்னும் செயலின் மூலம் அதே வடிவத்துக்குத் திரும்புகிறது. எனவே அது சுற்றோட்டத்தில் முதலில் M—C, அடுத்து C—M ஆகிய இரு எதிர்நிலைக் கட்டங்களைக் கடந்துள்ளது; திரும்பவும் சுழல் இயக்கத்தைத் தொடங்குவதற்கு வேண்டிய வடிவத்திற்குத் திரும்பி வந்துள்ளது. உபரி-மதிப்புக்கு சரக்கு வடிவத்திலிருந்து பண வடிவத்துக்கு மாறுவதாகிய அதன் முதல் உருமாற்றமாக அமைவது, மூலதன-மதிப்புக்கு அதன் ஆரம்ப வடிவமான பண வடிவத்துக்குத் திரும்பிச் செல்லும் மாற்றமாக அல்லது மீட்டுருமாற்றமாக [retransformation] அமைகிறது.

$M—C<^{L}_{mp}$ என்பதன் மூலம் பண-மூலதனம் அதற்குச் சமதையான L,mp என்னும் சரக்குத் திரளாக. உருமாறுகிறது. இந்தச் சரக்குகள் இனி சரக்குகளாகச் செயல்படுவதில்லை—அதாவது விற்பனைப் பண்டங்களாகச் செயல்படுவதில்லை. இப்போது அவற்றின் மதிப்பு அவற்றை விலைக்கு வாங்கிய முதலாளியின் கைக்கு வந்து விடுகிறது. அவை இம்முதலாளியின் திறனுடை-மூலதனமாகிய Pஇன் மதிப்பைக் குறிப்பனவாகி விடுகின்றன. Pஇன் பணியாகிய திறனுடை நுகர்வின் போது அவை உற்பத்திச் சாதனங்களிலிருந்து பொருள் வகையில் வேறுபடும் ஒரு விதச் சரக்காக—நூலாக—உருமாற்றம் அடைகின்றன. அப்போது அவற்றின் மதிப்பு காப்பாற்றப்படுவதோடு கூட, £422 ஆக இருந்தது £500 ஆக அதிகரிக்கவும் செய்கிறது. மெய்யான உருமாற்றமே நடந்தேறுகிறது. முன்பு M—C என்னும் முதல் கட்டத்தின் போது சந்தையிலிருந்து பெறப்பட்ட சரக்குகள் போய், பொருளிலும் மதிப்பிலும் அவற்றிலிருந்து வேறுபடும் சரக்குகள் கிடைக்கின்றன. இப்படிக் கிடைப்பவை இப்போது சரக்குகளாகப் பணி புரிய

---

[8] மூலதன-மதிப்பையும் உபரி-மதிப்பையும் எப்படிப் பிரித்தாலும் ஒன்றுதான், மாற்றம் ஏதும் இல்லை. 10,000 இராத்தல் நூலில் 1,560 இராத்தல் எடையுள்ள, அல்லது £78 பெறுமானமுள்ள உபரி-மதிப்பு இருக்கிறது. இதே போல் ஒரு இராத்தல் எடையுள்ள அல்லது ஒரு ஷில்லிங் பெறுமானமுள்ள நூலிலும் 2.496 அவுன்ஸ் எடையுள்ள அல்லது 1.872 பென்னி பெறுமானமுள்ள உபரி-மதிப்பு இருக்கிறது.

வேண்டும், பணமாக உருமாற்றப்பட வேண்டும், விற்கப்பட்டாக வேண்டும். உற்பத்தி நிகழ்முறையானது இவ்விதம் மூலதன-மதிப்பின் சுற்றோட்டத்தில் நிகழும் குறுக்கீடாகவே தோற்றமளிக்கிறது. இதன் முன் சுற்றோட்டத்தின் முதல் கட்டமான M—C மட்டுமே நடந்து முடிந்திருக்கிறது. Cஆனது பொருளிலும் மதிப்பிலும் மாற்றமடைந்த பிறகே சுற்றோட்டம் அதன் இரண்டாவதாகிய C—Mஇறுதிக் கட்டத்தைக் கடக்கிறது. ஆனால் மூலதன-மதிப்பைப் பொறுத்த வரை, அதை மட்டும் கருதுவோமானால், உற்பத்தி நிகழ்முறையின் போது அது அதன் பயன்-வடிவிலான மாற்றத்துக்கு மட்டுமே உள்ளாகியுள்ளது. £422 பெறுமானமுள்ள Lஉம் mpஉம் ஆகிய இரண்டின் வடிவில் இருந்த அது இப்போது £422 பெறுமானமுள்ள அல்லது *8,440* இராத்தல் எடையுள்ள நூலின் வடிவில் இருக்கிறது. ஆகவே உபரி-மதிப்பை விலக்கி வைத்து விட்டு, மூலதன-மதிப்பின் இரு சுற்றோட்டக் கட்டங்களைக் கவனிப்போமானால், *1)* M—C, *2)* C—M ஆகிய இரண்டையும் மூலதன-மதிப்பு கடப்பதையும், இவற்றில் இரண்டாவது C மூதல் Cஇலிருந்து பயன்-வடிவில் வேறுபட்டாலும் மதிப்பில் அதற்குச் சமமாய் இருப்பதையும் பார்க்கிறோம். மூலதன-மதிப்பு இவ்விதம் M—C—M என்னும் சுற்றோட்டத்தை நிகழ்த்துகிறது. இதில் சரக்கு இரு முறை ஒன்றுக்கொன்று நேர் எதிர்த் திசையில் இடம் மாறுகிறது. பணத்திலிருந்து சரக்குகளாகவும், சரக்குகளிலிருந்து பணமாகவும் உருமாற்றம் நிகழ்கிறது. இதனால், பண வடிவில் முன்னீடு செய்யப்படும் மதிப்பு அதன் பண வடிவிற்கே திரும்பி வருவது, அதாவது திரும்பவும் பணமாக மாறுவது அவசியமாகி விடுகிறது.

C′—M′ என்னும் இந்த சுற்றோட்டச் செயலானது பணமாக முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்புக்கு இரண்டாவதும் இறுதியுமான உருமாற்றமாகிறது, பண வடிவத்துக்கே அம்மதிப்பு திரும்பி வருவதாகிறது. ஆனால் (சரக்கு-மூலதனத்தால் சுமந்து வரப் பெற்று, அச்சரக்கு-மூலதனம் பண-வடிவத்துக்கு மாறுகையில் கூடவே ஈடேற்றம் பெறுவதாகிய) உபரி-மதிப்புக்கு இதே சுற்றோட்டச் செயலானது அதன் முதலாவது உருமாற்றம் ஆகிறது, சரக்கு வடிவத்திலிருந்து பண வடிவத்துக்கான அதன் மாறுதலாகிறது, அதன் சுற்றோட்டத்தின் முதல் கட்டமான C—M ஆகிறது.

ஆக, இங்கே கவனத்துக்குரியவை இரண்டு. முதலாவதாக, மூலதன-மதிப்பை அதன் ஆரம்ப வடிவமான பண வடிவத்துக்கே முடிவில் திரும்பச் செய்வது சரக்கு-மூலதனத்தின் பணியாகும். இரண்டாவதாக, உபரி-மதிப்பு முதன்முதலாய் உருமாற்றம் பெற்று அதன் ஆரம்ப வடிவமான சரக்கு வடிவத்திலிருந்து பண வடிவத்துக்கு மாறும் படி செய்வதும் இப்பணியில் அடங்குகிறது. ஆக, பண வடிவம் இங்கே இரட்டைப் பாத்திரம் வகிக்கிறது. ஒரு புறம் ஆக ஆரம்பத்தில் பணமாக முன்னீடு செய்யப்படும் மதிப்பு திரும்பி

வந்து சேரும் வடிவமாகிறது; அதாவது மதிப்பு எவ்வடிவில் நிகழ்முறையைத் தொடங்கியதோ அவ்வடிவத்துக்கே திரும்புகிறது. மறு புறம் பண வடிவமானது சரக்கு வடிவில் முதலில் சுற்றோட்டத்துள் நுழைகிற மதிப்பு அதன் முதல் உருமாற்றத்தின் வாயிலாகப் பெறும் வடிவமாகிறது. சரக்கு-மூலதனமாய் அமையும் சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே விற்கப்படுவதாகக் கொண்டால் (அவ்வாறு தான் அனுமானித்துக் கொள்கிறோம்), C+c என்பது அதன் சமதை யான M+m ஆக மாறுகிறது. ஈடேற்றம் பெற்ற சரக்கு-மூலதனம் இப்போது முதலாளியின் கையில் M+m *(£422+£78=£500)* என்ற வடிவில் இருக்கிறது. இப்போது மூலதன-மதிப்பும் உபரி-மதிப்பும் சர்வப்பொதுச் சமதை வடிவமான பண வடிவத்தில் இருக்கின்றன.

ஆகவே, மூலதன-மதிப்பு இந்நிகழ்முறையில் நுழைந்த போது பெற்றிருந்த வடிவத்தை நிகழ்முறையின் முடிவில் திரும்பப் பெறு கிறது. பண-மூலதனமென்ற முறையில் அது இப்போது ஒரு புதிய நிகழ்முறையைத் தொடக்கி வைத்து நடைபெறச் செய்யலாம். இந் நிகழ்முறையின் ஆரம்ப வடிவமும் இறுதி வடிவமும் M என்னும் பண-மூலதன வடிவத்தில் இருப்பதால் இவ்வகைச் சுற்றோட்ட நிகழ்முறையைப் பண-மூலதனச் சுற்று என்கிறோம். முடிவில் மாற்றம் பெறுவது முன்னீடு செய்யப்பட்ட மதிப்பின் பருமன் தானே தவிர, அதன் வடிவமல்ல.

M+m என்பது திட்டமான பருமனுடைய பணத் தொகையே தவிர வேறல்ல—நமது உதாரணத்தில் அது £500 ஆகும். ஆனால் மூலதனத்தின் சுற்றோட்டத்தால் விளையும் பயன் என்ற முறை யில், ஈடேற்றம் பெற்ற சரக்கு-மூலதனம் என்ற முறையில், இந்தப் பணத் தொகையில் மூலதன-மதிப்பும் உபரி-மதிப்பும் அடங் கியுள்ளன. இந்த மதிப்புகள் முன்பு நூலில் பிரிக்க முடியாத படி இணைந்திருந்தன; இப்போது அவ்வாறன்றி ஒன்றுக்குப் பக்கத் தில் ஒன்றாய் இருக்கின்றன. விற்கப்பட்டதால் இரண்டும் தனித் தனியே பண வடிவம் பெற்று விட்டன. விற்று வந்த பணத்தில் $\frac{211}{250}$ பங்கானது மூலதன-மதிப்பான £422ஐக் குறிக்கிறது. $\frac{39}{250}$ பங்கானது உபரி-மதிப்பான £78ஐக் குறிக்கிறது. சரக்கு-மூல தனம் ஈடேற்றம் பெறுவதன் வாயிலாய் விளையும் இந்தப் பிரி வினை முறைப்படியான அர்த்தமுடையதாய் இருப்பது மட்டு மல்ல—இந்த அர்த்தத்தை உடனடியாக அடுத்துப் பரிசீலனை செய்வோம். இதன்றி இந்தப் பிரிவினை இன்னொரு விதத்திலும் முக்கியத்துவம் வாய்ந்தது. மூலதனத்தின் மறுவுற்பத்தி நிகழ்முறை யின் போது m ஆனது M உடன் முழு அளவுக்கோ பகுதி அள வுக்கோ ஒருசேர இணைந்திருக்கிறதா, அல்லது சிறிதும் இணையாது இருக்கிறதா என்பதற்கு ஏற்ப, அதாவது முன்னீடு செய்யப்படும்

மூலதன-மதிப்பின் உள்ளடக்கக் கூறாக அது தொடர்ந்து செயல்படு கிறதா, இல்லையா என்பதற்கு ஏற்ப இந்தப் பிரிவினை முக்கியத் துவம் பெறுகிறது. M, m ஆகிய இரண்டும் இருவேறு சுற்றோட்ட நிகழ்முறைகளுக்கு உள்ளாவதும் உண்டு.

M′ என்பதில் மூலதனம் அதன் ஆரம்ப வடிவமான Mக்கு, அதாவது பண வடிவத்துக்குத் திரும்புகிறது என்பதோடு, மூலதனம் என்ற முறையில் ஈடேற்றமும் பெற்று விடுகிறது.

முதலாவதாக, அளவில் வேறுபாடு உள்ளது. Mஆக; அதாவது £422ஆக இருந்தது இப்போது M′, அதாவது £500 ஆகி விட்டது. இந்த வேறுபாடு M … M′ என்பதால் தெரிவிக்கப்படுகிறது; சுற்றின் இரு முனைகளும் அளவில் இவ்வாறு வேறுபடுகின்றன. இடையில் வரும் மூன்று புள்ளிகள் சுற்றின் இயக்கத்தைக் குறிக்கின்றன. M′>M; M′−M=s, அதாவது உபரி-மதிப்பு. ஆனால் M … M′ என்னும் இந்தச் சுழல் இயக்கத்தின் விளைவாக இப்போது இருப்பது M′ மட்டுமே. விளைபயன் மட்டும் இருக்க, அதனை உருவாக்கிய நிகழ் முறை மறைந்து வருகிறது. இப்போது M′ அதனைத் தோற்றுவித்த இயக்கத்திலிருந்து சுயேச்சையாகத் தானாகவே நிலவுகிறது. அந்த இயக்கம் போய்விட்டது; அதனிடத்தில் M′ இருக்கிறது.

ஆனால் M′ என்பது M+m ஆகும், அதாவது முன்னீடு செய்யப் பட்ட மூலதனமாகிய £422+அதன் உயர்வாகிய £78=£500 ஆகும். அதே போது இது பண்புவழி உறவு ஒன்றையும் குறிக்கிறது. இந்தப் பண்புவழி உறவு ஒரே தொகையின் பகுதிகளிடையிலான உறவாகவே, எனவே அளவுவழி உறவாகவே நிலவுகிறது. முன்னீடு செய்யப்பட்ட மூலதனமாகிய M (£422) இப்போது ஆரம்ப வடிவத்துக்கே திரும்பியுள்ளது என்றாலும் ஈடேற்றம் பெற்ற மூல தனமாக நிலவுகிறது. அது தன்னைக் காப்பாற்றிக் கொண்டிருப்ப தோடு கூட, m (£78) என்பதிலிருந்து மூலதனம் என்ற முறையில் தன்னை வேறுபடுத்திக் கொள்வதன் மூலம் மூலதனமாக ஈடேற்றம் பெற்றுள்ளது. இந்த mஉடன் அதற்குள்ள உறவு **தன்னுடைய** அதிகரிப்புடன், **தன்னுடைய** விளைவுடன், தான் பெற்றெடுத்த பெருக்கத்துடன் உள்ள உறவே ஆகும். மதிப்பைப் படைக்கும் மதிப் பாக அது ஈடேற்றம் பெறுகிறது, அதனால் மூலதனமாக ஈடேற்றம் பெறுகிறது. M′ என்பது மூலதன உறவாக நிலவுகிறது. M இனி வெறும் பணமாக இருக்கவில்லை, வெளிப்படையாகவே பண-மூல தனமாகப் பணி புரிகிறது. தற்பெருக்கமடைந்த மதிப்பாக, ஆகவே தற்பெருக்க இயல்புடைய அதாவது தன்னைக் காட்டிலும் அதிகமான மதிப்பை உண்டாக்கும் இயல்புடைய மதிப்பாகத் தெரிவிப்பு பெறு கிறது. M ஆனது அதனால் உண்டாக்கப்பட்ட, அதனைக் காரண மாகக் கொண்டு உருவான, அதனை ஆதாரமாகக் கொண்டு விளைந்த M′இன் மறு பகுதியோடு அதற்குள்ள உறவின் பயனாய் மூலதனமாகிறது. இவ்வாறு M′ ஆனது அதனுள் வகை பிரிக்கப்

படுகிற, பணி வழியில் (கருத்தியலாக) வேறுபடுத்திக் காட்டப்படுகிற, மூலதன உறவைத் தெரிவிக்கிற மதிப்புகளின் தொகையாக விளங்கு கிறது.

ஆனால், இந்த மூலதன உறவு ஒரு விளைவாக மட்டுமே— எந்நிகழ்முறையின் விளைவோ அந்நிகழ்முறை இடையிலே வராத படி— தெரிவிக்கப்படுகிறது.

மதிப்பின் பகுதிகளாக இருப்பவை ஒன்றுக்கொன்று பண்பு வழியில் வேறுபட்டவையல்ல; வெவ்வேறு பண்டங்களின், ஸ்தூல மான பொருட்களின் மதிப்புகளாக, பல்வேறு பயன் வடிவங் களாக, ஆதலால் வெவ்வேறு சரக்குகளின் மதிப்புகளாகக் காட்சி யளிக்கிற அளவில் மட்டுமே அவை பண்புவழியில் வேறுபட்டவை. இந்த வேறுபாடு மதிப்பின் பகுதிகள் என்ற முறையில் அவற்றுடன் கூடப் பிறக்கும் ஒன்றல்ல. சரக்குகளிடையிலான எல்லா வேறுபாடு களும் பண வடிவத்தில் மறைந்து போகின்றன; ஏனெனில் பண மானது அவை எல்லாவற்றுக்கும் பொதுவான சமதை வடிவம். £500 என்கிற பணத் தொகை முற்றிலும் £1 என்னும் முழுது மொத்த கூறுகளால் ஆனது. இந்தப் பணத் தொகை உதித்து உரு வாகிய கதையின் இடைநிலைக் கண்ணிகள் எல்லாம் இத்தொகை யின் இப்போதைய நிலவலில் மறைந்து விடுவதாலும், மூலதனத் தின் வெவ்வேறு அடக்கக் கூறுகள் இடையிலான பிரத்தியேக வேறு பாட்டுத் தடங்கள் யாவும் உற்பத்தி நிகழ்முறையின் போது ஒழிந்து போவதாலும், முன்னீடு செய்யப்பட்ட மூலதனமாகிய £422க்குச் சமமான அசல் தொகை என்னும் கருத்தளவிலான ஒரு வடிவத் துக்கும் £78 ஆகிய கூடுதல் மதிப்புக்கும் இடைப்பட்ட வேறு பாட்டைத் தவிர வேறு ஏதும் இப்போது எஞ்சவில்லை. உதாரண மாக, M′ என்பது £110க்குச் சமமெனவும் இதில் £100 அசலா கிய Mக்கும் £10 உபரி-மதிப்பாகிய sக்கும் சமமெனவும் கொள் வோம். £110 என்னும் தொகையின் இரு அடக்கக் கூறுகளும் முழு அளவுக்கு ஒருபடித்தானவை, இரண்டுக்கும் இடையே கருத் தளவு வேறுபாடுகள் இல்லை. எப்போதுமே இந்தத் தொகையின் ஒரு பகுதியான £10 என்பது முன்னீடு செய்யப்பட்ட அசலாகிய £100இல் $\frac{1}{10}$. பங்கானாலும் சரி, அதன் மிகுதியாகிய £10 ஆனா லும் சரி— மொத்தத் தொகையான £110இல் $\frac{1}{11}$ பங்கே ஆகும். ஆதலால் அசல் தொகையும் மிகுதித் தொகையும்— மூலதனத் தொகையும் உபரித் தொகையும்— மொத்தத் தொகையின் பின்னப் பகுதிகளாகத் தெரிவிக்கப்படலாம். நமது எடுத்துக்காட்டில், $\frac{10}{11}$ பங்கு என்பது அசல் அல்லது மூலதனத் தொகையும் $\frac{1}{11}$ பங்கு என்பது உபரித் தொகையும் ஆகும். ஆகவே, ஈடேற்றம் பெற்ற மூலதனத் தின் பணத் தெரிவிப்பானது, இந்நிகழ்முறையின் முடிவில் மூலதன

உறவின் ஒவ்வாத் தெரிவிப்பாக அமைகிறது.

இது C'(=C+c) என்பதற்கும் பொருந்துமென்பது மெய்தான். ஆனால் பின்வரும் வேறுபாடு உள்ளது: Cஐயும் cஐயும் ஒருபடித்தான ஒரே சரக்குத் திரளினது மதிப்பின் விகிதாசாரப் பகுதிகளாக மட்டுமே கொண்ட C' ஆனது அது Pஇன் நேரடி உற்பத்திப் பொருள் என்பதைக் காட்டி விடுகிறது; ஆனால் சுற்றோட்டத்திலிருந்து நேரடியாக வரப்பெற்ற வடிவமான M'இல் Pஉடனான நேரடி உறவு மறைந்து போகிறது.

M' என்பது M ... M' என்னும் இயக்கத்தின் விளைவினைத் தெரிவிப்பதாக இருக்கும் வரை, அசல் தொகைக்கும் கூடுதல் தொகைக்கும் இடையிலான ஒவ்வா வேறுபாட்டைத் தன்னுள் கொண்டிருக்கிறது; M' ஆனது மீண்டும் பண-மூலதனமாக முனைப்புடன் செயல்படத் தொடங்கியவுடனே—ஆகவே பெருக்கமடைந்த தொழில்துறை மூலதனத்தின் பணத் தெரிவிப்பாக நிலைத்திருப்பது மறைந்தவுடனே — இவ்வேறுபாடு ஒழிந்து போகிறது. (M' இப்போது M ஆகச் செயல்பட்ட போதிலும்) பண-மூலதனச் சுற்று Mஇலிருந்துதான் தொடங்க முடியும்; ஒரு போதும் M'இலிருந்து தொடங்க முடியாது; அதாவது மூல்தன-மதிப்பின் முன்னீட்டு வடிவமாகத்தான் தொடங்க முடியும்; ஒருபோதும் மூலதன உறவின் தெரிவிப்பாகத் தொடங்க முடியாது. மீண்டும் sஐ உற்பத்தி செய்யும் பொருட்டு £500 திரும்பவும் மூலதனமாக முன்னீடு செய்யப்படுமாயின் அது நிகழ்முறையின் தொடக்கமாகுமே தவிர முடிவாகாது. £422 மூலதனத்துக்குப் பதில் இப்போது £500 மூலதனம் முன்னீடு செய்யப்படுகிறது. இது முன்னிலும் அதிகப் பணமாகும். அதிக மூலதன-மதிப்பாகும்; இப்போது அதன் இரு அடக்கக் கூறுகளுக்கும் இடையிலான உறவு மறைந்து விடுகிறது. £422க்குப் பதிலாக £500 ஆதியில் மூலதனமாகச் செயல்பட்டிருந்தால் ஏற்பட்டிருக்கக் கூடிய அதே நிலைமைதான் உண்மையில் இப்போது ஏற்படும்.

M' ஆகத் தோற்றம் எடுப்பதல்ல பண-மூலதனம் ஆற்றுகிற முனைப்பான பணி. M' ஆகத் தோற்றம் எடுப்பது உண்மையில் C'க்கு உரிய பணியாகும். சாமானிய சரக்குச் சுற்றோட்டத்திலும் கூட, முதலில் $C_1$—M என்பதிலும் இரண்டாவதாக M—$C_2$ என்பதிலும், பணமாகிய M இரண்டாவது செயலாகிய M—$C_2$ ஆரம்பமாவதற்கு முன்பு முனைப்புடையதாவதில்லை. முதலாவது செயலின் விளைவாகவே அது Mஇன் வடிவத்தைப் பெறுகிறது, அதனாலேயே அது $C_1$இன் மாறிய வடிவில் தோற்றமளிக்கிறது. M ... M' என்னும் சுற்று ஓயாமல் திரும்பத் திரும்ப நிகழும் போது M' இரண்டாகப் பிளந்து இரு சுற்றோட்டங்களில் — மூலதனச் சுற்றோட்டத்திலும், உபரி-மதிப்புச் சுற்றோட்டத்திலும் — செல்லுமானால், M'இல் அடங்கிய மூலதன உறவு — அதன் ஒரு பகுதி

மூலதன-மதிப்பென்ற முறையிலும் மறு பகுதி அம்மதிப்பின் கூடுதல் என்ற முறையிலும் ஒன்றோடு ஒன்று கொள்கிற உறவு— பணிவழியில் முக்கியத்துவம் பெறுவது மெய்தான். அந்நிலையில் இவ்விரு பகுதிகளும் அளவுவழியில் மட்டுமன்றி பண்புவழியிலும் வெவ்வேறான பணிகள் புரிகின்றன; M புரியும் பணி வேறு, m புரியும் பணி வேறு. ஆனால் M ... M' என்னும் சுற்றைக் கருதுவோமானால் முதலாளியின் நுகர்வு அதில் சேருவதில்லை. தற்பெருக்கமும் [self-expansion] திரட்டலும் [accumulation] மட்டும் தெளிவாகவே அதில் சேர்ந்து விடுகின்றன. ஏனெனில் மூலதனத் திரட்டலானது, யாவற்றுக்கும் மேலாய், ஓயாமல் புதுப்பிக்கப்படும் பண-மூலதன முன்னீடுகள் காலவட்ட முறையில் அடையும் பெருக்கமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

M+m என்பதற்குச் சமமான M' என்பது மூலதனத்தின் ஒவ்வா வடிவமாக இருந்தாலும், அது ஈடேற்றம் பெற்ற வடிவிலுள்ள— பணத்தை உண்டாக்கிய பணத்தின் வடிவிலுள்ள—பண-மூலதனமே ஆகும். ஆனால் $M - C<^{L}_{mp}$ என்னும் முதல் கட்டத்தில் பண-மூலதனம் ஆற்றும் பணியிலிருந்து இது வேறுபட்டது. இந்த முதல் கட்டத்தில் M பணமாகச் சுற்றுகிறது. அது பண வடிவில்தான் பணமாகப் பணி புரிய முடியும் என்பதால் சரக்குகள் என்ற முறையில் அதை எதிர்நோக்கும் Pஇன் கூறுகளாக—Lஆகவும் mp ஆகவும்—உருமாற முடியும் என்பதால் அது பண-மூலதனமாகச் செயல்பட முற்படுகிறது. இந்த சுற்றோட்டச் செயலில் அது பணமாகவே செயல்படுகிறது. அதே நேரத்தில், இச்செயலானது நிகழ்முறையிலுள்ள மூல்தன-மதிப்பின் முதல் கட்டமாய் இருப்பதால், விலைக்கு வாங்கப்படும் L,mpஆகிய சரக்குகளின் பிரத்தியேகப் பயன்-வடிவத்தின் அடிப்படையில் பண-மூலதனப் பணியாகவும் இருக்கிறது. மறு புறம், மூலதன-மதிப்பாகிய M, அதற்குப் பிறந்த உபரி-மதிப்பாகிய m ஆகியவற்றாலான M' தற்பெருக்கமடைந்த மூலதன-மதிப்பைக் குறிக்கிறது—இதுவே மூலதனச் சுற்று முழுமையின் நோக்கமும் விளைவுமாகும், அதன் பணியாகும். M' ஆனது இந்த முடிவைப் பண வடிவில் தெரிவிப்பதற்கு, ஈடேற்றம் பெற்ற பண-மூலதனமாகத் தெரிவிப்பதற்கு என்ன காரணம்? அது மூலதனத்தின் பண வடிவமாக, பண-மூலதனமாக இருப்பதல்ல காரணம; மாறாக, அது பண-மூலதனமாக, பண வடிவிலுள்ள மூலதனமாக இருப்பதே காரணம்; மூலதனம் இந்த வடிவத்தில் நிகழ்முறையைத் தொடங்கியதே காரணம்; அது பண வடிவில் முன்னீடு செய்யப்பட்டதே காரணம். திரும்பவும் பண வடிவத்துக்கு மாறுவது சரக்கு-மூலதனமான Cஇன் பணியே தவிர பண-மூலதனத்தின் பணியல்ல என்று பார்த்தோம். Mக்கும் M'க்கும் இடையிலான வேறுபாடாகிய mஐப் பொறுத்த வரை, அது Cஇன் பெருக்கமாகிய cஇன் பண வடிவமே. M' என்பது M+m ஆவதற்கு, C' என்பது

C+c ஆவதுதான் காரணம். ஆகவே, இந்த வேறுபாடும், மூலதன-மதிப்பு அதிலிருந்து விளையும் உபரி-மதிப்போடு கொண்டுள்ள உறவும் C'இலேயே இருக்கின்றன, தெரிவிக்கப்படுகின்றன; அதாவது, இவையிரண்டும் M' ஆக மாறுவதற்கு முன்பே—மதிப்பின் இரு பகுதிகளும் ஒன்றையொன்று சுயேச்சையாக எதிர்நோக்கும் பணத் தொகையாக, எனவே அப்பகுதிகளைத் தனித்தனியான வேறுபட்ட பணிகளில் ஈடுபடுத்த வாய்ப்பளிக்கும் பணத் தொகையாக மாறுவதற்கு முன்பே—இருக்கின்றன, தெரிவிக்கப்படுகின்றன.

M'என்பது C' ஈடேற்றம் பெறுவதன் விளைவே ஆகும். M', C' ஆகிய இரண்டும் தற்பெருக்கமடைந்த மூலதன-மதிப்பின் வெவ்வேறு வடிவங்களே ஆகும்; ஒன்று சரக்கு வடிவம், மற்றொன்று பண வடிவம். தற்பெருக்கமடைந்த் மூலதன-மதிப்பாய் இருப்பது இரண்டுக்கும் பொதுவான அமிசமாகும். இவை இரண்டுமே ஈடேற்றம் பெற்ற மூலதனம் ஆகும். ஏனென்றால், இங்கே, மூலதன-மதிப்பானது அதிலிருந்து கிடைப்பதும் அதிலிருந்து வேறுபட்டதுமான உபரி-மதிப்போடு சேர்ந்து நிலவுகிறது; இவ்வுறவு பணத் தொகையின் அல்லது சரக்கு-மதிப்பின் இரு பகுதிகளிடையிலான உறவு என்னும் ஒவ்வா வடிவத்திலேயே தெரிவிக்கப்படுகிறது என்பது மெய்தான். ஆனால், மூலதனத்தை அதனால் உற்பத்தி செய்யப்பட்ட உபரி-மதிப்போடு உறவுபடுத்தியும் வேறுபடுத்தியும் காட்டுகிற மூலதனத் தெரிவிப்புகள் என்ற முறையில், எனவே தற்பெருக்கமடைந்த மதிப்பின் தெரிவிப்புகள் என்ற முறையில், M'உம் C'உம் ஒன்றுதான்; ஒன்றையே வெவ்வேறு வடிவங்களில் தெரிவிப்பவைதான். அவை வேறுபடுவது பணம், சரக்கு என்ற முறையில்தானே தவிர பண-மூலதனம், சரக்கு-மூலதனம் என்ற முறையில் அல்ல. அவை தற்பெருக்கமடைந்த மதிப்பை, மூலதனமாகச் செயல்படும் மூலதனத்தைக் குறிக்கும் வரை, திறனுடை-மூலதனத்தினது பணியின் விளைவையே தெரிவிக்கின்றன; மூலதன-மதிப்பு இந்தப் பணியில் மட்டும்தான் மதிப்பை உண்டாக்குகிறது. பண-மூலதனம், சரக்கு-மூலதனம் இவை இரண்டுக்கும் உள்ள பொது அமிசம் என்னவென்றால், இரண்டுமே மூலதனத்தின் நிலவல் வடிவங்கள் என்பதே. ஒன்று பண வடிவிலான மூலதனம், ஒன்று சரக்கு வடிவிலான மூல்தனம். ஆகவே அவற்றின் பிரத்தியேகப் பணிகளிடையிலான வேறுபாடுகள் என்பவை பணத்தின் பணிகளுக்கும் சரக்குகளின் பணிகளுக்கும் இடையிலான வேறுபாடுகளாகத்தான் இருக்க முடியும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் நேரடி விளைவாகிய சரக்கு-மூலதனம் அதன் தோற்றுவாயை நினைவுபடுத்துவதாய் இருக்கிறது; ஆகவே பண-மூலதனத்தைக் காட்டிலும் அதிக அளவுக்கு அறிவுக்கொத்த, புரிந்து கொள்ளத்தக்க வடிவமாய்த் திகழ்கிறது;

பண-மூலதனத்திலோ முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் தடயங்கள் யாவும் மறைந்து போகின்றன — பொதுவாகச் சரக்குகளின் தனிவிதப் பயன்பாட்டு வடிவங்கள் யாவும் பணத்தில் மறைந்து போகின்றனவே, அது போல. ஆகவே, M′ ஆனது சரக்கு-மூலதனமாகச் செயல்படும் போதுதான், உற்பத்தி நிகழ்முறையின் உற்பத்திப் பொருள் உருமாற்றத்தின் மூலம் பெற்ற வடிவமாக இருப்பதற்குப் பதில் அந்நிகழ்முறையின் நேரடி உற்பத்திப் பொருளாகவே இருக்கும் போதுதான், அதாவது பணப் பொருளின் உற்பத்தியில்தான் அதன் விசித்திர வடிவத்தை இழக்கிறது. எடுத்துக்காட்டாக, தங்கத்தின் உற்பத்தியில் $M-C<^{L}_{mp}$... P ... M′ (M+m) என்பது சூத்திரமாகும்; இதில் M′ சரக்கு-உற்பத்தியாக இருக்கும். ஏனென்றால் பண-மூலதனமாகிய முதல் Mஇன் உருவில் தங்க உற்பத்தியின் அடிக் கூறுகளுக்காக முன்னீடு செய்யப்பட்டதைக் காட்டிலும் கூடுதலான தங்கத்தை P கொடுக்கிறது. இந்த உதாரணத்தில் M — M′ (M+m) என்னும் தெரிவிப்பின் ஒவ்வாமை மறைந்து விடுகிறது. இங்கே பணத் தொகையின் ஒரு பகுதி அதே பணத் தொகையினது. இன்னொரு பகுதியின் தாயாகத் தோற்றமளிக்கிறது.

## IV. சுற்று அதன் முழு உருவில்

சுற்றோட்ட நிகழ்முறை $M-C<^{L}_{mp}$ என்னும் அதன் முதல் கட்டத்தின் முடிவில் P என்பதால் இடைமறிக்கப்படுவதை முன்பே பார்த்தோம்; சந்தையில் வாங்கப்படும் சரக்குகளான L, mp ஆகியவை Pஇல் திறனுடை-மூலதனத்தின் பொருட் கூறுகளாகவும் மதிப்புக் கூறுகளாகவும் நுகரப்படுகின்றன. இந்த நுகர்விலிருந்து விளையும் உற்பத்திப் பண்டம் பொருளிலும் மதிப்பிலும் மாறுபட்ட C′ என்னும் புதிய சரக்கு. இடைமறிக்கப்பட்ட சுற்றோட்ட நிகழ்முறையான M — C இப்போது C—Mஆல் நிறைவு செய்யப்பட வேண்டும். ஆனால் C′தான் இரண்டாவதும் முடிவானதுமாகிய இந்தச் சுற்றோட்டக் கட்டத்தின் ஊர்தி ஆகும். இந்த C′ ஆரம்ப Cஇலிருந்து பொருளிலும் மதிப்பிலும் வேறுபட்ட சரக்கு. ஆகவே சுற்றோட்டத் தொடரானது *(1)* $M-C_1$;*(2)* $C'_2-M'$ ஆகிய இரு கட்டங்களால் ஆனதாகத் தோற்றமளிக்கிறது. இதில், முதல் சரக்கான C′,க்கு பதில் கூடுதலான மதிப்பும் வேறொரு பயன் வடிவமும் கொண்ட வேறு சரக்கான $C'_2$ இரண்டாவ்து கட்டத்தில் வருகிறது. Pஇன் பணியினால், அதாவது திறனுடை-மூலதனமான Pஇன் நிலவல் வடிவங்களாகிய Cஇன் கூறுகளிலிருந்து, C′ உற்பத்தி செய்யப்படுவதால் ஏற்படும் இடைமறிப்பின் போது இந்த மாற்றம் நிகழ்கிறது. ஆனால் மூலதனம் முதன்முதல் நம்மை எதிர்கொண்டு தோற்ற

மளித்த அந்த முதல் வடிவில் மூலதனம், முதல் பாகம், அத்தியாயம் IV., பிரிவு 1), அதாவது M—C—M′ (விரிவாக்கம்: (1) $M-C_1$ (2) C —M′)என்பதில் ஒரே சரக்கு இரு முறை வருகிறது. முதல் கட்டத்தில் எந்தச் சரக்காகப் பணம் உருமாறுகிறதோ, அதே சரக்கு தான் இரண்டாவது கட்டத்தில் திரும்ப இன்னும் அதிகமான பணமாக உருமாற்றமடைகிறது. இந்த முக்கிய வேறுபாடு இருப்பினும் இரு சுற்றோட்டங்களுக்கும் பொதுவானது என்னவென்றால்: இரண்டிலும் முதல் கட்டத்தில் பணம் சரக்குகளாகவும், இரண்டாவது கட்டத்தில் சரக்குகள் பணமாகவும் மாற்றப்படுகின்றன; முதல் கட்டத்தில் செலவிடப்பட்ட பணம் இரண்டாவது கட்டத்தில் திரும்பி வருகிறது. ஒரு புறம் பணம் புறப்பட்ட இடத்துக்கே திரும்பி வருவதும், மறு புறம் முன்னீடு செய்யப்படும் பணத்தைக் காட்டிலும் திரும்பி வரும் பணம் அதிகமாய் இருப்பதும் இரண்டுக்கும் உள்ள பொது அமிசமாகும். M—C ... C′—M′ என்னும் சூத்திரம் இந்த அளவுக்கு M—C—M′ என்னும் பொதுச் சூத்திரத்தில் உள்ளடங்குகிறது.

இதிலிருந்து மேலும் பெறப்படுவது என்னவென்றால்: சுற்றோட்டத் துறையில் நடைபெறும் M—C, C′—M′ என்னும் இரு உருமாற்றங்களிலும் பெரும் பருமன்களில் ஒரே நேரத்தில் நிலவுகிற சம அளவிலான மதிப்புகள் ஒவ்வொரு தரமும் ஒன்றையொன்று எதிர்நோக்கி ஒன்று மற்றொன்றாக மாற்றமடைகின்றன. உற்பத்தி நிகழ்முறையான P என்னும் உருமாற்றத்தில் மட்டுமே மதிப்பு மாற்றம் ஏற்படுகிறது. P என்னும் இந்த உருமாற்றம், சுற்றோட்டத்தில் நடைபெறும் புற வடிவிலான உருமாற்றத்துடன் ஒப்பிடுமிடத்து, மூலதனத்தின் மெய்யான உருமாற்றமாக விளங்குகிறது.

மொத்த இயக்கமான M—C ... P ... C′ — M′ அல்லது அதன் விரிவாக்க வடிவமான $M-C<^{L}_{mp}$ ... P ... C′(C+c)—M′ (M+m) என்பதை இப்போது பரிசீலிப்போம். இதில் மூலதனமானது, ஒன்றோடொன்று தொடர்புள்ள, ஒன்றையொன்று சார்ந்துள்ள மாற்றங்களின் தொடரை, மொத்த நிகழ்முறையின் கட்டங்கள் அல்லது பிரிவுகளாகிய உருமாற்றத் தொடரைக் கடந்து செல்லும் மதிப்பாக விளங்குகிறது. இந்தக் கட்டங்களில் இரண்டு சுற்றோட்டத் துறையைச் சேர்ந்தவை, ஒன்று உற்பத்தித் துறையைச் சேர்ந்தது. இந்தக் கட்டங்கள் ஒவ்வொன்றிலும் மூலதன-மதிப்பு வெவ்வேறு வடிவம் பெற்றுள்ளது. வெவ்வேறான இந்த ஒவ்வொரு வடிவத்துக்கும் வெவ்வேறான தனிவகைப் பணி ஒன்று உண்டு. முன்னீடு செய்யப்படும் மதிப்பு இந்த இயக்கத்தின் போது தன்னைக் காப்பாற்றிக் கொள்வதோடு, வளரவும் செய்கிறது. பருமனில் அதிகரிக்கவும் செய்கிறது. முடிவில், இறுதிக் கட்டத்தில், அம்மதிப்பு நிகழ்முறை முழுவதன் தொடக்கத்தில் பெற்றிருந்த அதே வடிவத்துக்குத் திரும்புகிறது. இவ்வாறு, இந்த முழு நிகழ்முறையும் சுற்று சுற்றி வரும்

நிகழ்முறையாகிறது.

மூலதன-மதிப்பு அதன் சுற்றோட்டத்தின் வெவ்வேறு கட்டங்களில் பண-மூலதனம், சரக்கு-மூலதனம் ஆகிய இரு வடிவங்களை ஏற்கிறது. திறனுடை-மூலதனமே உற்பத்திக் கட்டத்துக்கு உரித்தான வடிவம். இப்படி அதன் முழுச் சுற்றின் போது ஒவ்வொன்றாய் இவ்வடிவங்களைப் பூண்டு பிறகு அவற்றைக் களைவதும், இவ்வடிவங்கள் ஒவ்வொன்றையும் பூண்டிருக்கையில் அந்தந்த வடிவத்துக்கும் உரிய பணியினைப் புரிவதுமாகிய இந்த மூலதனம் தொழில் துறை மூலதனம் [industrial capital] ஆகும்—தொழில் துறை என்னும் போது முதலாளித்துவ அடிப்படையில் நடைபெறும் தொழில் துறையின் ஒவ்வொரு கிளையும் அதில் உள்ளடங்கும்.


ஆகவே பண-மூலதனமும் சரக்கு-மூலதனமும் திறனுடை-மூலதனமும் வெவ்வேறு வகைப்பட்ட மூலதனங்களைக் குறிப்பவை அல்ல. இவை புரியும் பணிகளும் தொழில் துறையின் தனித்தனியாகப் பிரிந்த வெவ்வேறு கிளைகளுக்கு உரியன அல்ல. இவை எல்லாம் குறிப்பிட்ட பணிகளைப் புரியும் பொருட்டு தொழில் துறை மூலதனம் ஏற்கும் வடிவங்களையே இங்கே குறிக்கின்றன. தொழில் துறை மூலதனம் ஒவ்வொன்றாய் இம்மூன்று வடிவங்களையும் ஏற்கிறது.

மூலதனச் சுற்றின் பல்வேறு கட்டங்களும் ஒன்று மற்றொன்றாகித் தடங்கலின்றி நிகழ்ந்து கொண்டிருக்கும் வரைதான் மூலதனம் முறைப்படி ஒழுங்காய் அதன் சுற்றில் செல்கிறது. மூலதனம் முதல் கட்டமான M—Cஇல் பாதி வழியில் நின்று விட்டால், பண-மூலதனம் இயங்காது இறுகிப் போன பணச் சேர்ப்பு [hoard] ஆகி விடுகிறது. உற்பத்திக் கட்டத்திலேயே அது நின்று விட்டால், ஒரு புறத்தில் உற்பத்திச் சாதனங்கள் செயலற்று முடங்கிப் போகின்றன; மறு புறத்தில் உழைப்புச் சக்தி வேலையில்லாமல் தவிக்க நேர்கிறது. மூலதனம் கடைசிக் கட்டமான C'—M'இல் தடைப்பட்டு நிற்குமானால், சரக்குகள் விலை போகாமல் குவிந்து, சரக்குச் சுற்றோட்டம் நடைபெற முடியாமல் பாதையை அடைத்துக் கொள்கின்றன.

ஆயினும், மூலதனம் அந்தந்தக் கட்டத்திலும் குறிப்பிட்ட காலத்துக்கு மாறாமல் அப்படியே இருப்பது சுற்றோட்டத்தாலேயே அவசியமாகி விடுகிறது. இது இயற்கையே. தொழில் துறை மூலதனமானது அதன் ஒவ்வொரு கட்டத்திலும் குறிப்பிட்ட ஒரு வடிவமுடையதாய் இருந்தாக வேண்டியிருக்கிறது—பண-மூலதனம், திறனுடை-மூலதனம், சரக்கு-மூலதனம் இவற்றில் ஒரு வடிவம் பூண்டிருக்க வேண்டியதாகிறது. இந்தக் குறிப்பிட்ட ஒவ்வொரு வடிவத்துக்கும் உரிய பணியை ஆற்றி முடிக்கும் வரை, அது புதிய உருமாற்றக் கட்டத்தினுள் நுழைவதற்கான வடிவம் பெறுவதில்லை. இதனைத் தெள்ளத் தெளிவாக்கும் பொருட்டு, நமது எடுத்துக் காட்டில் உற்பத்திக் கட்டத்தில் படைக்கப்படும் சரக்களவின்



கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம், இரண்டாம் பாகம் கையெழுத்துப் பிரதியில் ஒரு பக்கத்தின் நிழற்பட நகல் (சிறிதாக்கியது)



[illegible]
[illegible]
([illegible])

மூலதன-மதிப்பு, ஆரம்புத்தில் பண வடிவில் முன்னீடு செய்யப் படும் மதிப்பின் மொத்தத் தொகைக்குச் சமமாய் இருப்பதாகக் கொள்கிறோம். அதாவது பண வடிவில் முன்னீடு செய்யப் படும் மூலதன-மதிப்பு ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்துக்கு அப்படியே முழுதும் மாறிச் செல்வதாகக் கொள்கிறோம். ஆனால் மாறா-மூலதனத்தின் பகுதியாகிய உழைப்புச் சாதனங்கள் (உதாரணமாக இயந்திரங்கள்), குறிப்பிட்ட காலத்துக்குத் திரும்பத் திரும்ப நடக்கும் ஒரே விதமான உற்பத்தி நிகழ்முறைகளின் போது தொடர்ந்து திரும்பத் திரும்ப பயன்படுவதையும், இவ்விதம் தமது மதிப்புகளைச் சிறிது சிறிதாகவே உற்பத்திப் பொருட்களுக்குப் பெயர்த்தளிப்பதையும் நாம் முன்பே பார்த்தோம். (**மூலதனம்**, முதல் பாகம், அத்தியாயம் VIII). இந்நிலைமையால், மூலதனத்தின் சுழல் இயக்கத்தில் எந்த அளவுக்குத் திரிபு ஏற்படுகிறது என்று பிறகு பார்க்கலாம். இப்போதைக்குப் பின்வருவதை மட்டும் சொன்னால் போதும்; நமது எடுத்துக்காட்டில், திறனுடை-மூலதனத்தின் மதிப் பாகிய £422இல் ஆலைக் கட்டடங்கள், இயந்திர சாதனங்கள் போன்றவற்றின் சராசரித் தேய்மானம் மட்டுமே அடங்குகிறது; அதாவது 10,000 இராத்தல் பஞ்சினை 10,000 இராத்தல் நூலாக மாற்றும் போது அவை நூலுக்குப் பெயர்த்தளிக்கும் மதிப்புப் பகுதி மட்டுமே அடங்குகிறது; இந்த 10,000 இராத்தல் நூல் என்பது 60 மணி நேரம் கொண்ட ஒரு வாரத்தில் நூற்கப்பட்டதாகும். முன்னீடு செய்யப்படும் மாறா-மூலதனமாகிய £372இன் உருமாற்றத்தால் வரப்பெறும் உற்பத்திச் சாதனங்களில், உழைப்புக் கருவிகள், கட்டடங்கள், இயந்திர சாதனங்கள் முதலானவற்றை வாராந்தரக் கட்டணத்துக்கு சந்தையில் வாடகைக்கு எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளும் போது ஏற்படும் அதே மதிப்பு மாற்றம் மட்டுமே இங்கு ஏற்படுகிறது. ஆனால் சாராம்சத்தில் இதனால் எந்த மாறுபாடும் இல்லை. விலைக்கு வாங்கி குறிப்பிட்ட ஆண்டு காலத்தில் நுகர்ந்து தீர்க்கப்பட்ட உழைப்புக் கருவிகள் முதலானவற்றின் முழு மதிப் பையும் நூலுக்கு மாற்றும் பொருட்டு நாம் செய்ய வேண்டியது எல்லாம் இதுதான்: ஒரு வார காலத்தில் உற்பத்தி செய்யப்படும் நூலின் அளவினை, அதாவது 10,000 இராத்தல் நூலினை அந்தக் குறிப்பிட்ட ஆண்டு காலத்தில் அடங்கிய வாரங்களின் எண்ணிக் கையால் பெருக்க வேண்டும். அப்படியானால், முன்னீடு செய்யப் படும் பண-மூலதனம் திறனுடை-மூலதனமான Pஆகச் செயல் பட வேண்டுமானால், முதலில் அது இந்த உழைப்புக் கருவி களாய் உருமாறியாக வேண்டும், ஆதலால் அது முதல் கட்டமான M—Cஐக் கடந்தாக வேண்டும் என்பது தெளிவு. அதே போல், நமது எடுத்துக்காட்டில் உற்பத்தி நிகழ்முறையின் போது நூலில் உருக் கொள்ளும் மூலதன-மதிப்பாகிய £422, நூல் தயாராகும் வரை, 10,000 இராத்தல் நூலினது மதிப்பின் பகுதியாக சுற்றோட்டக்

கட்டமான C′—M′இல் நுழைய முடியாது என்பதும் தெளிவு. நூற்று முடிக்கும் வரை, நூலை விற்க முடியாது.

பொதுச் சூத்திரத்தில், Pஇன் உற்பத்திப் பொருளானது திற னுடை-மூலதனத்தின் கூறுகளிலிருந்து வேறுபட்ட பொருளாகக் கருதப்படுகிறது; அது உற்பத்தி நிகழ்முறைக்கு வெளியே நிலவுவ தாகவும் உற்பத்தி-அடிக்கூறுகளின் பயன் வடிவத்திலிருந்து வேறு பட்ட பயன் வடிவமுடையதாகவும் கருதப்படுகிறது. உற்பத்தி நிகழ் முறையின் விளைவு ஒரு பொருளாக வடிவம் பெறும் போதெல் லாம் இதுவே நிலைமை. உற்பத்திப் பொருளில் ஒரு பகுதி புதிய உற்பத்தியில் அதன் அடிக்கூறுகளில் ஒன்றாக மறுபடியும் நுழையும் போதும் கூட இதுவே நிலைமை. எடுத்துக்காட்டாக, தானியமானது தானிய உற்பத்திக்கே விதையாகப் பயன்படுகிறது. ஆனால் தானியம்தான் உற்பத்திப் பண்டமாகிறது; ஆகவே, உழைப்புச் சக்தி, கருவிகள், உரம் போன்ற இதர உற்பத்தி-அடிக்கூறுகளி லிருந்து உருவத்தில் வேறுபடுகிறது. ஆனால், சுயேச்சையான தொழிற் கிளைகள் சிலவற்றில், உற்பத்தி நிகழ்முறையின் விளைவு புதியதொரு உற்பத்திப் பண்டமாவதில்லை, சரக்காவதில்லை. இத்தகைய தொழிற் கிளைகளில் போக்குவரத்துத் தொழில் மட் டுமே—சரக்குகள் மற்றும் பயணிகளின் போக்குவரத்தாகிய முறை யான போக்குவரத்து ஆயினும் சரி, தகவல்கள், கடிதங்கள், தந்திகள் போன்றவற்றைக் கொண்டுசேர்ப்பது மட்டுமே ஆயினும் சரி—பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இது பற்றி, ஏ. சுப்ரோவ்[9] சொல்கிறார்: ''தொழிலதிபர் முதலில் பண்டங்களை உற்பத்தி செய்து விட்டு பிறகு நுகர்வோரைத் தேடலாம்'' (அவரது உற்பத்திப் பண்டம் செய்து முடிக்கப்பட்ட பிறகு உற்பத்தி நிகழ்முறையிலிருந்து விலகிச் சென்று, சரக்காகச் சுற்றோட்டத்திற்குள் செல்கிறது). ''இவ்வாறு இங்கு உற்பத்தியும் நுகர்வும் இடத்தாலும் காலத்தாலும் பிரிந்த இருவேறு செயல் களாகத் தனித்தனியே பிரிக்கப்பட்டு விடுகின்றன. புதிய உற்பத்திப் பண்டம் எதையும் படைத்திடாமல் ஆட்களையும் பண்டங்களையும் இடமாற்றம் மட்டுமே செய்கிற போக்குவரத்துத் தொழிலில் இவ்விரு செயல்களும் ஒருங்கே நிகழ்கின்றன; இத்தொழில் ஆற்றும் சேவை'' (இடமாற்றம்) ''உற்பத்தி செய்யப்படும் போதே நுகரப் படுகிறது. எனவேதான், இரயில்வே நிறுவனங்கள் இருப்புப் பாதையின் இரு புறமும் அதிகபட்சம் 50 வெர்ஸ்ட்டு (53 கிலோ மீட்டர்) எல்லைக்குள் மட்டுமே தமது சேவையை விற்கின்றன.''

ஆட்களின் போக்குவரத்து ஆயினும் சரி, சரக்குகளின் போக்கு வரத்து ஆயினும் சரி, இதன் விளைவு இடப் பெயர்ச்சியே ஆகும். எடுத்துக்காட்டாக, நூல் அது உற்பத்தி செய்யப்பட்ட இடமான

---

[9] ஏ. சுப்ரோவ், இருப்புப் பாதை நிர்மாணம், மாஸ்கோ, 1875, பக்கம் 69,70.


இங்கிலாந்திலிருந்து இப்போது இந்தியாவுக்கு இடம் பெயர்ந் திருக்கலாம்.

எப்படியும், போக்குவரத்துத் தொழில் விற்பது இடப் பெயர்ச் சியையே. இதனால் விளையும் பயன் போக்குவரத்து நிகழ்முறை யோடு, அதாவது போக்குவரத்துத் தொழிலின் உற்பத்தி நிகழ்முறை யோடு பிரிக்க முடியாத படி பிணைந்தது. ஆட்கள், பண்டங்களின் பிரயாணம் போக்குவரத்துச் சாதனங்களின் பிரயாணத்தோடு சேர்ந்து ஒருங்கே நிகழ்கிறது. இந்தப் பிரயாணம், இந்த இடப் பெயர்ச்சி இச்சாதனங்களால் செய்து முடிக்கப்படும் உற்பத்தி நிகழ் முறையாகிறது. இந்த உற்பத்தி நிகழ்முறையின் போதுதான் அதன் விளைபயனை நுகர முடியும். இந்த விளைவு உற்பத்தி நிகழ்முறையி லிருந்து வேறான பயன்பாட்டுப் பொருளாக நிலவுவதில்லை; உற்பத்தி முடிவுற்ற பிறகு வாணிபப் பண்டமாகி சுற்றோட்டத்தில் செல்லும் சரக்காக நிலவுவதில்லை. ஆனால் வேறு எந்தச் சரக்கின் பரிவர்த்தனை-மதிப்பையும் போலவே, இந்த விளைபயனின் பரி வர்த்தனை-மதிப்பும் அதனால் நுகரப்படும் உற்பத்தி-அடிக்கூறு களின் (உழைப்புச் சக்தி, உற்பத்திச் சாதனங்கள் ஆகியவற்றின்) மதிப்பு, போக்குவரத்துத் துறையில் வேலை செய்யும் தொழிலாளர் களின் உபரி-உழைப்பினால் படைக்கப்படும் உபரி-மதிப்பு ஆகிய வற்றின் கூட்டுத் தொகையால்தான் நிர்ணயிக்கப்படுகிறது. நுகர் வைப் பொறுத்த வரை, ஏனைய சரக்குகளும் இந்த விளைபயனும் ஒன்றுதான். தனிப்பட்டவரது சொந்த நுகர்வு [individual consumption] என்றால், நுகரப்படும் போதே அதன் மதிப்பு மறைந்து விடுகிறது; இடம் பெயரும் சரக்குகளின் உற்பத்தியில் ஒரு கட்டமாக அமையக் கூடிய விதத்தில் திறனுடை நுகர்வாய் [productive consumption] இருக்குமானால், அதன் மதிப்பு ஒரு கூடுதல் சரக்கு-மதிப்பாகப் பெயர்த்தளிக்கப்படுகிறது. ஆக, போக்குவரத்துத் தொழிலுக்கான சூத்திரம் $M—C<^{L}_{mp} \ldots P—M'$ என்பதாகும். ஏனென்றால் விலை தரப்பெறுவதும் நுகரப்படுவதும் உற்பத்தி நிகழ்முறை தானே தவிர, அந்நிகழ்முறையிலிருந்து வேறான உற் பத்திப் பண்டம் அல்ல. எனவே, இந்தச் சூத்திரத்தின் வடிவமும் உயர்நிலை உலோகங்களின் [precious metals] உற்பத்திச் சூத்திரத் தின் வடிவமும் அநேகமாய் ஒன்றே; ஒரே ஒரு வேறுபாடு என்ன வென்றால், இச்சூத்திரத்தில் வரும் M' உற்பத்தி நிகழ்முறையின் போது படைக்கப் பட்ட விளைபயனின் உருமாறிய வடிவத்தைக் குறிப்பதே தவிர, இந்நிகழ்முறையின் போது உற்பத்தி செய்யப்பட்டு அதிலிருந்து வெளிவரும் தங்கம் அல்லது வெள்ளியின் தசை யுருவைக் குறிப்பதல்ல.

உபரி-மதிப்பு அல்லது உபரி-உற்பத்தியின் தனதாக்கம் [appropriation] மட்டுமல்லாமல், அதன் படைப்பும் மூலதனத்தின் பணி யாக இருக்கும் ஒரேயொரு மூலதன நிலவல் வடிவம் தொழில்

துறை மூலதனம்தான். ஆகவே, உற்பத்தியானது முதலாளித்துவத் தன்மையுடையதாய் இருப்பது அதற்கு அவசியத் தேவையாகும். தொழில் துறை மூலதனம் என்ற ஒன்று இருப்பதே முதலாளிகளுக்கும் கூலித் தொழிலாளர்களுக்குமிடையே வர்க்கப் பகைமையைக் குறிக்கிறது. அது சமுதாயப் பொருளுற்பத்தியில் எந்த அளவுக்கு ஆதிக்கம் பெறுகிறதோ, அந்த அளவுக்கு உழைப்பு நிகழ்முறையின் தொழில் நுட்பமும் சமூக ஒழுங்கமைப்பும் புரட்சிகரமாக மாற்றியமைக்கப்படுகின்றன: அதோடு கூட, பொருளாதார-வரலாற்று வழியில் உருவான சமூக அமைப்பு வகையும் புரட்சிகரமாக மாற்றியமைக்கப்படுகிறது. தொழில் துறை மூலதனம் தோன்றுவதற்கு முன்னர் கடந்த காலத்துள் மறைந்து விட்ட அல்லது இப்போது மறைந்து கொண்டிருக்கிற சமுதாயப் பொருளுற்பத்தி நிலைமைகளிடையே எழுந்த ஏனைய மூலதன வகைகள் தொழில் துறை மூலதனத்துக்குக் கீழ்ப்படுத்தப்பட்டு, அவற்றின் பணிவழிப்பட்ட செயல்முறை அதற்கொப்ப மாற்றப்படுவதோடு கூட, முற்றிலும் தொழில் துறை மூலதனத்தை அடித்தளமாகக் கொண்டுதான் அவை இயங்குகின்றன. எனவே அவற்றின் வாழ்வும் சாவும், உயர்வும் தாழ்வும் இந்த அடித்தளத்தோடு இணைந்தே நிகழ்கின்றன. தொழில் துறை மூலதனத்தோடு பண-மூலதனமும் சரக்கு-மூலதனமும் குறிப்பிட்ட தொழிற் கிளைகளது சாதனங்களாகப் பணி புரியும் வரை, அவை சுற்றோட்டத் துறையில் தொழில் துறை மூலதனம் ஏற்கும் வெவ்வேறு நிலவல் வடிவங்களே அன்றி வேறல்ல. சுற்றோட்டத் துறையில் தொழில் துறை மூலதனம் தனக்குரிய வெவ்வேறு பணிகளைப் புரிந்திடுவதற்காக ஒரு நேரம் ஏற்றும் பிறிதொரு நேரம் களைந்தும் விடுகிறவையே இந்த நிலவல் வடிவங்கள்— சமுதாய உழைப்புப் பிரிவினை [social division of labour] காரணமாய் இவ்வடிவங்கள் சுயேச்சையாய் நிலவும் தன்மையுடையனவாகி ஒருதலைச்சார்பான வளர்ச்சி பெற்றிருக்கக் காண்கிறோம்.

M ... M′ என்னும் சுற்று ஒரு புறம் பொதுவான சரக்குச் சுற்றோட்டத்துடன் பின்னிப் பிணைந்ததாய் இருக்கிறது, அதிலிருந்து புறப்பட்டு அதற்கே திரும்பி வந்து சேர்கிறது, அதன் பகுதியாக இருக்கிறது. மறு புறம் அது தனிப்பட்ட முதலாளியினது மூலதன-மதிப்பின் சுயேச்சையான இயக்கமாகி, ஒரு பகுதி பொதுவான சரக்குச் சுற்றோட்டத்தினுள்ளும், மற்றொரு பகுதி அதற்கு வெளியிலுமாய் நடைபெறுகிறது. ஆயினும் அப்போதும் அது தனது சுயேச்சைத் தன்மையைப் பாதுகாத்துக் கொள்கிறது. எப்படியெனில், முதலாவதாக, சுற்றோட்டத் துறையில் நடைபெறும் M — C, C′ — M′ ஆகிய அதன் இரு கட்டங்களும் மூலதன இயக்கத்தின் கட்டங்களாகும் என்பதால் பணிவழியில் குறிப்பிட்ட தன்மைகள் வாய்ந்தவையாய் இருக்கின்றன. M — C என்பதில் C ஆனது பண்ட வகையில் உழைப்புச் சக்தியாகவும் உற்பத்திச்



பிரெடெரிக் எங்கெல்ஸ் பதிப்பித்துப் பிரதியெடுத்த
மூலதனம் இரண்டாம் பாகம் கையெழுத்துப் பிரதியில்
ஒரு பக்கத்தின் நிழற்பட நகல்
(சிறிதாக்கியது)

சாதனங்களாகவும் நிர்ணயமாகி விடுகிறது. C′ — M′ என்பதில் மூலதன-மதிப்பும் உபரி-மதிப்பும் ஈடேற்றம் பெறுகின்றன. இரண்டாவதாக, P ஆகிய உற்பத்தி நிகழ்முறையானது திறனுடை நுகர்வும் உள்ளடங்கியதாகும். மூன்றாவதாக, பணமானது அது புறப்பட்ட இடத்துக்கே திரும்பி வருவதால் M ... M′ என்னும் இயக்கம் முழுமையான சுற்று ஆகிறது.

ஆகவே தனிப்பட்ட ஒவ்வொரு மூலதனமும், ஒரு புறத்தில், அதன் சுற்றோட்டத்திலான இரு பாதிகளாகிய M — C, C′ — M′ என்பவற்றில் பொதுவான சரக்குச் சுற்றோட்டத்தின் இயக்கியாகி, அந்தச் சுற்றோட்டத்தில் பணமாகவோ சரக்காகவோ செயல்படுகிறது. அல்லது இணைக்கும் கண்ணிகளாகிறது. இவ்விதம் அது சரக்குலகில் நடைபெறும் உருமாற்றங்களான பொதுவான சங்கிலியில் ஒரு கரணையாகிறது. மறு புறத்தில், இந்தப் பொதுச் சுற்றோட்டத்திலேயே அது தனது சுயேச்சையான சுற்றையும் நிகழ்த்துகிறது. இந்தச் சுற்றில் உற்பத்தித் துறையானது ஒன்று மற்றொன்றாக மாறுவதற்குரிய கட்டமாகிறது. இதே சுற்றில் இந்த மூலதனம் தொடக்க நிலையில் பூண்டிருந்த அதே வடிவத்துக்குத் திரும்புகிறது. அதே போது அது தனது சுற்றினுள் — உற்பத்தி நிகழ்முறையின் போது அது அடைகிற மெய்யான உருமாற்றமும் இச்சுற்றினுள் அடங்கியதுதான் — தனது மதிப்பின் பருமனையும் மாற்றிக் கொண்டு விடுகிறது. பண மதிப்பாக அது திரும்பி வருவதோடு, பெருகிய, அதிகரித்த பண மதிப்பாகத் திரும்பி வருகிறது.

முடிவில் M — C ... P ... C′ — M′ என்பதை மூலதனச் சுற்றின் தனி வகையாய்க் கொண்டு, பின்னர் நாம் பகுத்தாயப் போகிற ஏனைய வகைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். பின்வரும் இயல்புகள் இதனை ஏனையவற்றிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன:

1. இது **பண-மூலதனத்தின்** சுற்றாக விளங்குகிறது. எப்படியெனில், தொழில் துறை மூலதனத்தின் பண வடிவம்தான், அதாவது பண-மூலதனம்தான் இந்த முழு நிகழ்முறையின் தொடக்க நிலையாகவும் மீள்வு நிலையாகவும் இருக்கிறது. பணம் இங்கே முன்னீடு செய்யப்படுகிறதே தவிர, பணமாகச் செலவிடப்படவில்லை என்பதை, ஆகவே அது பண வடிவிலான மூலதனமாகவே — பண-மூலதனமாகவே — இருக்கிறது என்பதை இந்தச் சுற்றின் சூத்திரமே தெரிவிக்கிறது. அது மட்டுமல்ல, இந்தச் சுழல் இயக்கத்தின் அறுதிக் குறிக்கோள் பரிவர்த்தனை-மதிப்பே தவிர பயன்-மதிப்பல்ல என்பதையும் அது தெரிவிக்கிறது. பண வடிவம்தான் மதிப்பு ஏற்கும் சுயேச்சையான, திட்பமான வடிவம். இந்தப் பணத்தையே தனது தொடக்க நிலையாகவும் இறுதி நிலையாகவும் கொண்டிருக்கும் M — M′ என்ற சுற்றோட்டம், பணம் பண்ணுவது ஒன்றே முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் குறி என்பதைப் பட்டவர்த்தனமாக்குகிறது. உற்பத்தி நிகழ்முறையானது இங்கே

பணம் பண்ணும் பொருட்டு கடந்தாக வேண்டிய தவிர்க்க முடியாத ஓர் இடைக் கட்டமாக, அனுபவித்துத் தீர வேண்டிய ஓர் அவசியத் துன்பமாகத் தோற்றமளிக்கிறது. ஆதலால்தான், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையைக் கொண்ட எல்லா நாடுகளுமே, உற்பத்தி நிகழ்முறையின் குறுக்கீடு இல்லாமலே பணம் பண்ண வேண்டும் என்று அவ்வப்போது வெறித்தனமான முயற்சியில் இறங்குவதைக் காண்கிறோம்.

2. Pஇன் செயலாகிய உற்பத்தி நடைபெறுகிற கட்டம் இந்தச் சுற்றில் ஏற்படும் இடைநிறுத்தமாகிறது. சுற்றோட்டத்தின் இரு கூறுகளான M – Cக்கும் C' – M'க்கும் இடையே இது நிகழ்கிறது. இந்த இரு கூறுகளும் M – C – M' என்னும் சாமானியச் சுற்றோட்டத்தை நிகழச் செய்யும் இடைக் கண்ணிகளே ஆகும். உற்பத்தி நிகழ்முறையானது சுற்றி வருகிற நிகழ்முறையின் வடிவுடையதாகி, முன்னீடு செய்யப்பட்ட மதிப்பை வளர்ந்து பெருகச் செய்வதற்கான உபாயமாய், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் உண்மையில் அது இருந்து வருகிற அதே உபாயமாய் அமைந்து, செல்வம் சேர்ப்பதே பொருளுற்பத்தியின் நோக்கம் என்று சூத்திரத்தின் வாயிலாகவும் வெளிப்படையாகவும் அறிவிக்கிறது.

3. கட்டங்களின் வரிசைத் தொடர் M – C என்பதிலிருந்து ஆரம்பமாவதால், சுற்றோட்டத்தின் இரண்டாவது கண்ணி C' – M' ஆகிறது. வேறுவிதமாய்ச் சொல்வதானால், தற்பெருக்கம் அடைய வேண்டிய பண-மூலதனமான Mதான் தொடக்க நிலை, தற்பெருக்கம் அடைந்த பண-மூலதனமான M'தான் இறுதி நிலை. M'=M+m. M'என்பது ஈட்டேற்றம் பெறும் மூலதனமான M உடன் அதன் குட்டியான m சேருவதைக் குறிக்கும் M+m என்பதற்குச் சமம். இது Mஇன் சுற்றை ஏனைய இரு சுற்றுகளான Pஇலிருந்தும் C'இலிருந்தும் இரு வழிகளில் வேறுபடுத்திக் காட்டுகிறது. முதலாவதாக, இரு முனைகளும் பண வடிவம் பெற்றுள்ளன; பணம்தான் மதிப்பின் சுயேச்சையான, கண்கூடான நிலவல் வடிவம்; உற்பத்திப் பொருளினது சுயேச்சையான மதிப்பு வடிவம்; சரக்குகளினது பயன்-மதிப்பு அறவே அகற்றப்பட்ட மதிப்பு வடிவம். இரண்டாவதாக P ... P என்னும் சுற்று P ... P'(P+p) என்பதாக மாற வேண்டிய கட்டாயமில்லை; C' ... C' என்னும் சுற்றில் இரு முனைகளுக்கு மிடையே மதிப்பில் எவ்வித வேறுபாடும் இல்லை. ஆகவே M ... M' சூத்திரத்தின் சிறப்பியல்பு யாதெனில்: முதலாவதாக, மூலதன-மதிப்பு அதன் தொடக்க நிலையாகவும் பெருக்கமடைந்த மூலதன-மதிப்பு அதன் இறுதி நிலையாகவும் அமைந்து, மூலதன-மதிப்பை முன்னீடு செய்தலே வழியென்றும் பெருக்கமடைந்த மூலதன-மதிப்பைப் பெறுதலே குறியென்றும் கொள்ளும் செயற்பாடாகி விடுகிறது. இரண்டாவதாக இந்த உறவு சுயேச்சையான மதிப்பு வடிவமாகிய பண வடிவில் தெரிவிக்கப் பெறுகிறது. இவ்விதம் பண-

மூலதனம் பணத்தைப் பெற்றெடுக்கும் பணமாகத் திகழ்கிறது. மதிப்பை உபரி-மதிப்பு உண்டாக்கச் செய்வதே இந்த நிகழ்முறையின் ஆதியும் அந்தமும் ஆகும் என்பது வெளிப்படுகிறது, அதுவும் கண்ணைப் பறிக்கும் பணத்தின் வடிவில் பட்டவர்த்தனமாக வெளிப்படுகிறது.

4. M—Cஐப் பூர்த்தி செய்து முடித்து வைக்கும் கட்டமாகிய C'—M' என்பதன் பயனாய் ஈடேற்றம் பெற்ற பண-மூலதனமாகிய M' ஆனது முதல் சுற்றைத் தொடக்கிய போது பெற்றிருந்த அதே வடிவத்தை இப்போதும் பெற்றிருக்கிறது; ஆகவே, முதல் சுற்றிலிருந்து வெளிப்பட்ட உடனேயே அது கூடுதலான (திரட்டலால் பெருகிய) பண-மூலதனமாக, அதாவது M'=M+m என்னும் பண-மூலதனமாகத் திரும்பவும் அதே சுற்றினைத் தொடக்க முடியும். எப்படியும் சுற்று திரும்ப நிகழும் போது mஇன் சுற்றோட்டம் Mஇன் சுற்றோட்டத்திலிருந்து பிரிவதாக M ... M' என்னும் வடிவம் தெரிவிக்கவில்லை. ஆகவே ஒரு தரம் சுற்றி வரும் வடிவில் நோக்குவோமானால் பண-மூலதனச் சுற்றானது தற்பெருக்கமும் திரட்டலுமான நிகழ்முறையின் தெரிவிப்பாகவே இருக்கிறது. நுகர்வு இங்கே திறனுடை நுகர்வாகவே, $M - C <^{L}_{mp}$ என்பதாகவே தெரிவிக்கப் பெறுகிறது. இந்த நுகர்வு மட்டுமே தனிப்பட்ட மூலதனத்தின் சுற்றாகிய இதில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. M—L ஆனது தொழிலாளியின் தரப்பிலிருந்து நோக்குகையில் L—M அல்லது C—M ஆகிறது. ஆகவே சுற்றோட்டத்தின் முதல் கட்டம்தான் தொழிலாளியின் சொந்த நுகர்வுக்கு வகை செய்கிறது. இது நடைபெறும் விதம் வருமாறு: L—M—C (வாழ்வுச் சாதனங்கள்). இதில் இரண்டாவது கட்டமான M—C இனி தனிப்பட்ட மூலதனத்தின் சுற்றில் சேருவதில்லை என்றாலும், இச்சுற்றுதான் அதற்கான தொடக்கமும் முதனிலையும் ஆகிறது. ஏனெனில், முதலாளியின் சுரண்டலுக்குரிய இலக்காக தொழிலாளி எப்போதும் சந்தையில் இருக்க வேண்டுமானால், முதற்கண் அவர் உயிர்வாழ்ந்தாக வேண்டும்; இதன் பொருட்டு சொந்த நுகர்வின் மூலம் தம்மைப் பராமரித்துக் கொண்டாக வேண்டும். இந்த நுகர்வும் கூட, மூலதனமானது உற்பத்தித் திறனுள்ள முறையில் உழைப்புச் சக்தியை நுகர்வதற்கு அவசிய நிபந்தனை ஆகும் என்பதால்தான், தொழிலாளி தமது சொந்த நுகர்வினைக் கொண்டு உழைப்புச் சக்தியாகத் தம்மைப் பராமரித்துக் கொண்டும் மறுவுற்பத்தி செய்து கொண்டும் வருகிற அளவுக்கு மட்டும்தான் இங்கே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. முறையான சரக்குகளாய் மூலதனச் சுற்றினுள் நுழையும் mp என்பவை திறனுடை நுகர்வுக்கென்றே அமைந்த ஊட்டச் சத்துகளாகும். L—M என்னும் செயல் தொழிலாளியின் சொந்த நுகர்வை வளம் பெறச் செய்கிறது, வாழ்வுச் சாதனங்களை அவரது ஊனும் இரத்தமுமாய் மாற்றுகிறது. மெய்தான், முதலாளியும் இருக்க

வேண்டியவர்தான். முதலாளிக்குரிய வேலைகளைச் செய்யும் பொருட்டு அவரும் உயிர்வாழ்ந்தாக வேண்டும், இதற்காக நுகர்ந் தாக வேண்டும். தொழிலாளி நுகர்கிற அளவுக்கு நுகர்ந்தாலே போதும், அவர் இக்காரியங்களை எல்லாம் செய்து விடலாம். சுற்றோட்ட நிகழ்முறையின் இந்த வடிவம் அவசியத் தேவைகளாகக் கருதுகிறவை இவ்வளவுதான். இதையுங்கூட அது சூத்திர வடிவில் தெரிவிக்கவில்லை. ஏனெனில் M′ என்பதோடு, அதாவது இப் போது முன்னிலும் கூடுதலாகி விட்ட பண-மூலதனமாக உடனே திரும்பவும் பணி தொடக்கக் கூடியதாகிய M′ என்பதோடு சூத் திரம் முடிவுற்று விடுகிறது.

C′—M′ என்பது C′ விற்கப்படுதலை நேரடியாகக் குறிக்கிறது. ஆனால் ஒரு தரப்பிலிருந்து பார்க்கையில் விற்றலாகிய C′—M′ ஆக இருப்பது, மறு தரப்பிலிருந்து பார்க்கையில் வாங்கலாகிய M—C ஆகி விடுகிறது. முடிவாகப் பார்க்குமிடத்து, சரக்குகளை அவற்றின் பயன்-மதிப்புக்காகவே வாங்குகிறோம்; அதாவது (இடைப்பட்ட விற்றல்களை ஒதுக்கி விட்டுப் பார்த்தால்) நுகரும் பொருட்டே வாங்குகிறோம். இந்நுகர்வு, வாங்கப்படும் பண்டத்தின் இயல்பைப் பொறுத்து, சொந்த நுகர்வாகவும் இருக்கலாம், திற னுடை நுகர்வாகவும் இருக்கலாம். ஆனால் இந்த நுகர்வு, நுகரப் படும் பண்டமாகிய C′ஐ உற்பத்தி செய்யும் தனிப்பட்ட மூல தனத்தின் சுற்றில் சேருவதில்லை. விற்பதற்கென்றே உற்பத்தி செய்யப்படுவதால்தான் C′ இந்தச் சுற்றிலிருந்து அகற்றப்படுகிறது. இந்த C′ அதன் உற்பத்தியாளர் அல்லாத ஏனையோரால் நுகரப் படுவதற்கென்று திட்டமிட்டு உற்பத்தி செய்யப்படும் சரக்காகும். ஆதலால்தான் வாணிப ஊக்கக் கொள்கையினர் சிலர் (இந்தக் கொள்கைக்கு அடிப்படையாக இருப்பது M—C ... P ... C′—M′ என் னும் சூத்திரம்தான்), தொழிலாளி நுகர்கிற அளவுக்கே அந்தந்த முதலாளியும் நுகர்தல் வேண்டுமென்று ஓயாமல் உபதேசிக்கிறார் கள். முதலாளிகளது தேசமானது தான் உற்பத்தி செய்யும் சரக்கு களை நுகரும் வேலையையும் பொதுவாக நுகர்வு நிகழ்முறையையும் கூட அறிவு வளர்ச்சியில் தன்னிலும் கீழ்நிலையில் இருக்கும் தேசத் தாருக்கு உரியதாய் விட்டு விட்டு, திறனுடை நுகர்வினைத் தனது வாழ்வின் தலையாய பணியாகக் கொள்ள வேண்டும் என்று இவர்கள் நீட்டி முழக்குகிறார்கள். வடிவிலும் உள்ளடக்கத்திலும் இந்த உபதேசங்கள் பெரும்பாலும் இவற்றுக்கு ஒப்பான முறையில் துறவு மனப்பான்மையை மெச்சி, சமயத் திருச்சபைத் தந்தைமார்கள் நிகழ்த்துகிற உபன்னியாசங்களைத்தான் நினைவூட்டுகின்றன.

---

சுற்றுகளாய் நிகழும் மூலதன இயக்கமானது இவ்வாறு சுற் றோட்டம், உற்பத்தி ஆகிய இரண்டின் ஒருங்கிணைவு ஆகிறது;

இரண்டும் சேர்ந்ததாகிறது. M—C, C′—M′ என்னும் இரு கட்டங்களும் சுற்றோட்டச் செயல்களாவதால், மூலதனச் சுற்றோட்டம் பொதுவான சரக்குச் சுற்றோட்டத்தின் ஒரு பகுதியாகிறது. ஆனால் சுற்றோட்டத் துறைக்கு மட்டுமல்லாமல் உற்பத்தித் துறைக்கும் உரித்தான சுற்றாகிய மூலதனத்தின் சுற்றில் இத்துறைகள் குறிப்பிட்ட பணி புரியும் பிரிவுகள் அல்லது கட்டங்களாக இருப்பதால், மூலதனத்தின் சுற்று பொதுவான சரக்குச் சுற்றோட்டத்திற்குள் நடைபெறுகிறது. இந்தப் பொதுவான சரக்குச் சுற்றோட்டத்தின் பயனாய், முதல் கட்டத்தில் மூலதனமானது திறனுடை-மூலதனமாகச் செயல்படுவதற்குப் பொருத்தமான வடிவம் பெற முடிகிறது; இரண்டாவது கட்டத்தில் மூலதனம் அதன் சரக்கு வடிவத்தை— இவ்வடிவம் மூலதனம் அதன் சுற்றினை மீண்டும் தொடக்குவதற்கு ஏற்ற வடிவமல்ல— களைந்தெறிய முடிகிறது. அதோடு, மூலதனம் அதற்கு வந்து சேருகிற உபரி-மதிப்பின் சுற்றோட்டத்திலிருந்து தனது சுற்றினைத் தனியே பிரிப்பதற்கான சாத்தியப்பாடும் இந்த இரண்டாவது கட்டத்தின் போது எழுகிறது.

இவ்விதம் பண-மூலதனச் சுற்றுதான் தொழில் துறை மூலதனச் சுற்றுக்கான வடிவங்களில் பெரிதும் ஒருதலைச்சார்பானது, ஆகவே மிகவும் எடுப்பாகத் தெரிவது, இனமாதிரியாகத் திகழ்வது. தொழில் துறை மூலதனத்தை உந்தித் தள்ளும் ஒரே குறியினை— அதாவது மதிப்பின் தற்பெருக்கத்தை, பணம் பண்ணுதலை, திரட்டலை— பண-மூலதனச் சுற்று கண்கூடாக்கி விடுகிறது (பணம் கொடுத்து வாங்குவது எல்லாம் அதிகப் பணத்துக்கு விற்பதற்கே என்பதை அப்பட்டமாய்த் தெரிவிக்கிறது). அதோடு, திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறுகள் யாவும் சரக்குச் சந்தையிலிருந்து வருகிறவை என்பதும், பொதுவாக முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையானது சுற்றோட்டத்தை, வாணிபத்தைச் சார்ந்தது என்பதும், பண-மூலதனச் சுற்றின் முதல் கட்டம் M—C ஆக இருப்பதிலிருந்தே தெளிவாகி விடுகிறது. பண-மூலதனச் சுற்று என்பது வெறும் சரக்கு உற்பத்தியல்ல; சுற்றோட்டத்தின் வாயிலாகத்தான் இச்சுற்றே சாத்தியமாகிறது; இச்சுற்றுக்கு அவசியமான முன்தேவையாக இருப்பதும் அதுவேதான். இதைத் தெளிவுபடுத்த, வேறு எதுவும் வேண்டாம்— சுற்றோட்டத் துறைக்கு உரியதாகிய M வடிவம் இங்கு முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பின் முதல் வடிவமாகவும் தூய வடிவமாகவும் அமைகிறது (ஏனைய இரு வகைச் சுற்றுகளிலும் இப்படி அமைவதில்லை) என்ற ஒரு உண்மையே போதும்.

பண-மூலதனச் சுற்றுதான் எப்போதுமே தொழில் துறை மூலதனத்தின் பொதுவான தெரிவிப்பாக இருந்து வருகிறது; ஏனென்றால் எப்போதுமே அது முன்னீடு செய்யப்படும் மதிப்பின் தற்பெருக்கத்தைத் தன்னுள் கொண்டது. P ... P என்பதில், மூலதனத்தின் பணத் தெரிவிப்பானது உற்பத்தி-அடிக்கூறுகளுக்கான

விலையாகவே, ஆதலால் கணக்குப் பணத்தில் [money of account] தெரிவிக்கப்பெறும் மதிப்பாகவே விளங்குகிறது; கணக்குப் பதிவில் [book-keeping] அது இவ்வாறு விளங்கக் காணலாம்.

புதிதாகச் செயல்பட முற்படும் மூலதனம் முதலில் பண வடிவில் முன்னீடு செய்யப்பட்டு, பிறகு (ஒரு தொழிற் கிளையிலிருந்து இன்னொரு தொழிற் கிளைக்குத் தாவுவதாலோ, தொழிலிலிருந்து ஓய்வு பெற்று விலகுவதாலோ) அதே வடிவில் திரும்பப் பெறப் படும் போது, M ... M′ தொழில் துறை மூலதனத்தின் தனி வகைச் சுற்றாகிறது. முதன்முதலாய்ப் பண வடிவில் முன்னீடு செய்யப் படும் உபரி-மதிப்பின் மூலதனப் பணிக்கும் இது பொருந்தும்; உபரி-மதிப்பானது அது பிறந்த தொழிலை விட்டு, வேறொரு தொழிலில் பணி புரியும் போது இது தெள்ளத் தெளிவாகிறது. M ... M′ என்பது குறிப்பிட்ட ஒரு மூலதனத்தின் முதல் சுற்றாகவும் இருக்கலாம்; கடைசிச் சுற்றாகவும் இருக்கலாம்; சமுதாயத்தினது மொத்த மூலதனத்தின் சுற்றாகவும் கூட கருதப்படலாம்; இச்சுற்று புதிதாக முதலீடாகிற மூலதனத்தின் சுற்றாகும்—இப்படிப் புதிதாக முதலீடாவது அண்மையில் பண வடிவில் திரட்டப்பட்ட மூல தனமாகவும் இருக்கலாம், தொழில் துறையின் ஒரு கிளையிலிருந்து வேறொன்றுக்கு மாற்றப்படுவதற்காக முற்றிலும் பணமாக உரு மாற்றப்பட்ட பழைய மூலதனமாகவும் இருக்கலாம்.

எப்போதும் எல்லாச் சுற்றுகளிலும் இடம்பெறும் மூலதன வடிவமாகிய பண-மூலதனம் உபரி-மதிப்பைப் படைக்கும் மூல தனப் பகுதிக்காகவே, அதாவது மாறும்-மூலதனத்துக்காகவே இப்படிச் சுற்று நிகழ்த்துகிறது. பணமாகக் கொடுப்பதுதான் கூலியை முன்னீடு செய்வதற்கு முறையான வழி. பணமாகக் கொடுக்கும் இந்த நிகழ்முறை ஒப்பளவில் குறுங்கால இடைவெளி களில் திரும்பத் திரும்ப நடந்தாக வேண்டும்; ஏனெனில் தொழி லாளி அன்றாடங்காய்ச்சியாக வாழ்கிறவர். எனவே எப்போதும் முதலாளி பண-முதலாளியாகவும் அவரது மூலதனம் பண-மூலதன மாகவும் தொழிலாளியை எதிர்நோக்கியாக வேண்டும். உற்பத்திச் சாதனங்களை வாங்குவதற்கும், உற்பத்திப் பண்டங்களை விற் பதற்கும் கையாளும் வழிமுறைகள் இங்கே பயன்படா. அங்கே நேரடியாகவோ சுற்றடியாகவோ கணக்குகளை நேர்செய்து சரிக் கட்டி விடலாம் (இதனால் பண-மூலதனத்தின் பெரும் பகுதி அங்கே உள்ளபடியே சரக்கு வடிவிலேயே இருப்பதையும், பணம் கணக்குப் பதிவிலான பணமாகவே இருப்பதையும், முடிவில் கணக்குகளை நேர் செய்வதற்கு வேண்டியது மட்டும் ரொக்கமாய் இருப்பதையும் காண்கிறோம்). மறு புறம், மாறும்-மூலதனத்தி லிருந்து பிறக்கும் உபரி-மதிப்பில் ஒரு பகுதியை முதலாளி சொந்த நுகர்வுக்காகச் செலவிடுகிறார். இது சில்லறை வர்த்தகத்துக்குப் போய்ச் சேரும் பகுதி; எவ்வளவுதான் சுற்றி வளைத்துப் போனாலும்

இந்தப் பகுதி எப்போதுமே ரொக்கமாக—அதாவது உபரி-மதிப்பின் பண வடிவில்—செலவிடப்படுகிறது. உபரி-மதிப்பின் இந்தப் பகுதி பெரியதா சிறியதா என்பது முக்கியமல்ல. மாறும்-மூலதனம் எப்போதுமே கூலிக்காக M—L முதலீடு செய்யப்படும் பண-மூலதனமாகவும், m என்பது முதலாளியின் சொந்த நுகர்வுக்காகச் செலவிடப்படும் உபரி-மதிப்பாகவும் திரும்பத் திரும்ப வருகின்றன. ஆகவே, முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதன மதிப்பாகிய M, அதன் பெருக்கமாகிய l ஆகியவற்றைப் பண வடிவில் வைத்திருப்பது அவசியம்; அப்போதுதான் பண வடிவில் செலவிட முடியும்.

M′=M+m என்பதை விளைவாகக் கொண்ட M—C ... P ... C′—M′ என்னும் சூத்திரம் வடிவத்தில் ஏமாற்றாகவும் தன்மையில் மாயையாகவும் இருக்கிறது. முன்னீடு செய்யப்பட்டு தற்பெருக்கமடைந்த மதிப்பு அதன் சமதை வடிவமாகிய பணமாக இருப்பதுதான் இதற்குக் காரணம். மதிப்பு தற்பெருக்கமடைவதை வலியுறுத்துவதற்கு பதில், இது இந்நிகழ்முறையின் **பண வடிவத்தைத்தான்**, ஆரம்பத்தில் சுற்றோட்டத்தினுள் செலுத்தியதைக் காட்டிலும் அதிகமான மதிப்பு முடிவில் பண வடிவில் அதிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுவதைத்தான், முதலாளி வசமுள்ள தங்கமும் வெள்ளியும் இவ்விதம் பெருக்கமடைவதைத்தான் வலியுறுத்துகிறது; பணப் பொருளாதாரம் [monetary system] எனப்படுவது அறிவுக்கு ஒவ்வாத வடிவமாகிய இந்த M—C—M′ என்பதன் வெளிப்பாடே அன்றி வேறல்ல. M—C—M′ என்ற இயக்கம் முற்றிலும் சுற்றோட்டத்துள் நிகழ்வதாகும். ஆதலால் M—C, C—M′ என்னும் இரு செயல்களுக்கும் அது அளிக்கக் கூடிய விளக்கம், இரண்டாவது செயலின் போது C அதன் மதிப்புக்கும் அதிகமான விலைக்கு விற்கப்பட்டு, முன்பு அது வாங்கப்பட்ட போது சுற்றோட்டத்துள் செலுத்தப்பட்டதைக் காட்டிலும் அதிகப் பணம் இப்போது வெளியே எடுக்கப்படுகிறது என்றுதான் இருக்க முடியும். மறு புறம், M—C ... P ... C′—M′ என்பது பிரத்தியேக வடிவமாய்க் கொள்ளப்படுகையில், அது உயர் வளர்ச்சி பெற்ற வாணிப ஊக்கப் பொருளாதாரத்துக்கு [mercantile system] அடிப்படையாகிறது. இதில் சரக்குச் சுற்றோட்டம் மட்டுமல்லாமல் சரக்கு உற்பத்தியும் கூட அவசியக் கூறாகிறது.

M—C ... P ... C′—M′ என்னும் வடிவமானது தொடர்ந்து இயங்குவதாகவும் திரும்பத் திரும்ப நிகழ்வதாகவும் கொள்ளப்படாமல் ஒரு முறை மட்டும் நிகழ்வதாகக் கொள்ளப்படுகையில், அதாவது இந்த வடிவம் இச்சுற்றின் வடிவங்களில் ஒன்றாகக் கருதப்படாமல் அதன் பிரத்தியேக வடிவமாகக் கருதப்படுகையில், அதன் மாயையான தன்மையும், அதற்கொப்ப மாயையான விளக்கமும் முன்னுக்கு வருகின்றன. ஆனால் இதுவே ஏனைய வடிவங்களைக் கவனத்துக்குக் கொண்டுவருகிறது.

முதலாவதாக, இந்தச் சுற்று முழுவதுமே உற்பத்தி நிகழ்முறை முதலாளித்துவத் தன்மையதாய் இருப்பதாகக் கொள்கிறது; இவ் விதம் இந்த உற்பத்தி நிகழ்முறையையும் அதனால் தோற்றுவிக்கப் படும் பிரத்தியேகச் சமூக நிலைமைகளையும் தனது அடிப்படையாகக் கருதுகிறது. $M-C=M-C<^{L}_{mp}$ ஆனால் M—L நடைபெற கூலித் தொழிலாளி இருந்தாக வேண்டும். ஆகவே உற்பத்திச் சாதனங்கள் திறனுடை-மூலதனத்தின் பகுதியாதல் வேண்டும். இவ்வாறு அது, உழைப்பு நிகழ்முறையும் தற்பெருக்க நிகழ்முறையுமான உற்பத்தி நிகழ்முறை மூலதனம் ஆற்றுகிற பணியாய் இருப்பதாகக் கொள் கிறது.

இரண்டாவதாக, M ... M' என்பது திரும்பத் திரும்ப நிகழு மாயின், பண வடிவத்துக்கே திரும்பி வருவதானது முதல் கட்டத் தின் பண வடிவத்தைப் போலவே நிலையாது உடனுக்குடன் மறைந்து போகும் நிகழ்வாய் விளங்குகிறது. M—C மறைகிறது, P வருகிறது. ஓயாமல் திரும்பத் திரும்ப பண வடிவில் முன்னீடு செய்யப்படுதலும் ஓயாமல் அது திரும்பி வருதலும் ஓடி மறையும் கண நேர நிகழ்ச்சிகளாகத் தெரிகின்றன.

மூன்றாவதாக,

M—C ... P ... C'—M'. M—C ... P ... C'—M'. M—C ... P ... (இவ்வாறு மேலும்)

சுற்று இரண்டாவது முறை நிகழும் போது P ... C'—M'. M—C ... P என்னும் சுற்று Mஇன் இரண்டாவது சுற்று பூர்த்தியாகும் முன்பே நடந்தேறுகிறது; இவ்வாறு அடுத்து வரும் எல்லாச் சுற்று களையும் P ... C'—M—C ... P என்ற வடிவில் பரிசீலிக்கலாம். முதல் சுற்றின் முதல் கட்டமாகிய M—C என்பது, ஓயாமல் திரும்பத் திரும்ப நிகழும் திறனுடை-மூலதனத்தின் சுற்றுக்கான தயாரிப்பே அன்றி வேறல்ல என்றாகிறது. தொழில் துறை மூலதனம் முதன் முதலாய்ப் பண-மூலதன வடிவில் முதலீடு செய்யப்படும் போது உள்ளபடியே இப்படித்தான் நடக்கிறது.

மேலும், Pஇன் இரண்டாவது சுற்று பூர்த்தியாகும் முன்பே, சரக்கு-மூலதனத்தின் [commodity-capital] முதல் சுற்றாகிய C'—M'. M—C ... P ... C' (சுருக்கமாய் C' ... C'' என்பது பூர்த்தியாகி விடு கிறது. இவ்வாறு முதல் வகைச் சுற்று ஏனைய இரு வகைச் சுற்று களையும் தன்னகத்தே கொண்டதுதான். மூலதன-மதிப்பின் பண வடிவம் மதிப்புத் தெரிவிப்பாக மட்டுமன்றி, சமதை வடிவிலான— அதாவது பணத்திலான—மதிப்புத் தெரிவிப்பாகவும் இருக்கிற நிலை இவ்விதம் மறைந்து போகிறது.

முடிவில் புதிதாக முதலீடு செய்யப்படும் தனிப்பட்ட மூலதனம் முதன்முதலாய் M—C ... P ... C'—M' என்னும் சுற்றை நிகழ்த்துவ தாகக் கொள்வோமானால், M—C என்பது இந்தத் தனிப்பட்ட

மூலதனம் நிகழ்த்துகிற முதலாவது உற்பத்தி நிகழ்முறையின் தயாரிப்புக் கட்டமாகும், பீடிகையாகும். ஆதலால் M—C என்னும் இந்தக் கட்டம் உற்பத்தி நிகழ்முறைக்கு முன்னால் நிகழ வேண்டியது என்பதைக் காட்டிலும், இந்நிகழ்முறைக்குத் தேவைப்படுவது, அவசியமானது என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், இந்தத் தனிப்பட்ட மூலதனத்துக்கு மட்டுமே இது பொருந்தும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை நிலவும் போது, ஆகவே முதலாளித்துவப் பொருளுற்பத்தியால் நிர்ணயிக்கப்படும் சமூக நிலைமைகள் நிலவும் போது, பண-மூலதனத்தின் சுற்றுதான் தொழில்துறை மூலதனத்தின் பொதுவான சுற்றாகும். இவ்வாறு, முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறைதான் அடிப்படையான முன்னிபந்தனை; புதிதாக முதலீடு செய்யப்படும் தொழில் துறை மூலதனத்தின், அதாவது பண-மூலதனத்தின் முதலாவது சுற்றில் அல்லவென்றாலும், எப்படியும் அதற்குப் பிறகு முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறைதான் அடிப்படையான முன்னிபந்தனை. இந்த நிகழ்முறை தொடர்ந்து நடப்பதற்கு, P ... P என்னும் சுற்று ஓயாமல் திரும்பத் திரும்ப நிகழ்வது அவசியம். முதல் கட்டமான $M-C<^{L}_{mp}$ என்பதிலும் கூட, இந்த முன்னிபந்தனைக்கு ஒரு பங்கு உண்டு; ஏனெனில் இந்தக் கட்டம் நடந்தேறுவதற்கு, ஒரு புறம் கூலித் தொழிலாளர் வர்க்கம் இருந்தாக வேண்டும்; மறு புறம் உற்பத்திச் சாதனங்களை வாங்குவோருக்கு முதல் கட்டமான M—C ஆகவும், அவற்றை விற்போருக்கு C′—M′ ஆகவும் இருப்பது நிறைவுற வேண்டும். ஆகவே, C′ என்பதற்கு சரக்கு-மூலதனமும், இவ்வாறு முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் விளைவான சரக்குகளும், எனவே திறனுடை-மூலதனத்தின் பணியும் அவசியமாகின்றன.

## அத்தியாயம் II

# திறனுடை-மூலதனத்தின் சுற்று

திறனுடை-மூலதனத்தின் சுற்றுக்கான பொதுச் சூத்திரம் வருமாறு:

P ... C' — M' — C ... P.

இச்சூத்திரம் திறனுடை-மூலதனத்தின் பணி காலவட்ட முறையில் திரும்பத் திரும்ப நிகழ்வதைக் குறிக்கிறது; இவ்விதம் அம்மூலதனத்தின் மறுவுற்பத்தியை, அதாவது அதன் உற்பத்தி நிகழ்முறை மதிப்பின் தற்பெருக்கத்தை நோக்கமாகக் கொண்ட மறுவுற்பத்தி நிகழ்முறையாவதைக் குறிக்கிறது; உபரி-மதிப்பு உற்பத்தி செய்யப்படுவதோடு காலவட்ட முறையில் மறுவுற்பத்தி செய்யப்படுவதையும் குறிக்கிறது. தொழில் துறை மூலதனமானது உற்பத்தித் திறனுள்ள வடிவம் பூண்டு பணி புரிவதையும் இந்தப் பணி ஒரு தரம் புரியப்படுவதோடு நின்று விடாமல் காலவட்ட முறையில் திரும்பத் திரும்ப புரியப்பட்டு, ஒவ்வொரு தொடக்கமும் இவ்விதம் அதன் அடுத்த தொடக்கத்துக்கு வித்திட்டுச் செல்வதையும் இந்தச் சூத்திரம் குறிக்கிறது. C'இல் ஒரு பகுதி (சில நேரம் தொழில் துறை மூலதனத்தின் பல்வேறு முதலீட்டுக் கிளைகளில்) அதனை சரக்காக உருவாக்கிய அதே உழைப்பு நிகழ்முறையினுள் நேரடியாக உற்பத்திச் சாதனங்களாய் நுழையக் கூடும். இந்தப் பகுதியின் மதிப்பு உண்மைப் பணமாகவோ அடையாளப் பணமாகவோ மாற்றப்படுவது அவசியமற்றதாகி, வெறும் கணக்குப் பணமாகத் தனியே தெரிவிக்கப்படுகிறதே தவிர இதனால் வேறு எவ்விளைவும் ஏற்படுவதில்லை. மதிப்பின் இப்பகுதி சுற்றோட்டத்துள் நுழைவதில்லை. இவ்விதம் மதிப்புகள் சுற்றோட்ட நிகழ்முறையில் நுழையாமலே உற்பத்தி நிகழ்முறையில் நுழைவது உண்டு. C'இல் ஒரு பகுதி, முதலாளியால் உபரி-உற்பத்திப் பொருளில் ஒரு பகுதியாக சரக்கு வடிவில் நுகரப்படுகையில், அப்பகுதியின் நிலைமையும் இதுவேதான். ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் மிகச் சொற்பமே என்பதால் இதைக் கருதாமலே ஒதுக்கி விடலாம். வேளாண்மைத் துறையில் மட்டும் வேண்டுமானால் இது

ஒதுக்கப்பட முடியாத அளவுடையதாய் இருப்பதாகச் சொல்லலாம்.

இவ்வகை மூலதனச் சுற்றில் இரு விவரங்கள் பளிச்சென்று கண்ணில் படுகின்றன.

முதலாவதாக, M ... M′ என்னும் முதல் வகைச் சுற்றில் Pஇன் பணியாகிய உற்பத்தி நிகழ்முறை பண-மூலதனத்தின் சுற்றோட்டத்தை இடைமறித்து, M—C, C′—M′ என்னும் அதன் இரு கட்டங்களையும் இணைக்கும் இடைக் கண்ணியாகச் செயல்படுகிறது; ஆனால் இங்கே, தொழில் துறை மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறை முழுவதும்—சுற்றோட்டக் கட்டத்துக்குட்பட்ட அதன் இயக்கம் முழுவதும்—முதல் முனை என்ற முறையில் சுற்றினைத் தொடக்கி வைக்கும் திறனுடை-மூலதனத்துக்கும், மறு முனை என்ற முறையில் அதே வடிவத்தில், அதாவது மறுதொடக்கத்துக்கேற்ற வடிவத்தில் சுற்றினை முடித்து வைக்கும் திறனுடை-மூலதனத்துக்கும் இடையிலான குறுக்கீடாக, ஆதலால் இடைக் கண்ணியாகச் செயல்படுகிறது. முறையான சுற்றோட்டம் என்பது காலவட்ட முறையில் திரும்பத் திரும்ப நடைபெறுவதும், இப்படி நடைபெறுவதால் தொடர் நிகழ்வாவதும் ஆகிய மறுவுற்பத்தியை ஊக்கும் கருவியாக விளங்குகிறது.

இரண்டாவதாக, சுற்றோட்டம் முழுவதுமே பண-மூலதனச் சுற்றில் அதற்கிருக்கும் வடிவத்துக்கு நேர்மாறான வடிவமுடையதாகிறது. அங்கே சுற்றோட்டத்தின் வடிவம் (மதிப்பு நிர்ணயிப்பைக் கருதாமல்): M—C—M (M—C. C—M) என்பதாகும்; இங்கே அதன் வடிவம் (மதிப்பு நிர்ணயிப்பைக் கருதாமல்): C—M—C (C—M. M—C) என்பதாகும், அதாவது சாதாரண சரக்குச் சுற்றோட்டத்தின் வடிவமாகும்.

## I. சாமானிய மறுவுற்பத்தி

சுற்றோட்டத் துறையில், P ... P என்னும் இரு முனைகளுக்குமிடையே நடைபெறும் C′—M′—C என்னும் நிகழ்முறையை முதலில் பரிசீலிக்கலாம்.

இச்சுற்றோட்டத்தின் தொடக்கம் சரக்கு-மூலதனம் ஆகும்; C′=C+c=P+c; சரக்கு-மூலதனத்தின் பணியாகிய C′—M′ (சரக்கு-மூலதனத்தில் அடங்கியதும், இப்போது சரக்கின் அடக்கக் கூறான Cஆக நிலவுவதுமான P என்னும் மூலதன-மதிப்பு, சரக்கு-மூலதனத்தில் அடங்கியதும், c என்ற மதிப்போடு அதே அளவு சரக்கின் அடக்கக் கூறாக நிலவுவதுமான உபரி-மதிப்பு ஆகியவற்றின் ஈடேற்றம்) முதல் வகைச் சுற்றில் ஆராயப்பட்டது. ஆனால், அங்கே இந்தப் பணியானது இடைமறிக்கப்பட்ட சுற்றோட்டத்தின் இரண்டாவது கட்டமாகவும், சுற்று முழுவதன் முடிவுக் கட்டமாகவும் அமைந்தது. இங்கே அது சுற்றின் இரண்டாவது

கட்டமாகும், ஆனால் சுற்றோட்டத்தின் முதல் கட்டமாகும். முதல் வகைச் சுற்று M' என்பதுடன் முடிகிறது. ஆரம்ப நிலையாகிய M என்பதும் M' என்பதைப் போலவே பண-மூலதனமென்ற முறையில் இரண்டாவது சுற்றைத் தொடக்க முடியும் என்பதால், M'இல் அடங்கிய M, m (உபரி-மதிப்பு) ஆகிய இரண்டும் சேர்ந்தே அவற்றின் பாதையில் செல்கின்றனவா அல்லது ஒவ்வொன்றும் பிரிந்து அதனதன் பாதையில் செல்கின்றனவா என்று அறிவது முதலில் அவசியமாய் இருக்கவில்லை. முதல் சுற்று திரும்ப நிகழும் போது அதனைத் தொடர்ந்து சென்று பார்த்திருந்தால்தான் இது அவசியமாய் இருந்திருக்கும். ஆனால் திறனுடை-மூலதனத்தின் சுற்றில் இந்தப் பிரச்சினை குறித்து முடிவு கண்டாக வேண்டும். ஏனென்றால், திறனுடை-மூலதனத்தினது முதல் சுற்றின் நிர்ணயிப்பே இந்த முடிவைச் சார்ந்துள்ளது. மேலும் இதில் C'–M' என்பது சுற்றோட்டத்தின் முதல் கட்டமாய் இருக்கிறது. இதனை M–C என்பதால் நிறைவு செய்தாக வேண்டும். சூத்திரம் சாமானிய மறுவுற்பத்தியை [simple reproduction] குறிக்கிறதா, விரிதிற மறுவுற்பத்தியை [reproduction on an extended scale] குறிக்கிறதா என்பது இந்த முடிவையே சார்ந்துள்ளது. சுற்றின் தன்மை இந்த முடிவுக்கேற்ப மாறுகிறது.

ஆகவே, திறனுடை-மூலதனத்தின் சாமானிய மறுவுற்பத்தியை முதலில் பரிசீலிப்போம். முதல் அத்தியாயத்தில் கொண்டது போலவே இங்கும் ஏனைய நிலைமைகள் மாறாதிருப்பதாகவும், சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே வாங்கவும், விற்கவும் படுவதாகவும் கொள்வோம். இந்த அனுமானத்தின் படி, உபரி-மதிப்பு முழுவதுமே முதலாளியின் சொந்த நுகர்வுக்குப் போய் விடுகிறது. சரக்கு-மூலதனமான C' பணமாக உருமாறியவுடனே, அந்தப் பணத்தில் மூலதன-மதிப்பைக் குறிக்கும் பகுதி தொழில் துறை மூலதனத்தின் சுற்றில் தொடர்ந்து ஓடுகிறது. பணமாக உருமாறிய உபரி-மதிப்பான மறு பகுதி பொதுவான சரக்குச் சுற்றோட்டத்தில் நுழைகிறது. இந்தப் பணச் சுற்றோட்டம் முதலாளியிடமிருந்து ஆரம்பமாகிறது, ஆனால் அவரது தனிப்பட்ட மூலதனத்தின் சுற்றோட்டத்துக்கு வெளியே நடைபெறுகிறது.

நமது எடுத்துக்காட்டில், சரக்கு-மூலதனமாகிய C' என்பது £500 மதிப்புள்ள 10,000 இராத்தல் நூல் ஆகும். இதில் £422 திறனுடை-மூலதனத்தின் மதிப்பைக் குறிக்கிறது; 8,440 இராத்தல் நூலின் பண வடிவமென்ற முறையில் இத்தொகையானது C' தொடக்கிய மூலதனச் சுற்றோட்டத்தில் தொடர்ந்து செல்கிறது. அதே நேரத்தில், சரக்கு-உற்பத்தியின் [commodity-product] மிகுதியளவான 1,560 இராத்தல் நூலின் பண வடிவமாகிய £78 உபரி-மதிப்பு இந்தச் சுற்றோட்டத்தை விட்டு வெளியேறி, பொதுவான சரக்குச் சுற்றோட்டத்துக்குள் தனியொரு பாதையில்

செல்கிறது.

$$C' \begin{pmatrix} C \\ + \\ c \end{pmatrix} \begin{matrix} - \\ - \\ - \end{matrix} M' \begin{pmatrix} M \\ + \\ m \end{pmatrix} \begin{matrix} - C < ^{L}_{mp} \\ \\ - c \end{matrix}$$

m—c என்பது பணத்தைக் கொண்டு பலவும் வாங்கப்படுவதைக் குறிக்கிறது. முதலாளி உயர்சிறப்புக்குரிய தமக்காகவும் தம் குடும்பத்தாருக்காகவும் இவற்றை வாங்குகிறார். இவை சரக்குகளாகவும் இருக்கலாம், சேவைகளாகவும் இருக்கலாம். வெவ்வேறு நேரங்களில் அவ்வப்போது வேண்டிய வெவ்வேறு அளவுகளில் இவை வாங்கப்படுகின்றன. ஆகவே, பணமானது நடப்பு நுகர்வுக்குரிய வழங்கல் அல்லது சேர்ப்பின் [hoard] வடிவில் தற்காலிகமாய் நிலவுகிறது; ஏனெனில் பணத்தின் சுற்றோட்டத்தில் குறுக்கீடு நேரும் போது, அது சேர்ப்பின் வடிவம் பெறுகிறது. பணம் புரியும் பணி— சுற்றோட்ட ஊடகம் [medium of circulation] ஏற்கும் தற்காலிக வடிவமான சேர்ப்பும் இதில் அடங்கும்—பண வடிவ மூலதனமாகிய Mஇன் சுற்றோட்டத்தில் நுழைவதில்லை. இந்தப் பணம் செலவிடப்படுகிறதே தவிர முன்னீடு செய்யப்படுவதில்லை.

முன்னீடு செய்யப்படும் மூலதனம் அதன் ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்குச் செல்லும் போதெல்லாம் முழு மொத்தமாகச் செல்கிறது எனக் கொள்கிறோம். ஆதலால், இங்கே Pஇனால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகள் திறனுடை-மூலதனமான Pஇன் மொத்த மதிப்பாகிய £422, உற்பத்தி நிகழ்முறையில் படைக்கப்படும் உபரி-மதிப்பாகிய £78 ஆகியவற்றின் கூட்டுத் தொகைஸ்யக் குறிப்பதாகக் கொள்கிறோம். நாம் எடுத்துக்காட்டாகக் கொண்டிருப்பது கூறுகளாகப் பகுக்கக் கூடிய சரக்காகும். இதில் உபரி-மதிப்பு 1,560 இராத்தல் நூலின் வடிவில் நிலவுகிறது; ஒரு இராத்தல் நூலை எடுத்துக் கொண்டால் உபரி-மதிப்பு 2,496 அவுன்ஸ் நூலின் வடிவில் நிலவுகிறது. ஆனால், (உதாரணமாக) உற்பத்திப் பண்டமாகிய சரக்கு £500 மதிப்புடையதும் மேற்கூறிய அதே மதிப்பு-இயைபு [value-composition] கொண்டதுமான இயந்திரமாக இருக்குமேயானால், இந்த இயந்திரத்தின் மதிப்பில் ஒரு பகுதியான £78 உபரி-மதிப்பாகும்; ஆனால் இந்த £78 முழுமையாக உள்ள இயந்திரத்தினால்தான் இருந்து வரும். இந்த இயந்திரத்தைத் துண்டு துண்டாக உடைக்காமல்— இவ்விதம் அதன் பயன்-மதிப்போடு கூடவே மதிப்பையும் அழித்திடாமல்— அதனை மூலதன-மதிப்பாகவும் உபரி-மதிப்பாகவும் பிரிக்க முடியாது. ஆகவே, இரு மதிப்புக் கூறுகளையும் சரக்கின் கூறுகளாகக் கருத்தளவில் மட்டுமே காட்ட முடியும்; ஒவ்வொரு இராத்தல் நூலையும் 10,000 இராத்தல் நூலின் சுயேச்சையான தனித்தனிக் கூறாகக் காட்டுவது போல் C' என்னும் சரக்கின் சுயேச்சையான கூறுகளாகக் காட்ட முடியாது. இயந்திரத்தைப் பொறுத்த வரை,

மொத்தச் சரக்கு அல்லது சரக்கு-மூலதனமாகிய இயந்திரம் முழுதாக விற்கப்பட்டால்தான், m அதன் பிரத்தியேகச் சுற்றோட்டத்தில் நுழைய முடியும். ஆனால், நூலைப் பொறுத்த வரை, முதலாளி 8,440 இராத்தல் நூலை விற்ற பிறகு எஞ்சுகிற நூலாகிய 1,560 இராத்தல் நூலின் விற்றலானது உபரி-மதிப்பின் முற்றிலும் தனியான வேறொரு சுற்றோட்டத்தைக் குறிப்பதாகிறது. இதன் வடிவம் வருமாறு: c (1,500 இராத்தல் நூல்)—m (£78)—c (நுகர்வுப் பண்டங்கள்). மேலும், மொத்த உற்பத்திப் பண்டமாகிய 10,000 இராத்தல் நூலைப் போலவே, அதன் ஒவ்வொரு தனித்தனிப் பாகத்தின் மதிப்புக் கூறுகளையும் உற்பத்திப் பண்டத்தின் பகுதிகளாகக் காட்ட முடியும். மொத்த உற்பத்திப் பண்டமான 10,000 இராத்தல் நூலினை £372 பெறுமானமுள்ள 7,440 இராத்தல் நூலாகிய மாறா-மூலதன மதிப்பாகவும் (c), £50 பெறுமானமுள்ள 1,000 இராத்தல் நூலாகிய மாறும்-மூலதன மதிப்பாகவும் (v), £78 பெறுமானமுள்ள 1,560 இராத்தல் நூலாகிய உபரி-மதிப்பாகவும் (s) பிரிக்க முடிவது போலவே, ஒவ்வொரு இராத்தல் நூலையும் 8.928 பென்னி பெறுமானமுள்ள 11.904 அவுன்ஸ் நூலுக்குச் சமமான c ஆகவும், 1.200 பென்னி பெறுமானமுள்ள 1.600 அவுன்ஸ் நூலுக்குச் சமமான vஆகவும், 1.872 பென்னி பெறுமானமுள்ள 2.496 அவுன்ஸ் நூலுக்குச் சமமான s ஆகவும் பிரிக்க முடியும். மேலும், முதலாளியானவர் 10,000 இராத்தல் நூலையும் பகுதி பகுதியாக விற்று, அதிலடங்கிய உபரி-மதிப்புக் கூறுகளைப் பகுதி பகுதியாக நுகர முடியும். இவ்விதம் c+v என்ற தொகையையும் இதே போல் பகுதி பகுதியாக ஈடேற்றம் செய்து கொள்ள முடியும். ஆனால், இறுதியாகப் பார்க்குமிடத்து, முன் போலவே இந்த நடவடிக்கைக்கும், 10,000 இராத்தல் நூல் முழுவதும் விற்றுப் போவதும், ஆகவே 8,440 இராத்தல் நூலை விற்று c, v ஆகியவற்றின் மதிப்பை மாற்றீடு செய்வதும் அவசியம். (முதல் பாகம், அத்தியாயம் IX., பிரிவு 2.)

இது ஒரு புறமிருக்க, C'இல் அடங்கிய மூலதன-மதிப்பும் உபரி-மதிப்பும் C'—M' என்பதன் வாயிலாகத் தனித்தனியே பிரிக்கக் கூடியவை ஆகின்றன, வெவ்வேறு பணத் தொகைகள் ஆகின்றன. M, m ஆகிய இரண்டும் உண்மையில், முன்பு C'இல் சரக்கின் விலையாகக் கருத்தளவிலான, தனிவிதமான தெரிவிப்பாக மட்டுமே இருந்த மதிப்பின் மாறிய வடிவமாய் இருப்பவையே.

c—m—c என்பது சாமானிய சரக்குச் சுற்றோட்டத்தைக் குறிப்பதாகும். இதன் முதல் கட்டமான c—m சரக்கு-மூலதனத்தின் சுற்றோட்டமாகிய C'—M'இல் அடங்கியதாகும், அதாவது மூலதனத்தின் சுற்றில் அடங்கியதாகும், இதன் நிரப்புக் கூறாகிய m—c என்னும் கட்டம், இதற்கு மாறாக, பொதுவான சரக்குச் சுற்றோட்டத்தில்

நிகழும் தனியொரு செயல் என்பதால், மூலதனச் சுற்றுக்கு வெளியே நடைபெறுவதாகும். C′ ஆனது M′ உருமாற்றம் அடைந்த பிறகு, மூலதன-மதிப்பும் உபரி-மதிப்புமான C, c ஆகியவற்றின் சுற்றோட்டம் பிளவுண்டு விடுகிறது. ஆக இதிலிருந்து பெறப்படுவது என்ன வென்றால்:

முதலாவதாக, C′—M′=C′ — (M+m′) என்பதன் மூலம் சரக்கு-மூலதனம் ஈடேற்றம் பெறுகிறது. மூலதன-மதிப்பு, உபரி-மதிப்பு ஆகியவற்றின் அசைவியக்கம், இதுகாறும் ஒன்றிணைந்து C′ — M′ என்பதில் ஒரே அளவிலான சரக்குத் தொகுதியால் நடைபெற்று வந்த இவ்வியக்கம், இப்போது தனித்தனிப் பணத் தொகைகளாய் சுயேச்சையான வடிவங்கள் பெற்று தனித் தனியே பிரியக் கூடியதாகிறது.

இரண்டாவதாக, இந்தப் பிரிவினை நடைபெறுமாயின், m என்பது முதலாளியின் வருவாயாகி அவரால் செலவிடப்படுகிறது; அதே போது M ஆனது மூலதன-மதிப்பின் பணிவழிப்பட்ட வடிவம் என்ற முறையில் மூலதனச் சுற்றால் நிர்ணயிக்கப்படும் அதன் பாதையில் தொடர்ந்து செல்கிறது. C′—M′ என்னும் முதற் செயலை அடுத்து வரும் செயல்களாகிய M—Cஉடனும் m—c உடனும் இணைத்து, C—M—C, c—m—c என்னும் இருவேறு சுற்றோட்டங்களாகக் காட்டலாம். இந்த இரு தொடர்களும் அவற்றின் பொது வடிவத்தைப் பொறுத்த வரை வழக்கமான சரக்குச் சுற்றோட்டத்தைச் சேர்ந்தவையே.

தொடர்ந்து அமைந்த, பிரிக்க முடியாத சரக்குகளைப் பொறுத்த வரை, மதிப்புக் கூறுகளைக் கருத்தியலாகப் பிரித்துத் தனித்தனி ஆக்குவதே நடைமுறை வழக்கம். லண்டன் கட்டடத் தொழிலை உதாரணமாகக் குறிப்பிடலாம். பிரதானமாக இத்தொழில் கடன்-செலாவணியைக் [credit] கொண்டு நடைபெறுகிறது. கட்டடம் வந்தடைந்துள்ள கட்டத்துக்கு ஏற்ப கட்டுமான ஒப்பந்தக்காரருக்கு அவ்வப்போது பணம் முன்னீடு செய்யப்படுகிறது. எந்தவொரு கட்டமும் வருங்காலத்தில் பூர்த்தியாகப் போகும் வீட்டின் மெய்யாகவே நில்வுகிற ஒரு பகுதியாகுமே தவிர முழு வீடாகாது. மெய்யானதே என்றாலும் அது முழு வீட்டின் கருத்தளவிலான பின்னமே ஆகும். ஆயினும் அது அடுத்த கடன் தவணைக்குப் பிணையமாவதற்குப் போதுமானதாய் இருக்கும் படி மெய்யானது. (இது குறித்துப் பார்க்கவும்: இந்நூலின் அத்தியாயம் XII*)

மூன்றாவதாக, மூலதன-மதிப்பும் உபரி-மதிப்புமாகிய இரண்டின் அசைவியக்கமும்—இரண்டும் இன்னமும் ஒன்றுசேர்ந்தே Cஇலும் Mஇலும் செயல்படுகின்றன—பகுதியளவுக்கு மட்டுமே பிளவுபட்டுப் பிரிகிறதென்றால் (உபரி-மதிப்பில் ஒரு பகுதி

* பார்க்கவும்: இப்புத்தகத்தில் பக்கம் 309-311.—பதிப்பாசிரியர்.

முதலாளியின் வருவாயாகச் செலவிடப்படாத நிலையில்), அல்லது பிரியாமலே நடைபெறுகிறதென்றால், மூலதன-மதிப்பின் சுற்றினுள்ளேயே, அச்சுற்று பூர்த்தியாகும் முன்பே, மூலதன-மதிப்பில் மாற்றம் ஏற்படுகிறது. நமது எடுத்துக்காட்டில் திறனுடை-மூலதனத்தின் மதிப்பு £422க்குச் சமம். இந்த மூலதனம் £480 அல்லது £500ஆக M—Cஐத் தொடர்வதாகக் கொண்டால், சுற்றின் பிந்திய கட்டங்களில் ஆரம்ப மதிப்பை விட அது £58 அல்லது £78 கூடுதலான மதிப்பாகி விடுகிறது. இந்தப் பெருக்கத்தோடு கூடவே இம்மதிப்பின் இயைபிலும் மாற்றம் ஏற்படலாம்.

சுற்றோட்டத்தின் இரண்டாவது கட்டமும், (M ... M′ என்னும்) முதல் வகைச் சுற்றின் இறுதிக் கட்டமுமான C′—M′ ஆனது, திறனுடை-மூலதனத்தின் சுற்றில் இரண்டாவது கட்டமும், சரக்குச் சுற்றோட்டத்தில் முதல் கட்டமும் ஆகும். சுற்றோட்டத்தைப் பொறுத்த வரை, M′—C′ என்னும் நிரப்புக் கூறால் அது நிறைவு செய்யப்பட வேண்டும். ஆனால் C′—M′ ஆனது தற்பெருக்க நிகழ்முறையை (இங்கே முதல் கட்டமான Pஇன் பணியை) கடந்து வந்து விட்டதோடு, அந்நிகழ்முறையின் உற்பத்திப் பொருளாகிய C என்ற சரக்கு ஏற்கெனவே ஈடேற்றமும் பெற்று விட்டது. ஆகவே, C′—M′ என்பதில், மூலதனத்தின் தற்பெருக்க நிகழ்முறையும், பெருகிய மூலதன-மதிப்பைக் குறிக்கும் சரக்குகளின் ஈடேற்றமும் பூர்த்தியாகின்றன.

சாமானிய மறுவுற்பத்தி நடைபெறுவதாக, அதாவது M—C என்பதிலிருந்து m — c முற்றாகப் பிரிந்து விடுவதாகக் கொள்கிறோம். c—m—c, C—M—C ஆகிய இரு சுற்றோட்டங்களுமே, அவற்றின் பொது வடிவத்தைப் பொறுத்த வரை சரக்குச் சுற்றோட்டத்தைச் சேர்ந்தவை (ஆகவே அவற்றின் இரு முனைகளுக்குமிடையே மதிப்பில் வேறுபாடு இல்லை) என்பதால், கொச்சைப் பொருளாதாரவியலை [vulgar economy] பின்பற்றி முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையே வெறும் சரக்கு உற்பத்திதான், ஏதேனும் ஒருவகை நுகர்வை நோக்கமாகக் கொண்ட பயன்-மதிப்புகளின் உற்பத்திதான் என்பதாகக் கருதுவது சுலபமே. முதலாளி இவற்றை உற்பத்தி செய்வதன் நோக்கம் எல்லாம் இவற்றுக்கு பதிலாய் பிற பயன்-மதிப்புகளைக் கொண்ட சரக்குகளைப் பெறுவதுதான், அதாவது அவற்றை இவற்றுக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்வதுதான் என்னும் தவறான கருத்தைத்தான் கொச்சைப் பொருளாதாரவியல் கூறி வருகிறது.

C′ என்பது தொடக்கத்திலிருந்தே சரக்கு-மூலதனமாகச் செயல்படுகிறது. இந்நிகழ்முறையின் நோக்கம் எல்லாம் செல்வப் பெருக்கம்தான் (உபரி-மதிப்பின் உற்பத்திதான்). ஆனால் முதலாளியின் உபரி-மதிப்பு (ஆகவே அவரது மூலதனம்) அதிகமாகிச் செல்வதைத் தொடர்ந்து, சொந்த முறையிலான அவரது நுகர்வும் அதிகரித்துச் செல்வதை இந்த நோக்கம் எவ்விதத்திலும் வேண்டாமென விலக்குவ

தில்லை. மாறாக சந்தேகத்துக்கு இடமின்றி அங்கீகரிக்கவே செய்கிறது.

முதலாளியினது வருவாயின் சுற்றோட்டத்தில், உற்பத்திச் சரக்கான c (அதாவது உற்பத்திச் சரக்கான C'இல் கருத்தளவில் இந்த வருவாய்க்கு இணையான பின்னம்) முதலில் இவ்வருவாயைப் பணமாகவும் பிறகு பணத்தை முதலாளியின் சொந்த நுகர்வுக்குப் பயன்படும் ஏனைய பல சரக்குகளாகவும் உருமாறச் செய்வதற்குத் தான் பயன்படுகிறது என்பது உண்மையே. ஆனால், c என்பது எந்தச் செலவுமில்லாமல் முதலாளிக்குக் கிடைத்த சரக்கு-மதிப்பாகும், உபரி-உழைப்பின் தசையுருவாகும், அதனால்தான் அது சரக்கு-மூலதனமான C'இன் ஓர் அடக்கக் கூறாக முதலில் நம் முன்னால் வர முடிந்தது என்ற சிறு உண்மையையும் இங்கே நாம் மறக்கலாகாது. இந்த c, அதன் நிலவலின் இயல்பினாலேயே, நிகழ்முறையின் போது மூலதன-மதிப்பின் சுற்றோடு பிணைக்கப்பட்டுள்ளது. இந்தச் சுற்று தேக்கமுறுமானால், அல்லது வேறு விதமான இடையூறுக்கு ஆளாகுமானால், cஇன் நுகர்வு மட்டுமல்லாமல், cக்குப் பதிலாய் அதன் இடத்துக்கு வரக் கூடிய சரக்குத் தொகுதியின் விற்றலும் தடைபடுகிறது, அல்லது அடியோடு நின்று விடுகிறது. C'—M' என்பது நடந்தேறாமற் போகும் போதும் அல்லது C'இல் ஒரு பகுதியை மட்டுமே விற்க முடிகிற போதும் இதே விளைவுதான் ஏற்படுகிறது.

cஆனது C'இன் மதிப்பில் ஒரு பகுதியாக, அதாவது குறிப்பிட்ட பணி புரிவதற்காக சரக்கு-மூலதன வடிவைப் பெறுகிற மூலதனத்தின் ஒரு பகுதியாக இருந்து வரும் வரையில்தான், முதலாளியினது வருவாயின் சுற்றோட்டமாகிய c—m—c என்பது மூலதனத்தின் சுழல் இயக்கத்துள் நடந்தேறுகிறது என்பதை முன்பே பார்த்தோம். ஆனால் முதலாளியின் வருவாய் m—c என்பதிலும், ஆகவே c—m—c என்பது முழுவதிலுமே தனித்து சுயேச்சையாக இயங்க முற்பட்டவுடன், அந்த வருவாயின் சுற்றோட்டமானது முதலாளி முன்னீடு செய்யும் மூலதனத்தின் சுழல் இயக்கத்துள் சேருவதில்லை; அதிலிருந்தே உதிப்பதாயினும் உதித்த பின் அதில் சேராமல் பிரிந்து சென்று விடுகிறது. இந்தச் சுற்றோட்டம் முன்னீடு செய்யப்பட்ட மூலனத்தின் சுழல் இயக்கத்துடன் எப்படித் தொடர்பு கொண்டிருக்கிறது என்றால்: மூலதனம் இருக்க வேண்டுமானால் முதலாளி இருந்தாக வேண்டும்; முதலாளி இருக்க வேண்டுமானால் அம் முதலாளி உபரி-மதிப்பை நுகர்ந்தாக வேண்டும்.

பொதுவான சரக்குச் சுற்றோட்டத்துள் C' ஆனது—உதாரணமாக நூல்—சரக்காக மட்டுமே செயல்படுகிறது; ஆனால் மூலதனத்தின் சுற்றோட்டத்தில் ஒரு கூறாக இருக்கும் போது அது சரக்கு-மூலதனமாகச் செயல்படுகிறது. மூலதன-மதிப்பு மாறி மாறி ஏற்பதும் களைவதுமான வடிவமே சரக்கு-மூலதனம். வியாபாரியிடம் விற்கப்பட்டதும் இந்நூல் அதனை உற்பத்தி செய்த மூலதனத்தின்

சுழல் இயக்கத்திலிருந்து வெளியேறி விடுகிறது. ஆனால் சரக்கு என்ற முறையில் இப்போதும் அது பொதுச் சுற்றோட்டத் துறையில் தொடர்ந்து இயங்கவே செய்கிறது. நூற்பாளரது மூலதனம் சுயேச்சையாக நிகழ்த்துகிற சுற்றின் கட்டமாக இருக்கும் நிலை இப்போது முடிவுற்று விட்டாலும் கூட நூலாகிய இந்தச் சரக்குத் திரளின் சுற்றோட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. சரக்குச் சுற்றோட்டத்துள் C—M என்பதன் வாயிலாக முதலாளி செலுத்துகிற சரக்குத் திரளானது மெய்யாகவே உறுதியான முறையில் உருமாற்றம் பெறும் நிகழ்வானது, நுகர்வினுள் புகுந்து இறுதியாக அது மறையும் இந்நிகழ்வானது, இந்தச் சரக்குத் திரள் முதலாளியின் சரக்கு-மூலதனமாகச் செயல்படுகையில் பெறுகிற அந்த உருமாற்றத்தின் நிகழ்விலிருந்து இவ்விதம் காலத்தாலும் இடத்தாலும் அறவே பிரிக்கப்பட்டு விடலாம். மூலதனத்தின் சுற்றோட்டத்தில் நடந்து முடிந்து விட்ட உருமாற்றமானது பொதுவான சரக்குச் சுற்றோட்டத்துள் இனிமேல்தான் நடந்தாக வேண்டும்.

நூலானது வேறு ஒரு தொழில் துறை மூலதனத்தின் சுற்றில் நுழைந்தாலும் இதே நிலைமைதான், சிறிதும் மாற்றம் இல்லை. பொதுவான சுற்றோட்டம் என்பது சந்தையினுள் செலுத்தப்படாமல் தனியாட்களின் சொந்த நுகர்வில் சேர்ந்து விடும் மதிப்புகளை மட்டுமல்லாமல், சமுதாய மூலதனத்தின் தனிப்பட்ட வெவ்வேறு பின்னப் பகுதிகளது சுற்றுகளாலான பின்னல்களையும், அதாவது தனிப்பட்ட மூலதனங்களின் ஒட்டுமொத்தத்தையும் தன்னுள் கொண்டதாகும்.

M′=M+m என்பதன் சுற்றோட்டத்தை பிற்பாடு நாம் ஆராயும் போது, பொதுச் சுற்றோட்டத்தின் பகுதியாக அமையும் மூலதனச் சுற்றுக்கும், சுயேச்சையான சுற்றில் கண்ணிகளாக அமையும் மூலதனச் சுற்றுக்கும் இடையிலான உறவு தெளிவுபடுத்தப்படும். M ஆனது பண-மூலதனம் என்ற முறையில் தொடர்ந்து மூலதனச் சுற்றில் செல்கிறது. m ஆனது வருவாயாகச் செலவிடப்படுவதால் (m—c) அது மூலதனச் சுற்றிலிருந்து கத்தரித்துக் கொண்டு பிரிந்து பொதுவான சுற்றோட்டத்துள் நுழைகிறது. கூடுதல் பண-மூலதனமாகச் செயல்படும் பகுதி மட்டுமே மூலதனச் சுற்றினுள் நுழைகிறது. c—m—c என்பதில் பணம் சுற்றோட்டச் சாதனமாக மட்டுமே பயன்படுகிறது; முதலாளியின் தனிப்பட்ட சொந்த நுகர்வே இச்சுற்றோட்டத்தின் நோக்கம், மூலதனச் சுற்றில் சேராத இந்தச் சுற்றோட்டத்தை உற்பத்திப் பொருளின் மதிப்பில் முதலாளியால் தமது வருவாயாக நுகரப்படும் இந்தப் பகுதியின் சுற்றோட்டத்தைப்போய், மூலதனத்தின் சிறப்பியல்பினை வெளிப்படுத்தும் சுற்றாகச் சித்திரிப்பதன் மூலம் கொச்சைப் பொருளாதார இயல் தனது மடமையைத்தான் வெளிப்படுத்திக் கொள்கிறது.

இரண்டாவது கட்டமான M—C என்பதில் மூலதன-மதிப்பாகிய M (இது இங்கே தொழில் துறை மூலதனத்தின் சுற்றினைத்

தொடக்கி வைக்கும் திறனுடை-மூலதனத்தின் பதிப்பாகிய Pக்குச் சமம்) திரும்பவும் வருகிறது. இப்போது உபரி-மதிப்பு தனியே விலகி விட்டதால், M ஆனது பண-மூலதனச் சுற்றின் முதல் கட்டமான M—C என்பதில் பெற்றிருந்த அதே மதிப்புப் பருமனையே பெற்றிருக்கிறது. சரக்கு-மூலதனம் இப்போது பண-மூலதனமாக உருமாறி விட்டது. இடம் மாறியிருக்கிறதே தவிர, இந்தப் பண-மூலதனத்தின் பணி மாறி விடவில்லை. முன்பு போல் இப்போதும் mp ஆகவும் L ஆகவும்தான், அதாவது உற்பத்திச் சாதனங்களாகவும் உழைப்புச் சக்தியாகவும்தான் அது உருமாறுகிறது.

சரக்கு-மூலதனத்தின் பணி நடந்தேறுகிறது: C′—M′; கூடவே c—m என்பதும் நடந்தேறுகிறது. எனவே மூலதன-மதிப்பு C—M என்னும் கட்டத்தைக் கடந்து, இப்போது நிரப்புக் கட்டமாக $M—C<^{L}_{mp}$ என்பதுள் நுழைகிறது. ஆகவே முழுமையான சுற்றோட்டம் வருமாறு: $C\text{-}M\text{-}C<^{L}_{mp}$.

முதலாவதாக: முதல் வகைச் சுற்றில் (M ... M′ சுற்றில்) பண-மூலதனமாகிய M ஆனது, மூலதன-மதிப்பு முன்னீடு செய்யப்பட்ட அந்த ஆரம்ப வடிவில்தான் தொடக்கத்திலிருந்தே தோற்றமளித்தது. ஆனால், இங்கே அது, சுற்றோட்டத்தின் முதல் கட்டமான C′—M′ என்பதில் சரக்கு-மூலதனத்தால் வரப்பெறும் பணத் தொகையின் ஒரு பகுதியாகத் தொடக்கத்திலிருந்தே தோற்றமளிக்கிறது. ஆகவே தொடக்கத்திலிருந்தே இங்கு அது, திறனுடை-மூலதனமான P ஆனது சரக்கு விற்பனையின் வாயிலாகப் பணமாய் மாறுகிற உருமாற்றமாகத் தோற்றமளிக்கிறது. தொடக்கத்திலிருந்தே இங்கே பண-மூலதனமானது மூலதன-மதிப்பின் ஆரம்ப வடிவமோ இறுதி வடிவமோ அல்லாத ஒரு வடிவில் இருக்கிறது, ஏனெனில் C—M கட்டத்தை நிறைவுறச் செய்யும் M—C கட்டமானது நடந்தேற வேண்டுமானால் திரும்பவும் பண-வடிவம் களைந்தெறியப்பட்டாக வேண்டும். எனவே M—C என்பதில் அதே போது M—L ஆகவும் இருக்கிற பகுதியானது, உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குவதன் மூலம் பணம் முன்னீடு செய்யப்படுவதைக் குறிப்பதோடு அல்லாமல், உழைப்புச் சக்தியால் படைக்கப்படும் சரக்கு-மதிப்பின் பகுதியாகிய £50 பெறுமானமுள்ள அந்த 1,000 இராத்தல் நூலானது பண வடிவில் உழைப்புச் சக்தி முன்னீடு செய்யப்படுவதையும் குறிப்பதாகிறது. இங்கே தொழிலாளிக்கு முன்னீடு செய்யப்படும் பணம் அவரால் உற்பத்தி செய்யப்பட்ட சரக்கு-மதிப்பில் ஒரு பகுதியின் உருமாறிய சமதை வடிவமே ஆகும். இந்த ஒரு காரணத்தாலேயே M—C என்னும் செயல் M—L ஆகவும் இருக்கும் வரை, பண வடிவிலான சரக்கைத் தந்து அதற்குப் பதில் பயன் வடிவிலான சரக்கை பெறுவதைக் குறிப்பதோடல்லாமல், பொதுவான சரக்குச் சுற்றோட்டத்தைச் சாராத வேறு பல கூறுகளையும் அது குறிக்கிறது.

M′ என்பது Cஇன் உருமாறிய வடிவமாக விளங்குகிறது; C′ என்பது P ஏற்கெனவே நடத்தி முடித்துள்ள உற்பத்தி நிகழ்முறையின் விளைவான உற்பத்திப் பொருளாகும். ஆகவே M′ என்னும் பணத் தொகை முழுவதும் கடந்த கால உழைப்பின் பணத் தெரிவிப்பே ஆகும். நமது எடுத்துக்காட்டில், 500 பெறுமானமுள்ள 10,000 இராத்தல் நூலினது நூற்பு நிகழ்முறையால் வரப் பெறும் உற்பத்திப் பொருளாகும். இதில் 7,440 இராத்தல் நூல் முன்னீடு செய்யப்பட்ட மாறா-மூலதனமாகிய £372 பெறுமானமுள்ள cக்குச் சமம்; 1,000 இராத்தல் நூல் முன்னீடு செய்யப்பட்ட மாறும்-மூலதனமாகிய £50 பெறுமானமுள்ள vக்குச் சமம்: 1,560 இராத்தல் நூல் உபரி-மதிப்பாகிய £78 பெறுமானமுள்ள sஐக் குறிக்கிறது. Mஇல் ஆரம்ப மூலதனமான £422 மட்டும் மீண்டும் முன்னீடு செய்யப்பட்டால், ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க குறிப்பிட்ட வாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 10,000 இராத்தல் நூலில் ஒரு பகுதி மட்டுமே (1,000 இராத்தல் நூலின் பண-மதிப்பு மட்டுமே) மறு வாரம் M—L என்பதன் வாயிலாகத் தொழிலாளிக்கு முன்னீடு செய்யப்படுகிறது. C—M என்னும் செயலின் விளைவு என்பதால் பணம் எப்போதுமே கடந்த கால உழைப்பின் தெரிவிப்புதான். நிரப்புக் கூறாகிய M—C என்னும் செயல் சரக்குச் சந்தையில் உடனே நடைபெற்றால், அதாவது M ஆனது சந்தையில் கிடைக்கும் சரக்குகளுக்குப் பிரதியாகத் தரப்பட்டால், இதுவும் கூட கடந்த கால உழைப்பு பண வடிவத்திலிருந்து சரக்கு வடிவத்துக்கு மாறுவது ஆகுமே தவிர வேறல்ல. ஆனால் M—C ஆனது C—Mஇலிருந்து காலத்தால் வேறுபடுகிறது. விதிவிலக்காக இரண்டும் ஒருங்கே நடப்பதும் உண்டு: எடுத்துக்காட்டாக M—C என்னும் செயலை நிறைவேற்றும் முதலாளியும், இதை C—M என்னும் செயலாகக் கொள்கிற வேறொரு முதலாளியும் ஒருங்கே தமது சரக்குகளை ஒருவருக்கொருவர் மாற்றிக் கணக்கை நேர் செய்வதற்காக மட்டும் Mஐப் பயன்படுத்திக் கொள்கையில் இப்படி நடக்கிறது. C—M நிறைவேறுவதற்கும் M—C நிறைவேறுவதற்கும் இடையிலான கால இடைவெளி அதிகமாகவோ குறைவாகவோ இருக்கலாம். M ஆனது C—M என்பதன் விளைவென்ற முறையில் கடந்த கால உழைப்பைக் குறிக்கிறது என்றாலும், M—C என்னும் செயலில், இனிமேல் வருங்காலத்தில்தான் சந்தைக்கு வரவிருக்கும் சரக்குகளின் மாற்று வடிவத்தைக் குறிக்கலாம். ஏனெனில் C புதிதாக உற்பத்தி செய்யப்படும் வரை M—C நடைபெற வேண்டியதில்லை. இதே போல், M ஆனது அதனைப் பணத் தெரிவிப்பாகக் கொண்ட Cஉடன் ஏககாலத்தில் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளைக் குறிப்பதாகலாம். எடுத்துக்காட்டாக, (உற்பத்திச் சாதனங்களை விலைக்கு வாங்குவதாகிய) M—C என்னும் பரிவர்த்தனையில், சுரங்கத்திலிருந்து வெட்டியெடுப்பதற்கு முன்னரே

நிலக்கரியை விலைக்கு வாங்கலாம். m ஆனது வருவாயாகச் செல விடப்படாமல், பணத் திரட்டலாகி விடும் போது அது அடுத்த ஆண்டு உற்பத்தி செய்யவிருக்கும் பருத்தியைக் குறிப்பதாகலாம். முதலாளி தமது வருவாயைச் செலவிடுவதைக் குறிக்கும் m—c என் பதற்கும் இது பொருந்தும். கூலிக்கும் கூட (£50க்குச் சமமான L) இது பொருந்துவதே. இந்தப் பணம் தொழிலாளர்களது கடந்த கால உழைப்பின் பண வடிவமாக இருப்பதோடு கூடவே, இப்போது ஈடேற்றம் பெற்றுக் கொண்டிருக்கிற (அல்லது வருங்காலத்தில் ஈடேற்றம் பெறப் போகிற) நிகழ்கால அல்லது வருங்கால உழைப் பின் மீதான அச்சாரமாக்வும் இருக்கிறது. தொழிலாளி தமது கூலியைக் கொண்டு வாங்குகிற சட்டை அடுத்த வாரம் தைக்கப் போவதாகவும் இருக்கலாம். உற்பத்தியானதும் உடனடியாகவே நுகரப்பட்டாலன்றி கெட்டழிந்து விடும் படியான மிகப் பல அத்தியாவசிய வாழ்வுச் சாதனப் பண்டங்களுக்கு இந்த நிலைமை இன்னுங்கூட அதிகமாகப் பொருந்தும். ஆகவே, தொழிலாளி கூலியாகப் பெறும் பணம் அவரது வருங்கால உழைப்பின், அல்லது பிற தொழிலாளர்களது உழைப்பின் மாற்று வடிவமே ஆகும். தொழிலாளியினது கடந்த கால உழைப்பில் ஒரு பகுதியைக் கொடுத்து அவரது வருங்கால உழைப்பின் மீது அவருக்கு அச்சாரம் அளிக்கிறார் முதலாளி. ஆக தொழிலாளியின் இப்போதைய அல்லது வருங்கால உழைப்பால் இனிமேல் வரப் போகிற (அதாவது இப்போது இல்லாத) பொருட்களிலிருந்துதான் அவரது கடந்த கால உழைப்புக்கு ஊதியம் கிடைக்கும். இந்த நிலையில் அவர் பணத்தைச் சேர்த்து வைக்கும் பேச்சுக்கே இடமில்லாமற் போகிறது.*

இரண்டாவதாக, $C-M-C<^{L}_{mp}$ என்னும் சுற்றோட்டத்தில் ஒரே பணம் இரு முறை கைமாறுகிறது; முதலில் முதலாளி விற்பவராகப் பணத்தைப் பெற்றுக் கொள்கிறார். பிறகு வாங்குபவராக அந்தப் பணத்தைக் கொடுத்து விடுகிறார்; சரக்குகள் பண வடிவத்துக்கு மாறுவது, அவை பண வடிவத்திலிருந்து மீண்டும் சரக்கு வடிவத் துக்கு மாற்றமடையவே பயன்படுகிறது. ஆகவே, மூலதனத்தின் பண வடிவமானது, மூலதனம் பண-மூலதனமாக இருப்பதானது இந்த இயக்கத்தில் தற்காலிகக் கட்டமே ஆகும். அல்லது. இயக்கம் சரளமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வரை, பண-மூலதனம் வாங்கற் சாதனமாகப் பயன்படும் போது சுற்றோட்ட ஊடகமாக மட்டுமே இருக்கிறது; முதலாளிகள் ஒருவரிடமிருந்து ஒருவர் வாங்கும் போது— ஆகவே அவர்கள் கணக்குகளை சரிக்கட்டிக் கொண்டால் போதும் என்ற நிலையில்— அது முறையான கொடுப் புச் சாதனமாகச் செயல்படுகிறது.

* இங்கே கையெழுத்துப் பிரதியில் மார்க்சின் பின்வரும் குறிப்பு காணப்படுகிறது: ''ஆயினும், இதெல்லாம் இரண்டாம் புத்தகத்தின் கடைசிப் பகுதிக்குரியது.'' —ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

மூன்றாவதாக, பண-மூலதனம் வெறும் சுற்றோட்ட ஊடகமாக இருந்தாலும் சரி, கொடுப்புச் சாதனமாக இருந்தாலும் சரி, அது செய்கிற பணி எல்லாம், Cஐ L ஆகவும் mpஆகவும் மாற்றீடு செய்வதுதான்; அதாவது, திறனுடை-மூலதனத்தின் விளைபயனைக் குறிக்கும் சரக்காகிய நூலில் வருவாயாகப் போய் விடும் உபரி-மதிப்பைக் கழித்த பின் எஞ்சுவதை நூலின் உற்பத்தி-அடிக் கூறுகளாக மாற்றீடு செய்வதுதான். வேறு விதமாகச் சொன்னால், சரக்கு வடிவத்தில் இருக்கும் மூலதன-மதிப்பை அச்சரக்கை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய அடிக்கூறுகளாக மீண்டும் உருமாறச் செய்வதே பண-மூலதனம் செய்கிற பணி. இறுதியாகப் பார்க்குமிடத்து, பண-மூலதனம் செய்கிற பணி எல்லாம் சரக்கு-மூலதனத்தைத் திறனுடை-மூலதனமாகத் திரும்பவும் உருமாறச் செய்வதுதான்.

சுற்று இயல்பான முறையில் பூர்த்தியாக வேண்டுமானால், C′ ஆனது அதன் முழு மதிப்புக்கும் முழுமையாகவும் விற்கப்பட்டாக வேண்டும். மேலும் C—M—C என்பது ஒரு சரக்கை இன்னொரு சரக்காக மாற்றீடு செய்வது மட்டுமல்ல, மதிப்புறவுகள் மாறாமல் மாற்றீடு செய்வதும் ஆகும். இவ்வாறேதான் இங்கு நடைபெறுவதாகக் கொள்கிறோம். ஆனால் உண்மை என்னவெனில் உற்பத்திச் சாதனங்களின் மதிப்புகள் மாறிக் கொண்டிருக்கின்றன. மதிப்புறவுகள் ஓயாமல் மாறிக் கொண்டிருப்பதுதான் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் தனி விசேஷம். உழைப்பின் உற்பத்தித் திறன் எந்நேரமும் மாறுவது இந்தப் பொருளுற்பத்தி முறைக்குரிய தனிக் குணமாய் இருப்பதுதான் இதற்குக் காரணம். உற்பத்தி-அடிக்கூறுகளின் மதிப்பில் ஏற்படும் இந்த மாற்றத்தைப் பின்னர் ஆராய்வோம்.* இங்கே இதனை சுட்டிக் காட்டுவதோடு நிறுத்திக் கொள்கிறோம். உற்பத்தி-அடிக்கூறுகள் சரக்கு-உற்பத்திகளாகும் உருமாற்றம்—P என்பது C′ ஆக மாறுவது—உற்பத்தித் துறையில் நடைபெறுகிறது. ஆனால் C′ என்பது மீண்டும் Pஆகி விடும் உருமாற்றம் சுற்றோட்டத் துறையில் நடைபெறுகிறது. சாமானிய சரக்கு-உருமாற்றத்தின் மூலம் இது நடைபெறுகிறது என்றாலும் இதன் உள்ளடக்கம் முழுநிறைவான மறுவுற்பத்தி நிகழ்முறையைச் சேர்ந்த ஒரு கட்டமாகிறது. C—M—C என்பது மூலதனச் சுற்றோட்டத்தின் ஒரு வடிவமாக இருப்பதால், அது குறிப்பிட்ட ஒரு பணியை முன்னிட்டு நடைபெறும் பொருட்டு பரிவர்த்தனையாகிறது. தவிரவும் C—M—C என்னும் மாற்றத்துக்கு, C ஆனது C′ என்கிற சரக்குப் பரிமாணத்தை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய உற்பத்தி-அடிக்கூறுகளுக்குச் சமமாய் இருப்பதும், இந்த உற்பத்தி-அடிக்கூறுகளுக்கு இடையே ஆரம்பத்தில்

* இந்தப் பாகத்தின் அத்தியாயம் XVஇல் பிரிவு 5ஐப் பார்க்கவும்—பதிப்பாசிரியர்.

இருந்த மதிப்புறவுகள் மூறாமல் அப்படியே இருப்பதும் அவசிய மாகும். ஆகவே அந்தந்த சரக்கும் அதன் மதிப்புக்குச் சமமான விலைக்கு வாங்கப்படுகிறது என்று மட்டுமல்லாமல், சுழல் இயக்கத் தின் போது இம்மதிப்பில் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை, என்றும் அனுமானம் செய்து கொள்கிறோம். இல்லையேல் இயல் பான முறையில் இந்நிகழ்முறை நடைபெற முடியாது.

M ... M′ என்பதில் M ஆனது மூலதன-மதிப்பின் ஆரம்ப வடி வத்தைக் குறிக்கிறது, இந்த வடிவம் களையப்பட்டு மீண்டும் ஏற்கப் படுகிறது. P ... C′ — M′ — C ... P என்பதில் M ஆனது நிகழ்முறை யின் போது ஏற்கப்பட்டு, நிகழ்முறை முடிவதற்குள் களையப்பட்டு விடும் வடிவத்தைக் குறிக்கிறது. இங்கு பண வடிவமானது மூலதன-மதிப்பின் தற்காலிக வடிவமாகவே விளங்குகிறது. C′ என்னும் வடிவம் தரித்துள்ள மூலதனம் பண வடிவம் பெற்று விட வேண்டு மெனத் துடிக்கிறது. ஆனால் அவ்வடிவம் பெற்று M′ ஆனதுமே, திரும்பவும் தன்னைத் திறனுடை-மூலதனமாக்கிக் கொள்ளும் பொருட்டு அந்தப் பண வடிவத்தைக் களைந்தெறிய வேண்டுமெனத் துடிக்கிறது. மூலதனமானது பணத்தின் வேடத்தில் இருக்கும் வரை மூலதனமாகச் செயல்படுவதில்லை, ஆகவே அதன் மதிப்பு பெருகு வதில்லை. மூலதனம் அப்போது தரிசு நிலமாய் விளைச்சலற்றதாய் இருக்கிறது. M ஆனது இங்கே சுற்றோட்ட ஊடகமே என்றாலும், மூலதனத்தின் சுற்றோட்ட ஊடகமாகப் பணியாற்றுகிறது.* மூல தன-மதிப்பின் பண-வடிவமானது முதல் வகைச் சுற்றில் (பண-மூலதனச் சுற்றில்) சுயேச்சையுடையதாகக் காட்டும் கோலம் இந்த இரண்டாம் வகைச் சுற்றில் மறைந்து விடுகிறது. வகை இரண்டு இவ்வாறு வகை ஒன்றின் விமர்சனமாகி, அதைத் தனியான ஒன்றாகக் குறுகச் செய்து விடுகிறது. இரண்டாவது உருமாற்றமான M — Cஇல் தடங்கல் ஏதும் ஏற்படுமாயின் — உதாரணமாய் சந்தையில் உற் பத்திச் சாதனங்கள் கிடைக்காமற் போகுமாயின் — சுற்று, மறுவுற் பத்தி நிகழ்முறை தடைபட்டு விடுகிறது. மூலதனம் அதன் சரக்கு-மூலதன வடிவத்தைக் களைந்து விட்டு முன்செல்ல முடியாமற் போகும் போது நேர்வது போலவே இப்போதும் இந்நிகழ்முறை தடைபட்டு விடுகிறது. ஒரேயொரு வேறுபாடு என்னவென்றால், மூலதனத்தால் தற்காலிக வடிவான சரக்கு-வடிவத்தைக் காட் டிலும் அதிக காலத்துக்குப் பண-வடிவத்தில் நீடிக்க முடியும். மூலதனம் பண-மூலதனத்துக்குரிய பணிகளைச் செய்யா விட் டாலும் கூட தொடர்ந்து அது பணமாகவேதான் இருந்து வருகிறது. ஆனால் அது சரக்கு-மூலதனத்துக்குரிய பணியைச் செய்யாத படி அதிக காலம் தடுக்கப்படுமாயின், அது சரக்காகவோ, பொதுவில்

* கையெழுத்துப் பிரதியில் மார்க்ஸ் இங்கே பின்வரும் குறிப்பைச் சேர்த்துள்ளார்: "டூக் சொல்லும் கருத்துக்கு எதிராக." — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

பயன்-மதிப்பாகவோ இருக்க முடிவதில்லை. மேலும் பண-வடிவில் இருக்கையில் மூல வடிவமாகிய திறனுடை-மூலதன வடிவத்துக்குப் பதில் அதனால் பிரிதொன்றை ஏற்க முடியும்; ஆனால் C′ என்னும் வடிவில் வைக்கப்பட்டிருக்கையில் அதனால் அசையவே முடியாது.

C′ — M′ — C என்ற வடிவத்துக்கு ஏற்ப அதில் அடங்கும் சுற்றோட்டச் செயல்கள் C′ என்பதற்கு மட்டுமே உரியன்வை. இச்செயல்கள் C′இன் மறுவுற்பத்திக் கட்டங்களாகும். ஆனால் C′ —M′ — C நடைபெற வேண்டுமானால் C′இன் உருமாற்றத்தால் வரப்பெறும் C ஆனது மெய்யாகவே மறுவுற்பத்தி செய்யப்பட்டாக வேண்டும்; இது C′ஆல் குறிக்கப்படும் தனிப்பட்ட மூலதனத்தின் மறுவுற்பத்தி நிகழ்முறைக்கு வெளியே நடைபெறும் மறுவுற்பத்தி நிகழ்முறைகளால் ஆளப்படுகிறது.

வகை ஒன்றில் $M - C <^{L}_{mp}$ என்ற செயல் பண-மூலதனம் திறனுடை-மூலதனமாக மாறுவதற்கான முன்தயாரிப்பாகும். வகை இரண்டில் இச்செயல் சரக்கு-மூலதனம் மீண்டும் திறனுடை-மூலதனமாக உருமாறுவதற்கான முன்தயாரிப்பாகும்; அதாவது— தொழில் துறை மூலதன முதலீடு மாறாதிருக்குமானால்—சரக்கு-மூலதனம் அதனைத் தோற்றுவித்த அதே உற்பத்தி-அடிக் கூறுகளாக மீண்டும் உருமாறுவதற்கான முன்தயாரிப்பாகும். ஆதலால், இச்செயல் சுற்றின் வகை ஒன்றில் எப்படியோ அதே போல் வகை இரண்டிலும் உற்பத்தி நிகழ்முறையின் முன்தயாரிப்புக் கட்டமாக விளங்குகிறது. ஆனால் இங்கே அது உற்பத்தி நிகழ்முறைக்குத் திரும்பிச் செல்லும் கட்டமாக, அந்நிகழ்முறையைப் புதுப்பிக்கும் கட்டமாக விளங்குகிறது; ஆகவே, மறுவுற்பத்தி நிகழ்முறையும், இவ்விதம் மதிப்பின் தற்பெருக்க நிகழ்முறையும் மீண்டும் நடைபெறுவதற்கான பீடிகையாக விளங்குகிறது.

M — L என்பது சாமானிய சரக்குப் பரிவர்த்தனையல்ல. உபரி-மதிப்பின் உற்பத்திக்குப் பயன்படும் சரக்காகிய Lஐ விலைக்கு வாங்குவதாகும் என்பதை மீண்டும் குறிப்பிட வேண்டும்; இதே போல் M — mp என்பது உபரி-மதிப்பின் உற்பத்திக்குப் பொருள் வகையில் இன்றியமையாத நிகழ்முறையாகும்.

$M - C <^{L}_{mp}$ பூர்த்தியாகும் போது, M ஆனது திறனுடை-மூலதனமாக, P ஆக மீண்டும் உருமாற்றப்பட்டு சுற்று மீண்டும் ஆரம்பமாகிறது.

ஆகவே, P ... C′ — M′ — C ... P என்பதன் விரிவடைந்த வடிவம் வருமாறு:

$$P \ldots C' \begin{pmatrix} C \\ + \\ c \end{pmatrix} \begin{matrix} - \\ \\ - \end{matrix} \begin{pmatrix} M \\ + \\ m \end{pmatrix} \begin{matrix} - C <^{L}_{mp} \ldots P \\ \\ - c \end{matrix}$$

பண-மூலதனம் திறனுடை-மூலதனமாக உருமாற்றம் பெறுவதானது சரக்குகளை உற்பத்தி செய்வதற்காகச் சரக்குகளை விலைக்கு வாங்குவதைக் குறிக்கிறது. நுகர்வானது திறனுடை நுகர்வாக இருக்கும் வரைதான், நேரடியாக மூலதனத்தின் சுற்றுக்கு உட்பட்டதாகிறது; இவ்வாறு நுகரப்படும் சரக்குகளைக் கொண்டு உபரி-மதிப்பு உற்பத்தி செய்யப்படும் வரை அது திறனுடை நுகர்வாகிறது, இது உற்பத்தியாளர் உயிர் வாழ்வதற்காக நடைபெறும் பொருளுற்பத்தியிலிருந்து, ஏன் சரக்கு உற்பத்தியிலிருந்தும் கூட பெரிதும் வேறுபடுகிற ஒன்று. பணத்தைக் கொண்டு நடைபெறுகிற வெறும் பண்டப் பரிவர்த்தனை ஒன்று; உபரி-மதிப்பின் உற்பத்தியைச் சார்ந்து நடைபெறும் சரக்குக்குப் பதில் சரக்கு என்கிற மாற்றீடு முற்றிலும் வேறொன்று. ஆனால் பொருளாதார அறிஞர்களோ இதனை மிகை உற்பத்தி சாத்தியமல்ல என்பதற்கான நிரூபணமாகக் கொள்கின்றனர்.

L ஆகவும் mp ஆகவும் உருமாறும் Mஇன் திறனுடை நுகர்வுடன் கூடவே, M — L என்கிற முதல் உறுப்பும் இச்சுற்றில் அடங்குகிறது. M — L என்பது தொழிலாளிக்கு L — M=C — Mஆகும். L — M — C என்பது தொழிலாளியின் சுற்றோட்டம்; அவரது நுகர்வும் இதில் அடங்குகிறது. இதில் M—L என்பதன் விளைவாய் அமையும் முதல் கண்ணி மட்டுமே மூலதனச் சுற்றில் உட்படுகிறது. இரண்டாவது செயலான M—C ஒரு தனிப்பட்ட மூலதனத்தின் சுற்றோட்டத்திலிருந்தே பிறந்ததென்றாலும், அச்சுற்றோட்டத்தில் உட்படவில்லை. ஆனால் தொழிலாளி வர்க்கம் என்ற ஒன்று தொடர்ந்து இருப்பது முதலாளி வர்க்கத்துக்கு அவசியம் என்பதுதான் இந்த நுகர்வை சாத்தியமாக்குகிறது. தொழிலாளியின் நுகர்வும் அவ்வாறே அவசியம்; M—C என்பதுதான் இந்த நுகர்வை சாத்தியமாக்குகிறது.

மூலதன-மதிப்பின் சுற்று தொடர்வதற்கும், உபரி-மதிப்பு முதலாளியால் நுகரப்படுவதற்கும் C′—M′ என்னும் செயல் நடந்தேறுவது ஒன்றே நிபந்தனை; அதாவது C′ பணமாக மாறுவது ஒன்றே, விற்கப்பட வேண்டியது ஒன்றே நிபந்தனை. C′ என்னும் சரக்கு பயன்-மதிப்புள்ள சரக்காய் இருப்பதால்தான், இவ்விதம் அது திறனுடை நுகர்வு அல்லது தனிப்பட்டவரது சொந்த நுகர்வாகிய ஏதேனும் ஒருவித நுகர்வுக்குப் பயன்படுவதாய் இருப்பதால்தான், அது விலைக்கு வாங்கப்படுகிறது. C′ ஆனது அதை— உதாரணமாக, நூலை—விலைக்கு வாங்கிய வர்த்தகரிடமே தொடர்ந்து சுற்றி வந்து கொண்டிருக்குமானால், இந்நூலை உற்பத்தி செய்து வர்த்தகரிடம் விற்ற தனிப்பட்ட மூலதனத்தின் சுற்று தொடர்ந்து இயங்குவதில் இதனால் ஆரம்பத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. முழு நிகழ்முறையும் தொடர்ந்து நடைபெறவே செய்கிறது. அதனால் அவசியமாக்கப்படுகிற முதலாளியின் மற்றும் தொழிலாளியின் தனிப்பட்ட சொந்த நுகர்வும் அதோடு சேர்ந்து தொடர்ந்து

நடைபெறவே செய்கிறது. இந்த விவரம் பிற்பாடு நாம் நெருக்கடிகளைப் பற்றிப் பரிசீலிக்கும் போது முக்கியமானதாய் இருக்கும்.

ஏனெனில், C′ விற்கப்பட்டதும், அதாவது பணமாக மாற்றப்பட்டதும், அதனை மெய்யான உழைப்பு நிகழ்முறைக் காரணிகளாக, மறுவுற்பத்தி நிகழ்முறைக் காரணிகளாக திரும்பவும் மாற்றிக் கொண்டு விடலாம். C′ ஆனது அதனை முடிவில் நுகர்பவரால் விலைக்கு வாங்கப்பட்டாலும் ஒன்றுதான்; மறுவிற்பனைக்காக வர்த்தகரால் விலைக்கு வாங்கப்பட்டாலும் ஒன்றுதான். முதலாளித்துவப் பொருளுற்பத்தியால் திரளாய்க் குவிக்கப்படும் சரக்குகளின் பரிமாணம் இந்த உற்பத்தியின் அளவுவீதத்தையும், இந்த உற்பத்தியை ஓயாமல் விரிவுபடுத்த வேண்டிய தேவையையும் பொறுத்ததே தவிர, முன்கூட்டியே வரைந்த வழங்கல்-வேண்டல் வட்டத்தை, நிறைவு செய்ய வேண்டிய தேவைகளின் வட்டத்தைப் பொறுத்ததல்ல. பெருந்திரள் உற்பத்தியை நேரடியாக வாங்குவோர் ஏனைய தொழில் துறை முதலாளிகளைத் தவிர்த்து, மொத்த வர்த்தகர்களே தவிர வேறு யாருமல்ல. மறுவுற்பத்தி நிகழ்முறையிலிருந்து வெளிவரும் சரக்குகள் உள்ளபடியே சொந்த நுகர்விலோ திறனுடை நுகர்விலோ நுழையாத போதும் கூட, குறிப்பிட்ட சில வரம்புகளுக்குள் அந்த மறுவுற்பத்தி நிகழ்முறை அதே வீதத்தில் அல்லது அதிகரித்த வீதத்தில் தொடர்ந்து நடைபெற்று வரலாம். சரக்குகளின் நுகர்வு அவற்றைத் தோற்றுவித்த மூலதனத்தின் சுற்றில் சேருவதில்லை. எடுத்துக்காட்டாக, உற்பத்தியாகும் நூலால் குறிக்கப்படும் மூலதன-மதிப்பானது, அந்நூல் விற்கப்பட்டதும் உடனே திரும்பவும் தனது புதிய சுற்றைத் தொடங்குகிறது. விற்கப்பட்ட நூலுக்கு அதன் பின் என்ன நேர்கிறது என்பது பற்றி அது கவலைப்படுவதில்லை. உற்பத்திப் பொருள் விற்கப்பட்டு விடுமானால் எல்லாம் முறைப்படி ஒழுங்காய் நடைபெறுவதாகவே முதலாளித்துவ உற்பத்தியாளர் கருதுகிறார். அவருக்கு உரியதாகிய அந்த மூலதன-மதிப்பின் சுற்று தடைபடாமல் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. அதோடு, இந்த நிகழ்முறை மேலும் விரிவடையுமானால் உற்பத்திச் சாதனங்கள் உற்பத்தித் திறனுள்ள முறையில் நுகரப்படுவதன் அதிகரிப்பும் இந்த விரிவாக்கத்தில் அடங்கும்—மூலதனத்தின் இந்த மறுவுற்பத்தியுடன் கூடவே, தொழிலாளர்களுடைய தனிப்பட்ட சொந்த நுகர்வும் (ஆகவே பண்டங்களுக்கான அவர்களது வேண்டலும்) அதிகரித்துச் செல்லும். ஏனெனில் இந்த நிகழ்முறையைத் தொடக்கி வைப்பதும் நடந்தேறச் செய்வதும் திறனுடை நுகர்வுதான். இவ்விதம் உபரி-மதிப்பின் உற்பத்தியும் அதோடு சேர்ந்து முதலாளியின் தனிப்பட்ட சொந்த நுகர்வும் அதிகரித்துக் கொண்டும், மறுவுற்பத்தி நிகழ்முறை முழுதுமே செழித்து ஓங்கிக் கொண்டும் இருக்கலாம். ஆனால் அதே போது சரக்குகளில் ஒரு பெரும் பகுதி இன்னமும் விற்கப்படாமல்

வியாபாரிகளின் கையிலேயே தங்கி விடலாம், சந்தையை விட்டு நகராமல் முடங்கி விடலாம்; அதாவது அவை நுகரப்படுவதாகத் தெரிவது வெறும் வெளித் தோற்றமாய் இருக்கலாம். திரள் திரளாகச் சரக்குகள் பெருக்கெடுத்து ஓடி வருகின்றன. முந்தைய பெருக்குகள் நுகர்வால் உட்கொள்ளப்பட்டு விட்டதாகப் புலப் படுவது வெறும் வெளித்தோற்றமே என்று இறுதியில் தெரிய வருகிறது. சந்தையில் விற்பதற்காகச் சரக்கு-மூலதனங்கள் ஒன்றோ டொன்று போட்டி போடுகின்றன. தாமதமாய் வந்து சேர்வோரால் விற்க முடிவதில்லை, அவர்கள் விலையைக் குறைத்து விற்க வேண்டியதாகிறது. முந்தைய பெருக்குகளைச் சேர்ந்த சரக்குகள் இன்னமும் விற்கப்பட்டாகவில்லை, அதற்குள் அவற்றுக்குப் பணம் செலுத்த வேண்டிய நேரம் வந்து விடுகிறது. இந்நிலையில் இந்தச் சரக்குகளின் உடைமையாளர்கள் போண்டியாக வேண்டும். இல் லையேல் கடனை அடைக்கும் பொருட்டு எந்த விலைக்கு வேண்டு மானாலும் விற்க முற்பட்டாக வேண்டும். உள்ளபடியே சரக்கு களுக்கான வேண்டலின் நிலவரம் காரணமாய் இப்படி விலையைக் குறைத்து விற்க நேர்வதில்லை. பணக் கொடுப்புக்கான வேண்டலின் [demand for payment] காரணமாகவே, சரக்கைப் பணமாக மாற்ற வேண்டிய அவசரத் தேவையின் காரணமாகவே இப்படி நேர்கிறது. இதைத் தொடர்ந்து நெருக்கடி [crisis] வெடிக்கிறது. இந்த நெருக்கடி கண்கூடாவது எங்கே? — நுகர்வோரின் வேண்டல் [consumer demand], தனிப்பட்டோரது சொந்த நுகர்வுக்கான வேண்டல் நேரடியாகக் குறுகிக் குறைந்து விடுவதில் அல்ல; மூலதனத்துக்கும் மூலதனத்துக்கும் நடைபெறும் பரிவர்த்தனைகள், மூலதனத்தின் மறு வுற்பத்தி நிகழ்முறை குறுகிக் குறைந்து விடுவதில் அது கண்கூடாகிறது.

M ஆனது பண-மூலதனமாகச் செயல்படும் பொருட்டு, அதாவது மீண்டும் திறனுடை-மூலதனமாக மாற வேண்டிய மூலதன-மதிப் பாகச் செயல்படும் பொருட்டு, mp, L என்னும் சரக்குகளாக மாறு கிறது; இச்சரக்குகள் வெவ்வேறு வரையறைகளின் பேரில் வாங்கப் பட்டால், M—C என்பது வரிசையான பல வாங்கல்களையும் கொடுப்புகளையும் குறிக்கிறது. Mஇல் ஒரு பகுதி M—C என்னும் செயலை நிறைவேற்றுகிறது; அதே நேரத்தில் இன்னொரு பகுதி பண வடிவில் நீடிக்கிறது; எவ்வளவு காலம் இப்படி நீடிக்கிறது என்பது இந்நிகழ்முறையின் நிலைமைகளைப் பொறுத்தது; பிறகு அது ஏக காலத்திலோ அடுத்தடுத்தோ M—C என்னும் செயல் களை நிறைவேற்றுகிறது. இந்தப் பகுதி உரிய காலத்தில் செயலில் இறங்கி அதன் பணியை ஆற்றும் பொருட்டு, சுற்றோட்டத்திலிருந்து தற்காலிகமாய் விலக்கப்படுகிறது. ஆகவே, பணம் இப்படி இருப்பில் நிற்பது அதன் சுற்றோட்டத்துக்காக சுற்றோட்டத்தால் நிர்ணயிக்கப்படும் பணியே ஆகும். ஆக, அது வாங்கலுக்கும் கொடுப்புக்குமான நிதியாக நிலவுதல் என்பது, அதன் இயக்கத்தின்

தற்காலிக நிறுத்தம் என்பது, அதன் சுற்றோட்டம் தடைபடுதல் என்பது, பண-மூலதனமென்ற முறையில் பணம் அதன் பணிகளில் ஒன்றை நிறைவேற்றுவதாகும். எப்படியெனில், தற்காலிகமாக ஓய்வில் இருந்து வரும் பணமானது, பண-மூலதனமான Mஇன் (M'−m=M) ஒரு பகுதியாகும்; Pக்குச் சமமான — சுற்றின் தொடக்கமாகிய திறனுடை-மூலதன மதிப்புக்குச் சமமான — சரக்கு-மூலதன மதிப்புப் பாகத்தில் ஒரு பகுதியாகும். மறு புறம், சுற்றோட்டத்திலிருந்து விலக்கப்படும் பணமெல்லாம் சேர்ப்பின் வடிவம் பெறுகிறது. ஆகவே, M−Cஇல், வாங்கற் சாதனம் அல்லது கொடுப்புச் சாதனம் என்ற பணத்தின் பணி மூலதனத்தின் பணியாவது போலவே, இங்கே சேர்ப்பின் வடிவிலுள்ள பணத்தின் பணி பண-மூலதனத்தின் பணியாகிறது. இங்கே மூலதன-மதிப்பு பண வடிவில் இருப்பதாலும், பண வடிவம் இங்கே தொழில் துறை மூலதனம் அதன் கட்டங்களில் ஒன்றில் ஏற்கும் வடிவமாய், சுற்றுக்குள் நிலவும் பரஸ்பரத் தொடர்புகளால் விதிக்கப்படும் வடிவமாய் இருப்பதாலும் இப்படி நேர்கிறது. அதே போது பண-மூலதனம் தொழில் துறை மூலதனத்தின் சுற்றுக்குள் பணத்தின் பணிகளைத்தான் செய்கிறது என்பதும், இந்தப் பணப் பணிகள் மூலதனச் சுற்றின் ஏனைய கட்டங்களோடு கொண்டுள்ள பரஸ்பரத் தொடர்புகளின் விளைவாகவே இவை மூலதனப் பணிகளாக விளங்குகின்றன என்பதும் திரும்பவும் இங்கே மெய்ப்பித்துக் காட்டப்படுகின்றன.

M' என்பதை M என்பதுடன் m என்பதற்குள்ள உறவாக, அதாவது மூலதன உறவாகக் காட்டுவது நேரடியாகப் பண-மூலதனத்தின் பணியல்ல. அது சரக்கு-மூலதனமான C'இன் பணியாகும். சரக்கு-மூலதனம்தான் C என்பதுடன் c என்பதற்குள்ள உறவைக் குறிப்பதாகி உற்பத்தி நிகழ்முறையின் விளைவினைத் தெரிவிக்கிறது. அதாவது உற்பத்தி நிகழ்முறையினுள் மூலதன-மதிப்பு கண்ட தற்பெருக்கத்தின் [self-expansion] விளைவைத் தெரிவிக்கிறது.

சுற்றோட்ட நிகழ்முறை தொடர்ந்து நடைபெற முடியாமல் தடைபடுமானால், சந்தை நிலவரம் போன்ற வெளி நிலைமைகள் காரணமாய் M ஆனது M−C என்ற அதன் செயலைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க நேருமானால், இதனால் குறுகிய காலத்துக்கோ நீண்ட காலத்துக்கோ அது பண வடிவத்தில் நீடித்திருக்க நேருமானால், பணமானது திரும்பவும் சேர்ப்பின் வடிவினைப் பெறுகிறது. சாமானிய சரக்குச் சுற்றோட்டத்திலும் C−M என்பதிலிருந்து M−C என்பதற்கு மாறிச் செல்ல விடாமல் வெளி நிலைமைகள் தடை செய்யும் போதெல்லாம் இவ்வாறுதான் நிகழ்கிறது. இவ்விதம் சேர்ப்பு தானாகவே உருவாகிறது. இங்கு நாம் பரிசீலிக்கும் உதாரணத்தில் பணமானது விளைச்சல் இல்லாத, செயலடங்கிய உள்ளுறை நிலையிலுள்ள பண-மூலதனத்தின் வடிவில் உள்ளது. இப்போதைக்கு இதற்கு மேல் இது பற்றி நாம் ஆராய வேண்டியதில்லை.

இரண்டு சந்தர்ப்பங்களில் எதனிலும் பண-மூலதனமானது பணமாகவே தொடர்ந்து நீடிக்கிறதென்றால்—இந்நிலை தக்கதாயினும் தகாததாயினும், தானாகவே ஏற்படுவதாயினும் விரும்பி உண்டாக்கப் பெறுவதாயினும், அதன் பணிகளுக்கு இசைவானதாயினும் ஒவ்வாததாயினும்—இயக்கம் தடைபடுவதே அதற்குக் காரணம்.

## II. திரட்டலும் விரிதிற மறுவுற்பத்தியும்

உற்பத்தி நிகழ்முறையின் விரிவாக்கப் பருமனளவுகள் நிர்ணயமாவது தொழில் நுட்பக் காரணிகளாலேயே தவிர மன விருப்பத்துக்கு ஏற்ப அல்ல. ஆகவே ஈடேற்றம் பெறும் உபரி-மதிப்பை உடனுக்குடன் மூல்தனமாக்க விரும்பினாலும் கூட பல சந்தர்ப்பங்களில் முடிவதில்லை. அது பயனுள்ள முறையில் கூடுதல் மூலதனமாகச் செயல்படுவதற்கு, அல்லது ஏற்கெனவே செயல்பட்டு வரும் மூலதன-மதிப்பின் சுற்றினுள் புகுவதற்குப் போதுமான பருமனுடையதாய் இருப்பதில்லை. தக்க பருமனை வந்தடையும் பொருட்டு அடுத்து அடுத்துப் பல சுற்றுகளிலிருந்தும் உபரி-மதிப்பைத் திரட்டிச் சேர்க்க வேண்டியுள்ளது. இவ்விதம் உபரி-மதிப்பு பணச் சேர்ப்பாகத் தேங்குகிறது. இவ்வடிவில் அது உள்ளுறை [latent] பண-மூலதனமாகிறது—உள்ளுறை என்பது எதனால் என்றால், தொடர்ந்து பண வடிவில் இருந்து வரும் வரை அதனால் மூலதனமாகச் செயல்பட முடியாது.[10] பணம் தேங்கி இப்படிச் சேர்ப்பு ஆவதானது இங்கே முதலாளித்துவத் திரட்டல் நிகழ்முறைக்கு உரித்தான ஒரு காரணியாக விளங்குகிறது. திரட்டலோடு சேர்ந்து உடன்வருவதாயினும் இந்தச் சேர்ப்பு அதிலிருந்து அடிப்படையில் வேறுபடுவதாகும். எப்படியென்றால், உள்ளுறைப் பண-மூலதனம் உருவாவதால் மறுவுற்பத்தி நிகழ்முறை விரிவாக்கமடைவதில்லை; மாறாக இங்கே உள்ளுறைப் பண-மூலதனம் உருவாவதற்கே காரணம், முதலாளித்துவ உற்பத்தியாளரால் தமது உற்பத்தியின் அளவுவீதத்தை நேரடியாக விரிவாக்க முடியாமற் போவதுதான். அவர் தமது உபரி-உற்பத்தியைப் புதிய தங்கம் அல்லது வெள்ளியை உற்பத்தி செய்து சுற்றோட்டத்துள் சேர்க்கிற

---

[10] எங்கெல்ஸ் குறிப்பு.—"உள்ளுறை" [latent] என்ற சொல் பௌதிகத்தில் வரும் உள்ளுறை வெப்பம் [latent heat] என்ற கருத்திலிருந்து பெறப்படுகிறது. இப்போது இதற்கு பதில் ஆற்றலின் வடிவ மாற்றத் தத்துவம் வழக்குக்கு வந்து விட்டதால், மார்க்ஸ் மூன்றாவது பகுதியில் (பிற்பாடு எழுதியது) உள்ளியல் ஆற்றல் [potential energy] என்னும் கருத்திலிருந்து பெறப்படும் "உள்ளியல" [potential] என்னும் பதத்தை உபயோகிக்கிறார். அல்லது தலம்பர்ட்டின் "தோற்ற நிலை வேகங்கள்" [virtual velocities] என்பதற்கு ஒப்பாக, "தோற்ற நிலை மூலதனம்" [virtual capital] என்று குறிப்பிடுகிறார்.

தங்க, வெள்ளி உற்பத்தியாளரிடம் விற்பாரானால், அல்லது நாட்டின் உபரி-உற்பத்தியில் ஒரு பகுதியை வெளியே அனுப்பி அதற்குப் பிரதியாக வெளி நாடுகளிலிருந்து கூடுதல் தங்கம் அல்லது வெள்ளியை இறக்குமதி செய்கிற வியாபாரியிடம் விற்பாரானால் (இரண்டும் ஒன்றே), அவரது உள்ளுறைப் பண-மூலதனம் நாட்டிலுள்ள தங்க, வெள்ளிச் சேர்ப்பில் ஏற்படும் பெருக்கம் ஆகிறது. மேற்கண்ட இரண்டும் அல்லாத மற்றெல்லா நிலைமைகளிலும், எடுத்துக்காட்டாக £78 ஆனது, பண்டம் வாங்குவோரது கையிலுள்ள வரை சுற்றோட்ட ஊடகமாய் இருக்கும் இந்தப் பவுன், முதலாளியின் கைக்கு வந்ததும் வெறும் பணச் சேர்ப்பின் வடிவம் பெறுகிறது. ஆக நாட்டின் தங்க, வெள்ளிச் சேர்ப்பின் பரப்பீட்டில் [distribution] ஏற்படும் மாற்றத்தைத் தவிர வேறு எந்த மாற்றமும் இல்லை.

நமது முதலாளியின் பரிமாற்றங்களில், பணம் கொடுப்புச் சாதனமாகப் பயன்பட்டால், அதாவது வாங்கும் சரக்குகளுக்கு அதிக அல்லது குறைந்த காலக்கெடுவில் பணம் கொடுத்தால் போதும் என்றால், மூலதனமாக மாற வேண்டிய உபரி-உற்பத்தி பணமாக உருமாறாமல் கொடுக்க வேண்டிய தொகைகளாக—வாங்குபவர் ஏற்கெனவே பெற்றிருக்கிற, வாங்கியவர் வசம் இருக்கிற அல்லது இருக்கப் போகிற சமதை மீதான உடைமைப் பத்திரங்களாக—உருமாறுகிறது. அது ஏனைய தனிப்பட்ட தொழில் துறை மூலதனங்களின் சுற்றுகளில் சேரலாமே தவிர, வட்டிக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்படும் பணம் எப்படியோ அதே போல், மூலதனச் சுற்றின் மறுவுற்பத்தி நிகழ்முறையில் சேருவதில்லை.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் தன்மை அனைத்தையுமே நிர்ணயிப்பது முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பின் தற்பெருக்கம்தான்—அதாவது, முதலாவதாக, முடிந்த அளவுக்கு அதிகமான உபரி-மதிப்பு உற்பத்தியாதலும், அதே போது இரண்டாவதாக (பார்க்கவும்: முதல் பாகம், அத்தியாயம் XIV) மூலதனம் உற்பத்தியாதலும், ஆகவே உபரி-மதிப்பு மூலதனமாக மாறுதலும் தான். மூலதனத் திரட்டல்தான், அல்லது விரிதிற மறுவுற்பத்திதான் உபரி-மதிப்பின் உற்பத்தியை ஓயாமல் மேலும் மேலும் விரிவாக்கிச் செல்வதற்குரிய வழி. ஆகவே தமது செல்வம் மேலும் மேலும் பெருகிச் செல்ல வேண்டுமென்ற முதலாளியினது நோக்கம் நிறைவேறுவதற்கான வழியும் இதுவே. முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பொதுவான போக்கே இதில்தான் காணக் கிடக்கிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சியைத் தொடர்ந்து பிற்பாடு இது தனிப்பட்ட ஒவ்வொரு முதலாளிக்கும் இன்றியமையாததாகி விடுகிறது என்பதை முதல் பாகத்தில் தெளிவுபடுத்தினோம். அவரது மூலதனம் அழியாது காப்பாற்றப்பட வேண்டுமானால் அது ஓயாது ஒழியாது பெருகிச் சென்றாக வேண்டும்.

முன்பே எடுத்துரைக்கப்பட்டதை திரும்பவும் இதற்கு மேல் விரித் துரைக்க வேண்டாம்.

உபரி-மதிப்பு முழுவதும் வருவாயாகச் செலவிடப்படுவதாகக் கொண்டு, முதலில் சாமானிய மறுவுற்பத்தியைப் பரிசீலித்தோம்.' உண்மை என்னவென்றால், சாதாரணமாய் உபரி-மதிப்பில் ஒரு பகுதி மட்டுமே வருவாயாகச் செலவிடப்படுகிறது; மறு பகுதி மூல தனமாக்கப்படுகிறது. குறிப்பிட்ட எந்தக் காலத்திலும் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பு முழுவதும் அப்படியே நுகரப்படுகிறதா அல்லது மூலதனமாக்கப்படுகிறதா என்பது அக்கறைக்குரியது அல்ல. சராசரியான நிலைமையையே எடுத்துக் கொள்கிறோம், பொதுச் சூத்திரமென்பது சராசரி இயக்கத்தைத்தான் குறிப்பதாகும். அப்படிப் பார்க்கையில் இரண்டுமே நிகழக் காண்கிறோம். ஆனால் சூத்திரம் சிக்கலானதாகி விடாதிருக்கும் பொருட்டு, உபரி-மதிப்பு முழுவதுமே மூலதனத் திரட்டலில் சேர்வதாகக் கொள்வது நல்லது. $P \ldots C'—M'—C'<^{L}_{mp} \ldots P'$ என்பது திறனுடை-மூலதனத்தைக் குறிக்கும் சூத்திரம். திறனுடை-மூலதனம் முன்னிலும் விரிந்த அளவும் அதிக மதிப்பும் கொண்டதாய் மறுவுற்பத்தி செய்யப்பட்டு, கூடுதலாகி விட்ட ஒன்றாய்த் தனது இரண்டாவது சுற்றைத் தொடங்குகிறது, அதாவது முதலாவது சுற்றைப் புதுப்பிக்கிறது. இந்த இரண்டாவது சுற்று தொடங்கியதும் Pஐயே மீண்டும் தொடக்க நிலையாகக் காண்கிறோம். ஆனால் இந்த P முதலாவது Pஐக் காட்டிலும் பெரியது; திறனுடை-மூலதனம் முன்னிலும் பெரிதாகியுள்ளது. ஆகவே, M ... M' என்னும் சூத்திரத்தில் இரண்டாவது சுற்று M' என்பதில் ஆரம்பமானால், M' ஆனது M ஆகவே செயல்படுகிறது; அதாவது குறிப்பிட்ட பருமனுடைய பண-மூலதன முன்னீடாகவே செயல்படுகிறது. இந்தப் பண-மூலதனம் முதலாவது சுழல் இயக்கத் தைத் தொடக்கி வைத்த பண-மூலதனத்தைக் காட்டிலும் பெரிய தாகும். ஆனால் உபரி-மதிப்பு மூலதனமாக்கப்பட்டதால்தான் அது இப்படிப் பெரிதாகிறது என்பதற்கான குறி, அது முன்னீடு செய்யப்பட்ட மூலதனமாகச் செயல்பட முற்பட்டதும் இல்லாமற் போய் விடுகிறது. சுற்றினைத் தொடக்கும் பண-மூலதனம் என்ற வடிவம் எஞ்சுகிறதே ஒழிய அதன் பூர்வ கதை மறைந்து விடுகிறது. புதிய சுற்றின் தொடக்க நிலையாகச் செயல்பட முற்படும் P'க்கும் இதே நிலைமைதான் ஏற்படுகிறது.

P ... P' என்ற சுற்றை M ... M' என்ற சுற்றுடன், அதாவது முதல் வகைச் சுற்றுடன் ஒப்புநோக்கினால் இரண்டும் வெவ்வேறு உட் பொருளைக் .குறிப்பவை என்று தெரியும். M ... M' என்பதைத் தனிப்பட்ட சுற்றாகக் கொண்டு அதை மட்டும் கருதுவோமானால், மூலதனமாகிய (அல்லது பண-மூலதனமாகச் சுற்றி வரும் தொழில் துறை மூலதனமாகிய) M என்பது பணத்தை உண்டாக்கும் பண மாகும், மதிப்பை உண்டாக்கும் மதிப்பாகும் என்பதை மட்டுமே

தெரிவிக்கிறது, அதாவது அது உபரி-மதிப்பை உற்பத்தி செய்கிறது என்பதை மட்டுமே தெரிவிக்கிறது. ஆனால் Pஇன் சுற்றில், உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும் நிகழ்முறையானது முதல் கட்டமான உற்பத்தி நிகழ்முறை முற்றுப் பெறும் போதே பூர்த்தியாகி விடுகிறது; இரண்டாவது கட்டமான C'—M' (சுற்றோட்டத்தின் முதல் கட்டம்) முற்றுப்பெறும் போதே, மூலதன-மதிப்பு உபரி-மதிப்போடு சேர்ந்து பெரிதாகி ஈடேற்றம் பெற்ற பண-மூலதனமாகி விடுகிறது; முதல் வகைச் சுற்றின் கடைசிக் கூறான M' ஆகி விடுகிறது. முதலில் பரிசீலித்த P ... P என்னும் சூத்திரத்தில் (விரிவடைந்த சூத்திரத்தைப் பார்க்கவும், பக்கம் 47)* c—m—c என்பது உபரி-மதிப்பின் உற்பத்தியைத் தெரிவிக்கிறது; இந்த c—m—c அதன் இரண்டாவது கட்டத்தின் போது மூலதனச் சுற்றோட்டத்தை விட்டு வெளியே சென்று வருவாயாகி விடும் உபரி-மதிப்பின் சுற்றோட்டத்தைக் குறிப்பதாகிறது. இந்த வகைச் சுற்றில் முழு இயக்கமும் P ... P என்பதில் காட்டப்படுகிறது. ஆகவே சுற்றின் இரு முனைகளுக்குமிடையே மதிப்பு வேறுபாடு ஏதும் இல்லை. முன்னீடு செய்யப்படும் மதிப்பின் தற்பெருக்கம், அதாவது உபரி-மதிப்பின் உற்பத்தி M ... M' என்பதில் காட்டப்படுவது போலவே காட்டப்படுகிறது; M ... M' என்பதில் கடைசிக் கட்டமாய் இருக்கும் C'—M' என்னும் செயல் P ... P என்பதில் சுற்றின் இரண்டாவது கட்டமாகவும் சுற்றோட்டத்தின் முதல் கட்டமாகவும் இருக்கிறது என்பதே வேறுபாடு.

P ... P' என்பதில், P' ஆனது உபரி-மதிப்பு உற்பத்தியாகி விட்டதைக் காட்டவில்லை, உற்பத்தியான உபரி-மதிப்பு மூலதனமாக்கப்பட்டு விட்டதையே காட்டுகிறது. அதாவது மூலதனம் திரட்டப்பட்டுள்ளதையும், ஆகவே, Pஐப் போல் அல்லாமல் P' ஆனது ஆரம்ப மூலதன-மதிப்பு, மூலதன-மதிப்பினது இயக்கத்தின் விளைவாகத் திரட்டப்படும் மூலதன-மதிப்பு ஆகிய இரண்டின் கூட்டுத் தொகையாய் இருப்பதையும்தான் காட்டுகிறது.

M ... M' என்பதன் எளிய முடிவாகிய M'உம் இந்தச் சுற்றுகள் எல்லாவற்றிலும் காட்சியளிக்கும் C'உம் தம்மளவில் இயக்கத்தைத் தெரிவிக்கவில்லை; இயக்கத்தின் விளைவையே தெரிவிக்கின்றன; சரக்கு அல்லது பண வடிவில் ஈடேற்றம் பெறும் மூலதன-மதிப்பின் தற்பெருக்கத்தைத் தெரிவிக்கின்றன; எனவே, மூலதன-மதிப்பை M+m அல்லது C+c ஆக, மூலதன-மதிப்புக்கும் அதன் வழி வருகிற உபரி-மதிப்புக்கும் உள்ள உறவாகத் தெரிவிக்கின்றன. இந்த விளைவை அவை தற்பெருக்கம் அடைந்த மூலதன-மதிப்பின் வெவ்வேறு சுற்றோட்ட வடிவங்களாகத் தெரிவிக்கின்றன. ஆனால் மதிப்பின் தற்பெருக்கம் நடைபெற்றிருக்கிறதே, அது C' என்ற வடிவத்திலும் சரி, M' என்ற வடிவத்திலும் சரி, பண-மூலதனத்தின்

* பார்க்கவும்: இந்த புத்தகத்தில் பக்கம் 98.— பதிப்பாசிரியர்.

பணியோ சரக்கு-மூலதனத்தின் பணியோ அல்ல. தொழில் துறை மூலதனம் ஆற்றுகிற அந்தந்தத் தனிப் பணிகளுக்கு ஏற்ப வெவ் வேறான பிரத்தியேக நிலவல் வடிவங்களாய் இருப்பதால், பண-மூலதனம் பணத்தின் பணிகளையும் சரக்கு-மூலதனம் சரக்கின் பணிகளையும் மட்டுமே செய்ய முடியும். இந்த இரு வகைப் பணிகளுக்கும் உள்ள வேறுபாடு பணத்துக்கும் சரக்குக்கும் உள்ள வேறுபாடே அன்றி வேறல்ல. இதே போல், திறனுடை-மூலதனத் தின் வடிவிலுள்ள தொழில் துறை மூலதனமும், உற்பத்திப் பொருட் களைப் படைக்கும் வேறெந்த உழைப்பு நிகழ்முறையிலும் அடங்கிய அதே கூறுகளால் ஆனதாகவே இருக்க முடியும்; அதாவது ஒரு புறம், உழைப்பின் பொருட் சாதனங்களாலும் (உற்பத்திச் சாதனங் களாலும்), மறு புறம் உற்பத்தித் திறனுள்ள முறையில் (காரிய நோக் குடன்) செயல்படும் உழைப்புச் சக்தியாலும் ஆனதாகவே இருக்க முடியும். தொழில் துறை மூலதனமானது எப்படி உற்பத்தித் துறை யில் பொதுவாக உற்பத்தி நிகழ்முறையின் தேவைப்பாடுகளையும், ஆகவே முதலாளித்துவமல்லாத உற்பத்தி நிகழ்முறையின் தேவைப் பாடுகளையும் கூட நிறைவு செய்வதற்கு உகந்த இயைபில்தான் நிலவ முடிகிறதோ, அதே போல அது சுற்றோட்டத் துறையிலும் அதற்கு உகந்த வடிவங்களில், அதாவது சரக்கு வடிவத்திலும் பண வடிவத்திலும் மட்டுமே நிலவ முடிகிறது. உழைப்புச் சக்தி ஏனை யோருக்குச் சொந்தமானதால், முதலாளி தமது உற்பத்திச் சாதனங் களைப் பிற சரக்குடைமையாளர்களிடமிருந்து விலைக்கு வாங்குவது போலவே இந்த உழைப்புச் சக்தியையும் அதன் உடைமையாளரிட மிருந்து விலைக்கு வாங்குகிறார் என்பதால், உற்பத்திக் கூறுகளின் முழுத் தொகுதியுமே எப்படி ஆரம்பத்திலேயே தன்னைத் திறனுடை-மூலதனமாக அறிவித்துக் கொள்கிறதோ, இவ்விதம் எப்படி உற் பத்தி நிகழ்முறையே தொழில் துறை மூலதனத்தின் உற்பத்திப் பணியாகக் கோலங் காட்டுகிறதோ — அதே போல, பணமும் சரக்கு களும் அந்தத் தொழில் துறை மூலதனத்தின் சுற்றோட்ட வடிவங் களாகத் தோற்றமளிக்கின்றன. இதனால் இந்தப் பணமும் சரக்கு களும் புரியும் பணிகள் தொழில் துறை மூலதனச் சுற்றோட்டத்தின் பணிகளாகத் தோன்றுகின்றன. இந்தச் சுற்றோட்டப் பணிகள் திறனுடை-மூலதனப் பணிகளுக்கு வழிவகுப்பதாகவோ அப்பணி களிலிருந்து உதிப்பதாகவோ தோன்றுகிறது. இங்கே பணப் பணியும் சரக்குப் பணியும் அதே நேரத்தில் பண-மூலதனம், சரக்கு-மூலதனம் ஆகியவற்றின் பணிகளாகவும் இருக்கின்றன; ஆனால், தொழில் துறை மூலதனம் அதன் சுற்றின் வெவ்வேறு கட்டங்களில் ஆற்ற வேண்டியிருக்கும் பணிகளின் வடிவங்களென்ற முறையில் அவை ஒன்றோடொன்று தொடர்புள்ளவையாய் இருப்பதே இதற் குக் காரணம். ஆகவே, பணம் என்ற முறையில் பணத்துக்கும், சரக் குகள் என்ற முறையில் சரக்குகளுக்கும் உரிய பிரத்தியேகத் தன்மை

களையும் அவற்றின் மூலதனப் பண்பிலிருந்து பெற முயல்வது தவறு. இதற்கு மாறாக, திறனுடை-மூலதனத்தின் குணங்களை உற்பத்திச் சாதனங்கள் என்ற அதன் நிலவல் வடிவத்திலிருந்து பெறுவதும் தவறுதான்.

M′ அல்லது C′ ஆனது, M+m அல்லது C+c ஆக, அதாவது மூலதன-மதிப்புக்கும் அதன் வழிவந்த உபரி-மதிப்புக்கும் இடையிலான உறவாக நிலைத்ததும், இந்த உறவு அவை இரண்டிலும் வெளிப்படுகிறது. முதலாவதில் பண வடிவிலும் இரண்டாவதில் சரக்கு வடிவிலும் வெளிப்படுகிறது. இப்படி வெளிப்படுவதால் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஆதலால், இந்த உறவு பணம் அல்லது சரக்குகளில் உள்ளார்ந்த இயல்புகள் அல்லது பணிகளிலிருந்து உதிப்பதல்ல. இரண்டிலுமே மூலதனத்தின் சிறப்பியல்பானது, மதிப்பை உண்டாக்கும் மதிப்பாயிருக்கும் அதன் தனி இயல்பானது விளை பயனின் வடிவிலேயே தெரிவிக்கப்படுகிறது. C′ என்பது எப்போதுமே P புரிகிற பணியின் விளைவே ஆகும். M′ என்பது எப்போதுமே தொழில் துறை மூலதனத்தின் சுற்றில் உருமாற்றப்படும் C′ ஏற்கும் வடிவமே அன்றி வேறல்ல. ஆகவே ஈடேற்றம் பெறும் பண-மூலதனம் அதற்குரிய பண-மூலதனப் பணியைத் திரும்பவும் தொடங்கியதும், அது M′=M+m என்கிற மூலதன உறவைத் தெரிவிப்பதில்லை. M ... M′ என்பது முடிவுற்று M′ ஆனது புதுச் சுற்றைத் தொடங்கும் போது, அது M′ ஆக இதைச் செய்யவில்லை; அதிலுள்ள உபரி-மதிப்பு முழுமையாக மூலதனமாக்கப்பட்டாலும் கூட அது Mஆகவே புதுச் சுற்றைத் தொடங்குகிறது. நமது எடுத்துக்காட்டில் முதல் சுற்று £422 பண-மூலதனத்துடன் ஆரம்பமாயிற்று; இரண்டாவது சுற்று £500 பண-மூலதனத்துடன் ஆரம்பமாகிறது. சுற்றை இப்போது தொடக்கி வைக்கும் பண-மூலதனம் முன்னை விட £78 அதிகம். ஒரு சுற்றினை மறு சுற்றுடன் ஒப்பிடுகையில் இந்த வேறுபாடு தெரிகிறது. ஆனால் அந்தந்த சுற்றுக்குள்ளேயும் இப்படி ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியதில்லை. இப்போது பண-மூலதனமாக முன்னீடு செய்யப்படும் £500இல், £78 முன்பு உபரி-மதிப்பாக இருந்ததாகும் என்றாலும், இந்த £500 வேறொரு முதலாளி அவரது முதல் சுற்றைத் தொடக்குவதற்காக முன்னீடு செய்யும் வேறொரு £500 செய்கிற அதே காரியத்தையே செய்கிறது. திறனுடை-மூலதனத்தின் சுற்றிலும் இதுவேதான் நடக்கிறது. அதிகரித்து விட்ட P′ ஆனது புதுச் சுற்றைத் தொடக்குகையில் Pஆகவே செயல்படுகிறது—சாமானிய மறுவுற்பத்தியாகிய P ... P என்பதில் எப்படியோ அதே போல்தான் இதிலும் P ஆகவே செயல்படுகிறது.

$M'-C'<{}^{L}_{mp}$ என்ற கட்டத்தில், பெருகிய பருமனைக் காட்டுவதற்காகக் குறிக்கப்படுவது C′ என்பதுதானே தவிர L′ என்பதோ mp′ என்பதோ அல்ல. C என்பது L, mp ஆகியவற்றின் கூட்டுத்

தொகையாக இருப்பதால், C′ ஆனது அதில் அடங்கிய L, mp ஆகியவற்றின் கூட்டுத் தொகை ஆரம்ப Pஐக் காட்டிலும் பெரியது என்பதைத் தெளிவாகவே காட்டி விடுகிறது. இரண்டாவதாக, L′ என்றும் mp′ என்றும் சொல்வது சரியல்ல; ஏனெனில் நமக்குத் தெரியும்: மூலதனம் வளர்ந்து செல்கையில் அதன் மதிப்பின் இயைபிலும் மாற்றம் ஏற்படுகிறது; இந்த மாற்றம் மேலும் மேலும் ஏற்படுகையில் mpஇன் மதிப்பு அதிகரிக்கிறது. ஆனால் Lஇன் மதிப்பு ஒப்பளவில் எப்போதுமே குறைகிறது; பல சந்தர்ப்பங்களில் அறுதியாகவும் கூடக் குறைகிறது.

## III. பணத் திரட்டல்

பணமாக உருமாறிய உபரி-மதிப்பான m உற்பத்தி நிகழ் முறையில் ஈடுபட்டுள்ள மூலதன-மதிப்போடு உடனே சேர்ந்து கொள்கிறதா அல்லவா என்பது, இவ்வாறு M என்னும் மூலதனத் தோடு சேர்ந்து (மொத்தப் பருமன் M′) மூலதனச் சுற்றில் புக முடிகிறதா அல்லவா என்பது, m என்று ஒன்று இருப்பதுடன் தொடர்பில்லாத நிலைமைகளைப் பொறுத்தது. முதல் தொழிலில் அல்லாமல் சுயேச்சையான இரண்டாவது ஒன்றில் mஐப் பண-மூலதனமாகப் பயன்படுத்த வேண்டுமானால், m இதற்குத் தேவை யான குறைந்தபட்ச அளவுடையதாய் இருந்தாக வேண்டும் என்பது தெளிவு. பழைய தொழிலை விரிவாக்குவதற்கு அதனைப் பயன் படுத்த நினைத்தால், அப்போதும் m ஆனது குறைந்தபட்சப் பரும னுடையதாய் இருந்தாலன்றி Pஇன் பொருட் கூறுகளுக்கு இடை யிலான உறவுகளும் இக்கூறுகளது மதிப்புறவுகளும் அதற்கு இடமளிப்பதில்லை. இத்தொழிலில் ஈடுபடுத்தப்படும் எல்லா உற்பத்திச் சாதனங்களும் ஒன்றோடு ஒன்று பண்புவழி உறவு மட்டுமல்லாமல், திட்டமான அளவுவழி உறவும் கொண்டுள்ளவை, அதாவது அளவு விகிதாசாரமுடையவை. திறனுடை-மூலதனத்தைப் பெருக்கும் விதத்தில் m ஆனது கூடுதல் உற்பத்திச் சாதனங்களா கவும் கூடுதல் உழைப்புச் சக்தியாகவும் மாறும் பொருட்டு அதற்கு இருக்க வேண்டிய குறைந்தபட்சப் பருமனை மேற்கூறிய இந்தப் பொருட் கூறு உறவுகளும், திறனுடை-மூலதனத்தினது ஆக்கக் கூறு களின் அவசிய மதிப்புறவுகளும்தான் நிர்ணயிக்கின்றன. எடுத்துக் காட்டாக, நூற்பாலை அதிபர் ஒருவர் கதிர்களின் எண்ணிக்கையை அதிகமாக்க விரும்பினால், அவரது தொழிலை இப்படி விரிவாக்கு வதற்குத் தேவையான பருத்திக்கும் கூலிக்குமான முதலீட்டை அதிக மாக்குவதோடு, உரிய எண்ணிக்கையில் தூசகற்றிகளையும் சுழல் சட்டங்களையும் வாங்கியாக வேண்டும். இவற்றைச் செய்வதற்கு உபரி-மதிப்பு கணிச அளவை வந்தடைந்திருக்க வேண்டும் (புதி தாகப் பொருத்தப்படும் ஒவ்வொரு கதிருக்கும் £1 வேண்டும்

என்று பொதுவாகக் கணக்கிடப்படுகிறது). m ஆனது இந்தக் குறைந்தபட்ச அளவை எட்டும் வரை, மூலதனத்தின் சுற்று திரும்பத் திரும்ப நடைபெற்று தொடர்ச்சியாக அதனால் உற்பத்தி செய்யப் படும் mகளின் கூட்டுத் தொகை Mஉடன் சேர்ந்து செயல்பட்டு $M' - C < {}^{L}_{mp}$ என்பது நிகழ்ந்தாக வேண்டும். உதாரணமாக, நூற் பியந்திரத்தின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக அவ்வியந் திரத்தின் நுணுக்கங்களில் மாற்றம் செய்வதற்கே கூட, நூற்பு மூலப் பொருள், சுழலியந்திர சாதன விரிவாக்கம் முதலானவற்றுக்கான முதலீட்டை அதிகமாக்க வேண்டும். இதற்கிடையே m திரட்டப் பெற்று வருகிறது. mஇன் திரட்டல் mஆல் நடைபெறவில்லை. P ... P என்பது திரும்பத் திரும்ப நடைபெறுவதால்தான் இத்திரட்டல் நடைபெறுகிறது. குறைந்தபட்சப் பருமனை வந்தடையும் வரை m ஆனது பண வடிவில் நீடித்தாக வேண்டும். குறைந்தபட்சப் பருமன் என்பது m ஆக்க முறையில் பணி புரிவதற்கு அவசியமான பருமன்; அது பண-மூலதனமாக—நமது உதாரணத்தில், பண-மூலதனமாகப் பணி புரியும் Mஇல் திரட்டிச் சேர்க்கப்பட்ட பகுதி யாக—Mஉடன் சேர்ந்து செயல்படுவதற்கு அவசியமான பருமன். திரும்பத் திரும்ப நிகழும் சுற்றுகளிலிருந்து (உபரி-மதிப்பைப் படைக்கும் சுற்றுகளிலிருந்து)—அதாவது வெளியிலிருந்து—போதிய அதிகரிப்பைப் பெற்று m ஆனது இந்தக் குறைந்தபட்சப் பருமனை வந்தடைகிறது. இதற்கிடையில் அது திரட்டப்பெற்று, வளர்ந்து உருவாகி, சேர்ப்பின் வடிவில் நிலவுகிறது. இவ்விதம் பணத் திரட்டலானது, அதாவது சேர்ப்பாகச் சேர்த்து வைப்ப தானது இங்கே மெய்யான திரட்டலுக்கான—அதாவது தொழில் துறை மூலதனத்தின் செயற்பாட்டு அளவுவீதத்தை அதிகப்படுத்து வதற்கான—தற்காலிக வழிமுறையாகிறது. தற்காலிகம் என்பது எதனால் என்றால், சேர்ப்பானது சேர்ப்பாக இருந்து வரும் வரை, அது மூலதனமாகச் செயல்படுவதில்லை, உபரி-மதிப்பை உண்டாக் கும் நிகழ்முறையில் ஈடுபடுவதில்லை, வெறும் பணத் தொகையாகவே இருக்கிறது—வளரும் பணத் தொகை என்றாலும், அதன்பால் எம் முயற்சியும் இல்லாமலே வரப்பெறும் பணம் அதே பணப் பெட்டியி னுள் வைக்கப்படுகிறது என்பதாலேயே இவ்வளர்ச்சி ஏற்படுகிறது.

சேர்ப்பு என்ற வடிவம் சுற்றோட்டத்தில் செல்லாத பணத்தின் வடிவமே. சுற்றோட்டத்தில் தடைபட்டுப் போய்ப் பண வடிவி லேயே இருக்கிற வடிவமே. சேர்ப்பு நிகழ்முறையைப் பொறுத்த வரை அது சரக்கு உற்பத்தி அனைத்துக்குமே பொதுவானதுதான். சரக்கு உற்பத்தியின் வளர்ச்சி பெறாத நிலைகளில் மட்டுமே, முதலாளித்துவத்துக்கு முற்பட்ட நிலைகளில் மட்டுமே சேர்ப்பு சேர்ப்பதே ஒரு தனி இலட்சியமாய் இருக்கிறது. ஆனால் இப்போது நாம் பரிசீலிக்கும் விவகாரத்தில் சேர்ப்பானது பண-மூலதனத்தின் வடிவில் எழுகிறது. சேர்ப்பு சேர்ப்பது இங்கே மூலதனத் திரட்டலோடு

தற்காலிகமாய் உடன்வரும் நிகழ்முறையாக நடைபெறுகிறது. பணம் இங்கே உள்ளுறைப் பண-மூலதனமாக இருப்பதாலும், அப்படி இருந்து வரும் வரையிலும் இது நடைபெறுகிறது. பண வடிவம் பெறும் உபரி-மதிப்பு இங்கே சேர்ப்பாகச் சேரவும் சேர்ப்பின் நிலையில் இருக்கவும் வேண்டியதாகிறது. உபரி-மதிப்பு உள்ளபடியே செயல்திறனுள்ள மூலதனமாக உருமாறுவதற்குத் தேவையான தயாரிப்புக் கட்டமாய் பணவழியில் தீர்மானிக்கப் பெற்று இது மூலதனத்தின் சுற்றுக்கு வெளியே நடந்தேறுகிறது. இந்தச் சேர்ப்பு அதன் இலக்கணப்படி உள்ளுறை [latent] பண-மூலதனம் ஆகும். ஆக, உற்பத்தி நிகழ்முறையில் செயல்படுவதற்காக அது வந்தடைய வேண்டிய பருமனானது, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், உற்பத்தித் திறனுள்ள மதிப்பின் இயைபால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் சேர்ப்பாகவே இருந்து வரும் வரை, அது செயலற்றுச் சும்மாயிருக்கும் பண-மூலதனமாகுமே தவிர, பண-மூலதனப் பணிகளைப் புரிவதில்லை; முன்பு போல் செயல் தடைபட்டு விட்ட பண-மூலதனமாய் இல்லாமல், இன்னமும் செயல்படும் ஆற்றல் பெறாத பண-மூலதனமாய் இருக்கிறது.

இது வரை நாம் பணத் திரட்டலை உள்ளபடியே பணச் சேர்ப்பான அதன் மெய்யான ஆதி வடிவில் ஆராய்ந்தோம். இதன்றி இத்திரட்டல் வர வேண்டிய பணத்தின் வடிவிலும், C′ஐ விற்ற முதலாளிகள் கடன்பட்டோரிடமிருந்து பெற வேண்டிய பணத்தின் வடிவிலும் அமையலாம்; மற்றும் இந்த உள்ளுறைப் பண-மூலதனம் பணம் படைக்கும் பணத்தின் வடிவிலும், அதாவது வட்டி கிடைக்கும் வங்கிச் சேமிப்புகள் [bank deposits], உண்டியல்கள் [bills of exchange], வெவ்வேறு வகைப்பட்ட கடன் பத்திரங்கள் [securities] போன்ற பலவற்றின் வடிவிலும் அமையலாம் — இவற்றை எல்லாம் இங்கே நாம் பரிசீலிக்கத் தேவையில்லை, இவற்றில் பண வடிவில் ஈடேற்றம் பெறும் உபரி-மதிப்பானது அதனைத் தோற்றுவித்த தொழில் துறை மூலதனத்தின் சுற்றுக்கு வெளியே அமைந்த தனி வகை மூலதனப் பணிகளைப் புரிகிறது — இப்பணிகள், முதலாவதாக, மூலதனச் சுற்றுடன் எத்தொடர்பும் இல்லாதவை; இரண்டாவதாக, தொழில் துறை மூலதனத்தின் பணிகளிலிருந்து வேறுபடுகிற, இங்கே நாம் இன்னமும் விரித்துரைக்காத மூலதனப் பணிகளை அவசியமாக்குகிறவை.

## IV. சேம நிதி

உபரி-மதிப்பு சேர்ப்பின் வடிவில் நிலவுவது பற்றி மேலே விவாதித்தோம். இவ்வடிவிலான சேர்ப்பு பணத்தின் திரட்டலுக்கான நிதியாகிறது; மூலதனத் திரட்டல் தற்காலிகமாய் ஏற்கும் பண வடிவமாகிறது; அதே அளவுக்கு இத்திரட்டலுக்கு ஒரு முன்னிபந்தனையும் ஆகிறது. அதே போது இந்தத் திரட்டல் நிதியால் தனி

வகைப்பட்ட துணைநிலைச் சேவைகளையும் செய்ய முடிகிறது; அதாவது சுற்றுகளிலான மூலதன இயக்கத்துள் புக முடிகிறது— அதுவும் P ... P' என்னும் வடிவம் பெறாமலே, ஆகவே முதலாளித் துவ மறுவுற்பத்தியை விரிவாக்காமலே இதைச் செய்ய முடிகிறது.

C'—M' என்னும் நிகழ்முறை அதற்குரிய கால அளவுக்கு அதிக மாய் நீண்டு விடுமானால், சரக்கு-மூலதனம் பண வடிவத்துக்கு மாறுவது இதனால் மிதமிஞ்சித் தாமதப்பட்டு விடுமானால், அல்லது பண வடிவத்துக்கான மாற்றம் நடைபெற்ற பின், உதாரண மாய் பண-மூலதனத்தின் உருமாற்றத்தால் வரப்பெறும் உற்பத்திச் சாதனங்களின் விலை சுற்றின் தொடக்கத்தில் இருந்ததற்கு மேல் உயர்ந்து விடுமானால் திரட்டல் நிதியாகச் செயல்படும் சேர்ப்பைப் பண-மூலதனத்துக்கு அல்லது அதில் ஒரு பகுதிக்குப் பதிலாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு, பணத் திரட்டல் நிதி யானது சுற்றில் ஏற்படக் கூடிய இன்னல்களைச் சமாளிப்பதற்கான சேம நிதியாக [reserve fund] பயன்படுகிறது.

இத்தகைய சேம நிதியானது P ... P என்னும் சுற்றில் ஆராயப் பட்ட வாங்கற் சாதன அல்லது கொடுப்புச் சாதன நிதியிலிருந்து வேறுபடுவதாகும். வாங்கற் சாதனமும் கொடுப்புச் சாதனமும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பண-மூலதனத்தைச் சேர்ந்தவை (எனவே, நிகழ்முறையில் ஈடுபட்டுள்ள பொதுவான மூலதன-மதிப்பில் ஒரு பகுதியின் நிலவல் வடிவங்களாகும்). பண-மூலதனப் பகுதிகள் ஒன்றன் பின் ஒன்றாய் வெவ்வேறு நேரங்களில் தம் பணிகளைச் செய்பவை. தொடர்ச்சியாய் நடைபெறும் உற்பத்தி நிகழ்முறையின் போது, பண வரவுகள் ஒரு நாள் வரப்பெறும், ஆனால் செலவாகக் கொடுக்க வேண்டிய கொடுப்புகள் பிற்பாடே கொடுக்க வேண்டியிருக்கும்; இன்னொரு நாள் பெரும் அளவில் பண்டங்கள் விற்கப்படும், ஆனால் பெரும் அளவில் வாங்க வேண்டியவை பிற்பாடு வேறொரு நாளில் வாங்க வேண்டியிருக் கும்—இவ்விதம் சேமப் பண-மூலதனம் உருவாகிய வண்ணம் இருக்கும். அதோடு இந்நிகழ்வுகளுக்கு இடைப்பட்ட காலங்களில், சுழல்-மூலதனத்தில் [circulating capital] ஒரு பகுதி தொடர்ந்து பண வடிவிலேயே இருந்து வருகிறது. ஆனால் சேம நிதியானது ஏற் கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் மூலதனத்தை—இன்னும் துல்லியமாய்ச் சொன்னால், பண-மூலதனத்தை—சேர்ந்ததல்ல. மாறாக, இன்னமும் மூலதனமாகாமல் திரட்டலின் பூர்வாங்கக் கட்டத்தில் இருப்பதை—செயல்திறனுள்ள மூலதனமாக இன்னமும் மாற்றமடையாத உபரி-மதிப்பை—சேர்ந்தது அது. இக்கட்டான நிதி நிலைமையில் இருக்கும் ஒரு முதலாளி தம் கைவசமுள்ள பணம் குறிப்பிட்ட எப்பணிகளுக்காக இருக்கிறது எனக் கவலைப்பட மாட்டார் என்பதைக் கூறத் தேவையில்லை. அவர் தம் கைவச முள்ள பணம் எதுவாயினும் தமது மூலதனத்தைத் தொடர்ந்து

அதன் சுற்றோட்டத்தில் இயங்கச் செய்வதற்காகத் தயங்காமல் அப்பணத்தைப் பயன்படுத்துவார். உதாரணம்: நமது எடுத்துக் காட்டில் M என்பது £422க்குச் சமம். M′ என்பது £500க்குச் சமம். மூலதனமான £422இல் ஒரு பகுதி கொடுப்புக்கும் வாங்கலுக்கு மான சாதனமாகப் பயன்படும் நிதியாக, அதாவது பண ஓதுக்கீடாக இருக்குமாயின் அது— மற்ற நிலைமைகள் மாறாதிருக்க— முழுமை யாக மூலதனச் சுற்றில் சேரக் கூடியதாகவும், அதோடு இந்த நோக் கத்துக்குப் போதுமானதாகவும் இருத்தல் வேண்டும். ஆனால் சேம நிதி என்பது உபரி-மதிப்பான £78இல் ஒரு பகுதியாகும். அது £422 பெறுமானமுள்ள மூலதனத்தின் சுழல் இயக்கத்தில் சேர்வ தென்பது, இந்தச் சுற்றின் நிலைமைகளில் மாற்றம் ஏற்படும் அளவுக்கே சாத்தியம். ஏனெனில் அது திரட்டல் நிதியைச் சேர்ந்த தாகும், அதன் செயலால் இங்கு மறுவுற்பத்தியின் அளவுவீதம் [scale of reproduction] விரிவடைவதில்லை.

பணத் திரட்டல் நிதி என்பது, உள்ளுறை நிலையில் பண-மூலதனம் இருப்பதைக் குறிக்கிறது; ஆகவே பணம் பண-மூலதன மாக மாறுவதைக் குறிக்கிறது.

பின்வருவது திறனுடை-மூலதனத்தின் சுற்றுக்கான பொதுச் சூத்திரமாகும். இது சாமானிய மறுவுற்பத்தியையும் மேன்மேலும் அதிகரிக்கும் அளவுவீதத்திலான மறுவுற்பத்தியையும் ஒன்றிணைக் கிறது:

$$P \ldots \overbrace{C' - M'}^{1}. \qquad \overbrace{M - C}^{2} < {}^{L}_{mp} \ldots P(P').$$

P என்பது P க்குச் சமமானால், (2)இல் உள்ள M என்பது M′—m என்பதற்குச் சமம்; P என்பது P′க்குச் சமமானால், (2)இல் உள்ள M என்பது M′—m என்பதை விடப் பெரியது; அதாவது m முழுமையாகவோ பகுதியாகவோ பண-மூலதனமாக மாறி விட்டது.

தொழில் துறை மூலதனத்தின் சுழல் இயக்கத்தை தொல்சீர் அரசியல் பொருளாதாரம் [classical Political Economy] திறனுடை-மூலதனச் சுற்றின் வடிவில்தான் ஆராய்கிறது.

## அத்தியாயம் III

## சரக்கு-மூலதனத்தின் சுற்று

சரக்கு-மூலதனத்தின் சுற்றுக்கான பொதுச் சூத்திரம் வருமாறு:

$$C' - M' - C \ldots P \ldots C'.$$

இதில் C′ என்பது முன்கூறிய இருவகைச் சுற்றுகளால் விளையும் பயனாக மட்டுமல்லாமல், அவற்றின் முதனிலையாகவும் இருக்கிறது. ஏனெனில் உற்பத்திச் சாதனங்களில் ஒரு பகுதியேனும் தனிப்பட்ட பிற மூலதனங்களால் அவற்றின் சுற்றுகளின் போது உற்பத்தி செய்யப்படும் சரக்குகளாகும் என்பதால், தனிப்பட்ட ஒரு மூலதனத்துக்கு M—Cஆக அமைவது தனிப்பட்ட வேறொரு மூலதனத்துக்கு C′—M′ ஆக அமைகிறது. நமது எடுத்துக்காட்டில், நிலக்கரி, இயந்திர சாதனம் முதலானவை சுரங்க முதலாளி, இயந்திரக் கட்டுமான முதலாளி முதலானோரின் சரக்கு-மூலதனத்தைக் குறிக்கின்றன. மேலும், M … M′ என்ற சுற்றின் முதலாவது மறுநிகழ்விலேயே, அதாவது பண-மூலதனத்தின் இரண்டாவது சுற்று பூர்த்தியாவதற்கு முன்பே, P … P என்ற சுற்று மட்டுமல்லாமல் C′ … C′ என்ற சுற்றும் அவசியமாகி விடுவதை அத்தியாயம் I., பிரிவு IVஇல் தெளிவுபடுத்தினோம்.

விரிதிற மறுவுற்பத்தி நடைபெற்றால், முடிவில் வரும் C′ ஆரம்பத்தில் வரும் C′ஐக் காட்டிலும் பெரியது; ஆகவே இங்கே அதனை C′′ என்று குறித்திட வேண்டும்.

மூன்றாவது வகைச் சுற்றுக்கும் முதல் இரு வகைச் சுற்றுகளுக்கும் இடையிலான வேறுபாடு வருமாறு: முதலாவதாக, மூன்றாவது வகைச் சுற்றில் இரு எதிர்நிலைக் கட்டங்களோடு கூடிய முழுச் சுற்றோட்டம் சுற்றினைத் தொடக்கி வைக்கிறது; முதல் வகைச் சுற்றில் உற்பத்தி நிகழ்முறை சுற்றோட்டத்தில் குறுக்கிடுகிறது; இரண்டாவது வகைச் சுற்றில் ஒன்றையொன்று நிறைவு செய்யும் இரு கட்டங்களோடு கூடிய முழுச் சுற்றோட்டம் மறுவுற்பத்தி நிகழ்முறையை நிறைவேற்றும் உபாயமாகவே விளங்குகிறது; ஆகவே P … P என்பதன் நடுவில் இடைக் கண்ணியாகப் பயன்படும் இயக்க

மாகிறது. M ... M′ என்பதில் சுற்றோட்டத்தின் வடிவம் M—C ... C′—M′=M—C—M என்பதாகும். P ... P என்பதில் சுற்றோட்டத்தின் வடிவம் எதிர்மாறாகி C′—M′. M—C=C—M—C என்பதாகிறது. C′ ... C′ என்பதிலும் இதுவே சுற்றோட்டத்தின் வடிவமாகிறது.

இரண்டாவதாக, முதல் வகைச் சுற்றும் இரண்டாம் வகைச் சுற்றும் திரும்ப நிகழும் போது, இறுதி முனைகளான M′, P′ ஆகியவையே புதிய சுற்றுகளின் தொடக்க முனைகளாய் இருப்பினும், உற்பத்தியான போது பெற்றிருந்த உருவினை அவை இழந்துவிடுகின்றன. M′=M+m என்பதும் P′=P+p என்பதும் M ஆகவும் P ஆகவும் புதிய நிகழ்முறையைத் தொடக்குகின்றன. ஆனால், மூன்றாவது வகைச் சுற்று முன்போல் அதே அளவில் மறுபடியும் நிகழ்ந்தாலும் கூட, தொடக்க முனையான Cஐ C′ என்றே குறிப்பிட வேண்டும். ஏனென்றால் முதலாவது சுற்றில் M′ நேரடியாகப் புதிய சுற்றைத் தொடக்கும் போது, M என்னும் பண-மூலதனமாகவே செயல்படுகிறது; உபரி-மதிப்பை உற்பத்தி செய்ய வேண்டிய மூலதன-மதிப்பின் பண வடிவ முன்னீடாகவே செயல்படுகிறது. முன்னீடு செய்யப்படும் பண-மூலதனத்தின் அளவு முதல் சுற்றின் போது நடந்த திரட்டலால் அதிகரித்துள்ளது. ஆனால் முன்னீடு செய்யப்படும் பண-மூலதனத்தின் அளவு £422 ஆனாலும் சரி, £500 ஆனாலும் சரி, அது சாமானிய மூலதன-மதிப்பே ஆகும். முன்போல் M′ இப்போது தற்பெருக்கமடைந்த மூலதனமாக, உபரி-மதிப்பைச் சுமந்து வரும் மூலதனமாக, அதாவது மூலதன உறவாக இருக்கவில்லை. தனது சுற்றின் நிகழ்முறையின் போதுதான் அது தன்னைப் பெருக்கிக் கொள்ளப் போகிறது. P ... P′ என்பதிலும் இவ்வாறே P′ ஆனது P ஆகத்தான், அதாவது உபரி-மதிப்பை உற்பத்தி செய்ய வேண்டிய மூலதன-மதிப்பாகத்தான் தொடர்ந்து செயல்பட்டு தனது சுற்றினை மறுபடியும் நிகழ்த்தியாக வேண்டும்.

ஆனால் சரக்கு-மூலதனச் சுற்று சாமானிய மூலதன-மதிப்பிலிருந்து தொடங்காமல், சரக்கு வடிவில் பெருகி விட்ட மூலதன-மதிப்பிலிருந்து தொடங்குகிறது. இவ்வாறு இந்தச் சுற்று சரக்குகளின் வடிவிலான மூலதன-மதிப்பின் சுற்றை மட்டுமல்லாமல் உபரி-மதிப்பின் சுற்றையும் ஆரம்பத்திலிருந்தே தன்னுள் கொண்டதாகும். ஆகவே சாமானிய மறுவுற்பத்தி இந்த வடிவில் நடைபெற்றால், இறுதி முனையான C′ ஆனது அளவில் தொடக்க முனையான C′க்குச் சமமாகும். உபரி-மதிப்பின் ஒரு பகுதி மூலதனச் சுற்றில் சேருமானால், சுற்றின் முடிவில் C′க்கு பதில் C″ வருகிறது; C″ என்பது பெருகிய C′ ஆகும். ஆனால் இதையடுத்து வரும் சுற்று மீண்டும் C′இலிருந்தே ஆரம்பமாகிறது. இந்த C′ இதற்கு முந்தைய சுற்றின் தொடக்கத்தில் வந்த C′ஐ விடப் பெரியது, திரட்டப்பட்ட மூலதன-மதிப்பை இன்னுமதிகமாய்க்

கொண்டது. ஆகவே, அது புதிய சுற்றைத் தொடக்கும் போது, புதிதாய்ப் படைக்கப்பட்ட உபரி-மதிப்பை ஒப்பளவில் இன்னுமதி கமாய்க் கொண்டிருக்கிறது. ஆயினும், எப்போதுமே C′ ஆனது மூலதன-மதிப்பு, உபரி-மதிப்பு ஆகிய இரண்டும் சேர்ந்த சரக்கு-மூலதனமாகவே சுற்றினைத் தொடக்குகிறது.

C′ ஆனது தனிப்பட்ட ஒரு தொழில் துறை மூலதனத்தின் சுற்றில் C ஆக வரும் போது, அது இந்த மூலதனத்தின் வடிவமாய் அமையாமல் (உற்பத்திச் சாதனங்கள் வேறொரு தொழில் துறை மூலதனத்தின் உற்பத்திப் பொருளாய் இருப்பதால்) அந்த வேறொரு தொழில் துறை மூலதனத்தின் வடிவமே ஆகிறது. முதலாவது மூலதனத்தின் M—C (அதாவது M—mp) என்னும் செயல் இந்த இரண்டாம் மூலதனத்துக்கு C′—M′ ஆகும்.

$M-C<^{L}_{mp}$ என்னும் சுற்றோட்டச் செயலில் L, mp ஆகிய இரண்டும் அவற்றை விற்போரது சரக்குகள் என்பதால்—ஒரு புறம் தொழிலாளர்கள் தம் உழைப்புச் சக்தியை விற்கிறார்கள், மறு புறம் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்கள் தம் உற்பத்திப் பொருளான இச்சாதனங்களை விற்கிறார்கள்—அவை இங்கே ஒரே மாதிரியான உறவுகளைக் கொண்டுள்ளன. இங்கே பண-மூலதன மாகச் செயல்படும் பணத்தின் உடைமையாளர் இந்த உழைப்புச் சக்தியையும் உற்பத்திச் சாதனங்களையும் விலைக்கு வாங்குகிறார். L, mp ஆகியவற்றை அவர் வாங்கி முடிக்கும் வரை, இவ்விதம் அவை பண வடிவில் நிலவுகிற அவரது மூலதனத்தை ஏனையோரது சரக்குகளாக எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் வரை, இந்த L, mpஉம் சரக்குகளாகத்தான் செயல்படுகின்றன. mp, L ஆகியவை இங்கு ஒரே ஒரு விதத்தில்தான் வேறுபடுகின்றன; mp ஆனது அதை விற்பவரது மூலதனத்தின் சரக்கு வடிவமாக இருந்தால், அவர் கையில் C′ ஆக்லாம், அதாவது மூலதனம் ஆகலாம். ஆனால் L ஆனது தொழிலாளிக்கு எப்போதுமே சரக்குதான். அதை விலைக்கு வாங்குபவரின் கையில்தான், Pஇன் அடக்கக் கூறு என்ற முறையில் அது மூலதனமாகிறது.

ஆகவேதான், C′ ஆனது வெறும் C ஆக, மூலதன-மதிப்பின் வெறும் சரக்கு வடிவமாக எந்தச் சுற்றையும் தொடக்கி வைக்க முடியாது. சரக்கு-மூலதனம் என்ற முறையில் அது எப்போதுமே இரட்டைத் தன்மை கொண்டது. பயன்-மதிப்பின் கோணத்தி லிருந்து பார்த்தால், அது Pஇன் பணியால் விளையும் உற்பத்திப் பொருளாகும், நமது உதாரணத்தில் நூலாகும்; Pஇன் கூறுகளான L, mp ஆகியவை—இவை சுற்றோட்டத் துறையிலிருந்து சரக்கு களாக வருபவை—இந்த உற்பத்திப் பொருளின் ஆக்கக் காரணி களாகச் செயல்பட்டுள்ளன. இரண்டாவதாக, மதிப்பின் கோணத் திலிருந்து பார்த்தால் அது P என்னும் மூலதன-மதிப்பு, Pஇன் பணியால் விளையும் s என்னும் உபரி-மதிப்பு ஆகியவற்றின்

கூட்டுத் தொகையாகும்.

C′ நிகழ்த்துகிற சுற்றில்தான், P என்னும் மூலதன-மதிப்புக்குச் சமமாகிய C ஆனது C′இல் உபரி-மதிப்பாக நிலவும் பகுதியிலிருந்து, அதாவது உபரி-மதிப்பின் உறைவிடமான உபரி-உற்பத்திப் பொருளிலிருந்து பிரிய முடியும், பிரியவும் வேண்டும். இரண்டையும் உள்ளபடியே பிரிக்க முடிகிறதா (உதாரணமாக நூலில் பிரிக்கலாம்), பிரிக்க முடிவதில்லையா (உதாரணமாக இயந்திரத்தில் பிரிக்க முடியாது) என்பது பற்றிக் கவலை இல்லை. எப்படியும், C′ஆனது M′ஆக மாறியதும் இரண்டும் பிரிக்கக் கூடியவை ஆகி விடுகின்றன.

நமது 10,000 இராத்தல் நூலைப் போல் சரக்கு-உற்பத்தி முழுவதையும் சுயேச்சையான, ஒருபடித்தான கூறுகளாகப் பகுக்க முடியுமானால், ஆகவே C′—M′ என்னும் செயலை வரிசையான பல விற்றல்களாய்க் குறிக்க முடியுமானால், உபரி-மதிப்பு ஈடேற்றம் பெறுமுன்னர், ஆகவே C′ முழுவதுமாக ஈடேற்றம் பெறுமுன்னர், சரக்குகளின் வடிவிலான மூலதன-மதிப்பு C ஆகச் செயல்பட முடியும், C′இலிருந்து தனியே பிரிய முடியும்.

£500 பெறுமானமுள்ள 10,000 இராத்தல் நூலின் மதிப்பானது உபரி-மதிப்பு நீங்கலான மூலதன-மதிப்புக்குச் சமம். முதலாளி முதலில் 8,440 இராத்தல் நூலை £422க்கு விற்றால், இந்த 8,440 இராத்தல் நூல் சரக்கு வடிவிலான மூலதன-மதிப்பாகிய Cஐக் குறிக்கிறது. C′இல் எஞ்சியிருப்பது £78 உபரி-மதிப்புக்குச் சமமான 1,560 இராத்தல் நூலாகிய உபரி-உற்பத்தி; இது உடனடியாகச் சுற்றோட்டத்தில் செல்வதில்லை. உபரி-உற்பத்தியின் சுற்றோட்டமான c—m—c நடைபெறும் முன்னரே முதலாளி $C-M-C<^{L}_{mp}$ என்பதை நடைபெறச் செய்ய முடியும்.

அல்லது, அவர் முதலில் £372 பெறுமானமுள்ள 7,440 இராத்தல் நூலையும், பின்னர் £50 பெறுமானமுள்ள 1,000 இராத்தல் நூலையும் விற்பாரானால், உற்பத்திச் சாதனங்களை (மாறா-மூலதனமாகிய cஐ) Cஇன் முதல் பகுதியைக் கொண்டும், உழைப்புச் சக்தியான v என்னும் மாறும்-மூலதனத்தை Cஇன் இரண்டாவது பகுதியைக் கொண்டும் மாற்றீடு செய்து கொண்டு, முன்போலவே மேலும் செயல்படலாம்.

ஆனால் ஒவ்வொரு கூறாக இப்படி அடுத்தடுத்து வரிசையாக விற்கப்படுமானால், மூலதனச் சுற்றின் நிலைமைகள் அதற்கு இடமளிக்குமானால், C′ என்பதை முதலாளி c+v+s என்று கூறு போடுவதற்கு பதில் C′இன் ஈவுப் பகுதி ஒவ்வொன்றையுமே இவ்வாறு கூறு போட முடியும்.

உதாரணமாக, (£500 பெறுமானமுள்ள 10,000 இராத்தல் நூலாகிய) C′ என்பதன் பகுதியென்ற முறையில் மூலதனத்தின் மாறாப் பகுதியைக் குறிக்கும் £372க்குச் சமமான 7,440 இராத்தல் நூலையே—7,440 இராத்தல் நூலை உற்பத்தி செய்வதற்குப்

பயன்படுத்தப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்பான—மாறா-மூல தனத்தை மட்டும் மாற்றீடு செய்யும் £276.768 பெறுமானமுள்ள 5,535.360 இராத்தல் நூலாகவும், மாறும்-மூலதனத்தை மட்டும் மாற்றீடு செய்யும் £37.200 பெறுமானமுள்ள 744 இராத்தல் நூலாகவும், உபரி-உற்பத்தியாதலால் உபரி-மதிப்பின் உறைவிடமா கிற £58.032 பெறுமானமுள்ள 1,160.640 இரா்த்தல் நூலா கவும் பிரிக்கலாம். ஆதலால், 7,440 இராத்தல் நூலை விற்றதும், அவர் அதில் அடங்கிய மூலதன-மதிப்பை 6,279.360 இராத்தல் நூலின் விலையாகிய £313.968ஐக் கொண்டு மாற்றீடு செய்ய முடி யும்; 1,160.640 இராத்தல் நூல் அல்லது £58.032க்குச் சமமான உபரி-உற்பத்தியின் மதிப்பைத் தமது வருவாயாகச் செலவிட முடியும்.

இவ்வாறே அவர் மாறும்-மூலதன மதிப்பாகிய £50க்குச் சமமான 1,000 இராத்தல் நூலைக் கூறு போட்டு விற்கலாம்; £37.200 பெறுமானமுள்ள 744 இராத்தல் நூல் 1,000 இராத்தல் நூலில் அடங்கிய மாறா-மூலதன மதிப்பாகும்; £5.000 பெறுமானமுள்ள 100 இராத்தல் நூல், மேற்படி 1,000 இராத்தல் நூலில் அடங்கிய மாறும்-மூலதன மதிப்பாகும்; £42.200 பெறு மானமுள்ள 844 இராத்தல் நூல் 1,000 இராத்தல் நூலில் அடங் கிய மூலதன-மதிப்பை மாற்றீடு செய்கிறது; முடிவில், £7.800 பெறுமானமுள்ள 156 இராத்தல் நூல் அதில் அடங்கிய உபரி-உற்பத்தியைக் குறிக்கிறது; ஆகவே இது முதலாளியின் வருவாயாக நுகரப்படக் கூடியது.

முடிவில், மீதமுள்ள £78 பெறுமானமுள்ள 1,560 இராத்தல் நூலை விற்க முடியும் போது, அதனை அவர் பின்வருமாறு கூறு போட்டு விற்கலாம். £58.032 பெறுமானமுள்ள 1,160.640 இராத்தல் நூலை விற்று, அந்த 1,560 இராத்தல் நூலில் அடங்கிய உற்பத்திச் சாதனங்களின் மதிப்பை மாற்றீடு செய்து கொள்ளலாம்; £7.800 பெறுமானமுள்ள 156 இராத்தல் நூல் மாறும்-மூலதன மதிப்பை மாற்றீடு செய்கிறது; மொத்தத்தில் £65.832க்குச் சமமான 1,316.640 இராத்தல் நூல் மொத்த மூலதன-மதிப்பை மாற்றீடு செய்கிறது; முடிவில் £12.168க்குச் சமமான 243.360 இராத்தல் நூல் உபரி-உற்பத்தியாதலால் அவரது வருவாயாகச் செலவிடப்படு கிறது.

நூலில் அடங்கிய c, v, s ஆகிய எல்லாப் பகுதிகளையும் இவ் வாறே அடக்கக் கூறுகளாகப் பிரிக்கலாம்; 1 ஷில்லிங் அல்லது 12 பென்னி பெறுமானமுள்ள ஒவ்வொரு இராத்தல் நூலையும் கூட இவ்வாறே பிரிக்கலாம்.

c = 0.744 இராத்தல் நூல் = 8.928 பென்னி
v = 0.100 இராத்தல் நூல் = 1.200 பென்னி
s = 0.156 இராத்தல் நூல் = 1.872 பென்னி

c+v+s = 1 இராத்தல் நூல் = 12 பென்னி

மேற்கண்டவாறு மூன்று பகுதிகளாகக் கூறு போட்டு விற்பதன் விளைவுகளைக் கூட்டிப் பார்த்தால், 10,000 இராத்தல் நூல் முழுவதையும் மொத்தமாக விற்பதன் அதே விளைவே கிடைக்கிறது.

மாறா-மூலதனத்தில்:

| | | | |
|---|---|---|---|
| முதலாவது விற்றல்: | 5,535.360 | இராத்தல் நூல் | = £276.768 |
| இரண்டாவது விற்றல்: | 744.000 | இராத்தல் நூல் | = £ 37.200 |
| மூன்றாவது விற்றல்: | 1.160.640 | இராத்தல் நூல் | = £ 58.032 |
| மொத்தம். | 7,440 | இராத்தல் நூல் | = £372 |

மாறும்-மூலதனத்தில்:

| | | | |
|---|---|---|---|
| முதலாவது விற்றல்: | 744.000 | இராத்தல் நூல் | = £37.200 |
| இரண்டாவது விற்றல்: | 100.000 | இராத்தல் நூல் | = £ 5.000 |
| மூன்றாவது விற்றல்: | 156.000 | இராத்தல் நூல் | = £ 7.800 |
| மொத்தம். . . . . | 1,000 | இராத்தல் நூல் | = £50 |

உபரி-மதிப்பில்:

| | | | |
|---|---|---|---|
| முதலாவது விற்றல்: | 1,160.640 | இராத்தல் நூல் | = £58.032 |
| இரண்டாவது விற்றல்: | 156.000 | இராத்தல் நூல் | = £ 7.800 |
| மூன்றாவது விற்றல்: | 243.360 | இராத்தல் நூல் | = £12.168 |
| மொத்தம். . . . . | 1,560 | இராத்தல் நூல் | = £78 |

எல்லாவற்றையும் கூட்டி வரும் மொத்தம்:

| | | | |
|---|---|---|---|
| மாறா-மூலதனம். . | 7,440 | இராத்தல் நூல் | = £372 |
| மாறும்-மூலதனம். . | 1,000 | இராத்தல் நூல் | = £ 50 |
| உபரி-மதிப்பு. . . | 1,560 | இராத்தல் நூல் | = £ 78 |
| மொத்தம். . . | 10,000 | இராத்தல் நூல் | = £500 |

C′—M′ என்பது 10,000 இராத்தல் நூல் விற்கப்படுவதையே குறிக்கிறது. இந்த 10,000 இராத்தல் நூலும் வேறு எந்த நூலையும் போல் ஒரு சரக்கே ஆகும். நூலை வாங்குகிறவர் கருத்து செலுத்துவது இராத்தலுக்கு 1 ஷில்லிங், அல்லது 10,000 இராத்தலுக்கு £500 என்ற அதன் விலையில்தான். பேரம் பேசும் போது அவர் நூலின் மதிப்பு-இயைபில் கருத்து செலுத்துவாராயின், இராத்தலுக்கு 1 ஷில்லிங்குக்குக் குறைவான விலைக்கே விற்கலாம், அது விற்பவருக்கு ஆதாயமானதுதான் என்று காட்டுவதே அவரது அந்தரங்க நோக்கமாய் இருக்கும். ஆனால் அவர் விலைக்கு வாங்கும் நூலின் அளவு அவரது தேவையைப் பொறுத்தது. உதாரணமாக, அவர் நூற்பாலை அதிபராய் இருந்தால், அவர் வாங்கும் நூலின் அளவு இந்தத் தொழிலில் செயல்படும் அவரது மூலதனத்தின் இயைபைப் பொறுத்ததே தவிர, யாரிடமிருந்து நூல்

வாங்குகிறாரோ அந்த நூற்பாளரது மூலதனத்தின் இயைபைப் பொறுத்ததன்று. C′ ஆனது ஒரு புறம் அதன் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்ட மூலதனத்தை (அல்லது இந்த மூலதனத்தின் பல்வேறு அடக்கக் கூறுகளை) மாற்றீடு செய்யவும், மறு புறம் உபரி-மதிப்பாகச் செலவிடுவதற்கோ மூலதனமாகத் திரட்டுவதற்கோ தேவைப்படும் உபரி-உற்பத்தியாகப் பயன்படவும் வேண்டிய விகிதாசாரங்கள் 10,000 இராத்தல் நூலை சரக்கு-வடிவமாகக் கொண்ட மூலதனத்தின் சுற்றுக்கு மட்டுமே உரியவை. இந்த விகிதாசாரங்களுக்கும் நூலின் விற்பனைக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. மேலும், இங்கு நமது உதாரணத்தில் C′ ஆனது அதன் மதிப்புக்குச் சமமான விலைக்கு விற்கப்படுவதாகக் கொள்கிறோம் என்பதால், சரக்கு வடிவிலுள்ள அது பண வடிவத்துக்கு மாற வேண்டியதே இங்கு நம் முன்னுள்ள பிரச்சினை. C′ என்பது தனிப்பட்ட மூலதனம் அதன் சுற்றின் போது ஏற்கும் பணிவழிப்பட்ட வடிவம் [functional form] என்பதாலும், திறனுடை-மூலதனம் இதைக் கொண்டுதான் மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டும் என்பதாலும், அது விற்கப்படும் விலைக்கும் அதன் மதிப்புக்கும் இடையே வேறுபாடு [discrepancy] இருக்குமாயின் எந்த அளவுக்கு இருக்கிறது என்பது C′ஐப் பொறுத்த மட்டில் தீர்மானகர முக்கியத்துவம் பெறுவது மெய்தான். ஆனால் வெறும் வடிவ மாறுபாடுகளைப் பரிசீலித்துக் கொண்டிருக்கும் நமக்கு இது இங்கே கருத்துக்கு உரியதல்ல.

முதல் வகைச் சுற்றில், அதாவது M ... M′ என்பதில், மூலதனச் சுற்றோட்டத்தில் ஒன்றையொன்று நிறைவு செய்கிறவையும், எதிர்மாறானவையுமான இரு கட்டங்களுக்குமிடையே உற்பத்தி நிகழ்முறை குறுக்கிடுகிறது. கடைசிக் கட்டமான C′—M′ ஆரம்பமாகு முன் உற்பத்தி நிகழ்முறை முடிவடைந்து விடுகிறது. பணமானது மூலதனமாக முன்னீடு செய்யப்பட்டு, முதலில் உற்பத்தி-அடிக்கூறுகளாகவும், இவற்றிலிருந்து சரக்கு-உற்பத்தியாகவும் [commodity-product] மாற்றப்படுகிறது; இந்தச் சரக்கு-உற்பத்தி திரும்பவும் பணமாக மாற்றப்படுகிறது. இது முழுநிறைவான தொழிற் சகடம் ஆகும்; இதன் இறுதி விளைவாகிய பணத்தை எவரும் எதற்கும் பயன்படுத்த முடியும். இந்தப் பணம் ஒரு புதிய தொடக்கமாகலாம்; ஆனால் இது ஒரு சாத்தியப்பாடுதான். M ... P ... M′ என்பது தனிப்பட்ட ஒரு மூலதனம் தன் வேலையை முடித்துக் கொண்டு தொழிலிலிருந்து விலகுவதைக் குறிக்கும் கடைசிச் சுற்றாகவும் இருக்கலாம்; புதிதாகப் பிரவேசித்து வேலை தொடங்கும் புதிய மூலதனத்தின் முதல் சுற்றாகவும் இருக்கலாம். பொதுவான சுழல் இயக்கம் இங்கே M ... M′ ஆக இருக்கிறது; அதாவது பணத்தில் தொடங்கி மேலும் கூடுதலான பணத்தில் முடிவடைகிறது.

இரண்டாவது வகைச் சுற்றில், அதாவது P ... C′—M′—C ... P(P′) என்பதில், சுற்றோட்ட நிகழ்முறை முழுவதுமே முதலாவது Pக்குப்

பின்னரும் இரண்டாவது Pக்கு முன்னரும் நடைபெறுகிறது. ஆனால் இதன் வரிசை ஒழுங்கு முதல் வகைச் சுற்றின் வரிசை ஒழுங்குக்கு நேர்மாறானது. முதலில் வரும் P திறனுடை-மூலதன மாகும்; அதன் பணி அடுத்து வரும் சுற்றோட்ட நிகழ்முறைக்குத் தேவைப்படும் உற்பத்தி நிகழ்முறையாகும். ஆனால் கடைசியில் வரும் P உற்பத்தி நிகழ்முறையைக் குறிக்கவில்லை; தொழில் துறை மூலதனம் மீண்டும் திறனுடை-மூலதன வடிவில் நிலவுவதையே குறிக் கிறது. ஏனென்றால் மூலதன-மதிப்பானது சுற்றோட்டத்தின் கடைசிக் கட்டத்தில் L+mp ஆக உருமாறுகிறது; அதாவது ஒன் றிணைகையில் திறனுடை-மூலதனத்தின் நிலவல் வடிவமாகிற ஆள் வகை, பொருள்வகைக் காரணிகளாக உருமாறுகிறது. மூலதனம் P ஆனாலும் சரி, P' ஆனாலும் சரி, முடிவில் அது திரும்பவும் திறனுடை-மூலதனமாய் செயல்பட்டாக வேண்டிய—மீண்டும் உற் பத்தி நிகழ்முறையை நிறைவேற்றியாக வேண்டிய—வடிவத்துக்குத் திரும்புகிறது. P ... P என்னும் சுழல் இயக்கத்தின் பொது வடிவம் தான் மறுவுற்பத்தியின் வடிவம். இது, M ... M' என்பது காட்டுவது போல், மதிப்பின் தற்பெருக்கமே இந்நிகழ்முறையின் குறிக்கோள் என்று காட்டவில்லை. இதனால் இவ்வடிவத்தை எடுத்தாளும் தொல்சீர் அரசியல் பொருளாதாரம் இந்தப் பொருளுற்பத்தி நிகழ் முறையின் திட்டவட்டமான முதலாளித்துவ வடிவத்தைக் காணாமல் ஒதுக்கி விட்டு பொருளுற்பத்தியே இந்நிகழ்முறையின் நோக்கமெனச் சித்திரிப்பது சுலபமாகி விடுகிறது; அதாவது முடிந்த வரை அதிக மாகவும் முடிந்த வரை மலிவாகவும் உற்பத்தி செய்வதும், ஒரு புறம் திரும்பத் திரும்ப தொடர்ந்து உற்பத்தி செய்வதற்காகவும் (M — C) மறு புறம் நுகர்வுக்காகவும் (m—c) உற்பத்திப் பொருளை மிகப் பல்வேறுபட்ட ஏனைய உற்பத்திப் பொருட்களுக்காகப் பரிவர்த் தனை செய்வதும்தான் நோக்கமெனக் காட்டுவது சுலபமாகி விடு கிறது. பணத்துக்கும் பண-மூலதனத்துக்குமுள்ள தனித் தன்மை களைக் கவனியாது விலக்குவது இதன் பின் சாத்தியமாகி விடுகிறது. ஏனென்றால், M, m ஆகியவை இங்கே சரக்குச் சுற்றோட்டத்துக் கான தற்காலிக சாதனமாகத்தான் செயல்படுகின்றன. இந்நிகழ் முறை முழுதுமே எளிமை வாய்ந்ததாய், இயற்கையானதாய் இருப்ப தாகத் தெரிகிறது; அதாவது, மேலோட்டமான பகுத்தறிவுவாதத் துக்கு உரிய அந்த இயற்கையான தன்மையை இதுவும் பெற்றிருக் கிறது. இதே முறையில்தான் சரக்கு-மூலதனத்தில் அடங்கியுள்ள இலாபமும் சில சமயம் மறக்கப்பட்டு விடுகிறது—உற்பத்தியின் முழுச் சுற்றையும் விவாதிக்கையில் சரக்கு-மூலதனமானது வெறும் சரக்காகி விடுகிறது. ஆனால் மதிப்பின் அடக்கக் கூறுகளை விவாதிக்க முற்பட்டதும் சரக்கு-மூலதனம் சரக்கு-மூலதனமாகச் செயல்படுவதாய் பாவிக்கப்படுகிறது. உற்பத்தியைப் போல் அதே கோணத்திலிருந்துதான் திரட்டலும் ஆராயப்படுகிறது.

மூன்றாவது வகைச் சுற்றில், அதாவது C′ — M′ — C ... P ... C′ என்பதில் சுற்றோட்ட நிகழ்முறையின் இரு கட்டங்களும் சுற்றினைத் தொடக்கி வைக்கின்றன; இரண்டாவது வகையான P ... P என்பதில் காணப்படும் அதே வரிசை ஒழுங்கில் அவை இதைச் செய்கின்றன. அடுத்து வருவது P; முதல் வகைச் சுற்றில் நிகழ்வதாகிய அதே உற்பத்தி நிகழ்முறைதான் Pஇன் பணி. உற்பத்தி நிகழ்முறையால் விளையும் பயனாகிய C′என்பதோடு சுற்று முடிவடைகிறது. இரண்டாவது வகைச் சுற்று எப்படித் திரும்பவும் புதிதாக எழுந்துள்ள திறனுடை-மூலதனமே ஆகிய P என்பதோடு முடிவடைகிறதோ, அதே போல் இங்கேயும் திரும்பவும் புதிதாய் எழுந்துள்ள சரக்கு-மூலதனமே ஆகிய C′ என்பதோடு முடிவடைகிறது. இரண்டாவது வகையில் எப்படி மூலதனம் இச்சுற்றின் இறுதி முனையாகிய Pஇன் வடிவில் உற்பத்தி நிகழ்முறையாக மீண்டும் சுற்றினைத் தொடக்க வேண்டுமோ, அதே போல் இங்கேயும் தொழில் துறை மூலதனம் மீண்டும் சரக்கு-மூலதனமாக வடிவமெடுத்தவுடனே சுற்றானது C′—M′ என்னும் சுற்றோட்டக் கட்டத்திலிருந்து திரும்பவும் தொடங்க வேண்டும். இந்த இரு வகைச் சுற்றுகளும் நிறைவு பெறாதவை. ஏனெனில் தற்பெருக்கம் அடைந்ததும் திரும்பவும் பணமாக உருமாறியதுமாகிய மூலதன-மதிப்பான M′ என்பதுடன் இவை இரண்டும் முடிவுறவில்லை. எனவே இரண்டும் மேலும் தொடரப்பட்டு, மறுவுற்பத்தியும் இவ்விதம் இவற்றுடன் சேர்க்கப்பட்டாக வேண்டும். C′ ... C′ என்பதே மூன்றாவது வகைப்பட்ட முழுச் சுற்று.

இந்த மூன்றாவது வகைச் சுற்றை முதல் இரு வகைச் சுற்றுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது என்னவென்றால்: தற்பெருக்கமடைந்த மூலதன-மதிப்பு — இனிமேல்தான் உபரி-மதிப்பை உண்டாக்கப் போகிற ஆரம்ப மூலதன-மதிப்பு அல்ல — இந்தச் சுற்றில்தான் அதன் தற்பெருக்கத்தின் தொடக்க முனையாய் அமைகிறது. இங்கே C′ஆனது மூலதன உறவென்ற முறையில் சுற்றின் தொடக்க முனையாய் அமைகிறது. முழுச் சுற்று மீதும் மூலதன உறவென்ற முறையில் அது தீர்மானகரத் தாக்கம் உண்டாக்குகிறது. ஏனென்றால், இச்சுற்று அதன் முதல் கட்டத்திலேயே மூலதன-மதிப்பின் சுற்றும் அதோடு உபரி-மதிப்பின் சுற்றும் சேர்ந்த ஒன்றாய் இருக்கிறது; தவிரவும் உபரி-மதிப்பானது ஒவ்வொரு சுற்றிலும் இல்லையென்றாலும் எப்படியும் சராசரியாக வேனும் ஒரு பகுதி வருவாயாகச் செலவிடப்பட்டு c—m—c என்னும் சுற்றோட்டத்தில் செல்ல, மற்றொரு பகுதி மூலதனத் திரட்டலுக்கான ஆக்கக் கூறாய்ச் செயல்பட்டாக வேண்டும்.

C′ ... C′ என்னும் சுற்றில் சரக்கு-உற்பத்தி முழுவதும் நுகரப்படுவதாகக் கொள்கிறோம்; மூலதனச் சுற்று முறைப்படி ஒழுங்காய் நிகழ்வதற்கு இது அவசியமாகும். தொழிலாளியினது சொந்த

நுகர்வும் உபரி-உற்பத்தியிலிருந்து திரட்டலுக்குச் செல்லாத பகுதி யாலான சொந்த நுகர்வும்தான் மொத்தமுள்ள சொந்த நுகர்வு. இவ்விதம் சொந்த நுகர்வு, திறனுடை நுகர்வு ஆகிய இரண்டுமாகிய மொத்த நுகர்வானது C′ என்பதன் சுற்றுக்கு அவசியமான ஒன் றாய் அந்தச் சுற்றில் சேர்க்கிறது. திறனுடை நுகர்வில் இயல்பாகவே தொழிலாளியின் சொந்த நுகர்வும் அடங்குகிறது; ஏனென்றால் உழைப்புச் சக்தியானது குறிப்பிட்ட சில வரம்புகளுக்குள் தொழி லாளியின் சொந்த நுகர்வினது தொடர்ச்சியாய் விளங்கும் அதன் உற்பத்திப் பொருளே ஆகும். திறனுடை நுகர்வு என்பது தனிப் பட்ட ஒவ்வொரு மூலதனமும் செய்கிற காரியமாகும். ஆனால் சொந்த நுகர்வு என்பது—தனிப்பட்ட முதலாளியின் வாழ்வுக்குத் தேவையானதைத் தவிர்த்து—இங்கு சமூதாயச் செயலாகவே அன்றி தனிப்பட்ட முதலாளியின் செயலாகக் கொள்ளப்படவில்லை.

முதலாவது, இரண்டாவது வகைச் சுற்றுகளில் முழுச் சுழல் இயக்கமும் முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பின் இயக்கமாகக் காட்சியளிக்கிறது. மூன்றாவது வகைச் சுற்றில் தற்பெருக்கமடைந்த மூலதனமானது முழுமொத்த சரக்கு-உற்பத்தியின் வடிவில் சுற்றின் தொடக்க முனையாகிறது, இயங்கும் மூலதனமாகிய சரக்கு-மூல தனத்தின் வடிவத்தைப் பெற்றிருக்கிறது. அது பணமாக உருமாறும் வரை இந்த இயக்கம் மூலதனத்தின் இயக்கமாகவும் வருவாயின் இயக்கமாகவும் பிரிவதில்லை. ஒரு புறம் சொந்த நுகர்வுக்கான நிதி யாகவும் மறு புறம் மறுவுற்பத்திக்கான நிதியாகவும் [reproduction fund] மொத்த சமுதாய உற்பத்திப் பண்டம் வினியோகமாதலும், தனித் தனி சரக்கு-மூலதனத்தின் உற்பத்திப் பொருளும் இதே போல் வினியோகமாதலும் இவ்வகை மூலதனச் சுற்றில் அடங்கி யுள்ளன.

M ... M′ என்பதில், புதிய சுற்றில் நுழையும் mஇன் பரிமாணத் தைப் பொறுத்து, சுற்று விரிவடையும் சாத்தியப்பாடு இருக்கிறது.

P ... P என்பதில், P ஆனது புதிய சுற்றினை அதே மதிப்புடன்—அல்லது இன்னும் சிறிய மதிப்புடனும் கூட—தொடக்கலாம்; அப்போதும் கூட அது விரிதிற மறுவுற்பத்தியைக் குறிக்கலாம்; எடுத்துக்காட்டாக, உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்வதன் பயனாய் சரக்குகளின் குறிப்பிட்ட சில ஆக்கக் கூறுகள் முன்னிலும் மலிவாகும் போது இப்படி நிகழ்கிறது. இதற்கு நேர்மாறாகவும் நிகழலாம்; திறனுடை-மூலதனத்தின் மதிப்பு அதிகரித்தாலும் பொருள்வகையில் அது சுருங்கிய மறுவுற்பத்தியை குறிக்கலாம்; எடுத்துக்காட்டாக, உற்பத்தி-அடிக்கூறுகளின் விலை முன்னிலும் உயர்ந்துவிடும் போது இப்படி நிகழ்கிறது. C′ ... C′ என்பதிலும் இவ்வாறே நடைபெறுகிறது.

C′ ... C′ என்பதில் சரக்குகளின் வடிவிலான மூலதனமே உற் பத்தியின் முதனிலை. இதே சுற்றில் இரண்டாவது Cஇல் திரும்பவும்

அது முதனிலையாக அமைகிறது. இந்த C இன்னும் உற்பத்தி செய்யப்படவில்லை, அல்லது மறுவுற்பத்தி செய்யப்படவில்லை என்றால், சுற்று தடைபடுகிறது. இந்த C மறுவுற்பத்தி செய்யப்பட வேண்டும், பெரும்பாலும் வேறொரு தொழில் துறை மூலதனத்தின் C′ ஆக மறுவுற்பத்தி செய்யப்பட வேண்டும். இந்தச் சுற்றில் C′ ஆனது சுழல் இயக்கத்தின் தொடக்க முனையும் மாறிச் செல்லும் இடைநிலையும் இறுதி முனையும் ஆகிறது. இவ்வாறு அது எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. மறுவுற்பத்தி நிகழ்முறைக்கு அது இன்றியமையாத நிரந்தரத் தேவை ஆகும்.

C′ ... C′ என்னும் சுற்று முதலாவது, இரண்டாவது வகைச் சுற்றுகளிலிருந்து இன்னொரு விதத்திலும் வேறுபடுத்திக் காட்டப் பெறுகிறது. மூன்று வகைச் சுற்றுகளிலும் மூலதனம் அதன் சுழல் இயக்கத்தைத் தொடக்கும் அதே வடிவத்தில்தான் அதை முடிக்கிறது. இவ்வாறு மூலதனம் அதன் ஆரம்ப வடிவத்திலேயே புதிதாகத் திரும்பவும் சுற்றைத் தொடக்க வேண்டியதாகிறது. எப்போதுமே M, P அல்லது C′ என்ற தொடக்க வடிவம்தான் மூலதன-மதிப்பு (மூன்றாவது வகைச் சுற்றில் உபரி-மதிப்பு உண்டாகிப் பெருக்கமடைந்த மூலதன-மதிப்பு) முன்னீடு செய்யப்படும் வடிவமாகும், அதாவது சுற்றின் ஆரம்ப வடிவமாகும். சுற்றின் முடிவில் வருகிற M′, P அல்லது C′ என்னும் இறுதி வடிவம் சுற்றில் அதற்கு முன்னதாக வரும் பணிவழிப்பட்ட வடிவத்தின் உருமாற்றமே தவிர, ஆரம்ப வடிவத்தின் உருமாற்றமல்ல.

முதல் வகைச் சுற்றின் M′ ஆனது C′ என்பதன் உருமாற்றமாகும். இதே போல் இரண்டாம் வகைச் சுற்றின் இறுதி முனையான P ஆனது M என்பதன் உருமாற்றமாகும். (முதல் வகைச் சுற்றிலும் இரண்டாம் வகைச் சுற்றிலும் நடந்தேறும் இந்த உருமாற்றம் சரக்குச் சுற்றோட்டத்தின் ஓர் எளிய செயலால், அதாவது சரக்குக்கும் பணத்துக்குமான இட மாற்றத்தால் ஏற்படும் வடிவ மாற்றமாகும்.) மூன்றாம் வகைச் சுற்றில் C′ ஆனது திறனுடை-மூலதனமான Pஇன் உருமாற்றமாகும். ஆனால் இங்கே—மூன்றாம் வகைச் சுற்றில்—ஏற்படும் உருமாற்றம், முதலாவதாக, மூலதனத்தின் பணிவழிப்பட்ட வடிவில் மட்டுமன்றி, மதிப்பின் பருமனிலும் மாற்றத்தைக் குறிக்கிறது. இரண்டாவதாக, இந்த உருமாற்றம் திறனுடை-மூலதனத்தின் சரக்கு உள்ளடக்கத்தின் பயன் வடிவத்திலும் மதிப்பிலும் உற்பத்தி நிகழ்முறையின் போது உண்டாகும் மெய்யான மாற்றத்தின் விளைவாகுமே தவிர, சரக்குச் சுற்றோட்ட நிகழ்முறையின் போதான இட மாற்றத்தால் உண்டாகும் வடிவ மாற்றமல்ல.

தொடக்க முனையின் வடிவமான M, P அல்லது C′ என்பது முறையே முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் வகைச் சுற்றின் முதனிலை ஆகிறது. இறுதி முனையில் திரும்பவும் வந்தடையப்

பெறும் வடிவத்துக்கு முதனிலையாய், அமைந்து அதை விளைவிப்
பவை சுற்றில் வரிசையாக நடந்தேறும் உருமாற்றங்களே ஆகும். ஒரு
தனிப்பட்ட தொழில் துறை மூலதனத்தினது சுற்றின் இறுதி முனை
என்ற முறையில் C'க்குத் தேவைப்படுவதெல்லாம் அதனை உற்
பத்தி செய்த தொழில் துறை மூலதனம் சுற்றோட்டத் துறைக்கு
வெளியில் ஏற்கும் Pஎன்னும் வடிவமேதான். முதலாம் வகைச்
சுற்றின் இறுதி முனை என்ற முறையிலும் C'இன் மாறிய வடிவம்
(C' — M') என்ற முறையிலும் M'க்குத் தேவைப்படுவதெல்லாம், M
ஆனது வாங்குபவரின் கையிலிருக்க வேண்டும், M ... M' என்னும்
சுற்றுக்கு வெளியில் இருக்க வேண்டும், C'ஐ விற்பதன் மூலம்
அந்தச் சுற்றுக்குள் ஈர்க்கப்பட்டு அதன் இறுதி முனையாக வேண்
டும் என்பதுதான். இவ்வாறு இரண்டாம் வகைச் சுற்றின் இறுதியில்
வரும் Pக்குத் தேவைப்படுவதெல்லாம், L, mp ஆகியவை (C) சுற்
றுக்கு வெளியில் இருக்க வேண்டும், M — C என்பதன் வாயிலாக
சுற்றில் அதன் இறுதி முனையாகச் சேர்க்கப்பட வேண்டும் என்பது
தான். ஆனால், சுற்றின் இறுதி முனையைத் தவிர்த்து, தனிப்பட்ட
பண-மூலதனத்தின் சுற்றுக்குப் பண-மூலதனம் இருந்தாக வேண்டு
மென்பதில்லை; தனிப்பட்ட திறனுடை-மூலதனத்தின் சுற்றுக்கும்
கூட திறனுடை-மூலதனம் இருந்தாக வேண்டுமென்பதில்லை.
முதலாம் வகைச் சுற்றில் M ஆனது வரலாற்றில் தோன்றும்
முதலாவது பண-மூலதனமாக இருக்கலாம், அதே போல் இரண்
டாம் வகைச் சுற்றில் P ஆனது வரலாற்றின் முதலாவது திற
னுடை-மூலதனமாக இருக்கலாம்; ஆனால்,

$$C' \begin{cases} C - \\ - M' \\ c - \end{cases} \begin{cases} M - C < {}^{L}_{mp} \ldots P \ldots C' \\ \\ m - c \end{cases}$$

என்பதான மூன்றாம் வகைச் சுற்றில், C ஆனது சுற்றுக்கு வெளியி
லிருந்து இரு முறை வருவது அவசியமாகிறது. $C' - M' - C < {}^{L}_{mp}$
என்னும் சுற்றில் முதல் முறை தேவைப்படுகிறது: இந்த C ஆனது
mp ஆக இருக்கும் வரை, விற்பவரின் கையிலுள்ள சரக்காகும்;
முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையால் உற்பத்தி செய்
யப்பட்ட சரக்காக இருக்கும் வரை அது சரக்கு-மூலதனம் ஆகிறது.
அப்படியில்லா விட்டாலும் கூட, வியாபாரியின் கையில் சரக்கு-
மூலதனமாகக் காட்சியளிக்கிறது. c — m — c என்பதில் வரும்
இரண்டாவது cஇன் உருவில் C இரண்டாம் முறை தேவைப்படு
கிறது; முன்போலவே இதுவும் விலைக்கு வாங்கக் கூடிய சரக்காகக்
கிடைக்க வேண்டும். Lஉம் mpஉம் சரக்கு-மூலதனமாக இருந்தாலும்
இல்லா விட்டாலும், அவையும் C'ஐப் போலவே சரக்குகள்தான்,
ஒன்றுக்கொன்று சரக்குகளாக உறவு கொள்பவைதான். c — m — c
என்பதில் வரும் இரண்டாவது cக்கும் இது பொருந்தும். ஆகவே,

C′ ஆனது Cக்கு (L+mpக்கு) சமமாய் இருக்கும் வரை சரக்குகளே அதன் உற்பத்தி-அடிக்கூறுகள் ஆகின்றன; சுற்றோட்டத்தின் போது அந்தச் சரக்குகளே அதனை மாற்றீடு செய்ய வேண்டும். c — m — c என்பதில் வரும் இரண்டாவது cஉம் சுற்றோட்டத்தின் போது இவ்வாறே மாற்றீடு செய்யப்பட வேண்டும்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் ஆட்சியை அடிப் படையாகக் கொள்ளும் போது, விற்பவரின் கையிலுள்ள எல்லாச் சரக்குகளும் சரக்கு-மூலதனமாகவே இருந்தாக வேண்டும். வியாபாரி யின் கையிலும் அவை தொடர்ந்து சரக்கு-மூலதனமாகவே இருக் கின்றன; முன்பு இல்லை என்றால், இப்போது சரக்கு-மூலதனமாகி விடுகின்றன. இல்லையேல் அவை ஆரம்பத்தில் சரக்கு-மூலதன மாய் இருந்து, பிறகு மாற்றீடு செய்யப்பட்டுச் சரக்குகளாகி இருக்க வேண்டும் (உதாரணம்: இறக்குமதியான பண்டங்கள்); அவை இவ் விதம் அந்தச் சரக்கு-மூலதனத்தின் இன்னொரு நிலவல் வடிவமே தவிர வேறல்ல.

திறனுடை-மூலதனமான Pஇன் அடக்கக் கூறுகளாகிய L, mp என்னும் சரக்குகள் அவை வாங்கப்படுகிற பல்வேறு சரக்குச் சந்தை களில் முன்பு அவை பெற்றிருந்த அதே வடிவத்தை இப்போது Pஇன் நிலவல் வடிவங்கள் என்ற முறையில் பெற்றிருக்கவில்லை. இரண்டும் இப்போது ஒன்றுசேர்ந்து விடுகின்றன, இப்படி இணையும் போது அவற்றால் திறனுடை-மூலதனமாகச் செயல்பட முடிகிறது.

இந்த மூன்றாம் வகைச் சுற்றில் மட்டும்தான் சுற்றுக்குள்ளேயே C ஆனது Cஇன் முதனிலையாக இருக்கிறது. சரக்கு வடிவிலான மூலதனம் சுற்றின் தொடக்க முனையாய் இருப்பதே இதற்குக் காரணம். C′ ஆனது (உபரி-மதிப்பும் கூடிப் பெரிதாகி இருந் தாலும் இல்லா விட்டாலும் மூலதன-மதிப்பாகச் செயல்படுவதாய் இருக்கும் வரை) அதன் உற்பத்தி-அடிக்கூறுகளான சரக்குகளாக உருமாறுவது சுற்றின் தொடக்கமாகிறது. ஆனால் இந்த உருமாற்றம் C — M — C (=L+mp) என்னும் சுற்றோட்ட நிகழ்முறையாக நடை பெற்று, இந்நிகழ்முறையால் விளையும் பயனாகிறது. C ஆனது இங்கே இரு முனைகளிலும் வருகிறது. இரண்டாம் முனையில் இருப்பது வெளியிலிருந்து — சரக்குச் சந்தையிலிருந்து — M — C என்பதன் மூலம் தனது C வடிவத்தைப் பெறுகிறது. ஆனால் இந்த இரண்டாம் முனை சுற்றுக்கு இறுதி முனை அல்ல; சுற்றோட்ட நிகழ்முறையாகிய இரு கட்டங்களில் முதலாவதற்குத்தான் இறுதி முனையாகும். இதன் விளைவுதான் P என்பது. உற்பத்தி நிகழ் முறைதான் இந்த Pஇன் பணி. இந்த உற்பத்தி நிகழ்முறையின் விளைவாகத்தான் — சுற்றோட்ட நிகழ்முறையின் விளைவாக அல்ல — C′ சுற்றின் இறுதி முனையாகவும் அதே வடிவில் தொடக்க முனையாகவும் விளங்குகிறது. இதற்கு மாறாக M ... M′ என்பதிலும், P ... P என்பதிலும் இறுதி முனைகளான M′, P ஆகியவை சுற்றோட்ட

நிகழ்முறையின் நேரடி விளைவுகளாகும். ஆகவே இங்கு இறுதி முனையில் மட்டும் முதலாவதில் M′உம், இரண்டாவதில் Pஉம் பிறர் கையிலிருந்து கிடைத்தாக வேண்டும். சுற்றானது இந்த இரு முனைகளுக்கிடையே அமைந்திருப்பதால், முதலாவதில் Mஉம் இரண்டாவதில் Pஉம்—M வேறு ஒருவரின் பணமாய் இருப்பது, P வேறு ஒரு மூலதனத்தின் உற்பத்தி நிகழ்முறையாய் இருப்பது—இந்தச் சுற்றுகளின் முதனிலையாக இருக்கவில்லை. ஆனால் C′ ... C′ என்னும் சுற்றுக்கு, C ஆனது (அதாவது L+mp) பிறரது சரக்குகளாய் பிறர் கையில் இருப்பது அவசியமாகும். சுற்றின் தொடக்கமாய் அமையும் சுற்றோட்ட நிகழ்முறையால் சுற்றினுள் இழுக்கப்படும் இச்சரக்குகள் திறனுடை-மூலதனம் ஆகின்றன; இம்மூலதனம் செயல்படுவதன் விளைவாக, C′ திரும்பவும் சுற்றின் இறுதி முனை ஆகிறது.

ஆனால் C′ ... C′ என்ற சுற்றானது அதன் வட்டத்துள் C (=L+mp) என்னும் வடிவில் பிற தொழில் துறை மூலதனங்கள் நிலவுதலை அவசியமாக்குகிறது; mp ஆனது இதர பல வகைப்பட்ட மூலதனங்களையும்—நமது உதாரணத்தில் இயந்திர சாதனம், நிலக்கரி, எண்ணெய் போன்ற பலவற்றையும்—கொண்டதாகும். ஆகவேதான் இந்த மூன்றாவது வகைச் சுற்றினை மூலதனச் சுற்றின் பொதுவான வடிவமாகக் கொண்டால் மட்டும் போதாது. அதாவது தனிப்பட்ட ஒவ்வொரு தொழில் துறை மூலதனத்தையும் (முதன் முதலாய் முதலீடு செய்யப்படுவதைத் தவிர்த்து) ஆராய்ந்து அறிவதற்கான சமூக வடிவமைப்பாக, எனவே தனிப்பட்ட எல்லாத் தொழில் துறை மூலதனங்களுக்கும் பொதுவான இயக்க வடிவமாகக் கொண்டால் மட்டும் போதாது. அதோடு கூட தனிப்பட்ட மூலதனங்களினது ஒட்டுமொத்தத்தின், எனவே முதலாளி வர்க்கத்தினது ஒட்டுமொத்த மூலதனத்தின் இயக்க வடிவமாகக் கொள்வதும் அவசியமாகிறது. இந்த ஒட்டுமொத்த மூலதனத்தின் இயக்கத்தில் ஒவ்வொரு தனிப்பட்ட தொழில் துறை மூலதனத்தின் இயக்கமும் ஒரு பகுதியாய் ஏனைய மூலதனங்களது இயக்கங்களுடன் ஒன்றுகலப்பதோடு அந்த ஏனைய இயக்கங்களால் அவசியமாக்கப்படவும் செய்கிறது. எடுத்துக்காட்டாக குறிப்பிட்ட நாட்டில் ஓராண்டில் உற்பத்தியாகும் சரக்குகளின் ஒட்டுமொத்தத்தைக் கணக்கிட்டு, அதில் ஒரு பகுதி தனிப்பட்ட எல்லாத் தொழில்களிலும் திறனுடை-மூலதனத்தை மாற்றீடு செய்வதும் இன்னொரு பகுதி பல்வேறு வர்க்கங்களின் சொந்த நுகர்வுக்குச் செல்வதுமான இயக்கத்தை ஆராய்வது என்பது, C′ ... C′ என்னும் சுற்றினைச் சமுதாய மூலதனமும் அது உண்டாக்கும் உபரி-மதிப்பு அல்லது உபரி-உற்பத்தியும் நிகழ்த்தும் இயக்கத்தின் வடிவமாகக் கொண்டு ஆராய்வதாகிறது. சமுதாய மூலதனமானது தனிப்பட்ட மூலதனங்களின் கூட்டுத் தொகைக்குச் சமம் (கூட்டுப் பங்கு [joint-stock]

மூலதனமும், அரசாங்கங்கள் உற்பத்தித் திறனுள்ள கூலியுழைப் பைச் சுரங்கங்களிலும் இருப்புப் பாதைகளிலும் இன்ன பிற வற்றிலும் அமர்த்தி தொழில் துறை முதலாளிகளது பணியைச் செய்து வரும் வரை அரசு மூலதனமும் [state capital] கூட தனிப் பட்ட மூலதனங்களில் சேர்க்கப்பட வேண்டியவையே) என்பதும், சமுதாய மூலதனத்தின் ஒட்டுமொத்த இயக்கமானது தனிப்பட்ட மூலதனங்களது இயக்கங்களின் குறிக்கணிதக் கூட்டுத் தொகைக்கு [algebraic sum] சமம் என்பதும் மெய்தான். இருந்த போதிலும் ஒரு மூலதனத்தின் இயக்கத்தைத் தனிப்பட்ட மூலதனத்தின் இயக்க மாகப் பார்க்கும் போது புலப்படுவது வேறாகவும், அதையே சமுதாய மூலதனத்தினது மொத்த இயக்கத்தின் ஒரு பகுதியாகப் பார்க்கும் போது—இவ்விதம் ஏனைய பகுதிகளின் இயக்கங்களோடு அதற்குள்ள இடையுறவின் கோணத்திலிருந்து பார்க்கும் போது—புலப்படுவது வேறாகவும் இருக்கக் கூடும். தனிப்பட்ட மூலதனத் தின் சுற்றைப் பரிசீலிக்கையில் குறிப்பிட்ட சில பிரச்சினைகளின் தீர்வு இந்தப் பரிசீலனையின் விளைவாய் இருப்பதற்குப் பதில், முன்கூட்டியே அனுமானித்துக் கொள்ள வேண்டியதாகிறது. ஆனால் அதே இயக்கத்தை சமுதாய மூலதனத்தினது மொத்த இயக்கத்தின் ஒரு பகுதியாகக் கொண்டு பரிசீலிக்கையில் பிரச் சினைக்குத் தீர்வு கிடைக்கிறது.

ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பானது C' ... C' என்ற இந்த ஒரு சுற்றில்தான் இயக்கத்தைத் தொடக்கும் முனையின் ஒரு பகுதியாக மட்டும் அமைகிறது. இந்த ஒரு சுற்றில் தான் இயக்கமானது தொடக்கத்திலிருந்தே தொழில் துறை மூல தனத்தின் முழுமொத்த இயக்கமாக வெளிப்படுகிறது—திறனுடை-மூலதனத்தின் மாற்றீடாகிற ஒரு பகுதி உற்பத்திப் பொருளின் இயக்கமாகவும், உபரி-உற்பத்தியாகி பகுதியளவு வருவாயாக [revenue] செலவிடப்பட்டு பகுதியளவு திரட்டல்-கூறாகச் செல்லும் மற்றொரு பகுதி உற்பத்திப் பொருளின் இயக்கமாகவும் வெளிப்படுகிறது. வருவாயாக உபரி-மதிப்பு செலவாவதும் இந்தச் சுற்றில் உள்ளடங்குகிறது; அதே அளவுக்குச் சொந்த நுகர்வும் இதில் உள்ளடங்குகிறது. இந்தச் சுற்றின் தொடக்க முனையாக அமைகிற சரக்கான C· ஆனது ஏதேனும் ஒரு வகையில் பயன்படக் கூடிய வடிவில் இருக்கிறது என்பது சொந்த நுகர்வும் இச்சுற்றில் உள் ளடங்குவதற்கு மேலும் ஒரு காரணமாகிறது. ஆனால் முதலாளித் துவ முறையில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு சரக்கும்—பயன் வடிவம் காரணமாய் அது திறனுடை நுகர்வுக்கு உரியதானாலும் சரி, சொந்த நுகர்வுக்கு உரியதானாலும் சரி, இரு வகை நுகர்வுக்கும் உரியதானாலும் சரி—சரக்கு-மூலதனம்தான். M ... M' என்ற சுற்றில், மூலதன-மதிப்பின் தற்பெருக்கமாகிய மதிப்பு அமிசம் மட்டுமே முழு நிகழ்முறையின் நோக்கம் என்பது புலப்படுத்தப்படுகிறது.

P ... P(P') என்ற சுற்றில் மூலதனத்தின் உற்பத்தி நிகழ்முறையானது திறனுடை-மூலதனத்தின் பருமன் மாறாதிருக்கும் அல்லது அதி கரித்துச் செல்லும் மறுவுற்பத்தி நிகழ்முறையாக நடைபெறுவது புலப்படுத்தப்படுகிறது. தொடக்க முனையிலேயே முதலாளித்துவச் சரக்கு உற்பத்தியின் வடிவமாகக் காட்டிக் கொள்ளும் C' ... C' என்னும் சுற்று திறனுடை நுகர்வும் சொந்த நுகர்வும் அடங்கியதாய் ஆரம்பம் முதற்கொண்டே விளங்குகிறது. அதில் அடங்கும் திற னுடை நுகர்வும் மதிப்பின் தற்பெருக்கமும் இந்த இயக்கத்தின் ஒரு கிளையாகவே இருக்கின்றன. முடிவில், C' ஆனது இனிமேல் எந்த உற்பத்தி நிகழ்முறையிலும் பங்கு கொள்ள முடியாத பயன் வடிவம் பெற்றிருக்கலாம். C' ... C' என்னும் சுற்றானது அப்போது மொத்த சமுதாய மூலதனத்தின் இயக்க வடிவமாகக் கொள்ளப்படுகிறதா, அல்லது தனிப்பட்ட ஒரு தொழில் துறை மூலதனத்தின் சுயேச்சை யான இயக்கமாகக் கொள்ளப்படுகிறதா என்பதற்கு ஏற்ப, C' என் பதில் அடங்கிய பல்வேறு மதிப்புக் கூறுகள் (இவை உற்பத்திப் பண் டத்தின் விகிதப் பகுதிகளாய்க் குறிக்கப்படுகின்றன) வகிக்கும் நிலை வேறுபடும் என்பது சுற்றின் தொடக்கத்திலேயே சுட்டிக் காட்டப் படுகிறது. இந்தச் சுற்றுக்குள்ள இந்த விசேஷங்களை எல்லாம் ஆராயப் புகுந்தால் ஏதோ ஒரு தனிப்பட்ட மூலதனத்தின் தனித்த சுற்றுக்குரிய வரம்புகளைக் கடந்து அது நம்மை அழைத்துச் சென்று விடும்.

C' ... C' என்னும் சூத்திரத்தில், சரக்கு-மூலதனத்தின் இயக்கம், அதாவது முதலாளித்துவ முறையில் மொத்தம் உற்பத்தியாகும் பொருளின் இயக்கம் தனிப்பட்ட மூலதனத்தின் சுயேச்சையான சுற்றின் முதனிலையாக மட்டுமல்லாமல், அதனால் அவசியமாக்கப் படும் ஒன்றாகவும் விளங்குகிறது. எனவே, இந்தச் சூத்திரத்தையும் அதன் விசேஷங்களையும் புரிந்து கொண்டதும், C'–M', M–C என்னும் உருமாற்றங்கள் ஒரு புறம் மூலதன உருமாற்றத்திலான பணிவழிப்பட்ட பிரிவுகளாகவும், மறு புறம் பொதுவான சரக்குச் சுற்றோட்டத்தின் கண்ணிகளாகவும் இருப்பதைக் குறிப்பிடுவதோடு நிறுத்திக் கொண்டால் போதாது. தனிப்பட்ட ஒரு மூலதனத்தின் உருமாற்றங்கள் ஏனைய தனிப்பட்ட மூலதனங்களின் உருமாற்றங் களோடும், மொத்த உற்பத்திப் பண்டத்தில் சொந்த நுகர்வுக்குரிய பகுதியோடும் பின்னிப் பிணைவதைத் தெளிவுபடுத்துவதும் அவசிய மாகும். எனவேதான், தனிப்பட்ட ஒரு தொழில் துறை மூல தனத்தின் சுற்றினைப் பகுத்தாய்கையில், முதல் இரு வகைச் சுற்று களையே பிரதான அடிப்படையாகக் கொள்கிறோம்.

வேளாண்மையை எடுத்துக்காட்டாகக் கொண்டால், இதில் ஓர் அறுவடையிலிருந்து அடுத்த அறுவடை வரை கணக்கு பார்க்கப் படுவதால், C' ... C'என்னும் சுற்று தனிப்பட்ட ஒரு மூலதனத்தின் இயக்க வடிவமாகிறது. இரண்டாம் வகைச் சுற்றில் விதைப்பு

தொடக்க முனையாகிறது. மூன்றாம் வகைச் சுற்றில் அறுவடை தொடக்க முனையாகிறது. அல்லது, பிசியோக்கிராட்டுகள் கூறியது போல் கூறுவதானால், இரண்டாம் வகைச் சுற்று முன்னீடுகளி லிருந்து ஆரம்பமாகிறது; மூன்றாம் வகைச் சுற்று பலன்களிலிருந்து ஆரம்பமாகிறது. மூன்றாம் வகைச் சுற்றில் மூலதன-மதிப்பின் இயக்கம் ஆரம்பத்திலிருந்தே பொதுவான உற்பத்திப் பண்டத் திரளினது இயக்கத்தின் ஒரு பகுதியாகவே விளங்குகிறது; ஆனால், முதலாம் வகையிலும் இரண்டாம் வகையிலும் C′இன் இயக்கம் தனிப்பட்ட ஒரு மூலதனத்தின் இயக்கத்தில் ஒரு கட்டத்தை மட்டுமே குறிக்கிறது.

மூன்றாம் வகைச் சுற்றில் சந்தைச் சரக்குகளே உற்பத்தி, மறுவுற்பத்தி நிகழ்முறையின் தொடர்ச்சியான முதனிலை ஆகின் றன. ஆகவே, முற்றிலும் இந்தச் சூத்திரத்தை மட்டும் கவனிப்போ மானால், உற்பத்தி நிகழ்முறையின் அடிக்கூறுகள் எல்லாம் சரக்குச் சுற்றோட்டத்தில் இருந்தே உதித்தெழுவதாகவும் முற்றிலும் சரக்கு களாலேயே ஆனதாகவும் தோன்றுகிறது. இந்த ஒருதலைச்சார்பான கருத்தமைவு உற்பத்தி நிகழ்முறையின் அடிக்கூறுகளில் சரக்குக் கூறுகளைச் சார்ந்திராதவற்றைக் கவனியாது விட்டு விடுகிறது.

C′ ... C′ என்பதில் மொத்த உற்பத்திப் பண்டம் (மொத்த மதிப்பு) தொடக்க முனை ஆவதால், (அந்நிய வர்த்தகத்தை ஒதுக்கி விட்டுப் பார்க்கும் போது) உபரி-உற்பத்தியில் மூலதனமாக வேண்டிய பகுதி கூடுதல் திறனுடை-மூலதனத்தின் பொருட் கூறுகளைக் கொண்டதாய் இருக்கும் போதுதான், (இதர வகையில் உற்பத்தித் திறன் மாறாதிருக்க) விரிதிற மறுவுற்பத்தி நடைபெற முடியும் என்பது தெளிவாகிறது. ஆகவே ஒரு வருட உற்பத்தி யானது அடுத்த வருட உற்பத்திக்கு முதனிலையாய் இருக்கும் வரை, அல்லது ஓராண்டுக்குட்பட்ட சாமானிய மறுவுற்பத்தி நிகழ்முறை யோடு ஒருங்கே நடைபெறக் கூடியதாய் இருக்கும் வரை, உபரி-உற் பத்தியானது கூடுதல் மூலதனமாகவும் செயல்படுவதற்கு ஏற்ற வடிவில் அமைந்து விடுகிறது. உற்பத்தித் திறன் உயர்வதன் மூலம் மூலதனத்தின் அடக்கப் பொருள் கூடுதலாகலாமே தவிர மதிப்பு உயர முடியாது; ஆயினும் உற்பத்தித் திறனிலான உயர்வு மதிப்பின் தற்பெருக்கத்துக்குக் கூடுதலாய் வேண்டியவற்றைக் கிடைக்கச் செய்கிறது.

கெனேயின் *Tableau economique* அட்டவணைக்கு C′ ... C′ என்னும் சுற்றுதான் அடிப்படையாகும். வாணிப ஊக்கப் பொருளா தாரம் [mercantile system] தனித்தபடை ஒன்றாய்க் கொண்டு விடாப்பிடியாய் அனுசரித்த M ... M′ சுற்றுக்கு மாறாக P ... P சுற்றைக் கொள்ளாமல், C′ ... C′சுற்றைக் கெனே தேர்ந்தெடுத்துக் கொண்டதானது போற்றத் தக்க அவரது மெய்யான கூரறிவுக்குச் சான்றாகும்.

## அத்தியாயம் IV

# சுற்றின் மூன்று சூத்திரங்கள்

மூன்று சூத்திரங்களையும் பின்வருமாறு குறிப்பிடலாம்; Tc என்பது "சுற்றோட்ட நிகழ்முறை முழுவதையும்" குறிக்கும்:

I. M–C ... P ... C′–M′
II. P ... Tc ... P
III. Tc ... P(C′).

இந்த மூன்று வகைச் சுற்றுகளையும் சேர்த்துப் பார்த்தால், நிகழ்முறையின் முதனிலைகள் யாவும் நிகழ்முறையின் விளைவாய்த் தெரிகின்றன; நிகழ்முறையே உண்டாக்கிய முதனிலைகளாய்த் தெரிகின்றன. ஒவ்வொரு உறுப்பும் தொடக்க நிலையாகவும், இடைநிலையாகவும், மீள்வு நிலையாகவும் தெரிகிறது. நிகழ்முறை முழுவதும் உற்பத்தி நிகழ்முறை, சுற்றோட்ட நிகழ்முறை ஆகிய வற்றின் ஒன்றிப்பாகத் தெரிகிறது. உற்பத்தி நிகழ்முறை சுற் றோட்ட நிகழ்முறையின் இடைக் கண்ணியாகிறது. சுற்றோட்ட நிகழ்முறை உற்பத்தி நிகழ்முறையின் இடைக் கண்ணியாகிறது.

மதிப்பின் தற்பெருக்கமே தீர்மானகர நோக்கம், பிரதானக் குறி [compelling motive] என்பது மூன்று வகைச் சுற்றுகளுக்கும் பொது வானது. முதலாம் வகையில் இது சூத்திரத்தின் வடிவிலேயே தெரிவிக்கப் பெறுகிறது. இரண்டாம் சூத்திரம் உபரி-மதிப்பைப் படைக்கும் நிகழ்முறையான Pஇலிருந்து ஆரம்பமாகிறது. மூன்றாம் சூத்திரம் தற்பெருக்கமடைந்த மதிப்பிலிருந்து ஆரம்பமாகிறது; இயக்கம் திரும்பவும் அதே அளவுவீதத்தில் நிகழ்ந்தாலும் புதிதாய்த் தற்பெருக்கமடைந்த மதிப்புடன் முடிவடைகிறது.

C–M என்பது வாங்குபவருக்கு M–C ஆவதாலும், M–C என்பது விற்பவருக்கு C–M ஆவதாலும், மூலதனத்தின் சுற் றோட்டம் சாதாரண சரக்கு-உருமாற்றத்தையே காட்டுகிறது; இது தொடர்பாக முன்பு நாம் வகுத்தளித்த விதிகள் (முதல் பாகம்,

அத்தியாயம் III., பிரிவு 2). சுற்றோட்டத்தில் இருக்கும் பணத் திரளை ஆளும் விதிகள் இங்கே பொருந்தும். ஆயினும், நாம் வடிவம் தொடர்பான இந்த அமிசத்தையே பற்றிக் கொண்டிராமல், பல்வேறு தனிப்பட்ட மூலதனங்களது உருமாற்றங்களுக்கிடையில் உள்ளபடியே நிலவும் தொடர்பைப் பரிசீலிப்போமானால், அதாவது மொத்த சமுதாய மூலதனத்தின் மறுவுற்பத்தி நிகழ்முறையின் இயக்கக் கூறுகள் என்ற முறையில் தனிப்பட்ட மூலதனங்களின் சுற்றுகளுக்கிடையில் நிலவும் தொடர்பைப் பரிசீலிப்போமானால், பணத்துக்கும் சரக்குக்கும் இடையிலான வடிவ மாற்றத்தைக் கொண்டு மட்டும் இத்தொடர்பை விளக்கி விட முடியாது.

இடையறாது சுழலும் வட்டத்தில் ஒவ்வொரு புள்ளியும் ஒரே சமயத்தில் புறப்பாட்டு நிலையாகவும் மீள்வு நிலையாகவும் இருக்கிறது. சுழற்சியை இடைமறித்தால், புறப்பாட்டு நிலை ஒவ்வொன்றுமே மீள்வு நிலை ஆகாது. இவ்வாறு, ஒவ்வொரு குறிப்பிட்ட வகைச் சுற்றுக்கும் ஏனைய வகைச் சுற்றுகள் (உட்கிடையாக) தேவைப்படுவது மட்டுமல்லாமல், ஒரு வகைச் சுற்றின் மறு நிகழ்வு ஏனைய வகைச் சுற்றுகளின் நிகழ்வைத் தன்னுள் கொண்டதாய் இருக்கக் கண்டோம். எனவே, வேறுபாடு முழுவதுமே வெறும் வடிவ வேறுபாடாக, பார்க்கிறவருக்கு மட்டுமே ஆன அகவய வேறுபாடாக [subjective distinction] இருக்கிறது.

இந்தச் சுற்றுகள் ஒவ்வொன்றுமே பல்வேறு தனிப்பட்ட தொழில் துறை மூலதனங்களும் ஈடுபட்டுள்ள இயக்கத்தின் குறிப்பிட்ட வடிவமாய்க் கொள்ளப்படுவதால், இந்த வேறுபாடு எப்போதுமே தனிப்பட்ட மூலதனங்களுக்குரிய வேறுபாடாகத்தான் இருக்கிறது. ஆனால் உண்மையில் ஒவ்வொரு தனிப்பட்ட தொழில் துறை மூலதனமும் ஒரே சமயத்தில் மூன்று வகைச் சுற்றுகளிலும் ஈடுபட்டுள்ளன. மூன்று வகை மூலதனங்களின் மறுவுற்பத்தி வடிவங்களான இந்த மூன்று வகைச் சுற்றுகளும் ஒருங்கே தொடர்ந்து நடைபெறுகின்றன. எடுத்துக்காட்டாக, இப்போது சரக்கு-மூலதனமாகச் செயல்படும் மூலதன-மதிப்பின் ஒரு பகுதி பண-மூலதனமாக உருமாறுகிறது; அதே நேரத்தில் இன்னொரு பகுதி உற்பத்தி நிகழ்முறையை விட்டு வெளியேறி புதிய சரக்கு-மூலதனமாகச் சுற்றோட்டத்தில் கலக்கிறது. இவ்வாறு C′ ... C′ என்ற வகைச் சுற்று ஓயாமல் நடைபெறுகிறது; ஏனைய இரு வகைகளும் கூட இப்படித்தான். இந்த மூலதன வடிவங்களிலான மாற்றமும், அவை அடுத்தடுத்து மூன்று கட்டங்களையும் கடந்து செல்வதும் தொடர்ச்சியாய் நடப்பதற்கு ஏற்பவே, மூலதனம் அதன் ஒவ்வொரு வடிவத்திலும் ஒவ்வொரு கட்டத்திலும் மறுவுற்பத்தி ஆவதும் தொடர்ச்சியாய் நடைபெறும், இவ்வாறு மூலதனத்தின் முழுச் சுற்றானது உண்மையில் மூன்று வகைச் சுற்றுகளின் ஒன்றிப்பே ஆகும்.

நமது பகுப்பாய்வில், மூலதன-மதிப்பின் முழுப் பருமனுமே

பண-மூலதனமாகவோ, திறனுடை-மூலதனமாகவோ சரக்கு-மூல தனமாகவோ செயல்படுவதாகக் கொண்டோம். எடுத்துக்காட்டாக, முதலில் £422 முழுவதையும் பண-மூலதனமாகக் கொண்டோம்; பின் அது முழுவதையும் திறனுடை-மூலதனமாக மாற்றினோம். முடிவில் அதனை சரக்கு-மூலதனமாக (£7·8 பெறுமானமுள்ள உபரி-மதிப்பைத் தன்னுள் கொண்ட) £500 மதிப்புள்ள நூலாக மாற்றினோம். இங்கே பல்வேறு கட்டங்களும் அத்தனை இடை மறிப்புகளே ஆகும். உதாரணமாக, £422 ஆனது பண வடி வத்தில் நீடிக்கும் வரை, அதாவது M–C (L+mp) என்ற வழியில் சரக்குகள் வாங்கப்படும் வரை, மூலதனம் முழுவதும் பண-மூலதன மாகவே இருக்கிறது, பண-மூலதனமாகவே செயல்படுகிறது. திறனுடை-மூலதனமாக மாறிய பிறகு அது பண-மூலதனத்தின் பணிகளையோ சரக்கு-மூலதனத்தின் பணிகளையோ செய்வ தில்லை. அதன் சுற்றோட்ட நிகழ்முறை முழுவதும் தடைபடுகிறது; மறு புறம், அது தனது இரு சுற்றோட்டக் கட்டங்களில் ஒன்றில், M ஆகவோ C′ ஆகவோ செயல்பட முற்பட்டவுடனே அதன் உற்பத்தி நிகழ்முறை முழுவதும் தடைபடுகிறது. ஆதலால், P ... Pஎன்னும் சுற்றானது, திறனுடை-மூலதனம் அவ்வப்போது புதுப்பிக்கப் படுவதைக் குறிப்பதோடு, சுற்றோட்ட நிகழ்முறை பூர்த்தியாகும் வரை அதன் பணி, அதாவது உற்பத்தி நிகழ்முறை தடைபடு வதையும் குறிக்கும். உற்பத்தி தொடர்ச்சியாக நடைபெறுவதற்கு பதில் விட்டு விட்டு நடைபெறும்; உற்பத்தி ஒரு முறை நடந்து முடிந்து மறு முறை தொடங்குவதற்கான கால இடைவெளி சந்தர்ப்ப வசத்தால் நிர்ணயமாகிறது; சுற்றோட்ட நிகழ்முறையின் இரு கட்டங்களையும் கடந்து செல்வது சடுதியில் நடைபெறுகிறதா, மெள்ள நடைபெறுகிறதா என்பதைப் பொறுத்ததாகிறது. உதாரண மாக, சீனக் கைவினைஞருக்கு [artisan] இப்படித்தான் நிகழ்கிறது. அவர் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்காக வேலை செய்பவர். புதிய சரக்காணை கிடைக்கும் வரை அவரது உற்பத்தி நிகழ்முறை நின்று விடுகிறது.

இயங்குகிற தனித்தனி மூலதனப் பகுதி ஒவ்வொன்றுக்கும் உண்மையில் இவ்வாறே நிகழ்கிறது. மூலதனத்தின் எல்லாப் பகுதிகளும் ஒன்றன் பின் ஒன்றாய் இயங்கவே செய்கின்றன. 10,000 இராத்தல் நூல் ஒரு நூற்பாளரின் வாராந்தர உற்பத்திப் பொருளெனக் கொள்வோம். இந்த 10,000 இராத்தல் நூல் உற்பத்தித் துறையை விட்டு முழுமையாக வெளியேறி சுற்றோட்டத் துறையினுள் புக வேண்டும்; அதில் அடங்கிய மூலதன-மதிப்பு முழுவதும் பண-மூலதனமாக உருமாற வேண்டும்; இந்த மதிப்பு பண-மூலதனத்தின் வடிவில் நீடிக்கும் வரை மீண்டும் உற்பத்தி நிகழ்முறையினுள் புக முடியாது. முதலில் அது சுற்றோட்டத்தில் சென்று திறனுடை-மூலதனத்தின் கூறுகளான L+mp ஆக உருமாற

வேண்டும். மூலதனம் சுற்றை நிகழ்த்துவது என்பது ஓயாத இடைமறிப்பு நிகழ்முறை ஆகும்; மூலதனம் ஒரு கட்டத்தை விட்டு அடுத்த கட்டத்துள் புகுவது ஆகும்; ஒரு வடிவத்தைக் களைந்து விட்டு வேறொரு வடிவம் பூணுவது ஆகும். இந்தக் கட்டங்கள் ஒவ்வொன்றும் அடுத்த கட்டத்தை அவசியமாக்குகிறது; ஆனால் இது அதுவாய் இல்லை.

ஆனால் தொடர்ச்சி என்பது முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கே உரிய தனி இயல்பு; அதன் தொழில் நுட்ப அடிப்படைக்கு அவசியமானது, ஆனால் எப்போதும் முழு அளவுக்கு வரப் பெறுவதில்லை. உண்மையில் என்ன நிகழ்கிறது என்று பார்ப்போம். உதாரணமாக, 10,000 இராத்தல் நூல் சந்தையில் சரக்கு-மூலதனமாகத் தோன்றி, பணமாக உருமாறுகிறது (இந்தப் பணம் கொடுப்புச் சாதனமாகவும் இருக்கலாம்; வாங்கற் சாதனமாகவும் இருக்கலாம்; வெறும் கணக்குப் பணமாகவும் கூட இருக்கலாம்). நூலுக்கு பதில் புதிய பருத்தி, நிலக்கரி முதலானவை உற்பத்தி நிகழ்முறையினுள் புகுகின்றன. ஆகவே இவையெல்லாம் பண வடிவத்திலிருந்தும் சரக்கு வடிவத்திலிருந்தும் திறனுடை-மூலதனத்தின் வடிவத்துக்கு மாறி விட்டன; அதற்குரிய செயலையும் தொடங்குகின்றன. இந்த 10,000 இராத்தல் நூல் பணமாக உருமாறிக் கொண்டிருக்கும் போதே முந்தைய 10,000 இராத்தல் நூல் அதன் சுற்றோட்டத்தின் இரண்டாவது கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது, பணமென்ற நிலையிலிருந்து திறனுடை-மூலதனத்தின் கூறுகளாக மாறிக் கொண்டிருக்கிறது. மூலதனத்தின் எல்லாப் பகுதிகளும் அடுத்தடுத்து சுற்றை நிகழ்த்துகின்றன. அந்தந்த நேரத்திலும் வெவ்வேறு கட்டங்களில் இருக்கின்றன. தொழில் துறை மூலதனமானது இடையறாது அதன் சுற்றை நிகழ்த்திச் சென்று, அந்தந்த நேரத்திலும் அதன் எல்லாக் கட்டங்களிலும், இந்தக் கட்டங்களுக்குரிய பணிவழிப்பட்ட பல்வேறு வடிவங்களிலும் இருக்கக் காணலாம். தொழில் துறை மூலதனத்தில் முதன் முதலாய் சரக்கு-மூலதனம் என்ற நிலையிலிருந்து பண-மூலதனமாக உருமாறும் பகுதி C′ … C′ என்ற சுற்றைத் தொடக்குகையில், இயங்கும் முழுமை என்ற முறையில் தொழில் துறை மூலதனம் இந்தச் சுற்றை ஏற்கெனவே நிகழ்த்தி முடித்து விட்டது. ஒரு கை பணத்தை முன்னீடு செய்கிறது; இன்னொரு கை அதனைப் பெறுகிறது. ஓர் இடத்தில் M … M′ என்னும் சுற்று ஆரம்பமாவதும் இன்னோரிடத்தில் பணம் மீள்வதும் ஒருங்கே நிகழ்கின்றன. திறனுடை-மூலதனத்தின் சுற்றிலும் இப்படித்தான் நிகழ்கிறது.

ஆகவே, உண்மையில் தொழில் துறை மூலதனத்தின் தொடர்ச்சியான சுற்று என்பது சுற்றோட்ட நிகழ்முறை, உற்பத்தி நிகழ்முறை ஆகியவற்றின் ஒன்றிப்பு மட்டுமல்ல, அதன் மூன்று வகைச் சுற்றுகளின் ஒன்றிப்பும் ஆகும். ஆனால் இத்தகைய ஒன்றிப்பாக

இருக்க வேண்டுமானால், வெவ்வேறு மூலதனப் பகுதிகள் ஒவ்வொன்றும் சுற்றின் வரிசைத் தொடரான கட்டங்களை வரிசைத் தொடராகக் கடக்கக் கூடியதாய் இருந்தால்தான் முடியும்; ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்கும், பணி வழிப்பட்ட ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்துக்கும் மாறிச் செல்லக் கூடியதாய் இருந்தால்தான் முடியும். இந்த எல்லாப் பகுதிகளும் அடங்கிய முழுமையாகிய தொழில் துறை மூலதனம் அப்போது தான் ஒரே நேரத்தில் அதன் பல்வேறு கட்டங்களிலும் பணிகளிலும் ஈடுபட்டு மூன்று வகைச் சுற்றுகளையும் ஒருங்கே நிகழ்த்தும். இந்தப் பல்வேறு மூலதனப் பகுதிகளும் அடுத்தடுத்து வரிசையாக வருதல் (das Nacheinander) அவற்றின் ஏககால நிலவலால் (das Nebeneinander), அதாவது மூலதனம் பகுக்கப்பட்டிருக்கிற முறையால் விளைவதாகும். கிளை கிளையாய்ப் பிரிந்திருக்கும் ஆலைத் தொழில் அமைப்பில், உற்பத்திப் பொருள் எப்போதுமே உற்பத்தி நிகழ்முறையின் பல்வேறு கட்டங்களிலும் இருந்து கொண்டும், ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்குச் சென்று கொண்டும் இருக்கிறது. ஒவ்வொரு தனிப்பட்ட தொழில் துறை மூலதனமும் குறிப்பிட்ட அளவுடையது; இந்த அளவானது முதலாளியின் வசதி வாய்ப்பைப் பொறுத்தது; மேலும் ஒவ்வொரு தொழிற் கிளைக்கும் அவசியமான மூலதனத்துக்குக் குறிப்பிட்ட குறைந்தபட்சப் பருமன் ஒன்று உண்டு. ஆகவே, மூலதனப் பகுப்பு என்பது குறிப்பிட்ட விகித அளவுகளில் நடைபெற வேண்டும். கிடைக்கக் கூடிய மூல தனத்தின் பருமன் உற்பத்தி நிகழ்முறையின் பரிமாணங்களை நிர்ணயிக்கிறது; உற்பத்தி நிகழ்முறையுடன் இணைந்து தம் பணிகளைச் செய்கிற சரக்கு-மூலதனம், பண-மூலதனம் ஆகியவற்றின் பரிமாணங்களையும் இதுவே நிர்ணயிக்கிறது. ஆயினும் உற்பத்தியின் தொடர்ச்சியை நிர்ணயிக்கிற ஏககால நிலவல் என்பது மூல தனப் பகுதியின் பல்வேறு கட்டங்களையும் அடுத்தடுத்து வரிசையாகக் கடக்கும் இயக்கத்திலிருந்தே விளைகிறது. அடுத்தடுத்து வரிசையாக வருவதன் விளைவே ஏககால நிலவல். எடுத்துக்காட்டாக, மூலதனத்தின் ஒரு பகுதியைப் பொறுத்த வரை C′ — M′ நிகழாமல் தடைபடுமானால், அதாவது சரக்கை விற்க முடியாமற் போனால், இந்தப் பகுதியின் சுற்று தடைபடுகிறது, அதன் உற்பத்திச் சாதனங்கள் அதை மாற்றீடு செய்வது நின்று போகிறது. அடுத்துவரும் மூலதனப் பகுதிகள் உற்பத்தி நிகழ்முறையிலிருந்து C′ஆக வெளிப்படும் போது, அவை தமது பணியை மாற்றிக் கொள்ள முடியாமல் முன் வந்த பகுதிகள் வழிமறிக்கின்றன. இது சிறிது காலம் நீடித்தால், உற்பத்தி தடைபடுகிறது, நிகழ்முறை முழுவதும் நின்று விடுகிறது. அடுத்தடுத்து வரிசையாக வருதல் தடைபடும் போதெல்லாம் ஏககால நிலவலும் குலைந்து போகிறது, ஏதேனும் ஒரு கட்டம் தடைபடும் போதெல்லாம் முழுச்

சுற்றுமே அதிகமாகவோ குறைவாகவோ தடைபட்டுப் போகிறது. மூலதனத்தின் ஒரு பகுதியினது மட்டுமல்லாமல், தனிப்பட்ட மூலதனம் அனைத்தின் முழுச் சுற்றுமே தடைபட்டுப்போகிறது.

அடுத்து, இந்நிகழ்முறையை வரிசையாக வரும் கட்டங்களது தொடராகப் பார்க்கலாம். இந்த வரிசைத் தொடரில் மூலதனம் ஒரு கட்டத்தை விட்டுப் புறப்பட்டதும் புதிய கட்டத்துக்குச் செல்வது அவசியமாகி விடுகிறது. ஆகவே ஒவ்வொரு வகைச் சுற்றும் மூல தனத்தின் பணிவழிப்பட்ட வடிவங்களில் ஒன்றைப் புறப்பாட்டு நிலையாகவும் மீள்வு நிலையாகவும் கொண்டுள்ளது. மறு புறம் உண்மையில் மொத்த நிகழ்முறை என்பது மூவகைச் சுற்றுகளின் ஒன்றிப்பே. நிகழ்முறை தொடர்ச்சியாக நடைபெறுவதை இச் சுற்றுகள் வெவ்வேறு விதமாய்த் தெரிவிக்கின்றன. மொத்தச் சுற் றானது மூலதனத்தின் பணிவழிப்பட்ட வடிவம் ஒவ்வொன்றுக்கும் தன் பிரத்தியேகச் சுற்றாக விளங்குகிறது; இந்த ஒவ்வொரு சுற்றும் மொத்த நிகழ்முறை தொடர்ச்சியாக நடைபெறுவதற்குரிய நிபந் தனை ஆகிறது. மூலதனத்தின் பணிவழிப்பட்ட வடிவம் ஒவ் வொன்றின் சுற்றும் ஏனையவற்றின் சுற்றைச் சார்ந்ததாகும். உற்பத்தி நிகழ்முறை அதே போது மறுவுற்பத்தி நிகழ்முறையாக இருப்பதும், ஆகவே ஒவ்வொரு வகைச் சுற்றாக இருப்பதும் ஒட்டு மொத்த உற்பத்தி நிகழ்முறைக்கும், ஆகவே சமுதாய மூலதனத் துக்கும் இன்றியமையாத் தேவையாகும். மூலதனத்தின் பல்வேறு பகுதிகள் பல்வேறு கட்டங்களையும் பணிவழிப்பட்ட வடிவங் களையும் ஒன்றன் பின் ஒன்றாய்க் கடக்கின்றன. ஆகவே, ஒவ் வொரு பணிவழிப்பட்ட வடிவமும் — இவ்வடிவம் பூணுகிற மூலதனப் பகுதி தொடர்ந்து மாறிக் கொண்டே இருந்த போதிலும் — ஏனைய வடிவங்களோடு ஏககாலத்தில் அதன் சுற்றை நிகழ்த்து கிறது. தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கிற, தொடர்ந்து மறு வுற்பத்தி செய்யப்படுகிற ஒரு மூலதனப் பகுதி சரக்கு-மூலதனம் என்ற நிலையிலிருந்து பணமாக மாறிக் கொண்டிருக்கிறது; இன் னொரு மூலதனப் பகுதி பண-மூலதனம் என்ற நிலையிலிருந்து திறனுடை-மூலதனமாக மாறிக் கொண்டிருக்கிறது; மூன்றாவது பகுதி திறனுடை-மூலதனம் என்ற நிலையிலிருந்து சரக்கு-மூலதன மாக மாறிக் கொண்டிருக்கிறது. மொத்த மூலதனம் இந்த மூன்று கட்டங்களையும் கடந்து செல்கையில் நிகழ்த்துகிற சுற்றினால்தான் இந்த மூன்று வடிவங்களுமே தொடர்ச்சியாக நிலவுகின்றன.

அப்படியானால், ஒட்டுமொத்தமாய் மூலதனமானது அதன் வெவ்வேறு கட்டங்களிலும் ஏக காலத்தில் ஒன்றை அடுத்து ஒன்றாய் நிலவுகிறது. ஆனால் ஒன்றன் பின் ஒன்றாய் ஒவ்வொரு பகுதியும் ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்துக்கு, ஒரு பணி வழிப்பட்ட வடிவத்திலிருந்து அடுத்த பணிவழிப்பட்ட வடிவத்துக்கு இடையறாமல் சென்று கொண்டிருக்கிறது; இவ்விதம் மாறி மாறி

எல்லாக் கட்டங்களிலும் செயல்படுகிறது. ஆகவே, அதன் வடிவங்கள் மாறிக் கொண்டேயிருப்பவை. அவை அடுத்தடுத்து வரிசையாக வருகின்றன; ஆகவே ஏக காலத்தில் நிலவுகின்றன. ஒவ்வொரு வடிவமும் இன்னொன்றைப் பின்தொடர்வதாகவும், அதே போது அதற்கு முன்செல்வதாகவும் இருக்கிறது; இதனால், ஒரு மூலதனப் பகுதி குறிப்பிட்ட ஒரு வடிவத்துக்குத் திரும்புகையில் இன்னொரு பகுதி வேறு ஒரு வடிவத்துக்குத் திரும்புவது அவசியமாகிறது. ஒவ்வொரு பகுதியும் தொடர்ச்சியாக அதனதன் சுற்றை நிகழ்த்துகிறது. ஆனால் எப்போதுமே மூலதனத்தின் இன்னொரு பகுதி தான் இவ்வடிவத்தை வந்தடைகிறது; இந்தத் தனித்தனிச் சுற்றுகள் ஒட்டுமொத்த நிகழ்முறையின் உறுப்புகளே, ஏககாலத்தியவையும், வரிசையாக அடுத்தடுத்து வருபவையுமான உறுப்புகளே ஆகும்.

ஒட்டுமொத்த நிகழ்முறை முன்பு சொன்னது போல் தடைபடாமல் தொடர்ச்சியாக நடைபெறுவது மூவகைச் சுற்றுகளின் ஒன்றிப்பினால்தான் சாத்தியமாகிறது. மொத்த சமுதாய மூலதனம் என்பது தொடர்ச்சியாய் நடைபெறும் இந்நிகழ்முறையே. இந் நிகழ்முறை எப்போதுமே மூவகைச் சுற்றுகளின் ஒன்றிப்பே ஆகும்.

தனிப்பட்ட மூலதனங்களைப் பொறுத்த வரை, மறுவுற்பத்தி தொடர்ச்சியாக நடைபெறாமல் சில நேரங்களில் அதிகமாகவோ குறைவாகவோ தடைபடுகிறது. முதலாவதாக, மதிப்புத் திரள்களை வெவ்வேறு கட்டங்களிடையிலும் பணிவழிப்பட்ட வடிவங்களிடையிலும் பல நேரங்களில் சமமற்ற பகுதிகளாய் வினியோகிக்க நேர்வதுண்டு. இரண்டாவதாக, உற்பத்தி செய்ய வேண்டிய சரக்கின் தன்மைக்கேற்ப, எனவே மூலதனத்தை முதலீடு செய்யும் குறிப்பிட்ட உற்பத்தித் துறைக்கேற்ப, இந்தப் பகுதிகள் வெவ்வேறு விதமாய் வினியோகிக்கப்படலாம்; மூன்றாவதாக, பருவ காலத்தைச் சார்ந்துள்ள உற்பத்திக் கிளைகளில் தொடர்ச்சி ஓரளவு தடைபடலாம். இயற்கை நிலைமைகள் காரணமாய் (உதாரணமாக வேளாண்மை, ஹெர்ரிங் வகை மீன் பிடித்தல், இன்ன பிற), அல்லது வழக்காறு காரணமாய் (உதாரணமாக, பருவஞ்சார்ந்த வேலை எனப்படுவது) இப்படி நேரிடலாம். ஆலைகளிலும் சுரங்கங்களிலும் தான் நிகழ்முறை காலம் தவறாமல் ஒரேசீராக நடைபெறுகிறது. ஆனால் உற்பத்திக் கிளைகளிடையிலான இந்த வேறுபாட்டினால் சுற்றின் பொதுவான வகைகளில் எந்த வேறுபாடும் தோன்றுவதில்லை.

தற்பெருக்கமடையும் மதிப்பு என்ற முறையில் மூலதனம் குறிப்பது வர்க்க உறவுகளை மட்டுமல்ல; உழைப்பு கூலியுழைப்பாய் இருப்பதை அடிப்படையாய்க் கொண்ட குறிப்பிட்ட ஒரு சமூகத் தன்மையை மட்டுமல்ல. அது ஓர் இயக்கம், வெவ்வேறு கட்டங்களின் வழியாகச் செல்லும் சுற்று நிகழ்முறை; இந்தச் சுற்று நிகழ்முறையில் வெவ்வேறு வகைப்பட்ட மூன்று சுற்று நிகழ்முறைகள்

அடக்கமாகும். எனவே, மூலதனத்தை இயக்கமாகப் புரிந்து கொள்ள முடியுமே தவிர, அசைவற்றதாய்ப் புரிந்து கொள்ள முடியாது. மதிப்பின் சுயேச்சை நிலையை வெறும் சூக்கும நிலையாகக் கொள்வோர் தொழில் துறை மூலதனத்தின் இயக்கமானது இந்த சூக்குமத்தின் செயல் நிலைதான் என்பதை மறந்து விடுகிறார்கள். மதிப்பானது இங்கே பல்வேறு வடிவங்கள் எடுக்கிறது; பல்வேறு இயக்கங்களுக்கு ஆட்படுகிறது. இவற்றுக்கெல்லாம் இடையே அது தன்னைக் காப்பாற்றிக் கொள்வதோடு, பெருகவும் செய்கிறது; அதாவது தற்பெருக்கமடைகிறது. இங்கு பிரதானமாய் நம் கவனத்துக்குரியது இந்த இயக்கத்தின் வடிவம்தான் என்பதால், மூலதன-மதிப்பு அதன் சுற்றை நிகழ்த்துகையில் ஆட்படக் கூடிய திடீர் மாற்றங்களை நாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் மதிப்பில் ஏற்படக் கூடிய திடீர் மாற்றங்களை எல்லாம் மீறி மூலதன-மதிப்பு உபரி-மதிப்பைப் படைக்கக் கூடியதாய் இருக்கும் வரைதான், அதாவது சுயேச்சை நிலை பெற்ற மதிப்பாக அதன் சுற்றை நிகழ்த்திக் கொண்டிருக்கும் வரைதான், ஆகவே மதிப்பில் ஏற்படக் கூடிய திடீர் மாற்றங்களை எப்படியோ சமாளித்து சரிக்கட்டிக் கொண்டிருக்கும் வரைதான், இந்தத் திடீர் மாற்றங்களை எல்லாம் மீறி முதலாளித்துவப் பொருளுற்பத்தி நடைபெறுவதும் நீடிப்பதும் சாத்தியமாகும் என்பது தெளிவு. தனிப்பட்ட தொழில் துறை முதலாளி ஒருவர் சரக்குகளையும் உழைப்பையும் விலைக்கு வாங்குகிறவராகவும், சரக்குகளை விற்கிறவராகவும், திறனுடை-மூலதனத்தின் உடமையாளராகவும் செயல்பட்டு, இவ்விதம் மூலதனச் சுற்றை நிகழச் செய்யும் போது, மூலதனத்தின் செயல்கள் அந்த முதலாளி செய்யும் வேலைகளாகக் காட்சி அளிக்கின்றன. சமுதாய மூலதனத்தின் மதிப்பில் திடீர் மாற்றம் ஏற்படுமானால், இந்த மதிப்பு மாற்ற நிலைமைகளுக்குத் தகவமைய முடியாமல் தனிப்பட்ட முதலாளியின் மூலதனம் அதற்கு பலியாகி மடிந்து போக நேரலாம். மதிப்பிலான இப்படிப்பட்ட திடீர் மாற்றங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு கடுமையாகவும் அடிக்கடியும் நிகழ்கின்றனவோ, சுயேச்சையான மதிப்பின் தன்னியல்பான இயக்கம் அவ்வளவுக்கு அவ்வளவு இயற்கை உற்பாதத்துக்குரிய மூர்க்கத்துடன் செயல்பட்டு தனிப்பட்ட முதலாளியின் முன்யோசனைகளையும் கணக்கீடுகளையும் தகர்த்து விடுகிறது. இயல்பான உற்பத்தி இயல்பு மீறிய ஊக வாணிபத்துக்கு [speculation] அவ்வளவுக்கு அவ்வளவு அடிபணிந்து விடுகிறது. தனிப்பட்ட மூலதனங்கள் அவ்வளவுக்கு அவ்வளவு ஆபத்துக்குள்ளாகின்றன. ஆகவே, காலவட்ட முறையில் மதிப்பில் ஏற்படும் இந்தத் திடீர் மாற்றங்கள், மதிப்பானது மூலதனமாக சுயேச்சை நிலை பெற்று அதன் இயக்கத்தின் மூலம் இந்நிலையைக் காப்பாற்றி வலுப்படுத்திச் செல்வதைப் பொய்யென நிரூபிப்பதற்கு பதில் மெய்யென

நிரூபித்துக் காட்டுகின்றன.

நிகழ்முறையின் போது மூலதனம் அடுத்தடுத்து வரிசையாய் அடையும் உருமாற்றங்கள், சுற்றில் சுற்றி வரும் மூலதனத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றத்தை அதன் ஆரம்ப மதிப்போடு ஓயாமல் ஒப்பிடுதலைக் குறிக்கின்றன. மதிப்பைப் படைக்கும் சக்தியான உழைப்புச் சக்தியிடமிருந்து மதிப்பு சுயேச்சை நிலை பெறுதல் M—L (உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குதல்) என்னும் செயலிலிருந்து ஆரம்பமாகி உற்பத்தி நிகழ்முறையின் போது உழைப்புச் சக்தியின் மீதான சுரண்டலாக [exploitation of labour-power] நடந்தேறுகிறது. ஆனால் மதிப்பு இவ்விதம் சுயேச்சை நிலை பெறுதல் மூலதனச் சுற்றில் திரும்பவும் தலைகாட்டுவதில்லை; மூலதனச் சுற்றில் பணமும் சரக்குகளும் உற்பத்தி-அடிக்கூறுகளும் மூலதன-மதிப்பு மாறி மாறிப் பூணும் வடிவங்களாகவே இருக்கின்றன; மூலதன-மதிப்பின் முந்தைய பருமன் அதன் இப்போதைய மாறிய பருமனுடன் ஒப்பிடப் பெறுவதோடு சரி.

மதிப்பு சுயேச்சை நிலை பெறுவது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கே உரிய தனி இயல்பு: இந்த சுயேச்சை நிலையை எதிர்த்து பெய்லி வாதாடுகிறார்; இது சில பொருளாதார அறிஞர்களின் பிரமைதான் என்கிறார். அவர் கூறுவதாவது: ''மதிப்பு என்பது ஏககாலத்திய சரக்குகளிடையிலான உறவாகும்; ஏனென்றால், இப்படிப்பட்ட சரக்குகளைத்தான் ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை செய்ய முடியும்.'' * வெவ்வேறு சகாப்தங்களைச் சேர்ந்த சரக்கு-மதிப்புகளை ஒப்பிடுவதற்கெதிராக இப்படிச் சொல்கிறார்; இப்படி ஒப்பிடுவது, அந்தந்தக் காலத்தில் பணத்தின் மதிப்பு நிலையானதெனக் கொள்வோமானால், ஒரே வகைச் சரக்குகளின் உற்பத்திக்கு வெவ்வேறு சகாப்தங்களிலும் தேவைப்படும் உழைப்புச் செலவீட்டை ஒப்பிடுவதே தவிர வேறல்ல என்கிறார். பரிவர்த்தனை-மதிப்பு மதிப்புக்குச் சமம் என்றும், மதிப்பின் வடிவம் மதிப்பே என்றும் பொதுவாய்த் தவறாகப் புரிந்து கொள்வதால் தான், அவர் இப்படிச் சொல்கிறார். ஆதலால், சரக்கு-மதிப்புகள் பரிவர்த்தனை-மதிப்புகளாக முனைப்புடன் செயல்படா விட்டால், அவற்றை ஒப்பிட முடியாது, உள்ளபடியே ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை செய்ய முடியாது என்று நினைக்கிறார். மதிப்பு மூலதன-மதிப்பாக அல்லது மூலதனமாகச் செயல்படுவது மதிப்பு மதிப்பாகவே இருக்கிற வரையில்தான், மூலதனச் சுற்றின் வெவ்வேறு கட்டங்களில் அது அதனுடனேயே ஒப்பிடப்படுகிற

* *பார்க்கவும்: சாமுவேல் பெய்லி, மதிப்பின் இயல்பு, அளவைகள், காரணங்கள் பற்றிய விமர்சன ஆய்வுரை: பிரதானமாக திரு ரிக்கார்டோவும் அவரைப் பின்பற்றுவோரும் எழுதியவை தொடர்பாக. அபிப்பிராயங்களின் அமைதலும் வெளியீடும் பற்றிய கட்டுரைகள் என்பதன் ஆசிரியர் எழுதியது, லண்டன், 1825, பக்கம் 72.—பதிப்பாசிரியர்.*

வரையில்தான். இந்த வெவ்வேறு கட்டங்கள் அடுத்தடுத்து வருகிற வையே தவிர ''ஏககாலத்தியவை'' அல்ல — இதையெல்லாம் அவர் நினைத்தே பார்க்கவில்லை.

சுற்றின் சூத்திரத்தைத் தூய வடிவில் பரிசீலிக்க வேண்டு மானால், சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே விற்கப்படுவதாகக் கொள்வது போதுமானதல்ல; மற்றவை மாறாத நிலையில் இது நடைபெறுவதாகவும் கொள்ள வேண்டும். உதாரணமாக P ... P என்ற சுற்று வகையை எடுத்துக் கொள்வோம்; குறிப்பிட்ட முதலா ளியின் திறனுடை-மூலதனத்தின் மதிப்பைக் குறைக்கும் வகையில் உற்பத்தி நிகழ்முறைக்குள் நடைபெறும் எல்லாத் தொழில் நுட்பப் புரட்சிகளையும் [technical revolutions] கருதாமல் ஒதுக்க வேண் டும்; மேலும், திறனுடை-மூலதனத்தின் மதிப்புக் கூறுகளில் ஏற்படக் கூடிய மாற்றம், கைவசம் இருக்கும் சரக்கு-மூலதனத்தினது மதிப் பின் மீது (சரக்கு-மூலதனம் கையிருப்பில் இருந்தால் அதன் மதிப்பு உயரவோ குறையவோ செய்யலாம்) ஏற்படுத்தக் கூடிய எல்லாப் பிரதிபலிப்புகளையும் கருதாமல் ஒதுக்க வேண்டும். C' ஆகிய 10,000 இராத்தல் நூல் அதன் மதிப்பான £500க்கு விற்கப்படு வதாகக் கொள்வோம்; £422க்குச் சமமான 8,440 இராத்தல் நூல் C'இல் அடங்கிய மூலதன-மதிப்பை மாற்றீடு செய்கிறது. ஆனால் பருத்தி, நிலக்கரி முதலானவற்றின் மதிப்பு உயர்ந்தால் (விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைக் கருதாமல் ஒதுக்க வேண்டும்) இந்த £422 ஆனது திறனுடை-மூலதனத்தின் கூறுகளை முழுமையாக மாற்றீடு செய்யப் போதுமானதாய் இல்லாமற் போகலாம்; இப்போது கூடுதல் பண-மூலதனம் அவசிய மாகிறது; அதாவது பண-மூலதனம் முடக்கப்படுகிறது. அந்த விலைகள் குறையும் போது நிகழ்வது நேர்மாறானது; அதாவது பண-மூலதனம் விடுவிக்கப்படுகிறது. மதிப்புறவுகள் மாறாதிருக்கும் போதுதான் நிகழ்முறை முற்றிலும் இயல்பான வழியில் நடந்தேறு கிறது; சுற்றின் மறுநிகழ்வுகளின் போது ஏற்படக் கூடிய உலைவுகள் ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொண்டிருக்கும் வரை நிகழ்முறை யானது அநேகமாய் இயல்பான வழியில் நடந்தேறுகிறது. இந்த உலைவுகள் எவ்வளவு அதிகமாய்க் குறுக்கிடுகின்றனவோ, சரிக் கட்டும் காலத்தை சமாளித்திட தொழில் துறை முதலாளியிடம் பண-மூலதனம் அவ்வளவு அதிகமாய் இருக்க வேண்டும்; முதலா ளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சியைத் தொடர்ந்து, ஒவ் வொரு தனிப்பட்ட உற்பத்தி நிகழ்முறையின் அளவுவீதமும் [scale] அத்துடன், முன்னீடு செய்ய வேண்டிய மூலதனத்தின் குறைந்த பட்ச அளவும் பெருகிச் செல்வதால், தொழில் துறை முதலாளி புரியும் பணியை தனியாகவோ கூட்டாகவோ செயல்படக் கூடிய பெரும் பெரும் பண முதலாளிகளின் ஏகபோகமாக [monopoly] மேலும் மேலும் மாற்றிச்செல்கிற ஏனைய நிலைமைகளோடு இதுவும்

சேர்ந்து கொள்கிறது.

உற்பத்தி-அடிக்கூறுகளின் மதிப்பில் ஏற்படக் கூடிய மாற்றத்தால் ஒரு புறம் M ... M' என்னும் சுற்று வகைக்கும் மறு புறம் P ... P; C' ... C' என்னும் சுற்று வகைகளுக்கும் இடையே ஒரு வேறுபாடு தோன்றுகிறது என்பதை இங்கே குறிப்பிடலாம்.

புதிதாக முதலீடு செய்யப்படும் மூலதனத்தின் (முதலில் பண-மூலதன வடிவில் வரும் இம்மூலதனத்தின்) சுற்றாகிய M ... M' என்பதில் கச்சாப் பொருள் [raw material]; துணைப் பொருள் [auxiliary material] போன்ற உற்பத்திச் சாதனங்களின் மதிப்பில் வீழ்ச்சி ஏற்படுமானால், குறிப்பிட்ட அளவுள்ள தொழிலைத் தொடக்குவதற்குத் தேவைப்படும் பண-மூலதன முதலீடு குறைகிறது. ஏனென்றால், உற்பத்தி நிகழ்முறையின் அளவுவீதம் (உற்பத்தித் திறனின் வளர்ச்சி மாறாதிருக்க) குறிப்பிட்ட அளவு உழைப்புச் சக்திக்குத் தேவையான உற்பத்திச் சாதனங்களின் திரளையும் பரிமாணத்தையும் பொறுத்ததுதானே தவிர, இந்த உற்பத்திச் சாதனங்களின் மதிப்பையோ உழைப்புச் சக்தியின் மதிப்பையோ பொறுத்ததல்ல (உழைப்புச் சக்தியின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் தற்பெருக்கத்தின் பருமனில் மட்டுமே மாற்றம் உண்டாக்குகிறது). இதற்கு நேர் மாறான நிலைமையை எடுத்துக் கொள்வோம். திறனுடை-மூலதனத்தின் கூறுகளாகிற சரக்குகளது உற்பத்தி-அடிக்கூறுகளின் மதிப்பு உயருமானால், குறிப்பிட்ட அளவுள்ள தொழிலை நிறுவுவதற்கு முன்னிலும் கூடுதலான பண-மூலதனம் தேவைப்படுகிறது! இரு நேர்வுகளிலுமே புதிய முதலீட்டுக்குத் தேவைப்படும் பண-மூலதனத்தின் அளவில்தான் மாற்றம் ஏற்படுகிறது. முதலாவது நேர்வில் பண-மூலதனம் உபரியாகிறது; இரண்டாவது நேர்வில் அது முடக்கப்படுகிறது — அந்தத் தொழிற் கிளையில் புதிய தனிப்பட்ட தொழில் துறை மூலதனம் வந்து சேருவது வழக்கம் போல் நடந்தேறுவதாய்க் கொள்கிறோம்.

P ... P, C' ... C' என்னும் சுற்றுகளில் P, C' ஆகியவற்றின் அசைவியக்கம் அதேபோது மூலதனத் திரட்டலாகவும் அமையும் வரை, அதாவது கூடுதலாக வரப்பெறும் பணமாகிய m பண-மூலதனமாக மாற்றப்பட்டு வரும் வரை, இவ்விரு சுற்றுகளும் M ... M' என்னும் சுற்றைப் போல்தான் செயல்படுகின்றன. திறனுடை-மூலதனத்தினது கூறுகளின் மதிப்பு மாற்றத்தால் இவ்விரு வகைச் சுற்றுகளிலும் ஏற்படும் விளைவு M ... M' என்னும் சுற்றில் ஏற்படும் விளைவு போன்றதல்ல — இந்த இடத்திலும், உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டிருக்கும் மூலதனத்தினது அடக்கக் கூறுகளின் மீது இப்படிப்பட்ட மதிப்பு மாற்றங்களால் ஏற்படும் பிரதிபலிப்பைக் கருதாமல் ஒதுக்குகிறோம். நேரடியாக இங்கே மாற்றத்துக்குள்ளாவது ஆரம்ப முதலீடு அல்ல; மறுவுற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டிருக்கும் தொழில் துறை மூலதனமே தவிர, முதல் சுற்றை

நிகழ்த்தும் தொழில் துறை மூலதனம் அல்ல—அதாவது சரக்கு-மூலதனம் அதன் உற்பத்தி-அடிக்கூறுகளாய் மாற்றப்படுவதைக் குறிக்கும் $C'...C<^{L}_{mp}$ என்பதுதான் (இக்கூறுகள் சரக்குகள் ஆதலால்) மாற்றத்துக்குள்ளாகிறது. மதிப்புகள் (அல்லது விலைகள்) சரியும் போது மூன்று நேர்வுகள் சாத்தியமாகும்: முதலாவதாக, மறுவுற்பத்தி நிகழ்முறை அதே அளவுவீதத்தில் தொடரலாம்; இப்படி நிகழ்ந்தால், இது வரை இருந்து வரும் பண-மூலதனத்தில் ஒரு பகுதி விடுவிக்கப்படுகிறது; பண-மூலதனம் திரட்டப்படுகிறது; ஆனால் மெய்யான திரட்டலோ (விரிதிற மறுவுற்பத்தி) இத்திரட்டலைத் தொடக்கி வைத்து அதனுடன் நடந்தேறும் நிகழ்வாகிய m (உபரி-மதிப்பு) திரட்டல் நிதியாக மாறுவதோ முன்னதாக நடைபெறவில்லை. இரண்டாவதாக, தொழில் நுட்ப விகிதாசாரங்கள் இடமளித்தால், மறுவுற்பத்தி நிகழ்முறையை சாதாரணமாக நடத்தக் கூடியதைக் காட்டிலும் விரிவடைந்த அளவுவீதத்தில் நடத்தலாம். மூன்றாவதாக, கச்சாப் பொருள் முதலானவற்றை இன்னுமதிக அளவில் வாங்கிச் சேர்த்து வைக்கலாம்.

சரக்கு-மூலதனத்தின் மாற்றீட்டுக் கூறுகளது மதிப்பு உயர்ந்தால் நேர்மாறானது நிகழ்கிறது. அப்போது மறுவுற்பத்தி முன்போல் இயல்பான அளவுவீதத்தில் நடைபெறாது (உதாரணமாக, வேலை-நாள் சுருங்கிப் போகலாம்). அல்லது, மறுவுற்பத்தியின் அளவுவீதத்தை அப்படியே நீடிக்கச் செய்வதற்கு கூடுதலாய்ப் பண-மூலதனத்தை ஈடுபடுத்த வேண்டியிருக்கும் (பண-மூலதனம் முடக்கப்படுகிறது); அல்லது பணத் திரட்டல்-நிதி இருக்குமிடத்து, மறுவுற்பத்தி நிகழ்முறையை விரிவாக்குவதற்கு அதனை ஈடுபடுத்துவதற்குப் பதில், அந்நிகழ்முறையைப் பழைய அளவுவீதத்தில் இயக்குவதற்கு அதனை முழுமையாகவோ பகுதியாகவோ ஈடுபடுத்த வேண்டியிருக்கும். இதுவும் பண-மூலதனத்தை முடக்குவதே ஆகும்; ஆனால் இங்கே கூடுதல் பண-மூலதனம் தொழில் துறை முதலாளியின் செல்வாதாரங்களிலிருந்து வருகிறதே தவிர வெளியிலிருந்து, பணச் சந்தையிலிருந்து வரவில்லை.

ஆயின் P ... P, C′ ... C′ ஆகிய சுற்றுகளில் மேற்கூறிய மாற்றங்களை மட்டுப்படுத்தக் கூடிய நிலைமைகள் இருக்கக் கூடும். உதாரணமாக, நமது நூற்பாலை அதிபரிடம் பருத்தி இருப்பு கணிசமாய் இருந்தால் (அதாவது அவரது திறனுடை-மூலதனத்தில் கணிசமான பகுதி பருத்தி இருப்பின் உருவில் இருந்தால்), பருத்தி விலையில் ஏற்படக் கூடிய சரிவினால் அவரது திறனுடை-மூலதனத்தில் ஒரு பகுதியினது மதிப்பு குறைந்து போகும். மாறாக, பருத்தி விலை உயருமானால் அவரது திறனுடை-மூலதனத்தின் இந்தப் பகுதியினது மதிப்பு உயர்கிறது. மறு புறம், அவர் கணிசமான சரக்கு-மூலதனத்தை, எடுத்துக்காட்டாகப் பருத்தி நூலை முடக்கி வைத்திருந்தால், பருத்தி விலையில் ஏற்படக் கூடிய

சரிவினால் அவரது சரக்கு-மூலதனத்தில் ஒரு பகுதியினது மதிப்பு குறைந்து போகும்; ஆகவே பொதுவாக சுற்றை நிகழ்த்தும் அவரது ஒட்டுமொத்த மூலதனத்தில் ஒரு பகுதியினது மதிப்பும் குறைந்து போகும். பருத்தி விலை உயருமானால் இதற்கு மாறானது நிகழும். முடிவில் $C'-M-C<^{L}_{mp}$ என்னும் நிகழ்முறையை எடுத்துக் கொள்வோம். சரக்கு-மூலதனத்தின் ஈடேற்றமான $C'-M$ என்பது, Cஇன் கூறுகளது மதிப்பில் மாற்றம் ஏற்படுவதற்கு முன்னர் நிகழ்ந்திருந்தால், முதலாவது நேர்வில் கூறப்பட்ட விதத்தில் மட்டுமே, அதாவது இரண்டாவது சுற்றோட்டச் செயலான $M-C<^{L}_{mp}$ என்பதில் மட்டுமே, மூலதனம் பாதிக்கப்படுகிறது; ஆனால் இப்படிப்பட்ட மாற்றம் $C'-M$ நடைபெறுவதற்கு முன்னர் நிகழ்ந்திருந்தால், ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க பருத்தி விலையில் ஏற்படக் கூடிய சரிவினால் நூலின் விலையிலும் அதற்கிணையான சரிவு ஏற்படுகிறது. மாறாக, பருத்தி விலை உயருமானால், நூலின் விலையும் உயர்கிறது. ஒரே உற்பத்திக் கிளையில் முதலீடு செய்யப்படும் பல்வேறு தனிப்பட்ட மூலதனங்களின் மீது ஏற்படக் கூடிய விளைவு, அவற்றின் சூழ்நிலைகளைப் பொறுத்து விரிவாக வேறுபடலாம்.

சுற்றோட்ட நிகழ்முறையின் கால அளவிலான, எனவே சுற்றோட்ட வேகத்திலான வேறுபாடுகள் காரணமாகவும் பண-மூலதனம் விடுவிக்கப்படலாம் அல்லது முடக்கப்படலாம். மூலதனப் புரள்வு [turnover of capital] பற்றி ஆராய்கையில் இதைப் பரிசீலிப்போம். திறனுடை-மூலதனத்தின் கூறுகளது மதிப்பில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாக M ... M′ என்ற சுற்றுக்கும் ஏனைய இரு வகைச் சுற்றுகளுக்கும் இடையில் இருக்கக் கூடிய மெய்யான வேறுபாடு மட்டுமே இப்போது நம் கருத்துக்குரியது.

$M-C<^{L}_{mp}$ என்னும் சுற்றோட்டப் பிரிவை எடுத்துக் கொள்வோம். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை நன்கு வளர்ந்திருக்கும் சகாப்தத்தில், அதாவது இந்த உற்பத்தி முறை கோலோச்சுகிற சகாப்தத்தில். உற்பத்திச் சாதனங்களான mpஇல் அடங்கிய சரக்குகளில் கணிசப் பகுதி பிறரது சரக்கு-மூலதனமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, விற்பவரின் கோணத்திலிருந்து பார்க்கும் போது, மேற்கூறிய சுற்றோட்டச் செயல் $C'-M'$ ஆகி விடுகிறது; சரக்கு-மூலதனம் பண-மூலதனமாக மாறுகிறது. எப்போதும் இவ்வாறு இருக்க வேண்டும் என்பதில்லை. சுற்றோட்ட நிகழ்முறையின் போது தொழில் துறை மூலதனம் பணமாகவோ சரக்குகளாகவோ செயல்படுகிறது; பண-மூலதனமென்ற வடிவிலானாலும் சரி, சரக்கு-மூலதனமென்ற வடிவிலானாலும் சரி, அது நிகழ்த்தும் சுற்று பல்வேறுபட்ட சமூகப் பொருளுற்பத்தி முறைகளும் உற்பத்தி செய்யக் கூடிய சரக்குகளது சுற்றோட்டத்தின் குறுக்கே செல்கிறது. அடிமை முறையில் [slavery] அடிப்படையிலான

உற்பத்தியின் விளைபொருள் ஆனாலும் சரி, விவசாயிகளின் (சீன, இந்திய ரயத்துகள்) விளைபொருள் ஆனாலும் சரி, கிராம சமுதாயங்களின் (டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள்) விளைபொருள் ஆனாலும் சரி, அரசு உற்பத்தியின் (ருஷ்ய வரலாற்றின் முந்தைய சகாப்தங்களில் நிலவியது போன்ற உற்பத்தி, பண்ணையடிமை முறையின் [serfdom] அடிப்படையிலானது) விளைபொருள் ஆனாலும் சரி, அநாகரிகக் கட்டத்துக்கு முற்பட்ட வேட்டைக் குலங்களின் விளைபொருள் ஆனாலும் சரி, இவை யாவும் தொழில் துறை மூலதனத்தின் வடிவங்களான சரக்குகளையும் பணத்தையும் சரக்குகளாகவும் பணமாகவும் எதிர்நோக்குகின்றன; தொழில் துறை மூலதனத்தின் சுற்றிலும், சரக்கு-மூலதனம் பெற்றெடுக்கும் உபரி-மதிப்பு வருவாயாகச் செலவழிக்கப்படுமானால் அந்த உபரி-மதிப்பின் சுற்றிலும் நுழைகின்றன; அதாவது சரக்கு-மூலதனச் சுற்றோட்டத்தின் இரு கிளைகளிலுமே நுழைகின்றன. அவற்றைத் தோற்றுவித்த உற்பத்தி நிகழ்முறை எத்தன்மையதாகவும் இருக்கலாம். அவை சந்தையில் சரக்குகளாகச் செயல்படுகின்றன; தொழில் துறை மூலதனத்தின் சுற்றிலும், அது தாங்கி வரும் உபரி-மதிப்பின் சுற்றோட்டத்திலும் நுழைகின்றன. இவ்வாறு தொழில் துறை மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறைக்குரிய தனி இயல்பு சரக்குகள் பலதரப்பட்ட தோற்றுவாய்களிலிருந்து வருவதும், சந்தை உலகச் சந்தையாக [world-market] இருப்பதுமே ஆகும். அந்நியச் சரக்குகளுக்குப் பொருந்துவது அந்நியப் பணத்துக்கும் பொருந்தும். சரக்கு-மூலதனம் பணத்தை எதிர்நோக்கும் போது எப்படி சரக்குகளாகவே செயல்படுகிறதோ, அதே போல் பணமும் சரக்கு-மூலதனத்தை எதிர்நோக்கும் போது பணமாகவே செயல்படுகிறது. பணம் இங்கே உலகப் பணமாகச் செயல்படுகிறது.

ஆயினும் இங்கே இரு விஷயங்களைக் கவனிக்க வேண்டும்.

முதலாவது: M—mp என்னும் செயல் நிறைவேறியதுமே, சரக்குகள் (mp) சரக்குகளாய் இல்லாது போகின்றன; தொழில் துறை மூலதனத்தின் பணிவழிப்பட்ட வடிவமாகிய P என்னும் திறனுடை-மூலதனத்தின் உருவில் தொழில் துறை மூலதனத்தின் நிலவல் வடிவங்களில் ஒன்றாகி விடுகின்றன. அவை எங்கிருந்து தோன்றியவை என்பது இவ்விதம் மறைந்து போகிறது. இப்போது அவை தொழில் துறை மூலதனத்தின் நிலவல் வடிவங்களாகி அதில் சங்கமித்து விடுகின்றன. அவற்றை மாற்றீடு செய்ய வேண்டுமானால் மறுவுற்பத்தி செய்தாக வேண்டும் என்பது மெய்தான். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை அந்த அளவுக்கு அதன் வளர்ச்சிக் கட்டத்துக்கு முற்பட்ட பொருளுற்பத்தி முறைகளின் தாக்கத்துக்கு ஆளாக நேருகிறது. முடிந்த வரை பொருளுற்பத்தி முழுவதையும் சரக்கு உற்பத்தியாக மாற்றுவதே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் போக்கு. உற்பத்தி முழுவதையும் முதலாளித்துவச் சுற்றோட்ட நிகழ்முறைக்குள் ஈர்ப்பதே இதைச் செய்திட அது கையாளும்

பிரதான வழி. வளர்ச்சியடைந்த சரக்கு உற்பத்தி என்றாலே முதலாளித்துவச் சரக்கு உற்பத்திதான். தொழில் துறை மூலதனத்தின் தலையீடு எங்குமே இந்த மாற்றத்தைத் தூண்டுகிறது. அதோடு, நேரடி உற்பத்தியாளர்கள் எல்லாரும் கூலித் தொழிலாளர்களாவதையும் துரிதப்படுத்துகிறது.

இரண்டாவது: தொழில் துறை மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறையினுள் புகும் சரக்குகள் (தொழிலாளர்களுக்கு ஊதியமாய்த் தரப்படும் மாறும்-மூலதனம் அவர்களது உழைப்புச் சக்தியை மறுவுற்பத்தி செய்வதற்குத் தேவையான வாழ்வுச் சாதனங்களாக மாற்றப்படுகிறது அல்லவா, அந்த வாழ்வுச் சாதனங்களும் இச்சரக்குகளில் அடங்கும்) அவை எங்கிருந்து தோன்றியவை ஆனாலும், இவற்றைப் படைத்த உற்பத்தி நிகழ்முறையின் சமூக வடிவம் எதுவானாலும், சரக்கு-மூலதனத்தின் வடிவில்—சரக்கு விற்பனையாளர் அல்லது வணிகரது மூலதனத்தின் வடிவில்—நேரே தொழில் துறை மூலதனத்தை எதிர்நோக்குகின்றன. இயல்பாகவே வணிக மூலதனம் என்பது எல்லா உற்பத்தி முறைகளின் சரக்குகளாலும் ஆனது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு பெருவீத உற்பத்தியோடு தவிர்க்க முடியாமலே பெருவீத விற்பனையும்—அதாவது தனிப்பட்ட நுகர்வாளருக்கு அல்லாமல் வணிகருக்கு விற்பது—அவசியம் இந்த நுகர்வாளரே திறனுடை நுகர்வாளராக, தொழில் துறை முதலாளியாக அமைந்து விட்டால், அதாவது ஓர் உற்பத்திக் கிளையின் தொழில் துறை மூலதனம் வேறொரு கிளைக்கு உற்பத்திச் சாதனங்களை வழங்குவதாக இருந்தால், ஒரு தொழில் துறை முதலாளி மற்ற பல தொழில் துறை முதலாளிகளுக்கு (சரக்காணைகள் போன்றவற்றின் வடிவில்) விற்பனை செய்யும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. ஒவ்வொரு தொழில் துறை முதலாளியும் இந்த அளவுக்கு நேரடி விற்பனையாளராகவும், தமக்குத் தாமே வணிகராகவும் இருக்கிறார். அவர் வணிகரிடம் விற்பனை செய்யும் போதும் வணிகராகவே இருப்பதைக் குறிப்பிட வேண்டும்.

சரக்கு விற்பனை வணிக மூலதனத்தின் [merchant's capital] பணியென்ற முறையில் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் முதனிலைகளில் ஒன்று; முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சியைத் தொடர்ந்து மேன்மேலும் வளர்ந்து செல்வது. எனவே முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் குறிப்பிட்ட அமிசங்களை எடுத்துக்காட்டி விளக்குகையில் சரக்கு வியாபாரம் நிலவுவதாக சில சந்தர்ப்பங்களில் அனுமானித்துக் கொள்கிறோம்; ஆனால் இந்நிகழ்முறை பற்றிய பொதுவான பகுப்பாய்வில், வணிகரின் குறுக்கீடின்றி நேரடி விற்பனை நடைபெறுவதாகக் கொள்கிறோம்; ஏனென்றால் இந்தக் குறுக்கீடு இயக்கத்தைச் சேர்ந்த பல கட்டங்களையும் தெளிவற்றவை ஆக்குகிறது.

சிஸ்மொந்தி கூறுவதைப் பார்ப்போம்; அவர் ஓரளவு அப்பட்டமாய் விஷயத்தை முன் வைக்கிறார்:

''வர்த்தகத்துக்கு கணிசமான மூலதனம் தேவை. இந்த மூலதனம் நாம் விவரித்துள்ள இயக்கத்தை நிகழ்த்தும் மூலதனத்தின் பகுதியே என்பது உடனே தெரிவதில்லை. துணி வியாபாரியின் பண்டக சாலையில் குவியும் துணியின் மதிப்புக்கும் ஏழையை உழைக்கச் செய்வதற்காகப் பணக்காரர் வருடாந்தர உற்பத்தியில் அவருக்குக் கூலியாகத் தரும் பகுதிக்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாய்த் தெரிவதில்லை. ஆனால் இந்த மூலதனம், நாம் விவரித்த மூலதனத்துக்கு மாற்றீடாக வந்ததே. செல்வத்தின் வரலாற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் பொருட்டு, அதன் படைப்பிலிருந்து நுகர்வு வரை ஆராய்ந்தோம். உதாரணமாய்த் துணி உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் மூலதனம் மாற்றமின்றி எப்போதும் அப்படியே இருப்பதாகத் தெரிகிறது. நுகர்வாளரின் வருவாய்க்குப் பிரதியாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும் போது, அது இரண்டே இரண்டு பகுதிகளாகப் பிரிகிறது. ஒரு பகுதி இலாபத்தின் வடிவில் உற்பத்தியாளரின் வருவாயாகிறது. மறு பகுதி, தொழிலாளர்கள் மேலும் துணி உற்பத்தி செய்யும் போது பெறுகிற கூலியின் வடிவில் அவர்களின் வருவாயாகிறது.

''ஆனால், இம்மூலதனத்தின் பல்வேறு பகுதிகளும் ஒன்றையொன்று மாற்றீடு செய்வது, எல்லாருக்கும் நல்லதென்று விரைவில் தெரிகிறது; அதாவது உற்பத்தியாளருக்கும் நுகர்வாளருக்கும் இடையிலான சுற்றோட்டம் முழுவதற்கும் 100,000 கிரௌன் போதுமானால் உற்பத்தியாளருக்கும் மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையே அதனை சமமாகப் பங்கிட வேண்டும். இந்நிலையில், முதலாமவர் முழு மூலதனத்தையும் கொண்டு செய்து வந்த அதே வேலையை இம்மூலதனத்தில் மூன்றிலொரு பங்கைக் கொண்டு செய்கிறார். ஏனென்றால் உற்பத்தி செய்து முடித்தவுடனே நுகர்வாளருக்கு பதில் வியாபாரியே தம்மிடமிருந்து வாங்கிக் கொள்வதைப் பார்க்கிறார். மறு புறம், மொத்த வியாபாரியின் மூலதனத்தை முன்னிலும் வெகு விரைவில் சில்லறை வியாபாரியின் மூலதனம் மாற்றீடு செய்கிறது....கூலிக்காக முன்னீடு செய்யப்பட்ட தொகைகளுக்கும் இறுதி நுகர்வாளர் தரும் விலைக்கும் இடையிலான வேறுபாடு அந்த மூலதனங்களின் இலாபமாகக் கருதப்படுகிறது. உற்பத்தியாளரும் வணிகரும் சில்லறை வியாபாரியும் பணிகளைத் தம்மிடையே பிரித்துக் கொள்ளும் தருணத்திலிருந்து அந்த இலாபத்தையும் அவ்வாறே பிரித்துக் கொள்கிறார்கள்; ஒருவருக்கு பதில் மூவரும், ஒரு மூலதனத்துக்கு பதில் மூன்று மூலதனப் பகுதிகளும் ஈடுபட்ட போதிலும், செய்யப்படும் வேலை ஒன்றுதான்.'' *(Nouveaux Principes*, I., பக்கம் 139,140.)

''அவர்கள்'' (வணிகர்கள்) ''எல்லாருமே ஏதோ ஒரு விதத்தில் உற்பத்தியில் பங்கு வகிக்கிறார்கள். எப்படியெனில், நுகர்வே உற்பத்தியின் நோக்கம் என்பதால் உற்பத்தியான பண்டம் நுகர்

வாளரை அடையும் வரை, உற்பத்தி முடிந்து விட்டதாகக் கருத முடியாது.'' (அதே நூல், பக்கம் 137).

சுற்றின் பொது வகைகள் பற்றி ஆராய்கையிலும், பொதுவாக இந்த இரண்டாம் பாகம் முழுவதிலுமே, பணம் என்பது உலோகப் பணத்தையே குறிப்பதாகக் கொள்கிறோம். குறிப்பிட்ட நாடுகளில் குறிப்பிட்ட உபயோகத்துக்கென வடிவமைக்கப்படும் மதிப்புச் சின்னங்களான அடையாளப் பணத்தையும், நாம் இன்னும் வளர்த்திடாத கடன்-செலாவணியையும் கருத்தில் கொள்ளாது ஒதுக்கி விடுகிறோம். முதலாவதாக, இதுவே வரலாற்று வரிசை; முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் முதல் சகாப்தத்தில் கடன்-செலாவணி எப்பங்கும் வகிப்பதில்லை, அல்லது சொற்பப் பங்கே வகிக்கிறது. இரண்டாவதாக, கடன்-செலாவணியின் சுற்றோட்டத்தை விமர்சித்து இது வரை டூக்கும் பிறரும் சொன்னதெல்லாம் சுற்றோட்டத்தில் உலோகப் பணம் மட்டும் இருந்தால் என்னவாகும் என்று திரும்பத் திரும்ப பரிசீலிக்கும் படிதான் அவர்களைக் கட்டாயப்படுத்தியது. மேற்கூறிய வரலாற்று வரிசை எவ்வளவு அவசியம் என்பதைத் தத்துவார்த்தத்தில் நிரூபிக்க இதுவே போதும். ஆனால் உலோகப் பணம் வாங்கற் சாதனமாக மட்டுமல்லாமல் கொடுப்புச் சாதனமாகவும் செயல்படலாம் என்பதை மறக்கலாகாது. எளிமையின் நிமித்தம் இந்த இரண்டாவது பாகத்தில் நாம் அதனைப் பொதுவாக அதன் முதல் பணிவழிப்பட்ட வடிவத்தில் மட்டும் நோக்குகிறோம்.

தொழில் துறை மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறை அதன் தனிப்பட்ட சுற்றின் ஒரு பகுதியே ஆகும்; அது பொதுவான சரக்குச் சுற்றோட்டத்துக்குள் நடக்கும் செயல்களின் தொடராகவே இருக்கும் வரையில் ஏற்கெனவே வகுத்துரைத்த பொது விதிகளால் ஆளப்படுகிறது (முதல் பாகம், அத்தியாயம் III). ஆகவே, பணத்தின் ஓட்ட வேகம் [velocity of currency] எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாகிறதோ, இதனால் ஒவ்வொரு தனிப்பட்ட மூலதனமும் எவ்வளவுக்கு எவ்வளவு வேகமாய் சரக்குகளாகவும் பணமாகவும் வரிசையாய் உருமாற்றம் அடைந்து செல்கிறதோ, குறிப்பிட்ட பணத் தொகை, உதாரணமாக £500 அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமான தொழில் துறை மூலதனங்களை (அல்லது சரக்கு-மூலதன வடிவிலான தனிப்பட்ட மூலதனங்களை) சுற்றோட்டத்தில் விடுகிறது. இவ்வாறே, பணம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாய்க் கொடுப்புச் சாதனமாகச் செயல்படுகிறதோ (எடுத்துக்காட்டாக ஒரு சரக்கு-மூலதனத்தை அதன் உற்பத்திச் சாதனங்கள் மாற்றீடு செய்கையில் கணக்கை சரி செய்தால் போதுமென்னும் நிலை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாய் ஏற்படுகிறதோ), கொடுப்புக்கான காலக் கெடுகள் அவ்வளவுக்கு அவ்வளவு குறுகிப் போகின்றன. எடுத்துக்காட்டாக, கூலி கொடுப்பதற்கான தினங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமாய் வருகின்றனவோ, குறிப்பிட்ட மூலதன-மதிப்புத்

திரளின் சுற்றோட்டத்துக்குத் தேவைப்படும் பணம் அவ்வளவுக்கு அவ்வளவு குறைந்து விடுகிறது. மறு புறம், சுற்றோட்ட வேகமும் மற்றெல்லா நிலைமைகளும் மாறாதிருப்பதாகக் கொண்டால், பண-மூலதனத்தின் சுற்றோட்டத்துக்குத் தேவைப்படும் பணத்தின் அளவு, சரக்கு விலைகளின் தொகையால் (விலையை சரக்குப் பரிமாணத்தால் பெருக்கி வருவதால்) நிர்ணயிக்கப்படுகிறது; அல்லது, சரக்குகளின் பரிமாணமும் மதிப்பும் குறிப்பிட்டவையாக இருந்தால், பணத்தின் மதிப்பாலேயே கூட நிர்ணயிக்கப்படுகிறது.

மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறை சாதாரண சுற்றோட்டச் செயல்களின் தொடராய் அமையும் போதுதான் பொதுவான சரக்குச் சுற்றோட்டத்தின் விதிகள் அதனை ஆள்கின்றன. தனிப்பட்ட தொழில் துறை மூலதனங்கள் நிகழ்த்தும் சுற்றுகளின் பணி வழிப்பட்ட பிரிவுகளாக இச்சுற்றோட்டச் செயல்கள் அமையும் போது அல்ல. இது தெளிவாகும் பொருட்டு, சுற்றோட்ட நிகழ்முறையை அதன் உள்தொடர்பு தடைபடாமல் ஆராய வேண்டும். கீழ்க்காணும் இரு வகைச் சுற்றுகளிலும் இதைக் காணலாம்.

$$\text{II) } P \ldots C' \begin{cases} C- \\ -M' \\ c- \end{cases} \begin{cases} M-C<^{L}_{MP} \ldots P\ (P') \\ m-c \end{cases}$$

$$\text{III) } C' \begin{cases} C- \\ -M \\ c- \end{cases} \begin{cases} M-C<^{L}_{MP} \ldots P \ldots C' \\ m-c \end{cases}$$

பொதுவாக சரக்குச் சுற்றோட்டச் செயல்களின் தொடரென்ற முறையில், சுற்றோட்ட நிகழ்முறையானது (C—M—C என்ற வடிவத்திலிருந்தாலும் சரி, M—C—M என்ற வடிவத்திலிருந்தாலும் சரி) சரக்கு-உருமாற்றங்களின் நேரெதிரான இரு தொடர்களைத்தான் குறிக்கிறது; இவற்றில் ஒவ்வொரு தனிப்பட்ட உருமாற்றமும் சரக்கை அல்லது பணத்தை நோக்கும் அயலார் பணம் அல்லது அயலார் சரக்கின் எதிர் உருமாற்றத்தைக் குறிக்கிறது.

சரக்கு-உடைமையாளருக்கு C—M ஆக இருப்பது அதை வாங்குபவருக்கு M—C ஆகிறது. C—M என்பதில் C ஆக வரும் சரக்கின் முதல் உருமாற்றம் Mஇன் வடிவில் வரும் சரக்கின் இரண்டாம் உருமாற்றமாகும்; M—C என்பதில் நிலைமை நேர்மாறானதாகும். ஒரு கட்டத்திலுள்ள குறிப்பிட்ட சரக்கின் உருமாற்றம் இன்னொரு கட்டத்திலுள்ள இன்னொரு சரக்கின் உருமாற்றத்தோடு பின்னிப் பிணைந்திருப்பது தொடர்பாகத் தரப்படும் இவ்விளக்கம், முதலாளி சரக்குகளை வாங்குபவராகவும் விற்பவராகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வரையில், எனவே அவரது மூலதனம் மற்றொரு முதலாளியின் சரக்குகளுக்கு எதிரான பணத்தின் வடிவில், அல்லது மற்றொரு முதலாளியின் பணத்துக்கு எதிரான சரக்குகளின் வடிவில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வரையில் மூலதனச் சுற்றோட்டத்துக்கும் பொருந்தும். ஆனால் சரக்கு-உருமாற்றங்கள்

இப்படிப் பின்னிப் பிணைவது வேறு; மூலதன உருமாற்றங்கள் பின்னிப் பிணைவது வேறு.

முதலாவதாக, M—C(mp) என்பது வெவ்வேறு தனிப்பட்ட மூலதனங்களின் உருமாற்றங்கள் பின்னிப் பிணைவதைக் குறிக்கலாம் என்று பார்த்தோம். எடுத்துக்காட்டாக, நூற்பாலை அதிபரின் சரக்கு-மூலதனமான நூலில் ஒரு பகுதிக்கு பதில் நிலக்கரி வருகிறது. அவரது மூலதனத்தின் ஒரு பகுதி பண வடிவில் இருக்கிறது; சரக்குகளின் வடிவத்துக்கு மாற்றப்படுகிறது. அதே நேரத்தில் முதலாளித்துவ நிலக்கரி உற்பத்தியாளரின் மூலதனம் சரக்குகளின் வடிவில் இருக்கிறது; எனவே பண வடிவத்துக்கு மாற்றப்படுகிறது; இந்த உதாரணத்தில் ஒரே சுற்றோட்டச் செயல் (வெவ்வேறு உற்பத்திக் கிளைகளைச் சேர்ந்த) இரு தொழில் துறை மூலதனங்களின் எதிரெதிர் உருமாற்றங்களைக் குறிக்கிறது; இந்த இருவேறு மூலதனங்களது உருமாற்றங்களின் தொடர்கள் இவ்விதம் பின்னிப் பிணைந்திருக்கின்றன. ஆனால் M உருமாறுவதால் வரும் mp சரக்கு-மூலதனமாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை; அதாவது தொழில் துறை மூலதனத்தின் பணிவழிப்பட்ட வடிவமாய், முதலாளியால் உற்பத்தி செய்யப்பட்டதாய் இருந்தாக வேண்டும் என்பதில்லை—இது நாம் முன்பே பார்த்ததுதான். இந்நிகழ்வு எப்போதுமே ஒரு தரப்புக்கு M—C, மறு தரப்புக்கு C—M; ஆனால் அது எப்போதுமே மூலதனங்களது உருமாற்றங்களின் பின்னிப் பிணைதலாக இருந்து விடுவதில்லை. மேலும், உழைப்புச் சக்தியை வாங்குவதற்கான M—L ஒருபோதும் மூலதனங்களது உருமாற்றங்களின் பின்னிப் பிணைதல் அன்று; ஏனென்றால், உழைப்புச் சக்தி தொழிலாளியின் சரக்கே என்றாலும், முதலாளியிடம் விற்கப்படும் வரை அது மூலதனமாவதில்லை. மறுபுறம் C′—M′ என்னும் நிகழ்முறையில் M′ ஆனது மாறிய சரக்கு-மூலதனத்தைக் குறிக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. உழைப்புச் சக்தி என்னும் சரக்கின் பண வடிவ ஈடேற்றமாகவோ (கூலி), அல்லது சுயேச்சையான உழைப்பாளி, அடிமை, பண்ணையடிமை, அல்லது கிராம சமுதாயத்தினது [community] உற்பத்திப் பொருளின் பண வடிவ ஈடேற்றமாகவோ அது இருக்கலாம்.

ஆயினும், இரண்டாவதாக, உலகச் சந்தைக்கான பொருளுற்பத்தி முழுவதும் முதலாளித்துவ முறையில் நடைபெறுவதாகக் கொண்டால், ஏதேனுமொரு தனிப்பட்ட மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறைக்குள் நிகழும் ஒவ்வொரு உருமாற்றமும் வகிக்கும் பணிவழிப்பட்ட பங்கினை நிறைவேற்றிட, இந்த உருமாற்றம் இன்னொரு மூலதனத்தின் சுற்றில் அதற்கான எதிர் உருமாற்றத்தைக் குறிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லவே இல்லை. எடுத்துக்காட்டாக, P ... P என்னும் சுற்றில், C′ஐப் பணமாக மாற்றுவதால் வரும் M′ஆனது (அச்சரக்கு நுகர்வுப் பண்டமானால்) வாங்குபவருக்கு

அவரது உபரி-மதிப்பின் பண வடிவ ஈடேற்றமாக இருக்கலாம்: அல்லது $M'-C'<^{L}_{mp}$ (ஆக ஏற்கெனவே திரட்டப்பட்ட மூலதனம் இதில் நுழைகிறது) என்பதில், M' ஆனது mpஐ விற்பவரைப் பொறுத்த வரை, அவர் முன்னீடு செய்த மூலதனத்தை மாற்றீடு செய்ய மட்டும் அவரது மூலதனத்தின் சுற்றோட்டத்தினுள் நுழையலாம்; அல்லது திரும்பவும் அதனுள் வராமலே வருவாய்ச் செலவீடாகப் பிரிந்து சென்று விடலாம்.

எனவே, மொத்தச் சமுதாய மூலதனத்தின் அடக்கக் கூறுகளாகிய சுயேச்சையான பல்வேறு தனிப்பட்ட மூலதனங்களும்—மூலதனம் தொடர்பாகவும், அதே போல் உபரி-மதிப்பு தொடர்பாகவும்—சுற்றோட்ட நிகழ்முறையில் ஒன்றையொன்று மாற்றீடு செய்து கொள்ளும் விதம், சரக்குச் சுற்றோட்டத்தில் நிகழும் உருமாற்றங்களின் சாதாரண பின்னிப் பிணைதலிலிருந்து புலனாவதில்லை; மூலதனச் சுற்றோட்டச் செயல்களுக்கும் இதர அனைத்து வகைச் சரக்குச் சுற்றோட்டச் செயல்களுக்கும் பொதுவானதாகிய இந்தப் பின்னிப் பிணைதலிலிருந்து புலனாவதில்லை. இதற்கு வேறொரு ஆய்வு முறை அவசியமாகிறது. வெறும் பதப் பிரயோகங்களே போதுமென இதுகாறும் கருதப்பட்டு வந்தது. சரக்குச் சுற்றோட்டம் அனைத்துக்கும் பொதுவான உருமாற்றங்கள் பின்னிப் பிணைவதிலிருந்து தருவிக்கப்பட்ட வரையறையற்ற கருத்துகளுக்கு மேல் இவற்றில் ஒன்றுமில்லை என்று இந்தப் பிரயோகங்களை நெருங்கிச் சென்று ஆராய்கையில் தெரிய வருகிறது.

---

தொழில் துறை மூலதனத்தினது சுற்றின், ஆகவே முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் தெளிவாய்ப் புலப்படும் தனித் தன்மைகளில் ஒன்றாய் அமையும் நிலைமை என்னவென்றால், ஒரு புறம் திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறுகள் சரக்குச் சந்தையிலிருந்து பெறப்படுபவை; அச்சந்தையிலிருந்து தொடர்ச்சியாகப் புதுப்பிக்கப்பட வேண்டியவை; சரக்குகளாக விலைக்கு வாங்கப்பட வேண்டியவை. மறு புறம் உழைப்பு நிகழ்முறையின் உற்பத்திப் பொருட்கள் அந்நிகழ்முறையிலிருந்து சரக்குகளாக வெளிவருபவை; ஓயாமல் திரும்பத்திரும்ப சரக்குகளாக விற்கப்பட வேண்டியவை. எடுத்துக்காட்டாக ஸ்காட்லாந்தின் தாழ்நிலைப் பகுதியைச் சேர்ந்த நவீனச் சாகுபடியாளரை [farmer], கண்டத்தைச் சேர்ந்த பழைய முறையிலான சிறு விவசாயியுடன் [peasant] ஒப்பு நோக்கலாம். முன்னவர் தமது உற்பத்திப் பொருள் முழுவதையும் விற்றுவிடுகிறார்; ஆகவே அதன் அடிக்கூறுகள் எல்லாவற்றையும்—விதையையும் கூட—சந்தைக்குச் சென்று மாற்றீடு செய்தாக வேண்டும். பின்னவர் தமது உற்பத்திப் பொருளில் பெரும் பகுதியைத் தாமே நுகர்கிறார், முடிந்த வரை குறைவாகவே வாங்கவும் விற்கவும் செய்கிறார்; கருவி செய்தல், ஆடை நெய்தல் போன்ற காரியங்களை

முடிந்த வரை தாமே செய்து கொள்கிறார்.

ஆதலால், இயற்கைப் பொருளாதாரம் [natural economy], பணப் பொருளாதாரம் [money-economy] கடன்-செலாவணிப் பொருளாதாரம் [credit-economy] ஆகியவை சமுதாயப் பொருளுற்பத்தியின் தனிச் சிறப்பு வாய்ந்த மூன்று பொருளாதார இயக்க வடிவங்களாய்க் கொள்ளப்பட்டு, ஒன்றுக்கொன்று எதிராய் நிறுத்தப்படுகின்றன.

முதலாவதாக, இந்த மூன்று வடிவங்களும் வளர்ச்சி நிலையில் சமதையானவை அல்ல. கடன்-செலாவணிப் பொருளாதாரம் எனப்படுவது பணப் பொருளாதாரத்தின் வடிவங்களில் ஒன்று தான். ஏனெனில், இரண்டு பதங்களுமே உற்பத்தியாளர்களுக்குள் நடக்கும் பரிவர்த்தனைப் பணிகள் அல்லது முறைகளைத் தெரிவிக்கின்றன. வளர்ச்சியடைந்த முதலாளித்துவப் பொருளுற்பத்தியில், பணப் பொருளாதாரம் என்பது கடன்-செலாவணிப் பொருளாதாரத்தின் அடிப்படையாகவே விளங்குகிறது. இவ்வாறு பணப் பொருளாதாரமும் கடன்-செலாவணிப் பொருளாதாரமும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சியில் வெவ்வேறு கட்டங்களைக் குறிப்பவையே தவிர வேறல்ல. ஆனால் இவை, எந்த விதத்திலும், இயற்கைப் பொருளாதாரத்தைப் போல் சுயேச்சையான பரிவர்த்தனை வடிவங்களல்ல. இப்படிப் பார்த்தால் இயற்கைப் பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட வடிவங்களையும் மேற்கூறிய இரு பொருளாதாரங்களுக்கும் சமதையானவையாய்க் கொண்டு அவற்றுக்கு எதிராய் நிறுத்துவதும் கூட நியாயமாகி விடும்.

இரண்டாவதாக, பணப் பொருளாதாரம், கடன்-செலாவணிப் பொருளாதாரம் ஆகிய இரு இனங்களையும் இயற்கைப் பொருளாதாரத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டும் அடையாளமாக வலியுறுத்தப்படுவது முறையான பொருளாதாரம் அல்ல; அதாவது உற்பத்தி நிகழ்முறை அல்ல. அந்தந்தப் பொருளாதாரத்துக்கும் இணையாக உற்பத்தியின் பல்வேறு செயலிகளிடையே, அதாவது உற்பத்தியாளர்களிடையே நிலவும் பரிவர்த்தனை முறையே வலியுறுத்தப்படுகிறது. இதையே முதலாவது இனத்துக்கும் பொருத்திப் பார்க்க வேண்டும். அப்படிச் செய்யும் போது இயற்கைப் பொருளாதாரம் பண்டமாற்றுப் பொருளாதாரம் ஆகி விடுகிறது. பெரு நாட்டின் இன்கா அரசில் காணப்படுவது போன்ற முற்றிலும் தனிமைப்பட்ட இயற்கைப் பொருளாதாரம் இந்த இனங்களில் எதற்கும் உட்படாது.

மூன்றாவதாக, பணப் பொருளாதாரம் சரக்கு உற்பத்தி முழுவதற்கும் பொதுவானது. உற்பத்திப் பொருள் சமுதாயப் பொருளுற்பத்தியின் பல்வேறுபட்ட உயிரமைப்புகளிலும் சரக்காக விளங்குகிறது. ஆதலால், எத்தகைய அளவுவீதத்தில் உற்பத்திப் பொருள் வாணிபப் பண்டமாக, சரக்காகப் படைக்கப்படுகிறது என்பதும்,

ஆகவே எந்த அளவுக்கு அதன் படைப்புக் கூறுகள் அதனை உற்பத்தி செய்த பொருளாதாரத்துக்குள் வாணிபப் பண்டங்களாக, சரக்குகளாக மீண்டும் நுழைந்தாக வேண்டும் என்பதும் மட்டுமே முதலாளித்துவப் பொருளுற்பத்தியைச் சிறப்பித்துக் காட்டுவன வாகி விடும்.

உண்மையில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி என்பது, சரக்கு உற்பத்தியே பொருளுற்பத்தியின் பொது வடிவமாய் இருப்பதாகும். ஆனால் அது இப்படி இருப்பதற்கும், அதன் வளர்ச்சிப் போக்கில் மேலும் மேலும் இப்படி ஆவதற்கும் ஒரே காரணம், உழைப்பே இங்கு சரக்காகி விடுகிறது என்பதுதான். தொழிலாளி தமது உழைப்பை, அதாவது தமது உழைப்புச் சக்தியின் பணியை விற் கிறார். அதன் மதிப்புக்கே—அதற்காகும் மறுவுற்பத்திச் செலவி னால் நிர்ணயிக்கப்படுவதான அதன் மதிப்புக்கே—விற்பதாகக் கொள்கிறோம். உழைப்பு எந்த அளவுக்குக் கூலியுழைப்பாகிறதோ, உற்பத்தியாளர் அந்த அளவுக்குத் தொழில் துறை முதலாளி யாகிறார். எனவேதான், நேரடி விவசாய உற்பத்தியாளர் கூலித் தொழிலாளியாகும் வரை, முதலாளித்துவப் பொருளுற்பத்தி (எனவே சரக்கு உற்பத்தியும் கூட) அதன் முழு வீச்சை அடைவ தில்லை. முதலாளி, கூலித் தொழிலாளி என்ற உறவில், பண உறவு, அதாவது வாங்குபவருக்கும் விற்பவருக்கும் இடையிலான உறவு உற்பத்தியிலேயே உள்ளார்ந்த உறவாகி விடுகிறது. ஆனால் இந்த உறவின் அடித்தளம் உற்பத்தியின் சமூகத் தன்மை தானே தவிர, பரிவர்த்தனை முறையன்று. மறுதலையாக, பின்னது முன்ன திலிருந்தே பிறக்கிறது. ஆயினும் எல்லாரும் நேர்மையற்றுத் தொழில் புரிவதில் குறியாய் இருக்கும் முதலாளித்துவ உலகில், உற்பத்தி முறையின் தன்மையை அதற்குரிய பரிவர்த்தனை முறை யின் அடிப்படையாகக் காண்பதற்கு பதில், பரிவர்த்தனை முறையை [mode of exchange] உற்பத்தி முறையின் அடிப்படையாகக் காண் பதில் வியப்பில்லைதான்.[11]

---

முதலாளி சுற்றோட்டத்திற்குள் செலுத்தும் பண வடிவிலான மதிப்பு, அவர் அதிலிருந்து எடுப்பதைக் காட்டிலும் குறைவாகும்; ஏனென்றால் அவர் சரக்குகளின் வடிவில் அதற்குள் செலுத்தும் மதிப்பு, சரக்குகளின் வடிவில் அதிலிருந்து எடுப்பதைக் காட்டிலும் அதிகமாகும். தொழில் துறை முதலாளியென்ற முறையில் அவர் மூலதனத்தின் ஆளுருவமாகவே செயல்படுகிறார் என்பதால்,

[11] கையெழுத்துப் பிரதி V என்பதன் முடிவு. இங்கிருந்து அத்தியாயத்தின் முடிவு வரை வருவது, 1877 அல்லது 1878 ஆம் வருடத்தைச் சேர்ந்த குறிப்பேடு ஒன்றில் பல்வேறு புத்தகங்களிலிருந்தும் எழுதப்பட்ட எடுகோள்களுக்கிடையே இடம் பெற்றுள்ள ஒரு குறிப்பாகும்.

அவரது சரக்கு-மதிப்பின் வழங்கல் எப்போதுமே அதற்கான அவரது வேண்டலைக் காட்டிலும் அதிகமாய் இருக்கிறது. அவரது இந்த வழங்கலும் வேண்டலும் [supply and demand] ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொண்டால் அவரது மூலதனம் உபரி-மதிப்பு எதையும் உற்பத்தி செய்யவில்லை, திறனுடை-மூலதனமாகச் செயல்படவில்லை என்று பொருள். திறனுடை-மூலதனம் உபரி-மதிப்பு உண்டாகிப் பெருத்த சரக்கு-மூலதனமாக மாற்றப்படவில்லை, உற்பத்தி நிகழ்முறையின் போது அது உழைப்புச் சக்தியிலிருந்து ச்ரக்கு வடிவிலான உபரி-மதிப்பைக் கறந்திடவில்லை என்று பொருள். அதாவது மூலதனமாக செயல்படவே இல்லை என்று பொருள். முதலாளி என்றாலே, ''வாங்கும் போது குறைவாய்க் கொடுக்க வேண்டும்; விற்கும் போது அதிகமாய்ப் பெற வேண்டும்.'' எப்படி அவரால் இதைச் செய்ய முடிகிறது? குறைந்த விலைக்கு வாங்கிய சரக்கை—மதிப்பு குறைவென்பதால் விலையும் குறைவு—அவர் அதிக மதிப்புள்ள, எனவே அதிக விலையுள்ள சரக்காக மாற்றுவதை முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறை சாத்தியமாக்குவதால்தான் இதைச் செய்ய முடிகிறது. அவர் அதிக விலைக்கு விற்க முடிவதற்குக் காரணம் சரக்கின் மதிப்பு அதன் உற்பத்தி-அடிக் கூறுகளின் மதிப்பைக் காட்டிலும் அதிகம் என்பது தானே தவிர, சரக்கை அதன் மதிப்புக்கும் கூடுதலான விலைக்கு விற்கிறார் என்பதல்ல.

முதலாளியின் வழங்கலுக்கும் வேண்டலுக்கும் இடையிலான வேறுபாடு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ, அதாவது அவருக்கு வேண்டிய சரக்கு-மதிப்பைக் காட்டிலும் அவர் வழங்கும் சரக்கு-மதிப்பு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ, அவர் தமது மூலதனத்தின் மதிப்பை அவ்வளவுக்கவ்வளவு வேகமாய்ப் பெருகச் செய்கிறார். அவரது நோக்கம் தமது வழங்கலையும் வேண்டலையும் சமப்படுத்துவது அல்ல. அவற்றுக்கிடையிலான சமமின்மையை, வேண்டலை விட வழங்கலுக்குள்ள மிகைப்பாட்டை முடிந்த வரை அதிகப்படுத்துவதே அவரது நோக்கம்.

தனிப்பட்ட முதலாளிக்கு மட்டுமல்ல, முதலாளி வர்க்கத்துக்கே இது பொருந்தும்.

முதலாளி ஆனவர் தொழில் துறை மூலதனத்தின் ஆளுருவமே என்பதால், அவரது வேண்டல் உற்பத்திச் சாதனங்களுக்கும் உழைப்புச் சக்திக்குமான வேண்டலே தவிர வேறல்ல. மதிப்பைப் பொறுத்த வரை, mpக்கான அவரது வேண்டல் அவர் முன்னீடு செய்யும் மூலதனத்தைக் காட்டிலும் குறைவு. அவர் விலைக்கு வாங்குகிற உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு அவரது மூலதனத்தின் மதிப்பைக் காட்டிலும் குறைவு; ஆகவே அவர் வழங்கும் சரக்கு-மூலதனத்தின் மதிப்பைக் காட்டிலும் இன்னும் கூடக் குறைவு.

உழைப்புச் சக்திக்கான அவரது வேண்டலைப் பொறுத்த வரை,

மதிப்பின் நோக்கில் அது அவரது மொத்த மூலதனத்தோடு அவரது மாறும்-மூலதனம் கொண்டுள்ள விகிதத்தால், அதாவது v:C என்பதால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே, முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் இந்த வேண்டல் உற்பத்திச் சாதனங்களுக்கான அவரது வேண்டலை விட ஒப்பளவில் சிறிதாகிச் செல்கிறது. அவர் Lஐக் காட்டிலும் mpஐ மேன்மேலும் அதிகமாய் வாங்குகிறார்.

தொழிலாளி பொதுவாகத் தமது கூலியை வாழ்வுச் சாதனங்களாக மாற்றிக் கொள்கிறார், மிகப் பெரும் பகுதியை அத்தியாவசியப் பண்டங்களாக மாற்றிக் கொள்கிறார் என்பதால், உழைப்புச் சக்திக்கான முதலாளியின் வேண்டல் என்பது ஒரு விதத்தில் தொழிலாளி வர்க்கத்துக்கு அத்தியாவசியமான நுகர்வுப் பண்டங்களுக்கான வேண்டலாகவும் இருக்கிறது. ஆனால் இந்த வேண்டல் vக்குச் சமம், இம்மியும் அதிகமல்ல (தொழிலாளி தமது கூலியில் ஒரு பகுதியைச் செலவழிக்காமல் மிச்சம் பிடிப்பாரானால்—இங்கு கடன்-உறவுகளை எல்லாம் கருதாமல் ஒதுக்கி விடுகிறோம் என்பதைக் கூறத் தேவையில்லை—ஒரு பகுதி கூலியை பணச் சேர்ப்பாக மாற்றுகிறார், அவர் பண்டம் வாங்குவது அந்த அளவுக்குக் குறைகிறது என்று பொருள்). முதலாளியினது வேண்டலின் மேல் வரம்பு c+vக்குச் சமமான C ஆகும், ஆனால் அவரது வழங்கல் c+v+s ஆகும். ஆதலால் அவரது சரக்கு-மூலதனத்தின் இயைபு $80_c+20_v+20_s$ என்பதாக இருந்தால், அவரது வேண்டல் $80_c+20_v$ என்பதற்குச் சமம்; எனவே, அதில் அடங்கிய மதிப்பைக் கொண்டு பார்த்தால், அவரது வழங்கலை விட ஐந்திலொரு பங்கு குறைவு. அவர் உற்பத்தி செய்யும் உபரி-மதிப்புத் திரளின் சதவீதம் (அவரது இலாப வீதம்) அதிகரிக்க அதிகரிக்க, அவரது வழங்கலுடன் ஒப்பிடுகையில் அவரது வேண்டல் மேலும் மேலும் குறைந்து செல்கிறது. உற்பத்தி வளர்ந்து முன்னேறும் போது உழைப்புச் சக்திக்கும், அதன் மூலமாய் அவசிய வாழ்வுச் சாதனங்ளுக்குமான முதலாளியின் வேண்டல் உற்பத்திச் சாதனங்களுக்கான அவரது வேண்டலுடன் ஒப்பிடுமிடத்து, மேலும் மேலும் குறைகிறது. ஆனால், mpக்கான அவரது வேண்டல் அவரது மூலதனத்தை விட எப்போதுமே குறைவுதான் என்பதை மறக்கலாகாது. ஆகவே, உற்பத்திச் சாதனங்களுக்கான அவரது வேண்டல் அதே மதிப்புள்ள மூலதனத்தைக் கொண்டு அதே விதமான நிலைமைகளில் தொழில் செய்து அவருக்கு அந்த உற்பத்திச் சாதனங்களை வழங்கும் முதலாளியின் சரக்கு-உற்பத்தியை [commodity-product] விட எப்போதும் குறைந்த மதிப்புடையதாகவே இருந்தாக வேண்டும். ஒருவருக்கு பதில் பல முதலாளிகள் உற்பத்திச் சாதனங்களை வழங்குகிறார்கள் என்பதால் எந்த மாற்றமும் இல்லை. அவரது மூலதனம் £1,000 என்றும் அதன் மாறாப் பகுதி £800 என்றும் வைத்துக் கொள்வோம்; இந்த எல்லா முதலாளிகளிடமும் அவரது

வேண்டல் £800க்குச் சமம். இலாப வீதம் ஒன்றே எனக் கொண்டால், அவர்கள் சேர்ந்து ஒவ்வொரு £1,000க்கும் £1,200 பெறுமானமுள்ள உற்பத்திச் சாதனங்களை வழங்குகிறார்கள் (ஒவ்வொரு £1,000இலும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கக் கூடிய பங்கு குறித்தோ, ஒவ்வொருவரின் பங்கும் அவரது மொத்த மூலதனத்தில் குறிக்கக் கூடிய பின்னம் குறித்தோ கவலையில்லை. ஆதலால் அவரது வேண்டல் அவர்களது வழங்கலில் மூன்றிலிரு பங்கை மட்டும் ஈடு செய்கிறது; அதே நேரத்தில் அவரது வேண்டல் முழுவதுமே, மதிப்பின் நோக்கில் அளவிட்டால், அவரது வழங்கலில் ஐந்தில் நான்கு பங்குக்கு மட்டுமே சமம்.

மூலதனப் புரள்வு [turnover] குறித்து இனிமேல்தான் ஆராயப் போகிறோம்; இங்கே போகிற போக்கில் இந்தப் பிரச்சினையைப் பார்ப்போம்: முதலாளியின் மொத்த மூலதனம் £5,000 எனக் கொள்வோம்; இதில் £4,000 நிலை-மூலதனம், £1,000 சுழல்-மூலதனம் என்போம். இந்த £1,000 மேலே கூறியது போல் $800_c + 200_v$ என்பதால் ஆனது என்போம். அவரது மொத்த மூலதனம் ஒரு முறை புரள்வதற்கு அவரது சுழல்-மூலதனம் ஆண்டொன்றுக்கு ஐந்து முறை புரள வேண்டும். அப்படியானால் அவரது சரக்கு-உற்பத்தி £6,000க்குச் சமம்; அதாவது அவர் முன்னீடு செய்த மூலதனத்தைக் காட்டிலும் £1,000 கூடுதலாகும். இதிலிருந்து மேற்கண்ட அதே உபரி-மதிப்பு வீதம் பெறப்படுகிறது:

$$5,000C : 1,000_s = 100_{(c+v)} : 20_s$$

ஆகவே, அவரது மொத்த வழங்கலோடு அவரது மொத்த வேண்டலுக்குள்ள விகிதம் இந்தப் புரள்வினால் மாறவில்லை. வேண்டலானது வழங்கலை விட ஐந்திலொரு பங்கு குறைவாகவே இப்போதும் இருந்து வருகிறது.

அவரது நிலை-மூலதனம் [fixed capital] பத்தாண்டு காலத்தில் புதுப்பிக்கப்பட வேண்டியதெனக் கொள்வோம். ஆக, முதலாளி ஒவ்வொரு ஆண்டும் பத்திலொரு பங்கை, அல்லது £400 ஒதுக்கு நிதியாக [sinking fund] சேர்க்கிறார்; இவ்வாறு £3,600 மதிப்புடைய நிலை-மூலதனம் மட்டுமே, £400 பணத்தோடு கூட, அவரிடம் எஞ்சுகிறது. மராமத்துகள் [repairs] அவசியமானால், இவை சராசரியை விஞ்சிச் செல்லாத வரை, பிற்பாடு முதலீடு செய்யப்படும் மூலதனத்தையே குறிக்கின்றன. முதலாளி தாம் முதலீடு செய்ய வேண்டிய மூலதன-மதிப்பைக் கணக்கிடுகையில் மராமத்துச் செலவுக்கும் முன்கூட்டியே ஏற்பாடு செய்து விட்டார், ஆகவே இதுவும் வருடாந்தர சரக்கு-உற்பத்தியில் சேர்ந்து விடுகிறது என்றும், இச்செலவு இவ்விதம் அந்தப் பத்திலொரு பங்கு ஒதுக்கு நிதியில் சேர்க்கப்படுகிறது என்றும் கொள்ளலாம். (மராமத்துகளுக்கான அவரது தேவை சராசரிக்குக் குறைவாக இருந்தால், அவருக்கு ஆதாயம்; சராசரிக்கு அதிகமாக இருந்தால், அவருக்கு

இழப்பு. ஆனால் ஒரே தொழிற் கிளையில் ஈடுபட்டுள்ள முதலாளி களது முழு வர்க்கத்துக்கும் கணக்கிடுகையில் ஒன்றை ஒன்று சமன் செய்து விடுகிறது.) எப்படியாயினும், (அவரது மொத்த மூலதனம் ஆண்டுக்கொரு முறை புரள்வதாகக் கொண்டால்) அவரது வருடாந் தர வேண்டல் அவர் முன்னீடு செய்த ஆரம்ப மூலதன-மதிப்புக்குச் சமமான £5,000 ஆகவே இன்னும் இருந்து வருகிறதென்றாலும், மூலதனத்தின் ஒரு பகுதியாகிய சுழல்-மூலதனம் தொடர்பாக இந்த வேண்டல் குறைகிறது; ஆனால் மற்றொரு பகுதியாகிய நிலை-மூலதனம் தொடர்பாக அதிகரிக்கிறது.

இப்போது மறுவுற்பத்திக்கு வருகிறோம். முதலாளி m என்னும் உபரி-மதிப்பு முழுவதையும் நுகர்ந்து விட்டு, C என்னும் ஆரம்ப மூலதனத் தொகையை மட்டும் திறனுடை-மூலதனமாய் மீண்டும் மாற்றுவதாகக் கொள்வோம். அப்படியானால், முதலாளியினது வேண்டலின் மதிப்பு அவரது வழங்கலின் மதிப்புக்குச் சமம். ஆனால் அவரது மூலதனத்தின் சுழல் இயக்கத்தைப் பொறுத்த வரை இப்படிச் சொல்வதற்கில்லை. முதலாளி என்ற முறையில் அவரது வேண்டல் (மதிப்பைப் பொறுத்த வரை) வழங்கலில் ஐந்தில் நான்கு பங்கு மட்டுமே. முதலாளி என்ற முறையில் அல்லாமல், அதாவது ஒரு முதலாளிக்குரிய பணி அல்லாத தனிப்பட்ட தேவைப்பாடுகள் அல்லது உல்லாசங்களுக்காக அவர் ஐந்திலொரு பங்கை நுகர்கிறார்.

அப்படியானால், அவரது கணக்கு சதவீதங்களாகக் கூறுமிடத்து பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| முதலாளி என்ற முறையில் வேண்டல்.............. | 100, | வழங்கல் 120 |
| இலௌகிகப் பிரமுகர் என்ற முறையில் வேண்டல்.. | 20, | வழங்கல் — |
| மொத்த வேண்டல்............................. | 120, | வழங்கல் 120 |

முதலாளி உபரி-மதிப்பு முழுவதையும் நுகர்ந்து விடுவதாகக் கொள்வது முதலாளித்துவப் பொருளுற்பத்தி என்பதே இல்லை என்றும், ஆகவே தொழில் துறை முதலாளி என்பவரே இல்லை என்றும் கொள்வதற்கு ஒப்பானதே. ஏனெனில், பிரதானக் குறி [compelling motive] செல்வஞ்சேர்ப்பது அல்ல, சொந்த நுகர்வுதான் எனக் கொண்ட மாத்திரத்தில் முதலாளித்துவமே இல்லாது போகிறது.

இப்படிக் கொள்வதற்கு தொழில் நுட்ப வழியிலும் கூட இடமில்லை. விலையில் ஏற்படும் அலைவுகளை சமாளிக்கும் பொருட்டும், வாங்குவதற்கும் விற்பதற்கும் ஏற்ற நிலைமைகளுக் காகக் காத்திருக்கும் பொருட்டும், முதலாளி மூலதனம் ஒதுக்க வேண்டும். அது மட்டுமல்ல. உற்பத்தியை விரிவாக்கும் பொருட் டும், உற்பத்திப் பொறியமைவில் தொழில் நுட்ப முன்னேற்றத்துக்கு

வகை செய்யும் பொருட்டும் அவர் மூலதனம் திரட்டியாக வேண்டும்.

மூலதனம் திரட்டும் பொருட்டு, முதலில் அவர் மூலதனத்திலிருந்து கிடைத்த உபரி-மதிப்பில் ஒரு பகுதியை சுற்றோட்டத்திலிருந்து பண வடிவில் எடுக்க வேண்டும்; பழைய தொழிலை விரிவாக்குவதற்கு அல்லது புதிய தொழில் தொடங்குவதற்குப் போதுமானதாய் வளரும் வரை அதனைப் பணச் சேர்ப்பாகச் சேர்த்து வைக்க வேண்டும். இந்தச் சேர்ப்பு சேர்ந்து கொண்டிருக்கும் வரை, முதலாளியின் வேண்டல் அதனால் பெருகாது. பணம் புழக்கமின்றி முடக்கப்படுகிறது. சரக்குகளை வழங்கிப் பெறப்பட்ட பணத்துக்குச் சமதையாக சரக்குச் சந்தையிலிருந்து சரக்குகளைப் பெறுவதற்கு இந்தப் பணம் பயன்படுவதில்லை.

இங்கே கடன்-செலாவணியைக் கருதாமல் ஒதுக்கி விடுகிறோம். முதலாளி தாம் திரட்டுகிற பணத்தை வங்கியில்—உதாரணமாய் வட்டி தரும் நடப்புக் கணக்கில்—சேமித்து வைப்பாரானால், அது கடன்-செலாவணி ஆகி விடும்.

## அத்தியாயம் V

## சுற்றோட்டக் காலம்[12]

உற்பத்தித் துறையையும் சுற்றோட்டத் துறையின் இரு கட்டங்களையும் கடந்து செல்கிற மூலதனத்தின் சுழல் இயக்கம் கால வழியில் அடுத்தடுத்து நடைபெறுகிறது என்று பார்த்தோம். மூலதனம் உற்பத்தித் துறையில் இருக்கும் காலம் அதன் உற்பத்திக் காலம் [time of production] ஆகும்; சுற்றோட்டத் துறையில் இருக்கும் காலம் அதன் சுற்றோட்டக் காலம் [time of circulation] ஆகும். ஆகவே, அதன் உற்பத்திக் காலம், சுற்றோட்டக் காலம் ஆகியவற்றின் கூட்டுத் தொகையே அது தனது சுற்றை நிகழ்த்துவதற்கு மொத்தத்தில் ஆகும் காலம்.

உற்பத்திக் காலம் என்பதில் உழைப்பு நிகழ்முறையின் காலம் இயல்பாகவே உள்ளடங்குகிறது. ஆனால் உற்பத்திக் காலத்தின் உள்ளடக்கம் இது மட்டுமல்ல. முதலாவதாக, மாறா-மூலதனத்தின் ஒரு பகுதி இயந்திர சாதனம், கட்டடங்கள் போன்ற உழைப்புச் சாதனங்களின் வடிவில் இருக்கிறது என்பதையும், இந்த உழைப்புச் சாதனங்கள் தேய்ந்து பயனற்றுப் போகும் வரை ஒரே உழைப்பு நிகழ்முறையை ஓயாமல் திரும்பத் திரும்ப நிகழ்த்துகிறவை என்பதையும் நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். உழைப்பு நிகழ்முறை காலவட்ட முறையில்—உதாரணமாய் இரவுதோறும்—தடைபடுவதால் இந்த உழைப்புச் சாதனங்களின் பணி தடைபடலாம்; ஆனால் அவை தொடர்ந்து உற்பத்திக் களத்திலேயே இருந்து வருகின்றன. செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது மட்டுமல்ல, செயல்படாமல் இருக்கும் போதும் கூட அவை உற்பத்திக் களத்திலேயே இருப்பவை. மேலும் முதலாளியானவர் குறிப்பிட்ட அளவு கச்சாப் பொருட்களையும், துணைப் பொருட்களையும் தயாராய் இருப்பில் வைத்திருக்க வேண்டும். இப்படி வைத்திருந்தால்தான் சந்தையின் அன்றாட வழங்கலில் ஏற்படக் கூடிய தற்செயல் அலைவுகளைச் சார்ந்திராமல், உற்பத்தி நிகழ்

[12] எங்கெல்ஸ் குறிப்பு: கையெழுத்துப் பிரதி IV என்பதன் தொடக்கம்.

முறையை முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட அளவுவீதத்தில் குறிப்பிட்ட காலத்துக்கு—குறுகிய காலமானாலும் நீண்ட காலமானாலும்—நடத்திச் செல்ல முடியும். கச்சாப் பொருட்கள் முதலானவற்றின் இந்தச் சேம வைப்பு சிறுகச்சிறுகத்தான் உற்பத்தித் திறனுள்ள முறையில் நுகரப்படுகிறது. ஆகவே, மூலதனத்தின் உற்பத்திக் காலத்துக்கும்[13] அதன் பணிக் காலத்துக்கும் இடையே வேறுபாடு ஒன்றுண்டு. பொதுவாக உற்பத்திச் சாதனங்களின் உற்பத்திக் காலம் பின்வருவனவற்றால் ஆனது: (1)அவை உற்பத்திச் சாதனங்களாகச் செயல்படுகிற, இவ்விதம் உற்பத்தி நிகழ்முறையில் பயன்படுகிற காலம்; (2) உற்பத்தி நிகழ்முறையும் இவ்விதம் அதற்குரிய உற்பத்திச் சாதனங்களின் பணியும் தடைபடும் இடைநிறுத்தங்கள்; (3) இந்நிகழ்முறையின் இன்றியமையாத் தேவைகள் என்ற முறையில் அவை சேம வைப்பில் இருந்து வரும் காலம். அவை இப்படி இருக்கும் போதே திறனுடை-மூலதனத்தைக் குறிக்கின்றன; ஆனால் இன்னும் உற்பத்தி நிகழ்முறையில் பங்கு பெறவில்லை.

இது வரை நாம் பரிசீலித்த வேறுபாடு, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் திறனுடை-மூலதனம் உற்பத்தித் துறையில் இருக்கும் காலத்துக்கும் உற்பத்தி நிகழ்முறையில் இருக்கும் காலத்துக்கும் இடையிலான வேறுபாடுதான். ஆனால் உற்பத்தி நிகழ்முறையின் தேவைகளுக்காகவே உழைப்பு நிகழ்முறையும், எனவே உழைப்புக் காலமும் இடையிடையே தடைபடும் அவசியம் ஏற்படலாம். இந்த இடைவேளைகளில் உழைப்பின் இலக்குப் பொருள் அதற்கு மேல் மனித உழைப்பு இல்லாமலே இயற்கை நிகழ்முறைகளின் செயலுக்கு ஆட்படுகிறது. இந்நிலையில், உற்பத்தி நிகழ்முறையும், எனவே உற்பத்திச் சாதனங்களின் பணியும் தொடர்கின்றன; உழைப்பு நிகழ்முறையும், எனவே உழைப்புக் கருவிகளாகிய உற்பத்திச் சாதனங்களின் பணியும்தான் தடைபட்டு நிற்கின்றன. விதைக்கப்பட்ட தானியம், நிலவறையில் நொதிக்கும் மது, தோல் பதனீடு போன்ற அநேகத் தொழில்களிலும் இரசாயன நிகழ்முறைகளின் செயலுக்கு உள்ளாகும் மூலப்பொருள் ஆகியவற்றை உதாரணமாய்க் குறிப்பிடலாம். இவற்றில் உற்பத்திக் காலம் உழைப்புக் காலத்தை விட அதிகம். இரண்டுக்கும் இடையிலான வேறுபாடு, உழைப்புக் காலத்தை விட உற்பத்திக் காலத்துக்குள்ள மிகைப்பாடே. திறனுடை-மூலதனம் உற்பத்தி நிகழ்முறையில் செயல்படாமல் உற்பத்தித் துறையில் உள்ளுறை நிலையில் இருந்து

[13] எங்கெல்ஸ் குறிப்பு: உற்பத்திக் காலம் என்பதை இங்கே உற்பத்தியில் ஈடுபடுகிற காலம் என்ற அர்த்தத்தில் புரிந்து கொள்ள வேண்டும். இந்த இடத்தில் உற்பத்திச் சாதனங்களின் உற்பத்திக் காலம் என்பதன் பொருள், அவை குறிப்பிட்ட சரக்கின் உற்பத்தி நிகழ்முறையில் பங்கேற்கும் காலம் என்பதுதானே தவிர அவற்றின் உற்பத்திக்குத் தேவைப்படும் காலம் என்பதல்ல.

வருவதிலிருந்தே, அல்லது உழைப்பு நிகழ்முறையில் பங்கேற்காமல் உற்பத்தி நிகழ்முறையில் செயல்படுவதிலிருந்தே எப்போதும் இந்த மிகைப்பாடு எழுகிறது.

திறனுடை-மூலதனம் உள்ளுறை நிலையில் இருக்கும் போது அதன் எந்தப் பகுதியை உற்பத்தி நிகழ்முறைக்குத் தேவையென்று தயாராய் வைத்திருக்கிறார்களோ அந்தப் பகுதி—உதாரணமாக நூற்பாலையில் தயாராய் வைத்திருக்கும் பஞ்சு, நிலக்கரி போன்றவை—உற்பத்திப் பொருட்களையோ மதிப்பையோ உண்டாக்குவதற்காகச் செயல்படுவதில்லை. அது ஓய்ந்திருக்கும் மூலதனமாகும்; ஆயின் இப்படி அது ஓய்ந்திருப்பது உற்பத்தி நிகழ்முறையின் தடையற்ற ஓட்டத்துக்கு இன்றியமையாதது. உற்பத்தித் திறனுள்ள சேம வைப்பை (உள்ளுறை மூலதனத்தை) சேமித்து வைப்பதற்குத் தேவையான கட்டடங்கள், பொறியமைவுகள் முதலானவை உற்பத்தி நிகழ்முறையின் இன்றியமையாத் தேவைகளாகும்; ஆகவே, முன்னீடு செய்யப்படும் திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறுகளாகும். அவை பூர்வாங்கக் கட்டத்தில் திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறுகளைப் பேணிக் காத்து தமக்குரிய வேலையைச் செய்கின்றன. இந்தக் கட்டத்துக்கு உழைப்பு நிகழ்முறைகள் தேவைப்படுகிற அளவுக்கு அவை கச்சாப் பொருள் முதலானவற்றுக்காகும் செலவைக் கூடுதலாக்குகின்றன. ஆனால் இந்த உழைப்பில் ஒரு பகுதி—கூலியுழைப்பு அனைத்திலும் ஒரு பகுதி எப்படியோ அதே போல்—ஊதியமிலா உழைப்பாகும்; எனவே இது திறனுடை உழைப்பு; உபரி-மதிப்பைப் படைக்கும் உழைப்பு. ஒட்டுமொத்த உற்பத்தி நிகழ்முறையில் ஏற்படும் இயல்பான இடைநிறுத்தங்கள், அதாவது திறனுடை-மூலதனம் செயல்படாமலிருக்கும் இடைவேளைகள் மதிப்பையோ உபரி-மதிப்பையோ உண்டாக்கப் பயன்படுவதில்லை. இதனால்தான் இரவிலும் வேலை நடக்க வேண்டுமென்று துடிக்கிறார்கள். (முதல் பாகம், அத்தியாயம் X, பிரிவு 4.)

உற்பத்தி நிகழ்முறையின் போது உழைப்பின் இலக்குப் பொருள் சந்திக்க வேண்டியிருக்கும் உழைப்புக் காலத்திலான இடைவேளைகள் மதிப்பையோ உபரி-மதிப்பையோ உண்டாக்கப் பயன்படுபவை அல்ல. ஆனால் அவை உற்பத்திப் பொருளை முன்செல்ல வைப்பவை; அதன் உருவாக்கக் காலத்தின் ஒரு பகுதியாய் இருப்பவை; அது கடந்து சென்றாக வேண்டிய நிகழ்முறை ஆகிறவை. சேமித்து வைப்பதற்கான பொறியமைவு முதலானவற்றின் மதிப்பு அவை செயல்படும் முழுக் காலத்துக்குமான விகிதத்தில் உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படுகிறது; உற்பத்திப் பொருளை இந்தக் கட்டத்துக்குக் கொண்டுவரவும் உழைப்பு தேவைப்படுகிறது. மேற்கூறியது போன்ற பொறியமைவைப் பயன்படுத்துவது உற்பத்திக்கு இன்றியமையாததாகும்—பஞ்சில் ஒரு பகுதி கழிவாகிப் போவதால்

உற்பத்திப் பொருளில் சேரா விட்டாலும் எப்படி அதன் மதிப்பு உற்பத்திப் பொருளுக்குப் போய்ச் சேருகிறதோ, அதே போல. உள்ளுறை மூலதனத்தின் மற்றொரு பகுதியான இயந்திர சாதனம், கட்டடங்கள் போன்ற உழைப்புச் சாதனங்களின் பணி உற்பத்தி நிகழ்முறையில் முறையாக ஏற்படும் இடைநிறுத்தங்களால் தடை படுகிறது; இந்தப் பகுதி உற்பத்திப் பொருளை உண்டாக்குவதில் பங்கு கொள்ளாமலே மதிப்பைக் கூடுதலாக்குகிறது. (உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதாலும், நெருக்கடிகள் முதலானவற்றாலும் ஏற்படும் முறைகெட்ட இடைநிறுத்தங்கள் முழுக்க முழுக்க இழப்பையே குறிக்கும்.) இந்த மூலதனப் பகுதி சேர்க்கும் மொத்த மதிப்பு, அதன் சராசரி ஆயுளால் நிர்ணயிக்கப்படுகிறது. அது செயல்படும் போது மட்டுமல்லாமல், செயல்படாமல் இருக்கும் போதும் பயன்-மதிப்பை இழப்பதால் மதிப்பையும் இழக்கிறது.

முடிவில், உழைப்பு நிகழ்முறை தடைபட்ட போதிலும் உற்பத்தி நிகழ்முறையில் நீடிக்கும் மாறா-மூலதனப் பகுதியின் மதிப்பு உற்பத்தி நிகழ்முறையின் விளைபொருளில் சேரவே செய்கிறது. உழைப்பே இங்கு உற்பத்திச் சாதனங்களை அச்சாதனங்கள் குறிப்பிட்ட சில இயற்கை நிகழ்முறைகளுக்கு உள்ளாகும் படியான நிலைமைகளில் வைக்கிறது; இதிலிருந்து விளைவது குறிப்பிட்ட பயன்பாட்டுடன் கூடிய ஒரு விளைவு, அதாவது அச்சாதனங்களின் பயன்-மதிப்பு வடிவத்தில் ஒரு மாற்றம் ஆகும். உழைப்பானது உற்பத்திச் சாதனங்களைத் தக்க முறையில் உற்பத்திச் சாதனங் களாகவே நுகரக் கூடிய அளவுக்கு எப்போதுமே அவற்றின் மதிப்பை உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்திடுகிறது. இந்த விளைவை உண்டாக்கும் பொருட்டு உழைப்பானது உழைப்புக் கருவிகளைக் கொண்டு உழைப்பின் இலக்குப் பொருள் மீது தொடர்ச்சியாகச் செயல் புரிய வேண்டியிருந்தாலும் சரி, உற்பத்திச் சாதனங்கள் அதற்கு மேல் உழைப்பின் துணையின்றி இயற்கை நிகழ்முறைகளின் பயனாய், வேண்டிய மாற்றத்தைத் தாமாகவே அடையும் படியான நிலைமைகளில் அச்சாதனங்களை வைப்பதன் மூலம் உழைப்பு ஆரம்ப உந்துதலை மட்டும் அளிக்க வேண்டி யிருந்தாலும் சரி, எல்லாம் ஒன்றுதான்.

உழைப்புக் காலத்தை விட உற்பத்திக் காலத்துக்குள்ள மிகைப் பாட்டுக்கு எது காரணம் ஆனாலும் சரி, உற்பத்திச் சாதனங்கள் உள்ளுறையாக மட்டுமே திறனுடை-மூலதனமாகின்றன, எனவே இன்னமும் உள்ளபடியான உற்பத்தி நிகழ்முறைக்குப் பூர்வாங்க மான ஒரு கட்டத்திலேயே இருக்கின்றன என்ற நிலைமை காரண மானாலும் சரி, அல்லது அவற்றின் பிரத்தியேகப் பணி உற்பத்தி நிகழ்முறைக்குள்ளேயே அதன் இடைநிறுத்தங்களால் தடைபடுகிற தென்ற நிலைமை காரணமானாலும் சரி, அல்லது முடிவில், உற்பத்தி நிகழ்முறைக்கே உழைப்பு நிகழ்முறை அவ்வப்போது

தடைபடுவது அவசியமாகிறது என்ற நிலைமை காரணமானாலும் சரி, இந்த நேர்வுகளில் எந்த ஒன்றிலுமே உற்பத்திச் சாதனங்கள் உழைப்பை உட்கொள்பவையாய்ச் செயல்படவில்லை. உழைப்பை உட்கொள்ளவில்லை என்றால் உபரி-உழைப்பையும் உட்கொள்ள வில்லை. எனவே, மதிப்பின் தற்பெருக்க நிகழ்முறையின் நிறை வேற்றம் எவ்வளவுதான் இந்த இடைநிறத்தங்களிலிருந்து பிரிக்க முடியாததாக இருந்தாலும், திறனுடை-மூலதனம் அதன் உற்பத்திக் காலத்தில் உழைப்புக் காலம் போக எஞ்சிய பகுதியில் இருந்து வரும் வரை, அதன் மதிப்பு பெருக வழியில்லை. உற்பத்திக் காலமும் உழைப்புக் காலமும் எவ்வளவுக்கு எவ்வளவு சமமாகின் றனவோ, குறிப்பிட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட திறனுடை-மூலதனத்தின் உற்பத்தித் திறனும் தற்பெருக்கமும் அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாகின்றன என்பது தெளிவு. இதனால்தான் உழைப்புக் காலத்தை விட உற்பத்திக் காலத்துக்குள்ள மிகைப் பாட்டை முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை முடிந்த வரை குறைக்க முயல்கிறது. உற்பத்திக் காலத்துக்கும் உழைப்புக் காலத் துக்கும் இடையிலான வேறுபாடு மூலதனத்துக்கு மூலதனம் மாறு படலாம் என்றாலும், உழைப்புக் காலம் எப்போதுமே உற்பத்திக் காலத்தில் அடக்கம். முன்னதை விட பின்னது மிகையாதல் உற் பத்தி நிகழ்முறைக்கு இன்றியமையாதது. ஆக, எப்போதுமே உற் பத்திக் காலம் என்பது, மூலதனம் உள்ளுறை நிலையில் இருக்கிற அல்லது தன் மதிப்பைப் பெருக்கிக் கொள்ளாமல் உற்பத்தி செய்கிற காலத்தையும் தன்னுள் கொண்டது என்றாலும், அது பயன்-மதிப்புகளை உற்பத்தி செய்து தன் மதிப்பைப் பெருக்கிக் கொள்கிற காலம் ஆகும்; அதாவது அது திறனுடை-மூலதனமாகச் செயல்படுகிற காலம் ஆகும்.

சுற்றோட்டத் துறையில் மூலதனம் சரக்கு-மூலதனமாகவும் பண-மூலதனமாகவுமே இருக்கிறது. அதன் இரு சுற்றோட்ட நிக்ழ் முறைகள் சரக்கு வடிவத்திலிருந்து பண-வடிவுத்துக்கும் பண-வடிவத்திலிருந்து சரக்கு-வடிவத்துக்கும் மாறுவதாகும். இங்கே சரக்குகள் பணமாக அடையும் மாற்றம் அதே போது சரக்குகளில் உருக் கொண்ட உபரி-மதிப்பின் ஈடேற்றமும் ஆகிறது என்றாலும், பணம் சரக்குதளாக அடையும் மாற்றம் அதே போது மூலதன-மதிப்பை அதன் உற்பத்தியின் அடிக்கூறுகளது வடிவத்துக்கு மாற்றம் அல்லது மறுமாற்றம் செய்வதும் ஆகிறது என்றாலும், இந்த நிகழ்முறைகள் சுற்றோட்ட நிகழ்முறைகளென்ற முறையில் சாதா ரண சரக்கு-உருமாற்ற நிகழ்முறைகள்தான்.

சுற்றோட்டக் காலமும் உற்பத்திக் காலமும் தனித்தனியானவை, ஒன்றையொன்று விலக்கிக் கொள்பவை. மூலதனம் அதன் சுற்றோட்டக் காலத்தில் திறனுடை-மூலதனமாகச் செயல்படுவ தில்லை. ஆகவே சரக்குகளையோ உபரி-மதிப்பையோ உற்பத்தி

செய்வதில்லை. மூலதன-மதிப்பு முழுவதும் ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்கு ஒரே மொத்தமாகச் செல்வதாய்க் கொண்டு சுற்றினை அதன் மிக எளிய வடிவத்தில் பரிசீலிப்போமானால், மூலதன-மதிப்பின் சுற்றோட்டக் காலம் நீடிக்கும் வரை, அதன் உற்பத்தி நிகழ்முறையும், ஆகவே அதன் தற்பெருக்கமும் கூட தடைபடுகின்றன என்பதும், உற்பத்தி நிகழ்முறையின் மறுநிகழ்வு சுற்றோட்டக் காலத்தின் அளவைப் பொறுத்து அதிகமான அல்லது குறைவான வேகத்தில் நடைபெறும் என்பதும் கண்கூடாகின்றன. இப்படியில்லாமல், மூலதன-மதிப்பின் பல்வேறு பகுதிகளும் அடுத்தடுத்து வரிசையாய் சுற்றை நிகழ்த்துமானால், எனவே மொத்த மூலதன-மதிப்பின் சுற்று அதன் பல்வேறு பகுதிகளது சுற்றுகளின் வரிசைத் தொடராய் நிகழ்த்தப்படுமானால், அதன் ஈவுப் பகுதிகள் சுற்றோட்டத் துறையில் எவ்வளவு நீண்ட காலம் இருக்கின்றனவோ, உற்பத்தித் துறையில் செயல்படும் பகுதி அவ்வளவு சிறியதாய் இருந்தாக வேண்டுமென்பது தெளிவு. ஆகவே சுற்றோட்டக் காலத்தின் பெருக்கமும் சுருக்கமும் உற்பத்திக் காலத்தின்— அல்லது குறிப்பிட்ட பருமனுள்ள மூலதனம் திறனுடை-மூலதனமாகச் செயல்படும் அளவுவீதத்தின்—சுருக்கம் அல்லது பெருக்கத்துக்கு எதிர்மறை வரம்புகளாகின்றன. குறிப்பிட்ட மூலதனத்தின் சுற்றோட்ட உருமாற்றங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு கருத்தளவில் மட்டுமே நிகழ்கின்றனவோ, அதாவது சுற்றோட்டக் காலம் எவ்வளவுக்கு எவ்வளவு பூஜியத்தை நெருங்குகிறதோ, மூலதனம் அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய்ச் செயல்படுகிறது; அதன் உற்பத்தித் திறனும் அதன் மதிப்பின் தற்பெருக்கமும் அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாகின்றன. எடுத்துக்காட்டாக, சரக்காணை பெற்றுத் தொழில் செய்யும் ஒரு முதலாளி உற்பத்திப் பொருள் பட்டுவாடா செய்யப்பட்டவுடனே விலை பெறுவாரானால், மேலும் இந்த விலை அவருக்கு வேண்டிய உற்பத்திச் சாதனங்களின் வடிவிலேயே தரப்படுமானால் சுற்றோட்டக் காலம் பூஜியத்தை நெருங்குகிறது.

ஆகவே, பொதுவாகச் சொன்னால், மூலதனத்தின் சுற்றோட்டக் காலம் அதன் உற்பத்திக் காலத்துக்கும், எனவே அது உபரி-மதிப்பைப் படைக்கும் நிகழ்முறைக்கும் வரம்பிடுகிறது. அதன் கால அளவுக்கேற்ற விகிதத்தில் வரம்பிடுகிறது. இந்தக் கால அளவு கணிசமாக அதிகரிக்கலாம் அல்லது குறையலாம். எனவே அது மூலதனத்தின் உற்பத்திக் காலத்துக்கு வரம்பிடும் அளவுகள் விரிவாக வேறுபடலாம். ஆனால் அரசியல் பொருளாதாரம் **வெளித் தோற்றத்தை** மட்டும் பார்க்கிறது; அதாவது பொதுவாக மூலதனம் உபரி-மதிப்பை உண்டாக்கும் நிகழ்முறை மீது சுற்றோட்டக் காலம் ஏற்படுத்தக் கூடிய தாக்கத்தை மட்டும் பார்க்கிறது. விளைவுகள் நேர்நிலையானவை என்பதால், இந்த எதிர்மறைத் தாக்கத்தை நேர் நிலைத் தாக்கமாகக் கொள்கிறது. மூலதன-மதிப்பின் தற்பெருக்கத்துக்கு உற்பத்தி நிகழ்முறையையோ, எனவே உழைப்பைச் சுரண்டு

வதையோ சாராத மருமமான ஆதாரம் ஒன்று இருப்பதாகவும், இந்த ஆதாரம் சுற்றோட்டத் துறையில் இருப்பதாகவும் நிருபிப்ப தாய்த் தோன்றுவதால், இந்த வெளித் தோற்றத்தை அரசியல் பொருளாதாரம் இன்னும் பன்மடங்கு கெட்டியாய்ப் பற்றிக் கொள் கிறது. இந்த வெளித்தோற்றத்தைக் கண்டு விஞ்ஞான வழிப்பட்ட அரசியல் பொருளாதாரமும் ஏமாந்து போவதைப் பிற்பாடு காண்போம். பல்வேறு நிகழ்வுகள் இந்த மாயையை வலுப்படுத்து வது தெரிய வரும்: (1) இலாபத்தை முதலாளித்துவ முறையில் கணக்கிடும் போது எதிர்மறைக் காரணம். நேர்நிலைக் காரணமாகத் தோன்றுகிறது; அதாவது சுற்றோட்டக் காலங்கள் மட்டும் வேறு படக் கூடிய வெவ்வேறு முதலீட்டுத் துறைகளில் செயல்படும் மூலதனங்களைப் பொறுத்த வரை சுற்றோட்டக் காலத்தின் அதி கரிப்பு விலையுயர்வுக்கு ஏதுவாகிறது; சுருங்கச் சொல்லின் இலாபங்களை சமப்படுத்தும் காரணிகளில் ஒன்றாகிறது. (2) சுற் றோட்டக் காலம் என்பது புரள்வுக் காலத்தின் [time of turnover] ஒரு கட்டம்தான்; புரள்வுக் காலத்தில் உற்பத்தி அல்லது மறுவுற் பத்திக் காலமும் அடங்கும். உண்மையில் உற்பத்தி அல்லது மறுவுற் பத்திக் காலத்தால் விளைவது சுற்றோட்டக் காலத்தால் விளை வதாகத் தோன்றுகிறது. (3) சரக்குகள் மாறும்-மூலதனமாய் (கூலி யாக) உருமாறுவதற்கு முன்னால் பணமாய் உருமாறியாக வேண் டும். ஆகவே, மூலதனத் திரட்டலில், சரக்குகள் கூடுதல் மாறும்-மூலதனமாக உருமாறுவது சுற்றோட்டத் துறையில், அதாவது சுற்றோட்டக் காலத்தின் போது, நடைபெறுகிறது. ஆதலால், இவ்விதம் நடந்தேறும் மூலதனத் திரட்டலுக்கு சுற்றோட்டக் காலமே காரணம் என்பதாகத் தோன்றுகிறது.

சுற்றோட்டத் துறையில், மூலதனம் C — M, M — C ஆகிய ஒன்றுக்கொன்று எதிரிடையான இரு கட்டங்களைக் கடந்து செல் கிறது; எந்த வரிசையில் கடக்கிறது என்பது முக்கியமல்ல. அதன் சுற்றோட்டக் காலமும் இதனால் இரு பகுதிகளாகப் பிரிகிறது. அதாவது மூலதனம் சரக்குகள் என்ற நிலையிலிருந்து பணமாக மாறுவதற்குத் தேவைப்படும் காலமாகவும், பணம் என்ற நிலை யிலிருந்து சரக்குகளாக மாறுவதற்குத் தேவைப்படும் காலமாகவும் பிரிகிறது. விற்பதைக் குறிக்கும் C — Mதான் அதன் உருமாற்றத் திலேயே மிக்க கடினமான பகுதி என்றும், ஆகவே சாதாரண நிலைமைகளில் அதன் சுற்றோட்டக் காலத்தில் பெரும் பகுதி இப்படி விற்பதற்குப் போய் விடுகிறது என்றும் சாதாரண சரக்குச் சுற்றோட்டம் பற்றிய பகுப்பாய்விலிருந்து தெரிந்து கொண்டோம் (முதல் பாகம், அத்தியாயம் III). மதிப்பானது பணமாக இருக்கை யில் எப்போது வேண்டுமானாலும் நேரடியாக மாறக் கூடிய வடிவில் இருக்கிறது. அது சரக்காக இருக்கையில் முதலில் அதனைப் பண மாக மாற்றிக் கொண்டால்தான், நேரடியாக மாறக் கூடியதும், எனவே எப்போதும் செயலுக்குத் தயாராயிருப்பதுமான வடிவத்தைப்

பெறுகிறது. ஆயினும், மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறையில் M — C என்னும் கட்டம் குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தில் திறனுடை-மூலதனக் கூறுகளாய் அமையும் சரக்குகளாக மூலதனம் மாற்றப்படுவதைக் குறிக்கிறது. உற்பத்திச் சாதனங்கள் சந்தையில் கிடைக்காதிருக்கலாம், அவற்றை முதலில் உற்பத்தி செய்தாக வேண்டும் அல்லது தொலை தூரச் சந்தைகளிலிருந்து கொண்டுவந்தாக வேண்டும்; அல்லது அவற்றின் முறையான வழங்கலில் குலைவுகள் நேரிடலாம்; இல்லையேல் விலைகள் மாறலாம்; இப்படி எண்ணற்ற நிலைமைகள் எழலாம். இலகுவான வடிவ மாற்றத்தைக் குறிக்கும் M — C என்பதில் இவையெல்லாம் புலப்படுவதில்லை. ஆனால் இத்தகைய நிலைமைகள் காரணமாய் சுற்றோட்டக் கட்டத்தின் இந்தப் பகுதிக்கும் ஒரு நேரம் அதிகமாகவும் ஒரு நேரம் குறைவாகவும் கால அவகாசம் தேவைப்படுகிறது. C—M என்பதும் M—C என்பதும் காலத்தால் மட்டுமல்லாமல் இடத்தாலும் பிரிந்திருக்கலாம்; வாங்குவதற்கான சந்தையும் விற்பதற்கான சந்தையும் வெவ்வேறு இடங்களில் அமைந்திருக்கலாம். தொழிற்சாலைகளை எடுத்துக்காட்டாகக் கொள்வோமானால், வாங்குபவரும் விற்பவரும் பல சந்தர்ப்பங்களில் வெவ்வேறு ஆட்களாகவே கூட இருப்பதுண்டு. சரக்கு உற்பத்திக்கு உற்பத்தியைப் போலவே சுற்றோட்டமும் அவசியம்; எனவே உற்பத்தியின் இயக்கிகளைப் போலவே சுற்றோட்டத்தின் இயக்கிகளும் [agents] அவசியம். மறுவுற்பத்தி நிகழ்முறையில் மூலதனம் இரு பணிகளையும் ஆற்ற வேண்டும்; எனவே, நேரடியாக முதலாளியோ அல்லது அவரது இயக்கிகளான கூலித்தொழிலாளர்களோ இந்தப் பணிகளின் பிரதிநிதிகளாய் இடம்பெற வேண்டும். ஆனால் இதை வைத்து சரக்கு-மூலதனம், பண-மூலதனம் ஆகியவற்றின் பணிகளை திறனுடை-மூலதனத்தின் பணிகளோடு குழப்பிக் கொள்ளக் கூடாது. அதேபோல் சுற்றோட்ட இயக்கிகளையும் உற்பத்தி இயக்கிகளோடு குழப்பிக் கொள்ளக் கூடாது. சுற்றோட்ட, இயக்கிகளுக்கு உற்பத்தி இயக்கிகள் பணஞ் செலுத்த வேண்டும். ஆனால் தமக்குள் வாங்கல்-விற்றலில் ஈடுபடும் முதலாளிகள் இச்செயல்களின் மூலம் மதிப்புகளையோ உற்பத்திப் பொருட்களையோ படைப்பதில்லை. அவர்களது தொழிலின் அளவுவீதம் இந்தப் பணியை அவர்கள் பிறரிடம் ஒப்படைப்பதை சாத்தியமாக்குகிறது, உள்ளபடியே அவசியமாக்குகிறது என்னும் போதும் இதே நிலைமைதான். சில தொழில்களில் இலாபத்தில் இவ்வளவு சதவீதம் என்ற முறையில் வாங்குவோருக்கும் விற்போருக்கும் பணஞ் செலுத்தப்படுகிறது. அவர்களுக்குக் கிடைக்கும் பணம் நுகர்வோரிடமிருந்து வருவதாகும் என்ற பேச்செல்லாம் பலிக்காது. நுகர்வோரே உற்பத்தி இயக்கிகளாகச் செயல்பட்டு சமதையான சரக்குகளை உற்பத்தி செய்வதாய் இருந்தால்தான், அல்லது உற்பத்தி இயக்கிகளிடமிருந்து (கூட்டாளிகள் என்பது போன்ற வகையில்)

ஏதாவது சட்ட உரிமையின் மூலமானாலும் சரி, தனிப்பட்ட முறையிலான சேவைகள் மூலமானாலும் சரி, இச்சரக்குகளைத் தமதாக்கிக் கொள்வதாய் இருந்தால்தான், நுகர்வோரால் பணம் கொடுக்க முடியும்.

சரக்குகளுக்கும் பணத்துக்கும் இடையிலான வடிவ வேறுபாட்டோடு தொடர்பற்ற வகையில் C — M, M — C ஆகியவற்றுக்கிடையே ஒரு வேறுபாடு இருக்கிறது. இது உற்பத்தியின் முதலாளித்துவத் தன்மையிலிருந்து வரக் கூடிய வேறுபாடு. சாதாரணமாக C — M, M — C இரண்டுமே குறிப்பிட்ட மதிப்புகள் ஒரு வடிவத்திலிருந்து மற்றொரு வடிவத்துக்கு அடையும் மாற்றங்களே. ஆனால் C′ — M′ என்பது அதேபோது C′இல் அடங்கிய உபரி-மதிப்பின் ஈடேற்றமும் ஆகும். ஆயின் M — C அப்படியல்ல. எனவே; விற்பது வாங்குவதை விட முக்கியம். இயல்பான நிலைமைகளில் M — C என்பது Mஇல் தெரிவிக்கப்பெறும் மதிப்பின் தற்பெருக்கத்துக்கு அவசியமான செயலாகும். ஆனால், அது உபரி-மதிப்பின் ஈடேற்றமல்ல; அதன் உற்பத்திக்கான பீடிகையே தவிர பிற்சேர்க்கை அல்ல.

சரக்கின் நிலவல் வடிவம், அதாவது அது பயன்-மதிப்பாக இருப்பது, சரக்கு-மூலதனத்தின் சுற்றோட்டமாகிய C′ — M′ என்பதற்கு சில வரம்புகள் இடுகிறது. பயன்-மதிப்புகள் அழியக் கூடியவை. எனவே குறிப்பிட்ட காலத்துக்குள் அவை அவற்றின் குறிப்பிட்ட தனி இயல்புகளுக்கு ஏற்ப உற்பத்தித் திறனுள்ள முறையிலோ சொந்த முறையிலோ நுகரப்படா விட்டால், அதாவது குறிப்பிட்ட காலத்துக்குள் அவை விற்கப்படா விட்டால் கெட்டுப் போகும்; பயன்-மதிப்பை இழப்பதோடு, பரிவர்த்தனை-மதிப்பின் உறைவிடங்களென்ற பண்பையும் இழந்து விடும். அவற்றில் அடங்கியுள்ள மூலதன-மதிப்பும் அதோடு சேர்ந்த உபரி-மதிப்பும் வீணாகி விடுகின்றன. பயன்-மதிப்புகளை ஓயாமல் மீண்டும் மீண்டும் மறுவுற்பத்தி செய்யா விட்டால், பழைய பயன்-மதிப்புகளுக்கு பதில் அதே வகை அல்லது வேறு வகைப் புதிய பயன்-மதிப்புகளை உற்பத்தி செய்யா விட்டால், அவை ஓயாமல் தற்பெருக்கமடையும் மூலதன-மதிப்பின் உறைவிடங்களாக நீடிக்க முடியாது. பயன்-மதிப்புகள் பூர்த்தியான சரக்குகளின் வடிவில் விற்கப்பட்டு, இவ்வழியில் அவை திறனுடை நுகர்வுக்கோ சொந்த நுகர்வுக்கோ போய்ச் சேருவது அவற்றின் மறுவுற்பத்திக்கு என்றென்றும் இன்றியமையாத் தேவையாகும். அவை குறிப்பிட்ட காலத்துக்குள் பழைய பயன்பாட்டு வடிவத்தைக் களைந்து புதிய வடிவம் பூண்டாக வேண்டும்; அப்போதுதான் அவற்றால் தொடர்ந்து நிலவ முடியும். பரிவர்த்தனை-மதிப்பு அதன் தசையுருவத்தை இப்படி ஓயாமல் மாற்றிக் கொள்வதன் மூலமே தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறது. பயன்-மதிப்பு கெடாமல் நீடிக்கும் காலம்

சரக்குக்கு சரக்கு மாறுபடுகிறது. ஆகவே உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையிலான காலமும் சரக்குக்கு சரக்கு மாறுபடுகிறது. C — M என்னும் சுற்றோட்டக் கட்டத்தில் அவை கெட்டுப் போகாமல் சரக்கு-மூலதனமாக நீடிக்கும் காலமும் சரக்குக்கு சரக்கு மாறு படுகிறது. அவை கெட்டுப் போகாமல் சரக்குகளாக சமாளிக்கக் கூடிய சுற்றோட்டக் காலமும் சரக்குக்கு சரக்கு மாறுபடுகிறது. சரக்கின் தசையுருவம் கெடுவதால் சரக்கு-மூலதனத்தின் சுற் றோட்டக் காலத்துக்கு இடப்படும் வரம்பு மூலதனத்தினது சுற் றோட்டக் காலத்தின் இந்தப் பகுதிக்கு, அதாவது சரக்கு-மூலதனம் சரக்கு-மூலதனமாகவே நீடிக்கும் சுற்றோட்டக் காலத்துக்கு அறுதி வரம்பாகிறது. ஒரு சரக்கு எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமாய் கெட்டுப் போகக் கூடியதோ, உற்பத்தியானவுடனே எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமாய் நுகரப்படவும், ஆகவே விற்கப்படவும் வேண்டியதோ, அவ்வளவுக்கு அவ்வளவு உற்பத்தியிடத்திலிருந்து அதிக தூரம் கொண்டு செல்ல முடியாததாகிறது; எனவே அவ்வள வுக்கு அவ்வளவு இட வகையில் அதன் சுற்றோட்டத்தின் எல்லை குறுகி, அதன் விற்பனைச் சந்தை ஊர் வரம்புக்கு உட்பட்டதா கிறது. ஆகவே, ஒரு சரக்கு எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமாய் கெட்டுப் போகக் கூடியதோ, அதன் பௌதிகப் பண்புகள் அது சரக்காக நீடிக்கும் சுற்றோட்டக் காலத்துக்கு இடும் அறுதி வரம்பு எவ்வளவுக்கு எவ்வளவு குறுகலானதோ, அச்சரக்கு முதலாளித் துவப் பொருளுற்பத்தியின் இலக்காய் அமைய அவ்வளவுக்கு அவ்வளவு பொருத்தமற்றதாகிறது. மக்கள்தொகை மிகுந்த இடங் களில் மட்டுமே, அல்லது முன்னேறிய போக்குவரத்துச் சாதனங்கள் தூரத்தைக் குறைக்கிற அளவுக்கு மட்டுமே, முதலாளித்துவம் இத் தகைய சரக்குகளை உற்பத்தி செய்ய முடியும். ஆனால், ஒரு பண்டத்தின் உற்பத்தி ஒரு சிலரது கையிலும், மக்கள்தொகை மிகுந்த இடத்திலும் குவிக்கப்படுவது இத்தகைய சரக்குக்கும் கூட ஒப் பளவில் விரிவான சந்தையை உண்டாக்க முடியும்; பெரிய சாராயத் தொழிற்சாலைகள், பால் பண்ணைகள் போன்றவற்றின் உற்பத்திப் பண்டங்களை உதாரணமாய்க் குறிப்பிடலாம்.

## அத்தியாயம் VI

# சுற்றோட்டச் செலவுகள்

### I. முறையான சுற்றோட்டச் செலவுகள்

#### 1. வாங்கல்-விற்றலுக்கு ஆகும் காலம்

சரக்கு என்ற நிலையிலிருந்து பணமாகவும், பணம் என்ற நிலையிலிருந்து சரக்காகவும் மூலதனம் அடையும் வடிவ மாற்றங்கள் அதே போது முதலாளியின் பரிமாற்றச் செயல்களும் ஆகும்; அதாவது வாங்கல், விற்றல் செயல்களும் ஆகும். இந்த வடிவ மாற்றங்கள் நடைபெறுவதற்கு ஆகும் காலம், அகவயமாய், முதலாளியின் பார்வையில், வாங்கல்-விற்றலுக்கு ஆகும் காலமாகிறது; சந்தையில் அவர் வாங்குபவராகவும் விற்பவராகவும் செயல்படும் காலமாகிறது. மூலதனத்தின் சுற்றோட்டக் காலம் எப்படி அதன் மறுவுற்பத்திக் காலத்தின் அவசியப் பகுதியாகிறதோ, அதே போல் முதலாளி வாங்குவதற்கும் விற்பதற்கும் செலவிடும் காலம், அவர் சந்தையிலே அலைந்து திரிகிற காலம், அவர் முதலாளியாக, அதாவது மூலதனத்தின் ஆளுருவமாகச் செயல்படும் காலத்தின் அவசியப் பகுதியாகிறது. அது அவரது அலுவல் நேரத்தின் ஒரு பகுதி ஆகிறது.

[சரக்குகள் அவற்றின் மதிப்புகளுக்கே வாங்கவும் விற்கவும் படுவதாக நாம் அனுமானித்துக் கொண்டிருப்பதால், இந்தச் செயல்களின் வாயிலாக நடப்பதெல்லாம் குறிப்பிட்ட மதிப்பு ஒரு வடிவத்திலிருந்து மற்றொரு வடிவத்துக்கு, சரக்கு வடிவத்திலிருந்து பண வடிவத்துக்கு அல்லது பண வடிவத்திலிருந்து சரக்கு வடிவத்துக்கு மாறுவதே தவிர வேறல்ல—அதாவது இருத்தல் நிலையில்தான் மாற்றம் ஏற்படுகிறது. சரக்குகள் அவற்றின் மதிப்புகளுக்கே விற்கப்படும் போது, விற்பவரின் கையிலும் வாங்குபவரின் கையிலும் இருக்கும் மதிப்புப் பருமன்கள் மாறுவதில்லை, மதிப்பின் நிலவல் வடிவம் மட்டுமே மாறுகிறது. சரக்குகள் அவற்றின் மதிப்புகளுக்கே விற்கப்படா விட்டாலும், உருமாறிய மதிப்புகளின் கூட்டுத் தொகை

மாறுவதில்லை; ஒரு தரப்பில் கூட்டல், மறு தரப்பில் கழித்தல் ஆகிறது.

C—M, M—C ஆகிய உருமாற்றங்கள் வாங்குபவருக்கும் விற்ப வருக்கும் இடையிலான பரிமாற்றங்களாகும். அவர்கள் பேரம் பேசி முடிக்க அவகாசம் வேண்டும். இது ஒருவரை ஒருவர் விஞ்ச முயலும் போராட்டமாதலால் அவகாசம் அதிகமாகவே தேவைப் படுகிறது. இங்கே ஒருவரையொருவர் எதிர் நோக்குகிறவர்கள் தொழிலதிபர்கள்; "கிரேக்கர் கிரேக்கரைச் சந்திக்கையில் இழுபறிப் போர்தான்."* வடிவ மாற்றம் நிகழச் செய்வதற்கு காலமும் உழைப்புச் சக்தியும் செலவாகின்றன; ஆனால் இந்தச் செலவு மதிப்பை ஒரு வடிவத்திலிருந்து மற்றொரு வடிவத்துக்கு மாறச் செய்வதற்குத்தானே தவிர, மதிப்பைப் படைப்பதற்கு அல்ல. எனவே, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மதிப்பில் கூடுதலான பங்கைத் தனதாக்கிக் கொள்வதற்கு இரு தரப்பிலும் செய்யப்படும் முயற்சியால் எந்த மாற்றமும் ஏற்படாது. எத்தரப்பின் துர்நோக்கத் தாலும் கூடுதலாக்கப்படும் இந்த உழைப்பு மதிப்பைப் படைக்காது. நீதிமன்ற நடவடிக்கையில் செலவிடப்படும் உழைப்பு விவகாரத்துக் குரிய பொருளின் மதிப்பைக் கூடுதலாக்கி விடாது அல்லவா, அதேபோலத்தான் இதுவும். இந்த உழைப்பு முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறை என்கிற முழுமையின் — இது சுற் றோட்டம் உள்ளிட்டது அல்லது சுற்றோட்டத்தில் உள்ளடங்கியது — அவசியக் கூறாகும். இந்த உழைப்பு — உதாரணமாய் — வெப்பம் உண்டாக்கப் பயன்படும் எரிபொருளை எரிப்பதற்கு வேண்டிய உழைப்பைப் போன்றதாகும். எரிக்கும் நிகழ்முறையின் அவசியக் கூறாக இருந்தாலும், எரிய விடுவதற்கு வேண்டிய உழைப்பு வெப் பத்தை உண்டாக்குவதில்லை. உதாரணமாக, நிலக்கரியை எரி பொருளாகப் பயன்படுத்தும் பொருட்டு அதனை ஆக்சிஜனுடன் சேர்க்க வேண்டும். இதற்காக அதனைத் திட நிலையிலிருந்து வாயு நிலைக்கு மாற்ற வேண்டும் (ஏனென்றால், எரிதலால் விளையும் கார்பானிக் வாயுவில், நிலக்கரி வாயு நிலையில் இருக்கிறது); ஆதலால், அதன் நிலவல் வடிவத்தில் அல்லது நிலவல் நிலையில் ஒரு பௌதிக மாற்றத்தைத் தோற்றுவித்தாக வேண்டும். திட மொத் தையாக ஒன்று சேர்ந்துள்ள கார்பன் மூலக்கூறுகளைப் பிரிப்பதும், இந்த மூலக்கூறுகளைத் தனித்தனி அணுக்களாகப் பிளப்பதும் புதிய சேர்க்கைக்கு முன்னதாக நடைபெற வேண்டும். இதற்குக் குறிப்பிட்ட அளவு விசையைச் செலவிட்டாக வேண்டும். இந்த விசை வெப்ப மாவதில்லை; மாறாக, வெப்பத்திலிருந்தே எடுக்கப்படுகிறது. ஆகவே, சரக்கு-உடைமையாளர்கள் முதலாளிகளாக இல்லாமல், சுயேச்சை யான நேரடி உற்பத்தியாளர்களாக இருந்தால், வாங்குவதிலும்

---

* நதேனியல் லீ எழுதிய 17 ஆம் நூற்றாண்டின் துன்பியல் நாடகமான போட்டி ராணிகள், அல்லது மகா அலெக்சாந்தரின் மரணம் என்பதில் கூறப்படுவதன் பொழிப்புரை. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

விற்பதிலும் அவர்கள் செலவிடும் காலத்துக்கு ஈடாக அவர்களது உழைப்பு நேரம் குறைய வேண்டியதாகிறது. இதனால்தான், இப்படிப்பட்ட பரிமாற்றங்களை (புராதன காலத்திலும் மத்திய காலத்திலும்) விடுமுறை நாட்களில் செய்ய வேண்டிய காரியங்களாய் ஒதுக்குவது வழக்கமாயிருந்தது.

முதலாளிகள் வந்த பிறகு சரக்குகளின் உருமாற்றம் பெரும் பரிமாணங்களுக்கு வளர்ந்து விடுவது மெய்தான். என்றாலும், இந்த உழைப்பு மதிப்பைப் படைக்கும் உழைப்பாகி விட முடியாது; இது மதிப்பின் வடிவத்தை மாற்ற உதவும் உழைப்பே தவிர மதிப்பைப் படைக்கும் உழைப்பல்ல. தொழில் துறை முதலாளிகள் இந்த "எரிய வைக்கும் வேலையை" தாமே செய்வதற்கு பதில் தாம் பணம் கொடுத்து அமர்த்துகிற மூன்றாமவரின் தனித் தொழிலாய் மாற்றுகிற பொறுப்பு மாற்றத்தின் மூலமும் இந்த இரசவாத அதிசயத்தை நிகழ்த்தி விட முடியாது. நிச்சயமாக இந்த மூன்றாமவர்கள் முதலாளிகளின் பால் பரிசுத்த அன்புகொண்டு சும்மாவே தமது உழைப்புச் சக்தியைக் கொடுத்து விட மாட்டார்கள். நிலவுடைமையாளருக்காக வாடகை வசூலிப்பவரின் உழைப்பு வாடகையின் மதிப்பையோ, வங்கிச் சுமையூழியரின் உழைப்பு இன்னொரு வங்கிக்குப் பை நிறைய சுமந்து செல்லும் தங்கக் கட்டிகளின் மதிப்பையோ இம்மியளவும் கூடுதலாக்குவதில்லை என்பது குறித்து அவர்களுக்குக் கவலையில்லை.][14]

மற்றவர்களை வேலை வாங்கும் முதலாளிக்கு, வாங்குவதும் விற்பதும் பிரதானப் பணியாகிறது. அவர் விரிந்த சமுதாய அளவில் பலரது உழைப்பின் பலனைத் தனதாக்கிக் கொள்வதால், அதே போல் விரிந்த அளவில் அதனை விற்கவும், விற்று வரும் பணத்தை உற்பத்தியின் அடிக்கூறுகளாக மாற்றவும் வேண்டும். முன்போலவே இப்போதும் வாங்குவதற்கு ஆகும் காலமோ விற்பதற்கு ஆகும் காலமோ மதிப்பைப் படைப்பதில்லை. வணிக மூலதனத்தின் பணி இங்கு ஒரு மாயையை உண்டாக்குகிறது. இதனை இங்கே விரிவாக ஆராயத் தேவையில்லை. பின்வருவது ஆரம்பத்திலேயே வெளிப்படையாகத் தெரிகிறது; ஒரு பணி மறுவுற்பத்தியின் அவசியக் கூறாக இருந்த போதிலும், அதனளவில் உற்பத்தித் திறனற்றதாய் இருக்குமானால், பலரது இரண்டாம் பட்ச அலுவல் என்ற நிலையிலிருந்து உழைப்புப் பிரிவினையின் வாயிலாக அது ஒரு சிலரது பிரத்தியேக அலுவலாக, அவர்களது தனித் தொழிலாக மாறும் போது, அதனால் இப்பணியின் தன்மை மாறி விடுவதில்லை. ஒரு வணிகர் (சரக்குகளது வடிவ மாற்றத்தின் இயக்கியாக மட்டும், வாங்குபவராகவும் விற்பவராகவும் மட்டும்

[14] எங்கெல்ஸ் குறிப்பு: அடைப்புக் குறியிலுள்ள வாசகம் கையெழுத்துப் பிரதி VIII என்பதன் முடிவிலுள்ள ஒரு குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

இங்கே இவரைக் கருதுகிறோம்) தமது நடவடிக்கைகளின் மூலம், பல உற்பத்தியாளர்களுக்கு வாங்கல்-விற்றலுக்கு ஆகும் காலத்தைக் குறையச் செய்து விடலாம். அப்படியானால், பயனற்ற விசைச் செலவீட்டைக் குறைக்கிற அல்லது உற்பத்திக் காலத்தைக் குறுக்க உதவுகிற இயந்திரமாகவே அவரைக் கருத வேண்டும்.[15]

எளிமைப்படுத்தும் பொருட்டு (வணிக முதலாளி பற்றியும், வணிக மூலதனம் பற்றியும் பிற்பாடுதான் பரிசீலிக்கப் போகிறோம் என்பதால்) வாங்குவதற்கும் விற்பதற்குமான இந்த இயக்கியைத் தமது உழைப்பை விற்பவராக கொள்வோம். C—M, M—C ஆகிய நடவடிக்கைகளில் அவர் தனது உழைப்புச் சக்தியையும் உழைப்பு நேரத்தையும் செலவிடுகிறார். அவர் இதைக் கொண்டு ஜீவிக்கிறார்—வேறொருவர் நூல் நூற்றோ, மாத்திரைகள் செய்தோ ஜீவிப்பது போல. அவர் அத்தியாவசியப் பணி புரிகிறார்; ஏனென்றால், மறுவுற்பத்தி நிகழ்முறை திறனிலாப் பணிகளையும் தன்னுள் கொண்டது. அவர் மற்றவர்களைப் போலவே பாடுபட்டு உழைக்கிறார்; ஆனால் அவரது உழைப்பு மதிப்பையோ உற்பத்திப் பொருளையோ படைக்கவில்லை; அதன் இயல்பு அப்படி, உற்பத்தியின் திறனிலாச் செலவினத்தில் *[faux frais]* அவரும் சேர்ந்து விடுகிறார். திறனிலாப் பணி திறனுடைப் பணியாகவோ, திறனிலா உழைப்பு திறனுடை உழைப்பாகவோ மாறுவது அல்ல அவரால் கிட்டும் பயன். ஒரு பணியைப் புரிகிற ஆளை மாற்றுவதன் மூலமே மேற்கூறிய மாற்றத்தை ஏற்படுத்துவது முடியாத காரியம். சமுதாயத்தின் உழைப்புச் சக்தியிலும் உழைப்பு நேரத்திலும் முன்னிலும் சிறிய பகுதியே இந்தத் திறனிலாப் பணியில் முடக்கப்படுவதுதான் அவரால் கிட்டும் பயன். அது மட்டுமல்ல. அவரைக் கூலித் தொழிலாளியாகவே

---

15 ''வாணிபச் செலவுகள் அவசியமே என்றாலும், அவை சுமையாகக் கருத வேண்டிய செலவினமே ஆகும்.'' (கெனே, *Analyse du Tableau Economique,* in Daire, *Physiocrates,* பகுதி I, பாரிஸ் 1846, பக்கம் 71.) கெனேயின் கருத்துப்படி, வியாபாரிகளிடையிலான போட்டியிலிருந்து ''இலாபம்'' பிறக்கிறது; எப்படியென்றால், இப்போட்டி அவர்களைக் ''குறைவான பிரதிபலன் அல்லது ஆதாயத்தோடு திருப்தியடையுமாறு'' நிர்ப்பந்திக்கிறது: இந்த ''இலாபம்'' என்பது ''கண்டிப்பாகச் சொல்வதானால், ஆரம்பத்தில் விற்பவருக்கும் வாங்கி நுகர்கிறவருக்கும் இழப்புத் தவிர்ப்பே *(privation de perte)* தவிர வேறல்ல. இப்போது, வாணிபச் செலவுகள் தொடர்பான இந்த இழப்புத் தவிர்ப்பு மெய்யான உற்பத்திப் பொருள் அல்ல; அதாவது வாணிபத்தினால் கூடுதலாக்கப்படும் செல்வம் அல்ல—வாணிபத்தை அதனளவில் வெறும் பரிவர்த்தனையாக, போக்குவரத்துச் செலவுகள் அற்றதாக நோக்கினாலும் சரி, போக்குவரத்துச் செலவுகளோடு சேர்த்து நோக்கினாலும் சரி.'' (பக்கம் 145, 146.) ''எப்போதுமே வாணிபச் செலவுகள் உற்பத்திப் பொருட்களை விற்பவர்களால் செலுத்தப்படுகின்றன. இவர்கள்தான், இடைச் செலவுகளேதும் இல்லையென்றால், வாங்குகிறவர்கள் தரும் விலை முழுவதையும் அனுபவிக்கிறார்கள்.'' (பக்கம் 163.) உடைமையாளர்களும் உற்பத்தியாளர்களும் *''salariants''* (கூலி தருவோர்) ஆவர். வணிகர்கள் *''salaries''* (கூலி பெறுவோர்) ஆவர். (பக்கம் 164, கெனே, *Dialogues sur le commerce et sur les Travaux des Artisans,* In Daire, *Physlocrates,* பகுதி I., பாரிஸ், 1846.)

கொள்வோம்; அதிக ஊதியம் பெறுகிறவராகவே இருக்கட்டும். அவர் பெறும் கூலி எவ்வளவு அதிகமானாலும், கூலித் தொழிலாளி என்ற முறையில் அவர் தமது வேலை நேரத்தின் ஒரு பகுதியில் ஊதியமில்லாமல் உழைக்கிறார். அவர் ஒவ்வொரு நாளும் எட்டு வேலை-மணிகளது உற்பத்திப் பொருளின் மதிப்பையே பெற்றாலும் பத்து மணி நேரம் உழைக்கிறார். ஆனால் அவரது எட்டு மணி நேர அவசிய-உழைப்பைக் கொண்டு சமுதாய உற்பத்திப் பொருளின் ஒரு பகுதி அவருக்குப் பெயர்க்கப்பட்ட போதிலும் இந்த அவசிய உழைப்பும் மதிப்பைப் படைப்பதில்லை; இரண்டு மணி நேர உபரி-உழைப்பும் மதிப்பைப் படைப்பதில்லை. முதலாவதாக, சமுதாயத்தின் கோணத்திலிருந்து பார்த்தால், முன்போலவே இப்போதும் ஒருவரது உழைப்புச் சக்தி வெறும் சுற்றோட்டப் பணியில் பத்து மணி நேரம் செலவிடப்படுகிறது. இந்த உழைப்புச் சக்தி உற்பத்தித் திறனுள்ள உழைப்பு உட்பட வேறு எதற்கும் பயன் படாமற் போகிறது. ஆயினும் இரண்டாவதாக, இந்த உழைப்பைத் தருகிற தனியாளின் இரண்டு மணி நேர உபரி-உழைப்புக்கு சமுதாயம் ஊதியமளிப்பதில்லை. சமுதாயம் இந்த உழைப்பைக் கொண்டு அதிகப்படியான உற்பத்திப் பொருள் அல்லது மதிப்பு எதையும் தனதாக்கிக் கொள்வதில்லை. ஆனால் சுற்றோட்டச் செலவுகளைக் குறிப்பவரான அவரால் ஏற்படும் செலவுகள், ஐந்திலொரு பங்கு குறைகின்றன; பத்து மணி நேரம் என்ற அளவிலிருந்து எட்டு மணி நேரமாகின்றன. அவரை இயக்கியாகக் கொண்ட இந்த முனைப்பான சுற்றோட்டக் காலத்தில் ஐந்திலொரு பங்குக்கு ஈடாக சமுதாயம் சமதை ஏதும் தருவதில்லை. ஆனால் இந்த ஆளை ஒரு முதலாளி வேலைக்கமர்த்தியிருந்தால், இந்த இரண்டு மணி நேரத்தின் ஊதியமின்மை அவரது மூலதனத்தின் சுற்றோட்டச் செலவுகளை—அவரது வருமானத்திலிருந்து கழிக்கப்படுகிற இவற்றை—குறைக்கிறது. முதலாளிக்கு இது நேரடி ஆதாயமாகும்; ஏனென்றால், அவரது மூலதன-மதிப்பின் தற்பெருக்கத்துக்கான எதிர்வரம்பு இவ்வழியில் குறைகிறது. சிறு அளவில் சுயேச்சையாய் சரக்கு உற்பத்தி செய்வோர் வாங்கவும் விற்கவும் தமது நேரத்தில் ஒரு பகுதியைச் செலவிட்டு வரும் வரை, இது அவர்களது உற்பத்தித் திறனுள்ள பணிக்கிடையே வரும் இடைவேளைகளின் போது செலவிடப்படும் நேரத்தையே, அதாவது அவர்களது உற்பத்தி நேரத்திலான குறைவையே குறிக்கிறது.

எப்படியானாலும், இதற்காகச் செலவிடப்படும் காலம் சுற்றோட்டச் செலவுகளில் ஒன்றாகிறது; வடிவ மாற்றம் அடையும் மதிப்புகள் இதனால் சிறிதும் கூடுதலாவதில்லை. இது அவற்றைச் சரக்கு வடிவத்திலிருந்து பண வடிவத்துக்கு மாற்றுவதற்கான செலவாகும். சுற்றோட்ட இயக்கியாகச் செயல்படும் முதலாளித்துவச் சரக்கு உற்பத்தியாளருக்கும் நேரடி சரக்கு உற்பத்தியாளருக்கும்

இடையிலான வேறுபாடு இதுதான்: முன்னவர் பெரிய அளவில் வாங்கவும் விற்கவும் செய்கிறார்; ஆகவே இப்படிப்பட்ட இயக்கி என்ற முறையில் அவர் புரியும் பணியின் பரிமாணங்கள் விரிவடைகின்றன. அவர் தமது தொழிலின் அளவுவீதம் காரணமாய் சுற்றோட்ட இயக்கிகளைக் கூலித் தொழிலாளர்களாக வாங்குவது (அமர்த்துவது) தவிர்க்க முடியாததானால் அல்லது சாத்தியமானால், அது இந்நிகழ்வின் தன்மையை பாதிக்காது. சுற்றோட்ட நிகழ்முறையில் (இது வெறும் வடிவ மாற்றமாகவே இருக்கும் வரை) குறிப்பிட்ட அளவு உழைப்புச் சக்தியும் உழைப்பு நேரமும் செலவிட்டாக வேண்டும். ஆனால், இப்போது இது மூலதனத்தின் கூடுதல் முதலீடாகத் தோன்றுகிறது. சுற்றோட்டத்தில் மட்டுமே செயல்படும் இந்த உழைப்புச் சக்தியை வாங்குவதற்கு மாறும்-மூலதனத்தின் ஒரு பகுதியை செலவிட்டாக வேண்டும். இந்த மூலதன முன்னீடு உற்பத்திப் பொருளையோ மதிப்பையோ படைப்பதில்லை. அந்த அளவுக்கு இது முன்னீடு செய்யப்படும் மூலதனம் உற்பத்தித் திறனுள்ள முறையில் செயல்படும் பரிமாணங்களைக் குறையச் செய்கிறது. உற்பத்திப் பொருளின் ஒரு பகுதி அதன் மறு பகுதியை வாங்குவதற்கும் விற்பதற்குமான இயந்திரமாக மாற்றப்படுவது போன்றது இது. இந்த இயந்திரம் உற்பத்திப் பொருளைக் குறையச் செய்கிறது. அது சுற்றோட்டத்திற்காகச் செலவிடப்படும் உழைப்புச் சக்தி முதலானவற்றைக் குறைக்க முடியுமென்றாலும், உற்பத்தி நிகழ்முறையில் அதற்குப் பங்கில்லை. அது சுற்றோட்டச் செலவுகளின் ஒரு பகுதியாகவே அமைகிறது.

## 2. கணக்குப் பதிவு

வாங்கல்-விற்றல் என்னும் செயல்களோடு கூட, கணக்குப் பதிவுக்காகவும் [book-keeping] உழைப்பு நேரம் செலவாகிறது. பேனா, மை, காகிதம், மேசை முதலான அலுவலகத் தளவாடங்களும் தேவைப்படுகின்றன; அதாவது பொருள் வடிவிலான உழைபபும் தேவைப்படுகிறது. ஆகவே, இந்தப் பணிக்கு உழைப்புச் சக்தியின் செலவீடு மட்டுமல்லாமல், உழைப்புக் கருவிகளின் செலவீடும் அவசியமாகிறது. வாங்கல்-விற்றலுக்கு ஆகும் காலம் குறித்து எழுகிற அதே நிலைமைகள் இங்கும் எழுகின்றன.

மூலதனமானது அதன் சுற்றுகளிலான ஒருமையாய், உற்பத்தித் துறையிலோ சுற்றோட்டத் துறையின் இரு கட்டங்களில் ஏதேனும் ஒன்றிலோ இயங்கிக் கொண்டிருக்கும் மதிப்பாய், முக்கியமாய்ச் சரக்கு உற்பத்தியாளரின், முதலாளித்துவ சரக்கு உற்பத்தியாளரின் மனத்துள் கணக்குப் பணத்தின் வடிவில்தான் கருத்தியலாய் நிலவுகிறது. மூலதனத்தின் இந்த இயக்கம் கணக்குப் பதிவைக் கொண்டு ஒழுங்கு செய்து கட்டுப்படுத்தப்படுகிறது. சரக்குகளின்

விலை நிர்ணயமும், அதாவது சரக்குகளுடைய விலைக் கணிப்பும் இந்தக் கணக்குப் பதிவில் அடங்குகிறது. உற்பத்தி இயக்கம், குறிப் பாக உபரி-மதிப்பினது உற்பத்தி இயக்கம் இவ்விதம் கற்பனையில் அடையாளபூர்வப் பிரதிபலிப்பைப் பெறுகிறது; சரக்குகள் இதில் மதிப்பின் உறைவிடங்களாக மட்டுமே குறிக்கப் பெறுகின்றன; கணக்குப் பண உருவில் கருத்தியலாய் நிலவும் மதிப்புகளைக் கொண்ட பண்டங்களின் பெயர்களாக மட்டுமே குறிக்கப் பெறு கின்றன. தனிப்பட்ட சரக்கு-உற்பத்தியாளர் மனக் கணக்காக மட்டுமே கணக்கு வைத்துக் கொள்ளும் வரை (உதாரணமாய் விவசாயி இப்படித்தான் செய்கிறார்; முதலாளித்துவ வேளாண்மை உதயமான பிறகே கணக்குப் பதிவு செய்யும் சாகுபடியாளரைப் பார்க்கிறோம்), அல்லது வரவுசெலவு, கொடுப்புத் தேதிகள் முதலான விவரங்களை நேரம் கிடைக்கும் போது, அதாவது உற்பத்தி வேலைகளில் ஈடுபடாத நேரத்தில் எழுதி வைத்துக் கொள்ளும் வரை, அவரது இந்தப் பணியும் அதற்குச் செலவாகும் காகிதம் போன்ற உழைப்புக் கருவிகளும் உழைப்பு நேரம், உழைப்புக் கருவிகள் ஆகியவற்றின் கூடுதல் செலவீட்டைக் குறிக்கின்றன என்பது தெளிவு. இது அத்தியாவசியச் செலவீடுதான் என்றாலும், திறனுடை நுகர்வுக்குப் பயன்படக் கூடிய நேரமும், உள்ளபடியே உற்பத்தி நிகழ்முறையில் செயல்பட்டு உற்பத்திப் பொருட்களையும் மதிப்பையும் படைப்பதில் பங்கு வகிக்கக் கூடிய உழைப்புக் கருவிகளும் இதனால் குறையவே செய்கின்றன.[16] இந்தக் கணக்குப் பதிவு வேலைகள் முதலாளித்துவ சரக்கு-உற்பத்தி யாளர்களிடம் ஒன்றுகுவிந்து பரிமாணங்களில் பெரிதாகி விடுவ தாலோ, பல சிறு சரக்கு உற்பத்தியாளர்களின் வேலைகளாய் இராமல் ஒரேயொருவரான முதலாளியின் பணியாக, பெருவீத உற்பத்தி நிகழ்முறைக்குட்பட்ட ஒரு பணியாகி விடுவதாலோ இப்பணியின் தன்மை மாறி விடுவதில்லை. மற்றும், உற்பத்தித் திறனுள்ள பிரதானப் பணிகளோடு ஒட்டிக் கொண்டிருந்த நிலை

[16] மத்திய காலத்தில் மடாலயங்களில் மட்டுமே வேளாண்மைத் துறையில் கணக்குப் பதிவு செய்யப்படக் காண்கிறோம். ஆனால் இந்தியாவின் புராதன கிராம சமுதாயங் களில் வேளாண்மைத் துறைக்குக் கணக்கர் இருந்ததாகப் பார்த்தோம் (முதல் பாகம், பக்கம் 485). அங்கே கணக்குப் பதிவானது கிராம சமுதாய அலுவலர் ஒருவரின் பிரத்தியேக அலுவல் என்ற முறையில் சுயேச்சையான அந்தஸ்து பெற்றது. இந்த உழைப்புப் பிரிவினை நேரத்தையும் உழைப்பையும் செலவையும் மிச்சப்படுத்துகிறது. ஆனால் உற்பத்தியும் உற்பத்தித் துறையிலான கணக்குப் பதிவும், கப்பல் சரக்கு ஏற்றிச் செல்வதையும் ஏற்றுமதிப் பத்திரத்தையும் போல இருவேறு விஷயங்களாய் இருக் கின்றன. கணக்கரின் உருவில், கிராம சமுதாயத்தின் உழைப்புச் சக்தியில் ஒரு பகுதி உற்பத்தித் துறைக்குச் செல்லாமல் திருப்பப்படுகிறது; அவரது பணிக்கு ஆகும் செலவுகள் சமுதாய உற்பத்திப் பண்டத்தில் ஒரு பகுதியை எடுத்து சரிக்கட்டப்படு கின்றனவே தவிர, அவரது உழைப்பால் சரிக்கட்டப்படுவதில்லை. இந்திய கிராம சமுதாயத்தின் கணக்கருக்குப் பொருந்துவது முதலாளியின் கணக்கருக்கும் (உரிய மாற்றங்களோடு) பொருந்தும். (கையெழுத்துப் பிரதி II என்பதிலிருந்து.)

போய் தனிப் பணியாகப் பிரிந்து விடுவதாலோ, இதற்கென அமைந்த தனி இயக்கிகளாகச் செயல்படுவோரது சுயேச்சைப் பணியாகி விடுவதாலோ இப்பணியின் தன்மை மாறி விடுவதில்லை.

எந்தப் பணியும் உழைப்புப் பிரிவினையாலும் சுயேச்சை நிலை பெறுவதாலும் மட்டும் பண்டங்களையும் மதிப்பையும் படைக்கும் பணியாகி விட முடியாது. உள்ளார்ந்த இயல்பினால், ஆகவே சுயேச்சை நிலை எய்துவதற்கு முன்பே இத்தகையதாய் இருந்தாலன்றி இது சாத்தியமன்று. ஒரு முதலாளி தமது மூலதனத்தை முதன்முதலாய் முதலீடு செய்தால், அதில் ஒரு பகுதியை அவர் கணக்கர் முதலானோரை அமர்த்துவதற்கும் கணக்குப் பதிவுச் சாதனங்களுக்காகவும் முதலீடு செய்ய வேண்டும். அவரது மூலதனம் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்குமானால், தொடர்ச்சியான தனது மறுவுற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டிருக்குமானால், ஓயாமல் தமது உற்பத்திப் பொருளின் ஒரு பகுதியைப் பணமாக மாற்றி அந்தப் பணத்தை கணக்கர், எழுத்தர்கள், அவர்களுக்கு வேண்டிய கருவிகள் போன்ற செலவுகளுக்குச் செலவிட்டாக வேண்டும். அவரது மூலதனத்தின் இந்தப் பகுதி உற்பத்தி நிகழ்முறையிலிருந்து விலக்கப்பட்டு, சுற்றோட்டச் செலவுகளாகி விடுகின்றன. முற்றிலும் இப்பணிக்கெனச் செலவிடப்படும் உழைப்புச் சக்தியும் உட்பட இச்செலவுகளால் மொத்த ஆதாய வரவு அதே அளவுக்குக் குறைந்து விடுகிறது.

ஒரு புறம் கணக்குப் பதிவுக்கு ஆகும் செலவுகள் அல்லது திறனிலா உழைப்பு நேரச் செலவுகளுக்கும் மறு புறம் வெறும் வாங்கல்-விற்றலுக்கு ஆகும் காலச் செலவுகளுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. பின்சொன்ன செலவுகள், உற்பத்தி நிகழ்முறையின் குறிப்பிட்ட சமூக வடிவத்திலிருந்து, அதாவது அது சரக்கு-உற்பத்தி நிகழ்முறை ஆகும் என்பதிலிருந்து எழுகிறவை. ஆனால் கணக்குப் பதிவானது இந்த நிகழ்முறை மீதான கட்டுப்பாடும் கருத்தியலான அதன் கூட்டிணைவுமாகும் என்பதால், எவ்வளவுக்கு எவ்வளவு இந்நிகழ்முறை அதன் தனிப்பட்ட தன்மையை இழந்து சமுதாய அளவினதாகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு இன்றியமையாததாகிறது. ஆகவே கைவினைஞர்கள், விவசாயிகளது பொருளாதாரத்தின் அங்கும் இங்குமாகச் சிதறிய பொருளுற்பத்தியில் தேவைப்படுவதைக் காட்டிலும் அதிகமாய் முதலாளித்துவப் பொருளுற்பத்தியிலும், முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் தேவைப்படுவதைக் காட்டிலும் அதிகமாய் கூட்டுத்துவப் பொதுவுடைமைப் பொருளுற்பத்தியிலும் [collective production] கணக்குப் பதிவு தேவைப்படுகிறது. அதே போது பொருளுற்பத்தியின் ஒன்றுகுவிப்பு அதிகமாகி கணக்குப் பதிவானது சமுதாய அளவினதாவதைத் தொடர்ந்து அதற்கான செலவுகள் குறைந்து செல்கின்றன.

உருமாற்றங்களால் மட்டும் ஏற்படுகிற சுற்றோட்டச் செலவுகளின் பொதுவான தன்மையை மட்டுமே இங்கு நாம் பரிசீலிக்கிறோம். ஆகவே இந்தச் செலவினங்கள் யாவற்றையும் பற்றி இங்கு விவரமாய் ஆராயத் தேவையில்லை. ஆனால் இந்தச் செலவினங்கள் முற்றிலும் மதிப்பின் வடிவத்தில் ஏற்படும் மாற்றங்கள் சம்பந்தமானவை, ஆகவே உற்பத்தி நிகழ்முறையின் குறிப்பிட்ட சமூக வடிவத்திலிருந்து எழுகிறவை. தனிப்பட்ட சரக்கு-உற்பத்தியாளரைப் பொறுத்த வரை இவை நிலையற்றவையாகவும் சுலபத்தில் கண்ணுக்குப் புலப்படாதவையாகவும் இருப்பவை. அவர் செய்கிற உற்பத்தி வேலைகளோடு சேர்ந்து எழுகிறவை, அல்லது அவற்றுடன் பின்னிப் பிணைந்து விடுகிறவை. ஆயினும் இந்தச் செலவினங்கள் நம் கண்ணெதிரே சுற்றோட்டச் செலவுகளாய் எப்படி விசுவரூபம் எடுக்கின்றன என்பதை, பணம் பெறுவதற்கும் கொடுத்தலுக்குமான செயற்பாடுகள் சுயேச்சையான காரியங்களாகி, பெருவீதத்தில் வங்கிகள் முதலானவற்றின், அல்லது தனிப்பட்ட தொழில் நிறுவனங்களின் காசாளர்களது பிரத்தியேகப் பணியாகப் பெருவீதத்தில் ஒன்றுகுவிந்து விடும் போது தெளிவாகவே காண்கிறோம். என்றாலும் சுற்றோட்டச் செலவுகள் இப்படி வெளித் தோற்றத்தில் எவ்வளவுதான் மாறினாலும் கூட உள்ளார்ந்த அவற்றின் தன்மையில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதை ஒருபோதும் மறக்கலாகாது.

### 3. பணம்

சரக்காக இருந்தாலும் இல்லா விட்டாலும் உற்பத்திப் பண்டம் எப்படியும் பொருள் வடிவிலான செல்வமே ஆகும், சொந்த நுகர்வையோ திறனுடை நுகர்வையோ நோக்கமாகக் கொண்ட பயன்-மதிப்பே ஆகும். சரக்கென்ற முறையில் அதன் மதிப்பு அதன் விலையின் வடிவில் கருத்தியலாகத் தெரிவிக்கப்படுகிறது; விலையால் உள்ளபடியான அதன் பயன் வடிவம் சிறிதும் மாறுவதில்லை. ஆனால் தங்கம், வெள்ளி போன்ற குறிப்பிட்ட சில சரக்குகள் பணமாகப் பணி புரிகின்றன. பணம் என்ற முறையில் அவை முற்றிலும் சுற்றோட்ட நிகழ்முறைக்கே உரித்தானவை (சேர்ப்புகள், சேம நிதிகள் போன்றவற்றின் வடிவில் இருக்கையிலும் அவை—எப்படியும் உட்கிடையாகவேனும்—சுற்றோட்டத் துறையையே சேர்ந்தவை) என்னும் இந்த உண்மை பொருளுற்பத்தி நிகழ்முறையினது, சரக்கு உற்பத்தி நிகழ்முறையினது குறிப்பிட்ட சமூக வடிவத்தின் விளைவே அன்றி வேறல்ல. முதலாளித்துவ உற்பத்தி முறையில் சரக்குதான் உற்பத்திப் பொருட்களின் பொது வடிவம் என்பதாலும், அதாவது மிகப் பெருந்திரளான உற்பத்திப் பொருட்கள் சரக்குகளாக உற்பத்தி செய்யப்படுகிறவை, ஆகவே பண வடிவம்

பெற வேண்டியவை என்பதாலும், சரக்குப் பெருந்திரள், அதாவது சமுதாயச் செல்வத்தில் சரக்குகளாகச் செயல்படும் பகுதியானது ஓயாமல் தொடர்ந்து வளர்ந்து செல்கிறது என்பதாலும், சுற்றோட்டச் சாதனமாகவும் கொடுப்புச் சாதனமாகவும் சேம நிதியாகவும் இன்ன பிறவாகவும் பணி புரியும் தங்கம், வெள்ளியின் அளவும் மேலும் மேலும் கூடுதலாகிச் செல்கிறது. பணமாகச் செயல்படும் இந்தச் சரக்குகள் சொந்த நுகர்வுக்கோ திறனுடை நுகர்வுக்கோ பயன்படுவதில்லை. வெறும் சுற்றோட்டப் பொறியாகப் பயன்படுவதற்கு ஏற்ற வடிவில் நிலைநிறுத்தப் பெற்ற சமுதாய உழைப்பை அவை குறிக்கின்றன. சமுதாயச் செல்வத்தில் ஒரு பகுதி உற்பத்தித் திறனில்லாத இவ்வடிவில் முடக்கப்படுகிறது என்பதோடு அல்லாமல், பணம் தேயத் தேய திரும்ப திரும்ப அதை மாற்றீடு செய்தாக வேண்டும், அதாவது மேலும் மேலும் சமுதாய உழைப்பை, உற்பத்திப் பொருள் வடிவில் இருப்பதை மேலும் அதிகமாய்த் தங்கமும் வெள்ளியுமாய் மாற்றிச் சென்றாக வேண்டும். முதலாளித்துவ வளர்ச்சி பெற்ற நாடுகளில் இந்த மாற்றீட்டுச் செலவுகள் கணிசமானவை ஆகும். ஏனென்றால் பொதுவாக, பண வடிவில் முடக்கப்பட்டிருக்கும் செல்வப் பகுதி கொஞ்சநஞ்சமல்ல. பணச் சரக்குகளாய் இருக்கும் தங்கமும் வெள்ளியும் சமுதாயத்துக்கு ஆகும் சுற்றோட்டச் செலவுகளைக் குறிக்கின்றன. இச்செலவுகள் முழுக்க முழுக்கப் பொருளுற்பத்தியின் சமூக வடிவத்திலிருந்து எழுகிறவை. இவை பொதுவாகச் சரக்கு-உற்பத்தியின் திறனிலாச் செலவினம் *[faux frais]* ஆகும். சரக்கு உற்பத்தியின், குறிப்பாக முதலாளித்துவச் சரக்கு உற்பத்தியின் வளர்ச்சியைத் தொடர்ந்து இவையும் அதிகரிக்கின்றன. சுற்றோட்ட நிகழ்முறைக்காக சமுதாயச் செல்வத்திலிருந்து தண்டமாய்ச் செலுத்த வேண்டியிருக்கும் பகுதியாகும் இவை.[17]

## II. சேமிப்புச் செலவுகள்

கருத்தியலாய் நோக்குமிடத்து, சுற்றோட்டத்தின் போது மதிப்பின் வடிவ மாற்றத்திலிருந்து எழும் சுற்றோட்டச் செலவுகள் [costs of circulation] சரக்குகளின் மதிப்பில் சேருவதில்லை. மூலதனத்திலிருந்து இச்செலவுகளுக்காக எடுக்கப்படுகிறவை,

---

17 ஒரு நாட்டின் மூலதனத்தில் ஒரு பகுதி உற்பத்தித் திறனுள்ள காரியங்களிலிருந்து பூரணமாய் விலக்கப்பட்டு ஏனைய பகுதியின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்காக அல்லது உயர்த்துவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இப்பகுதிதான் அந்நாட்டில் புழக்கத்திலுள்ள பணம். ஆகவே, இயந்திரத்தை உற்பத்தி செய்வது பிறிதொரு பொருளின் உற்பத்தியை விருத்தி செய்ய அவசியமாய் இருப்பது போலவே, தங்கத்தைச் சுற்றோட்டச் சாதனமாக்குவதற்கும் குறிப்பிட்ட அளவு செல்வம் அவசியமாய் இருக்கிறது.'' *(எக்கானமிஸ்ட், பாகம் V., பக்கம் 520.)*

முதலாளியைப் பொறுத்த வரை, உற்பத்தித் திறனுள்ள முறையில் செலவிடப்படும் மூலதனத்தில் செய்யப்படும் குறைப்புகள்தாம். இப்போது நாம் பரிசீலிக்கப் போகும் சுற்றோட்டச் செலவுகள் வேறு விதமானவை. இந்தச் செலவுகள் உற்பத்தி நிகழ்முறைகளி லிருந்தே எழுந்து சுற்றோட்டத் துறையிலும் தொடர்கிறவையாக இருக்கலாம். இவை உற்பத்தித் திறனுள்ளவையே என்பது சுற் றோட்ட வடிவத்தால் மறைக்கப்பட்டு விடுகிறது. இதற்கு மாறாக, சமுதாயத்தின் கண் கொண்டு நோக்குகையில், இவை செலவுகளாக மட்டும் இருக்கலாம்; உயிருள்ள உழைப்பு அல்லது பொருள் வடிவிலான உழைப்பை உற்பத்தித் திறனில்லாத முறையில் செல விடுவதாக இருக்கலாம்; ஆனால் இதே காரணத்தால் இவை தனிப் பட்ட முதலாளிக்கு மதிப்பை உற்பத்தி செய்கிறவையாக இருக்க லாம், அவரது சரக்குகளின் விற்பனை விலையைக் கூடுதலாக்கு கிறவை ஆகலாம். இச்செலவுகள் வெவ்வேறு உற்பத்தித் துறை களிலும் வெவ்வேறாக இருப்பதோடு சில சந்தர்ப்பங்களில் ஒரே உற்பத்தித் துறையிலுங்கூட தனிப்பட்ட வெவ்வேறு மூலதனங் களுக்கு வெவ்வேறாய் இருப்பதிலிருந்தே இதைத் தெரிந்து கொள்ள லாம். இச்செலவுகள் சரக்கின் விலையோடு சேர்க்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு தனிப்பட்ட முதலாளிக்குமான செலவுத் தொகைக்கேற்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. ஆன்ால் மதிப்பைக் கூடுதலாக்கும் உழைப்பு அனைத்தும் உபரி-மதிப்பையும் கூடுதலாக்க முடியும்; முதலாளித்துவப் பொருளுற் பத்தியில் எப்போதுமே இப்படிக் கூடுதலாக்கவே செய்யும். ஏனென்றால், உழைப்பினால் படைக்கப்படும் மதிப்பு உழைப்பின் அளவைப் பொறுத்ததாய் இருக்க, அதனால் படைக்கப்படும் உபரி-மதிப்பு முதலாளி அதற்கு அளிக்கும் ஊதியத்தைப் பொறுத்த தாய் இருக்கிறது. ஆதலால், ஒரு சரக்கின் பயன்-மதிப்பை உயர்த்தாமலே அதன் விலையை உயர்த்துகிற செலவுகள், ஆகவே சமுதாயத்தைப் பொறுத்த வரை உற்பத்தித் திறனற்ற செலவுகளாய் வகைப்படுத்த வேண்டிய செலவுகள் தனிப்பட்ட முதலாளியைப் பொறுத்த வரை செல்வப் பெருக்கத்துக்கான ஓர் ஆதாரமாகி விடலாம். ஆனால் சரக்கின் விலையை இவ்விதம் கூடுதலாக்கு வதன் மூலம் இந்தச் சுற்றோட்டச் செலவுகள் சம விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றனவே தவிர, இச்செலவுகள் உற்பத் தித் திறனற்றவையாக இருப்பதைத் தடுத்து விடுவதில்லை. எடுத்துக் காட்டாக காப்பீட்டு நிறுமங்கள் தனிப்பட்ட முதலாளிகளுக்கு ஏற்படும் இழப்புகளை முதலாளி வர்க்கத்தாரிடையே பகிர்ந் தளிக்கின்றன. இழப்புகள் இவ்விதம் பகிர்ந்து பரவலாக்கப் படுவதால், மொத்தச் சமுதாய மூலதனத்தைப் பொறுத்த வரை இவை இழப்புகளாகவே இருப்பது தடுக்கப்பட்டு விடு வதில்லை.

## 1. பொதுவாய்ச் சரக்கிருப்பு உருவாதல்

உற்பத்திப் பொருளானது சரக்கு-மூலதனமாக இருக்கும் காலத்தில், அல்லது விற்பனைச் சந்தையில் இருக்கும் காலத்தில்—வேறு விதமாகச் சொன்னால் அது வெளிவருகிற உற்பத்தி நிகழ்முறைக்கும் உட்புகுகிற நுகர்வு நிகழ்முறைக்கும் இடைப்பட்ட காலத்தில்—சரக்கிருப்பாய் அமைந்திருக்கிறது. சந்தைச் சரக்காகவும் ஆகவே சரக்கிருப்பாகவும் இருக்கும் சரக்கு-மூலதனம் ஒவ்வொரு சுற்றின் போதும் இரட்டை நிலை வகிக்கிறது: ஒரு நேரம் அது பரிசீலனையிலுள்ள சுற்றில் இயங்கும் மூலதனத்தினது சரக்கு-உற்பத்தியின் நிலை வகிக்கிறது; வேறொரு நேரம் வேறொரு மூலதனத்தினது சரக்கு-உற்பத்தியின், அதாவது விலைக்கு வாங்கி திறனுடை-மூலதனமாய் மாற்றப்படுவதற்குத் தயாராய்ச் சந்தைக்கு வருகிற சரக்கு-உற்பத்தியின் நிலை வகிக்கிறது. இரண்டாவது நிலை வகிக்கும் சரக்கு-மூலதனம் சரக்காணை தரப்படும் வரை உற்பத்தி செய்யப்படாமலே இருக்கலாம் என்பது மெய்தான். அப்போது அது உற்பத்தி செய்யப்படும் வரை தடங்கல் ஏற்படுகிறது. ஆனால் எப்போதுமே குறிப்பிட்ட அளவு சரக்குகள் (உற்பத்திச் சாதனங்கள்) சந்தையில் இருந்தாக வேண்டும், அதாவது சரக்கிருப்பாய் [supply] அமைந்தாக வேண்டும்; உற்பத்தி, மறுவுற்பத்தி நிகழ்முறை தட்டுத் தடங்கலின்றி நடைபெற இது அவசியமாகும். அதேபோல் திறனுடை-மூலதனம் என்பதில் உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குதலும் அடங்கியுள்ளது. பண வடிவமானது இங்கே வாழ்வுச் சாதனங்களின் மதிப்பு வடிவமே தவிர வேறல்ல. இந்த வாழ்வுச் சாதனங்களில் பெரும் பகுதி சந்தையில் தொழிலாளிக்கு எளிதில் கிடைக்க வேண்டும். இந்த உட்பிரிவில் பின்னர் இதனை இன்னும் விவரமாகப் பார்ப்போம். ஆனால் இப்போதே ஒன்று தெளிவாகி விட்டது. அதாவது சுற்றை நிகழ்த்திக் கொண்டிருக்கும் ஒரு மூலதன-மதிப்பு சரக்காக மாறியிருக்கும் நிலையில், இப்போது அதனை விற்க வேண்டும், அதாவது மீண்டும் பணமாக மாற்ற வேண்டும் என்ற நிலையில், ஆகவே தற்போதைக்கு அது சந்தையில் சரக்கு-மூலதனமாகச் செயல்படுகிற நிலையில், அது இருப்பாக அமைவதை சந்தையில் வேறு வழியின்றியும் எவர் விருப்பத்தையும் சாராமலும் நிகழ்கிற ஒன்றாகவே குறிப்பிட வேண்டும். விற்பனை எவ்வளவு துரிதமாய் நடைபெறுகிறதோ மறுவுற்பத்தி நிகழ்முறை அவ்வளவு சரளமாய் நடைபெறுகிறது. C′ — M′ என்ற வடிவ மாற்றத்தில் ஏற்படக் கூடிய தாமதம் மூலதனச் சுற்றில் நடைபெற வேண்டிய மெய்யான பொருளாயத மாற்றத்தையும், மேலும் அது திறனுடை-மூலதனமாகச் செயல்படுவதையும் தடைபடுத்துகிறது. மறு புறம், M — Cஐ பொறுத்த வரை, ஓயாமல் சந்தையில் சரக்குகள் இருந்து வருவதான சரக்கிருப்பு என்பது, மறுவுற்பத்தி

நிகழ்முறையின் ஓட்டத்துக்கும், புதிய அல்லது கூடுதல் மூலதனத்தின் முதலீட்டுக்கும் இன்றியமையாதது ஆகிறது.

சரக்கு-மூலதனம் சந்தையில் சரக்கிருப்பாக [commodity-supply] இருந்து வர வேண்டுமானால், கட்டடங்கள், கிடங்குகள், சேமிப்பிடங்கள், பண்டக சாலைகள் முதலானவை தேவைப்படுகின்றன, அதாவது மாறா-மூலதனச் செலவீடு அவசியமாகிறது; மேலும், சரக்குகளைச் சேமிப்பில் வைத்துக் காப்பதற்குத் தேவையான உழைப்புச் சக்திக்கு ஊதியமளிப்பதும் அவசியமாகிறது. தவிரவும் சரக்குகள் அழியக் கூடியவை, இயற்கைச் சக்திகளால் கேடுற்று சேதமாகிறவை. இவற்றிலிருந்து சரக்குகளைப் பாதுகாப்பதற்காகக் கூடுதல் மூலதனத்தைப் பொருள் வடிவில், அதாவது உழைப்புச் சாதனங்களுக்காக ஓரளவும், உழைப்புச் சக்திக்காக ஓரளவும் முதலீடு செய்தாக வேண்டும்.[18]

மூலதனம் இவ்விதம் அதன் சரக்கு-மூலதன வடிவில், ஆகவே சரக்கிருப்பின் வடிவில் இருப்பதால் செலவுகள் ஏற்படுகின்றன. உற்பத்தித் துறைக்குரிய செலவுகள் அல்லவாதலால் இவற்றை சுற்றோட்டச் செலவுகள் என்ற வகையில் சேர்க்க வேண்டும். இந்தச் சுற்றோட்டச் செலவுகள் சரக்குகளின் மதிப்பில் ஓரளவு சேர்ந்து சரக்குகளின் விலையை அதிகரிக்கச் செய்கிறவை. இவ்விதம் இவை முதலாம் தலைப்பில் எடுத்துரைக்கப்பட்ட சுற்றோட்டச் செலவுகளிலிருந்து வேறுபடுகின்றன. ஆனால் சரக்கிருப்பைப் பழுதின்றிப் பாதுகாப்பதற்கு வேண்டிய மூலதனமும் உழைப்புச் சக்தியும் நேரடி உற்பத்தி நிகழ்முறையிலிருந்து விலக வேண்டியதாகிறது. இப்படிப் பயன்படுத்தப்படும் மூலதனமும் அதன் அடக்கக் கூறான உழைப்புச் சக்தியும் சமுதாய உற்பத்திப் பண்டத்திலிருந்தே மாற்றீடு செய்யப் பட்டாக வேண்டும். ஆகவே, இந்தச் செலவுகளின் விளைவாக உழைப்பின் உற்பத்தித் திறன் குறைகிறது; குறிப்பிட்ட பயன் விளைவைப் பெறுவதற்குத் தேவையான மூலதனமும் உழைப்பும் அதிகமாகி விடுகின்றன. ஆக இச்செலவுகள் **திறனிலாச் செலவுகள்** [unproductive costs] ஆகும்.

---

[18] 1841இல் கார்பெட் ஒன்பது மாதப் பருவ காலத்துக்குக் கோதுமையைச் சேமித்து வைப்பதற்கான செலவுகளால் ஏற்படும் தானிய இழப்பைக் கணக்கிட்டுக் கூறுகிறார்: சேதார்த்தால் கோதுமை அளவில் இழப்பு ½ சதவீதம்; கோதுமை விலை மீதான வட்டியால் 3 சதவீதம்; பண்டக சாலை வாடகையால் 2 சதவீதம்; சலிப்பதற்கும் பிரிப்பதற்கும் சுமப்பதற்கும் ஆகும் செலவால் 1 சதவீதம்; விற்றுமுதலுக்கு எடுத்துச் செல்வதற்காக ½ சதவீதம்; ஆக மொத்தம் 7 சதவீதம். குவார்ட்டருக்கு 50 ஷில்லிங் விலை என்றால் இந்த இழப்பு 3 ஷில்லிங் 6 பென்னி ஆகிறது. (தா. கார்பெட், **தனியாட்களது செல்வத்தின் காரணங்கள், முறைகள் பற்றிய ஆய்வு...**, லண்டன், 1841.) இரயில் போக்குவரத்து ஆணையத்தின் முன்னால் லிவர்பூல் வணிகர்கள் அளித்த சாட்சியத்தின் படி, 1865இல் தானியச் சேமிப்புச் செலவுகள் மாதம் ஒன்றுக்கு குவார்ட்டருக்கு சுமார் 2 பென்னி அல்லது டன் ஒன்றுக்கு 9 பென்னி அல்லது 10 பென்னி. (இரயில் போக்குவரத்து பற்றிய முடியரசு ஆணையம், 1867. சாட்சியம், பக்கம் 19, எண் 331.)

சரக்கிருப்பின் உருவாக்கத்துக்கு அவசியமாகிற சுற்றோட்டச் செலவுகள் யாவும் இருக்கிற மதிப்புகளை சரக்கு வடிவத்திலிருந்து பண வடிவத்துக்கு மாற்றுவதற்குக் காலம் தேவைப்படுவதாலேயே எழுகின்றன. அதாவது குறிப்பிட்ட சமூக வடிவத்திலிருந்தே எழுகின்றன. (உற்பத்திப் பொருள் சரக்காக அவதரிப்பதால் பணமாக உருமாற வேண்டியிருப்பதே இச்செலவுகளுக்குக் காரணம்). எனவே இந்தச் செலவுகள் முதலாம் தலைப்பில் கூறப்பட்ட சுற்றோட்டச் செலவுகளுக்குரிய அதே தன்மையையே பெறுகின்றன. மறு புறம், பயன்-மதிப்பை, உற்பத்திப் பொருளைக் குறிப்பிட்ட பொருளாயத நிலைமைகளில் இருக்கச் செய்து (இதற்கு மூலதனத்தைச் செலவிட வேண்டியதாகிறது), பயன்-மதிப்பின் மீது கூடுதல் உழைப்பைச் செயல்பட வைப்பதன் மூலமாகத்தான் சரக்குகளின் மதிப்பு பாதுகாக்கப்படுகிறது அல்லது கூடுதலாக்கப்படுகிறது. ஆனால் சரக்குகளின் மதிப்பைக் கணக்கிடுவதும் இந்நிகழ்முறைக்குத் தேவையான கணக்குப் பதிவும் மற்றும் வாங்கலும் விற்றலுமான செயல்களும் சரக்கு-மதிப்பின் உறைவிடமாகிய பயன்-மதிப்பை மாற்றுவதில்லை. இவை எல்லாம் சரக்கு-மதிப்பின் வடிவம் தொடர்பானவைதான். இங்கு தரப்பட்ட உதாரணத்தில்* சரக்கிருப்பாய் அமைவதற்கு (விரும்பியல்ல, கட்டாயத்தின் பேரில் இது நடைபெறுகிறது) ஆகும் செலவுகள், வடிவ மாற்றம் ஏற்படுவதிலான கால தாமதத்திலிருந்தும் இம்மாற்றத்துக்கான அவசியத்திலிருந்தும் எழுகிறவையே என்றாலும், இந்தச் செலவுகளுக்கும் முதலாம் தலைப்பில் எடுத்துரைக்கப்பட்ட செலவுகளுக்கும் ஒரு வேறுபாடு உள்ளது: இச்செலவுகளின் நோக்கம் உற்பத்திப் பண்டம், பயனுள்ள பொருள் என்ற முறையில் சரக்கில் உறையும் மதிப்பைப் பாதுகாப்பதே தவிர மதிப்பின் வடிவத்தை மாற்றுவதல்ல; மதிப்பைப் பாதுகாப்பதற்கான வழி உற்பத்திப் பண்டத்தை, பயன்-மதிப்பைப் பாதுகாப்பதே தவிர வேறு ஏதும் இல்லை. இப்படிப் பாதுகாப்பதால் பயன்-மதிப்பு உயருவதுமில்லை, அதிகரிப்பதுமில்லை. மாறாக அது குறையவே செய்கிறது. ஆனால் இந்தக் குறைவு கட்டுப்படுத்தப்பட்டு, பயன்-மதிப்பு பாதுகாக்கப்படுகிறது. முன்னீடு செய்யப்பட்டு இப்போது சரக்கில் அடங்கியிருக்கும் மதிப்பும் இதனால் அதிகரிக்கவில்லை. ஆனால் புதிய உழைப்பு—பொருள் உருக்கொண்டதும் உயிருள்ளதுமான புதிய உழைப்பு—சேர்க்கப்படுகிறது.

இந்தச் செலவுகள் எந்த அளவுக்குப் பொதுவான சரக்கு உற்பத்தியின் தனி இயல்பிலிருந்து எழுகின்றன, எந்த அளவுக்கு சரக்கு உற்பத்தியின் சர்வப் பொதுவான அறுதி வடிவத்திலிருந்து,

---

* அதாவது, அடிக்குறிப்பு 18இல் தரப்பட்ட கார்பெட்டின் கணக்கீடுகள்.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

அதாவது முதலாளித்துவச் சரக்கு உற்பத்தியிலிருந்து எழுகின்றன என்பதை இப்போது ஆராய்ந்திட வேண்டும். மறு புறம் இந்தச் செலவுகள் எந்த அளவுக்கு சமுதாயப் பொருளுற்பத்தி அனைத்துக்கும் பொதுவானவையாக இருந்து, முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் ஒரு தனி உருவம், ஒரு தனி வகை வெளித்தோற்றம் பெறுகின்றன என்பதையும் ஆராய்ந்திட வேண்டும்.

இருப்பின் உருவாதல் முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கே உரிய தனி விசேஷமாகும் என்ற அற்புதக் கருத்தை ஆதாம் ஸ்மித் கொண்டிருந்தார்.[19] மாறாக, முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சியைத் தொடர்ந்து இருப்பின் உருவாக்கம் குறைகிறது என்று சமீப காலத்திய பொருளாதார அறிஞர்கள் — எடுத்துக்காட்டாக லாலோர் — வலியுறுத்துகிறார்கள்.* சிஸ்மொந்தி இதனை முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் குறைகளில் ஒன்றாகக் கருதும் அளவுக்குச் செல்கிறார்.**

உண்மையில், இருப்புகள் மூன்று வடிவங்களில் இருக்கின்றன: திறனுடை-மூலதனம், சொந்த நுகர்வுக்கான நிதியம், சரக்கிருப்பு அல்லது சரக்கு-மூலதனம். இருப்பின் அளவு ஒரே சமயத்தில் மூன்று வடிவங்களிலுமே அறுதியாக அதிகரிக்கலாம் என்ற போதிலும், ஒரு வடிவத்தில் அதிகரிக்கும் போது இன்னொரு வடிவத்தில் ஒப்பளவில் குறைகிறது.

நேரடியாக உற்பத்தியாளரின் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும், சொற்ப அளவுக்கே பரிவர்த்தனை அல்லது விற்பனைக்காகவும் உற்பத்தி நடைபெறும் போதெல்லாம், எனவே சமுதாய உற்பத்திப் பண்டம் சரக்குகளாக வடிவெடுக்காத, அல்லது மிகச் சிறு அளவே அவ்வாறு வடிவெடுக்கிற போதெல்லாம், செல்வத்தின் அற்ப சொற்பப் பகுதியே சரக்குகளின் வடிவிலான இருப்பு அல்லது சரக்கிருப்பாக அமைகிறது. ஆனால் இங்கே நுகர்வுப் பண்ட நிதியம், குறிப்பாக முறையான வாழ்வுச் சாதனங்களாகிய சேர்ப்பு ஒப்பளவில் அதிகமாகும். பழங்கால விவசாயப் பொருளாதாரத்தைச் சற்றே நோக்கினால் இது விளங்கும். அங்கே உற்பத்தியில் மிகப் பெரும் பகுதி அதன் உடைமையாளரின் கையிலேயே இருப்பதால் சரக்கிருப்பு ஆகாமல் நேரடியாகவே உற்பத்திச் சாதன அல்லது வாழ்வுச் சாதன இருப்புகளாகி விடுகிறது. அது

---

19 புத்தகம் II., முன்னுரை [ஆ. ஸ்மித், நாடுகளது செல்வத்தின் இயல்பும் காரணங்களும் பற்றிய ஆய்வு. நான்கு பாகங்களாக ஒரு புதிய பதிப்பு, லண்டன், 1843, பாகம் II., பக்கம் 249-52. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.]

* பார்க்கவும்: ஜா. லாலோர், பணமும் அறநெறியும்: இக்காலத்துக்கான புத்தகம், லண்டன், 1852, பக்கம் 43, 44. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

** பார்க்கவும்: ழா. ஷா. லி. சிமொந்த் டெ சிஸ்மொந்தி, *Etudes sur l'economie politique*, பாகம் I., பிரசெல்ஸ், 1837, பக்கம் 49 முதலானவை. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

சரக்கிருப்பின் வடிவம் பெறுவதில்லை.. அதனால்தான் ஆதாம் ஸ்மித்தும் இந்தப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையிலமைந்த சமுதாயங்களில் இருப்பு என்ற ஒன்றே கிடையாது என்கிறார். அவர் இருப்பின் வடிவத்தை இருப்பு என்பதோடு போட்டுக் குழப்புகிறார். இது வரை சமுதாயம் அன்றாடங் காய்ச்சியாக வாழ்ந்ததாய் அல்லது நாளைய நற்பேற்றினை நம்பியிருந்ததாய் நினைக்கிறார்.[20] இது வெகுளித்தனமானது, தவறானது.

ஏற்கெனவே உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டிருக்கிற, அல்லது குறைந்தது உற்பத்தியாளரின் கையில் இருக்கிற, அதாவது ஏற்கெனவே உள்ளுறையாக உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டிருக்கிற உற்பத்திச் சாதனங்கள் திறனுடை-மூலதனத்தின் வடிவில் அமைந்த இருப்பாகும். உழைப்பினது உற்பத்தித் திறனின் வளர்ச்சியைத் தொடர்ந்தும், ஆகவே (முந்தைய பொருளுற்பத்தி முறைகள் எல்லாவற்றையும் விட உழைப்பின் சமுதாய அளவிலான உற்பத்தித் திறனை வெகுவாய் உயர்த்திடும்) முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் வளர்ச்சியைத் தொடர்ந்து, உற்பத்திச் சாதனத் திரள் (கட்டடங்கள், இயந்திர சாதனங்கள் முதலானவை) மேலும் மேலும் அதிகரிக்கிறது என்பதை முன்பே கண்டோம். இந்த உற்பத்திச் சாதனங்கள் உழைப்புச் சாதனங்களின் உருவில் உற்பத்தி நிகழ்முறையில் நிரந்தரமாய்ச் சேருகிறவை; அதில் நெடுங்காலமோ குறுங்காலமோ ஓயாமல் திரும்பத் திரும்பத் தம் பணியைப் புரிகிறவை. உற்பத்திச் சாதனத் திரளில் ஏற்படும் இந்த அதிகரிப்பு

---

[20] இருப்பு என்பதாக ஒன்று எழுவது, உற்பத்திப் பொருளானது சரக்காகவும், நுகர்வுப் பண்ட இருப்பு [consumption-supply] சரக்கிருப்பாகவும் மாற்றமடைந்ததன் பிறகே, இந்த மாற்றத்தின் காரணமாகவே, நடைபெறுவதாய் ஆதாம் ஸ்மித் தவறாக நினைத்துக் கொண்டு வாதாடுகிறார். அவர் நினைப்பதற்கு நேர் மாறாக, சுயதேவைப் பூர்த்திக்கான உற்பத்தியிலிருந்து சரக்கு உற்பத்திக்கு மாறிச் செல்லும் காலத்தில் மேற்கூறிய வடிவ மாற்றத்தால் உற்பத்தியாளர்களது பொருளாதாரத்தில் கடுமையான நெருக்கடிகள் மூர்க்கமாய் மூண்டன. எடுத்துக்காட்டாக இந்தியாவில் ''கண்டுமுதல் அமோகமாயிருந்த ஆண்டுகளில் சொற்ப விலைக்கு மேல் பெற முடியா விட்டாலுங்கூட தானியத்தைப் பெரிய அளவில் கையிருப்பில் சேர்த்து வைத்துக் கொள்ளும் ஆசை'' அண்மைக் காலம் வரை காணப்பட்டு வந்தது. (தகவலறிக்கை. வங்கத்திலும் ஒரிசாவிலும் ஏற்பட்ட பஞ்சம், காமன்ஸ் சபை, 1867, I., பக்கம் 230-31, எண் 74.) அமெரிக்க உள்நாட்டுப் போரின் விளைவாகப் பருத்தி, சணல் முதலானவற்றுக்கான வேண்டல் திடீரென்று அதிகரித்ததால், இந்தியாவில் பல பகுதிகளில் அரிசிச் சாகுபடி கடுமையாகச் சுருங்கியது; அரிசி விலை உயர்ந்ததும் உற்பத்தியாளர்கள் பழைய அரிசி இருப்புகளை விற்க நேரிட்டது. மேலும் 1864-66க்குப் பிறகு ஆஸ்திரேலியா, மடகாஸ்கர் முதலான நாடுகளுக்கு முன் எப்போதும் காணாத அளவில் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது. ஒரிசாவில் மட்டும் பத்து லட்சம் உயிர்களைப் பலிகொண்ட 1866ஆம் வருடத்திய கடும் பஞ்சத்துக்கான காரணம் இதிலிருந்து புலப்படும். (அதே அறிக்கை, 174, 175, 213, 214, III: பீகாரில் ஏற்பட்ட பஞ்சம் தொடர்பான ஆவணங்கள், பக்கம் 32,33; ''பழைய இருப்புகள் கரைந்து விட்டதானது'' பஞ்சத்திற்கான காரணங்களில் ஒன்றாக இங்கே வலியுறுத்திக் கூறப்படுகிறது.) (கையெழுத்துப் பிரதி II என்பதிலிருந்து.)

அதே போது உழைப்பின் சமுதாய அளவிலான உற்பத்தித் திறனில் ஏற்படும் வளர்ச்சியின் முதனிலையும் விளைவும் ஆகும் என்பதையும் பார்த்தோம். இந்த வடிவிலான செல்வம் அறுதியாக மட்டுமன்றி ஒப்பளவிலும் பெருகுவது (பார்க்கவும்: முதல் பாகம், அத்தியாயம் XXV., பிரிவு 2) யாவற்றுக்கும் முதலாய் முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு உரிய சிறப்பியல்பாகும். ஆனால் மாறா-மூலதனத்தின் பொருள் வடிவங்களாகிய உற்பத்திச் சாதனங்களில் அடங்குபவை இப்படிப்பட்ட உழைப்புச் சாதனங்கள் மட்டுமல்ல. ஆக்கத்தின் பல்வேறு கட்டங்களிலும் இருக்கக் கூடிய் மூலப் பொருட்கள், துணைப் பொருட்கள் ஆகியவையும் இவற்றில் அடங்கும். உற்பத்தியின் அளவுவீதம் விரிவடைந்து, கூட்டு-வேலை, உழைப்புப் பிரிவினை, இயந்திர சாதனம் முதலானவற்றின் மூலம் உழைப்பின் உற்பத்தித் திறன் உயருவதைத் தொடர்ந்து, அன்றாட மறுவுற்பத்தி நிகழ்முறையில் சேரும் கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்கள் முதலானவற்றின் அளவு அதிகரிக்கிறது. இந்த அடிக் கூறுகள் உற்பத்தி நடைபெறும் இடத்தில் தயாராயிருக்க வேண்டும். ஆகவே, திறனுடை-மூலதனத்தின் வடிவிலான இந்த இருப்பின் அளவு அறுதியாக அதிகரிக்கிறது. இந்த இருப்பை அன்றாடம் மாற்றீடு செய்ய முடிந்தாலும் சரி, குறிப்பிட்ட காலத்துக்கொரு முறை மட்டும் மாற்றீடு செய்ய முடிந்தாலும் சரி, நிகழ்முறை தொடர்ந்து நடைபெற வேண்டுமானால், உற்பத்தி நடைபெறும் இடத்தில் கச்சாப் பொருள் முதலானவை உதாரணமாய் நாள் தோறும் அல்லது வாரந்தோறும் தீர்ந்து போவதைக் காட்டிலும் எப்போதுமே அதிக அளவில் சேமிக்கப்பட்டிருக்க வேண்டும். உற்பத்தி நிகழ்முறை தடைபடாமல் தொடர்ந்து நடைபெற வேண்டுமானால், அதன் இன்றியமையாத் தேவைகள் தயாராயிருப்பதற்கு அன்றாடக் கொள்முதலில் ஏற்படக் கூடிய தடங்கலால் கேடு நேரக் கூடாது; உற்பத்திப் பண்டம் அன்றாடம் விற்கப்படுகிறதா, அல்லது வாராவாரம் விற்கப்படுகிறதா, ஆகவே அது தனது உற்பத்தியின் அடிக்கூறுகளாக மாற்றப்படுவதானது கால ஒழுங்கின்றிதான் நடைபெறுகிறதா என்பதைச் சார்ந்ததாகவும் இருக்கக் கூடாது. ஆனால் திறனுடை-மூலதனம் வெவ்வேறு விகிதாசாரங்களில் உள்ளுறை நிலையில் இருக்கலாம், அல்லது இருப்பாய் இருக்கலாம் என்பது தெளிவு. எடுத்துக்காட்டாக, நூற்பாலை அதிபர் பருத்தி அல்லது நிலக்கரி வகையில் மூன்று மாத காலத்துக்கு வேண்டிய இருப்பைக் கையில் வைத்துக் கொள்வதா, ஒரு மாதத்துக்கு வேண்டிய இருப்பைக் கையில் வைத்துக் கொள்வதா என்பதில் பெரிய வேறுபாடு இருக்கிறது. இந்த இருப்பு அறுதியாக அதிகரிக்கும் போதே ஒப்பளவில் குறையக் கூடும் என்பதைக் கூறத் தேவையில்லை.

இது பல்வேறு நிலைமைகளைப் பொறுத்ததாகும். நடைமுறையில்

இந்நிலைமைகள் கோருவது என்னவெனில், தடங்கல் ஏதும் இல்லா திருக்கும் பொருட்டு, தேவையான அளவில் கச்சாப் பொருள் துரித கதியிலும் ஒழுங்காகவும் நம்பகமான விதத்திலும் கிடைக்க வேண்டும் என்பதே. இந்த நிலைமைகள் எவ்வளவுக்கு எவ்வளவு குறைவாகக் கைகூடுகின்றனவோ, ஆகவே பொருட்கள் கிடைப்பதன் துரித கதியும் ஒழுங்கும் நம்பகத் தன்மையும் குறைகின்றனவோ, திறனுடை-மூலதனத்தின் உள்ளுறைப் பகுதி, அதாவது வேலையில் ஈடுபடுத்தப்படுவதற்காக உற்பத்தியாளரிடம் காத்திருக்க வேண்டிய கச்சாப் பொருள் போன்றவற்றின் இருப்பு அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாக வேண்டும். இந்த நிலைமைகள் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சி நிலைக்கும், ஆகவே உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறனின் வளர்ச்சி நிலைக்கும் எதிர் விகிதத்தில் இருக்கின்றன. எனவே இந்த வடிவிலான இருப்பும் இதே போல் எதிர் விகிதத்தில்தான் இருக்கிறது.

ஆயினும், இருப்பு குறைந்து விட்டதாக இங்கே தெரிவதானது (எடுத்துக்காட்டாக, லாலோருக்கு இப்படித்தான் தெரிகிறது), ஓரளவுக்கு சரக்கு-மூலதன வடிவிலான இருப்பின் குறைவே, அல்லது முறையான சரக்கிருப்பின் குறைவே தவிர வேறல்ல. எனவே இது குறிப்பிட்ட இருப்பின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம் தான். எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டில் நாள்தோறும் உற்பத்தியாகும் நிலக்கரியின் அளவும், ஆகவே நிலக்கரித் தொழிலினது செயற்பாட்டின் வீச்சும் மும்முரமும் அதிகமாக இருந்தால், நூற்பாளர் தமது உற்பத்தி தடைபடாமல் தொடர்ச்சியாக நடைபெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு நிலக்கரியைப் பெரிய அளவில் சேமிக்கத் தேவையில்லை. இருப்பில் உள்ளது குறையாமல் ஒழுங்காகவும் நிச்சயமாகவும் நிலக்கரி கிடைத்து வருவதால் பெரிய அளவிலான சேமிப்பு தேவையற்றதாகிறது. இரண்டாவதாக, ஒரு நிகழ்முறையின் உற்பத்திப் பொருள் எவ்வளவு துரிதமாய் இன்னொரு நிகழ்முறையின் உற்பத்திச் சாதனங்களாக மாற்றப்படுகிறது என்பது போக்குவரத்து மற்றும் தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியைப் பொறுத்தது. போக்குவரத்து மலிவாயிருப்பது இதற்கு மிகவும் முக்கியமானது. எடுத்துக்காட்டாக, போக்குவரத்து ஒப்பளவில் மலிவாய் இருக்குமானால், சுரங்கத்திலிருந்து நூற்பாலைக்கு திரும்பத் திரும்ப நிலக்கரி அனுப்புவதற்கு ஆகும் செலவு நீண்ட காலத்துக்கு அதிக அளவு நிலக்கரியைச் சேமித்து வைப்பதற்கு ஆகும் செலவை விடக் குறைவாய் இருக்கும். இங்கே பரிசீலிக்கப்பட்ட இவ்விரு நிலைமைகளும் உற்பத்தி நிகழ்முறையிலிருந்தே எழுகிறவை. மூன்றாவதாக, கடன்-செலாவணியின் வளர்ச்சிக்கும் ஒரு பங்குள்ளது. நூற்பாளர் தமக்கு வேண்டிய பருத்தி, நிலக்கரி முதலானவற்றின் இருப்பைப் புதுப்பித்துக் கொள்ள தமது நூலின் நேரடியான விற்பனையை எவ்வளவுக்கு எவ்வளவு குறைவாகச் சார்ந்திருக்கிறாரோ — கடன்-செலாவணி முறை வளர வளர இந்த நேரடிச்

சார்புநிலை குறைகிறது—இந்த இருப்புகள் ஒப்பளவில் அவ்வள வுக்கு அவ்வளவு சிறிதாய் இருந்து அந்நிலையிலும் நூல் உற்பத்தி குறிப்பிட்ட அதே அளவில் தொடர்ந்து நடைபெறும் படி, நூல் விற்பனையில் ஏற்படக் கூடிய இடர்பாடுகளால் இந்த உற்பத்தி தடைப்படாதவாறு உறுதி செய்து கொள்ள முடிகிறது. நான்காவ தாக, கச்சாப் பொருட்களையும் அரைகுறையாகவே பூர்த்தியான பண்டங்களையும் போன்ற பலவற்றின் உற்பத்திக்கு ஓரளவு அதிக காலம் தேவைப்படுகிறது. வேளாண்மையிலிருந்து கிடைக்கும் கச்சாப் பொருட்கள் எல்லாம் இப்படித்தான். உற்பத்தி நிகழ்முறை தடைபடக் கூடாதென்றால், தீர்ந்து போன பழைய உற்பத்திப் பொருட்களுக்கு பதில் புதிய உற்பத்திப் பொருட்கள் வர முடியாத காலம் முழுமைக்கும் தயாராய் இந்தக் காச்சாப் பொருட்கள் கையில் இருந்தாக வேண்டும். தொழில் துறை முதலாளியின் கையில் இந்த இருப்பு குறைவதானது சரக்கிருப்பின் வடிவில் வணிகரின் கையில் அது அதிகரிப்பதையே நிரூபிக்கிறது. எடுத்துக்காட்டாக, போக்கு வரத்துச் சாதனங்களின் வளர்ச்சி, உதாரணமாய் லிவர்பூலின் இறக்குமதிப் பண்டக சாலைகளில் கிடக்கும் பருத்தி துரிதமாக மான்செஸ்டருக்கு அனுப்பப்படுவதைச் சாத்தியமாக்குகிறது. ஆகவே, தொழிலதிபர், தேவைக்கேற்பவும் தேவைப்படும் போதும், ஒப்பள வில் சிறிது சிறிதாகவே தமது இருப்பைப் புதுப்பித்துக் கொண்டால் போதும் என்றாகிறது. ஆனால் அப்படி நிகழும் போது, பருத்தி யானது லிவர்பூல் வணிகர்களின் கையில் அந்த அளவுக்குக் கூடுத லான அளவுகளில் சரக்கிருப்பாய் இருந்து வருகிறது. ஆகவே இது இருப்பின் வடிவத்திலான ஒரு மாற்றமே தவிர வேறல்ல; லாலோ ரும் மற்றவர்களும் இதைக் கவனிக்கத் தவறி விடுகிறார்கள். சமு தாய மூலதனத்தைப் பார்ப்போமானால் இரு நேர்வுகளிலுமே ஒரே அளவு உற்பத்திப் பொருட்கள்தாம் இருப்பாய் அமைகின்றன. ஒரு நாட்டுக்கு உதாரணமாக ஓராண்டு காலத்துக்குத் தேவைப்படும் இருப்பின் அளவானது போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சிக் கேற்பக் குறைகிறது. அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே ஏராளமான பாய்மரக் கப்பல்களும் நீராவிக் கப்பல்களும் ஓடி னால், இங்கிலாந்து அதன் பருத்தி-இருப்பைப் புதுப்பித்துக் கொள் ளும் வாய்ப்புகள் கூடுதலாகின்றன. அதேபோது இங்கிலாந்தில் சேமித்து வைக்க வேண்டிய சராசரி அளவு குறைகிறது. உலகச் சந்தையின் வளர்ச்சியும், அதன் பயனாய் குறிப்பிட்ட பண்டத்தைப் பெறுவதற்கான தோற்றுவாய்கள் பல்கிப் பெருகுவதும் இதே விளைவையே உண்டாக்குகின்றன. பண்டமானது பல்வேறு நாடு களிலிருந்து பல்வேறு நேரங்களில் சிறிது சிறிதாக வந்து சேருகிறது.

## 2. முறையான சரக்கிருப்பு

முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் உற்பத்திப் பொருளானது

பொதுவாகச் சரக்கின் வடிவம் பெறுவதையும், இந்தப் பொருளுற்பத்தி பருமனிலும் ஆழத்திலும் வளர வளர மேலும் மேலும் இந் நிலைமை உறுதியாவதையும் முன்பே பார்த்தோம். ஆதலால், பொருளுற்பத்தியின் பரிமாணம் மாறாமல் அப்படியே இருக்கும் போதுங் கூட முந்தைய உற்பத்தி முறைகளுடனோ, அதிக வளர்ச்சி யடையாத கட்டத்திலுள்ள முதலாளித்துவ உற்பத்தி முறையுடனோ ஒப்பிடுகையில், உற்பத்திப் பொருட்களில் முன்னிலும் பெரும் பகுதியானது சரக்குகளின் வடிவில் இருக்கிறது. ஒவ்வொரு சரக்கும், எனவே ஒவ்வொரு சரக்கு-மூலதனமும்— இதுவும் சரக்குதான், ஆனால் மூலதன-மதிப்பின் நிலவல் வடிவமாய் இருக்கும் சரக்கு— அதன் உற்பத்தித் துறையை விட்டு வெளிப்பட்டதும் திறனுடை நுகர்வுக்கோ சொந்த நுகர்வுக்கோ உடனடியாகச் செல்லாமல் இடையில் சந்தையில் காத்திருக்க நேருமாயின், அது சரக்கிருப்பைச் சேர்ந்த ஒரு கூறாகி விடுகிறது. ஆகவே, உற்பத்தியின் பரிமாணம் மாறா திருந்தால், சரக்கிருப்பானது (உற்பத்திப் பொருளின் சரக்கு வடிவத்தை இப்படித் தனியாகப் பிரித்து நிலைப்படுத்துவது) முதலாளித்துவப் பொருளுற்பத்தியோடு கூட தானும் சேர்ந்து வளர்கிறது. இது இருப்பின் வடிவ மாற்றம்தான்; அதாவது உற்பத்தியையோ நுகர்வையோ நேரடி நோக்கமாகக் கொண்ட இருப்பு குறைவதால்தான் சரக்குகளின் வடிவிலான இருப்பு அதிகரிக்கிறது என்பதை மேலே பார்த்தோம். இது இருப்பின் சமூக வடிவத்திலான மாற்றமே தவிர வேறல்ல. அதே போது, சமுதாயத்தின் மொத்த உற்பத்திப் பண்டத்துடன் ஒப்பிடுகையில் சரக்கிருப்பின் ஒப்பீட்டுப் பருமன் அதிகமாவதோடு, அதன் அறுதிப் பருமனும் அதிகமாகிறது என்றால், முதலாளித்துவப் பொருளுற்பத்தியோடு சேர்ந்து உற்பத்திப் பண்டத்தின் மொத்த அளவும் அதிகமாவதே காரணம்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சியைத் தொடர்ந்து, உற்பத்தியின் அளவுவீதம் உற்பத்திப் பொருளுக்கான நேரடி வேண்டலால் நிர்ணயிக்கப்படும் நிலை மேலும் மேலும் குறைகிறது; தனிப்பட்ட முதலாளிக்குக் கிடைக்கக் கூடிய மூலதனத்தின் அளவாலும், அவரது மூலதனத்தின் உள்ளார்ந்த தற்பெருக்கத் துடிப்பாலும், உற்பத்தி நிகழ்முறை தடைபடாமல் தொடர்ந்து நடைபெறவும் விரிவடையவும் வேண்டிய தேவையாலும் உற்பத்தியின் அளவுவீதம் நிர்ணயிக்கப்படும் நிலை மேலும் மேலும் வளர்கிறது. குறிப்பிட்ட ஒவ்வொரு உற்பத்திக் கிளையிலும், வாங்குவோரை நாடிச் சந்தையில் இவ்வாறு சரக்குகளின் வடிவில் காத்திருக்கும் உற்பத்திப் பொருட்களின் திரள் தவிர்க்க முடியாதவாறு அதிகரிக்கிறது. சரக்கு-மூலதனத்தின் வடிவில் குறுகிய காலத்துக்கோ நீண்ட காலத்துக்கோ நிலையாக இருத்தப்படும் மூலதனத்தின் அளவு அதிகரிக்கிறது. எனவே, சரக்கிருப்பும் வளர்ந்து பெருகுகிறது.

முடிவில் சமுதாயத்தின் உறுப்பினர்களில் பெரும்பாலரார் கூலித்

தொழிலாளர்களாகி விடுகின்றனர். வாரக் கூலி பெற்று அன்றாடம் அதைச் செலவழிக்கிற அன்றாடங் காய்ச்சிகளாகி விடுகின்றனர். ஆகவே இருப்பின் வடிவில் அவர்களது வாழ்வுச் சாதனங்கள் அவர்களுக்குக் கிடைத்தாக வேண்டும். இந்த இருப்பைச் சேர்ந்த தனித் தனிப் பண்டங்கள் விரைந்து வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தாலும் எப்போதும் அவற்றில் ஒரு பகுதி தேங்கி நின்றால்தான் ஒட்டுமொத்தமாய் இருப்பு மாறிய வண்ணம் இருந்து வர முடியும்.

இந்தச் சிறப்பியல்புகள் எல்லாம் பொருளுற்பத்தியின் வடிவத்திலிருந்தும், அதற்கேற்பச் சுற்றோட்ட நிகழ்முறையில் உற்பத்திப் பொருள் அடைய வேண்டிய வடிவ மாற்றத்திலிருந்தும் எழுகிறவை.

உற்பத்திப் பொருட்களாலாகிய இருப்பின் சமூக வடிவம் எதுவானாலும், இதனைக் கெடாது காக்கும் பொருட்டு செலவு செய்தாக வேண்டும். உற்பத்திப் பொருளைச் சேமித்து வைப்பதற்கு வேண்டிய கட்டிடங்கள், கலன்கள் முதலானவற்றுக்கு முதலீடுகள் அவசியமாகின்றன; மற்றும் சேதம் ஏற்படாமல் காப்பதற்காக உற்பத்திப் பொருளின் தன்மையைப் பொறுத்து அதிகமாகவோ குறைவாகவோ உற்பத்திச் சாதனங்களும் உழைப்பும் தேவைப் படுவதால் அவற்றுக்காகவும் முதலீடுகள் அவசியமாகின்றன. இருப்பானது சமுதாய வழியில் எந்த அளவுக்கு குவிப்படைந்திருக்கிறதோ, ஒப்பளவில் இச்செலவுகள் அந்த அளவுக்குக் குறைகின்றன. இப்படி இந்த முதலீடுகளாகச் செலவாவது எப்போதுமே சமூக உழைப்பின் ஒரு பகுதியே ஆகும்—இந்த உழைப்பு பொருளாய் உருக்கொண்ட உழைப்பாகவோ, உயிருள்ள உழைப்பாகவோ இருக்கலாம். எனவே இந்த முதலீடுகள் முதலாளித்துவ வடிவத்தில் மூலதனத்தின் முதலீடுகளாகும். இவை உற்பத்திப் பண்டத்தின் ஆக்கத்தில் சேருகிறவை அல்ல என்பதால், உற்பத்திப் பண்டத்திலான குறைப்புகளாகின்றன. சமுதாயச் செல்வத்தின் திறனிலாச் செலவுகள் என்றாலும் இவை அவசியச் செலவுகள் ஆகும்; சமுதாய உற்பத்திப் பண்டத்தைப் பாதுகாப்பதற்கான செலவுகள் ஆகும். இந்த உற்பத்திப் பண்டம் சரக்கிருப்பின் கூறாவதற்கு உற்பத்தியின் சமூக வடிவமே, அதாவது சரக்கு வடிவமும் அதன் அவசிய மாற்றங்களுமே காரணமானாலும் சரி, சரக்கிருப்பை எல்லா சமுதாயங்களுக்கும் பொதுவான உற்பத்திப் பண்ட இருப்பின் தனி வடிவமாக மட்டும்—சுற்றோட்ட நிகழ்முறைக்குரிய குறிப்பிட்ட இருப்பு வடிவமான சரக்கிருப்பின் வடிவமாக அல்லவென்றாலும்—நாம் கருதுவது காரணமானாலும் சரி, மேற்கூறிய செலவுகள் சமுதாய உற்பத்திப் பண்டத்தைப் பாதுகாப்பதற்கு அவசியமான செலவுகள் ஆகும்.

இப்போது, இந்தச் செலவுகள் எந்த அளவுக்குச் சரக்குகளின் மதிப்பை உயர்த்துகின்றன என்ற கேள்வி எழுகிறது.

உற்பத்திச் சாதனங்களின் வடிவிலும் உழைப்புச் சக்தியின்

வடிவிலும் முன்னீடு செய்த மூலதனத்தை முதலாளி உற்பத்திப் பொருளாக மாற்றியிருக்கிறார்; விற்பனைக்குத் தயாராயிருக்கும் குறிப்பிட்ட அளவு சரக்குகளாக மாற்றியிருக்கிறார்; இந்தச் சரக்குகள் விற்கப்படாமல் இருப்பில் இருந்து வருமாயின், இந்தக் காலத்தில் அவரது மூலதன-மதிப்பின் தற்பெருக்க நிகழ்முறை தடைபட்டு நிற்கிறது என்பது மட்டுமல்ல. இந்த இருப்பைக் கெடாமல் பாதுகாப்பதற்கு கட்டடங்கள், கூடுதல் உழைப்பு போன்ற வகையில் ஆகும் செலவுகள் இழப்பைக் குறிக்கின்றன. முதலாளியானவர் முடிவில் வாங்க வருகிறவரை பார்த்து ''ஆறு மாத காலமாய் எனது சரக்குகளை விற்க முடியவில்லை; அவ்வளவு காலம் அவற்றைக் கெடாமல் பாதுகாத்து வைத்திருந்ததால் எனது இவ்வளவு மூலதனம் ஓய்ந்து கிடக்க நேர்ந்ததோடு, அதிகப்படியாக நான் இவ்வளவு செலவு செய்யும் படியும் ஆயிற்று'' என்று சொல்வாரானால், வாங்க வருகிறவர் சிரிக்கவே செய்வார். ''நஷ்டத்தை நீங்களேதான் ஏற்க வேண்டும்'' என்றுதான் அவர் சொல்வார். ''உங்களுக்குப் பக்கத்திலேயே வேறொருவர் விற்கிறார், பாருங்கள். அவருடைய பண்டங்கள் எல்லாம் நேற்று முன் தினம்தான் உற்பத்தி செய்யப் பட்டவை. ஆனால் உங்களுடைய பண்டங்கள் விலை போகாமல் இருந்து காலத்தால் விளையும் சேதங்களுக்கு உள்ளானவை. உங் களுடைய போட்டியாளரைக் காட்டிலும் குறைவான விலைக்கு நீங்கள் விற்றாக வேண்டும்.''

சரக்கு உற்பத்தியாளர் எனப்படுகிறவர் மெய்யாகவே சரக்கை உற்பத்தி செய்தவரா அல்லது முதலாளித்துவ உற்பத்தியாளர் தானா, அதாவது மெய்யான உற்பத்தியாளரின் பிரதிநிதியா என்பது அச்சரக்கின் நிலவலுக்கு வேண்டிய அவசிய நிலைமைகளை சிறிதும் பாதிப்பதில்லை. அவர் தமது உற்பத்திப் பண்டத்தைப் பணமாக மாற்ற வேண்டும். சரக்கின் வடிவில் உற்பத்திப் பண்டத்தை நிலைக்கச் செய்வதற்காக அவர் செய்ய வேண்டியிருக்கும் செலவுகள் அவரது தனிப்பட்ட ஊக வாணிப முதலீடுகளைச் சேர்ந்தவையாகும். சரக்கை வாங்குகிறவர் இவை குறித்துக் கவலைப் படத் தேவையில்லை. சரக்கை வாங்குகிறவர் சுற்றோட்டத் துறையில் அது செலவிடும் காலத்துக்காக விலை ஏதும் கொடுப்பதில்லை. மதிப்புகளில் திடீர் மாற்றம் உள்ளபடியே ஏற்படுகிற, அல்லது ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிற காலங்களில், முதலாளி வேண்டுமென்றே தமது சரக்குகளை விற்பனைக்காக சந்தைக்கு அனுப்பாமல் வைத்துக் கொள்ளும் போதும் கூட, கூடுதல் செலவுகளை மீட்டெடுக்க முடிகிறதா என்பது, மதிப்புகளிலான இந்தத் திடீர் மாற்றம் உள்ளபடியே ஏற்படுகிறதா என்பதையே, அவரது ஊகம் சரியானதுதானா என்பதையே பொறுத்திருக்கிறது. ஆனால் மதிப்புகளிலான திடீர் மாற்றம் ஏற்படுவது அவரது கூடுதல் செலவுகளால் ஏற்படும் விளைவல்ல. எனவே இருப்பு

உருவாவதால் சுற்றோட்டத்தில் தேக்கம் ஏற்பட்டு அதனால் எழும் செலவுகள் சரக்குகளின் மதிப்பைக் கூடுதலாக்குவதில்லை. மறு புறம் சுற்றோட்டத் துறையில் இருக்க வேண்டியிராமல் மூலதனம் அதன் சரக்கு வடிவில் அதிக காலமோ சிறிது காலமோ நீடிக்காமல் இருப்பு என்பதாக ஒன்று தோன்றவே முடியாது. பண வைப்பு ஒன்று உருவாகாமல் எப்படி பணம் சுற்றோட்டத்தில் செல்ல முடியாதோ, அதேபோல் சுற்றோட்டத்தில் ஒரு தேக்கம் ஏற்படாமல் இருப்பு என்பதாய் ஒன்று இருக்க முடியாது. எனவே, சரக்கு இருப்பு இல்லாமல் சரக்குச் சுற்றோட்டம் நடைபெற முடியாது. முதலாளி இந்த அவசியத்தை C′—M′ என்பதில் எதிர்ப்படவில்லை எனில், நிச்சயம் M — C என்பதில் எதிர்ப்படுவார்; அவரது சரக்கு-மூலதனம் தொடர்பாக எதிர்ப்படவில்லையானால், அவருக்கு உற்பத்திச் சாதனங்களையும் அவரது தொழிலாளர்களுக்கு வாழ்வுச் சாதனங்களையும் உற்பத்தி செய்து கொடுக்கும் ஏனைய முதலாளி களின் சரக்கு-மூலதனம் தொடர்பாக நிச்சயம் எதிர்ப்படுவார்.

சரக்கானது இருப்பாக அமைவது விருப்பத்தின் பேரிலா, கட்டாயத்தின் பேரிலா என்பது—அதாவது சரக்கு உற்பத்தியாளர் வேண்டுமென்றே இருப்பதாக இருக்கச் செய்கிறாரா அல்லது சுற்றோட்ட நிகழ்முறையின் நிலைமைகள் அவரது சரக்குகளின் விற்பனைக்கு எதிர்ப்பு காட்டுவதால் அவை இருப்பாகி விடுகின் றனவா என்பது—இங்கு சாராம்சத்தில் பாதிப்பு உண்டாக்கி விட முடியாது என்றே நினைக்கத் தோன்றும். எனினும் இப்பிரச் சினைக்குத் தீர்வு காண்பதற்கு விருப்பத்தின் பேரிலான இருப்பா வதற்கும் கட்டாயத்தின் பேரிலான இருப்பாவதற்கும் உள்ள வேறு பாட்டை அறிந்து கொள்வது பயனுடையதாக இருக்கும். கட்டா யத்தின் பேரிலான இருப்பு அமைவது சரக்கு உற்பத்தியாளரின் அறிவைச் சாராமலும், அவரது விருப்பத்துக்கு மாறாகவும் சுற் றோட்டத்தில் ஏற்படும் தேக்கத்திலிருந்து ஏற்படுகிறது, அல்லது அந்தத் தேக்கமாகிறது. விருப்பத்தின் பேரில் அமைகிற இருப்பின் குணாதிசயம் என்ன? இரு நிலைமைகளிலும் விற்பனையாளர் தமது சரக்கைச் சீக்கிரமாய் விற்பதில்தான் குறியாய் இருக்கிறார். எப் போதும் அவர் தம்மிடமுள்ள உற்பத்திப் பொருளைச் சரக்காக விற்கவே முயல்கிறார். விற்பனையிலிருந்து அதை அவர் விலக்கி வைப்பாராயின், அது சரக்கிருப்பின் உள்ளியல் (δυνάμει) கூறாகுமே தவிர உள்ளபடியான (ἐνεργείᾳ) கூறாக முடியாது. சரக்கானது அவருக்கு எப்போதுமே பரிவர்த்தனை-மதிப்பின் [exchange-value] உறைவிடமே அன்றி வேறல்ல. ஆகவே அது தனது சரக்கு வடிவத்தைக் களைந்து விட்டு பண வடிவம் பூணுவதன் மூலமும் அப்படிச் செய்த பிற்பாடும்தான் இத்தகைய உறைவிட மாகச் செயல்பட முடியும்.

குறிப்பிட்ட காலத்துக்கு வேண்டலை நிறைவு செய்ய வேண்டு

மானால், சரக்கிருப்பு குறிப்பிட்ட அளவுடையதாக இருக்க வேண்டும். வாங்குகிறவர்களின் வட்டம் மேலும் மேலும் விரிவடைவதன் அடிப்படையில் இது கணக்கிடப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு நாளைக்கு நீடிக்க வேண்டுமானால், சந்தையிலுள்ள சரக்குகளில் ஒரு பகுதி சரக்கு வடிவிலேயே இருக்க வேண்டும்; அதே போது எஞ்சிய பகுதி ஓயாது ஓடிப் பணமாக மாறுகிறது. தேங்கி நிற்கும் பகுதியும் ஓடிக் கொண்டிருக்கும் எஞ்சிய பகுதியும் மேலும் மேலும் குறையவே செய்கின்றன. இருப்பின் பருமனும் மேலும் மேலும் சிறிதாகி முடிவில் முற்றாக விற்றுப் போய் விடுகிறது. சரக்குகள் தேங்கி நிற்பது இவ்விதம் அவற்றின் விற்பனைக்கு வேண்டிய அவசிய நிலைமையாகிறது. தவிரவும் ஒரு நாளைக்கு வேண்டிய அளவானது சராசரி விற்பனை அல்லது சராசரி வேண்டலைக் காட்டிலும் அதிகமாய் இருக்க வேண்டும். இல்லையேல் இந்த சராசரிக்கும் அதிகமானதை நிறைவு செய்ய முடியாது. மறு புறம் இருப்பிலிருந்து திரும்பத் திரும்ப எடுக்கப்படுவதால் அது ஓயாமல் புதுப்பிக்கப்பட வேண்டும். முடிவாகப் பார்க்கையில் உற்பத்தியிலிருந்துதான், சரக்கின் வழங்கலிலிருந்துதான் இருப்பை இப்படிப் புதுப்பிக்க முடியும். இது வெளி நாட்டிலிருந்து வந்தாலும் சரி, உள் நாட்டில் இருந்தாலும் சரி, எல்லாம் ஒன்றுதான். புதுப்பித்தல், சரக்குகளின் மறுவுற்பத்திக்குத் தேவைப்படும் கால அளவுகளைப் பொறுத்தது. சரக்கிருப்பு இந்தக் காலம் முழுவதற்கும் நீடித்தாக வேண்டும். அது ஆரம்ப உற்பத்தியாளரின் கையில் நீடித்திருக்காமல், பல்வேறு சேமிப்பகங்கள் வழியே செல்வதாலும், மொத்த வியாபாரியிடமிருந்து சில்லறை வியாபாரியிடம் செல்வதாலும், புறத் தோற்றம் மாறுகிறதே தவிர இயல்பு மாறுவதில்லை. இரண்டு நிலைகளிலும், சரக்குகள் திறனுடை நுகர்வையோ சொந்த நுகர்வையோ சென்றடையும் வரையில், சமுதாயத்தின் கண்ணோட்டத்தில் மூலதனத்தில் ஒரு பகுதி சரக்கிருப்பின் வடிவிலேதான் இருந்தாக வேண்டியிருக்கிறது. உற்பத்தியாளர் சராசரியாக அவருக்கு வரும் வேண்டலுக்கு ஏற்ற அளவில் இருப்பாக வைத்துக் கொள்ள முயலுகிறார், அப்போதுதான் அவரால் நேரடியாக உற்பத்தியைச் சாராதிருந்து, எக்காலத்திலும் தொடர்ந்து தமக்கு வாடிக்கையாளர்கள் கிடைக்குமாறு உறுதி செய்து கொள்ள முடியும். சரக்குகள் உற்பத்தியாகிற காலங்களுக்கு இசைவாகக் கொள் முதல் காலங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. சரக்குகள் அதே வகையைச் சேர்ந்த புதிய சரக்குகள் மாற்றீடாக வந்து சேரும் வரை அதிக காலத்துக்கோ குறுகிய காலத்துக்கோ இருப்புகளாய் அமைகின்றன. இவ்விதம் இருப்புகள் அமைக்கப்படுவதால்தான், சுற்றோட்ட நிகழ்முறையும், ஆகவே இந்நிகழ்முறையும் உள்ளடங்கிய மறுவுற்பத்தி நிகழ்முறையும் ஓயாமல் தொடர்ச்சியாய் நடந்தேறுமாறு உறுதி செய்யப்படுகிறது.

C சந்தையிலிருக்கும் போதே அதன் உற்பத்தியாளருக்கு C′–M′ நிறைவேறி விட முடியும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். உற்பத்தியாளர் தமது சரக்குகள் இறுதியான நுகர்வாளரிடம் விற்கப் படும் வரை அவற்றை இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டியிருந் தால், அவர் இரு மூலதனங்களை — சரக்கு உற்பத்தியாளராக ஒன்றையும் வணிகராக ஒன்றையும் — இயக்க வேண்டி ஏற்படும். சரக்கைப் பொறுத்த வரை, அதை நாம் தனிப்பட்ட சரக்காகக் கருதினாலும் சரி, சமுதாய மூலதனத்தின் அடக்கக் கூறாகக் கருதினா லும் சரி, இருப்பாக அமைவதற்கு ஆகும் செலவுகளை அதன் உற் பத்தியாளர் ஏற்றாலும் ஒன்றுதான், வரிசையாகப் பல வணிகர்கள் ஏற்றாலும் ஒன்றுதான்.

சரக்கிருப்பானது உற்பத்திப் பொருளின் சரக்கு வடிவமே என்ப தாலும், சமுதாயப் பொருளுற்பத்தியின் குறிப்பிட்ட வளர்ச்சி நிலையில் இந்தச் சரக்கானது சரக்கிருப்பாய் அமையவில்லை என் றால், அது திறனுடை இருப்பாகவோ (உள்ளுறை உற்பத்தி-நிதிய மாகவோ), அல்லது நுகர்வு-நிதியமாகவோ (நுகர்வுச் சாதனங்களின் சேம வைப்பாகவோ) தான் இருக்கும் என்பதாலும், கெடாமல் இதனைப் பாதுகாப்பதற்காகச் செய்ய வேண்டிய செலவுகள், அதாவது இருப்பாக அமைவதற்கு ஆகும் செலவுகள் — இதன் பொருட்டுச் செலவாகும் பொருளுருக் கொண்ட உழைப்பு அல்லது உயிருள்ள உழைப்பு — உற்பத்திக்கான அல்லது நுகர்வுக்கான சமு தாய நிதியத்தை வைத்துக் காப்பதற்கு ஆகும் செலவுகளே தவிர வேறல்ல. வெவ்வேறு வகைப் பண்டங்களுக்கும் இச்செலவுகள் வெவ்வேறாய் இருக்கின்றன. பண்டங்களின் மதிப்பில் இவற்றால் ஏற்படும் அதிகரிப்பானது, இச்செலவுகளை சரிசம வீதத்தில் வெவ்வேறு சரக்குகளிடையே பகிர்ந்தளிக்கிறது. இருப்பாக அமை வதற்கு ஆகும் செலவுகள் சமுதாயச் செல்வம் நிலவுவதற்கு அத்தியா வசியமானவை என்ற போதிலும், எப்போதும் போல் இப் போதும் சமுதாயச் செல்வத்திலான குறைப்புகளாகவே இருக் கின்றன.

சரக்கிருப்பானது சரக்குச் சுற்றோட்டத்தின் முதனிலையாய் இருந்து, அதே போது சரக்குச் சுற்றோட்டத்திலிருந்து தவிர்க்க முடியாதவாறு எழும் ஒரு வடிவமாகவும் இருக்கிற அளவுக்குத் தான் — பணச் சேமிப்பாக அமைவது பணச் சுற்றோட்டத்தின் முதனிலையாகவும் இருப்பது போல, தேங்கி நிற்பதாகத் தெரிகிற இருப்பானது இவ்விதம் இயக்கத்தின் வடிவமாகவும் இருக்கிற அளவுக்குத்தான் — இப்படித் தேங்கியிருப்பது இயல்பானதாகிறது. சுற்றோட்டக் களஞ்சியங்களில் தேங்கியிருக்கும் சரக்குகள் அதி வேகமாய் அடுத்தபடி வரும் உற்பத்தி அலைவீச்சுக்கு இடமளிக்காமல் களஞ்சியங்கள் நிரம்பி வழியுமானால் சுற்றோட்டத்தில் ஏற்படும் தேக்கத்தின் விளைவாகச் சரக்கிருப்பு விரிவடைகிறது — பணச்

சுற்றோட்டத்தில் தேக்கம் ஏற்பட்டால் பணச் சேர்ப்புகள் பெருகும் அல்லவா, அதே போல, இந்தத் தேக்கம் தொழில் துறை முதலாளியின் பண்டக சாலையில் ஏற்பட்டாலும், வணிகரின் கிடங்குகளில் நிகழ்ந்தாலும் எல்லாம் ஒன்றுதான். இந்நிலையில் சரக்கிருப்பானது சரக்குகள் விலைபோகாததன் விளைவாகுமே தவிர, தடங்கலற்ற விற்பனைக்கு அவசியத் தேவையாய் இருப்பதல்ல. செலவுகள் ஒன்றுதான்; ஆனால் இப்போது இவை முழுக்க முழுக்க வடிவத்திலிருந்து எழுகிறவை, அதாவது சரக்குகளைப் பணமாக மாற்ற வேண்டிய அவசியத்திலிருந்தும் இந்த உருமாற்றம் நடந்தேறுவதிலுள்ள இடர்ப்பாட்டிலிருந்தும் எழுகிறவை என்பதால், இவை சரக்குகளின் மதிப்பில் சேருவதில்லை, மாறாக மதிப்பின் ஈடேற்றத்திலான குறைப்புகளாகின்றன, மதிப்பிழப்புகளாகின்றன. இயல்பான இருப்பும் இயல்பற்ற இருப்பும் வடிவத்தில் வேறுபடாததாலும், இரண்டுமே சுற்றோட்டத்தில் ஏற்படும் அடைப்புகளாய் இருப்பதாலும் குழப்படியை உண்டாக்குகின்றன. உற்பத்தியின் இயக்கிகளே ஏமாற நேர்கிறது. உற்பத்தியாளரிடமிருந்து வணிகர்களிடம் கைமாறிச் சென்று விட்ட சரக்குகளின் சுற்றோட்டம் தடைபட்டுத் தேங்கி நிற்கும் போது கூட அவரது மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தோன்றுவதால் அவர் ஏமாறுவதற்கு வாய்ப்பு இன்னும் அதிகமாகி விடுகிறது. மற்றவை சமமாய் இருக்க, உற்பத்தியும் நுகர்வும் பெருகிச் செல்லுமானால், அவற்றோடு சேர்ந்து சரக்கிருப்பும் பெரிதாகிச் செல்கிறது. அவை பெருகும் அதே வேகத்தில் அதுவும் புதுப்பிக்கப்பட்டும் உட்கிரகிக்கப்பட்டும் வருகிறது, அதேபோது அதன் பருமன் மேலும் மேலும் பெரிதாகிறது. சரக்கிருப்பின் பருமன் அதிகரித்துச் செல்வதற்கு, சுற்றோட்டம் தடைபட்டுத் தேங்குவதே காரணம் என்ற போதிலும், மறுவுற்பத்தி நிகழ்முறை விரிவடைவதன் அறிகுறியாய் இந்த அதிகரிப்பு தவறாகக் கருதப்படலாம். குறிப்பாக, கடன்-செலாவணியின் வளர்ச்சியானது மெய்யான இயக்கம் புலனாகாத படி மருமத் திரையிடுவதால் இப்படித் தவறாகக் கருத மேலும் அதிக வாய்ப்பு உண்டாகிறது.

இருப்பாக அமைவதற்கு ஆகும் செலவுகளாவன: 1) உற்பத்திப் பொருட்களது திரளின் அளவுப் பரிமாணம் குறைதல் (எடுத்துக்காட்டாக மாவு இருப்பில் ஏற்படும் குறைவு); 2) தரம் கெடுதல்; 3) இருப்பு கெடாத படி பாதுகாப்பதற்குத் தேவைப்படும் பொருளுருக் கொண்ட உழைப்பும் உயிருள்ள உழைப்பும்.

## III. போக்குவரத்துச் செலவுகள்

*சிப்பங் கட்டுதல், வகை பிரித்தல் போன்ற எல்லாவித சுற்றோட்ட* செலவு விவரங்களையும் இங்கு ஆராயத் தேவையில்லை. **சரக்கின்**

வடிவ மாற்றத்திலிருந்து மட்டும் எழும் சுற்றோட்டச் செலவுகளில் எதுவும் அதன் மதிப்பைக் கூடுதலாக்குவதில்லை என்பது பொது விதி. மதிப்பின் ஈடேற்றத்துக்கு, அதாவது அதனை ஒரு வடிவத்தி லிருந்து இன்னொரு வடிவத்துக்கு மாற்றுவதற்கு ஆகும் செலவு களே இவை. இவற்றுக்காக செலவிடப்படும் மூலதனம் (அதன் மேலாண்மைக்கு உட்படும் உழைப்பும் இதில் அடங்கும்) முதலாளித் துவப் பொருளுற்பத்தியின் திறனிலாச் செலவினத்தைச் சேர்ந்தது. இச்செலவுகளை உபரி-உற்பத்தியிலிருந்து ஈடு செய்ய வேண்டும்; முதலாளி வர்க்கம் முழுவதையும் எடுத்துக் கொண்டால், இச்செலவு கள் உபரி-மதிப்பு அல்லது உபரி-உற்பத்தியைக் குறையச் செய்கின் றன. தொழிலாளி தமது வாழ்வுச் சாதனங்களை வாங்குவதற்குச் செலவிடும் நேரம் எப்படி அவருக்கு நேர இழப்பாகிறதோ, அது போலத்தான் இதுவும். ஆனால் போக்குவரத்துச் செலவுகள் மிக முக்கியப் பங்கு வகிப்பதால் இங்கு அதைப் பற்றிச் சுருக்கமாகச் சிலவற்றைக் கூறியாக வேண்டும்.

மூலதனச் சுற்றின் போதும் அந்தச் சுற்றின் ஒரு பகுதியாகிய சரக்கு-உருமாற்றத்தின் போதும், சமுதாய உழைப்பினால் பருப் பொருள்-பரிமாற்றம் [interchange of matter] நடைபெறுகிறது. இந்தப் பொருள்-பரிமாற்றத்திற்கு உற்பத்திப் பொருட்களின் இட மாற்றம் தேவைப்படலாம்; அவை மெய்யாகவே ஓர் இடத்தி லிருந்து இன்னோர் இடத்துக்குப் பெயர்ந்து செல்ல வேண்டியிருக்க லாம். ஆயினும், சரக்குகள் இடம் பெயராமலே அவற்றின் சுற் றோட்டம் நடைபெற முடியும். சரக்குச் சுற்றோட்டம் இல்லாமலே, ஏன், உற்பத்திப் பொருட்களின் நேரடிப் பரிவர்த்தனை இல்லா மலுங்கூட, உற்பத்திப் பொருட்களின் போக்குவரத்து நடைபெற முடியும். Bஇடம் A விற்கிற வீடு சரக்காகச் சுற்றோட்டத்தில் சென்ற போதிலும், இடம் பெயர்ந்து செல்வதில்லை. இடம் பெயர்ந்து செல்லக் கூடிய சரக்கு-மதிப்புகளாகிய பருத்தி, தேனிரும்பு போன் றவை எத்தனையோ பல சுற்றோட்ட நிகழ்முறைகளில் ஈடுபட்டுக் கொண்டும், ஊக வணிகர்கள் அவற்றை வாங்கிக் கொண்டும் விற்றுக் கொண்டும் இருக்கும் ஒரு நேரத்தில், அவை அசைவற்று ஒரே கிடங்கிலேயே குவிந்து கிடக்கலாம்.[21] இங்கு இடம் விட்டு இடம் செல்வது சரக்குகளின் உடைமையிலான உரிமைப் பத்திரமே தவிர சரக்குகள் அல்ல. இதற்கு மாறாக, இங்காக்களது [the Incas] நாட்டில் பொருட்களின் போக்குவரத்து முக்கியப் பாத்திரம் வகித் தது, ஆனால் சமுதாய உற்பத்திப் பண்டம் அங்கே சரக்காய்ச் சுற்றோட்டத்தில் செல்லவுமில்லை, பண்டமாற்றின் மூலம் வினி யோகமாகவுமில்லை.

---

[21] ஸ்டோர்ஹ் இதனை "circulation factice" (கற்பிதச் சுற்றோட்டம்) என் கிறார்.

ஆகவே போக்குவரத்துத் தொழிலானது [transportation industry] முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையில் அமையும் போது, சுற்றோட்டச் செலவுகளுக்கு அதுவேதான் காரணம் என்பதாகத் தோன்றிய போதிலுங்கூட, இந்தத் தனி வகைத் தோற்றத்தால் உண்மை நிலவரம் எவ்விதத்திலும் மாறி விட வில்லை.

போக்குவரத்தால் உற்பத்திப் பொருட்கள் அளவில் அதிக மாவதில்லை. அவற்றின் இயற்கையான இயல்புகளில் ஏற்படக் கூடிய மாற்றம் எதுவும், ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர்த்து, போக்குவரத்தால் ஏற்படுவதில்லை. விரும்பத்தக்க பயனை அது விளைவிப்பதாகவும் இல்லை. தவிர்ப்பதற்கு வழி ஏதும் இல்லாத தீமையாய் அதை ஏற்க வேண்டி வருகிறது. பண்டங்களின் பயன்-மதிப்பு ஈடேற்றம் பெறுவது அவற்றின் நுகர்வால்தான். அவற்றை நுகர்வதற்காக அவற்றின் இடப் பெயர்ச்சி அவசியமாகலாம். போக்குவரத்துத் தொழிலில் கூடுதலாய் இதற்கு உற்பத்தி நிகழ் முறை தேவைப்படலாம். திறனுடை-மூலதனம் இத்தொழிலில் முதலீடு செய்யப்பட்டு, இம்மூலதனம் போக்குவரத்து செய்யப்படும் பண்டங்களின் மதிப்பை உயர்த்துகிறது. இந்த மதிப்புயர்வில் ஒரு பகுதி போக்குவரத்துச் சாதனங்களிலிருந்து பெயர்க்கப்படும் மதிப்பிலிருந்தும், இன்னொரு பகுதி போக்குவரத்தில் புரியப்படும் உழைப்பு படைக்கிற மதிப்பிலிருந்தும் வருபவை. இரண்டாவதாகச் சொல்லப்பட்ட மதிப்பானது, எல்லாவிதமான முதலாளித்துவப் பொருளுற்பத்தியிலும் எப்படியோ அதே போல கூலிக்கும் உபரி-மதிப்புக்குமான மாற்றீடாய் அமைவதாகும்.

ஒவ்வோர் உற்பத்தி நிகழ்முறையிலும் உழைப்பின் இலக்குப் பொருள், அவசியமான உழைப்புச் சாதனங்கள், உழைப்புச் சக்தி ஆகியவற்றின் இட மாற்றம் முக்கியப் பங்காற்றுகிறது. பஞ்சானது வாரும் கூடத்திலிருந்து நூற்புக் கொட்டிலுக்குக் கொண்டு செல்லப் படுவதையும், நிலக்கரியானது சுரங்கக் குழியிலிருந்து தரை மட்டத் துக்கு ஏற்றப்படுவதையும் உதாரணமாய்க் குறிப்பிடலாம். பூர்த்தி யான உற்பத்திப் பொருள் பூர்த்தியான சரக்கு என்ற முறையில் ஓர் உற்பத்திக் களத்திலிருந்து தொலைவிலமைந்த மற்றோர் உற்பத்திக் களத்துக்கு மாறிச் செல்லும் போதும் இதுவேதான் இன்னும் பெரிய அளவில் நடைபெறக் காண்கிறோம். அதோடு, உற்பத்திப் பொருட் கள் ஓர் உற்பத்தி நிறுவனத்திலிருந்து மற்றொன்றுக்குப் போக்கு வரத்தின் மூலம் மாற்றப்படுகையில், பூர்த்தியான உற்பத்திப் பண் டங்கள் உற்பத்தித் துறையிலிருந்து நுகர்வுத் துறைக்குச் செல்கின் றன. இந்த இடமாற்றங்கள் எல்லாம் முடிந்த பிறகுதான் உற்பத்திப் பொருள் நுகர்வுக்குத் தயாராய் இருக்கிறது.

உழைப்பின் உற்பத்தித் திறனும், அதனால் படைக்கப்படும் மதிப்பும் எதிர் விகிதத்தில் இருப்பவை—இது சரக்கு உற்பத்தியின்

பொது விதி என்பதை முன்பே பார்த்தோம். வேறெந்தத் தொழிலையும் போலவே போக்குவரத்துத் தொழிலுக்கும் இது பொருந்தும். ஒரு சரக்கை குறிப்பிட்ட தூரத்துக்கு போக்குவரத்தின் மூலம் அனுப்ப எவ்வளவுக்கு எவ்வளவு குறைந்த உழைப்பு—உயிரற்ற உழைப்பும் உயிருள்ள உழைப்பும்—தேவைப்படுகிறதோ, உழைப்பின் உற்பத்தித் திறன் அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாகும்; உற்பத்தித் திறன் எவ்வளவுக்கு எவ்வளவு குறைவாயிருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிக உழைப்பு தேவைப்படுகிறது.[22]

போக்குவரத்தானது சரக்குகளுக்குச் சேர்த்திடும் மதிப்பின் அறுதிப் பருமன், மற்ற நிலைமைகள் மாறாதிருக்க, போக்குவரத்துத் தொழிலின் உற்பத்தித் திறனுக்கு எதிர் விகிதத்திலும் பயணம் செய்யும் தூரத்துக்கு நேர் விகிதத்திலும் உள்ளது.

மற்ற நிலைமைகள் மாறாதிருக்க, போக்குவரத்துச் செலவுகள் சரக்குகளின் விலைகளோடு சேர்த்திடும் மதிப்புப் பகுதி, அவற்றின் பரிமாணத்துக்கும் எடைக்கும் நேர் விகிதத்திலும், அவற்றின் மதிப்புக்கு எதிர் விகிதத்திலும் இருப்பதாகும். ஆனால் பல்வேறு நிலைமைகளாலும் இதில் திருத்தம் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, பண்டங்கள் எந்த அளவுக்கு உடையவும் அழியவும் வெடிக்கவும் கூடியனவாய் இருக்கின்றன என்பதைப் பொறுத்து, போக்குவரத்தின் போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், எனவே உழைப்பு, உழைப்புச் சாதனங்களின் செலவீடும் அதிகமாகவோ குறைவாகவோ தேவைப்படுகின்றன. இரயில்வே மன்னர்கள் விசித்திரமான இனராசிகளைக் கண்டுபிடிப்பதில் தாவரவியல் அறிஞர்களையும் விலங்கியல் அறிஞர்களையும் விஞ்சி விடுகிறார்கள். உதாரணமாக,

---

[22] போக்குவரத்துச் செலவுகளைக் கொண்டு வாணிபமானது உற்பத்திப் பொருட்களின் விலை அல்லது மதிப்பை அதிகமாக்குகிறது, வாணிபத்தின் நன்மைகளில் இதுவும் ஒன்றெனக் கருதுபவர் ஸே. அவரை ரிக்கார்டோ மேற்கோள் காட்டுகிறார். ஸே எழுதுகிறார்: "சரக்கை அது கிடைக்கிற இடத்தில் பெறவும், அதனை நுகர வேண்டிய இன்னோரிடத்துக்குக் கொண்டுவரவும் வாணிபம் நமக்கு உதவுகிறது; ஆகவே அதற்கு முதலாவது இடத்தில் இருக்கும் விலைக்கும், இரண்டாவது இடத்தில் இருக்கும் விலைக்கும் இடையிலான முழு வேறுபாட்டின் அளவுக்கு சரக்கின் விலையைக் கூடுதலாக்கிடும் சக்தியை அது நமக்கு அளிக்கிறது." [ழா. ப. ஸே, *Traite d' economie politique,* மூன்றாம் பதிப்பு, பாரிஸ், 1817, பாகம் II., பக்கம் 433.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.] இது குறித்து ரிக்கார்டோ சொல்கிறார்: "மெய்தான், ஆனால் இந்தக் கூடுதல் மதிப்பு அதற்கு எப்படிக் கிடைக்கிறது? முதலாவதாக வாகனாதிச் செலவுகளையும், இரண்டாவதாக வணிகர் முன்னீடு செய்யும் மூலதனத்தின் மீதான இலாபத்தையும், உற்பத்திச் செலவோடு சேர்த்துக் கூட்டுவதன் வாயிலாகவே கிடைக்கிறது. சரக்கு அதிக மதிப்புடையதாய் இருக்குமானால் காரணம் ஒன்றே ஒன்றுதான்; ஏனைய ஒவ்வொரு சரக்கும் அதிக மதிப்புடையதாய் இருக்குமானால் அதற்கு என்ன காரணமோ அதே காரணம் தான்: அதனை நுகர்வாளர் வாங்குவதற்கு முன்னால் அதன் உற்பத்திக்காகவும் இடப்பெயர்ச்சிக்காகவும் அதிக உழைப்பு செலவிடப்பட்டிருக்கிறது என்ற காரணம்தான். இதை வாணிபத்தின் நன்மைகளில் ஒன்றாகக் குறிப்பிடக் கூடாது." (ரிக்கார்டோ, *அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள்,* 3ஆம் பதிப்பு, லண்டன், 1821, பக்கம் 309, 310.)

ஆங்கிலேய இரயில்வே நிறுவனத்தில், சரக்குகளின் வகைப் பட்டியல் பல புத்தகங்களை நிரப்பப் போதுமானது. சரக்குகளின் பல வாறான இயற்கை இயல்புகளை அத்தனைப் போக்குவரத்து இடர்களாக்கி, மோசடிக் கட்டணங்கள் விதிப்பதற்கு அவற்றை முகாந்தரமாக்க முயல்வதே இந்தப் பட்டியலின் நோக்கம். "கண்ணாடி முன்பெல்லாம் கிரேட்டுக்கு £11 பெறுமானமுடையதாய் இருந்தது; உற்பத்தி முறைகளில் ஏற்பட்ட மேம்பாடுகளாலும், தீர்வை ரத்தானதாலும் இப்போது அதன் பெறுமானம் £2தான். ஆனால் வாகனக் கட்டணம் மட்டும் மாறாமல் முன்போலவே இருக்கிறது. கால்வாய் வழியாகக் கொண்டுசெல்வதானால் கட்டணம் முன்னை விட அதிகரித்திருக்கிறது. குழாய்த் தொழிலுக்கு வேண்டிய கண்ணாடியையும் கண்ணாடிப் பொருட்களையும் பர்மிங்காமிலிருந்து 50 மைலுக்குள் முன்பெல்லாம் டன்னுக்கு சுமார் 10 ஷில்லிங் கட்டணத்தில் கொண்டுசென்றதாகத் தொழிலதிபர்கள் தெரிவிக்கிறார்கள். இப்போது, உடைந்து போகும் ஆபத்தை முன்னிட்டு விதிக்கப்படும் கட்டணம் இந்தத் தொகையைப் போல் மூன்று மடங்காகும்; உடைந்து போவதை நாம் ஏற்க முடியாதுதான்....உடைந்தவற்றுக்கு இழப்பீடு கேட்டால் இரயில்வே நிறுவனங்கள் எப்போதுமே எதிர் வழக்காடுகின்றன."[23] போக்குவரத்துச் செலவுகளால் ஒரு பண்டத்துக்குச் சேர்க்கப்படும் மதிப்புப் பகுதி அதன் மதிப்புக்கு எதிர் விகிதத்தில் இருப்பதால், இரயில்வே மன்னர்கள் பண்டங்களுக்கு அவற்றின் மதிப்புக்கேற்ப நேர் விகிதத்தில் கட்டணம் விதிப்பதற்கு இதனைத் தனிக் காரணமாக்கிக் கொள்கின்றனர். இது குறித்து தொழிலதிபர்களும் வணிகர்களும் தெரிவிக்கும் புகார்களை மேலே மேற்கோளாய்த் தரப்பட்ட அறிக்கையில் இடம் பெற்றுள்ள சாட்சியத்தில் பக்கத்துக்குப் பக்கம் காணலாம்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையானது போக்குவரத்து மற்றும் தொடர்புச் சாதனங்களை வளர்ச்சி பெறச் செய்வதன் மூலமும், அதே போல் போக்குவரத்தை ஒன்றுகுவியச் செய்வதன் மூலமும்—அதாவது அதன் அளவுவீத்த்தை அதிகமாக்குவதன் மூலமும்—தனிப்பட்ட சரக்கிற்கான போக்குவரத்துச் செலவுகளைக் குறைக்கிறது. முதலாவதாக உற்பத்திப் பொருட்களில் மிகப் பெரும்பாலானவற்றைச் சரக்குகளாக மாற்றுவதன் மூலமும், இரண்டாவதாக உள்ளூர்ச் சந்தைகளுக்கு பதில் தொலைதூரச் சந்தைகளை ஏற்படுத்துவதன் மூலமும், சரக்குப் போக்குவரத்துக்காகச் செலவிடப்படும் சமுதாய உழைப்புப் பகுதியை—உயிருள்ள உழைப்பு, பொருளுருக் கொண்ட உழைப்பு இரண்டையுமே—கூடுதலாக்குகிறது.

சரக்குகளின் சுற்றோட்டம், அதாவது உள்ளபடியே அவை

---

[23] இரயில்வேக்கள் பற்றிய முடியரசு ஆணையம், பக்கம் 31, எண் 630.

இடம் விட்டு இடம் செல்வது சரக்குகளின் போக்குவரத்தாகிறது. போக்குவரத்துத் தொழிலானது ஒரு புறம் சுயேச்சையான உற்பத்திக் கிளையாகவும், இவ்விதம் திறனுடை-மூலதனத்தின் முதலீட்டுக்கு ஒரு தனித் துறையாகவும் அமைகிறது. மறு புறம் உற்பத்தி நிகழ்முறையானது சுற்றோட்ட நிகழ்முறையின் உள்ளும், சுற்றோட்ட நிகழ்முறைக்கு ஆகவும் தொடர்ந்து நீடிப்பதாகத் தெரிவதானது இந்தத் தொழிலுக்குரிய தனிச் சிறப்பாகும்.

பகுதி II

# மூலதனப் புரள்வு

## அத்தியாயம் VII

## புரள்வுக் காலமும் புரள்வுகளின் எண்ணிக்கையும்

குறிப்பிட்ட மூலதனத்தின் முழுப் புரள்வுக் காலம் என்பது அதன் சுற்றோட்டக் காலத்தையும் அதன் உற்பத்திக் காலத்தையும் கூட்டி வருவதாகும் என்று பார்த்தோம். மூலதன-மதிப்பு குறிப்பிட்ட வடிவத்தில் முன்னீடு செய்யப்படுவது முதல் உரிய பணி புரிந்து அதே வடிவத்துக்கு மீள்வது வரையிலான காலத்தையே புரள்வுக் காலம் என்கிறோம்.

முன்னீடு செய்யப்படும் மதிப்பைக் கொண்டு உபரி-மதிப்பைப் படைப்பதே எப்போதும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பிரதானக் குறி. இந்த மதிப்பு அதன் சுயேச்சை வடிவமாகிய பண வடிவிலும் முன்னீடு செய்யப்படலாம்; சரக்குகளாகவும் முன்னீடு செய்யப்படலாம். சரக்குகளாக முன்னீடு செய்யப்படும் போது அச்சரக்குகளது விலையின் வாயிலான அதன் மதிப்பு வடிவம் கருத்தியலாகவே சுயேச்சையானது. பணமாக முன்னீடு செய்யப்பட்டாலும், சரக்குகளாக முன்னீடு செய்யப்பட்டாலும், இந்த மூலதன-மதிப்பு அதன் சுழல் இயக்கத்தின் போது பல்வேறு நிலவல் வடிவங்களைக் கடந்து செல்கிறது. அது முதலாளியின் பேரேட்டுக் குறிப்பாக, அதாவது கணக்குப் பணமாக தன்னை இனங்காட்டிக் கொள்கிறது.

நாம் M ... M′ என்ற சுற்றை எடுத்துக் கொண்டாலும் P ... P என்ற சுற்றை எடுத்துக் கொண்டாலும், தாத்பரியம் இதுதான்: (1) முன்னீடு செய்யப்படும் மதிப்பு மூலதன-மதிப்பாகச் செயல்படுகிறது, உபரி-மதிப்பைப் படைக்கிறது; (2) நிகழ்முறையைப் பூர்த்தி செய்த பிறகு, நிகழ்முறையின் தொடக்கத்தில் பூண்டிருந்த வடிவத்துக்கு மீள்கிறது. முன்னீடு செய்யப்படும் மதிப்பான M தற்பெருக்கம் அடைவதும், அதே போது மூலதனம் இந்த வடிவத்துக்கு (பண வடிவத்துக்கு) மீள்வதும் M ... M′ என்ற சுற்றில் வெளிப்படையாகத் தெரிகின்றன. இரண்டாவது வகைச் சுற்றிலும் இதுவே நடைபெறுகிறது. ஏனெனில் Pஇன் தொடக்க முனை என்பது உற்பத்தி-அடிக் கூறுகள், அதாவது குறிப்பிட்ட மதிப்புடைய சரக்குகள் தயாராய்

இருத்தலாகும். இந்த மதிப்பு தற்பெருக்கம் அடைவதும் (C′ மற்றும் M′) ஆரம்ப வடிவத்துக்கு மீள்வதும் சேர்ந்ததாகும் இச்சுற்று. ஏனென்றால் மூலதன-மதிப்பு ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட்ட போது பூண்டிருந்த வடிவத்துக்கு—உற்பத்தி-அடிக்கூறுகளின் வடிவத்துக்கு—மீள்வதையே இரண்டாவது P குறிக்கிறது.

முதல் பாகத்தில் நாம் பார்த்தோம்: "உற்பத்தியானது முதலாளித்துவ வடிவமுடையதாய் இருந்தால், மறுவுற்பத்தியும் அவ்வாறே இருக்கும். உழைப்பு நிகழ்முறையானது எப்படி உற்பத்தியில் மூலதனத்தின் தற்பெருக்கத்துக்கான வழிவகையாகவே இடம் பெறுகிறதோ, அதே போல மறுவுற்பத்தியில் முன்னீடு செய்யப்படும் மதிப்பை மூலதனமாக—அதாவது தற்பெருக்கமடையும் மதிப்பாக—மறுவுற்பத்தி செய்வதற்கான வழிவகையாகவே இடம் பெறுகிறது." (முதல் பாகம், அத்தியாயம் XXIII., பக்கம் 761.)

(I) M ... M′, (II) P ... P, (III) C′ ... C′ ஆகிய மூன்று வகைச் சுற்றுகளும் பின்வரும் வேறுபாடுகளை வெளிப்படுத்துகின்றன: P ... P என்ற இரண்டாம் வகைச் சுற்றில், நிகழ்முறையின் மறுநிகழ்வு, அதாவது மறுவுற்பத்தி நிகழ்முறை ஒரு மெய்ந்நடப்பாகத் தெரிவிக்கப்படுகிறது; முதலாம் வகைச் சுற்றில் இது ஒரு சாத்தியப்பாடாகவே தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இவ்விரு வகைச் சுற்றுகளிலும், முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பு—பணமாகவோ, உற்பத்தியின் பொருட் கூறுகளாகவோ முன்னீடு செய்யப்படுவது—தொடக்க முனையாகவும், ஆகவே மீள்வு முனையாகவும் கூட விளங்குகிறது; இது இவ்விரு சுற்றுகளுக்கும் மூன்றாம் வகைச் சுற்றுக்கும் உள்ள வேறுபாடு ஆகும். M ... M′ என்ற சுற்றில் மீள்வாகிய M′=M+m. நிகழ்முறை அதே அளவுவீதத்தில் திரும்ப நடைபெற்றால், M மீண்டும் தொடக்க முனையாகிறது; m அதில் சேருவதில்லை; M ஆனது மூலதனம் என்ற முறையில் தற்பெருக்கமடைந்து இவ்விதம் m என்னும் உபரி-மதிப்பைப் படைத்துள்ள போதிலும், அந்த உபரி-மதிப்பை உதறி விட்டது என்பதையே இது காட்டுகிறது. இதே போல், P ... P என்ற சுற்றிலும், உற்பத்தி அடிக்கூறுகளின் வடிவில் முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பான P தொடக்க முனையாக விளங்குகிறது. இந்த மூலதன-மதிப்பின் தற்பெருக்கமும் இச்சுற்றில் அடங்கும். சாமானிய மறுவுற்பத்தி நடைபெற்றால், அதே மூலதன-மதிப்பு அதே நிகழ்முறையை P என்னும் அதே வடிவில் திரும்பத் தொடக்குகிறது. மூலதனத் திரட்டல் நடைபெற்றால் பெருக்கமடைந்த மூலதன-மதிப்பு என்ற முறையில் P′ ஆனது (இது மதிப்புப் பருமனில் M′ அல்லது C′க்குச் சமம்) நிகழ்முறையைத் திரும்பத் தொடக்குகிறது. இருப்பினும் ஆரம்ப வடிவில் முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்புடன் தான்—முன்னை விட அதிக மதிப்புடன் என்றாலும் கூட—நிகழ்முறை ஆரம்பமாகிறது. மாறாக, மூன்றாம் வகைச் சுற்றிலும்

நிகழ்முறையைத் தொடக்கும் மூலதன-மதிப்பு முன்னீடு செய்யப் படும் மூலதன-மதிப்பு அல்ல; அது ஏற்கெனவே பெருக்கமடைந்த மூலதன-மதிப்பு ஆகும்; சரக்குகளின் வடிவில் இருக்கிற மொத்தச் செல்வமாகும்; முன்னீடு செய்யப்பட்ட மூலதன-மதிப்பு இச்செல் வத்தின் ஒரு பகுதியே ஆகும். இந்த மூன்றாம் வகைச் சுற்று இந்த நூலின் (இரண்டாம் பாகத்தின்) பகுதி IIIக்கு முக்கியமானது; அங்கே தனிப்பட்ட மூலதனங்களின் இயக்கத்தை மொத்த 'சமுதாய மூல தனத்தின் இயக்கத்தோடு தொர்டர்புபடுத்தி ஆராய்கிறோம். இந்த மூன்றாம் வகைச் சுற்றை மூலதனப் புரள்வுக்குப் பயன்படுத்த முடி யாது. ஏனென்றால் எப்போதுமே மூலதனப் புரள்வு என்பது பண வடிவிலோ சரக்கு வடிவிலோ மூலதன-மதிப்பை முன்னீடு செய்வதி லிருந்து ஆரம்பமாவது ஆகும். சுற்றிச் செல்லும் மூலதன-மதிப்பு முன்னீடு செய்யப்பட்ட வடிவத்துக்கே மீள்வது எப்போதுமே மூல தனப் புரள்வுக்கு அவசியமாகும். முதலாம் வகைச் சுற்றையும் இரண் டாம் வகைச் சுற்றையும் எடுத்துக் கொள்வோமானால், பிரதானமாக உபரி-மதிப்பின் படைப்பின் மீது புரள்வின் தாக்கத்தை ஆராய் வதில் முதலாவதும், உற்பத்திப் பொருளின் படைப்பின் மீது புரள் வின் தாக்கத்தை ஆராய்வதில் இரண்டாவதும் பயனுள்ளவை.

பொருளாதார அறிஞர்கள் அரிதாகவே வெவ்வேறு வகைச் சுற்றுகளையும் வேறுபடுத்திக் காட்டுகிறார்கள்; அரிதாகவே மூல தனப் புரள்வோடு தொடர்புபடுத்தி அவற்றைத் தனித் தனியாக ஆராய்கிறார்கள். பெரும்பாலும் அவர்கள் M ... M′ என்ற சுற் றைப் பரிசீலிக்கிறார்கள்; ஏனென்றால் இவ்வகைச் சுற்றுதான் தனிப்பட்ட முதலாளியிடம் விஞ்சி நிற்கிறது; பணம் கணக்குப் பணத்தின் வடிவிலேயே தொடக்க முனையாக அமைந்தாலும் கூட இவ்வகைச் சுற்றுதான் அவரது கணக்கீடுகளுக்கு உதவுகிறது. ஒரு சில பொருளாதார அறிஞர்கள் உற்பத்தி-அடிக்கூறுகளின் வடி விலான முதலீட்டிலிருந்து தொடங்கி வரவு வரப்பெறும் கட்டம் வரை செல்கிறார்கள்; இந்த வரவின் வடிவத்தை—சரக்குகளாக வருகிறதா, பணமாக வருகிறதா என்பதை—அவர்கள் குறிப் பிடுவது கூட இல்லை. எடுத்துக்காட்டாக, "பொருளாதாரச் சகடம் என்பது ... உற்பத்தியின் முழுப் பாதை; முதலீடு செய்யும் நேரத்திலிருந்து வரவு வரப்பெறுவது வரையிலானது. வேளாண்மை யில் விதைப்பு அதன் தொடக்கம். அறுவடை அதன் முடிவு. சா. பி. நியூமன், *அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள்*, ஆண்டோவர் மற்றும் நியூயார்க், பக்கம் 81. வேறு சிலர் C′இலிருந்து ஆரம்பிக்கிறார்கள் (மூன்றாம் வகைச் சுற்று): தா. சால்மர்ஸ் *அரசியல் பொருளாதாரம் பற்றி* என்ற நூலில்—2ஆம் பதிப்பு, கிளாஸ்கோ, 1832, பக்கம் 85—சொல்கிறார்: "வர்த்தக உலகம் சுழன்று இயங்குவதாகக் கொள்ளலாம்; இந்தச் சுழல் இயக்கத்தைப் பொருளாதாரச் சகடம் என்போம். இச்சகடம்

அதன் தொடர்வரிசையான பரிமாற்றங்களின் வழியாகச் சென்று புறப்பட்ட முனைக்கே மீள்வது தொழிலின் ஒரு சுழற்சியைக் குறிக்கிறது. முதலாளியின் மூலதனத்துக்கு மாற்றீடாக வரும் வரவு வரப் பெறும் கட்டத்திலிருந்து அது தொடங்குவதாகக் கணக்கிடலாம்: அவர் இதிலிருந்து மீண்டும் தொடங்கி தொழிலாளர்களைத் திரும்பவும் வேலைக்கு அமர்த்துகிறார்; கூலியின் உருவில் அவர்களது பராமரிப்பை, பார்க்கப் போனால் அதனை அடைவதற்கான சக்தியை அவர்களிடையே வினியோகிக்கிறார்; அவர்களிடமிருந்து பூர்த்தியான உற்பத்திப் பொருட்களை — தாம் செய்து விற்கும் விசேஷமான பண்டங்களை — பெறுகிறார்; இந்தப் பண்டங்களைச் சந்தைக்குக் கொண்டுசென்று, விற்று, விற்றுமுதலின் உருவில் அக்காலத்திய முதலீடுகள் அனைத்துக்குமான வரவைப் பெறுவதன் மூலம் ஓர் இயக்கத் தொகுதியின் சுற்றை முடிக்கிறார்.

தனிப்பட்ட முதலாளி ஏதேனும் ஓர் உற்பத்திக் கிளையில் முதலீடு செய்யும் மூலதன-மதிப்பு முழுவதும் அதன் சுற்றினை நிகழ்த்தி முடிக்கும் போது அதன் ஆரம்ப வடிவத்துக்கே திரும்பி வருகிறது; இப்போது அதே நிகழ்முறையை அதனால் திரும்ப நிகழ்த்த முடியும். அப்படித் திரும்ப நிகழ்த்தினால்தான் மதிப்பு மூலதன-மதிப்பாக நீடிக்கவும் உபரி-மதிப்பைப் படைக்கவும் முடியும். ஒரு தனிப்பட்ட சுற்று என்பது மூலதனத்தின் வாழ்வில் திரும்பத் திரும்ப நடைபெறும் நிகழ்முறைதான், கால வட்டம்தான். M ... M′ என்னும் கால வட்டத்தின் முடிவில் மூலதனம் மீண்டும் பண-மூலதன வடிவம் பெறுகிறது; அதன் மறுவுற்பத்தி அல்லது தற்பெருக்க நிகழ்முறையாகிய வடிவ மாற்றங்களின் தொடரை மீண்டும் கடக்கிறது. P ... P என்னும் கால வட்டத்தின் முடிவில், மூலதனம் மீண்டும் அதன் உற்பத்தி-அடிக்கூறுகளின் வடிவம் பெறுகிறது; இந்த அடிக்கூறுகள் அதன் சுற்று மீண்டும் நிகழ்வதற்கு வேண்டிய முதனிலையாகும். மூலதனச் சுற்று தனிப்பட்ட செயலாக அல்லாமல் காலவட்ட நிகழ்முறையாகக் கொள்ளப்படும் போது, அதனை மூலதனப் புரள்வு என்கிறோம். இந்தப் புரள்வுக்கு ஆகும் காலம் என்பது உற்பத்திக்கும் சுற்றோட்டத்துக்கும் ஆகும் காலங்களைக் கூட்டி வருவதாகும். இந்தக் கூட்டுத்தொகையே மூலதனத்தின் புரள்வுக் காலமாகும். இவ்வாறு இது மொத்த மூலதன-மதிப்பின் ஒரு சுற்றுக் காலத்துக்கும் அடுத்ததற்கும் உள்ள இடைக் காலத்தை அளவிடுகிறது; மூலதனத்தின் வாழ்வில் காணப்படும் கால வட்ட முறைமையை, அல்லது வேறு விதமாகச் சொன்னால், ஒரே மூலதன-மதிப்பின் தற்பெருக்க நிகழ்முறை அல்லது உற்பத்தி நிகழ்முறை மீண்டும் நடைபெறுவதற்கு வேண்டிய காலத்தை அளவிடுகிறது.

குறிப்பிட்ட சில மூலதனங்களின் புரள்வுக் காலத்தைத் துரிதப் படுத்தக் கூடிய அல்லது குறுக்கக் கூடிய தனிப்பட்ட சாகசங்களை

ஒதுக்கி விடுவோமானால், இந்தப் புரள்வுக் காலம் வெவ்வேறு முதலீட்டுத் துறைகளிலும் வெவ்வேறாகிறது.

வேலை-நாள் என்பது உழைப்புச் சக்தியின் பணியை அளவிடு வதற்கான இயற்கை அலகாவது போலவே ஆண்டு என்பது செயல் படும் மூலதனத்தின் புரள்வுகளை அளவிடுவதற்கான இயற்கை அலகாகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பிறப்பிட மாகிய மிதமான தட்பவெப்ப மண்டலத்தில் மிக முக்கியப் பயிர்கள் வருடாந்தரப் பயிர்களாய் இருப்பது இந்த அலகிற்கான இயற்கை அடிப்படை ஆகும்.

புரள்வுக் காலத்தை அளவிடும் அலகாகிய ஆண்டை T என் றும், குறிப்பிட்ட மூலதனத்தின் புரள்வுக் காலத்தை t என்றும், அதன் புரள்வுகளின் எண்ணிக்கையை n என்றும் குறிப்போமா னால், $n=\frac{T}{t}$. எடுத்துக்காட்டாக புரள்வுக் காலமான $t=3$ மாதம் என்றூல், $n=\frac{12}{3}=4$. மூலதனம் ஆண்டுக்கு நான்கு முறை புரள் கிறது. $t = 18$ மாதம் என்றால், $n = \frac{12}{18} = \frac{2}{3}$; அதாவது மூலதனம் அதன் புரள்வில் மூன்றிலிரு பாகத்தை ஓராண்டில் முடிக்கிறது. புரள்வுக் காலம் பல்லாண்டுகளாக இருப்பின் ஓராண்டின் மடங்கு களாகக் கணக்கிடப்படுகிறது.

முதலாளியைப் பொறுத்த வரை, அவரது மூலதனத்தின் புரள்வுக் காலம் என்பது, அவர் தமது மூலதனத்தை முன்னீடு செய்து, அதைக் கொண்டு உபரி-மதிப்பைப் படைத்து, அம்மூல தனத்தை அதன் ஆரம்ப உருவில் திரும்பப் பெறுவதற்குத் தேவைப் படும் காலமாகும்.

உற்பத்தி நிகழ்முறை மீதும் தற்பெருக்க நிகழ்முறை மீதும் புரள் வின் தாக்கத்தை இன்னும் நெருங்கி ஆராய்வதற்கு முன்னால், மூலதனத்தின் இரு புதிய வடிவங்களை நாம் பரிசீலிக்க வேண்டும். இவ்வடிவங்கள் சுற்றோட்ட நிகழ்முறையின் பயனாய் மூலதனத் துக்குக் கிடைப்பவை, அதன் புரள்வின் வடிவத்தை பாதிப்பவை.

## அத்தியாயம் VIII

# நிலை-மூலதனமும் சுழல்-மூலதனமும்

### I. வடிவ வேறுபாடுகள்

மாறா-மூலதனத்தின் ஒரு பகுதி, அதன் துணை கொண்டு உற்பத்தி செய்யப்படும் பண்டங்களின் வடிவத்தை அடைந்து விடாமல் உற்பத்தி நிகழ்முறையின் தொடக்கத்தில் பெற்றிருந்த அதே பயன் வடிவத்தில் தொடர்ந்து நீடிக்கிறது. (முதல் பாகம், அத்தியாயம் VIII.) எனவே, ஓயாமல் திரும்பத் திரும்ப நடைபெறும் உழைப்பு நிகழ்முறைகளில் நீண்ட காலமோ குறுகிய காலமோ அது தனக்குரிய அதே பணிகளை மீண்டும் மீண்டும் புரிகிறது. எடுத்துக் காட்டாக ஆலைக் கட்டடங்கள், இயந்திரங்கள் முதலானவற்றை—சுருங்கச் சொல்லின் **உழைப்புச் சாதனம்** [instrument of labour] என்று அழைக்கப்படும் ஒவ்வொன்றையும்—குறிப்பிடலாம். மாறா-மூலதனத்தின் இந்தப் பகுதி அதன் பயன்-மதிப்போடு கூடவே இழக்கிற பரிவர்த்தனை-மதிப்புக்கேற்ற விகிதத்தில் உற்பத்திப் பொருளுக்கு மதிப்பைக் கொடுக்கிறது. மதிப்பின் இந்த ஒப்படைப்பு, அதாவது இத்தகையதோர் உற்பத்திச் சாதனத்தின் மதிப்பு அதன் துணைகொண்டு படைக்கப்படும் உற்பத்திப் பொருளுக்கு இவ்விதம் பெயர்க்கப்படுகிற அளவானது சராசரிகளைக் கணக்கிடுவதன் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது. உற்பத்திச் சாதனம் உற்பத்தி நிகழ்முறையில் இறங்கும் தருணத்திலிருந்து அது முழுமையாகப் பயன்பட்டுத் தீர்ந்து போய், அதே வகையைச் சேர்ந்த புதிய சாதனத்தால் மாற்றீடு செய்யப்படுகிற, அல்லது மறுவுற்பத்தியாகிற தருணம் வரையிலான அதன் ஆயுட் காலத்தைக் கொண்டு அளவிடப்படுகிறது.

ஆக, மாறா-மூலதனத்தின் இந்தப் பகுதிக்குரிய, முறையான உழைப்புச் சாதனங்களுக்குரிய விசேஷத் தன்மை இதுதான்:

மூலதனத்தின் ஒரு பகுதி மாறா-மூலதனத்தின் வ்டிவில், அதாவது உற்பத்திச் சாதனங்களின் வடிவில் முன்னீடு செய்யப்படுகிறது;

இவ்வுற்பத்திச் சாதனங்கள், உழைப்பு நிகழ்முறையில் ஈடுபடும் போது பெற்றிருக்கும் சுயேச்சையான பயன் வடிவத்தை இழக்காதுள்ள வரை, அந்நிகழ்முறையின் காரணிகளாகச் செயல்படுகின்றன. பூர்த்தியான உற்பத்திப் பொருள் — எனவே உற்பத்திப் பொருளாக மாறியுள்ள வரையில் அதன் உற்பத்தி-அடிக்கூறுகளும் கூட — உற்பத்தி நிகழ்முறையிலிருந்து வெளியேற்றப்பட்டு, சரக்காக உற்பத்தித் துறையிலிருந்து சுற்றோட்டத் துறைக்குச் செல்கிறது. ஆனால் உழைப்புச் சாதனங்கள் உற்பத்தித் துறைக்கு வந்த பின், அத்துறையை விட்டு விலகுவதில்லை. அவை புரியும் பணி அவற்றை அத்துறையிலேயே இருத்தி விடுகிறது. முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பின் ஒரு பகுதி இவ்வடிவில் இவ்விதம் **நிலைத்து** நிற்கிறது; இது உற்பத்தி நிகழ்முறையில் உழைப்புச் சாதனங்கள் புரியும் பணியால் நிர்ணயிக்கப்படும் வடிவமாகும். உழைப்புச் சாதனங்கள் இவ்விதம் பணி புரிந்து தேய்மானமடைவதன் மூலம், அவற்றின் மதிப்பில் ஒரு பகுதி உற்பத்திப் பொருளுக்குப் போய்ச் சேருகிறது; அதே போது மறு பகுதி உழைப்புச் சாதனங்களிலும், இவ்வாறு உற்பத்தி நிகழ்முறையிலும் நிலைத்திருக்கிறது: இவ்விதம் நிலைத்திருக்கும் மதிப்பு மேலும் மேலும் குறைந்து சென்று முடிவில் உழைப்புச் சாதனம் அடியோடு தேய்ந்து விடுகிறது. குறுகிய காலமோ நீண்ட காலமோ தொடர்ந்து திரும்பத் திரும்ப நடைபெறும் வரிசையான பல உழைப்பு நிகழ்முறைகளிலிருந்து அவதரிக்கும் உற்பத்திப் பொருட்களின் திரளுக்கு அதன் மதிப்பு வினியோகமாகி விடுகிறது. ஆனால் ஓர் உழைப்புச் சாதனம் பயன் வாய்ந்ததாய் இருந்து வரும் வரை, அதே வகையைச் சேர்ந்த புதிய சாதனம் அதனை மாற்றீடு செய்யும் தேவை ஏற்படாத வரை, குறிப்பிட்ட அளவு மாறா-மூலதன மதிப்பு அவற்றில் நிலைத்திருக்கிறது; அதே போது ஆரம்பத்தில் அதில் நிலைபெற்ற மதிப்பின் மறு பகுதி உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படுகிறது; இவ்விதம் சரக்கிருப்பின் அடக்கக் கூறாகச் சுற்றியோடுகிறது. ஓர் உழைப்புச் சாதனம் எவ்வளவு அதிக காலம் நீடித்திருக்கிறதோ, எவ்வளவு மெதுவாகத் தேய்மானமுறுகிறதோ, அவ்வளவு அதிக காலம் அதன் மாறா-மூலதன மதிப்பு இந்தப் பயன் வடிவத்தில் நிலைத்திருக்கிறது. ஆனால் அது எவ்வளவுதான் நீடித்திருக்கக் கூடியதாய் இருந்தாலும், அது மதிப்பைப் பெயர்க்கும் விகிதாசாரம் அது பணி புரியும் ஒட்டுமொத்தக் கால அளவுக்கு எப்போதுமே எதிர் விகிதத்தில் இருக்கிறது. சம மதிப்புடைய இரு இயந்திரங்களை எடுத்துக் கொள்வோம்; ஒன்று ஐந்தாண்டு காலத்திலும், மற்றொன்று பத்தாண்டு காலத்திலும் தேய்மானமுற்று அழிகிறது என்றால் குறிப்பிட்ட கால அளவில் முதலாவது இயந்திரம் இரண்டாவதைப் போல் இரு மடங்கு மதிப்பைப் பெயர்த்திடுகிறது.

மூலதன-மதிப்பின் ஒரு பகுதி உழைப்புச் சாதனத்தில் நிலைத்திருக்கிறது அல்லவா, இந்தப் பகுதியும் மூலதன-மதிப்பின் வேறு

எந்தப் பகுதியையும் போலவே சுற்றியோடுகிறது. அனைத்து மூல தன-மதிப்பும் ஓயாமல் சுற்றியோடுகிறது என்றும், இந்த அர்த்தத் தில் அனைத்து மூலதனமும் சுழல்-மூலதனமே என்றும் பொது வாகப் பார்த்தோம். ஆனால் இப்போது நாம் ஆராய்ந்து கொண் டிருக்கும் மூலதனப் பகுதியின் சுற்றோட்டம் விசேஷமான ஒன்று. முதலாவதாக, அதன் பயன் வடிவிலேயே அது சுற்றியோடவில்லை; அதன் மதிப்புதான் சுற்றியோடுகிறது; சரக்காகச் சுற்றியோடும் உற்பத்திப் பொருளுக்கு அதன் மதிப்பு போய்ச் சேருவதற்கு ஏற்ப, சன்னம் சன்னமாக, பையப் பைய இது நடைபெறுகிறது. உழைப் புச் சாதனத்தின் செயற் காலம் முழுவதிலும் அது அதன் துணை கொண்டு உற்பத்தி செய்யப்படும் சரக்குகளிலிருந்து வேறாக இருந்து வரும் வரை, எப்போதுமே அதன் மதிப்பின் ஒரு பகுதி அதில் நிலைத்திருக்கிறது. இந்த விசேஷத் தன்மைதான் மாறா-மூலதனத் தின் இந்தப் பகுதியை **நிலை-மூலதனம்** [fixed capital] என்னும் வடிவம் பெறச் செய்கிறது. உற்பத்தி நிகழ்முறையில் முன்னீடு செய் யப்படும் மூலதனத்தின் ஏனைய பொருட் கூறுகள் எல்லாம், இந்த நிலை-மூலதனத்துக்கு மாறாக, **சுற்றியோடும் மூலதனம்** அல்லது **சுழல்-மூலதனம்** [circulating or fluid capital] ஆகின்றன.

சில உற்பத்திச் சாதனங்கள் உற்பத்திப் பொருளில் தசைப் பிண்டமாய்ச் சேருவதில்லை. துணைப் பொருட்கள் இவ்வகைப் பட்டவையே. இவை, நீராவிப் பொறி செயல்படுகையில் அது உட் கொள்ளும் நிலக்கரி போல், உழைப்புச் சாதனங்கள் செயல்படுகை யில் அவை உட்கொள்ளும் பொருட்களாகும்; அல்லது ஒளி விளக்குகளில் எரிக்கப்படும் எரிவாயு போல் வேலைகள் நடைபெற உதவியாக இருக்கும் பொருட்களாகும். இந்தத் துணைப் பொருட் களின் மதிப்பு உற்பத்திப் பொருட்களது மதிப்பின் ஒரு பகுதி யாகிறது. உற்பத்திப் பொருள் இந்த உற்பத்திச் சாதனங்களின் மதிப்பையும் தன்னுடன் சேர்ந்து சுற்றியோடச் செய்கிறது. இது இவற்றுக்கும் நிலை-மூலதனத்துக்கும் பொதுவாயுள்ள ஓர் இயல் பாகும். ஆனால் துணைப் பொருட்கள் ஈடுபடுகிற ஒவ்வொரு உழைப்பு நிகழ்முறையிலும் அவை அடியோடு உட்கொள்ளப்பட்டு விடுகின்றன; ஒவ்வொரு புதிய உழைப்பு நிகழ்முறையின் போதும் அதே வகையைச் சேர்ந்த புதிய உற்பத்திச் சாதனங்களால் அவை பூரணமாய் மாற்றீடு செய்யப்பட வேண்டும். இப்படி ஈடுபடுகையில் அவை தமது சுயேச்சையான பயன் வடிவத்தைக் காப்பாற்றிக் கொள்வதில்லை, மூலதன-மதிப்பின் எந்தப் பகுதியும் அதன் பழைய பயன் வடிவத்தில், அதன் தசைப் பிண்ட வடிவில் நிலைத் திருப்பதில்லை. துணைப் பொருட்களின் இந்தப் பகுதி உற்பத்திப் பொருளில் தசைப் பிண்டமாகச் சேர்ந்து விடாமல், தன் மதிப்புக்கு ஒப்ப அதன் மதிப்புடன் ஒன்றுகலந்து அம்மதிப்பின் ஒரு பகுதி யாகிறது என்பதும், அதோடு கூட இந்தத் துணைப் பொருட்களின்

செயற்பாடு உற்பத்தித் துறையின் வரம்பை ஒருபோதும் கடந்து செல்வதில்லை என்பதும் ராம்சே போன்ற பொருளாதார அறிஞர்களைத் தவறான பாதையில் இட்டுச் சென்று இந்தத் துணைப் பொருட்களை நிலை-மூலதனமாக வகைப்படுத்த வைக்கிறது.* (ராம்சே அதேபோது நிலை-மூலதனத்தை மாறா-மூலதனத்தோடு போட்டுக் குழப்புகிறார்.)

உற்பத்திச் சாதனங்களில் ஒரு பகுதியானது, தசைப் பிண்டமாய் உற்பத்திப் பொருளில் ஒன்றுகலக்கும் பகுதியானது, கச்சாப் பொருட்களும் இன்னபிறவுமானவை, பயனுள்ள பண்டங்களாய் பிற்பாடு சொந்த நுகர்வில் சேரத்தக்க வடிவங்களைப் பகுதியளவுக்கு இவ்விதம் பெற முடிகிறது. நிலை-மூலதனத்தின் பொருட் கூறுகளான உழைப்புச் சாதனங்கள் (இத்தொடரின் சரியான அர்த்தத்தில்) உற்பத்தித் திறனுள்ள முறையில் மட்டுமே நுகரப்படுகிறவை, சொந்த நுகர்வில் சேர முடியாதவை — ஏனெனில் அவை உற்பத்திப் பொருள் அல்லது பயன்-மதிப்பை உருவாக்க உதவுகின்றனவே தவிர, அதோடு ஒன்றுகலந்து விடுவதில்லை; தேய்மானமுற்று அடியோடு அழியும் வரை அதிலிருந்து வேறான தமது வடிவத்தை இழக்காதிருப்பவை. போக்குவரத்துச் சாதனங்கள் இதற்கு விதிவிலக்காகும். இவை உற்பத்தித் திறனுள்ள முறையில் செயல்படும் போது, எனவே உற்பத்தித் துறையில் இருந்து வரும் போது இவற்றால் விளையும் பயனாகிய இடப்பெயர்ச்சியானது அதே போது சொந்த நுகர்விலும் — எடுத்துக்காட்டாகப் பயணியின் சொந்த நுகர்விலும் — சேருகிறது. பயணியானவர் ஏனைய நுகர்வுப் பண்டங்களின் பயன்பாட்டுக்கு விலை கொடுப்பது போலவே போக்குவரத்துச் சாதனங்களின் பயன்பாட்டுக்கும் விலை கொடுக்கிறார். கச்சாப் பொருட்களும் துணைப் பொருட்களும் இரண்டறக் கலந்து விடுவதற்கு இரசாயனத் தொழிலை உதாரணமாய்க் குறிப்பிட்டோம். (முதல் பாகம், பக்கம் 250.) உழைப்புச் சாதனங்களும் கூட கச்சாப் பொருட்களோடும் துணைப் பொருட்களோடும் இரண்டறக் கலப்பதுண்டு. எடுத்துக்காட்டாக, பயிர்த் தொழிலில் மண் வளத்தை மேம்படுத்துவதற்காகச் சேர்க்கப்படும் பொருட்களில் ஒரு பகுதி அம்மண்ணில் விளையும் தாவரங்களில் சேர்ந்து, விளைபொருளை விளைவிக்கத் துணை செய்கிறது. ஆனால் இப்பொருட்களால் ஏற்படும் விளைவு ஓரளவு நீண்ட காலத்துக்கு, உதாரணமாக நான்கு அல்லது ஐந்து ஆண்டு காலத்துக்கு நீடிக்கிறது. ஆகவே, இவற்றில் ஒரு பகுதி உற்பத்திப் பொருளில் தசைப் பிண்டமாய் சேர்ந்து, இவ்விதம் அதன் மதிப்பை உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கிறது; அதே போது மறு பகுதி அதன் பழைய பயன்

---

* *கார்ல் மார்க்ஸ், Theorien uber den Mehrwert* (Vierter Band des *Kapitals*), 3. Teil, பெர்லின், 1962, பக்கம் 323-25. — *ஆங்கிலப் பதிப்பாசிரியர்.*

வடிவத்தில் நிலைத்திருக்கிறது, தன் மதிப்பைக் காப்பாற்றிக் கொள் கிறது. அது உற்பத்திச் சாதனமாக நீடிக்கிறது; இவ்விதம் நிலை-மூலதன வடிவத்தைக் காப்பாற்றிக் கொள்கிறது. இழுவைக் கால்நடை என்ற முறையில் எருது நிலை-மூலதனமாகும். அதனை அடித்துச் சாப்பிடுவதாக இருந்தால், முன்போல அது உழைப்புச் சாதனமாகவோ நிலை-மூலதனமாகவோ செயல்படுவதில்லை.

உற்பத்திச் சாதனங்களாய் முதலீடு செய்யப்படும் மூலதன-மதிப்பில் ஒரு பகுதி நிலை-மூலதனத் தன்மை பெறுவது எப்படி? இம்மதிப்பு தனிவிதமான முறையில் சுற்றியோடுவதால் அது இத் தன்மை பெறுகிறது. இந்தத் தனிவிதமான சுற்றோட்ட முறை எழுவது எங்கிருந்து? குறிப்பிட்ட எம்முறையில் உழைப்புச் சாதனம் அதன் மதிப்பை உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்திடுகிறது, அல்லது மதிப்பின் படைப்பாளியாகச் செயல்படுகிறது என்பதி லிருந்து. இந்தக் குறிப்பிட்ட முறையானது உழைப்பு நிகழ்முறையின் போது உழைப்புச் சாதனம் செயல்படுகிற தனி முறையிலிருந்து எழுகிறது.

ஓர் உழைப்பு நிகழ்முறையிலிருந்து உற்பத்திப் பொருளாக வெளிப்படும் பயன்-மதிப்பு இன்னோர் உழைப்பு நிகழ்முறையில் உற்பத்திச் சாதனமாகப் புகுவதை அறிவோம் (முதல் பாகம், பக்கம் 251). உற்பத்திப் பொருள் ஒன்று உற்பத்தி நிகழ்முறையில் உழைப்புச் சாதனமாகச் செயல்படுவதால்தான் அது நிலை-மூலதன மாகிறது. ஆனால் எந்த உற்பத்திப் பொருளும் உற்பத்தி நிகழ்முறையிலிருந்து வெளிவந்தவுடனேயே நிலை-மூலதனமாகி விடுவதில்லை. எடுத்துக்காட்டாக, இயந்திரம் ஒன்று இயந்திரத் தயாரிப்பாளரின் உற்பத்திப் பொருள் அல்லது சரக்காக இருக் கையில் அது அவரது சரக்கு-மூலதனத்தைச் சேர்ந்ததாகவே இருக் கிறது. ஒரு முதலாளி அதை வாங்கி, உற்பத்தித் திறனுள்ள முறை யில் ஈடுபடுத்தும் போதுதான் அது நிலை-மூலதனம் ஆகிறது.

ஏனைய நிலைமைகள் எல்லாம் மாறாதிருக்க, உழைப்புச் சாதனம் எவ்வளவுக்கு எவ்வளவு நீடித்திருக்கக் கூடியதோ, அவ் வளவுக்கு அவ்வளவு அதன் நிலைத் தன்மை அதிகரிக்கிறது. உழைப்புச் சாதனம் எந்த அளவுக்கு நீடித்திருக்கக் கூடியது என்பது தான் அதில் நிலைத்திருக்கும் மூலதன-மதிப்புக்கும் திரும்பத் திரும்ப நடைபெறும் உழைப்பு நிகழ்முறையின் போது உற்பத்திப் பொரு ளிடம் அது விட்டு விடும் மதிப்புப் பகுதிக்கும் இடையிலுள்ள வேறு பாட்டின் பருமனை நிர்ணயிக்கிறது. உழைப்பு நிகழ்முறை திரும்ப நடைபெறும் ஒவ்வொரு தரமும் உழைப்புச் சாதனம் இவ்விதம் மதிப்பை விடத்தான் செய்கிறது. எவ்வளவுக்கு எவ்வளவு மெது வாக் மதிப்பு இப்படி விடப்படுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு நிலை-மூலதனம் பெரிதாய் இருக்கிறது, உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபடுத்தப்படும் மூலதனத்துக்கும் அந்நிகழ்முறையின் போது

நுகரப்படும் மூலதனத்துக்கும் உள்ள வேறுபாடு அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் இருக்கிறது. இந்த வேறுபாடு இல்லாது மறையும் போது உழைப்புச் சாதனம் அதன் பயன்பாட்டுக் காலத்தைக் கடந்து விடுகிறது, அதன் பயன்-மதிப்பையும் அதோடு அதன் மதிப்பையும் இழந்து விடுகிறது. அது மதிப்பின் உறைவிடமாய் இருக்கும் நிலை முடிவடைந்து விடுகிறது. மாறா-மூலதனத்தின் ஏனைய எல்லா இயங்குபொருட்களையும் போலவே உழைப்புச் சாதனமும் எந்த அளவுக்கு அதன் பயன்-மதிப்போடு கூட அதன் மதிப்பையும் இழக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் உற்பத்திப் பொருளிடம் தன் மதிப்பை விடுகிறது என்பதால், அதன் பயன்-மதிப்பு எவ்வளவுக்கு எவ்வளவு மெதுவாய் இழக்கப்படுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிக காலத்துக்கு அது உற்பத்தி நிகழ்முறையில் நீடித்திருக்கிறது என்பதும், அவ்வளவுக்கு அவ்வளவு அதிக காலத்துக்கு அதில் மாறா-மூலதனம் நிலைத்திருக்கிறது என்பதும் தெளிவு.

சரியான அர்த்தத்தில் உழைப்புச் சாதனமெனச் சொல்ல முடியாத ஓர் உற்பத்திச் சாதனம்—அதாவது துணைப் பொருள், கச்சாப் பொருள், இன்னும் பூர்த்தியாகாத பண்டம் போன்ற ஒன்று—எம்முறையில் அது தன் மதிப்பை உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்திடுகிறது, ஆகவே அதன் மதிப்பு எவ்விதம் சுற்றியோடுகிறது என்பதைக் கருதுமிடத்து, முற்றிலும் உழைப்புச் சாதனத்தைப் போன்றதாகவே செயல்படுமாயின், அப்போது அதுவும் நிலை-மூலதனத்தின் இயங்குபொருளே, நிலவல் வடிவமே ஆகும். மேற்கூறிய மண்வள மேம்பாடுகளின் விவகாரம் இத்தகையதே. மண்வள மேம்பாட்டின் போது மண்ணுக்கு இடப்படும் இரசாயனப் பொருட்களின் பலன் பல அறுவடைகளுக்கு அல்லது ஆண்டுகளுக்கு நீடிக்கிறது. இங்கே உற்பத்திப் பொருளுடன் கூடவே மதிப்பின் ஒரு பகுதி அதன் தனி வடிவில், அதாவது நிலை-மூலதன வடிவில் தொடர்ந்து நிலவுகிறது. அதே போது மதிப்பின் மற்றொரு பகுதி உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்பட்டு அதோடு சேர்ந்து சுற்றியோடுகிறது. இங்கு உற்பத்திப் பொருளுடன் ஒன்றுகலப்பது நிலை-மூலதன மதிப்பின் ஒரு பகுதி மட்டுமல்ல, மதிப்பின் இப்பகுதி நிலை கொண்டிருக்கும் பயன்-மதிப்பாகிய உரப் பொருளுங் கூட ஒன்றுகலக்கிறது.

''நிலை-மூலதனம்,'' ''சுழல்-மூலதனம்'' என்ற இனங்களை ''மாறா-மூலதனம்,'' ''மாறும்-மூலதனம்'' என்ற இனங்களோடு போட்டுக் குழப்பும் இந்த அடிப்படைத் தவறு ஒரு புறம் இருக்க, கருத்துருவங்களை வரையறுப்பதில் இதுகாறும் பொருளாதார அறிஞர்கள் செய்து வந்திருக்கும் குளறுபடி பிரதானமாய்ப் பின் வரும் விவரங்களிலிருந்து எழுகிறது:

முதலாவதாக, உழைப்புச் சாதனங்களில் உள்ளார்ந்த சில

பௌதிகப் பண்புகளை நிலை-மூலதனத்துக்குரிய நேரடிப் பண்பு களாகக் கருதி விடுகிறார்கள். கட்டடத்தை உதாரணமாய்க் குறிப் பிடலாம்; இடம்பெயராமை இதன் பௌதிகப் பண்பாகும். ஆனால் இதே போல் நிலை-மூலதனமாகச் செயல்படும் வேறு சில உழைப்புச் சாதனங்கள் இதற்கு நேர்மாறான பண்புடையவையாய் இருக்கக் காண்கிறோமே. கப்பலை உதாரணமாய்க் குறிப்பிடலாம்; இடம்பெயர்தல் இதன் பௌதிகப் பண்பாகும்.

இரண்டாவதாக, மதிப்பின் சுற்றோட்டத்திலிருந்து எழும் வடிவம் தொடர்பான பொருளாதாரச் சிறப்பியல்பைப் பொரு ளுக்குரிய பண்புடன் குழப்பிக் கொள்கிறார்கள். எப்பொருளும் தன்னியல்பாகவே குறிப்பிட்ட மூலதனமாய்—நிலை-மூலதனமாய் அல்லது சுழல்-மூலதனமாய்—இருக்க முடியுமென நினைக்கிறார் கள். ஆனால் எப்பொருளும் தன்னியல்பாய் ஒருபோதும் மூலதனம் ஆவதில்லை: குறிப்பிட்ட சமூக நிலைமைகளில்தான் அவை மூல தனமாகின்றன. ஒவ்வொரு உழைப்பு நிகழ்முறையிலும்—அந்நிகழ் முறை எத்தகைய சமூக நிலைமைகளில் நடைபெற்றாலும்—உற் பத்திச் சாதனங்களை உழைப்புச் சாதனங்களாகவும் உழைப்பின் இலக்குப் பொருட்களாகவும் பிரிக்கலாம் என்று பார்த்தோம். (முதல் பாகம், அத்தியாயம் VII). ஆனால் இவையிரண்டும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில்தான் மூலதனம் ஆகின்றன; முந்தைய பகுதியில் விளக்கிய படி ''திறனுடை-மூலதனம்'' ஆகின்றன. இவ்வாறு உழைப்பு நிகழ்முறையின் இயல்பிலிருந்து எழும் வேறுபாடாகிய உழைப்புச் சாதனங் களுக்கும் உழைப்பின் இலக்குப் பொருளுக்கும் இடையிலான வேறுபாடு நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையி லான வேறுபாடு என்னும் புதிய வடிவத்தில் பிரதிபலிக்கிறது. உழைப்புச் சாதனமாகச் செயல்படுகிற எதுவும் இவ்வழியில்தான் நிலை-மூலதனம் ஆகிறது. உழைப்புச் சாதனமாகச் செயல்படுவதன் னியில், அதற்குள்ள பௌதிகப் பண்புகள் காரணமாய் அது வேறு பணிகளும் புரிய வல்லதாய் இருந்தால், அது புரியும் குறிப்பிட்ட பணியைப் பொறுத்து நிலை-மூலதனமாக இருக்கலாம் அல்லது இல்லாமற் போகலாம். கால்நடைகள் இழுவைப் பிராணிகளாய் இருக்கையில் நிலை-மூலதனமாகும்; இறைச்சிக்காக வளர்க்கப் படுகையில் கச்சாப் பொருளாகி, இறுதியில் உற்பத்திப் பொரு ளாகச் சுற்றோட்டத்தில் சேர்கின்றன; எனவே இவை சுழல்-மூலதனம் ஆகுமே தவிர நிலை-மூலதனம் ஆக மாட்டா.

திரும்பத் திரும்ப நடைபெறுகிற உழைப்பு நிகழ்முறைகளில், ஒன்றோடொன்று இணைந்து தொடர்ச்சியாக ஓர் உற்பத்திக் காலமாகும் படியான—அதாவது உற்பத்திப் பொருளை முடிப் பதற்கு வேண்டிய உற்பத்திக் காலம் பூராவும் ஆகும் படியான—உழைப்பு நிகழ்முறைகளில் ஓர் உற்பத்திச் சாதனம் கணிச காலம்

நிலைத்திருக்க நேரும் போது கூட, நிலை-மூலதனத்தைப் போல் ஓரளவு அதிக காலத்துக்கு முதலாளி தம்து மூலதன முன்னீடுகளைச் செய்ய வேண்டியதாகிறது. ஆயினும் இக்காரணத்தால் அவரது மூலதனம் நிலை-மூலதனமாகி விடுவதில்லை. உதாரணமாய், விதைக்கப்படும் விதைகள் சுமார் ஓராண்டுக்கு உற்பத்தி நிகழ்முறையில் இருந்தாக வேண்டிய கச்சாப் பொருள் ஆகின்றனவே தவிர, நிலை-மூலதனம் ஆகி விடுவதில்லை. திறனுடை-மூலதனமாகச் செயல்படும் வரை எல்லா மூலதனமும் உற்பத்தி நிகழ்முறையில் நிலைத்திருக்கவே செய்கிறது. ஆகவே திறனுடை-மூலதனத்தைச் சேர்ந்த எல்லாக் கூறுகளுங்கூட—அவற்றின் தசையுருவும், அவை ஆற்றுகிற பணியும், அவற்றின் மதிப்புகள் சுற்றியோடுகிற விதமும் எப்படி இருப்பினும்—இவ்வாறே செய்கின்றன. மூலதனம் இப்படி நிலைத்திருக்கும் கால அளவு நீண்டதா, குறைவா என்பது உற்பத்தி நிகழ்முறை எவ்வகைப்பட்டது அல்லது அதனால் விளைய வேண்டிய பயன் என்ன என்பதைப் பொறுத்ததாகும். ஆனால் நிலை-மூலதனத்தையும் சுழல்-மூலதனத்தையும் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காட்டுவது இந்தக் கால அளவல்ல.[24]

உழைப்புச் சாதனங்களில் (உழைப்பின் பொதுத் தேவைகளும் இவற்றில் அடங்கும்) ஒரு பகுதி உழைப்புச் சாதனமாய் உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட முற்பட்டதும், அதாவது அதன் உற்பத்திப் பணிக்கு ஆயத்தமாகியதும், ஓரிடத்தில் நிலைத்து விடுகிறது; இயந்திர சாதனத்தை உதாரணமாய்க் குறிப்பிடலாம். வேறு சில உழைப்புச் சாதனங்கள் ஆரம்பத்திலேயே இடம் பெயராது ஓரிடத்தில் நிலைத்து விடும் படி உற்பத்தி செய்யப்படுகின்றன. மண்வள மேம்பாடுகள், ஆலைக் கட்டடங்கள், ஊது உலைகள், கால்வாய்கள், இருப்புப் பாதைகள் போன்றவற்றை உதாரணமாய்க் குறிப்பிடலாம். உழைப்புச் சாதனம் அது செயல்படும் உற்பத்தி நிகழ்முறையோடு எந்நேரமும் பிணைக்கப்பட்டிருப்பதற்கு இங்கு அதன் பௌதிக நிலவல் முறையும் ஒரு காரணமாகிறது. மறு புறம் ஓர் உழைப்புச் சாதனம் பௌதிக வழியில் தொடர்ந்து இடம் பெயர்ந்து செல்வதாய், இங்குமங்கும் சென்று வருவதாய் இருந்தாலும், உற்பத்தி நிகழ்முறையில் ஓயாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கலாம்; இரயில் இழுபொறி, கப்பல், இழுவைக் கால்நடைகள் போன்றவற்றை உதாரணமாய்க் குறிப்பிடலாம். இடம்பெயராமையானது முதலாவது உதாரணத்தில் அந்த உழைப்புச் சாதனங்களுக்கு நிலை-மூலதனத் தன்மையை அளிக்கவும் இல்லை; இடம்பெயர்தலானது இரண்டாவது உதாரணத்தில் அச்சாதனங்களிடமிருந்து

[24] எது நிலை-மூலதனம், எது சுழல்-மூலதனம் என்பதைத் தீர்மானிப்பதிலுள்ள இடர்ப்பாட்டின் காரணத்தால் திருவாளர் லோரென்ஸ் ஸ்டெய்ன் நினைக்கிறார், சொல்ல வேண்டியதை எளிதில் சொல்வதற்காகவே இப்படி வேறுபடுத்திக் காட்டப்படுகிறது என்று.

இத்தன்மையைப் பறிக்கவும் இல்லை. ஆனால் சில உழைப்புச் சாதனங்கள் ஓரிடத்தில் நிலைத்திருந்து மண்ணில் வேரோடி யிருப்பது என்ற நிலைமை வேர் விட்டுத் தரையோடு கட்டுண்டு நிலைத்து விடுவதால், நிலை-மூலதனத்தின் இந்தப் பகுதி தேசப் பொருளாதாரத்தில் ஒரு தனி இடம் வகிக்க வேண்டியதாகிறது. இச்சாதனங்களை வெளிநாட்டுக்கு அனுப்ப முடியாது, உலகச் சந்தையில் சரக்குகளாக இவை சுற்றியோட முடியாது. இந்த நிலை-மூலதனத்தின் உடைமையுரிமை வேண்டுமானால் மாறலாம்; அது விற்கவும் வாங்கவும் படலாம்—அந்த மட்டில் கருத்தியலாய் இவை சுற்றியோடலாம். இந்த உடைமையுரிமைகள் எடுத்துக்காட்டாகப் பங்குகளின் வடிவில் வெளிநாட்டுச் சந்தைகளில் சுற்றியோடவுங் கூடச் செய்யலாம், ஆனால் இவ்வகைப்பட்ட நிலை-மூலதனத்தின் உடைமையாளர்களில் ஏற்படும் மாற்றம் தேச செல்வத்தில் இடம் பெயராமல் பௌதிக வழியில் நிலைத்திருக்கும் பகுதிக்கும் இடம் பெயரும் பகுதிக்கும் உள்ள விகித உறவில் எந்த மாற்றத்தையும் உண்டாக்குவதில்லை.[25]

நிலை-மூலதனத்தின் தனி விதமான சுற்றோட்டம் தனி விதமான புரள்வுக்கு வழி செய்கிறது. அது தேய்மானம் காரணமாய்த் தசை யுருவில் இழக்கும் மதிப்புப் பகுதி உற்பத்திப் பொருளின் மதிப் பைச் சேர்ந்த ஒரு பகுதியாகச் சுற்றியோடுகிறது. உற்பத்திப் பொருள் அதன் சுற்றோட்டத்தின் மூலம் உருமாற்றம் அடைகிறது, சரக்காய் இருப்பது பணமாய் உருமாறுகிறது. உற்பத்திப் பொரு ளோடு ஒன்றுகலந்து அதோடு சுற்றியோடுகிற உழைப்புச் சாதன மதிப்புப் பகுதியும் இவ்விதம் பணமாக மாறுகிறது. இந்த உழைப்புச் சாதனம் மதிப்பின் உறைவிடமாய் இருக்கும் நிலைக்கு உற்பத்தி நிகழ்முறையின் போது முடிவு ஏற்படும் அதே விகிதத்தில், மேற் கூறிய அதன் மதிப்புப் பகுதியும், சுற்றோட்ட நிகழ்முறையின் போது பண வடிவில் சிறுகச் சிறுகக் கசிந்து வெளிவருகிறது. உற்பத்திச் சாதனத்தின் மதிப்பு இவ்வாறு இரு விதமாய் நிலவுகிறது. அதன் ஒரு பகுதி அதன் பயன் வடிவம் அல்லது தசையுருவை விட்டு விலகாமல் உற்பத்தி நிகழ்முறையைச் சேர்ந்ததாகிறது. மற்றொரு பகுதி அவ்வடிவை விட்டுப் பிரிந்து பண வடிவம் பெறுகிறது. உழைப்புச் சாதனம் அதன் செயலைப் புரிகையில், அதன் தசையுரு வில் நிலவுகிற அதன் மதிப்புப் பகுதி மேலும் மேலும் குறைந்து செல்ல, பணமாக உருமாற்றப்படும் மதிப்புப் பகுதி மேலும் மேலும் அதிகமாகிச் செல்கிறது. இவ்வாறு தொடர்ந்து நடைபெற்று முடிவில் அச்சாதனம் அதன் செயலை இழக்கிறது, அதன் மதிப்பு அனைத்தும் இப்படிச் சவமாகும் அதனை விட்டுப் பிரிந்து பணமாக

[25] எங்கெல்ஸ் குறிப்பு: கையெழுத்துப் பிரதி IV என்பதன் முடிவு, கையெழுத்துப் பிரதி II என்பதன் தொடக்கம்.

மாற்றமடைகிறது. உற்பத்தித் திறனுடைய மூலதனத்தின் இந்தக் கூறு நிகழ்த்துகிற புரள்வின் தனித் தன்மை இங்கே கண்கூடாகிறது. அதன் மதிப்பு பணமாகிற உருமாற்றம், அம்மதிப்பைத் தன்னுள் கொண்டு செல்கிற சரக்கு பணமாகிற பரிணமிப்புடன் ஒருங்கிணைந்து நடைபெறுகிறது. ஆனால் அம்மதிப்பு பண வடிவிலிருந்து திரும்பவும் பயன் வடிவுக்கு அடையும் மாற்றம், சரக்குகள் திரும்பவும் அவற்றின் உற்பத்திக்கு வேண்டிய ஏனைய அடிக்கூறுகளாக மாற்றமுறுவதிலிருந்து பிரிந்து தனியே நடைபெறுகிறது. இந்த மாற்றம் அதன் மறுவுற்பத்திக்குத் தேவைப்படும் கால அளவால் நிர்ணயிக்கப்படுகிறது—அதாவது உழைப்புச் சாதனம் தேய்மானத்தால் அழிந்து போய், அதே வகைப்பட்ட இன்னொரு உழைப்புச் சாதனத்தால் அது மாற்றீடு செய்யப்படுவதற்கு ஆகும் கால அளவால் நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணமாக, £10,000 பெறுமானமுள்ள ஓர் இயந்திரம் பத்தாண்டு காலம் நீடித்திருக்குமானால் அதற்காக ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட்ட மதிப்பின் புரள்வுக் காலம் பத்தாண்டுகளாகும். இந்தப் பத்தாண்டுகளும் கழியும் வரை புதிய இயந்திரம் வேண்டியதில்லை, அதன் தசையுருவிலேயே தொடர்ந்து நீடித்து அது செயல்பட்டு வருகிறது. இதற்கிடையில் அந்த இயந்திரத்தின் மதிப்பு அவ்வியந்திரத்தைக் கொண்டு தொடர்ச்சியாக உற்பத்தியாகிற சரக்குகளின் மதிப்பின் ஒரு பகுதியாக்ச் சிறுகச் சிறுகக் கலந்து சுற்றியோடுகிறது, இவ்விதம் அதன் மதிப்பு சன்னம் சன்னமாய்ப் பணமாக மாற்றமடைந்து, பத்து ஆண்டுகளின் இறுதியில் முற்றும் பண வடிவம் பெறுகிறது. இப்போது அது பணத்திலிருந்து திரும்பவும் இயந்திரமாக மாற்றமடைகிறது. அதாவது அதன் புரள்வு பூரணமாய் நிகழ்ந்து முடிவுறுகிறது. மறுவுற்பத்திக்கான இத்தருணம் வரும் வரை அதன் மதிப்பு பண வடிவிலான சேம-நிதியாக பையப் பைய திரட்டப் பெற்று வருகிறது.

திறனுடை-மூலதனத்தின் எஞ்சிய கூறுகளில் ஒரு பகுதி மாறா-மூலதனக் கூறுகளாகும்;' கச்சாப் பொருட்களும் துணைப் பொருட்களும் ஆகும். மறு பகுதி உழைப்புச் சக்திக்காக முதலீடு செய்யப்படும் மாறும்-மூலதனம் ஆகும்.

இந்த வெவ்வேறு அடக்கக் கூறுகள் உற்பத்திப் பொருட்களையும் மதிப்பையும் உருவாக்குவதில் வெவ்வேறு விதமாகப் பங்காற்றுவதை உழைப்பு நிகழ்முறையும் உபரி-மதிப்பின் உற்பத்தி நிகழ்முறையும் பற்றிய பகுப்பாய்வில் பார்த்தோம் (முதல் பாகம், அத்தியாயம் VII). உழைப்புச் சாதனங்களாய் அமைந்த மாறா-மூலதனப் பகுதியின் மதிப்பைப் போலவே, கச்சாப் பொருட்களாயும் துணைப் பொருட்களாயும் அமைந்த மாறா-மூலதனப் பகுதியின் மதிப்பும் பெயர்க்கப்பட்ட மதிப்பாகவே உற்பத்திப் பொருளின் மதிப்பில் இடம்பெறுகிறது. ஆனால் உழைப்புச் சக்தியானது இவ்வாறன்றி அதன் மதிப்புக்குச் சமதையான மதிப்பை

உற்பத்தி நிகழ்முறையின் போது உற்பத்திப் பொருளுக்குச் செலுத்து கிறது; வேறுவிதமாகச் சொன்னால், தனது மதிப்பை உள்ளபடியே மறுவுற்பத்தி செய்கிறது. மேலும், துணைப் பொருட்களில் ஒரு பகுதி—எரிபொருள், விளக்கொளி தரும் எரிவாயு முதலானவை—உற்பத்திப் பொருளில் தசையுருவாய்ச் சேராமல் உழைப்பு நிகழ் முறையின் போது நுகரப்படுகிறது; அதே போது அவற்றின் மறு பகுதி உற்பத்திப் பொருளில் தசையுருவாய்ச் சேர்ந்து அதன் பிண்டப் பொருளாகிறது. ஆனால், சுற்றோட்டத்தையும், ஆகவே புரள்வு முறையையும் பொறுத்த வரை இந்த வேறுபாடுகள் எல்லாம் முக்கியமல்ல. கச்சாப் பொருட்களும் துணைப் பொருட்களும் உற் பத்திப் பொருளின் படைப்பின் போது முழுதும் நுகரப்பட்டு விடுவதால், அவை தம் மதிப்பை முழுமையாக உற்பத்திப் பொரு ளுக்குப் பெயர்த்தளிக்கின்றன. எனவே, இந்த மதிப்பு உற்பத்திப் பொருளின் மூலமாய் முழுமையாகச் சுற்றியோடி, பணமாக மாறு கிறது. பிறகு பணத்திலிருந்து திரும்பவும் சரக்கின் உற்பத்திக்கு வேண்டிய அடிக்கூறுகளாக உருமாறுகிறது. இதன் புரள்வு நிலை-மூலதனத்தின் புரள்வைப் போல் அல்லாமல் தடைபடாமல் நடை பெறுகிறது; தடைபடாமலே அதன் வடிவங்களின் சுற்று முழுவதை யும் கடக்கிறது: திறனுடை-மூலதனத்தின் இந்தக் கூறுகள் இவ்விதம் ஓயாமல் திரும்பத் திரும்ப அவற்றின் பண்ட வடிவை வந்தடை கின்றன.

மாறும்-மூலதனத்தைப் பொறுத்த வரை, அதாவது திறனுடை-மூலதனத்தில் உழைப்புச் சக்திக்காக முதலீடு செய்யப்படும் பகுதி யைப் பொறுத்த வரை, உழைப்புச் சக்தி குறிப்பிட்ட கால அளவுக்கு வாங்கப்படுகிறது என்பது கவனத்துக்குரியது. முதலாளி அதனை வாங்கி உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபடுத்தியதும் அது அவரது மூலதனத்தின் அடக்கக் கூறாகிறது; அதன் மாறும் கூறா கிறது. உழைப்புச் சக்தி அன்றாடம் குறிப்பிட்ட நேரத்துக்குச் செயல் படுகிறது; இந்த நேரத்தில் அது முழு நாளுக்கான அதன் மதிப்பை மட்டுமல்லாமல், கூடுதலாக உபரி-மதிப்பையும் உற்பத்திப் பொரு ளோடு சேர்க்கிறது. இந்த உபரி-மதிப்பை இப்போதைக்கு நாம் பரிசீலிக்காமல் விடுகிறோம். விலைக்கு வாங்கப்படும் உழைப்புச் சக்தி வழக்கமான கால அளவு—உதாரணமாய் ஒரு வார காலம்—அதற்குரிய செயலைச் செய்த பின், வழக்கமான வாரத்துக்கு ஒரு தரம் விலை கொடுக்கத் திரும்பத் திரும்ப அதனை வாங்கிக் கொண் டிருக்க வேண்டும். இப்படிச் செயல் புரியும் உழைப்புச் சக்தி அதன் மதிப்புக்குச் சமதையான மதிப்பை உற்பத்திப் பொருளோடு சேர்த் திடுகிறது. உற்பத்திப் பொருளினது சுற்றோட்டத்தின் பயனாய் இம்மதிப்பு திரும்பத் திரும்ப பணமாய் மாற்றப்படுகிறது. பண வடிவிலிருந்து திரும்பத் திரும்ப இம்மதிப்பு உழைப்புச் சக்தி யாய் மாற்றப்பட்டாக வேண்டும். அதாவது இம்மதிப்பு அதன்

வடிவங்களாலான முழுச் சுற்றினையும் திரும்பத் திரும்ப கடந்து ஓயாமல் புரள்வினை நிகழ்த்தி வர வேண்டும்—அப்போதுதான் உற்பத்திச் சுற்று தடைபடாமல் தொடர்ச்சியாய் நிகழ்ந்து வர முடியும்.

எனவே, திறனுடை-மூலதனத்தின் மதிப்பில் உழைப்புச் சக்திக்காக முன்னீடு செய்யப்படும் பகுதி உற்பத்திப் பொருளுக்கு முழுமையாகப் பெயர்க்கப்படுகிறது (இப்போதும் உபரி-மதிப்பைப் பரிசீலிக்காமல் விட்டு விடுகிறோம்); உற்பத்திப் பொருளோடு கூடவே சுற்றோட்டத் துறைக்குரிய இரு உருமாற்றங்களையும் அடைகிறது; தொடர்ச்சியான இந்த மீட்சியின் பயனாய் எப்போதுமே உற்பத்தி நிகழ்முறையுடன் இணைந்ததாய் இருந்து வருகிறது. எனவே, உழைப்புச் சக்திக்கும் நிலை-மூலதனமாக அமையாத மாறா-மூலதனக் கூறுகளுக்கும் இடையே மதிப்பின் படைப்பைப் பொறுத்த வரை எவ்வளவுதான் வேறுபாடுகள் இருப்பினும், மதிப்பின் புரள்வைப் பொறுத்த வரை எந்த வேறுபாடும் இல்லை. இவ்வகைப் புரள்வு இவையிரண்டுக்கும் பொதுவானது; ஆனால் நிலை-மூலதனத்தின் புரள்வு இதற்கு நேர்மாறானது. திறனுடை-மூலதனத்தின் இந்த அடக்கக் கூறுகள்—உழைப்புச் சக்திக்காகவும் நிலை-மூலதனமாக அமையாத உற்பத்திச் சாதனங்களுக்காகவும் முதலீடு செய்யப்படும் அதன் மதிப்புப் பகுதிகள்—அவற்றின் புரள்வில் காணப்படும் இந்தப் பொதுத் தன்மை காரணமாய் **சுற்றியோடும்** மூலதனம் அல்லது **சுழல்**-மூலதனமாக நிலை-மூலதனத்துக்கு நேர் எதிராகின்றன.

தொழிலாளியின் உழைப்புச் சக்தியைப் பயன்படுத்திக் கொள்வதற்காக முதலாளி அவருக்குத் தரும் பணமானது தொழிலாளிக்கு அவசியமான வாழ்வுச் சாதனங்களின் பொதுச் சமதை வடிவமே தவிர வேறல்ல என்று முன்பே பார்த்தோம் (முதல் பாகம், அத்தியாயம் VI., பக்கம் *231-243*). ஆகவே சாராம்சத்தில் மாறும்-மூலதனத்தில் அடங்கியிருப்பவை வாழ்வுச் சாதனங்களே ஆகும். ஆனால் நாம் இங்கே புரள்வை ஆராய்ந்து கொண்டிருப்பதால் வடிவமே கவனத்துக்குரியது. முதலாளி தொழிலாளியின் உழைப்புச் சக்தியை வாங்குகிறாரே தவிர, தொழிலாளியின் வாழ்வுச் சாதனங்களை அல்ல. அவரது மூலதனத்தின் மாறும் கூறாக அமைவது தொழிலாளியின் செயல்படுகிற உழைப்புச் சக்திதானே தவிர அவரது வாழ்வுச் சாதனங்கள் அல்ல. உழைப்பு நிகழ்முறையின் போது முதலாளி உற்பத்தித் திறனுள்ள முறையில் நுகர்வது உழைப்புச் சக்தியைத்தானே தவிர தொழிலாளியின் வாழ்வுச் சாதனங்களை அல்ல. தொழிலாளிதான் தமது உழைப்புச் சக்திக்காகப் பெறும் பணத்தை வாழ்வுச் சாதனங்களாக மாற்றுகிறார்; அவற்றைத் திரும்பவும் உழைப்புச் சக்தியாக மாற்றி, உயிர்வாழும் பொருட்டு இப்படிச் செய்கிறார். முதலாளி பணத்துக்கு விற்கும் சரக்குகளில் அடங்கிய உபரி-மதிப்பின் ஒரு பகுதியைத் தனக்கு

வேண்டிய வாழ்வுச் சாதனங்களாக மாற்றிக் கொள்கிறார் என்பதால், முதலாளியின் சரக்குகளை வாங்குகிறவர் அவருக்கு வாழ்வுச் சாதனங்களின் உருவில் விலை கொடுப்பதாகச் சொல்ல வேண்டியதில்லை அல்லவா? தொழிலாளிக்கு அவரது கூலியில் ஒரு பகுதி வாழ்வுச் சாதனங்களாக, பண்டங்களாகத் தரப்படும் போதும் கூட, இது இப்போதெல்லாம் இரண்டாவது பரிவர்த்தனையாகவே நடைபெறுகிறது. அவர் தமது உழைப்புச் சக்தியைக் குறிப்பிட்ட விலைக்கு விற்கும் போது, இந்த விலையில் ஒரு பகுதியை வாழ்வுச் சாதனங்களாகத் தர வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. கொடுப்பின் வடிவம் மட்டும்தான் மாறுகிறது; அவர் தமது உழைப்புச் சக்தியை விற்கிறார் என்ற உண்மை இதனால் மாறி விடவில்லை. இரண்டாவது பரிவர்த்தனையான இது நடைபெறுவது தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையே அல்ல—சரக்கு வாங்குகிறவரான தொழிலாளிக்கும் சரக்கு விற்கிறவரான முதலாளிக்கும் இடையே நடைபெறுகிறது. ஆனால் முதலாவது பரிவர்த்தனையில் தொழிலாளி சரக்கை (அவரது உழைப்புச் சக்தியை) விற்கிறவராகவும், முதலாளி அதனை வாங்குகிறவராகவும் இருக்கக் காண்கிறோம். முதலாளி தமது சரக்கை, உதாரணமாக ஓர் இயந்திரத்தை இரும்புத் தொழிற்கூடம் ஒன்றுக்கு விற்று அதற்கு விலையாக வேறொரு சரக்கை, உதாரணமாக இரும்பைப் பெற்றுக் கொண்டால் எப்படியோ அதே போன்றதுதான் இது. ஆக நிலை-மூலதனத்துக்கு மாறாக, சுழல்-மூலதனத்துக்குரிய அந்தத் தனித் தன்மையை அடைகிறவை தொழிலாளியின் வாழ்வுச் சாதனங்களும் அல்ல, தொழிலாளியின் உழைப்புச் சக்தியும் அல்ல. திறனுடை-மூலதனத்தின் மதிப்பில் உழைப்புச் சக்தியை வாங்குவதற்காக முன்னீடு செய்யப்பட்டிருக்கிறதே அந்தப் பகுதிதான் அதன் புரள்வின் வடிவம் காரணமாய் அத்தன்மையை அடைகிறது—மாறா-மூலதனத்தின் சிற்சில உள்ளடக்கக் கூறுகள் அடைவதும், ஏனைய கூறுகள் அடையாததுமான அத்தன்மையை அது அடைகிறது.

உழைப்புச் சக்தியாகவும் உற்பத்திச் சாதனங்களாகவும் இருக்கும் சுழல்-மூலதன மதிப்பானது நிலை-மூலதனத்தின் பரிமாணத்தால் நிர்ணயிக்கப்படும் உற்பத்தியின் அளவுவீதத்துக்கேற்ப, உற்பத்தி நிகழ்முறையின் போது உற்பத்திப் பொருள் உருவாகிற காலத்துக்காக மட்டும் முன்னீடு செய்யப்படுகிறது. இந்த மதிப்பு உற்பத்திப் பொருளோடு முழுமையாகச் சேருகிறது, எனவே உற்பத்திப் பொருள் விற்கப்படும் போது சுற்றோட்டத் துறையிலிருந்து முழுமையாகத் திரும்பி வருகிறது, திரும்பவும் இதனை முன்னீடு செய்ய முடிகிறது. சுழல்-மூலதனத்தின் நிலவல் வடிவங்களாய் அமையும் உழைப்புச் சக்தியும் உற்பத்திச் சாதனங்களும், பூர்த்தியான உற்பத்திப் பொருளின் படைப்புக்கும் விற்பனைக்கும் அவசியமான அளவுக்குச் சுற்றோட்டத்திலிருந்து விலக்கி எடுக்கப்படுகின்றன.

ஆனால் அவற்றைத் திரும்பத் திரும்ப வாங்கி பண வடிவிலிருந்து உற்பத்தி-அடிக்கூறுகளாய் மாற்றியாக வேண்டும். இவ்விதம் ஓயாமல் அவற்றை மாற்றீடு செய்தும் புதுப்பித்தும் வர வேண்டும். எந்த ஒரு நேரத்திலும் அவை நிலை-மூலதனக் கூறுகளைக் காட்டிலும் மிகச் சிறு அளவுகளில்தான் சந்தையிலிருந்து வெளியே எடுக்கப்படுகின்றன. ஆனால் இதற்கேற்ப திரும்பவும் அவை மேலும் சீக்கிரம் சீக்கிரமாய் வெளியே எடுக்கப்பட்டு, அவற்றில் முதலீடு செய்யப்பட்டிருக்கும் மூலதனம் மேலும் குறுகலான கால அளவுகளில் மீட்கப் பெற்றாக வேண்டும். உற்பத்திப் பொருள் இடையறாது வடிவ மாற்றம் பெற்று அவற்றின் முழு மதிப்பையும் சுற்றியோடச் செய்கிறது. இவ்விதம் முடிவில் அவை தமது மதிப்பைப் பொறுத்து மட்டுமல்லாமல் தமது தசையுருவைப் பொறுத்தும் உருமாற்றங்களது முழுச் சுற்றையும் கடக்கின்றன. சரக்குகளாய் இருப்பவை அதே சரக்குகளின் உற்பத்தி-அடிக்கூறுகளாய் ஓயாமல் திரும்பத் திரும்ப மாற்றப்படுகின்றன.

உழைப்புச் சக்தி எப்போதுமே அதன் மதிப்பை மட்டுமல்லாமல் ஊதியமிலா உழைப்பின் உருவாகிய உபரி-மதிப்பையும் உற்பத்திப் பொருளோடு சேர்த்திடுகிறது. பூர்த்தியான உற்பத்திப் பொருள் அதன் மதிப்பின் ஏனைய கூறுகளைச் செய்வது போலவே இந்த உபரி-மதிப்பையும் விடாமல் தொடர்ச்சியாய் சுற்றியோட வைத்துப் பணமாக மாறச் செய்கிறது. ஆனால் இங்கு நம் பிரதான கவனத்துக்கு உரியது மூலதன-மதிப்பின் புரள்வுதானே தவிர அதே நேரத்தில் நடைபெறுகிற உபரி-மதிப்பின் புரள்வு அல்ல என்பதால், பின்னதை இப்போதைக்குக் கவனியாது ஒதுக்கி விடலாம்.

மேற்சொன்னவற்றிலிருந்து பின்வரும் முடிவுகளுக்கு வரலாம்:

1. நிலை-மூலதனம், சுழல்-மூலதனம் ஆகிய வடிவங்களின் வெவ்வேறான தன்மைகள் உற்பத்தி நிகழ்முறையில் செயல் புரியும் மூலதன-மதிப்பின் — அதாவது திறனுடை-மூலதனத்தின் — வெவ்வேறு விதமான புரள்வுகளிலிருந்தே எழுகின்றன. புரள்விலான இந்த வேறுபாடு எதிலிருந்து எழுகிறது? திறனுடை-மூலதனத்தின் பல்வேறு அடக்கக் கூறுகள் அவற்றின் மதிப்பை உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்திடும் வெவ்வேறு வழிகளிலிருந்து எழுகிறது. இந்த அடக்கக் கூறுகள் உற்பத்திப் பொருளினது மதிப்பின் உருவாக்கத்துக்கு ஆற்றிடும் பங்கு வெவ்வேறானதாய் இருப்பதோ, தற்பெருக்க நிகழ்முறையின் போது அவை தத்தமக்குரிய தனி விதத்தில் செயல்படுவதோ அல்ல இந்த வேறுபாட்டுக்கான காரணம். முடிவில் உற்பத்திப் பொருளுக்கு மதிப்பைப் பெயர்ப்பதிலான வேறுபாடு— ஆகவே உற்பத்திப் பொருள் இந்த மதிப்பைச் சுற்றியோட வைத்து, தனது உருமாற்றங்களின் மூலம் அதை ஆரம்பத் தசையுருவுக்கு மீளச் செய்வதிலான வேறுபாடு—திறனுடை-மூலதனமாக நிலவும் பொருள் வடிவங்களிலான வேறுபாட்டிலிருந்து எழுகிறது; இந்த மூலதனத்தின் ஒரு பகுதி தனிப்பட்ட உற்பத்திப் பொருளின்

படைப்பின் போது முழுதும் நுகரப்படுகிறது; மறு பகுதி சன்னம் சன்னமாகவே நுகரப்படுகிறது. எனவே, திறனுடை-மூலதனத்தைத் தான் நிலை-மூலதனமாகவும் சுழல்-மூலதனமாகவும் பிரிக்க முடியும். ஆனால் தொழில் துறை மூலதனத்தின் ஏனைய இரு நிலவல் வடிவங்கள், அதாவது சரக்கு-மூலதனமும் பண-மூலதனமும் இந்த முரண் நிலைக்கு [antithesis] ஆளாவதில்லை. திறனுடை-மூலதனத்துக்கும் ஏனைய இரு நிலவல் வடிவங்களுக்கும் இடையிலான முரண் நிலையாகவும் இது அமைவதில்லை. **திறனுடை-மூலதனத்தில் மட்டும், அதன் அரங்கினில் மட்டும்** நிலவும் ஒன்று இது. பண-மூலதனமும் சரக்கு-மூலதனமும் எவ்வளவுதான் மூலதனமாகப் பணி புரிந்த போதிலும், எவ்வளவுதான் சரளமாகச் சுற்றியோடிய போதிலும், திறனுடை-மூலதனத்தின் சுழலும் கூறுகளாக மாறாத வரை இவை நிலை-மூலதனத்துக்கு மாறான சுழல்-மூலதனம் ஆக முடியாது. ஆனால் இந்த இரு மூலதன வடிவங்களும் சுற்றோட்டத் துறையில் செல்பவை என்பதால் ஆதாம் ஸ்மித் காலம் முதலாய் அரசியல் பொருளாதாரம் இவற்றைத் திறனுடை-மூலதனத்தின் சுழலும் பகுதியோடு போட்டுக் குழப்பி, சுழல்-மூலதன இனத்தைச் சேர்ந்தவையாகக் கொண்டு தவறிழைத்து வருவதைப் பிற்பாடு நாம் காணப் போகிறோம். உண்மையில் இவை திறனுடை-மூலதனத்துக்கு மாறான சுற்றோட்ட மூலதனமே [circulation capital] தவிர, நிலை-மூலதனத்துக்கு மாறான சுழல்-மூலதனம் [circulating capital] அல்ல.

2. மூலதனத்தின் நிலைப் பகுதியின் புரள்வும், ஆகவே அதற்கு ஆகிற புரள்வுக் காலமும், மூலதனத்தின் சுழலும் கூறுகளின் அநேகப் புரள்வுகளுக்குச் சமமாகும். நிலை-மூலதனம் ஒரு தரம் புரள்வதற்குள் சுழல்-மூலதனம் எத்தனையோ தரம் புரண்டு விடுகிறது. திறனுடை-மூலதனத்தினது மதிப்பின் ஓர் அடக்கக் கூறானது நிலை-மூலதனத்துக்குரிய அந்த வடிவத்தைப் பெற வேண்டுமானால், அந்த அடக்கக் கூறின் நிலவல் வடிவமாய் அமையும் உற்பத்திச் சாதனமானது உற்பத்திப் பொருள் உற்பத்தி செய்யப்பட்டு உற்பத்தி நிகழ்முறையிலிருந்து சரக்காக வெளிப்படுவதற்குத் தேவையான காலத்துக்குள் அடியோடு தேய்ந்து போய் விடக் கூடாது. அதன் மதிப்பின் ஒரு பகுதி இன்னமும் அழியாது நீடிக்கும் பழைய பயன் வடிவத்தில் தொடர்ந்து இருந்து வர வேண்டும். அதே போது மறு பகுதியைப் பூர்த்தியான உற்பத்திப் பொருள் சுற்றியோடச் செய்கிற அதே நேரத்தில் இந்தச் சுற்றோட்டம் மூலதனத்தின் சுழலும் கூறுகளது முழு மதிப்பையும் சுற்றியோட வைக்கிறது.

3. திறனுடை-மூலதனத்தின் மதிப்பில் நிலை-மூலதனமாக முதலீடு செய்யப்படும் பகுதி முழுவதும் உற்பத்திச் சாதனங்களில் நிலை-மூலதனமாக அமையும் பகுதியைப் பிரயோகிக்கும் முழுக் காலத்துக்குமாக ஒரேயடியாய் முன்னீடு செய்யப்படுகிறது. எனவே, முதலாளி இந்த மதிப்பு முழுவதையும் ஒரே நேரத்தில் சுற்றோட்டத்தினுள்

செலுத்துகிறார். ஆனால், நிலை-மூலதனம் சரக்குகளோடு சிறுகச் சிறுகச் சேர்ந்திருக்கும் மதிப்புப் பகுதிகளை ஈட்டேற்றம் செய்வதன் மூலம், இந்த மதிப்பு சிறுகச்சிறுக நாளாவட்டத்தில் சுற்றோட்டத்தி லிருந்து மீட்கப்படுகிறது. மறு புறம் திறனுடை-மூலதனத்தின் ஒரு பகுதி எவற்றில் நிலைத்து நிற்கிறதோ அந்த உற்பத்திச் சாதனங்கள் முழுவதும் ஒரேயடியாய் சுற்றோட்டத்திலிருந்து மீட்கப்பட்டு, அவை செயல்படும் முழுக் காலத்துக்கும் உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபடுத் தப்படுகின்றன. ஆனால் இந்த முழுக் காலத்துக்கும், அந்த உற்பத் திச் சாதனங்களை அதே வகையைச் சேர்ந்த புதிய சாதனங்களால் மாற்றீடு செய்ய வேண்டியதில்லை; அதாவது அவற்றை மறுவுற் பத்தி செய்ய வேண்டியதில்லை. இந்தச் சாதனங்கள் தமது மாற் றீட்டுக்கு வேண்டிய உற்பத்தி-அடிக்கூறுகளை சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுக்க வேண்டிய தேவையில்லாமலே நெடுங்காலத் துக்கோ குறுங்காலத்துக்கோ தொடர்ந்து செயல்பட்டு, சுற்றோட்டத் துள் செலுத்தப்படும் சரக்குகளின் உற்பத்தியில் ஈடுபடுகின்றன. ஆகவே முதலாளி இக்காலம் முழுமையிலும் அவற்றுக்காகத் திரும் பவும் முன்னீடு செய்யத் தேவையில்லை. முடிவில் நிலை-மூலதனத் துக்காக முதலீடு செய்யப்படும் மூலதன-மதிப்பு அதன் நிலவல் வடிவமான உற்பத்திச் சாதனங்கள் செயல்படும் காலம் முழுமை யிலும் அதன் வடிவங்களாலான சுற்றினைத் தசையுருவில் கடப் பதில்லை; அதன் மதிப்பு மட்டும்தான் கடக்கிறது; இம்மதிப்புங் கூட சன்னம் சன்னமாகவும் பையப் பையவும்தான் கடக்கிறது. வேறு விதமாகச் சொன்னால், இம்மதிப்பில் ஒரு பகுதிதான் தொடர்ச் சியாகச் சுற்றியோடி சரக்குகளது மதிப்பின் ஒரு பகுதியாகி, பணமாக மாற்றமடைகிறது. அதன் ஆதி வடிவமான தசையுருவிற்கு அது மாற்றப்படுவதில்லை. உற்பத்திச் சாதனம் [means of production] முழுமையாக நுகரப்பட்டு அதன் பணிக் காலம் முடியும் வரை, பணம் திரும்பவும் உற்பத்திச் சாதனத்தின் தசையுருவத்துக்கு [bodily form] மாற்றமடைவ்தில்லை.

4. உற்பத்தி நிகழ்முறை தடைபடாமல் நடைபெற வேண்டு மானால், நிலை-மூலதனத்தின் கூறுகளைப் போலவே, சுழல்-மூலதனத்தின் கூறுகளும் அந்நிகழ்முறையின் போது நிரந்தரமாய் நிலைத்திருந்தாக வேண்டும். ஆன்ால் இவ்வாறு நிலைத்திருக்கையில் சுழல்-மூலதனக் கூறுகளும் பண்ட வடிவில் ஓயாமல் மாற்றீடு செய்யப்படுகின்றன (உற்பத்திச் சாதனங்கள் அதே வகையைச் சேர்ந்த புதிய சாதனங்களாலும், உழைப்புச் சக்தி மீண்டும் மீண்டும் விலைக்கு வாங்கப்பட்டும் மாற்றீடு செய்யப்படுகின்றன). நிலை-மூலதனக் கூறுகளை எடுத்துக் கொண்டால், அவை நீடித் திருக்கும் வரை அவற்றை மாற்றீடு செய்யவோ, புதிதாய் விலை கொடுத்து வாங்கவோ தேவையில்லை. உற்பத்தி நிகழ்முறையின் போது கச்சாப் பொருட்களும் துணைப் பொருட்களும் எப்போதும்

இருந்து வருகின்றன; ஆனால் பூர்த்தியான வடிவிலான உற்பத்திப் பொருளின் ஆக்கத்தின் போது நுகரப்பட்டு விடும் பழைய கூறுகளுக்கு பதில் அதே வகையைச் சேர்ந்த புதிய கூறுகள் உடனுக்குடன் அவற்றின் இடத்துக்கு வந்து விடுகின்றன. இவ்வாறே உற்பத்தி நிகழ்முறையின் போது உழைப்புச் சக்தியும் எப்போதும் இருந்து வருகிறது; புதிதாகத் திரும்பத் திரும்ப விலைக்கு வாங்கப்படுவதால் தான் இது சாத்தியமாகிறது; இப்படி வாங்குகையில் அடிக்கடி ஆட்களை மாற்றி விடுவது உண்டு. ஆனால் சுழல்-மூலதனப் புரள்வுகள் இப்படித் திரும்பத் திரும்ப நடைபெற்றுக் கொண்டிருக்கையில், கட்டடங்களும் இயந்திரங்களும் இன்ன பிறவும் மாற்றமின்றி திரும்பத் திரும்ப நடைபெறும் ஒரேவிதமான உற்பத்தி நிகழ்முறைகளில். ஈடுபட்டுத் தொடர்ந்து செயல் புரிகின்றன.

## II. நிலை-மூலதனத்தின் அடக்கக் கூறுகளும் மாற்றீடும் மராமத்தும் திரட்டலும்

மூலதன முதலீடு எதிலும் நிலை-மூலதனத்தின் வெவ்வேறு கூறுகள் வெவ்வேறு ஆயுட் காலமும், எனவே வெவ்வேறு புரள்வுக் காலமும் கொண்டவை. எடுத்துக்காட்டாக, இரயில் போக்குவரத்தில் தண்டவாளங்கள், அடிக்கட்டைகள், மேட்டுக் கரைகள், நிலையங்கள், பாலங்கள், குகைப் பாதைகள், இழுபொறிகள், பெட்டிகள் ஆகியவற்றின் பணிக் காலங்களும் [functional periods] மறுவுற்பத்திக் காலங்களும் [times of reproduction] வெவ்வேறானவை. ஆகவே, அவற்றுக்காக முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் புரள்வுக் காலங்களும் [times of turnover] வெவ்வேறானவை. கட்டடங்கள், நிலைய மேடைகள், நீர்த்தேக்கத் தொட்டிகள், வாராவதிகள், குகைப் பாதைகள், அகழ்வுகள், மேட்டுக் கரைகள் முதலானவற்றை, சுருங்கச் சொல்லின் ஆங்கிலேய இரயில் போக்குவரத்தில் ''கலைப் படைப்புகள்'' எனப்படுகிற ஒவ்வொன்றையுமே மிகப் பல ஆண்டுகளுக்குப் புதுப்பிக்கத் தேவையில்லை. சீக்கிரமாய்த் தேய்ந்து போகிறவை தண்டவாளங்களும், அவற்றில் ஓடும் வண்டிகளுமே.

நவீன இருப்புப் பாதைகள் முதன் முதலாய் அமைக்கப்பட்ட போது இருப்புப் பாதை நூறாண்டு காலம் நீடித்து நிற்குமென்று பரவலாய்க் கருதப்பட்டது. பிரபலமான நடைமுறைப் பொறியாளர் பலரும் இவ்வாறே கருதினார்கள். தண்டவாளங்களின் தேய்மானம் அற்பசொற்பமே ஆதலால் நிதி விவகாரங்களிலும் ஏனைய காரியங்களிலும் நடைமுறையில் அதை கவனியாது ஒதுக்கி விடலாம் என்றே கருதப்பட்டது. நல்ல தண்டவாளங்களாய் இருப்பின் 100 முதல் 150 ஆண்டு ஆயுள் உடையனவாய் இருக்கும் என்று கொள்ளப்பட்டது. தண்டவாளத்தின் ஆயுளானது இழுபொறிகளின் வேகம், இரயில் வண்டிகளின் எடையும் எண்ணிக்கையும்,

தண்டவாளங்களின் திண்மை ஆகியவற்றையும் உடன்வருகிற எண்ணற்ற பிற நிலைமைகளையும் பொறுத்ததாகையால், சராசரி 20 ஆண்டுக்கு மேற்படுவதில்லை என்று. விரைவில் தெரியலாயிற்று. நெரிசலான போக்குவரத்து மையங்களாகிய இரயில் முனையங்கள் சிலவற்றில் ஒரே ஆண்டில் தண்டவாளங்கள் தேய்ந்து விடுகின்றன. 1867வாக்கில் முதன் முதலாய் உருக்குத் தண்டவாளங்கள் போடப்பட்டன. இரும்புத் தண்டவாளங்களுக்கு ஆனதைப் போல் இரு மடங்கு செலவாயிற்று என்றாலும், அவை இரு மடங்குக்கு அதிகமான காலத்துக்குக் கெடாதிருந்தன. அடிக்கட்டைகள் மரத்தில் இருக்குமாயின் அவற்றின் ஆயுள் 12 முதல் 15 ஆண்டுகளே. வண்டிகளைப் பொறுத்த வரை, பயணி வண்டிகளைக் காட்டிலும் சரக்கு வண்டிகள் துரிதமாகத் தேய்ந்து போவது தெரிந்தது. இழுபொறியின் ஆயுள் சுமார் 10 முதல் 12 ஆண்டுகளாகும் என்று 1867இல் மதிப்பிடப்பட்டது.

பயன்படுத்துவதன் விளைவாகவே தேய்மானம் ஏற்படுகிறது. பொதுவாக, தண்டவாளத் தேய்மானம் "இரயில் வண்டித் தொடர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது." (மு. ஆ., எண் 17645.)[26] வேகம் அதிகரிக்கையில் இருப்புப் பாதையின் தேய்மானம் வேகத்தின் வர்க்கப் பெருக்கத்தைக் காட்டிலும் கூடுதலான விகிதத்தில் அதிகரிக்கிறது. அதாவது இரயில் வண்டியின் வேகம் இரு மடங்கு அதிகரிக்குமானால், பாதையின் தேய்மானச் செலவு நான்கு மடங்குக்கு மேல் அதிகரிக்கிறது. (மு. ஆ., எண் 17046.)

இயற்கைச் சக்திகளின் செயலாலும் கூட தேய்மானம் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, அடிக்கட்டைகள் வீணாவது வண்டிகள் ஓடுவதால் ஏற்படும் தேய்வால் மட்டுமல்ல; அவை இயற்கையாகவே மடித்துப் போகின்றன. "இருப்புப் பாதையைப் பராமரிப்பதற்கு ஆகும் செலவு அவ்வளவாக அதில் நடைபெறும் போக்குவரத்தால் ஏற்படும் தேய்மானத்தைச் சார்ந்திருக்கவில்லை. திறந்தவெளிச் சுழலின் பாதிப்புக்கு உள்ளாகும் மரம், இரும்பு, செங்கல், காரை ஆகியவற்றின் தரத்தையே அதிகம் சார்ந்திருக்கிறது. ஓராண்டு காலப் போக்குவரத்தைக் காட்டிலும் ஒரு மாத காலக் கடும் பனி இருப்புப் பாதைக்கு கூடுதலான சேதம் உண்டாக்குகிறது." (ஆர். பி. வில்லியம்ஸ், "நிரந்தரப் பாதையின் ப்ராமரிப்பு குறித்து," 1867 இலையுதிர் காலத்தில் குடிமைத் துறைப் பொறியாளர் கழகத்தில் வாசித்தளித்த ஆய்வறிக்கை.)*

[26] மு. ஆ. என்ற குறிக்கப்படும் மேற்கோள்கள் இரயில் போக்குவரத்து பற்றிய முடியரசு ஆணையத்தின் அறிக்கையிலிருந்து தரப்படுபவை. ஆணையர்களின் முன்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சியக் குறிப்புகள். பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் சமர்ப்பிக்கப்பட்டது, லண்டன், 1867. கேள்வி-பதில்கள் எண்ணிடப்பட்டுள்ளன. அந்த எண்களே இங்கு குறிக்கப்படுகின்றன.

* ஆர். பி. வில்லியம்ஸ் ஆய்வறிக்கை, 1867 டிசம்பர் 2 தேதிய மணி மார்க்கெட் ரெவ்யூ ஏட்டில் வெளியிடப்பட்டது.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

முடிவில், நவீனத் தொழில் துறையெங்கிலும் போலவே இங்கும் கௌரவ மதிப்பிறக்கம் [moral depreciation] ஒரு பங்கு வகிக்கிறது. பொதுவாகச் சொன்னால், £40,000 விலைக்கு வாங்கிய அதே அளவு இரயில் வண்டிகளையும் இழுபொறிகளையும் பத்தாண்டு கழித்து £30,000 விலைக்கு வாங்கலாம். வண்டியின் மதிப்பிறக்கம்—அதன் பயன்-மதிப்பில் தேய்வே இல்லா விட்டாலும் கூட—சந்தை விலையில் 25 சதவீதமாகக் கணக்கிடப்பட வேண்டும். (லார்டுனர், இரயில் போக்குவரத்துப் பொருளாதாரம்.)

''குழாய்ப் பாலங்களைப் புதிதாய் அமைக்கும் போது இப்போதைய வடிவில் அவற்றை இனி அமைக்கப் போவதில்லை.'' (ஏனென்றால் இப்போது இப்படிப்பட்ட பாலங்களுக்கு முன்னிலும் சிறந்த வடிவமைப்புகள் இருக்கின்றன.) ''படிப்படியான முறையில் சில பகுதிகளை அகற்றி விட்டு அவற்றுக்கு பதில் புதியவற்றைப் பொருத்தும் சாதாரண மராமத்துகள் நடைமுறைக்கு ஏற்றவையல்ல. (வி. பி. ஆதாம்ஸ், சாலைகளும் இருப்புப் பாதைகளும், லண்டன், 1862) தொழில் துறையின் முன்னேற்றத்தால் உழைப்புச் சாதனங்கள் சர்வசதாகாலமும் பெரிய அளவில் திருத்தியமைக்கப்படுகின்றன. எனவே அவை அவற்றின் ஆரம்ப வடிவில் அல்லாமல், திருந்திய வடிவில்தான் மாற்றீடு செய்யப்படுகின்றன. ஒரு புறம், நிலை-மூலதனத் திரள் குறிப்பிட்ட தசையுருவில் செய்யப்பட்டு, அந்த வடிவத்தில் குறிப்பிட்ட சராசரி ஆயுளைப் பெற்றிருப்பது காரணமாய், புதிய இயந்திரங்களையும் இன்ன பிறவற்றையும் படிப்படியாகவே புகுத்த முடிகிறது; மேம்பட்ட உழைப்புச் சாதனங்களைத் துரிதமாகவும் பரவலாகவும் புகுத்துவதற்கு இந்நிலைமை தடையாகிறது. மறு புறம் பழைய உழைப்புச் சாதனங்களின் இயற்கை ஆயுள் முடிவதற்கு முன்பே, போட்டி காரணமாய் அவற்றுக்கு பதில் புதிய உழைப்புச் சாதனங்களைப் புகுத்த வேண்டியதாகிறது; குறிப்பாகத் தீர்மானகர மாற்றங்கள் ஏற்படும் போது இப்படிச் செய்ய வேண்டியதாகிறது. திடீர் விபத்துகள் அல்லது நெருக்கடிகளால், சமுதாயந் தழுவிய பரந்த அளவில் ஆலைத் தளவாடங்களை உரிய காலத்துக்கு முன்னதாகவே மாற்றீடு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

நிலை-மூலதனம் பயன்படுத்தப்படும் போது, சராசரியாக அதன் பயன்-மதிப்பில் ஏற்படும் இழப்புக்கேற்ற விகிதத்தில் அது உற்பத்திப் பொருளுக்கு சிறுகச் சிறுகப் பெயர்த்தளிக்கும் மதிப்புப் பகுதியே தேய்மானம் [wear and tear] எனப்படுகிறது (கௌரவ மதிப்பிறக்கம் இதில் உட்படாது).

நிலை-மூலதனம் குறிப்பிட்ட சராசரி ஆயுளுடையதாகும் விதத்தில் இந்தத் தேய்மானத்தில் ஒரு பகுதி நடைபெறுகிறது. இந்தக் காலம் முழுமைக்கும் ஒட்டு மொத்தமாய் ஒரே தொகையாக அது முன்னீடு செய்யப்படுகிறது. இந்தக் காலம் முடிந்த பிறகு, அதனை

முழுமையாக மாற்றீடு செய்ய வேண்டும். குதிரைகள் போன்ற உயிருள்ள உழைப்புச் சாதனங்களைப் பொறுத்த வரை, அவற்றின் மறுவுற்பத்திக்கு இயற்கையே காலம் குறிக்கிறது. உழைப்புச் சாதனங்கள் என்ற முறையில் அவற்றின் சராசரி ஆயுட் காலம் இயற்கை விதிகளால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்தக் காலம் முடியும் போது அவற்றைப் புதியவற்றால் மாற்றீடு செய்ய வேண்டும். குதிரையைப் பகுதி பகுதியாக மாற்றீடு செய்ய முடியாது; மற்றொரு குதிரையால்தான் மாற்றீடு செய்ய முடியும்.

நிலை-மூலதனத்தின் ஏனைய கூறுகள் காலவட்ட முறையிலான, அல்லது பகுதி பகுதியான மாற்றீட்டுக்கு இடமளிக்கின்றன. பகுதி பகுதியான அல்லது காலவட்ட முறையிலான மாற்றீடு இங்கே தொழிலின் படிப்படியான விரிவாக்கத்திலிருந்து வேறுபடுவதாகும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நிலை-மூலதனத்தின் ஒரு பகுதி ஒருபடித்தான [homogeneous] கூறுகளால் ஆனது; ஆனால் இந்தக் கூறுகள் நீடித்திருக்கும் காலங் கள் சமமானவை அல்ல. வெவ்வேறு அளவிலான காலங்களில் இவை பகுதி பகுதியாக மாற்றீடு செய்யப்படுகின்றன. இரயில் நிலையங்களில் உள்ள தண்டவாளங்களை உதாரணமாய்க் குறிப் பிடலாம். இருப்புப் பாதையின் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த தண்டவாளங்களைக் காட்டிலும் இவற்றை அடிக்கடி மாற்றீடு செய்தாக வேண்டும். அடிக்கட்டைகளுக்கும் இது பொருந்தும். நாற் பதாம் ஆண்டுகளில் பெல்ஜிய இரயில் போக்குவரத்தில் ஆண்டு தோறும் 8 சதவீத அடிக்கட்டைகளை மாற்றீடு செய்ய வேண்டி யிருந்ததாக லார்டுனர் சொல்கிறார். இவ்விதம் 12½ ஆண்டு களில் எல்லா அடிக்கட்டைகளும் மாற்றீடு செய்யப்பட்டன. ஆக, நிலைமை இதுதான்: குறிப்பிட்ட தொகை குறிப்பிட்ட வகை நிலை-மூலதனத்துக்காக, உதாரணமாய்ப் பத்தாண்டு காலத்துக்கு, முன் னீடு செய்யப்படுகிறது. முழு மொத்தமாய் ஒரே சமயத்தில் இந்த முதலீடு செய்யப்படுகிறது. ஆனால், இந்த நிலை-மூலதனத்தின் குறிப்பிட்ட ஒரு பகுதியினது மதிப்பு உற்பத்திப் பொருளின் மதிப் பில் சேர்ந்து, அதனோடு கூடவே பணமாக மாற்றப்படுகிறது; இந்தக் குறிப்பிட்ட பகுதியை ஒவ்வோர் ஆண்டும் அதே வகைப் பொருளால் மாற்றீடு செய்தாக வேண்டும். அதே போது இந்த நிலை-மூலதனத்தின் மீதப் பகுதி தொடர்ந்து அதன் ஆரம்பத் தசையுருவில் இருந்து வருகிறது. ஒரே நேரத்தில் மொத்தமாக முன்னீடு செய்யப்படுவதும், பகுதி பகுதியாகத் தசையுருவில் மறு வுற்பத்தி செய்யப்படுவதும்தான் இந்த நிலை-மூலதனத்தை சுழல்-மூலதனத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன.

நிலை-மூலதனத்தின் பிற பகுதிகள் பலபடித்தான [heteroge-neous] கூறுகளால் ஆனவை. ஒரே காலத்தில் ஒருங்கே இவை தேய்ந்து போவதில்லை, ஆகவே வெவ்வேறு காலங்களில் இவற்றை'

மாற்றீடு செய்ய வேண்டியதாகிறது. குறிப்பாக இயந்திரங்களின் விவகாரத்தில் இப்படித்தான் ஆகிறது. நிலை-மூலத்னத்தின் வெவ்வேறு பகுதிகள் வெவ்வேறு ஆயுட் காலங்களைப் பெற்றிருப்பது போலவே, நிலை-மூலதனத்தின் ஒரு பகுதியாய் இருக்கும் எந்த இயந்திரத்தின் வெவ்வேறு உறுப்புகளும் வெவ்வேறு ஆயுட் காலங்களைப் பெற்றிருப்பதால் மேலே நாம் சொன்னது இந்த இயந்திர உறுப்புகளுக்கும் பொருந்தும்.

பகுதி பகுதியான மாற்றீட்டின் போதே தொழில் படிப்படியாக விரிவடைவது தொடர்பாக, நாம் கூற வேண்டியது வருமாறு: நிலை-மூலதனம் உற்பத்தி நிகழ்முறையின் போது தொடர்ந்து அதன் தசையுருவில் நீடித்து அதற்குரிய செயல்களைச் செய்து வந்த போதிலும், சராசரித் தேய்மானத்துக்கேற்ற விகிதத்தில் அதன் மதிப்பின் ஒரு பகுதி உற்பத்திப் பொருளில் சேர்ந்து சுற்றியோடி, பணமாக மாறுகிறது என்றும், மறுவுற்பத்தி செய்யப்படுவதற்காகக் காத்திருக்கும் மூலதனத்தின் மாற்றீட்டுக்கான சேமப் பண நிதியில் [money reserve fund] ஒரு கூறாக இந்தப் பணமும் சேருகிறது என்றும் பார்த்தோம். நிலை-மூலதனத்தின் மதிப்பில் பணமாக மாறும் இந்தப் பகுதி தொழிலை விரிவாக்கவோ இயந்திரங்களின் திறனை உயர்த்தும் விதத்தில் அவற்றில் மேம்பாடுகள் செய்யவோ பயன்படலாம். இவ்விதம் குறுகிய காலமோ நீண்ட காலமோ நடைபெறுகிற இந்த மறுவுற்பத்தி சமுதாயத்தின் நோக்குநிலையில் விரிதிற மறுவுற்பத்தி ஆகும்; உற்பத்திக் களம் விரிவடையுமானால் மறுவுற்பத்தியின் அளவுவீதம் அதிகரிக்கிறது; உற்பத்திச் சாதனங்களின் பயன்திறன் உயர்ந்திடுமானால், மறுவுற்பத்தியின் மும்முரம் அதிகரிக்கிறது. இந்த விரிதிற மறுவுற்பத்தி திரட்டலால், அதாவது உபரி-மதிப்பு மூலதனமாக மாறுவதால் விளைவதல்ல. நிலை-மூலதனத்தின் தசையுருவிலிருந்து கிளை விட்டுப் பிரியும் மதிப்பானது பண வடிவம் பெற்று அதனிடமிருந்து துண்டித்துக் கொண்டு, திரும்பவும் தன்னை அதே வகைப்பட்ட புதிய கூடுதல் நிலை-மூலதனமாகவோ அதிக பயன்திறனுள்ள நிலை-மூலதனமாகவோ மாற்றிக் கொள்வதால் விளைவதாகும் இந்த விரிதிற மறுவுற்பத்தி. ஒரு தொழில் இப்படிப் படிப்படியாகப் பெருகிச் செல்வது எவ்வளவு தூரம் சாத்தியம், எந்தப் பரிமாணங்களில் இதைச் செய்ய முடியும், இவ்விதம் திரும்ப முதலீடு செய்வதற்கு எந்தப் பருமனில் சேம நிதி திரட்டப்பட வேண்டும், இதற்குத் தேவைப்படும் காலம் எவ்வளவு என்பதெல்லாம் ஓரளவுக்கு அந்தத் தொழிலின் பிரத்தியேக இயல்புகளைப் பொறுத்ததாகும். இப்போதுள்ள இயந்திர சாதனத்தின் நுட்பங்களில் தொடர்ந்து மேலும் எந்த அளவுக்கு மேம்பாடுகள் செய்ய முடியும் என்பது இந்த மேம்பாடுகளின் தன்மையையும் இயந்திர சாதனத்தின் கட்டமைப்பையும் சார்ந்தது. இருப்புப் பாதை நிர்மாணத்தில் தொடக்க

நிலையிலேயே இவை எல்லாம் எவ்வளவு உன்னிப்பாய்க் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்பதை ஆதாம்ஸ் தெளிவுபடுத்து கிறார்: ''கட்டமைப்பு முழுதும் தேன் கூட்டின் ஆதாரக் கோட் பாட்டை அடிநிலையாய்க் கொண்டிருக்க வேண்டும்; அதாவது வரம்பற்ற விரிவாக்கத் திறனுடையதாய் இருக்க வேண்டும். நிலை யான, இறுதியான செவ்வொழுங்குக் கட்டமைப்புகளை பிற்பாடு விரிவாக்கம் தேவைப்படும் போது இடிக்க வேண்டியிருக்கும் என்பதால், இவற்றை நிராகரிக்க வேண்டும்.'' *(பக்கம் 123.)*

பெருமளவுக்கு இது கிடைக்கக் கூடிய இட வசதியைப் பொறுத் தது. சில கட்டடங்களில் மேலும் மேலும் மாடிகள் கட்டலாம். ஏனையவற்றைப் பக்கவாட்டில் விரிவாக்க வேண்டியிருக்கும். இதற்குக் கூடுதல் நிலம் தேவை. முதலாளித்துவப் பொருளுற்பத்தி யில் ஒரு புறம் பொருட்கள் ஏராளமாய் விரயமாகின்றன. மறு புறம் தொழில் படிப்படியாக விரியும் போது மேற்கூறியது போல் எக்கச்சக்கமான பக்கவாட்டு விரிவாக்கமும் மிகுதியாய் நடை பெறுகிறது. *(இதனால் ஓரளவுக்கு உழைப்புச் சக்திக்கும் கேடு விளைகிறது.)* ஏனெனில் எதுவும் சமுதாய அளவில் திட்டமிடப் பட்டு அதற்கேற்ப நடைபெறுவதில்லை; தனிப்பட்ட முதலாளி செயல்பட வேண்டியிருக்கும் எண்ணற்ற விதமான நிலைமை களையும், பயன்படுத்த வேண்டியிருக்கும் வெவ்வேறு சாதனங் களையும் பிறவற்றையும் பொறுத்தே யாவும் நடைபெறுகின்றன. இதனால் உற்பத்திச் சக்திகள் பெரிய அளவில் விரயமாக நேர் கிறது.

சேமப் பண நிதியை *(அதாவது திரும்பவும் பணமாக மாறியுள்ள நிலை-மூலதனப் பகுதியை)* இப்படிச் சிறுகச் சிறுக மறுமுதலீடு செய்தல் ஏனைய யாவற்றிலும் விட வேளாண்மையில் எளிது. இங்கே குறிப்பிட்ட பரப்புள்ள சாகுபடி நிலம் சாத்தியமான அதிக அளவுக்கு மூலதனத்தைப் படிப்படியாகக் கிரகிக்க வல்லது. இயற்கையான மறுவுற்பத்தி நடைபெறும் கால்நடை வளர்ப்பு போன்றவற்றிலும் இதுவேதான் நிலைமை.

நிலை-மூலதனத்துக்கு விசேஷப் பராமரிப்புச் செலவுகள் அவசியம். ஒரு பகுதி பராமரிப்புக்கு உழைப்பு நிகழ்முறையே வழி செய்கிறது; உழைப்பு நிகழ்முறையில் ஈடுபடவில்லையானால் நிலை-மூலதனம் கெட்டுப் போகிறது. *(பயன்படுத்தப்படாமலிருக் கையில் இயந்திர சாதனம் அடையும் தேய்மானம், முதல் பாகம், அத்தியாயம் VIII, அத்தியாயம் XV.)* ஆகவே, குத்தகை நிலங்கள் வழக்கம் போல் சாகுபடி செய்யப்படவில்லையானால், ஆங்கி லேயச் சட்டம் அவற்றைத் தரிசு நிலங்களாகவே பாவிக்கிறது. *(டபிள்யூ. ஏ. ஹோல்ஸ்வொர்த், பாரிஸ்டர் அட் லா, உடைமை யாளரும் வாடகையாளரும் பற்றிய சட்டம், லண்டன், 1857, பக்கம் 96.)* உழைப்பு நிகழ்முறையின் போது பயன்படுவதால்

விளையும் இந்தப் பராமரிப்பு உயிருள்ள உழைப்பின் இயல்பிலேயே உள்ளார்ந்திருக்கும் வரப்பிரசாதமாகும். மேலும் கெடாது காப்பதற்கு உழைப்பாளியிடமுள்ள சக்தி இரு விதமாகச் செயல்படுகிறது. ஒரு புறம் உழைப்பின் இலக்குப் பொருட்களின் மதிப்பை உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்தளித்து அம்மதிப்பு கெடாது பாதுகாக்கிறது; மறு புறம் உழைப்புச் சாதனங்களின் மதிப்பை உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்திடாமலே அம் மதிப்பைப் பாதுகாக்கிறது; உழைப்பு நிகழ்முறையின் போது அவற்றைச் செயல்பட வைத்து அவற்றின் பயன்-மதிப்பைப் பாது காப்பதன் மூலம் இதைச் செய்கிறது.

நிலை-மூலதனத்தைப் பழுதின்றிப் பராமரிப்பதற்கென்றே குறிப்பிட்ட அளவு உழைப்பைச் செலவிட வேண்டியிருக்கிறது. இயந்திர சாதனத்தை அவ்வப்போது சுத்தம் செய்தாக வேண்டும், இல்லையேல் இயந்திர சாதனம் பயனற்றதாகி விடும். கூடுதலாக இதற்கென உழைப்பைச் செலவிட்டாக வேண்டும். உற்பத்தி நிகழ் முறையிடமிருந்து பிரிக்க முடியாத படி அதோடு இணைந்திருக்கும் இயற்கைச் சக்திகளால் ஏற்படும் தீய விளைவுகளைத் தடுப்பதற்காக, அதாவது இயந்திர சாதனத்தை ஒழுங்காய் வேலை செய்யும் நிலை யில் வைத்திருப்பதற்காக இந்த உழைப்பு செலவிடப்படுகிறது. நிலை-மூலதனத்தின் இயல்பான ஆயுளைக் கணக்கிடுகையில் இந்த ஆயுள் முழுவதும் அது தனக்குரிய பணிகளை இயல்பான முறை யில் புரிவதற்கு வேண்டிய எல்லா நிலைகளும் அதற்கு உண்டாக்கித் தரப்படுவதாகக் கொண்டுதான் கணக்கிடுகிறோம். மனிதனின் ஆயுள் சராசரியாக 30 ஆண்டுகள் என்னும் போது கழுவியும் குளித்தும் சுத்தமாயிருப்பான் என்று கொண்டுதானே இப்படிச் சொல்கிறோம், அதே போலத்தான். இங்கே பரிசீலிக்கப்படுவது இயந்திரத்தைப் பயன்படுத்தும் பொருட்டு ஓயாமல் தேவைப்படுகிற கூடுதல் உழைப்புதானே தவிர இயந்திரத்தில் அடங்கியுள்ள உழைப் பின் மாற்றீடு அல்ல; இயந்திரத்துக்காகச் செலவிடப்படும் உழைப்பு தானே தவிர இயந்திரத்தைக் கொண்டு செலவிடப்படும் உழைப்பு அல்ல. இங்கே இயந்திரம் உற்பத்தியின் இயக்கியாக அல்லாமல் கச்சாப் பொருளாகவே அமைகிறது. இந்த உழைப்புக்காகச் செல விடப்படும் மூலதனம் உற்பத்திப் பொருளை உருவாக்குகிற முறை யான உழைப்பு நிகழ்முறையில் சேராத போதிலும், அதனை சுழல்-மூலதனமாகவே வகைப்படுத்த வேண்டும். உற்பத்தியின் போது இந்த உழைப்பு தொடர்ந்து செலவிடப்பட வேண்டும்; எனவே இந்த உழைப்பின் மதிப்பு தொடர்ந்து உற்பத்திப் பொருளின் மதிப் பால் மாற்றீடு செய்யப்பட வேண்டும். இதற்காகச் செலவிடப்படும் மூலதனம் திறனிலாச் செலவுகளுக்கான சுழல்-மூலதனப் பகுதியைச் சேர்ந்தது. இது உற்பத்திப் பொருட்களின் மதிப்புகளிடையே வரு டாந்தர சராசரிக் கணக்கீட்டின் படி வினியோகமாதல் வேண்டும்.

சுத்தம் செய்வதற்கு ஆகும் இந்த உழைப்பை முறையான தொழில் துறையில் தொழிலாளர்கள் தமது ஓய்வு நேரத்தில் இலவசமாக அளிக்கிறார்கள் என்பதையும், எனவே பல சந்தர்ப்பங்களில் உற்பத்தி நிகழ்முறையின் போதும் இந்த வேலை செய்கிறார்கள் என்பதையும், பெரும்பாலான விபத்துகளுக்கு இதுவே காரணம் என்பதையும் முன்பே பார்த்தோம் (முதல் பாகம், பக்கம் 576-77, குறிப்பு 590). இந்த உழைப்பு உற்பத்திப் பொருளின் விலையில் சேருவதில்லை. அதைப் பொறுத்த வரை நுகர்வாளர் அதனை இலவசமாகப் பெறுகிறார். முதலாளியும் தமது இயந்திரத்துக்கு ஆகும் இந்தப் பராமரிப்புக்காகச் செலவு செய்யவில்லை. இதற்காகத் தொழிலாளி தம்மையே செலவிட்டுக் கொள்கிறார். இது மூலதனத்தின் சுயகாப்பு மருமங்களில் ஒன்றாகும். உண்மையில் இந்த நிலைமை இயந்திர சாதனத்தின் மீது சட்டப்படி தொழிலாளியை உரிமையுடையவராக்குகிறது. இதன்படி முதலாளித்துவச் சட்டத்தின் படியே கூட தொழிலாளி இயந்திர சாதனத்தின் சகவுடைமையாளர் ஆகிறார். ஆனால் மிகப் பல தொழிற் கிளைகளில் இயந்திர சாதனத்தை சுத்தம் செய்வதற்காக அதை உற்பத்தி நிகழ்முறையிலிருந்து அகற்ற வேண்டியிருக்கிறது. இங்கெல்லாம் சுத்தம் செய்யும் வேலை இடையிடையே ஓய்வு நேரத்தில் நடைபெற வழியில்லை. இரயில் போக்குவரத்தில் இயங்கும் இழுபொறிகள் இதற்கு ஓர் உதாரணமாகும். இந்தப் பராமரிப்பு வேலைகள் இங்கு நடப்புச் செலவுகளாகக் கணக்கிடப்படுகின்றன; இவ்விதம் சுழல்-மூலதனத்தின் ஒரு கூறாகின்றன. எடுத்துக்காட்டாக, "சரக்கு இரயிலின் இழுபொறி *3* நாள் ஓடினால் ஒரு நாள் பணிமனையில் இருந்தாக வேண்டும்....கொதிகலனின் சூடு ஆறுவதற்கு முன்னால் அதனைக் கழுவ முயன்றால் பெருங்கேடே விளையும். (மு. ஆ., எண் *17823*.)

மெய்யாகவே மராமத்து செய்கையில் அல்லது ஒட்டுப்போட்டு பழுது பார்க்கையில் மூலதனமும் உழைப்பும் செலவாகின்றன. ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தில் வகை செய்யப் படாத செலவுகள் இவை. ஆகவே நிலை-மூலதனத்தின் மதிப்பைப் படிப்படியாக மாற்றீடு செய்வதன் மூலம் இந்தச் செலவுகளை சரிக்கட்டுவது சாத்தியமல்ல—எப்படியும் எல்லா சந்தர்ப்பங்களிலும் சாத்தியமல்ல. எடுத்துக்காட்டாக, நிலை-மூலதனத்தின் மதிப்பு £10,000 ஆகவும் அதன் மொத்த ஆயுள் 10 ஆண்டுகளாகவும் இருப்பின், பத்தாண்டுகள் முடியும் போது முழுதும் பணமாக மாறியுள்ள இந்த £10,000, ஆரம்பத்தில் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மதிப்பை மட்டுமே மாற்றீடு செய்யும்; மராமத்துகளுக்காக இடைக்காலத்தில் சேர்க்கப்பட்ட மூலதனத்தையோ உழைப்பையோ அது மாற்றீடு செய்வதில்லை. இது மதிப்பில் கூடுதலாய் வந்து சேரும் அடக்கக் கூறு. இது மொத்தமாய் ஒரே

நேரத்தில் முன்னீடு செய்யப்படாதது, தேவையைப் பொறுத்து அவ்வப்போது முன்னீடு செய்யப்படுவது. அதனை முன்னீடு செய்ய வேண்டியிருக்கும் பல்வேறு காலங்கள் இயல்பாகவே தற்செயலானவை. உழைப்புச் சாதனங்களுக்காகவும் உழைப்புச் சக்திக்காகவும் இவ்விதம் பிற்பாடு சிறு சிறு அளவுகளில் கூடுதல் மூலதனத்தை முதலீடு செய்வது நிலை-மூலதனம் அனைத்துக்கும் அவசியமானதாகும்.

இயந்திர சாதனங்கள் முதலானவற்றின் தனித்தனி உறுப்புகள் அடையக் கூடிய சேதம் இயல்பாகவே தற்செயலானது. ஆகவே இதற்கான மராமத்துகளும் தற்செயலானவை. ஆயினும் மராமத்துகளில் இரு வகைகளை ஏனையவற்றிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்; இவை தன்மையில் ஓரளவு நிலையானவை, நிலை-மூலதனத்தின் ஆயுட்காலத்தில் வெவ்வேறு பருவங்களுக்கு உரியவை. ஒன்று: பிள்ளைப் பருவக் கோளாறுகள்; இரண்டு: ஆயுளின் பிற்பாதிக்குரியவை, முதலாவதைக் காட்டிலும் எண்ணிக்கையில் மிக அதிகமானவை. புதிய இயந்திரம் குற்றங் குறையற்றதாய் இருக்கலாம்; ஆனால் வேலை தொடங்கியதும் சீக்கிரமே குறைபாடுகள் தெரிய வரும், பிறகு உழைப்பைச் செலவிட்டு இவற்றை சரிசெய்தாக வேண்டும். மறு புறம், எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாய் ஓர் இயந்திரம் பாதி ஆயுளைக் கடந்து செல்கிறதோ, எனவே வழக்கமான தேய்மானம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாகி அதன் பிண்டப் பொருள் தேய்ந்து போய் பழுதுபட்டிருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் அதன் சராசரி ஆயுட்காலத்தின் எஞ்சிய பகுதியில் அதனை செயல்படவைப்பதற்கு அடிக்கடி பெரிய அளவில் மராமத்துகள் தேவைப்படுகின்றன — அகாலமாய் இறந்து விடாதிருக்கும் பொருட்டு, வலுவான இளைஞரைக் காட்டிலும் வயோதிகருக்கு அதிக மருத்துவச் செலவுகள் செய்ய வேண்டியிருக்கிறது அல்லவா, அது போலத்தான். ஆகவே, மராமத்து வேலைகள் தற்செயலானவையாக இருந்தாலும் நிலை-மூலதனத்தினது ஆயுளின் பல்வேறு கட்டங்களிலும் ஒரே அளவுக்குத் தேவைப்படாமல் ஏற்றத் தாழ்வான அளவுகளில் தேவைப்படுகின்றன.

மேற்சொன்னதிலிருந்தும், இயந்திரங்களுக்கான மராமத்துப் பணியின் வேலைகள் பொதுவாகவே தற்செயலானவையாய் இருப்பதிலிருந்தும் வரப்பெறும் முடிவுகளாவன:

முதலாவதாக, மராமத்து வேலைகளை அவசியமாக்கும் நிலைமைகளைப் போலவே, மராமத்து வேலைகளுக்காக உள்ளபடியே எவ்வளவு உழைப்புச் சக்தியும் உழைப்புச் சாதனங்களும் செலவாகின்றன என்பதும் தற்செயலானதே. நிலை-மூலதன ஆயுளின் பல்வேறு கட்டங்களில் பல்வேறு அளவுகளில் மராமத்து வேலைகள் தேவைப்படுகின்றன. நிலை-மூலதனத்தின் சராசரி ஆயுளை

மதிப்பிடுகையில் வேலைக்கு ஏற்ற நல்ல நிலையில்தான் எப்போதும் அது வைக்கப்பட்டிருப்பதாகக் கொள்கிறோம்; நன்கு சுத்தம் செய யப்பட்டும் (கட்டடங்களைச் சுத்தம் செய்வதும் இதில் அடங்கும்) தேவைப்படும் போதெல்லாம் மராமத்து செய்தும் அது எப்போதும் நல்ல நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகக் கொள்கிறோம். தேய் மானத்தின் மூலம் நிலை-மூலதனத்திடமிருந்து பெயர்த்திடப்படும் மதிப்பு அதன் சராசரி ஆயுளை வைத்துக் கணக்கிடப்படுகிறது. ஆனால் பராமரிப்பு வேலைகளுக்காகக் கூடுதலாகத் தேவைப்படும் மூலதனம் தடங்கலின்றி அவ்வப்போது முன்னீடு செய்யப்படுவதாய் வைத்துத்தான் இந்த சராசரி ஆயுளைக் கணக்கிடுகிறோம்.

இரண்டாவதாக, மூலதனம் உழைப்பு இவற்றை இப்படிக் கூடுதலாகச் செலவிட்டு சேர்க்கப்படும் மதிப்பு அதே நேரத்தில் அதன் தொடர்பான சரக்குகளின் விலையில் சேர்ந்து விட முடி யாது என்பதும் தெளிவு. உதாரணமாக, நூல் உற்பத்தியாளர் ஒருவர் அவரது இயந்திரத்தில் ஒரு சக்கரம் உடைந்து விட்டது அல்லது ஒரு வார் அறுந்து விட்டது என்பதால் மட்டும் சென்ற வாரத்தை விட அதிகமான விலைக்கு இந்த வாரம் நூலை விற்க முடியாது. ஏதோ ஒரு தனிப்பட்ட தொழிற்சாலையில் நடைபெறும் இந்த விபத்தினால் பொதுவான நூற்புச் செலவுகள் பாதிக்கப்பட்டு விடுவதில்லை, எல்லா மதிப்பு-நிர்ணயிப்புகளிலும் எப்படியோ அது போல இங்கேயும் சராசரியே தீர்மானிக்கிறது. தொழில் துறை யில் குறிப்பிட்ட ஒரு கிளையில் முதலீடு செய்யப்படும் நிலை-மூலதனத்தின் ஆயுட் காலத்தில் இம்மாதிரி விபத்துகள் சராசரி எத்தனை ஏற்படுகின்றன, அப்போது அவசியமாகிற பராமரிப்பு, மராமத்து வேலைகளின் சராசரிப் பரிமாணம் எவ்வளவு என்பதை அனுபவத்தின் வாயிலாக அறிய முடிகிறது. இந்த சராசரிச் செலவு சராசரி ஆயுட்காலம் முழுவதற்கும் நிரவப்பட்டு, ஏற்ற ஈவுகளாக உற்பத்திப் பொருளின் விலையோடு சேர்க்கப்படுகின்றன. எனவே உற்பத்திப் பொருளை விற்பதன் மூலம் இந்த சராசரிச் செலவு செய்யப்படுகிறது.

இவ்வாறு மாற்றீடு செய்யப்படும் கூடுதல் மூலதனம் கால ஒழுங்கின்றி செலவிடப்பட்ட போதிலும் சுழல்-மூலதனத்தின் ஒரு பகுதியாகும். இயந்திர சாதனத்துக்கு ஏற்படும் ஒவ்வொரு சேதத் தையும் உடனுக்குடன் சரி செய்வது தலையாய முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருப்பதால் ஒப்பளவில் பெரியதான தொழிற்சாலை ஒவ்வொன்றும் முறையான தொழிலாளர்களோடு கூட இவ்வேலை களுக்கென தனியே பொறியாளர்களையும் தச்சர்களையும் கம்மியர் களையும் பொருத்துநர்களையும் பிறரையும் வேலைக்கு அமர்த்திக் கொள்கிறது. இவர்களது கூலி மாறும்-மூலதனத்தின் ஒரு பகுதியா கும்; இவர்களது உழைப்பின் மதிப்பு உற்பத்திப் பொருட்களிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது. மறு புறம், உற்பத்திச் சாதனங்களுக்கு

ஆகும் செலவுகள் உண்மையில் காலமுறைப்பாடின்றி முன்னீடு செய்யப்பட்டு உற்பத்திப் பொருளில், அதாவது நிலை-மூலதனத்தில் காலமுறைப்பாடின்றி சேருகின்றன என்றாலும் கூட, மேற்குறிப்பிட்ட சராசரியின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு, தொடர்ச்சியாக உற்பத்தி செய்யப்படுகிற பொருளின் மதிப்பில் ஒரு பகுதியாகின்றன. முறையான மராமத்துகளுக்காகச் செலவிடபபடும் இந்த மூலதனம் பல விதத்திலும் ஓர் அலாதியான வகையைச் சேர்ந்த மூலதனமாகும்; சுழல்-மூலதனமாகவோ, நிலை-மூலதனமாகவோ இதனை வகைப்படுத்துவதற்கில்லை. எனினும் நடப்புச் செலவுகளில் சேருவதால் இம்மூலதனத்தைச் சுழல்-மூலதன வகைப்பட்டதாகக் கொள்வது அதிக நியாயமுடையதாக இருக்கும்.

கணக்குப் பதிவு முறை எதுவானாலும் பதிவு செய்யப்படுகிற மெய்யான நிலவரங்கள் அதனால் எவ்விதத்திலும் மாறி விட முடியாது. ஆயினும் பல தொழில்களிலும் மராமத்துச் செலவுகளை நிலை-மூலதனத்துக்கு உள்ளபடியே ஏற்படுகிற தேய்மானத்துடன் சேர்த்து பின்வருமாறு கணக்கிடுவது வழக்கமாய் இருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். முன்னீடு செய்யப்படும் நிலை-மூலதனம் £10,000 என்றும், அதன் ஆயுட் காலம் 15 ஆண்டுகள் என்றும் கொள்வோம். அப்படியானால் வருடாந்தரத் தேய்மானம் £666⅔ ஆகும். ஆனால் ஆயுட்காலத்தைப் பத்தாண்டுகளாய்க் கொண்டு தேய்மானம் கணக்கிடப்படுகிறது; அதாவது, உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் விலையோடு நிலை-மூலதனத் தேய்மானத்துக்காக ஆண்டுக்கு £666⅔க்கு பதில் £1,000 சேர்க்கப்படுகிறது. இவ்வாறு மராமத்துகள் முதலானவற்றுக்காக £333⅓ ஒதுக்கி வைக்கப்படுகிறது. (10 ஆண்டுகளென்றும் 15 ஆண்டுகளென்றும் இங்கு உதாரணத்துக்காகவே கொள்கிறோம்.) நிலை-மூலதனம் 15 ஆண்டு காலம் நீடித்திருக்கக் கூடிய விதத்தில் சராசரியாக இந்தத் தொகை மராமத்துகளுக்காகச் செலவிடப்படுகிறது. இப்படிக் கணக்கிடுவதால் நிலை-மூலதனமும் மராமத்துகளுக்காகச் செலவிடப்படும் கூடுதல் மூலதனமும் வெவ்வேறு இனங்களைச் சேர முடியாத படி தடுக்கப்படவில்லை என்பது மெய்தான். இந்தக் கணக்கு முறையின் அடிப்படையில், எடுத்துக்காட்டாக நீராவிக் கப்பல்களின் பராமரிப்புக்கும் மாற்றீட்டுக்குமான குறைந்த செலவு மதிப்பீடு ஆண்டுக்கு 15 சதவீதமாக கொள்ளப்பட்டது; ஆகவே மறுவுற்பத்திக் காலம் 6⅔ ஆண்டுகளாகும். அறுபதாம் ஆண்டுகளில், ஆங்கிலேயே அரசாங்கம் பெனின்சுலர் அண்டு ஓரியண்டல் கம்பெனிக்கு ஆண்டுக்கு 16 சதவீதம் இழப்பீடு கொடுத்தது; இதன் படி மறுவுற்பத்திக் காலம் 6¼ ஆண்டுகளாகும். இரயில் போக்குவரத்துத் துறையில் இழுபொறியின் சராசரி ஆயுள் 10 ஆண்டுகளாகும்; ஆனால் மராமத்துகளையும் சேர்த்து தேய்மானம் 12½ சதவீதமாய்க் கொள்ளப்படுகிறது; அதன் ஆயுட் காலம்

இவ்விதம் 8 ஆண்டுகளாகி விடுகிறது, பயணி ஊர்திகள், சரக்கு வண்டிகளைப் பொறுத்த வரை இம்மதிப்பீடு 9 சதவீதமாகும்; அதாவது ஆயுட் காலம் $11\frac{1}{9}$ ஆண்டுகளாகும்.

வீடுகளும் இவற்றையொத்த பிறவும் அவற்றின் உடைமையாளர்களுக்கு நிலை-மூலதனமாய் அமைந்து நிலை-மூலதனமாகவே வாடகைக்கும் விடப்படுவதால், வாடகை ஒப்பந்தங்களில் எங்குமே சட்டமானது, ஒரு புறம் காலத்தாலும் இயற்கைச் சக்திகளது செயலாலும் இயல்பான தேய்வாலும் ஏற்படும் இயல்பான தேய்மானத்துக்கும், மறு புறம் வீட்டின் இயல்பான ஆயுட்காலத்தில் முறைப்படி அதைப் பயன்படுத்துகையில் பராமரிப்புக்காக அவ்வப்போது தேவைப்படும் மராமத்துக்கும் இடையிலான வேறுபாட்டை ஒப்புக் கொள்கிறது. முன்னதை வீட்டின் உடைமையாளரும், பின்னதை குடித்தனக்காரரும் ஏற்பது வழக்கமாக இருக்கிறது. மேலும் மராமத்துகள் சாதாரணமானவை என்றும், பெரியவை என்றும் பிரிக்கப்படுகின்றன. பெரிய மராமத்துகள் என்பவை ஓரளவுக்கு நிலை-மூலதனத்தை அதன் தசையுருவில் புதுப்பிப்பதைக் குறிக்கின்றன; வாடகைப் பத்திரம் வெளிப்படையாகவே வேறுவிதமாய்க் குறிப்பிடாத வரை இந்தச் செலவுகளை வீட்டின் உடைமையாளர்தான் ஏற்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஆங்கிலேயச் சட்டம் கூறுவதாவது: ''மறு புறம் குடித்தனக்காரர் அந்தந்த ஆண்டிலும் கட்டடத்தை நீராலும் பெருங்காற்றாலும் கேடுறாமல் பார்த்துக் கொண்டால் போதும்—'பெரிய' மராமத்துகள் இல்லாமலே பொதுவாக 'சாதாரணமானவை' என்னும் படியான மராமத்துகளைச் செய்து வந்தால் போதும். 'சாதாரண' மராமத்துகள் செய்யப்பட வேண்டிய கட்டடப் பகுதிகளிலுங்கூட அவற்றின் வயது, பொதுவான நிலை, வாடகைக்கு எடுத்துக் கொண்ட போது அவை எந்நிலையில் இருந்தன என்பவற்றையும் கணக்கில் கொண்டாக வேண்டும். ஏனென்றால் பழமைப்பட்டுத் தேய்ந்து போனவற்றை நீக்கிப் புதியவற்றை அவற்றுக்கு பதில் அமைத்திடவோ, காலத்தாலும் சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டுத் தேய்ந்து போவதாலும் ஏற்படுகிற தவிர்க்க முடியாத தேய்மானத்தை சரி செய்திடவோ அவர் கடமைப்பட்டவர் அல்ல.'' (ஹோல்ஸ்வொர்த், உடைமையாளரும் வாடகையாளரும் பற்றிய சட்டம், பக்கம் 90, 91.)

தேய்ந்து வீணாவதைக் கழித்து விட்டு மாற்றீடு செய்தலிலிருந்தும், பராமரிப்பும் மராமத்தும் செய்தலிலிருந்தும் அறவே வேறான தாகும் காப்பீடு [insurance] செய்தல். இயற்கை உற்பாதம், தீ, வெள்ளம் போன்றவற்றால் விளையும் நாசத்துக்கு ஈடு செய்தலே காப்பீடு என்பது. உபரி-மதிப்பிலிருந்தே இந்த நாசத்துக்கு ஈடு செய்தாக வேண்டும், இது உபரி-மதிப்பில் விழுகிற வெட்டு ஆகும். முழுச் சமுதாயத்தின் கண்ணோட்டத்திலிருந்து பார்ப்போமானால்,

இடையறாது மிகை-உற்பத்தி நடைபெற்றாக வேண்டும். அதாவது மக்கள்தொகை பெருகுவதைக் கவனியாது ஒதுக்கினாலும், இப்போதுள்ள செல்வத்தின் சாமானிய மாற்றீட்டுக்கும் மறுவுற்பத்திக்கும் தேவையானதைக் காட்டிலும் அதிகமான அளவில் உற்பத்தி செய்தாக வேண்டும் — அப்போதுதான் விபத்துகளாலும் இயற்கைச் சக்திகளாலும் உண்டாகும் பேரிழப்புக்கு ஈடு கட்டுவதற்குத் தேவையான அளவில் சமுதாயத்திடம் உற்பத்திச் சாதனங்கள் இருக்க முடியும்.

உண்மையில் மாற்றீடு செய்வதற்கு வேண்டிய மிகச் சிறு பகுதி மூலதனம் மட்டுமே சேமப் பண நிதியின் வடிவில் இருக்கிறது. மிகப் பெரும் பகுதி மூலதனம் நேரடியாக உற்பத்தியின் அளவு வீதத்திலான பெருக்கமாய் அமைகிறது — இந்தப் பெருக்கம் ஓரளவுக்கு மெய்யான பெருக்கமாகவும், ஓரளவுக்கு நிலை-மூலதனத்தை உற்பத்தி செய்கிற தொழிற் கிளைகளது இயல்பான உற்பத்திப் பரிமாணத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கிறது. எடுத்துக்காட்டாய், இயந்திரம் தயாரிக்கும் ஆலையானது அதனிடமிருந்து வாடிக்கையாக இயந்திரங்கள் கொள்முதல் செய்யும் தொழிற்சாலைகள் ஆண்டுதோறும் விரிவாக்கப்படக் கூடிய விதத்திலும், அவற்றில் பலவும் முழுமையாகவோ பகுதியாகவோ மறுவுற்பத்தி செய்து கொள்ளத்தக்க விதத்திலும் தன் உற்பத்தித் திட்டங்களை வகுத்துக் கொண்டாக வேண்டும்.

தேய்மானத்தையும் மராமத்துச் செலவுகளையும் சமுதாய சராசரியின் படி நிர்ணயிக்கும் போது தவிர்க்க முடியாமலே பெருத்த ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது; மற்றபடி ஒத்த நிலைமைகளில் இயங்கும் ஒரே தொழிற் கிளையைச் சேர்ந்த சம அளவுடைய மூலதன முதலீடுகள் தொடர்பாகவும் கூட இதனால் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது. நடைமுறையில் ஓர் இயந்திரம் ஒரு முதலாளியிடம் சராசரிக் காலத்துக்கு மேல் நீடித்து வேலை செய்கிறது, இன்னொரு முதலாளியிடம் அவ்வளவு காலம் நீடிப்பதில்லை. மராமத்துச் செலவுகளை எடுத்துக் கொண்டால், ஒருவருக்கு சராசரியை விட அதிகமாகவும் மற்றொருவருக்கு சராசரியை விடக் குறைவாகவும் இருக்கிறது. ஆனால் தேய்மானத்தாலும் மராமத்துச் செலவுகளாலும் சரக்குகளின் விலை இருவருக்கும் ஒரே அளவுதான் கூடுதலாகிறது; எவ்வளவு கூடுதலாகிறது என்பது சராசரியால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே இந்தக் கூடுதல் விலையின் மூலம் ஒரு முதலாளி அவர் உள்ளபடியே செலவு செய்ததைக் காட்டிலும் அதிகமாகவும் இன்னொரு முதலாளி குறைவாகவும் பெற்றுக் கொள்கின்றனர். ஒரே தொழிலைச் சேர்ந்தவர்களாய் இருப்பினும், உழைப்புச் சக்தி மீதான சுரண்டலின் கடுமை ஒரே அளவினதாய் இருப்பினும், வெவ்வேறு முதலாளிகளுக்கும் வெவ்வேறு இலாபங்களை கிடைக்கச் செய்கிற மேற்கண்ட நிலைமையும் இதையொத்த

பிற நிலைமைகளும் உபரி-மதிப்பின் மெய்யான தன்மையைப் புரிந்து கொள்வதிலுள்ள சிக்கலை அதிகமாக்கவே உதவுகின்றன.

முறையான மராமத்துகளை மாற்றீட்டிலிருந்து, பராமரிப்புச் செலவுகளை மாற்றீட்டுச் செலவுகளிலிருந்து பிரித்திடும் எல்லைக் கோடு நெகிழ்வானது. எனவேதான் சர்ச்சை ஓய்வதே இல்லை—இரயில் போக்குவரத்தை உதாரணமாய் எடுத்துக் கொண்டால் குறிப்பிட்ட சில செலவுகள் மராமத்துகளுக்கானவையா, மாற்றீட்டுக்கானவையா? நடப்புச் செலவினங்களுக்கான தொகையிலிருந்து இவற்றுக்காகச் செலவிடுவதா, ஆரம்ப இருப்பிலிருந்து செலவிடுவதா? மராமத்துச் செலவுகளை வருவாய்க் கணக்கில் சேர்க்காமல் மூலதனக் கணக்குக்கு மாற்றுவது இரயில் போக்குவரத்து நிறுமங்களின் இயக்குநர் குழுக்கள் தம் இலாப ஈவுகளைச் செயற்கையான முறையில் உயர்த்திக் கொள்வதற்காகக் கையாளும் பிரசித்தமான உபாயமாகும். ஆயினும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேண்டிய முக்கிய ஆதாரங்களை அனுபவமானது ஏற்கெனவே கிடைக்கச் செய்துள்ளது. எடுத்துக்காட்டாக லார்டுனரின் கருத்துப்படி, இருப்புப் பாதை போடப் பெற்ற பின் ஆரம்ப காலத்தில் செய்ய வேண்டியிருக்கும் வேலைகளை "**மராமத்துகள்** என்று வகைப்படுத்தக் கூடாது; இருப்புப் பாதை நிர்மாணத்தின் இன்றியமையாப் பகுதியாகவே இவ்வேலைகளைக் கருத வேண்டும். இச்செலவுகள் தேய்மானம் காரணமாகவோ நியாயமான போக்குவரத்தின் காரணமாகவோ ஏற்படுகிறவை அல்ல; ஆரம்ப நிலையில் பாதையின் நிர்மாணத்திலான தவிர்க்க முடியாத நிறைவின்மையால் ஏற்படுகிறவை என்பதால் நிதி விவரக் கணக்குகளில் இச்செலவுகளை மூலதனக் கணக்கில் பற்று வைக்க வேண்டுமே தவிர, வருவாய்க் கணக்கில் அல்ல." (லார்டுனர், முன் வந்தது, பக்கம் 40.) "வருவாய் கிடைக்க வேண்டுமானால் தேய்மானச் செலவு அவசியம் என்பதால் அந்தந்த ஆண்டின் வருவாயிலிருந்தும் இதற்காகத் தொகை ஒதுக்குவதே—எந்தவோர் ஆண்டிலும் உள்ளபடியே இத்தொகை செலவிடப்பட்டதா, இல்லையா என்பதைக் கருதாமல் ஒதுக்குவதே—சரியான ஒரே வழி." (கேப்டன் பிட்ஸ்மாரிஸ், "கலிடோனிய இரயில் போக்குவரத்து பற்றிய விசாரணைக் குழு," 1867இல் *மணி மார்க்கெட் ரெவ்யூ ஏட்டில்* பிரசுரமானது.)

நிலை-மூலதனத்தின் மாற்றீட்டை அதன் பராமரிப்பிலிருந்து பிரிப்பது வேளாண்மைத் துறையில்—எப்படியும் நீராவி விசை இன்னமும் உபயோகத்துக்கு வராத போது—நடைமுறை சாத்தியமானதுமல்ல, அர்த்தமுடையதுமல்ல. கிர்ச்சோஃப் கூறுவது போல (*Handbuch der landwirtschaftlichen Betriebslehre*, டிரெஸ்டென், 1852, பக்கம் 137), "கருவிகளின் இருப்பு (விவசாயக் கருவிகள், ஏனைய எல்லா வகைக் கருவிகள், தளவாடங்களின் இருப்பு) அதிகப்படியாக இல்லா விட்டாலும் குறைவின்றி இருக்கும்

இடங்களிலெல்லாம், கருவிகளின் வருடாந்தரத் தேய்மானத்தையும் பராமரிப்பையும், அவ்வப்போது நிலவும் வெவ்வேறு நிலைமை களைப் பொறுத்து, பொதுச் சராசரியாக ஆரம்ப மூலதனத்தில் 15 முதல் 25 சதவீதமாக மதிப்பிடுவது வழக்கம்.''

இரயில் போக்குவரத்துத் துறையில் ஓடும் ஊர்திகளைப் பொறுத்த வரை, மராமத்துகளையும் மாற்றீட்டையும் வெவ் வேறாகப் பிரிக்கவே முடியாது. ''நாங்கள் எங்கள் வண்டிகளுக்கு எண்ணிட்டு அவற்றைப் பராமரிக்கிறோம். எங்களிடம் உள்ள அத்தனை இழுபொறிகளையும் பராமரிக்கிறோம். ஓர் இழுபொறி வயதாகி வீணாகும் போது, அதற்கு பதில் புதிதாக ஒன்றைக் கட்டுவதே மேல் என்றால், வருவாயைச் செலவிட்டுக் கட்டு கிறோம்; பழையதன் பிண்டப் பொருள் பயன்படக் கூடியதாய் இருக்கும் அளவுக்கு அதனை வரவு வைத்துக் கொள்கிறோம். சக்கரங்கள், இருசுகள், கொதிகலன்கள் இப்படிப் பலவும் எஞ்சுகின்றன. உண்மையில் பழைய இழுபொறியில் கணிசப் பகுதி இப்படி மிச்சப்படுகிறது.'' (டி. கூச், கிரேட் மேற்கு இரயில்வே போக்குவரத்து நிறுமத்தின் தலைவர், இரயில் போக்குவரத்து பற்றிய மு. ஆ., பக்கம் 858, எண் 17327-17329.) ''...மராமத்து என்றால் புதுப்பித்தல் என்று பொருள்; மாற்றீடு என்னும் சொல் லில் எனக்கு நம்பிக்கையில்லை...; இரயில் போக்குவரத்து நிறுமம் ஒரு வாகனம் அல்லது இழுபொறியை வாங்கி விட்டால் அது மராமத்து செய்யப்படுவதன் மூலம் என்றென்றைக்குமாய் நீடிக்கக் கூடியதாய் இருக்க வேண்டும்.'' (எண் 17784.) ''...இந்த 8½ பென்னியைக் கொண்டு எஞ்சின்கள் என்றென்றும் பராமரிக்கப் படுகின்றன. எங்கள் இழுபொறியைப் புனரமைத்துக் கொள் கிறோம். முழு இழுபொறிய விலை கொடுத்து வாங்கினால், அவசியமானதை விட அதிகமான பணம் செலவாகும்.... எப் போதுமே ஒரு ஜோடிச் சக்கரங்கள், ஓர் இருசு அல்லது இழு பொறியின் ஏதேனுமொரு பாகம் எஞ்சுகிறது; அனேகமாய்ப் புதிய தாகவே விளங்கும் இழுபொறியை உற்பத்தி செய்யும் செலவு இதனால் குறைகிறது.'' (எண் 17790.) ''இப்போது ஒவ்வொரு வாரமும் ஒரு புதிய இழுபொறி தயாரிக்கிறேன், அல்லது அனேக மாய்ப் புதிய இழுபொறி என்றே சொல்ல வேண்டும்; ஏனெனில் அது புதிய கொதிகலன், புதிய உருளை அல்லது புதிய கட்டடம் பெற்றுள்ளது.'' (எண் 17823. ஆர்ச்சிபால்டு ஸ்டார்ராக், கிரேட் வடக்கு இரயில் போக்குவரத்து நிறுமத்தின் இழுபொறிக் கண் காணிப்பாளர், மு. ஆ., 1867.)

இரயில் பெட்டிகளும் இப்படித்தான்: ''இருப்பிலுள்ள இழு பொறிகளும் ஊர்திகளும் காலப்போக்கில் தொடர்ந்து அவ்வப் போது மராமத்து செய்யப்படுகின்றன. ஒரு நேரம் புதிய சக்கரங் கள், இன்னொரு நேரம் புதிய உடல் அமைக்கப்படுகிறது.

அதிகமாய்த் தேயக் கூடிய பல்வேறு இயக்க உறுப்புகள் ஒவ்வொன்றாய் மாற்றப்படுகின்றன. வரிசையாகப் பல மராமத்துகள் நடைபெறுவதால் இழுபொறிகளிலும் ஊர்திகளிலும் பலவற்றில் ஆதியில் இருந்தவற்றில் எதுவுமே எஞ்சுவதில்லை.... அப்போதுங் கூட, ஊர்திகள் அல்லது இழுபொறிகளில் ஆதியில் இருந்தவை திருத்தப் பெற்று பிற இழுபொறிகள் அல்லது வண்டிகளில் சேர்ந்து விடுகின்றன, ஒரு போதும் பாதையிலிருந்து அடியோடு மறைவதில்லை. ஆகவே, இடம்பெயரும் மூலதனம் தொடர்ச்சியாய் மறுவுற்பத்தியாகிக் கொண்டிருப்பதாகக் கருதலாம். நிரந்தர இரயில் பாதையைப் பொறுத்த வரை வருங்காலத்தில் முழுமையாகப் புதிதாய் அமைக்கப்படுகையில் ஒட்டுமொத்தமாக நடைபெறப் போகிறவை ஊர்திகளைப் பொறுத்த வரை ஆண்டுக்கு ஆண்டு சிறுகச் சிறுக நடைபெறுகின்றன. அவை அழிவின்றி காலமெலாம் நிலவுகிறவை; திரும்பத் திரும்ப ஓயாமல் புத்திளமை பெறுகிறவை.'' (லார்டுனர், முன் வந்தது, பக்கம் 115-16.)

இரயில் போக்குவரத்து நிறுமம் தொடர்பாக லார்டுனர் இங்கே விவரிக்கும் இந்த நிகழ்முறை தனிப்பட்ட ஒரு தொழிற்சாலைக்குப் பொருந்தாது. ஆயினும் ஒரு தொழிற் கிளை முழுவதிலும் அல்லது சமுதாய அளவிலான மொத்தப் பொருளுற்பத்தியிலும் கூட மராமத்துகளோடு கூடவே அவற்றோடு இணைந்து நிலை-மூலதனம் தொடர்ச்சியாகவும் பகுதி பகுதியாகவும் மறுவுற்பத்தி செய்யப்படுவதற்கு நல்ல எடுத்துக்காட்டாய் விளங்கக் கூடியது இந்நிகழ்முறை.

சாமர்த்தியம் வாய்ந்த இயக்குநர் குழுக்கள் தமது இலாப ஈவுகளை உயர்த்திக் கொள்வதற்காக மராமத்து, மாற்றீடு என்னும் பதங்களை வைத்துக் கொண்டு எந்த அளவுக்கு வித்தை புரிய வல்லவர்கள் என்பதற்கு இதோ ஒரு நிரூபணம். ஆர். பி. வில்லியம்சின் மேற்குறிப்பிட்ட ஆய்வறிக்கையின் படி, பல்வேறு ஆங்கிலேய இரயில் போக்குவரத்து நிறுமங்கள் பல்லாண்டு காலம் நிரந்தர இருப்புப் பாதை, கட்டடங்கள் ஆகியவற்றின் மராமத்துகளுக்காகவும் பராமரிப்புக்காகவும் என்று சொல்லி வருவாய்க் கணக்கில் பற்றாக வராமல் விலக்கிய தொகைகளின் வருடாந்தர சராசரி (இருப்புப் பாதையின் ஆங்கிலேய மைல் ஒன்றுக்கான வீதம்) வருமாறு:

| | |
|---|---|
| லண்டன் & வடமேற்கு . . . . . . . . . . . . | £370 |
| மிட்லாந்து. . . . . . . . . . . . . . . . . . | £225 |
| லண்டன் & தென்மேற்கு. . . . . . . . . . . | £257 |
| கிரேட் வடக்கு. . . . . . . . . . . . . . . . | £360 |
| லங்காஷயர் & யார்க்ஷயர். . . . . . . . . . | £377 |
| தென் கிழக்கு. . . . . . . . . . . . . . . . | £263 |
| பிரைட்டன். . . . . . . . . . . . . . . . . . | £266 |
| மான்செஸ்டர் & ஷெஃபீல்டு. . . . . . . . . | £200 |

சொற்ப அளவுக்கே இந்த வேறுபாடுகள் உள்ளபடியே செல வான தொகைகளின் வேறுபாடுகளிலிருந்து எழுகின்றன. அனேக மாய் முழு அளவுக்கு இவை வெவ்வேறு கணக்கீட்டு முறைகளி லிருந்து, செலவினங்கள் பற்று வைக்கப்படுவது மூலதனக் கணக் கிலா, வருவாய்க் கணக்கிலா என்பதிலிருந்து எழுகிறவை. இலாப ஈவு உயருவதற்கு அவசியமாயிருக்கும் போது குறைந்த கட்டண மாய்க் கணக்கெழுதப்படுவதாகவும், வருவாய் அதிகமாய் இருக்கை யில் அதிகச் சுமையைச் சமாளிக்க முடியுமென்று உயர்ந்த கட்டண மாய்க் கணக்கெழுதப்படுவதாகவும் வில்லியம்ஸ் அப்பட்டமாகவே கூறுகிறார்.

சில சந்தர்ப்பங்களில், தேய்மானமும், எனவே அதற்கான மாற் றீடும் சொல்ல முடியாத படி மிகச் சொற்பமாய் இருப்பதுண்டு. அப்போது கணக்கெழுத மராமத்துச் செலவுகள் மட்டும்தான் இருக்கும். இருப்புப் பாதையமைப்பைச் சேர்ந்த கலைக் கட்டு மானங்கள் தொடர்பாக லார்டுனர் கூறுவது பொதுவாக நிலை யங்கள், கால்வாய்கள், இரும்புப் பாலங்கள், கற்பாலங்கள் போல் நெடுநாள் நிலைத்திருக்கும் எல்லாக் கட்டமைப்புகளுக்கும் பொருந் தும்: ''உறுதி வாய்ந்த கட்டமைப்புகள் மீது காலம் மெதுவாகவே செயல்படுவதால், இதனால் ஏற்படும் தேய்மானத்தின் விளைவு குறுகிய காலங்களில் சிறிதும் புலப்படுவதில்லை. ஆனால் நெடுங் காலம், உதாரணமாய் சில நூற்றாண்டுகள் கழிந்த பிறகு மிகவும் உறுதி வாய்ந்த கட்டுமானங்களையும் கூட பகுதியாகவோ முழுமை யாகவோ புனரமைப்பது அவசியமாகி விடுகிறது. இந்த மாற்றங்கள் அண்ட சராசரங்களின் சஞ்சாரங்களில் ஏற்படும் ஊழிக்கால வட்டத் திரிபுகளோடு ஒப்பிடத் தக்கவை. இரயில் போக்குவரத்துத் துறையின் பிரம்மாண்டமான கலைக் கட்டுமானங்களாகிய பாலங் கள், குகைப் பாதைகள், வாராவதிகள் போன்றவற்றின் மீது காலத் தின் செயல்பாட்டால் ஏற்படும் விளைவை ஊழிக்காலத் தேய் மானம் [secular war and tear] எனலாம். துரிதமாகவும் கண்ணுக் குப் புலப்படும் விதத்திலும் ஏற்படும் தேய்மானம் குறுகிய இடை வெளிகளில் செய்யப்படும் மராமத்துகள் அல்லது புனரமைப்பால் சரி செய்யப்படுகிறது; இந்தத் தேய்மானம் காலவட்ட முறையி லான திரிபுகளை ஒத்ததாகும். நெடுங்காலம் நிலைத்திருக்கும் படியான உறுதி வாய்ந்த கட்டமைப்புகளில் வெளிப்புறத்தில் அவ்வப்போது ஏற்படக் கூடிய சேதம் வருடாந்தர மராமத்துகளில் சேர்ந்து விடுகிறது. ஆனால் எவ்வளவுதான் மராமத்து செய்தாலும், இந்தக் கட்டமைப்புகளுங்கூட காலத்தால் பாதிக்கப்படவே செய் கின்றன. புதிதாகக் கட்டியமைக்கப்பட வேண்டிய ஒரு நிலைக்கு இவை பையப்பையக் கெட்டழிந்து போகும் காலம் ஒன்று வரவே செய்யும், தற்போது எவ்வளவுதான் தொலைவில் இருப்பினும் எப்படியும் அது வந்தே தீரும். அந்தக் காலம் நெடுந் தொலைவில்

இருப்பதால் நடைமுறை நிதி விவகார்ங்களிலும் பொருளாதார விவகாரங்களிலும் அதனைக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஆகவே இங்கு அதனைப் போகிற போக்கில் குறிப்பிடுவதோடு நிறுத்திக் கொள்கிறோம்.'' (லார்டுனர், முன் வந்தது, பக்கம் 38, 39.)

நீடூழிக் காலம் நிலைத்திருக்கக் கூடிய இது போன்ற எல்லாக் கட்டமைப்புகளுக்கும் மேற்கூறியது பொருந்தும். ஆகவே, இவற்றுக்காக முன்னீடு செய்யப்படும் மூலதனத்தைப் படிப்படியாக அவற்றின் தேய்மானத்துக்கேற்ப மாற்றீடு செய்ய வேண்டியதில்லை; பராமரிப்புக்கும் மராமத்துக்குமான வருடாந்தர சராசரிச் செலவுகளை உற்பத்திப் பண்டத்தின் விலையோடு சேர்த்துக் கொண்டால் போதும்.

நிலை-மூலதனத்தின் தேய்மானத்தை மாற்றீடு செய்வதற்காகத் திரும்பி வரும் பணத்தில் பெரும் பகுதி ஆண்டுதோறும், ஆண்டுக்கும் குறைவான கால அளவில் அதன் தசையுருவிற்கு மீள்கிறது என்று பார்த்தோம். ஆனாலும், பல்லாண்டு காலத்துக்குப் பிறகே மறுவுற்பத்தி செய்யப்பட வேண்டியதும், அப்போது முழுமையாக மாற்றீடு செய்யப்பட வேண்டியதுமான நிலை-மூலதனப் பகுதிக்காக தனிப்பட்ட ஒவ்வொரு முதலாளிக்கும் கடன் தீர்வு நிதி [sinking fund] தேவைப்படுகிறது. நிலை-மூலதனத்தில் முக்கியமானதொரு பகுதியை, அதன் விசேஷ இயல்பு காரணமாய், படிப்படியாக மறுவுற்பத்தி செய்வது சாத்தியமல்ல. மேலும், தேய்வுற்ற பழைய மூலதனத்தோடு அடிக்கடி புதிய மூலதனத்தைச் சேர்க்கும் விதத்தில் மறுவுற்பத்தி சன்னம் சன்னமாக நடைபெறும் நிலைகளில், அந்தந்தத் தொழிற் கிளையின் பிரத்தியேகத் தன்மையைப் பொறுத்து பெரிய அளவிலோ சிறிய அளவிலோ முன்கூட்டியே பணம் திரட்டி வைத்திருந்தால்தான் இந்த மாற்றீடு நடைபெற முடியும். இதற்குத் தேவைப்படுவது குறிப்பிட்ட ஒரு தொகையே தவிர, ஏதேனும் ஒரு தொகையல்ல.

கடன்-செலாவணி முறையை [credit system] கவனியாது ஒதுக்கி விட்டு (இம்முறை பற்றிப் பின்னால் பார்ப்போம்)* சாமானியப் பணச் சுற்றோட்டத்தின் அடிப்படையில் இந்தப் பிரச்சினையை ஆராய்வோமானால், இதன் இயங்குமுறை வருமாறு: சமுதாயத்தில் கிடைக்கக் கூடிய பணத்தில் ஒரு பகுதி பணச் சேர்ப்பாகிச் செயலற்று முடங்கி விடும் அதே நேரத்தில் இன்னொரு பகுதி சுற்றோட்ட ஊடகமாகவோ நேரடியாகச் சுற்றியோடும் பணத்தின் உடனடிச் சேம நிதியாகவோ செயல்படுமாயின் மொத்தப் பணத் திரள் பணச் சேர்ப்பாலும் சுற்றோட்டச் சாதனத்தாலும் பகிர்ந்து

---

* மூலதனம் மூன்றாம் பாகத்தின் பகுதிகள் IV., V இல் முதலாளித்துவக் கடன்-செலாவணி முறை ஆராயப்படுகிறது. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

கொள்ளப்படும் விகிதம் ஓயாமல் மாறிக் கொண்டிருப்பதை முன்பே தெளிவுபடுத்தினோம் (முதல் பாகம், அத்தியாயம் III., பிரிவு 3அ). இப்போது நமது பரிசீலனையில் ஒப்பளவில் பெரிய முதலாளியான ஒருவரின் கையில் பணச் சேர்ப்பாகப் பெரிய அளவில் திரட்டப் பெறும் பணமானது நிலை-மூலதனத்தை விலைக்கு வாங்க வேண்டிய நேரம் வந்ததும் திடுதிப்பென மொத்த மாய் சுற்றோட்டத்தில் விடப்படுகிறது. பின்னர் சமுதாயத்தில் அது திரும்பவும் சுற்றோட்ட ஊடகமாகவும் பணச் சேர்ப்பாகவும் பிரிகிறது. நிலை-மூலதனத்தின் மதிப்பு அதன் தேய்மானத்துக்கேற்ப அதன் தொடக்க வடிவுக்கே திரும்பி கடன் தீர்வு நிதியாவதால், சுற்றோட்டத்திலிருக்கும் பணத்தில் ஒரு பகுதி இந்த நிதியின் உருவில் மீண்டும் பணச் சேர்ப்பாகி விடுகிறது. நிலை-மூலதனத்தை விலைக்கு வாங்கிய போது எந்த முதலாளியின் பணச் சேர்ப்பு சுற்றோட்ட ஊடகமாக மாறி விலகிச் சென்றதோ அதே முதலாளி யின் கையில் மேற்கூறிய நிதியின் உருவிலான பணச் சேர்ப்பு நீண்ட காலமோ குறுகிய காலமோ தங்குகிறது. சமுதாயத்தில் இருக்கும் பணச் சேர்ப்பின் வினியோகம் ஓயாமல் மாறிக் கொண் டிருக்கிறது. மாறி மாறி அது பணச் சேர்ப்பாகவும், சுற்றோட்ட ஊடகமாகவும் செயல்படுகிறது. சுற்றியோடும் பணத் திரளிலிருந்து திரும்பவும் பிரிந்து சென்று பணச் சேர்ப்பாகிறது. நவீனத் தொழில் துறையும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியும் வளரும் போது தவிர்க்க முடியாதவாறு அவ்வளர்ச்சிக்கு இணையாய் கடன்-செலாவணி முறையும் வளர்ந்தோங்கியுள்ளது. கடன்-செலாவணி முறையின் வளர்ச்சியைத் தொடர்ந்து, முதலாளியின் பணச் சேர்ப்பு வெறும் சேர்ப்பாக இருக்கும் நிலையை விட்டொழித்து மூலதனமாகச் செயல்பட முற்படுகிறது. ஆனால் அந்தப் பணம் அதன் உடைமையாளரின் வசமிருந்து பிற முதலாளிகளின் கைக்கு மாறி இப்படிச் செயல்பட முற்படுகிறது.

## அத்தியாயம் IX

# முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் ஒட்டுமொத்தப் புரள்வு. புரள்வுச் சகடங்கள்

திறனுடை-மூலதனத்தின் கூறுகளான நிலை-மூலதனமும் சுழல்-மூலதனமும் வெவ்வேறு விதமாய்ப் புரள்கின்றன, புரள்வதற்கு ஆகும் கால அளவுகளிலும் அவை வேறுபடுகின்றன என்று பார்த்தோம். ஒரு தொழிலில் செயல்படும் நிலை-மூலதனத்தினது வெவ்வேறு கூறுகளின் ஆயுட் காலங்களும், எனவே அவற்றின் மறுவுற்பத்திக்கு வேண்டிய காலங்களும் வேறுபடுவதற்கேற்ப அவற்றின் புரள்வுக் காலங்களும் வேறுபடுகின்றன என்றும் பார்த்தோம். (ஒரே தொழிலில் செயல்படும் சுழல்-மூலதனத்தின் வெவ்வேறு கூறுகளது புரள்வில் ஏற்படும் மெய்யான அல்லது புறத்தோற்ற மாறுபாடுகள் பற்றி, இந்த அத்தியாயத்தின் முடிவில் பிரிவு 6இல் பார்ப்போம்.)

1) முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் [advanced capital] ஒட்டுமொத்தப் புரள்வு [aggregate turnover] என்பது அதன் பல்வேறு கூறுகளது சராசரிப் புரள்வாகும்; அதனைக் கணக்கிடும் முறையைப் பிற்பாடு விளக்குவோம். இந்த சராசரியைக் கணக்கிடுவது வெவ்வேறு கால அளவுகள் தொடர்பான பிரச்சினையே என்பதால் எளிய காரியமே. ஆனால்,

2) இங்கே அளவு வேறுபாடுகளை மட்டுமல்லாமல் பண்பு வேறுபாடுகளையும் கணக்கில் கொள்ள வேண்டியிருக்கிறது.

உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபடும் சுழல்-மூலதனம் அதன் முழு மதிப்பையும் உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்தளிக்கிறது; ஆகவே, உற்பத்தி நிகழ்முறை தடைபடாமல் நடைபெற வேண்டுமானால், உற்பத்திப் பொருளை விற்று அந்த சுழல்-மூலதனத்தைத் தொடர்ந்து பண்ட வகையில் [in kind] மாற்றீடு செய்து வர வேண்டும். உற்பத்தி முறையில் ஈடுபடும் நிலை-மூலதனம் அதன் மதிப்பில் ஒரு பகுதியை மட்டும் (தேய்மானம்) உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்தளிக்கிறது; இப்படித் தேய்மானம் ஏற்படும்

போதும் அது உற்பத்தி நிகழ்முறையில் தொடர்ந்து செயல்படுகிறது. ஆகவே பற்பல கால இடைவெளிகள் கழியும் வரை அதனைப் பண்ட வகையில் மாற்றீடு செய்யத் தேவையில்லை; எப்படியும் சுழல்-மூலதனத்தைப் போல் அடிக்கடி மாற்றீடு செய்யத் தேவை யில்லை. இப்படி மாற்றீடு அவசியமாகி விடும் இந்த மறுவுற்பத்திக் காலம் நிலை-மூலதனத்தின் பல்வேறு கூறுகளுக்கும் அளவு வழியில் வேறுபடுவது மட்டுமல்ல. நெடுங்காலம் நிலைத்து உழைக்கக் கூடிய நிலை-மூலதனப் பகுதியை ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இன்னும் குறுகிய காலத்துக்கு ஒரு முறை மாற்றீடு செய்து பழைய நிலை-மூலதனத்தோடு பண்ட வகையில் சேர்த்துக் கொள்ள முடியும் என்றும் பார்த்தோம். வேறுவித்மான இயல்புகள் கொண்ட நிலை-மூலதனத்தைப் பொறுத்த வரை, ஆயுட் காலம் முடிந்ததும் ஒரேயடி யாகத்தான் மாற்றீடு செய்ய முடியும் என்றும் பார்த்தோம்.

ஆகவே நிலை-மூலதனத்தின் பல்வேறு பகுதிகளது பிரத்தியே கமான புரள்வுகளை வடிவில் ஒருபடித்தானவையாக்கி, அளவு வழியில் மட்டும், அதாவது புரள்வுக்கு ஆகும் காலத்தில் மட்டும் வேறுபடுகிறவையாக வகுத்திடுவது அவசியமாகிறது.

தொடர்ச்சியான உற்பத்தி நிகழ்முறைக்குரிய வடிவமான P ... P என்பதை நமது தொடக்க நிலையாகக் கொள்வோமாயின், பண்பு வழியில் முழுதொத்த தன்மை [qualitative identity] வரப்பெறுவ தில்லை. ஏனெனில் Pஇன் குறிப்பிட்ட சில கூறுகளைப் பண்ட வகையில் ஓயாமல் மாற்றீடு செய்ய வேண்டியிருக்கையில் பிற கூறுகளை இப்படி மாற்றீடு செய்யத் தேவையில்லாமற் போகிறது. ஆனால் M ... M′ என்னும் வடிவத்திலிருந்து தொடங்குவோ மானால் புரள்வு ஒருபடித்தான தன்மை பெறுகிறது. எடுத்துக் காட்டாக, £10,000 பெறுமானமுள்ள இயந்திரம் ஒன்று பத் தாண்டு காலம் நீடித்து இருப்பதாகவும் இயந்திரத்தின் மதிப்பில் பத்தில் ஒரு பாகம், அதாவது £1,000 ஆண்டுதோறும் பணமாய் உருமாறுவதாகவும் கொள்வோம். இந்த £1,000 ஓராண்டு காலத் தில் பண-மூலதன நிலையிலிருந்து திறனுடை-மூலதனமாகவும் சரக்கு-மூலதனமாகவும் உருமாறி, பிறகு திரும்பவும் பண-மூலதன மாக மாறுகிறது. இதே வடிவில் சுழல்-மூலதனத்தைப் பரிசீலித்தால் அது திரும்பி வருவது போலவே, இம்மூலதனமும் அதன் ஆரம்ப வடிவமாகிய பண வடிவத்துக்கே திரும்பி வருகிறது. £1,000 ஆகிய இந்தப் பண-மூலதனம் ஆண்டின் முடிவில் அதன் தசையுரு வாகிய இயந்திரமாகத் திரும்பவும் உருமாறுகிறதா, இல்லையா என்பது இங்கு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. ஆகவே, முன்னீடு செய்யப்படும் திறனுடை-மூலதனத்தின் ஒட்டுமொத்தப் புரள்வைக் கணக்கிடுகையில், பண வடிவுக்குத் திரும்பி வருவதே புரள்வின் முடிவைக் குறிக்கும் விதத்தில், அம்மூலதனத்தின் எல்லாக் கூறு களையும் பண வடிவில் எடுத்துக் கொள்கிறோம். எப்போதுமே

மதிப்பானது பணமாக முன்னீடு செய்யப்படுவதாய்க் கொள்கிறோம்; மதிப்பின் பண வடிவம் வெறும் கணக்குப் பண வடிவமாய் இருக்கும் தொடர் உற்பத்தி நிகழ்முறையின் போதும் கூட இவ்வாறே கொள்கிறோம். இவ்விதம் நாம் சராசரியைக் கணக்கிட முடியும்.

*3)* முன்னீடு செய்யப்படும் திறனுடை-மூலதனத்தின் மிகப் பெரும் பகுதி நிலை-மூலதனமாய் இருப்பினும் கூட, நிலை-மூலதனத்தின் மறுவுற்பத்திக்கும், ஆகவே புரள்வுக்கும் ஆகிற காலம் பல ஆண்டுகளைக் கொண்ட ஒரு சகடமாய் இருந்த போதிலும், ஓர் ஆண்டில் புரளுகிற மூலதன-மதிப்பானது — சுழல்-மூலதனம் அதே ஓர் ஆண்டில் திரும்பத் திரும்ப பல தடவை புரள்வுக்கு உள்ளாகி விடுவதால் — முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மொத்த மதிப்பைக் காட்டிலும் அதிகமாய் இருக்கலாம் என்பது தெரிகிறது.

நிலை-மூலதனம் £80,000 என்றும், அதன் மறுவுற்பத்திக்கு ஆகும் காலம் 10 ஆண்டுகள் என்றும் கொள்வோம். ஆகவே அதில் £8,000 ஆண்டுதோறும் பண வடிவத்துக்குத் திரும்புகிறது; அதாவது ஆண்டுதோறும் அது தன் புரள்வில் பத்திலொரு பங்கை நிகழ்த்தி முடிக்கிறது. மேலும், சுழல்-மூலதனம் £20,000 என்றும், அது ஆண்டுக்கு ஐந்து தடவை புரள்வதாகவும் கொள்வோம். இப்போது மொத்த மூலதனம் £100,000. புரளும் நிலை-மூலதனம் £8,000; புரளும் சுழல்-மூலதனம் £20,000 × 5 = £100,000. ஓராண்டில் புரளுகிற மூலதனம் £108,000; அதாவது முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தை விட £8,000 அதிகம். $1\frac{2}{25}$ பங்கு மூலதனம் புரண்டிருக்கிறது.

*4)* எனவே, முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் **மதிப்பு புரள்வதற்கு ஆகும் காலம்** வேறு; அதன் மறுவுற்பத்திக்கு உள்ளபடியே ஆகும் காலம் அல்லது அதன் அடக்கக் கூறுகள் புரள்வதற்கு உள்ளபடியே ஆகும் காலம் வேறு. எடுத்துக்காட்டாக, £4,000 மதிப்புள்ள ஒரு மூலதனம் ஆண்டுக்கு ஐந்து முறை புரள்வதாகக் கொள்வோம். அப்படியானால், புரளும் மூலதனம் £4000 × 5 = £20,000. ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட்ட மூலதனமான £4,000 ஒவ்வொரு புரள்வும் முடிவுறும் போது திரும்பி வருகிறது, உடனே புதிதாகத் திரும்பவும் முன்னீடு செய்யப்படுகிறது. புரள்வுகள் எத்தனையானாலும் இம்மூலதனத்தின் பருமன் மாறுவதில்லை. ஒவ்வொரு புரள்வின் போதும், இது மூலதனத்துக்குரிய தனது வேலைகளைத் திரும்பவும் செய்கிறது. (உபரி-மதிப்பை இங்கு நாம் கவனியாது விட்டு விடுகிறோம்.)

அப்படியானால், பிரிவு 3இல் கூறிய உதாரணத்தில், ஓராண்டின் முடிவில் பின்வரும் தொகைகள் முதலாளியின் கைக்கு மீள்வதாகக் கொள்கிறோம்: (அ) £20,000 கொண்ட மதிப்புகளின்

தொகை; இதனை அவர் சுழல்-மூலதனக் கூறுகளுக்காக மீண்டும் முதலீடு செய்கிறார்; (ஆ) முன்னீடு செய்யப்பட்ட நிலை-மூலதனத்தின் மதிப்பிலிருந்து தேய்மானத்தால் விலகிச் செல்லும் தொகையான £8,000; நிலை-மூலதனம் அப்போதும் உற்பத்தி நிகழ்முறையில் தொடர்ந்து செயல்படுகிறது. ஆனால் அதன் மதிப்பு £80,000 அல்ல, அது £72,000 ஆகக் குறைந்து விட்டது. ஆகவே, உற்பத்தி நிகழ்முறை இன்னும் ஒன்பதாண்டு காலம் தொடர்ந்து நடைபெற்ற பிறகுதான், முன்னீடு செய்யப்பட்ட நிலை-மூலதனத்தின் ஆயுள் முடிவடைந்து அதனால் இனி பண்டங்களையோ மதிப்பையோ உற்பத்தி செய்ய முடியாமற் போகும்; இப்போது அதனை மாற்றீடு செய்தாக வேண்டும். முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பு இவ்விதம் பல புரள்வுகளாலான ஒரு சகடத்தை [cycle] நிகழ்த்தியாக வேண்டும்; நமது உதாரணத்தில் இந்தச் சகடம் பத்து வருடாந்தரப் புரள்வுகளால் ஆனது. ஈடுபடுத்தப்படும் நிலை-மூலதனத்தின் ஆயுளால், அதாவது அதன் மறுவுற்பத்தி அல்லது புரள்வுக் காலத்தால் இச்சகடம் நிர்ணயிக்கப்படுகிறது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் வளர்ச்சியைத் தொடர்ந்து, ஈடுபடும் நிலை-மூலதனத்தின் மதிப்புப் பருமனும் ஆயுளும் வளர்ந்து செல்வதால், தொழிலின் ஆயுளும் குறிப்பிட்ட முதலீட்டுத் துறையில் தொழில் துறை மூலதனத்துக்குள்ள ஆயுளும் பல்லாண்டு காலம் நீடிக்கின்றன; சராசரியாகப் பத்தாண்டுகள் நீடிப்பதாகக் கொள்வோம். நிலை-மூலதனத்தின் வளர்ச்சி ஒரு புறம் இந்த ஆயுளை நீடிக்க செய்யும் அதே போது, மறு புறம் உற்பத்திச் சாதனங்களில் ஓயாமல் நடைபெறுகிற புரட்சியானது அதனைக் குறுக்கிச் செல்கிறது. இந்தப் புரட்சி முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் வளர்ச்சியைத் தொடர்ந்து இடையறாது மேலும் மேலும் தீவிரமடைகிறது. இதனால் உற்பத்திச் சாதனங்கள் மாற்றமடைகின்றன; அவற்றின் பௌதிக ஆயுள் முடிவதற்கு நெடுநாள் முன்னதாகவே, கௌரவ மதிப்பிறக்கம் ஏற்பட்டு, அவற்றை மாற்றீடு செய்வது அவசியமாகி விடுகிறது. நவீனத் தொழில் துறையின் [modern industry] அத்தியாவசியக் கிளைகளில் உற்பத்திச் சாதனங்களது இந்த வாழ்க்கைச் சகடத்துக்கு இப்போது சராசரியாகப் பத்து ஆண்டுகள் ஆவதாகக் கொள்ளலாம். ஆனால் இங்கே நாம் கருத வேண்டியது துல்லியமாய் எத்தனை ஆண்டுகள் என்பதல்ல. எப்படியும் ஒன்று மட்டும் தெளிவாகவே விளங்குகிறது: ஒன்றுக்கொன்று தொடர்புடைய புரள்வுகளாலாகிய சகடமானது பல ஆண்டுகளுக்கு நீடிக்கிறது. அப்போது மூலதனம் அதன் நிலையான உள்ளடக்கக் கூறுகளால் இருத்தி வைக்கப்பட்டிருக்கிறது — இந்தச் சகடம் காலவட்ட முறையிலான நெருக்கடிகளுக்கான பொருளாயத அடித்தளமாகிறது. இந்தச் சகடத்தின் போது தொழிலும் வாணிபமும் அடுத்து அடுத்து வரும் மந்தம், மிதமான

செயற்பாடு, ஆவேச எழுச்சி, நெருக்கடி ஆகிய கட்டங்களுக்கு உள்ளாகின்றன. மூலதனம் முதலீடு செய்யப்படுகிற நிலைமைகள் பெரிதும் வேறுபடுகின்றன என்பதும், இம்முதலீடுகள் காலத்தில் ஒருங்கிணைவதில்லை என்பதும் மெய்தான். ஆயினும் எப்போதுமே நெருக்கடிதான் பெரிய அளவிலான புதிய முதலீடுகளுக்கான தொடக்கமாகிறது. எனவே ஒட்டுமொத்தமாய்ச் சமுதாயத்தின் கண்ணோட்டத்தில் நெருக்கடிதான் அடுத்த புரள்வுச் சுகடத்துக்கான புதிய பொருளாயத அடித்தளமாய்ப் பெருமளவுக்கு அமைகிறது.[27]

5) புரள்வுகளைக் கணக்கிடும் முறையைப் பொறுத்த வரை, அமெரிக்கப் பொருளாதார அறிஞர் ஒருவர் சொல்கிறார்: "சில தொழில்களில் தொடக்கத்தில் முதலீடு செய்யப்படும் மூலதனம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டிலும் பல முறை புரள்கிறது, அல்லது சுழல்கிறது. ஏனையவற்றில் மூலதனத்தின் ஒரு பகுதி ஒவ்வோர் ஆண்டிலும் ஒரு முறைக்கு மேலும், பிறிதொரு பகுதி ஒரு முறைக்குக் குறைவாகவும் புரள்கிறது. முதலாளி தமது மூலதனம் முழுவதும் தம் கையை விட்டுச் சென்று பிறகு திரும்பி வந்து சேருவதற்கு, அதாவது ஒரு சுற்று சுற்றி வருவதற்கு எவ்வளவு காலமாகிறது என்பதிலிருந்துதான் தமது இலாபத்தைக் கணக்கிட்டாக வேண்டும். எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவர் தமது மூலதனத்தில் ஒரு பாதியைக் கட்டடங்களுக்காகவும் இயந்திர சாதனங்களுக்காகவும் முதலீடு செய்திருப்பதாகவும், இது பத்தாண்டுக்கு ஒரு முறை புரள்வதாகவும் கொள்வோம். கால் பகுதி மூலதனம் கருவிகள் முதலானவற்றுக்கான முதலீடாவதாகவும் இது ஈராண்டுகளுக்கு ஒரு முறை புரள்வதாகவும் கொள்வோம். எஞ்சிய கால் பகுதி மூலதனம் கூலி கொடுப்பதற்கும் மூலப் பொருள் வாங்குவதற்கும் பயன்படுத்தப்படுவதாகவும், இது ஓராண்டுக்கு இரு முறை புரள்வதாகவும் கொள்வோம். அவரது மொத்த மூலதனம் $50,000 என்றால், அவரது வருடாந்தரச் செலவீடுகள் பின்வருமாறு இருக்கும்:

| | | | | |
|---|---|---|---|---|
| $25,000 | ÷ | 10 = | $ | 2,500 |
| 12,500 | ÷ | 2 = | | 6,250 |
| 12,500 | × | 2 = | | 25,000 |
| | | | $ | 33,750 |

[27] "நகரங்களில் நடைபெறும் பொருளுற்பத்தி நாட்களின் சகடத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது; மாறாக, கிராமங்களில் நடைபெறும் பொருளுற்பத்தி ஆண்டுகளின் சகடத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது." (ஆதாம் ஹை. முல்லர், Die Elemente der Staatskunst, பெர்லின், 1809, III., பக்கம் 178.) தொழில், வேளாண்மைத் துறைகள் குறித்து புத்தார்வ மரபினர் [romantic school] கொண்டுள்ள கருத்தோட்டம் இப்படித்தான் பாமரத்தனம் வாய்ந்ததாய் இருக்கிறது.

...அவரது மூலதனம் புரளும் சராசரிக் காலம் சுமார் பதினாறு மாதம் ஆகும்.*... இன்னொரு உதாரணத்தை எடுத்துக் கொள்வோம்....மொத்த மூலதனத்தில் கால் பாகம் பத்தாண்டிலும், கால் பாகம் ஓராண்டிலும், அரைப் பாகம் ஆண்டில் இரு முறையும் சுழல்வதாகக் கொள்வோம். அப்படியானால், ஆண்டுச் செலவீடுகள் பின்வருமாறு அமையும்:

$$
\begin{array}{rcl}
\$12,500 \div 10 & = & \$\ 1,250 \\
12,500 & = & 12,500 \\
25,000 \times 2 & = & 50,000 \\
\hline
\text{ஓராண்டில் புரள்வது} & & \$63,750
\end{array}
$$

(ஸ்க்ரோப், அரசியல் பொருளாதாரம், பதிப்பாசிரியர்: அலோன்ஸோ பாட்டர், நியூயார்க், 1841, பக்கம் 142, 143.)**

6) மூலதனத்தினது பல்வேறு பகுதிகளின் புரள்வுகளுக்கும் இடையிலுள்ள மெய்யான வேறுபாடுகளும் தோற்ற அளவிலான வேறுபாடுகளும்.

மேற்கண்ட அதே வாசகத்தில் ஸ்க்ரோப் கூறுவதாவது: "தொழிலதிபரோ சாகுபடியாளரோ வணிகரோ தமது வேலையாட்களுக்குக் கூலி கொடுப்பதற்காகச் செலவிடும் மூலதனம்தான் யாவற்றிலும் அதிவேகமாய்ச் சுழல்கிறது—(ஆட்களுக்கு வாரக் கூலி கொடுக்கப் படுமாயின்) வாராந்தர உண்டியல்கள் [bills] அல்லது விற்பனைகள் மூலம் வரும் வரவுகள் வாயிலாய் வாரம் ஒரு முறை புரள்கிறது. அவரது கச்சாப் பொருட்களிலும் கையிருப்புகளிலும் முதலீடாகியிருப்பது சற்று குறைந்த வேகத்தில் சுழல்கிறது—அவர் விலைக்கு வாங்குவதற்கும் விற்பதற்கும் இடையில் கழியும் காலத்துக்கு ஏற்ப (ஒத்த கடன் நிபந்தனைகளின் பேரில் அவர் வாங்குவதாகவும் விற்பதாகவும் கொள்கிறோம்) ஆண்டுக்கு ஒரு முறையோ இரு முறையோ புரளலாம். அவரது வேலைக் கருவிகளிலும் இயந்திர சாதனத்திலும் முதலீடு செய்யப்பட்டிருக்கும் மூலதனம் இன்னுங்கூட மெதுவாகவே சுழல்கிறது; சராசரியாக ஐந்து அல்லது

---

* மூலதனத்தின் புரள்வுக் காலத்தை இப்படிக் கணக்கிடுவது தவறானது என்று கையெழுத்துப் பிரதியில் மார்க்ஸ் சுட்டிக் காட்டுகிறார். மேற்கோளில் தரப்பட்டுள்ள சராசரிப் புரள்வுக் காலம் (16 மாதம்) $50,000 மொத்த மூலதனத்துக்கு 7.5 சதவீத இலாபம் எனக் கொண்டு கணக்கிடப்பட்டது. இலாபத்தை நீக்கி விட்டால் மூலதனப் புரள்வு 18 மாதத்துக்குச் சமம்.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

** மார்க்ஸ் குறிப்பிடும் புத்தகமாவது: அ. பாட்டர் எழுதிய அரசியல் பொருளாதாரம், அதன் குறிக்கோள்கள், பயன்கள், கோட்பாடுகள், நியூயார்க், 1840. நூலாசிரியரின் "விளம்பரத்தில்" கூறியுள்ள படி, புத்தகத்தின் இரண்டாம் பகுதி, கணிசமான அளவுக்கு, ஜா. ஜூ. பு. ஸ்க்ரோப் எழுதிய அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள், லண்டன், 1833 என்ற நூலின் மறுவெளியீடாகப் பெருமளவுக்கு விளங்குகிறது (பாட்டர் செய்துள்ள பல மாற்றங்களோடு).—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

பத்து ஆண்டுகளில் ஒரு முறை புரள்கிறது, அதாவது நுகரப்பட்டு பிறகு மாற்றீடு செய்யப்படுகிறது — ஒரே ஒரு செயற்பாட்டுத் தொகுதியிலேயே தேய்ந்து போய் விடும் கருவிகள் பலவும் உள்ளன என்றாலும் சராசரியாக நிலைமை இதுதான். ஆலைகள், பட்டறைகள், பண்டக சாலைகள், களஞ்சியங்கள், சாலைகள், நீர்ப்பாசனம் போன்ற கட்டுமானங்களில் ஈடுபடுத்தப்படும் மூலதனம் சுழல்வதாகவே தெரிவதில்லை. ஆனால் உண்மையில் இவையும் நாம் பட்டியலிட்டிருப்பவற்றைப் போலவே உற்பத்திக்குப் பங்களித்து முழு அளவுக்கு நுகரப்படுகின்றன; உற்பத்தியாளர் தொடர்ந்து செயல்பட வேண்டுமானால் இவையும் மறுவுற்பத்தி செய்யப்பட்டே ஆக வேண்டும் — ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால், ஏனையவற்றைக் காட்டிலும் மெதுவாகவும் சிறுகச் சிறுகவும் நுகரப்பட்டு அவ்வாறே மறுவுற்பத்தியும் செய்யப்படுகின்றன. இவற்றில் முதலீடு செய்யப்படும் மூலதனம் அநேகமாய் இருபது அல்லது ஐம்பது ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் புரள்கிறது'' [பக்கம் 141-142].

தனிப்பட்ட முதலாளிக்குக் கொடுப்புக் காலங்களாலும் கடன் நிலைமைகளாலும் சுழல்-மூலதனத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளின் ஓட்டத்தில் ஏற்படும் வேறுபாட்டை, மூலதனத்தின் இயல்பு காரணமாய் புரள்வுகளில் ஏற்படும் வேறுபாட்டுடன் இங்கே குழப்புகிறார் ஸ்க்ரோப். ரொக்க விற்பனைகள் அல்லது உண்டியல்களிலிருந்து கிடைக்கும் வாராந்தர வரவுகளைக் கொண்டு வாரந்தோறும் கூலி கொடுத்தாக வேண்டும் என்கிறார். முதலாவதாக, கொடுப்புக் காலத்தின் அளவைப் பொறுத்து, அதாவது தொழிலாளி முதலாளிக்குக் கடன் கொடுத்தாக வேண்டிய கால அளவைப் பொறுத்து, கூலி வாரம் ஒரு முறை தரப்படுகிறதா, மாதம் ஒரு முறை தரப்படுகிறதா, மூன்று மாதத்துக்கு ஒரு முறை தரப்படுகிறதா, ஆறு மாதத்துக்கு ஒரு முறை தரப்படுகிறதா என்பதைப் பொறுத்து, கூலி தொடர்பாகவே கூட சில வேறுபாடுகள் ஏற்படுகின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். ''கால வட்டக் கொடுப்புகள் அனைத்துக்கும் தேவைப்படுகிற கொடுப்புச் சாதனத்தின் அளவு'' (ஆகவே ஒரு நேரத்தில் முன்னீடு செய்ய வேண்டிய பண-மூலதனத்தின் அளவு) ''அவற்றினது காலங்களின் அளவுக்கு எதிர்* விகிதத்தில் உள்ளது'' என்று முன்பு வகுத்துரைத்த அதே விதிதான் இங்கும் செயல்படுகிறது. (முதல் பாகம், அத்தியாயம் III., 3ஆ, பக்கம் 197.)

இரண்டாவதாக, வாராந்தர உற்பத்தியில் முழுமையாகச் சேருவது அவ்வார உழைப்பினால் உற்பத்தி நிகழ்முறையில் சேர்க்கப்படும் புதிய மதிப்பு மட்டுமல்ல. வாராந்தர உற்பத்தியால்

* கைத்தவறாகவே இருக்க வேண்டும். நேர் என்பதற்கு பதில் எதிர் என்பதாக ஆசிரியர் எழுதி விடுகிறார். — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

நுகரப்படும் கச்சாப் பொருள், துணைப் பொருள் ஆகியவற்றின் மதிப்பும் அதில் முழுமையாகச் சேர்கிறது. இந்த மதிப்பு அதனைத் தன்னகத்தே கொண்ட உற்பத்திப் பொருளுடன் சேர்ந்து சுற்றி யோடுகிறது. உற்பத்திப் பொருளின் விற்பனையின் மூலம் அது பணமாக உருமாறுகிறது. திரும்பவும் அதே உற்பத்தி-அடிக்கூறு களாக அதனை மாற்றியாக வேண்டும். இது கச்சாப் பொருட்களுக் கும் துணைப் பொருட்களுக்கும் பொருந்துவது போலவே உழைப் புச் சக்திக்கும் பொருந்தும். . ஆனால் முன்பே பார்த்தது போல (அத்தியாயம் VI., II, 1) உற்பத்தி தொடர்ச்சியாக நடைபெற உற் பத்திச் சாதனங்களின் இருப்பு அவசியம்; இந்த இருப்பு தொழிற் கிளைக்குத் தொழிற் கிளை வெவ்வேறாக இருக்கும், ஒரே தொழிற் கிளையிலுங்கூட சுழல்-மூலதனத்தின் இந்தக் கூறினது வெவ்வேறு பகுதிகளுக்கும், எடுத்துக்காட்டாக நிலக்கரிக்கும் பருத்திக்கும் வெவ்வேறாக இருக்கும். எனவே, இவற்றைத் தொடர்ச்சியாகப் பண்ட வகையில் மாற்றீடு செய்தாக வேண்டும் என்றாலும், ஒவ்வொரு முறையும் புதிதாக விலைக்கு வாங்க வேண்டும் என்பதில்லை. எவ்வளவு அடிக்கடி விலைக்கு வாங்க வேண்டும் என்பது, கிடைக்கக் கூடிய இருப்பின் அளவையும் அது தீர்ந்து போவதற்கு ஆகும் காலத்தையும் பொறுத்தது. உழைப்புச் சக்தி யைப் பொறுத்த வரை இப்படிச் சேமித்து வைக்க வழியில்லை. உழைப்புச் சக்திக்காக முதலீடு செய்யப்படும் மூலதனப் பகுதி மீண்டும் பணமாக மாறுவது கச்சாப் பொருட்களுக்காகவும் துணைப் பொருட்களுக்காகவும் முதலீடு செய்யப்படும் மூலதனப் பகுதி மீண்டும் பணமாக மாறுவதுடன் சேர்ந்தே நிகழ்கிறது. ஆனால் பணமானது ஒரு புறம் உழைப்புச் சக்தியாகவும், மறு புறம் கச்சாப் பொருட்களாகவும் மீண்டும் மாறுவது தனித்தனியே நிகழ் கிறது; இந்த இரு ஆக்கக் கூறுகளையும் வாங்குவதற்கும் அவற்றுக்கு விலை கொடுப்பதற்கும் ஆகும் காலங்கள் மாறுபடுவதே காரணம்; இவற்றில் ஒன்று திறனுடை இருப்பாக [productive supply] நீண்ட காலத்துக்கு ஒரு முறை வாங்கப்படுகிறது; மற்றது, அதாவது உழைப்புச் சக்தி குறுகிய காலத்துக்கே, உதாரணமாய் வாரா வாரம் வாங்கப்படுகிறது. மறு புறம் முதலாளி உற்பத்திக்குத் தேவையான பொருட்களின் இருப்பு அன்னியில் பூர்த்தியான சரக்குகளையும் இருப்பில் வைத்திருக்க வேண்டும். விற்பனையிலான இடர்ப்பாடு களை ஒதுக்கி விடுவோம். குறிப்பிட்ட அளவு சரக்குகளை சரக் காணையின் பேரில் உற்பத்தி செய்தாக வேண்டுமெனக் கொள் வோம். இந்தத் திரளின் கடைசிப் பகுதியை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் போதே, பூர்த்தியான உருப்படிகள் பண்டக சாலையில் காத்திருக்கின்றன; சரக்காணை முற்றாக நிறைவேற்றப் படும் வரை காத்திருந்தாக வேண்டும். சுழல்-மூலதனத்தின் புரள் விலான ஏனைய வேறுபாடுகளைப் பொறுத்த வரை அதன்

தனித்தனியான சில கூறுகள் உற்பத்தி நிகழ்முறையின் பூர்வாங்கக் கட்டம் ஒன்றில் (உதாரணமாய், மரத்தை உலர வைத்தல்) ஏனைய கூறுகளை விட நீண்ட காலம் இருக்க நேரிடும் போது இந்த வேறுபாடுகள் எழுகின்றன.

ஸ்க்ரோப் இங்கே குறிப்பிடும் கடன்-செலாவணி முறை வணிக மூலதனத்தைப் போலவே, தனிப்பட்ட முதலாளிக்குப் புரள்வினைத் திருத்துகிறது. ஆனால் சமுதாய அளவில் பார்த்தால் உற்பத்தியை மட்டுமல்லாமல் நுகர்வையும் முடுக்கி விடும் வரைதான் அது புரள்வினைத் திருத்துகிறது.

## அத்தியாயம் X

# நிலை-மூலதனம், சுழல்-மூலதனம் இவற்றின் தத்துவங்கள். பிசியோக்கிராட்டுகளும் ஆதாம் ஸ்மித்தும்

நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாட்டை **avances primitives** (ஆரம்ப முன்னீடுகள்), **avances annuelles** (வருடாந்தர முன்னீடுகள்) ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடாக கெனே கருதுகிறார். இந்த வேறுபாடு உற்பத்தி நிகழ்முறையில், நேரடியாக ஈடுபடுத்தப்படும் மூலதனமாகிய திறனுடை-மூலதனத்தில் இருப்பதாகும் என்று அவர் பிழையற்ற வாறு சுட்டிக் காட்டுகிறார். வேளாண்மைத் துறையில் ஈடுபடுத்தப் படும் மூலதனமாகிய சாகுபடியாளரின் [farmer] மூலதனத்தை மட்டுமே உண்மையான திறனுடை-மூலதனமாக அவர் கருதுவதால், சாகுபடியாளரின் மூலதனம் சம்பந்தமாய் மட்டுமே அவர் இந்த வேறுபாடுகளைக் குறிப்பிடுகிறார். புரள்வுக்கு ஆகும் காலம் மூலதனத்தில் ஒரு பகுதிக்கு ஓராண்டாகவும், மறு பகுதிக்கு ஓராண்டுக்கு மேற்பட்டதாகவும் (பத்தாண்டுகளாய்) அமைவதற்கும் இதுவே காரணமாகிறது. வளர்ச்சியைத் தொடர்ந்து நாளாவட்டத் தில் பிசியோக்கிராட்டுகள் இந்த வேறுபாடுகளை பிற வகைப்பட்ட மூலதனத்துக்கும், பொதுவாகத் தொழில் துறை மூலதனத்துக்கும் உரியனவாய்க் கொள்ளலாயினர். வருடாந்தர முன்னீடுகளுக்கும் பல்லாண்டு கால முன்னீடுகளுக்கும் இடையிலான வேறுபாடு சமூகத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருப்பதால், ஆதாம் ஸ்மித் காலத்துக்குப் பிறகும் கூட பல பொருளாதார அறிஞர்கள் இவ்வழிப்பட்ட இலக்கணத்துக்குத் திரும்பி வரக் காண்கிறோம்.

இந்த இரு வகை முன்னீடுகளுக்கும் இடையிலான வேறுபாடு முன்னீடு செய்யப்படும் பணம் திறனுடை-மூலதனக் கூறுகளாக உரு மாறிய பிறகே எழுகிறது. திறனுடை-மூலதனத்துள் மட்டுமே நிலவக் கூடிய வேறுபாடு இது. ஆகவே, பணத்தை ஆரம்ப முன்னீடு

என்றும் வருடாந்தர முன்னீடு என்றும் வகைப்படுத்த வேண்டுமென்ற நினைப்பே கெனேக்கு எழவில்லை. உற்பத்திக்கான முன்னீடுகள் என்ற முறையில், அதாவது திறனுடை-மூலதனம் என்ற முறையில் இவையிரண்டுமே பணத்துக்கும் மற்றும் சந்தைச் சரக்குகளுக்கும் எதிர் நிலையில் இருப்பவை. மேலும், திறனுடை-மூலதனத்தின் இந்த இரு கூறுகளுக்கும் இடையிலான வேறுபாடு அவை பூர்த்தியான பண்டத்தின் மதிப்பில் சேரும் விதத்திலான வேறுபாடே ஆகுமென — ஆகவே அவற்றின் மதிப்பு உற்பத்திப் பொருளின் மதிப்போடு சேர்ந்து சுற்றியோடும் விதத்திலான வேறுபாடே ஆகுமென — ஆகவே அவற்றின் மாற்றீடு அல்லது மறுவுற்பத்தி நடைபெறும் விதத்திலான வேறுபாடே ஆகுமெனக் கெனே பிழையற்ற முறையில் விளங்க வைக்கிறார். ஒன்றின் மதிப்பு ஆண்டுக்கு ஒரு முறை முழுமையாக மாற்றீடு செய்யப்படுகிறது. மற்றதன் மதிப்பு இன்னும் அதிக காலத்துக்கு ஒரு முறை மாற்றீடு செய்யப்படுகிறது.[28]

இதன்பின் ஆதாம் ஸ்மித் சாதித்ததெல்லாம் இந்தக் கருத்தினங்களைப் பொதுமைப்படுத்தியதுதான். அவரைப் பொறுத்த வரை, இந்தக் கருத்தினங்கள் இனி மூலதனத்தின் தனி வடிவங்களில் ஒன்றாகிய சாகுபடியாளரின் மூலதனத்துக்கு மட்டுமல்லாமல் திறனுடை-மூலதனத்தின் ஒவ்வொரு வடிவத்துக்கும் பொருந்தக் கூடியவை ஆகின்றன. ஆகவே வேளாண்மையிலிருந்து வரப்பெற்ற பாகுபாட்டை அனுசரித்து வருடாந்தரப் புரள்வு என்றும், இரண்டாண்டு அல்லது அதற்கு அதிகமான காலமாகும் புரள்வு என்றும் பாகுபாடு செய்வது பொருந்தாது என்பது தெரிகிறது. இதற்குப் பதில் புரள்வுகளைப் பொதுப்பட வெவ்வேறு கால அளவுகள் கொண்டவையாகப் பாகுபாடு செய்து, சுழல்-மூலதனப் புரள்வுக்கு

---

[28] பார்க்கவும்: கெனே, *Analyse du Tableau Economique (Physiocrates, ed. Daire, 1. partie*, பாரிஸ், 1846. எடுத்துக்காட்டாக, இந்நூலில் கெனே சொல்கிறார்: "வருடாந்தர முன்னீடுகள் சாகுபடி வேலைகளுக்காக வருடந்தோறும் ஆகும் செலவுகளாலானவை; இந்த முன்னீடுகளை, வேளாண்மை முனைவை நிறுவுவதற்கான நிதியாக அமையும் ஆரம்ப முன்னீடுகளிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்." (பக்கம் 59) பிற்கால பிசியோக்கிராட்டுகளின் நூல்களில், இந்த முன்னீடுகள் சில சந்தர்ப்பங்களில் நேரடியாக மூலதனம் என்றே குறிப்பிடப்படுகின்றன: *Capital ou avances Dupont de Nemours, Maximes du Docteur Quesnay, ou Resume de ses Principes d'Economie Sociale* (Daire, I., பக்கம் 391); மேலும் லெ திரொஸ்னே எழுதுகிறார்: "மனித உழைப்பு படைப்பவற்றின் நீண்ட அல்லது குறுகிய ஆயுளின் பயனாய் நாடு அதன் வருடாந்தர மறுவுற்பத்தி அல்லாமல் கணிசமான ஒரு செல்வக் களஞ்சியத்தைப் பெற்றிருக்கிறது: இது தொடர்ந்து பாதுகாக்கப் பெற்று, பெருகிச் செல்லும் மூலதனமாகிறது. இந்த மூலதனம் நீண்ட காலமாய்த் திரட்டப் பெற்றதாகும், ஆதியில் உற்பத்திப் பொருட்களைச் செலவிட்டு உருவாக்கப்பட்டதாகும்." (Daire, II., பக்கம் 928-29.) துர்கோ மூலதனம் என்பதற்கு avances (முன்னீடுகள்) என்ற பதத்தை இன்னும் முறையாகப் பயன்படுத்துகிறார்; ஆலையதிபர்களின் முன்னீடுகளை சாகுபடியாளர்களின் முன்னீடுகளுடன் இன்னும் அதிகமாக ஒன்றுபடுத்திக் காட்டுகிறார். (துர்கோ, *Reflexions sur la Formation et la Distribution des Richesses*, 1766.)

ஆகும் காலம் எவ்வளவாயினும், ஓராண்டு ஆயினும் அதற்கு அதிக மாயினும் குறைவாயினும், நிலை-மூலதனப் புரள்வு ஒவ்வொன்றும் எப்போதுமே ஒன்றுக்கு மேற்பட்ட சுழல்-மூலதனப் புரள்வினைக் கொண்டதாகும் என்று காட்டப்படுகிறது. இவ்விதம் ஆதாம் ஸ்மித் திடம் வருடாந்தர முன்னீடுகள் சுழல்-மூலதனமாகவும், ஆரம்ப முன்னீடுகள் நிலை-மூலதனமாகவும் மாறி விடுகின்றன. ஆனால் அவர் கண்ட முன்னேற்றம் கருத்தினங்களை இப்படிப் பொதுமைப் படுத்துவதோடு நின்று விடுகிறது. நடைமுறையில் அவரது நிறை வேற்றம் கெனேயினதைக் காட்டிலும் பிற்பட்டதாய் இருக்கிறது.

கொச்சையான அனுபவவாத [empirical] முறையில் ஸ்மித் இந்த ஆராய்ச்சியைத் துவக்குகிறார்; இதனால் ஆரம்பம் முதற் கொண்டே, அது தெளிவற்றதாய் இருக்கிறது. "மூலதனத்தைப் பிரயோகிப்பவருக்கு வருவாய் அல்லது இலாபம் கிடைக்கும் விதத்தில் மூலதனத்தைப் பயன்படுத்த இருவேறு வழிகள் உண்டு." *(நாடுகளின் செல்வம், புத்தகம் II., அத்தியாயம் I., பக்கம் 189, அபர்தீன் பதிப்பு, 1848.*)*

மூலதனமாகச் செயல்பட்டு உடைமையாளருக்கு உபரி-மதிப்பு கிடைக்கச் செய்யும் விதத்தில் மதிப்பை முதலீடு செய்வதற்கான வழிகள் மூலதன முதலீட்டுத் துறைகளைப் போல் மிகப் பல்வேறு பட்டவை. மூலதனம் முதலீடாகக் கூடிய பல்வேறு உற்பத்திக் கிளை களை பற்றிய பிரச்சினை இது. இவ்விதம் எடுத்துரைக்கப்படுகை யில் பிரச்சினை மேலும் பலவற்றையும் குறிப்பதாகிறது. மதிப் பானது திறனுடை-மூலதனமாக முதலீடாகா விட்டாலும், அதன் உடைமையாளருக்கு மூலதனமாக—உதாரணமாய் வட்டி வருவாய் அளிக்கும் மூலதனமாகவும், வணிக மூலதனமாகவும் இன்ன பிற வாகவும்—செயல்படுவதற்கான வழி பற்றிய பிரச்சினையும் இதில் அடங்குகிறது. இதற்குள் நாம் மெய்யான ஆய்வுப் பொருளை விட்டு, அதாவது முதலீட்டுத் துறை வெவ்வேறாயினும் திறனுடை-மூலதனம் அதன் வெவ்வேறு கூறுகளாகப் பிரிவதால் அவற்றின் புரள்வு எப்படிப் பாதிக்கப்படுகிறது என்பதை விட்டு எத்தனையோ மைல் விலகிச் சென்று விடுகிறோம்.

ஆதாம் ஸ்மித் உடனடியாக மேலும் சொல்கிறார்: "முதலாவ தாக, சரக்குகளை விளைவிப்பதிலும் தயாரிப்பதிலும், அல்லது வாங்குவதிலும் இலாபத்துக்கு விற்பதிலும் அதனை ஈடுபடுத் தலாம்." (பாகம் II., பக்கம் 254.) இங்கு ஆதாம் ஸ்மித்

* ஸ்மித்தின் நூலிலிருந்து தரப்படும் மேற்கோள்களுக்கு மார்க்ஸ் பக்கம் குறிக்காத இடங்களிலெல்லாம், சதுர அடைப்புக் குறிகளில் பக்கம் குறிக்கப்படுகிறது. நாடுகளின் செல்வம், அதன் இயல்பும் காரணங்களும் பற்றிய ஆய்வு—நான்கு பாகங்கள் கொண்ட புதிய பதிப்பு என்பதன் 1843ஆம் வருடத்திய லண்டன் பதிப்பின் பக்கங்களை இது குறிக்கிறது. இந்த ஸ்மித் மேற்கோளும் அடுத்து வருகிற யாவும் இந்தப் பதிப்புடன் சரி பார்க்கப்பட்டவை.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

சொல்வதெல்லாம் வேளாண்மை, தொழில், வாணிபம் ஆகிய வற்றில் மூலதனத்தை ஈடுபடுத்தலாம் என்பதற்கு மேல் ஒன்று மில்லை. இவ்விதம் அவர் மூலதனத்தின் வெவ்வேறு முதலீட்டுத் துறைகள் பற்றியே பேசுகிறார். இந்த முதலீட்டுத் துறைகள் சில வற்றில்—உதாரணமாய் வர்த்தகத்தில்—மூலதனம் நேரடியாக உற்பத்தி நிகழ்முறையில் சேருவதில்லை; எனவே திறனுடை-மூல தனமாகச் செயல்படுவதில்லை. திறனுடை-மூலதனத்துள் நிலவுகிற பாகுபாடுகளுக்கும் அவற்றால் புரள்வினில் ஏற்படுகிற விளைவு களுக்கும் பிசியோக்கிராட்டுகள் எதை அடிப்படையாகக் கொள் கிறார்களோ அந்த அடிப்படையையே ஆதாம் ஸ்மித் இவ்விதம் கை விட்டு விடுகிறார். அது மட்டுமல்ல. உற்பத்திப் பொருளையும் மதிப்பையும் படைக்கிற நிகழ்முறையின் போது திறனுடை-மூல தனத்துள் எழும் வேறுபாடுகளையும், இவற்றால் மூலதனப் புரள் விலும் மறுவுற்பத்தியிலும் ஏற்படுகிற வேறுபாடுகளையும் தவிர வேறு எதுவும் சம்பந்தப்படாத ஒரு பிரச்சினையில் அவர் வணிக மூலதனத்தை உதாரணமாக பயன்படுத்துகிறார்.

அவர் மேலும் சொல்கிறார்: "இந்த விதத்தில் ஈடுபடுத்தப் படுகிற மூலதனம் அதை ஈடுபடுத்துகிறவரின் வசம் இருக்கையில், அல்லது பழைய உருவிலேயே தொடர்ந்து இருந்து வருகையில் அவருக்கு வருவாயோ இலாபமோ கிடைக்காது," (பாகம் II., பக்கம் 254.) "இந்த விதத்தில் ஈடுபடுத்தப்படுகிற மூலதனம்!" ஆனால் ஸ்மித் இங்கு பேசுவது வேளாண்மைத் துறையில், தொழில் துறையில் முதலீடு செய்யப்படும் மூலதனம் குறித்தே. இப்படி ஈடுபடுத்தப்படுகிற மூலதனம் நிலை-மூலதனமாகவும் சுழல்-மூலதன மாகவும் பிரிவதாகப் பிற்பாடு நமக்குச் சொல்கிறார்! எனவே மூலதனத்தை இந்த விதத்தில் முதலீடு செய்வதானது அதனை நிலை-மூலதனமோ சுழல்-மூலதனமோ ஆக்க முடியாது.

அல்லது, அவர் சொல்ல நினைப்பது வேறு ஒன்றா? பண்டங் களை உற்பத்தி செய்யும் பொருட்டும் அவற்றை விற்று இலாப மடையும் பொருட்டும் ஈடுபடுத்தப்படும் மூலதனம் பண்டங்களாக உருமாற்றி விற்கப்பட்டு, விற்பனையின் மூலம் முதலாவதாக அது விற்பவரின் கையிலிருந்து வாங்குபவரின் கைக்கு மாற வேண்டும்; இரண்டாவதாக, பண்டங்கள் என்ற தசையுருவிலிருந்து [bodily form] பண வடிவத்துக்கு மாற வேண்டும் என்பதால், அதன் உடை மையாளரின் வசம் இருந்து வரும் வரை அல்லது அதன் பழைய உருவில் நீடிக்கும் வரை, அதனால் அவருக்கு எப்பயனும் இல்லை என்று சொல்ல நினைக்கிறாரா? அப்படியானால், விவகாரத்தின் சாரம் இதுதான்: முன்பு மூலதன-மதிப்பு திறனுடை-மூலதனத்தின் வடிவில், அதாவது உற்பத்தி நிகழ்முறைக்கு வேண்டிய அந்த விசேஷ வடிவில் அமைந்து செயல்பட்டது; இப்போது அது சரக்கு-மூலதனமாகவும் பண-மூலதனமாகவும், அதாவது சுற்றோட்ட

நிகழ்முறைக்கு வேண்டிய விசேஷ வடிவங்களில் அமைந்து செயல் படுகிறது. ஆகவே இனி அது நிலை-மூலதனமோ சுழல்-மூல தனமோ அல்ல. கச்சாப் பொருளும் துணைப் பொருளும், அதாவது சுழல்-மூலதனம் சேர்க்கிற மதிப்புக் கூறுகளுக்கு இது பொருந்துவது போலவே, உழைப்புச் சாதனங்களின் தேய்மானம், அதாவது நிலை-மூலதனம் சேர்க்கிற மதிப்புக் கூறுகளுக்கும் பொருந்துகிறது. நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாட்டை நோக்கி இவ்வழியில் நாம் ஓரடி கூட நெருங்கி முன்செல்ல முடியவில்லை.

ஸ்மித் மேலும் சொல்கிறார்: ''வியாபாரி தமது பண்டங் களைப் பணத்துக்கு விற்கும் வரை அவற்றால் அவருக்கு வரு வாயோ இலாபமோ கிடைப்பதில்லை. பணத்தைக் கொடுத்து மீண்டும் பண்டங்களாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளும் வரை பணத்தாலும் அவருக்கு எதுவும் கிடைப்பதில்லை. அவரது மூலதனம் தொடர்ச்சியாக அவரிடமிருந்து ஒரு வடிவில் போய்க் கொண்டும், அவரிடம் இன்னொரு வடிவில் திரும்பி வந்து கொண்டும் இருக்கிறது; இத்தகைய சுற்றோட்டத்தின் மூலம்தான், அதாவது அடுத்து அடுத்து நடைபெறும் பரிவர்த்தனைகளின் மூலம்தான் அது அவருக்கு இலாபம் கிடைக்கும் படி செய்ய முடியும். ஆகவே இத்தகைய மூலதனங்களைச் சுழல்-மூலதனங்கள் என்று அழைப்பது சாலப் பொருத்தமாய் இருக்கும்.'' (பாகம் II., பக்கம் 254.)

ஆதாம் ஸ்மித் இங்கே எதைச் சுழல்-மூலதனம் என வரையறை செய்கிறாரோ அதை நான் **சுற்றோட்ட மூலதனம்** [capital of circulation] என்று அழைக்க விரும்புகிறேன். இம்மூலதனம் சுற் றோட்ட நிகழ்முறைக்கு, பரிவர்த்தனையின் வாயிலாய் நடைபெறும் உருமாற்றத்துக்கு (பொருள் வகையிலான மாற்றத்துக்கும் ஒருவர் கையிலிருந்து இன்னொருவர் கைக்கு மாறுவதற்கும்) ஏற்ற வடிவில் இருப்பதாகும்; ஆகவே உற்பத்தி நிகழ்முறைக்கு ஏற்ற வடிவமாகிய திறனுடை-மூலதனத்தின் வடிவத்துக்கு மாறாக, சரக்கு-மூலதன வடிவிலும் பண-மூலதன வடிவிலும் இருப்பதாகும். இவை தொழில் துறை முதலாளி தமது மூலதனத்தை வகைபிரிப்பதால் எழும் வெவ்வேறு மூலதன வகைகளல்ல. மாறாக, முன்னீடு செய் யப்படும் ஒரே மூலதன-மதிப்பு அதன் வாழ்வில் திரும்பத் திரும்ப தரித்துக் கொள்வதும் பிறகு களைந்து விடுவதுமாகிய வெவ்வேறு வடிவங்களே ஆகும். இந்த வடிவ வேறுபாடுகளை ஆதாம் ஸ்மித், திறனுடை-மூலதனத்தின் வடிவில் இருந்து வருகிற மூலதன-மதிப்பு அதன் சுழற்பாதையில், அதாவது அடுத்தடுத்து வருகிற வடிவங் களைக் கடந்து செல்லும் அதன் சுற்றில் செல்கையில் ஏற்படும் வடிவ வேறுபாடுகளோடு சேர்த்துக் குழப்படி செய்கிறார்— பிசியோக்கிராட்டுகளுடன் ஒப்பிடுகையில் அவர் பெரிய அளவில்

பின்னோக்கிச் சரிந்து விடுவதையே இது குறிக்கிறது. திறனுடை-மூலதனத்தின் வெவ்வேறு கூறுகளும் மதிப்பைப் படைப்பதில் வெவ்வேறு விதமாய்ப் பங்கேற்று உற்பத்திப் பொருளுக்குத் தமது மதிப்பை வெவ்வேறு வழிகளில் பெயர்த்தளிப்பதால் எழுகிறவை பின்னால் கூறிய வடிவ வேறுபாடுகள். ஒரு புறம் சுற்றோட்டத் துறையிலான மூலதனம் (சரக்கு-மூலதனமும் பண-மூலதனமும்), திறனுடை-மூலதனம் ஆகியவற்றை, மறு புறம் சுழல்-மூலதனம், நிலை-மூலதனம் ஆகியவற்றோடு குழப்புகிற இந்த அடிப்படையான குளறுபடியின் விளைவுகளைப் பிற்பாடு பார்ப்போம். சுழல்-மூலதனமாய் முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பைப் போலவே, நிலை-மூலதனமாய் முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பும் சுற்றியோடுவது உற்பத்திப் பொருள் மூலமாகத்தான். இரண்டுமே சரக்கு-மூலதனத்தின் சுற்றோட்டத்தால்தான் பண-மூலதனமாக மாறுகின்றன. வேறுபாடு எங்கிருந்து உதித்தெழுகிறது என்றால் நிலை-மூலதனத்தின் மதிப்பு சன்னம் சன்னமாக சுற்றியோடுகிறது, ஆகவே குறுகிய அல்லது நீண்டகால இடைவெளிகளில் அதனை சன்னம் சன்னமாகவே மாற்றீடு செய்யவும், தசையுருவில் அதனை மறுவுற்பத்தி செய்யவும் வேண்டும் என்ற உண்மையிலிருந்தே.

சுற்றோட்ட மூலதனத்தைத்தான், அதாவது சுற்றோட்ட நிகழ்முறைக்கு ஏற்ற வடிவங்களில் நிலவும் மூலதன-மதிப்பைத்தான் (சரக்கு-மூலதனம், பண-மூலதனம்) ஆதாம் ஸ்மித் இங்கே சுழல்-மூலதனம் என்கிறார் என்பது சற்றும் பொருத்தமற்ற உதாரணத்தை அவர் தேர்ந்தெடுப்பதிலிருந்தே தெளிவாகி விடுகிறது. சற்றேனும் உற்பத்தி நிகழ்முறையைச் சேர்ந்ததாய் இராத, சுற்றோட்டத் துறையில் மட்டுமே இருக்கக் கூடிய, முற்றிலும் சுற்றோட்ட மூலதனமாய் அமைந்த ஒரு மூலதன வகையை, அதாவது வணிக மூலதனத்தை [merchant's capital] இங்கே அவர் உதாரணமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்.

சிறிது கூட திறனுடை-மூலதனமாகச் செயல்படாத ஒரு மூலதன வகையை உதாரணமாகக் கொண்டு ஆய்வினைத் தொடங்குவது எவ்வளவு அபத்தமானது என்பதை அவரே இதற்கு அடுத்தாற் போல் எடுத்துரைக்கிறார்: ''உதாரணமாய் வணிகரின் மூலதனம் முழுக்க முழுக்க சுழல்-மூலதனமாகும்.'' (பாகம் II., பக்கம் 255.) ஆயினும், சுழல்-மூலதனத்துக்கும் நிலை-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடு திறனுடை-மூலதனத்துள்ளேயே நிலவும் அடிப்படை வேறுபாடுகளிலிருந்து எழுவதாக அவர் பிற்பாடு நமக்குச் சொல்கிறார். ஆதாம் ஸ்மித் ஒரு புறம் பிசியோக்கிராட்டுகள் சுட்டிக் காட்டும் வேறுபாட்டையும், மறு புறம் மூலதன-மதிப்பு அதன் சுற்றின் போது தரித்துக் கொள்ளும் வெவ்வேறு வடிவங்களையும் மனத்தில் கொண்டிருக்கிறார். இந்த இரண்டையும் போட்டுக் குழப்பிக் குளறுபடி செய்கிறார்.

ஆனால், பணமும் சரக்கும் ஒன்று மற்றொன்றாய் உருமாறுவதன் மூலமே, மதிப்பு ஒரு வடிவத்திலிருந்து மற்றொரு வடிவத்துக்கு மாறுவதாலேயே எப்படி இலாபம் கிடைக்க முடியுமென்பது புரியாப் புதிராகி விடுகிறது. ஸ்மித் சுற்றோட்டத் துறையில் மட்டும் இயங்குவதாகிய வணிக மூலதனத்திலிருந்து தொடங்குவதால் இந்தப் புதிருக்கு விளக்கம் கூறுவது முடியாத காரியமாகி விடுகிறது. பிற்பாடு இப்பிரச்சினையைப் பரிசீலிப்போம். அதற்கு முன் நிலை-மூலதனம் பற்றி ஸ்மித் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். (பாகம் II., பக்கம் 254-55.)

''இரண்டாவதாக, அதனை (மூலதனத்தை) நிலவள மேம்பாட்டில் அல்லது பயனுள்ள இயந்திரங்களையும் தொழிற் கருவிகளையும் [instruments of trade] வாங்குவதில் ஈடுபடுத்தலாம், அல்லது அதிபர் மாற்றமில்லாமலே, அதாவது அதற்கு மேல் சுற்றியோடாமலே வருவாய் அல்லது இலாபம் தரக் கூடியவற்றில் ஈடுபடுத்தலாம். ஆகவே, இப்படிப்பட்ட மூலதனங்களை நிலை-மூலதனங்கள் என்றழைப்பது மிகவும் பொருத்தமானது. வெவ்வேறு தொழில்களில் ஈடுபடுத்தப்படும் நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையே வெவ்வேறு விகிதாசாரங்கள் இருப்பது அவசியம்....கைவினை அதிபர் அல்லது தொழிலதிபர் ஒவ்வொருவரின் மூலதனத்திலும் ஒரு பகுதி அவரது தொழிற் கருவிகளில் நிலைத்து நின்றாக வேண்டும். ஆயினும் இந்தப் பகுதி சிலவற்றில் மிகச் சிறியது; வேறு சிலவற்றில் மிகப் பெரியது....ஆயினும், (தையற்காரர்கள், பாத அணி செய்வோர், நெசவாளர்கள் போன்ற) சகல வகைக் கைவினை அதிபர்களின் மூலதனத்திலும் மிகப் பெரும் பகுதி தொழிலாளர்களது கூலியாகவோ, மூலப் பொருட்களின் விலையாகவோ சுற்றியோடுகிறது; உற்பத்திப் பண்டத்தின் விலையைக் கொண்டு இலாபத்தோடு திரும்பி வருகிறது.''

இலாபத்தின் தோற்றுவாய் பற்றிய இந்தப் பாமரத்தனமான நிர்ணயிப்பு ஒரு புறமிருக்க, இந்த விளக்கத்தின் பலவீனமும் குழப்பமும் உடனே வெளிப்படுகின்றன: இயந்திரத் தயாரிப்பாளரை உதாரணமாய்க் கொண்டால், இயந்திரம் அவரது உற்பத்திப் பொருள்; இது சரக்கு-மூலதனமாகச் சுற்றியோடுகிறது; அல்லது, ஆதாம் ஸ்மித் சொல்வது போல, ''விலகிச் செல்கிறது; அதிபர் மாற்றம் பெறுகிறது, மேலும் சுற்றியோடுகிறது.'' ஆகவே, அவரது இலக்கணத்தின் படி பார்த்தால் இந்த இயந்திரம் சுழல்-மூலதனமே தவிர நிலை-மூலதனம் அல்ல. திறனுடை-மூலதனத்தின் பல்வேறு கூறுகளது பலவிதமான சுற்றோட்டத்திலிருந்து எழும் வேறுபாடாகிய நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாட்டை உற்பத்தி நிகழ்முறையினுள் திறனுடை-மூலதனமாகவும் சுற்றோட்டத் துறையினுள் சுற்றோட்ட மூலதனமாகவும் — அதாவது சரக்கு-மூலதனம் அல்லது பண-மூலதனமாகவும்

— செயல்படுகிற ஒரே மூலதனத்தின் வடிவ வேறுபாடுகளோடு ஸ்மித் சேர்த்துக் குழப்புவதே இந்தக் குளறுபடிக்கு காரணம். ஆகவே ஆதாம் ஸ்மித்தைப் பொறுத்த வரை, நிலை-மூலதனமாக (திறனுடை-மூலதனத்தின் கூறுகளான உழைப்புச் சாதனங்களாக) செயல்படும் அதே பொருட்கள் சரக்கு-மூலதனமாகிய ''சுழல்''-மூலதனமாகவும் (உற்பத்தித் துறையிலிருந்து சுற்றோட்டத் துறைக்குச் செலுத்தப்படும் உற்பத்திப் பொருட்களாகவும்) செயல்பட முடியும்; எல்லாமே மூலதனத்தின் வாழ்வில் அவை வகிக்கும் இடத்தைப் பொறுத்ததாகும்.

ஆனால் ஆதாம் ஸ்மித் அவரது வகைப் பிரிவினையின் அடிப்படை முழுவதையும் திடுமென மாற்றுகிறார்; சில வரிகளுக்கு முன்னால் இந்த ஆராய்ச்சிக்கே தொடக்கமாய் அமையும் வாசகத்தில் என்ன சொன்னாரோ அதனிடமிருந்தே முரண்படுகிறார். இங்கு குறிக்கப்படுவது முக்கியமாய் அவரது பின்வரும் சொற்களாகும்: ''மூலதனத்தைப் பிரயோகிப்பவருக்கு வருவாய் அல்லது இலாபம் கிடைக்கும் விதத்தில் மூலதனத்தைப் பயன்படுத்த இருவேறு வழிகள் உண்டு'' [பாகம் II., பக்கம் 254], அதாவது சுழல்-மூலதனமாகவும் பயன்படுத்தலாம், நிலை-மூலதனமாகவும் பயன்படுத்தலாம். ஆகவே இவை, ஒன்றுக்கொன்று சுயேச்சையான வெவ்வேறு மூலதனங்களை அதாவது தொழில் துறையிலோ வேளாண்மையிலோ பயன்படுத்தக் கூடிய மூலதனங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கான வழிகளாகும். ஆனால் அடுத்து என்ன சொல்கிறார் என்றால் [பாகம் II., பக்கம் 255], ''வெவ்வேறு தொழில்களில் ஈடுபடுத்தப்படும் நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையே வெவ்வேறு விகிதாசாரங்கள் இருப்பது அவசியம்.'' நிலை-மூலதனமும் சுழல்-மூலதனமும் சுயேச்சையான வெவ்வேறு மூலதன முதலீடுகளாக இருந்த நிலை போய், இப்போது, ஒரே திறனுடை-மூலதனத்தின் வெவ்வேறு பகுதிகளாகி விடுகின்றன; இப்பகுதிகள் வெவ்வேறு முதலீட்டுத் துறைகளில் இந்த மூலதனத்தினது மொத்த மதிப்பின் வெவ்வேறு பகுதிகளாகின்றன. ஆகவே இந்த வேறுபாடுகள் திறனுடை-மூலதனம் தக்கபடி பிரிக்கப்படுவதால் எழுகிறவை; இவ்விதம் அதற்கு மட்டுமே பொருந்துகிறவை. ஆனால் வெறும் சுழல்-மூலதனமே ஆகிய வணிக மூலதனத்தை நிலை-மூலதனத்துக்கு எதிரானதாக்குகிற நிலைமை இதற்கு முரணாய் இருக்கிறது. ஆதாம் ஸ்மித்தே சொல்கிறார்: ''உதாரணமாய் வணிகரின் மூலதனம் முழுக்க முழுக்க சுழல்-மூலதனமாகும்.'' (பாகம் II., பக்கம் 255.) உள்ளபடியே அது முற்றிலும் சுற்றோட்டத் துறையில் மட்டுமே செயல்படும் மூலதனமாகும்; ஆகவே, உற்பத்தி நிகழ்முறையைச் சேர்ந்த மூலதனமாகிய திறனுடை-மூலதனத்துக்குப் பொதுவாய் எதிர்நிலையில் இருப்பதாகும். இதே காரணத்தால், அதனைத் திறனுடை-மூலதனத்தின்

சுழல்-பகுதியாக்கி, நிலைப் பகுதிக்கு எதிரானதாக்க முடியாது.

ஸ்மித் தமது உதாரணங்களில் ''தொழிற் கருவிகளுக்கு'' நிலை-மூலதனம் என்றும், கூலிக்காகவும் துணைப்பொருட்கள் உள்ளிட்ட கச்சாப் பொருட்களுக்காகவும் செலவிடப்படும் மூலதனப் பகுதிக்கு (''உற்பத்திப் பண்டத்தின் விலையின் மூலம் இலாபமும் சேர்ந்து திரும்ப வரும்'') சுழல்-மூலதனம் என்றும் பெயர் சூட்டுகிறார்.

ஆகவே, முதலில் அவர் உழைப்பு நிகழ்முறையைச் சேர்ந்த பல்வேறு கூறுகளிலிருந்து தொடங்குகிறார்; ஒரு புறம் உழைப்புச் சக்தி (உழைப்பு), கச்சாப் பொருட்கள் ஆகியவற்றிலிருந்தும், மறு புறம் உழைப்புச் சாதனங்களிலிருந்தும் தொடங்குகிறார். ஆனால் இவை மூலதனத்தின் அடக்கக் கூறுகளாகும்; ஏனெனன்றால் மூல தனமாகச் செயல்பட வேண்டிய மதிப்புத் தொகை அவற்றில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. இவ்விதம் அவை திறனுடை-மூலதனத்தின், அதாவது உற்பத்தி நிகழ் முறையில் செயல்படுகிற மூலதனத்தின் பொருட் கூறுகளாகும், நிலவல் வடிவங்களாகும். ஆனால் இந்தக் கூறுகளில் ஒன்று நிலை-மூலதனம் என்று அழைக் கப்படுவது ஏன்? ஏனென்றால் ''மூலதனத்தின் ஒரு பகுதி தொழிற் கருவிகளில் நிலைத்திருந்தாக வேண்டும்'' (பாகம் II., பக்கம் 254) என்கிறார். ஆனால் மறு பகுதியும் கூட கூலியிலும் கச்சாப் பொருட்களிலும் நிலைத்திருப்பதுதானே. ஆயினும் இயந்திரங்களும் ''தொழிற் கருவிகளும்...இன்ன பிறவும்....அதிபர் மாற்றமில் லாமலே, அதாவது அதற்கு மேல் சுற்றியோடாமலே வருவாய் அல்லது இலாபம் தருகின்றன. ஆகவே இப்படிப்பட்ட மூலதனங் களை நிலை-மூலதனங்கள் என்றழைப்பது மிகவும் பொருத்த மானது.'' (பாகம் II., பக்கம் 254.)

சுரங்கத் தொழிலை உதாரணமாய்க் கொள்வோம். அதில் கச்சாப் பொருளுக்கே வேலையில்லை. ஏனென்றால் உழைப்பின் இலக்குப் பொருள் — உதாரணமாய் செம்பு — இயற்கையில் கிடைக் கும் பொருளாகும்; முதலில் உழைப்பைக் கொண்டு அதனை வசமாக்க வேண்டும். நிகழ் முறையின் உற்பத்திப் பொருளாகிய செம்பு முதலில் கைவசமாக்கப்பட்டு, பிறகு சரக்காகச் சுற்றியோ டும்; அதாவது சரக்கு-மூலதனம் ஆகி விடும். ஆனால் அது திற னுடை-மூலதனத்தின் கூறுகளில் ஒன்றாக அமையவில்லை. மூலதன -மதிப்பின் எந்தப் பகுதியும் அதில் முதலீடு செய்யப்படவில்லை. மறு புறம், உற்பத்தி நிகழ்முறையின் ஏனைய கூறுகளான உழைப்புச் சக்தியும், நிலக்கரி, நீர் போன்ற துணைப் பொருட்களும் உற்பத்திப் பண்டத்தில் பொருள் வடிவில் சேருவதில்லை. நிலக்கரி முழுமை யாக நுகரப்பட்டு விடுகிறது. அதன் மதிப்பு மட்டுமே உற்பத்திப் பொருளில் சேருகிறது; இயந்திரம் முதலானவற்றின் மதிப்பில் ஒரு பகுதி சேருவதைப் போன்றதே இது. முடிவில் தொழிலாளி தமது உழைப்பைக் கொண்டு உற்பத்தி செய்யும் மதிப்பு இப்போது

செம்பினது மதிப்பின் ஓர் அடக்கக் கூறாக இருக்கிறது; மற்றபடி, இயந்திரத்தைப் போலவே தொழிலாளியும் உற்பத்திப் பண்டமான செம்பில் கலந்திடாமல் தனித்திருப்பவர். எனவே, இந்த உதாரணத்தில், திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறுகளில் ஒன்று கூட "அதிபர் மாற்றம்" பெறவில்லை, அதற்கு மேல் சுற்றியோடுவதும் இல்லை; ஏனென்றால் அவற்றில் எதுவுமே உற்பத்திப் பண்டத்தில் பொருள் வடிவில் சேருவதில்லை. இந்த உதாரணத்தில் சுழல்-மூலதனம் என்னாகிறது? ஆதாம் ஸ்மித் வகுத்துள்ள இலக்கணப் படி, தாமிரச் சுரங்கத்தில் ஈடுபடுத்தப்படும் மூலதனம் முழுதும் நிலை-மூலதனம் மட்டுமே ஆகும்.

இதற்கு பதில் வேறு ஒரு தொழிலை எடுத்துக் கொள்வோம். பயன்படுத்தப்படும் கச்சாப் பொருட்கள் தொழிலின் உற்பத்திப் பண்டத்தில் பிண்டப் பொருளாவதோடு, துணைப் பொருட்கள் (மதிப்பளவில் மட்டும் உற்பத்திப் பொருளில் சேருகிற எரிபொருளான நிலக்கரியைப் போல் அல்லாமல்) தசைப் பிண்டமாகவும் உற்பத்திப் பொருளில் சேருவனவாய் இருக்கும் படியான தொழிலை எடுத்துக் கொள்வோம். எடுத்துக்காட்டாக, நூலாகிய உற்பத்திப் பொருள் கைமாறும் போது அதன் கச்சாப் பொருளாகிய பருத்தியும் கைமாறுகிறது; உற்பத்தி நிகழ்முறையிலிருந்து நுகர்வு நிகழ்முறைக்குச் செல்கிறது. ஆனால் பருத்தியானது திறனுடை-மூலதனத்தின் கூறாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வரை, அதன் அதிபர் அதனை விற்பதில்லை; அவர் அதனை உற்பத்தி நிகழ்முறைக்கு உட்படுத்துகிறார்; நூலாக்குகிறார். அது அவரை விட்டு விலகுவதில்லை. ஸ்மித் சொல்லும் தப்பும் தவறும் வாய்ந்த அந்தக் கேவலச் சொற்களில் சொல்வதானால், பருத்தியின் அதிபர் "அதை விலகிச் செல்ல வைத்தோ, அதிபர் மாற்றம் பெறச் செய்தோ, சுற்றியோட வைத்தோ" இலாபம் பெறவில்லை. எப்படி அவரது இயந்திரங்களை அவர் சுற்றியோட விடுவதில்லையோ, அதே போல் அவரது மூலப் பொருட்களையும் [materials] அவர் சுற்றியோட விடுவதில்லை. நூற்பு இயந்திரங்களையும் ஆலைக் கட்டடங்களையும் போலவே அவையும் உற்பத்தி நிகழ்முறையில் நிலைத்திருப்பவைதாம். திறனுடை-மூலதனத்தின் ஒரு பகுதி உழைப்புச் சாதனங்களின் வடிவில் தொடர்ச்சியாக நிலைத்திருப்பது போலவே நிலக்கரி, பருத்தி முதலானவற்றின் வடிவிலும் தொடர்ச்சியாக நிலைத்திருந்தாக வேண்டும். வேறுபாடு இதுதான்: உதாரணமாக வாராந்தர நூல் உற்பத்திக்குத் தேவைப்படும் பருத்தி, நிலக்கரி முதலானவை வாராந்தர உற்பத்திப் பண்டத்தால் முழுமையாக நுகரப்பட்டு விடுகின்றன; ஆகவே அவற்றைப் புதிய பருத்தி, நிலக்கரி முதலானவற்றால் மாற்றீடு செய்தாக வேண்டும்; வேறு விதமாகச் சொன்னால், திறனுடை-மூலதனத்தின் இந்தக் கூறுகள் வகையில் மாறாதிருந்தாலும் அதே வகையைச் சேர்ந்த புதுப் புதுத்

தொகுப்புக்களால் ஆனவையாக இருக்கின்றன; அதேபோது தனிப் பட்ட ஒரே நூற்பியந்திரம் அல்லது தனிப்பட்ட ஒரே ஆலைக் கட்டடம் அதே வகையைச் சேர்ந்த புதிய இயந்திரம் அல்லது கட்ட டத்தால் மாற்றீடு செய்யப்படாமலே எத்தனையோ வாரங்களுக்கு தொடர்ந்து உற்பத்தியில் பங்கேற்கிறது. திறனுடை-மூலதனத்தின் கூறுகள் என்ற முறையில் அதன் எல்லாப் பகுதிகளுமே உற்பத்தி நிகழ்முறையில் தொடர்ந்து நிலைத்திருக்கின்றன; இக்கூறுகள் இல் லாமல் உற்பத்தி நிகழ்முறை நடைபெற முடியாது. நிலைக் கூறு ஆனாலும் சுழல்-கூறு ஆனாலும் திறனுடை-மூலதனத்தின் எல்லாக் கூறுகளுமே திறனுடை-மூலதனம் என்ற முறையில் சுற்றோட்ட மூல தனத்திலிருந்து —அதாவது சரக்கு-மூலதனத்திலிருந்தும் பண-மூல தனத்திலிருந்தும்—வேறானவையாய் அதற்கு எதிரே இருப்பவை.

உழைப்புச் சக்தியும் இப்படித்தான். திறனுடை-மூலதனத்தின் ஒரு பகுதி அதில் தொடர்ச்சியாக நிலைத்திருக்க வேண்டும்; ஒரு முதலாளி குறிப்பிட்ட காலத்துக்கு அதே இயந்திரங்களைப் பயன் படுத்துவது போல், பொதுவாக அதே உழைப்புச் சக்திகளைப் பயன்படுத்த வேண்டும். இங்கு உழைப்புச் சக்திக்கும் இயந்திரங் களுக்கும் இடையிலான வேறுபாடு முதலாளி இயந்திரங்களை ஒரே யடியாக விலைக்கு வாங்கி விடுகிறார் (அவற்றுக்குத் தவணை முறையில் விலை தருவாரானால் இப்படிச் சொல்ல இடமில்லாமற் போய் விடும்), ஆனால் தொழிலாளியை ஒரேயடியாக விலைக்கு வாங்குவதில்லை என்பதல்ல. மாறாக, தொழிலாளி அளித்திடும் உழைப்பு முழுமையாய் உற்பத்திப் பொருளின் மதிப்பில் போய்ச் சேருகிறது, இயந்திரங்களின் மதிப்பு சன்னம் சன்னமாகவே போய்ச் சேருகிறது என்பதுதான் இரண்டுக்கும் இடையிலான வேறுபாடு.

சுழல்-மூலதனத்தை நிலை-மூலதனத்திடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகையில் ஸ்மித் பின்வருமாறு கூறி வெவ்வேறு இலக்கணங் களையும் போட்டுக் குழப்புகிறார்: ''இந்த விதத்தில் பயன்படுத் தப்படும் மூலதனம் அதைப் பயன்படுத்துகிறவர் வசமே இருந்து வருகையில், அல்லது மாறாமல் அதே வடிவத்தில் தொடர்ந்து நீடிக்கையில், அவருக்கு வருவாயோ இலாபமோ கிடைக்கச் செய்வதில்லை.'' [பாகம் II., பக்கம் 254.] உற்பத்திப் பொரு ளானது சரக்கு-மூலதனமாய் சுற்றோட்டத் துறையில் அடைகிற வெறுஞ் சரக்கு உருமாற்றத்தையும்—சரக்குகளைக் கைமாறச் செய்வ தாகிய இந்த உருமாற்றத்தையும்—திறனுடை-மூலதனத்தின் வெவ் வேறு கூறுகளும் உற்பத்தி நிகழ்முறையின் போது அடைகிற தசைப் பிண்ட உருமாற்றத்தையும் அவர் ஒரே நிலையில் வைத்துப் பேசுகிறார். சரக்குகள் பணமாகவும் பணம் சரக்குகளாகவும் அடை யும் உருமாற்றத்தையும்—அதாவது வாங்கல்-விற்றலையும்—உற் பத்தி- அடிக் கூறுகள் உற்பத்திப் பொருட்களாக அடையும் உரு மாற்றத்தையும் வேறுபடுத்தாமல் ஒன்றுசேர்த்துக் குழப்புகிறார்.

சுழல்-மூலதனத்துக்கு அவர் தரும் உதாரணம் வணிக மூலதன மாகும். இந்த மூலதனம் சரக்குகளாய் இருந்து பணமாகவும், பணமாய் இருந்து சரக்குகளாகவும் மாறுவதாகும், C—M—C என்னும் இந்த வடிவ மாற்றம் சரக்குச் சுற்றோட்டத்தின் போது நடைபெறுவதாகும். ஆனால் சுற்றோட்டத்தின் போது நடைபெறும் இந்த வடிவ மாற்றமானது செயல்படுகிற தொழில் துறை மூலதனத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்றால், பணம் திரும்பவும் மாற்றமடைந்து சரக்குகளாகிறதே, அந்தச் சரக்குகள் உற்பத்தியின் அடிக் கூறுகள் ஆகின்றன (உழைப்புச் சாதனங்களும் உழைப்புச் சக்தியும் ஆகின்றன) என்பதால், இந்த வடிவ மாற்றமானது தொழில் துறை மூலதனச் செயற்பாட்டை நில்லாமல் தொடர்ந்து நடைபெறச் செய்கிறது, உற்பத்தி நிகழ்முறையைத் தொடர்ச்சியான ஒன்றாய், அதாவது மறுவுற்பத்தி நிகழ்முறையாய் ஆக்குகிறது. இந்த வடிவ மாற்றம் முழுதுமே சுற்றோட்டத்தின் போது நடைபெறுகிறது. இந்த வடிவ மாற்றத்தின் மூலம்தான் சரக்குகள் கைமாறிச் செல்கின்றன. மாறாக திறனுடை-மூலதனம் அதன் உற்பத்தி நிகழ்முறையின் போது அடையும் உருமாற்றங்கள் உழைப்பு நிகழ்முறைக்குரிய உருமாற்றங்களாகும் — உற்பத்தி-அடிக்கூறுகளைத் தேவையான உற்பத்திப் பொருளாக மாற்றுவதற்கு அவசியமான உருமாற்றங்களாகும். இங்கு ஆதாம் ஸ்மித் தொற்றிக் கொள்கிற உண்மை இதுதான்: உற்பத்திச் சாதனங்களில் ஒரு பகுதியானவை (முறையான உழைப்புச் சாதனங்கள்) தமது தசையுருவில் மாற்றமில்லாமலே உழைப்பு நிகழ்முறையில் பங்கெடுத்துக் கொள்கின்றன (''அவற்றின் அதிபருக்கு இலாபம் தருகின்றன'' என்று இதைக் குறிப்பிட்டு அவர் தவறிழைக்கிறார்). சிறிது சிறிதாகவே அவை தேய்வுறுகின்றன; அதேபோது மற்றொரு பகுதியான மூலப் பொருட்கள் உழைப்பு நிகழ்முறையின் போது மாற்றமடைந்து இந்த மாற்றத்தின் மூலம் உற்பத்திச் சாதனங்களாய் அவற்றின் இறுதி நிலையை வந்தடைகின்றன. ஆயினும் திறனுடை-மூலதனத்தின் கூறுகள் உழைப்பு நிகழ்முறையில் பங்காற்றும் விதத்திலான இந்த வேறுபாடு நிலை-மூலதனத்திற்கும் நிலையல்லாத மூலதனத்திற்குமுள்ள வேறுபாட்டின் தொடக்கமே தவிர அந்த வேறுபாடே ஆகிவிடாது. முன் கூறிய வேறுபாடு எல்லாப் பொருளுற்பத்தி முறைகளிலும் — முதலாளித்துவ முறையில் மட்டுமல்ல, முதலாளித்துவமல்லாத முறைகளிலும் — நிலவுவதாகும் என்பதிலிருந்தே இம்முடிவு பெறப்பட்டு விடுகிறது. பொருட் கூறுகள் பங்காற்றும் முறையிலான இந்த வேறுபாட்டுக்கு ஒப்ப, உற்பத்திப் பொருளுக்கு **மதிப்பைச் செலுத்தும் முறையில்** வேறுபாடு தோன்றுகிறது; மதிப்பைச் செலுத்தும் முறையிலான வேறுபாட்டுக்கு ஒப்ப உற்பத்திப் பொருளை விற்று மதிப்பை மாற்றீடு செய்யும் முறையில் வேறுபாடு தோன்றுகிறது. நமது பரிசீலனையிலுள்ள வேறுபாடு இதுவே

அன்றி வேறு எதுவுமல்ல. எனவே, ஒரு மூலதனத்தை நிலை-மூலதனம் என்று அழைப்பதற்கு அது உழைப்புச் சாதனங்களில் நிலைத்து இருக்கிறது என்பதல்ல காரணம்; உழைப்புச் சாதனங்களில் முதலீடு செய்யப்படும் அதன் மதிப்பின் ஒரு பகுதி உற்பத்திப் பொருளினது மதிப்பின் அடக்கக் கூறாக சுற்றியோடும் போதே மறு பகுதி அந்த உழைப்புச் சாதனங்களிலேயே நிலைத்து இருக்கிறது என்பதே காரணம்.

''வருங்காலத்தில் இலாபம் சம்பாதிப்பதற்காக அது'' (மூலதனம்) ''ஈடுபடுத்தப்படுமானால், அவரிடமே (ஈடுபடுத்துகிறவரிடமே) இருந்து வருவதன் மூலமோ, அவரை விட்டுச் செல்வதன் மூலமோ அது இந்த இலாபத்தை சம்பாதித்தாக வேண்டும். முன் சொன்னதில் அது நிலை-மூலதனம்; பின் சொன்னதில் அது சுழல்-மூலதனம்.'' [பக்கம் 189.]

இலாபம் பற்றிய தொச்சையான அனுபவவாதப் பார்வைதான் இங்கே யாவற்றுக்கும் முதலாய் நம் கண்ணெதிரே தெரிகிறது; இது சாதாரண முதலாளியின் பார்வை. இது ஆதாம் ஸ்மித்தின் மேலான ஆய்வறிவுக்கு முற்றிலும் முரணானது. மூலப் பொருட்களின் விலையும் உழைப்புச் சக்தியின் விலையும் மட்டுமல்லாமல், தேய்மானத்தின் மூலம் உழைப்புச் சாதனங்களிலிருந்து உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படும் மதிப்புப் பகுதியும் கூட உற்பத்திப் பொருளின் விலையைக் கொண்டுதான் மாற்றீடு செய்யப்படுகிறது. எப்படிப் பார்த்தாலும் இந்த மாற்றீட்டிலிருந்து இலாபம் கிடைப்பதில்லை. ஒரு சரக்கின் உற்பத்திக்காக முன்னீடு செய்யப்படும் மதிப்பு அந்தச் சரக்கை விற்பதன் மூலம் முழுமையாக மாற்றீடு செய்யப்படுகிறதா, சன்னம் சன்னமாக மாற்றீடு செய்யப்படுகிறதா என்பது, ஒரே தடவையில் மாற்றீடு செய்யப்படுகிறதா அல்லது பையப்பைய மாற்றீடு செய்யுப்படுகிறதா என்பது மாற்றீடு செய்யப்படும் முறையையும் காலத்தையும் தவிர வேறு எதையும் மாற்ற முடியாது. எப்படிப் பார்த்தாலும் இரண்டுக்கும் பொதுவாக இருப்பதை—அதாவது மதிப்பின் மாற்றீடு என்பதை—உபரி-மதிப்பின் படைப்பாக மாற்றி விட முடியாது. உற்பத்திப் பொருள் விற்கப்படும் வரை, அது சுற்றியோடத் தொடங்கும் வரை உபரி-மதிப்பு ஈடேற்றம் செய்யப்படுவதில்லை என்பதால் உபரி-மதிப்பு விற்பனையிலிருந்தே, சுற்றோட்டத்திலிருந்தே பிறப்பதாய்ப் பரவலாக நிலவும் கருத்தே இதற்கெல்லாம் அடிப்படையாகிறது. இங்கே, இலாபம் வெவ்வேறு வழிகளில் பிறப்பதாய்ச் சொல்வதே, திறனுடை-மூலதனத்தின் வெவ்வேறு கூறுகள் வெவ்வேறு விதமாகப் பயன்படுகின்றன என்பதை, திறனுடைக் கூறுகளென்ற முறையில் அவை உழைப்பு நிகழ்முறையில் வெவ்வேறு விதமாகச் செயல்படுகின்றன என்பதைத் தவறான முறையில் தெரிவிப்பதாகும். முடிவில், இந்த வேறுபாடு உழைப்பு நிகழ்முறை அல்லது மதிப்பின்

தற்பெருக்க நிகழ்முறையிலிருந்து எழுவதாகக் கொள்ளாமல், திறனுடை-மூலதனத்தின் செயற்பாட்டிலிருந்தே எழுவதாகக் கொள்ளாமல், தனிப்பட்ட முதலாளிக்கு அகவயமாய் நிலவும் வேறுபாடாகக் கொள்ளப்படுகிறது. இந்த முதலாளிக்கு மூலதனத்தின் ஒரு பகுதி ஒரு விதத்திலும், இன்னொரு பகுதி இன்னொரு விதத்திலும் பயன்படுவதாகக் கொள்ளப்படுகிறது.

மறு புறம் கெனே இந்த வேறுபாடுகள் மறுவுற்பத்தி நிகழ்முறையிலிருந்தும் அதன் அவசியத் தேவைகளிலிருந்தும் எழுவதாகக் கூறினார். இந்த நிகழ்முறை தொடர்ச்சியாய் நடைபெற வேண்டுமானால், வருடாந்தர முன்னீடுகளின் மதிப்பை வருடாந்தர உற்பத்தியின் மதிப்பிலிருந்து ஆண்டுதோறும் முழுமையாக மாற்றீடு செய்ய வேண்டும். ஆனால் ஆரம்பத்தில் முதலீடாகிற மூலதனத்தின் மதிப்பை சன்னம் சன்னமாகவே மாற்றீடு செய்ய வேண்டும்; ஆகவே, அதனை (அதே வகையைச் சேர்ந்த புதிய பொருளைக் கொண்டு) பல்லாண்டு காலத்தில், உதாரணமாகப் பத்தாண்டு காலத்தில் முழுமையாக மாற்றீடு செய்வதும், எனவே முழுமையாக மறுவுற்பத்தி செய்வதும் போதுமானவை. இவ்வாறு கெனேயுடன் ஒப்பிடுகையில் ஆதாம் ஸ்மித் மிகவும் பின்தங்கி விடுகிறார்.

ஆக, நிலை-மூலதனத்துக்கு ஆதாம் ஸ்மித் இலக்கணம் கூறுகையில், எந்த உழைப்புச் சாதனங்கள் தம் துணைகொண்டு படைக்கப்படுகிற உற்பத்திப் பொருட்களைப் போலல்லாமல், வடிவ மாற்றமடையாமலே உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டுத் தேய்ந்து வீணாகும் வரை தொடர்ந்து உற்பத்திக்கு சேவை புரிகின்றனவோ, அந்த உழைப்புச் சாதனங்களே நிலை-மூலதனம் என்பதற்கு மேல் அவரால் வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. திறனுடை-மூலதனத்தின் எல்லாக் கூறுகளுமே (உழைப்புச் சாதனங்கள், மூலப்பொருட்கள், உழைப்புச் சக்தி ஆகிய யாவுமே) அவற்றின் தசையுருவில் உற்பத்திப் பொருளையும் சரக்காகச் சுற்றியோடும் உற்பத்திப் பொருளையும் ஓயாமல் எதிர்படுவதை அவர் மறந்து விடுகிறார். மூலப்பொருட்களாகவும் உழைப்புச் சக்தியாகவும் அமையும் பகுதிக்கும் உழைப்புச் சாதனங்களாக அமையும் பகுதிக்கும் இடையிலான வேறுபாடெல்லாம்: உழைப்புச் சக்தியைப் பொறுத்த வரை, அது எப்போதுமே புதிதாக விலைக்கு வாங்கப்படுகிறது (உழைப்புச் சாதனங்களைப் போல் ஆயுட் காலத்துக்கு வாங்கப்படுவதில்லை); மூலப்பொருட்களைப் பொறுத்த வரை, அதே மூலப்பொருட்கள் எம்மாற்றமும் இன்றி உழைப்பு நிகழ்முறை முழுவதிலும் செயல்படவில்லை, அதே வகைப்பட்ட புதுப் புது இருப்பைச் சேர்ந்த மூலப்பொருட்களே செயல்படுகின்றன என்பதையும் அவர் மறந்து விடுகிறார். இது மட்டுமல்ல, நிலை-மூலதன மதிப்பு சுற்றோட்டத்தில் சேருவதில்லை என்ற தவறான எண்ணம் உண்டாகும்படியும் செய்கிறார். நிலை-மூலதனத்தின் தேய்மானம் உற்பத்திப்

பொருளின் விலையில் ஒரு பகுதியாவதை ஆதாம் ஸ்மித் முன்பே தெளிவாய் விளக்கியிருந்த போதிலும் இங்கே அதனை மறந்து விடுகிறார்.

ஸ்மித் சுழல்-மூலதனத்தை நிலை-மூலதனத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டும் போது, திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறுகளில் ஒன்றாகிய சுழல்-மூலதனம் உற்பத்திப் பொருளின் மதிப்பிலிருந்து முழுமையாக மாற்றீடு செய்யப்பட வேண்டியதும், எனவே அந்த உற்பத்திப் பொருளின் உருமாற்றங்களில் முழுமையாகப் பங்கு பெற வேண்டியதும் ஆகும், ஆனால் நிலை-மூலதனம் அப்படியல்ல என்ற உண்மையை அவர் வலியுறுத்தத் தவறி விடுகிறார். இன்னும் சொல்லப் போனால், உற்பத்தித் துறையிலிருந்து சுற்றோட்டத் துறைக்கு மாறிச் செல்லும் போது மூலதனம் ஏற்கும் வடிவங்களான சரக்கு-மூலதனம், பண-மூலதனம் ஆகியவற்றோடு சுழல்-மூலதனத்தையும் சேர்த்துக் குழப்புகிறார். சரக்கு-மூலதனம், பண-மூலதனம் ஆகிய இரு வடிவங்களும் திறனுடை-மூலதனத்தின் கூறுகளாகிய நிலை-மூலதனம், சுழல்-மூலதனம் ஆகிய இரண்டின் மதிப்பையும் சுமந்து செல்லும் ஊர்திகளாகும். இவ்விரு மூலதன வடிவங்களும் திறனுடை-மூலதனத்திலிருந்து வேறுபடுத்த வேண்டிய சுற்றோட்ட மூலதனமாகுமே தவிர, நிலை-மூலதனத்திலிருந்து வேறுபடுத்த வேண்டிய சுழல் (சுற்றியோடும்) மூலதனமல்ல.

முடிவில் நிலை-மூலதனம் உற்பத்தி நிகழ்முறையிலிருந்து விலகாதிருப்பதாலும் சுழல்-மூலதனம் இதை விட்டு விலகிச் சுற்றியோடுவதாலும்தான் இலாபம் கிடைக்கப் பெறுகிறது என்ற முற்றிலும் தவறான விளக்கத்தின் காரணத்தாலும், மாறும்-மூலதனத்தின் **புரள்வும்** மாறா-மூலதனத்தினது சுழல்-பகுதியின் **புரள்வும்** வடிவத்தில் ஒத்திருக்கும் காரணத்தாலும், மதிப்பின் தற்பெருக்க நிகழ்முறையிலும் உபரி-மதிப்பை உண்டாக்கும் நிகழ்முறையிலும் அவற்றுக்கிடையே நிலவும் அடிப்படை வேறுபாடு மறைக்கப்பட்டு விடுகிறது; முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் இரகசியம் வெளிப்படுவது இதனால் மேலும் கடினமாகி விடுகிறது. ''சுழல்-மூலதனம்'' என்ற பொதுப் பெயர் இந்த அடிப்படை வேறுபாட்டை மறைத்து விடுகிறது. பிறகு வந்த அரசியல் பொருளாதார அறிஞர்கள் இதற்கு அப்பாலும் சென்றார்கள். மாறும்-மூலதனம், மாறா-மூலதனம் என்று வேறுபடுத்திக் காட்டுவதற்கு பதில், நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாட்டை அடிப்படையான ஒரே வேறுபாடாகப் பற்றிக் கொண்டார்கள்.

நிலை-மூலதனமும் சுழல்-மூலதனமும் மூலதனத்தை முதலீடு செய்வதற்கான இரு பிரத்தியேக வழிகள் என்றும், இவை ஒவ்வொன்றும் தானாகவே இலாபம் பெற்றுத் தரக் கூடியவை என்றும் விளக்கிய பிறகு ஆதாம் ஸ்மித் சொல்கிறார்: ''எந்த நிலை-மூலதனமும்

சுழல்-மூலதனத்தைக் கொண்டு அல்லாமல் வருவாய் எதையும் தர முடியாது. இயந்திரங்களும் தொழிற் கருவிகளும் எவ்வளவுதான் பயனுள்ளவையாக இருந்தாலும், சுழல்-மூலதனம் இல்லாமல் எதையும் உற்பத்தி செய்ய முடியாது; இந்த இயந்திரங்கள் ஈடுபட வேண்டிய மூலப் பொருட்களுக்கும், இந்த இயந்திரங்களை ஈடு படுத்த வேண்டிய தொழிலாளர்களின் பராமரிப்புக்கும் சுழல்-மூலதனம்தான் வழி செய்கிறது.'' (பக்கம் 188.)

முன்னதாகப் பயன்படுத்தப்பட்ட ''வருவாய் கிடைக்கச் செய்தல்,'' ''இலாபம் சம்பாதித்தல்'' போன்ற தொடர்கள் எதைக் குறிக்கின்றன என்பது இங்கே தெளிவாகி விடுகிறது—இரு மூலதனப் பகுதிகளுமே உற்பத்திப் பொருளைப் படைப்பனவாய்ச் செயல்படுகின்றன என்பதைத்தான் இத்தொடர்கள் குறிக்கின்றன.

அடுத்து ஆதாம் ஸ்மித் பின்வரும் உதாரணத்தைத் தருகிறார்: ''சாகுபடியாளரின் மூலதனத்தில் ஒரு பகுதி விவசாயக் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகிறது; இது நிலை-மூலதனமாகும். மற்றொரு பகுதி கூலி அளிப்பதற்காகவும் அவரது வேலையாட்களைப் பராமரிப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது; இது சுழல்-மூலதனமாகும்.'' (இங்கே நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடு சுற்றோட்ட வேறுபாடு மட்டும் தொடர்பானதாக, திறனுடை-மூலதனத்தின் வெவ்வேறு அடக்கக் கூறுகளின் புரள்வுகள் மட்டும் தொடர்பானதாகப் பிழையின்றி சரியாகவே கூறப்படுகிறது.) ''முதலாவது பகுதியைத் தன் வசம் வைத்துக் கொள்வதன் மூலமும், இரண்டாவது பகுதியைத் தன்னை விட்டு விலகச் செய்வதன் மூலமும் அவர் இலாபம் சம்பாதிக்கிறார். விவசாயக் கருவிகளின் விலை அல்லது மதிப்பைப் போலவே அவரது உழைக்கும் கால்நடைகளின் விலை அல்லது மதிப்பும் நிலை-மூலதனமே ஆகும்.'' (இங்கு அவர் வேறுபாட்டைப் பொருட் கூறு தொடர்பானதாய் அல்லாமல் மதிப்பு தொடர்பானதாய்க் கொள்வதும் சரியானதே.) ''உழைக்கும் வேலையாட்களின் பராமரிப்பைப் போலவே அவற்றின் பராமரிப்பும்'' (உழைக்கும் கால்நடைகளின் பராமரிப்பும்) ''சுழல்-மூலதனமே ஆகும். சாகுபடியாளர் உழைக்கும் கால்நடைகளை வைத்துக் கொள்வதன் மூலமும், அவற்றின் பராமரிப்பைத் தன்னை விட்டு விலகச் செய்வதன் மூலமும் இலாபம் சம்பாதிக்கிறார்.'' (சாகுபடியாளர் கால்நடைகளின் தீவனத்தை வைத்துக் கொள்கிறாரே தவிர, விற்பதில்லை. கால்நடைகளுக்குத் தீனி போட அதனைப் பயன்படுத்துகிறார்; ஆனால் கால்நடைகளை உழைப்புச் சாதனங்களாகப் பயன்படுத்துகிறார். ஒரே ஒரு வேறுபாடு என்னவென்றால்: உழைக்கும் கால்நடைகளின் பராமரிப்புக்குப் பயன்படும் தீவனம் முழுமையாக நுகரப்படுகிறது; அதனை விவசாய விளைபொருட்களைக் கொண்டோ, அவற்றின் விற்பனையின் மூலமோ புதிய கால்நடைத் தீவனத்தால்,

தொடர்ச்சியாக மாற்றீடு செய்ய வேண்டும்; ஆனால் கால்நடைகள் அவை ஒவ்வொன்றும் வேலைக்கு லாயக்கற்றதாகும் போதுதான் மாற்றீடு செய்யப்படுகின்றன.) ''உழைப்புக்காக அல்லாமல் விற்பனைக்காகவே விலைக்கு வாங்கிக் கொழுக்க வைக்கப்படும் கால் நடைகளின் விலை, பராமரிப்பு இரண்டுமே சுழல்-மூலதனமாகும். சாகுபடியாளர் அவற்றைத் தன்னை விட்டு விலகச் செய்வதன் மூலம் இலாபம் சம்பாதிக்கிறார்.'' [பாகம் II., பக்கம் 255-56.] (சரக்கு-உற்பத்தியாளர் ஒவ்வொருவரும், எனவே முதலாளித்துவ உற்பத்தியாளர் ஒவ்வொருவரும் அவரது உற்பத்தி நிகழ்முறையின் விளைவான உற்பத்திப் பொருளை விற்கிறார்; ஆனால் இக் காரணத்தால் இந்த உற்பத்திப் பொருள் அவரது திறனுடை-மூலதனத்தின் நிலை-அங்கத்தில் ஒரு பகுதியாகவோ, சுழல்-அங் கத்தில் ஒரு பகுதியாகவோ அமைய வேண்டும் என்பதில்லை. இன்னும் சொல்லப் போனால், உற்பத்தி நிகழ்முறையிலிருந்து வெளியேறிய வடிவில்தான் இப்போது உற்பத்திப் பொருள் இருக் கிறது. அது சரக்கு-மூலதனமாகவே செயல்பட்டாக வேண்டும். கொழுக்க வைக்கப்படும் கால்நடைகள் உற்பத்தி நிகழ்முறையில் கச்சாப் பொருளாகச் செயல்படுகின்றனவே தவிர உழைக்கும் கால்நடைகளைப் போல் உழைப்புக் கருவிகளாகச் செயல்பட வில்லை. எனவே, கொழுக்க வைக்கப்படும் கால்நடைகள் பிண்ட மாய் உற்பத்திப் பொருளில் சேருகின்றன; துணைப் பொருளின் (தீவனத்தின்) மதிப்பைப் போலவே, அவற்றின் முழு மதிப்பும் அதில் சேருகிறது. ஆகவே கொழுக்க வைக்கப்படும் கால்நடைகள் திறனுடை-மூலதனத்தின் சுழல்-பகுதியாகும். ஆனால் விற்கப் படும் உற்பத்திப் பொருளாகிய கொழுக்க வைக்கப்பட்ட கால் நடைகளும், கச்சாப் பொருளாகிய இன்னும் கொழுக்க வைக்கப் படாத கால்நடைகளும் ஒரே தசையுருவைப் பெற்றிருப்பதல்ல இதற்குக் காரணம். அவை ஒரே தசையுருவைப் பெற்றிருப்பது தற் செயலானதே. அதே போது, உற்பத்தி-அடிக்கூறு ஒன்றில் அடங்கி யுள்ள மதிப்பை நிலை-மூலதனம் ஆக்குவதோ, சுழல்-மூலதனம் ஆக்குவதோ அந்த அடிக்கூறு உற்பத்தி நிகழ்முறைக்குள் புரியும் பணியே தவிர அதன் பொருள் வடிவமல்ல என்பதை இந்த உதாரணத்திலிருந்து ஆதாம் ஸ்மித் கண்டிருக்கலாம்.) ''முறையாகப் பார்த்தால் விதையின் முழு மதிப்பும் கூட நிலை-மூலதனமே ஆகும். அது நிலத்துக்கும் களஞ்சியத்துக்கும் இடையே போவதும் வருவதுமாய் இருந்தாலும், ஒருபோதும் அதிபர்களை மாற்றிக் கொள்வதில்லை; ஆகவே, முறையாகப் பார்த்தால் அது சுற்றி யோடுவதில்லை. சாகுபடியாளர் அதை அதிகமாக்குவதன் மூலம் இலாபம் சம்பாதிக்கிறாரே தவிர, விற்பதன் மூலம் அல்ல.'' [பாகம் II., பக்கம் 256.]

நிலை-மூலதனத்தையும் சுழல்-மூலதனத்தையும் ஸ்மித் எவ்வளவு

மேம்போக்காக வேறுபடுத்துகிறார் என்பது இங்கே வெளிப்படு கிறது. அவரது கருத்துப்படி ''அதிபர் மாற்றம்'' இல்லையானால், அதாவது விதை நேரடியாக வருடாந்தர உற்பத்திப் பண்டத்தி லிருந்தே மாற்றீடு செய்யப்படுமானால், அதிலிருந்து கழித்து எடுக்கப்படுமானால், அந்த விதை நிலை-மூலதனமாக இருக்கும். மாறாக, உற்பத்திப் பண்டம் முழுவதையும் விற்று அதன் மதிப்பின் ஒரு பகுதியைக் கொண்டு இன்னொரு உடைமையாளரிடமிருந்து விதை வாங்கப்படுமானால் அந்த விதை சுழல்-மூலதனமாக இருக்கும். முதல் நேர்வில் ''அதிபர் மாற்றம்'' ஏற்படுகிறது; இரண் டாவதில் இல்லை. ஸ்மித் திரும்பவும் இங்கே சுழல்-மூலதனத்தையும் சரக்கு-மூலதனத்தையும் போட்டுக் குழப்புகிறார். உற்பத்திப் பண்ட மானது சரக்கு-மூலதனத்தை ஏற்றிச் செல்லும் ஊர்தியாகிறது. உற்பத்திப் பண்டத்தில் ஒரு பகுதி மட்டும்தான் — உள்ளபடியே சுற் றோட்டத்துள் பிரவேசிப்பதும், விளைபயனாய் அது வெளிப்படுகிற உற்பத்தி நிகழ்முறையினுள் நேரடியாகத் திரும்பவும் பிரவேசிக் காததுமாகிய பகுதி மட்டும்தான் — இப்படி சரக்கு-மூலதனத்தை ஏற்றிச் செல்லும் ஊர்தியாகிறதே தவிர உற்பத்திப் பொருள் முழுவதுமல்ல என்பதைக் கூறத் தேவையில்லை.

விதையானது விளைபொருளில் ஒரு பகுதியாக நேரடியாக அதிலிருந்து கழித்து எடுக்கப்பட்டாலும் சரி, உற்பத்திப் பண்டம் முழுவதையும் விற்று அம்மதிப்பில் ஒரு பகுதியைக் கொண்டு வேறொருவரிடமிருந்து வாங்கப்பட்டாலும் சரி, வெறும் மாற்றீடு தான் நடைபெறுகிறது; இந்த மாற்றீட்டால் இலாபம் ஏதும் கிடைப் பதில்லை. ஒன்றில் விதையானது விளைபொருளின் எஞ்சிய பகுதி யுடன் சேர்ந்து சரக்காகச் சுற்றோட்டத்தில் நுழைகிறது, மற்றொன் றில் முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பின் அடக்கக் கூறாக கணக்கில் பதிவாகிறது. இரு நேர்வுகளிலுமே, அது திறனுடை-மூலதனத்தின் சுழல்-கூறாகத்தான் இருக்கிறது. விளைபொருளை உண்டாக்கும் பொருட்டு விதை முழுமையாக நுகரப்படுகிறது; மறுவுற்பத்தி சாத்தியமாகும் பொருட்டு அந்த விதையை முழுமை யாக விளைபொருளிலிருந்து மாற்றீடு செய்தாக வேண்டும்.

''எனவே, கச்சாப் பொருளும், துணைப் பொருட்களும் தாம் தரித்துள்ள தனி வடிவத்தை உழைப்பு நிகழ்முறையில் நுழைந்ததும் இழந்து விடுகின்றன. உழைப்புச் சாதனங்கள் இப்படிச் செய்வ தில்லை. கருவிகளும், இயந்திரங்களும், பட்டறைகளும், கலன்களும் உழைப்பு நிகழ்முறையில் பயனுள்ளவையாய் இருப்பது தம் சுய ரூபத்தைத் தக்க வைத்துக் கொண்டு, ஒவ்வொரு நாள் காலையும் மாறாத உருவத்துடன் நிகழ்முறையைப் புதுப்பிக்கத் தயாராய் இருக் கும் வரைதான். அவை உற்பத்திப் பொருளைச் சாராத தம் சுய ரூபத்தை தம் ஆயுட் காலத்தில் — அதாவது தாம் பயன்படுகிற தொடர்ச்சியான உழைப்பு நிகழ்முறையின் காலத்தில் — போலவே,

தம் இறப்புக்குப் பிறகும் தக்க வைத்துக் கொள்கின்றன. எப்போதுமே இயந்திரங்கள், கருவிகள், பட்டறைகள் முதலானவற்றின் சடலங்கள் அவற்றின் உதவியால் உற்பத்தியான உற்பத்திப் பொருளிலிருந்து தனித்தவையாகவும், வேறானவையாகவும் உள்ளன." (முதல் பாகம், அத்தியாயம் VIII., பக்கம் 278.)

சில உற்பத்திச் சாதனங்கள் உற்பத்திப் பொருளைச் சார்ந்திராமல் தமது சொந்த உருவத்தைக் காப்பாற்றிக் கொள்கின்றன; ஏனையவை தமது மூல உருவத்தை முழுமையாக மாற்றிக் கொள்கின்றன அல்லது இழந்து விடுகின்றன. உற்பத்திப் பொருளின் உருவாக்கத்தின் போது உற்பத்திச் சாதனங்கள் இப்படி வெவ்வேறு விதமாய் நுகரப்படுகின்றன. அவை நுகரப்படுவதிலுள்ள இந்த வேறுபாடு உழைப்பு நிகழ்முறையின் பாற்பட்டதாகும். பரிவர்த்தனைக்காக அல்லாமல், சரக்கு உற்பத்தியாக அமையாமல், ஒருவரது சொந்தத் தேவைகளை — உதாரணமாய் தந்தைவழிக் குடும்பம் [patriarchal family] ஒன்றின் தேவைகளை — நிறைவு செய்து கொள்வதற்கான உற்பத்தி நிகழ்முறைகளின் போதுங் கூட எழுகிற வேறுபாடுதான் இது. ஆனால் ஆதாம் ஸ்மித் இதெல்லாம் பொய் என்றாக்கி விடுகிறார். எப்படியென்றால்: 1) உற்பத்திச் சாதனங்களில் சில தம் வடிவத்தைப் பாதுகாத்துக் கொள்வதன் மூலமும் ஏனையவை தம் வடிவத்தை இழப்பதன் மூலமும் தம் உடைமையாளருக்கு இலாபம் கிடைக்கச் செய்வதாகச் சொல்லி, சிறிதும் ஒவ்வாத முறையில் இலாபத்துக்கு இலக்கணம் வகுத்து இங்கே புகுத்துகிறார்; 2) உற்பத்தியின் அடிக்கூறுகளில் ஒரு பகுதிக்கு உழைப்பு நிகழ்முறையின் போது நேருகிற மாறுதல்களை சரக்குப் பரிவர்த்தனைக்குரிய, சரக்குச் சுற்றோட்டத்துக்குரிய தனிவிசேஷமான வடிவ மாற்றத்துடன் (வாங்கலும் விற்றலும்), சுற்றியோடும் சரக்குகளின் உடைமையாளரது மாற்றமும் அடங்கலான இந்த வடிவ மாற்றத்துடன் சேர்த்துக் குழப்படி செய்கிறார்.

புரள்வுக்கு முன்னிபந்தனையாக இருப்பது மறுவுற்பத்தி. ஆனால் மறுவுற்பத்தி சுற்றோட்டத்தின் வாயிலாகவே நடைபெறுகிறது. அதாவது உற்பத்திப் பண்டத்தை விற்றுப் பணமாக மாற்றி பணத்தை அந்த உற்பத்திப் பண்டத்தின் உற்பத்தி-அடிக்கூறுகளாக [elements of production] மாற்றுவதன் மூலம் நடைபெறுகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தியாளரின் உற்பத்திப் பண்டத்தில் ஒரு பகுதி நேரடியாக உற்பத்திச் சாதனமாய் அவருக்குப் பயன்படுமானால், தமது பண்டத்தை தம்மிடமே விற்றுக் கொள்பவராக அவர் காட்சியளிக்கிறார். உண்மையில் அவரது கணக்கேடுகளில் இப்படித்தான் பதியப்படுகிறது. மறுவுற்பத்தியின் இந்தப் பகுதி நேரடியாக நடைபெறுகிறதே தவிர சுற்றோட்டத்தின் வாயிலாக நடைபெறவில்லை. உற்பத்திப் பண்டத்தில் இப்படி உற்பத்திச் சாதனமாகப் பயன்படும் இந்தப் பகுதி சுழல்-மூலதனத்தை மாற்றீடு செய்கிறதே

தவிர, நிலை-மூலதனத்தையல்ல. ஏனென்றால் 1) இதன் மதிப்பு முழுமையாக உற்பத்திப் பண்டத்துக்குச் சென்று விடுகிறது; 2) புதிய உற்பத்திப் பண்டத்திலிருந்து எடுக்கப்படும் புதிய பொரு ளாலேயே இப்பகுதி பண்ட வகையில் முழுமையாக மாற்றீடு செய்யப்படுகிறது.

இப்போது ஆதாம் ஸ்மித் சுழல்-மூலதனமும் நிலை-மூலதனமும் எவற்றால் ஆனவை என்பதைச் சொல்கிறார். நிலை-மூலதனமாக அமையும் பொருட்களையும் சுழல்-மூலதனமாக அமையும் பொருட் களையும் பட்டியலிட்டுக் கூறுகிறார். இந்தத் திட்டவட்டமான தன்மை யானது ஏதோ இயற்கையாகவே பொருள் வடிவில் இவற்றில் உள் ளார்ந்திருப்பது போலவும், முதலாளித்துவ உற்பத்தி நிகழ்முறையில் இவை ஆற்றுகிற திட்டவட்டமான பணியிலிருந்து உதித்தெழாதது போலவும் அவர் இப்படிப் பட்டியலிடுகிறார். ஆயினும் இதே அத்தியாயத்தில் (புத்தகம் II., அத்தியாயம் I) அவர் இதற்கு மாறான ஒன்றைக் குறிப்பிடுகிறார்: குறிப்பிட்ட ஒன்று, உதாரண மாக வசிப்பதற்கான வீடு, ''உடனடி நுகர்வுக்கான'' ''மூலதன இருப்பாக'' [stock] ஒதுக்கப்பட்டிருக்கும் இது, ''அதன் உடைமை யாளருக்கு வருவாய் கிடைக்கச் செய்து அவருக்கு இவ்விதம் மூல தனமாகப் பணி புரியலாம் என்றாலும், பொது மக்களுக்கு அதனால் வருவாய் ஏதும் இல்லை, அவர்களுக்கு அது மூலதன மாகப் பணி புரிவதில்லை, மக்கள் அனைவருக்கும் கிடைக்கும் வருவாய் அதனால் இம்மியளவும் உயருவதில்லை'' என்கிறார். (பக்கம் 186.) ஆக, மூலதனமாக இருப்பதென்பது பொருட்களுக் குரிய உள்ளார்ந்த தன்மையல்ல, நிலைமைகளுக்கு ஏற்ப பொருட் களுக்கு வரப் பெறுகிற அல்லது வரப் பெற்ற ஒரு பணியே ஆகும் என்று இங்கே ஆதாம் ஸ்மித் தெளிவாகவே கூறுகிறார். இது பொதுவாக மூலதனத்துக்கு மட்டுமல்லாமல் மூல்தனத்தின் உட் பிரிவுகளுக்கும் பொருந்தும் உண்மையாகும்.

உழைப்பு நிகழ்முறையில் புரியும் பணிக்கேற்பவே பொருட்கள் சுழல்-மூலதனக் கூறுகளோ நிலை-மூலதனக் கூறுகளோ ஆகின்றன. உதாரணமாக ஒரு மாடு உழைக்கும் கால்நடை (உழைப்புச் சாதனம்) ஆகுமானால் அது சாகுபடியாளரது நிலை-மூலதனத்தின் பொருள் வடிவைக் குறிப்பதாகிறது. அதே மாடு கொழுக்க வைப்பதற்கான கால்நடை (கச்சாப் பொருள்) ஆகுமானால் அது சாகுபடியாளரது சுழல்-மூலதனத்தின் அடக்கக் கூறாகிறது. மறு புறம், ஒரே பொருள் ஒரு நேரத்தில் திறனுடை-மூலதனக் கூறாகப் பணி புரியலாம், வேறொரு நேரத்தில் நேரடி நுகர்வுக்கானவற்றைச் சேர்ந்ததாய் இருக்கலாம். உதாரணமாக ஒரு கட்டடம் பட்டறையாகப் பயன் படும் போது அது திறனுடை-மூலதனத்தின் நிலைக் கூறு ஆகிறது; வசிப்பிடமாகப் பயன்படும் போது அது எவ்வகைப்பட்ட மூல தனமும் ஆவதில்லை. ஒரே உழைப்புச் சாதனம் ஒரே நேரத்தில்

உற்பத்திச் சாதனமாகவும், பிறிதொரு நேரத்தில் நுகர்வுச் சாதனமாகவும் பயன்படுவதுண்டு.

பொருட்கள் அவற்றின் உள்ளார்ந்த தன்மையின் காரணமாகவே நிலை-மூலதனமாகவோ சுழல்-மூலதனமாகவோ அமைவதாகக் கொள்வது ஆதாம் ஸ்மித்தின் கருத்திலிருந்து விளைந்த தவறுகளில் ஒன்றாகும். உழைப்புச் சாதனம், உழைப்பின் இலக்குப் பொருள், உற்பத்திப் பொருள் என்ற நிர்ணயிப்புகள உழைப்பு நிகழ்முறையில் ஒரே பொருள் வகிக்கும் பல்வேறு பாத்திரங்களுக்கேற்ப மாறுகின்றன என்பதை உழைப்பு நிகழ்முறையைப் பகுத்தாய்ந்த போது பார்த்தோம். (முதல் பாகம், அத்தியாயம் VII.) நிலை-மூலதனம், நிலையல்லாத் மூலதனம் என்ற நிர்ணயிப்புகளும் கூட உழைப்பு நிகழ்முறையிலும், ஆகவே மதிப்பைப் படைக்கும் நிகழ்முறையிலும் இந்த மூலதனக் கூறுகள் வகிக்கும் பாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டவையே.

இரண்டாவதாக, நிலை-மூலதனமாகவும் சுழல்-மூலதனமாகவும் அமையும் பொருட்களைப் பட்டியலிடுவதன் மூலம், ஸ்மித் ஒரே மூலதனத்தின் நிலை-அங்கத்துக்கும் சுழல்-அங்கத்துக்கும் இடையிலான வேறுபாட்டையும் — திறனுடை-மூலதனத்துக்கு (உற்பத்தித் திறனுள்ள வடிவிலிருக்கும் மூலதனத்துக்கு) மட்டுமே பொருந்துவதும் அர்த்தமுள்ளதுமான இந்த வேறுபாட்டையும் — திறனுடை-மூலதனத்துக்கும், சுற்றோட்ட நிகழ்முறையிலுள்ள மூலதனத்துக்குரிய வடிவங்களுக்கும் (அதாவது சரக்கு-மூலதனம், பண-மூலதனம் ஆகியவற்றுக்கும்) இடையிலான வேறுபாட்டையும் போட்டுக் குழப்புகிறார் என்பது தெளிவாய்த் தெரிகிறது. அதே வாசகத்தில் (பக்கம் 187,188) அவர் சொல்கிறார்: ''சுழல்-மூலதனம் என்பது ... வியாபாரிகளின் கையிலிருக்கும் மளிகைப் பொருட்களாலும், அவையவற்றுக்குரிய வணிகர்கள் வசமுள்ள மூலப் பொருட்கள், பிற பொருட்கள், பூர்த்தியான பல்வேறு சரக்குகள் முதலியவற்றாலும், மற்றும் அவற்றின் சுற்றோட்டத்துக்கும் வினியோகத்துக்கும் அவசியமான பணத்தாலும் ஆனதாகும்....''

மேலும் நெருங்கிச் சென்று பார்க்கையில், முன்பு அவர் கூறியவற்றுக்கு நேர்முரணாக சுழல்-மூலதனத்தைத் திரும்பவும் இங்கே அவர் சரக்கு-மூலதனத்துக்கும் பண-மூலதனத்துக்கும் சமமாக்குவது புலனாகிறது. சரக்கு-மூலதனம், பண-மூலதனம் ஆகிய இவ்விரு மூலதன வடிவங்களும் எவ்வகையிலும் உற்பத்தி நிகழ்முறைக்குரியவை அல்ல; இவை திறனுடை-மூலதனத்துக்கு மாறான சுற்றோட்ட மூலதனம்தானே தவிர, நிலை-மூலதனத்துக்கு மாறான சுழல்-மூலதனம் (சுற்றியோடும் மூலதனம்) அல்லவே அல்ல. திறனுடை-மூலதனத்தின் சில அடக்கக் கூறுகள் — மூலப் பொருட்களுக்காக (கச்சாப் பொருட்கள் அல்லது ஓரளவே பூர்த்தியான பண்டங்களுக்காக) முன்னீடு செய்யப்பட்டு, உள்ளபடியே உற்பத்தி நிகழ்முறைக்கு உள்ளாகி விடும் இந்தக் கூறுகள் — மேற்கூறிய இரு

மூலதன வடிவங்களும் உடனிருந்து செயல்படுகிற வரையில்தான் மீண்டும் திரும்பி வந்து பணியாற்ற முடியும். ஸ்மித் கூறுகிறார்:

''...சமுதாயத்திடமுள்ள பொது இருப்பு இயல்பாகவே மூன்று பகுதிகளாகப் பிரிகிறது. இவற்றில் மூன்றாவதும் கடைசியுமான பகுதி சுழல்-மூலதனமாகும். சுற்றியோடுவதன் மூலமோ அதிபர்களை மாற்றிக் கொள்வதன் மூலமோதான் இதனால் வருவாய் கிடைக்கச் செய்ய முடியும் என்பதே இதற்குரிய தனியியல்பு ஆகும். இந்தச் சுழல்-மூலதனம் நான்கு பாகங்களால் ஆனது: முதலாவது பணம் ...'' (ஆனால் பணமானது சுற்றோட்ட நிகழ்முறையின் போது மூலதனம் ஏற்கும் வடிவங்களில் ஒன்றாகுமே தவிர, ஒரு போதும் உற்பத்தித் திறனுள்ள, உற்பத்தி நிகழ்முறையில் செயல்படுகிற மூலதன வடிவமாவதில்லை); ''இரண்டாவது, கசாப்புக் காரர், கால்நடை வளர்ப்பாளர், சாகுபடியாளர் முதலானோர் வசமுள்ள சரக்கு இருப்பு....இதன் விற்பனையிலிருந்து இவர்கள் இலாபம் எதிர்பார்க்கிறார்கள்....நான்காவதும் கடைசியானதும், செய்து முடிக்கப்பட்டு விட்டாலும் இன்னும் வணிகர் அல்லது தொழிலதிபரின் கையிலிருக்கும் உற்பத்திப் பொருள். மூன்றாவது மூலப் பொருட்கள்; முழுக்கவும் கச்சாப் பொருளாகவோ ஓரளவு செய்பொருளாக்கப்பட்டோ இருக்கலாம்: துணிமணிகள், தட்டு முட்டுகள், கட்டடம் போன்றவற்றில் மேலே கூறிய மூவகைகளில் இன்னும் எவ்வகையையும் சேர்ந்ததாய் உருவாகாமல் சாகுபடியாளர்கள், தொழிலதிபர்கள், ஜவுளி வியாபாரிகள், மர வியாபாரிகள், தச்சர்கள், செங்கல் சூளைக்காரர்கள் முதலானோரிடம் இருந்து வருகிறவை.''

இங்கே இரண்டாவது, நான்காவது பகுதிகளாகக் குறிக்கப்படுகிறவை உற்பத்தி நிகழ்முறையிலிருந்து வெளிப்பட்டு விட்டவையும் விற்கப்பட வேண்டியவையுமாகிய உற்பத்திப் பொருட்களே அன்றி வேறல்ல. சுருங்கச் சொன்னால், இப்போது அவை சரக்குகளாகி விட்டதால் சரக்கு-மூலதனமாகச் செயல்படுகிறவை. இறுதியில், அவை சென்றடைய வேண்டிய இலக்கு எதுவாயினும், அதாவது அவற்றின் காரியம் (பயன்-மதிப்பு) கைகூடும் பொருட்டு முடிவில் அவை ஒதுக்கப்பட வேண்டியது சொந்த நுகர்வுக்காயினும் சரி, திறனுடை நுகர்வுக்காயினும் சரி, அவை திறனுடை-மூலதனக் கூறுகளாகாத விதத்தில்தான் இந்நிகழ்முறையில் வடிவம் ஏற்கின்றன, இடமும் பெறுகின்றன. இரண்டாவது பகுதி என்று ஸ்மித் குறிப்பிடுகிற உற்பத்திப் பொருட்கள் உணவுப் பண்டங்களாகும். பூர்த்தியான ஏனைய எல்லா உற்பத்திப் பொருட்களையும், அவர் நான்காவது பகுதி என்று குறிப்பிடுகிறார். இவையெல்லாம் பூர்த்தியான உழைப்புச் சாதனங்களாகவோ நுகர்வுப் பண்டங்களாகவோ (இரண்டாம் பகுதி என்று அவர் குறிப்பிடும் உணவுப் பண்டங்கள் தவிர) இருப்பவை.

ஸ்மித் அதே போது வணிகரையும் குறிப்பிடுவது அவரது குழப்பத்தை காட்டுகிறது. உற்பத்தியாளர் தமது உற்பத்திப் பொருளை வணிகரிடம் விற்று விட்டார் என்றால், இனிமேல் அது எவ்வடிவிலுமான அவரது மூலதனமாக இருக்க முடியாது. சமுதாயத்தின் கண்ணோட்டத்தில், இப்போதும் அது சரக்கு-மூலதனம் தான்; அதன் உற்பத்தியாளரல்லாத வேறொருவர் கையில் இருப்பினும் அது சரக்கு-மூலதனம்தானே ஒழிய நிலை-மூலதனமோ சுழல்-மூலதனமோ அல்ல.

உற்பத்தியாளரின் நேரடித் தேவைகளை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்டிராத ஒவ்வொரு வகைப் பொருளுற்பத்தியிலும், உற்பத்திப் பொருள் சரக்காகச் சுற்றியோடவே வேண்டும்; அதாவது விற்கப்படவே வேண்டும். அது விற்கப்படுவது இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக அல்ல, உற்பத்தியாளர் வாழ வேண்டும் என்பதற்காக. முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் சரக்கு விற்கப்படும் போது அதில் அடங்கிய உபரி-மதிப்பும் ஈடேற்றம் செய்யப்படுகிறது. உற்பத்திப் பொருள் உற்பத்தி நிகழ்முறையிலிருந்து சரக்காக வெளிவருகிறது; ஆகவே அது இப்போது இந்நிகழ்முறையின் நிலைக் கூறோ சுழல்-கூறோ அல்ல.

ஸ்மித் இங்கே தம்மைத்தாமே மறுதலித்துக் கொள்கிறார் என்பதைக் குறிப்பிட வேண்டும். பூர்த்தியான உற்பத்திப் பொருட்கள் எவையானாலும், அவற்றின் வடிவம் அல்லது பயன்-மதிப்பு, அதாவது அவற்றால் விளையும் பயன் எதுவானாலும், இங்கு அவை யாவும் சரக்கு-மூலதனமாகும்; அதாவது சுற்றோட்ட நிகழ்முறைக்குரிய ஒரு மூலதன வடிவமாகும். இப்படி இருக்கும் அவை அவற்றின் உடைமையாளரிடம் இருக்கக் கூடிய திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறாக முடியாது. ஆனால், விற்கப்பட்டு வாங்குவோரின் கைக்கு வந்ததும் அவை திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறுகள் ஆவதற்கு, நிலைக் கூறோ சுழல்-கூறோ ஆவதற்கு தடை ஏதும் இல்லை. திறனுடை-மூலதனத்துக்கு மாறான சரக்கு-மூலதனமாகச் சந்தையை வந்தடைந்து சிறிது காலத்துக்கு அங்கிருக்கும் பண்டங்கள் சந்தையை விட்டகன்ற பின்னர் திறனுடை-மூலதனத்தின் சுழல்-கூறாகவோ நிலைக் கூறாகவோ செயல்படுவதும் செயல்படாதிருப்பதும் சாத்தியமே என்பதைக் கூறத் தேவையில்லை.

நூற்பாளரின் உற்பத்திப் பொருளான நூல், அவரைப் பொறுத்த வரை அவரது மூலதனத்தின் சரக்கு-வடிவமாகும், அதாவது அவரது சரக்கு-மூலதனமாகும். அது அவரது திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறாக — உழைப்பின் இலக்குப் பொருளாகவோ உழைப்புச் சாதனமாகவோ — செயல்பட முடியாது. ஆனால் அந்நூலை விலைக்கு வாங்கும் நெசவாளர், அதனை அவரது திறனுடை-மூலதனத்தின் சுழல்-கூறுகளில் ஒன்றாக்கிக் கொள்கிறார். ஆயினும் நூற்பாளருக்கு அந்நூல் அவரது நிலை-மூலதனம், சுழல்-

மூலதனம் ஆகியவற்றில் ஒரு பகுதியின் மதிப்பினுடைய (மற்றும் உபரி-மதிப்பினுடைய) உறைவிடமாகும். இதே போல் இயந்திரத் தயாரிப்பாளரின் உற்பத்திப் பொருளான இயந்திரம் அவரது மூலதனத்தின் சரக்கு வடிவமாகும், அவரது பண்ட-மூலதனமாகும். இந்த வடிவத்தில் நீடித்திருக்கும் வரை, அது சுழல்-மூலதனமோ நிலை-மூலதனமோ ஆவதில்லை. அதே இயந்திரம் ஒரு ஆலைய திபரிடம் விற்கப்பட்டு, அவரால் பயன்படுத்தப்படும் போது, திறனுடை-மூலதனத்தின் ஒரு நிலைக் கூறு ஆகிறது. உற்பத்திப் பண்டத்தின் ஒரு பகுதி அதனை உற்பத்தி செய்த நிகழ்முறைக்கே உற்பத்திச் சாதனமாகத் திரும்பிச் செல்வதற்கு அதன் பயன் வடிவம் இடமளிக்குமானால்—உதாரணமாக நிலக்கரி உற்பத்திக்கு நிலக்கரி பயன்படுகிறது—உற்பத்தியான நிலக்கரியின் எந்த பகுதி விற்பனையை நோக்கமாகக் கொண்டதோ அந்தப் பகுதி சரக்கு-மூலதனத்தைக் குறிக்கிறதே தவிர, சுழல்-மூலதனத்தையோ நிலை-மூலதனத்தையோ அல்ல.

மறு புறம், ஓர் உற்பத்திப் பொருள் அதன் பயன் வடிவம் காரணமாய், திறனுடை-மூலதனத்தின் எந்தக் கூறாகவும்—உழைப்புக்கான மூலப் பொருளாகவோ உழைப்புச் சாதனமாகவோ—அமைய முடியாமற் போகலாம். வாழ்வுச் சாதனம் எதையும் உதாரணமாய்க் குறிப்பிடலாம். ஆயினும் அதன் உற்பத்தியாளருக்கு அது சரக்கு-மூலதனமாகும், அவரது நிலை-மூலதனத்தின் மதிப்பையும் சுழல்-மூலதனத்தின் மதிப்பையும் எடுத்துச் செல்லும் ஊர்தியாகும். அதன் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் மூலதனத்தை முழுமையாக மாற்றீடு செய்ய வேண்டுமா அல்லது பகுதியளவுக்கு மாற்றீடு செய்ய வேண்டுமா என்பதற்கு ஏற்ப, இம்மூலதனம் தன் மதிப்பை உற்பத்திப் பொருளுக்கு முழுமையாகப் பெயர்த்திடுகிறதா அல்லது பகுதியளவுக்கு பெயர்த்திடுகிறதா என்பதற்கு ஏற்ப, அது சுழல்-மூலதனத்தின் அல்லது நிலை-மூலதனத்தின் மதிப்பை எடுத்துச் செல்கிறது.

மூன்றாவது பகுதி என்று ஸ்மித் குறிப்பிடுவதில், ஒரு புறம், கச்சாப் பொருள் (இன்னும் வேலைக்கு உட்படுத்தப்படாத மூலப் பொருள், பூர்த்தியாகாத உற்பத்திப் பொருட்கள், துணைப் பொருட்கள்) திறனுடை-மூலதனத்தில் உள்ளடங்கிய கூறாகக் குறிக்கப் பெறவில்லை. பொதுவான சமுதாய உற்பத்திப் பண்டமாக அமையும் சரக்குத் திரளாகிய பயன்-மதிப்புகளின் தனியொரு வகையாகவே அது குறிக்கப் பெறுகிறது; இரண்டாம் பகுதி என்றும் நான்காம் பகுதி என்றும் ஸ்மித் குறிப்பிடுகிற ஏனைய பொருட் கூறுகளான வாழ்வுச் சாதன்ங்கள் முதலானவற்றின் பக்கத்தில் இருந்து வரும் தனிவகைச் சரக்குகளாகவே குறிக்கப் பெறுகிறது. அதே போது இந்த மூலப் பொருட்கள் உள்ளபடியே திறனுடை-மூலதனத்தைச் சேர்ந்தவையாகவும், ஆகவே உற்பத்தியாளரின் கையிலிருக்கும்

அம்மூலதனத்தின் கூறுகளாகவும் காட்டப்படுகின்றன. இவை ஓரளவுக்கு உற்பத்தியாளரின் கையிலும் (''சாகுபடியாளர்கள், ஆலையதிபர்கள் முதலானோரின் கையில்'') ஓரளவுக்கு வணிகர்களின் கையிலும் (''ஜவுளி வியாபாரிகள், துணிக் கடைக்காரர்கள், மர வியாபாரிகள்'') இருப்பதாகக் கொள்ளப்படுவது ஸ்மித்தின் குழப்பத்தைத்தான் காட்டுகிறது. வணிகர்களின் கையில் இவை வெறும் சரக்கு-மூலதனம் தானே தவிர, திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறுகள் அல்ல.

சுழல்-மூலதனத்தின் கூறுகளைப் பட்டியலிடுகையில், ஆதாம் ஸ்மித் நிலை-மூலதனத்துக்கும், சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாட்டை—திறனுடை-மூலதனத்துக்கு மட்டும் பொருந்தக் கூடியதான இந்த வேறுபாட்டை—அடியோடு மறந்து விடுகிறது. அதற்குப் பதில் அவர் சரக்கு-மூலதனத்தையும் பண-மூலதனத்தையும், அதாவது சுற்றோட்ட நிகழ்முறைக்கே உரிய இவ்விரு மூலதன வடிவங்களையும் திறனுடை-மூலதனத்துக்கு எதிராக நிறுத்துகிறார்; தம்மையும் அறியாமலேதான் இதைச் செய்கிறார்.

முடிவில், சுழல்-மூலதனத்தின் அடக்கக் கூறுகளைப் பட்டியலிடும் போது ஆதாம் ஸ்மித் உழைப்புச் சக்தியை மறந்து விடுவது குறிப்பிடத் தக்கதாகும். இதற்கு இரு காரணங்கள் உள்ளன.

பண-மூலதனத்தை ஒதுக்கி விடுவோமானால், சுழல்-மூலதனம் என்பது ஸ்மித்தைப் பொறுத்த வரை சரக்கு-மூலதனத்தின் மறு பெயர்தான் என்பதைச் சற்று முன் பார்த்தோம். ஆனால் உழைப்புச் சக்தி சந்தையில் விற்கப்படும் வரை, அது மூலதனமல்ல, சரக்கு-மூலதன வடிவமும் அல்ல. அது மூலதனமே அல்ல; தொழிலாளி ஒரு சரக்கை, அதாவது தமது உடலையே சந்தைக்குக் கொண்டு வந்த போதிலும், அவர் முதலாளி அல்ல. உழைப்புச் சக்தி விற்கப்பட்டு, உற்பத்தி நிகழ்முறையில் இணைக்கப்படும் வரை, அதாவது ஒரு சரக்காக அது சுற்றியோடுவது ஒழியும் வரை, திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறாவதில்லை. உபரி-மதிப்பின் ஆதாரமாகிய மாறும்-மூலதனமாவதில்லை; திறனுடை-மூலதனமாய் முதலீடாகியுள்ள மூலதன-மதிப்பின் புரள்வுக்கு வகை செய்யும் சுழல்-மூலதனக் கூறாவதில்லை. சுழல்-மூலதனத்தையும் சரக்கு-மூலதனத்தையும் போட்டு ஸ்மித் குழப்படி செய்வதால், அவரால் உழைப்புச் சக்தியை சுழல்-மூலதனம் எனும் தலைப்பில் சேர்க்க முடியவில்லை. எனவே மாறும்-மூலதனமானது தொழிலாளி தமது கூலியைக் கொண்டு வாங்குகிற சரக்குகளின் வடிவில், அதாவது வாழ்வுச் சாதனங்களின் வடிவில் இங்கே காட்சியளிக்கிறது. கூலிக்காக முதலீடாகிற மூலதன-மதிப்பு இவ்வடிவில் சுழல்-மூலதனத்தின் ஒரு பகுதியாகக் கொள்ளப்படுகிறது. ஆனால், உற்பத்தி நிகழ்முறையில் சேருவது உழைப்புச் சக்திதானே தவிர, தொழிலாளிதானே தவிர, தொழிலாளி தம்மைப் பராமரித்துக் கொள்வதற்கு வேண்டிய வாழ்வுச்

சாதனங்கள் அல்ல. தொழிலாளி சொந்த நுகர்வைக் கொண்டு தம்மைத் தாமே மறுவுற்பத்தி செய்து கொள்வதானது சமுதாயக் கண்ணோட்டத்தில் மூலதனத்தின் மறுவுற்பத்தி நிகழ்முறையின் ஒரு பகுதியாகும் என்று பார்த்தது (முதல் பாகம், அத்தியாயம் XXIII) மெய்தான். ஆனால் நாம் இங்கே ஆராய்வது தனிப்பட்ட உற்பத்தி நிகழ்முறை என்பதால் இதற்கு அது பொருந்தாது. நிலை-மூலதன மாகக் குறிப்பிட்டு ''பெற்றுக் கொண்ட பயனுள்ள ஆற்றல்கள்'' (பக்கம் 187) என்பதாகச் சொல்லும் இந்த ஆற்றல்கள் கூலித் தொழிலாளியின் ஆற்றல்களைக் குறிக்குமானால் அவை உண்மை யில் சுழல்-மூலதனத்தின் அடக்கக் கூறுகளே ஆகும். ஏனெனில் கூலித் தொழிலாளி தமது உழைப்பை அதன் ''ஆற்றல்களுடன்'' சேர்த்தே விலைக்கு விற்கிறார்.

ஆதாம் ஸ்மித் சமுதாயச் செல்வம் முழுவதையும் 1) நேரடி நுகர்வுக்கான நிதியம், 2) நிலை-மூலதனம், 3) சுழல்-மூலதனம் என்று பிரிப்பது பெருந்தவறாகும். இதன்படி செல்வமெலாம் இரு கூறுகளாகப் பிரிந்தாக வேண்டும்: 1) நுகர்வுப் பண்ட நிதியம்— இதில் சில பகுதிகள் திரும்பத் திரும்ப மூலதனமாகச் செயல்பட முடிந்தாலும் கூட இந்நிதியத்தில் எதுவுமே செயல்படுகிற சமுதாய மூலதனத்தில் சேர்க்கப்படவில்லை; 2) மூலதனம், இவ்விதம் செல்வத்தில் ஒரு பகுதி மூலதனமாகச் செயல்படுகிறது, மற்றொரு பகுதி மூலதனமல்லாத ஒன்றாக, அதாவது நுகர்வுப் பண்ட நிதிய மாகச் செயல்படுகிறது. இதனால் மூலதனம் அனைத்துமே நிலை-மூலதனம், சுழல்-மூலதனம் ஆகிய இரண்டில் ஒன்றாய் இருப்ப தன்றி வேறு எதுவாகவும் இருக்க முடியாது என்றாகிறது. பாலூட்டி யானது ஆணாகவோ பெண்ணாகவோதான் இருந்தாக வேண்டும் என்பதைப் போல் இதுவும் ஓர் அவசிய இயற்கை நியதியாகி விடு கிறது. ஆனால் நிலை-மூலதனம், சுழல்-மூலதனம் என்கிற இந்த எதிர்நிலை [antithesis] திறனுடை-மூலதனக் கூறுகளுக்கு மட்டுமே உரியது என்பதும், ஆகவே இவை அன்னியில் கணிச அளவிலான மூலதனம்— சரக்கு-மூலதனமாகவும் பண-மூலதனமாகவும் இருப் பது— நிலை-மூலதனமோ சுழல்-மூலதனமோ ஆக முடியாத ஒரு வடிவில் உள்ளது என்பதும் நமக்குத் தெரியும்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியில், சமுதாய உற்பத்திப் பொருட்களின் திரள் முழுவதும் சரக்கு-மூலதனமாகச் சந்தையில் சுற்றியோடுகிறது— விற்றல்-வாங்கல் இல்லாமலே தனிப்பட்ட முதலாளித்துவ உற்பத்தியாளர் தமது உற்பத்திப் பண்டத்தின் ஒரு பகுதியை அதன் தசையுருவில் அப்படியே நேரடியாக உபயோகித் துக் கொள்வாரானால் அந்தப் பகுதி மட்டுமே இதற்கு விதிவிலக்கு. இவ்வாறு, திறனுடை-மூலதனத்தின் நிலைக் கூறும் சுழல்-கூறும் மட்டுமல்லாமல், நுகர்வுப் பண்ட நிதியத்தின் எல்லாக் கூறுகளும் கூட சரக்கு-மூலதனத்திலிருந்தே பெறப்படுகின்றன. அதாவது முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையில், உற்பத்திச்

சாதனங்கள், நுகர்வுப் பண்டங்கள் ஆகிய இரண்டுமே முதலில் சரக்கு-மூலதனமாகத்தான் அரங்கில் தோன்றுகின்றன. இவை பிற்பாடுதான் உற்பத்திச் சாதனங்களாகவோ நுகர்வுப் பண்டங்களாகவோ பயன்படுகின்றன. உழைப்புச் சக்தியும் கூட சரக்கு-மூலதனமாக அல்லவென்றாலும் சரக்காகத்தான் சந்தைக்கு வருகிறது.

ஆதாம் ஸ்மித்துக்கு ஒரு புதிய குழப்பம் ஏற்பட இது காரணமாகிறது. அவர் சொல்கிறார்:

''இந்த நான்கு பகுதிகளில்'' (''சுழல்''-மூலதனத்தின், அதாவது சுற்றோட்ட நிகழ்முறைக்குரிய வடிவங்களான சரக்கு-மூலதனம், பண-மூலதனம் ஆகியவற்றின் வடிவிலிருக்கும் மூலதனத்தின் நான்கு பகுதிகளில், சரக்கு-மூலதனத்தின் அடக்கக் கூறுகளிடையே ஆதாம் ஸ்மித் காண்கிற பொருள்வகை வேறுபாடு இரு பகுதிகளை நான்கு பகுதிகளாக்கி விடுகிறதல்லவா, அந்த நான்கு பகுதிகளில்) ''மூன்று பகுதிகள் — மளிகைப் பொருட்கள், உணவுப் பொருட்கள், பூர்த்தியான படைப்புகள் — ஆண்டுக்கு ஒரு முறையோ இன்னும் நீண்ட அல்லது குறுகிய காலத்துக்கு ஒரு முறையோ அதிலிருந்து காலந்தவறாமல் எடுக்கப்பட்டு, நிலை-மூலதனத்திலோ நேரடி நுகர்வுக்கென்று ஒதுக்கப்பட்ட இருப்பிலோ சேர்க்கப்படுகின்றன. நிலை-மூலதனம் ஒவ்வொன்றும் ஆரம்பத்தில் சுழல்-மூலதனத்திலிருந்தே பெறப்பட்டது என்பதோடு, தொடர்ச்சியாக அதற்குச் சுழல்-மூலதனத்தின் ஆதரவு வேண்டியதாகவும் இருக்கிறது. பயனுள்ள இயந்திரங்கள், தொழிற் கருவிகள் எல்லாமே ஆரம்பத்தில் சுழல்-மூலதனத்திலிருந்து பெறப்பட்டவையே. அவற்றைச் செய்வதற்குத் தேவையான மூலப் பொருட்களை அளிப்பதும், அவற்றைச் செய்யும் தொழிலாளர்களின் பராமரிப்புக்கு வகை செய்வதும் சுழல்-மூலதனம்தான். மேலும் அவை பழுது பார்க்கப்பட்டு எப்போதும் நல்ல நிலையில் இருந்து வருவதற்கும் சுழல்-மூலதனம் தேவைப்படுகிறது.'' (பக்கம் 188.)

உற்பத்திப் பண்டத்தின் ஒரு பகுதியை உற்பத்திச் சாதனமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்களே, இந்தப் பகுதியை மட்டும் விலக்காய்க் கொள்வோமாயின் முதலாளித்துவப் பொருளுற்பத்தி குறித்துப் பொதுவாக ஒன்றைச் சொல்லலாம்: அதாவது எல்லா உற்பத்திப் பொருட்களுமே சரக்குகளாகத்தான் சந்தைக்கு வருகின்றன; முதலாளியைப் பொறுத்த வரை அவரது மூலதனத்தின் சரக்கு-வடிவமாகத்தான், அதாவது சரக்கு-மூலதனமாகத்தான் சுற்றியோடுகின்றன — இந்த உற்பத்திப் பொருட்கள் அவற்றின் தசையுருவில், அவற்றின் பயன்-மதிப்புகளைப் பொறுத்து, திறனுடை-மூலதனத்தின் (உற்பத்தி நிகழ்முறையின்) கூறுகளாக, உற்பத்திச் சாதனங்களாக, நிலை-மூலதனம் அல்லது சுழல்-மூலதனமாகச் செயல்பட வேண்டும் அல்லது செயல்பட முடியும்; திறனுடை நுகர்வின் சாதனங்களாக அல்லாமல் சொந்த நுகர்வின் சாதனங்களாகவும் செயல்பட முடியும்; எல்லா உற்பத்திப் பொருட்களும் சரக்குகளாகத்தான்

சந்தைக்கு வருகின்றன; ஆகவே உற்பத்திச் சாதனங்கள், நுகர்வுச் சாதனங்கள் எல்லாமே, திறனுடை நுகர்வின் கூறுகள், சொந்த நுகர்வின் கூறுகள் எல்லாமே சந்தையிலிருந்துதான் சரக்குகளாய் வாங்கப்பட்டாக வேண்டும். கூறாமல் விளங்கும் உண்மையே இது. இதனால் இது திறனுடை-மூலதனத்தின் நிலைக் கூறுகளுக்கும் பொருந்தும், சுழல்-கூறுகளுக்கும் பொருந்தும்; உழைப்புச் சாதனங் களுக்கும் பொருந்தும், உழைப்புக்கான மூலப் பொருட்களின் அனைத்து வகைகளுக்கும் பொருந்தும். (திறனுடை-மூலதனத்தின் சில கூறுகள் இயற்கையால் வழங்கப்படுகிறவை, அவை உற்பத்திப் பொருட்கள் அல்ல என்பது இங்கே கவனியாது விடப்பட்டு விடு கிறது.) பஞ்சைப் போலவே இயந்திரமும் சந்தையில்தான் விலைக்கு வாங்கப்படுகிறது. ஆனால் நிலை-மூலதனம் ஒவ்வொன்றும் ஆரம் பத்தில் ஏதேனுமொரு சுழல்-மூலதனத்திலிருந்துதான் முளைக்கிறது என்பதாக இதிலிருந்து முடிவாகி விடவில்லை. சுற்றோட்ட மூல தனத்தை ஸ்மித் சுழல்-மூலதனம் அல்லது சுற்றியோடும், அதாவது நிலையல்லாத மூலதனம் என்பதோடு போட்டுக் குழப்புகிறாரே, அந்தக் குழப்படியிலிருந்துதான் இப்படி ஒரு முடிவு எழ முடியும். உண்மையில் ஸ்மித் தமக்குத் தாமே மறுப்பு உரைக்கிறாரே தவிர வேறல்ல. இயந்திரங்களும் சரக்குகளாய் இருக்கும் வரை சுழல்-மூல தனத்தின் நான்காம் பகுதியைச் சேர்ந்தவையாகும் என்று ஸ்மித்தே கூறியிருக்கிறார். ஆகவே இயந்திரங்கள் சுழல்-மூலதனத்திலிருந்து வருவதாகச் சொல்வதன் அர்த்தம் என்ன? இயந்திரங்களாகச் செயல்படுவதற்கு முன்பு அவை சரக்கு-மூலதனமாகச் செயல் பட்டவை, ஆனால் பொருள் வகையில் அவை தம்மிடமிருந்தே வரப் பெற்றவை என்பதுதானே அர்த்தம். நூற்பாளர் ஒருவரது மூலதனத்தின் சுழல்-கூறாக இருக்கும் பஞ்சும் கூட இதே போல் சந்தையில் விற்கப்படும் பஞ்சிலிருந்து வரப் பெற்றதுதான். ஆனால் மேலும் அளித்துச் செல்லும் விளக்கத்தின் போது, ஆதாம் ஸ்மித் நிலை-மூலதனமானது சுழல்-மூலதனத்திலிருந்து வரப் பெறுவதாகச் சொல்கிறார்; ஏனெனில் இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கு உழைப்பும் கச்சாப் பொருட்களும் தேவைப்படுகின்றன என்கிறார். ஆனால் இங்கே நாம் பின்வருவனவற்றையும் மனத்திற் கொண்டாக வேண்டும்: முதலாவதாக, இயந்திரங்கள் செய்வதற்கு உழைப்புச் சாதனங்கள் — அதாவது நிலை-மூலதனம் — அவசியமாகும்; இரண்டா வதாக, கச்சாப் பொருட்களை உற்பத்தி செய்ய இயந்திர சாதனங் கள் போன்ற நிலை-மூலதனம் அவசியமாகும்; ஏனெனில் திற னுடை-மூலதனத்தின் அடக்கக் கூறுகளில் உழைப்புக்கான மூலப் பொருட்கள் இருந்தாலும் இல்லா விட்டாலும், எப்போதும் உழைப் புச் சாதனங்கள் அவசியம் இருந்தாக வேண்டும். இதையடுத்து அவரே சொல்கிறார்: ''நிலம், சுரங்கம், மீன் பண்ணை முதலான வற்றின் பயன்பாட்டுக்கு நிலை-மூலதனம், சுழல்-மூலதனம் ஆகிய

இரண்டும் அவசியம்.'' (கச்சாப் பொருள் உற்பத்திக்கு சுழல்-மூலதனம் மட்டுமல்லாமல் நிலை-மூலதனமும் தேவை என்பதை இவ்விதம் ஒப்புக் கொள்கிறார்.) ''இவற்றின் விளைபொருள்'' (இங்கே புதிய பிழை ஒன்றைப் புரிகிறார்) ''இலாபமளித்து, அந்த மூலதனங்களை மட்டுமல்லாமல் சமுதாயத்திலுள்ள ஏனைய எல்லா மூலதனங்களையும் மாற்றீடு செய்கிறது.'' (பக்கம் 188.) முற்றிலும் தவறு. அவற்றின் விளைபொருள் மற்றெல்லாத் தொழிற் கிளைகளுக்கும் கச்சாப் பொருள், துணைப் பொருள் முதலானவற்றை வழங்குகிறது. ஆனால் அவற்றின் மதிப்பு மற்றெல்லாச் சமுதாய மூலதனங்களின் மதிப்பையும் மாற்றீடு செய்வதில்லை; சொந்த மூலதன-மதிப்பை மட்டுமே மாற்றீடு செய்கிறது. (அதோடு உபரி-மதிப்பும் அளிக்கிறது.) ஆதாம் ஸ்மித் இங்கே இன்னும் அவரது பிசியோக்கிராட்டிய நினைவுகளிலிருந்து விடுபட்டாகவில்லை.

சரக்கு-மூலதனத்தில் ஒரு பகுதி உழைப்புச் சாதனங்களாக மட்டுமே பயன்படக் கூடிய உற்பத்திப் பொருட்களால் ஆனதாகும். சமுதாய அளவில் கருதுகையில் இப் பொருட்கள் — எதற்கும் பயன் படாதவையாய் உற்பத்தி செய்யப்பட்டு, விற்க முடியாத நிலையில் இருந்தாலன்றி — இன்றில்லையேல் நாளையேனும் உழைப்புச் சாதனங்களாகச் செயல்படத்தான் போகின்றன. அதாவது முதலாளித்துவப் பொருளுற்பத்தியை அடிப்படையாகக் கொண்டிருக்கும் அவை சரக்குகளாய் இல்லாமற் போனவுடன், சமுதாயத் திறனுடை-மூலதனத்தினது நிலைப் பகுதியின் கூறுகளாகும் படியான நிலையில் இதன் முன் இருந்து வந்தவை இப்போது மெய்யாகவே இந்தக் கூறுகளாகி விட வேண்டும்.

ஆனால் இங்கே ஒரு வேறுபாடு இருப்பதைக் கூற வேண்டும். உற்பத்திப் பொருளின் தன்சயுருவிலிருந்து [bodily form] எழும் வேறுபாடு இது.

எடுத்துக்காட்டாக, நூற்பியந்திரமானது நூற்புக்காகப் பயன் படுத்தப்பட வேண்டும்; அதாவது அது பொருளுற்பத்திக்கான அடிக்கூறாகச் செயல்பட்டு, இவ்விதம் முதலாளியின் கண்ணோட்டத்தில் ஒரு திறனுடை-மூலதனத்தின் நிலைக் கூறாக இயங்க வேண்டும் — இல்லா விட்டால் அது பயன்-மதிப்பு அற்றதாகிறது. ஆனால் நூற்பியந்திரம் இடம் பெயர்ந்து செல்லக் கூடியது. அது உற்பத்தியான நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு, வெளி நாட்டில் நேரடியாகவோ சுற்றி வளைத்தோ, கச்சாப் பொருட்கள் முதலானவற்றுக்குப் பிரதியாகவோ ஷம்பேய்ன் தேறலுக்குப் பிரதியாகவோ விற்கப்படலாம். அப்படியானால், அது உற்பத்தியான நாட்டில் சரக்கு-மூலதனமாக மட்டும் செயல்படுகிறதே தவிர, ஒரு போதும் — விற்கப்பட்ட பிறகும் கூட — நிலை-மூலதனமாகச் செயல் படவில்லை.

ஆயினும் தரையோடு பிணைக்கப்பட்டு குறிப்பிட்ட இடத்தில்

நிலைத்து இருப்பவற்றை அந்த இடத்தில் மட்டுமே பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆலைக் கட்டடங்கள், இருப்புப் பாதைகள், பாலங்கள், குகைப் பாதைகள், கப்பல் துறைகள் முதலியவற்றையும் மண்வள மேம்பாட்டு அமைப்புகள் போன்றவற்றையும் உதாரணமாய்க் குறிப்பிடலாம். இவற்றை அப்படியே தூக்கி ஏற்றுமதி செய்ய முடியாது. இவை இடம் பெயர்ந்து செல்ல முடியாதவை. பயனற்றுப் போகாதிருக்க வேண்டுமானால், விற்கப்பட்டதும் அவை உற்பத்தியான அதே நாட்டில் நிலை-மூலதனமாகச் செயல்பட வேண்டும். ஊக வாணிபத்துக்காக ஆலைகள் கட்டுகிற அல்லது நிலத்தை மேம்படுத்துகிற முதலாளித்துவ உற்பத்தியாளரைப் பொறுத்த வரை, இவை எல்லாம் அவரது சரக்கு-மூலதனத்தின் வடிவங்களாகும்; ஆதாம் ஸ்மித்தின் கருத்துப்படி சுழல்-மூலதனத்தின் வடிவங்களாகும். ஆனால் சமுதாயத்தைப் பொறுத்த வரை, இவை எல்லாம் — பயனற்றவையாகாதிருக்க வேண்டுமானால் — முடிவில் அதே நாட்டில் குறிப்பிட்ட இடத்திலான உற்பத்தி நிகழ்முறையில் நிலை-மூலதனமாகச் செயல்பட வேண்டும். இடம் பெயர்ந்து செல்ல முடியாதவை என்றாலே நிலை-மூலதனம்தான் என்று இதிலிருந்து முடிவு கட்டலாகாது; குடியிருப்பு வீடுகளைப் போன்றனவாய் அவை நுகர்வுப் பண்ட நிதியத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம். அப்படி இருந்தால், அவை மூலதனமும் அடங்கிய சமுதாயச் செல்வத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாமே தவிர, எவ்விதத்தும் சமுதாய மூலதனத்தின் பகுதியாவதில்லை. ஆதாம் ஸ்மித் கூறுவது போல் கூறுவதானால், அவற்றின் உற்பத்தியாளர் அவற்றை விற்று இலாபம் சம்பாதிக்கிறார். ஆகவே, அவை சுழல்-மூலதனமாகும்! நடைமுறையில் அவற்றைப் பயன்படுத்துகிறவர், அதாவது முடிவில் அவற்றை வாங்குபவர், உற்பத்தி நிகழ்முறையில் பிரயோகிப்பதன் மூலமே அவற்றைப் பயன்படுத்த முடியும். ஆகவே .அவை நிலை-மூலதனமாகும்!

சொத்துரிமைப் பத்திரங்கள் [titles to property], எடுத்துக்காட்டாக இருப்புப் பாதைப் பங்குகள் ஒவ்வொரு நாளும் கைமாறக் கூடும்; அவற்றின் உடைமையாளர் அவற்றை வெளிநாடுகளில் விற்றும் கூட இலாபம் சம்பாதிக்கக் கூடும். இருப்புப் பாதையை ஏற்றுமதி செய்ய முடியா விட்டாலும், அவற்றின் சொத்துரிமைப் பத்திரங்கள் ஏற்றுமதி செய்யக் கூடியவையே. ஆனால் இருப்புப் பாதைகள் அவை இருக்கும் நாட்டிலேதான் பயனற்றனவாய் இருந்தாக வேண்டும், இல்லையேல் திறனுடை-மூலதனத்தின் நிலைக் கூறாய்ச் செயல்பட்டாக வேண்டும். இவ்வாறே A என்னும் ஆலையதிபர் B என்னும் ஆலையதிபரிடம் தமது தொழிற்சாலையை விற்று இலாபம் சம்பாதிக்கலாம்; இதனால் அந்த ஆலை முன்பு போலவே இப்போதும் நிலை-மூலதனமாகச் செயல்பட முடியாமற் போவதில்லை.

ஆகவே, தரையிலிருந்து பெயர்த்திட முடியாத படி ஓரிடத்தில் பிணைக்கப் பெற்றிருக்கும் உழைப்புச் சாதனங்கள் அவற்றின் உற்பத்தியாளருக்கு சரக்கு-மூலதனமாகச் செயல்படலாம், அவரது நிலை-மூலதனத்தின் கூறுகளில் எவையாகவும் அமையாதிருக்கலாம் (அவரது நிலை-மூலதனம் கட்டடங்கள் கட்டுவதற்கும் இருப்புப் பாதைகள் போடுவதற்கும் இன்ன பிறவற்றுக்கும் அவருக்குத் தேவைப்படும் உழைப்புச் சாதனங்களால் ஆனதாகும்) என்ற போதிலும், அவை அந்நாட்டிலேயே நிலை-மூலதனமாகச் செயல்பட வேண்டியிருக்கும். இருப்பினும் நிலை-மூலதனம் என்றால் கட்டாயம் அது இடம் பெயராதவற்றால் ஆனதாகவே இருக்க வேண்டும் என்ற எதிர்மாறான முடிவுக்கு வரலாகாது. கப்பலும் இரயில் எஞ்சினும் இடம் பெயர்ந்து ஓடுவதால்தான் பயனுள்ள வையாக இருக்கின்றன என்றாலும், அவை நிலை-மூலதனமாகவே செயல்படுகின்றன — அவற்றை உற்பத்தி செய்தவர்களுக்கு அல்ல வென்றாலும் பயன்படுத்துகிறவர்களுக்கு அவ்வாறே செயல்படு கின்றன. அதே போது உற்பத்தி நிகழ்முறையில் தீர்மானமாய் நிலைத்திருப்பவையும் அதனுள் பிரவேசித்த பின் அதை விட்ட கலாமல் இறுதி வரை அங்கேயே வாழ்கிறவையுமான பொருட்கள் திறனுடை-மூலதனத்தின் சுழலும் கூறுகளாக இருக்கக் காண் கிறோம். உற்பத்தி நிகழ்முறையின் போது இயந்திரத்தை ஓட்டு வதற்குப் பயன்படும் நிலக்கரி, தொழிற்சாலைக்கு வெளிச்சம் தரப் பயன்படும் எரிவாயு முதலானவற்றை உதாரணமாய்க் குறிப்பிட லாம். உற்பத்திப் பொருளோடு சேர்ந்து தசையுருவில் உற்பத்தி நிகழ்முறையை விட்டு வெளியேறி சரக்குகளாகச் சுற்றியோடுவதால் அவை சுழல்-மூலதனமாகி விடவில்லை. அவற்றின் துணை கொண்டு உற்பத்தி செய்யப்படும் சரக்கின் மதிப்போடு அவற்றின் மதிப்பும் முழுமையாகச் சேர்ந்து விடுவதாலும், சரக்கை விற்று அவ்வரவைக் கொண்டே அவற்றின் மதிப்பை முழுமையாக மாற்றீடு செய்ய வேண்டியிருப்பதாலும்தான் அவை சுழல்-மூலதனமாகின்றன.

கடைசியாக ஆதாம் ஸ்மித்திடமிருந்து மேற்கோளாய்க் காட்டிய நூற்பகுதியில் பின்வரும் தொடர் கவனத்துக்குரியது: "சுழல்-மூலதனம்தான்...அவற்றை" (இயந்திரங்கள் முதலானவற்றை) "செய்யும் தொழிலாளர்களின் பராமரிப்புக்கு...வகை செய்கிறது."

கூலிக்காக முன்னீடு செய்யப்படும் மூலதனப் பகுதியை பிசி யோக்கிராட்டுகள் பிழையற்ற முறையில் avances annuelles (வருடாந்தர முன்னீடுகள்) என்பதாக வகைப்படுத்தி, அவற்றை avances primitives (ஆரம்ப முன்னீடுகள்) என்ற வகையிலிருந்து வேறுபடுத்தினார்கள். ஆனால் உழைப்புச் சக்தியானது அவர்களது பார்வைக்கு சாகுபடியாளரது திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறுகளில் ஒன்றாகத் தெரியவில்லை; விவசாயத் தொழிலாளர் களுக்குத் தரப்படும் வாழ்வுச் சாதனங்கள்தான் (ஸ்மித்தின்

சொற்களில் சொன்னால், தொழிலாளர்களது பராமரிப்புதான்) இக்கூறுகளில் ஒன்றாகத் தெரிகிறது. அவர்களது பிரத்தியேகமான கோட்பாட்டுக்கு முற்றிலும் இசைவானதே இது. ஏனெனில் அவர் களது கருத்துப்படி உழைப்பினால் அதன் உற்பத்திப் பொருளுடன் சேர்க்கப்படுகிற மதிப்புப் பகுதி (கச்சாப் பொருளாலும் உழைப்புச் சாதனங்களாலும் இன்ன பிறவற்றாலும், சுருங்கச் சொல்லின் மாறா-மூலதனத்தின் எல்லா வகைப் பொருட் கூறுகளாலும் உற் பத்திப் பொருளுடன் சேர்க்கப்படுகிற மதிப்புப் பகுதியைப் போலவே), தொழிலாளர்களுக்கு ஊதியமாகத் தரப்பட்டு உழைப் புச் சக்தியாகச் செயல்படுவதற்கு வேண்டிய அவர்களது ஆற்றலைப் பராமரித்துக் கொள்ள அவசியம் நுகர்ந்தாக வேண்டிய வாழ்வுச் சாதனங்களது மதிப்புக்கு மட்டுமே சமமானது. அவர்களது இந்தக் கோட்பாடுதான் மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக் குமுள்ள வேறுபாட்டை அவர்கள் கண்டு கொள்ள முடியாத படி தடுக்கிறது. உழைப்பானது (அதற்கு விலையாகத் தரப்பட வேண்டி யதை மறுவுற்பத்தி செய்வதோடு கூட) உபரி-மதிப்பையும் உற்பத்தி செய்கிறதெனில், வேளாண்மைத் துறையில் மட்டுமல்லாமல் தொழில் துறையிலும் அது இதைச் செய்தாக வேண்டும். ஆனால் அவர்களுடைய கருத்தோட்டத்தின் படி உற்பத்தியின் ஒரு கிளை யில் மட்டுமே, அதாவது வேளாண்மைத் துறையில் மட்டுமே உழைப்பானது உபரி-மதிப்பை உற்பத்தி செய்வதால், இத்துறையில் இயற்கை புரிந்திடும் விசேஷச் செயலால் (உதவியால்) உபரி-மதிப்பு உதிக்கிறதே தவிர உழைப்பிலிருந்து உதிக்கவில்லை. இக் காரணத்தால்தான் பிசியோக்கிராட்டுகளுக்கு வேளாண்மைத் துறை யில் ஈடுபடுத்தப்படும் உழைப்பு ஏனைய உழைப்பு வகைகளைப் போலல்லாமல் உற்பத்தித் திறனுள்ள உழைப்பாய் இருக்கிறது.

தொழிலாளர்களது வாழ்வுச் சாதனங்களை ஆதாம் ஸ்மித் (நிலை-மூலதனத்தின் எதிர்நிலையான) சுழல்-மூலதனமாக வகைப் படுத்துகிறார்.

1) ஏனென்றால், நிலை-மூலதனத்துக்கு மாறான சுழல்-மூல தனத்தை அவர் சுற்றோட்டத் துறைக்குரிய மூலதன வடிவங் களோடு, சுற்றோட்ட மூலதனத்தோடு குழப்புகிறார் — எந்த விமர் சனமும் இல்லாமல் இந்தக் குழ்ப்படியை ஏற்றுக் கொண்டு விடு கிறார். ஆகவே அவர் சரக்கு-மூலதனத்தையும் திறனுடை-மூலதனத் தின் சுழல்-பகுதியையும் ஒருசேரக் கலக்கிறார். இதனால் சமுதாய உற்பத்திப் பொருட்கள் சரக்குகளாக வடிவெடுக்கும் போதெல் லாம், தொழிலாளர் அல்லாதோரின் வாழ்வுச் சாதனங்களும் அதே போல் தொழிலாளர்களின் வாழ்வுச் சாதனங்களும், மூலப்பொருட் களும் அதே போல் உழைப்புச் சாதனங்களும் சரக்கு-மூலதனத்தி லிருந்தே கிடைக்க வேண்டும் என்றாகி விடுகிறது.

2) ஸ்மித்தின் ஆய்வினில் மேலானதாய் — மெய்யாகவே

விஞ்ஞான வழிப்பட்டதாய்—இருக்கும் பகுதிக்கு முரணானதா யினும் பிசியோக்கிராட்டுகளின் கருத்தோட்டமும் அவரது மேற் கூறிய பகுப்பாய்வில் புகுந்து கொண்டு விடுகிறது.

பொதுவாகச் சொன்னால், முன்னீடு செய்யப்படும் மூலதனம் திறனுடை-மூலதனமாக மாறுகிறது; பொருளுற்பத்திக்கு வேண்டிய அடிக்கூறுகளாக வடிவெடுக்கிறது—இந்த அடிக்கூறுகள் கடந்த கால உழைப்பின் உற்பத்திப் பொருட்களாகும். (இவற்றுள் உழைப்புச் சக்தியும் ஒன்று.) இவ்வடிவில்தான் மூலதனத்தால் உற்பத்தி நிகழ் முறையில் செயல்பட முடிகிறது. மாறும்-மூலதனப் பகுதியின் உரு மாற்றத்தால் வரும் உழைப்புச் சக்திக்குப் பதிலாக இங்கே தொழி லாளியின் வாழ்வுச் சாதனங்களை எடுத்துக் கொள்வோமானால், மதிப்பின் ஆக்கத்தைப் பொறுத்த வரை இச்சாதனங்கள் திறனுடை-மூலதனத்தின் ஏனைய கூறுகளிலிருந்து வேறுபடுவதில்லை; கச்சாப் பொருட்கள், உழைக்கும் கால்நடைகளின் தீவனம் ஆகியவற்றி லிருந்து இவை வேறுபடுவதில்லை. இதனால்தான் ஸ்மித், மேற் கோளாய் மேலே தரப்பட்ட வாசகங்களில் ஒன்றில், இவற்றை (பிசியோக்கிராட்டுகள் செய்வது போல்) அதே நிலையில் வைக் கிறார். வாழ்வுச் சாதனங்கள் தமது மதிப்பைப் பெருக்கிக் கொள் ளவோ அதனோடு உபரி-மதிப்பைச் சேர்த்துக் கொள்ளவோ முடி யாது. அவற்றின் மதிப்பு, திறனுடை-மூலதனத்தின் ஏனைய கூறு களது மதிப்பைப் போலவே, அப்படியே உற்பத்திப் பொருளின் மதிப்போடு சேர்ந்து கொள்ள மட்டுமே முடியும். அவை தமக்குள்ள மதிப்பை மட்டுமே உற்பத்திப் பொருளுக்கு அளித்திட முடியும். கச்சாப் பொருட்கள், ஓரளவே பூர்த்தியான சரக்குகள் முதலான வற்றைப் போலவே இந்த வாழ்வுச் சாதனங்களும் நிலை-மூலதன மாகிய உழைப்புச் சாதனங்களிலிருந்து ஒரேயொரு விதத்தில்தான் வேறுபடுகின்றன. அதாவது அவற்றின் துணை கொண்டு உற்பத்தி யாகிற பண்டங்களின் உருவாக்கத்தின் போது அவை முழுமையாக நுகரப்பட்டு விடுகின்றன (எப்படியும் அவற்றுக்கான விலையை அளித்திடும் முதலாளியைப் பொறுத்த மட்டில் இப்படித்தான் ஆகிறது), எனவே அவற்றின் மதிப்பு முழுமொத்தமாய் மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டும். ஆனால் நிலை-மூலதனமாகிய உழைப் புச் சாதனங்களின் மாற்றீடு இவ்வாறு முழுமொத்தமாக அல் லாமல் சன்னம் சன்னமாகவே நடந்தேறுகிறது. உழைப்புச் சக்திக் காக (அல்லது தொழிலாளியின் வாழ்வுச் சாதனங்களுக்காக) முன் னீடு செய்யப்படும் திறனுடை-மூலதனப் பகுதி இங்கு திறனுடை-மூலதனத்தின் ஏனைய பொருட் கூறுகளிலிருந்து பொருள் வகை யில் வேறுபடுகிறதே தவிர, உழைப்பு நிகழ்முறை தொடர்பாகவும் உபரி-மதிப்பின் உற்பத்தி தொடர்பாகவும் வேறுபடவில்லை. இது உற்பத்திப் பண்டத்தின் படைப்புக்கான பொருட் கூறுகளில் ஒரு பகுதியோடு கூட (ஆதாம் ஸ்மித் இவற்றைப் பொதுவாக "மூலப்

பொருட்கள்'' என்கிறார்) சுழல்-மூலதனம் என்ற இனத்தில் சேர, இதற்கு மாறாக இந்தப் பொருட் கூறுகளின் மற்றொரு பகுதி நிலை-மூலதனம் என்ற இனத்தில் சேருகிறது என்ற அளவில் மட்டுமே வேறுபடுகிறது.

கூலியாக முதலீடாகியுள்ள மூலதனக் கூறு திறனுடை-மூலதனத்தின் சுழலும் பகுதியைச் சேர்ந்தது. திறனுடை-மூலதனத்தின் நிலைப் பகுதிக்கு எதிராக இது பண்டப் படைப்புக்கான பொருட் கூறுகளில் ஒரு பகுதியான கச்சாப் பொருட்கள் முதலானவற்றைப் போல் சுழன்று வரும் தன்மை வாய்ந்தது. ஆனால் இந்த உண்மைக்கும் மூலதனத்தின் மாறாப் பகுதிக்கு எதிராய் மாறும் பகுதி என்ற முறையில் இந்த மூலதனக் கூறு மதிப்பின் தற்பெருக்க நிகழ்முறையில் ஆற்றும் பங்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்த உண்மையானது முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பின் இந்தக் கூறு உற்பத்திப் பொருளின் மதிப்பைக் கொண்டு சுற்றோட்டத்தின் வாயிலாய் எப்படி மாற்றீடு செய்து புதுப்பிக்கப்பட வேண்டும், ஆகவே மறுவுற்பத்தியாக வேண்டும் என்பதைத்தான் குறிக்கிறது. உழைப்புச் சக்தியை வாங்குவதும் திரும்பத் திரும்ப வாங்கிக் கொண்டிருப்பதும் சுற்றோட்ட நிகழ்முறைக்கு உரியவையாகும். ஆனால், உழைப்புச் சக்திக்காக முதலீடாகியுள்ள மதிப்பு உற்பத்தி நிகழ்முறையின் போதுதான் ஒரு குறிப்பிட்ட, மாறாப் பருமன் என்ற நிலையிலிருந்து மாறும் பருமனாக (முதலாளிக்குத்தானே த்விர தொழிலாளிக்கல்ல) மாற்றமடைகிறது; முன்னீடு செய்யப் படும் மதிப்பு முழுவதும் இவ்வழியில்தான் மூலதன-மதிப்பாக, மூலதனமாக, தற்பெருக்கமடையும் மதிப்பாக மாற்றமடைகிறது. உழைப்புச் சக்திக்காக முதலீடாகும் மதிப்பை திறனுடை-மூலதனத்தின் சுழலும் கூறாகக் கொள்ளாமல், ஆதாம் ஸ்மித் செய்வது போல் தொழிலாளர்களது வாழ்வுச் சாதனங்களுக்காகச் செலவாகிற மதிப்பை இந்தச் சுழலும் கூறாகக் கொள்வதனால், மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்குமுள்ள வேறுபாட்டையும் பொதுவாக முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையையும் புரிந்து கொள்ள முடியாமற் போகிறது. மூலதனத்தின் இந்தக் கூறு உற்பத்திப் பண்டத்தின் படைப்புக்கான பொருட் கூறுகளாக முதலீடாகியுள்ள மாறா-மூலதனத்துக்கெதிராய் மாறும்-மூலதனமாகும் என்ற வரையறுப்பு, உழைப்புச் சக்திக்காக முதலீடாகியுள்ள மூலதனக் கூறு புரள்வைப் பொறுத்த வரை திறனுடை-மூலதனத்தின் சுழலும் பகுதியைச் சேர்ந்ததாகும் என்ற வரையறுப்புக்கு அடியில் புதைக்கப்பட்டு விடுகிறது. தொழிலாளியின் உழைப்புச் சக்திக்குப் பதிலாக அவரது வாழ்வுச் சாதனங்களைத் திறனுடை-மூலதனத்தின் ஒரு கூறாகக் குறிப்பிடுவதன் மூலம் இந்த சவ அடக்கப் பணி பூர்த்தி செய்யப்படுகிறது. உழைப்புச் சக்தியின் மதிப்பு பணமாக முன்னீடு செய்யப்படுகிறதா, நேரடியாய் வாழ்வுச் சாதனங்களாகவே முன்னீடு

செய்யப்படுகிறதா என்பது முக்கியமல்ல. எப்படியும் முதலாளித் துவப் பொருளுற்பத்தியில் வாழ்வுச் சாதனங்களாக முன்னீடு செய்வது விதிவிலக்கான நிகழ்வாகவே இருக்க முடியும்.[29]

சுழல்-மூலதனமாய் இருத்தலே உழைப்புச் சக்திக்காக முதலீடா கியுள்ள மூலதன-மதிப்பின் பிரதான இலட்சணம் என்பதாக இலக் கணம் வகுத்து (இது பிசியோக்கிராட்டுகளின் கருத்துக்கான முதனிலை [premise] நீக்கப்பெற்ற பிசியோக்கிராட்டு இலக்கணமே ஆகும்) ஆதாம் ஸ்மித் அவருக்குப் பின் வந்தோரிடையே உழைப்புச் சக்திக்காகச் செலவாகிற மூலதனக் கூறு மாறும்-மூலதனமாகும் என்ற உணர்வே இல்லாத படி செய்து விட்டார். பிற இடங்களில் அவர் வளர்த்திடும் ஆழம் மிகுந்த, பிழையற்ற கருத்துகள் நீடித்து நிலைக்கவில்லை; ஆனால் இந்தப் பெருந்தவறு நிலைத்து விட்டது. அவருக்குப் பின் வந்த ஏனைய பலரும் அவரையும் விஞ்சி விட்டனர். நிலை-மூலதனத்துக்கு எதிரான சுழல்-மூலதனமாய் இருத்தலே உழைப்புச் சக்திக்காக முதலீடாகியுள்ள மூலதனக் கூறின் பிரதான இலட்சணம் என்று இலக்கணம் வகுப்பதோடு அவர்கள் நின்று விடவில்லை; தொழிலாளர்களது வாழ்வுச் சாதனங்களாய் முதலீடாகியிருப்பதுதான் சுழல்-மூலதனத்தின் பிரதான இலட்சணம் என்றும் இலக்கணம் வகுத்து விட்டனர். இயல்பாக இதோடு இணைந்த கோட்பாடே தொழிலாளர் நுகர்வு-நிதியம்* [labour-fund] என்னும் கோட்பாடு—அவசிய வாழ்வுச் சாதனங் களாலான தொழிலாளர் நுகர்வு-நிதியமானது குறிப்பிட்ட பருமனு டையதாகும் என்றும், இதனால் சமுதாய உற்பத்திப் பொருட்களில் தொழிலாளர்களுக்குரிய பங்கு வரம்புக்கு உட்பட்டதாகிறது என் றும், ஆனால் இந்நிதி உழைப்புச் சக்தியை வாங்குவதற்காகவே முற்றிலும் செலவழிய வேண்டும் என்றும் கூறுகிறது இந்தக் கோட் பாடு.

---

[29] மதிப்பின் தற்பெருக்க நிகழ்முறையில் உழைப்புச் சக்திக்குள்ள பங்கைப் புரிந்து கொள்ள வழியில்லாத படி எப்படி ஆதாம் ஸ்மித் செய்து விடுகிறார் என்பதற்கு பின்வரும் வாக்கியம் சான்றாகும்; பிசியோக்கிராட்டு பாணியில் தொழிலாளர்களின் உழைப்பையும் உழைக்கும் கால்நடைகளின் உழைப்பையும் அவர் ஒரே நிலையில் வைத்துப் பரிசீலிக்கிறார். "அவருடைய (சாகுபடியாளருடைய) உழைக்கும் வேலையாட் கள் மட்டுமல்ல, உழைக்கும் கால்நடைகளும் கூட திறனுடை உழைப்பாளிகள்தான்." (புத்தகம் II., அத்தியாயம் V., பக்கம் 243.)

* கார்ல் மார்க்ஸ், மூலதனம், முதல் பாகம், பக்கம் 818-822.—பதிப்பாசிரியர்.

## அத்தியாயம் XI

# நிலை-மூலதனம், சுழல்-மூலதனம் இவற்றின் தத்துவங்கள். ரிக்கார்டோ

நிலை-மூலதனத்தையும் சுழல்-மூலதனத்தையும் ரிக்கார்டோ வேறுபடுத்திப் பார்க்க முற்படுவதே மதிப்பு விதிக்கு இருக்கக் கூடிய விதிவிலக்குகளை விளக்கும் பொருட்டுதான் — அதாவது கூலி வீதத்தால் விலைகள் பாதிக்கப்படுவதை விளக்கும் பொருட்டுதான். இந்த விவரத்தைப் பற்றி மூன்றாம் பாகத்தில்* பரிசீலிப்போம்.

ஆனால் அடிப்படையிலேயே தெளிவில்லை என்பது ஆரம்பத்திலேயே வெளிப்பட்டு விடுகிறது — ''நிலை-மூலதனம் நிலைத்திருக்கும் கால அளவிலான இந்த வேறுபாடும், மேலும் மூலதனத்தின் இரு வகைகளும் இணைக்கப்படக் கூடிய விகிதாசாரங்கள் இப்படிப் பல்வேறுபட்டனவாய் இருப்பதும்''[30] என்று பொருளற்றவாறு அடுத்தடுத்து வைத்துப் பிணைப்பதிலிருந்தே வெளிப்பட்டு விடுகிறது.

எந்த இரு மூலதன வகைகளைக் குறிப்பிடுகிறீர்கள் என்று கேட்டால், அவர் என்ன சொல்கிறார்? — ''உழைப்பைப் பராமரிக்க வேண்டிய மூலதனத்தையும் கருவிகள், இயந்திர சாதனம், கட்டடங்கள் ஆகியவற்றுக்காக முதலீடாகும் மூலதனத்தையும் பலவாறு இணைக்கக் கூடிய விகிதாசாரங்களும் கூட...''[31] என்கிறார். வேறு விதமாகச் சொன்னால், நிலை-மூலதனம் உழைப்புக் கருவிகளுக்கு ஈடானது, சுழல்-மூலதனம் உழைப்புக்காக முதலீடாகும் மூலதனத்துக்கு ஈடானது என்றாகிறது. ''உழைப்பைப் பராமரிக்க வேண்டிய மூலதனம்'' என்பது ஆதாம் ஸ்மித்திடமிருந்து பெறப்பட்ட அர்த்தமற்ற தொடர். ஒரு புறத்தில் இங்கே சுழல்-மூலதனம் மாறும்-மூலதனத்தோடு, அதாவது திறனுடை-மூலதனத்தில் உழைப்புக்காக

---

* கார்ல் மார்க்ஸ், மூலதனம், மூன்றாம் பாகம், அத்தியாயம் XI. — பதிப்பாசிரியர்.

30 ரிக்கார்டோ, அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள், பக்கம் 25.

31 மேலது.

முதலீடாகிற பகுதியோடு போட்டுக் குழப்பப்படுகிறது. மறு புறத்தில், மாறா-மூலதனம், மாறும்-மூலதனம் என்கிற முரண் நிலையானது மதிப்பின் தற்பெருக்க நிகழ்முறையிலிருந்து அல்லா மல் சுற்றோட்ட நிகழ்முறையிலிருந்தே பிறப்பதாகக் கொள்ளப் படுவதால் (ஆதாம் ஸ்மித்தின் பழைய குழப்படிதான்) இரண்டு தவறான கருத்துகள் எழுகின்றன.

முதலாவதாக: நிலை-மூலதனம் நீடித்திருக்கும் கால அளவிலான வேறுபாடும், மூலதனமானது மாறா-மூலதனத்தாலும் மாறும்-மூலதனத்தாலும் ஆகியதாய் இருப்பதிலிருந்து எழுகிற வேறுபாடும் ஒன்றேதான் என்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் இரண்டாவ தாகக் குறிக்கப்படும் வேறுபாடு உபரி-மதிப்பு எவ்வளவு உற்பத்தி யாகிறது என்பதை நிர்ணயிக்கிறது. முதலில் குறிக்கப்படும் வேறுபாடோ, தற்பெருக்க நிகழ்முறையைப் பொறுத்த வரை, குறிப்பிட்ட மதிப்பானது உற்பத்திச் சாதனத்திலிருந்து உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படுகிறது என்பதைத்தான் குறிக்கிறது; சுற்றோட்ட நிகழ்முறையைப் பொறுத்த வரை, செலவிடப்பட்ட மூலதனத்தின் புத்தாக்கத்துக்கு எவ்வளவு காலமாகும் என்பதைத் தான், அதாவது மூலதனம் எவ்வளவு காலத்திற்கு முன்னீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத்தான் குறிக்கிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் சூட்சுமத்தைக் கண்டறிவதற்கு பதில் புலப்பாட்டு நிகழ்வுகளில் மட்டும் கருத்து செலுத்தினால், இந்த வேற்றுமைகளுக்கு இடமின்றி எல்லாம் ஒன்றே என்றாகி விடுகிறது. சமுதாய உபரி-மதிப்பானது வெவ்வேறு தொழிற் கிளை களில் முதலீடாகியுள்ள பல்வேறு மூலதனங்களிடையே பங்கிடப் படுகிறது. எவ்வளவு காலத்துக்கு மூலதனம் முன்னீடு செய்யப் படுகிறது என்பதிலான வேறுபாடுகளும் சரி (நிலை-மூலதனம் வெவ்வேறு அளவுக்கு நீடித்திருக்க நேர்வதை உதாரணமாகக் குறிப் பிடலாம்), மூலதனத்தின் அங்கக இயைபில் [organic composition] உள்ள வேறுபாடுகளும் சரி (ஆகவே மாறா-மூலதனமும் மாறும்-மூலதனமும் சுற்றியோடுகிற விதத்திலுள்ள மாறுபாடும்), உபரி-மதிப்பின் மேற்கூறிய பங்கீட்டின் போது இலாப வீதங்கள் சமமாகி பொது இலாப வீதம் [general rate of profit] ஆவதிலும், மதிப்புகள் உற்பத்தி-விலைகளாக [prices of production] மாறுவதிலும் பங் கெடுக்கவே செய்கின்றன.

இரண்டாவதாக: சுற்றோட்ட நிகழ்முறையின் நிலையிலிருந்து பார்க்கையில் உழைப்புச் சாதனங்களாகிய நிலை-மூலதனம் ஒரு பக்கத்திலும், உழைப்பின் இலக்குப் பொருளும் கூலியுமாகிய சுழல்-மூலதனம் மறு பக்கத்திலும் இருக்கக் காண்கிறோம். ஆனால் உழைப்பு நிகழ்முறை, தற்பெருக்க [self-expansion] நிகழ்முறை இவற்றின் நிலைகளிலிருந்து பார்க்கையில் உற்பத்திச் சாதனங் களாகிய (உழைப்புச் சாதனங்களும் உழைப்பின் இலக்குப்

பொருளுமாகிய) மாறா-மூலதனம் ஒரு பக்கத்திலும், உழைப்புச் சக்தியாகிய மாறும்-மூலதனம் மறு பக்கத்திலும் இருக்கக் காண்கிறோம். குறிப்பிட்ட அளவு மாறா-மூலதன மதிப்பில் உழைப்புச் சாதனங்கள் அதிகமாகவும் உழைப்பின் இலக்குப் பொருள் குறைவாகவும் இருக்கின்றனவா, அல்லது உழைப்பின் இலக்குப் பொருள் அதிகமாகவும் உழைப்புச் சாதனங்கள் குறைவாகவும் இருக்கின்றனவா என்பதற்கும் மூலதனத்தின் அங்கக இயைபுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. (முதல் பாகம், அத்தியாயம் XXV., பிரிவு 2, பக்கம் 835-838.) அங்கக இயைபானது உற்பத்திச் சாதனங்களுக்காக முதலீடாகியுள்ள மூலதனம் உழைப்புச் சக்திக்காக முதலீடாகியுள்ள மூலதனத்தோடு கொண்டுள்ள விகிதத்தையே பொறுத்தது. இவ்வாறே சுற்றோட்ட நிகழ்முறையின் நிலையிலிருந்து, நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்குமுள்ள வேறுபாட்டின் நிலையிலிருந்து பார்க்கையில், குறிப்பிட்ட அளவு சுழல்-மூலதன மதிப்பு எந்த விகிதத்தில் உழைப்பின் இலக்குப் பொருளாகவும் கூலியாகவும் பிரிகிறது என்பது எவ்விதத்திலும் முக்கியமானதல்ல. ஒரு நிலையிலிருந்து பார்க்கையில், உழைப்பின் இலக்குப் பொருளானது உழைப்புச் சக்திக்காக முதலீடாகிற மூலதன-மதிப்புக்கு எதிரிடையாக உழைப்புச் சாதனங்களோடு ஒரே இனமாக வகைப்படுத்தப்படுகிறது; மற்றொரு நிலையிலிருந்து பார்க்கையில், உழைப்புச் சக்திக்காக முதலீடாகிற மூலதன-மதிப்பு உழைப்புச் சாதனங்களுக்காக முதலீடாகிற மூலதன-மதிப்புக்கு எதிரிடையாக உழைப்பின் இலக்குப் பொருளுக்காக முதலீடாகிற மூலதன-மதிப்போடு ஒரே இனமாக வகைப்படுத்தப்படுகிறது.

இதனால்தான், உழைப்பின் இலக்குப் பொருளுக்காக (கச்சாப் பொருளுக்காகவும் துணைப் பொருளுக்காகவும்) முதலீடாகியுள்ள மூலதன-மதிப்புப் பகுதி ரிக்கார்டோ அளித்திடும் விளக்கத்தில் இந்தப் பக்கத்திலும் இடம் பெறாமல் அந்தப் பக்கத்திலும் இடம் பெறாமல் அடியோடு மறைந்து விடுகிறது. அதை நிலை-மூலதனமாக வகைப்படுத்துவதற்கில்லை, ஏனெனில் அதன் சுற்றோட்டம் உழைப்புச் சக்திக்காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியின் சுற்றோட்டத்தைப் போல் அதே விதமானதாய் இருக்கிறது. அதே போது அதைச் சுழல்-மூலதனமாகவும் வகைப்படுத்துவதற்கில்லை; அப்படிச் செய்தால் நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்குமுள்ள எதிர்நிலையும் மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்குமுள்ள எதிர்நிலையும் வெவ்வேறானவை அல்ல, ஒன்றேதான் என்பதாகக் கொள்ளும் கருத்து — ஆதாம் ஸ்மித்திடமிருந்து வரப் பெற்ற இது, வாய்விட்டு சொல்லா விட்டாலும் கைவிடப்படாமல் தொடர்ந்து ஏற்புடையதாய் இருப்பதாகும் — மறைந்தொழிய வேண்டியதாகி விடும். இதை உணராதிருக்க ரிக்கார்டோவின் தர்க்கவாத உள்ளுணர்ச்சி இடம் தரவில்லை. ஆகவே மூலதனத்தின் இந்தப்

பகுதி அவர் பார்வையில் படாமலே மறைந்து விடுகிறது.

இவ்விடத்தில் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். வாரம் தோறுமோ, மாதம் தோறுமோ, மூன்று மாதங்களுக்கு ஒரு தரமோ முதலாளி கூலி கொடுக்கிறார், இப்படி வெவ்வேறு காலங்களுக்கு ஒரு தரம் கூலி கொடுப்பதற்காக முதலீடாகியுள்ள மூலதனத்தை முதலாளி முன்னீடு செய்வதாகச் சொல்வது அரசியல் பொரு ளாதாரத்துக்குரிய பழக்கமாய் உள்ளது. ஆனால் உண்மையில் நடப்பது இதற்கு நேர்மாறானதாகும். தொழிலாளிதான் அவரது உழைப்பை முதலாளிக்கு முன்னீடு செய்கிறார் — கூலி கொடுக்கப் படுவது வாரம் தோறுமா, மாதம் தோறுமா, மூன்று மாதங்களுக்கு ஒரு தரமா என்பதற்கு ஏற்ப தொழிலாளிதான் ஒரு வாரத்துக்கோ, ஒரு மாதத்துக்கோ அல்லது மூன்று மாதங்களுக்கோ தமது உழைப்பை முதலாளிக்கு முன்னீடு செய்கிறார். கூலி கொடுப் பதற்குப் பதில் முதலாளி உழைப்புச் சக்தியை **விலை கொடுத்து வாங்கிக் கொள்வாராயின்**, அதாவது நாள், வாரம், மாதம் அல்லது காலாண்டுக்கு உரிய கூலியை முன்கூட்டியே அவர் தொழிலாளிக் குக் கொடுப்பாராயின், இவ்வளவு காலத்துக்குக் கூலியை முன்னீடு செய்ததாகச் சொல்வதில் நியாயம் இருக்கும். இத்தனை நாளோ, வாரமோ, மாதமோ **நீடிக்க வேண்டும்** என்று சொல்லி விலை கொடுத்து உழைப்பை வாங்கிக் கொள்வதற்கு பதில், எவ்வளவு காலத்துக்கு **நீடித்துள்ளதோ** அவ்வளவு காலத்துக்குரிய கூலியை உழைப்புக்குக் கொடுக்கிறார் என்பதால், இதெல்லாம் ஒன்றை வேறொன்றாக மாற்றிப் புரட்டுகிற முதலாளித்துவச் செப்பிடு வித்தையே தவிர வேறல்ல. உழைப்பாக முதலாளிக்குத் தொழி லாளி அளித்திடும் முன்னீடானது பணமாகத் தொழிலாளிக்கு முதலாளி அளித்திடும் முன்னீடாக மாற்றிப் புரட்டப்பட்டு விடு கிறது. முதலாளிக்கு இந்த உழைப்பின் உற்பத்திப் பொருள் பூர்த் தியாகிக் கைவரப் பெறுவதற்கு, அல்லது சுற்றோட்டத்திலிருந்து அதன் மதிப்பு (அதில் உள்ளடங்கிய உபரி-மதிப்போடு கூட) வந்து சேருவதற்கு, அதாவது ஈடேற்றமாவதற்கு — அப்பொருளின் உற்பத் திக்கு அல்லது சுற்றோட்டத்துக்குத் தேவைப்படும் காலங்களுக்கு ஏற்ப — ஒப்பளவில் அதிகமாகவோ குறைவாகவோ காலங்கழிந்தாக வேண்டியிருக்கிறது என்பதால் மேற்கூறிய நிலைமை எவ்விதத்திலும் மாறி விடுவதில்லை. சரக்கை வாங்குகிறவர் அதை என்ன வேண் டுமானாலும் செய்யலாம், சரக்கை விற்பவருக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை. முதலாளி இயந்திரத்தின் முழு மதிப்பையும் ஒரேயடியாக முன்னீடு செய்தாக வேண்டும், ஆனால் இந்த மதிப்பு பையப் பைய சன்னம் சன்னமாகவே சுற்றோட்டத்திலிருந்து அவரிடம் திரும்பி வருகிறது என்பதால் அவருக்கு அந்த இயந்திரம் குறைந்த விலைக்குக் கிடைத்து விடுவதில்லை. பஞ்சின் மதிப்பு அதைக் கொண்டு செய்யப்படும் உற்பத்திப் பொருளின் மதிப்பில்

முழுமையாகச் சேருகிறது என்பதாலும், உற்பத்திப் பொருளை விற்பதன் மூலம் முழுமையாகவும் ஒரே நேரத்திலும் மாற்றீடு செய்யப்படுகிறது என்பதாலும் பஞ்சுக்கு அவர் அதிக விலை கொடுத்து விடுவதும் இல்லை.

ரிக்கார்டோவிடம் திரும்புவோம்.

1. மாறும்-மூலதனத்தின் தனிச்சிறப்பு என்னவென்றால், மூலதனத்தில் திட்டவட்டமானதும் குறிப்பிட்ட அளவுடையதும் (ஆகவே மாறாததும்) ஆன ஒரு பகுதி, அதாவது மதிப்புகளின் குறிப்பிட்ட ஒரு தொகை (கூலியை உழைப்புச் சக்தியின் மதிப்புக்குச் சமமானதாகக் கொள்கிறோம், ஆனால் உண்மையில் இங்கே அது இம்மதிப்புக்குச் சமமாகவோ, அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கலாம்) தற்பெருக்கச் சக்திக்கு, மதிப்பைப் படைக்கும் சக்திக்கு, அதாவது உழைப்புச் சக்திக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகையில், இந்த உழைப்புச் சக்தி அதன் மதிப்பை (இதற்குரிய விலையாக முதலாளி தந்ததை) மறுவுற்பத்தி செய்வதோடு, இதன் முன் இருந்திராத, விலையாக எந்தச் சமதையையும் கொடுத்து வாங்கியிராத உபரி-மதிப்பையும் உற்பத்தி செய்கிறது. கூலிக்காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதிக்குள்ள இந்தத் தனிச் சிறப்புதான் அதனை மாறா-மூலதனத்திலிருந்து அடிப்படையிலேயே வேறுபடுத்தி மாறும்-மூலதனமாகக் காட்டுகிறது. கூலிக்காகச் செலவான மூலதனப் பகுதியை சுற்றோட்ட நிகழ்முறையின் கோணத்திலிருந்து மட்டும் பார்க்கும் போதெல்லாம், இவ்வாறு அது உழைப்புச் சாதனங்களுக்காக முதலீடாகியுள்ள நிலை-மூலதனத்துக்கு எதிரான சுழல்-மூலதனமாகக் காட்சி தரும் போதெல்லாம், மேற்சொன்ன அதன் தனிச் சிறப்பு மறைந்து விடுகிறது. இப்போது அது மாறா-மூலதனத்தில் உழைப்பின் இலக்குப் பொருளுக்காக முதலீடாகியுள்ள பகுதியோடு சேர்க்கப்பட்டு, மாறா-மூலதனத்தின் மற்றுமோர் அடக்கப் பகுதிக்கு, அதாவது உழைப்புச் சாதனங்களுக்காக முதலீடாகியுள்ள பகுதிக்கு எதிரிடையாக்கப்பட்டு, சுழல்-மூலதனம் என்ற ஒரே தலைப்பின் கீழ் கொண்டுவரப்படுவதிலிருந்தே இந்த விவரம் தெரிய வருகிறது. இப்படிச் செய்வதன் மூலம் உபரி-மதிப்பு — முதலீடாகியுள்ள மதிப்புத் தொகையை மூலதனமாக மாற்றுகிற அந்த அவசிய நிலைமையே கூட — கவனியாது விடப்பட்டு விடுகிறது. அது மட்டுமல்ல, கூலிக்காக முதலீடாகியுள்ள மூலதனத்தால் உற்பத்திப் பொருளோடு சேர்க்கப்படும் மதிப்புப் பகுதி புதிதாக உற்பத்திச் செய்யப்பட்டதாகும் (எனவே உண்மையில் மறுவுற்பத்தி செய்யப்பட்டதாகும்) என்பதும், அதே போது கச்சாப் பொருளால் உற்பத்திப் பொருளோடு சேர்க்கப்படும் மதிப்புப் பகுதி அழியாமல் உற்பத்திப் பொருளின் மதிப்பில் பாதுகாத்து வைக்கப்பட்டதாகுமே தவிர, ஆகவே உற்பத்திப் பொருளின் மதிப்பில் ஓர் அடக்கக் கூறாகத் திரும்பி வந்திருப்பதாகுமே

தவிர, புதிதாக உற்பத்தி செய்யப்பட்டதுமல்ல, மறுவுற்பத்தி செய்யப்பட்டதுமல்ல என்பதும் கவனியாது விடப்பட்டு விடுகிறது. நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்குமுள்ள எதிர்நிலையின் கோணத்திலிருந்து இப்போது நோக்குவோமானால், இரண்டுக்கும் இடையிலுள்ள வேறுபாடு அடங்கியிருப்பது இதில்தான்: ஒரு சரக்கின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் உழைப்புச் சாதனங்களின் மதிப்பில் ஒரு பகுதி மட்டுமே அச்சரக்கின் மதிப்பில் சேருகிறது. ஆகவே சரக்கை விற்பதன் மூலம் அம்மதிப்பில் ஒரு பகுதி மட்டுமே மாற்றீடு செய்யப்படுகிறது; பையப் பைய சன்னம் சன்னமாகவே முழு மதிப்பும் மாற்றீடு செய்யப்படுகிறது. இதற்கு மாறாக, சரக்கின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் உழைப்புச் சக்தி, உழைப்பின் இலக்குப் பொருட்கள் (கச்சாப் பொருட்கள் முதலானவை) ஆகியவற்றின் மதிப்பு அச்சரக்கின் மதிப்பில் முழுமையாகச் சேருகிறது; சரக்கை விற்பதன் மூலம் முழுமையாக மாற்றீடு செய்யப்படுகிறது. இவ்வகையில், சுற்றோட்ட நிகழ் முறையைப் பொறுத்த வரை, மூலதனத்தின் ஒரு பகுதி நிலை-மூலதனமாகவும், மறு பகுதி சுற்றியோடும் மூலதனம் அல்லது சுழல்-மூலதனமாகவும் விளங்குகின்றன. முன்னீடு செய்யப்படும் குறிப்பிட்ட மதிப்புகள் உற்பத்திப் பொருளுக்கு எப்படிப் பெயர்க் கப்படுகின்றன, உற்பத்திப் பொருளை விற்பதன் மூலம் எப்படி மாற்றீடு செய்யப்படுகின்றன என்பதே இவை இரண்டிலும் எழும் கேள்வி. மதிப்பின் பெயர்ப்பும், எனவே மதிப்பின் மாற்றீடும் பையப் பைய சன்னம் சன்னமாக நடைபெறுகிறதா, மொத்தமாக நடைபெறுகிறதா என்பதே இரண்டுக்குமுள்ள வேறுபாடாகிறது. இவ்விதம். மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்குமுள்ள யாவற்றையும் தீர்மானிப்பதாகிய இந்த வேறுபாடு திரையிட்டு மூடப்பட்டு விடுகிறது. எனவே உபரி-மதிப்பு உற்பத்தியாவதன் இரகசியம், முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் இரகசியம் அடியோடு மறைக்கப்பட்டு விடுகிறது. குறிப்பிட்ட சில மதிப்புகளையும் இம்மதிப்புகளைத் தம்முட்கொண்ட பொருட்களையும் மூலதனமாக மாற்றுகிற நிலைமைகள் மருமமாக்கப்பட்டு விடுகின்றன. இதன் பின் மூலதனத்தின் அடக்கக் கூறுகள் யாவும் அவை சுற்றியோடுகிற விதத்தைக் கொண்டே வேறுபடுத்தி இனங்காண வேண்டியவை ஆகி விடுகின்றன (சரக்குகளின் சுற்றோட்டம் என்றாலே ஏற்கெனவே இருந்து வரும் மதிப்புகளைப் பற்றியதாக மட்டும்தானே இருக்க முடியும்). கூலிக்காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியின் சுற்றோட்டம் உழைப்புச் சாதனங்களுக்காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியின் சுற்றோட்டத்துக்கு மாறானதாகவும், கச்சாப் பொருட்களுக்காகவும் பூர்த்தியாகாத பொருட்களுக்காகவும் துணைப் பொருட்களுக்காகவும் முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியின் சுற்றோட்டத்தைப் போல் அதே விதமானதாகவும் இருக்கிறது.

ஆகவே, ''மாறா-மூலதனம், மாறும்-மூலதனம்'' என்ற இனங்களை ''நிலை-மூலதனம், சுழல்-மூலதனம்'' என்ற இனங்களோடு போட்டுக் குழப்பி ஆதாம் ஸ்மித் செய்த குளறுபடியை முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம், உள்ளுணர்ச்சியால் உந்தப்பட்டு விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டு, தலைமுறை தலைமுறையாக, ஒரு நூற்றாண்டுக் காலமாக விமர்சனம் ஏதும் இல்லாமலே, கிளிப்பிள்ளை போல் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பதன் காரணம் நன்றாகவே புரிகிறது. கூலிக்காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியை முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம், கச்சாப் பொருட்களுக்காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பதே இல்லை. அது இம்மூலதனப் பகுதி மாறா-மூலதனத்திலிருந்து வடிவ அளவில் மட்டும்தான் வேறுபடுவதாகக் கொள்கிறது; உற்பத்திப் பொருளால் சுற்றோட்டத்தின் போது பையப் பைய சன்னம் சன்னமாக எடுத்துச் செல்லப்படுகிறதா, அல்லது ஒட்டுமொத்தமாய் ஒரேயடியாக எடுத்துச் செல்லப்படுகிறதா என்பதில் மட்டுமே வேறுபடுவதாகக் கொள்கிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தியின், ஆகவே முதலாளித்துவச் சுரண்டலின் மெய்யான இயக்கத்தை புரிந்து கொள்வதற்கான அடிப்படையே இவ்விதம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விடுகிறது. முன்னீடு செய்யப்படும் மதிப்புகள் திரும்பி வருவது ஒன்றே பிரச்சினை என்றாகி விடுகிறது.

ஸ்மித்தின் குளறுபடியை ரிக்கார்டோ விமர்சிக்காமல் அப்படியே ஏற்றுக் கொள்வது அதிர்ச்சி தருவதாயிருக்கிறது. அவருக்குப் பிற்காலத்தவர்களான சப்பைக் கட்டுவாதிகளும் இதையேதான் செய்கிறார்கள் என்றாலும், கருத்துக் குழப்பத்தையும் குளறுபடியையும் அவர்களிடம் காண்கையில் அது வியப்புக்குரியதாய் இல்லை. ஆனால் ஆதாம் ஸ்மித் இந்தக் குளறுபடியைச் செய்கையில் ஏற்படுவதையும் விட அதிகமான அதிர்ச்சி ரிக்கார்டோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளும் போது ஏற்படுகிறது. ஏனென்றால் ஸ்மித்துடன் ஒப்பிடுகையில் ரிக்கார்டோ முரணின்றி இன்னும் ஆழமாகச் சென்று மதிப்பையும் உபரி-மதிப்பையும் ஆராய்கிறவர், புறத்தைப் பரிசீலிக்கும் சாமானிய ஆதாம் ஸ்மித்துக்கு பதில் அகத்துள் ஊடுருவும் மேலான ஆதாம் ஸ்மித்தை மதித்துப் போற்றுகிறவர்.

பிசியோக்கிராட்டுகளிடம் இம்மாதிரியான குளறுபடிக்கு இடமே இல்லை. வருடாந்தர முன்னீடுகள் என்றும் ஆரம்ப முன்னீடுகள் என்றும் அவர்கள் வகைபிரித்துக் காட்டுகிற வேறுபாடு மூலதனத்தின், முக்கியமாக வேளாண்மையில் ஈடுபடும் மூலதனத்தின் வெவ்வேறு அடக்கக் கூறுகளது மறுவுற்பத்திக்கு ஆகிற கால அளவுகளிடையிலான வேறுபாட்டையே குறிக்கிறது. இந்தத் தத்துவத்தில் ஒரு பகுதி உபரி-மதிப்பு எப்படி உற்பத்தியாகிறது என்பது தொடர்பான

அவர்களது கருத்துகளைப் பற்றியதாகும். ஆனால் இந்தப் பகுதி மேற்கூறிய வேறுபாட்டைச் சார்ந்ததல்ல. இப்பகுதியைத்தான் அவர்கள் தமது தத்துவத்தில் மணிமுடியாகக் கருதினர். மூலதனத்திலிருந்தே உபரி-மதிப்பு உருவாவதாக அவர்கள் விளக்கம் கூறவில்லை; முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் குறிப்பிட்ட ஒரு துறையான வேளாண்மைத் துறையிலிருந்து மட்டுமே உபரி-மதிப்பு உருவாவதாகச் சொன்னார்கள்.

இரண்டாவதாக, மாறும்-மூலதன இலக்கணத்திலும், ஆகவே மதிப்புகளது தொகை ஒன்று மூலதனமாக மாற்றமடைவதாகச் சொல்வதிலும் கருப் பொருளாய் இருப்பது என்ன? முதலாளி ஒரு குறிப்பிட்ட பருமனுள்ள மதிப்பை (ஆகவே இந்த அர்த்தத்தில் மாறாததான மதிப்பை) தந்து, அதற்கு பதில் மதிப்பைப் படைக்கும் சக்தியை வாங்குகிறார் என்பதுதான்; மதிப்புப் பருமனைத் தந்து மதிப்பை உற்பத்தி செய்வதும் தற்பெருக்கம் பெறச் செய்வதுமான ஒன்றைப் பெறுகிறார் என்பதுதான். முதலாளி தொழிலாளிக்குத் தர வேண்டியதைப் பணமாகத் தந்தாலும் ஒன்றுதான், வாழ்வுச் சாதனங்களாகத் தந்தாலும் ஒன்றுதான்—இலக்கணத்தின் கருப் பொருள் அதனால் பாதிக்கப்படவில்லை. முதலாளி முன்னீடு செய்கிற மதிப்பின் நிலவல் வடிவம்தான் அதனால் மாற்றப்படுகிறது—முன்னதில் இம்மதிப்பு பண வடிவில் இருக்கிறது, தொழிலாளி இந்தப் பணத்தைக் கொண்டு சந்தையில் வாழ்வுச் சாதனங்களை வாங்கிக் கொள்கிறார்; பின்னதில் இம்மதிப்பு வாழ்வுச் சாதனங்களின் வடிவில் இருக்கிறது. தொழிலாளி இவற்றை நேரடியாக நுகர்கிறார். வளர்ச்சி பெற்ற முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கு எப்படி உற்பத்தி நிகழ்முறையானது சுற்றோட்ட நிகழ்முறையின் விளைவாய் இருப்பது முன்னிபந்தனை ஆகிறதோ, அதே போல பண வடிவில் தொழிலாளிக்கு ஊதியமளிப்பதும் முன்னிபந்தனை ஆகிறது. ஆனால் கூலியின் பண வடிவமோ, சரக்கு-வடிவமோ, அல்லது உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குவதற்காகச் செலவிடப்படும் மூலதனமோ உபரி-மதிப்பின் படைப்புக்கு—முன்னீடு செய்யப்படும் மதிப்புத் தொகை மூலதனமாவதற்கு—மூலகாரணம் அல்ல. மதிப்பைப் படைக்கும் சக்திக்கு மதிப்பு பரிவர்த்தனை செய்யப்படுவதே, மாறாப் பருமன் மாறும் பருமனாக மாற்றப்படுவதே மூலகாரணம்.

உழைப்புச் சாதனங்கள் எவ்வளவு நிலையானவை என்பது அவற்றுக்குள்ள நீடித்திருக்கும் திறனைப் பொறுத்தது, அதாவது ஒரு பௌதிகப் பண்பைப் பொறுத்தது. ஏனைய நிலைமைகள் மாறாதிருக்கையில், அவை தமக்குள்ள நீடித்திருக்கும் திறனைப் பொறுத்து, விரைவாகவோ மெதுவாகவோ தேய்ந்து போகும்; ஆகவே குறுகிய காலத்துக்கோ நீண்ட காலத்துக்கோ நிலை-மூலதனமாகப் பணியாற்றும். ஆனால் அவை நிலை-மூலதனமாகப் பணியாற்று

வதற்கு நீடித்திருக்கும் திறன் என்கிற இந்த பௌதிகப் பண்பு மட்டுமே காரணம் அல்ல. உலோகத் தொழிற்சாலைகளில் கச்சாப் பொருளானது உற்பத்திப் பணியில் பயன்படும் இயந்திரத்தைப் போலவே நீடித்திருக்கக் கூடியதாய் இருக்கலாம். இந்த இயந்திரத்தின் உறுப்புகளுடைய ஆக்கப் பொருட்களாகிய தோல், மரம் போன்றவற்றை விட இந்தக் கச்சாப் பொருள் அதிகம் நீடித்திருப்பதாய் இருக்கலாம். ஆயினும், கச்சாப் பொருளாகப் பயன்படும் உலோகம் சுழல்-மூலதனத்தைச் சேர்ந்தது, ஆனால் உழைப்புச் சாதனம் — அதே உலோகத்தால் ஆனதாய் இருந்தாலும் — பயன்பட்டு வருகிற வரையில் நிலை-மூலதனத்தைச் சேர்ந்ததாகிறது. எனவே உலோகப் பண்டம் ஒன்று ஒரு நேரம் நிலை-மூலதனமாகவும், வேறொரு நேரம் சுழல்-மூலதனமாகவும் வகைப்படுத்தப்படுகிறது என்றால், பொருட் பண்போ பௌதிகப் பண்போ அல்ல அதற்குக் காரணம், ஒப்பளவில் விரைவாகவோ மெதுவாகவோ அது தேய்ந்து போவதும் அல்ல காரணம். உற்பத்தி நிகழ்முறையில் அது ஏற்கிற பங்குதான், ஒரு நேரம் அது உழைப்பின் இலக்குப் பொருளாகவும் வேறொரு நேரம் உழைப்புச் சாதனமாகவும் இருப்பதுதான் இந்த வேறுபாட்டுக்குக் காரணம்.

ஓர் உழைப்புச் சாதனமாய் உற்பத்தி நிகழ்முறையில் பயன்பட வேண்டுமானால், ஓயாமல் திரும்பத் திரும்ப நடைபெறும் உழைப்பு நிகழ்முறைகளில் அதிக காலத்துக்கோ குறைந்த காலத்துக்கோ அது பணி புரியக் கூடியதாய் இருந்தாக வேண்டும். எனவே அது புரிகிற பணியே அச்சாதனத்தின் ஆக்கப் பொருள் எந்த அளவுக்கு நீடித்திருக்கக் கூடியதாய் இருத்தல் வேண்டும் என்பதை நிர்ணயிக்கிறது. ஆனால் அந்தச் சாதனத்தின் ஆக்கப் பொருள் நீடித்திருக்கும் திறனுடையதாகும் என்பது மட்டும் அதை நிலை-மூலதனம் ஆக்கிவிடாது. அதே பொருள் கச்சாப் பொருளாய் இருக்கும் போது சுழல்-மூலதனமாகி விடுகிறது. சரக்கு-மூலதனத்துக்கும் திறனுடை மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாட்டை சுழல்-மூலதனத்துக்கும் நிலை-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாட்டோடு குழப்பிக் கொள்ளும் பொருளாதார அறிஞர்களுக்கு ஒரே பொருள், ஒரே இயந்திரம் உற்பத்திப் பண்டமென்ற முறையில் சுழல்-மூலதனமாகவும் உழைப்புச் சாதனம் என்ற முறையில் நிலை-மூலதனமாகவும் தெரிகிறது.

உழைப்புச் சாதனத்தின் ஆக்கப் பொருள் நீடித்திருக்கக் கூடியதாய் இருப்பதால் அச்சாதனம் நிலை-மூலதனமாகி விடாது என்றாலும், இப்படியொரு சாதனமாகப் பயன்படுவதற்கு அது ஓரளவு நீடித்திருக்கக் கூடிய பொருளால் ஆகியதாக இருப்பது அவசியமாகிறது. ஆகவே, அதன் ஆக்கப் பொருள் நீடித்திருக்கக் கூடியதாய் இருப்பது அது உழைப்புச் சாதனமாகப் பயன்படுவதற்கு இன்றியமையாதது என்பதால், அதனை நிலை-மூலதனம் ஆக்கிடும்

சுற்றோட்ட வடிவத்துக்கும் இதுவே பௌதிக அடிப்படையாகும். மற்றவை மாறாதிருக்க அதன் ஆக்கப் பொருளின் தேய்மானத்தைப் பொறுத்து, குறைவாகவோ அதிகமாகவோ அது நிலைப்பாடு வாய்ந்ததாகிறது. இவ்விதம் ஒரு சாதனம் நிலை-மூலதனமாய் இருப்பதற்கும் அதன் ஆக்கப் பொருளின் தேய்மானத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கக் காணலாம்.

உழைப்புச் சக்திக்காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியை மட்டும் சுழல்-மூலதனமாக; அதாவது நிலை-மூலதனத்துக்கு எதிரானதாகக் கருதுகையில் மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடும் நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடும் ஒன்றாகிப் போகின்றன. உழைப்புச் சாதனத்தின் நிலை-மூலதனத் தன்மைக்கு உழைப்புச் சாதனம் எனும் பௌதிக எதார்த்தம் அத்தியாவசிய அடிப்படை ஆவதால், மேற்கூறிய மூலதனப் பகுதி நிலை-மூலதனத் துக்கு எதிரான சுழல்-மூலதனமாகிற இத்தன்மையினை உழைப்புச் சக்திக்காக முதலீடாகியுள்ள மூலதனத்தின் பௌதிக எதார்த்தத்தி லிருந்து வருவிப்பதும், அதன் பின் மாறும்-மூலதனத்தின் பௌதிக எதார்த்தத்தைக் கொண்டு சுழல்-மூலதனத்துக்கு விளக்கமளிப்பதும் இயற்கையானதாகி விடுகிறது.

கூலிக்காக முதலீடு செய்யப்படும் மூலதனத்தின் கச்சாப் பொருள் உழைப்பே ஆகும்; செயல்திறனுள்ளதும் மதிப்பைப் படைப்பதுமான உழைப்புச் சக்தியாகும்; உயிருள்ள உழைப்பாகும். முதலாளி உயிரற்ற, பொருளாய் வடிக்கப் பெற்ற உழைப்பைப் பரிவர்த்தனை செய்து இந்த உயிருள்ள உழைப்பைப் பெற்று, தமது மூலதனத்தோடு இணைத்துக் கொள்கிறார். அவர் கையிலிருக்கும் மதிப்பு இவ்வழியில்தான் தற்பெருக்கமடையும் மதிப்பாக மாறு கிறது. ஆனால் இந்தத் தற்பெருக்கச் சக்தியை முதலாளி விற்ப தில்லை. அவரது உழைப்புச் சாதனங்களைப் போல் அது எப் போதும் அவரது திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறாகவே இருக்கிறது; அவர் விற்கிற பூர்த்தியான உற்பத்திப் பொருளைப் போல் ஒருபோதும் அது அவரது சரக்கு-மூலதனத்தின் ஒரு பகுதி யாவதில்லை. உற்பத்தி நிகழ்முறையில், உழைப்பின் இலக்குப் பொருட்களும் துணைப் பொருட்களும் சுழல்-மூலதனமென்ற முறையில் உழைப்புச் சக்தியுடன் ஒன்றாகக் கருதப்படுவதில்லை. அதே போல திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறுகளாகிய உழைப்புச் சாதனங்களும் நிலை-மூலதனமென்ற முறையில் உழைப் புச் சக்திக்கு எதிரானதாவதில்லை. உழைப்பு நிகழ்முறையின் கண் ணோட்டத்தில், இவை இரண்டுமே பொருள்வகைக் காரணிகளாய் [objective factors] இருக்க, உழைப்புச் சக்தி ஆள்வகைக் காரணி யாக [personal factor] அவற்றை எதிர்நோக்குகிறது. மதிப்பின் தற்பெருக்க நிகழ்முறையின் கண்ணோட்டத்தில் இவை இரண்டுமே

மாறும்-மூலதனத்துக்கு எதிரான மாறா-மூலதனமாக உழைப்புச் சக்தியிடமிருந்து வேறுபடுகின்றன. இதற்கு பதில் சுற்றோட்ட நிகழ் முறையைப் பாதிக்கக் கூடிய உருப்படியான வேறுபாடாக எதை யேனும் குறிப்பிட வேண்டுமானால், அது இதுதான்: உழைப்புச் சக்தி செயல்படுகிற நேரம் முழுதும் அது மதிப்பையும் உபரி-மதிப் பையும் படைத்துக் கொண்டிருக்கிறது என்பதும், உழைப்புச் சக்தி யின் தரப்பிலிருந்து பார்க்கையில் அசைவியக்கமாக, மதிப்பைப் படைக்கும் காரியமாகத் தெரிவது, அசைவற்ற நிலையிலுள்ள அதன் உற்பத்திப் பொருளின் தரப்பிலிருந்து பார்க்கையில் படைக் கப்பட்ட மதிப்பாகத் தெரிகிறது என்பதும், பொருளுரு எடுத்துள்ள உழைப்பே ஆகிய மதிப்பின் தன்மையிலிருந்தும், பொருளுரு எடுத்து வரும் உழைப்பே ஆகிய செயல்திறனுள்ள உழைப்புச் சக்தி யின் தன்மையிலிருந்தும் தெளிவாகவே விளங்குகிறவை. உழைப்புச் சக்தி அதற்குரிய பணியைச் செய்து முடிக்குமாயின், அதன் பிறகு மூலதனமானது ஒரு புறம் உழைப்புச் சக்தியையும் மறு புறம் உற்பத் திச் சாதனங்களையும் கொண்டதாய் இராது. உழைப்புச் சக்திக்காக முதலீடாகியிருந்த மூலதன-மதிப்பு இப்போது உற்பத்திப் பொரு ளுடன் கூட்டுச் சேர்க்கப்பட்ட மதிப்பாகி (உபரி-மதிப்பும் அடங் கிய மதிப்பாகி) விடுகிறது. இந்த உற்பத்தி நிகழ்முறை திரும்பத் திரும்ப நடைபெற வேண்டுமானால், உற்பத்திப் பொருளை விற்று அந்தப் பணத்தைக் கொண்டு திரும்பத் திரும்ப உழைப்புச் சக்தி யைப் புதிதாய் விலைக்கு வாங்கி திறனுடை-மூலதனத்தில் இணைத் தாக வேண்டும். உழைப்புச் சக்திக்காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியும், இதே போல் உழைப்பின் இலக்குப் பொருட்களான மூலப்பொருள் முதலானவற்றுக்காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியும், இக்காரணத்தால்தான் உழைப்புச் சாதனங்களாக நிலை யாய் நிலைத்திருக்கும் மூலதனத்துக்கு எதிரான சுழல்-மூலதனத்தின் தன்மை பெறுகின்றன.

இதற்கு மாறாக, சுழல்-மூலதனத்தின் இரண்டாந்தர இயல்பு, சுழல்-மூலதனத்துக்கு மட்டுமல்லாமல் மாறா-மூலதனத்தின் ஒரு பகுதிக்கும் (கச்சாப் பொருட்களும் துணைப் பொருட்களுமான பகுதிக்கும்) உரித்தான இந்த இயல்பு, உழைப்புச் சக்திக்காக முதலீ டாகியுள்ள மூலதனப் பகுதியின் அடிப்படை இயல்பாக்கப்பட் டால்—அதாவது உழைப்புச் சக்திக்காக முதலீடாகியுள்ள மூலதன-மதிப்பானது அம்மதிப்பை நுகர்ந்து படைக்கப்படும் உற்பத்திப் பொருளுக்கு நிலை-மூலதன மதிப்பைப் போல் பையப்பைய சன்னம் சன்னமாக அல்லாமல் அப்படியே முழு அளவிலும் மாற்றப்படுகிறது, ஆகவே உற்பத்திப் பொருளை விற்று அப்படியே முழு அளவிலும் மாற்றீடு செய்யப்படுகிறது என்பது இம்மூலதனப் பகுதியின் அடிப் படை இயல்பாக்கப்பட்டால்—அப்போது கூலிக்காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியானது செயல்திறனுள்ள உழைப்புச் சக்தியால்

ஆனதாய் இருப்பதற்கு பதில் தொழிலாளி தமது கூலியைக் கொண்டு வாங்கிக் கொள்ளும் பொருட் கூறுகளால், அதாவது சமுதாயத்தின் சரக்கு-மூலதனத்தில் தொழிலாளியின் நுகர்வுக்காகப் போய்ச் சேரும் பகுதியான வாழ்வுச் சாதனங்களால் ஆனதாய் இருத்தல் வேண்டும். அப்போது நிலை-மூலதனம் என்பது மெல்லவே அழிகிறவையும் மாற்றீடு செய்ய வேண்டியவையுமான உழைப்புச் சாதனங்களால் ஆனதாகிறது; உழைப்புச் சக்திக்காக முதலீடாகியுள்ள மூலதனமானது விரைவாக உடனுக்குடன் மாற்றீடு செய்ய வேண்டிய வாழ்வுச் சாதனங்களால் ஆனதாகிறது.

ஆயினும் விரைவாய் அழிவதற்கும் மெல்ல அழிவதற்கும் இடையிலான எல்லைக் கோடு தெளிவானதல்ல.

''தொழிலாளி நுகர்கிற உணவு-உடை, அவரது வேலையிடமான கட்டடம், அவரது உழைப்புக்கு உதவும் சாதனங்கள் இவை எல்லாம் அழிகிறவையே. ஆயினும் இந்த வெவ்வேறு மூலதனங்கள் நீடித்திருக்கும் காலத்தில் இருக்கும் வேறுபாடு மிகப் பெரிது. கப்பலைக் காட்டிலும் அதிகமாக நீராவி எஞ்சினும், தொழிலாளியின் உடையைக் காட்டிலும் அதிகமாகக் கப்பலும், தொழிலாளி உண்ணும் உணவைக் காட்டிலும் அதிகமாக அவரது உடையும் நீடித்திருக்கக் காண்கிறோம்.''[32]

தொழிலாளியின் வீடு, அவரது தட்டுமுட்டு சாமான்கள், அவரது நுகர்வுக் கருவிகளான கத்தி, முட்கரண்டி, சாப்பாட்டுத் தட்டு முதலானவற்றை ரிக்கார்டோ குறிப்பிட மறந்து விடுகிறார்; இவை யாவும் உழைப்புச் சாதனங்களைப் போலவே நீடித்திருக்கக் கூடியவைதான். ஒரே வகைப் பொருட்களே என்றாலும், ஓரிடத்தில் நுகர்வுப் பண்டங்களாகவும் பிறிதோரிடத்தில் உழைப்புச் சாதனங்களாகவும் இருக்கின்றன.

ரிக்கார்டோவின் கருத்துப்படி வேறுபாடு இதுதான்: ''விரைவில் அழிவதாகவும் அடிக்கடி மறுவுற்பத்தி செய்ய வேண்டியதாகவும் இருக்கிற மூலதனத்தை சுழல்-மூலதனமாகவும் மெள்ள மெள்ள நுகரப்படுவதாய் இருக்கும் மூலதனத்தை நிலை-மூலதனமாகவும் வகைப்படுத்துகிறோம்.''[33]

இதோடு அவர் ஒரு குறிப்பையும் சேர்த்துக் கொள்கிறார்: ''அவசியமில்லாத பிரிவினை, துல்லியமான எல்லைக் கோடிட்டுப் பிரித்துக் காட்ட முடியாதது.''[34]

இவ்விதம் நல்லபடியாக பிசியோக்கிராட்டுகளிடமே திரும்பி வந்து சேர்கிறோம். இவர்களது வருடாந்தர முன்னீடுகளுக்கும் ஆரம்ப முன்னீடுகளுக்கும் இடையிலான வேறுபாடு, ஈடுபடுத்தப்படும்

[32] ரிக்கார்டோ, அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள், பக்கம் 26.

[33] மேலது.

[34] மேலது.

மூலதனம் நுகரப்படுவதற்கு ஆகும் காலங்கள் வேறுபடுவதையும், ஆகவே அதன் மறுவுற்பத்திக்கு வெவ்வேறு காலங்கள் தேவைப் படுவதையும் குறிக்கிறது. ஆனால் அவர்களுடைய விளக்கத்தின் படி சமுதாயப் பொருளுற்பத்தியில் காணக் கூடிய ஒரு முக்கிய புலப் பாடாக இருந்ததானது, சுற்றோட்ட நிகழ்முறை தொடர்பாய் [கெனேயின்] *Tableau Economique*இல் சித்திரிக்கப்பட்டதானது, இங்கே அகவயமான வேறுபாடாகி விடுகிறது; ரிக்கார்டோவின் சொற்களிலேயே சொல்வதானால் அவசியமில்லாத வேறுபாடாகி விடுகிறது.

உழைப்புக்காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியை உழைப்புச் சாதனங்களில் முதலீடாகியுள்ளதிலிருந்து வேறுபடுத்துவது அதன் மறுவுற்பத்திக்கு ஆகும் காலமேதான், ஆகவே அதன் சுற்றோட்டத் துக்கு ஆகும் காலமேதான் என்றாகியதும், ஒரு பகுதி வாழ்வுச் சாதனங்களாலும் மற்றொரு பகுதி உழைப்புச் சாதனங்களாலும் ஆனதாகி முதற் பகுதியின் வெவ்வேறு கூறுகள் வெவ்வேறு அளவுக்கு நிலைத்திருப்பனவாய் இருந்த போதிலும் இரண்டாம் பகுதியைக் காட்டிலும் முதற் பகுதி விரைவில் அழியக் கூடியதாய் இருப்பதுதான் இரண்டுக்குமுள்ள வேறுபாடு என்றாகியதும், உழைப் புச் சக்திக்காக முதலீடாகியுள்ள மூலதனத்துக்கும் உற்பத்திச் சாதனங் களுக்காக முதலீடாகியுள்ள மூலதனத்துக்கும் இடையிலான பிரத் தியேக வேறுபாடுகள் யாவும் மறைந்து விடுவதில் வியப்பில்லை.

இது ரிக்கார்டோவின் மதிப்புத் தத்துவத்துக்கும், மற்றும் அவரது இலாபத் தத்துவத்துக்கும் முற்றிலும் முரணானது; ரிக்கார்டோவின் இலாபத் தத்துவம் உண்மையில் உபரி-மதிப்புத் தத்துவமே ஆகும். நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்குமுள்ள வேறுபாட்டை குறிப்பிட்ட வரம்புக்கு உட்பட்ட அளவுக்கு மட்டுமே அவர் பரிசீ லிக்கிறார். தொழில் துறையின் வெவ்வேறு கிளைகளிலும் முதலீ டாகியுள்ள சம அளவிலான மூலத்னங்களில் இவ்விரு வகை மூலதனப் பகுதிகளுக்குமுள்ள வெவ்வேறு விகிதாசாரங்களால் மதிப்பு விதியில் எந்த அளவுக்குத் தாக்கம் ஏற்படுகிறதோ அந்த அளவுக்கு மட்டுமே, இன்னும் முக்கியமாய் இந்நிலைமைகளின் விளைவாக ஏற்படுகிற கூலி உயர்வாலோ சரிவாலோ எந்த அளவுக்கு விலைகள் பாதிக்கப்படுகின்றனவோ அந்த அளவுக்கு மட்டுமே, அவர் இந்த வேறுபாட்டைப் பரிசீலிக்கிறார். இப்படி வரம்புகளுக்கு உட்பட்ட இந்த ஆய்விலுங்கூட கடுந்தவறுகள் இழைக்கிறார். நிலை-மூலதனத்தையும் சுழல்-மூலதனத்தையும் அவர் மாறா-மூலதனத்தோடும் மாறும்-மூலதனத்தோடும் குழப்புவதால் ஏற்படும் தவறுகள் இவை. முற்றிலும் தவறான அடிப்படையில் அவர் இந்தப் பகுத்தாய்வினைத் தொடங்குகிறார். முதலாவதாக, மூலதன-மதிப்பில் உழைப்புச் சக்திக்காக முதலீடாகியுள்ள பகுதியை அவர் சுழல்-மூலதனமாக வகைப்படுத்த வேண்டியிருப்பதால்,

சுழல்-மூலதனத்தின் தனி இயல்புகளை வரையறுப்பதிலும், இன்னும் முக்கியமாய் உழைப்புக்காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியை இப்படி வகைப்படுத்த வைக்கும் நிலைமைகளைத் தெளிவு படுத்துவதிலும் அவர் தவறிழைக்கிறார். இரண்டாவதாக, உழைப் புக்காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியை மாறும்-மூலதனமாகக் கொள்ளும் வரையறுப்பையும் அதனை நிலை-மூலதனத்துக்கு எதி ரான சுழல்-மூலதனமாகக் கொள்ளும் வரையறுப்பையும் குழப்பிக் குளறுபடி செய்கிறார்.

உழைப்புச் சக்திக்காக முதலீடு செய்யப்படும் மூலதனத்தை சுழல்-மூலதனம் அல்லது சுற்றியோடும் மூலதனமாகக் கொள்ளும் இலக்கணம் உற்பத்தி நிகழ்முறையின் போது புலப்படும் அதன் பிரத்தியேக வேறுபாட்டை மறைத்திடுகிற இரண்டாந்தர இலக் கணமே என்பது எடுத்த எடுப்பில் தெளிவாகிறது. ஏனெனில் ஒரு புறத்தில் இந்த இலக்கணம் கச்சாப் பொருள் முதலானவற்றுக்காக முதலீடாகியுள்ள மூலதனத்தையும் உழைப்புக்காக முதலீடாகியுள்ள மூலதனத்தையும் சரிசமமான முக்கியத்துவம் வாய்ந்தவை ஆக்கு கிறது. மாறா-மூலதனத்தின் ஒரு பகுதியை மாறும்-மூலதனத்தி லிருந்து வேறுபடுத்தாமல் இரண்டும் ஒன்றெனக் கொள்கிற இந்த வகைப்பிரிவினை, மாறும்-மூலதனத்தை மாறா-மூலதனத்துக்கு எதி ரானதாக்குகிற அதன் பிரத்தியேக வேறுபாட்டைக் கவனியாது புறக் கணிக்கும் வகைப்பிரிவினையே ஆகும். மறு புறத்தில், உழைப்புக் காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியும் உழைப்புச் சாதனங்களுக் காக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதியும் ஒன்றுக்கொன்று எதிர் நிலையில் இருந்தாலுங்கூட, இது இம்மூலதனப் பகுதிகள் உற்பத்திப் பொருளுக்குத் தம் மதிப்பைப் பெயர்த்திடுவதற்கு ஆகும் காலக் கூறுகள் வெவ்வேறாக இருப்பதைக் குறிக்கும் எதிர்நிலையாகுமே தவிர, மதிப்பின் உற்பத்தியில் இம்மூலதனப் பகுதிகளுக்குள்ள பங்கு முற்றிலும் வெவ்வேறாய் இருப்பதை எவ்வகையிலும் குறிப்பதல்ல.

இந்தப் பரிசீலனைகள் யாவற்றிலும், சரக்கு உற்பத்தி நிகழ் முறையில் கூலியாகவோ, கச்சாப் பொருட்களின் விலையாகவோ, உழைப்புச் சாதனங்களின் விலையாகவோ முதலீடாகியுள்ள குறிப் பிட்ட மதிப்பு எப்படி உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படுகிறது? எனவே எப்படி உற்பத்திப் பொருளாக சுற்றியோடி உற்பத்திப் பொருள் விற்கப்படுவதன் மூலம் திரும்பவும் அதன் தொடக்க முனைக்கே எடுத்துவரப்படுகிறது, அல்லது மாற்றீடு செய்யப்படுகிறது? என்பதே கேள்வி. இங்குள்ள வேறுபாடு எல்லாம் ''எப்படி'' என்ப திலுள்ள ஒன்றேதான்; குறிப்பிட்ட எந்த விதத்தில் இந்த மதிப்பு பெயர்த்திடப்படுகிறது, ஆகவே சுற்றியோடுகிறது என்பதுதான்.

உழைப்புச் சக்தியின் விலை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முன் கூட்டியே ஒப்பந்தத்தால் நிர்ணயமாகி விடுகிறது. பணமாகத் தரப்பட்டாலும் வாழ்வுச் சாதனங்களாகத் தரப்பட்டாலும் இந்த

விலை நிர்ணயமான விலையாக இருக்கும் தன்மையில் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை. ஆயினும் பணமாகத் தரப்படும் கூலியைப் பொறுத்த வரை, உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு மட்டுமன்றி அவற்றின் பிண்டப் பொருளும் உற்பத்தி நிகழ்முறை யில் சேருவது போல், கூலிப் பணம் அப்படியே உற்பத்தி நிகழ் முறையில் சேருவதில்லை என்பது தெளிவு. ஆனால் தொழிலாளி தமது கூலியைச் செலவிட்டு வாங்கும் வாழ்வுச் சாதனங்கள் சுழல்-மூலதனத்தின் பிண்டப் பொருள் வடிவம் என்ற முறையில், கச்சாப் பொருட்கள் முதலானவற்றோடு ஒரே இனமாய் வகைப்படுத்தப் பட்டு, உழைப்புச் சாதனங்களுக்கு எதிர்நிலையில் அமர்த்தப்படு மானால், பார்ப்பதற்கு அப்போது நிலைமை வேறுவிதமாகத் தெரி கிறது. உற்பத்திச் சாதனங்களாய் இருக்கும் பண்டத் திரளின் மதிப்பு உழைப்பு நிகழ்முறையின் போது உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க் கப்படுவது போலவே, வாழ்வுச் சாதனங்களாய் இருக்கும் மற்றொரு பண்டத் திரளின் மதிப்பும் கூட அதனை நுகரும் உழைப்புச் சக்தியின் வடிவில் திரும்பி வந்து இச்சக்தியின் செயலால் உற்பத்திப் பொரு ளுக்குப் பெயர்க்கப்படுகிறது. ஆக, பொருளுற்பத்தியின் போது முன்னீடாகிற மதிப்புகள் திரும்பி வந்து உற்பத்திப் பொருளில் தோற்றமளிப்பது மட்டுமே இரு நிலைமைகளிலும் பிரச்சினை ஆகிறது. (பிசியோக்கிராட்டுகள் இதனை அப்படியே உண்மை யாகக் கொண்டதால், அவர்கள் தொழில் துறை உழைப்பு உபரி-மதிப்பைப் படைக்கக் கூடியது என்பதையே மறுத்தார்கள்.) வேலாண் டிடமிருந்து ஏற்கெனவே நாம் மேற்கோளாகத் தந்த வாசகம்* கூறு வதாவது: ''எந்த வடிவத்தில் மூலதனம் திரும்ப இடம் பெறுகிறது என்பதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை....மனிதப் பிறவியின் வாழ்க்கைக்கும் வசதிக்கும் அவசியமான பல்வேறு வகைப்பட்ட உணவு, உடை, உறைவிடம் ஆகியவையும் மாற்றப்படுகின்றன. அவை அவ்வப்போது நுகரப்படுகின்றன; அவற்றின் மதிப்பு... திரும்ப இடம் பெற்று..:'' (*அரசியல் பொருளாதாரத்தின் அடிப் படை அமிசங்கள்*, பக்கம் 31, 32.) பொருளுற்பத்திக்காக உற் பத்திச் சாதனங்கள், வாழ்வுச் சாதனங்கள் ஆகிய இரு வடிவிலும் முன்னீடு செய்யப்படுகிற மூலதன-மதிப்புகள் திரும்பி வந்து உற்பத் திப் பொருளின் மதிப்பில் தோற்றமளிக்கின்றன. முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையினை இவ்விதம் மருமத்திலும் மரும மாக்கிடும் காரியம் வெற்றிகரமாய் நிறைவேற்றப்படுகிறது; உற்பத் திப் பொருளில் இடம் பெறும் உபரி-மதிப்பு எப்படி எங்கிருந்து பிறந்தது என்பது பார்வையில் படாத படி விலக்கப்பட்டு விடுகிறது.

மற்றும், முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்துக்கே உரித்தான

---

* *கார்ல் மார்க்ஸ், மூலதனம், முதல் பாகம், பக்கம் 284, குறிப்பு 201. —பதிப் பாசிரியர்.*

மாய்மாலமும் [fetishism] இங்கே அதன் உச்ச நிலையை வந்தடைகிறது. சமுதாயப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் போது பண்டங்களிடம் பதிக்கப்படும் சமூக, பொருளாதாரத் தன்மையினை இந்த மாய்மாலம்தான் இப்பண்டங்களின் பௌதிகத் தன்மையிலிருந்து உதிக்கும் இயற்கை இயல்பாக உருமாற்றிக் காட்டுகிறது. உதாரணமாய், ''உழைப்புச் சாதனங்கள்தான் நிலை-மூலதனம்'' என்பது பகட்டுப் புலமைவாத [scholastic] இலக்கணமாகும். இது முரண்பாடுகளுக்கும் குழப்பத்துக்கும் இட்டுச்செல்கிறது. உழைப்பு நிகழ்முறையைப் பொறுத்த வரை, அதன் பொருட் கூறுகள் உழைப்புச் சாதனங்களாகப் பங்காற்றுகின்றனவா, மூலப் பொருட்களாகப் பங்காற்றுகின்றனவா, உற்பத்திப் பொருட்களாகப் பங்காற்றுகின்றனவா என்பது முழுக்க முழுக்க அவற்றின் பணியைப் பொறுத்ததே, அவை அந்தக் குறிப்பிட்ட உழைப்பு நிகழ்முறையில் அந்த நேரத்தில் வகிக்கும் பங்கைப் பொறுத்ததே என்று விளக்கினோம். (முதல் பாகம், அத்தியாயம் VII.) அதேபோல்தான், உற்பத்தி நிகழ்முறையை பொறுத்த வரை, அது உண்மையில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையாக இருந்தால்தான், அதாவது உற்பத்திச் சாதனங்கள் உண்மையில் மூலதனமாக அமைந்து, பொருளாதார வழியில் அந்தக் குறிப்பிட்ட தன்மையை, மூலதனமென்ற சமூகத் தன்மையைப் பெற்றால்தான், உழைப்புச் சாதனங்கள் நிலை-மூலதனமாகின்றன. இரண்டாவதாக, அவை தமது மதிப்பை குறிப்பிட்ட விதத்தில் உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்தால்தான், நிலை-மூலதனமாகின்றன. இல்லையேல் அவை நிலை-மூலதனமாகாமல் உழைப்புச் சாதனங்களாகவே இருக்கின்றன. இவ்வாறே, உரம் போன்ற துணைப் பொருட்கள், உழைப்புச் சாதனங்களில் பெரும்பாலானவற்றைப் போல் குறிப்பிட்ட அதே விதத்தில் மதிப்பைப் பெயர்க்குமானால், அவை உழைப்புச் சாதனங்களல்ல என்றாலும் நிலை-மூலதனமாகின்றன. வரிசையான இலக்கணங்களில் எதற்கு எந்தப் பொருளைப் பொருத்தமாக்குவது என்பதல்ல பிரச்சினை. பிரத்தியேகமான கருத்தினங்களாகத் தெரிவிப்பு பெற்றாக வேண்டிய குறிப்பிட்ட பணிகளையே இங்கு நாம் பரிசீலிக்கிறோம்.

கூலிக்காக முதலீடு செய்யப்படும் மூலதனமாக இருத்தல் எல்லா நிலைமைகளிலுமே வாழ்வுச் சாதனங்களுக்கு உரிய பண்புகளில் ஒன்றாகக் கருதப்படுமானால், ''உழைப்பைப் பராமரிப்பதும்'' இந்த ''சுழல்-மூலதனத்தின்'' பண்பாகி விடுகிறது. (ரிக்கார்டோ, பக்கம் 25.) வாழ்வுச் சாதனங்கள் ''மூலதனம்'' அல்லவென்றால் உழைப்புச் சக்தியை அவை பராமரிக்க மாட்டா. ஆனால், பிறரது உழைப்பைக் கொண்டு மூலதனத்தைப் பராமரிக்கும் திறனை அந்த வாழ்வுச் சாதனங்கள் பெறுவது அவற்றின் மூலதனப் பண்பினால் தானே தவிர வேறு எதனாலும் அல்ல.

வாழ்வுச் சாதனங்கள் அவற்றின் உள்ளார்ந்த இயல்பாலேயே

சுழல்-மூலதனமாய் இருக்கின்றவை என்றால் (சுழல்-மூலதனம் கூலியாக மாறிய பின் இருக்கும் நிலைமை), கூலியின் பருமன் தொழிலாளர்களது எண்ணிக்கைக்கும் குறிப்பிட்ட சுழல்-மூலதன அளவுக்கும் உள்ள விகிதத்தைப் பொறுத்ததாகிறது — பொருளாதார அறிஞர்களுக்கு இது மிகப் பிடித்தமான கோட்பாடு. ஆனால் உண்மை என்னவெனில், சந்தையிலிருந்து தொழிலாளி வாங்கிக் கொள்ளும் வாழ்வுச் சாதனங்களின் அளவும் முதலாளியின் சொந்த நுகர்வுக்காக அவருக்கு வரப்பெறும் வாழ்வுச் சாதனங்களின் அளவும் உபரி-மதிப்புக்கும் உழைப்பின் விலைக்குமுள்ள விகிதத்தைப் பொறுத்தவை ஆகும்.

பார்ட்டனைப்[35] போலவே ரிக்கார்டோவும், மாறா-மூலதனத்தோடு மாறும்-மூலதனம் கொண்டுள்ள உறவையும் நிலை-மூலதனத்தோடு சுழல்-மூலதனம் கொண்டுள்ள உறவையும் எந்நேரமும் போட்டுக் குழப்புகிறார். இலாப வீதம் பற்றிய அவரது ஆய்வு இதனால் எப்படிக் கேடுறுகிறது என்பதைப் பின்னர் பார்ப்போம்.*

மேலும் ரிக்கார்டோ, நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாட்டையும், இந்த வேறுபாடு அல்லாத ஏனைய காரணங்களால் புரள்வில் எழும் வேறுபாடுகளையும் ஒன்றாக்கி விடுகிறார்: ''சுழல்-மூலதனம் சுற்றியோடி வர, அதாவது அதைப் பிரயோகிப்பவரிடம் திரும்பி வர ஆகும் கால அளவு மாறுபடுவதையும் கவனிக்க வேண்டும். விதைப்பதற்காக சாகுபடியாளர் வாங்கும் கோதுமை, ரொட்டி செய்வதற்காக ரொட்டிக்காரர் வாங்கும் கோதுமையுடன் ஒப்பிடுகையில் நிலை-மூலதனமாகும். ஒருவர் அதனை நிலத்தில் விட்டு வைக்கிறார், ஓராண்டு வரை அவருக்கு ஒன்றும் திரும்பி வராது. மற்றவர் அதனை அரைத்து மாவாக்கி, வாடிக்கையாளரிடம் ரொட்டியாக விற்கிறார். ஒரே வாரத்தில் மூலதனத்தைத் திரும்பவும் பெற்று மறுபடியும் தொடங்கி இதையே செய்கிறார், அல்லது அதை வேறு ஏதாவது முயற்சியில் ஈடுபடுத்த முற்படுகிறார்.''[36]

இதில் வேடிக்கை என்னவென்றால்: விதையாக விதைக்கப்படும் போது கோதுமை வாழ்வுச் சாதனமாக அல்லாமல் கச்சாப் பொருளாகவே பயன்படுத்தப்பட்டாலும், முதலாவதாக, அதனளவில் வாழ்வுச் சாதனமாகும் என்பதால் அதனை சுழல்-மூலதனமாகவும், இரண்டாவதாக, மீள்வதற்கு ஓராண்டுக்கும் அதிகமாய்த் தேவைப்படுவதால்

---

[35] சமுதாயத்தில் உழைக்கும் வர்க்கங்களின் நிலைமையில் தாக்கம் உண்டாக்கும் காரணிகள் பற்றிய கருத்தோட்டங்கள், லண்டன், 1817. இதிலிருந்து கருத்துக்குரிய ஒரு வாசகம் முதல் பாகம், பக்கம் 848-849, குறிப்பு 159இல் மேற்கோளாகத் தரப்படுகிறது.

* கார்ல் மார்க்ஸ், மூலதனம், மூன்றாம் பாகம், அத்தியாயம் i-iii. — பதிப்பாசிரியர்.

[36] அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள், பக்கம் 26, 27.

நிலை-மூலதனமாகவும் கொள்ள வேண்டும் என்றாகிறது. ஆனால் எந்த உற்பத்திச் சாதனமும் நிலை-மூலதனமாகிறதா இல்லையா என்று நிர்ணயிப்பதற்கு, அதனுடைய மீள்வு மெதுவாக நடை பெறுகிறதா அல்லது விரைவாகவா என்பதை மட்டும் கவனித்தால் போதாது, குறிப்பிட்ட எந்த விதத்தில் அது தனது மதிப்பை உற் பத்திப் பொருளுக்குப் பெயர்த்திடுகிறது என்பதையும் கவனிக்க வேண்டும்.

ஆதாம் ஸ்மித் செய்த குளறுபடியால் ஏற்பட்டிருக்கும் விளை வுகள் வருமாறு:

1. நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடை யிலான வேறுபாடு திறனுடை-மூலதனத்துக்கும் சரக்கு-மூலதனத் துக்கும் இடையிலான வேறுபாட்டுடன் கலந்து குழப்பமாகி விடு கிறது. எடுத்துக்காட்டாக, இயந்திரமானது சந்தையில் சரக்காய் இருக்கையில் சுழல்-மூலதனமாகக் கருதப்படுகிறது; உற்பத்தி நிகழ் முறையில் சேர்ந்ததும் நிலை-மூலதனமாகக் கருதப்படுகிறது. ஏன் ஒரு வகை மூலதனம் மற்றொன்றைக் காட்டிலும் நிலையானதாக வேண்டும், அல்லது சுழல்வதாக வேண்டும் என்பது அறிந்து கொள்ள முடியாத ஒன்றாகி விடுகிறது.

2. சுழல்-மூலதனமனைத்தும் கூலிக்காக முதலீடாகியுள்ள, அல்லது முதலீடாகப் போகிற மூலதனமாகவே இருந்தாக வேண் டும். ஜான் ஸ்டுவர்ட் மில்லும்* மற்றும் பலரும் இவ்வாறுதான் கருதினார்கள்.

3. மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்கும் இடையி லான வேறுபாட்டை பார்ட்டன், ரிக்கார்டோ முதலானவர்கள் சுழல்-மூலதனத்துக்கும் நிலை-மூலதனத்துக்கும் இடையிலான வேறு பாட்டுடன் போட்டுக் குழப்பினார்கள். முடிவில் இப்போது அந்த வேறுபாடு இரண்டாவதாகக் கூறிய வேறுபாடே அன்றி வேறல்ல என்றாகி விடுகிறது. எடுத்துக்காட்டாக, ராம்சே உழைப்புச் சாதனங் களை மட்டுமல்லாமல், கச்சாப் பொருட்கள் போன்ற எல்லா உற் பத்திச் சாதனங்களையுமே நிலை-மூலதனமாகக் கருதுகிறார்; கூலிக் காக முதலீடாகியுள்ள மூலதனத்தை மட்டுமே சுழல்-மூலதனமாகக் கருதுகிறார்.** ஆனால் வேறுபாடுகளை வெட்டிச் சுருக்குதல் இந்த வடிவில் நடைபெறுவதால் மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்குமுள்ள மெய்யான வேறுபாடு புரிந்து கொள்ளப்படு வதில்லை.

4. அண்மைக் காலத்திய பிரித்தானியப் பொருளாதார அறிஞர்கள்,

---

* ஜா. ஸ்டு. மில், *அரசியல் பொருளாதாரத்தில் தீர்வு காணப்படாத சில பிரச் சினைகள் பற்றிய கட்டுரைகள்*, லண்டன், 1844, பக்கம் 164.—ஆங்கிலப் பதிப் பாசிரியர்.

** ஜா. ராம்சே, *செல்வ வினியோகம் பற்றிய கட்டுரை*, எடின்பரோ, 1836, பக்கம் 21-24.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

இன்னும் அதிகமாய் ஸ்காட்லாந்திய அறிஞர்கள்— மக்லியோடு,* பாட்டர்சன்** போன்றோர் —சொல்ல முடியாத அளவுக்குக் குறுகலான வங்கிக் கணக்கரின் பார்வை கொண்டு யாவற்றையும் பார்க்கிறார்கள், இவர்கள் நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாட்டை நினைத்ததும் எடுக்கும் படியான பணச் சேமிப்புக்கும் அப்படி எடுக்க முடியாத பணச் சேமிப்புக்குமுள்ள வேறுபாடாக்கி விடுகிறார்கள்.

---

* ஹெ. ட. மக்லியோடு, அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள், லண்டன், 1858, பக்கம் 76-80.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

** ஆர் எச். பாட்டர்சன், நிதி விஞ்ஞானம். செய்முறை விளக்கம், எடின்பரோ & லண்டன், 1868, பக்கம் 129-44.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

*அத்தியாயம் XII*

## வேலைக் காலம்

இரு தொழிற் கிளைகளை எடுத்துக் கொள்வோம்: பஞ்சு நூற்பும், இழுபொறி உற்பத்தியும். இரண்டிலும் வேலை-நாள் [working-day] சமமெனக் கொள்வோம். இந்த வேலை-நாளின் கால அளவு பத்து மணி நேரம் என்போம். முதலாவது தொழிற் கிளையில் பூர்த்தியான உற்பத்திப் பொருளாகிய நூல் ஒவ்வொரு நாளும் அல்லது ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட அளவு உற்பத்தியாகிறது. இரண்டாவதில் பூர்த்தியான உற்பத்திப் பொருளாகிய இழுபொறியைத் தயாரித்திட, உழைப்பு நிகழ்முறை அநேகமாய் மூன்று மாத காலத்துக்கு விடாத்தொடராய் நடைபெற வேண்டும். முதலாவதில் உற்பத்திப் பொருள் துண்டு துண்டாகப் பகுபடும் [discrete] தன்மை வாய்ந்தது. நாள் தோறும் அல்லது வாரம் தோறும் அதே வேலை தான் திரும்பத் திரும்ப ஆரம்பமாகி நடந்தேறுகிறது. இரண்டாவதில் உழைப்பு நிகழ்முறையானது மிகப் பல அன்றாட உழைப்பு நிகழ்முறைகளது விடாத்தொடராய் நீள்கிறது. இந்நிகழ் முறைகள் தம்மிடையிலான தொடர்புகளின் வாயிலாகவும் தொடர்ச் சியான தமது செயற்பாடுகளின் வாயிலாகவும் உற்பத்திப் பொருளை அதன் பூர்த்தியான வடிவில் உருவாக்குவதற்கு ஓரளவு அதிகமான காலம் தேவைப்படுகிறது. அன்றாட உழைப்பு நிகழ்முறையின் கால அளவு இரு கிளைகளிலும் ஒன்றாகவே இருந்தாலுங்கூட, பொரு ளுற்பத்திச் செயலின் கால அளவு பெரிதும் வேறுபடுகிறது. அதாவது உற்பத்திப் பொருளை அதன் பூர்த்தியான வடிவில் தயாரித்து சந்தைச் சரக்கு ஆக்குவதற்கும், திறனுடை-மூலதனமாய் இருப்பதை இவ்விதம் சரக்கு-மூலதனமாக மாற்றுவதற்கும் தொடர்ச்சியாக நடைபெற்றாக வேண்டிய உழைப்பு நிகழ்முறைகளின் கால அளவு பெரிதும் வேறுபடுகிறது. இந்த வேறுபாட்டுக்கும் சுழல்-மூலதனத் துக்கும் நிலை-மூலதனத்துக்கும் இடையிலுள்ள வேறுபாட்டுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஈடுபடுத்தப்படும் நிலை-மூலதனத் துக்கும் சுழல்-மூலதனத்துக்குமுள்ள விகிதாசாரம் இரு தொழிற் கிளைகளிலும் ஒன்றாகவே இருப்பினும் கூட, மேற்சொன்ன

வேறுபாடு இருக்கவே செய்யும்.

உற்பத்திச் செயலின் கால அளவிலான இந்த வேறுபாடுகளை, வெவ்வேறு உற்பத்தித் துறைகளுக்கிடையே மட்டுமல்லாமல், உற்பத்தி செய்யப்பட வேண்டியதன் அளவைப் பொறுத்து ஒரே உற்பத்தித் துறையினுள்ளேயும் கூட காண முடியும். சாதாரணக் குடியிருப்பு வீடு பெரிய தொழிற்சாலையை விடக் குறுகிய காலத்தில் கட்டப்படுகிறது; ஆகவே தொடர்ச்சியான உழைப்பு நிகழ்முறைகள் அதற்குக் குறைவாகவே தேவைப்படுகின்றன. இழுபொறியை நிர்மாணிக்க மூன்று மாத காலமாகிறது; கவசப் போர்க் கப்பலை நிர்மாணிக்கவோ ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாய்த் தேவைப்படுகிறது. தானிய சாகுபடிக்குச் சுமார் ஓராண்டு ஆகிறது. பெரும் கால்நடைகளின் வளர்ப்புக்கு பல ஆண்டுகள் ஆகின்றன. மரங்கள் வளர்ப்பதற்கு பன்னிரண்டு முதல் நூறு ஆண்டு வரை ஆகிறது. கிராமப்புற சாலை அமைக்க சில மாதம் போதும்; இருப்புப் பாதைக்கோ ஆண்டுக் கணக்கில் ஆகிறது. சாதாரண சமுக்காளம் நெய்வதற்கு சுமார் ஒரு வாரம் போதும், ஆனால் கோபலின் சித்திரத் திரைச் சீலை நெய்வதற்குப் பல ஆண்டுகள் வேண்டும். இவ்வாறு பல உதாரணங்களைக் குறிப்பிடலாம். உற்பத்திச் செயலை முடிப்பதற்கு ஆகும் காலம் இவ்விதம் வெகுவாய் மாறுபடுகிறது.

உற்பத்திச் செயலுக்கு வேண்டிய கால அளவு வேறுபடுகையில் (முதலீடாகியுள்ள மூலதனங்கள் சமமாயிருந்தாலும்) புரள்வு வேகமும் வேறுபடவே செய்யும்; எனவே குறிப்பிட்ட மூலதனம் எவ்வளவு காலத்திற்கு முன்னீடு செய்யப்படுகிறது என்பதிலும் வேறுபாடு ஏற்பட்டாக வேண்டும். நூற்பாலையும் இழுபொறித் தொழிற்சாலையும் ஒரே அளவு மூலதனத்தை ஈடுபடுத்துவதாய்க் கொள்வோம். மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்குமுள்ள விகிதம் இரண்டிலும் ஒன்றே என்றும், நிலை-மூலதனப் பகுதிக்கும் சுழல்-மூலதனப் பகுதிக்கும் இடையிலான விகிதமும் இதே போல் ஒன்றே என்றும் கொள்வோம். அதோடு கடைசியாக வேலை-நாளின் கால அளவும் அது அவசிய-உழைப்பாகவும் [necessary labour] உபரி-உழைப்பாகவும் [surplus-labour] பிரிகிற விதமும் கூட இரண்டுக்கும் ஒன்றெனக் கொள்வோம். சுற்றோட்ட நிகழ்முறையிலிருந்து எழுகிறவையும், நமது இப்போதைய பரிசீலனையோடு எந்தத் தொடர்பும் இல்லாதவையுமான காரணிகளை எல்லாம் ஒதுக்கி விடும் பொருட்டு, நூல், இழுபொறி இரண்டுமே சரக்காணையின் [order] பேரில் உற்பத்தி செய்யப்படுவதாகவும், பூர்த்தியான வடிவில் உற்பத்திப் பொருள் தயாரித்து அளிக்கப்பட்டதும் விலை தரப்படுவதாகவும் வைத்துக் கொள்கிறோம். வார முடிவில், பூர்த்தியான வடிவில் நூலை உற்பத்தி செய்து அளித்ததும் நூற்பாலை அதிபர் சுழல்-மூலதனத்துக்கான முதலீட்டையும் (உபரி-மதிப்பைக் கவனியாது ஒதுக்குகிறோம்), மற்றும் நூலின் மதிப்பில்

இணைக்கப்பட்டிருக்கிற நிலை-மூலதனத் தேய்மானத்தையும் [wear and tear] மீட்டுக் கொள்கிறார். ஆகவே, அவர் அதே மூலதனத்தைக் கொண்டு அதே சுற்றினைத் திரும்பவும் நடத்திச் செல்ல முடியும். அம்மூலதனத்தின் புரள்வும் நிகழ்ந்து முடிந்து விட்டது. ஆனால் இழுபொறித் தயாரிப்பாளர் தொடர்ந்து மூன்று மாத காலத்துக்கு வாரம் தோறும் கூலிக்காகவும் கச்சாப் பொருளுக்காகவும் புதிதாக மூலதனத்தைத் திரும்பத் திரும்ப முதலீடு செய்தாக வேண்டும். மூன்று மாதத்துக்குப் பிறகுதான், இழுபொறி தயாரித்து அளிக்கப்பட்ட பிறகுதான், இவ்வளவு காலமும் ஒரே சரக்கிற்கு வேண்டிய உற்பத்திச் செயலில் சிறிது சிறிதாக முதலீடாகி வந்துள்ள சுழல்-மூலதனம் அதன் சுற்றினை மீண்டும் நிகழ்த்துவதற்கேற்ற வடிவத்தை வந்தடைகிறது. இந்த மூன்று மாத காலத்தில் அவரது இயந்திர சாதனத்துக்கு [machinery] ஏற்பட்ட தேய்மானமும் இப்போதுதான் மாற்றீடு செய்யப்படுகிறது. முதலாமவரின் முதலீடு ஒரு வார காலத்துக்குரியது; இரண்டாமவரின் முதலீடு வார முதலீட்டைப் பன்னிரண்டால் பெருக்கி வருவதாகும். ஏனைய எல்லாக் காரணிகளும் சமமெனக் கொண்டால், இரண்டாமவரிடம் இருப்பதைப் போல் பன்னிரண்டு மடங்கு சுழல்-மூலதனம் முதலாமவரிடம் இருந்தாக வேண்டும்.

ஆயினும், ஒவ்வொரு வாரமும் முன்னீடு செய்யப்படும் மூலதனங்கள் சமமாயிருந்தாலும் இல்லா விட்டாலும் இங்கு நமக்கு ஒன்றுதான். முன்னீடு செய்யப்படும் மூலதனம் எவ்வளவாயினும், அதை முதலாமவர் ஒரே ஒரு வாரத்துக்கும், இரண்டாமவர் பன்னிரண்டு வார காலத்துக்கும் முன்னீடு செய்கிறார். முறையே இந்தக் காலங்கள் கழிந்த பிறகுதான் அந்த மூலதனத்தைப் புதிய காரியத்துக்குப் பயன்படுத்த முடியும்; அதைக் கொண்டு அதே காரியத்தைத் திரும்பச் செய்ய முடியும் அல்லது வேறு ஏதேனும் ஒரு காரியத்தைத் தொடங்க முடியும்.

புரள்வு வேகம் [velocity of turnover] வேறுபடுவதற்கு, அதாவது முன்னீடு செய்யப்படும் தனிப்பட்ட மூலதனத்தின் மதிப்பு திரும்பி வந்து புதிய உழைப்பு நிகழ்முறை அல்லது தற்பெருக்க நிகழ்முறையில் ஈடுபடக் கூடியதாவதற்கு வேண்டிய முன்னீட்டுக் கால அளவு வேறுபடுவதற்கு பின்வரும் நிலைமைகளே காரணம்:

இழுபொறியையோ வேறு ஓர் இயந்திரத்தையோ உற்பத்தி செய்வதற்கு 100 வேலை-நாள் தேவைப்படுவதாகக் கொள்வோம். நூல் நூற்பில் அல்லது இழுபொறி நிர்மாணத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களைப் பொறுத்த வரை, இரு நேர்வுகளிலுமே 100 வேலை-நாள் என்பது விடாத்தொடராய் இணையாத (பகுபடும் தன்மை வாய்ந்த) பரிமாணமாகிறது; நமது அனுமானத்தின் படி, அடுத்தடுத்து தனித் தனியே நடைபெறும் 100 பத்து-மணி-நேர உழைப்பு நிகழ்முறைகள் இதில் அடங்கியுள்ளன. ஆனால் உற்பத்திப்

பொருளாகிய இயந்திரத்தைப் பொறுத்த வரை, இந்த 100 வேலை-நாள் என்பது விடாத்தொடராய் இணைந்த பரிமாணமாகும், 1,000 வேலை-மணிகளைக் கொண்ட ஒரே வேலை-நாளாகும், விடாத்தொடராய் இணைந்த ஒரே உற்பத்திச் செயலாகும். ஒன்றன்பின் ஒன்றாய்ப் பல வேலை-நாட்களைக் கொண்டு விடாத் தொடராய் இணைந்ததை நான் **வேலைக் காலம்** [working period] என்றழைக்கிறேன். வேலை-நாள் என்னும் போது அன்றாடம் தொழிலாளி தமது உழைப்புச் சக்தியைச் செலவிட்டு உழைக்க வேண்டியுள்ள வேலை-நாளின் கால அளவையே குறிப்பிடுகிறோம். ஆனால் வேலைக் காலம் என்னும் போது, குறிப்பிட்ட தொழிற் கிளையில் உற்பத்திப் பொருளை அதன் பூர்த்தியான வடிவில் தயாரிப்பதற்கு விடாத்தொடராய் இணைய வேண்டிய வேலை-நாட்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறோம். இதில் ஒவ்வொரு வேலை-நாளும் உற்பத்திப் பொருளில் ஒரு பகுதியே செய்யப்படு கிறது; தொடர்ந்து நாள் தோறும் உற்பத்தி வேலை மேலும் மேலும் நடைபெறுகிறது; இப்படி அதிகமாகவோ குறைவாகவோ நீண்டு செல்லும் வேலைக் காலத்தின் முடிவில்தான் உற்பத்திப் பொருள் அதன் பூர்த்தியான வடிவை வந்தடைகிறது, அதாவது முழுநிறை வான பயன்-மதிப்பு ஆகிறது.

ஆகவே சமுதாயப் பொருளுற்பத்தி நிகழ்முறையில் ஏற்படும் இடைநிறுத்தங்களாலும் குலைவுகளாலும்—உதாரணமாக, பொரு ளாதார நெருக்கடிகளின் விளைவாய் இவை ஏற்படலாம்—உண் டாகும் விளைவுகள் துண்டு துண்டாகப் பகுபடும் தன்மை வாய்ந்த உற்பத்திப் பொருட்களிடம் ஒரு விதமாகவும், விடாத்தொடராய் இணைந்த நீண்டதொரு காலத்தில் உற்பத்தி செய்யப்பட வேண்டிய பொருட்களிடம் முற்றிலும் வேறு விதமாகவும் இருக்கின்றன. முத லாவதில் நடைபெறுவது எல்லாம் குறிப்பிட்ட அளவில் இன்று உற்பத்தியாகிற நூல், நிலக்கரி போன்ற பொருட்களைத் தொடர்ந்து நாளைக்குப் புதிதாய் உற்பத்தியாக வேண்டிய நூல், நிலக்கரி போன்றவை உற்பத்தியாகாமல் தடைபடுகின்றன என்பதுதான். ஆனால் இரண்டாவது வகைப் பொருட்களாகிய கப்பல்கள், கட்ட டங்கள், இருப்புப் பாதைகள் போன்றவற்றின் உற்பத்தியில் உண் டாகும் விளைவுகள் முற்றிலும் வேறு விதமானவை. இங்கே இன் றைய வேலை மட்டுமல்லாமல், விடாத்தொடராய் இணையும் ஓர் உற்பத்திச் செயல் முழுதுமே தடைபட்டு நின்று விடுகிறது. இந்த உற்பத்தி வேலை தொடர்ந்து நடைபெறாமல் நின்று விடும் போது ஏற்கெனவே அதற்காக நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்களும் உழைப்பும் வீணாகி விடுகின்றன. பிற்பாடு இவ்வேலை திரும்பவும் தொடங்கப் பெற்றாலுங்கூட, தவிர்க்க முடியாத படி அதற்குள் சீர்கேடு ஆரம்பித்தே இருக்கும்.

வேலைக் காலம் முழுவதிலும் நிலை-மூலதனம் ஒவ்வொரு நாளும்

உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கும் மதிப்புப் பகுதி, உற்பத்திப் பொருள் பூர்த்தியாகும் வரை அடுக்கடுக்காக அதில் திரள்கிறது எனலாம். இங்கே நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாட்டின் நடைமுறை முக்கியத்துவம் தெரிய வருகிறது. நிலை-மூலதனம் உற்பத்தி நிகழ்முறையின் போது ஒப்பளவில் நீண்ட காலத்துக்கு முன்னீடு செய்யப்படுகிறது; அநேகமாகப் பல ஆண்டுகளுக்கு அதனைப் புத்தாக்கம் செய்யத் தேவையில்லை. நீராவி எஞ்சின் ஆனது பகுபடும் தன்மை வாய்ந்த தன் மதிப்பை உழைப்பு நிகழ்முறையால் அந்தந்த நாளும் உற்பத்தி செய்யப்படுகிற நூலுக்கு நாள் தோறும் சன்னம் சன்னமாகப் பெயர்த்திட்டாலும் சரி, விடாத்தொடராய் இணைந்து நிகழும் உற்பத்திச் செயலால் உற்பத்தி செய்யப்படும் இழுபொறிக்கு மூன்று மாத காலத்தில் பெயர்த்திட்டாலும் சரி, நீராவி எஞ்சின் வாங்குவதற்காக முதலீடாக வேண்டிய மூலதனத்தின் அளவு ஒன்றேதான், நூல் உற்பத்தியின் போது உதாரணமாய் வாரா வாரம் இம்மூலதனத்தின் மதிப்பு சன்னம் சன்னமாகத் திரும்பி வருகிறது; இழுபொறி உற்பத்தியின் போது உதாரணமாய் காலாண்டுக்கு ஒரு முறை பெரும்பெரும் கவளங்களில் திரும்பி வருகிறது. ஆனால் இரு வகையான நிலைமைகளிலும், இருபது ஆண்டுகளுக்குப் பிறகே நீராவி எஞ்சினின் புத்தாக்கம் [renewal] நடைபெற வேண்டியிருக்கும். நீராவி எஞ்சினின் மதிப்பு உற்பத்திப் பொருளின் விற்பனை மூலம் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பி வருவதற்கு வேண்டிய கால அளவானது அந்த எஞ்சினின் ஆயுட் காலத்தைக் காட்டிலும் குறுகியதாய் இருக்கும் வரை, அதே எஞ்சின் பல வேலைக் காலங்களுக்குத் தொடர்ந்து செயல்பட முடிகிறது.

ஆனால் முன்னீடு செய்யப்பட்டிருக்கும் மூலதனத்தில் சுழல்-மூலதனமாய் இருக்கும் பகுதியின் விவகாரம் வேறு விதமானது. அந்தந்த வாரத்துக்கென்று வாங்கப்படும் உழைப்புச் சக்தி அதே வாரத்தில் செலவாகி உற்பத்திப் பொருளில் உருக்கொள்கிறது. வாரத்தின் முடிவில் அதற்கு ஊதியமளித்தாக வேண்டும். உழைப்புச் சக்திக்காக மூலதனம் இப்படி முதலீடாகி வருகிறது. தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு வாரா வாரம் இது நடைபெறுகிறது. முதலாளி இதற்காக ஒரு வாரம் செலவிடும் மூலதனப் பகுதி மறு வாரத்தில் உழைப்புச் சக்தி வாங்க அவருக்கு உதவுவதில்லை. உழைப்புச் சக்திக்கு விலை கொடுப்பதற்காக வாரம் தோறும் இவ்விதம் அவர் மேலும் மேலும் மூலதனத்தைச் செலவிட வேண்டியிருக்கிறது. கடன்-செலவாணியை [credit] பயன்படுத்துவதைக் கவனியாது ஒதுக்குவோமானால், வாராந்தரக் கூலியே தர வேண்டியிருந்தாலும், கூலிக்காக முதலாளி மூன்று மாதங்களுக்கு முதலீடு செய்யக் கூடியவராய் இருத்தல் வேண்டும். இதே போல், சுழல்-மூலதனத்தின் பிறிதொரு பகுதியைக் கச்சாப் பொருட்களுக்காகவும்

துணைப் பொருட்களுக்காகவும் அவர் முதலீடு செய்தாக வேண்டும். உழைப்பானது அடுக்கு மேல் அடுக்காய் உற்பத்திப் பொருளுக்கு வந்து சேருகிறது. உழைப்பு நிகழ்முறையின் போது இப்படித் தொடர்ச்சியாய் உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படுவது செல விடப்படுகிற உழைப்புச் சக்தியின் மதிப்பு மட்டுமல்ல; உபரி-மதிப் பும் கூடவே பெயர்க்கப்படுகிறது. ஆயினும் உற்பத்திப் பொருள் இன்னமும் பூர்த்தியான சரக்கு வடிவினை வந்தடையவில்லை, ஆகவே இன்னமும் அது சுற்றியோட முடியவில்லை. கச்சாப் பொருட்களிருந்தும் துணைப் பொருட்களிலிருந்தும் உற்பத்திப் பொருளுக்கு அடுக்கு மேல் அடுக்காய்ப் பெயர்க்கப்படும் மூலதன-மதிப்பும் இதே நிலையில்தான் இருக்கிறது.

உற்பத்திப் பொருளின் பிரத்தியேகத் தன்மையால், அல்லது அதன் உற்பத்தியின் மூலம் அடைந்தாக வேண்டிய பயன்விளை வால் அவசியமாக்கப்படுகிற வேலைக் காலத்தின் அளவைப் பொறுத்து, சுழல்-மூலதனம் (கூலிக்காகவும் கச்சாப் பொருட்களுக் காகவும் துணைப் பொருட்களுக்காகவும்) தொடர்ச்சியாய் மேலும் மேலும் முதலீடு செய்யப்பட்டாக வேண்டியுள்ளது. இதில் எப்பகு தியும் சுற்றியோடத்தக்க வடிவம் பெற்றாகவில்லை, எனவே இதே செயல்கள் திரும்பவும் நடைபெற உதவக் கூடியவையாகவும் இல்லை. ஒவ்வொரு பகுதியும் உருவாகி வரும் உற்பத்திப் பொருளின் ஆக்கக் கூறாக இன்னமும் உற்பத்தித் துறையிலேயே இருத்தி வைக் கப்பட்டிருக்கிறது, திறனுடை-மூலதன வடிவிலேயே இருக்கும் படி கட்டுண்டுள்ளது. உற்பத்திக் காலம், சுற்றோட்டக் காலம் இவை இரண்டும் சேர்ந்ததே மூலதனப் புரள்வுக் காலம் [time of turnover]. எனவே உற்பத்திக் காலம் [time of production] நீளும் போதும், அதே போல் சுற்றோட்டக் காலம் [time of circulation] நீளும் போதும், புரள்வு வேகம் குறைகிறது. இங்கு நாம் பரிசீலிக்கும் உதா ரணத்தில் பின்வரும் இரு விவரங்கள் குறிப்பிடத்தக்கவை:

*முதலாவதாக:* உற்பத்தித் துறையில் [sphere of production] நெடுங் காலம் இருத்தல். உழைப்பு, கச்சாப் பொருள் முதலானவற்றுக்காக முதல் வாரத்தில் முன்னீடு செய்யப்படும் மூலதனமும் நிலை-மூல தனத்தால் உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படும் மதிப்புப் பகுதி களும் முழுதாக மூன்று மாத கரலத்துக்கு உற்பத்தித் துறையில் இருத் தப்பட்டு விடுகின்றன; உருவாகிக் கொண்டிருக்கிற, அதாவது இன்னும் பூர்த்தியாகாத உற்பத்திப் பொருளில் இணைக்கப்பட்டிருப்ப தால் இவை சரக்குகளாக சுற்றோட்டத் துறைக்குள் செல்ல முடியாது.

*இரண்டாவதாக:* உற்பத்திச் செயல் முடிவதற்கு வேண்டிய வேலைக் கால்ம் மூன்று மாதம் ஆவதாலும், விடாத்தொடர்ாய் இணையும் உழைப்பு நிகழ்முறையாக அமைவதாலும், ஏற்கெனவே இருந்து வரும் சுழல்-மூலதனத்தோடு வாரம் தோறும் புதிய தொகை ஒன்றைச் சேர்த்து வர வேண்டியிருக்கிறது. இப்படி மேலும் மேலும்

முன்னீடு செய்யப்படும் கூடுதல் மூலதனத்தின் மொத்தத் தொகை யானது வேலைக் கால அளவு நீள்வதைத் தொடர்ந்து மேலும் மேலும் அதிகரிக்கிறது.

நூற்பிலும் இயந்திரக் கட்டுமானத்திலும் சம அளவுள்ள மூல தனங்கள் முதலீடு செய்யப்படுவதாகக் கொள்வோம்; மாறா-மூல தனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்கும் இடையிலான விகிதம் ஒன்றெனக் கொள்வோம்; நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத் துக்கும் இடையிலான விகிதமும் ஒன்றென்போம். வேலை-நாளின் கால அளவும் ஒன்றெனக் கொள்வோம். ஆக, வேலைக் காலத்தின் அளவு தவிர எல்லா நிலைமைகளும் சமமெனக் கொள்கிறோம். முதல் வாரத்தில் இரண்டுக்கும் முதலீடு ஒன்றே; ஆனால் நூற் பாளர் இப்போது தமது உற்பத்திப் பொருளை விற்று, புதிய உழைப்புச் சக்தி, புதிய கச்சாப் பொருட்கள் முதலானவற்றை வாங்க முடியும்; சுருங்கச் சொல்லின், உற்பத்தியை அதே அளவு வீதத்தில் மீண்டும் தொடங்க முடியும். ஆனால் இயந்திர உற்பத்தி யாளர் அவரது உற்பத்திப் பொருள் பூர்த்தியாவதற்கான மூன்று மாத காலம் கழியும் வரை, முதல் வாரத்தில் முதலீடு செய்த சுழல்-மூலதனத்தைத் திரும்பப் பணமாக மாற்றி அதைக் கொண்டு மீண் டும் காரியங்கள் செய்ய முடியாது. அவரது உற்பத்திப் பொருள் பூர்த்தியாவதற்கு வேண்டிய மூன்று மாத காலம் வரை அவர் காத் திருந்தாக வேண்டும். இவ்விதம் முதலாவதாக, முதலீடு செய்யப் படும் மூலதனத்தின் ஒத்த அளவுகள் திரும்பி வருவதற்கு ஆகும் காலம் இருவருக்கும் வேறுபடுகிறது. இரண்டாவதாக, நூற்பு, இயந்திர உற்பத்தி இவை இரண்டிலும் இம்மூன்று மாதங்களில் ஈடு படுத்தப்படும் திறனுடை-மூலதனம் ஒரே அளவுடையதாய் இருந்த போதிலும், நூல் உற்பத்தியாளரது மூலதன முதலீட்டின் பருமன் இயந்திர உற்பத்தியாளரது மூலதன முதலீட்டின் பருமனிலிருந்து வெகுவாய் வேறுபடுகிறது. ஏனென்றால் முதலாமவரைப் பொறுத்த வரை அவரது மூலதனம் துரிதமாய் மாற்றீடு செய்யப்படுவதால், இதைக் கொண்டே திரும்பவும் அவர் நூலை உற்பத்தி செய்ய முடி கிறது; இரண்டாமவரைப் பொறுத்த வரை மூலதனத்தின் மாற்றீடு ஒப்பளவில் மெதுவாக நடைபெறுவதால், இம்மாற்றீடு நடந்தேறும் காலம் வரை, ஏற்கெனவே இருப்பதோடு புதிதாய் அவர் மேலும் மேலும் மூலதனம் போட வேண்டியிருக்கிறது. இவ்விதம் இங்கே வேறுபடுவது அந்தந்த மூலதன பாகமும் மாற்றீடு செய்யப்படுவதற்கு ஆகும் காலத்தின் அளவு அல்லது மூலதனம் முன்னீடு செய்யப் பட வேண்டிய காலத்தின் அளவு மட்டுமல்ல; (அந்தந்த நாளும் அல்லது அந்தந்த வாரமும் ஈடுபடுகிற மூலதனத்தின் அளவு ஒன்றேதான் என்ற போதிலும்) உழைப்பு நிகழ்முறையின் கால அளவுக்கு ஏற்ப முன்னீடு செய்தாக வேண்டிய மூலதனத்தின் அளவும் வேறுபடுகிறது. இந்த நிலைமை குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில் முன்னீடு செய்ய

வேண்டிய மூலதனத்தின் அளவு அதிகரிக்கும் படி நேராமலே முன்னீட்டுக் கால அளவு அதிகமாக்கப்படலாம் — அடுத்த அத்தியாயத்தில் தரப்படும் உதாரணங்கள் இதை நமக்குப் புலப்படுத்தும். ஆனால் இங்கே மூலதனம் அதிக காலத்துக்கு முன்னீடு செய்யப்பட வேண்டியிருப்பதோடு, அதிக அளவிலான மூலதனம் திறனுடை-மூலதனத்தின் வடிவில் இருத்தப்படுகிறது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி அவ்வளவாய் வளர்ந்திராத கட்டங்களில், நீண்ட வேலைக் காலமும், எனவே நீண்ட காலத்துக்கு அதிகமான மூலதன முதலீடும் தேவைப்படுகிற வேலைகள் — சாலை போடுதல், கால்வாய் வெட்டுதல் போன்றவை — குறிப்பாக அவற்றைப் பெருவீதத்தில்தான் நிறைவேற்ற முடியும் என்னும் போது, முதலாளித்துவ அடிப்படையில் செய்யப்படாமல். சமூகம் அல்லது அரசின் செலவிலேயே செய்யப்படுகின்றன (முற்காலத்தில், உழைப்புச்சக்தியைப் பொறுத்த வரை, பொதுவாகக் கட்டாய உழைப்பைக் கொண்டு செய்யப்பட்டன). அல்லது உற்பத்திக்கு நீண்ட வேலைக் காலம் தேவைப்படுகிறவை மிகக் குறைந்த அளவுக்கே முதலாளியின் தனிப்பட்ட நிதி வசதி கொண்டு தயாரிக்கப்படுகின்றன. வீடு கட்டுதலை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். வீடு யாருக்காகக் கட்டப்படுகிறதோ அந்தத் தனியாள் கட்டட ஒப்பந்தக்காரருக்கு முழுத் தொகையையும் முன்னீடு செய்வதில்லை, பகுதி பகுதியாகவே செலுத்துகிறார். இவ்விதம் அவர், உற்பத்தி நிகழ்முறை நிறைவேறுவதற்கு ஏற்ப பகுதி பகுதியாகவே வீட்டுக்கு விலை தருகிறார். ஆனால் முன்னேறிய முதலாளித்துவ சகாப்தத்தில், ஒரு புறம் பெரும் மூலதனங்கள் தனியாட்களின் கையில் குவிகின்றன; மறு புறம், தனிப்பட்ட முதலாளியுடன் கூடவே முதலாளித்துவக் குழுமங்களும் (கூட்டுப் பங்கு நிறுமங்களும்) தோன்றுகின்றன; அதே-போது கடன்-செலாவணி முறையும் வளர்ந்தோங்கி விடுகிறது. இந்நிலையில் முதலாளித்துவக் கட்டட ஒப்பந்தக்காரர் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே தனியாளது ஆணையின் பேரில் கட்டடம் கட்டுகிறார். இப்போதெல்லாம் சந்தைக்காக வேண்டிய வரிசை வரிசையாக வீடுகளையும் முழுமுழுக் குடியிருப்புகளையும் கட்டுவதே அவரது தொழிலாகி விடுகிறது — இருப்புப் பாதை போடுவது எப்படி ஒப்பந்தக்காரர்களாகி விடும் தனிப்பட்ட முதலாளிகளது தொழிலாகி விடுகிறதோ, அதே போல.

லண்டனில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி வீடு கட்டும் தொழிலைப் புரட்சிகரமாக மாற்றியமைத்து விட்டது. கட்டட முதலாளி ஒருவர் 1857ஆம் வருடத்திய வங்கிக் குழுவின் முன்னால் அளித்த சாட்சியத்திலிருந்து இதை அறியலாம். தாம் வாலிபராக இருந்த போது, கட்டடங்கள் பொதுவாக ஆணையின் பேரில்தான் கட்டப்பட்டன என்றும், கட்டட வேலையின் குறிப்பிட்ட கட்டங்கள் நிறைவடைகையில் ஒப்பந்தக்காரருக்கு அந்தந்தக் கட்டத்துக்குமான

தவணை செலுத்தப்பட்டது என்றும் அவர் கூறினார். ஊக வாணிப முறையில் கட்டடம் கட்டுவது அன்று அரிதாகவே இருந்தது. பிரதானமாய்த் தமது ஆட்களுக்குத் தொடர்ந்து வேலை கொடுப்பதற்கும் இவ்வாறு அவர்களை ஒன்றாக வைத்துக் கொள்வதற்குமே ஒப்பந்தக்காரர்கள் இதற்குச் சம்மதிப்பது வழக்கம். கடந்த நாற்பதாண்டு காலத்தில் இதெல்லாம் மாறி விட்டது. இப்போது ஆணையின் பேரில் கட்டடம் கட்டுவது அநேகமாய்க் கிடையாது எனலாம். புதிய வீடு வேண்டுமென விரும்புகிற எவரும், ஊக வாணிப முறையில் கட்டப்பட்டவற்றிலிருந்து, அல்லது இன்னமும் கட்டப் பெற்று வருகிறவற்றிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். வாடிக்கையாளருக்காகக் கட்டுவது போய் சந்தைக்காகக் கட்டுவது வழக்கமாகி விட்டது. கட்டட முதலாளியும் ஏனைய தொழில் துறை முதலாளிகளைப் போல் உற்பத்திப் பொருளைப் பூர்த்தி செய்து விற்க வேண்டியதாகி விட்டது. முன்பெல்லாம் கட்டட முதலாளி ஊக வாணிப முறையில் விற்பதற்காக ஏககாலத்தில் மூன்று அல்லது நான்கு வீடுகளைக் கட்டி வந்தார். இப்போதோ பெரும் பரப்பை விலைக்கு வாங்கி (கண்டத்து வழக்கில் சொல்வதானால், 99 ஆண்டு காலத்துக்குக் குத்தகைக்கு எடுத்து) அதில் 100 முதல் 200 வீடுகள் கட்டியாக வேண்டும். இவ்வாறு அவர் தம்மிடம் இருப்பதைக் காட்டிலும் இருபது முதல் ஐம்பது மடங்கு அதிக மதிப்புள்ள தொழில் முயற்சியில் இறங்கியாக வேண்டும். அடமானம் வைத்துப் பணம் திரட்டுகிறார்கள். கட்டடங்கள் எழ எழ பணம் ஒப்பந்தக்காரரின் கைக்கு வருகிறது. அப்போது பொருளாதார நெருக்கடி [crisis] மூண்டு, முன்பணத் தவணைகள் தரப்படாமல் தடைபட்டால், பொதுவாக அம்முயற்சி முடங்கி விடுகிறது. முடியுமானால், வீடுகளைக் கட்டி முடிக்காமல், நல்ல காலம் திரும்பட்டுமெனக் காத்திருக்க வேண்டும். இல்லையேல், ஒன்றுக்கு பாதி அடக்க-விலைக்கு அவற்றை ஏலத்துக்கு விட வேண்டியதுதான். ஒப்பந்தக்காரர் எவரும் இன்று ஊக வாணிபத்தில் ஈடுபட்டு, அதுவும் பெரிய அளவில் ஈடுபட்டு வீடு கட்டினாலன்றி பிழைப்பதற்கில்லை. வீடு கட்டுவதால் மட்டும் கிடைக்கும் இலாபம் மிகச் சொற்பம். நில-வாடகையை [ground-rent] உயர்த்திச் செல்வதாலும், வீட்டு மனைகளுக்கான பரப்பைத் தக்கபடி தேர்ந்தெடுத்து அதைத் திறம்படப் பயன்படுத்துவதாலும்தான் அவர் தமது இலாபத்தின் மிகப் பெரிய பகுதியைப் பெறுகிறார். வீடுகளுக்கான வேண்டலை முன்னதாகவே ஊகித்துச் செயல்படும் இந்த ஊக வாணிப முறையில்தான் பெல்கிரேவியா, டைபர்னியா ஆகிய வட்டங்களைச் சேர்ந்த மிகப் பெருவாரியான பகுதிகளும் லண்டன் சுற்றுவட்டாரங்களில் ஆயிரம் ஆயிரமாய் இருக்கும் குடியிருப்புகளும் கட்டப்பெற்றுள்ளன. (வங்கிச் சட்டங்கள் பற்றிய பொறுக்குக் குழுவின் அறிக்கையிலிருந்து தரப்படும் சுருக்கம், பகுதி I., 1857,

சாட்சியம், கேள்விகள் *5413-18; 5435-36.)*

மூலதனக் குவிப்பு [concentration of capital] குறிப்பிடத்தக்க வாறு மும்முரமடைந்தாக வேண்டும், அதோடு கடன்-செலாவணி முறையும் வளர்ந்து முதலாளி தமது சொந்த மூலதனத்தை முன்னீடு செய்து அபாயத்துக்கு உள்ளாக்குவதற்கு பதில் ஏனையோரது மூல தனத்தை முன்னீடு செய்து காரியம் புரியும் வசதியான வழியை அவருக்கு உண்டாக்கியாக வேண்டும் — அது வரை, நீண்ட வேலைக் காலமும் பெருவீதத்திலான உற்பத்திச் செயற்பாடுகளும் தேவைப் படும் தொழில்-முனைவுகளை [enterprises] மேற்கொண்டு நிறை வேற்றுதல் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் ஆட்சிக்கு முழு அளவுக்கு உட்படுவதில்லை. பொருளுற்பத்தியின் போது முன்னீடு செய்யப்படுகிற மூலதனம் அதைப் பயன்படுத்தும் முதலாளிக்குச் சொந்தமானதா இல்லையா என்பது புரள்வு வேகத்தையோ புரள்வுக் காலத்தையோ எவ்விதத்திலும் பாதிப்பதில்லை என்பதைக் கூறத் தேவையில்லை.

தனிப்பட்ட வேலை-நாளின் உற்பத்திப் பொருள் அதிகமா வதற்கு வழி செய்யும் நிலைமைகளான கூட்டு-வேலை [co-operat ion] , உழைப்புப் பிரிவினை [division of labour], இயந்திர சாதனப் பிரயோகம் போன்றவை அதே போது இணைந்த உற்பத்திச் செயல் களின் வேலைக் காலத்தைக் குறுக்குகின்றன. இவ்வாறு வீடுகள், பாலங்கள் போன்றவற்றைக் கட்டுவதற்கு ஆகும் காலத்தை இயந்திர சாதனங்கள் குறைக்கின்றன. தானியக் கதிர்களை அறுத்து இறுதி வடிவிலான உற்பத்திப் பொருளாக மாற்றுவதற்குத் தேவைப்படும் வேலைக் காலத்தை அறுவடை இயந்திரங்களும் கதிரடி இயந்திரங் களும் குறைக்கின்றன. கப்பல் கட்டுமானத் துறையில் ஏற்படும் மேம் பாட்டின் விளைவான கூடுதல் வேகம் கப்பல் தொழிலில் முதலீடு செய்யப்படும் மூலதனத்தின் புரள்வுக் காலத்தைக் குறைக்கிறது. ஆனால் வேலைக் காலத்தையும், ஆகவே சுழல்-மூலதனம் முன்னீடு செய்யப்பட வேண்டிய காலத்தையும் குறைக்கும் மேம்பாடுகளுடன் கூடவே, பொதுவாக நிலை-மூலதனத்தின் முதலீடு அதிகமாகிறது. குறிப்பிட்ட சில உற்பத்திக் கிளைகளில் கூட்டு-வேலையை விரிவு படுத்துவதன் மூலமே வேலைக் காலத்தைச் சுருக்கி விடலாம். பெரும் தொழிலாளர்-பட்டாளங்களை ஏவி விட்டு ஒரே நேரத்தில் பல இடங்களில் வேலை நடைபெறச் செய்வதன் மூலம் இருப்புப் பாதை துரிதமாய்ப் பூர்த்தியாகிறது. இங்கே முன்னீடு செய்யப்படும் மூலதனத்தை அதிகமாக்குவதன் மூலம் புரள்வுக் காலம் குறைக்கப் படுகிறது. முன்னிலும் அதிகமான உற்பத்திச் சாதனங்களும் முன் னிலும் அதிகமான உழைப்புச் சக்தியும் முதலாளியின் கட்டுப்பாட் டில் ஒன்றுசேர்க்கப்பட வேண்டும்.

வேலைக் காலம் குறுகுவதானது இவ்வாறு பெரும்பாலும் இந்தக் குறுகிய காலத்துக்காக முன்னீடு செய்யப்படும் மூலதனம் அதிகரிப்ப

துடன் தொடர்புடையதாக இருக்கிறது. முன்னீட்டுக் காலம் [term of advance] குறுகக் குறுக முன்னீடு செய்யப்படும் மூலதனம் மேலும் மேலும் அதிகமாகிறது. ஆனால் இங்கு ஒன்றை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும். தற்போதுள்ள சமுதாய மூல தனம் எவ்வளவு என்பதல்ல பிரச்சினை. உற்பத்திச் சாதனங்களும் வாழ்வுச் சாதனங்களும், அல்லது அவற்றைச் செலவிடுவதற்கான உரிமைத் தகுதிகள் எந்த அளவுக்குச் சிதறுண்டோ ஒன்றுகுவிந்தோ இருக்கின்றன என்பதே, அதாவது மூலதனங்களின் ஒன்றுகுவிப்பு ஏற்கெனவே எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதே இங்கு தீர்மானகர விவரமாகும். கடன்-செலாவணியானது மூலதனக் குவிப்பைத் தூண்டி விட்டும் துரிதப்படுத்தியும் தீவிரமாக்குவதால், அது வேலைக் காலமும், ஆகவே புரள்வுக் காலமும் குறுகுவதற்குத் துணை புரிகிறது.

வேலைக் காலம் விடாத்தொடராய் இருந்தாலும் இல்லாவிட்டாலும் குறிப்பிட்ட சில இயற்கை நிலைமைகளால் நிர்ணயிக்கப் பட்டு விடுகிற உற்பத்திக் கிளைகளில், மேற்கூறிய வழிகளில் அது குறுகி விட முடியாது. வி. வால்டர் குட் அரசியல், வேளாண்மை, வாணிபப் பொய்க் கூற்றுகள் என்ற நூலில் (லண்டன், 1866, பக்கம் 325) கூறுகிறார்: ''துரிதகதியிலான வரவுகளுக்குத் தானியப் பயிர்த் தொழிலில் இடமில்லை, இங்கு ஆண்டுக்கு ஒரு தரம்தான் வரவு பெற முடியும். கால்நடைகளைப் பொறுத்த வரை, இரண்டு வயது, மூன்று வயது ஆடுகளின் வரவையும் நான்கு வயது, ஐந்து வயது எருதுகளின் வரவையும் துரிதப்படுத்துவது எப்படி? என்று கேட்டாலே போதும்.''

உடனடியாக ரொக்கப் பணம் அவசியமாகி விடும் போது (எடுத்துக்காட்டாக, கட்டாயம் செலுத்த வேண்டிய வரி, நில-வாடகை முதலியவற்றுக்காகப் பணம் தேவைப்படும் போது) இந்தப் பிரச்சினை எப்படித் தீர்க்கப்படுகிறது பாருங்கள். உதாரணமாய், பொருளாதார நோக்கில் முறையான வயதை அடையும் முன்பே கால்நடைகள் விற்கப்படுகின்றன; அல்லது கசாப்புக்கு அனுப்பப்படுகின்றன. இதனால் வேளாண்மைக்குப் பெருந்தீங்கு விளைகிறது. அதோடு, முடிவில் இறைச்சி விலையும் ஏறி விடுகிறது. ''பிரதானமாக, கோடை காலத்தில் மிட்லாந்து மாவட்டங்களின் மேய்ச்சல் வெளிகளுக்கும் குளிர் காலத்தில் கிழக்கத்திய மாவட்டங்களின் தொழுவங்களுக்கும் வழங்குவதற்காக கால்நடைகளை வளர்த்து வந்துள்ளவர்கள்...தானிய விலைகள் கீழ் மட்டத்தில் இருப்பதாலும், இவற்றின் போக்கு நிச்சயமற்றதாய் இருப்பதாலும் திண்டாடும் படி ஆகியுள்ளது. வெண்ணெய், பாலாடைக் கட்டி ஆகியவற்றின் விலை உயர்நிலையில் இருப்பதை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளத் தயாராயிருக்கிறார்கள். நடப்புச் செலவுகளை சமாளிப்பதற்காக வெண்ணெயை சந்தைக்கு எடுத்துச் செல்கிறார்கள்; பாலாடைக்

கட்டியைத் தரகரிடம் கொடுக்கிறார்கள். எடுத்துச் செல்ல ஏற்றதாய் இருந்தால்தான் தரகர் ஏற்றுக் கொள்கிறார்; அவர் வைத்ததுதான் விலை. இந்நிலைமைகளால் ஏற்பட்டிருக்கும் விளைவு என்ன? பண்ணைத் தொழிலும் அரசியல் பொருளாதாரக் கோட்பாடு களால்தான் ஆளப்படுகிறது என்பதை நினைவில் கொண்டாக வேண்டும். பால் பண்ணைத் தொழிலில் ஈடுபடும் மாவட்டங்களி லிருந்து வழக்கமாய்த் தென் பகுதிக்கு வளர்ப்பதற்கென்று வந்து கொண்டிருந்த ஏராளமான கன்றுகள் இப்போது பர்மிங்காமிலும் மான்செஸ்டரிலும் லிவர்பூலிலும் அண்டைப்புறப் பெருநகரங்களி லும் கசாப்புக் கொட்டடிகளில், சில சமயம் ஒரு வாரம் அல்லது பத்து நாள் வயதிலேயே பலியிடப்படுகின்றன. ஆனால் மால்ட் மாவு வரிவிலக்கு பெற்றிருந்தால், சாகுபடியாளர்களுக்குக் கிடைக்கும் இலாபம் அதிகரித்திருக்கும்; வயது கூடி எடையும் கூடும் வரை கன்றுகளை அவர்களால் பராமரிக்க முடிந்திருக்கும். அது மட்டு மல்ல; பசு மாடு இல்லாமல் கன்று வளர்ப்பவர்கள் பாலுக்குப் பதிலியாக மால்ட் மாவைப் பயன்படுத்தியிருப்பார்கள்; தற்போது நாட்டில் கன்றுகளின் பயங்கரப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதை இவ்வழியில் பெரும்பாலும் தவிர்த்திருக்க முடியும். கன்றுகளை வளர்க்குமாறு கூறப்படும் பரிந்துரைகளுக்கு இப்போது இந்தச் சிறு சாகுபடியாளர்கள் தரும் பதில் இதுதான்: 'பால் கொடுத்து வளர்ப் பதன் பலன்களை நாங்கள் நன்கறிவோம். ஆனால் முதலில் எங்கள் கைக்காசை இதற்குச் செலவிட்டாக வேண்டும். நாங்கள் இதைச் செய்வதற்கில்லை. அதோடு, பலன் கிடைக்க நெடுங்காலம் காத் திருந்தாக வேண்டும். இதற்கு பதில் பால் பண்டங்கள் தயாரித்து விற்றோமானால் உடனுக்குடன் கைமேல் பலன் கிடைக்கும்.''' (மேலது, பக்கம் 11, 12.)

புரள்வுக்குக் காலம் நீண்டு செல்வதால் ஆங்கிலேயச் சிறு சாகு படியாளர்களுக்கே இப்படிக் கடுமையான விளைவுகள் ஏற்படு மாயின், கண்டத்து நாடுகளின் சிறு விவசாயிகளுக்கு இதனால் எம் மாதிரியான சீர்குலைவு ஏற்படும் என்பதை எளிதில் ஊகித்துக் கொள்ளலாம்.

வேலைக் காலம் எவ்வளவுக்கு எவ்வளவு நீண்டு செல்கிறதோ, சுற்றியோடத் தக்கதான சரக்கு அதன் பூர்த்தியான வடிவை அடை வதற்கு வேண்டிய காலமும் இவ்விதம் எவ்வளவுக்கு எவ்வளவு நீண்டு செல்கிறதோ, நிலை-மூலதனத்தால் உற்பத்திப் பொருளுக்கு அடுக்கடுக்காய்ப் பெயர்க்கப்படுகிற மதிப்புப் பகுதியும் அவ்வளவுக்கு அவ்வளவு திரண்டு செல்கிறது. இப்படித் திரளும் மதிப்புப் பகுதி திரும்பி வந்து சேருவதும் அவ்வளவுக்கு அவ்வளவு தாமதமாகி விடுகிறது. ஆனால் இப்படித் தாமதமாவதால் நிலை-மூலதனம் புதிதாய் முதலீடாகும் படி நேருவதில்லை. இயந்திரத்தின் தேய் மானத்துக்கான மாற்றீடு பண வடிவில் திரும்பி வருவது மெதுவாக

நடைபெறினும் வேகமாக நடைபெறினும், இயந்திரம் உற்பத்தி நிகழ் முறையில் தொடர்ந்து ஈடுபட்டு இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் சுழல்-மூலதனத்தின் விவகாரம் வேறு விதமானது, வேலைக் காலம் நீள்வதற்கு ஒப்ப இம்மூலதனமும் அதிக காலத்துக்குக் கட்டுண்டு விடுவது மட்டுமல்லாமல், கூலியாகவும் கச்சாப் பொருளாகவும் துணைப் பொருளாகவும், மேலும் மேலும் தொடர்ந்து புதிய மூலதனம் முன்னீடு செய்யப்பட்டாக வேண்டும். வரவாகத் திரும்பி வரத் தாமதமாவதால் ஏற்படும் விளைவு வெவ்வேறு வகை மூலதனத்துக்கும் வெவ்வேறு விதமாய் இருக்கிறது. வரவாகத் திரும்பி வருதல் துரிதமாக நடந்தேறினாலும் மெதுவாக நடந்தேறினாலும் நிலை-மூலதனம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் சுழல்-மூலதனம் வரவாகத் திரும்புதல் தாமதப்படுமாயின் விற்கப்படாத உற்பத்திப் பொருளாய் அல்லது பூர்த்தியாகாததால் விற்கப்பட முடியாத உற்பத்திப் பொருளாய் சுழல்-மூலதனம் முடங்கி விடுகிறது; பண்ட வகையில் அதனை மாற்றீடு செய்வதற்குக் கையில் கூடுதல் மூலதனம் இல்லையேல், அதனால் செயல்பட முடியாமற் போகிறது.

''உழுது பயிரிடும் விவசாயி பசியால் வாடுகிறார், அதே போது அவரது மாடுகள் குறை ஏதுமின்றிக் கொழுத்திருக்கின்றன. கிராமத்தில் முறை தவறாமல் மழை பெய்ததால், தீவனம் வேண்டிய மட்டும் கிடைக்கிறது. பருத்த காளை பக்கத்திலிருக்க, இந்து விவசாயி பட்டினியால் மடியவும் தயாராயிருக்கிறார். மூட நம்பிக்கைகளின் விதிமுறைகள் தனியாளுக்கு வேண்டுமானால் கொடுமை மிக்கனவாய்த் தெரியலாம், ஆனால் சமுதாயத்தை அவை பேணிக்காப்பவை. உழைக்கும் கால்நடைகளின் பராமரிப்பு பயிர்த் தொழிலின் சக்தியையும் வருங்கால வாழ்வுக்கும் வளமைக்குமான ஆதாரங்களையும் பாதுகாக்கிறது. இது இரக்கமற்றதாகவும் துயரம் வாய்ந்ததாகவும் தொனிக்கலாம். ஆயினும் இந்தியாவில் ஒரு மனிதனை இழந்தால் ஓரளவு எளிதாய் ஈடுசெய்ய முடிகிறது. ஒரு காளையை இழந்தால் அவ்வளவு எளிதாய் ஈடுசெய்ய முடியவில்லை.'' (தகவலறிக்கை, கிழக்கு இந்தியா. சென்னை-ஒரிசாப் பஞ்சம். எண் 4, பக்கம் 44.) மனவ தர்ம சாஸ்திரம்,* அத்தியாயம் X., விதி 62இல் கூறப்படுவதுடன் மேற்சொன்னதை ஒப்பு நோக்கவும். ''அந்தணனையோ பசுவையோ காப்பாற்றும் பொருட்டு கைம்மாறு கருதாமலே உயிரைத்

* மனவ தர்ம சாஸ்திரம் அல்லது மனு நீதிச் சட்டங்கள் — மதம், நீதிநெறி, மற்றும் சடங்குகள் பற்றிய புராதன இந்திய விதித் தொகுப்பு. பிராமணியத்தின் நெறிமுறைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு இந்துவுக்குமுள்ள கடமைகளை இது வரையறுத்தது. மானுடத்தின் ஆதி முதல்வராகப் புராணத்தில் கூறப்படும் மனு இந்தச் சட்டங்களைத் தொகுத்தார் என்பது ஐதிகம். மார்க்ஸ் மேற்கோள் அளித்திடுவது பின்வரும் நூலிலிருந்து: *மனவ தர்ம சாஸ்திரம், அல்லது குல்லுகர் உரையின் வழியமைந்த மனு நீதி. சமயத் துறையிலும் குடியியல் துறையிலுமான கடமைகளது இந்திய நெறிமுறையும் அடங்கியது.* மூன்றாம் பதிப்பு. சென்னை, 1863, பக்கம் 281.— *ஆங்கிலப் பதிப்பாசிரியர்.*

துறப்பதால்...இழிகுலத்தில் பிறந்தோரும் சொர்க்கம் அடையலாம்.''

ஐந்து வயதுப் பிராணியை வளர்த்து அனுப்ப ஐந்து ஆண்டுகள் தேவைதான். குறிப்பிட்ட சில வரம்புகளுக்குள் செயல்முறையை மாற்றி அவற்றைக் குறுகிய காலத்தில் அவற்றின் இறுதி நிலையை வந்தடையச் செய்வது சாத்தியமே. இதைத்தான் பேக்வெல் சாதித்தார். பிரெஞ்சு ஆடுகள் 1855 வரையிலும் இருந்தது போலத்தான் ஆங்கிலேய ஆடுகள் முன்பெல்லாம் நான்கு அல்லது ஐந்து வயதாகும் வரை கசாப்புக்கு லாயக்கற்றவையாய் இருந்தன. பேக்வெல் கையாண்ட முறையின் படி, ஆடுகளை ஒரு வயதிலேயே கொழுக்க வைத்து விடலாம். எப்படியும் இரண்டு வயது பூர்த்தியாவதற்கு முன்பே ஒவ்வொன்றும் முழு வளர்ச்சி அடைந்து விடுகிறது. டிஷ்லி கிராஞ்சு சாகுபடியாளரான பேக்வெல் கவனமான தேர்வு முறையின் மூலம் ஆடுகளின் எலும்புக் கூட்டை அவை உயிரோடிருப்பதற்கு அவசியமான குறைந்தபட்ச அளவுக்குக் குறுகச் செய்தார். அவரது ஆடுகள் நியூ லீசெஸ்டர் ஆடுகள் எனப் பெயர் பெறலாயின. ''...வளர்ப்பாளர் முன்பு ஓர் ஆட்டைத் தயார் செய்யத் தேவைப்பட்ட அதே காலத்தில், இப்போது மூன்றைத் தயாரித்து சந்தைக்கு அனுப்ப முடிகிறது, உயரத்தில் அவை கட்டையானவை என்றாலும் அகலத்தில் பெருத்தும் உருண்டும் திரண்டும் இருக்கின்றன. அதிக இறைச்சி கிடைக்கும் உடற் பகுதிகளில் அவை கூடுதல் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. எலும்பைப் பொறுத்த வரை, அவற்றைத் தாங்குவதற்கு அவசியம் இருந்தாக வேண்டியதை விட சிறிதளவும் அதிகமாய் இல்லை. அநேகமாய் அவற்றின் எடை முழுவதுமே இறைச்சியின் எடைதான்.'' (*லவெர்ன், இங்கிலாந்து... கிராமப் பொருளாதாரம்,* 1855, பக்கம் 20.)

வேலைக் காலங்களைக் குறுக்கும் முறைகள், பல்வேறு தொழிற்கிளைகளுக்கும் பல்வேறு அளவில் பொருந்தக் கூடியவை. வெவ்வேறு வேலைக் காலங்களிடையிலான கால வேறுபாடுகள் இம்முறைகளால் நீங்கி விடுவதில்லை. முன்பு நாம் பரிசீலித்த அதே உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். ஓர் இழுபொறியை நிர்மாணிப்பதற்குத் தேவைப்படும் வேலைக் காலம் புதிய இயந்திரக் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் அறுதியாகக் குறுக்கப்படலாம். ஆனால் அதே போது பருத்தி நூற்பாலையால் தினந்தோறும் அல்லது வாரந்தோறும் பூர்த்தியான வடிவில் தயாரித்தளிக்கப்படும் உற்பத்திப் பொருளின் அளவு மேம்பட்ட செய்முறைகளைக் கொண்டு இன்னும் துரிதமாக அதிகரிக்குமானால், நூற்பு வேலைக் காலத்துடன் ஒப்பிடுமிடத்து இயந்திரக் கட்டுமான வேலைக் காலம் ஒப்பளவில் முன்னிலும் நீண்டதாகி விடுகிறது.

## அத்தியாயம் XIII

# உற்பத்திக் காலம்

எப்போதுமே வேலைக் காலம் உற்பத்திக் காலமாகும், அதாவது மூலதனம் உற்பத்தித் துறையில் இருத்தப்பட்டிருக்கும் காலமாகும். ஆனால் இதை எதிர்மாறாகப் புரட்டிச் சொல்ல முடியாது; ஏனெனில் உற்பத்தி நிகழ்முறையில் மூலதனம் ஈடுபட்டிருக்கும் காலம் எல்லாம் வேலைக் காலமாக இருந்தாக வேண்டியதில்லை.

இங்கே நாம் குறிப்பிடுவது இயற்கையாகவே உழைப்புச் சக்திக்குள்ள தடை வரம்புகளால் உழைப்பு நிகழ்முறையில் இடைநிறுத்தங்கள் அவசியமாகி விடுவதை அல்ல. நிலை-மூலதனமாகிய ஆலைக் கட்டடங்களும் இயந்திர சாதனங்களும் பிறவும் உழைப்பு நிகழ்முறை நின்று போனதும் செயலற்று ஓய்ந்து விடும் இந்த நிலைமையானது உழைப்பு நிகழ்முறையை இயற்கைக்கு ஒவ்வாதவாறு நீட்டிச் செல்லும் படியும், ஓயாமல் இரவு பகலாய் வேலையை நடத்திச் செல்லும் படியும் தூண்டுகிற காரணங்களில் ஒன்றாயிருப்பதை முன்பே நாம் கண்ணுற்றோம்* என்றாலும், இங்கு நாம் குறிப்பிடுகிறவை இம்மாதிரியான இடைநிறுத்தங்கள் அல்ல. உழைப்பு நிகழ்முறையின் நீளத்தைச் சாராமல், உற்பத்திப் பண்டத்தின் தன்மையாலும் அதன் செய்முறையாலும் அவசியமாகி விடும் இடைநிறுத்தங்களையே இங்கு நாம் பரிசீலிக்கிறோம். பண்டத்தினது உற்பத்தியின் போது உழைப்பின் இலக்குப் பொருள் அதிகமாகவோ குறைவாகவோ நீண்டு செல்லும் காலத்துக்கு இயற்கையின் நிகழ்முறைகளுக்கு உள்ளாகி பௌதிக, வேதியியல், உடலியல் மாற்றங்கள் அடைய வேண்டியிருப்பதால், இக்காலத்தின் போது உழைப்பு நிகழ்முறை முற்றாகவோ பகுதியளவிலோ நிறுத்தப்படுகிறது.

எடுத்துக்காட்டாக திராட்சையைப் பிழிந்து சாறாக்கியதும் சிறிது காலம் அது புளித்து நொதித்தாக வேண்டும். அதன்பின் அது பக்குவநிலை அடைந்து தேறலாவதற்கு மேலும் காத்திருந்தாக

---

* *பார்க்கவும்: கார்ல் மார்க்ஸ், மூலதனம், முதல் பாகம், பக்கம் 349-358. — பதிப்பாசிரியர்.*

வேண்டும். பல தொழில்களில் உற்பத்திப் பொருள் உலர்ந்தாக வேண்டியுள்ளது—உதாரணம் மண்பாண்டத் தொழில். அல்லது உற்பத்திப் பொருளின் இரசாயன இயல்புகளை மாற்றும் பொருட்டு குறிப்பிட்ட நிலைமைகளுக்கு அதனை உட்படுத்தியாக வேண்டும்—உதாரணம் வெளுத்து வெள்ளையாக்குதல். குளிர் பருவத் தானியப் பயிர் முற்றுவதற்கு சுமார் ஒன்பது மாதமாகிறது. விதைப்பதற்கும் அறுப்பதற்கும் இடைப்பட்ட காலத்தில் உழைப்பு நிகழ்முறை பெருமளவுக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது. வெட்டு மரங்கள் வளர்ப்பதில், விதைப்பும் பூர்வாங்க வேலைகளும் முடிந்த பிறகு, முழு மரமாகி உற்பத்திப் பொருளாவதற்கு சுமார் 100 ஆண்டு ஆகிறது; அந்தக் காலம் முழுக்க உழைப்புச் செயற்பாடு ஒப்பளவில் மிகச் சொற்பமாகவே தேவைப்படுகிறது.

இந்த உதாரணங்கள் யாவற்றிலும் உற்பத்திக் காலத்தில் பெரும் பகுதியின் போது எப்போதாவதுதான் கூடுதலாய் உழைப்பு தேவைப்படுகிறது. உற்பத்தி நிகழ்முறையில் ஏற்கெனவே ஈடுபட்டு வருவதற்கு மேல் கூடுதல் மூலதனமும் உழைப்பும் வேண்டியிருக்கும் நிலைமை, சென்ற அத்தியாயத்தில் விவரிக்கப்பட்ட இந்த நிலைமை இங்கே குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே எழுகிறது.

இவ்விதம் இந்த உதாரணங்கள் யாவற்றிலும், முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் உற்பத்திக் காலம் இரு கூறுகளைக் கொண்டது. மூலதனம் உழைப்பு நிகழ்முறையில் ஈடுபட்டிருப்பது முதற் கூறு; பூர்த்தியாகாத உற்பத்திப் பொருளாய் நிலவும் அது உழைப்பு நிகழ்முறையில் இல்லாமல் இயற்கை நிகழ்முறைகளுக்கு உள்ளாகும்படி விடப்பட்டிருப்பது இரண்டாம் கூறு. இந்த இரு கூறுகளும் சில சமயம் ஒன்றினுள் ஒன்று குறுக்கிட்டும் குடைந்தும் செல்வதுண்டு என்றாலும், நிலைமையில் அதனால் மாற்றம் ஏதும் இல்லை. இந்த உதாரணங்கள் யாவற்றிலும் வேலைக் காலமும் உற்பத்திக் காலமும் ஒன்றித்து விடுவதில்லை. வேலைக் காலத்தைக் காட்டிலும் உற்பத்திக் காலம் நீண்டதாகும். உற்பத்திக் காலம் முடிவுறும் வரை உற்பத்திப் பொருள் பூர்த்தியடைந்து தயார் நிலையை அடைவதில்லை; அதாவது திறனுடை-மூலதன வடிவத்திலிருந்து சரக்கு-மூலதன வடிவத்துக்கு மாறும் தகுதி உடையதாவதில்லை. ஆதலால் புரள்வுக் காலத்தின் அளவு வேலை நேரம் நீங்கலான உற்பத்திக் காலத்தின் அளவுக்கு ஒத்த வீதத்தில் அதிகரிக்கிறது. உற்பத்திக் காலம் வேலைக் காலத்தை விட எவ்வளவு அதிகம் என்பதை நிர்ணயிப்பவை இயற்கை விதிகளாய்—தானியப் பயிர் முற்றுதல், ஓக் மரம் வளர்ந்து பெரிதாதல் போன்றவற்றை ஆளுகிற விதிகளை ஒத்த முற்றும் முடிவான இயற்கை விதிகளாய்—இல்லாத வரை, உற்பத்திக் காலத்தை செயற்கையான முறையில் குறைத்து புரள்வுக் காலத்தைக் குறுக்குவது பல சந்தர்ப்பங்களில் சாத்தியமாகிறது. புல்வெளியில் உலர்த்தி வெளுக்க வைப்பதற்கு பதில் புதிய இரசாயன முறையைக்

கையாளுவதையும் அதிகத் திறனுடன் செயல்படும் உலர்த்தும் பொறிகளைப் பயன்படுத்துவதையும் உதாரணமாகக் குறிப்பிட லாம். தோல் பதனிடும் தொழிலை எடுத்துக் கொண்டால், பதனிடும் அமிலம் தோல்களில் ஊடுருவ முன்பெல்லாம் ஆறு முதல் பதி னெட்டு மாதங்கள் ஆயின; காற்றடிக்கும் பொறியைப் பயன்படுத்தும் புதிய முறையைக் கையாண்டு இப்போது ஒன்றரை முதல் இரண்டு மாதத்தில் இது முடிக்கப்படுகிறது. (மூா. கு. குர்சேல்-செனாவில், *Traite theorique et pratique des enterprises industrielles, etc.*, பாரிஸ், 1857, 2ஆம் பதிப்பு.) முற்றிலும் இயற்கை நிகழ்முறை களுக்காகச் செலவாகும் உற்பத்திக் காலமானது செயற்கை முறை கள் புகுத்தப்படுவதால் வெகுவாகக் குறைக்கப்படுவதற்கு இரும்பு உற்பத்தியின் வரலாறு, முக்கியமாய் தேனிரும்பை உருக்காக மாற் றும் செய்முறையின் கடந்த 100 ஆண்டு கால வரலாறு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். கலக்கிக் குழப்பி உருக்காக்கும் முறை [pudding process] 1780ஆம் ஆண்டு வாக்கில் கண்டுபிடிக்கப் பட்ட பின் நவீன பெஸ்ஸமர் முறையும் [Bessemer process ] அதன் பின் மேலும் புதிய முறைகளும் இந்த 100 ஆண்டுகளில் நடைமுறைக்கு வந்துள்ளன. இவற்றால் உற்பத்திக் காலம் பிரமாத மாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நிலை-மூலதன முதலீடும் இதற்கு ஏற்றாற்போல் அதிகமாகியுள்ளது.

அமெரிக்காவில் பாத அணி அச்சுக் கட்டை தயாரிக்கும் தொழில், உற்பத்திக் காலமும் வேலைக் காலமும் வெவ்வேறாக இருப்பதற்கு ஒரு விசேஷ எடுத்துக்காட்டாகும். இங்கே திறனிலாச் செலவில் [unproductive costs] கணிசப் பகுதியானது, அச்சுக் கட்டைகள் பிறபாடு வளைந்து போகாதிருக்கும் பொருட்டு, மரத் துண்டுகள் நன்றாகக் காயும் வரை, குறைந்தது பதினெட்டு மாதம் அவற்றை அப்படியே வைத்திருக்க வேண்டியிருப்பதால் ஏற்படு வதாகும். போதிய அளவுக்குக் காயுமுன் மரத் துண்டுகள் எவ்வித உழைப்பு நிகழ்முறைக்கும் உட்படுவதில்லை. ஆகவே, முதலீடாகி யுள்ள மூலதனத்தின் புரள்வுக் காலம் அச்சுகளின் உற்பத்திக்குத் தேவைப்படும் காலத்தால் மட்டும் அல்லாமல், முதலீடானது காய்ந்து வரும் மரத் துண்டுகளாக உற்பத்தித் திறனற்றதாய் இருக் கின்ற காலத்தாலும் நிர்ணயிக்கப்படுகிறது. உற்பத்தி நிகழ்முறை ஆரம்பமாகி பதினெட்டு மாதம் ஆன பிறகே முதலீடு முறையான உழைப்பு நிகழ்முறைக்கு உள்ளாகிறது. மொத்தச் சுழல்-மூலதனத் தின் வெவ்வேறு பகுதிகளுடைய புரள்வுக் காலங்கள் சுற்றோட்டத் துறையிலிருந்து அல்லாமல் உற்பத்தி நிகழ்முறையிலிருந்து எழும் நிலைமைகள் காரணமாய் வேறுபடக் கூடும் என்பதும் இந்த உதா ரணத்திலிருந்து தெரிகிறது.

உற்பத்திக் காலத்துக்கும் வேலைக் காலத்துக்கும் இடையிலான வேறுபாடு வேளாண்மைத் துறையில் எடுப்பாய் வெளிப்படுகிறது.

நமது மிதவெப்ப நிலைமைகளில் ஆண்டுக்கு ஒரு போகமே தானியம் விளைகிறது. உற்பத்திக் காலத்தை (குளிர் காலத்தில் விதைக்கப்படும் தானியத்துக்கு சராசரியாக ஒன்பது மாதம்) குறுக்கு வதோ நீட்டுவதோ பருவங்கள் மாறி மாறி நன்றாகவும் மோசமா கவும் அமைவதைப் பொறுத்தது. ஆகவே, தொழில் துறையில் செய்வது போல் முன்கூட்டி இங்கு உற்பத்திக் காலத்தை நிர்ண யிக்கவும் கட்டுப்படுத்தவும் முடியாது. பால், பாலாடைக் கட்டி போன்ற துணைப் பண்டங்களை மட்டுமே ஒப்பளவில் குறுகிய காலத்தில் முறை தவறாமல் உற்பத்தி செய்யவும் விற்கவும் முடியும். ஆனால் வேலைக் கால விவரங்கள் பின் வருமாறு இருக்கின்றன: ''ஜெர்மனியின் பல்வேறு வட்டங்களிலும் வேலை-நாட்களின் எண்ணிக்கை—தட்பவெப்ப நிலைமைகளையும், இவ்வகையில் நிர்ணயிக்கும் படியான பிற நிலைமைகளையும் பொறுத்து—மூன்று பிரதான வேலைக் காலங்களிலும் பின்வருமாறு இருப்பதாகக் கொள்ளலாம்: மார்ச்சு பிற்பாதி அல்லது ஏப்ரல் தொடக்கம் முதல் மே நடுப் பகுதி வரையிலான வசந்த காலத்தில் 50 முதல் 60 வேலை-நாட்கள்; ஜூன் தொடக்கம் முதல் ஆகஸ்டு முடிவு வரை யிலான கோடை காலத்தில் 65 முதல் 80 வேலை-நாட்கள்; செப் டம்பர் தொடக்கம் முதல் அக்டோபர் முடிவு அல்லது நவம்பர் நடுப் பகுதி அல்லது முடிவு வரையிலான இலையுதிர் காலத்தில் 55 முதல் 75 வேலை-நாட்கள். குளிர் காலத்தில் உரம், மரம், சந்தைக் கான பண்டங்கள், கட்டடப் பொருட்கள் முதலானவற்றைக் கொண்டுவந்து சேர்ப்பது போன்ற, இப்பருவத்துக்குப் பொருத்த மான வேலைகள் மட்டும் நடைபெறும்.'' (பி. கிர்ச்சோஃப், *Handbuch der landwirtschaftlichen Betriebslehre,* Dessau, 1852, பக்கம் 160.)

தட்பவெப்ப நிலை எந்த அளவுக்கு பாதகமாய் இருக்கிறதோ, வேளாண்மைத் துறையில் வேலைக் காலம் அந்த அளவுக்கு நெரிசல் வாய்ந்ததாகவும், ஆகவே. மூலதனமும் உழைப்பும் செலவிடப்படும் காலம் அந்த அளவுக்குக் குறுகலாகவும் இருக்கும். ருஷ்யாவை உதாரணமாய்க் கொள்ளலாம். அந்நாட்டின் வட பகுதியில் சில வட்டங்களில் வேலையாண்டில் 130 முதல் 150 நாட்களுக்கு மட்டுமே வயல் வேலை சாத்தியம். ஆறு அல்லது எட்டு மாதம் நீடிக்கும் குளிர் காலத்தில் எவ்வித விவசாய வேலையும் கிடையாது. ருஷ்யாவின் ஐரோப்பிய மக்கள் தொகையான 65 மிலியன் பேரில் 50 மிலியன் பேர் அவ்வளவு காலம் வேலையில்லாதிருந்தால் அந்நாடு எத்தகைய இழப்புக்கு ஆளாகும் என்று எண்ணிப் பாருங் கள். ருஷ்யாவின் 10,500 தொழிற்சாலைகளில் வேலை செய்யும் 200,000 விவசாயிக்ள் ஒரு புறமிருக்க, வட்டார அளவிலான வீட்டுத் தொழில்கள் [domestic industries] கிராமங்களில் எங்கு பார்த்தாலும் முளைத்திருக்கின்றன. அநேகக் கிராமங்களில் எல்லா

விவசாயிகளுமே தலைமுறை தலைமுறையாய் நெசவாளர்களாகவும், தோல் பதனிடுவோராகவும், பாத அணி செய்வோராகவும், பூட்டுக் கொல்லர்களாகவும், வெட்டுக் கருவி செய்வோராகவும் இருந்திருக்கிறார்கள். குறிப்பாக மாஸ்கோ, விளாதிமீர், காலூகா, கோஸ்ட்ரோமா, பீட்டர்ஸ்பர்க் குபேர்னியாக்களில் இம்மாதிரியான கிராமங்கள் மிகவும் அதிகம். இந்தக் குடிசைத் தொழில்கள் மேலும் மேலும் அதிகமாக முதலாளித்துவப் பொருளுற்பத்திக்குப் பணி புரியும் படி இழுக்கப்பட்டு வருவதை இங்கு குறிப்பிட வேண்டும். எடுத்துக்காட்டாக, வணிகர்கள் நெசவாளர்களுக்கு நேரடியாகவோ இடைத்தரகர்கள் மூலமாகவோ பாவு நூலும் ஊடு நூலும் வழங்குகிறார்கள். (மாட்சிமை தங்கிய அரசியாரின் தூதகச் செயலர்கள் தொழில், வாணிபம் முதலானவை பற்றி அளித்த அறிக்கைகளிலிருந்து சுருக்கப்பட்டது, எண் 8, 1865, பக்கம் 86, 87.) உற்பத்திக் காலமும் வேலைக் காலமும் வேறுபட்டு வெவ்வேறாகும் இந்நிலையானது (பின்னது முன்னதன் ஒரு பகுதியே ஆகும்), விவசாயத்தையும், கிராமத் துணைத் தொழில்களையும் இணைப்பதற்கு இயற்கை அடிப்படையாவதையும், முதலில் வணிகரின் வடிவில் உள்ளே நுழையும் முதலாளிக்கு இந்தக் கிராமத் துணைத் தொழில்கள் அனுகூலமாவதையும் இங்கு காண்கிறோம். பின்னர் முதலாளித்துவப் பொருளுற்பத்தியானது பட்டறைத் தொழிலை விவசாயத்திலிருந்து தனியே பிரித்திட்டதும், மேலும் மேலும் அதிகமாய் கிராமப்புற உழைப்பாளி தற்காலிகத் துணை வேலையையே நம்பி வாழ வேண்டியதாகிறது. அவரது நிலைமை இதனால் மோசமடைகிறது. மூலதனத்தைப் பொறுத்த வரை புரள்விலான எல்லா வேறுபாடுகளும் ஒன்றையொன்று நேர் செய்து விடுவதை பிற்பாடு நாம் காணப் போகிறோம். தொழிலாளிக்கு அப்படியாவதில்லை.

தொழிற் கிளைகள் பெரும்பாலானவற்றிலும் சுரங்கத் தொழில், போக்குவரத்து முதலானவற்றிலும் ஒழுங்குமுறை தவறாமல் வேலைகள் நடைபெறுகின்றன. ஆண்டு முழுவதும் வேலை மாறாமல் அப்படியே இருக்கிறது. விலை ஏற்ற இறக்கங்கள், தொழில்-வர்த்தகச் சீர்குலைவுகள் போன்ற அசாதாரண நிகழ்வுகளால் வேலைகளில் ஏற்படும் தடங்கல்களை ஒதுக்கி விட்டுப் பார்த்தால் சுற்றோட்ட நிகழ்முறையில் அன்றாடம் சேருகிற மூலதன முதலீடு ஒரேசீராய் இருக்கிறது. சந்தை நிலைமைகளில் மாற்றம் இல்லாத வரை சுழல்-மூலதன மீள்வு அல்லது புத்தாக்கமும் மாறாமல் ஆண்டு முழுதும் சீராய் இருக்கிறது. ஆனால் உற்பத்திக் காலத்தில் ஒரு பகுதி மட்டுமே வேலைக் காலமாய் இருக்கும் படியான தொழில்களில் ஆண்டின் வெவ்வேறு காலங்களிலும் முதலீடாகிற சுழல்-மூலதனம் ஒரேசீராய் இல்லாமல் கூடியும் குறைந்தும் வெகுவாய் மாறிக் கொண்டிருக்கிறது. அதே போது மூலதன மீள்வு மட்டும் இயற்கை நிலைமைகளால்

நிர்ணயிக்கப்படும் நேரத்தில் முழுமொத்தமாய் நடந்தேறுகிறது. இரு விதமான தொழில்களிலும் உற்புத்தியின் அளவுவீதம் ஒன்றாகவே இருக்குமாயின், அதாவது முன்னீடு செய்யப்படும் சுழல்-மூலதனத் தின் அளவு ஒன்றாகவே இருக்குமாயின், வேலைக் காலம் விடாத் தொடராய் இருக்கும் தொழிலைக் காட்டிலும் இங்கு ஒவ்வொரு தரமும் அதிக அளவிலும் கூடுதலான காலத்துக்கும் சுழல்-மூலதனம் முன்னீடு செய்யப்பட்டாக வேண்டும். மேலும் இங்கே நிலை-மூல தனத்தின் ஆயுளுக்கும் மெய்யாகவே அது திறனுடை-மூலதனமாகச் செயல்படும் நேரத்துக்குமுள்ள வேறுபாடு குறிப்பிடத்தக்கவாறு அதிகமாகி விடுகிறது. வேலைக் காலமும் உற்பத்திக் காலமும் வெவ் வேறாக இருப்பதால் நிலை-மூலதனம் அதிக நேரத்துக்கோ குறுகிய நேரத்துக்கோ அவ்வப்போது வேலையில்லாமல் ஓய்ந்திருக்க வேண் டியதாகிறது. உதாரணமாய் விவசாயத்தில் இழுவைக் கால்நடை களும் வேலைக் கருவிகளும் இயந்திரங்களும் இப்படித்தான் ஓய்ந் திருக்க நேருகிறது. நிலை-மூலதனமானது இழுவைக் கால்நடை களாய் இருக்குமாயின், அவை வேலை செய்யும் காலத்தில் அவற்றின் தீவனத்துக்காகவும் பிறவற்றுக்காகவும் எவ்வளவு செலவாகிறதோ அனேகமாய் அதே செலவுதான் எக்காலத்திலும் தேவைப்படுகிறது. உயிரற்ற உழைப்புச் சாதனங்கள் வேலையில்லாமல் சும்மாயிருக்கும் போதுங்கூட அவை ஓரளவு மதிப்பிறக்கத்துக்கு [depreciation] உள்ளாக வேண்டியதாகிறது. உற்பத்திப் பொருளுக்கு மாற்றப் படுகிற மதிப்பு எவ்வளவு நேரம் நிலை-மூலதனம் செயல்படுகிறது என்பதைக் கொண்டு கணக்கிடப்படுவதில்லை, எவ்வளவு நேரம் அது மதிப்பிறக்கத்துக்கு உள்ளாகிறது என்பதைக் கொண்டே இம் மதிப்பு கணக்கிடப்படுகிறது. ஆகவே உற்பத்திப் பொருளின் விலை பொதுவாக உயர்ந்து செல்கிறது. இம்மாதிரியான பொருளுற் பத்திக் கிளைகளில், நிலை-மூலதனம் வேலையில்லாமல் ஓய்ந் திருப்பதானது — இதற்கு ஆகும் செலவு நடப்புச் செலவுகளுடன் சேர்க்கப்பட்டாலும் சேர்க்கப்படா விட்டாலும் — இச்சாதனங்களின் முறையான செயற்பாட்டுக்கு வேண்டிய ஓர் அவசிய நிலைமை யாகும்; நூல் நூற்கையில் குறிப்பிட்ட அளவு பஞ்சு விரயமாவது எப்படி ஓர் அவசிய நிலைமை ஆகிறதோ அதே போலத்தான் இதுவும். இவ்வாறே எந்த உழைப்பு நிகழ்முறையிலும் முறையான தொழில்நுட்ப நிலைமைகளில் உழைப்புச் சக்தியானது திறனிலா முறையில் செலவிடப்பட்டாலும், அது தவிர்க்க முடியாததாய் இருக்கும் வரை, உற்பத்தித் திறனுள்ள முறையில் செலவிடப்படும் உழைப்புச் சக்தியைப் போலவே அவசியச் செலவாகக் கணக்கிடப் படுகிறது. உழைப்புச் சாதனங்களையும் கச்சாப் பொருட்களையும் உழைப்புச் சக்தியையும் திறனிலா முறையில் செலவு செய்ய வேண் டியிருப்பதைக் குறைத்திடும் ஒவ்வொரு மேம்பாடும் உற்பத்திப் பொருளின் மதிப்பையும் குறையச் செய்கிறது.

வேளாண்மையில் வேலைக் காலம் நெடியதாய் இருப்பதோடு வேலைக் காலத்துக்கும் உற்பத்திக் காலத்துக்குமுள்ள வேறுபாடு அதிகமாய் இருக்கிறது. ஹாட்ஸ்கின் சரியாகவே சொல்கிறார்: ''வேளாண்மையின் விளைபொருட்களும் ஏனைய உழைப்பு வகைகளின் உற்பத்திப் பொருட்களும் பூர்த்தியாவதற்குத் தேவைப்படும் காலத்திலான வேறுபாடுதான்'' (அவர் இங்கே வேலைக் காலத்தையும் உற்பத்திக் காலத்தையும் வேறுபடுத்திப் பார்க்கவில்லை என்ற போதிலும்) ''விவசாயிகள் பெரிதும் சார்பு நிலையில் இருப்பதற்கு முக்கியக் காரணம்'' ஆகும். ''அவர்களுடைய சரக்குகள் தயாராகிச் சந்தையில் விற்பனையாவதற்கு ஓராண்டு ஆகிறது. இக்காலம் முழுவதிலும் அவர்கள் செருப்புத் தொழிலாளியிடமும், தையற்காரரிடமும், கொல்லரிடமும், வண்டி செய்பவரிடமும் ஏனைய பல்வேறு உழைப்பாளர்களிடமும் கடன்பட வேண்டியதாகிறது. இவர்களது உற்பத்திப் பொருட்கள் இல்லாமல் அவர்களால் காலந்தள்ள முடியாது. இப்பொருட்கள் சில நாட்கள் அல்லது வாரங்களில் செய்து முடிக்கப்படுகிறவை. இந்த இயற்கை நிலைமையின் காரணமாகவும், வேளாண்மை அல்லாத பிற துறைகளில் உழைப்பால் உற்பத்தியாகும் செல்வம் அதிவேகமாய் அதிகரிப்பதன் காரணமாகவும், நிலத்தை எல்லாம் தம் ஏகபோகமாகக் கொண்டிருப்போர் சட்டத்தையும் தம் ஏகபோகமாகக் கொண்டிருந்தாலும் கூட அவர்களால் தம்மையும் தமக்கு ஊழியம் புரியும் சாகுபடிக்காரர்களையும் சமுதாயத்தில் ஏனைய எப்பிரிவினரையும் விட அதிகமாய் சார்பு நிலையில் உழலுவோராகத் தாழ்ந்து போகாமல் தடுக்க முடியவில்லை.'' (தாமஸ் ஹாட்ஸ்கின், ஜனரஞ்சக அரசியல் பொருளாதாரம், லண்டன், 1827, பக்கம் 147, குறிப்பு.)

வேளாண்மையில் ஒரு புறம் கூலிக்கும் உழைப்புச் சாதனங்களுக்குமான செலவுகள் ஆண்டு முழுவதற்கும் மேலும் சீராகப் பரவியமையவும், மறு புறம் வெவ்வேறு வகைப் பயிர்களைப் பயிரிட்டு ஆண்டு முழுவதும் வெவ்வேறு அறுவடைகளுக்கு வழிசெய்து புரள்வுக் காலம் குறுக்கப்படவும் வேண்டுமானால், கூலிக்காகவும் உரங்களுக்காகவும் விதைக்காகவும் பிறவற்றுக்காகவும் முன்னீடு செய்யப்படும் சுழல்-மூலதனத்தை அதிகமாக்க வேண்டும். மாறிமாறி நிலத்தைத் தரிசாக விட்டு வைக்கும் மூன்று-வயல் முறையிலிருந்து [three-field system] தரிசாக விடாத பயிர்ச் சுழற்சி [crop rotation] முறைக்கு மாறிச் செல்லுகையில் இப்படித்தான் சுழல்-மூலதனம் அதிகமாக்கப்படுகிறது. ஃபிளாண்டர்சின் derobee சாகுபடி முறையில் இன்னும் பெரிய அளவில் சுழல்-மூலதனம் அதிகரித்தாக வேண்டும். ''Derobee சாகுபடி முறையில் கிழங்குப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன; ஒரே வயலில் முதலில் மனிதனின் தேவைக்காக ஒன்றன்பின்ஒன்றாகத் தானியமும் வெண்சணலும்

எண்ணெய் வித்தும் பழிராகின்றன; இவை அறுவடையானதும் கால்நடைப் பராமரிப்புக்கு வேண்டிய கிழங்குப் பயிர்கள் நடப்படு கின்றன. கொட்டில்களில் மாடுகளைப் பராமரிப்பது இந்தச் சாகுபடி முறையில் சாத்தியமாகிறது. இதனால் கணிச அளவில் எரு கிடைக் கிறது. இந்தச் சாகுபடி முறை இவ்விதம் பயிர்ச் சுழற்சிக்குரிய ஆதாரமாகிறது.

''மணற்பாங்கான வட்டங்களில் சாகுபடி நிலப்பரப்பில் மூன்றி லொரு பங்குக்கும் அதிகமானதில் derobee முறை பின்பற்றப்படு கிறது. சாகுபடிப் பரப்பு மூன்றிலொரு பங்கு அதிகமாவதால் கிடைக்கக் கூடியதை ஒத்த பயன் இதனால் கிடைக்கிறது.'' கிழங்குப் பயிர்கள் மட்டுமல்லாமல் குளோவர் போன்ற தீவனப் பயிர்களும் இப்படி சாகுபடி செய்யப்படுகின்றன. ''வேளாண்மையை இவ் விதம் தோட்டத் தொழிலாக மாற்றும் நிலைக்குச் செல்லும் போது இயல்பாகவே கணிச அளவில் முதலீடு செய்தாக வேண்டியிருக் கிறது. இங்கிலாந்தில் ஹெக்டேருக்கு 250 பிராங்கு மூலதனம் தேவை என மதிப்பிடப்படுகிறது. ஃபிளாண்டர்சில் கிட்டத்தட்ட 500 பிராங்கு தேவையாயிருக்கும். நல்ல சாகுபடியாளர்கள் தமது நிலங்களில் தமது அனுபவத்தின் பேரில் இதை மிகவும் குறைந்த அளவாகத்தான் கருதுவார்கள்.'' (எமிலி டெ லவலேய், *Essais sur l'economie rurale de la Belgique*, பாரிஸ், 1863, பக்கம் 45, 46, 48.)

முடிவில் துண்டு மரங்களுக்கான மர வளர்ப்பை எடுத்துக் கொள்வோம். துண்டு மர உற்பத்திக்கும், ஏனைய பெரும்பாலான உற்பத்திக் கிளைகளுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடு என்னவென்றால்: இதில் இயற்கைச் சக்திகள் சுயேச்சையாகத் தாமே செயல்படுகின்றன; வளர்ச்சி இயற்கையாய் நடைபெறும் போது மனித சக்தியோ மூலதனமோ தேவைப்படுவதில்லை. செயற் கையாகக் காடு வளர்க்கும் போது கூட இயற்கைச் சக்திகளின் செயலுடன் ஒப்பிடுமிடத்து மனித ஆற்றலும் மூலதன ஆற்றலும் அதிகமாய்ச் செலவாவதில்லை. மேலும், தானியம் பயிராக முடியா மற் போய் விட்ட அல்லது ஆதாயமற்றதாகி விட்ட நிலங்களிலும் இடங்களிலும் கூட காடு செழிப்பாக வளரக் கூடியது. தவிரவும் முறையான பொருளாதார முயற்சியாகக் காடு வளர்ப்பை மேற் கொள்கையில் தானியச் சாகுபடிக்குத் தேவைப்படுவதை விடக் கூடுதலான பரப்பு தேவைப்படுகிறது. ஏனென்றால், துண்டு நிலங் களில் ஒழுங்கான காடுவளர்ப்பு முறைகளைக் கையாளுவதற் கில்லை என்பதோடு, துணை வழிகளில் நிலத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியாமற் போகிறது; காட்டைப் பேணிக் காப்பதும் மிகக் கடினமாகி விடுகிறது. ஆனால் உற்பத்தி நிகழ்முறையானது தனிப்பட்ட பண்ணையின் திட்ட காலத்தைக் கடந்தும் சில சந்தர்ப்பங் களில் மனிதனது முழு ஆயுளையுங்கூட கடந்தும் நெடுங்காலத்துக்கு

நீடிக்கிறது. காட்டுக்காக நிலம் வாங்கும் பொருட்டு முதலீடு செய்யப்படும் மூலதனம்'' (கிராம சமுதாயப் பொருளுற்பத்தியாக இருக்குமானால் இம்மூலதனம் தேவையற்றதாகிறது; கிராம சமுதாயம் பயிர் நிலமாகவோ மேய்ச்சல் வெளியாகவோ பயன்படுத்தாமல் எவ்வளவு பரப்பைக் காடு வளர்ப்புக்காக ஒதுக்க முடியும் என்பதுதான் அப்போது பிரச்சினை) ''நெடுங்காலம் கழிந்த பிறகே குறிப்பிடத்தக்கவாறு பலன் தரக் கூடியது. அப்போதும் கூட அது முழு அளவுக்குப் புரள்வதில்லை. குறிப்பிட்ட சில வகை மரங்களின் உற்பத்திக்காக அமைந்த காடுகளாய் இருப்பின், முழுப் புரள்வுக்கு 150 ஆண்டுகள் ஆகின்றன. மேலும் எந்த மர வளர்ப்பு நிறுவனமும் சரிவர நிர்வகிக்கப்பட வேண்டுமானால் வருடாந்தர விளைவைப் போல் பத்து முதல் நாற்பது மடங்குள்ள மரங்கள் ஏற்கெனவே முழு அளவுக்கு வளர்ந்து தயாராயிருப்பது அவசியம். ஆகவே வேறு வருமான வழிகளையும் பெரும் பரப்புகளிலான காடுகளையும் பெற்றில்லாதவர் எவராலும் முறையான காடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட முடியாது.'' (கிர்ச்சோஃப், பக்கம் 58.)

காடு வளர்ப்புத் தொழிலில் [forestry] உற்பத்திக் காலம் மிக நீண்டதாகவும் (உற்பத்திக் காலத்தில் உள்ளடங்கும் வேலைக் காலம் ஒப்பளவில் மிகக் குறுகியது) புரள்வுக் காலம் நீண்டு நெடியதாகவும் இருப்பதால், இத்தொழில் தனியார் தொழில்-முனைவுக்கும், எனவே முதலாளித்துவத் தொழில்-முனைவுக்கும் உகந்ததாயில்லை. தனி முதலாளிக்கு பதில் கூட்டு முதலாளி வந்தாலும் முதலாளித்துவத் தொழில் சாராம்சத்தில் தனியார் தொழில்-முனைவே ஆகும். நாகரிக வளர்ச்சியும் பொதுவாகத் தொழில் வளர்ச்சியும் எப்போதுமே காடுகளை அழிப்பதில்தான் மிக மும்முரமாய் இருந்துள்ளன. காடுகளை அழியாமல் காக்கவும் அழிந்தவற்றைத் திரும்பவும் வளர்க்கவும் அவை செய்திருப்பவை எல்லாம் கடுகளவே என்னும் படியாக இருக்கிறது.

கிர்ச்சோஃபிடமிருந்து எடுக்கப்பட்ட மேற்கண்ட மேற்கோளில் பின்வரும் பகுதி குறிப்பாகக் கவனத்திற்குரியது. ''மேலும், எந்த மர வளர்ப்பு நிறுவனமும் சரிவர நிர்வகிக்கப்பட வேண்டுமானால் வருடாந்தர விளைவைப் போல் பத்து முதல் நாற்பது மடங்குள்ள மரங்கள் ஏற்கெனவே முழு அளவுக்கு வளர்ந்து தயாராயிருப்பது அவசியம்.'' வேறு விதமாகச் சொன்னால், புரள்வானது பத்து முதல் நாற்பது ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் நிகழ்கிறது.

கால்நடை வளர்ப்பிலும் [stock raising] இதுவேதான் நிலைமை. மந்தையில் (கால்நடை இருப்பில்) ஒரு பகுதி உற்பத்தி நிகழ்முறையில் இருந்து வரும் போதே இன்னொரு பகுதி வருடாந்தர உற்பத்தியாக விற்கப்படுகிறது. இயந்திரங்கள், இழுவைக் கால்நடைகள் போன்ற நிலை-மூலதனம் எப்படியோ அதே போல்

இங்கேயும் மூலதனத்தில் ஒரு பகுதி மட்டுமே ஒவ்வோர் ஆண்டும் புரள்கிறது. இந்த மூலதனம் நெடுங்காலத்துக்கு உற்பத்தி நிகழ் முறையில் நிலைத்திருந்தாலும், மொத்த மூலதனத்தின் புரள்வை இவ்விதம் நீடிக்கச் செய்தாலும், கறாரான வரையறுப்பின் படி இது நிலை-மூலதனமன்று.

இங்கே இருப்பு எனப்படுவது இருப்பிலுள்ள குறிப்பிட்ட அளவிலான துண்டு மரம் அல்லது கால்நடை ஆகும். இது ஓரள வுக்கு உற்பத்தி நிகழ்முறையில் இருந்து வருகிறது (ஒருங்கே உழைப்புச் சாதனங்களாகவும், உழைப்பின் இலக்குப் பொருளா கவும் இருந்து வருகிறது). நிர்வாகம் சரிவர நடைபெறுமானால், இந்த இருப்பின் மறுவுற்பத்திக்கு வேண்டிய இயற்கையான நிலை களுக்கு ஏற்ப இதில் கணிசமானதொரு பகுதி எப்போதும் மேற் கூறிய வடிவில் கிடைக்கக் கூடியதாய் இருக்க வேண்டும்.

வேறொரு வகை இருப்பும் புரள்வின் மீது இதே போன்ற விளைவை உண்டாக்குகிறது; இந்த இருப்பு உள்ளுறையாகவே திற னுடை-மூலதனமாகும். வேளாண்மையின் இயல்பு காரணமாய் இதனைப் பெரிய அளவிலோ சிறிய அளவிலோ திரட்டியாக வேண்டும். இது சன்னம் சன்னமாகவே உள்ளபடியான உற்பத்தி நிகழ்முறையில் சேர முற்படுகிறது என்றாலும், உற்பத்திக்காக அதனை ஒப்பளவில் நீண்ட காலத்துக்கு முன்னீடு செய்தல் வேண்டும். எருவை — அது வயலுக்குக் கொண்டுசெல்லப்படுவதற்கு முன்னால் — உதாரணமாய்க் குறிப்பிடலாம். மேலும் தானியம், உலர்புல் முதலானவற்றையும், கால்நடை உற்பத்தியில் பயன்படும் தீவன இருப்புகளையும் கூட குறிப்பிடலாம். "நடப்பு மூலதனத்தில் [working capital] கணிசமான ஒரு பகுதி பண்ணையின் இருப்பு களாக இருக்கிறது. ஆனால் இவற்றைப் பேணிக் காத்து நல்ல நிலையில் வைத்திருப்பதற்கு வேண்டிய எச்சரிக்கை நடவடிக்கைகள் சரிவர எடுக்கப்படா விடில் இவை மேலும் மேலும் மதிப்பை இழக்க நேரிடும். கவனக் குறைவால் பண்ணையினது உற்பத்திக் குரிய இருப்புகளில் ஒரு பகுதி அடியோடு அழிந்து போகவும் நேரிடலாம். எனவே, களஞ்சியங்கள், தானியத்துக்கும் தீவனத்துக்கு மான கிடங்குகள், நிலவறைகள் ஆகியவற்றை கவனமாய்ப் பார்த் துக் கொள்வது இன்றியமையாததாகிறது. எப்போதும் சேமிப்பறை களை சரிவர மூடிவைக்க வேண்டும். அவை சுத்தமாகவும் காற் றோட்டமாகவும் இருக்க வேண்டும். சேமிப்பில் இருக்கிற தானியத் தையும் இதர பயிர்களையும் அவ்வப்போது புரட்டிப் போட்டு வர வேண்டும். உருளைக் கிழங்கும் சர்க்கரைவள்ளியும் அழுகிப் போகாமலும், பனியாலும் மழையாலும் கேடுறாமலும் பாதுகாக்கப் பட வேண்டும்." (கிர்ச்சோஃப், பக்கம் 292.) "நமது தேவைகளை — குறிப்பாகக் கால்நடைகளுக்கான தேவைகளை — கணக்கிடும் போது, விளையும் பொருட்களுக்கும் அவற்றின் பயன்பாட்டுக்கும்

ஏற்ப அவை தக்கபடி வினியோகிக்கப்பட வேண்டும். சாதாரணத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதோடு நில்லாமல், எதிர் பாராத அசாதாரண நிலைமைகளைச் சமாளிப்பதற்கு தக்க அளவில் இருப்பு இருக்குமாறும் பார்த்துக் கொள்ள வேண்டும். தமது சொந்த உற்பத்தியினால் தேவைகளை முழுமையாக நிறைவு செய்ய முடியாது என்று தெரிந்தவுடன், இந்தப் பற்றாக்குறையை ஏனைய உற்பத்திப் பொருட்களை (பதிலிகளை) கொண்டு சமா ளிக்க முடியாதா என்றும், குறையும் பொருட்களை மேலும் மலி வான விலைக்குக் கொள்முதல் செய்து சரிக்கட்ட முடியாதா என்றும் முதலில் பரிசீலித்தாக வேண்டும். எடுத்துக்காட்டாக உலர் புல்லுக்குப் பற்றாக்குறை ஏற்படுமானால், கிழங்குகளையும் அத் துடன் வைக்கோலையும் கொண்டு சரிக்கட்டலாம். பொதுவாக, இப்படிப்பட்ட நிலைகளில் பல்வேறு பயிர்களின் இயல்பான மதிப் பையும் சந்தை-விலையையும் கணக்கிலெடுத்து அவற்றுக்கேற்பவே எப்போதும் நுகர்வினை ஒழுங்கு செய்ய வேண்டும். எடுத்துக்காட் டாக, ஓட்ஸ் விலை அதிகமாக இருந்து பட்டாணியும் ரையும் ஒப் பளவில் மலிவாகக் கிடைத்தால், குதிரைகளுக்கான ஓட்ஸில் ஒரு பகுதிக்கு பதில் பட்டாணி அல்லது ரையைப் பயன்படுத்தி, இப்படி மிச்சமாகும் ஓட்ஸை விற்று ஆதாயமடையலாம்.'' (மேலது, பக்கம் 300.)

நாம் இருப்பின் உருவாக்கம் பற்றிப் பரிசீலித்த போதே* ஒன்றைக் குறிப்பிட்டோம்: அதாவது, உள்ளுறைத் திறனுடை-மூலதனம் [potential productive capital] குறிப்பிட்ட அளவு தேவைப்படுகிறது என்றும், வேறுவிதமாகச் சொல்லின், உற்பத் தியில் ஈடுபடுவதற்குக் காத்திருக்கும் உற்பத்திச் சாதனங்கள் குறிப் பிட்ட அளவு தேவைப்படுகின்றன என்றும், சன்னம் சன்னமாக உற்பத்தி நிகழ்முறையில் பிரவேசிக்கும் பொருட்டு இவற்றை சேம இருப்பில் வைத்திருக்க வேண்டும் என்றும் கூறினோம். குறிப்பிட்ட பரிமாணம் உடைய ஒரு நிறுவனத்தையோ முதலாளித்துவத் தொழில் நிலையத்தையோ எடுத்துக் கொண்டால், இந்தத் திறனுடை-இருப் பின் பருமன் என்பது எவ்வளவு இருக்க வேண்டும் என்பது அதனை மாற்றீடு செய்வதில் உள்ள சிரமங்களையும், அதனை வழங்கும் சந்தைகளுக்கு இருக்கும் தொலைவையும், போக்குவரத்து, தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியையும், இன்ன பிறவற்றையும் பொறுத்தது என்றும் சொன்னோம். இந்த நிலைமைகள் எல்லாம் திறனுடை இருப்பின் வடிவில் தயாராய் இருந்தாக வேண்டிய மூல தனத்தின் குறைந்தபட்ச அளவை பாதிக்கிறவை. எனவே இந்நிலை மைகள் மூலதனம் முன்னீடு செய்யப்பட வேண்டிய கால அளவை யும், எந்த ஒரு நேரத்திலும் முன்னீடு செய்ய வேண்டிய மூலதனத்தின்

* பார்க்கவும்: இந்நூல், பக்கம் 179-86.—பதிப்பாசிரியர்.

பரிமாணத்தையும் பாதிக்கிறவை—மூலதனத்தின் இந்தப் பரி மாணமோ—இது புரள்வையும் பாதிக்கிறது—சுழல்-மூலதனம் திற னுடை இருப்பின் வடிவில், உள்ளூறையாக மட்டுமே உற்பத்தித் திறனுள்ளதாய் இருக்கும் மூலதனமாய் முடக்கி வைக்கப்படும் காலத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. மறு புறம் மூலதனத்தின் இந்த முடக்க நிலை துரிதமான மாற்றீடு எந்த அளவுக்குச் சாத்தியம் என் பதையும், சந்தை நிலைமைகளையும், இன்ன பிறவற்றையும் பொறுத் ததாகும் என்பதனால், இந்நிலை சுற்றோட்டத்துக்கு ஆகும் காலத் திலிருந்து, சுற்றோட்டத் துறையைச் சேர்ந்த நிலைமைகளிலிருந்து எழுவதாகிறது. ''மேலும், கைக்கருவிகள், சல்லடைகள், கூடைகள், கயிறுகள், வண்டி மசி, ஆணிகள் போன்ற சாதனங்களையும் துணைக் கருவிகளையும் அருகிலிருந்து தாமதமின்றி விலைக்கு வாங் கும் வாய்ப்பு எவ்வளவுக்கு எவ்வளவு குறைவாய் இருக்கிறதோ, உடனடி மாற்றீட்டுக்கு அவ்வளவுக்கு அவ்வளவு தயாராக இவை யெல்லாம் கையில் இருக்க வேண்டும். முடிவில், எல்லாக் கருவி களையும் ஆண்டுதோறும் குளிர் காலத்தில் கவனமாக சோதித்துப் பார்க்க வேண்டும்; புதிதாக வாங்க வேண்டியவற்றை வாங்கு வதற்கும், மராமத்து செய்ய வேண்டியவற்றை மராமத்து செய் வதற்கும் உடனே ஆவன செய்தல் வேண்டும். எவ்வளவு கருவி களை இருப்பு வைத்துக் கொள்வது என்பதைப் பிரதானமாக உள்ளூர் நிலைமைகளைக் கொண்டு தீர்மானிக்க வேண்டும். உள் ளூரிலோ அண்மையிலோ கைவினைக் கூடங்களும் கடைகளும் இருக்கிற இடங்களைக் காட்டிலும், இவை இல்லாத இடங்களில் கூடுதலான இருப்புகளை வைத்துக் கொள்வது அவசியம். அவசிய மான இருப்புகளை ஒருங்கே பெரும் அளவில் கொள்முதல் செய் யும் போது, பொருத்தமான நேரத்தில் கொள்முதல் நடைபெறு மானால், ஏனைய நிலைமைகள் சமமாயிருக்க, குறைந்த விலைக்குக் கொள்முதல் செய்து பயன் பெற முடிகிறது. இதற்காக நடப்பு மூல தனத்திலிருந்து மொத்தமாக ஒரே நேரத்தில் பெருந்தொகை எடுக் கப்படுவது மெய்தான்; ஆனால் தொழிலில் சில நேரம் இதனைத் தவிர்ப்பதற்கில்லை.'' (கிர்ச்சோஃப், பக்கம் 301.)

உற்பத்திக் காலமும் வேலைக் காலமும் ஒத்திராது வேறுபடுவ தானது இங்கே நாம் பார்த்தது போல் வெவ்வேறு விதத்திலும் ஏற் படலாம், சுழல்-மூலதனத்தைப் பொறுத்த வரை முறையான உழைப்பு நிகழ்முறையினுள் புகுவதற்கு முற்பட்டதான உற்பத்திக் காலமாக அவ்வேறுபாடு அமையலாம் (பாத அணி அச்சுக் கட்டை உற்பத்தி). அல்லது முறையான உழைப்பு நிகழ்முறையைக் கடந்த பிறகு வரும் உற்பத்திக் காலமாகவும் அமையலாம் (மது, விதைத் தானியம்). அல்லது சில சமயம் உற்பத்திக் காலத்தின் குறுக்கேயும் வேலைக் காலம் அமைவதுண்டு (வேளாண்மை, மர வளர்ப்பு). சுற்றோட்டத் துக்குச் செல்லத் தகுதி வாய்ந்த உற்பத்திப் பொருளின் ஒரு பெரும்

பகுதி முனைப்பான உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டிருக்கையில் ஒரு சிறு பகுதி வருடாந்தரச் சுற்றோட்டத்தினுள் புகுவது உண்டு (மர வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு). சுழல்-மூலதனம் உள்ளுறையாக மட்டும் திறனுடை-மூலதனத்தின் வடிவில் எவ்வளவு காலத்துக்கு முன்னீடு செய்யப்பட வேண்டும் என்பதும், ஆகவே எந்த ஒரு நேரத்திலும் எவ்வளவு முன்னீடு செய்யப்பட வேண்டும் என்பதும் பகுதியளவுக்கு உற்பத்தி நிகழ்முறை எவ்வகைப்பட்டது என்பதையும் (விவசாயம்), பகுதியளவுக்கு சந்தை எவ்வளவு அருகில் உள்ளது என்பது போன்ற நிலைமைகளையும், சுருங்கச் சொல்லின், சுற்றோட்டத் துறை சம்பந்தமான நிலைமைகளையும் பொறுத்தவை.

மக்குல்லோஹ், ஜேம்ஸ் மில் போன்றவர்கள் வேலைக் காலமும் உற்பத்திக் காலமும் ஒன்றாயிராமல் வேறுபடும் போது இரண்டையும் ஒன்றாக்கிக் காட்ட முயன்றதால் எவ்வளவு அபத்தமான தத்துவங்களை வந்தடைகிறார்கள் என்பதைப் பின்னர் (மூன்றாம் பாகத்தில்) பார்ப்போம். அவர்களது இந்த முயற்சி மதிப்புத் தத்துவத்தைத் தவறான முறையில் பிரயோகிப்பதன் விளைவாகும் என்பதையும் அங்கே காண்போம்.

---

நாம் மேலே பரிசீலித்த புரள்வுச் சகடம் [turnover cycle], உற்பத்தி நிகழ்முறைக்காக முன்னீடு செய்யப்படும் நிலை-மூலதனத்தின் ஆயுளால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்தச் சகடம் பல்லாண்டு காலம் நீண்டு செல்வதாகையால், அது ஆண்டுக்கு ஒரு முறையோ பல முறையோ திரும்பத் திரும்ப நிகழும் நிலை-மூலதனப் புரள்வுகளின் தொடரால் ஆனதாகும்.

வேளாண்மையில் இப்படிப்பட்ட ஒரு புரள்வுச் சகடம் பயிர்ச் சுழற்சி முறையிலிருந்து எழுகிறது. "எப்படிப் பார்த்தாலும், குத்தகைக் காலம் கைக்கொள்ளப்படும் பயிர்ச் சுழற்சி முறை பூர்த்தியாவதற்கு வேண்டிய காலத்தை விடக் குறைவாக இருக்கக் கூடாது. எனவே, மூன்று-வயல் முறையில் எப்போதுமே 3,6,9 என்ற முறையில் கணக்கிடப்படுகிறது. தரிசு போடுதலுடன் கூடிய அந்த முறையில், ஒவ்வொரு வயலும் ஆறு ஆண்டில் நான்கு தடவை தான் சாகுபடி செய்யப்படுகிறது. சாகுபடி நடக்கும் ஆண்டுகளில் குளிர்கால தானியமும் கோடைகால தானியமும் விதைக்கப்படுகிறது. மண்ணின் இயல்பு அவசியமாக்கினால், அல்லது அனுமதித்தால் கோதுமை, ரை ஆகியவையும், பார்லி, ஓட்ஸ் ஆகியவையும் மாறி மாறி விதைக்கப்படுகின்றன. குறிப்பிட்ட மண்ணில் ஒவ்வொரு வகை தானியப் பயிரும் வெவ்வேறு அளவில் விளைச்சல் அளிக்கிறது; விளைவதன் மதிப்பு வெவ்வேறாகும், விற்கப்படும் விலையும் வெவ்வேறு ஆகும். எனவே அந்தந்த வயலும் அது சாகுபடி செய்யப்படும் ஒவ்வொரு வருடத்திலும் வெவ்வேறு அளவில் விளைச்சல் அளிக்கிறது. சுழற்சியின் முதல் பாதிக்கு (முதல் மூன்று ஆண்டுகளில்)

வேறாகவும் இரண்டாம் பாதிக்கு வேறாகவும் இருக்கிறது. ஒரு சுழற்சிக் காலத்தின் சராசரி மகசூலும் கூட இன்னொரு சுழற்சிக் காலத்தின் சராசரி மகசூலுக்குச் சமமாக இருப்பதில்லை; ஏனென்றால், விளைச்சல் மண்ணின் தரத்தை மட்டும் பொறுத்ததல்ல; பருவ நிலையையும் பொறுத்ததாகும்—விலைவாசி எப்படி மாறும் நிலைமைகளைப் பொறுத்ததாய் இருக்கிறதோ அதே போல. இப்போது, முழு சுழற்சிக் காலமாகிய ஆறு ஆண்டின் சராசரி விளைச்சலையும் சராசரி விலைகளையும் கணக்கில் கொண்டு ஒரு வயலிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கணக்கிட்டால், ஒவ்வொரு சுழற்சிக் காலத்திலும் ஓராண்டுக்கான மொத்த வருமானம் கிடைக்கிறது. ஆனால் சுழற்சிக் காலத்தில் பாதிக்கு மட்டும், அதாவது மூன்றாண்டுக்கு மட்டும் வரவுகளைக் கணக்கிட்டால் கிடைப்பது வேறொன்று. ஏனென்றால், அப்போது மொத்த வருமானம் இரு பாதியிலும் வெவ்வேறாய் இருக்கும். மூன்று-வயல் முறையில் சாகுபடியாகிற நிலத்தின் குத்தகை குறைந்தது ஆறு ஆண்டு காலம் நீடிக்க வேண்டும் என்று இதிலிருந்து தெரிகிறது. ஆயினும் குத்தகைக் காலமானது குத்தகைக் காலத்தின் (மூலத்தில் இப்படித்தான் உள்ளது!) எண்மடங்காய் இருக்குமானால், குத்தகைக்கு விடுவோருக்கும் குத்தகை எடுப்போருக்கும் இன்னும் அனுகூலமானதாக இருக்கும். ஆகவே குத்தகையானது மூன்று-வயல் முறையில் 6 ஆண்டுக்கு பதில் 12, 18...ஆண்டுகளாகவும், ஏழு-வயல் முறையில் 7 ஆண்டுக்கு பதில் 14, 28...ஆண்டுகளாகவும் இருத்தல் வேண்டும்.'' (கிர்ச்சோஃப், பக்கம் 117, 118.)

(இந்த இடத்தில், கையெழுத்துப் பிரதியில் பின்வருமாறு குறிக்கப்பட்டிருக்கிறது: ''ஆங்கிலேயப் பயிர்ச் சுழற்சி முறை, இங்கே குறிப்பு தர வேண்டும்.'')

## அத்தியாயம் XIV

## சுற்றோட்டக் காலம்

வெவ்வேறு தொழிற் கிளைகளில் முதலீடாகியுள்ள வெவ்வேறு மூலதனங்களுக்கு ஆகும் புரள்வுக் காலங்களையும், ஆகவே இம் மூலதனங்கள் முன்னீடு செய்யப்பட வேண்டிய காலங்களையும் வேறுபடச் செய்யும் காரணிகளில் இது வரை நாம் பரிசீலித்தவை யாவும், நிலை-மூலத்னத்துக்கும் சுழல்-மூலதனத்துக்குமுள்ள வேறு பாட்டையும் வேலைக் காலங்களிலான வேறுபாட்டையும் போன்ற இவை யாவும், உற்பத்தி நிகழ்முறையிலிருந்து எழுகிறவை. ஆனால் மூலதனத்தின் புரள்வுக் காலமானது அதன் உற்பத்திக் காலமும், அதன் சுற்றோட்ட அல்லது சுழற்சிக் காலமும் சேர்ந்ததாகும். எனவே சுற்றோட்டக் காலத்திலான [circulation time] வேறுபாடு இயற்கையாகவே புரள்வுக் காலத்திலும், ஆகவே புரள்வுக்கு ஆகும் காலத்தின் அளவிலும் வேறுபாட்டை உண்டாக்குகிறது. புரள்வில் மாற்றம் உண்டாக்கும் காரணிகளில் சுற்றோட்டக் காலம் தவிர மற்றவை எவற்றிலும் மாறுபடாத இருவேறு முதலீடுகளை ஒப்பு நோக்குவோமானால், அல்லது நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூல தனத்துக்குமுள்ள விகிதமும் வேலைக் காலமும் பிறவும் குறிப்பிட்ட தாய் இருக்க சுற்றோட்டக் காலம் மட்டும் மாறும் படியான குறிப் பிட்ட மூலதனத்தை அனுமானித்துக் கொண்டு பார்ப்போமானால், மேற்கூறிய உண்மை மிகத் தெளிவாய் விளங்கும்.

சுற்றோட்டக் காலத்தின் கூறுகளில் ஒன்று — ஒப்பளவில் மிகவும் முக்கியமானது — விற்பனைக் காலமாகும்; மூலதனமானது சரக்கு-மூலதனமாக நிலவும் காலமாகும். சுற்றோட்டக் காலமும், எனவே பொதுவாக புரள்வுக் காலமும் இந்த விற்பனைக் காலத்தின் ஒப் பீட்டு அளவைப் பொறுத்து நீண்டதாகவோ குறுகலாகவோ அமை கின்றன. சேமித்தல் [storage] முதலானவற்றுக்கு ஆகும் செலவு களின் விளைவாய்க் கூடுதல் முதலீடு தேவைப்படலாம். பூர்த்தி நிலையை அடைந்த பண்டங்களின் விற்பனைக்குத் தேவைப்படும் காலம் ஒரே தொழிற் கிளையில் தனிப்பட்ட வெவ்வேறு முதலாளி களுக்கும் பெரிதும் வேறுபடலாம், எடுத்த எடுப்பிலேயே இது

விளங்குகிறது. எனவே, அது பல்வேறு தொழிற் கிளைகளில் முதலீடு செய்யப்படும் மொத்த மூலதனங்களுக்கு மட்டுமல்லாமல், பல்வேறு சுயேச்சையான மூலதனங்களுக்கும் கூட வேறுபடலாம். சுயேச்சையான மூலதனங்கள் எல்லாம் உண்மையில் ஒரே உற்பத்தித் துறையில் முதலீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தின் பகுதிகளே ஆகும், ஆனால் இவை தம்மை சுயேச்சையாக்கிக் கொண்டுவிட்டவை. ஏனைய காரணிகள் சமமாயிருக்க, சந்தையில் பொதுவாக ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்கேற்ப, அல்லது அந்தக் குறிப்பிட்ட தொழில் வகையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்கேற்ப, தனிப்பட்ட ஒரே மூலதனத்துக்கு விற்பனைக் காலம் மாறுபடும். இந்த விவரத்தை இதற்கு மேல் ஆராய வேண்டியதில்லை. ஒரு சாதாரண விவரத்தை மட்டும் குறிப்பிட்டால் போதும்: பொதுவாக வெவ்வேறு தொழிற் கிளைகளில் முதலீடாகியுள்ள மூலதனங்களின் புரள்வுக் காலங்களில் மாற்றம் உண்டாக்கும் காரணிகள் எல்லாம் தனித்தனியாகச் செயல்படுமாயின் (எடுத்துக்காட்டாக, ஒரு முதலாளி தமது போட்டியாளரை விடத் துரிதமாக விற்க வாய்ப்பு பெறுவாராயின், அல்லது ஏனையோரைக் காட்டிலும் அதிகமாய் ஒருவர் வேலைக் காலங்களைக் குறுகச் செய்வதற்கான முறைகளைக் கையாளுவாராயின்) ஒரே தொழிலில் செயல்படும் பல்வேறு தனிப்பட்ட மூலதனங்களின் புரள்விலும் மாற்றம் உண்டாக்குகின்றன.

விற்பனைக் காலங்களை வேறுபடச் செய்து இவ்விதம் பொதுவாகப் புரள்வுக் கால அளவுகளையும் வேறுபடச் செய்கிற ஒரு நிரந்தரக் காரணியாகச் செயல்படுவது எதுவெனில் உற்பத்தியாகிற சரக்கின் விற்பனைச் சந்தைக்கும் உற்பத்தியிடத்துக்குமுள்ள தொலைவு ஆகும். சந்தைக்குப் போய்ச் சேரும் காலம் முழுக்க மூலதனமானது சரக்கு-மூலதன வடிவில் கட்டுண்ட நிலையில் இருக்கிறது. சரக்குகள் சரக்காணையின் பேரில் செய்யப்பட்டிருந்தால் அவை ஒப்படைக்கப்படுகிற நேரம் வரை இந்நிலை நீடிக்கிறது; சரக்காணையின் பேரில் செய்யப்படாதிருந்தால், சந்தையில் அவை விற்பனைக்காகக் காத்திருக்கும் காலத்தையும் பயணக் காலத்தோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். செய்தித் தொடர்பு, போக்குவரத்துச் சாதனங்களில் ஏற்படுகிற மேம்பாட்டால் சரக்குகளது இடப்பெயர்ச்சிக்கு செலவாகும் காலம் குறைகிறதே ஒழிய, சரக்கு-மூலதனங்களின் சுற்றோட்டக் காலங்களில் சரக்குச் சஞ்சாரங்களால் ஏற்படும் வேறுபாடாகிய ஒப்பீட்டு வேறுபாடு நீங்கிவிடுவதில்லை. அதே சரக்கு-மூலதனத்தின் வெவ்வேறு பகுதிகள் வெவ்வேறு சந்தைகளுக்குப் போய்ச் சேருகையில் அவற்றின் சுற்றோட்டக் காலத்திலான ஒப்பீட்டு வேறுபாடும் நீங்கி விடுவதில்லை. எடுத்துக்காட்டாக, மேம்பட்ட பாய்மரக் கப்பல்களும் நீராவிக் கப்பல்களும் பயணக் காலத்தைக் குறைக்குமானால்,

போக வேண்டிய துறைமுகங்கள் அண்மையில் இருந்தாலும் தொலைவில் இருந்தாலும் இந்தக் குறைவு ஏற்படவே செய்யும். ஒப்பீட்டு வேறுபாடு பல சந்தர்ப்பங்களில் குறைக்கப்பட்ட போதிலும் நீங்கி விடுவதில்லை. போக்குவரத்து, தொடர்புச் சாதன [means of transportation and communication] மேம்பாடு சில சமயம் புவியியல் தொலைவுகளுடன் ஒத்திராத வகையிலும் இந்த ஒப்பீட்டு வேறுபாடுகளில் மாற்றத்தை உண்டாக்கலாம். எடுத்துக்காட்டாக, ஓர் உற்பத்தியிடத்திலிருந்து [place of production] மக்கள்நெருக்கமுள்ள உட்பகுதி மையத்துக்குச் செல்லும் இருப்புப் பாதையானது, இருப்புப் பாதையால் இணைக்கப் பெறாமல் அண்மையிலுள்ள இடத்தினை—புவியியல் நோக்கில் சேய்மையிலுள்ள இடத்துடன் ஒப்பிடுகையில்—ஒப்பளவிலோ அறுதியாகவோ அதிக தொலைவிலுள்ளதாக்கி விடலாம். இதே நிலைமைகள் உற்பத்தியிடங்களுக்கும் பெரிய சந்தைகளுக்கும் இடையிலான ஒப்பீட்டு தூரத்தை மாற்றி விடலாம். போக்குவரத்து, தொடர்பு வசதிகளில் ஏற்படும் மாற்றங்களால் பழைய உற்பத்திக் கேந்திரங்கள் நசிவுற்றுப் புதியவை எழக் காண்கிறோம். (சரக்குகளைக் குறுந்தொலைவுக்கு எடுத்துச் செல்வதைக் காட்டிலும் நெடுந்தொலைவுக்கு எடுத்துச் செல்வது ஒப்பளவில் மலிவாகி விடும் நிலைமைகளையும் இவற்றுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்.) தவிரவும் போக்குவரத்து வசதிகளின் வளர்ச்சியைத் தொடர்ந்து இடப்பெயர்ச்சியின் வேகம் முடுக்கப்பட்டு, கால அளவில் புவியியல் தொலைவுகள் குறைக்கப்படுகின்றன. போக்குவரத்து வசதிகளின் பரிமாண வளர்ச்சியால், ஒரே நேரத்தில் ஒரே துறைமுகத்துக்குப் பல கப்பல்கள் புறப்படலாம். அல்லது குறிப்பிட்ட இரு இடங்களுக்கு இடையே வெவ்வேறு இருப்புப் பாதைகளில் ஒரே நேரத்தில் பல இரயில் வண்டிகள் செல்லலாம். அது மட்டுமல்ல, ஒரே வாரத்தில் அடுத்தடுத்த நாட்களில் சரக்குக் கப்பல்கள் லிவர்பூலிலிருந்து நியூ யார்க்குக்குக் கிளம்பலாம். அல்லது சரக்கு இரயில்கள் ஒரே நாளில் வெவ்வேறு நேரத்தில் மான்செஸ்டரிலிருந்து லண்டனுக்குப் புறப்படலாம். போக்குவரத்துச் சாதனங்களின் ஆற்றல் குறிப்பிட்ட நிலையில் இருக்கையில் அறுதி வேகமும் [absolute velocity], ஆகவே சுற்றோட்டக் காலத்தின் இந்தப் பகுதியும் பின்னால் கூறிய நிலைமைகளால் மாறி விடுவதில்லை. ஆனால் அடுத்தடுத்து கப்பல்களில் ஏற்றப்படும் சரக்குத் தொகுதிகள் குறுகிய கால இடைவெளிகளில் பயணம் தொடங்க முடிவதால், கப்பலில் ஏற்றப்படுவதற்கு முன்னால் உள்ளுறைச் சரக்கு-மூலதனமாக [potential commodity-capital] பெருமளவில் குவிந்து விடாமல் தொகுதி தொகுதியாகச் சந்தையை வந்தடைகின்றன. எனவே, மூலதனத்தின் மீள்வும் [return of capital] அடுத்தடுத்த குறுகிய காலங்களில் நடந்தேறுகிறது. ஒரு பகுதி இவ்விதம் பண-மூலதனமாகத் தொடர்ச்சியாய் உருமாறிக்

கொண்டிருக்க, மறு பகுதி சரக்கு-மூலதனமாகச் சுற்றியோடிக் கொண்டிருக்கிறது. அடுத்தடுத்து அமைந்த பல காலக் கூறுகளில் மீள்வு நடைபெறுவதால், மொத்தச் சுற்றோட்டக் காலமும், எனவே புரள்வும் கூட குறுகிப் போகின்றன. தற்போதுள்ள உற்பத்தி யிடங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்து இவை பெரிய உற்பத்தி மையங்களாக வளரும் போது, போக்குவரத்துச் சாதனங்களின் அலைவு இயக்கம் — உதாரணமாய், இரயில் வண்டித் தொடர்களின் எண்ணிக்கை — யாவற்றுக்கும் முதலாக அதிகரிக்கிறது. ஏற்கெனவே இருந்து வரும் சந்தையை நோக்கி, அதாவது பெரும் பெரும் உற்பத்தி மையங்களையும் மக்கள் நெருக்கமுள்ள மையங்களையும் ஏற்றுமதித் துறைமுகங்களையும் இன்ன பிறவற்றையும் நோக்கி இந்த வளர்ச்சி ஏற்படுகிறது. மறு புறம், பெரிய அளவிலான இந்தப் போக்குவரத்து வசதிகளும், இவற்றின் விளைவாய் மூலதனப் புரள்வின் வேகம் (சுற்றோட்டக் காலத்தால் இவ்வேகம் நிர்ண யிக்கப்படுகிறது) அதிகமாகி உற்பத்தி மையங்களும் சந்தைகளும் முன்னிலும் துரிதமாகக் குவிவதற்கு வழி செய்கின்றன. சில குறிப் பிட்ட மையங்களில் திரள்திரளாய் மக்களும் மூலதனமும் குவிக்கப் படுதல் இவ்விதம் துரிதமடைவதோடு கூட, இந்த மூலதனத் திரள் கள் ஒரு சிலரது கையில் குவிந்து செல்கின்றன. அதே போது, போக்குவரத்து வசதிகளில் ஏற்படும் மாற்றங்களால் உற்பத்தி யிடங்கள், சந்தையிடங்கள் இவற்றின் ஒப்பீட்டு நிலைகள் மாற்ற மடைவதன் விளைவாய், இவை திரும்பவும் மாற்றத்துக்கு உள் ளாகக் காணலாம். நெடுஞ்சாலையிலோ கால்வாய்க் கரையிலோ இருப்பதன் தனி அனுகூலத்தை இதுகாறும் பெற்றிருந்த ஓர் உற்பத் தியிடம், இப்போது, ஒப்பளவில், நீண்ட நெடுநேரத்துக்கு ஒரு முறை இரயில் ஓடும் ஒற்றைக் கிளைப் பாதையில் அமைய நேர்ந்து பின்னிலைக்குத் தள்ளப்பட்டு விடலாம். அதே போது முன்பு பிர தானப் போக்குவரத்து நாளங்களிலிருந்து தொலைவில் அமைந் திருந்த வேறோர் உற்பத்தியிடம் இப்போது அநேக இருப்புப் பாதை களின் சந்திப்பில் அமைய நேரலாம். இந்த இரண்டாவது இடம் ஏறுமுகமாய் இருக்க, முதலாவது இடம் இறங்குமுகமாய் மாறி விடு கிறது. போக்குவரத்துச் சாதனங்களில் ஏற்படும் மாற்றங்கள் இவ் வாறு சரக்குகளின் சுற்றோட்டக் காலத்திலும் வாங்குவதற்கும் விற் பதற்குமான வாய்ப்புகளிலும் இன்ன பிறவற்றிலும் வட்டார அளவி லான வேறுபாடுகளைத் தோற்றுவிக்கின்றன; அல்லது ஏற்கெனவே வட்டார அளவில் இருந்து வரும் வேறுபாடுகளை மாற்றியமைக் கின்றன. மூலதனத்தின் புரள்வில் இந்த நிலைமைக்குள்ள முக்கி யத்துவத்துக்கு பல்வேறு வட்டாரங்களின் தொழில், வாணிபப் பிரதிநிதிகள் இருப்புப் பாதை நிர்வாகங்களுடன் நடத்தும் சச்சரவு கள் சான்று பகர்கின்றன. (பார்க்கவும்: மேலே நாம் மேற்கோள்

எடுத்துத் தந்த இரயில்வே குழுவின் நீலப்புத்தகம்.*)

எனவேதான், தம் உற்பத்திப் பொருளின் தன்மை காரணமாய் வட்டார அளவிலான நுகர்வையே பிரதானமாய் நம்பியிருக்கும் பீர் வடிப்பாலைகள் போன்ற தொழிற் கிளைகள் யாவும் மக்கள் நெருக்கமுள்ள முக்கிய மையங்களில் பெரிய அளவில் வளர்ந்திருக்கக் காண்கிறோம். கட்டட மனை போன்ற பலவற்றுக்கும் அதிகச் செலவானாலுங்கூட இங்கே மூலதனத்தின் துரிதப் புரள்வானது இந்தக் கூடுதல் செலவுகளை ஓரளவு சரிக்கட்டி விடுகிறது.

ஒரு புறம், முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் முன்னேற்றத்தால் போக்குவரத்து, தொடர்புச் சாதனங்களில் ஏற்படும் மேம்பாடு குறிப்பிட்ட அளவிலான சரக்குகளின் சுற்றோட்டக் காலத்தைக் குறைக்கிறது; மறு புறம், போக்குவரத்து, தொடர்பு வசதிகளின் வளர்ச்சியால் ஏற்படும் அதே முன்னேற்றமும் வாய்ப்புகளும் மேலும் மேலும் தொலைவான சந்தைகளுக்காக, சுருங்கச் சொல்லின் உலகச் சந்தைக்காகச் செயல்படுவதை அவசியமாக்குகின்றன. தொலைதூர இடங்களுக்குச் செல்லும் சரக்குத் திரள் பிரம்மாண்டமாய் அதிகரிக்கிறது. ஆகவே, அதோடு கூடவே, சமுதாய மூலதனத்தில் சுற்றோட்டக் காலத்துக்குள் தொடர்ச்சியாய் நெடுங் காலத்துக்கு சரக்கு-மூலதனக் கட்டத்தில் நீடிக்கும் பகுதியும் அதிகரிக்கிறது—ஒப்பளவில் மட்டுமன்றி அறுதியாகவும் அதிகரிக்கிறது. நேரடி உற்பத்திச் சாதனமாகப் பயன்படுவதற்குப் பதிலாக, போக்குவரத்து, தொடர்புச் சாதனங்களுக்காகவும் அவற்றின் செயல்பாட்டுக்குத் தேவைப்படும் நிலை-மூலதனத்துக்காகவும் சுழல்-மூலதனத்துக்காகவும் முதலீடு செய்யப்படும் சமுதாயச் செல்வப் பகுதியும் அதேபோது அதிகரிக்கிறது.

சரக்குகள் உற்பத்தியாகும் இடத்திலிருந்து சந்தைக்குப் போய்ச் சேரும் ஒப்பீட்டுக் கால அளவை மட்டும் எடுத்துக் கொண்டாலும், அது சுற்றோட்டக் காலத்தின் முதல் பகுதியான விற்றல்-காலத்தில் மாற்றம் உண்டாக்குவதோடு, சுற்றோட்டக் காலத்தின் இரண்டாம் பகுதியான வாங்கல்-காலத்திலும்—அதாவது பணமானது திரும்பவும் திறனுடை-மூலதனக் கூறுகளாவதற்கு வேண்டிய காலத்திலும்—மாற்றம் உண்டாக்குகிறது. சரக்கைக் கப்பலில் ஏற்றி இந்தியாவுக்கு அனுப்பி வைப்பதாகக் கொள்வோம். அது அங்கே போய்ச் சேர நான்கு மாத காலம் ஆவதாகக் கொள்வோம். அங்கே விற்பதற்காகும் காலம் பூஜியம் என்போம்; அதாவது சரக்காணையின் பேரில் சரக்கு தயாரிக்கப்படுவதாகவும் உற்பத்தியாளரது முகவரிடம் சேர்ப்பிக்கப்பட்டவுடனே விலை தரப்படுவதாகவும் கொள்வோம். பணம் திரும்பி வருவதற்கு (எந்த வடிவத்தில் வந்தாலும் ஒன்றுதான்) மேலும் நான்கு மாத காலம் தேவைப்படுகிறது.

---

* பார்க்கவும்: இந்தப் புத்தகத்தில் பக்கம் 197.—பதிப்பாசிரியர்.

இவ்வாறு ஒரு மூலதனமானது மீண்டும் திறனுடை-மூலதனமாகி அதே செயலைத் திரும்பவும் செய்ய முற்படுவதற்கு மொத்தம் எட்டு மாத காலமாகிறது. மூலதனப் புரள்வில் இவ்விதம் உண்டாகிற கால வேறுபாடுகள் பல்வேறு கடன்-செலாவணி வரையறைகளுக் கான பொருளாயத அடிப்படைகளில் ஒன்றாகின்றன. பொது வாகச் சொன்னால், கடல் கடந்த வாணிபம் இப்படித்தான் முறை யான கடன்-செலாவணிக்கு ஓர் ஆதாரமாகிறது. உதாரணமாய் வெனிசிலும் ஜெனோவாவிலும் கடன்-செலாவணி இவ்வாறுதான் உருவாயிற்று. ''1847 ஆம் வருடத்திய நெருக்கடியானது, அந்தக் காலத்திய வங்கி மற்றும் வாணிபச் சமூகத்தார் இந்திய, சீன உண்டியல் மாற்றுக் கெடுவை [usance]'' (அந்த நாடுகளுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையே மாற்று உண்டியல்களின் [bills of exchange] செலாவணிக்கு அனுமதிக்கப்பட்ட கால வரையறையை ''பத்து மாதத் தேதிக் கெடுவாக [date] இருந்ததை ஆறு மாதக் காட்சிக் கெடுவாக [sight] குறையச் செய்தது. இருபதாண்டு காலத் தில் பயண வேகங்கள் அதிகரித்திருப்பதாலும், தந்தி நிறுவப்பட் டிருப்பதாலும், இன்ன பிற காரணங்களாலும்''...ஆறு மாதக் காட்சிக் கெடுவை மேலும் குறைப்பது, நான்கு மாதக் காட்சிக் கெடுவாய் மாற்றுவதற்கு முதல் படியாக நான்கு மாதத் தேதிக் கெடுவாக ''குறைப்பது ...அவசியமாகிறது.'' ஒரு பாய்மரக் கப்பல் கல்கத்தா விலிருந்து நன்னம்பிக்கை முனை வழியாக லண்டனுக்குப் போய்ச் சேர சராசரியாக 90 நாளுக்கும் குறைவான காலமாகிறது. நான்கு மாத காட்சிக் கெடுவாகிய உண்டியல் மாற்றுக் காலம் 150 நாள் செலாவணிக்குச் சமமாக இருக்கும். ஆறு மாத காட்சிக் கெடுவாகிய இப்போதைய உண்டியல் மாற்றுக் காலம் 210 நாள் செலா வணிக்குச் சமம் எனலாம்.'' (லண்டன் எக்கானமிஸ்ட், 1866 ஜூன் 16.)

மறு புறம்: ''பிரேசிலின் உண்டியல் மாற்றுக் காலம் இரண்டு மாத, மூன்று மாதக் காட்சிக் கெடுவாகவே இருந்து வருகிறது; ஆண்ட்வெர்ப்பிலிருந்து உண்டியல்கள்'' (லண்டனில்) ''மூன்று மாதத் தேதிக் கெடுவில் மாற்றப்படுகின்றன; மான்செஸ்டரும் பிராட்ஃபோர்டும் கூட மூன்று மாத கால அல்லது இன்னும் நீண்ட தேதிக் கெடுக்களில் லண்டனில் உண்டியல் மாற்றுகின்றனர். வணி கர் அவரது சரக்கின் பேரில் எடுக்கப்பட்ட உண்டியல்களின் மாற் றுத் தேதிக்குப் பின் — முன்னால் அல்ல — நியாயமான காலத்திற் குள் அச்சரக்கை விற்று வரவை அடைவதற்கு வாய் விட்டுச் சொல் லாத உடன்பாட்டின் பேரில் நியாயமான வாய்ப்பு அளிக்கப்படு கிறது. இந்த நோக்கில், இந்திய உண்டியல்களுக்கான இப்போதைய மாற்றுக் கெடுவை மிதமிஞ்சியதாகக் கருத முடியாது. பெரும்பாலும் மூன்று மாத காலக் கொடுப்புக் கெடுவில் [prompt] லண்டனில் விற்கப்படும் இந்திய விளைபொருளை விற்று முடிப்பதில் நேரும்

கால இழப்புக்கு இடமளிப்போமானால் ஐந்து மாதத்துக்குள் அதை விற்றுக் காசாக்கி விட முடியாது. இதன்றி, இந்தியாவில் வாங்கியதற்கும் ஆங்கிலேயப் பண்டக சாலையை வந்தடைவதற்கும் இடையே (சராசரியாக) ஐந்து மாத காலம் கழிந்திருக்கும். ஆக இங்கே பத்து மாத காலம் ஆகிறது; ஆனால் சரக்குகளின் பேரில் எடுக்கும் உண்டியல் ஏழு மாத காலத்துக்கு மேல் உயிரோடிருப்பதில்லை.'' (மேலது, 1866 ஜூன் 30.) 1866 ஜூலை 2இல், பிரதானமாக இந்தியாவுடனும் சீனாவுடனும் தொழில் புரியும் ஐந்து பெரிய லண்டன் வங்கிகளும், பாரிசைச் சேர்ந்த Comptoir d'Escompteஉம் ''கீழை நாடுகளிலுள்ள எங்கள் கிளைகளும் முகமைகளும் நான்கு மாதக் காட்சிக் கெடுவைத் தாண்டாத கால வரையில் மட்டுமே மாற்று உண்டியல்களை வாங்கவும் விற்கவும் செய்யும்'' என்று முன்னறிவிப்புக் கொடுத்தன. (மேலது, 1866 ஜூலை 7.) ஆனால் இந்தக் குறைப்பு பலிக்காமற் போனதால் அதனைக் கைவிட வேண்டியதாயிற்று. (பிற்காலத்தில் சூயஸ் கால்வாய் இதையெல்லாம் அடியோடு மாற்றி விட்டது.)

சரக்குச் சுற்றோட்டத்தின் காலம் நீள நீள, சந்தையில் விலைகள் மாறும் ஆபத்தும் அதிகரிக்கிறது. ஏனெனில் விலை மாற்றங்கள் ஏற்படுவதற்கான காலம் நீளுகிறது.

சுற்றோட்டக் காலத்திலான வேறுபாடுகள் ஒரே தொழிற் கிளையைச் சேர்ந்த தனிப்பட்ட வெவ்வேறு மூலதனங்களிடையே எழுவதாயினும், வெவ்வேறு தொழிற் கிளைகளிடையே எழுவதாயினும், உடனுக்குடன் விலையை ரொக்கமாகக் கொடுக்காமல் வெவ்வேறு கொடுப்புக் காலக் கெடுக்களின் படி கொடுப்பதால் ஏற்படும் வேறுபாடுகளாகும். விற்றல்வாங்கலின் போது பணக் கொடுப்புக்கான வெவ்வேறு கால வரையறைகளே இவ்வேறுபாடுகளுக்குக் காரணம். கடன்-செலாவணி முறைக்கு முக்கியத்துவம் வாய்ந்த இந்த விவரம் குறித்து இங்கே நாம் இதற்கு மேல் கவனம் செலுத்த வேண்டியதில்லை.

புரள்வுக் காலத்திலான வேறுபாடுகள் சரக்குகளைத் தயாரித்துக் கொண்டுவந்து ஒப்படைப்பது பற்றிய ஒப்பந்தங்களின் பருமன்களிலிருந்தும் எழுகின்றன. இந்த ஒப்பந்தங்களின் பருமன் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் விரிவுக்கும் அளவுவீத்துக்கும் ஏற்ப அதிகரிக்கிறது. சரக்கு ஒப்படைப்பு ஒப்பந்தம் வாங்குபவருக்கும் விற்பவருக்குமிடையே நடைபெறுவதாய் இருப்பதால் இது சந்தைக் குரித்தான, சுற்றோட்டத் துறைக்குரித்தான நடவடிக்கையாகும். மூலதனப் புரள்வுக் காலத்தில் எழுகிற வேறுபாடுகள் இவ்விதம் சுற்றோட்டத் துறையிலிருந்து பிறக்கிறவை என்றாலும் இவை உடனடியாகவே உற்பத்தித் துறையையும் பாதிப்பவை. பணக் கொடுப்புக் கால வரைகளும் கடன் நிபந்தனை வரையறைகளும் எப்படி இருந்த போதிலும், உடனே ரொக்கப் பணம்

கொடுக்கப்படுவதாய் இருந்த போதிலும், உற்பத்தித் துறையிலான இந்த பாதிப்பு ஏற்படவே செய்கிறது. எடுத்துக்காட்டாக நிலக்கரி, பருத்தி, நூல் முதலானவை பகுபடக் கூடிய உற்பத்திப் பொருட்களாகும். ஒரு வேலை-நாளுக்குரிய அளவில் தினந்தோறும் உற்பத்திப் பொருள் தயாராகி விடுகிறது. ஆனால், நூற்பு அதிபரோ சுரங்க அதிபரோ உற்பத்திப் பொருளைப் பெரிய அளவில் வழங்குவதாக ஒப்பந்தம் செய்து கொள்வாராயின், தொடர்ச்சியான வேலை-நாட்களைக் கொண்ட நான்கு அல்லது ஆறு வார காலம் இதற்குத் தேவைப்படலாம். மூலதனத்தின் முன்னீட்டுக் காலத்தைப் பொறுத்த வரை, அப்போது நான்கு அல்லது ஆறு வார காலம் கொண்ட தொடர்ச்சியான வேலைக் காலம் இந்த உழைப்பு நிகழ்முறையில் செயல்படுகையில் ஏற்படும் அதே நிலைமையைத்தான் அவர் எதிர்நோக்க வேண்டியிருக்கும். இப்படிச் சொல்லுகையில், சரக்காணையின் படி அவர் வழங்க வேண்டிய முழு அளவையும் உற்பத்தி செய்து முடித்து அப்படியே முழு மொத்தத்தையும் கொண்டுபோய் ஒப்படைப்பதாக அல்லது எப்படியும் சரக்கை அதன் முழு அளவில் ஒப்படைத்த பிறகே சரக்குக்குரிய விலை அவருக்குக் கொடுக்கப்படுவதாக வைத்துக் கொள்கிறோம். தனித்து நோக்குமிடத்து, ஒரு வேலை-நாளுக்குரிய உற்பத்திப் பொருள் நாள் தோறும் தயாரித்து முடிக்கப்படுகிறது. ஆனால் இப்படித் தயாரித்து முடிக்கப்படும் சரக்களவு ஒப்பந்தப் படி வழங்கியாக வேண்டிய மொத்தச் சரக்கில் ஒரு சிறு பகுதியே ஆகும். இப்படிச் சிறு அளவில் தயாரித்து முடிக்கப்பெறும் சரக்கானது உற்பத்தி நிகழ்முறையைக் கடந்து சென்று விட்டது என்றாலுங்கூட, இன்னமும் அது உள்ளுறை மூலதனமாகத்தான் பண்டக சாலையில் முடங்கிக் கிடக்கிறது.

இப்போது, சுற்றோட்டக் காலத்தின் இரண்டாவது கட்டமான வாங்கல்-காலத்தை, அதாவது மூலதனம் பண வடிவத்திலிருந்து திரும்பவும் திறனுடை-மூலதனக் கூறுகளாக மாறும் காலத்தை எடுத்துக் கொள்வோம். இந்தக் காலத்தின் போது, அது குறுகிய காலத்துக்கோ நீண்ட காலத்துக்கோ பண-மூலதனமாய் நீடித்தாக வேண்டும். எனவே, முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தில் குறிப்பிட்ட பகுதி — இந்தப் பகுதி ஓயாமல் மாறும் கூறுகளாலானது என்றாலும் — காலமெல்லாம் பண-மூலதனமாகவே இருந்தாக வேண்டும். எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட தொழிலில் முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தில், £100 $\times$ n பண-மூலதன வடிவில் எந்நேரமும் தயாராய் இருந்தாக வேண்டும்; இவ்வாறு இந்த £100 $\times$ n என்பதன் உட்கூறுகள் எல்லாம் தொடர்ந்து திறனுடை-மூலதனமாக மாற்றப்படும் போதே சுற்றோட்டத் துறையில் சரக்கு-மூலதனம் ஈட்டேற்றம் பெறுவதால் வந்து சேரும் வரவால் ஓயாமல் மாற்றீடு செய்யப்பட்டு இத்தொகை குறையாமல் இருக்கிறது. ஆகவே முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பில் குறிப்பிட்ட

பகுதி எந்நேரமும் பண-மூலதன வடிவில் இருந்து வருகிறது; அதாவது உற்பத்தித் துறைக்கல்லாமல் சுற்றோட்டத் துறைக்குரிய மூலதன வடிவில் இருந்து வருகிறது.

நாம் முன்பு பார்த்தது போல, மூலதனம் சரக்கு-மூலதன வடிவில் கட்டுண்டிருக்கும் காலம் சந்தையின் தொலைவினால் நீண்டு விடுவதன் விளைவாகப் பணத்தின் மீள்வு தாமதப்படுகிறது; மூலதனம் பண-மூலதன நிலையிலிருந்து திறனுடை-மூலதனமாக மாறுவதும் இதனால் தாமதப்படுகிறது.

மேலும், சரக்குகளை வாங்கிச் சேர்ப்பது தொடர்பாய் (அத்தியாயம் VI) மேலே நாம் பார்த்தது போல, வாங்கி வருவதற்குக் காலமாவதால், பிரதான கச்சாப் பொருள் ஆதாரங்கள் தொலைவில் அமைந்திருப்பதால், அதிக காலத்துக்கு முன்பே கச்சாப் பொருளை வாங்கி வந்து திறனுடை இருப்பாக [productive supply], அதாவது உள்ளுறைத் திறனுடை-மூலதனமாகக் கையில் வைத்துக் கொள்வது அவசியமாகி விடுகிறது. உற்பத்தியின் அளவுவீதம் [scale of production] மற்றபடி மாறாதிருக்குமாயின், எந்தவொரு நேரத்திலும் முன்னீடு செய்யப்பட வேண்டிய மூலதனத்தின் அளவும் முன்னீட்டுக் கால அளவும் இதனால் அதிகரிக்கின்றன.

கச்சாப் பொருள் குறிப்பிடத்தக்க அளவில் சந்தைக்கு வருகிற காலங்கள் அதிகமாகவோ குறைவாகவோ நீளுவதால் பல்வேறு தொழிற் கிளைகளில் இதே போன்ற விளைவு ஏற்படுகிறது. உதாரணமாக, லண்டனில் கம்பளியானது மூன்று மாதத்துக்கு ஒரு முறை பெரிய அளவில் ஏலத்துக்கு வருகிறது. கம்பளிச் சந்தையின் மீது ஆட்சி செலுத்தும் ஏலங்கள் இவை. இதற்கு மாறாக, பருத்திச் சந்தையானது ஒரேசீராக இல்லா விட்டாலும் தொடர்ச்சியாக அறுவடைக்கு அறுவடை புது இருப்புகளைப் பெறுகிறது. இப்படிப்பட்ட காலங்கள் இந்தக் கச்சாப் பொருட்களை வாங்கிச் சேர்ப்பதற்குரிய முக்கியத் தேதிகளைத் தீர்மானிக்கின்றன. ஊக வாணிப முறையில் கச்சாப் பொருட்கள் வாங்கப்படுதல் குறிப்பிடத்தக்கவாறு ஊக்குவிக்கப்படுகிறது. இதனால் இந்த உற்பத்தி-அடிக்கூறுகளுக்காக அதிக காலத்துக்கோ குறுகிய காலத்துக்கோ முன்னீடு செய்வது அவசியமாகி விடுகிறது. இதே போல், உற்பத்தியாகிற சரக்கின் தன்மையால் உந்தப்பட்டு, சரக்கை உடனே விற்காமல் அதிக காலத்துக்கோ குறுகிய காலத்துக்கோ ஊக வாணிப நோக்குடன் வேண்டுமென்றே உள்ளுறை சரக்கு-மூலதன வடிவில் இருத்தி வைக்கின்றனர். ''விவசாயியும் ஓரளவுக்கு ஊக வணிகராய் இருந்தாக வேண்டும். ஆகவே, நிலைமைகள் அதனை உசிதமாக்கும் போது அவர் தமது விளைபொருளின் விற்பனையைத் தள்ளிப் போட வேண்டியிருக்கிறது....'' இங்கே பொதுவான சில விதிகள் குறிக்கப்படுகின்றன. ''...உற்பத்திப் பொருட்களின் விற்பனையானது பெரும்பாலும் ஆளையும் பண்டத்தையும் இடத்தையும் பொறுத்ததாகும்.

திறமை வாய்ந்தவராகவும் அதிர்ஷ்டமுள்ளவராகவும்(!) இருப்பதோடு, போதிய அளவு இயக்க மூலதனம் உடையவராகவும் இருக்கும் எவரும் விலைகள் வெகுவாகக் குறைந்துள்ள போது தமது தானிய மகசூலை விற்காமல் ஓராண்டு காலத்துக்கு சேமித்து வைப்பாராயின், குறை சொல்வதற்கில்லை. மறு புறம் இயக்க மூலதனம் இல்லாதவராகவோ ஊக வாணிபத்தில் சிறிதும் ஆர்வ மற்றவராகவோ இருப்பவர்தான் சராசரியான நடப்பு விலைக்கே விற்க முயலுவார்: விற்பதற்கு வாய்ப்பு கிடைத்தவுடனே விற்றாக வேண்டிய நிலையில் இருப்பவர் அவர். கம்பளி உரோமத்தை ஓராண்டுக்கு மேல் வைத்திருந்தால் இழப்புதான் ஏற்படும். ஆனால் தானியத்தையும் எண்ணெய் வித்துகளையும் பல ஆண்டுக்குச் சேமித்து வைக்கலாம் — அவற்றின் இயல்புகள் கெடுவதில்லை, தரமும் குறைவதில்லை. பொதுவாக இடையிடையே குறுங்காலங்களுக்குக் கடுமையான விலை ஏற்ற இறக்கத்துக்கு உள்ளாகும் விளைபொருட்களை (எடுத்துக்காட்டு: எண்ணெய் வித்து, முசுக்கட்டையினப் பழங்கள், முள்ளிப் பழங்கள் முதலானவை) அவற்றின் விற்பனை-விலை உற்பத்தி-விலையை விட மிகவும் குறைவாய் இருக்கும் ஆண்டுகளில் விற்காமல் சேமித்து வைப்பதே அனுகூலமானது. அன்றாடம் பராமரிப்புச் செலவு செய்ய வேண்டியிருக்கும் பொருட்களை (எடுத்துக்காட்டு: கொழுக்க வைக்கப்பட்ட கால்நடைகள்) அல்லது சடுதியில் கெட்டழியக் கூடியவற்றை (எடுத்துக்காட்டு: பழம், உருளைக் கிழங்கு முதலானவை) விற்காமல் காலங்கடத்துவது சிறிதும் ஏற்புடைத்தன்று. குறிப்பிட்ட பண்டத்துக்குப் பல இடங்களில் சிற்சில பருவங்களில் அதன் குறைந்தபட்ச விலையும் வேறு சில பருவங்களில் அதன் உயர்ந்தபட்ச விலையும் கிடைக்கிறது. இவ்வாறு சில பகுதிகளில் தானியத்தின் சராசரி விலையானது கிறிஸ்துமசுக்கும் ஈஸ்டருக்கும் இடையில் இருப்பதை விட புனித மார்ட்டின் தினத்தருகே குறைந்து விடுகிறது. மேலும், சில உற்பத்திப் பொருட்கள் சில வட்டாரங்களில் சில நேரங்களில் மட்டுமே நல்ல விலைக்கு விற்கின்றன. இவ்வட்டாரங்களின் கம்பளிச் சந்தைகளில் கம்பளியை உதாரணமாகக் கூறலாம். பிற நேரங்களில் இங்கு கம்பளி வர்த்தகம் மந்தமாகி விடுகிறது....'' (கிர்ச்சோஃப், பக்கம் 302.)

சுற்றோட்டக் காலத்தின் இரண்டாம் பாதியை, அதாவது பணமானது திரும்பவும் திறனுடை-மூலதனக் கூறுகளாக மாற்றப்படுகிற காலத்தை ஆராயும் போது, இந்த மாற்றத்தை மட்டும் கருதினால் போதாது, விற்பனைச் சந்தையில் தொலைவுக்கு ஏற்ப பணம் திரும்பி வருவதற்கு எடுத்துக் கொள்ளும் காலத்தை மட்டும் கருதினால் போதாது. பிரதானமாகக் கருத வேண்டியது என்னவென்றால், முன்னீடாகியுள்ள மூலதனத்தில் எந்நேரமும் பண வடிவில், அதாவது பண-மூலதன நிலையில் தயாராய்க் கிடைக்கும் விதத்தில் இருக்கக்

கூடிய பகுதி எவ்வளவு என்பதுதான்.

சகல விதமான ஊக வாணிபத்தையும் [speculation] ஒதுக்கி விடுவோமானால், திறனுடை இருப்பாக எந்நேரமும் கையில் இருந்தாக வேண்டிய சரக்குகளை எந்த அளவுக்கு வாங்கிச் சேர்க்க வேண்டும் என்பது, இந்த இருப்பின் மாற்றீடு அவசியமாகும் காலங் களையும், ஆகவே சந்தை நிலவரங்களைச் சார்ந்தமைகிற சூழ் நிலைமைகளையும் பொறுத்ததாகும். இந்தச் சூழ்நிலைமைகள் வெவ் வேறு கச்சாப் பொருளுக்கும் வெவ்வேறாக இருப்பவை. இந்தச் சரக்குகளை வாங்கிச் சேர்ப்பதற்கு அவ்வப்போது பெரிய அளவில் மொத்தத் தொகைகளாகப் பணத்தை முன்னீடு செய்தாக வேண்டும். மூலதனத்தின் புரள்வைப் பொறுத்து இந்தப் பணம் ஓரளவு விரை வாக மீள்வதாயினும் எப்போதும் சன்னம் சன்னமாகவே இந்த மீள்வு நடந்தேறுகிறது. ஒரு பகுதி, அதாவது கூலியாக மாற்றப்படும் பகுதி குறுங்காலத்தில் மீண்டும் செலவிடப்படுகிறது. ஆனால் இன்னொரு பகுதி, அதாவது கச்சாப் பொருள் முதலானவையாக மாற்றப்பட வேண்டிய பகுதி வாங்குவதற்கோ செலுத்துவதற்கோ வேண்டிய சேம நிதியாக [reserve fund] நீண்டதொரு காலத்துக்குத் திரட்டப்பட்டாக வேண்டும். இப்படித் திரளுகிற இப்பகுதியின் பரிமாணம் மாறிய வண்ணம் இருந்தாலும், இது பண-மூலதன வடிவில் இருப்பதாகும்.

உற்பத்தி நிகழ்முறையிலிருந்தோ சுற்றோட்ட நிகழ்முறையி லிருந்தோ எழும் வேறு சில நிலைமைகள் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் குறிப்பிட்ட பகுதி பண வடிவில் தயாராய் இருப் பதை எப்படி அவசியமாக்குகின்றன என்பதை அடுத்த அத்தி யாயத்தில் காண்போம். பொதுவாக ஒரு தொழிலில் தேவைப்படும் மூலதனத்தில் ஒரு பகுதியானது பண-மூலதனம், திறனுடை-மூலதனம், சரக்கு-மூலதனம் என்ற மூன்று கட்டங்களையும் அடுத் தடுத்து கடந்து செல்கிறது என்பதை மட்டுமல்லாமல், அதன் வெவ் வேறு பகுதிகள் — இந்தப் பகுதிகளின் ஒப்பீட்டுப் பருமன்கள் எந் நேரமும் மாறிக் கொண்டிருந்தாலும் — தொடர்ச்சியாகவும் ஒரே சமயத்திலும் இந்த வடிவங்களைப் பெறுகின்றன என்பதையும் பொருளாதார அறிஞர்கள் அடிக்கடி மறந்து விடுவதைக் குறிப்பிட் டாக வேண்டும். இன்னும் முக்கியமாய் அவர்கள் எந்நேரமும் பண-மூலதன வடிவில் தயாராய் இருக்கிற பகுதியை மறந்து விடுகிறார்கள். ஆனால் முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் புரிந்து கொள் வதற்கு இது அத்தியாவசியமானதாகும். எனவே நடைமுறையிலும் இதன் முக்கியத்துவம் தெளிவாகவே புலனாகிறது.

### அத்தியாயம் XV

## முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் பருமன் மீது புரள்வுக் காலம் ஏற்படுத்தும் விளைவு

இந்த அத்தியாயத்திலும், இதற்கு அடுத்ததாகிய பதினாறாவது அத்தியாயத்திலும், மூலதனத்தின் தற்பெருக்கத்தின் மீது புரள்வுக் காலம் ஏற்படுத்தும் தாக்கத்தை ஆராய்வோம்.

ஒன்பது வார வேலைக் காலத்தின் உற்பத்திப் பொருளாகிய சரக்கு-மூலதனத்தை எடுத்துக் கொள்வோம். நிலை-மூலதனத்தின் சராசரித் தேய்மானத்தின் காரணமாய் உற்பத்திப் பண்டத்தின் மதிப்போடு சேர்க்கப்படுகிற மதிப்புப் பகுதியையும், மற்றும் உற்பத்தி நிகழ்முறையின் போது இப்பண்டத்துக்கு வந்து சேரும் உபரி-மதிப்பையும் இப்போதைக்குக் கவனியாது ஒதுக்கி விடுவோம். இந்நிலையில் இந்த உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு அதன் உற்பத் திக்காக முன்னீடு செய்யப்பட்ட சுழல்-மூலதனத்தின் மதிப்புக்குச் சமமாய் இருக்கும்; அதாவது கூலி, பண்டத்தின் உற்பத்திக்காக நுகரப்பட்ட கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்கள் ஆகிய வற்றின் மதிப்புக்குச் சமமாய் இருக்கும். இந்த மதிப்பு £900 எனக் கொள்வோம். எனவே வாரம் தோறும் முன்னீடு செய்யப்படுவது £100 ஆகும். உற்பத்திக் காலமும் ஒன்பது வாரம்தான். ஏனெனில் இங்கு வேலைக் காலமும் உற்பத்திக் காலமும் ஒன்றே. இந்த வேலைக் காலத்தில் உற்பத்தியாவது பகுபடா விடாத்தொடரான பண்டமாக வும் [continuous product] இருக்கலாம், பகுபடும் பண்டமாகவும் [discrete product] இருக்கலாம்—விற்பனைக்காக எந்தவொரு நேரத் திலும் சந்தைக்கு வருகிற பகுபடும் பண்டத்தின் உற்பத்திக்கு ஒன்பது வார உழைப்பு தேவைப்படுகிற வரை எப்படி இருப்பினும் ஒன்றுதான். சுற்றோட்டக் காலம் மூன்று வாரம் எனக் கொள் வோம். ஆக, புரள்வுக் காலம் பன்னிரண்டு வாரமாகிறது. முன்னீடு செய்யப்படும் திறனுடை-மூலதனம் ஒன்பது வாரத்தில் சரக்கு-மூல தனமாக மாறுகிறது. இதில் மூன்று வாரம் அதன் சுற்றோட்டக் கால மாகும். ஆகவே, பதின்மூன்றாவது வாரம் தொடங்கும் போதுதான் புதிய உற்பத்திக் காலம் ஆரம்பமாக முடியும்; மூன்று வார

காலத்துக்கு, அதாவது புரள்வுக் காலத்தில் கால் பகுதிக்கு உற்பத்தி யானது தடைபட்டு நின்றாக வேண்டும். உற்பத்திப் பொருளை விற் பதற்கு சராசரியாக இவ்வளவு காலம் ஆவதாய்க் கொண்டாலும் சரி, சந்தையின் தொலைவு காரணமாகவோ விற்கப்படும் சரக்குகளது விலைக்கான கொடுப்புக் காலவரைகள் [terms of payment] காரண மாகவோ இவ்வளவு காலம் ஆவதாய்க் கொண்டாலும் சரி, எல்லாம் ஒன்றுதான். மூன்று மாதத்துக்கு ஒரு முறை மூன்று வார காலத்துக்கு உற்பத்தி தடைபட்டு நிற்கும், அதாவது ஓராண்டில் மூன்று வாரம் வீதம் நான்கு தரம், அதாவது பன்னிரண்டு வாரத் துக்கு உற்பத்தி தடைபடும்; ஓராண்டு புரள்வுக் காலத்தில் மூன்று மாதத்துக்கு, அதாவது காலாண்டுக்கு உற்பத்தி நின்று போகும், உற் பத்தி தொடர்ச்சியாக அதே அளவுவீதத்தில் வாரா வாரம் நடைபெற வேண்டுமானால், பின்வரும் இரண்டில் ஒன்றே அதற்குரிய வழி:

உற்பத்தியின் அளவுவீதத்தை குறைத்தாக வேண்டும்; முதலாவது புரள்வின் வேலைக் காலம், சுற்றோட்டக் காலம் இரண்டின் போதும் வேலை தொடர்ந்து நடைபெறுவதற்கு £900 போது மானதாய் இருக்கும் படி குறைத்தாக வேண்டும். இவ்விதம் முதலா வது புரள்வுக் காலம் முடிவதற்கு முன்பே, பத்தாவது வாரத்தின் தொடக்கத்தில், இரண்டாவது வேலைக் காலமும், எனவே ஒரு புதிய புரள்வுக் காலமும் ஆரம்பமாகிறது. ஏனென்றால் புரள்வுக் காலம் பன்னிரண்டு வாரமும் வேலைக் காலம் ஒன்பது வாரமும் ஆகும். பன்னிரண்டு வாரத்துக்கு £900 என்பதால் ஒரு வாரத் துக்குக் கிடைப்பது £75. முதலாவதாக, தொழிலின் அளவுவீதம் இப்படிக் குறைய வேண்டுமானால், நிலை-மூலதனத்தின் பரிமாணம் மாறியாக வேண்டும், மொத்தத்தில் தொழில் சுருங்கியாக வேண் டும். இரண்டாவதாக, இப்படிப்பட்ட குறைப்பு சாத்தியம்தானா என்னும் கேள்வி எழுகிறது. ஒவ்வொரு தொழிலிலும் முதலீட்டுக்கு அதன் உற்பத்தியினது வளர்ச்சி நிலைக்கு ஒப்ப இயல்பான குறைந் தபட்ச அளவு ஒன்று உள்ளது, முதலீடாகியுள்ள மூலதனம் அதன் போட்டி ஆற்றலை இழந்து விடாமல் இருப்பதற்கு இந்தக் குறைந்த பட்ச அளவு அவசியமாகும். இந்த இயல்பான குறைந்தபட்சமானது முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து அதிகரித்துச் செல்கிறது. இவ்விதம் அது மாறாமல் ஒரே நிலையில் இருப்பதில்லை. எந்தவொரு நேரத்திலும் நிலவுகிற இயல்பான குறைந்தபட்சத்துக்கும் அதிகரித்துச் செல்லும் இயல்பான அதிகபட் சத்துக்கும் இடையே இடைநிலைப் படிகள் ஏராளமுண்டு. இந்த இடைநிலை மூலதனத்தின் பல்வேறு முதலீட்டு வீதங்களுக்கு இடமளிக்கிறது. இந்த இடைநிலையின் வரம்புகளுக்கு உட்பட்டு குறைப்புகள் ஏற்படலாம்; அவற்றின் கீழ்வரம்பே அவ்வப்போது நிலவுகிற இயல்பான குறைந்தபட்சமாகும்.

உற்பத்தியில் சிக்கல் ஏற்படும் போதும், சந்தைகளில் சரக்கு

குவிந்து மிதமிஞ்சியதாகும் போதும், கச்சாப் பொருட்களின் விலை உயரும் போதும், இன்ன பிறவற்றின் போதும், நிலை-மூலதனம் குறிப்பிட்ட அதே அளவில் இருக்க, வேலை நேரத்தை உதாரண மாய்ச் சரிபாதியாகக் குறைத்து, சுழல்-மூலதனத்தின் இயல்பான முதலீட்டு அளவு குறைக்கப்படுகிறது. இதற்கு மாறாக, செழிப்புக் காலங்களில், நிலை-மூலதனம் அதே அளவில் இருக்க ஒரு புறம் வேலை நேரத்தை நீட்டியும், மறு புறம் அதனை மும்முரமாக்கியும் சுழல்-மூலதனம் மிதமிஞ்சிய விரிவகற்சிக்கு உள்ளாக்கப்படுகிறது. ஆரம்ப முதலே இப்படிப்பட்ட ஏற்ற இறக்கங்களுக்கு உள்ளாக வேண்டிய தொழில்களில், மேற்சொன்ன நடவடிக்கைகள் மூலம் ஓரளவும், நிலை-மூலதனச் சேம வைப்பை (இரயில்வேயில் இழு பொறிகளின் சேம வைப்பு) ஈடுபடுத்துவதோடு கூட இன்னும் அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்களை வேலைக்கமர்த்து வதன் மூலம் ஓரளவும் நிலைமை சமாளிக்கப்படுகிறது. ஆனால் நாம் இயல்பான நிலைமைகளே நிலவுவதாக வைத்துக் கொள் வதால், அதீத ஏற்ற இறக்கங்களை [abnormal fluctuations] இங்கு பரிசீலிக்கத் தேவையில்லை.

ஆகவே, உற்பத்தி விடாத்தொடராக நடைபெறும் பொருட்டு அதே அளவு சுழல்-மூலதனம் இங்கே இன்னும் அதிக காலத்துக்கு, ஒன்பது வாரத்துக்கு பதில் பன்னிரண்டு வாரத்துக்கு நீடிக்கும் படி செலவிடப்படுகிறது. ஆதலால் காலக் கூறு ஒவ்வொன்றிலும் திறனுடை-மூலதனம் இன்னும் குறைந்த அளவில் செயல்படுகிறது. திறனுடை-மூலதனத்தின் சுழலும் பகுதி 100 ஆக இருந்தது 75 ஆக, அதாவது கால் பங்கு குறைகிறது. ஒன்பது வாரம் கொண்ட வேலைக் காலத்துக்குச் செயல்படும் திறனுடை-மூலதனத்தில் ஏற் படும் குறைவின் மொத்த அளவு $25 \times 9 = £225$, அதாவது £900இல் கால் பங்கு. ஆனால் சுற்றோட்டக் காலம் புரள்வுக் காலத்தோடு கொண்டுள்ள விகிதமும் பன்னிரண்டில் மூன்று, அதாவது நான்கில் ஒன்று. இதிலிருந்து தெரிவது என்னவென்றால்: சரக்கு-மூலதனமாக மாறிய திறனுடை-மூலதனத்தினது சுற்றோட் டத்தின் போது உற்பத்தி தடைபடலாகாது என்றால், வாரம் தவ றாமல் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றால், கூடுதலாய் இதற்கு வேண்டிய சுழல்-மூலதனம் இல்லையானால் உற்பத்தி நடவடிக்கைகளைக் குறுக்குவதுதான், செயல்படும் திறனுடை-மூலதனத்தின் சுழலும் அங்கத்தைக் குறைப்பதுதான் இதற்குரிய ஒரே வழி. சுற்றோட்டக் காலத்தின் போது உற்பத்திக்காக இவ்விதம் விடுவிக்கப்படும் சுழல்-மூலதனப் பகுதி முன்னீடு செய்யப்படும் மொத்தச் சுழல்-மூலதனத்தோடு கொண்டுள்ள விகித உறவு சுற்றோட்டக் காலம் புரள்வுக் காலத்தோடு கொண்டுள்ள அதே விகித உறவுதான். ஏற்கெனவே குறிப்பிட்டது போல, உழைப்பு நிகழ்முறை வாரம் தோறும் ஒரே அளவுவீதத்தில் நடைபெறுகிற

உற்பத்திக் கிளைகளுக்கு மட்டுமே இது பொருந்தும்; வெவ்வேறு வேலைக் காலங்களில் வெவ்வேறு அளவுகளில் முதலீடு செய்ய வேண்டியிருக்கும் உற்பத்திக் கிளைகளுக்கு — உதாரணமாய் வேளாண்மைக்கு — இது பொருந்தாது.

இதற்கு நேர்மாறாக அனுமானம் செய்வோமானால், அதாவது உற்பத்தியின் அளவுவீதத்தையும், எனவே வாரம் தோறும் முன்னீடு செய்ய வேண்டிய சுழல்-மூலதனத்தையும் குறைக்க முடியாது, தொழிலின் தன்மை அதற்கு இடந்தராது என்று கொள்வோமாயின், கூடுதலான சுழல்-மூலதனத்தைக் கொண்டுதான் — மேற்கண்ட உதாரணத்தில் £300 — உற்பத்தியை இடையறாது தொடர்ந்து நடத்த முடியும். பன்னிரண்டு வாரப் புரள்வுக் காலத்தின் போது, அடுத்தடுத்து £1,200 முதலீடு செய்யப்படுகிறது. £300 என்பது இந்தத் தொகையில் கால் பங்கு ஆகும்; அதே போல் மூன்று வாரம் என்பது பன்னிரண்டு வாரத்தில் கால் பங்கு ஆகும். ஒன்பது வார வேலைக் காலத்தின் முடிவில், £900 மூலதன-மதிப்பு திறனுடை-மூலதன வடிவிலிருந்து சரக்கு-மூலதன வடிவுக்கு மாறியிருக்கிறது. அதன் வேலைக் காலம் முடிவடைந்து விடுகிறது. ஆனால் அதே மூலதனத்தைக் கொண்டு திரும்பவும் வேலைக் காலம் ஆரம்பமாக முடியாது. அது சரக்கு-மூலதனமாகச் சுற்றோட்டத் துறையில் இருந்து வருகிற மூன்று வார காலமும் உற்பத்தி நிகழ்முறையைப் பொறுத்த வரை இம்மூலதனம் இல்லாதொழிந்து விடுவது போன்ற நிலைதான் ஏற்படுகிறது. இப்போதைய உதாரணத்தில் கடன்-செலாவணி உறவுகள் அனைத்தையும் ஒதுக்கி விடுகிறோம்; முதலாளி முழுக்க முழுக்க சொந்தப் பணத்தைக் கொண்டே செயல்படுவதாகக் கொள்கிறோம். முதல் வேலைக் காலத்துக்கென்று முன்னீடு செய்யப்படும் மூலதனம் அதன் உற்பத்தி நிகழ்முறையை முடித்துக் கொண்டு சுற்றோட்ட நிகழ்முறையில் இருந்து வரும் மூன்று வார காலமும் உற்பத்தி தடைபடாமல் தொடர்வதற்குக் கூடுதல் முதலீடாக £300 செயல்படுகிறது.

இது தொடர்பாய் இப்போது பின்வருவனவற்றை கவனிக்க வேண்டும்:

முதலாவதாக: முதலில் முன்னீடு செய்யப்படும் £900 மூலதனத்தின் வேலைக் காலம் ஒன்பது வாரத்தில் முடிவடைகிறது; இதன் பின் மூன்று வாரம் கழித்த பிறகே, அதாவது பதின்மூன்றாவது வாரம் தொடங்கும் போதுதான் அது மீள்கிறது. ஆனால் £300 கூடுதல் மூலதனத்தைக் கொண்டு உடனடியாகவே புதிய வேலைக் காலம் தொடக்கப்பட்டு விடுகிறது. இவ்விதம் உற்பத்தி தடைபடாமல் விடாத்தொடராய் நடைபெற முடிகிறது.

இரண்டாவதாக, ஆரம்ப மூலதனமாகிய £900இன் பணிகளும், முதல் ஒன்பது வார வேலைக் காலம் முடிந்த பின் தடையேதுமின்றி இரண்டாவது வேலைக் காலம் ஆரம்பமாவதற்காக அந்த

ஒன்பது வார முடிவில் புதிதாகச் சேர்க்கப்படும் மூலதனமான £300இன் பணிகளும் முதல் புரள்வுக் காலத்தில் தெளிவாகவே வெவ்வேறாகப் பிரிந்திருக்கின்றன, எப்படியும் அவற்றை வேறு படுத்தி வெவ்வேறாகப் பிரிக்க முடிகிறது. ஆனால் இரண்டாவது புரள்வுக் காலத்தின் போது அவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து விடுகின்றன.

இந்த விஷயத்தை மேலும் தெளிவுபடுத்துவோம்.

முதல் புரள்வுக் காலம் 12 வாரம். முதல் வேலைக் காலம் 9 வாரம். இதற்காக முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் புரள்வு 13ஆவது வாரத்தின் தொடக்கத்தில் முடிவடைகிறது. கடைசி மூன்று வார காலத்தில், கூடுதல் மூலதனமாகிய £300 செயல் பட்டு, 9 வாரம் கொண்ட இரண்டாவது வேலைக் காலத்தைத் தொடக்கி வைக்கிறது.

இரண்டாவது புரள்வுக் காலம். 13ஆவது வாரத்தின் தொடக் கத்தில் £900 மீள்கிறது; புதிய புரள்வைத் தொடக்கத் தயாராய் இருக்கிறது. ஆனால் கூடுதல் மூலதனமாகிய £300 இரண்டாவது வேலைக் காலத்தை 10ஆவது வாரத்திலேயே தொடக்கி விட்டது. இதன் பயனாய் 13ஆவது வாரத்தின் தொடக்கத்தில் வேலைக் காலத்தில் மூன்றிலொரு பங்கு ஏற்கெனவே முடிந்து விட்டது; £300 திறனுடை-மூலதனம் என்ற நிலையிலிருந்து உற்பத்திப் பொருளாக மாறி விட்டது. இரண்டாவது வேலைக் காலம் முடிவுற இன்னும் 6 வாரம் மட்டுமே தேவை என்பதால், மீண்டு வந்த மூலதனமான £900இல் மூன்றிலிரண்டு பங்கு மட்டுமே, அதாவது £600 மட்டுமே இரண்டாவது வேலைக் காலத்தின் உற்பத்தி நிகழ் முறையில் சேர முடியும். ஆரம்பத்திய £900இல் £300 விடுவிக் கப்பட்டு, முன்பு கூடுதல் மூலதனமான £300 முதல் வேலைக் காலத்தில் புரிந்த அதே பணியைப் புரிகிறது. இரண்டாவது புரள்வுக் காலத்தின் 6ஆவது வார முடிவில் இரண்டாவது வேலைக் காலம் முடிவுறுகிறது. அதில் முன்னீடு செய்யப்பட்ட £900 மூலதனம் 3 வாரம் கழித்து, அதாவது 12 வாரம் கொண்ட இரண்டாவது புரள்வுக் காலத்தின் 9ஆவது வார முடிவில் மீள்கிறது. அதன் 3 வார சுற்றோட்டக் காலத்தின் போது £300 ஆகிய விடுவிக்கப் பட்ட மூலதனம் செயலுக்கு வருகிறது. இது £900 மூலதனத்தின் மூன்றாவது வேலைக் காலத்தை, இரண்டாவது புரள்வுக் காலத்தின் 7ஆவது வாரத்தில், அதாவது ஆண்டின் 19ஆவது வாரத்தில் ஆரம்பித்து வைக்கிறது.

மூன்றாவது புரள்வுக் காலம். இரண்டாவது புரள்வுக் காலத் தின் 9ஆவது வார முடிவில் £900 மீண்டுமொரு முறை மீள்கிறது. ஆனால் மூன்றாவது வேலைக் காலம் முந்தைய புரள்வுக் காலத்தின் 7ஆவது வாரத்திலேயே தொடங்கி விட்டது— 6 வாரம் ஏற்கெனவே கழிந்து விட்டது. இவ்விதம் மூன்றாவது வேலைக் காலம் இதன்

பின் 3 வாரத்துக்கு மட்டுமே நீடிக்கிறது. எனவே, மீண்டு வந்த £900இல் £300 மட்டுமே உற்பத்தி நிகழ்முறையில் சேருகிறது. இந்தப் புரள்வுக் காலத்தில் மீதமுள்ள 9 வாரம் நான்காம் வேலைக் காலத்தைச் சேர்ந்ததாகி விடுகிறது. இவ்வாறு ஆண்டில் 37ஆவது வாரத்தில் நான்காவது புரள்வுக் காலமும் ஐந்தாவது வேலைக் காலமும் ஒருங்கே ஆரம்பமாகின்றன.

இந்த உதாரணத்தில், கணக்கீட்டை எளிமைப்படுத்தும் பொருட்டு, வேலைக் காலம் 5 வாரம் என்றும், சுற்றோட்டக் காலம் 5 வாரம் என்றும் கொள்வோம். புரள்வுக் காலம் 10 வாரம் ஆகிறது. ஓராண்டு ஐம்பது வாரம் கொண்டதாகவும், வாரந்தோறும் £100 முதலீடாவதாகவும் கொள்வோம். அப்படியானால், ஒரு வேலைக் காலத்துக்கு £500 சுழல்-மூலதனமும், சுற்றோட்டக் காலத்துக்கு £500 கூடுதல் மூலதனமும் தேவை. இப்போது வேலைக் காலங் களையும் புரள்வுக் காலங்களையும் பின்வருமாறு அட்டவணையில் குறிக்கலாம்:

| வேலைக் காலம் | வாரம் | சரக்கு £ கணக்கில் | மீள்வு |
|---|---|---|---|
| 1 | 1- 5 | 500 | 10ஆவது வார முடிவில் |
| 2 | 6-10 | 500 | 15 ,, ,, ,, |
| 3 | 11-15 | 500 | 20 ,, ,, ,, |
| 4 | 16-20 | 500 | 25 ,, ,, ,, |
| 5 | 21-25 | 500 | 30 ,, ,, ,, |

[இவ்வாறு மேலும்]

சுற்றோட்டக் காலத்தை பூஜியம் எனக் கொண்டால், புரள்வுக் காலம் வேலைக் காலத்துக்குச் சமம்; புரள்வுகளின் எண்ணிக்கை அந்த ஆண்டில் வரும் வேலைக் காலங்களின் எண்ணிக்கைக்குச் சமம். வேலைக் காலம் 5 வாரம் எனக் கொண்டால், ஆண்டுக்கு $50/5 = 10$ புரள்வுக் காலங்கள். புரளுகிற மூலதனத்தின் மதிப்பு $10 \times 500 = 5{,}000$. நமது அட்டவணையில் சுற்றோட்டக் காலம் 5 வாரம் எனக் கொண்டுள்ளோம், இதன் படியும் ஒவ்வோர் ஆண்டும் உற்பத்தி செய்யப்படும் சாக்குகளின் மொத்த மதிப்பு £5,000தான். ஆனால் இதில் பத்திலொரு பங்கு, அதாவது £500 எப்போதுமே சரக்கு-மூலதன வடிவில் இருக்கும்; 5 வாரம் கழிந்த பிறகே அது மீளும். ஆண்டு முடிவில், 46ஆவது வாரம் முதல் 50ஆவது வாரம் முடிவுறும் வரையிலான பத்தாவது வேலைக் காலத்தின் உற்பத்திப் பொருள் அதன் புரள்வுக் காலத்தைப் பாதியளவுதான் பூர்த்தி செய்திருக்கும். அதன் சுற்றோட்டக் காலம் அடுத்த ஆண்டின் முதல் ஐந்து வாரம் ஆகும்.

இப்போது மூன்றாவது உதாரணம் ஒன்றை எடுத்துக் கொள்வோம். வேலைக் காலம் 6 வாரம், சுற்றோட்டக் காலம் 3 வாரம், உழைப்பு நிகழ்முறையின் போது வாராந்தர முன்னீடு £100.

1ஆவது வேலைக் காலம்: வாரம் 1-6; 6ஆவது வார முடிவில் சரக்கு-மூலதனம் £600; மீள்வு 9ஆவது வார முடிவில்.

2ஆவது வேலைக் காலம்: வாரம் 7-12; வாரம் 7-9இல் £300 கூடுதல் மூலதனம் முன்னீடு செய்யப்படுகிறது. 9ஆவது வார முடிவில் £600 மீள்வு. இதில் £300 வாரம் 10-12இல் முன்னீடு செய்யப்பட்டது. ஆகவே, 12ஆவது வார முடிவில் £300 பண வடிவிலும் £600 சரக்கு-மூலதன வடிவிலும் இருக்கிறது. இது 15ஆவது வார முடிவில் மீளக் கூடியது.

3ஆவது வேலைக் காலம்: வாரம் 13-18. வாரம் 13-15இல் முன்னீடு செய்யப்படுவது மேற்கூறிய £300; £600 மீள்வு; இதில் £300 வாரம் 16-18இல் முன்னீடு செய்யப்படுகிறது. 18ஆவது வார முடிவில் £300 பண வடிவிலும் £600 சரக்கு-மூலதன வடிவிலும் இருக்கிறது. சரக்கு-மூலதனமாக இருப்பது 21ஆவது வார முடிவில் மீள்கிறது. (இந்த உதாரணம் கீழே 2ஆம் தலைப்பில் இன்னும் விவரமாய்க் குறிக்கப்படுகிறது.)

வேறு விதமாகச் சொல்வதானால், 9 வேலைக் காலங்களில் (54 வாரம்) மொத்தம் $9 \times 600 = £5,400$ பெறுமானமுள்ள சரக்குகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒன்பதாவது வேலைக் காலத்தின் முடிவில், பணமாக £300உம் இன்னும் சுற்றோட்டக் காலத்தை முடித்திராத சரக்குகளாக £600உம் முதலாளியிடம் இருக்கின்றன.

இந்த மூன்று உதாரணங்களையும் ஒப்புநோக்குகையில் தெரிய வருகிறவை: முதலாவதாக £500 ஆகிய முதலாவது மூலதனமும், அதே போல் £500 ஆகிய கூடுதல் மூலதனமான இரண்டாவது மூலதனமும் இரண்டாவது உதாரணத்தில்தான் ஒன்றன் பின் ஒன்றாய் விடுவிக்கப்படுகின்றன. இதனால் இந்த இரு மூலதனப் பகுதிகளும் தனித் தனியாகவும் வெவ்வேறாகவும் இயங்குகின்றன. ஆனால் வேலைக் காலமும் சுற்றோட்டக் காலமும் புரள்வுக் காலத்தின் இரு சரிபாதிகளாய் அமைவது விதிவிலக்கே என்றாலும் அவ்விதம் அமைவதாக வைத்துக் கொள்வதால்தான் இப்படி நிகழ்கிறது. ஏனைய எல்லா நிலைகளிலும், புரள்வுக் காலத்தின் இரு கூறுகளும் எப்படி வேறுபடுவதாயினும், இரு மூலதனங்களும் இரண்டாவது புரள்வுக் காலம் முதல் பின்னிப் பிணைந்து இயங்குகின்றன. முதலாவது உதாரணத்திலும் மூன்றாவது உதாரணத்திலும் இதைக் காண்கிறோம். அப்போது, கூடுதல் மூலதனமாகிய இரண்டாவது மூலதனம் முதலாவது மூலதனத்தின் ஒரு பகுதியுடன் சேர்ந்து கொண்டு இரண்டாவது புரள்வுக் காலத்தில் செயல்படும் மூலதனமாகிறது. அதே நேரத்தில் முதலாவது மூலதனத்தின் எஞ்சிய பகுதி விடுவிக்கப்பட்டு, இரண்டாவது மூலதனத்தின் முதலாவது

ஆரம்பப் பணியை ஆற்ற முற்படுகிறது. இந்த உதாரணத்தில், சரக்கு-மூலதனத்தின் சுற்றோட்டக் காலத்தின் போது செயல்படும் மூலதனமும், இதற்கென ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்படும் இரண்டாவது மூலதனமும் ஒன்றல்ல, வெவ்வேறு. ஆனால் இரண்டும் ஒரே மதிப்புடையவை, முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தில் இரண்டும் ஒரே ஈவுப் பகுதியாக அமைகிறவை.

இரண்டாவதாக: வேலைக் காலத்தின் போது செயல்படும் மூலதனம் சுற்றோட்டக் காலத்தின் போது ஓய்ந்து கிடக்கிறது. இரண்டாவது உதாரணத்தில், மூலதனம் 5 வார வேலைக் காலத்தின் போது செயல்படுகிறது; 5 வாரச் சுற்றோட்டக் காலத்தின் போது ஓய்ந்து கிடக்கிறது. எனவே, இங்கே முதலாவது மூலதனம் ஓய்ந்து கிடக்கும் மொத்தக் காலம் ஆண்டில் சரிபாதி ஆகும். இந்தக் காலத்தின் போது இயங்குவது கூடுதல் மூலதனமாகிய இரண்டாவது மூலதனம்தான். நமது உதாரணத்தில் இந்த இரண்டாவது மூலதனம் அரையாண்டு காலம் ஓய்ந்து கிடக்கிறது. ஆனால் சுற்றோட்டக் காலத்தின் போது உற்பத்தி விடாத்தொடராய் நடைபெறுவதற்குத் தேவைப்படும் கூடுதல் மூலதனம், ஒவ்வொரு ஆண்டிலும் வரும் சுற்றோட்டக் காலங்களின் கூட்டு அளவு அல்லது மொத்தத் தொகையால் நிர்ணயிக்கப்படுவதில்லை; சுற்றோட்டக் காலம் புரள்வுக் காலத்தோடு கொண்டுள்ள விகிதத்தால்தான் அது நிர்ணயிக்கப்படுகிறது. (எல்லாப் புரள்வுகளும் ஒரே விதமான நிலைமைகளில் நடைபெறுவதாகத்தான் கொள்கிறோம்.) இந்தக் காரணத்தால், இரண்டாவது உதாரணத்தில் கூடுதல் மூலதனம் £500 தேவைப்படுகிறதே தவிர £2,500 அல்ல. ஏனென்றால், ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தைப் போலவே கூடுதல் மூலதனமும் புரள்வில் சேருகிறது; தன் புரள்வுகளின் எண்ணிக்கையைக் கொண்டு பருமனை அதிகமாக்கிக் கொள்கிறது.

மூன்றாவதாக: உற்பத்திக் காலம் வேலைக் காலத்தை விட அதிகமா அல்லவா என்பது இங்கு நாம் பரிசீலித்த நிலைமைகளைப் பாதிக்காது. புரள்வுக் காலங்களின் மொத்த அளவு அதனால் நீட்டப்படுவது மெய்தான்; ஆனால், இந்த நீட்டிப்பு உழைப்பு நிகழ்முறைக்குக் கூடுதல் மூலதனம் எதையும் அவசியமாக்குவதில்லை. சுற்றோட்டக் காலத்தால் உழைப்பு நிகழ்முறை தடைபட்டு நிற்கும் இடைவெளிகளை நிரப்புவதற்குத்தான் கூடுதல் மூலதனம் பயன்படுகிறது. எனவே சுற்றோட்டக் காலத்தின் விளைவாய் எழும் இடைமறிப்புகளிலிருந்து உற்பத்தியைப் பாதுகாப்பதே இந்தக் கூடுதல் மூலதனத்தின் நோக்கம். பிரத்தியேக உற்பத்தி நிலைமைகளிலிருந்து எழும் இடைமறிப்புகளை வேறு வழியில் சமாளித்தாக வேண்டும்; இது பற்றி இங்கு ஆராயத் தேவையில்லை. ஆயினும் சில நிறுவனங்களில் சரக்காணைகளின் படி விட்டுவிட்டு வேலை நடைபெறுகிறது; இதனால் வேலைக் காலங்களிடையே இடைவெளிகள்

ஏற்படுகின்றன. எந்த அளவுக்கு இப்படி ஏற்படுகிறதோ, அந்த அளவுக்கு கூடுதல் மூலதனத்துக்குத் தேவை இல்லாமற் போகிறது. மறு புறம் பருவ கால வேலையின் [seasonal work] பெரும்பாலான வகைகளில், மீள்வுக்குக் குறிப்பிட்ட கால வரம்பு இருக்கிறது. முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் சுற்றோட்டக் காலம் முடிவடையாமல் அடுத்த ஆண்டும் அதே மூலதனத்தைக் கொண்டு அதே வேலையைச் செய்ய முடியாது. மறு புறம், சுற்றோட்டக் காலமானது உற்பத்திக் காலங்களுக்கிடையிலான இடைவெளியை விடக் குறுகியதாகவும் இருக்கலாம். அப்படியிருக்குமானால், அந்த மூலதனத்தை இடைக்காலத்தில் வேறு வேலையில் ஈடுபடுத்த வேண்டும்; இல்லையேல் அது ஒய்ந்து கிடக்க வேண்டியதுதான்.

நான்காவதாக: குறிப்பிட்ட வேலைக் காலத்துக்கென்று முன்னீடு செய்யப்படும் மூலதனத்தில் — எடுத்துக்காட்டாக, மூன்றாவது உதாரணத்தில் £600 — ஒரு பகுதி கச்சாப் பொருள், துணைப் பொருள் ஆகியவற்றில், அதாவது அந்த வேலைக் காலத்துக்கான திறனுடைச் சரக்கிருப்பாகிய மாறாச் சுழல்-மூலதனமாக முதலீடு செய்யப்படுகிறது; மற்றொரு பகுதி உழைப்புக்கு ஊதியமளிப்பதில், அதாவது மாறும் சுழல்-மூலதனமாக முதலீடு செய்யப்படுகிறது. மாறாச் சுழல்-மூலதனமாக முதலீடு செய்யப்படும் பகுதி முழுவதும் குறிப்பிட்ட காலத்துக்குத் திறனுடைச் சரக்கிருப்பின் வடிவில் இருந்தாக வேண்டும் என்பதில்லை. எடுத்துக்காட்டாக, கச்சாப் பொருளை வேலைக் காலம் முழுவதற்கும் இருப்பாக வைக்கத் தேவையில்லை; நிலக்கரியை இரு வாரத்துக்கு ஒரு முறை கொள்முதல் செய்தால் போதுமானதாக இருக்கலாம். ஆயினும், இங்கும் நாம் கடன்-செலாவணியை ஒதுக்கி விடுவதால் மூலதனத்தின் இந்தப் பகுதி திறனுடைச் சரக்கிருப்பின் வடிவில் தயாராயில்லாத வரை, தேவைக்கேற்ப திறனுடைச் சரக்கிருப்பாக மாறும் பொருட்டு பண வடிவில் தயாராய் இருந்தாக வேண்டும். 6 வார காலத்துக்கென முன்னீடு செய்யப்படும் மாறாச் சுழல்-மூலதன மதிப்பின் பருமன் இதனால் மாறி விடுவதில்லை. மறு புறம், எதிர்பாராத செலவுகளுக்கான பண இருப்பை, இடையூறுகளை சமாளிப்பதற்கான பிரத்தியேகச் சேம நிதியை ஒதுக்கி விட்டுப் பார்த்தாலும், கூலியானது குறுகிய கால இடைவெளிகளில் — பெரும்பாலும் வாரந்தோறும் — தரப்படுகிறது. ஆகவே, முதலாளி தொழிலாளியைக் கட்டாயப்படுத்தி அவரது உழைப்பை நீண்ட காலத்துக்கு முன்னீடு செய்ய வைத்தாலன்றி, கூலி கொடுக்கத் தேவைப்படும் மூலதனம் பண வடிவில் தயாராய் இருக்க வேண்டும். ஆகவே, மூலதனம் மீள்கிற போது, ஒரு பகுதியை உழைப்புக்கு ஊதியமளிப்பதற்காகப் பண வடிவில் வைத்துக் கொள்ள வேண்டும்; மறு பகுதியைத் திறனுடைச் சரக்கிருப்பாக மாற்றலாம்.

கூடுதல் மூலதனம் ஆரம்ப மூலதனத்தைப் போலவே பிரிக்கப்

படுகிறது. ஆனால், முதலாவது மூலதனத்திலிருந்து அதனை வேறு படுத்திக் காட்டுவது என்னவென்றால்: இந்தக் கூடுதல் மூலதன மானது முதலாவது மூலதனத்தின் முதலாவது வேலைக் காலத்தில் செயலுக்கு வரா விட்டாலும், அந்த வேலைக் காலம் முழுவதற்கு மாய் முன்னீடு செய்யப்பட்டாக வேண்டும்; இப்படிச் செய்தால் தான் அது அதற்குரிய வேலைக் காலத்துக்குத் தயாராய் இருக்க முடியும். (இங்கும் கடன்-செலாவணி உறவுகளை ஒதுக்கி விடு கிறோம்.) மூலதனத்தின் முதலாவது வேலைக் காலத்தின் போதே இந்தக் கூடுதல் மூலதனத்தை—எப்படியும் அதன் ஒரு பகுதியை—மாறாச் சுழல்-மூலதனமாக மாற்றி விடலாம். அது எந்த அளவுக்கு மாறாச் சுழல்-மூலதனமாக வடிவெடுக்கிறது, அல்லது இந்த மாற்றம் அவசியமாகிற நேரம் வரும் வரை கூடுதல் பண-மூலதன வடிவில் நீடிக்கிறது என்பது, ஓரளவுக்கு, சம்பந்தப்பட்ட வகைகளின் விசேஷ உற்பத்தி நிலைமைகளையும் ஓரளவுக்கு வட்டார நிலைமைகளை யும் ஓரளவுக்குக் கச்சாப் பொருள் முதலானவற்றின் விலையிலான அலைவுகளையும் பொறுத்தது. சமுதாய மூலதனத்தை முழுமையாக நோக்குவோமானால், இந்தக் கூடுதல் மூலதனத்தில் ஒரு கணிச மான பகுதி நீண்ட காலத்துக்கு பண-மூலதன வடிவில் இருக்கக் காணலாம். ஆனால், இரண்டாவது மூலதனத்தில் ஒரு பகுதி கூலிக்காக முன்னீடு செய்யப்படுகிறது அல்லவா, அந்தப் பகுதி சிறுகச் சிறுகவே உழைப்புச் சக்தியாக மாற்றப்படுகிறது; சிறு சிறு வேலைக் காலங்கள் கழியக் கழிய அவற்றுக்கு ஊதியமளிக்கப்படு கிறது. இவ்வாறு, இரண்டாவது மூலதனத்தின் இந்தப் பகுதி உழைப்புச் சக்தியாக மாறி திறனுடை-மூலதனத்தின் பணியில் ஈடுபடும் வரை, வேலைக் காலம் முழுவதிலும் பண-மூலதன வடிவில் இருந்து வருகிறது.

ஆக, முதலாவது மூலதனத்தின் சுற்றோட்டக் காலத்தை உற்பத்திக் காலமாக மாற்றுவதற்காகக் கூடுதல் மூலதனம் பிரயோ கிக்கப்படுவதால், முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் பருமனும் இந்த மொத்த மூலதனம் முன்னீடு செய்யப்பட்டாக வேண்டிய காலத்தின் அளவும் அதிகரிப்பதோடு, முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தில் பண-இருப்பாக அமைந்து, ஆகவே பண-மூலதனத் தின் நிலையிலும் உள்ளுறைப் பண-மூலதனத்தின் வடிவிலும் இருக்கிற பகுதியும்—தனிப்பட குறிக்கப்பட வேண்டிய விதத்தில்—அதிகரிக்கிறது.

சுற்றோட்டக் காலத்தை முன்னிட்டு மூலதனம் இரு பகுதி களாகப் பிரிவது, முதலாவது வேலைக் காலத்துக்கான மூலதன மாகவும், சுற்றோட்டக் காலத்துக்கான மாற்றீட்டு மூலதனமாகவும் பிரிவது முதலீடு செய்யப்படும் மூலதனம் அதிகரிப்பது காரணமாய் நடைபெறாமல், உற்பத்தியின் அளவுவீதம் குறைவது காரணமாய் நடைபெறுவதாய் இருக்கும் போதும்—திறனுடைச் சரக்கிருப்பின்

வடிவிலும் பண-இருப்பின் வடிவிலுமான இரு வகை முன்னீட்டை யும் பொறுத்த வரை—மேற்கூறியது போலவேதான் அதிகரிப்பு ஏற்படுகிறது. பண-வடிவில் முடக்கப்படும் மூலதனத்தின் அளவு உற்பத்தியின் அளவுவீதத்துடன் ஒப்பிடுகையில் இன்னுங்கூட அதிக மாய் அதிகரிக்கிறது.

மூலதனமானது ஆரம்பத் திறனுடை-மூலதனமாகவும் கூடுதல் மூலதனமாகவும் இப்படிப் பிரிவதால்தான் வேலைக் காலங்கள் விடாத்தொடராய் அமைய முடிகிறது; முன்னீடு செய்யப்படும் மூலதனத்தில் ஒரே அளவிலான பகுதி திறனுடை-மூலதனமாக ஓயாது செயல்பட முடிகிறது.

இரண்டாவது உதாரணத்தைப் பார்ப்போம். எந்நேரமும் உற்பத்தி நிகழ்முறையில் பயன்படும் மூலதனம் £500 ஆகும். வேலைக் காலம் 5 வாரம் என்பதால், (நாம் ஓராண்டாகக் கொள்ளும்) 50 வார காலத்தில் அம்மூலதனம் பத்து தடவை செயல்படுகிறது. எனவே, உபரி-மதிப்பை ஒதுக்கி விட்டுப் பார்த் தால், அதன் உற்பத்திப் பொருள் (உபரி-மதிப்பு அன்னியில்) £500 × 10 = £5,000. உற்பத்தி நிகழ்முறையில் நேரடியாகவும் இடைவிடாமலும் செயல்படும் மூலதனத்தின்—£500 மூலதன-மதிப்பின்—கோணத்திலிருந்து பார்க்கையில், சுற்றோட்டக் காலம் அறவே இல்லாது போவதாய்த் தெரிகிறது. புரள்வுக் காலமும் வேலைக் காலமும் ஒன்றாகின்றன; சுற்றோட்டக் காலம் பூஜிய மாகக் கொள்ளப்படுகிறது.

ஆனால், £500 மூலதனத்தின் உற்பத்திச் செயற்பாட்டில் 5 வாரச் சுற்றோட்டக் காலம் அவ்வப்போது குறுக்கிடுமானால், 10 வாரப் புரள்வுக் காலம் முழுவதும் கழிந்த பிறகே அம்மூலதனத்தால் மீண்டும் உற்பத்தி செய்ய முடியும். அப்போது ஆண்டில் 50 வாரங்களில் 5 புரள்வுகளே நடைபெறும்; ஒவ்வொரு புரள்வுக்கும் 10 வாரம் தேவைப்படும். இந்த 5 புரள்வுகளும் 5-வார உற்பத்திக் காலங்கள் ஐந்தையும் 5-வாரச் சுற்றோட்டக் காலங்கள் ஐந்தையும் கொண்டிருக்கும். 5-வார உற்பத்திக் காலங்கள் ஐந்திலும் மொத்தம் 25 உற்பத்தி-வாரங்கள் இருக்கும், இவற்றின் மொத்த உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு £500 × 5 = £2,500 ஆகும். 5 வாரச் சுற்றோட்டக் காலங்கள் ஐந்திலும் மொத்தம் 25 சுற்றோட்ட வாரங்கள் இருக்கும். இந்த உதாரணத்தில், £500 மூலதனமானது ஆண்டில் 5 தடவை புரள்வதாக நாம் கூறும் போது, ஒவ்வொரு புரள்வுக் காலத்திலும் ஒரு பாதியில் இந்த £500 மூலதனம் திறனுடை-மூலதனமாகச் செயல்படவே இல்லை என்பதும், மொத்தமாகப் பார்த்தால் அது ஆண்டின் ஒரு பாதியில் மட்டுமே செயல்பட்டது, மறு பாதியில் செயல்படவே இல்லை என்பதும் தெளிவாகிறது.

நமது உதாரணத்தில், மாற்றீட்டு மூலதனமாகிய £500 இந்த ஐந்து சுற்றோட்டக் காலங்களின் போது களத்துக்கு வருகிறது.

புரள்வானது இவ்வாறு £2,500இலிருந்து £5,000ஆக விரிவடைகிறது. ஆனால் இப்போது முன்னீடு செய்யப்படும் மூலதனம் £500 அல்ல. £1,000 ஆகும். 5,000ஐ 1,000ஆல் வகுத்தால் கிடைப்பது 5. எனவே, பத்துக்கு பதில் ஐந்து புரள்வுகள் நிகழ்கின்றன. இதை இப்படித்தான் பார்க்கிறார்கள். ஆனால் £1,000 மூலதனம் ஓராண்டு காலத்தில் ஐந்து தடவை புரள்கிறது என்று கூறும் போது முதலாளியின் வெற்று மண்டையில் சுற்றோட்டக் காலத்தைப் பற்றிய நினைவே இல்லாதொழிந்து விடுகிறது. இந்த மூலதனம் அடுத்தடுத்த ஐந்து புரள்வுகளில் உற்பத்தி நிகழ்முறையில் தொடர்ச்சியாகப் பணியாற்றி இருப்பதாகக் குழப்படியான ஒரு கருத்து அவர் மண்டையில் உருவாகிறது. ஆனால் £1,000 மூலதனம் ஐந்து தரம் புரள்வதாய் நாம் கூறும் போது, சுற்றோட்டக் காலம், உற்பத்திக் காலம் ஆகிய இரண்டையும் சேர்த்தே அப்படிக் கூறுகிறோம். £1,000 உற்பத்தி நிகழ்முறையில் தொடர்ச்சியாகச் செயல்பட்டிருக்குமானால், உற்பத்திப் பண்டம் நமது அனுமானங்களின் படி £5,000க்கு பதில் £10,000 மதிப்புடையதாய் இருந்தாக வேண்டும். ஆனால் £1,000ஐ தொடர்ச்சியாக உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபடுத்த வேண்டுமானால், £2,000ஐ முன்னீடு செய்திருக்க வேண்டும். பொதுவாகச் சொன்னால், பொருளாதார அறிஞர்கள் புரள்வின் இயங்கு முறை குறித்து தெளிவாய் எதையும் கூறுவதில்லை. எப்போதுமே இந்த அடிப்படையான விவரத்தை, அதாவது உற்பத்தி தடைபடாமல் நடைபெற வேண்டுமானால் தொழில் துறை மூலதனத்தில் ஒரு பகுதி மட்டுமே உற்பத்தி நிகழ்முறையில் நேரடியாக ஈடுபட முடியும் என்பதை அவர்கள் பார்க்கத் தவறி விடுகிறார்கள். ஒரு பகுதி உற்பத்திக் காலத்தில் இருக்கும் போது மற்றொரு பகுதி சுற்றோட்டக் காலத்தில் இருந்தாக வேண்டும். வேறுவிதமாகச் சொன்னால், மூலதனத்தின் ஒரு பகுதி திறனுடை-மூலதனமாகச் செயல்பட வேண்டுமானால், மற்றொரு பகுதியை சரக்கு-மூலதனம் அல்லது பண-மூலதனம் என்ற வடிவில் முறையான பொருளுற்பத்தியிலிருந்து விலக்கிக் கொண்டாக வேண்டும். இதை கவனியாது ஒதுக்குவதன் மூலம் பண-மூலதனத்தின் முக்கியத்துவமும் அது வகிக்கும் பாத்திரமும் அடியோடு புறக்கணிக்கப்படுகிறது.

புரள்வுக் காலத்தின் இரு பிரிவுகளான வேலைக் காலமும் சுற்றோட்டக் காலமும் சமமாய் இருந்தால், அல்லது வேலைக் காலம் சுற்றோட்டக் காலத்தை விட நீண்டதாகவோ குறுகியதாகவோ இருந்தால், அதனால் புரள்வில் ஏற்படும் மாற்றம் என்ன என்பதையும், பண-மூலதன வடிவில் மூலதனம் முடக்கப்படும் நிகழ்வில் அதனால் ஏற்படுகிற விளைவு என்ன என்பதையும் இப்போது பரிசீலித்தாக வேண்டும்.

எல்லா நேர்வுகளிலுமே, ஒவ்வொரு வாரமும் முன்னீடு

செய்யப்படும் மூலதனம் £100 என்றும், புரள்வுக் காலம் 9 வாரம் என்றும் கொள்வோம். ஆக ஒவ்வொரு புரள்வுக் காலத்திலும் முன்னீடு செய்ய வேண்டிய மூலதனம் £900 ஆகிறது.

## I. வேலைக் காலமும் சுற்றோட்டக் காலமும் சமமாய் இருத்தல்

உண்மையில் தற்செயலாய் நிகழும் ஒரு விதிவிலக்கே என்றாலும் இது நமது ஆய்வுக்கு ஒரு நல்ல தொடக்கமாகிறது. ஏனெனில் இப்படி நிகழும் போதுதான் உறவுகள் நன்றாக விளங்கும் படி மிகவும் எளிய முறையில் வளர்ந்து உருவாகின்றன.

இரு மூலதனங்களும் (முதலாவது வேலைக் காலத்துக்காக முன்னீடு செய்யப்படும் முதலாவது மூலதனமும், இந்த முதலாவது மூலதனத்தின் சுற்றோட்டக் காலத்தின் போது செயல்படும் கூடுதல் மூலதனமாகிய இரண்டாவது மூலதனமும்) பின்னிப் பிணையாமலே தமது அசைவியக்கங்களின் போது ஒன்றையொன்று மாற்றீடு செய்து கொள்கின்றன. ஆகவே, முதலாவது புரள்வுக் காலத்தை ஒதுக்கி விட்டுப் பார்த்தால், இவ்விரு மூலதனங்களும் அதனதன் புரள்வுக் காலத்துக்கு மட்டுமே முன்னீடு செய்யப்படுகின்றன. பின்வரும் எடுத்துக்காட்டுகளில் புரள்வுக் காலம் 9 வாரம் எனக் கொள்கிறோம். ஆகவே வேலைக் காலம், சுற்றோட்டக் காலம் ஒவ்வொன்றும் 4½ வாரமாகும். முழு ஆண்டுக்குக் கிடைக்கும் சித்திரம் வருமாறு:

அட்டவணை I

முதலாவது மூலதனம்

| புரள்வுக் காலம் (வாரம்) | வேலைக் காலம் (வாரம்) | முன்னீடு £ | சுற்றோட்டக் காலம் (வாரம்) |
|---|---|---|---|
| I. 1- 9 | 1- 4½ | 450 | 4½- 9 |
| II. 10-18 | 10-13½ | 450 | 13½-18 |
| III. 19-27 | 19-22½ | 450 | 22½-27 |
| IV. 28-36 | 28-31½ | 450 | 31½-36 |
| V. 37-45 | 37-40½ | 450 | 40½-45 |
| VI. 46-[54] | 46-49½ | 450 | 49½-[54][37] |

[37] இரண்டாவது புரள்வு ஆண்டிற்குரிய வாரத்தை அடைப்புக் குறியிட்டுச் காட்டுகிறோம்.

## இரண்டாவது மூலதனம்

| புரள்வுக் காலம் (வாரம்) | வேலைக் காலம் (வாரம்) | முன்னீடு £ | சுற்றோட்டக் காலம் (வாரம்) |
|---|---|---|---|
| I. 4½-13½ | 4½- 9 | 450 | 10-13½ |
| II. 13½-22½ | 13½-18 | 450 | 19-22½ |
| III. 22½-31½ | 22½-27 | 450 | 28-31½ |
| IV. 31½-40½ | 31½-36 | 450 | 37-40½ |
| V. 40½-49½ | 40½-45 | 450 | 46-49½ |
| VI. 49½-[58½] | 49½-[54] | 450 | [55-58½] |

51 வாரம் இங்கு ஓராண்டைக் குறிப்பதாகும், இதற்குள் முதலாவது மூலதனம் முழுதாய் ஆறு வேலைக் காலங்களைப் பூர்த்தி செய்து, £450 × 6 = £2,700 பெறுமானமுள்ள சரக்கு களை உற்பத்தி செய்கிறது. இரண்டாவது மூலதனம் முழுதாய் ஐந்து வேலைக் காலங்களைப் பூர்த்தி செய்து £450 × 5 = £2,250 பெறுமானமுள்ள சரக்குகளை உற்பத்தி செய்கிறது. இரண்டாவது மூலதனம் இதன்றி ஆண்டின் கடைசி ஒன்றரை வாரத்தில் (50ஆவது வாரத்தின் நடுப்பகுதி முதல் 51ஆவது வாரத்தின் முடிவு வரை) கூடுதலாய் £150 பெறுமானமுள்ள சரக்குகளை உற்பத்தி செய் கிறது. 51 வாரத்தில் உற்பத்தி செய்யப்படும் மொத்த அளவின் பெறுமானம் £5,100. வேலைக் காலத்தின் போது மட்டுமே உபரி-மதிப்பு நேரடியாக உற்பத்தியாகிறது. £300 மொத்த மூல தனம் அப்போது 5⅔ முறை புரள்கிறது (£900 × 5⅔ = £5,100). ஆனால் உண்மைப் புரள்வைப் பரிசீலிப்போமானால், முதலாவது மூலதனம் 5⅔ முறை புரள்கிறது; ஏனென்றால், 51ஆவது வாரம் முடியும் போது, அதன் ஆறாவது புரள்வுக் காலத்தில் இன்னும் 3 வாரம் எஞ்சியுள்ளது; £450 × 5⅔ = £2,250. இரண்டாவது மூலதனம் $5\frac{1}{6}$ முறை புரள்கிறது; ஏனென்றால் அதன் ஆறாவது புரள்வுக் காலத்தில் 1½ வாரம் மட்டுமே பூர்த்தியாகியுள்ளது—7½ வாரம் அடுத்த ஆண்டிற்குப் போய் விடுகிறது; £450 × $5\frac{1}{6}$ = £2,325. உண்மைப் புரள்வின் மொத்த அளவு = £4,875.

முதலாவது மூலதனத்தையும் இரண்டாவது மூலதனத்தையும் சுயேச்சையான இருவேறு மூலதனங்களாகக் கருதலாம். அவற்றின் அசைவியக்கங்கள் [movements] முற்றிலும் சுயேச்சையானவை. அவற்றின் வேலைக் காலங்களும் சுற்றோட்டக் காலங்களும் ஒன்றை யொன்று நேரடியாக மாற்றீடு செய்து கொள்வதால் அவை இரண்டும் ஒன்றையொன்று நிறைவு செய்கின்றன. அவற்றை இரு வேறு முதலாளிகளுக்குச் சொந்தமான தனித்தனியான இரு மூல தனங்களாகக் கருதலாம்.

முதலாவது மூலதனம் முழுதாய் ஐந்து புரள்வுக் காலங்களையும், ஆறாவது புரள்வுக் காலத்தில் மூன்றிலிரு பங்கையும் பூர்த்தி செய்கிறது. ஆண்டின் முடிவில் அது சரக்கு-மூலதன வடிவில் இருக்கிறது; இந்த சரக்கு-மூலதனத்தின் இயல்பான ஈடேற்றத்துக்கு இன்னும் மூன்று வாரம் தேவைப்படுகிறது. இந்த மூன்று வார காலமும் அது உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட முடியாது; சரக்கு-மூலதனமாகச் செயல்பட்டு அது சுற்றியோடுகிறது. அதன் கடைசிப் புரள்வுக் காலத்தில் மூன்றிலிரு பங்கு மட்டுமே பூர்த்தியாகியுள்ளது. இதைப் பின்வருமாறு தெரிவிக்கலாம்: அது ஒரு புரள்வுக் காலத்தில் மூன்றிலிரு பங்கை மட்டுமே முடித்துள்ளது; அதன் மொத்த மதிப்பில் மூன்றிலிரு பங்கு மட்டுமே முழுமையாகப் புரண்டிருக்கிறது. £450 அதன் புரள்வை ஒன்பது வாரத்தில் பூர்த்தி செய்கிறது; எனவே £300 அதன் புரள்வைப் பூர்த்தி செய்வதற்கு ஆகும் காலம் 6 வாரம். ஆனால் இந்தத் தெரிவிப்பு முறையில், புரள்வுக் காலத்தின் இரு வேறு வகைப்பட்ட அடக்கக் கூறுகளுக்கு இடையிலான அங்கக உறவுகள் கவனியாது ஒதுக்கப்பட்டு விடுகின்றன. முன்னீடு செய்யப்படும் மூலதனமாகிய £450ஆனது 5⅔ புரள்வுகளை முடித்துள்ளது என்று கூறுவதன் சரியான அர்த்தம், அது முழுதாக ஐந்து புரள்வுகளையும் ஆறாவது புரள்வில் மூன்றிலிரு பங்கையும் முடித்துள்ளது என்பதே. அதே போது, புரள்வை முடித்திருக்கும் மூலதனம் முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தைப் போல் 5⅔ மடங்காகும். (எனவே, மேற்கண்ட உதாரணத்தில், £450 × 5⅔ = £2,550 ஆகும்) என்று சொல்வதும் சரியானதே. இந்த £450 மூலதனம் இன்னொரு £450 மூலதனத்தினால் நிறைவு செய்யப்படா விட்டால், அதில் ஒரு பகுதி உற்பத்தி நிகழ்முறையில் இருக்கையில் மற்றொரு பகுதி சுற்றோட்ட நிகழ்முறையில் இருக்கும் என்பதே இதன் அர்த்தம். புரள்வுக் காலத்தைப் புரள்வை முடித்த மூலதனமாகத் தெரிவிக்க வேண்டுமானால், நிலவுகிற மதிப்பாகவே (பூர்த்தியான உற்பத்திப் பொருளாகவே) அதை அவ்வாறு தெரிவிக்க முடியும். முன்னீடு செய்யப்பட்ட மூலதனம் உற்பத்தி நிகழ்முறையை மீண்டும் தொடங்கக் கூடிய நிலைக்கு வந்தாகவில்லை, அதில் ஒரு பகுதி மட்டுமே உற்பத்தியில் ஈடுபடக் கூடிய நிலையை அடைந்துள்ளது. அதாவது மூலதனம் இடையறாத உற்பத்தி நிகழ்முறையில் இருக்க வேண்டுமானால், ஒரு பகுதி தொடர்ச்சியாக உற்பத்திக் காலத்திலும் மற்றொன்று தொடர்ச்சியாகச் சுற்றோட்டக் காலத்திலும் இருக்கும்படி அதை இரு பகுதிகளாக—இவ்விரு காலங்களிடையிலான அதே விகித உறவு கொண்ட இரு பகுதிகளாக—பிரித்தாக வேண்டும். இதே விதிதான் ஓயாது செயல்படும் திறனுடை-மூலதனத்தின் அளவை சுற்றோட்டக் காலத்துக்கும் புரள்வுக் காலத்துக்குமான விகிதத்தைக் கொண்டு நிர்ணயிக்கிறது.

இங்கு நாம் ஆண்டின் இறுதி வாரமாகக் கொள்கிற 51ஆவது வாரத்தின் முடிவில் இரண்டாவது மூலதனத்தில் பூர்த்தியாகாத பண்டங்களின் உற்பத்தியைப் பூர்த்தி செய்வதற்காக £150 முன்னீடு செய்யப்பட்டிருக்கிறது. அதன் மற்றொரு பகுதி, மாறாச் சுழல்-மூலதனத்தின் வடிவில் (கச்சாப் பொருள் முதலானவை), அதாவது உற்பத்தி நிகழ்முறையில் திறனுடை-மூலதனமாகச் செயல் படக் கூடிய வடிவில் இருக்கிறது. ஆனால், அதன் மூன்றாவது பகுதி குறைந்தது வேலைக் காலத்தின் எஞ்சிய பகுதியில் (3 வாரம்) கூலி கொடுப்பதற்கு வேண்டிய தொகையாகப் பண வடிவில் இருக்கிறது. கூலியானது அந்தந்த வாரத்தின் முடிவில்தான் தரப் படுகிறது. புதிய ஆண்டு தொடங்குகிறது, எனவே புதிய புரள்வுச் சகடம் ஆரம்பிக்கிறது என்றாலும் இப்போது மூலதனத்தின் இந்தப் பகுதி திறனுடை-மூலதனத்தின் வடிவில் இல்லை, உற்பத்தி நிகழ் முறையில் பங்கேற்க முடியாத பண-மூலதன வடிவிலேயே இருக் கிறது. என்றாலும் புதிய புரள்வின் தொடக்கத்தில், மாறும் சுழல்-மூலதனமானது, அதாவது உயிருள்ள உழைப்புச் சக்தியானது உற்பத்தி நிகழ்முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏனென் றால் வேலைக் காலத்தின் தொடக்கத்தில் உழைப்புச் சக்தி (உதாரணமாக) வாராவாரம் விலைக்கு வாங்கப்பட்டு வாராவாரம் நுகரப்பட்ட போதிலும், வாரத்தின் முடிவில்தான் அதற்கு ஊதியம் தரப்படுகிறது. இங்கே பணம் கொடுப்புச் சாதனமாகப் பயன்படு கிறது. இதனால் ஒரு பக்கத்தில் அது முதலாளியின் கையில் பணமாக இருக்கும் போதே, மறு பக்கத்தில் அந்தப் பணத்தின் உருமாற்றத் தால் கிடைக்கும் சரக்காகிய உழைப்புச் சக்தி உற்பத்தி நிகழ் முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரே மூலதன-மதிப்பு இவ்விதம் இங்கே இரட்டை வடிவெடுக்கிறது.

நாம் வேலைக் காலங்களை மட்டும் பரிசீலிப்போமானால்,

| | | |
|---|---|---|
| முதலாவது மூலதனம் உற்பத்தி செய்வது | = £450 × 6 | = £2,700 |
| இரண்டாவது மூலதனம் உற்பத்தி செய்வது | = £450 × 5⅓ | = £2,400 |
| இரண்டையும் கூட்டினால் | = £900 × 5⅔ | = £5,100 |

ஆகவே, முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனமான £900 ஓராண்டு காலத்தில் 5⅔ முறை திறனுடை-மூலதனமாகச் செயல்படு கிறது. உற்பத்தி நிகழ்முறையில் எப்போதும் £450உம் சுற்றோட்ட நிகழ்முறையில் எப்போதும் £450உமாகச் செயல்பட்டாலும் சரி, £900 சேர்ந்து 4½ வாரம் உற்பத்தி நிகழ்முறையிலும் அடுத்த 4½ வாரம் சுற்றோட்ட நிகழ்முறையிலுமாகச் செயல்பட்டாலும் சரி, உபரி-மதிப்பின் உற்பத்திக்கு எல்லாம் ஒன்றுதான்.

மறு புறம், புரள்வுக் காலங்களைப் பரிசீலிப்போமானால், புரள்வு பின்வருமாறு நடைபெறுகிறது:

| | | |
|---|---|---|
| முதலாவது மூலதனம், | £450 × $5\frac{2}{3}$ | = £2,550 |
| இரண்டாவது மூலதனம், | £450 × $5\frac{1}{6}$ | = £2,325 |
| மொத்த மூலதனம், | £900 × $5\frac{5}{12}$ | = £4,875. |

ஏனெனில், மொத்த மூலதனத்தின் புரள்வுகளது எண்ணிக்கையானது முதலாவது மூலதனமும் இரண்டாவது மூலதனமும் புரள்வதால் வரும் மொத்தத் தொகையை இவ்விரு மூலதனங்களின் மொத்தத் தொகையால் வகுக்கையில் கிடைக்கும் ஈவுக்குச் சமம்.

முதலாவது மூலதனமும் இரண்டாவது மூலதனமும் ஒன்றையொன்று சாராமல் தனித்தனியே இருந்தாலும், அவை ஒரே உற்பத்திக் கிளையில் முன்னீடு செய்யப்படும் சமுதாய மூலதனத்தைச் சேர்ந்த தனித்தனியான வெவ்வேறு பகுதிகளே தவிர வேறல்ல என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். எனவே, இந்த உற்பத்திக் கிளையில் செயல்படும் சமுதாய மூலதனமானது முற்றிலும் முதலாவது மூலதனத்தையும் இரண்டாவது மூலதனத்தையும் மட்டுமே கொண்டதாய் இருப்பதானாலும், இங்கே தனிப்பட்ட ஒரு மூலதனத்தின் இரு அடக்கக் கூறுகளான முதலாவது மூலதனம், இரண்டாவது மூலதனம் ஆகியவற்றின் புரள்வு குறித்துக் கையாளும் அதே கணக்கு முறையைத்தான் இந்த உற்பத்திக் கிளையில் இயங்கும் சமுதாய மூலதனத்தின் புரள்வுக்கும் கையாள வேண்டும். அது மட்டுமல்ல, எந்தக் குறிப்பிட்ட உற்பத்திக் கிளையிலும் முதலீடாகியுள்ள மொத்த சமுதாய மூலதனத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் இந்தக் கணக்கீட்டு முறை பொருந்துவதாகும். ஆனால் இறுதியாகப் பார்க்கையில், மொத்தச் சமுதாய மூலதனம் நிகழ்த்தும் புரள்வுகளின் எண்ணிக்கையானது, பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் புரள்கிற மூலதனங்களின் மொத்தத் தொகையை அந்தக் கிளைகளில் முன்னீடு செய்யப்பட்ட மூலதனங்களின் மொத்தத் தொகையால் வகுக்கையில் கிடைக்கும் ஈவுக்குச் சமம்.

மேலும், தனியார் ஒருவரது தொழிலில் இயங்கும் முதலாவது மூலதனமும் இரண்டாவது மூலதனமும் கறாராகச் சொன்னால் எப்படி இங்கே வெவ்வேறு புரள்வு-ஆண்டுகளைப் பெற்றிருக்கின்றனவோ (முதலாவது மூலதனத்தின் புரள்வுச் சகடம் [cycle of turnover] தொடங்கி 4½ வாரம் கழிந்த பிறகே இரண்டாவது மூலதனத்தின் புரள்வுச் சகடம் தொடங்குகிறது என்பதால் முதலாவது மூலதனத்தின் புரள்வு-ஆண்டு இரண்டாவதன் புரள்வு-ஆண்டைவிட 4½ வாரம் முன்னதாகவே முடிவடைகிறது), அதே போல ஒரே உற்பத்திக் கிளையிலுள்ள பல்வேறு தனியார் மூலதனங்களும் தமது நடவடிக்கைகளை முற்றிலும் வெவ்வேறான காலங்களில் தொடங்குகின்றன, எனவே ஆண்டின் வெவ்வேறு தருணங்களில் தமது புரள்வு-ஆண்டை முடித்துக் கொள்கின்றன என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். மேலே நாம் முதலாவது மூலதனத்துக்கும்

இரண்டாவது மூலதனத்துக்கும் சராசரியைக் கணக்கிடக் கையாண்ட அதே கணக்கு முறையை இங்கே சமுதாய மூலதனத்தின் தனிப்பட்ட பல்வேறு பகுதிகளின் புரள்வு-ஆண்டுகளையும் ஒரே மாதிரியான புரள்வு-ஆண்டாக்கிடுவதற்கும் கையாளலாம்.

## II. வேலைக் காலம் சுற்றோட்டக் காலத்தை விட நீண்டதாய் இருத்தல்

முதலாவது, இரண்டாவது மூலதனங்களின் வேலைக் காலங்களும் புரள்வுக் காலங்களும் ஒன்றையொன்று மாற்றீடு செய்து கொள்வதில்லை, அதற்கு பதில் ஒன்றோடொன்று பின்னிப் பிணைகின்றன. நாம் பரிசீலித்த முதல் நேர்வில் இப்படி நடைபெறவில்லை.

ஆயினும் இதனால் மாற்றம் ஏற்பட்டு விடாமல் முதல் நேர்வில் எப்படியோ அப்படியே இங்கும், 1) முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தின் வேலைக் காலங்களது எண்ணிக்கையானது, முன்னீடு செய்யப்படும் இரு மூலதனப் பகுதிகளும் ஓராண்டில் உற்பத்தி செய்யும் மதிப்பின் மொத்தத் தொகையை முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தால் வகுக்கையில் கிடைக்கும் ஈவுக்குச் சமமாகும்; 2) மொத்த மூலதனத்தால் நிகழ்த்தப்படும் புரள்வுகளின் எண்ணிக்கையானது இப்புரள்வுகளால் வரப்பெறும் இரு தொகைகளையும் கூட்டி அதை முன்னீடு செய்யப்படும் இரு மூலதனங்களின் மொத்தத் தொகையால் வகுக்கையில் கிடைக்கும் ஈவுக்குச் சமம். இங்கேயும், மூலதனத்தின் இரு பகுதிகளும் ஒன்றையொன்று சாராமல் தனித்தனியே புரள்வு-இயக்கங்களை நிகழ்த்துவதாகக் கொண்டு பரிசீலிக்க வேண்டும்.

---

முன்பு போலவே இப்போதும் உழைப்பு நிகழ்முறைக்கு ஒவ்வொரு வாரமும் £100 முன்னீடு செய்ய வேண்டுமெனக் கொள்வோம். வேலைக் காலம் 6 வாரம் நீடிப்பதாகக் கொண்டால் ஒவ்வொரு முறையும் மொத்தம் £600 முன்னீடு தேவைப்படுகிறது (முதலாவது மூலதனம்). சுற்றோட்டக் காலம் 3 வாரம் என்போம்; புரள்வுக் காலம் முன்பு போலவே 9 வாரமாகிறது. இரண்டாவது மூலதனமான £300 இரண்டாவது மூலதனத்தின் மூன்று வாரச் சுற்றோட்டக் காலத்தின் போது செயல்படத் தொடங்குவதாய்க் கொள்வோம். இரு மூலதனங்களையும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் சுயேச்சையாகப் பரிசீலிப்போமானால், ஓராண்டில் புரள்வதன் அட்டவணை வருமாறு:

அட்டவணை II

## முதலாவது மூலதனம், £600

| புரள்வுக் காலம் (வாரம்) | வேலைக் காலம் வாரம்) | முன்னீடு £ | சுற்றோட்டக் காலம் (வாரம்) |
|---|---|---|---|
| I. 1- 9 | 1- 6 | 600 | 7- 9 |
| II. 10-18 | 10-15 | 600 | 16-18 |
| III. 19-27 | 19-24 | 600 | 25-27 |
| IV. 28-36 | 28-33 | 600 | 34-36 |
| V. 37-45 | 37-42 | 600 | 43-45 |
| VI. 46-[54] | 46-51 | 600 | [52-54] |

## இரண்டாவது மூலதனம் (கூடுதல் மூலதனம்), £300

| புரள்வுக் காலம் (வாரம்) | வேலைக் காலம் (வாரம்) | முன்னீடு £ | சுற்றோட்டக் காலம் (வாரம்) |
|---|---|---|---|
| I. 7-15 | 7- 9 | 300 | 10-15 |
| II. 16-24 | 16-18 | 300 | 19-24 |
| III. 25-33 | 25-27 | 300 | 28-33 |
| IV. 34-42 | 34-36 | 300 | 37-42 |
| V. 43-51 | 43-45 | 300 | 46-51 |

உற்பத்தி நிகழ்முறையானது ஆண்டு முழுதும் தொடர்ந்து ஒரே அளவுவீதத்தில் நடைபெறுகிறது. மூலதனங்கள் முதலாவதும் இரண்டாவதும் தனித்தனியாகவே இருக்கின்றன. ஆனால் அவற்றை இப்படித் தனித்தனியாகக் காட்டும் பொருட்டு அவற்றிடையிலான பின்னல் பிணைவுகளைத் துண்டிக்க வேண்டியிருக்கிறது; இவ்வாறு புரள்வுகளின் எண்ணிக்கையையும் மாற்ற வேண்டியிருக்கிறது. ஏனெனில், மேற்கண்ட அட்டவணையின் படி, புரள்வுத் தொகைகள் பின்வருமாறு இருக்கும்:

| | |
|---|---|
| முதலாவது மூலதனம், | £600 × 5⅔ = £3,400 |
| இரண்டாவது மூலதனம், | £300 × 5 = £1,500 |
| மொத்த மூலதனம், | £900 × 5 4/9 = £4,900 |

ஆனால் இது சரியல்ல. ஏனென்றால், உள்ளபடியான உற்பத்திக் காலமும் சுற்றோட்டக் காலமும் மேற்கண்ட அட்டவணையில் குறிக்கப்படும் உற்பத்திக் காலத்துக்கும் சுற்றோட்டக் காலத்துக்கும்

முழுதொத்ததாய் இருப்பதில்லை—இதை நாம் பிற்பாடு பார்க்கப் போகிறோம். அட்டவணையைப் பொறுத்த வரை, முதலாவது மூல தனத்தையும் இரண்டாவது மூலதனத்தையும் ஒன்றையொன்று சாராத, தனித்தனியான இருவேறு மூலதனங்களாகக் காட்டுவதே முக்கியமாய் இருந்தது.

உண்மையில் இரண்டாவது மூலதனம் முதலாவது மூலதனத்தின் வேலைக் காலத்திலிருந்தும் சுற்றோட்டக் காலத்திலிருந்தும் வேறாகத் தனித்துப் பிரிந்த வேலைக் காலத்தையும் சுற்றோட்டக் காலத்தையும் பெற்றிருக்கவில்லை. வேலைக் காலம் 6 வாரம்; சுற்றோட்டக் காலம் 3 வாரம். இரண்டாவது மூலதனம் £300தான் என்பதால், அது வேலைக் காலத்தின் ஒரு பகுதிக்கு மட்டுமே போதுமானதாய் இருக்கும். உண்மையில் நடப்பதும் அதுவேதான். 6ஆவது வாரத்தின் முடிவில் £600 மதிப்புள்ள உற்பத்திப் பண்டம் சுற்றோட்டத்துக்குச் சென்று, 9ஆவது வார முடிவில் பண வடிவில் மீள்கிறது. இந்நிலையில் இரண்டாவது மூலதனம் 7ஆவது வாரத் தொடக்கத்தில் செயல்படத் தொடங்கி, 7ஆவது வாரம் முதல் 9ஆவது வாரம் முடியும் வரை நீடிக்கும் அடுத்த வேலைக் காலத்தின் தேவைகளை நிறைவு செய்கிறது. ஆனால் நமது அனுமானத்தின் படி 9ஆவது வார முடிவில் வேலைக் காலம் பாதியளவுதான் முடிந்துள்ளது. எனவே முதலாவது மூலதனமான £600 இப்போதுதான் மீண்டிருக்கிறது என்றாலும், 10ஆவது வாரத் தொடக்கத்தில் மீண்டும் செயலில் இறங்குகிறது; அதில் £300 10ஆவது வாரம் முதல் 12ஆவது வாரம் முடியும் வரையிலான காலத்துக்குத் தேவைப்படும் முன்னீடாகிறது. இரண்டாவது வேலைக் காலம் இவ்விதம் நிறைவு பெறுகிறது. £600 மதிப்புள்ள உற்பத்திப் பண்டம் சுற்றோட்டத்தில் இருக்கிறது; அது 15ஆவது வார முடிவில் மீண்டு வரும். அதே போது, ஆரம்ப முன்னீடான இரண்டாவது மூலதனத் தொகை £300 விடுவிக்கப்படுகிறது; அடுத்து வரும் வேலைக் காலத்தின் முதல் பாதியில், அதாவது 13ஆவது வாரம் முதல் 15ஆவது வாரம் முடியும் வரையிலான காலத்தில் அது செயல்படுகிறது. இந்த வாரங்கள் கழிந்த பின் £600 மீண்டு வருகிறது. இதில் £300 வேலைக் காலத்தின் எஞ்சிய பகுதிக்குப் போதுமானது; £300 அதற்கடுத்த வேலைக் காலத்துக்கு எஞ்சுகிறது.

ஆக, நடைபெறுவது இதுதான்:

முதலாவது புரள்வுக் காலம்: வாரம் 1-9.

முதலாவது வேலைக் காலம்: வாரம் 1-6. முதலாவது மூலதனம் £600 செயல்படுகிறது.

முதலாவது சுற்றோட்டக் காலம்: வாரம் 7-9. 9ஆவது வார முடிவில் £600 மீண்டு வருகிறது.

இரண்டாவது புரள்வுக் காலம்: வாரம் 7-15.

இரண்டாவது வேலைக் காலம்: வாரம் 7-12.

முதல் பாதி: வாரம் 7-9. இரண்டாவது மூலதனம் £300 செயல்படுகிறது.

9ஆவது வார முடிவில் £600 பண வடிவில் மீள்கிறது (முதலாவது மூலதனம்). இரண்டாம் பாதி: வாரம் 10-12. முதலாவது மூலதனத்தில் £300 செயல்படுகிறது. முதலாவது மூலதனத்தில் மற்றொரு பகுதியான £300 விடுவிக்கப் பட்ட நிலையில் இருந்து வருகிறது.

இரண்டாவது சுற்றோட்டக் காலம்: வாரம் 13-15.

15ஆவது வார முடிவில் £600 (முதலாவது மூலதனத் திலிருந்து பாதியும் இரண்டாவது மூலதனத்திலிருந்து பாதி யும் பெறப்படுகிறது) பண வடிவில் மீள்கிறது.

மூன்றாவது புரள்வுக் காலம்: வாரம் 13-21.

மூன்றாவது வேலைக் காலம்: வாரம் 13-18.

முதல் பாதி: வாரம் 13-15. விடுவிக்கப்பட்ட £300 செயல்படுகிறது.

15ஆவது வார முடிவில் £600 பண வடிவில் மீள்கிறது. இரண்டாம் பாதி: வாரம் 16-18. மீண்டு வந்த £600இல் £300 செயல்படுகிறது, மற்றொரு பகுதியான £300 விடுவிக்கப்பட்ட நிலையில் இருந்து வருகிறது.

மூன்றாவது சுற்றோட்டக் காலம்: வாரம் 19-21. 21ஆவது வார முடிவில் £600 மீண்டும் பண வடிவில் மீள்கிறது. இப்போது இந்த £600இல் முதலாவது மூலதனமும் இரண்டாவது மூலதனமும் வேறுபடுத்திப் பார்க்க முடியாத படி பிணைந்து விட்டன.

ஆக, 51ஆவது வாரத்தின் முடிவு வரை, £600 மூலதனத்தின் முழுமையான புரள்வுக் காலங்கள் எட்டு ஆகும் (I: வாரம் 1-9; II: வாரம் 7-15; III: வாரம் 13-21; IV: வாரம் 19-27; V: வாரம் 25-33; VI: வாரம் 31-39; VII: வாரம் 37-45; VIII: வாரம் 43-51). ஆனால் வாரம் 49-51 எட்டாவது சுற்றோட்டக் காலத்தில் வருவதால், விடுவிக்கப்பட்ட மூலதனத்தில் £300 செயலில் இறங்கி உற்பத்தியைத் தொடர்ந்து நடைபெறச் செய்தாக வேண்டும். இவ்வாறு ஆண்டின் முடிவில் புரள்வு பின்வருமாறு அமைகிறது: £600 அதன் சுற்றை எட்டு முறை நிகழ்த்தி £4,800 ஆகியுள்ளது. இதன்றி, கடைசி மூன்று வார (49-51) உற்பத்திப் பண்டமும் கிடைக்கிறது; ஆனால் இது தனது 9 வாரச் சுற்றில் மூன்றிலொரு பங்கை மட்டுமே முடித்துள்ளது; எனவே இதன் மதிப்பில் மூன்றிலொரு பங்காகிய £100 மட்டுமே புரளும் மொத் தத் தொகையில் சேர்த்துக் கணக்கிடப்படுகிறது. 51 வாரம் கொண்ட ஓராண்டின் உற்பத்திப் பண்டம் £5,100 என்றால், புரளும் மூல தனம் £4,800 + £100 = £4,900தான். முன்னீடு செய்யப்படும்

மொத்த மூலதனமான £900 இவ்விதம் $5\frac{4}{9}$ முறை புரள்கிறது— இது முதல் நேர்வைக் காட்டிலும் சற்று அதிகமாகும்.

இப்போதைய உதாரணத்தில், புரள்வுக் காலத்தில் வேலைக் காலம் ⅔ பங்கு என்றும், சுற்றோட்டக் காலம் ⅓ பங்கு என்றும் வைத்துக் கொண்டோம்; அதாவது வேலைக் காலம் சுற்றோட்டக் காலத்தின் சாமானிய பெருக்கற் பலனாய் இருப்பதாகக் கொண் டோம். இப்படி இல்லாத போதும் மேற்கூறிய படி மூலதனம் விடுவிக்கப்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

வேலைக் காலம் 5 வாரம் என்றும், சுற்றோட்டக் காலம் 4 வாரம் என்றும், வாரத்துக்கு £100 வீதம் மூலதனம் முன்னீடு செய்யப்படுகிறது என்றும் கொள்வோம்.

முதலாவது புரள்வுக் காலம்: வாரம் 1-9.

முதலாவது வேலைக் காலம்: வாரம் 1-5. முதலாவது மூலதன மான £500 செயல்படுகிறது.

முதலாவது சுற்றோட்டக் காலம்: வாரம் 6-9. 9ஆவது வார முடிவில் £500 பண வடிவில் மீள்கிறது.

இரண்டாவது புரள்வுக் காலம்: வாரம் 6-14.

இரண்டாவது வேலைக் காலம்: வாரம் 6-10.

முதல் பிரிவு: வாரம் 6-9. இரண்டாவது மூலதனமான £400 செயல்படுகிறது. 9ஆவது வார முடிவில் முதலாவது மூலதனமாகிய £500 பண வடிவில் மீள்கிறது.

இரண்டாம் பிரிவு: 10ஆவது வாரம். மீண்டு வந்த £500இல் £100 செயல்படுகிறது. எஞ்சுகிற £400 அடுத்த வேலைக் காலத்துக்காக விடுவிக்கப்படுகிறது.

இரண்டாவது சுற்றோட்டக் காலம்: வாரம் 11-14. 14ஆவது வார முடிவில் £500 பண வடிவில் மீள்கிறது.

மேலே விடுவிக்கப்பட்ட £400 14ஆவது வார முடிவு வரை (வாரம் 11-14) செயல்படுகிறது. மீண்டு வந்துள்ள £500இல் £100 மூன்றாவது வேலைக் காலத்தின் (வாரம் 11-15) எஞ்சிய தேவைகளை நிறைவு செய்கிறது; இவ்விதம் £400 நான்காவது வேலைக் காலத்துக்காக மீண்டும் விடுவிக்கப்படுகிறது. ஒவ்வொரு வேலைக் காலத்திலும் இது திரும்பத் திரும்ப நடைபெறுகிறது; ஒவ்வொன்றின் தொடக்கத்திலும் முதல் 4 வாரங்களுக்குப் போது மானதாகிய £400 தயாராய்க் கைவசம் இருக்கிறது. 4ஆவது வார முடிவில் £500 பண வடிவில் மீள்கிறது. இதில் £100 மட்டுமே கடைசி வாரத்துக்குத் தேவை; எஞ்சுகிற பகுதியான £400 அடுத்த வேலைக் காலத்துக்காக விடுவிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது, வேலைக் காலம் 7 வாரம் என்றும், சுற்றோட்டக் காலம் 2 வாரம் என்றும், முதலாவது மூலதனம் £700 என்றும், இரண்டாவது மூலதனம் £200 என்றும் கொள்வோம்.

முதலாவது புரள்வுக் காலம் 1ஆவது வாரம் முதல் 9ஆவது வாரம் முடிய நீடிக்கிறது; முதலாவது வேலைக் காலம் £700 முன்னீட்டுடன் 1ஆவது வாரம் முதல் 7ஆவது வாரம் முடிய நீடிக்கிறது; முதலாவது சுற்றோட்டக் காலம் 8ஆவது வாரம் முதல் 9ஆவது வாரம் முடிய நீடிக்கிறது. 9ஆவது வார முடிவில் £700 பண வடிவில் மீள்கிறது.

8ஆவது வாரம் முதல் 16ஆவது வாரம் முடிய நீடிக்கும் இரண்டாவது புரள்வுக் காலத்தில், 8ஆவது வாரம் முதல் 14ஆவது வாரம் முடிய நீடிக்கும் இரண்டாவது வேலைக் காலம் அடங்குகிறது. இதில் 8ஆவது, 9ஆவது வாரங்களின் தேவைகளை இரண்டாவது மூலதனம் நிறைவு செய்கிறது. 9ஆவது வார முடிவில், மேற்கூறிய £700 மீள்கிறது. இந்த வேலைக் காலத்தின் (வாரம் 10-14) முடிவு வரை, இந்தத் தொகையில் £500 செலவழிகிறது, £200 அடுத்த வேலைக் காலத்துக்காக விடுவிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. இரண்டாவது சுற்றோட்டக் காலம் 15ஆவது வாரம் முதல் 16ஆவது வாரம் முடிய நீடிக்கிறது. 16ஆவது வாரத்தின் முடிவில் £700 மீண்டும் மீள்கிறது. அது முதல் ஒவ்வொரு வேலைக் காலத்திலும் இவ்வாறே திரும்பத் திரும்ப நடைபெறுகிறது. முதல் இரண்டு வார காலத்தில் மூலதனத்திற்கான தேவையை, முந்தைய வேலைக் காலத்தில் முடிவில் விடுவிக்கப்படும் £200 நிறைவு செய்கிறது. இரண்டாவது வாரத்தின் முடிவில் £700 மீள்கிறது. இப்போது வேலைக் காலத்தில் 5 வாரம் மட்டுமே எஞ்சியுள்ளது; அதற்கு £500 போதுமானது. இவ்விதம் எப்போதுமே £200 அடுத்த வேலைக் காலத்துக்காக விடுவிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது.

ஆகவே, வேலைக் காலம் சுற்றோட்டக் காலத்தை விட நீண்டதாகக் கொள்ளப்படுகையில் ஒவ்வொரு வேலைக் காலத்தின் முடிவிலும் பண-மூலதனத் தொகை ஒன்று விடுவிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது, இதன் பருமன் சுற்றோட்டக் காலத்துக்காக முன்னீடு செய்யப்படும் இரண்டாவது மூலதனத்தைப் போல் அதே பருமனுடையதாய் இருக்கிறது. இரண்டாவது மூலதனம் நமது மூன்று உதாரணங்களில் முதலாவதில் £300 ஆகவும், இரண்டாவதில் £400 ஆகவும், மூன்றாவதில் £200 ஆகவும் இருந்தது. இதற்கு ஒப்ப ஒவ்வொரு வேலைக் காலத்தின் முடிவிலும் விடுவிக்கப்படும் மூலதனம் முதலாவதில் £300 ஆகவும், இரண்டாவதில் £400 ஆகவும், மூன்றாவதில் £200 ஆகவும் இருந்தது.

### III. வேலைக் காலம் சுற்றோட்டக் காலத்தை விடக் குறுகலாய் இருத்தல்

இப்போதும் புரள்வுக் காலம் 9 வாரமெனக் கொண்டு

பரிசீலனையைத் தொடங்குவோம். இதில் வேலைக் காலம் 3 வாரம் என்றும், இதற்கான முதலாவது மூலதனம் £300 என்றும் கொள்வோம். சுற்றோட்டக் காலம் 6 வாரம் என்போம். இதற்காகத் தேவைப்படும் கூடுதல் மூலதனம் £600. இதனை ஒவ்வொன்றும் £300 மதிப்புள்ள இரு மூலதனங்களாகப் பிரிக்கலாம்; இவை ஒவ்வொன்றும் ஒரு வேலைக் காலத்தின் தேவைகளை நிறைவு செய்யக் கூடியதாகும். ஒவ்வொன்றும் £300 மதிப்புள்ள மூன்று மூலதனங்கள் இருக்கின்றன. இதில் £300 எப்போதும் உற்பத்தியில் ஈடுபட்டிருக்க, £600 சுற்றியோடுகிறது.

அட்டவணை III

## முதலாவது மூலதனம்

| புரள்வுக் காலங்கள் (வாரம்) | வேலைக் காலங்கள் (வாரம்) | சுற்றோட்டக் காலங்கள் (வாரம்) |
|---|---|---|
| I. 1- 9 | 1- 3 | 4- 9 |
| II. 10-18 | 10-12 | 13-18 |
| III. 19-27 | 19-21 | 22-27 |
| IV. 28-36 | 28-30 | 31-36 |
| V. 37-45 | 37-39 | 40-45 |
| VI. 46-[54] | 46-48 | 49-[54] |

## இரண்டாவது மூலதனம்

| புரள்வுக் காலங்கள் (வாரம்) | வேலைக் காலங்கள் (வாரம்) | சுற்றோட்டக் காலங்கள் (வாரம்) |
|---|---|---|
| I. 4-12 | 4- 6 | 7-12 |
| II. 13-21 | 13-15 | 16-21 |
| III. 22-30 | 22-24 | 25-30 |
| IV. 31-39 | 31-33 | 34-39 |
| V. 40-48 | 40-42 | 43-48 |
| VI. 49-[57] | 49-51 | [52-57] |

## மூன்றாவது மூலதனம்

| புரள்வுக் காலங்கள் (வாரம்) | வேலைக் காலங்கள் (வாரம்) | சுற்றோட்டக் காலங்கள் (வாரம்) |
|---|---|---|
| I. 7-15 | 7- 9 | 10-15 |
| II. 16-24 | 16-18 | 19-24 |
| III. 25-33 | 25-27 | 28-33 |
| IV. 34-42 | 34-36 | 37-42 |
| V. 43-51 | 43-45 | 46-51 |

முதலாவது நேர்வு அப்படியே இங்கு மறுபதிப்பாக அமையக் காண்கிறோம்; ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால் இரண்டுக்கு பதில் இப்போது மூன்று மூலதனங்கள் ஒன்றையொன்று மாற்றீடு செய்கின்றன. மூலதனங்கள் இங்கு பின்னிப் பிணையவில்லை. ஒவ்வொரு மூலதனத்தின் பாதையையும் ஆண்டின் முடிவு வரை காண முடியும். முதலாவது நேர்வில் எப்படியோ அதே போல் இங்கும் வேலைக் காலத்தின் முடிவில் மூலதனம் ஏதும் விடுவிக்கப் படுவதில்லை. முதலாவது மூலதனம் மூன்றாவது வார முடிவில் முழுமையாக முதலீடு செய்யப்பட்டு விடுகிறது; 9ஆவது வார முடிவில் முழுதும் மீண்டு வந்து 10ஆவது வாரத் தொடக்கத்தில் மீண்டும் செயல்படத் தொடங்குகிறது. இரண்டாவது, மூன்றாவது மூலதனங்களின் இயக்கமும் இப்படித்தான் இருக்கிறது. மூல தனங்கள் காலந்தவறாமலும் முழுமையாகவும் ஒன்றையொன்று மாற்றீடு செய்வதால் இங்கு மூலதன விடுவிப்புக்கு [release of capital] வழியே இல்லை.

மொத்தப் புரள்வு பின்வருமாறு:

| | |
|---|---|
| முதலாவது மூலதனம், | £300 × 5⅔ = £1,700 |
| இரண்டாவது மூலதனம், | £300 × 5⅓ = £1,600 |
| மூன்றாவது மூலதனம், | £300 × 5 = £1,500 |
| மொத்த மூலதனம், | £900 × 5⅓ = £4,800 |

சுற்றோட்டக் காலம் வேலைக் காலத்தின் சரியான பெருக்கற் பலனாக இல்லாத ஓர் எடுத்துக்காட்டையும் பரிசீலிப்போம். உதாரணமாய், வேலைக் காலம் 4 வாரமாகவும் சுற்றோட்டக் காலம் 5 வாரமாகவும் இருக்கட்டும். அப்போது மூலதனங்கள் பின் வருமாறு இருக்கும்: முதலாவது மூலதனம் £400; இரண்டாவது மூலதனம் £400; மூன்றாவது மூலதனம் £100. முதல் மூன்று புரள்வுகளை மட்டும் எடுத்துக் கொண்டு பார்ப்போம்.

அட்டவணை IV

## முதலாவது மூலதனம்

| புரள்வுக் காலங்கள் (வாரம்) | வேலைக் காலங்கள் (வாரம்) | சுற்றோட்டக் காலங்கள் (வாரம்) |
|---|---|---|
| I. 1- 9 | 1- 4 | 5- 9 |
| II. 9-17 | 9.10-12 | 13-17 |
| III. 17-25 | 17.18-20 | 21-25 |

## இரண்டாவது மூலதனம்

| புரள்வுக் காலங்கள் (வாரம்) | வேலைக் காலங்கள் (வாரம்) | சுற்றோட்டக் காலங்கள் (வாரம்) |
|---|---|---|
| I. 5-13 | 5- 8 | 9-13 |
| II. 13-21 | 13.14-16 | 17-21 |
| III. 21-29 | 21.22-24 | 25-29 |

## மூன்றாவது மூலதனம்

| புரள்வுக் காலங்கள் (வாரம்) | வேலைக் காலங்கள் (வாரம்) | சுற்றோட்டக் காலங்கள் (வாரம்) |
|---|---|---|
| I. 9-17 | 9 | 10-17 |
| II. 17-25 | 17 | 18-25 |
| III. 25-33 | 25 | 26-33 |

மூன்றாவது மூலதனம் ஒரு வாரத்துக்கு மட்டுமே ஆனதால் அதற்கென்று தனியே வேலைக் காலம் இல்லை. அதன் வேலைக் காலம் முதலாவது மூலதனத்தின் முதல் வேலை-வாரத்துடன் ஒன்றி விடுகிறது. இந்த நேர்வில் இவ்விதம் மூலதனங்கள் பின்னிப் பிணைந்து செயல்படுகின்றன. மறு புறம், முதலாவது, இரண்டாவது மூலதனங்கள் இரண்டினதும் வேலைக் காலம் முடிவடைந்ததும், மூன்றாவது மூலதனத்துக்குச் சமமான £100 விடுவிக்கப்படுகிறது. எப்படி என்றால், முதலாவது மூலதனத்தின் இரண்டாவது வேலைக் காலத்திலும், அடுத்து வரும் எல்லா வேலைக் காலங்களிலும் முதல் வாரத்தின் தேவைகளை மூன்றாவது

மூலதனம் நிறைவு செய்து, முதலாவது மூலதனத்தின் முழு மதிப்பாகிய £400 இந்த முதல் வார முடிவில் மீளுமானால், முதலாவது மூலதனத்தினுடைய வேலைக் காலத்தின் மீதப் பகுதிக்கு 3 வாரமும், அதற்குரிய £300 முதலீடுமே எஞ்சியிருக்கும். இவ்விதம் விடுவிக்கப்படும் £100, உடனடியாக அடுத்து வருகிற இரண்டாவது மூலதன வேலைக் காலத்தின் முதல் வாரத்துக்குப் போதுமானது; அந்த வார முடிவில், இரண்டாவது மூலதனத்தின் முழு மதிப்பாகிய £400 மீள்கிறது. ஆனால், ஏற்கெனவே ஆரம்பமாகி விட்ட வேலைக் காலத்தால் இன்னும் £300ஐ மட்டுமே எடுத்துக் கொள்ள முடியும் என்பதால், இந்த வேலைக் காலத்தின் முடிவில் £100 மீண்டும் விடுவிக்கப்படுகிறது. இவ்வாறே தொடர்ந்து நடைபெறுகிறது. ஆக, சுற்றோட்டக் காலம் வேலைக் காலத்தின் சாமானியப் பெருக்கற் பலனாக இல்லாத போதெல்லாம், வேலைக் காலத்தின் முடிவில் மூலதனம் விடுவிக்கப்படக் காண்கிறோம். இவ்விதம் விடுவிக்கப்படுகிற மூலதனமானது, வேலைக் காலத்தைக் காட்டிலும் அல்லது வேலைக் காலங்களின் பெருக்கற் பலனைக் காட்டிலும் சுற்றோட்டக் காலத்துக்கிருக்கும் மிகையை நிறைவு செய்வதற்கு அவசியமான மூலதனப் பகுதிக்குச் சமமாகும்.

நாம் பரிசீலித்திருக்கும் அனைத்து நேர்வுகளிலும், ஆராயப்படுகிற எந்தத் தொழிலிலும் வேலைக் காலம், சுற்றோட்டக் காலம் ஆகிய இரண்டும் ஆண்டு முழுக்க ஒரேவிதமாய் இருப்பதாகக் கொண்டோம். மூலதனப் புரள்வின் மீதும் முன்னீட்டின் மீதும் சுற்றோட்டக் காலத்தின் தாக்கத்தை ஆய்ந்தறிய இந்த அனுமானம் தேவைப்பட்டது. உண்மையில் இந்த அனுமானம் அப்படியொன்றும் நிபந்தனையின்றி அவசியமானதல்ல, பல நேரம் அவசியமானதாகக் கூட இருப்பதில்லை. ஆயினும் இதனால் இங்கே எதுவும் மாற்றமடையவில்லை.

இந்தப் பிரிவு முழுவதிலும் சுழல்-மூலதனத்தின் புரள்வுகளையே பரிசீலித்திருக்கிறோம், நிலை-மூலதனத்தின் புரள்வுகளைப் பரிசீலிக்கவில்லை. ஏனென்றால் நமது ஆய்வுப் பொருளுடன் நிலை-மூலதனத்துக்கு எந்த சம்பந்தமும் இல்லை. உற்பத்தி நிகழ்முறையில் உபயோகிக்கப்படும் உழைப்புச் சாதனங்களும் இன்ன பிறவும் நிலை-மூலதனமாக இருப்பதற்கே காரணம், அவற்றின் உபயோகக் காலம் சுழல்-மூலதனத்தின் புரள்வுக் காலத்தை விட நீண்டதாகும் என்பதுதான். இந்த உழைப்புச் சாதனங்கள் ஓயாமல் திரும்பத் திரும்ப நடைபெறும் உழைப்பு நிகழ்முறைகளில் தொடர்ந்து பயன்படுகிற காலம் சுழல்-மூலதனத்தின் புரள்வுக் காலத்தை விட நீண்டதாய் இருக்கும் வரைதான், அதாவது சுழல்-மூலதனத்தின் n புரள்வுக் காலங்களைக் கொண்டதாய் இருக்கும் வரைதான், அவை நிலை-மூலதனமாகின்றன. சுழல்-மூலதனத்தின் இந்தப் புரள்வுக் காலங்கள் குறிக்கிற ஒட்டுமொத்தக் காலம் நீண்டதாகவோ குறுகலாகவோ

இருக்கலாம், இந்த மொத்த காலத்துக்கென நிலை-மூலதன உருவில் முன்னீடு செய்யப்படும் திறனுடை-மூலதனப் பகுதி அக்காலம் முடியும் வரை மீண்டும் முன்னீடு செய்யப்பட வேண்டியதில்லை. அது தனது பழைய பயன்-வடிவத்திலேயே தொடர்ந்து செயல் படுகிறது. அதில் ஏற்படுகிற மாறுபாடெல்லாம் இதுதான்: சுழல்-மூலதனத்தின் ஒவ்வொரு புரள்வுக் காலத்திலும் தனிப்பட்ட ஒரு **வேலைக் காலத்தின்** மாறுபடும் அளவுக்கேற்ற விகிதத்தில் நிலை-மூலதனம் அதன் ஆரம்ப மதிப்பின் ஒரு பகுதியை அந்த வேலைக் காலத்தின் உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்தளிக்கிறது. நிலை-மூலதனம் உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்தளிக்கும் இந்த மதிப்புப் பகுதி சுற்றோட்டக் காலத்தின் அளவைப் பொறுத்து துரித மாகவோ மெதுவாகவோ பண வடிவில் மீள்கிறது. நாம் இந்தப் பிரிவில் ஆராய்வது திறனுடை-மூலதனத்தின் சுழலும் மூலதனப் பகுதியின் புரள்வாகும்: இந்த ஆய்வுப் பொருளின் தன்மை இந்த மூலதனப் பகுதியின் தன்மையிலிருந்து பெறப்படுவதாகும். ஒரு வேலைக் காலத்தில் பயன்படுத்தப்படுகிற சுழல்-மூலதனம் அதன் புரள்வைப் பூர்த்தி செய்யும் வரை, அதாவது சரக்கு-மூலதன மாகவும் பிறகு அதிலிருந்து பண-மூலதனமாகவும், அதிலிருந்து பழையபடி திறனுடை-மூலதனமாகவும் மாறும் வரை, அந்த சுழல்-மூலதனத்தை ஒரு புதிய வேலைக் காலத்தில் பயன்படுத்த முடியாது. எனவே, முதல் வேலைக் காலத்தை அடுத்து இரண்டாவது வேலைக் காலம் உடனடியாகத் தொடர வேண்டுமானால் புதிதாக மூலதனம் முன்னீடு செய்யப்பட்டு திறனுடை-மூலதனத்தின் சுழலும் கூறுகளாய் மாற்றப்பட வேண்டும்; இந்தப் புதிய மூலதனத்தின் அளவானது முதல் வேலைக் காலத்துக்காக முன்னீடு செய்யப்பட்ட சுழல்-மூலதனத்தின் சுற்றோட்டக் காலத்தால் ஏற்படும் இடைவெளியை நிரப்புவதற்குப் போதுமானதாய் இருந்தாக வேண்டும். சுழல்-மூலதனத்தின் வேலைக் கால நீட்டளவு உழைப்பு நிகழ்முறையின் அளவுவீதத்தின் மீதும், முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் பகுப்பு அல்லது புதிதாகப் புகுத்தப்படும் கூடுதல் மூலதன அளவுகள் மீதும் ஏற்படுத்தும் தாக்கத்துக்கு மேற்கூறிய நிலைமையே மூலகாரணம். இந்தப் பிரிவில் நாம் பரிசீலிக்க வேண்டியிருந்தது இதுவேதான்.

## IV. முடிவுகள்

மேற்கண்ட ஆய்விலிருந்து தெரிய வருகிறவை:

அ. மூலதனம் வெவ்வேறு பகுதிகளாகப் பகுக்கப்பட்டு, ஒரு பகுதி தொடர்ச்சியாக வேலைக் காலத்திலும் பிற பகுதிகள் சுற்றோட்டக் காலத்திலும் இருக்குமாயின், இம்மூலதனப் பகுதிகள் பின் வரும் இரு நேர்வுகளிலும் சுயேச்சையான வெவ்வேறு தனிப்பட்ட

மூலதனங்களைப் போல் ஒன்றையொன்று மாற்றீடு செய்து கொள் கின்றன: (1) வேலைக் காலம் சுற்றோட்டக் காலத்துக்குச் சமமாக இருக்கும் படி புரள்வுக் காலம் இரு சம பிரிவுகளாகப் பிரிந்திருத் தல்; (2) சுற்றோட்டக் காலம் வேலைக் காலத்தை விட நீண்டதாக இருந்து அதே போது வேலைக் காலத்தின் சாமானிய பெருக்கற் பலனாக இருத்தல்; அதாவது சுற்றோட்டக் காலம் n வேலைக் காலங்களுக்குச் சமமாகவும், n என்பது பின்னமில்லாத முழு எண் ணாகவும் இருத்தல். இந்த இரு நேர்வுகளிலும், முன்னீடு செய்யப் படும் மூலதனத்தின் எந்தப் பகுதியும் விடுவிக்கப்படுவதில்லை.

ஆ. மறு புறம் (1) சுற்றோட்டக் காலம் வேலைக் காலத்தின் சாமானிய மடங்காக இல்லாமல் வேலைக் காலத்தை விட நீண்ட தாகவும், (2) வேலைக் காலம் சுற்றோட்டக் காலத்தை விட நீண்ட தாகவும் இருக்கும் போதெல்லாம், மொத்தச் சுழல்-மூலதனத்தின் ஒரு பகுதி இரண்டாவது புரள்வு முதலாய் ஒவ்வொரு வேலைக் காலத்தின் முடிவிலும் தொடர்ச்சியாகவும் காலவட்ட முறையிலும் விடுவிக்கப்படுகிறது. இவ்விதம் விடுவிக்கப்படும் மூலதனமானது, வேலைக் காலம் சுற்றோட்டக் காலத்தை விட நீண்டதாயிருப்பின், மொத்த மூலதனத்தில் சுற்றோட்டக் காலத்துக்காக முன்னீடு செய்யப்பட்ட பகுதிக்குச் சமமாயிருக்கும். சுற்றோட்டக் காலம் வேலைக் காலத்தை விட நீண்டதாயிருப்பின், வேலைக் காலத்தைக் காட்டிலும் அல்லது வேலைக் காலங்களின் மடங்கைக் காட்டிலும் சுற்றோட்டக் காலத்திற்குள்ள மிகையை நிறைவு செய்யத் தேவைப் படும் மூலதனப் பகுதிக்குச் சமமாயிருக்கும்.

இ. இதிலிருந்து தெரிவது என்னவென்றால்: மொத்த சமுதாய மூலதனத்துக்கு, அதன் சுழலும் பகுதியைப் பொறுத்த வரை, மூலதன விடுவிப்பே விதியாக இருக்க வேண்டும்; உற்பத்தி நிகழ் முறையில் அடுத்தடுத்துச் செயல்படும் மூலதனப் பகுதிகள் மாறி மாறி வருவது விதிவிலக்காகவே நடைபெற வேண்டும். ஏனெனில் வேலைக் காலமும் சுற்றோட்டக் காலமும் சமமாகவோ சுற்றோட்டக் காலமும் வேலைக் காலத்தின் சாமானிய மடங்கும் சமமாகவோ இருந்து, புரள்வுக் காலத்தின் இரு கூறுகளுக்கும் இடையே இப்படி விகித ஒழுங்கு [proportionality] நிலவுவதற்கும், இங்கு நாம் பரிசீ லிக்கிற பிரச்சினையின் தன்மைக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லாததால், சாதாரணமாக இந்த விகித ஒழுங்கு விதிவிலக் காகவே ஏற்பட முடியும்.

ஆகவே, ஒவ்வோர் ஆண்டும் பல தரம் புரள்கிற சமுதாயச் சுழல்-மூலதனத்தில் மிகக் கணிசமான பகுதி வருடாந்தரப் புரள்வுச் சகடத்தில் குறிப்பிட்ட காலத்துக்கொரு முறை விடுவிக்கப்படும் மூலதனமாக இருந்து வரும்.

மேலும், மற்றெல்லாக் காரணிகளும் சமமாயிருக்க, விடுவிக்கப் படும் மூலதனத்தின் பருமனானது உழைப்பு நிகழ்முறையின்'

பரிமாணம் அல்லது உற்பத்தியின் அளவுவீதம் கூடுதலாகும் போது, அதாவது பொதுவாக முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சியைத் தொடர்ந்து அதிகரித்துச் செல்கிறது என்பது தெளிவு. ஆ, (2) என்கிற நேர்வில் முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனம் அதிகமாவதாலும், ஆ, (1) என்கிற நேர்வில், முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சியைத் தொடர்ந்து சுற்றோட்டக் காலம் நீண்டு செல்வதாலும், எனவே வேலைக் காலம் சுற்றோட்டக் காலத்தை விடக் குறுகியதாய் இருக்கையில் புரள்வுக் காலமும் நீண்டு செல்வதாலும், இரு காலங்களுக்குமிடையில் விகித ஒழுங்கேதும் இல்லாததாலும் இவ்விதம் நடந்தேறுகிறது.

எடுத்துக்காட்டாக, முதலாவது நேர்வில் வாரத்துக்கு £100 முதலீடு செய்ய வேண்டியிருந்தது. 6-வார வேலைக் காலத்துக்காக £600, 3-வார சுற்றோட்டக் காலத்துக்காக £300, ஆக மொத்தம் £900 தேவைப்படுகிறது. இங்கே £300 தொடர்ச்சியாக விடுவிக்கப்படுகிறது. மறு புறம், வாரத்துக்கு £300 முதலீடு செய்யப்பட்டால், வேலைக் காலத்துக்காக £1,800, சுற்றோட்டக் காலத்துக்காக £900 தேவைப்படுகிறது. £300க்கு பதில் £900 குறிப்பிட்ட காலத்துக்கொரு முறை விடுவிக்கப்படுகிறது.

ஈ. £900 மொத்த மூலதனத்தை மேற்கண்டவாறு வேலைக் காலத்துக்காக £600, சுற்றோட்டக் காலத்துக்காக £300 என்று இரு பகுதிகளாகப் பிரிக்க வேண்டும். இவ்வாறு, உழைப்பு நிகழ்முறையில் உள்ளபடியே முதலீடு செய்யப்படும் பகுதி மூன்றிலொரு பங்கு குறைகிறது—£900 ஆக இருந்தது £600 ஆகிறது. ஆதலால் உற்பத்தியின் அளவுவீதம் மூன்றிலொரு பங்கு குறைகிறது. மறு புறம், £300 ஆனது வேலைக் காலம் தடைபடாமல் தொடர்வதற்காகவே செயல்படுகிறது; இவ்விதம் ஆண்டின் ஒவ்வொரு வாரமும் £100 முதலீடு செய்ய முடிகிறது.

கருத்தளவில் பார்க்குமிடத்து, £600 மூலதனம் $6 \times 8 = 48$ வாரம் செயல்பட்டாலும் சரி (உற்பத்திப் பண்டம் = £4,800), மொத்த மூலதனமான £900 உழைப்பு நிகழ்முறையில் 6 வார காலத்துக்குச் செயல்பட்டு, பின்னர் 3 வார சுற்றோட்டக் காலத்தில் ஓய்ந்திருந்தாலும் சரி, எல்லாம் ஒன்றுதான். பின்சொன்ன விதம் செய்யுமானால் 48 வார காலத்தில் அது $5\frac{1}{3} \times 6 = 32$ வார காலம் வேலை செய்யும் (உற்பத்திப் பண்டம் = $£900 \times 5\frac{1}{3} = £4,800$), 16 வார காலம் ஓய்ந்திருக்கும். ஓய்ந்திருக்கும் 16 வார காலத்தில் நிலை-மூலதனம் சேதாரப்படுகிறது; உழைப்புக்காகும் செலவு கூடிப் போகிறது—உழைப்பை ஆண்டின் ஒரு பகுதியில் மட்டும் பயன்படுத்திக் கொண்டாலும், ஆண்டு முழுவதற்கும் அதற்கு ஊதியமளித்தாக வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக உற்பத்தி நிகழ்முறை இப்படி அவ்வப்போது தடைபடுவது நவீனப் பெருவீதத் தொழில் துறையின் [modern big industry] செயற்பாட்டுக்கு சிறிதும்

ஒவ்வாதது. விடாத்தொடராய் செயல்படுவதுங்கூட உழைப்பின் உற்பத்தித் திறன்களில் ஒன்றாகும்.

விடுவிக்கப்படுகிற, இன்னும் சரியாகச் சொன்னால் செயலற்றிருக்கிற மூலதனத்தை மேலும் நெருங்கிச் சென்று பார்ப்போமானால், அதில் கணிசப் பகுதி எப்போதுமே பண-மூலதன வடிவில் இருந்தாக வேண்டும் என்பது தெரிகிறது. பழைய உதாரணத்தையே எடுத்துக் கொள்வோம்; வேலைக் காலம் — 6 வாரம், சுற்றோட்டக் காலம் — 3 வாரம், வார முதலீடு — £100. இரண்டாவது வேலைக் காலத்தின் நடுவில், அதாவது 9ஆவது வார முடிவில், £600 மீள்கிறது. இதில் £300 மட்டுமே வேலைக் காலத்தின் எஞ்சிய பகுதிக்கான முதலீடாக வேண்டும். ஆகவே, இரண்டாவது வேலைக் கால முடிவில், £300 விடுவிக்கப்படுகிறது. இந்த £300 எவ் வடிவில் இருக்கிறது? ⅓ பங்கு கூலிக்காவும், ⅔ பங்கு கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்களுக்காகவும் முதலீடு செய்யப்படுவதாகக் கொள்வோம். அப்படியானால், மீண்டு வந்த £600இல் £200 கூலி தருவதற்காகப் பண வடிவில் இருக்கிறது; £400 திறனுடைச் சரக்கிருப்பின் வடிவில், அதாவது திறனுடை மாறாச் சுழல்-மூலதனக் கூறுகளின் வடிவில் இருக்கிறது. இந்தத் திறனுடைச் சரக்கிருப்பில் ஒரு பாதி மட்டுமே இரண்டாவது வேலைக் காலத்தின் இரண்டாம் பாதிக்குத் தேவைப்படுவதால், மறு பாதி 3 வார காலத்துக்குத் திறனுடை உபரிச் சரக்கிருப்பின் வடிவில் — அதாவது ஒரு வேலைக் காலத்திற்கு வேண்டியதற்கும் மிகையான சரக்கிருப்பின் வடிவில் — இருக்கிறது. ஆனால், மீண்டு வந்த மூலதனப் பகுதியில் (£400) ஒரு பாதி (£200) மட்டுமே நடப்பு வேலைக் காலத்துக்கு வேண்டியிருக்கும் என்று முதலாளிக்குத் தெரியும். ஆகவே, அவர் முழுமையாகவோ பகுதியாகவோ இந்த £200ஐ திறனுடை உபரிச் சரக்கிருப்பாக உடனே மாற்றிக் கொள்வாரா, அல்லது சந்தை நிலவரம் மேலும் சாதகமாகட்டும் என்று முழுமையாகவோ பகுதியாகவோ அதனைப் பண-மூலதன வடிவில் வைத்துக் கொள்வாரா என்பது சந்தை நிலைமைகளைப் பொறுத்தது. கூலிக்காக முதலீடு செய்ய வேண்டிய பகுதியை (£200) அவர் பண வடிவிலேயே வைத்துக் கொள்வார் என்பது கூறாமலே விளங்கும் ஒன்று. முதலாளி கச்சாப் பொருளை வாங்கி, பண்டக சாலையில் சேமித்து வைக்கலாம். ஆனால் உழைப்புச் சக்தியை இப்படிச் செய்ய முடியாது. அவர் அதனை உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபடச் செய்து, வார முடிவில் அதற்கு ஊதியமளித்தாக வேண்டும். ஆகவே, விடுவிக்கப்பட்ட மூலதனமான £300இல், எப்படிப் பார்த்தாலும் இந்த £100 விடுவிக்கப்பட்ட, அதாவது வேலைக் காலத்துக்குத் தேவைப்படாத பண-மூலதன வடிவில் இருக்கும். ஆகவே பண-மூலதன வடிவில் விடுவிக்கப்படுகிற மூலதனம், குறைந்தது கூலிக்காக முதலீடு செய்யப்படும் மாறும்-மூலதனப் பகுதிக்காவது சமமாயிருக்க

வேண்டும். அதிகபட்சமாய்ச் சொன்னால், விடுவிக்கப்படும் மூலதனம் அனைத்தும் பண-மூலதன வடிவில் இருக்கலாம். உண்மையில் அது இந்தக் குறைந்தபட்சத்துக்கும் அதிகபட்சத்துக்கும் இடையே அலைவுறுகிறது.

இவ்வாறு புரள்வு இயக்க ஏற்பாட்டாலேயே விடுவிக்கப்படும் இந்தப் பண-மூலதனம் (நிலை-மூலதனம் தொடர்ச்சியாக அடுத்தடுத்து மீள்வதால் விடுவிக்கப்படும் பண-மூலதனத்தோடும் ஒவ்வோர் உழைப்பு நிகழ்முறையிலும் மாறும்-மூலதனத்துக்காகத் தேவைப்படும் பண-மூலதனத்தோடும் சேர்ந்து) கடன்-செலாவணி முறை வளர்ச்சியடையும் போது முக்கியப் பங்காற்றுவதோடு, கடன்-செலாவணி முறையின் அடித்தளங்களில் ஒன்றாகவும் அமைகிறது.

நமது உதாரணத்தில் 3 வாரமாக இருக்கும் சுற்றோட்டக் காலம் 2 வாரமாய்க் குறுகுவதாக வைத்துக் கொள்வோம். இது இயல்பாய் ஏற்படும் மாறுதலால் இப்படி நேர்வதில்லை; காலச் செழிப்பாலும் கொடுப்புக் காலங்கள் குறுகுவதாலும் இன்ன பிறவற்றாலும்தான் இப்படி நிகழ முடியும். வேலைக் காலத்தின் போது முதலீடு செய்யப்பட்ட £600 மூலதனம் தேவைப்படுவதற்கு ஒரு வாரம் முன் கூட்டியே மீண்டு விடுகிறது. இவ்விதம் அது இந்த ஒரு வாரத்துக்கு விடுபட்ட நிலையில் இருக்கிறது. அதோடு வேலைக் காலத்தின் நடுவில் முன்பு போலவே £300 (£600இல் ஒரு பகுதி) விடுவிக்கப்படுகிறது, 3 வாரத்துக்கு அல்ல, 4 வாரத்துக்கு விடுவிக்கப்படுகிறது. இவ்விதம் £600 ஒரு வாரத்துக்கும் £300 3 வாரத்துக்கு பதில் 4 வாரத்துக்கும் பணச் சந்தைக்கு வருகிறது. இது ஏதோ ஒரு முதலாளிக்கு மட்டுமல்லாமல் பல முதலாளிகளுக்கும் ஏற்படுவதாலும், பயன்படக் கூடிய பண-மூலதனம் இவ்விதம் கூடுதலான அளவில் சந்தைக்கு பல்வேறு தொழில்களில் பல்வேறு காலங்களில் ஏற்படுவதாலும், வருகிறது. இந்த நிலைமை சிறிது காலம் நீடிக்குமானால், சாத்தியமான இடங்களிலெல்லாம் உற்பத்தி விரிவடைகிறது; கடன் வாங்கித் தொழில் நடத்தும் முதலாளிகளது பணத் தேவை குறைந்து பணச் சந்தையில் அவர்களது வேண்டலின் [demand] தாக்கம் குறைகிறது. அதிகரிக்கும் வழங்கலால் [supply] மட்டுமல்லாமல் குன்றிச் செல்லும் வேண்டலாலும் அதே அளவுக்கு பணச் சந்தை தளர்வடைகிறது. எப்படியும் புரள்வு இயக்கத்துக்குத் தேவையற்றவை ஆகிற தொகைகள் இறுதியில் பணச் சந்தையைத் தான் வந்தடைகின்றன.

3 வாரமாக இருந்த சுற்றோட்டக் காலம் 2 வாரமாகவும், 9 வாரமாக இருந்த புரள்வுக் காலம் 8 வாரமாகவும் சுருங்குவதன் விளைவாய், முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தில் ஒன்பதில் ஒரு பங்கு தேவையற்றதாகிறது. முன்பு £900ஐக் கொண்டு செய்ததை இப்போது £800ஐக் கொண்டே செய்யலாம் — 6 வார வேலைக் காலத்தை விடாத்தொடராய் நடந்தேறச் செய்யலாம்.

சரக்கு-மூலதனத்தின் மதிப்பில் £100க்குச் சமமான ஒரு பகுதி பணமாக மாறியதும் பண-மூலதனத்தின் வடிவிலேயே நீடிக்கிறது. உற்பத்தி நிகழ்முறைக்காக முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் ஒரு பகுதியாகச் செயல்படுவதில்லை. உற்பத்தியின் அளவுவீதமும் விலைகளும் பிற நிலைமைகளும் மாறாதிருக்க, முன்னீடு செய்யப் படும் மூலதனத் தொகை £900 என்பதிலிருந்து £800 ஆகக் குறைந்து விடுகிறது. ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தில் £100க் குச் சமமான எஞ்சிய பகுதி பண-மூலதனத்தின் வடிவில் வெளியே விடப்படுகிறது. இது பணச் சந்தையில் நுழைந்து அங்கே செயல் படும் மூலதனங்களைச் சேர்ந்த கூடுதல் பகுதியாகிறது.

பண-மூலதனம் மிதமிஞ்சியதாவதற்கு இது ஒரு வழியாகும். பண-மூலதனத்தின் வழங்கல் வேண்டலைக் காட்டிலும் மிகுதியாதல் என்ற அர்த்தத்தில் மட்டும்தான் இந்த மிதமிஞ்சிய நிலை ஏற்பட வேண்டும் என்பதில்லை. இப்படி ஏற்படுவது எப்போதும் ஒப் பளவிலான மிதமிஞ்சிய நிலையே ஆகும்; எடுத்துக்காட்டாக, நெருக்கடி முடிவுற்று ஒரு புதிய சகடம் ஆரம்பமாகும் ''சோகம் வாய்ந்த ஒரு காலத்தில்'' ஏற்படுகிற நிலையாகும். முன்னீடு செய் யப்படும் மூலதன-மதிப்பில் குறிப்பிட்ட ஒரு பகுதி சுற்றோட்ட நிகழ்முறையும் அடங்கிய சமுதாய மறுவுற்பத்தி நிகழ்முறையின் செயற்பாட்டுக்கே தேவையற்றதாகி விடுவதால் பண-மூலதன வடிவில் வெளியேற்றப்படுகிறது என்ற அர்த்தத்திலும் இந்த மித மிஞ்சிய நிலை ஏற்படலாம். உற்பத்தியின் அளவுவீதமும் மற்றும் விலைகளும் மாறாதிருக்க, புரள்வுக் காலம் மட்டும் குறுகுவதால் ஏற்படுகிற மிதமிஞ்சிய நிலையாகும் இது. சுற்றோட்டத்தில் உள்ள பணத்தின் அளவு அதிகமாகவோ குறைவாகவோ இருப்பதால் இந்த மிதமிஞ்சிய நிலை சிறிதும் பாதிக்கப்படுவதில்லை.

இவ்வாறன்றி, சுற்றோட்டக் காலம் நீண்டு விடுவதாக—3 வாரமாக இருந்தது உதாரணமாய் 5 வாரமாக நீண்டு விடுவதாக— வைத்துக் கொள்வோம். முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மீள்வு அடுத்த புரள்விலேயே 2 வார காலம் தாமதித்து நடை பெறுகிறது. இந்த வேலைக் காலத்தினது உற்பத்தி நிகழ்முறையின் கடைசிப் பகுதியானது முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் புரள் வினைக் கொண்டே நடந்தேற வழியில்லை. இந்த நிலைமை அதிக காலத்துக்கு நீடிக்குமானால், உற்பத்தி நிகழ்முறை சுருங்கும், அதன் பரிமாணம் குறையும்—சுற்றோட்டக் காலம் குறுகும் போது உற்பத்தி நிகழ்முறை எப்படி விரிவடைகிறதோ, அதே போல் சுற்றோட்டக் காலம் நீளும் போது உற்பத்தி நிகழ்முறை சுருங்குகிறது. உற்பத்தி நிகழ்முறை பழைய அளவுவீதத்திலேயே தொடர்ந்து நடைபெற வேண்டுமானால், முன்னீடு செய்யப்படும் மூலதனத்தை நீண்டு விட்ட சுற்றோட்டக் காலம் முழுவதற்குமாய் 2/9 பங்கு, அதாவது £200 அதிகமாக்க வேண்டியிருக்கும். இந்தக் கூடுதல் மூலதனத்தைப்

பணச் சந்தையிலிருந்துதான் பெற்றாக வேண்டும். சுற்றோட்டக் காலம் ஒன்று அல்லது அதற்கதிகமான பெரும் தொழிற் கிளைகளில் நீண்டு விடும் போது, (இதன் விளைவை வேறோர் எதிர் விளைவு நேர் செய்யாது போனால்) அது பணச் சந்தையில் அழுத்தம் உண்டாக்கும். சுற்றோட்டக் காலம் சுருங்கும் போது பண-மூலதனம் மித மிஞ்சியதாகிற நிலையைப் போலவே, இது சரக்குகளின் விலையிலோ சுற்றோட்ட ஊடகத்திலோ ஏற்படும் மாற்றத்தின் விளைவு அல்ல என்பது தெளிவாகவே தெரிகிறது.

[எங்கெல்ஸ் குறிப்பு.—வெளியீட்டுக்காக இந்த அத்தியாயத்தைத் தயார் செய்கையில் எழுந்த இடர்ப்பாடுகள் கொஞ்சநஞ்சமல்ல. இயற்கணிதத்தில் [algebra] மார்க்ஸ் உறுதி வாய்ந்த அடித்தளமுடையவரே என்றாலும், கணக்கு விவரங்களை, குறிப்பாக வணிகக் கணக்கு விவரங்களை எடுத்தாள்வது அவருக்குக் கைவந்ததாய் இருக்கவில்லை. எல்லாவிதமான வணிகக் கணக்கீடுகளும் அடங்கிய எண்ணிலடங்காத கணக்குகளுக்கு அவரே விடை கண்டிருப்பதைக் காட்டும் அவரது கையேடுகளைக் கொண்ட தடித்த கட்டு ஒன்று இங்கிருப்பது மெய்தான். ஆயினும், பற்பல கணக்கீட்டு முறைகளைத் தெரிந்து வைத்திருப்பது ஒன்று, அன்றாட நடைமுறை வணிகக் கணக்குகளில் கைப்பழக்கம் பெற்றிருப்பது வேறொன்று. புரள்வுகளைப் பற்றி மார்க்ஸ் செய்திருக்கும் கணக்கீடுகள் குழப்படியானவை. இந்தக் கணக்கீடுகள் ஆங்காங்கே அரைகுறையாய் விடப்பட்டிருப்பதோடு, பலவும் தவறாகவும் முன்னுக்குப் பின் முரணாகவும் குறிக்கப்பட்டுள்ளன. மேலே தரப்பட்டிருக்கும் அட்டவணைகளில் எளிமையாகவும் தெளிவாகவும் அமைந்த விவரங்களையும் பிழையற்றவாறு கணக்கிடப்பட்டிருப்பவற்றையும் மட்டும் அகற்றாமல் விட்டு வைத்துள்ளேன். நான் இப்படிச் செய்திருப்பதற்கான பிரதானக் காரணங்கள் வருமாறு:

இப்படி அரும்பாடுபட்டு கணக்குகள் போட்டுப் பார்த்து மார்க்ஸ் வந்தடையும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லாத முடிவுகள், எனது அபிப்பிராயத்தில் உண்மையில் முக்கியமானதாகக் கருத முடியாத ஒன்றுக்கு அவரை அளவுமீறிய முக்கியத்துவம் அளிக்க வைத்தன. நான் குறிப்பிடுவது வேறு எதுவுமல்ல, பண-மூலதனம் ''விடுவிக்கப்படுவதாக'' மார்க்ஸ் கூறுவதைத்தான் குறிப்பிடுகிறேன். மேற்கூறிய அனுமானங்களின் அடிப்படையில் உள்ளபடியே நடப்பது இதுதான்:

வேலைக் காலத்துக்கும் சுற்றோட்டக் காலத்துக்கும் இடையிலான விகிதமும் முதலாவது மூலதனத்துக்கும் இரண்டாவது மூலதனத்துக்கும் இடையிலான விகிதமும் என்னவாய் இருந்தாலும் சரி, முதலாவது புரள்வு முடிந்ததும் ஒரு வேலைக் காலத்துக்குத் தேவையான மூலதனம்—அதாவது முதலாவது மூலதனத்துக்குச் சமமான தொகை—பண வடிவில் முதலாளியின் கைக்கு மீள்கிறது; அதன் பின் வேலைக் காலத்துக்குச் சமமான இடைவெளிகள் விட்டு மீண்டும் மீண்டும் மீள்கிறது.

வேலைக் காலம் 5 வ்ாரமாகவும் சுற்றோட்டக் காலம் 4 வார மாகவும் முதலாவது மூலதனம் £500ஆகவும் இருந்தால், வாரங்கள் 9, 14, 19, 24, 29... முதலானவற்றின் முடிவில் ஒவ்வொரு தடவையும் £500க்குச் சமமான பணத் தொகை மீள்கிறது.

வேலைக் காலம் 6 வாரமாகவும், சுற்றோட்டக் காலம் 3 வார மாகவும், முதலாவது மூலதனம் £600ஆகவும் இருந்தால், வாரங் கள் 9, 15, 21, 27, 33 ... முதலானவற்றின் முடிவில் £600 மீள்கிறது.

வேலைக் காலம் 4 வாரமாகவும் சுற்றோட்டக் காலம் 5 வார மாகவும், முதலாவது மூலதனம் £400ஆகவும் இருந்தால், வாரங்கள் 9, 13, 17, 21, 25 முதலானவற்றின் முடிவில் £400 மீள்கிறது.

இப்படி மீள்கிற பணத்தில் தேவைக்கதிகமாகவும், இவ்விதம் நடப்பு வேலைக் காலத்தைப் பொறுத்த வரை விடுவிக்கப்பட்ட தாகவும் இருக்கிற பகுதியேதும் உண்டா, உண்டென்றால் எவ்வளவு என்பது முக்கியமல்ல. உற்பத்தியானது தற்போதைய அளவு வீதத்தில் தடையின்றித் தொடருவதாகக் கொள்கிறோம். உற்பத்தி தடைபடாமல் தொடர வேண்டுமானால் பணம் இருந்தாக வேண் டும்; ஆகவே ''விடுவிக்கப்பட்டோ'' அல்லாமலோ மீண்டு வந்தாக வேண்டும். உற்பத்தி தடைபட்டால், விடுவிப்பும் நின்று விடுகிறது.

வேறு விதமாகச் சொன்னால்: பணம் விடுவிக்கப்படுவது மெய் தான். இவ்விதம் உள்ளுறை மூலதனம், வெறும் உள்ளியல் மூல தனம் பண வடிவில் உண்டாவது மெய்தான். ஆனால் இது எல்லா நிலைமைகளிலும் நிகழ்வதே தவிர வாசகத்தில் கூறப்படும் நிகழ் வல்ல; வாசகத்தில் சொல்லப்படுவதைக் காட்டிலும் பெரிய அளவு வீதத்தில் இது நடைபெறுகிறது. முதலாவது சுழல்-மூலதனத்தைப் பொறுத்த வரை, தொழில் துறை முதலாளி தம் தொழிலை நிறுவிய போது இருந்த அதே நிலையில் ஒவ்வொரு புரள்வின் முடிவிலும் இருக்கிறார்: அதாவது இந்த மூலதனம் முழுவதும் ஒரேயடியாய் அவர் கைக்குத் திரும்பி விடுகிறது; ஆனால் அவர் அத்னை சிறுகச் சிறுகவே திறனுடை-மூலதனமாகத் திரும்பவும் மாற்ற முடிகிறது.

ஒரு புறம், தொழில் துறை மூலதனத்தில் கணிசமான பகுதி எப்போதும் பண வடிவில் தயாராய் இருந்தாக வேண்டும் என்ப தையும், மறு புறம் இதனிலும் கணிசமான ஒரு பகுதி அவ்வப்போது தற்காலிகமாகப் பண வடிவம் பெற்றாக வேண்டும் என்பதையும் நிரூபிப்பதே வாசகத்தின் அடிப்படை இலக்காகும். எனது இந்தக் கூடுதல் குறிப்புகள் செய்வதெல்லாம் இந்த நிரூபணத்தை மேலும் வலுவாக நிலைநாட்டுவதுதான்.]

## V. விலைகள் மாறுவதால் ஏற்படும் விளைவு

இது வரை, சுற்றோட்டக் காலம் குறுகவோ நீளவோ செய்கை யில், விலைகளும் உற்பத்தியின் அளவுவீதமும் மாறாதிருப்பதாகக்

கொண்டோம். இப்போது, புரள்வுக் காலமும் உற்பத்தியின் அளவுவீதமும் மாறாதிருப்பதாகவும், ஆனால் விலை மாற்றங்கள் ஏற்படுவதாகவும் கொள்வோம். அதாவது, கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்கள், உழைப்பு ஆகியவற்றின் விலையில், அல்லது இவற்றில் முதல் இரு கூறுகளின் விலையில் மட்டும், ஏற்றமோ இறக்கமோ ஏற்படுவதாய்க் கொள்வோம். கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்களின் விலைகளும், அவ்வாறே கூலியும் சரிபாதி குறைவதாகக் கொள்வோமானால், நமது உதாரணத்தில் முன்னீடு செய்யப்பட வேண்டிய மூலதனம் வாரத்துக்கு £100 என்பதற்கு பதில் £50 ஆகி விடும். 9-வாரப் புரள்வுக் காலத்துக்கான மூலதனம் £900 என்பதற்கு பதில் £450 ஆகி விடும். முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பில் £450 எடுத்த எடுப்பிலேயே பண-மூலதன வடிவில் விலக்கப்பட்டு விடுகிறது. உற்பத்தி நிகழ்முறை அதே அளவுவீதத்தில் தொடர்ந்து நடைபெறுகிறது; புரள்வுக் காலத்திலும் மாற்றமில்லை; புரள்வுக் காலம் பிரிகிற விதத்திலும் மாற்றமில்லை. வருடாந்தர உற்பத்தியிலும் மாற்றமில்லை; ஆனால் அதன் மதிப்பு பாதியாகக் குறைகிறது. இந்த மாற்றத்துக்கு சுற்றோட்டத்தின் வேகம் அதிகமாவதோ சுற்றோட்டத்தில் இருக்கும் பணத்தின் அளவு மாறுவதோ காரணமல்ல. இதனோடு கூடவே பண-மூலதனத்தின் வழங்கல்-வேண்டலில் மாற்றம் ஏற்படுகிறது. கூறுகளது மதிப்பு அல்லது விலை சரிபாதியாகக் குறைவதன் ஆரம்ப விளைவு என்னவென்றால்: X என்னும் தொழிலைப் பழைய அளவுவீதத்தில் தொடர்ந்து நடத்துவதற்காக முன்னீடு செய்ய வேண்டிய மூலதன-மதிப்பு சரிபாதியாகக் குறைவதுதான். எனவே, X என்னும் தொழிலிலிருந்து சந்தைக்குப் போய்ச் சேருகிற பணமும் சரிபாதியாகக் குறைகிறது. ஏனென்றால் X என்னும் தொழில் இந்த மூலதன-மதிப்பை முதலில் பண வடிவில்தான், அதாவது பண-மூலதனமாகத்தான் முன்னீடு செய்கிறது. உற்பத்தி-அடிக்கூறுகளின் விலை குறைந்து விடுவதால், சுற்றோட்டத்தினுள் செலுத்தப்படும் பணத்தின் அளவும் குறையும். இதுவே முதல் விளைவாக இருக்கும்.

ஆயினும், இரண்டாவதாக ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்படும் £900 மூலதன-மதிப்பில் பாதியாகிய £450 — இது (அ) அடுத்தடுத்து பண-மூலதனம், திறனுடை-மூலதனம், சரக்கு-மூலதனம் ஆகிய வடிவங்களைக் கடந்து வந்திருக்க வேண்டும்; (ஆ) ஒரு பகுதி பண-மூலதனத்தின் வடிவிலும், ஒரு பகுதி திறனுடை-மூலதனத்தின் வடிவிலும், ஒரு பகுதி சரக்கு-மூலதனத்தின் வடிவிலும் ஒருங்கே அடுத்தடுத்து இருந்திருக்க வேண்டும் — X என்னும் தொழிலின் சுற்றிலிருந்து நீக்கப்பட்டு கூடுதல் பண-மூலதனமாகப் பணச் சந்தையை அடைந்து அச்சந்தையில் கூடுதல் அடக்கக் கூறாகத் தாக்கம் செலுத்தியிருக்கும். விடுவிக்கப்பட்ட இந்த £450 X என்னும்

தொழிலின் செயற்பாட்டைப் பொறுத்த வரை தேவைக்கதிகமான பணமாகி விட்ட காரணத்தால் பண-மூலதனமாகச் செயல்படவில்லை. அது ஆரம்ப மூலதனத்தின் அடக்கக் கூறாகும்; வெறும் சுற்றோட்டச் சாதனமாகச் செலவிடப்படாமல் தொடர்ந்து மூலதனமாகச் செயல்பட வேண்டியிருப்பதால்தான் அது பண-மூலதனமாகச் செயல்படுகிறது. அதனைப் பண-மூலதனமாகப் பணச் சந்தையில் செலுத்துவதே அதனை மூலதனமாகச் செயல்பட வைப்பதற்கான சிறந்த முறை. மறு புறம், (நிலை-மூலதனத்தை ஒதுக்கி விட்டுப் பார்த்தால்) உற்பத்தியின் அளவுவீதத்தை இரு மடங்கு ஆக்கலாம். அப்போது அதே £900 மூலதன முன்னீட்டைக் கொண்டு இரு மடங்கு அதிக அளவுவீதத்தில் உற்பத்தி நிகழ்முறையை நடைபெறச் செய்யலாம்.

மறு புறம், திறனுடை-மூலதனத்தின் சுழலும் கூறுகளது விலை பாதியளவு அதிகரிக்குமானால், ஒவ்வொரு வாரமும் £100க்கு பதில் £150 தேவைப்படும்; அதாவது £900க்கு பதில் £1,350 தேவைப்படும். தொழிலைப் பழைய அளவுவீதத்தில் தொடர்ந்து நடத்த £450 கூடுதல் மூலதனம் தேவைப்படும். இந்த நிலைமையால் பணச் சந்தையில் இதே அளவுடைய அழுத்தம்—சந்தை நிலையைப் பொறுத்து அதிகமானதாகவோ குறைவானதாகவோ இருக்கும் படியான அழுத்தம்—ஏற்படுகிறது. இந்தச் சந்தையில் கிடைக்கக் கூடிய மூலதனம் முழுவதும் ஏற்கெனவே முதலீடாகியிருந்தால், பெறக் கூடிய மூலதனத்தைப் பெறுவதற்கான போட்டி அதிகரிக்கும். கிடைக்கக் கூடிய மூலதனத்தில் ஒரு பகுதி ஓய்ந்திருக்குமானால், அந்த அளவுக்கு அது செயலுக்கு வருமாறு உசுப்பப்படும்.

மூன்றாவதாக, உற்பத்தியின் அளவுவீதமும், புரள்வு வேகமும், திறனுடை-மூலதனத்தின் சுழலும் கூறுகளின் விலைகளும் மாறாதிருக்க, X என்னும் தொழிலின் உற்பத்திப் பொருட்களது விலை உயரலாம் அல்லது குறையலாம். X என்னும் தொழில் வழங்கிடும் சரக்குகளின் விலை குறைந்தால், சுற்றோட்டத்தினுள் அது தொடர்ந்து செலுத்தும் £600 ஆகிய மூலதனத்தின் விலை குறைந்து போகும்—உதாரணமாய் £500 ஆகக் குறைவதாகக் கொள்வோம், முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மதிப்பில் இவ்விதம் ஆறிலொரு பங்கு சுற்றோட்ட நிகழ்முறையிலிருந்து மீள்வதில்லை. (சரக்கு-மூலதனத்தில் அடங்கியுள்ள உபரி-மதிப்பை இங்கே கவனியாது ஒதுக்குகிறோம்.) இந்த ஆறிலொரு பங்கு மதிப்பு சுற்றோட்ட நிகழ்முறையில் இழக்கப்பட்டு விடுகிறது. ஆனால் உற்பத்தி-அடிக்கூறுகளின் மதிப்பு அல்லது விலை மாறாதிருப்பதால் இவ்விதம் மீள்கிற £500 ஆனது ஓயாமல் உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டுள்ள £600 மூலதனத்தில் $5/6$ பங்கை மட்டுமே மாற்றீடு செய்ய முடியும். ஆகவே, உற்பத்தி அதே அளவுவீதத்தில் தொடர்ந்து நடைபெற £100 கூடுதல் பண-மூலதனம் தேவைப்படும்.

இதற்கு மாறாக X என்னும் தொழிலினது உற்பத்திப் பொருளின் விலை உயருமானால் £600 ஆகிய சரக்கு-மூலதனத்தின் விலை (உதாரணமாய்) £700 ஆக உயர்ந்து விடும். இந்த விலையில் ஏழிலொரு பங்கு, அதாவது £100, உற்பத்தி நிகழ்முறையிலிருந்து உருவாகி முன்னீடு செய்யப்படவில்லை, சுற்றோட்ட நிகழ்முறையிலிருந்தே வருகிறது. ஆனால் உற்பத்தி-அடிக்கூறுகளை மாற்றீடு செய்ய £600 மட்டுமே தேவைப்படுகிறது. எனவே £100 விடுவிக்கப்படுகிறது.

முதலாவது நேர்வில் புரள்வுக் காலம் ஏன் குறுகவோ நீளவோ வேண்டும் என்றும், இரண்டாவது நேர்வில் கச்சாப் பொருட்களின் விலையும் உழைப்பின் விலையும், மூன்றாவது நேர்வில் வழங்கப்படும் உற்பத்திப் பொருட்களின் விலையும் ஏன் உயரவோ வீழவோ வேண்டும் என்றும் ஆராய்வது நாம் இது வரை செய்து வந்திருக்கும் பரிசீலனையின் எல்லைக்கு உட்பட்டதல்ல.

ஆனால் பின்வருவது இந்த எல்லைக்கு உட்பட்டதுதான்:

முதலாவது நேர்வு: **உற்பத்தியின் அளவுவீதமும், உற்பத்தி-அடிக்கூறுகளின் விலையும், உற்பத்திப் பொருட்களின் விலையும் மாறாதிருக்க, சுற்றோட்டக் காலமும், எனவே புரள்வுக் காலமும் மாறுதல்.**

நமது உதாரணத்தின் அனுமானங்களின் படி, சுற்றோட்டக் காலம் குறுகுவதன் விளைவாக, முன்னீடு செய்ய வேண்டிய மொத்த மூலதனம் ஒன்பதிலொரு பங்கு குறைகிறது. இவ்வாறு மொத்த மூலதனம் £900 என்பதிலிருந்து £800 ஆகக் குறைகிறது; £100 பண-மூலதனம் விலக்கப்படுகிறது.

முன் போலவே X என்னும் தொழில் அதே £600 மதிப்புடைய அதே 6 வார கால உற்பத்திப் பொருளை வழங்குகிறது; வேலை ஆண்டு முழுக்க விடாத்தொடராய் நடைபெறுவதால், 51 வாரங்களில் இத்தொழில் £5,100 மதிப்புள்ள அதே அளவு உற்பத்திப் பொருட்களை வழங்குகிறது. ஆக, இந்தத் தொழில் சுற்றோட்டத்தினுள் செலுத்தும் உற்பத்திப் பொருளின் அளவையும் விலையையும் பொறுத்த வரை எந்த மாற்றமும் இல்லை. அது உற்பத்திப் பொருளை சந்தைக்கு அனுப்பும் காலங்களிலும் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், சுற்றோட்டக் காலம் குறுகுவது காரணமாய், £900க்கு பதில் இப்போது £800ஐக் கொண்ட உற்பத்தி நிகழ்முறையின் தேவைகளை நிறைவு செய்ய முடிகிறது. விலக்கப்படும் £100 மூலதனம் பண-மூலதன வடிவில் இருக்கிறது. ஆனால், முன்னீடு செய்யப்படும் மூலதனத்தில் ஒரு பகுதி எப்போதும் பண-மூலதன வடிவில் செயல்பட்டாக வேண்டுமல்லவா, அந்தப் பகுதியை இந்த £100 பண-மூலதனம் குறிக்காது. முன்னீடு செய்யப்படும் முதலாவது சுழல்-மூலதனமான £600இல் 4/5 பங்கு (அதாவது £480) திறனுடை மூலப்பொருட்களுக்காகவும்,

1/5 பங்கு (அதாவது £120) கூலிக்காகவும் தொடர்ந்து முதலீடு செய்யப்படுவதாகக் கொள்வோம். அப்படியானால், திறனுடை மூலப்பொருட்களுக்காக வாரம் தோறும் செய்யப்படும் முதலீடு £80; கூலிக்காகச் செய்யப்படுவது £20, இரண்டாவது மூலதன-மதிப்பு £300இல் 4/5 பங்கு (அதாவது £240) திறனுடை மூலப் பொருட்களுக்காகவும் 1/5 பங்கு (அதாவது £60) கூலிக்காகவும் முதலீடு செய்யப்பட வேண்டும். கூலிக்காக முதலீடு செய்யும் மூல தனத்தை எப்போதுமே பண வடிவில் முன்னீடு செய்ய வேண்டும். £600 பெறுமானமுள்ள சரக்கு-உற்பத்தி [commodity-product] பண வடிவத்துக்கு மாறிய பிறகே, அதாவது விற்கப்பட்ட பிறகே, அதில் £480ஐ திறனுடை மூலப்பொருட்களாக (திறனுடைச் சரக் கிருப்பாக) மாற்ற முடியும். ஆனால் £120 ஆனது ஆறு வாரங் களுக்குக் கூலி கொடுப்பதற்குப் பயன்படும் பொருட்டு பண வடி விலேயே நீடிக்கிறது. இந்த £120 என்பது ஒரு குறைந்தபட்ச அள வாகும்; எதன் குறைந்தபட்ச அளவு? மீண்டு வரும் மூலதனமாகிய £600இல் ஒரு பகுதியை எப்போதும் பண-மூலதன வடிவில் புத்தாக்கமும் மாற்றீடும் செய்தாக வேண்டும் அல்லவா, எப்போதும் பண வடிவில் கையில் இருக்க வேண்டும் அல்லவா, அந்தப் பகுதி யின் குறைந்தபட்ச அளவாகும்.

காலவட்ட முறையில் மூன்று வாரத்துக்கு விடுவிக்கப்படுகிற £300ஐயும் திறனுடைச் சரக்கிருப்புக்கான £240ஆகவும், கூலிக் கான £60 ஆகவும் பிரிக்க முடியும். இந்த £300இல் £100 சுற்றோட்டக் காலம் குறுகுவது காரணமாய் பண-மூலதன வடிவில் நீக்கப்பட்டால், அதாவது புரள்வின் இயக்கத்திலிருந்து அறவே வெளியேற்றப்பட்டால், இந்த £100 பண-மூலதனத்துக்கான பணம் எங்கிருந்து வருகிறது? இந்தத் தொகையில் ஐந்திலொரு பங்கு மட்டுமே புரள்வுகளால் கால வட்ட முறையில் விடுவிக் கப்படும் பண-மூலதனமாகும். ஆனால் ஐந்தில் நான்கு பங்கு (அதாவது £80), அதே மதிப்புடைய கூடுதல் திறனுடைச் சரக் கிருப்பால் ஏற்கெனவே மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கூடுதல் திறனுடைச் சரக்கிருப்பு எப்படிப் பணமாக மாறுகிறது? இந்த மாற்றத்துக்கான பணம் எங்கிருந்து வருகிறது?

சுற்றோட்டக் காலம் உள்ளபடியே குறுகி விட்டதென்றால், மேற்கண்ட £600இல் £480க்கு பதில் £400 திறனுடைச் சரக் கிருப்பாக மாற்றப்படுகிறது. எஞ்சிய £80 பண-வடிவில் நீடிக் கிறது. இதுவும் கூலிக்கான £20உம் சேர்ந்து விலக்கப்படும் £100 மூலதனமாகிறது. இந்த £100 ஆனது £600 பெறுமானமுள்ள சரக்கு-மூலதனம் விற்கப்படுவதன் மூலம் சுற்றோட்டத் துறையி லிருந்து வருகிறது, கூலிக்காகவும் உற்பத்தி-அடிக்கூறுகளுக்காகவும் திரும்பவும் முதலீடு செய்யப்படாததால் இப்போது அதிலிருந்து விலகி வருகிறது என்ற போதிலும், பண வடிவில் இருக்கிறது;

அதாவது ஆரம்பத்தில் எவ்வடிவில் சுற்றோட்டத்தினுள் செலுத்தப் பட்டதோ அதே வடிவத்திற்குத் திரும்பியிருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது. திறனுடைச் சரக்கிருப்புக்காகவும் கூலிக்காகவும் ஆரம்பத்தில் £900 முதலீடு செய்யப்பட்டது. இப்போது அதே உற்பத்தி நிகழ்முறை நடைபெற £800 மட்டுமே தேவைப்படுகிறது. இவ்வாறு, பண உருவில் விடுவிக்கப்படும் £100 இப்போது புதிய முதலீட்டை நாடுகிற பண-மூலதனமாகிறது, பணச் சந்தையின் புதிய அடக்கக் கூறாகிறது. இதற்கு முன்னரே கூட அது விடுவிக்கப் பட்ட பண-மூலதனத்தின் வடிவிலும் கூடுதல் திறனுடை-மூல தனத்தின் வடிவிலும் அவ்வப்போது இருந்தது மெய்தான். ஆனால் இந்த உள்ளுறை நிலைகள் உற்பத்தி நிகழ்முறை நிறைவேறுவதற்கு இன்றியமையாத் தேவைகளாய், அது தொடர்ச்சியாக நடைபெறு வதற்கு முன்னிபந்தனைகளாய் இருந்தன. இப்போது .இவை அதற்குத் தேவையில்லை. எனவே இந்த மூலதனப் பகுதி புதிய பண-மூலதனமாகவும், பணச் சந்தையின் அடக்கக் கூறாகவும் அமைகிறது—அது தயாராய்க் கிடைக்கிற சமுதாயப் பண இருப்பின் கூடுதல் கூறும் அல்ல (ஏனெனில் அது தொழில் தொடங்கும் போதே இருந்தது; அந்தத் தொழிலால்தான் சுற்றோட் டத்தில் செலுத்தப்பட்டது), புதிதாய்த் திரட்டப்பட்ட பணச் சேர்ப் பும் அல்ல என்ற போதிலும், புதிய பண-மூலதனமே ஆகும்.

இந்த £100 ஆனது முன்னீடு செய்யப்பட்ட பண-மூலதனத் தின் பகுதியே என்றாலும், இப்போது அதே தொழிலில் பயன் படாது போவதால் சுற்றோட்டத்திலிருந்து விலகி விடுகிறது. ஆனால், சரக்கு-மூலதனம் பணமாகவும், இந்தப் பணம் திறனுடை-மூலதனமாகவும் உருமாறுவதாகிய C′ — M — C என்பது முடுக்கி விடப்பட்டு ஒரு வாரம் முன்கூட்டியே நிறைவு பெறுவதால்தான், இந்நிகழ்முறையில் பயன்படுகிற பணத்தின் சுற்றோட்டமும் இவ் வாறே முடுக்கி விடப்படுவதால்தான், இந்த £100 சுற்றோட்டத்தி லிருந்து விலக முடிகிறது. அது X என்னும் மூலதனத்தின் புரள் வுக்கு இப்போது தேவையில்லை; எனவே சுற்றோட்டத்திலிருந்து விலகி விட்டது.

முன்னீடு செய்யப்படுகிற மூலதனம் அதனைப் பயன்படுத்து கிறவருக்குச் சொந்தமானது என்று வைத்துக் கொள்கிறோம். அவர் அதனைக் கடனாகப் பெற்றிருந்தாலுங்கூட எந்த மாற்றமும் இல்லை. சுற்றோட்டக் காலம் குறுகும் போது, அவர் £900க்கு பதில் £800 கடன் வாங்க வேண்டியிருக்கும். £100 கடன் கொடுத்தவரிடம் திருப்பித் தரப்பட்டால், முன்போலவே £100 புதிய பண-மூலதன மாக அமையும்—Xக்கு பதில் Yஇன் கையில் அமையும். X என்கிற முதலாளி £480 மதிப்புடைய திறனுடை மூலப் பொருட்களைக் கடனாகப் பெற்று, கூலிக்கான பணத்தின் உருவில் £120 மட்டும் தமது சட்டைப் பையிலிருந்து எடுத்து முன்னீடு செய்வாரானால்,

தாம் கடனாகக் கொள்முதல் செய்யும் மூலப்பொருட்களில் இப்போது £80 மதிப்புடையவற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டியிருக்கும். இந்தத் தொகை கடன் கொடுக்கும் முதலாளிக்குக் கூடுதல் சரக்கு-மூலதனமாக அமையும்; அதே போது X என்கிற முதலாளி £20ஐப் பண வடிவில் விலக்கி வெளியேற்றி இருப்பார்.

திறனுடைக் கூடுதல் சரக்கிருப்பு இப்போது மூன்றிலொரு பங்கு குறைகிறது. அது முன்பெல்லாம் £240, அதாவது இரண்டாவது மூலதனமாகிய £300இல் ஐந்தில் நான்கு பங்கு மதிப்புடையதாக இருந்தது. ஆனால், இப்போது அதன் மதிப்பு £160 மட்டுமே. அதாவது 3 வாரத்துக்கு பதில் 2 வாரத்துக்கான கூடுதல் சரக்கிருப்பாகியிருக்கிறது. 3 வாரத்துக்கு பதில் இப்போது அது 2 வாரத்துக்கு ஒரு முறை மாற்றீடு செய்யப்படுகிறது. ஆனால் இந்தச் சரக்கிருப்பு 3 வாரத்துக்கு பதில் இப்போது 2 வாரத்துக்கே ஆனது. இவ்வாறு, எடுத்துக்காட்டாக, பருத்திச் சந்தையில் முன்னைக் காட்டிலும் அடிக்கடி கொள்முதல் நடைபெறுகிறது; ஆனால் ஒவ்வொரு முறையும் முன்னைக் காட்டிலும் குறைந்த அளவே கொள்முதல் செய்யப்படுகிறது. விளையும் பருத்தியின் அளவில் மாற்றமில்லை என்பதால், சந்தையிலிருந்து விலகும் பருத்தியின் அளவிலும் மாற்றமில்லை. ஆனால் இந்த விலக்கங்களுக்கு இடையிலான காலத்தில்தான் மாற்றம் ஏற்படுகிறது; முன்னைக் காட்டிலும் நீண்ட கால இடைவெளி விட்டு இந்த விலக்கம் ஏற்படுகிறது. 3 மாதமா, 2 மாதமா என்பதே பிரச்சினை எனக் கொள்வோம். வருடாந்தரப் பருத்தி நுகர்வு 1,200 பேல் என்றால், சுற்றோட்டக் காலம் 3 மாதமாய் இருக்கும் போது விற்பனை பின்வருமாறு நடைபெறும்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1, 300 | பேல், | சேமிப்பில் இருப்பது | 900 | பேல் |
| ஏப்ரல் | 1, 300 | ,, | ,, | 600 | ,, |
| ஜூலை | 1, 300 | ,, | ,, | 300 | ,, |
| அக்டோபர் | 1, 300 | ,, | ,, | 0 | ,, |

ஆனால் சுற்றோட்டக் காலம் 2 மாதமாய் இருக்கும் போது, விற்பனை பின்வருமாறு நடைபெறும்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1, 200 | பேல், | சேமிப்பில் இருப்பது | 1,000 | பேல் |
| மார்ச்சு | 1, 200 | ,, | ,, | 800 | ,, |
| மே | 1, 200 | ,, | ,, | 600 | ,, |
| ஜூலை | 1, 200 | ,, | ,, | 400 | ,, |
| செப்டெம்பர் | 1, 200 | ,, | ,, | 200 | ,, |
| நவம்பர் | 1, 200 | ,, | ,, | 0 | ,, |

ஆகவே, பருத்திக்காக முதலீடு செய்யப்படும் பணம் ஒரு மாதம் கழிந்த பிறகே, அக்டோபருக்கு பதில் நவம்பரில்தான் முழுமையாக மீள்கிறது. ஆகவே, முன்னீடு செய்யப்படும் மூலதனத்தில் ஒன்பதிலொரு பங்கு, அதாவது £100 (சுற்றோட்டக் காலமும், எனவே

புரள்வுக் காலமும் குறுகுவதால்) பண-மூலதனத்தின் வடிவில் வெளியே அகற்றப்படுமானால், காலவட்ட முறையில் ஒவ்வொரு வாரமும் கூலி கொடுத்தது போக உபரி என்ற வகையில் £20 பெறுமானமுள்ள பண-மூலதனமும், காலவட்ட முறையில் ஒவ் வொரு வாரமும் உபரியாகிற திறனுடைச் சரக்கிருப்பு [productive supply] என்ற வகையில் £80உம் சேர்ந்ததே இந்த £100 என்றால், தொழிலதிபரின் கையில் திறனுடை உபரிச் சரக்கிருப்பு குறைவ தானது, இந்த £80ஐப் பொறுத்த வரை, பருத்தி வியாபாரியின் கையில் சரக்கிருப்பு அதிகமாவதைக் குறிக்கிறது. இந்தப் பருத்தி யானது வியாபாரியின் பண்டக சாலையில் இருக்கும் காலம் நீள்வதற்கேற்ப, திறனுடைச் சரக்கிருப்பாகத் தொழிலதிபரின் சேமிப்பறையில் இருக்கும் காலம் குறுகுகிறது.

X ஆனவர் தமது பண்டங்களைத் துரிதமாய் விற்பதால்தான், அவற்றுக்கான விலையைச் சீக்கிரமாய்ப் பெறுவதால்தான், அதாவது கடனுக்கு விற்கும் போது திருப்பிச் செலுத்த வேண்டிய காலவரைகள் குறுகி விடுவதால்தான், அவரது தொழிலில் சுற்றோட்டக் காலம் குறுகுவதாய் இது வரை அனுமானம் செய்து கொண்டோம். சரக்குகள் துரிதமாக விற்கப்படுவதையே, அதாவது சுற்றோட்ட நிகழ்முறையின் முதல் கட்டமான C′ — M (சரக்கு-மூலதனம் பண-மூலதனமாக மாறுதல்) துரிதமாக நடைபெறு வதையே சுற்றோட்டக் காலம் குறுகுவதற்குக் காரணமாய்க் கொண் டோம். ஆனால் இரண்டாவது கட்டமான M — C துரிதமாக நடை பெறுவதாலும் சுற்றோட்டக் காலம் குறுகலாம்; அதாவது X என்கிற முதலாளிக்கு அவரது சுழல்-மூலதனத்தின் கூறுகளை வழங்கும் Y, Z போன்ற மூலதனங்களின் வேலைக் காலத்திலோ சுற்றோட்டக் காலத்திலோ அதே போது ஏற்படக் கூடிய மாற்றத் தினாலும் Xஇன் சுற்றோட்டக் காலம் குறுகலாம்.

எடுத்துக்காட்டாக, பருத்தி, நிலக்கரி முதலானவை அவற்றின் உற்பத்தியிடம் அல்லது சேமிப்பிடத்திலிருந்து X என்கிற முதலாளி யின் உற்பத்தியிடத்துக்குச் சென்றிட பழைய போக்குவரத்து முறை களில் மூன்று வார காலம் தேவைப்படுமானால், திறனுடைச் சரக் கிருப்பானது புதிய இருப்புகள் வந்து சேரும் வரை குறைந்தது மூன்று வார காலத்துக்கு நீடித்திருக்க வேண்டும். பருத்தியும் நிலக்கரியும் அவற்றின் பயணக் காலம் முடிவுறாமல் இருக்கும் வரை உற்பத்திச் சாதனங்களாகப் பயன்பட முடியாது. பார்க்கப் போனால் அப் போது அவை, போக்குவரத்துத் தொழிலையும் அதில் பயன்படுகிற மூலதனத்தையும் பொறுத்த வரை, உழைப்பின் இலக்குப் பொரு ளாய் இருப்பவை. நிலக்கரி உற்பத்தியாளர் அல்லது பருத்தி வியா பாரியைப் பொறுத்த வரை, அவை சுற்றோட்ட நிகழ்முறையில் செயல்படுகிற சரக்கு-மூலதனமும் ஆகும். போக்குவரத்தில் ஏற் படும் மேம்பாடுகள் காரணமாய் பயணக் காலம் இரு வாரமாய்க்

குறைவதாகக் கொள்வோம். இப்போது திறனுடைச் சரக்கிருப்பை மூன்று வார இருப்பு என்ற நிலையிலிருந்து இரு வார இருப்பாக மாற்ற முடியும். இதற்கென ஒதுக்கப்பட்ட கூடுதல் மூலதன முன்னீடாகிய £80உம், அவ்வாறே கூலிக்கான £20உம் இதனால் விடுவிக்கப்படுகின்றன; ஏனென்றால் புரளும் மூலதனமான £600 ஒரு வாரம் முன்னதாகவே மீள்கிறது.

மறு புறம், எடுத்துக்காட்டாக, கச்சாப் பொருட்களை வழங்கும் மூலதனத்தின் வேலைக் காலம் குறையுமானால் (இதற்கான உதாரணங்களை முன்சென்ற அத்தியாயங்களில் பார்த்தோம்), கச்சாப் பொருட்களின் இருப்பை முன்னை விடக் குறுகிய காலத்தில் மாற்றீடு செய்ய முடியும். இப்போது திறனுடைச் சரக்கிருப்பைக் குறைத்துக் கொள்ளலாம். மாற்றீடு செய்யும் காலங்களுக்கிடையிலான இடைவெளியைக் குறுக்கலாம்.

இதற்கு மாறாக, சுற்றோட்டக் காலமும், எனவே புரள்வுக் காலமும் நீளுமானால், கூடுதல் மூலதன முன்னீடு அவசியமாகி விடும். முதலாளியிடம் மூலதனம் உபரியாக இருந்தால், கூடுதல் மூலதனத்தை அவர் தமது சட்டைப் பையிலிருந்து எடுத்துத் தர முடியும். ஆனால் அது பணச் சந்தைக்குச் சென்று ஏதேனும் ஒரு வகையில் முதலீடாகி இருக்கலாம். அப்போது அது கிடைக்க வேண்டுமானால், பழைய வடிவிலிருந்து விடுபட்டு வந்தாக வேண்டும். எடுத்துக்காட்டாக, பங்குகளை விற்றாக வேண்டும், வைப்புகளை [deposits] திரும்பப் பெற்றாக வேண்டும்; பணச் சந்தையின் மீது இது சுற்றடியான விளைவை ஏற்படுத்தும். இல்லையேல் தேவைப்படும் கூடுதல் மூலதனத்தைக் கடனாய்ப் பெற்றாக வேண்டும். கூடுதல் மூலதனத்தில் கூலிக்காக வேண்டிய பகுதியைப் பண-மூலதன வடிவில் முன்னீடு செய்தாக வேண்டும். X என்கிற முதலாளி பணச் சந்தையில் இதனால் நேரடியாக அழுத்தம் உண்டாக்குகிறார். ஆனால் கச்சாப் பொருட்கள் போன்றவற்றுக்காக முதலீடு செய்ய வேண்டிய மூலதனப் பகுதியைப் பொறுத்த வரை இவற்றுக்கு அவர் ரொக்கமாக விலை தர வேண்டியிருந்தால் மட்டுமே பணச் சந்தை மீது நேரடி அழுத்தம் உண்டாக்குவார். அவர் அவற்றைக் கடனாகப் பெற முடிந்தால், பணச் சந்தையில் இதனால் எந்த நேரடி விளைவும் ஏற்படாது. ஏனென்றால் அப்போது கூடுதல் மூலதனமானது திறனுடைச் சரக்கிருப்பாய் நேரடியாகவே முன்னீடு செய்யப்படுகிறதே தவிர, பண-மூலதனமாக முன்னீடு செய்யப்படுவதில்லை. ஆனால் கடன் கொடுத்தவர் X இடமிருந்து பெற்றுக் கொள்ளும் உண்டியலை [bill of exchange] நேரடியாகச் சந்தையில் செலுத்தி கழிவைத் தந்து ரொக்கமாக்கினால், இது பணச் சந்தை மீது வேறு ஒருவர் வாயிலாய் சுற்றடியான விளைவை உண்டாக்குகிறது. கெடுத் தேதி வராத கடனைத் தீர்ப்பதற்காக அவர் இந்த உண்டியலைப் பயன்படுத்தினால்,

முன்னீடு செய்யப்படும் இந்தக் கூடுதல் மூலதனம் பணச் சந்தையில் நேரடியாகவோ சுற்றடியாகவோ எந்த விளைவும் உண்டாக்காது.

இரண்டாவது நேர்வு. மற்றெல்லா நிலைமைகளும் மாறாதிருக்க உற்பத்திக்கான மூலப்பொருட்களின் விலை மட்டும் மாறுதல்.

மொத்த மூலதனமான £900இல் ஐந்தில் நான்கு பங்கு (£720) உற்பத்திக்கான மூலப்பொருட்களிலும், ஐந்திலொரு பங்கு (£180) கூலியிலும் முதலீடாவதாக வைத்துக் கொண்டோம்.

உற்பத்திக்கான மூலப்பொருட்களுக்கு வேண்டியது பாதியாகக் குறைந்தால், 6 வார வேலைக் காலத்துக்கு £480க்கு பதில் £240 மட்டுமே தேவைப்படுகிறது; கூடுதல் மூலதனமான இரண்டாவது மூலதனத்தைப் பொறுத்த வரை £240க்கு பதில் £120 மட்டுமே தேவைப்படுகிறது. இவ்வாறு £600ஆக இருந்த முதலாவது மூலதனம் £240 + £120 = £360 ஆகக் குறைகிறது. £300 ஆக இருந்த இரண்டாவது மூலதனம் £120 + £60 × £180 ஆகக் குறைகிறது. ஆகவே £900 ஆக இருந்த மொத்த மூலதனம் £360 + £180 = £540 ஆகக் குறைகிறது. ஆகவே £360 விடுவிக்கப்படுகிறது.

இவ்விதம் வெளியேற்றப்பட்ட பண-மூலதனம் இப்போது பயன்படாமலிருக்கிறது; முதலீட்டை நாடி பணச் சந்தையில் இருந்து வருகிறது. இது ஆரம்பத்தில் பண-மூலதனமாக முன்னீடு செய்யப்பட்ட £900 மூலதனத்தின் ஒரு பகுதியே தவிர வேறல்ல; கால வட்ட முறையில் உற்பத்தி-அடிக் கூறுகளாக மாற்றப்பட வேண்டியதான இந்தப் பண-மூலதனம் உற்பத்தி-அடிக்கூறுகளின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணத்தால் (அதாவது தொழில் விரிவாக்கப்படாமல் பழைய அளவுவீதத்திலேயே தொடர்ந்து நடைபெறும் போது) தேவையற்றதாகி விட்டது. இந்த விலையிறக்கம் தற்செயலான நிலைமைகளால் (அமோக அறுவடை, மிகை வழங்கல் போன்றவற்றால்) ஏற்படாமல், கச்சாப் பொருட்களை வழங்கும் உற்பத்திக் கிளையில் உற்பத்தித் திறன் உயர்ந்து விட்டதால் ஏற்படுமாயின் இந்தப் பண-மூலதனம் பணச் சந்தைக்கும் பொதுவாகப் பண-மூலதன வடிவில் தயாராயிருக்கும் மூலதனத்துக்கும் கிடைக்கும் அறுதியான கூடுதல் தொகையாக அமையும். ஏனென்றால் இப்போது அது ஏற்கெனவே முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் உள்ளடங்கிய பகுதியல்ல.

மூன்றாவது நேர்வு. **உற்பத்திப் பொருளின் சந்தை விலையே மாறுதல்.**

விலைகளில் வீழ்ச்சி ஏற்படுமாயின், மூலதனத்தின் ஒரு பகுதி பறிபோகிறது. இதனைப் பண-மூலதனத்தின் புதிய முன்னீட்டைக் கொண்டு மாற்றீடு செய்தாக வேண்டும். விற்பவருக்கு இழப்பாகிய இது வாங்குபவருக்கு ஆதாயமாக இருக்கும். உற்பத்திப் பொருளின் சந்தை-விலை [market price] தற்செயலான அலைவு காரணமாய்

இறங்கி, பிற்பாடு மீண்டும் இயல்பான நிலைக்கு உயர்ந்தால், இழப்பும் ஆதாயமும் நேரடியானவை. மதிப்பில் ஏற்படும் மாற்றம் பழைய உற்பத்திப் பொருளின் மீது பிரதிபலிப்பது காரணமாய் விலையில் மாற்றம் ஏற்பட்டால், இந்த உற்பத்தி பொருள் உற்பத்தி-அடிக்கூறாக இன்னொரு உற்பத்தித் துறையினுள் சென்று அங்கே அந்த அளவுக்கு மூலதனத்தை விடுவித்தால், இழப்பும் ஆதாயமும் சுற்றடியானவை. இரண்டில் எது நடந்தாலும், X இழந்த மூலதனம், எதை மாற்றீடு செய்வதற்காக அவர் பணச் சந்தையின் மீது அழுத்தம் செலுத்துகிறாரோ அந்த மூலதனம் அவரது தொழில் நண்பர்களால் புதிய கூடுதல் மூலதனமாக அவருக்கு வழங்கப்படலாம். இங்கு நடப்பதெல்லாம் கை விட்டு கை மாறுவதே தவிர வேறல்ல.

இதற்கு மாறாக, உற்பத்திப் பொருளின் விலை உயருமானால், முன்னீடு செய்யப்படாத மூலதனப் பகுதி சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுக்கப்படுகிறது. இது உற்பத்தி நிகழ்முறையின் போது முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் அங்ககப் பகுதியல்ல; ஆகவே உற்பத்தி விரிவாக்கப்படா விட்டால், இது வெளியேற்றப் படும் பண-மூலதனமாகிறது. உற்பத்திப் பொருளின் அடிக்கூறு களது விலையை அந்த உற்பத்திப் பொருள் சரக்கு-மூலதனமாக சந்தைக்கு வருமுன்பே நிர்ணயமானதாகக் கொண்டுள்ளோம் என்றாலுங்கூட, மெய்யாகவே மதிப்பில் மாற்றம் ஏற்பட்டு, இந்த மாற்றம் பின்னோக்கிச் செயல்பட்டு, உதாரணமாகக் கச்சாப் பொருளின் விலை பிற்பாடு உயரும் படி செய்திருக்கலாம். இதனால் விலை ஏறியிருக்கலாம். அப்போது முதலாளி X சரக்கு-மூலதனமாகச் சுற்றியோடுகிற தமது உற்பத்திப் பொருளைக் கொண்டு மட்டுமல்லாமல், தமது திறனுடைச் சரக்கிருப்பைக் கொண்டும் இலாபம் பெறுவார். உற்பத்தி-அடிக்கூறுகளின் விலை உயர்ந்து விட்டதால் அவர் தமது தொழிலைத் தொடர்ந்து நடத்து வதற்கு இப்போது தேவைப்படுகிற கூடுதல் மூலதனத்தை இந்த இலாபம் அவருக்குக் கிடைக்கச் செய்யும்.

அல்லது விலை உயர்வு தற்காலிகமான உயர்வாக இருக்கலாம். அப்போது முதலாளி Xஇன் உற்பத்திப் பண்டம் பிற தொழிற் கிளைகளுக்கு உற்பத்தி-அடிக்கூறாக இருக்குமானால், அந்த அளவுக்கு முதலாளி Xக்குக் கூடுதல் மூலதனமாகத் தேவைப்படு வது மறு தரப்புக்கு விடுவிக்கப்பட்ட மூலதனமாகிறது. ஒருவருக்கு இழப்பாய் இருப்பது மற்றொருவருக்குக் கிடைக்கும் ஆதாய மாகிறது.

## அத்தியாயம் XVI

## மாறும்-மூலதனத்தின் புரள்வு

### I. வருடாந்தர உபரி-மதிப்பு வீதம்

*சுழல்-மூலதனம் £2,500 எனக் கொள்வோம்; மாறா-மூலதனம் (உற்பத்திப் பொருட் கூறுகள்) இதில் ஐந்தில் நான்கு பங்கு, அதாவது £2,000 என்றும், கூலி கொடுப்பதற்காக முதலீடு செய்யப்படும் மாறும்-மூலதனம் ஐந்தில் ஒரு பங்கு, அதாவது £500 என்றும் கொள்வோம்.*

*புரள்வுக் காலம் 5 வாரம், இதில் வேலைக் காலம் 4 வாரம், சுற்றோட்டக் காலம் 1 வாரம் என்போம். அப்படியானால், முதலாவது மூலதனம் £2,000 ஆகும்; இதில் மாறா-மூலதனம் £1,600, மாறும்-மூலதனம் £400. இரண்டாவது மூலதனம் £500 ஆகும்; இதில் மாறா-மூலதனம் £400, மாறும்-மூலதனம் £100. ஒவ்வொரு வேலை-வாரத்திலும் £500 முதலீடு செய்யப்படுகிறது. 50 வாரம் கொண்ட ஓராண்டு காலத்தில் £500 × 50 = £25,000 பெறுமானமுள்ள பண்டம் உற்பத்தியாகிறது. ஒவ்வொரு வேலைக் காலத்திலும் செயல்படும் முதலாவது மூலதனமாகிய £2,000 ஆனது 12½ முறை புரள்கிறது. £2,000 × 12½ = £25,000. இந்த £25,000இல் ஐந்தில் நான்கு பங்கு (அதாவது £20,000) உற்பத்திச் சாதனங்களுக்காக முதலீடு செய்யப்படும் மாறா-மூலதனமாகும். ஐந்தில் ஒரு பங்கு (அதாவது £5,000) கூலி கொடுப்பதற்காக முதலீடு செய்யப்படும் மாறும்-மூலதனமாகும். இவ்வாறு மொத்த மூலதனமான £2,500 ஆனது $\frac{25,000}{2,500}$ = 10 முறை புரள்கிறது.*

*உற்பத்திக்காகச் செலவாகும் மாறும் சுழல்-மூலதனத்தின் மதிப்பு உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்பட்டு வெளிவருகிறது அல்லவா, அந்த உற்பத்திப் பொருள் விற்கப்படுகிற அளவுக்கே, சரக்கு-மூலதனம் என்ற நிலையிலிருந்து பண-மூலதனமாக மாறுகிற அளவுக்கே, இந்த மாறும் சுழல்-மூலதனத்தின் மதிப்பு மீண்டும்*

சுற்றோட்ட நிகழ்முறையில் செயல்பட முடியும்; உழைப்புச் சக்தியை விலை கொடுத்து வாங்குவதற்காக மீண்டும் முதலீடாக முடியும். ஆனால், உற்பத்தியில் முதலீடு செய்யப்படும் மாறாச் சுழல்-மூலதனத்தின் (உற்பத்திப் பொருட் கூறுகளின்) விவகாரமும் இப்படித்தான். இந்த மூலதனத்தின் மதிப்பும் உற்பத்திப் பொருளினது மதிப்பின் ஒரு பகுதியாக அமைகிறது. இந்த இரண்டு பகுதிகளுக்கும்—சுழல்-மூலதனத்தின் மாறும் பகுதிக்கும் மாறாப் பகுதிக்கும்—பொதுவானதாக இருப்பதும், இவற்றை நிலை-மூல தனத்திலிந்து வேறுபடுத்திக் காட்டுவதும் என்ன? இவற்றிலிருந்து உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படும் மதிப்பு சரக்கு-மூலதனத்தின் வடிவில் சுற்றியோடுகிறது—அதாவது உற்பத்திப் பொருள் சரக்காகச் சுற்றியோடுகிறது—என்பதல்ல. உற்பத்திப் பொருளினது மதிப்பின் ஒரு பகுதி (சரக்காகச் சுற்றியோடும் உற்பத்திப் பொருளில், அதாவது சரக்கு-மூலதனத்தின் மதிப்பில் ஒரு பகுதி) எப்போதுமே நிலை-மூலதனத்தின் தேய்மானத்தால் ஆனது; அதாவது நிலை-மூலதனத்தின் மதிப்பில் ஒரு பகுதி உற்பத்தி நிகழ்முறையின் போது உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க் கப்படுகிறது அல்லவா, அந்தப் பகுதியால் ஆனது. உண்மையில் வேறுபாடு இதுதான்: சுழல்-மூலதனத்தின் (மாறாச் சுழல்-மூல தனம் + மாறும் சுழல்-மூலதனத்தின்) புரள்வுக் காலங்களைக் கொண்ட நீண்டதோ குறுகியதோ ஆன ஒரு சகடம் முழுக்க நிலை-மூலதனம் அதன் பழைய பயன் வடிவத்திலேயே உற்பத்தி நிகழ் முறையில் தொடர்ந்து செயல்படுகிறது; அதே போது சரக்கு-மூலதன வடிவில் உற்பத்தித் துறையிலிருந்து சுற்றோட்டத் துறைக் குள் செல்லும் சுழல்-மூலதனம் அனைத்தும் மாற்றீடு செய்யப் படுவது ஒவ்வொரு புரள்வுக்கும் முன்னிபந்தனையாகிறது. சுற் றோட்டத்தின் முதல் கட்டமாகிய C′ — M என்பது மாறாச் சுழல்-மூலதனத்துக்கும் மாறும் சுழல்-மூலதனத்துக்கும் பொதுவானது. இரண்டாவது கட்டத்தில் அவை பிரிந்து செல்கின்றன. சரக்கு பணமானதும் அந்தப் பணத்தின் ஒரு பகுதி திறனுடைச் சரக் கிருப்பாக (மாறாச் சுழல்-மூலதனமாக) மாற்றப்படுகிறது. இந்தச் சரக்கிருப்பின் பற்பல கூறுகளையும் வாங்குவதற்கு ஆகும் காலம் வேறுபடுவதைப் பொறுத்து, பணத்தின் ஒரு பகுதி சீக்கிரமாகவும், இன்னொரு பகுதி தாமதமாகவும் உற்பத்திப் பொருட் கூறுகளாக மாறலாம். ஆனால் இறுதியில் இந்தப் பணம் முழுதுமே இவ்வாறு மாற்றப்பட்டுதான் நுகரப்படுகிறது. சரக்கை விற்று வரும் பணத்தின் இன்னொரு பகுதி பண-இருப்பாக வைக்கப்பெற்று, உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபடுகிற உழைப்புச் சக்திக்கு ஊதியமளிப்பதற் காக சிறுகச் சிறுகச் செலவிடப்படுகிறது. இந்தப் பகுதிதான் மாறும் சுழல்-மூலதனமாகிறது. இவ்விரு பகுதிகளின் மாற்றீடு எப்போதும் முழுக்க முழுக்க மூலதனப் புரள்வைக் கொண்டே நடந்தேறுகிறது;

மூலதனமானது உற்பத்திப் பொருளாகவும், உற்பத்திப் பொருளானது சரக்காகவும், சரக்கானது பணமாகவும் மாற்றமடைவதைக் கொண்டே நடந்தேறுகிறது. எனவேதான் முந்தைய அத்தியாயத்தில் நிலை-மூலதனத்தைக் கவனியாது ஒதுக்கி விட்டு, மாறாச் சுழல்-மூலதனத்தின் புரள்வையும், மாறும் சுழல்-மூலதனத்தின் புரள்வையும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பரிசீலித்தோம்.

நாம் இப்போது ஆராய வேண்டிய பிரச்சினையில் மேலும் ஒரு படி சென்று, சுழல்-மூலதனமானது மாறும் பகுதியை மட்டுமே கொண்டதாகப் பாவித்து, அதனைப் பரிசீலிக்கப் போகிறோம். அதாவது, மாறும்-மூலதனத்தோடு கூடவே புரள்கிற மாறாச் சுழல்-மூலதனத்தைக் கவனியாது ஒதுக்கி விட்டுப் பரிசீலிக்கப் போகிறோம்.

முன்னீடு செய்யப்படும் தொகை £2,500; வருடாந்தர உற்பத்திப் பொருளின் மதிப்பு £25,000. ஆனால் சுழல்-மூலதனத்தின் மாறும் பகுதி £500. ஆகவே £25,000இல் அடங்கிய மாறும்-மூலதனம் £25,000 ÷ 5 = £ 5,000. புரள்வுகளின் எண்ணிக்கை £5,000 ÷ £500 = 10. மொத்த மூலதனமாகிய £2,500இன் புரள்வுகளது எண்ணிக்கையும் இதுவேதான்.

உபரி-மதிப்பின் உற்பத்தி மட்டுமே இங்கு பிரச்சினை என்பதால், இப்படி சராசரிக் கணக்கு போடுவது முற்றிலும் சரியானதே. இந்தக் கணக்கீட்டில் வருடாந்தர உற்பத்திப் பண்டத்தின் மதிப்பை முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் மதிப்பால் வகுக்கிறோமே தவிர, ஒவ்வொரு வேலைக் காலத்திலும் ஓயாமல் ஈடுபடுத்தப்படும் மூலதனப் பகுதியின் மதிப்பால் வகுக்கவில்லை (இவ்வாறு, இப்போதைய உதாரணத்தில் 500ஆல் வகுக்கிறோமே தவிர 400ஆல் அல்ல; முதலாவது மூலதனம் + இரண்டாவது மூலதனம் என்ற கூட்டுத் தொகையால் வகுக்கிறோமே தவிர முதலாவது மூலதனத்தால் அல்ல). வேறொரு கண்ணோட்டத்தின் படி, இந்த சராசரிக் கணக்கீடு சரியானதல்ல என்பதையும் பொதுவாகப் பார்க்கும் போது கூட இது அவ்வளவு சரியானதல்ல என்பதையும் பிற்பாடு நாம் பார்க்கப் போகிறோம். முதலாளியின் நடைமுறை நோக்கங்கள் நிறைவேற இந்தக் கணக்கீடு போதுமானதே என்றாலும், புரள்வு மெய்யாகவே நடந்தேறுகிற நிலைமைகளை எல்லாம் இம்மியும் பிசகாது சரிவரப் புலப்படுத்துவதில்லை.

சரக்கு-மூலதனத்தினுடைய மதிப்பின் ஒரு பகுதியை, அதாவது அதில் அடங்கியுள்ள உபரி-மதிப்பை இது வரை நாம் கவனியாது ஒதுக்கி வந்திருக்கிறோம். இந்த உபரி-மதிப்பு உற்பத்தி நிகழ்முறையின் போது உற்பத்தி செய்யப்பட்டு, உற்பத்திப் பொருளோடு சேர்க்கப்படுகிறது. இதனை இப்போது நாம் கவனித்தாக வேண்டும்.

ஒவ்வொரு வாரமும் முதலீடு செய்யப்படும் மாறும்-மூலதனமாகிய £100 ஆனது 100% உபரி-மதிப்பை, அதாவது £100

உபரி-மதிப்பை உற்பத்தி செய்வதாகக் கொள்வோமானால், 5-வார புரள்வுக் காலத்தில் முதலீடு செய்யப்படுகிற £500 மாறும்-மூல தனமானது £500 உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும். அதாவது வேலை-நாளில் சரி பாதி உபரி-உழைப்பால் ஆனது.

£500 மாறும்-மூலதனம் £500 உபரி-மதிப்பை உற்பத்தி செய்யுமானால், £5,000 மாறும் மூலதனம் £500 × 10= £5 000 உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும். முன்னீடு செய்யப் படும் மாறும்-மூலதனம் £500 ஆகும். ஓராண்டு காலத்தில் உற் பத்தி செய்யப்படும் மொத்த உபரி-மதிப்பு முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தின் மதிப்போடு கொண்டுள்ள விகிதமே வருடாந் தர உபரி-மதிப்பு வீதம் எனப்படுவது. நமது உதாரணத்தில் இந்த வீதம் $\frac{5,000}{500} = 1,000\%$ ஆகும். இந்த வீதத்தை இன்னும் நெருங்கிச் சென்று ஆராய்வோமானால், முன்னீடு செய்யப்படும் மாறும்-மூல தனம் ஒரு புரள்வுக் காலத்தில் உற்பத்தி செய்யும் உபரி-மதிப்பு வீதத்தை மாறும்-மூலதனத்தின் புரள்வுகளது எண்ணிக்கையால் (இந்த எண்ணிக்கையும் மொத்த சுழல்-மூலதனத்தின் புரள்வுகளது எண்ணிக் கையும் ஒன்றே) பெருக்கி வரும் பெருக்கற் பலனும் இந்த வருடாந்தர உபரி-மதிப்பு வீதமும் சமமாய் இருக்கக் காண்கிறோம்.

நமது உதாரணத்தில் ஒரு புரள்வுக் காலத்துக்கு முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனம் £500 ஆகும். இதே காலத்தில் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பும் £500தான். ஆகவே, ஒரு புரள்வுக் காலத்துக்கான உபரி-மதிப்பு வீதம் $\frac{5,000s}{500v}$, அதாவது 100% ஆகும். இந்த 100%ஐ ஓராண்டில் நிகழும் புரள்வுகளின் எண்ணிக்கையான 10ஆல் பெருக்கினால் கிடைப்பது $\frac{5,000s}{500v}$ அதாவது 1,000%.

இதுவே வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் [annual rate of surplus-value] ஆகிறது. குறிப்பிட்ட புரள்வுக் காலத்தில் கிடைக்கும் உபரி-மதிப்பின் பருமனைப் பொறுத்த வரை, இந்தக் காலத்தில் முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தின் மதிப்பை — நமது உதாரணத்தில் £500ஐ — உபரி-மதிப்பு வீதத்தால் பெருக்கினால் கிடைப்பதற்கு அது சமம் — நமது உதாரணத்தில் £500 × $\frac{100}{100}$ = £500 × 1 = £500. முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனம் £ 1,500ஆக இருந்தால், உபரி-மதிப்பு வீதம் மாறாதிருக்கையில், உபரி-மதிப்பின் பருமன் £ 1,500 × $\frac{100}{100}$ = £1,500 ஆக இருக்கும்.

மூலதனம் A என்கிற மாறும்-மூலதனத்தின் மதிப்பு £500 எனக் கொள்வோம். இது ஆண்டுக்குப் பத்து முறை புரள்வதா கவும், ஆண்டுக்கு £5,000 உபரி-மதிப்பு உற்பத்தி செய்வதாகவும் கொள்வோம்; வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் 1,000% ஆகிறது.

மூலதனம் B என்கிற வேறொரு மாறும்-மூலதனத்தின் மதிப்பு £5,000 எனக் கொள்வோம். இது ஒரு முழு ஆண்டுக்கு (அதாவது இங்கே 50 வாரத்துக்கு) முன்னீடு செய்யப்பட்டிருக்கிறது என்போம். எனவே, இது ஆண்டுக்கு ஒரு முறைதான் புரள்கிறது. ஆண்டின் முடிவில் உற்பத்திப் பொருள் பூர்த்தியாகிற அதே நாளில் அது விற்கப்பட்டு விலை பெறுவதாக வைத்துக் கொள்வோம்; இவ்விதம் அது பண-மூலதனமாக உருமாறி அதே நாளன்றே மீண்டு கைக்குத் திரும்புகிறது. ஆகவே இங்கு சுற்றோட்டக் காலம் பூஜியமாகும். ஆகவே புரள்வுக் காலம் வேலைக் காலத்துக்குச் சமமாகும், அதாவது இரண்டும் ஓராண்டு ஆகும். முதலாவது உதாரணத்தில் போலவே, ஒவ்வொரு வாரமும் உழைப்பு நிகழ்முறையில் முதலீடாகிற மாறும்-மூலதனம் £100 ஆகும். 50 வாரங்களில் முதலீடாவது £5,000 ஆகும். உபரி-மதிப்பு வீதம் மாறாமல் 100% ஆகவே இருப்பதாகக் கொள்வோம். வேலை-நாளின் கால அளவு மாறாதிருக்குமாயின், சரிபாதி வேலை-நாள் உபரி-உழைப்பால் ஆனதாய் இருக்கும். 5 வாரத்தை எடுத்துக் கொள்வோமானால், முதலீடு செய்யப்படும் மாறும்-மூலதனம் £500; உபரி-மதிப்பு வீதம் 100%. ஆகவே 5 வாரத்தில் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் பருமன் £500. சுரண்டப்படும் உழைப்புச் சக்தியின் அளவும், சுரண்டலின் கடுமையும் A மூலதனத்துக்கு இருக்கும் அதே அளவில் இருப்பதாகக் கொள்கிறோம்.

ஒவ்வொரு வாரமும் முதலீடு செய்யப்படும் £100 மாறும்-மூலதனம் £100 உபரி-மதிப்பை உற்பத்தி செய்கிறது; எனவே 50 வாரத்தில் முதலீடு செய்யப்படும் £100 × 50 = £5,000 மூலதனமானது £5,000 உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும். ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் பருமன் முதலாவது உதாரணத்தில் இருக்கும் அதே £5,000தான். ஆனால் வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் இங்கே வெகுவாய் மாறி விடுகிறது, இங்கு அது ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பை முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தால் வகுத்துக் கிடைக்கும் ஈவு ஆகும், அதாவது $\frac{5,000s}{5,000v}$ = 100% ஆகும். ஆனால A மூலதனத்துக்கு இந்த வீதம் 1,000% ஆக இருந்தது.

A மூலதனம், B மூலதனம் இவை இரண்டிலும் ஒரு வாரத்துக்கு முதலீடாகிற மாறும்-மூலதனம் £100தான். தற்பெருக்கத்தின் படித்தரமும் [degree of self-expansion], அதாவது உபரி-மதிப்பு வீதமும் [rate of surplus-value] இரண்டிலும் ஒன்றேதான், 100%தான். மாறும்-மூலதனத்தின் பருமனிலும் மாற்றம் இல்லை, இரண்டிலும் 100தான். ஒரே அளவுள்ள உழைப்புச் சக்தியே சுரண்டப்படுகிறது. சுரண்டலின் பரிமாணமும் சுரண்டலின் கடுமையும் இரண்டிலும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. வேலை-நாட்களிலும் எந்த வித்தியாசமும் இல்லை, வேலை-நாட்கள்

அவசிய-உழைப்பாகவும் உபரி-உழைப்பாகவும் பிரிக்கப்படுகிற விகிதத்திலும் வேறுபாடில்லை. ஓராண்டு காலத்தில் செயல்படுகிற மாறும்-மூலதனத்தின் அளவும் இரண்டிலும் ஒன்றேதான், £5,000 தான். இந்த மாறும்-மூலதனம் இரண்டிலும் ஒரே அளவுள்ள உழைப்பையே இயங்க வைக்கிறது. சம பருமனுள்ள இந்த இரு மூலதனங்களும் இயங்க வைக்கும் உழைப்புச் சக்தியிடமிருந்து இவை கறக்கிற உபரி-மதிப்பும் ஒன்றேதான், £5,000தான். இருந்த போதிலும் A, B ஆகிய இந்த இரு மூலதனங்களின் வருடாந்தர உபரி-மதிப்பு வீதங்களில் மட்டும் 900% வேறுபாடு உள்ளது.

இந்த விபரீதத்தின் விளைவு என்னவென்றால்: உபரி-மதிப்பு வீதமானது மாறும்-மூலதனம் இயங்க வைக்கும் உழைப்புச் சக்தியின் மீதான சுரண்டலின் அளவையும் கடுமையையும் மட்டும் பொறுத்ததல்ல, விளங்காத முறையில் சுற்றோட்ட நிகழ்முறையால் ஏற்படும் பாதிப்புகளையும் பொறுத்ததாகும் என்பதாக நினைக்கத் தோன்றுகிறது. உண்மையில் இதற்கு இப்படித்தான் விளக்கம் தரப்பட்டது. இந்தத் தூய வடிவில் இல்லையெனில், மாறுவேடம் பூண்டு இதனிலும் சிக்கல் வாய்ந்த வருடாந்தர இலாப வீதம் என்னும் வடிவில் எழும் இந்த விபரீதம், இருபதாம் ஆண்டுகளின் தொடக்கம் முதலாய் ரிக்கார்டிய மரபை அடியோடு தகர்த்திருக்கிறது.

A மூலதனம், B மூலதனம் இரண்டையும் தோற்றத்தில் மட்டுமல்லாமல் உள்ளபடியே முழுதொத்த நிலைமைகளில் வைத்துப் பார்ப்போமானால், இந்த விபரீதம் உடனே மறைந்து விடுகிறது. உழைப்புச் சக்திக்கு விலை கொடுப்பதற்காக எவ்வளவு காலத்தில் மாறும்-மூலதனம் A செலவாகித் தீர்கிறதோ, அதே அளவு காலத்தில் அதே காரியத்துக்காக மாறும்-மூலதனம் Bஉம் செலவாகித் தீர வேண்டும் — அப்போதுதான் இந்த முழுதொத்த நிலைகள் நிலவ முடியும்.

இப்போது, B மூலதனமான £5,000 ஆனது 5 வாரத்துக்கு முதலீடு செய்யப்படுகிறது. வாரத்துக்கு £1,000 என்றால், ஓராண்டுக்கு £50,000 முதலீடாகிறது. நமது அனுமானங்களின் படி அப்போது உபரி-மதிப்பும் £50,000 ஆகும். புரள்கிற மூலதனமான £50,000ஐ முன்னீடு செய்யப்படும் மூலதனமான £5,000ஆல் வகுத்தால், புரள்வுகளின் எண்ணிக்கை 10 ஆகிறது. உபரி-மதிப்பு வீதம் $\frac{5,000s}{5,000v} = 100\%$. இந்த உபரி-மதிப்பு வீதத்தைப் புரள்வுகளின் எண்ணிக்கையான 10ஆல் பெருக்கினால், வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் $\frac{50,000s}{5,000v} = \frac{10}{1} = 1,000\%$. இப்போது A, B இரண்டுக்கும் வருடாந்தர உபரி-மதிப்பு வீதங்கள் ஒன்றே, அதாவது 1,000%. ஆனால் உபரி-மதிப்பின் பருமன் Bக்கு £50,000; Aக்கு £5,000. உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் அளவுகளுக்கிடையிலான விகிதமும் முன்னீடு செய்யப்படும் A, B மூலதன-மதிப்புகளுக்கிடையிலான விகிதமும் ஒன்றே — 5,000:500 = 10:1. ஆனால் A மூலதனம் இயங்கச் செய்வது போல் பத்து மடங்கு உழைப்புச்

சக்தியை B மூலதனம் அதே காலத்தில் இயங்கச் செய்கிறது.

உள்ளபடியே உழைப்பு நிகழ்முறையில் செயல்படும் மூலதனம் மட்டுமே உபரி-மதிப்பை உற்பத்தி செய்கிறது. இப்படிப்பட்ட மூலதனத்துக்கு மட்டும்தான் உபரி-மதிப்பு தொடர்பான எல்லா விதிகளும் பொருந்தக் கூடியதாய் இருக்கும். ஆகவே, உபரி-மதிப்பு வீதம் குறிப்பிட்டதாயிருக்க, அதன் பருமன் மாறும்-மூலதனத்தின் ஒப்பீட்டுப் பருமனால் நிர்ணயிக்கப்படுகிறது என்ற விதியும் இப்படிப்பட்ட மூலதனத்துக்கு மட்டும்தான் பொருந்தக் கூடியது. (முதல் பாகம், அத்தியாயம் XI.)

உழைப்பு நிகழ்முறையானது காலத்தால் அளவிடப்படுகிறது. வேலை-நாளின் கால அளவு குறிப்பிட்டதாய் இருக்குமானால் (இங்கு இப்படித்தான் இருக்கிறது; வருடாந்தர உபரி-மதிப்பு வீதத்திலான வேறுபாட்டைத் தெளிவாக விளக்கும் பொருட்டு A, B ஆகியவை தொடர்பான எல்லா நிலைமைகளும் சமமெனக் கொள்கிறோம்), வேலை-வாரமானது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வேலை-நாட்களைக் கொண்டதாகிறது. அதாவது வேலை-நாள் 10 மணி நேரமாகவும் வேலை-வாரம் 6 நாட்களாகவும் இருந்தால், நாம் எந்த ஒரு வேலைக் காலத்தையும் உதாரணமாய் ஒரே வேலை-நாளாகக் கருதலாம். எடுத்துக்காட்டாக, 5 வாரம் கொண்ட இந்த வேலைக் காலத்தை 300 மணி நேரம் கொண்ட ஒரே வேலை-நாளாகக் கருதலாம். இந்த எண்ணிக்கையை ஒரே உழைப்பு நிகழ்முறையில் ஒவ்வொரு நாளும் ஒருங்கே ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கையால் பெருக்க வேண்டும். இந்த எண்ணிக்கையை 10 எனக் கொண்டால், ஒரு வாரம் என்பது $10 \times 60 = 600$ மணிகள் கொண்டதாகும். 5-வார வேலைக் காலம் $600 \times 5 = 3{,}000$ மணிகள் கொண்டதாகும். ஆகவே, உழைப்புச் சக்தியின் சம அளவுகளை (குறிப்பிட்ட ஒரே விலையுள்ள உழைப்புச் சக்தியைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையால் பெருக்கி வரும் தொகையை) ஒரே காலத்தில் இயங்கச் செய்யும் போது, உபரி-மதிப்பு வீதமும் வேலை-நாளின் கால அளவும் சமமாய் இருக்குமானால், சம பருமனுள்ள மாறும்-மூலதனங்கள் ஈடுபடுத்தப்படும்.

இப்போது நமது ஆரம்ப உதாரணங்களிடம் திரும்பி வருவோம். A, B ஆகிய இரண்டில் எதை எடுத்துக் கொண்டாலும், ஆண்டு முழுக்க ஒவ்வொரு வாரமும் சம அளவிலான மாறும்-மூலதனமான £100 முதலீடு செய்யப்படுகிறது. ஆகவே உள்ளபடியே உழைப்பு நிகழ்முறையில் செயல்படுகிற, அதாவது முதலீடு செய்யப்படுகிற மாறும்-மூலதனங்கள் சமம்; ஆனால் முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனங்கள் சமமல்ல. Aஐப் பொறுத்த வரை, ஒவ்வொரு 5-வார காலத்துக்கும் £500 முன்னீடு செய்யப்படுகிறது; இதில் £100 ஒவ்வொரு வாரமும் செயல்படுகிறது. Bஐப் பொறுத்த வரை முதல் 5-வார காலத்துக்கு £5,000 முன்னீடு செய்யப்பட

வேண்டும்; இதில் வாரத்துக்கு £100, அதாவது 5-வார காலத்தில் £500 செயல்படுகிறது; அதாவது முன்னீடு செய்யப்படும் மூல தனத்தில் [advanced capital] பத்திலொரு பங்கு மட்டுமே செயல் படுகிறது. இரண்டாவது 5-வார காலத்தில் £4,500 முன்னீடு செய்யப்பட வேண்டும்; ஆனால் இதில் £500 மட்டுமே செயல் படுகிறது. இவ்விதம் தொடர்ந்து நடைபெறுகிறது. குறிப்பிட்ட காலத்துக்கென முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனம் அந்தக் காலத்தில் உழைப்பு நிகழ்முறைக்குத் தேவைப்படும் பிரிவுகளில் உண்மையிலேயே பிரவேசிக்கிற அளவுக்கு மட்டுமே, உண்மையில் உழைப்பு நிகழ்முறையில் செயல்படுகிற அளவுக்கு மட்டுமே, உள்ள படியே செயல்படுகிற மாறும்-மூலதனம் ஆகிறது. மாறும்-மூல தனத்தின் ஒரு பகுதி பிற்பாடு பயன்படும் பொருட்டு முன்னீடு செய்யப்படுகிறது; இந்த இடைக்காலத்தில் அந்தப் பகுதியானது நடைமுறையில் உழைப்பு நிகழ்முறையைப் பொறுத்த வரை இல்லாத ஒன்றாகி விடுகிறது. ஆகவே மதிப்பின் உருவாக்கத்திலோ உபரி-மதிப்பின் உருவாக்கத்திலோ அந்தப் பகுதி எவ்விதத் தாக் கமும் செலுத்துவதில்லை. உதாரணமாக £500 ஆகிய A மூல தனத்தை எடுத்துக் கொள்வோம். அது 5 வார காலத்துக்கு முன்னீடு செய்யப்படுகிறது; ஆனால் அடுத்தடுத்து ஒவ்வொரு வாரமும் £100 மட்டுமே உழைப்பு நிகழ்முறையில் ஈடுபடுகிறது. முதல் வாரத்தில், இந்த மூலதனத்தில் ஐந்திலொரு பங்கு செயல்படுகிறது; ஐந்தில் நான்கு பங்கு முன்னீடு செய்யப்படுகிறதே தவிர செயல்படுவ தில்லை. அடுத்த 4 வாரங்களில் இது உழைப்பு நிகழ்முறைகளுக் காக இருப்பில் இருந்தாக வேண்டும், எனவே முன்னீடு செய்யப் பட்டாக வேண்டும் என்ற போதிலும் முதல் வாரத்தில் செயல்படுவ தில்லை.

முன்னீடு செய்யப்படுகிற மாறும்-மூலதனத்துக்கும் செயல் படுகிற மாறும்-மூல்தனத்துக்கும் இடையிலான விகித உறவை வேறு படுத்தும் நிலைமைகள் ஒரு வாரம், ஐந்து வாரம் என்பது போன்ற குறிப்பிட்ட கால அளவில் உள்ளபடியே செயல்படக் கூடிய மாறும்-மூலதனத்தின் அளவை வேறுபடுத்துகிற வரையில்தான், அப்படி வேறுபடுத்துகிற காரணத்தால்தான், (உபரி-மதிப்பு வீதம் குறிப் பிட்டதாயிருக்க) உபரி-மதிப்பின் உற்பத்தியை பாதிக்கின்றன. முன்னீடு செய்யப்படுகிற மாறும்-மூலதனம் உள்ளபடியே பயன் படுகிற அளவுக்குத்தான், அப்படிப் பயன்படும் காலத்தில்தான் மாறும்-மூலதனமாகச் செயல்படுகிறது. அது இருப்பில் இருந்து வரும் காலத்தில், முன்னீடு செய்யப்பட்டாலுங்கூட பயன்படாமல் இருக்கிற காலத்தில் மாறும்-மூலதனமாகச் செயல்படுவதில்லை. ஆனால் முன்னீடு செய்யப்படுகிற மாறும்-மூலதனத்துக்கும் செயல் படுகிற மாறும்-மூலதனத்துக்கும் இடையிலான விகித உறவை வேறுபடுத்துகிற நிலைமைகளை எல்லாம் புரள்வுக் காலங்களின்

வேறுபாடாகச் சுருக்கி விடலாம் (இந்த வேறுபாடு வேலைக் காலம் அல்லது சுற்றோட்டக் காலத்திலான வேறுபாட்டாலோ, அல்லது இரண்டிலுமான வேறுபாட்டாலோ நிர்ணயிக்கப்படுகிறது). உபரி-மதிப்பு வீதம் குறிப்பிட்டதாயிருக்க, செயல்படுகிற மாறும்-மூல தனத்தின் சம அளவுகள் உபரி-மதிப்பின் சம அளவுகளை உற்பத்தி செய்கின்றன என்று உபரி-மதிப்பின் உற்பத்தி பற்றிய விதி கூறுகிறது. அப்படியானால், A, Bஆகிய மூலதனங்கள் சமமான காலங்களில் சம அளவுள்ள மாறும்-மூலதனங்களை ஈடுபடுத்து மானால், உபரி-மதிப்பு வீதங்களும் சமமாக இருக்குமானால், சமமான காலங்களில் உபரி-மதிப்பின் சம அளவுகளை அவை உற்பத்தி செய்தாக வேண்டும். குறிப்பிட்ட காலத்தில் ஈடுபடுத்தப் படுகிற இந்த மாறும்-மூலதனம் அதே காலத்தில் முன்னீடு செய்யப் படுகிற மாறும்-மூலதனத்தோடு கொண்டுள்ள விகிதம் எவ்வளவு தான் வேறுபட்ட போதிலும், ஆகவே உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் அளவுகள் பொதுவாக முன்னீடு செய்யப்படு கிற மாறும்-மூலதனத்தோடு—ஈடுபடுத்தப்படுகிற மாறும்-மூலதனத் தோடு அல்ல—கொண்டுள்ள விகிதம் எவ்வளவுதான் வேறுபட்ட போதிலும், சம அளவுகளிலான உபரி-மதிப்பே உற்பத்தி செய் யப்பட வேண்டும். இந்த விகிதத்தின் வேறுபாடானது உபரி-மதிப்பின் உற்பத்தி பற்றி ஏற்கெனவே நிரூபித்துக் காட்டப் பட்டிருக்கும் விதிகளை மேலும் உறுதி செய்கிறதே அன்றி அவற்றுக்கு முரணாகி விடவில்லை; அவற்றால் ஏற்படும் தவிர்க்க முடியாத விளைவுகளில் ஒன்றாகவே இருக்கிறது.

B மூலதனத்தின் முதல் 5-வார உற்பத்திக் காலத்தைப் பரிசீலிப் போம். ஐந்தாவது வார முடிவில் £500 ஈடுபடுத்தப்பட்டு நுகரப் பட்டு விட்டது. உற்பத்திப் பொருளின் மதிப்பு £1,000. எனவே $\frac{500s}{500v} = 100\%$. A மூலதனத்துக்குக் கிடைக்கும் அதே விகிதம்தான் B மூலதனத்துக்கும் கிடைக்கிறது. A மூலதனத்துக்கு உபரி-மதிப் பானது முன்னீடு செய்யப்படும் மூலதனத்தோடு கூடவே ஈடேற்றம் பெறுகிறது, ஆனால் B மூலதனத்துக்கு அப்படி நடைபெறவில்லை என்பதை இங்கு நாம் கண்டுகொள்ள வேண்டியதில்லை; ஏனெனில் இங்கு நாம் உபரி-மதிப்பின் உற்பத்தியையும் இந்த உற்பத்திக்காக முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தோடு உபரி-மதிப்புக்குள்ள விகிதத்தையும்தான் பரிசீலிக்கிறோம். Bக்குக் கிடைக்கும் உபரி-மதிப்பு விகிதத்தை இப்படிக் கணக்கிடாமல், அதாவது முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனமான £5,000இல் உபரி-மதிப்பின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டு நுகரப்பட்டு விடும் பகுதியோடு உபரி-மதிப்புக்குள்ள விகிதத்தைக் கணக்கிடாமல், இந்த மொத்த மூலதனத்தோடு உபரி-மதிப்புக்குள்ள விகிதத்தைக் கணக்கிடுவோ மானால், $\frac{500s}{5,000v} = \frac{1}{10} = 10\%$தான். B மூலதனத்துக்குக் கிடைப்பது

10%; A மூலதனத்துக்குக் கிடைப்பது 100%, அதாவது முன்னதைப் போல் 10 மடங்கு அதிகம். சம அளவிலான மூலதனங்கள் உழைப்பின் சம அளவுகளை இயங்கச் செய்கையில், இந்த உழைப்புகளும் சம்மான விகிதத்தில் ஊதிய உழைப்பாகவும் ஊதியமிலா உழைப்பாகவும் பிரிக்கப்பட்டு இருக்கையில், இந்த மூலதனங்களுக்கான உபரி-மதிப்பு வீதம் இப்படி வேறுபடுவது, உபரி-மதிப்பின் உற்பத்தி பற்றிய விதிகளுக்கு விரோதமானது அல்லவா என்று கேட்டால், பதிலளிப்பது எளிதே. உள்ளபடியே நிலவும் உறவுகளை ஒரு தரம் பார்த்ததுமே இந்த பதில் தெரிந்து விடுகிறது. A மூலதனத்தைப் பொறுத்த வரை உள்ளபடியான உபரி-மதிப்பு வீதம் தெளிவாகவே தெரிவிக்கப்படுகிறது. £500 மாறும்-மூலதனத்தால் 5 வாரத்தில் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பு இந்த £500 மாறும்-மூலதனத்தோடு கொண்டுள்ள விகித உறவு அதைத் தெரிவிக்கிறது. ஆனால் B மூலதனத்தைப் பொறுத்த வரை தேவைப்படும் கணக்கீடு உபரி-மதிப்பின் உற்பத்தியுடனோ, அதற்குரிய உபரி-மதிப்பு வீதத்தின் நிர்ணயிப்புடனோ எந்தத் தொடர்பும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் £500 மாறும்-மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் £500 உபரி-மதிப்பை அதன் உற்பத்தியின் போது முன்னீடு செய்யப்பட்ட £500 மாறும்-மூலதனத்தோடு தொடர்புபடுத்தி விகித உறவு கணக்கிடப்படுவதற்கு பதில், £5,000 மூலதனத்தோடு தொடர்புபடுத்திக் கணக்கிடப்படுகிறது; இந்த £5,000இல் பத்திலொன்பது பங்காகிய £4,500க்கும் இந்த £500 உபரி-மதிப்பின் உற்பத்திக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. மாறாக இந்த £4,500 அடுத்து வரும் 45 வாரங்களில் சிறுகச் சிறுக ஈடுபட்டுச் செயல்படுவதற்காக முன்னீடு செய்யப்பட்டதாகும். ஆகவே முதல் ஐந்து வார உற்பத்தியைப் பொறுத்த வரை இந்த £4,500 இருந்தாலும் ஒன்றுதான், இல்லாமற் போனாலும் ஒன்றுதான். இங்கு நமது கணக்கீட்டுக்கு வேண்டியது முதல் ஐந்து வார உற்பத்தி மட்டுமே. ஆகவே இங்கு Aக்கும் Bக்கும் இடையே உபரி-மதிப்பு வீதத்தில் நிலவும் வேறுபாடு இயற்கையானதே தவிர எவ்விதத்திலும் பிரச்சினையாக எழவில்லை.

இனி B மூலதனத்துக்கும் A மூலதனத்துக்குமான வருடாந்தர உபரி-மதிப்பு வீதங்களை ஒப்புநோக்குவோம். B மூலதனத்துக்கானது $= \frac{5,000s}{5,000v} = 100\%$; A மூலதனத்துக்கானது $\frac{5,000s}{500v} = 1,000\%$. ஆனால் உபரி-மதிப்பு வீதங்களிடையிலான விகிதம் மாறி விடவில்லை, முன்பு இருந்த அதே விகிதம்தான் இப்போதும் இருக்கிறது. முன்பு இருந்தது:

$$\frac{\text{B மூலதனத்தின் உபரி-மதிப்பு வீதம்}}{\text{A மூலதனத்தின் உபரி-மதிப்பு வீதம்}} = \frac{10\%}{100\%}$$

இப்போது இருப்பது:

$$\frac{\text{B மூலதனத்தின் வருடாந்தர உபரி-மதிப்பு வீதம்}}{\text{A மூலதனத்தின் வருடாந்தர உபரி-மதிப்பு வீதம்}} = \frac{100\%}{1,000\%}$$

10% : 100% = 100% : 1,000% என்பதால், விகித உறவில் மாற்றமில்லை.

ஆனால் இப்போது பிரச்சினை மாறி விட்டது. B மூலதனத்தின் வருடாந்தர உபரி-மதிப்பு வீதமான $\frac{5,000s}{5,000v} = 100\%$ என்பது, நாமறிந்த உபரி-மதிப்பின் உற்பத்தி பற்றிய விதிகளிலிருந்தும், இந்த விதிகளுக்கிசைவான உபரி-மதிப்பு வீதத்திலிருந்தும் கொஞ்சங்கூட விலகவில்லை — அப்படி ஒரு பாவனையுங்கூட இல்லை. ஓராண்டு காலத்தில் £5,000 முன்னீடு செய்யப்பட்டு உற்பத்தித் திறனுள்ள முறையில் நுகரப்பட்டு, £5,000 உபரி-மதிப்பை உற்பத்தி செய்துள்ளது. ஆகவே உபரி-மதிப்பு வீதம் மேற்சொன்ன பின்னத்துக்குச் சமம்; $\frac{5,000s}{5,000v} = 100\%$. வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் உள்ளபடியான உபரி-மதிப்பு வீதத்துக்குச் சமமாகிறது. ஆகவே, இங்கே முரண்பாட்டை உண்டாக்குவது A மூலதனம்தானே தவிர B மூலதனம் அல்ல. இந்த முரண்பாட்டுக்கு விளக்கமளித்தாக வேண்டும்.

இங்கே வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் $\frac{5,000s}{500v} = 1,000\%$. முதல் நேர்வில் 5 வார உற்பத்தி 500s; முன்னீடு செய்யப்பட்ட £5,000 மூலதனத்தின் அடிப்படையில் இது கணக்கிடப்பட்டது — இந்த £5,000இல் பத்தில் ஒன்பது பங்கு இந்த உற்பத்தியில் ஈடுபடவில்லை. ஆனால் இப்போது 5,000s ஆனது 500vஇன் அடிப்படையில் மட்டுமே — அதாவது 5,000sஇன் உற்பத்தியில் உள்ளபடியே ஈடுபடுகிற மாறும்-மூலதனத்தில் பத்தில் ஒரு பங்கின் அடிப்படையில் மட்டுமே — கணக்கிடப்படுகிறது. ஏனெனில் 5,000s என்பது — உற்பத்தித் திறனுள்ள முறையில் 50 வார காலத்தில் நுகரப்பட்ட மாறும்-மூலதனமான £5,000இன் உற்பத்தியே தவிர, 5 வாரங் கொண்ட ஒரே ஒரு வேலைக் காலத்தில் நுகரப்பட்ட £500 மூலதனத்தின் உற்பத்தி அல்ல. முதல் நேர்வில், 5 வார காலத்தில் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பு 50 வார காலத்துக்கு முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் அடிப்படையில் (5 வாரத்தில் நுகரப்படும் மூலதனத்தைப் போல் பத்து மடங்கு பெரிய மூலதனத்தின் அடிப்படையில்) கணக்கிடப்பட்டது. இப்போது 50 வார காலத்தில் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பு 5 வார காலத்துக்கு முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் அடிப்படையில் (50 வார காலத்தில் நுகரப்படும் மூலதனத்தைப் போல் பத்து மடங்கு சிறிய மூலதனத்தின் அடிப்படையில்) கணக்கிடப்படுகிறது.

£500 ஆகிய A மூலதனம் 5 வாரத்துக்கு மேல் முன்னீடு

செய்யப்படவில்லை. இந்த 5 வார முடிவில் அது மீள்கிறது: ஓராண்டு காலத்தில் இதையே அது திரும்பத் திரும்ப 10 முறை செய்ய முடிகிறது, ஏனெனில் அது 10 புரள்வுகளை நிகழ்த்துகிறது. இதிலிருந்து கிடைப்பவை இரு முடிவுகள்:

*முதலாவதாக:* Aஐப் பொறுத்த வரை முன்னீடு செய்யப்படும் மூலதனமானது ஒரு வார உற்பத்தி நிகழ்முறையில் இடையறாது செயல்படும் மூலதனப் பகுதியைப் போல் ஐந்து மடங்குதான் பெரிது. ஆனால் B மூலதனம் 50 வார காலத்தில் ஒரு முறைதான் புரள்கிறது; ஆகவே இதை 50 வார காலத்துக்கு முன்னீடு செய்தாக வேண்டும். இவ்விதம் B மூலதனமானது இடையறாது ஒரு வாரத்துக்குச் செயல்படக் கூடிய அதன் ஒரு பகுதியைப் போல் ஐம்பது மடங்கு பெரிது. ஆகவே, உற்பத்தி நிகழ்முறைக்காக ஓராண்டு காலத்துக்கு முன்னீடு செய்யப்படும் மூலதனத்துக்கும் குறிப்பிட்ட உற்பத்திக் காலத்துக்கு—உதாரணமாக ஒரு வாரத்துக்கு—இடையறாது செயல்படும் மூலதனத்துக்கும் இடையிலான விகித உறவு புரள்வுக் காலத்தால் மாற்றப்படுகிறது. இவ்விதம் முதல் நேர்வில், 5 வாரங்களில் உற்பத்தியாகும் உபரி-மதிப்பு இந்த 5 வாரங்களில் செயல்படும் மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிடப்படாமல், இதைப் போல் பத்து மடங்கு பெரிதான மூலதனத்தின் அடிப்படையில் (50 வாரங்களில் நுகரப்படும் மூலதனத்தின் அடிப்படையில்) கணக்கிடப்படுகிறது.

*இரண்டாவதாக:* A மூலதனத்தின் புரள்வுக் காலமான 5 வார காலம் ஆண்டில் பத்திலொரு பங்கே ஆகும். ஓராண்டு காலத்தில் இத்தகைய பத்து புரள்வுக் காலங்கள் உள்ளன. A மூலதனமான £500 இந்தப் புரள்வுக் காலங்களில் திரும்பத் திரும்ப முதலீடாகிறது. செயல்படும் மூலதனம் என்பது இங்கே 5 வாரத்துக்கு முன்னீடு செய்யப்படுகிற மூலதனத்தை ஓராண்டிலுள்ள புரள்வுக் காலங்களின் எண்ணிக்கையால் பெருக்கி வருவதற்குச் சமமாகும். ஓராண்டு காலத்தில் செயல்படும் மூலதனம் $= 500 \times 10 =$ £5,000. ஓராண்டு காலத்தில் முன்னீடு செய்யப்படும் மூலதனம் $= \frac{5,000}{10}$ = £500. உள்ளபடியே £500 ஆனது மீண்டும் மீண்டும் திரும்பி வந்த போதிலும், 5 வாரத்துக்கு ஒரு முறை முன்னீடு செய்யப்படும் தொகை ஒருபோதும் £500ஐ விட அதிகமாவதில்லை. ஆனால் B மூலதனத்தைப் பொறுத்த வரை 5 வாரங்களில் £500 மட்டுமே செயல்படுகிறது, இந்த 5 வாரங்களில் முன்னீடு செய்யப்படுவதும் £500தான். இங்கு புரள்வுக் காலம் 50 வாரமாய் இருப்பதால், ஓராண்டில் செயல்படும் மூலதனம் 50 வாரத்துக்கு முன்னீடு செய்யப்படும் மூலதனத்துக்குச் சமமாகுமே தவிர ஒவ்வொரு 5 வார காலத்துக்கும் முன்னீடு செய்யப்படும் மூலதனத்துக்கு அல்ல. ஆனால் உபரி-மதிப்பு வீதம் குறிப்பிட்டதாயிருக்க, ஆண்டுதோறும்

உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் அளவு ஓராண்டு காலத்தில் செயல்படும் மூலதனத்தால் நிர்ணயிக்கப்படுகிறதே தவிர, ஓராண்டு காலத்தில் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தால் அல்ல. எனவே இந்த £5,000 மூலதனம் ஆண்டுதோறும் உற்பத்தி செய்கிற உபரி-மதிப்பின் அளவானது ஆண்டொன்றுக்கு பத்து தடவை புரள்கிற £500 மூலதனம் ஆண்டுதோறும் உற்பத்தி செய்கிற உபரி-மதிப்பின் அளவை விடப் பெரிதன்று. அது இவ்வளவு பெரிதாய் இருக்கிறது என்றால், ஆண்டொன்றுக்கு ஒரு தடவை புரளும் மூலதனமே ஆண்டொன்றுக்குப் பத்து தடவை புரளும் மூலதனத்தைப் போல் பத்து மடங்கு பெரிதாய் இருப்பதே இதற்குக் காரணம்.

ஓராண்டு காலத்தில் புரள்கிற மாறும்-மூலதனமானது—எனவே வருடாந்தர உற்பத்திப் பண்டத்தின் பகுதி, அல்லது இந்தப் பகுதிக்குச் சமமான வருடாந்தரச் செலவீடு அந்த ஆண்டில் உள்ளபடியே செயல்பட்டு, உற்பத்தித் திறனுள்ள முறையில் நுகரப்படுகிற மாறும்-மூலதனமே ஆகும். ஆகவே, ஆண்டுதோறும் புரள்கிற மாறும்-மூலதனம் A, ஆண்டுதோறும் புரள்கிற மாறும்-மூலதனம் B ஆகிய இரண்டும் சமமாய் இருக்குமானால், ஒரேவிதமான தற்பெருக்க நிலைமைகளில் அவையிரண்டும் செயல்படுமானால், அதாவது உபரி-மதிப்பு வீதம் ஒன்றாயிருக்குமானால், ஆண்டுதோறும் அவை உற்பத்தி செய்யும் உபரி-மதிப்பின் அளவுகளும் சமமாகத்தான் இருக்க வேண்டும். செயல்படுகிற மூலதன அளவுகள் சமமாதலால், ஓராண்டுக்கான உபரி-மதிப்பு வீதங்களும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்—

$$\frac{\text{ஆண்டுதோறும் உற்பத்தியாகிற உபரி-மதிப்பு அளவு}}{\text{ஆண்டுதோறும் புரளுகிற மாறும்-மூலதனம்}}$$

என்னும் விகிதமே உபரி-மதிப்பு வீதத்துக்கான தெரிவிப்பு. பொதுவாகச் சொன்னால்: புரளுகிற மாறும்-மூலதனங்களின் ஒப்பீட்டுப் பருமன் என்னவாயிருப்பினும், ஓராண்டு காலத்தில் அவை உற்பத்தி செய்யும் உபரி-மதிப்பின் வீதமானது அந்தந்த மூலதனமும் சராசரிக் காலங்களில் (உதாரணமாக, வார சராசரி அல்லது நாள் சராசரி) எந்தெந்த உபரி-மதிப்பு வீதத்தில் செயல்பட்டுள்ளது என்பதையே பொறுத்தது.

உபரி-மதிப்பு உற்பத்தியையும் உபரி-மதிப்பு வீத நிர்ணயிப்பையும் பற்றிய விதிகளிலிருந்து வரப் பெறுவதே இது.

$$\frac{\text{ஆண்டுதோறும் புரளுகிற மூலதனம்}}{\text{முன்னீடு செய்யப்படும் மூலதனம்}}$$

என்னும் விகிதம் தெரிவிப்பதை மேலும் பரிசீலிப்போம் (முன்னரே கூறியிருப்பது போல, மாறும்-மூலதனத்தை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்கிறோம்). இதன் ஈவு ஓராண்டில் முன்னீடு செய்யப்படும் மூலதனம் நிகழ்த்துகிற புரள்வுகளின் எண்ணிக்கையைக் குறிக்கிறது.

A மூலதனத்தைப் பொறுத்த வரை:

$$\frac{\text{ஆண்டுதோறும் புரளுகிற £5,000 மூலதனம்}}{\text{முன்னீடு செய்யப்படும் £500 மூலதனம்}}$$

B மூலதனத்தைப் பொறுத்த வரை:

$$\frac{\text{ஆண்டுதோறும் புரளுகிற £5,000 மூலதனம்}}{\text{முன்னீடு செய்யப்படும் £5,000 மூலதனம்}}$$

இந்த இரு விகிதங்களிலுமே, மேலிலக்கமானது முன்னீடு செய்யப்படும் மூலதனத்தைப் புரள்வுகளின் எண்ணிக்கையால் பெருக்கி வருவதைக் குறிக்கிறது. A நேர்வில்: $500 \times 10$. B நேர்வில்: $5,000 \times 1$. இல்லையேல், புரள்வுக் காலத்தை ஓராண்டின் பின்னமாக்கி, அந்தப் பின்னத்தைத் தலைகீழாய் மாற்றி, அதனால் மூலதனத்தைப் பெருக்க வேண்டும். Aஇன் புரள்வுக் காலம் ஓராண்டில் $\frac{1}{10}$ பங்கு; தலைகீழாக்கினால் இது $\frac{10}{1}$ ஆகிறது; பெருக்கினால் கிடைப்பது: $500 \times \frac{10}{1} = 5,000$. B நேர்வில்: $5,000 \times \frac{1}{1} = 5,000$. விகிதத்தின் கீழிலக்கமானது புரளும் மூலதனத்தைப் புரள்வுகளின் தலைகீழ் எண்ணிக்கையால் பெருக்கி வருவதைக் குறிக்கிறது. A நேர்வில்: $5,000 \times \frac{1}{10}$; B நேர்வில்: $5,000 \times \frac{1}{1}$.

ஆண்டுதோறும் புரளுகிற இரு மாறும்-மூலதனங்களும் இயங்க வைக்கிற உழைப்பின் அளவுகள் (ஊதிய உழைப்பு, ஊதியமிலா உழைப்பு இவற்றின் கூட்டுத் தொகைகள்) இங்கு ஒன்றுக்கொன்று சமம்; ஏனென்றால் புரளும் மூலதனங்கள் சமமானவை, அவற்றின் தற்பெருக்க வீதங்களும் இதே போல் சமமானவை.

ஆண்டுதோறும் புரளுகிற மாறும்-மூலதனத்துக்கும் முன்னீடு செய்யப்படுகிற மாறும்-மூலதனத்துக்கும் உள்ள விகித உறவு இரு விவரங்களைத் தெரிவிக்கிறது. 1) முன்னீடு செய்ய வேண்டிய மூலதனம், குறிப்பிட்ட வேலைக் காலத்தில் செய்யப்படும் மாறும்-மூலதனத்தோடு கொண்டுள்ள விகிதத்தைத் தெரிவிக்கிறது. புரள்வுகளின் எண்ணிக்கை (A நேர்வில் இருப்பது போல்) 10 என்றால், புரள்வுக் காலம் 5 வாரம் ஆகும் (ஆண்டுக்கு 50 வாரம் எனக் கொள்கிறோம்). மாறும்-மூலதனம் இந்த 5 வாரத்துக்கு முன்னீடு செய்யப்பட்டாக வேண்டும். 5 வாரத்துக்கு முன்னீடு செய்யப்படும் மூலதனம் ஒரு வாரத்துக்குச் செயல்படும் மாறும்-மூலதனத்தைப் போல் 5 மடங்கு பெரியதாய் இருந்தாக வேண்டும். அதாவது, முன்னீடு செய்யப்படும் மூலதனத்தில் ஐந்திலொரு பங்கு மட்டுமே (இந்த உதாரணத்தில் £500) ஒரு வார காலத்துக்குச் செயல்பட முடியும். மறு புறம் B மூலதனத்தைப் பொறுத்த வரை புரள்வுகளின் எண்ணிக்கை $\frac{1}{1}$ ஆகும்; புரள்வுக் காலம் ஓராண்டு, அதாவது 50 வாரம் ஆகும். எனவே முன்னீடு செய்யப்படும்

மூலதனத்தோடு வாரம் தோறும் செயல்படுகிற மூலதனம் கொண்டுள்ள விகிதம் 50:1 ஆகும். Bக்குள்ள நிலைமைகள் Aக்குள்ள அதே நிலைமைகள்தான் என்றால், ஒவ்வொரு வாரமும் B ஆனது £100க்கு பதில் £1,000 முதலீடு செய்ய வேண்டியிருக்கும். 2) ஒரே அளவு மாறும்-மூலதனத்தையும், எனவே (உபரி-மதிப்பு வீதம் குறிப்பிட்டதாயிருக்க) ஒரே அளவு உழைப்பையும் (ஊதிய உழைப்பையும் ஊதியமிலா உழைப்பையும்) இயங்க வைத்து, ஓராண்டு காலத்தில் ஒரே அளவு உபரி-மதிப்பை உற்பத்தி செய்வதற்கு B ஆனது Aஐப் போல் பத்து மடங்கு அதிக மூலதனத்தை (£5,000) ஈடுபடுத்தியுள்ளது என்றாகிறது. மெய்யான உபரி-மதிப்பு வீதமானது குறிப்பிட்ட காலத்துக்குச் செயல்படும் மாறும்-மூலதனம் அதே காலத்தில் உற்பத்தி செய்யும் உபரி-மதிப்போடு கொண்டுள்ள விகிதத்தையே தெரிவிக்கிறது; அந்தக் காலத்தில் செயல்படுகிற மாறும்-மூலதனம் இயங்கச் செய்யும் ஊதியமிலா உழைப்பின் அளவையே தெரிவிக்கிறது. அந்தக் காலத்துக்கு முன்னீடு செய்யப்பட்டிருப்பினும் அப்போது செயல்படாதிருக்கும் மாறும்-மூலதனப் பகுதிக்கும் இந்த உபரி-மதிப்பு வீதத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இவ்வாறே, குறிப்பிட்ட காலத்துக்கு முன்னீடு செய்யப்படும் மூலதனப் பகுதி அதே காலத்தில் செயல்படும் மூலதனப் பகுதியோடு கொண்டுள்ள விகிதத்துக்கும் (புரள்வுக் காலத்தைப் பொறுத்து வெவ்வேறு மூலதனங்களுக்கும் வெவ்வேறாக மாறுவதும் வேறுபடுத்தப்படுவதுமான விகிதம் இது) இந்த உபரி-மதிப்பு வீதத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

மேலே கூறப்பட்டுள்ளதிலிருந்து தெரிய வருவது இதுதான்: வருடாந்தர உபரி-மதிப்பு வீதமும், உழைப்பின் மீதான சுரண்டலின் கடுமையைத் தெரிவிக்கும் மெய்யான உபரி-மதிப்பு வீதமும் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் ஒன்றாகின்றன. அதாவது, முன்னீடு செய்யப்படும் மூலதனம் ஆண்டுக்கொரு முறை மட்டும் புரளும் போது, எனவே முன்னீடு செய்யப்படும் மூலதனம் ஓராண்டில் புரளும் மூலதனத்துக்கு சமமாயிருக்கும் போது, ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் அளவு இந்த உற்பத்திக்காக ஓராண்டு காலம் செயல்படும் மூலதனத்தோடு கொண்டுள்ள விகிதமும், ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் அளவு அந்த ஓராண்டுக்கு முன்னீடு செய்யப்படும் மூலதனத்தோடு கொண்டுள்ள விகிதமும் ஒன்றாகிற போது, வருடாந்தர உபரி-மதிப்பு வீதமும் மெய்யான உபரி-மதிப்பு வீதமும் ஒன்றாகின்றன.

(A) வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் =

$$\frac{\text{ஓராண்டில் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் அளவு}}{\text{முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனம்}}$$

ஆனால் ஓராண்டில் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின்

அளவானது, மெய்யான உபரி-மதிப்பு வீதத்தை அதன் உற்பத்திக் காகச் செயல்பட்ட மாறும்-மூலதனத்தால் பெருக்கி வருவதற்குச் சமம். உபரி-மதிப்பின் வருடாந்தர அளவை உற்பத்தி செய்வதற் காகச் செயல்படுகிற மூலதனமானது, முன்னீடு செய்யப்படும் மூலதனத்தை அதன் புரள்வுகளின் எண்ணிக்கையால் பெருக்கி வருவதற்குச் சமம். இந்தப் புரள்வுகளின் எண்ணிக்கையை n என்போம். ஆகவே சூத்திரம் (A) பின்வருமாறு மாறி விடுகிறது:

(B) வருடாந்தர உபரி-மதிப்பு வீதம்=

$$\frac{\text{மெய்யான உபரி-மதிப்பு வீதம்} \times \text{முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனம்} \times n}{\text{முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனம்}}$$

எடுத்துக்காட்டாக, B மூலதனத்துக்கு வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் $= \frac{100 \times 5,000 \times 1}{5,000} = 100\%$. $n = 1$ ஆக இருக்கும் போதுதான், அதாவது முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனம் ஆண்டுக்கொரு முறை மட்டும் புரளும் போதுதான், எனவே அது ஓராண்டு செயல்படுகிற அல்லது ஓராண்டில் புரள்கிற மூலதனத் துக்குச் சமமாய் இருக்கும் போதுதான் வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் மெய்யான உபரி-மதிப்பு வீதத்துக்குச் சமமாகிறது.

வருடாந்தர உபரி-மதிப்பு வீதத்தை S' என்றும், மெய்யான உபரி-மதிப்பு வீதத்தை s' என்றும், முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தை v என்றும், புரள்வுகளின் எண்ணிக்கையை n என்றும் குறிப்போம். அப்படியானால் $S' = \frac{s'vn}{v} = s'n$. ஆகவே $n = 1$ ஆகும் போது $S' = s' \times 1 = s'$. n ஆனது ஒன்றுக்குச் சமமா கும் போதுதான், S' ஆனது s'க்குச் சமமாகிறது.

மேலும் பெறப்படுவது என்னவென்றால்: வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் எப்போதுமே s'nக்குச் சமம், அதாவது ஒரு புரள்வுக் காலத்தில் நுகரப்படும் மாறும்-மூலதனம் அந்தப் புரள்வுக் காலத்தில் உற்பத்தி செய்யும் உபரி-மதிப்பின் மெய்யான வீதத்தை ஓராண்டு காலத்தில் இந்த மாறும்-மூலதனம் நடத்தும் புரள்வுகளின் எண்ணிக் கையால் பெருக்கி வருவதற்குச் சமம்; அதாவது ஓராண்டின் பின்ன மாகக் கணக்கிடப்படும் புரள்வுக் காலத்தைத் தலைகீழாகப் புரட்டிப் பெருக்கி வருவதற்குச் சமம். (மாறும்-மூலதனம் ஆண்டுக்குப் பத்து முறை புரளுமானால், அதன் புரள்வுக் காலம் ஓராண்டில் $\frac{1}{10}$ பங்காகும்; இந்தப் பின்னத்தைத் தலைகீழாகப் புரட்டினால் கிடைப்பது $\frac{10}{1} = 10$ ஆகும்.)

மேலும், $n = 1$ ஆகும் போது, $S' = s'$ ஆகிறது. n ஆனது ஒன்றுக்கதிகமாய் இருக்கும் போது, அதாவது முன்னீடு செய்யப் படும் மூலதனம் ஓராண்டு காலத்தில் ஒரு முறைக்கு மேல் புரளும் போது, அதாவது புரளும் மூலதனம் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தைக் காட்டிலும் அதிகமாய் இருக்கும் போது, S' ஆனது s'ஐக் காட்டிலும் பெரியதாய் இருக்கும்.

இறுதியாக, n ஆனது ஒன்றுக்கும் குறைவாய் இருக்கும் போது, அதாவது புரள்வுக் காலம் ஓராண்டுக்கு மேற்பட்டதாய் இருக்கும் போது, அதாவது ஓராண்டு காலத்தில் புரளும் மூலதனம் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் துண்டுப் பகுதியாக இருக்கும் போது, S′ ஆனது s′ ஐக் காட்டிலும் சிறியதாய் இருக்கும்.

கடைசியாகக் குறிப்பிட்ட நேர்வை சற்றே ஆராய்வோம்.

புரள்வுக் காலம் 55 வாரமாக நீட்டப்படுவது தவிர, நமது முந்தைய எடுத்துக்காட்டின் எல்லா அனுமானங்களையும் அப்படியே வைத்துக் கொள்வோம். உழைப்பு நிகழ்முறைக்கு ஒவ்வொரு வாரமும் £100 மாறும்-மூலதனம் தேவைப்படுகிறது; எனவே, புரள்வுக் காலம் முழுமைக்கும் £5,500 தேவைப்படும். இந்த மூலதனம் ஒவ்வொரு வாரமும் 100s உற்பத்தி செய்கிறது; ஆகவே s′ முன்போலவே 100%. புரள்வுகளின் எண்ணிக்கையான n இங்கே $\frac{50}{55} = \frac{10}{11}$ ஆக இருக்கும். ஏனென்றால் புரள்வுக் காலம் $1 + \frac{1}{10}$ ஆண்டு; அதாவது $\frac{11}{10}$ ஆண்டு (ஆண்டுக்கு 50 வாரம் எனக் கொள்கிறோம்).

$$S' = \frac{100\ \% \times 5{,}500 \times \frac{10}{11}}{5{,}500} = 100 \times \frac{10}{11} = \frac{1{,}000}{11} = 90\frac{10}{11}\ \%.$$

அதாவது 100%ஐக் காட்டிலும் சிறியதாகும். உண்மையில் வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் 100% ஆக இருந்தால், ஓராண்டு காலத்தில் 5,500v ஆனது 5,500sஐ உற்பத்தி செய்யும்; ஆனால் இதற்கு $\frac{11}{10}$ ஆண்டு தேவைப்படுகிறது. 5,500v ஓராண்டு காலத்தில் 5,000sஐ மட்டுமே உற்பத்தி செய்கிறது; ஆகவே, வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் $= \frac{5{,}000s}{5{,}500v}$, அதாவது $\frac{10}{11}$, அதாவது $90\frac{10}{11}$ %.

ஆகவே, வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் என்பது, அதாவது ஓராண்டு காலத்தில் உற்பத்தியாகிற உபரி-மதிப்புக்கும் பொதுவாக முன்னீடு செய்யப்படுகிற மாறும்-மூலதனத்துக்கும் (ஓராண்டு காலத்தில் புரளுகிற மாறும்-மூலதனம் வேறு, இது வேறு) இடையிலான ஒப்பீடு வெறும் அகவய ஒப்பீடு அன்று. உள்ளபடியே நடைபெறும் மூலதன அசைவியக்கத்தால் இது தோற்றுவிக்கப்படுகிறது. A மூலதனத்தின் உடைமையாளரைப் பொறுத்தவரை, அவரது மாறும்-மூலதன முன்னீடாகிய £500 ஆண்டு முடிவில் அவரிடம் மீண்டு விடுகிறது; கூடுதலாக £5,000 உபரி-மதிப்பும் அவருக்குக் கிடைத்துள்ளது. அவரது மூலதன முன்னீட்டின் பருமனைத் தெரிவிப்பது காலவட்ட முறையில் அவரிடம் மீள்கிற மூலதன அளவுதானே தவிர, ஓராண்டு காலத்தில் அவர் ஈடுபடுத்தும் மூலதன அளவு அல்ல. ஆண்டின் முடிவில் மூலதனத்தின் ஒரு பகுதி திறனுடைச் சரக்கிருப்பாகவும், ஒரு பகுதி பண-மூலதனம் அல்லது சரக்கு-மூலதனமாகவும் இருக்கிறதா என்பதும், அது இந்த வெவ்வேறு பகுதிகளாகப் பிரிந்துள்ள விகிதம் என்ன என்பதும்

நமது இப்போதைய பரிசீலனைக்கு முக்கியமானதல்ல. B மூல தனத்தின் உடைமையாளரைப் பொறுத்த வரை, அவரது மூலதன முன்னீடாகிய £5,000 அவரிடம் மீண்டு விடுகிறது; £5,000 உபரி-மதிப்பும் கிடைக்கிறது. C மூலதனத்தின் (கடைசியாகப் பார்த்த £5,500 மூலதனத்தின்) உடைமையாளருக்கு ஓராண்டு காலத்தில் £5,000 உபரி-மதிப்பு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது (முதலீடு £5,000; உபரி-மதிப்பு வீதம் 100%). ஆனால் அவர் முன்னீடு செய்த மூலதனம் இன்னும் அவரிடம் மீளவில்லை; உற்பத்தி செய்யப்பட்ட அவரது உபரி-மதிப்பும் வந்து சேரவில்லை.

S' = s'n என்பதன் பொருள் என்னவென்றால்: ஒரு புரள்வுக் காலத்தில் ஈடுபடுத்தப்படும் மாறும்-மூலதனத்துக்கான உபரி-மதிப்பு வீத்த்தை, அதாவது

$$\frac{\text{ஒரு புரள்வுக் காலத்தில் உற்பத்தியாகிற S இன் அளவு}}{\text{ஒரு புரள்வுக் காலத்தில் ஈடுபடுத்தப்படும் V}}$$

என்பதை முன்னீடு செய்யப்பட்ட மாறும்-மூலதனத்தின் புரள்வுக் காலங்கள் அல்லது மறுவுற்பத்திக் காலங்களின் எண்ணிக்கையால், அதாவது அது தன் சுற்றினைப் புதுப்பித்துக் கொள்ளும் காலவட்டங் களின் எண்ணிக்கையால் பெருக்க வேண்டும்.

மூலதன-மதிப்பானது, அதனுடைய சுற்றின் பல்வேறு கட்டங் களையும் கடந்து சென்ற பின் அது தொடங்கிய முனைக்கே திரும்பி வருகிறது, சும்மா வரவில்லை, உபரி-மதிப்பால் செழிப்புற்றுத் திரும்பி வருகிறது என்பதையும், ஆகவே பொதுவாக மூலதன-மதிப்பு முன்னீடு செய்யப்படுவதாகுமே தவிர செலவிடப்படு வதாகாது என்பதையும் முன்பே நாம் தெரிந்து கொண்டோம் (முதல் பாகம், பகுதி II: பணம் மூலதனமாக மாற்றமடைதல்). மேலும் (முதல் பாகம், அத்தியாயம் XXIII: சாமானிய மறுவுற் பத்தி). மூலதன-மதிப்பானது இவ்விதம் முன்னீடு செய்யப்பட்ட ஒன்றாகிறது. அது புறப்படுகிற தருணத்துக்கும் திரும்பி வந்து சேரும் தருணத்துக்கும் இடையில் கழிகிற காலம் அது முன்னீடு செய்யப்படும் காலமாகும். மூலதன-மதிப்பு நிகழ்த்துகிற சுழல் இயக் கமானது, அது முன்னீடு செய்யப்படுவதற்கும் திரும்பி வந்து சேருவதற்கும் இடைப்பட்ட காலத்தால் அளவிடப்படுகிறது. மூலதன-மதிப்பின் ஒரு முழுச் சுழல் இயக்கம்தான் அதன் புரள்வு எனப்படுவது. இந்தப் புரள்வுக்கு ஆகிற காலமே ஒரு புரள்வுக் காலம் எனப்படுவது. இந்தப் புரள்வுக் காலம் முடிவுற்றுச் சுற்று பூர்த்தியானதும் அதே மூலதன-மதிப்பு திரும்பவும் அதே சுற்றினைத் தொடங்க முடியும், திரும்பவும் தற்பெருக்கம் அடைய முடியும், அதாவது உபரி-மதிப்பைப் படைக்க முடியும். A மூலதனத்தின் நேர்வில் செய்வது போல் மாறும்-மூலதனம் ஓராண்டில் பத்து தரம் புரளுமானால், அதே மூலதன முன்னீடானது ஒரு புரள்வுக் காலத் துக்கு உரிய அளவைப் போல் பத்து மடங்கான உபரி-மதிப்பை ஓராண்டு காலத்தில் பெற்றெடுக்கிறது.

முதலாளித்துவ சமுதாயத்தின் நோக்கு நிலையிலிருந்து இந்த முன்னீட்டின் தன்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆண்டுதோறும் பத்து தடவை புரளும் A மூலதனம் ஓராண்டு காலத்தில் பத்து தரம் முன்னீடு செய்யப்படுகிறது. ஒவ்வொரு புதிய புரள்வுக் காலத்துக்கும் அது புதிதாக முன்னீடு செய்யப்படுகிறது. ஆனால் அதே போது Aஇன் உடைமையாளர் ஓராண்டு காலத்தில் அதே £500 மூலதன-மதிப்பை மட்டுமே முன்னீடு செய்கிறார்; நாம் பரிசீலிக்கும் உற்பத்தி நிகழ்முறைக்காக £500 மூலதன-மதிப்பையே தவிர அதற்கு மேல் எதையும் முன்னீடு செய்யவில்லை; மெய்ந்நடப்பில் இந்த நிகழ்முறைக்காக இந்த £500க்கு மேல் அதிக மானதைக் கையை விட்டு அவர் தரவில்லை. இந்த £500 ஒரு சுற்றை முடித்ததும், அதைத் திரும்பவும் அதே சுற்றைத் துவக்கச் செய்கிறார். மூலதனமானது அடுத்தடுத்து நடைபெறும் உற்பத்தி நிகழ்முறைகளில் மூலதனமாகவே எப்போதும் செயல்படுகிறது. இப்படிச் செயல்படுவதன் மூலம்தான் அது மூலதனத்துக்குரிய தனது தன்மையைப் பாதுகாத்துக் கொள்கிறது; இதுதான் அதன் இயற்கை. மேலும், இந்த £500 மூலதனம் ஐந்து வாரத்துக்கும் அதிகமாய் ஒரு போதும் முன்னீடு செய்யப்படுவதில்லை. புரள்வானது ஐந்து வாரத்துக்கு மேல் நீடிக்குமானால், இந்த மூலதனம் போதாமற் போய் விடுகிறது. புரள்வு இதனிலும் குறுகி விடுமானால், இந்த மூலதனத்தின் ஒரு பகுதி தேவையற்றதாகிறது. ஒவ்வொன்றும் £500 மதிப்புள்ள பத்து மூலதனங்கள் முன்னீடு செய்யப்படவில்லை; ஒரே ஒரு £500 மூலதனம்தான் அடுத்தடுத்து பத்து தரம் முன்னீடு செய்யப்படுகிறது. எனவேதான் வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் £500 மூலதனத்தின் பத்து முன்னீடுகளுக்கு, அதாவது £5,000க்குக் கணக்கிடப்படுவதில்லை; £500 மூலதனத்தின் ஒரு முன்னீட்டுக்கே கணக்கிடப்படுகிறது. ஒரு ஷில்லிங் காசு பத்து தரம் சுற்றியோடி 10 ஷில்லிங்கின் வேலையைச் செய்தாலும் சுற்றோட்டத்தில் எப்படி அது ஒரு ஷில்லிங்குக்கு மேல் எதையும் குறிப்பதாகாதோ, அதே போலத்தான் இந்த £500 மூலதனத்தின் விவகாரமும். இந்த ஒரு ஷில்லிங் ஒவ்வொரு முறையும் கைமாறியதும் யார் கைக்கு வருகிறதோ அவரிடமும் அது முன்போல் அதே ஒரு ஷில்லிங் மதிப்பாகவே இருந்து வருகிறது.

இதே போல், A மூலதனமானது அடுத்தடுத்து திரும்பி வரும் ஒவ்வொரு தரமும், மற்றும் ஆண்டு முடிவில் அது திரும்பி வரும் போதும் தெளிவாகவே தெரிவது என்னவென்றால், அதன் உடைமையாளர் £500 மதிப்புள்ள ஒரே மூலதனத்தைத்தான் செயல்படவைத்தார் என்பதுதான். எனவே ஒவ்வொரு முறையும் £500 மட்டுமே அவரிடம் திரும்பி வருகிறது. ஆகவே, முன்னீடு செய்யப்படும் அவரது மூலதனம் ஒருபோதும் £500க்கு அதிகமாவதில்லை. முன்னீடு செய்யப்படும் மூலதனமான £500 வருடாந்தர

உபரி-மதிப்பு வீதத்தைத் தெரிவிக்கும் பின்னத்தின் கீழிலக்கமாகிறது. இதற்குரிய சூத்திரம் வருமாறு: $S' = \frac{s'vn}{v} = s'n$. மெய்யான உபரி-மதிப்பு வீதமாகிய $s' = \frac{s}{v}$, அதாவது உபரி-மதிப்பின் அளவை அதனை உற்பத்தி செய்த மாறும்-மூலதனத்தால் வகுத்து வருகிற ஈவுக்குச் சமமானது. ஆகவே $s'n$ என்பதில் $s'$ஐ $\frac{s}{v}$ என்பதால் மாற்றீடு செய்யலாம். இதிலிருந்து பெறப்படும் சூத்திரம்: $S' = \frac{sn}{v}$.

ஆனால், £500 மூலதனமானது பத்து தரம் புரள்வதாலும், இவ்விதம் திரும்பத் திரும்ப பத்து தரம் முன்னீடாவதாலும், அதைப் போல் 10 மடங்கு பெரிதான £5,000 மூலதனம் செய்யும் வேலையைச் செய்கிறது— ஆண்டுக்குப் பத்து தடவை சுற்றியோடுகிற 500 ஷில்லிங், எப்படி ஒரே ஒரு முறை சுற்றியோடுகிற 5,000 ஷில்லிங் செய்யும் வேலையைச் செய்கிறதோ, அதே போல.

## II. தனிப்பட்ட மாறும்-மூலதனத்தின் புரள்வு

"ஒரு சமுதாயத்தில் பொருளுற்பத்தி நிகழ்முறையின் வடிவம் என்னவாயினும் சரி, அந்நிகழ்முறை தொடர்ச்சியானதாகவும், குறிப்பிட்ட அதே கட்டங்களைக் காலவட்ட முறையில் தொடர்ந்து கடந்து செல்வதாகவும் இருத்தல் வேண்டும்....எனவே, தொடர்புள்ள முழுமையாகவும், ஓயாமல் புதுப்பிக்கப்பட்டுச் செல்வதாகவும் நோக்கப்படும் போது, சமுதாயப் பொருளுற்பத்தி நிகழ்முறை ஒவ்வொன்றும் அதே போது மறுவுற்பத்தி நிகழ்முறையும் ஆகும்.... முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் காலவட்ட உயர்வு, அல்லது நிகழ்முறையிலுள்ள மூலதனத்தின் காலவட்டப் பலன் என்ற முறையில், உபரி-மதிப்பு மூலதனத்திலிருந்து பிறக்கிற வருவாயின் வடிவத்தைப் பெறுகிறது." (முதல் பாகம், அத்தியாயம் XXIII, பக்கம் 760, 761.)

A மூலதனத்தைப் பொறுத்த வரை 5-வாரப் புரள்வுக் காலங்களின் எண்ணிக்கை 10 ஆகும். முதல் புரள்வுக் காலத்தில் £500 மாறும்-மூலதனம் முன்னீடு செய்யப்படுகிறது, அதாவது வாரந்தோறும் £100 உழைப்புச் சக்தியாக மாற்றப்படுகிறது. எனவே, முதல் புரள்வுக் காலத்தின் முடிவில் £500 உழைப்புச் சக்திக்காக செலவாகியிருக்கிறது. ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட்ட மொத்த மூலதனத்தின் பகுதியாய் இருந்த இந்த £500, இப்போது மூலதனமாக இருக்கவில்லை, கூலியாகக் கொடுக்கப்பட்டு விடுகிறது. இதைப் பெற்றுக் கொள்ளும் தொழிலாளர்கள் வாழ்வுச் சாதனங்களை வாங்குவதற்காக இதைச் செலவிடுகிறார்கள். £500 மதிப்புள்ள வாழ்வுச் சாதனங்களை அவர்கள் நுகர்கிறார்கள். ஆகவே அந்த அளவு மதிப்புள்ள சரக்குத் திரள் ஒழிந்து போகிறது (தொழிலாளி

செலவிடாமல் பணமாகவோ இன்ன பிறவாகவோ சேர்த்து வைக்க லாம் என்றாலும், அவை மூலதனமல்ல). இந்தச் சரக்குத் திரள் தொழிலாளியினது உழைப்புச் சக்தியின் — முதலாளிக்கு இன்றி யமையாதது ஆகிய உழைப்புச் சக்தியின் — ஊற்றுக் கண் கேடுறாது பாதுகாக்கிறது என்றாலும், தொழிலாளியைப் பொறுத்த வரை இந்தச் சரக்குத் திரள் திறனிலா முறையில் நுகரப்பட்டு விடுகிறது.

ஆனால் அதே போல் முதலாளிக்கு இந்த £500 அதே மதிப் புள்ள (அல்லது அதே விலையுள்ள) உழைப்புச் சக்தியாக உருமாற்ற மடைகிறது. உழைப்பு நிகழ்முறையில் அவர் இந்த உழைப்புச் சக்தியை உற்பத்தித் திறனுள்ள முறையில் நுகர்கிறார். 5 வார முடிவில் £1,000 மதிப்புள்ள உற்பத்திப் பண்டம் உருவாகிறது. இதில் பாதியாகிய £500 ஆனது உழைப்புச் சக்திக்கு விலை தொடுப்பதற்காகச் செலவிடப்பட்ட மாறும்-மூலதனத்தின் மறுவுற் பத்தி மதிப்பாகும். மறு பாதியாகிய £500 புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட உபரி-மதிப்பாகும். ஆனால், மூலதனத்தின் ஒரு பகுதி 5 வாரத்துக்கான உழைப்புச் சக்திக்குப் பரிவர்த்தனை செய்யப் பட்டதால் மாறும்-மூலதனமாக மாறியது அல்லவா, அந்த 5 வாரத் துக்கான உழைப்புச் சக்தியும் — உற்பத்தித் திறனுள்ள முறையில்தான் என்றாலும் — செலவிடப்படுகிறது, நுகரப்படுகிறது. நேற்று செயல் பட்டுக் கொண்டிருந்த உழைப்பு வேறு, இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கும் உழைப்பு வேறு. இந்த உழைப்புச் சக்தியின் மதிப்பு, அதனால் படைக்கப்பட்ட உபரி-மதிப்போடு கூட, இப் போது உழைப்புச் சக்தியிலிருந்து வேறான ஒன்றின், அதாவது உற்பத்திப் பண்டத்தின் மதிப்பாக இருக்கிறது. ஆனால் உற்பத்திப் பண்டம் பணமாக மாறுவதன் மூலம், அதன் மதிப்பில் ஒரு பகுதி, அதாவது முன்னீடு செய்யப்பட்ட மாறும்-மூலதனத்தின் மதிப்புக்குச் சமமான பகுதி மீண்டும் உழைப்புச் சக்திக்குப் பரிவர்த்தனையாக முடியும்; இவ்வாறு மீண்டும் மாறும்-மூலதனமாகச் செயல்பட முடியும். மறுவுற்பத்தியான மூலதன-மதிப்பு மட்டுமல்லாமல், மீண்டும் பண வடிவம் பெற்ற மூலதன-மதிப்பும் கூட அதே தொழி லாளர்களுக்குத்தான், அதாவது உழைப்புச் சக்தியை சுமந்து வரும் அதே ஆட்களுக்குத்தான் வேலை கொடுக்கிறது என்பது முக்கிய மானதல்ல. இரண்டாவது புரள்வுக் காலத்துக்கு முதலாளி வேறு தொழிலாளர்களை அமர்த்திக் கொள்வது சாத்தியமே.

ஆகவே, ஒவ்வொன்றும் 5 வாரம் கொண்ட பத்து புரள்வுக் காலங்களில் கூலிக்காக அடுத்தடுத்து செலவிடப்படும் மூலதனம் உண்மையில் £500 அல்ல, £5,000 ஆகும். திரும்பவும் தொழி லாளர்கள் வாழ்வுச் சாதனங்கள் வாங்குவதற்காக இந்தக் கூலியைச் செலவிடுவார்கள். இவ்விதம் முன்னீடு செய்யப்படும் £5,000 மூலதனம் நுகரப்பட்டு விடுகிறது. அது இல்லாதொழிகிறது. மறு புறம், £5,000 பெறுமானமுள்ள — £500 அல்ல — உழைப்புச் சக்தி

உற்பத்தி நிகழ்முறையில், அடுத்தடுத்து ஈடுபட்டு, தனது சொந்த மதிப்பான £5,000ஐ மறுவுற்பத்தி செய்வதோடு கூடுதலாக £5,000 உபரி-மதிப்பையும் உற்பத்தி செய்கிறது. இரண்டாவது புரள்வுக் காலத்தில் முன்னீடு செய்யப்படும் £500 மாறும்-மூலதனமும் முதலாவது புரள்வுக் காலத்தில் முன்னீடு செய்யப்பட்ட £500 மாறும்-மூலதனமும் ஒன்றல்ல. பின்னது நுகரப்பட்டு விட்டது, கூலியின் உருவில் செலவாகி விட்டது. ஆனால் முதல் புரள்வுக் காலத்தில் சரக்கு வடிவில் உற்பத்தி செய்யப்பட்டு, பண மாக உருமாற்றம் பெற்ற புதிய மாறும்-மூலதனமான £500 அதனை மாற்றீடு செய்கிறது. இந்தப் புதிய £500 பண-மூலதனமானது முதல் புரள்வுக் காலத்தில் புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட சரக்குத் தொகுதியின் பண வடிவமாகும். முன்பிருந்த அதே பணத் தொகை யான £500 திரும்பவும் முதலாளியின் கையில் இருக்கிறது, அதா வது உபரி-மதிப்பை நீக்கி விட்டுப் பார்த்தால் அவர் ஆரம்பத்தில் முன்னீடு செய்த அதே அளவு பண-மூலதனம்தான் இருக்கிறது என்ற இந்த உண்மை அவர் புதிதாக உற்பத்தியான மூலதனத்தைக் கொண்டு செயல்படுகிறார் என்பதை மறைத்து விடுகிறது. (சரக்கு-மூலதனத்தினது மதிப்பின் ஏனைய அடக்கக் கூறுகள் மாறா-மூல தனப் பகுதிகளை மாற்றீடு செய்கின்றன; இந்த மாறா-மூலதனப் பகுதிகளின் மதிப்பு புதிதாக உற்பத்தியாவதில்லை; இந்த மதிப்புக் குரிய வடிவம் மட்டுமே மாற்றப்படுகிறது.)

மூன்றாவது புரள்வுக் காலத்தை எடுத்துக் கொள்வோம். இங்கே, மூன்றாவது முறையாக முன்னீடு செய்யப்படும் £500 மூலதனம் புதிதாக உற்பத்தியான மூலதனமே தவிர பழைய மூல தனமன்று என்பது தெளிவு. ஏனெனில் இந்த மூலதனம் இரண் டாவது புரள்வுக் காலத்தில்—முதலாவதில் அல்ல—உற்பத்தியான சரக்குத் தொகுதியின் பண வடிவமாகும், அதாவது இந்த சரக்குத் தொகுதியில் எந்தப் பகுதியின் மதிப்பு மாறும்-மூலதனமாக முன்னீடு செய்யப்பட்டதன் மதிப்புக்குச் சமமோ, அந்தப் பகுதியின் பண வடிவமாகும். முதலாவது புரள்வுக் காலத்தில் உற்பத்தியான சரக்குத் தொகுதி விற்கப்படுகிறது. அதன் மதிப்பில் ஒரு பகுதி—முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மதிப்பில் மாறும்-மூலதன மாய் அமையும் பகுதிக்குச் சமமான பகுதி—இரண்டாவது புரள்வுக் காலத்துக்கான புதிய உழைப்புச் சக்தியாக மாற்றப்பட்டது: அது ஒரு புதிய சரக்குத் தொகுதியை உற்பத்தி செய்தது. இந்தச் சரக்குத் தொகுதியும் விற்கப்பட்டது. இதன் மதிப்பில் ஒரு பகுதியே மூன்றாவது புரள்வுக் காலத்தில் முன்னீடு செய்யப்படும் £500 மூலதனமாகிறது.

பத்து புரள்வுக் காலங்களிலும் இவ்வாறே தொடர்ந்து நடை பெறுகிறது. இந்தப் புரள்வுக் காலங்களில் புதிதாக உற்பத்தியான சரக்குத் தொகுதிகள் (இவற்றின் மதிப்பும், மாறும்-மூலதனத்தை

மாற்றீடு செய்வதாய் உள்ள வரை, புதிதாக உற்பத்தியாவதே; மாறா-மூலதனத்தின் சுழலும் பகுதியைப் போல் திரும்பி வந்து தோற்ற மளிப்பதல்ல) 5 வாரத்துக்கு ஒரு முறை சந்தையை வந்தடைகிறது. உற்பத்தி நிகழ்முறையில் இது புதிது புதிதாய் உழைப்புச் சக்தியைச் சேர்க்கிறது.

ஆகவே, முன்னீடு செய்யப்படும் £500 மாறும்-மூலதனம் பத்து தரம் புரள்வதன் விளைவு, இந்த £500 மூலதனத்தைப் பத்து தரம் உற்பத்தித் திறனுள்ள முறையில் நுகர முடியும் என்பதோ, 5 வாரக் காலம் நீடிக்கிற மாறும்-மூலதனத்தை 50 வாரத்துக்கு ஈடுபடுத்த முடியும் என்பதோ அல்ல. சரியாகச் சொன்னால் விளைவு இது தான்: £500ஐப் போல் பத்து மடங்கான மாறும்-மூலதனம் 50 வாரங்களுக்குச் செயல்படுகிறது; எப்போதுமே £500 மூலதனம் 5 வாரத்துக்கு மட்டும் நீடிக்கிறது; 5 வார முடிவில், புதிதாக உற்பத்தியான £500 மூலதனம் அதனை மாற்றீடு செய்தாக வேண் டும். A, B ஆகிய இரு மூலதனங்களுக்குமே இது பொருந்துகிறது. ஆனால் இதன் பின் வேறுபாடு ஆரம்பமாகிறது.

A, B இரு மூலதனங்களுமே முதல் புரள்வுக் காலமான 5 வார முடிவில், £500 மாறும்-மூலதனத்தை முன்னீடு செய்து செல விட்டிருக்கின்றன. இரண்டுமே இம்மதிப்பை உழைப்புச் சக்தியாக மாற்றியிருக்கின்றன; இந்த உழைப்புச் சக்தி புதிதாகப் படைத்த உற்பத்திப் பொருளின் மதிப்பில், £500 மாறும்-மூலதன முன்னீட் டின் மதிப்புக்குச் சமமான பகுதியால் மாற்றீடு செய்திருக்கின்றன. இந்த உழைப்புச் சக்தியானது A, B இரண்டுக்கும் செலவான £500 மாறும்-மூலதனத்தின் மதிப்பை அதே அளவுள்ள புதிய மதிப்பால் மாற்றீடு செய்திருப்பதோடு, (நமது அனுமானத்தின் படி) அதே பருமனுடைய உபரி-மதிப்பையும் கூடுதலாய்த் தந்திருக் கிறது.

ஆனால் Bஐப் பொறுத்த வரை, முன்னீடு செய்யப்பட்ட மாறும்-மூலதனத்தை மாற்றீடு செய்வதும் அதோடு உபரி-மதிப்பைச் சேர்ப்பதுமான உற்பத்திப் பண்ட மதிப்பின் வடிவமானது அது திறனுடை-மூலதனமாக, அதாவது மாறும்-மூலதனமாக மீண்டும் செயல்படுவதற்கு ஏற்றதாய் இல்லை. Aஐப் பொறுத்த வரை இவ் வடிவம் அப்படிச் செயல்படுவதற்கு ஏற்றதாய் இருக்கிறது. ஆனால் Bஐப் பொறுத்த வரை முதல் 5 வார காலத்திலும் அடுத்து வரும் ஒவ்வொரு 5 வார காலத்திலும் செலவிடப்படும் மாறும்-மூலதனம் (புதிதாக உற்பத்தியான மதிப்பாலும் உபரி-மதிப்பாலும் மாற்றீடு செய்யப்பட்டு விட்ட போதிலும்) திறனுடை-மூலதனமாக, அதாவது மாறும்-மூலதனமாக மீண்டும் செயல்படுவதற்கு ஏற்ற வடிவத்தை ஆண்டின் முடிவு வரை பெறுவதில்லை. அதன் **மதிப்பு** புதிய மதிப்பால் மாற்றீடு செய்யப்படுவதும், எனவே புத்தாக்கம் செய்யப் படுவதும் மெய்தான்; என்றாலும், இம்மதிப்பின் **வடிவம்** (இங்கு,

மதிப்பின் அறுதி வடிவுமான அதன் பண வடிவம்) புத்தாக்கம் செய்யப்படுவதில்லை.

இரண்டாவது 5-வார காலத்துக்கும் (இதே போல் ஓராண்டில் அடுத்தடுத்துத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு 5-வார காலத்துக்கும்) மேலும் £500 தயாராயிருக்க வேண்டும்—முதல் 5-வார காலத்துக்கு எப்படியோ அதே போல் இருக்க வேண்டும். எனவே, கடன்-செலாவணி நிலைமைகளை ஒதுக்கி விட்டுப் பார்த்தால், ஆண்டின் தொடக்கத்திலேயே முன்னீடு செய்யப்பட உள்ளுறைப் பண-மூலதனமாக £5,000 தயாராய் இருக்க வேண்டும்—உண்மையில் இந்தத் தொகை சிறுகச் சிறுக ஓராண்டு கால வாக்கில் செலவிடப்பட்டு, உழைப்புச் சக்தியாக மாற்றப்படுகிறது என்றாலும் ஆண்டின் தொடக்கத்திலேயே மேற்சொன்னவாறு தயாராய் இருக்க வேண்டும்.

ஆனால் Aஐப் பொறுத்த வரை, முன்னீடு செய்யப்படும் மூலதனம் திரும்பி வந்து சேர்ந்து, சுற்று நிறைவடைந்து விடுவதால், முதல் 5-வார முடிவில் மாற்றீடாக வருகிற மதிப்பானது புதிய உழைப்புச் சக்தியை 5-வார காலம் இயங்க வைப்பதற்கு உகந்த வடிவில் தயாராய் இருக்கிறது—அதாவது அதன் ஆரம்ப வடிவமான பண வடிவில் தயாராய் இருக்கிறது.

A, B இரண்டிலுமே, இரண்டாவது 5-வார காலத்தில் புதிய உழைப்புச் சக்தி நுகரப்படுகிறது. இந்த உழைப்புச் சக்திக்கு விலை கொடுப்பதற்காக புதிய £500 மூலதனம் செலவாகிறது. முதல் £500ஐக் கொண்டு ஊதியம் பெற்று தொழிலாளர்கள் வாங்கிய வாழ்வுச் சாதனங்கள் தீர்ந்து விட்டன. எப்படியும் அவற்றின் மதிப்பு முதலாளியின் கையை விட்டகன்று மறைந்து விட்டது. இரண்டாவது £500ஐக் கொண்டு புதிய உழைப்புச் சக்தி விலைக்கு வாங்கப்படுகிறது, புதிய வாழ்வுச் சாதனங்கள் சந்தையிலிருந்து திருப்பி எடுக்கப்படுகின்றன. சுருங்கச் சொல்லின், செலவிடப்படுவது புதிய £500 மூலதனமே தவிர பழையதன்று. ஆனால் Aஐப் பொறுத்த வரை இந்தப் புதிய £500 மூலதனம் முன்பு செலவான £500இன் மதிப்புக்கு பதிலியாகப் புதிதாய் உற்பத்தி செய்யப்பட்டதன் பண வடிவமாய் இருக்க, Bஐப் பொறுத்த வரை இந்தப் பதிலி, மாறும்-மூலதனமாகச் செயல்பட முடியாத வடிவத்தில் இருக்கிறதே ஒழிய, மாறும்-மூலதனத்தின் வடிவத்தில் இல்லை. ஆகவே அடுத்து 5-வார காலத்துக்கு உற்பத்தி நிகழ்முறையைத் தொடர வேண்டுமானால், £500 கூடுதல் மூலதனம் தயாராயிருக்க வேண்டும். இங்கு இன்றியமையாததான பண வடிவில் இது முன்னீடு செய்யப்பட வேண்டும். இவ்வாறு 50 வார காலத்தில், A, B இரண்டுமே சம அளவிலான மாறும்-மூலதனத்தைச் செலவிடுகின்றன, சம அளவிலான உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்கி நுகர்கின்றன. ஆனால் B மட்டும் அதன் மொத்த மதிப்பான £5,000க்குச் சமமான மூலதனத்தை முன்னீடு செய்து விலை

கொடுக்கிறது. அதே போது B ஆனது அடுத்தடுத்து ஒவ்வொரு 5-வார காலத்துக்கும் £500ஐ முன்னீடு செய்து, இந்த £500 மூலதனத்துக்கு பதிலியாக ஒவ்வொரு 5-வார காலத்திலும் உற்பத்தியாகும் மதிப்பின் பண வடிவத்தைக் கொண்டு விலை கொடுக்கிறது. B ஆனது எச்சந்தர்ப்பத்திலும் 5 வாரத்துக்குத் தேவைப்படுவதற்குக் கூடுதலான பண-மூலதனத்தை முன்னீடு செய்வதில்லை, அதாவது முதல் 5-வார காலத்துக்கு முன்னீடு செய்கிற £500க்கு அதிகமாய் முன்னீடு செய்வதில்லை. முதல் 5-வார காலத்துக்கு முன்னீடு செய்யப்படும் இந்த £500 ஆண்டு முழுமைக்கும் நீடிக்கிறது. ஆகவே, உழைப்பின் மீதான சுரண்டலின் கடுமையும் மெய்யான உபரி-மதிப்பு வீதமும் Aக்கும் Bக்கும் சமமாயிருக்குமாயின், இவை இரண்டினது வருடாந்தர (உபரி-மதிப்பு) வீதங்கள், ஓராண்டு காலத்தில் ஒரே அளவு உழைப்புச் சக்தியை இயங்கச் செய்வதற்காக முன்னீடு செய்ய வேண்டியிருக்கும் பண வடிவிலான மாறும்-மூலதனங்களின் பருமன்களுக்கு எதிர் விகிதத்தில் இருந்தாக வேண்டும்.

$$A: \frac{5,000s}{500v} = 1,000\%; \qquad B: \frac{5,000s}{5,000v} = 100\%.$$

ஆனால் $500v : 5,000v = 1:10 = 100\% : 1,000\%$.

வருடாந்தர உபரி-மதிப்பு வீதங்கள் வேறுபடுவதற்கு, புரள்வுக் காலங்களிலான வேறுபாடே காரணம்; அதாவது குறிப்பிட்ட காலத்துக்கு ஈடுபடுத்தப்படும் மாறும்-மூலதனத்தின் மதிப்புப் பதிலி திரும்பவும் மூலதனமாக—புதிய மூலதனமாக—செயல்படுவதற்குத் தேவைப்படும் காலங்களிலான வேறுபாடே காரணம். A, B இரண்டுக்குமே மாறும்-மூலதனம் ஈடுபடுத்தப்படும் கால அளவுகள் ஒன்றே என்பதால் இந்த மாறும்-மூலதனத்தின் மதிப்பு மாற்றீடும் ஒன்றே; வந்து சேரும் உபரி-மதிப்பு அளவும் ஒன்றே. ஆனால் Bஐப் பொறுத்த வரை, ஒவ்வொரு 5-வாரமும் £500 மதிப்பு மாற்றீடு செய்யப்படுகிறது, £500 உபரி-மதிப்பு கிடைக்கிறது என்றாலும், இந்த மதிப்புப் பதிலி பண வடிவத்தில் இல்லாததால், இது புதிய மூலதனம் ஆவதில்லை. Aஐப் பொறுத்த வரை பழைய மூலதன-மதிப்பு புதிய மூலதன-மதிப்பால் மாற்றீடு செய்யப்படுவதோடு, அதன் பண வடிவிலேயே திரும்பி வருகிறது; இவ்விதம் மூலதனமாகச் செயல்படக் கூடிய புதிய மூலதனமாக மாற்றீடு செய்யப்படுகிறது.

மதிப்புப் பதிலியானது பணமாக உருமாற்றம் பெற்று, இவ்விதம் மாறும்-மூலதனமாக முன்னீடு செய்யப்படுவதற்கு உகந்த வடிவமுடையதாவது விரைவில் நடைபெறுகிறதா, மெல்ல நடைபெறுகிறதா என்பது உபரி-மதிப்பின் உற்பத்திக்கு முக்கியமானதன்று. உபரி-மதிப்பின் உற்பத்தியானது ஈடுபடுத்தப்படும் மாறும்-மூலதனத்தின்

பருமனையும் உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமையையுமே பொறுத்திருக்கிறது. எனினும் மேற்கூறியதானது குறிப்பிட்ட அளவு உழைப்புச் சக்தியை ஓராண்டு காலத்துக்கு இயங்க வைப்பதற்காக முன்னீடு செய்ய வேண்டிய பண-மூலதனத்தின் பருமனைத் தீர்மானிப்பதாக இருப்பதால், அது வருடாந்தர உபரி-மதிப்பு வீதத்தை நிர்ணயிக்கும் காரணியாகிறது.

### III. சமுதாய நோக்கில் மாறும்-மூலதனத்தின் புரள்வு

இந்தப் பிரச்சினையை சமுதாயத்தின் நோக்கு நிலையிலிருந்து சற்றே பரிசீலித்துப் பார்ப்போம். ஒரு தொழிலாளியின் கூலி வாரம் ஒன்றுக்கு £1 என்றும், வேலை-நாளின் கால அளவு 10 மணி நேரம் என்றும் கொள்வோம். Aஉம் Bஉம் ஓராண்டு காலத் துக்குத் தலைக்கு 100 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளட்டும். (100 தொழிலாளர்களுக்கு வாரம் ஒன்றுக்கு £100; 5 வாரத்துக்கு £500; 50 வாரத்துக்கு £5,000.) ஒவ் வொரு தொழிலாளியும் வாரத்துக்கு 6 நாள், அதாவது 60 மணி நேரம் வேலை செய்கிறார். எனவே, 100 தொழிலாளர்கள் வாரம் ஒன்றுக்கு 6,000 மணி நேரமும், 50 வாரத்தில் மொத்தம் 300,000 மணி நேரமும் வேலை செய்கிறார்கள். Aஉம் Bஉம் இந்த உழைப்புச் சக்தியை எடுத்துக் கொண்டு விடுவதால் சமுதாயம் இதை வேறு எதற்காகவும் செலவிட முடியாது. இந்த அளவுக்கு சமுதாய நோக்கில் A ஆனாலும் B ஆனாலும் ஒன்றுதான், வேறு பாடு இல்லை. மேலும் A, B ஒவ்வொருவரும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் 100 தொழிலாளர்களும் £5,000 ஆண்டுக் கூலி பெறுகிறார்கள். (200 தொழிலாளர்களுக்கும் சேர்த்து £10,000 பெறுகிறார்கள்.) சமுதாயத்திடமிருந்து அந்த அளவுக்கு வாழ்வுச் சாதனங்களை எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே இது வரையிலும், சமுதாய நோக்கில் Aக்கும் Bக்கும் வேறுபாடில்லை. இருவருமே வாரக் கூலி கொடுப்பதால் தொழிலாளர்கள் தமக்குத் தேவையான வாழ்வுச் சாதனங்களை வாரந்தோறும் சமுதாயத்திடமிருந்து எடுத்துக் கொள்கிறார்கள், அவற்றுக்கான பணச் சமதையை வாரந் தோறும் சுற்றோட்டத்தில் விடுகிறார்கள். இப்போது வேறுபாடு ஆரம்பமாகிறது.

**முதலாவது:** A தொழிலாளி சுற்றோட்டத்தில் விடுகிற பணம், B தொழிலாளியின் விவகாரத்தில் இருப்பது போல, அவரது உழைப்புச் சக்தியினது மதிப்பின் பண வடிவமாக (உண்மையில் செய்து முடித்த உழைப்புக்கு ஊதியமளிக்கும் சாதனமாக) மட்டும் இருக்கவில்லை. தொழில் தொடங்கிய பிறகு வரும் இரண்டாவது புரள்வுக் காலத்திலிருந்து கணக்கிடுங்கயில், இந்தப் பணமானது முதலாவது புரள்வுக் காலத்தில் படைக்கப்பட்ட **அவரது சொந்த**

மதிப்பின் (உழைப்புச் சக்தியின் விலை + உபரி-மதிப்பு — இந்தக் கூட்டுத் தொகையின்) பண வடிவமாகவும் இருக்கிறது; இந்த மதிப்பைக் கொண்டுதான் இரண்டாவது புரள்வுக் காலத்தில் அவருக்கு ஊதியமளிக்கப்படுகிறது. B தொழிலாளியின் நிலைமை இதுவன்று. அவரைப் பொறுத்த வரை, இந்தப் பணம் செய்து முடித்த வேலைக்கு ஊதியமளிக்கும் கொடுப்புச் சாதனமாக இருப்பது மெய்தான் என்றாலும், இப்படிச் செய்து முடித்த வேலைக்கு, அந்த வேலையின் மூலம் உற்பத்தியாகி பணமாக உருமாற்றம் பெற்ற மதிப்பைக் கொண்டு விலை தரப்படவில்லை (அதாவது அந்த உழைப்பே உற்பத்தி செய்த மதிப்பின் பண வடிவத்தைக் கொண்டு விலை தரப்படவில்லை). இரண்டாவது ஆண்டு தொடங்கும் வரை இப்படி விலை தர முடியாது. இரண்டாவது ஆண்டு தொடங்கிய பிறகுதான் B தொழிலாளிக்கு அவர் முந்தைய ஆண்டில் உற்பத்தி செய்து பணமாக உருமாற்றம் பெற்ற மதிப்பைக் கொண்டு ஊதிய மளிக்கப்படுகிறது.

மூலதனத்தின் புரள்வுக் காலம் எவ்வளவுக்கு எவ்வளவு குறுகு கிறதோ, ஆகவே ஆண்டு முழுக்க அது மறுவுற்பத்தி செய்யப்படும் கால இடைவெளிகள் எவ்வளவுக்கு எவ்வளவு குறுகுகின்றனவோ, முதலாளி ஆரம்பத்தில் பண வடிவில் முன்னீடு செய்யும் மூல தனத்தின் மாறும் பகுதியானது இந்த மாறும்-மூலதனத்தை மாற்றீடு செய்வதற்காகத் தொழிலாளியால் படைக்கப்படும் (உபரி-மதிப்பும் உள்ளிட்ட) மதிப்பின் பண வடிவத்துக்கு அவ்வளவுக்கு அவ்வளவு துரிதமாக மாற்றப்படுகிறது; முதலாளி கையை விட்டு சொந்த நிதியிலிருந்து பணத்தை முன்னீடு செய்ய வேண்டிய காலம் அவ்வளவுக்கு அவ்வளவு குறுகுகிறது; உற்பத்தியின் குறிப்பிட்ட அளவுவீதத்துக்கு ஏற்ப பொதுவாக அவர் முன்னீடு செய்ய வேண்டிய மூலதனம் அவ்வளவுக்கு அவ்வளவு குறுகுகிறது; உபரி-மதிப்பு வீதம் குறிப்பிட்டதாயிருக்க, ஓராண்டு காலத்தில் அவர் கறக்கும் உபரி-மதிப்பின் அளவு ஒப்பளவில் அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாகிறது! ஏனென்றால் அவர் தொழிலாளியின் உழைப்பை அந்தத் தொழிலாளியே படைத்த மதிப்பின் பண வடிவத்தைக் கொண்டு அவ்வளவுக்கு அவ்வளவு அடிக்கடி விலைக்கு வாங்கி, அவ்வளவுக்கு அவ்வளவு அடிக்கடி அவரது உழைப்பை மீண்டும் மீண்டும் இயங்க வைக்க முடியும்.

உற்பத்தியின் அளவுவீதம் குறிப்பிட்டதாயிருக்க, பண வடிவில் முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தின் அறுதிப் பருமன் (பொதுவாக சுழல்-மூலதனத்தின் பருமன்) புரள்வுக் காலம் குறைகிற அதே விகிதத்தில் குறைகிறது; அதே போது வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் அதிகரிக்கிறது. முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் பருமன் குறிப்பிட்டதாயிருக்க, உற்பத்தியின் அளவுவீதம் அதிகரிக் கிறது; எனவே, உபரி-மதிப்பு வீதம் குறிப்பிட்டதாயிருக்க, ஒரு

புரள்வுக் காலத்தில் படைக்கப்படும் உபரி-மதிப்பின் அறுதி அளவும் அதிகரிக்கிறது; மறுவுற்பத்திக் காலங்கள் குறுகுவதால் கூடவே வருடாந்தர உபரி-மதிப்பு வீதமும் உயர்கிறது. மேற்கண்ட பரிசீலனை யிலிருந்து பொதுவாகப் பெறப்படுவது என்னவென்றால்: புரள்வுக் காலங்களின் அளவுகள் வெவ்வேறாக இருக்கும் போது (உழைப் பின் மீதான சுரண்டலின் கடுமையில் மாற்றம் இல்லா விட்டாலும்), ஒரே அளவு திறனுடைச் சுழல்-மூலதனத்தையும் ஒரே அளவு உழைப்பையும் இயங்கச் செய்வதற்கு வெவ்வேறான அளவுகளில் பண-மூலதனத்தை முன்னீடு செய்வது அவசியமாகிறது.

**இரண்டாவது**—இந்த வேறுபாடும் முதல் வேறுபாடும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை—A தொழிலாளியும் B தொழி லாளியும் அவர்களது கையில் சுற்றோட்ட ஊடகமாக மாறி விடும் மாறும்-மூலதனத்தைக் கொண்டுதான் அவர்களுக்கு வேண்டிய வாழ்வுச் சாதனங்களை விலைக்கு வாங்குகிறார்கள். எடுத்துக் காட்டாக, அவர்கள் சந்தையிலிருந்து கோதுமையை எடுத்துக் கொள்ளும் போது அதற்கு மாற்றீடாகப் பண வடிவிலான சமதை யைத் தருகிறார்கள். B தொழிலாளி சந்தையிலிருந்து எடுக்கிற வாழ்வுச் சாதனங்களுக்கு விலையாகத் தரும் பணம், A தொழி லாளி தரும் பணத்தைப் போல் ஓராண்டில் அவர் உற்பத்தி செய்து சந்தையில் சேர்ப்பிக்கும் மதிப்பின் பண வடிவமல்ல என்பதால், அவர் வாழ்வுச் சாதனங்களை விற்பவருக்கு வழங்குவது பணமே தவிர, சரக்குகள் அல்ல—உற்பத்திச் சாதனங்களாகவோ வாழ்வுச் சாதனங்களாகவோ இருக்கும் சரக்குகள் அல்ல; வாழ்வுச் சாதனங் களை விற்பவர், A தொழிலாளியின் விவகாரத்தில் வாங்க முடிந் தது போல் இந்த விற்பனையின் வரவைக் கொண்டு வாங்கிக் கொள்ளக் கூடிய சரக்குகள் அல்ல. ஆகவே சந்தையிலிருந்து உழைப்புச் சக்தியும், இந்த உழைப்புச் சக்திக்கான வாழ்வுச் சாதனங் களும், B தொழிலாளி பயன்படுத்தும் உழைப்புச் சாதனங்களின் வடிவிலான நிலை-மூலதனமும், உற்பத்தியின் பொருட் கூறுகளும் சந்தையிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு இவற்றுக்கு மாற்றீடாக பண வடிவிலான சமதை சந்தைக்கு வந்து சேர்கிறது; ஆனால் சந்தை யிலிருந்து வெளியே எடுக்கப்படும் திறனுடை-மூலதனத்தின் பொருட் கூறுகளை மாற்றீடு செய்வதற்கு வேண்டிய எந்த உற்பத்திப் பண்ட மும் அந்த ஆண்டில் சந்தையினுள் இந்நிகழ்வால் சேர்க்கப்பட வில்லை. சமுதாயத்தை முதலாளித்துவ சமுதாயமாக அல்லாமல் பொதுவுடைமைச் சமுதாயமாகக் கொள்வோமானால் முதலாவதாக பண-மூலதனமே இருக்காது; அதன் காரணமாய் எழும் பரிமாற்றங் களை மூடி மறைக்கும் மாறுவேடங்களும் இருக்க மாட்டா. சில தொழில் வகைகள் ஆண்டின் மொத்த உற்பத்தியிலிருந்து உழைப் பையும் உற்பத்திச் சாதனங்களையும் வாழ்வுச் சாதனங்களையும் எடுத்துக் கொண்ட போதிலும், ஓராண்டுக்கு அல்லது அதற்கு

அதிகமான நெடுங்காலத்துக்கு எவ்வகையான உற்பத்திச் சாதனமோ வாழ்வுச் சாதனமோ அளித்திடுவதில்லை—இருப்புப் பாதை நிர்மாணத்தை இவற்றுக்கு உதாரணமாகச் சொல்லலாம். சமுதாயத்துக்குத் தீதின்றி இம்மாதிரியான தொழில் வகைகளில் எந்த அளவுக்கு உழைப்பையும் உற்பத்திச் சாதனங்களையும் வாழ்வுச் சாதனங்களையும் முதலீடு செய்யலாம் என்று முன்கூட்டியே கணக்கிட்டுத் தீர்மானிக்க வேண்டியதன் அவசியமாகக் கம்யூனிச சமுதாயத்தில் இப்பிரச்சினை குறுகி விடுகிறது. ஆனால் முதலாளித்துவ சமுதாயத்தில் எப்போதுமே காரியம் நடந்த பிறகே சமுதாய அறிவுடைமையானது தன்னை நிலைநாட்டிக் கொள்வதால், இங்கு பெருங் குழப்பமும் குலைவும் [disturbances] ஏற்படக் கூடியதாவதோடு, அடிக்கடி ஏற்பட்டே தீருமென்றும் ஆகிறது. ஒரு நேரம் பணச் சந்தை அழுத்தி நெரிக்கப்படுகிறது. இன்னொரு நேரம் பணச் சந்தையின் தாராள நிலைமைகளால் உந்தப்பட்டு இம்மாதிரியான தொழில் முயற்சிகள் ஏராளமாய் உதித்தெழுகின்றன; பிற்பாடு பணச் சந்தை அழுத்தி நெரிக்கப்படுவதற்கு உரிய அதே நிலைமைகள் இதனால் தோற்றுவிக்கப்படுகின்றன. இந்தத் தொழில் முயற்சிகளுக்காக நீண்ட காலங்களுக்குப் பெரும் பெரும் பண-மூலதன முன்னீடுகள் ஓயாமல் தேவைப்படுவதால், பணச் சந்தை அழுத்தி நெரிக்கப்படுகிறது. தொழிலதிபர்களும் வணிகர்களும் அவர்களது தொழிலை நடத்திச் செல்வதற்குத் தேவையான பண-மூலதனத்தை எடுத்து ஊக வாணிப முறையிலான இருப்புப் பாதைத் திட்டங்களிலும் இன்ன பிறவற்றிலும் கொட்டி விட்டு, பிறகு தம் தொழிலின் தேவைகளைச் சமாளிப்பதற்குப் பணச் சந்தையில் கடன் வாங்க வருகிறார்கள்.

மறு புறத்தில் சமுதாயத்திடம் தயாராகக் கைவசம் இருக்கும் திறனுடை-மூலதனமும் அழுத்தி நெரிக்கப்படுகிறது. திறனுடை-மூலதனக் கூறுகள் சந்தையிலிருந்து ஓயாமல் வெளியே எடுக்கப்படுகின்றன; அவற்றுக்கு பதில் பண வடிவிலான சமதை மட்டுமே சந்தையில் சேர்ப்பிக்கப்படுகிறது. இவ்விதம் பயன்திறத் தேவை உயருகிறதே தவிர வழங்கலுக்கான கூறு எதுவும் சேர்க்கப்படுவதில்லை. இதனால் உற்பத்தி-அடிக்கூறுகளது விலையும், அதே போல் வாழ்வுச் சாதனங்களது விலையும் உயருகின்றன. பங்கு வியாபாரம் [stock-jobbing] ஒரு மாமூல் நடைமுறையாக நடைபெறுவதையும் இவ்வழியில் மூலதனம் பெருவீதத்தில் கைமாறுவதையும் இதோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். ஊக வணிகர்கள், ஒப்பந்தக்காரர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள் முதலானோரைக் கொண்ட ஒரு கும்பல் செல்வங் குவிக்கிறது. இவர்கள் சந்தையில் நுகர்வுப் பண்டங்களுக்கான வேண்டலை வெகுவாகப் பெருகச் செய்கிறார்கள்; அதே போது கூலியும் உயர்ந்து செல்கிறது. உணவுப் பொருட்களும் இப்பண்டங்களில் அடங்குவதால் வேளாண்மையும் ஊக்குவிக்கப்படுகிறது. ஆனால் இந்த உணவுப்

பொருட்களை ஓராண்டுக்குள் திடீரென அதிகரிக்கச் செய்ய முடியாதென்பதால், அவற்றின் இறக்குமதி அதிகரிக்கிறது. இதே போல, பொதுவாக அயல்வகை உணவுப் பண்டங்களின் (காபி, சர்க்கரை, மது முதலானவை) இறுக்குமதியும் சொகுசுப் பொருட்களின் இறக்குமதியும் அதிகரிக்கின்றன. இவ்விதம் அதீதமான இறக்குமதிகளுக்கும், இந்த இறக்குமதி வியாபாரத்தில் ஊக வாணிபத்துக்கும் வழிகோலப்படுகிறது. இதற்கிடையில், உற்பத்தியைத் துரிதமாகப் பெருக்குவதற்கு வாய்ப்புள்ள தொழிற் கிளைகளில் (முறையான பட்டறைத் தொழில், சுரங்கத் தொழில் முதலானவை), உயர உயர ஏறும் விலைகளின் விளைவாகத் திடீர்ப் பெருக்கமும், அதையடுத்து சீக்கிரமே திடீர் வீழ்ச்சியும் ஏற்படுகின்றன. இதே நிகழ்வுகள் உழைப்புச் சந்தையிலும் எற்படுகின்றன. உள்ளுறை ஒப்பீட்டு உபரி-மக்கள்தொகையினரிடமிருந்தும் [latent relative surplus-population] அதோடு ஏற்கெனவே வேலையில் இருக்கும் தொழிலாளர்களிடமிருந்துங்கூட ஏராளமானோர் புதிய தொழில் வகைகளுக்கு ஈர்க்கப்படுகின்றனர். பொதுவாக இருப்புப் பாதை நிர்மாணம் போன்ற பெருவீதத் தொழில் முயற்சிகள் உழைப்புச் சந்தையிலிருந்து குறிப்பிட்ட அளவு உழைப்புச் சக்தியை ஈர்த்துக் கொள்கின்றன. வலுவானவர்கள் மட்டுமே தேவைப்படுகிற வேளாண்மை போன்ற தொழில் வகைகளிலிருந்துதான் இந்த உழைப்புச் சக்தி வந்து சேர வேண்டும். புதிய தொழில் முயற்சிகள் நிலைபெற்ற தொழில் வகைகளாகி, அவற்றுக்கு வேண்டிய புலம் பெயர் [migratory] தொழிலாளி வர்க்கம் உருவாகி விட்ட பிறகுங்கூட தொடர்ந்து இவ்வாறு நடைபெறுகிறது. இருப்புப் பாதை நிர்மாணத்தின் அளவுவீதத்தில் தற்காலிகமாய் சராசரிக்கும் மேலே உயர்வு ஏற்படும் சந்தர்ப்பத்தை இதற்கு எடுத்துக்காட்டாய்க் கொள்ளலாம். கூலி உயர்வதற்குத் தடைபோட்டு வந்த தொழிலாளர் சேமப் பட்டாளத்தில் ஒரு பகுதியினருக்கு இவ்வாறு வேலை கிடைக்கிறது. இதைத் தொடர்ந்து பொதுவாகக் கூலி உயர்வு ஏற்படுகிறது; இது வரை உழைப்புச் சந்தையில் நல்ல வேலை வாய்ப்புக்குரிய பிரிவுகளாய் இருப்பவற்றிலும் கூட கூலி உயர்வு ஏற்படுகிறது. இது சிறிது காலம் நீடிக்கிறது. முடிவில் தவிர்க்க முடியாத படி நிகழும் வீழ்ச்சியானது மீண்டும் தொழிலாளர்களின் சேமப் பட்டாளத்தை [reserve army of labour] வேலையிலிருந்து விரட்டுகிறது; கூலி விகிதங்கள் மீண்டும் குறைந்தபட்ச அளவுக்கும், அதனிலும் தாழ்ந்த நிலைக்குங்கூட இறங்கி விடுகின்றன.[38]

---

[38] பிற்பாடு விரித்துரைக்கும் நோக்கத்துடன் கையெழுத்துப் பிரதியில் இவ்விடத்தில் பின்வரும் குறிப்பு சேர்க்கப்பட்டிருக்கிறது: ''முதலாளித்துவ உற்பத்தி முறையிலுள்ள முரண்பாடு: பண்டங்களை வாங்குவோர் என்ற விதத்தில் தொழிலாளர்கள் சந்தைக்கு முக்கியமானவர்கள். ஆனால் தமக்குச் சொந்தமான சரக்காகிய உழைப்புச் சக்தியை விற்போர் என்ற விதத்தில் அவர்களை முதலாளித்துவச் சமுதாயம் குறைந்தபட்ச

புரள்வுக் காலம் அளவில் பெரியதா சிறியதா என்பது வேலைக் காலத்தை, அதாவது சந்தைக்கு உற்பத்திப் பொருளைத் தயாரிப்ப தற்கு அவசியமான காலத்தைப் பொறுத்ததாய் இருக்கும் வரை, அந்தந்த முதலீடுகளுக்கும் பிரத்தியேகமான பொருளுற்பத்தி நிலை மைகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. வேளாண்மையில் அதிகமாய் இவை உற்பத்திக்கு வேண்டிய இயற்கை நிலைமைகளது தன்மையைச் சார்ந்தனவாகின்றன; பட்டறைத் தொழிலிலும் சுரங் கத் தொழிலின் பெரும் பகுதியிலும், உற்பத்தி நிகழ்முறையின் சமூக வளர்ச்சியைத் தொடர்ந்து மாறிச் செல்கின்றன.

வேலைக் காலத்தின் அளவானது வழங்கலின் பருமனை (பொது வாக சரக்குகளாய்ச் சந்தையில் சேர்ப்பிக்கப்படும் அளவுப் பரி மாணத்தை) பொறுத்ததாய் இருக்கும் வரை, அது வழக்கத்தின் பாற் பட்டதாகிறது. ஆனால் வழக்கத்துக்குங்கூட பௌதிக அடிநிலை யாக அமைவது உற்பத்தியின் அளவுவீதமே என்பதால், தனித்துப் பரிசீலிக்கும் போது மட்டுமே அது தற்செயலானதாகும்.

இறுதியாக, புரள்வுக் காலத்தின் அளவு சுற்றோட்டக் காலத்தின் அள்வைப் பொறுத்ததாய் இருக்கும் வரை, சந்தை நிலைமைகளின் ஓயாத மாற்றத்தையும் சரக்கை விற்பது எளிதாக இருக்கிறதா, கடின மாய் இருக்கிறதா என்பதையும், இதன் காரணமாய் உற்பத்திப் பொருளின் ஒரு பகுதியை அண்மையிலோ தொலைவிலோ உள்ள சந்தைகளில் விற்க வேண்டியது அவசியமாவதையும் புரள்வுக் கால அளவு சார்ந்ததாகி விடுகிறது. பொதுவாக வேண்டலின் பரி மாணம் அன்னியில், விலைகளின் ஏற்ற இறக்கம் இங்கு அடிப் படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; ஏனெனில் விலைகள் சரியும் போது விற்பனையை வேண்டுமென்றே குறைத்துக் கொள்கிறார்கள்; அதே போது உற்பத்தி தொடர்ந்து நடைபெறுகிறது. மறுதலையாக, விலைகள் உயரும் போதும் முன்கூட்டியே விற்க முடியும் போதும் உற்பத்தியும் விற்பனையும் கைகோத்து நடை போடுகின்றன. ஆனால் உற்பத்தி நடைபெறும் இடத்திலிருந்து சந்தை உள்ளபடியே எவ்வளவு தொலைவில் இருக்கிறது என்பதைத்தான் மெய்யான பௌதிக அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

---

விலைக்குக் கிடைப்போராகத் தாழ்த்தி வைத்துக் கொள்ளப் பார்க்கிறது.

''மேலுமுள்ள முரண்பாடு: முதலாளித்துவ உற்பத்தியானது தனது சக்திகளை எல்லாம் விடாமல் பிரயோகிக்கும் காலங்கள் மிகையுற்பத்திக் காலங்களாக இருப்பவை. ஏனென்றால், கூடுதலான மதிப்பு உற்பத்தி செய்யப்படுவதோடு கூட ஈடேற்றமும் செய் யப்படும் படியான அளவுக்கு உற்பத்தி உள்ளாற்றல்களைப் பயன்படுத்த முடிவதில்லை; சரக்குகள் விற்பனையாகி, சரக்கு-மூலதனமும் இவ்வாறு உபரி-மதிப்பும் ஈடேற்றம் பெறுதலானது வரம்பிடப்பட்டு விடுகிறது — பொதுவாக ஒரு சமுதாயத்திலுள்ள நுகர் வோரது தேவைகளால் அல்ல, மிகப் பெருவாரியானோர் எப்போதுமே ஏழைகளாய் இருக்கிற, எப்போதுமே ஏழைகளாய் இருந்தாக வேண்டிய ஒரு சமுதாயத்திலுள்ள நுகர்வோரது தேவைகளால் வரம்பிடப்பட்டு விடுகிறது. ஆனால் இது அடுத்த பாகத் துக்குரிய ஆய்வுப் பொருளைச் சேர்ந்ததாகும்.''

எடுத்துக்காட்டாக, ஆங்கிலேயப் பருத்தித் துணிகளையும் நூலையும் கருதுவோமாயின், இவை இந்தியாவுக்கு விற்கப்படுகின்றன. ஏற்றுமதியாளரே ஆங்கிலேயப் பருத்தித் தொழிலதிபருக்கு விலைப் பணத்தைச் செலுத்தி விடுவதாகக் கொள்வோம். (பணச் சந்தை வலுவாக இருந்தால்தான் ஏற்றுமதியாளர் மனமுவந்து இப்படிச் செய்வார். ஆனால் தொழிலதிபரே தமது பண-மூலதனத்தை ஏதாவது கடன்-செலாவணி ஏற்பாட்டின் மூலம் மாற்றீடு செய்யும் போது நிலைமை அவ்வளவு உவப்பானதல்ல.) ஏற்றுமதியாளர் இதன் பின் பருத்தித் துணிகளை இந்தியச் சந்தையில் விற்கிறார்; அவர் முன்னீடு செய்த மூலதனம் அங்கிருந்துதான் அவருக்கு மீட்டு அனுப்பப்படுகிறது. முன்பு உற்பத்தி நிகழ்முறை குறிப்பிட்ட அளவு வீதத்தில் தொடர்ந்து நடைபெறுவதற்கு வேலைக் காலத்தின் அளவு காரணமாய்ப் புதிய முன்னீடு அவசியமாயிருந்த போது என்ன நடந்ததோ, அதுவேதான் இந்த உதாரணத்திலும் இந்தியாவிலிருந்து அவரது மூலதனம் மீட்டனுப்பப்படும் வரை நடக்கிறது. தொழிலதிபர் அவரது தொழிலாளர்களுக்கு ஊதியம் அளிப்பதற்கும் அவரது சுழல்-மூலதனத்தின் ஏனைய கூறுகளைப் புத்தாக்கம் செய்வதற்கும் பயன்படுத்துகிற பண-மூலதனம், அவர் உற்பத்தி செய்த நூலின் பண வடிவம் அன்று. இந்த நூலின் மதிப்பானது பணம் அல்லது உற்பத்திப் பொருட்களின் வடிவில் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து சேரும் வரை அது சாத்தியமன்று. அவர் பயன்படுத்துவது முன்போலவே கூடுதல் பண-மூலதனம்தான். ஒரே ஒரு வித்தியாசம் என்னவெனில், தொழிலதிபருக்கு பதில் வணிகர் அதனை முன்னீடு செய்கிறார். இந்த வணிகர் கடன்-செலவாணி நடவடிக்கைகளின் மூலமாய் அத்தொகையை அடைந்திருக்கலாம். இந்தப் பணம் சந்தையை வந்தடைகிறது. ஆனால் இந்தப் பணத்தைக் கொண்டு வாங்கக் கூடியதும், திறனுடை நுகர்வு அல்லது தனிப்பட்ட சொந்த நுகர்வின் மண்டலத்துள் நுழையக் கூடியதுமான கூடுதல் உற்பத்திப் பண்டமேதும் இந்தப் பணம் ஆங்கிலேயச் சந்தையை அடையும் முன்போ, அதோடு கூட ஏக காலத்திலோ சந்தையை வந்தடைவதில்லை. ஓரளவு நீண்ட காலத்துக்கும் ஓரளவு பெருவீதத்திலும் இந்நிலைமை நீடிக்குமானால், முன்னர் வேலைக் காலம் நீள்வதால் ஏற்படும் விளைவாகக் கூறிய அதே விளைவுதான் இதனாலும் ஏற்பட்டாக வேண்டும்.

நூலானது திரும்பவும் இந்தியாவுக்குக் கடனில் விற்கப்படுவதாகக் கொள்வோம். இந்தக் கடன்-செலாவணியைக் கொண்டு இந்தியாவில் உற்பத்திப் பண்டங்கள் வாங்கப்பட்டு, நூலுக்குப் பதிலாய் இங்கிலாந்துக்கு ஏற்றியனுப்பி வைக்கப்படுகின்றன, அல்லது இந்தத் தொகைக்கு உண்டியல்கள் அனுப்பப்படுகின்றன. இந்த நிலைமை இப்படியே நீண்டு நிலவுமாயின் இந்தியப் பணச் சந்தை அழுத்தி நெரிக்கப்படும். இதன் எதிர்வினையாக இங்கிலாந்தில் நெருக்கடி

ஏற்படலாம். இந்த நெருக்கடி இந்தியாவுக்கான பொற்பாள [bullion] ஏற்றுமதியோடு தொடர்புள்ளதாக இருந்தாலும் கூட, இந்திய வங்கிகளிடமிருந்து கடன் பெற்ற ஆங்கிலேயத் தொழில் நிறுவனங்களும் அவற்றின் இந்தியக் கிளைகளும் போண்டியாவதன் காரணமாய் இந்தியாவில் ஒரு புதிய நெருக்கடி எழுகிறது. இவ்வாறு, வர்த்தக நிலுவை [balance of trade] சாதகமாக இருக்கும் சந்தையிலும், பாதகமாக இருக்கும் சந்தையிலும் ஒரே சமயத்தில் நெருக்கடி ஏற்படுகிறது. இந்நிகழ்வு இதனிலும் சிக்கல் வாய்ந்ததாகவும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து இந்தியாவுக்கு வெள்ளிப் பாளங்கள் அனுப்பியுள்ளதாகவும், ஆனால் இந்தியாவுக்குக் கடன் கொடுத்த ஆங்கிலேயர்கள் தமக்கு வர வேண்டிய கடன்களை இப்போது அவசரமாக அங்கிருந்து வசூலிப்பதாகவும் வைத்துக் கொள்வோம். அப்போது இந்தியா விரைவில் தனது வெள்ளிப் பாளங்களை இங்கிலாந்துக்குத் திருப்பியனுப்ப வேண்டியிருக்கும்.

இறக்குமதி வர்த்தகத்தின் பரிமாணம் (பருத்திப் பஞ்சம் போன்ற விசேஷ நிலைமைகளைத் தவிர்த்துப் பார்ப்போமானால்) ஏற்றுமதி வர்த்தகத்தாலேயே நிர்ணயிக்கப்பட்டும் ஊக்குவிக்கப்பட்டும் வந்த போதிலும், இந்தியாவுக்கான ஏற்றுமதி வர்த்தகமும் இந்தியாவிலிருந்தான இறக்குமதி வர்த்தகமும் ஏறத்தாழ ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொள்வது சாத்தியமே. இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக நிலுவை சமன் செய்யப்பட்டிருப்பதாகத் தோன்றலாம், அல்லது இப்படியோ அப்படியோ சிறிதளவு அலைவுறலாம். ஆனால் இங்கிலாந்தில் நெருக்கடி வெடித்ததும் வெட்ட வெளிச்சமாய்த் தெரிய வருகிறது — விற்பனையாகாத பருத்தித் துணிமணிகள் இந்தியாவில் சேமிப்பில் குவிந்து கிடப்பதும் (எனவே, சரக்கு-மூலதனத்திலிருந்து பண-மூலதனமாக உருமாற்றம் பெறாமல் இருப்பதும், அந்த அளவுக்கு மிகையுற்பத்தி நிலை ஏற்பட்டிருப்பதும்), மறு புறம் இந்தியச் சரக்குகளின் விற்பனையாகாத இருப்புகள் இங்கிலாந்தில் சேமிப்பில் குவிந்து கிடப்பதும் தெரிய வருகிறது. அதன்றி விற்பனையாகி நுகரப்பட்டு வருகிற சரக்கு இருப்புகளில் பெரியதொரு பகுதிக்கு இன்னும் பணம் செலுத்தப்படாததும் தெரிய வருகிறது. எனவே, பணச் சந்தையில் நெருக்கடியாகக் காட்சியளிப்பது, உண்மையில் உற்பத்தி மறுவுற்பத்தி நிகழ்முறையிலேயே நிலவும் அசாதாரண நிலைமைகளின் [abnormal conditions] தெரிவிப்பே ஆகும்.

*மூன்றாவது:* உற்பத்தி நிகழ்முறையில் செயல்பட்டு வருகிற சுழல்-மூலதனத்தை (மாறா-மூலதனத்தையும் மாறும்-மூலதனத்தையும்) பொறுத்த வரை, புரள்வுக் காலத்தின் அளவு (இது வேலைக் காலத்திலிருந்து வரப்பெறுவதால்) பின்வரும் வேறுபாட்டைத் தோற்றுவிக்கிறது: ஓராண்டு காலத்தில் பல புரள்வுகள் நடந்தேறும்

சந்தர்ப்பங்களில் மாறும் சுழல்-மூலதனம் அல்லது மாறாச் சுழல்-மூலதனத்தில் ஒரு கூறு அதன் உற்பத்திப் பொருளின் வாயிலாகவே வழங்கப்படலாம்—நிலக்கரி உற்பத்தி, ஆயத்த ஆடை தயாரிப்புத் தொழில் முதலானவை இதற்கு உதாரணம். இதல்லாத பிற சந்தர்ப்பங்களில் இவ்விதம் நிகழ முடியாது, எப்படியும் அதே ஆண்டுக்குள் நிகழ முடியாது.

## அத்தியாயம் XVII

# உபரி-மதிப்பின் சுற்றோட்டம்

ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்புத் திரள் மாறாதிருப்பினும், புரள்வுக் காலத்திலான வேறுபாடு வருடாந்தர உபரி-மதிப்பு வீதத்தில் வேறுபாட்டைத் தோற்று விக்கிறது என்று தெரிந்து கொண்டோம்.

ஆனால் இதல்லாமல், உபரி-மதிப்பு வீதம் மாறாதிருந்து வரும் போதே, உபரி-மதிப்பை மூலதனமாக்குவதாகிய திரட்டலிலும், மேலும் ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் அளவிலும் வேறுபாடுகள் தவிர்க்க முடியாத படி எழுகின்றன.

முதலாவதாக, (முந்தைய அத்தியாயத்தின் எடுத்துக்காட்டில் வரும்) A மூலதனம் காலவட்ட முறையில் கிடைக்கும் நடப்பு வருவாயைப் பெற்றிருக்கக் காண்கிறோம்; இதனால், தொழிலைத் தொடக்கி வைக்கிற புரள்வுக் காலம் தவிர்த்து, ஆண்டில் அது தனது சொந்த நுகர்வுக்காக தனது உபரி-மதிப்பு உற்பத்தியைக் கொண்டே விலை கொடுக்க முடிகிறது; இதற்காகத் தனது நிதி யிலிருந்து முன்னீடு செய்யத் தேவையில்லை. ஆனால் B மூலதனத் தைப் பொறுத்த வரை, அது தனது நிதியிருப்பிலிருந்து முன்னீடு செய்தாக வேண்டும். ஒத்த கால இடைவெளிகளில் உற்பத்தி செய் யும் அதே அளவு உபரி-மதிப்பை Bஉம் உற்பத்தி செய்கிறது என்றாலும், இந்த உபரி-மதிப்பு ஈடேற்றம் பெறுவதில்லை; ஆகவே இதை உற்பத்தித் திறனுள்ள முறையிலோ சொந்த முறையிலோ நுகர முடிவதில்லை. சொந்த நுகர்வைப் பொறுத்த வரை, உபரி-மதிப்பு கைவரப் போவதை எதிர்பார்த்து அது முன்கூட்டியே செலவிடப்படுகிறது. பணத் தொகைகள் இதற்காக முன்னீடு செய்யப்பட்டாக வேண்டும்.

திறனுடை-மூலதனத்தின் ஒரு பகுதியை, அதாவது நிலை-மூலதனத்தின் மராமத்துக்கும் பராமரிப்புக்கும் தேவைப்படுகிற கூடுதல் மூலதனத்தை வகைப்படுத்துவது கடினமாகும். இந்த மூல தனப் பகுதியும் இப்போது புதிய கோணத்தில் பார்க்கப்படுகிறது.

Aஐப் பொறுத்த வரை, இந்த மூலதனப் பகுதி உற்பத்தியின் தொடக்கத்தில்—முழுமையாக அல்லது பெரும்பாலும்—முன்னீடு செய்யப்படுவது இல்லை. நேரடியான முறையில் உபரி-மதிப்பை மூலதனமாக மாற்றுவதன் மூலம், அதாவது அதனை நேரடியான முறையில் மூலதனமாக ஈடுபடுத்துவதன் மூலம் இந்த மூலதனப் பகுதி தொழிலுக்குள்ளிருந்தே வருகிறது. காலவட்ட முறையில் உற்பத்தியாவதோடு, அந்தந்த ஆண்டுக்குள் ஈடேற்றமும் ஆகிற உபரி-மதிப்பின் ஒரு பகுதி மராமத்துகள் போன்றவற்றுக்கு ஏற்றாக வேண்டிய செலவினங்களை ஈடு செய்யக் கூடும். தொழிலை ஆரம்ப அளவுவீதத்தில் தொடர்ந்து நடத்துவதற்குத் தேவைப்படும் மூலதனத்தில் ஒரு பகுதி தொழில் நடந்து கொண்டிருக்கும் போது அத்தொழிலாலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. உபரி-மதிப்பின் ஒரு பகுதியை மூலதனமாக்குவதன் மூலம் இது நடைபெறுகிறது. மூலதனம் Bக்கு இது முடியாத காரியம். இப்போது பரிசீலிக்கப் படுகிற மூலதனப் பகுதியானது முதலாளி Bஐப் பொறுத்த வரை, ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் பகுதியாய் அமைந்தாக வேண்டும். A, B இருவரையும் பொறுத்த வரை, இந்த மூலதனப் பகுதியானது முதலாளிகளின் கணக்கேடுகளில் முன்னீடு செய்யப்பட்ட மூலதனமாகக் குறிக்கப்பெறும். உண்மையில் அது முன்னீடு செய்யப்பட்ட மூலதனம்தான். ஏனென்றால் அது, நமது அனுமானத்தின் படி, தொழிலைக் குறிப்பிட்ட அளவுவீதத்தில் தொடர்ந்து நடத்துவதற்கு அவசியமான திறனுடை-மூலதனத்தின் ஒரு பகுதியாகிறது. ஆனால் அது எந்த நிதியிலிருந்து முன்னீடு செய்யப்படுகிறது என்பதில் மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு உள்ளது. Bஐப் பொறுத்த வரை உண்மையில் அது ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட வேண்டிய, அல்லது தயாராய் வைத்துக் கொள்ள வேண்டிய மூலதனத்தின் ஒரு பகுதியாகும். மறு புறம் Aஐப் பொறுத்த வரை அது மூலதனமாகப் பயன்படுத்தப்படும் உபரி-மதிப்பின் ஒரு பகுதியாகும். திரட்டப்பட்ட மூலதனம் மட்டு மல்லாமல், ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் ஒரு பகுதியும் கூட மூலதனமாக்கப்புட்ட உபரி-மதிப்பாகவே இருக்க லாம் என்று இதிலிருந்து தெரிகிறது.

கடன்-செலாவணி வளர்ச்சி குறுக்கிட்டவுடனே, ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்துக்கும் மூலதனமாக்கப்பட்ட உபரி-மதிப்புக்கும் இடையிலான உறவு இன்னும் கூட சிக்க லாகிறது. எடுத்துக்காட்டாக, A முதலாளி தொழில் நடத்துவதற்குத் தேவையான மூல்தனம் முழு அளவில் ஆரம்பத்திலேயே கைவசம் இல்லாததால் C என்னும் வங்கியாளரிடமிருந்து திறனுடை-மூல தனத்தில் ஒரு பகுதியைக் கடன் வாங்குகிறார். இந்த மூலதனத்தைக் கொண்டு தொழில் தொடங்குகிறார், அல்லது இருக்கிற தொழில் தடைபட்டு விடாமல் ஆண்டு முழுவதும் தொடர்ந்து நடத்திச்

செல்கிறார். அவருக்கு C என்னும் வங்கியாளர் கடனாகத் தரும் தொகை D, E, F போன்ற முதலாளிகள் அந்த வங்கியாளரிடம் சேமிப்பில் வைத்திருக்கும் உபரி-மதிப்பே தவிர வேறன்று. Aஐப் பொறுத்த வரை திரட்டப்பட்ட மூலதனம் என்ற பேச்சுக்கே இது வரை இடமில்லை. ஆனால் D, E, F போன்றோரைப் பொறுத்த வரை, A ஆனவர் அவர்களால் தனதாக்கப்பட்ட உபரி-மதிப்பை மூலதனமாக்குகிற ஒரு செயலியே தவிர வேறல்லர்.

மூலதனத் திரட்டல் என்பது, அதாவது உபரி-மதிப்பை மூலதன மாக மாற்றுவது என்பது, சாராம்சத்தில் மேன்மேலும் அதிகரித்துச் செல்லும் அளவுவீதத்திலான மறுவுற்பத்தி நிகழ்முறையே ஆகும் என்றும், இந்தப் பெருக்கமானது பழைய தொழிற்சாலைகளோடு புதியவற்றைச் சேர்க்கும் வடிவில் விரிவளவில் வெளிப்படுவதாக வும் இருக்கலாம், அல்லது இப்போது செயல்படும் அளவுவீதத்தை விரிவாக்கும் வடிவில் மும்முர அளவில் வெளிப்படுவதாகவும் இருக்கலாம் என்றும் பார்த்தோம் (முதல் பாகம், அத்தியாயம் XXIV).

உற்பத்தியின் அளவுவீதத்திலான பெருக்கம் [expansion of the scale of production] சன்னம் சன்னமாக நடைபெறக் கூடும்; அப் போது, உபரி-மதிப்பின் ஒரு பகுதி மேம்பாடுகளுக்காகப் பயன் படுத்தப்படுகிறது — ஈடுபடுத்தப்படும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கே இந்த மேம்பாடுகள் உதவுகின்றன; அல்லது அதே நேரத்தில் உழைப்பை இன்னும் மும்முரமாகச் சுரண்டுவதற்கு இடமளிக்கின்றன. வேறொரு வழி என்னவென்றால்: வேலை-நாளுக்கு சட்ட வரம்புகள் இல்லாத இடத்தில், சுழல்-மூலதனத்தை (மூலப் பொருட்கள் மற்றும் கூலியின் உருவில்) கூடுதலாக முதலீடு செய்வதன் மூலம், நிலை-மூலதனத்தை அதிகமாக்காமலே உற்பத்தி யின் அளவுவீதத்தை விரிவாக்கலாம்: நிலை-மூலதனம் ஒவ்வொரு நாளும் ஈடுபடுத்தப்படும் நேரம் இவ்விதம் நீட்டப்படுகிறது; இதற் கேற்ப அதன் புரள்வுக் காலம் குறுக்கப்படுகிறது. இன்னுமொரு வழி என்னவென்றால்: மூலதனமாக்கப்பட்ட உபரி-மதிப்பு, சந்தை நிலைமைகள் சாதகமாய் இருக்குமானால், கச்சாப் பொருட்களில் ஊக வாணிபத்திற்கு இடமளிக்கலாம்; ஆரம்பத்தில் முன்னீடு செய் யப்பட்ட மூலதனம் இந்த முயற்சிகளுக்குப் போதுமானதாய் இருந் திருக்காது. இவ்வாறே இன்னும் சொல்லலாம்.

ஆயினும், ஒன்று தெளிவு: புரள்வுக் காலங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், உபரி-மதிப்பானது ஓராண்டு காலத்தில் இன்னு மதிகத் தடவைகள் ஈடேற்றம் பெறும் சந்தர்ப்பங்கள் உண்டு. அப்போதெல்லாம், சில கட்டங்களில் வேலை-நாளை நீட்டவோ, நுணுக்கங்களில் மேம்பாடு செய்யவோ முடியாமற் போகலாம். மறு புறம், முழு ஆலையையும் — உதாரணமாகக் கட்டடங்களை — விரி வாக்குவதன் மூலமோ, வேளாண்மையில் சாகுபடிப் பரப்பை விரி வாக்குவதன் மூலமோ, தொழில் முழுவதையும் உரிய விகிதத்தில்

விரிவாக்குவது என்பது குறிப்பிட்ட சில குறுகிய வரம்புகளுக்குள் மட்டுமே சாத்தியமாகும். மேலும், இவ்வழியில் தொழிலை விரிவாக்குவதற்கு மிகப் பெரிய அளவில் கூடுதல் மூலதனம் தேவைப் படும்; உபரி-மதிப்பைப் பல்லாண்டு காலம் திரட்டுவதன் மூலமே இவ்வளவு மூலதனம் சேகரிக்க முடியும்.

ஆக, மெய்யான மூலதனத் திரட்டலோடு கூடவே, அதாவது உபரி-மதிப்பு திறனுடை-மூலதனமாக மாற்றப்படுவதோடு கூடவே (மற்றும், அதற்கிணையாக விரிதிற மறுவுற்பத்தி நடைபெறுவதோடு கூடவே) பணத் திரட்டலும் நடைபெறுகிறது — உபரி-மதிப்பின் ஒரு பகுதி உள்ளுறைப் பண-மூலதன வடிவில் சேகரிக்கப்படுகிறது. இந்தப் பண-மூலதனம் உடனடியாகக் கூடுதல் மூலதனமாகச் செயல்பட முடியாதென்றாலும், ஊதிப் பருத்து பின்னொரு காலத்தில் குறிப்பிட்ட பரிமாணமுடையதாகும் போது முனைப்பு வாய்ந்த கூடுதல் மூலதனமாகச் செயல்படக் கூடியது.

தனிப்பட்ட முதலாளியின் நிலையிலிருந்து பார்க்கும் போது இப்படித்தான் தெரிகிறது. ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சியோடு கூடவே கடன்-செலாவணி அமைப்பும் வளர்கிறது. முதலாளி தன் சொந்தத் தொழிலில் இன்னமும் ஈடுபடுத்த முடியாதிருக்கும் பண-மூலதனம் ஏனையோரால் ஈடுபடுத்தப்படுகிறது; அதைப் பயன்படுத்திக் கொள்வதற்காக அவர்கள் அவருக்கு வட்டி செலுத்துகிறார்கள். அது அவரைப் பொறுத்த வரை பிரத்தியேகமான அர்த்தத்தில் பண-மூலதனமாகப் பயன் படுகிறது; அதாவது திறனுடை-மூலதனம் அல்லாத வேறு வகை மூலதனமாகப் பயன்படுகிறது. ஆனால் வேறு ஒருவரின் கையில் அது உள்ளபடியே மூலதனமாகப் பயன்படுகிறது. உபரி-மதிப்பு முன்னிலும் அடிக்கடி ஈடேற்றம் பெறுவதாலும், அது உற்பத்தி செய்யப்படும் அளவுவீதம் உயர்ந்து செல்வதாலும், புதிய பண-மூலதனம், அல்லது மூலதனம் என்ற முறையிலான பணம் பணச் சந்தைக்கு வரும் பண-மூலதனம் — எப்படியும் அதில் பெரும் பகுதி — விரிதிற உற்பத்தியால் கிரகித்துக் கொள்ளப்படுகிறது.

உள்ளுறை நிலையிலுள்ள கூடுதல் பண-மூலதனத்தின் சாமானிய மான புலப்பாட்டு வடிவம் பணச் சேர்ப்பு [hoard] என்பதாகும். இந்தச் சேர்ப்பானது, உயர்நிலை உலோகங்களை உற்பத்தி செய்கிற நாடுகளுடனான பரிவர்த்தனையில் நேரடியாகவோ சுற்றடியாகவோ பெறப்படுகிற கூடுதல் தங்கம் அல்லது வெள்ளியாக இருக்கலாம். இந்த விதத்தில்தான் ஒரு நாட்டில் சேர்ப்பாக வைக்கப்பட்ட பணம் அறுதியாக அதிகரிக்கிறது. மறு புறம், இந்தச் சேர்ப்பானது, உள் நாட்டில் சுற்றோட்டத்திலிருந்து எடுக்கப்பட்டு, தனிப்பட்ட முதலாளிகளின் கையில் சேர்ப்பாக வடிவெடுத்துள்ள பணமாகவும் இருக்கலாம் — பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இப்படித்தான் இருக்கிறது. மேலும், இந்த உள்ளுறைப் பண-மூலதனமானது

மதிப்பின் வெறும் அடையாளங்களாகவோ—இந்தக் கட்டத்தில் இன்னமும் நாம் கடன்-செலாவணிப் பணத்தைக் கருத முற்பட்டாக வில்லை—அல்லது சட்ட ஆவணங்களின் சான்றோடு மூன்றாமவர்கள் மீது முதலாளிகள் கொண்டாடும் பாத்தியதைகளாகவோ (உரிமைகள்) கூட அமையலாம். இந்த நேர்வுகளில் எல்லாம் கூடுதல் பண-மூலதனத்தின் நிலவல் வடிவம் என்னவாயிருப்பினும், அது வருங்காலத்துக்குரிய மூலதனமாக இருக்கும் வரை, சமுதாயத்தின் வருங்காலக் கூடுதல் உற்பத்தியின் மீது சட்ட வழியில் முதலாளிகள் முன்கூட்டியே பெற்றுக் கொண்டு விடும் உரிமைத் தகுதிகளைக் குறிக்கிறது.

''பருமன் என்று பார்க்கும் போது, திரட்டப்பட்ட உண்மைச் செல்வத்தின் திரள்...சமுதாயத்தின் நாகரிக நிலை எப்படியிருப்பினும் அந்தச் சமுதாயத்தின் உற்பத்தித் திறன்களோடு ஒப்பிடுகையில் அற்ப சொற்பமே, அந்தச் சமுதாயம் ஒரு சில ஆண்டுகளில் உள்ளபடியே நுகர்வதோடு ஒப்பிடுகையிலும் கூட அற்ப சொற்பமே. ஆகவே, சட்ட மன்றத்தாரும் அரசியல் பொருளாதார அறிஞர்களும் எடுப்பாய்த் தெரியும் திரட்டப்பட்ட செல்வம் எனப்படுவதில் மட்டுமே குறியாய் இருந்து வரும் இப்போதைய நிலைமைக்கு முடிவு கட்டியாக வேண்டும். உற்பத்தித் திறன்கள் நோக்கியும், வருங்காலத்தில் அவை தட்டுத் தடையின்றி வளருவதற்கான வழிகள் நோக்கியும் அவர்களது பெருங் கவனம் திருப்பப்பட வேண்டும். திரட்டப்பட்ட செல்வம் எனப்படுவதில் பெரும் பகுதி பெயரளவிலானதே. இது கப்பல்கள், வீடுகள், துணிமணிகள், நில வளங்கள் போன்ற மெய்யான ஆஸ்திகளால் ஆனதன்று; சமுதாயத்தின் வருங்காலத்திய வருடாந்தர உற்பத்தித் திறன்கள் மீதான கோரிக்கைகளால் ஆனதே. இடர்காப்பின்மை [insecurity] தொடர்பான உபாயங்கள் அல்லது நிறுவனங்கள் இக்கோரிக்கைகள் எழுவதற்கும் நீடித்திருப்பதற்கும் வழி செய்கின்றன....இத்தகைய பண்டங்களை (பௌதிகப் பொருட்களின் திரட்டல்கள் அல்லது மெய்யான செல்வத்தை) அவற்றின் உடைமையாளர்கள் சமுதாயத்தின் வருங்கால உற்பத்தித் திறன்களால் உண்டாக்கப்படவிருக்கும் செல்வத்தைத் தமதாக்குவதற்கான சாதனங்களாகவே பயன்படுத்திக் கொள்கிறார்கள். இவற்றை மட்டுமே இயற்கையான செல்வ வினியோக விதிகள் வலுவந்தம் ஏதுமின்றி, பையப் பைய அவர்கள் இழக்குமாறு செய்யும்; அல்லது, கூட்டு-வேலை அடிப்படையிலான உழைப்பின் துணை கொண்டு மிகச் சில ஆண்டுகளில் இழக்குமாறு செய்யும்.'' (வில்லியம் தாம்ப்சன், **செல்வ வினியோகக் கோட்பாடுகள் பற்றிய ஆய்வு**, லண்டன், 1850, பக்கம் 453. இந்நூல் முதன்முதலாய் 1824இல் வெளிவந்தது.)

''அளவிலோ தாக்கத்திலோ, மனித உற்பத்தித் திறன்களோடு ஒப்பிடுகையில் சமுதாயத்தின் உள்ளபடியான திரட்டல்கள் எவ்வளவு

சொற்பம் என்பதை, ஒரே ஒரு தலைமுறை சில ஆண்டு காலத்தில் நுகர்ந்திடும் சாதாரண நுகர்வோடு ஒப்பிடுகையிலும் கூட இவை எவ்வளவு சொற்பம் என்பதை யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. பெரும்பாலாருக்கு இப்படியோர் உணர்வும் கூட இல்லை. இதன் காரணம் கண்கூடானது; ஆனால் விளைவு நாசகரமானது. ஆண்டு தோறும் நுகரப்படும் செல்வம், அதன் நுகர்வோடு மறைதலால், கண நேரத்துக்கே கண்ணிற் படுகிறது; அனுபவிக்கிற அல்லது உபயோகிக்கிற செயலின் போது மட்டுமே மனதிற் பதிகிறது. ஆனால் பையப் பைய நுகர்வதற்கான செல்வப் பகுதியாகிய தட்டு முட்டுகள், இயந்திர சாதனங்கள், கட்டடங்கள் ஆகியவை குழந்தைப் பருவம் முதல் முதுமைக் காலம் வரை, மனித முயற்சியின் நிலையான நினைவுச் சின்னங்களாகக் கண் எதிரே காட்சியளிக்கின்றன. நாட்டின் செல்வத்தில் ஒரு பகுதியாய் அமையும் இந்த நிலையான, நிரந்தரமான செல்வத்தை, அதாவது பையப் பைய நுகரப்படும் செல்வத்தை, வேலைக்குரிய நிலத்தை, மூலப் பொருட்களை, வேலைக்குதவும் கருவிகளை, வேலை செய்வதற்குரிய இடமாய் அமையும் கட்டடங்களை உடையவர்களாய் இருப்பதன் மூலம் இந்தப் பண்டங்களைக் கைவசம் வைத்திருப்பவர்கள் சமுதாயத்தில் உண்மையிலேயே செயல்திறன் வாய்ந்தவர்களாய் இருக்கும் உழைப்பாளிகள் அனைவரதும் வருடாந்தர உற்பத்தித் திறன்களைத் தம் சொந்த நன்மைக்காக ஆண்டு அனுபவிக்கிறார்கள்; அந்த உழைப்பிலிருந்து மறுபடி மறுபடி விளையும் உற்பத்திகளோடு ஒப்பிடுகையில் இவையெல்லாம் கடுகளவே என்றாலும் கூட இப்படித்தான் நடைபெறுகிறது. பிரிட்டன், அயர்லாந்து இவற்றின் மக்கள்தொகை இருபது மிலியன். ஆண், பெண், குழந்தை ஒவ்வொருவரின் சராசரி நுகர்வு சுமார் இருபது பவுனாய் இருக்கலாம். ஆக நானூறு மிலியன் பவுன் செல்வம் என்றாகிறது. உழைப்பின் உற்பத்தியான இது ஆண்டுதோறும் நுகரப்படுவது. இந்த நாடுகளின் திரட்டப்பட்ட மூலதனத்தின் முழு அளவும் ஆயிரத்து இருநூறு மிலியனுக்கு, அல்லது சமுதாயத்தின் வருடாந்தர உழைப்பைப் போல் மூன்று மடங்குக்கு அதிகமில்லை என மதிப்பிடப்படுகிறது. இதை சரி சமமாகப் பிரித்தால், ஒவ்வொரு ஆளுக்கும் கிடைக்கும் மூலதனம் அறுபது பவுன். உத்தேசமான இந்தத் தொகைகளின் துல்லியமான அளவைக் காட்டிலும் அவற்றிடையிலான விகிதங்களில்தான் இங்கு நாம் கருத்து செலுத்துகிறோம். இந்த மூலதன இருப்புக்குரிய வட்டியானது மக்களனைவரையும் ஓராண்டில் சுமார் இரு மாத காலத்துக்கு இப்போது அவர்களுக்குள்ள வசதியோடு பராமரிக்கப் போதுமானது. திரட்டப்பட்ட மூலதனம் முழுவதையும் எடுத்துக் கொள்வோமாயின் (வாங்குவதற்கு ஆள் கிடைக்குமானால்) மூன்றாண்டு காலத்துக்கு அவர்களை எந்த வேலையும் செய்யாமல் உட்கார வைத்து சோறு போடப் போதுமானது. இந்த மூன்றாண்டு காலத்தின்

முடிவில் உணவு, உடை, உறைவிடம் எதுவும் இருக்காது. அவர்கள் பட்டினி கிடக்க வேண்டியதுதான். அல்லது, இந்த மூன்றாண்டு காலமும் வேலை செய்யாமலிருந்த போது தமக்குச் சோறு போட்டு ஆதரித்தவர்களுக்கு அடிமைகளாகி விட வேண்டியதுதான். ஆரோக் கியமான ஒரு தலைமுறையின் ஆயுட் காலம் நாற்பது ஆண்டுகள் எனக் கொண்டால், மூன்றாண்டு காலம் இந்த நாற்பதாண்டு காலத் துக்கு எப்படியோ, மெய்யான செல்வமாகிய திரட்டப்பட்ட மூல தனத்தின் பருமனும் முக்கியத்துவமும் ஒரே ஒரு தலைமுறையின் உற்பத்தித் திறன்களுக்கு அப்படித்தான் உள்ளது—செல்வம் கொழிக் கிற சமுதாயத்தினது திரட்டப்பட்ட மூலதனமாகவே இருந்தாலும் கூட இதே நிலைமைதான். உற்பத்தித் திறன்கள் என்று சொல்லும் போது, முன்யோசனையோடு செய்யப்பட்ட சமத்துவமான இடர் காப்பு ஏற்பாடுகளின் படி, குறிப்பாகக் கூட்டு உழைப்பின் துணை கொண்டு, அவர்கள் என்ன உற்பத்தி செய்யக் கூடுமோ அதைச் சொல்லவில்லை. குறைபாடுகள் நிறைந்தவையும், சோர்வளிப்பவை யுமான இடர்காப்பற்ற உபாயங்களுக்கு உட்பட்டு அவர்கள் அறுதி யாக என்ன உற்பத்தி செய்கிறார்களோ அதையே சொல்கிறோம்! .... இருக்கிற மூலதனம் மலை போல் பிரம்மாண்டமானதாய்த் தோற்ற மளிக்கிறது; இதனை (அல்லது, இன்னும் சரியாகச் சொன்னால், எதனை உட்கிரகிப்பதற்கான சாதனமாக அது பயன்படுகிறதோ அந்த வருடாந்தர உழைப்பின் உற்பத்திப்பொருட்கள் மீதான ஆதிக் கத்தை) ...இப்போதிருப்பது போல் வலுவந்தமாய்ப் பிரிக்கப்பட்ட நிலையிலேயே தொடர்ந்து நிரந்தரமாய் நீடித்திருக்கச் செய்வதற் காகவே, கொடுமை வாய்ந்த எல்லா இயந்திர சாதனங்களையும், இடர்காப்பின்மையின் தீமைகள், குற்றங்கள், அவலங்களையும் நிரந் தரமாய் நீடித்திருக்கச் செய்ய முயல்கிறார்கள். அவசியப் பண்டங் களை முதலில் வழங்காமல் எதையும் திரட்ட முடியாது என்ப தாலும், மனிதனின் ஆவல் இன்ப நுகர்ச்சியை நோக்கியே பெருகிப் பாய்கிறது என்பதாலுமே, எந்தக் குறிப்பிட்ட தருணத்திலும் உள்ள படியே இருக்கிற செல்வத்தின் அளவு ஒப்பளவில் சொற்பமே. உற்பத்தியும் நுகர்வுமான சாசுவதச் சுழற்சி இது. வருடாந்தர உற்பத்தி, நுகர்வு இவற்றின் இந்தப் பிரம்மாண்டத்தின் எதிரே கையளவாகிய மெய்யான திரட்டல் கண்ணிற் படுவதே கடினம். ஆனால் இந்தக் கையளவு குறித்தே முக்கியமாய் கவனம் செலுத்தப் பட்டுள்ளது. உற்பத்தித் திறன்களின் திரள் குறித்து கவனம் செலுத் தப்படவில்லை. இந்தக் கையளவை ஒரு சிலர் கைப்பற்றிக் கொண்டு விட்டனர்; அது அவர்களது சக மனிதர்களில் மிகப் பெரும் பாலாரின் உழைப்பு ஓயாமல் திரும்பத் திரும்ப படைத்திடும் வருடாந்தர உற்பத்திகளை அவர்களது உபயோகத்திற்கு மாற்றித் தரும் கருவியாக்கப்பட்டுள்ளது. எனவேதான் இத்தகையதொரு கருவி இந்த ஒரு சிலரது அபிப்பிராயத்தில் தலையாய முக்கியத்துவம்

பெறுகிறது....இந்த நாடுகளது உழைப்பின் வருடாந்தர உற்பத்தி களில் சுமார் மூன்றிலொரு பகுதி இப்போது பொதுச் சுமைகளின் பெயரால் உற்பத்தியாளர்களிடமிருந்து பிரித்தகற்றப்படுகிறது. இப் பகுதியைத் திறனிலா முறையில் நுகருகிறவர்கள் அதற்குச் சமதை எதுவும் தருவதில்லை; அதாவது உற்பத்தியாளர்களுக்கு மன நிறைவு அளிக்கக் கூடிய எதுவும் தருவதில்லை....திரட்டப்பட்ட திரள்கள், குறிப்பாக ஒரு சில தனியாட்களது கையில் அவை காணப்படு கையில் கொச்சைப் பார்வை கொண்ட கண்களை எப்போதுமே கவர்ந்துள்ளன. ஆண்டுதோறும் உற்பத்தி செய்து நுகரப்படும் திரள்கள், பெருநதி ஒன்றில் முடிவின்றி மோதும் கணக்கிலடங்காத அலைகளைப் போல் உருண்டோடிச் சென்று, இவர்கள் கவனியாது விடுகிற நுகர்வுப் பெருங்கடலில் கலந்து விடுகின்றன. மனித இனம் முழுவதும் இந்த சாசுவத நுகர்வையே நம்பியுள்ளது; எல்லாவித மனநிறைவுகளுக்கும் அதையே நம்பியுள்ளது என்பதோடு, உயிர் வாழ்வதற்கும் கூட அதைத்தான் நம்பியுள்ளது. இந்த வருடாந்தர உற்பத்திகளின் அளவும் வினியோகமும் மிக முக்கியமாய்ப் பரிசீலிக்க வேண்டியவை. உள்ளபடியான திரட்டல் என்பதெல்லாம் இரண் டாந்தர முக்கியத்துவம் உடையதே; இந்த முக்கியத்துவமும் கூட வருடாந்தர உற்பத்திகளது வினியோகத்தின் மீது அதற்குள்ள தாக் கத்திலிருந்தே வருகிறது....எப்போதுமே, உள்ளபடியான திரட்டல் களும் வினியோகங்களும் (தாம்ப்சன் எழுதிய நூல்களில்) உற்பத் தித் திறன் தொடர்பாகவும், அதற்குக் கீழ்ப்பட்டும்தான் பரிசீலிக்கப் படுகின்றன. அநேகமாய் ஏனைய எல்லா விளக்க முறைகளிலும், உள்ளபடியான திரட்டல்கள், நிலவுகிற வினியோக முறைகளை நிரந்தரமாய் நீடிக்கச் செய்தல் ஆகியவை தொடர்பாகவும் அவற்றுக் குக் கீழ்ப்பட்டுமே உற்பத்தித் திறன் பரிசீலிக்கப்படுகிறது. இந்த உள்ளபடியான வினியோகத்தைப் பாதுகாப்பதுடன் ஒப்பிடு மிடத்து, மனித இனம் முழுவதன் ஓயாத அவலம் அல்லது நல் வாழ்வு என்பது பரிசீலிக்கத்தக்கதாய்க் கருதப்படவில்லை. வன் முறை, மோசடி, தற்செயல் ஆகியவற்றின் விளைவுகளை நிரந்தர மாய் நீடிக்கச் செய்வதற்குப் பெயர் இடர்காப்பு. ஏமாற்றான இந்த இடர்காப்பைத் தாங்கிப் பிடிப்பதற்கே மனித இனத்தின் உற்பத்தித் திறன்கள் எல்லாம் ஈவிரக்கமின்றி பலியிடப்படுகின்றன.'' (மேலது, பக்கம் 440-43.)

---

மறுவுற்பத்தியைப் பொறுத்த வரை, நிலையான அளவுவீதத்தில் நடைபெறும் மறுவுற்பத்தியிலும் கூடக் குறுக்கிடும் குழப்படிகளை ஒதுக்கி விட்டுப் பார்த்தால், இரண்டே இரண்டு வகைகள்தாம் இயல்பாய் சாத்தியமாகும்.

ஒன்று: சாமானிய அளவுவீதத்திலான மறுவுற்பத்தி.

இரண்டு: உபரி-மதிப்பை மூலதனமாக்குதல், அதாவது மூல தனத் திரட்டல்.

## I. சாமானிய மறுவுற்பத்தி

சாமானிய மறுவுற்பத்தியைப் பொறுத்த வரை, ஆண்டுதோறும் அல்லது (ஓராண்டு காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மூலதனப் புரள்வுகள் நிகழுமானால்) காலவட்ட முறையில் உற்பத்தியாகி ஈடேற்றம் பெறும் உபரி-மதிப்பை அதன் உடைமையாளராகிய முதலாளி சொந்த முறையில், அதாவது திறனிலா முறையில் நுகர்கிறார்.

உற்பத்திப் பொருளின் மதிப்பில் ஒரு பகுதி உபரி-மதிப்பால் ஆனது. மறு பகுதி உற்பத்திப் பொருளின் உருவில் மறுவுற்பத்தி செய்யப்படும் மாறும்-மூலதனத்தாலும் அதனால் நுகரப்படும் மாறா-மூலதனத்தாலும் உருவாகும் மதிப்புப் பாகத்தால் ஆனது. ஆனால் மொத்த உற்பத்தியின் அளவிலோ மதிப்பிலோ இந்த விவரம் எவ்வித மாற்றமும் ஏற்படுத்துவதில்லை. இந்த மொத்த உற்பத்தியானது சரக்கு-மூலதனமாகச் சுற்றோட்டத்தில் நுழைந்த வண்ணமும், பிறகு சுற்றோட்டத்திலிருந்து மீட்டு வெளியே எடுக்கப்பட்ட வண்ணமுமாய் இருக்கிறது; இப்படி மீட்டு வெளியே எடுக்கப்பட்டு, திறனுடை முறையிலோ சொந்த முறையிலோ நுகரப்படுகிறது—அதாவது உற்பத்திச் சாதனமாகவோ நுகர்வுச் சாதனமாகவோ பயன்படுத்தப்படுகிறது. மாறா-மூலதனத்தைக் கவனியாது விடுவோமானால், வருடாந்தர உற்பத்தியானது தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையே பங்கிடப்படுவது மட்டுமே அதனால் பாதிக்கப்படுகிறது.

ஆகவே, சாமானிய மறுவுற்பத்தியே நடைபெறுவதாகக் கொண்டாலும் கூட, உபரி-மதிப்பின் ஒரு பகுதி எப்போதுமே உற்பத்திப் பண்டங்களின் வடிவில் அல்லாமல் பணத்தின் வடிவில் இருந்து வர வேண்டும்; அப்போதுதான் நுகர்வுக்காக அதனைப் பண வடிவிலிருந்து பண்ட வடிவுக்கு மாற்ற முடியும். இவ்வாறு உபரி-மதிப்பு அதன் ஆரம்ப வடிவமாகிய சரக்கு வடிவத்திலிருந்து பணமாக மாற்றப்படுவதை இந்த இடத்தில் மேலும் பகுத்தாய்ந்திட வேண்டும். பிரச்சினையை அதன் சாமானிய ஆரம்ப வடிவுக்குச் சுருக்குவோம்—அதாவது மெய்யான சமதையாக அமைகிற பணம் மட்டுமே, உலோக நாணயம் மட்டுமே புழக்கத்தில் இருப்பதாய்க் கொள்வோம்.

சாமானிய சரக்குச் சுற்றோட்டத்துக்குரிய விதிகளின் படி (முதல் பாகம், அத்தியாயம் IIIஇல் வகுத்துரைக்கப்பட்ட விதிகள் இவை) ஒரு நாட்டில் இருந்து வரும் உலோக நாணயத் திரள் சரக்குகளைச் சுற்றியோடச் செய்வதற்குப் போதுமானதாய் இருக்க வேண்டியதோடு, பணப் புழக்கத்தின் ஏற்ற இறக்கங்களைச் சமாளிப்பதற்கும்

போதுமானதாய் இருக்க வேண்டும். இந்த ஏற்ற இறக்கங்கள், ஓரளவுக்கு சுற்றோட்ட வேகத்திலான ஏற்ற இறக்கங்களிலிருந்தும், ஓரளவுக்குப் பண்ட விலைகளில் ஏற்படுகிற மாற்றத்திலிருந்தும், ஓரளவுக்குப் பணமானது கொடுப்புச் சாதனமாகவும் முறையான சுற்றோட்ட ஊடகமாகவும் செயல்படுகிற விகிதாசாரத்திலான மாறு பாடுகளிலிருந்தும் எழுகிறவை. இருக்கிற பணத் திரள் சேர்ப்பாக வும் சுற்றோட்டத்திலுள்ள பணமாகவும் பிரிகிற விகிதாசாரம் ஓயாமல் மாறுகிறது; ஆனால் எப்போதுமே பணத்தின் மொத்தப் பரிமாணமானது சேர்ப்பாக இருக்கும் பணம், சுற்றோட்டத்தில் இருக்கிற பணம் இவை இரண்டின் கூட்டுத் தொகைக்குச் சமமாகும். பணத்தின் இந்தப் பரிமாணம் (உயர்நிலை உலோகத்தின் பரி மாணம்) சிறிது சிறிதாகத் திரட்டப்பட்ட சமுதாயச் சேர்ப்பாகும். இந்தச் சேர்ப்பில் தேய்மானத்தால் அழியும் பகுதியினை பிற பண்டங்கள் தொடர்பாகச் செய்வது போலவே—ஆண்டுதோறும் மாற்றீடு செய்தாக வேண்டும். குறிப்பிட்ட நாட்டின் வருடாந்தர உற்பத்தியில் ஒரு பகுதியை, தங்கமும் வெள்ளியும் உற்பத்தியாகிற நாடுகளின் பண்டத்துக்காக நேரடியாகவோ சுற்றடியாகவோ பரி வர்த்தனை செய்வதன்மூலம் எதார்த்தத்தில் இந்த மாற்றீடு நடந் தேறுகிறது. நாடுகளிடையே நடைபெறும் இந்தக் கொடுக்கல் வாங் கலின் சர்வதேசத் தன்மையானது இந்த சர்வசாதாரணப் பரிமாற் றத்தின் சாமானியத் தன்மையைக் கண்ணில் படாமல் மறைத்து விடுகிறது. பிரச்சினையை மிகத் தெளிவான அதன் எளிய வடிவில் புலப்படுத்திக் காட்டும் பொருட்டு, அந்தந்த நாட்டிலேயே தங்கமும் வெள்ளியும் உற்பத்தியாவதாக வைத்துக் கொள்கிறோம்; அதாவது தங்க, வெள்ளி உற்பத்தியானது ஒவ்வொரு நாட்டின் மொத்தச் சமுதாய உற்பத்தியின் பகுதியாய் இருப்பதாகக் கொள்கிறோம்.

சொகுசுப் பண்டங்களுக்காக உற்பத்தி செய்யப்படும் தங்கம், வெள்ளியை ஒதுக்கி விட்டால், அவற்றின் வருடாந்தர உற்பத்தியின் குறைந்தபட்ச அளவானது வருடாந்தரப் பணப் புழக்கத்தால் உலோகப் பணத்தில் ஏற்படும் தேய்மானத்துக்குச் சமமாய் இருக்க வேண்டும். அதோடு, ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்பட்டுச் சுற்றியோடும் சரக்குத் திரள்களின் மதிப்புகளது தொகை அதிகரிக்கையில் தங்கம், வெள்ளியின் வருடாந்தர உற்பத்தியும் அதே போல் அதிகரித்தாக வேண்டும். சுற்றோட்டத்தில் செல்லும் சரக்குகளது மதிப்புகளின் கூட்டுத் தொகையில் ஏற்படுகிற அதிகரிப்பும் அவற்றின் சுற் றோட்டத்துக்கும் (இதற்கிணையான சேர்ப்பின் உருவாக்கத்துக்கும்) தேவைப்படும் பணத்தின் பரிமாணமும் பண ஓட்டத்தின் கூடுத லான வேகத்தாலும், பணம் முன்னிலும் விரிவான முறையில் கொடுப்புச் சாதனமாகப் பயன்படுவதாலும் (அதாவது மெய்யான பணத்தின் குறுக்கீடு இல்லாமலே வாங்கல்களையும் விற்றல்களையும் பரஸ்பரம் நேர் செய்வது முன்னிலும் அதிகமாய் நடைபெறுவதாலும்)

ஈடு செய்யப்படாத வரை, தங்கம், வெள்ளியின் வருடாந்தர உற்பத்தி மேற்சொன்னவாறு அதிகரித்தாக வேண்டும்.

ஆகவே, சமுதாய உழைப்புச் சக்தியில் ஒரு பகுதியையும் சமுதாய உற்பத்திச் சாதனங்களில் ஒரு பகுதியையும் ஆண்டுதோறும் தங்க, வெள்ளி உற்பத்திக்காகச் செலவிட்டாக வேண்டும்.

தங்க, வெள்ளி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள முதலாளிகள், சாமானிய மறுவுற்பத்தியே நடைபெறுவதாக நாம் கொண்டுள்ளதால், தங்கம், வெள்ளி இவற்றின் வருடாந்தர சராசரித் தேய்மானத்துக்கும் இந்தத் தேய்மானத்தை ஈடு செய்வதற்கு அவசியமாகிற வருடாந்தர சராசரி நுகர்வுக்குமான எல்லைகளுக்குட்பட்டே அவற்றை உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் தமக்குக் கிடைக்கும் உபரி-மதிப்பைக் கொஞ்சம் கூட மூலதனமாக்காமல் அப்படியே ஆண்டு தோறும் நுகர்வதாக அனுமானித்துக் கொள்கிறோம். ஆகவே இம் முதலாளிகள் உபரி-மதிப்பை நேரடியாகப் பண வடிவில் சுற்றோட்டத்தில் செலுத்துகிறார்கள். பண வடிவம்தான் இங்கே உற்பத்திப் பொருளின் இயற்கை வடிவமாகும்; ஏனைய உற்பத்திக் கிளைகளில் இப்படியல்ல, பண வடிவம் அங்கே உற்பத்திப் பொருளின் மாறிய வடிவமாகும்.

மேலும், கூலியைப் பொறுத்த வரை—மாறும்-மூலதனம் பண வடிவில் முன்னீடு செய்யப்பட்டு கூலியாக தரப்படுகிறது—அதுவும் கூட ஆரம்பத்திலிருந்து பண வடிவத்திலேயே இருக்கும் உற்பத்திப் பண்டத்தால் மாற்றீடு செய்யப்படுகிறதே ஒழிய உற்பத்திப் பண்டத்தை விற்றுப் பணமாக மாற்றுவதன் மூலம் மாற்றீடு செய்யப்படவில்லை.

முடிவில் காலவட்ட முறையில் நுகரப்படும் மாறா-மூலதனமும் கூட—ஆண்டுதோறும் நுகரப்படும் மாறாச் சுழல்-மூலதனம், மாறா நிலை-மூலதனம் ஆகிய இரண்டும் கூட—இதே முறையில்தான் உயர்நிலை உலோக உற்பத்திப் பண்டத்தில் அதற்குச் சமமான மதிப்புள்ள பகுதியைக் கொண்டு நேரடியாகவே மாற்றீடு செய்யப்படுகிறது.

உயர்நிலை உலோகங்களின் [precious metals] உற்பத்தியில் முதலீடாகியுள்ள மூலதனத்தின் சுற்று அல்லது புரள்வினை முதலில் M — C ... P... M′ என்ற வடிவில் பரிசீலிப்போம். M — C என்பதில் உள்ள Cஇல் உழைப்புச் சக்தியும் உற்பத்திச் சாதனங்களும் மட்டுமல்லாமல், நிலை-மூலதனமும்—இதன் மதிப்பில் ஒரு பகுதி மட்டுமே Pஇல் நுகரப்படுகிறது—அடங்கும் என்பதால் உற்பத்திப் பொருளாக வருவதன் மதிப்பாகிய M′ என்பது கூலியாகச் செலவான மாறா-மூலதனம், உற்பத்திச் சாதனங்களில் முதலீடாகியுள்ள மாறாச் சுழல்-மூலதனம், தேய்மானமுற்ற நிலை-மூலதனத்தின் மதிப்புச் சமதையின் ஒரு பகுதி, மற்றும் உபரி-மதிப்பு ஆகிய இவை யாவற்றின் கூட்டுத் தொகைக்குச் சமமான பணத் தொகையாகும் என்பது

தெளிவு. தங்கத்தின் பொதுவான மதிப்பு மாறாதிருக்க, இந்தப் பணத் தொகை மேற்கூறிய கூட்டுத் தொகைக்குக் குறைவாயிருந் தால், அந்தச் சுரங்கம் இலாபகரமானதாய் இருக்க முடியாது. அல்லது இப்படிக் குறைவாயிருப்பதே பொதுவான நிலவரமானால், மாறாதிருந்து வரும் சரக்குகளின் மதிப்புடன் ஒப்பிடுமிடத்து, தங்கத் தின் மதிப்பு இதையடுத்து உயர்ந்தாக வேண்டும்; அதாவது சரக்கு களின் விலைகள் வீழ்ந்தாக வேண்டும், இனிமேல் M — C என்ப தில் முதலீடு செய்யப்படும் பணத்தின் அளவு குறைந்து விடும்.

M — C ... P ... M′ என்பதன் ஆரம்ப முனையாகிய Mஇல் முன் னீடு செய்யப்படும் மூலதனத்தின் சுழலும் பகுதியை மட்டும் முத லில் கவனிப்போம். குறிப்பிட்ட பணத் தொகை முன்னீடு செய்யப் படுகிறது, அதாவது உழைப்புச் சக்திக்கு ஊதியமளிக்கவும் மூலப் பொருட்கள் வாங்கவும் சுற்றோட்டத்தில் செலுத்தப்படுகிறது. ஆனால் இந்தத் தொகை சுற்றோட்டத்தில் செலுத்தப்படுகிறதே ஒழிய அதிலிருந்து இந்த மூலதனச் சுற்றினால் திருப்பி எடுக்கப்படு வதில்லை; புதிதாகத் திரும்பவும் சுற்றோட்டத்தில் செலுத்துவதற் காகத் திருப்பி எடுக்கப்படுவதில்லை. உற்பத்திப் பொருள் அதன் தசையுருவிலேயே பணமாக இருக்கிறது. ஆகவே, பரிவர்த்தனை யைக் கொண்டு, சுற்றோட்ட நிகழ்முறையின் மூலம், அதனைப் பணமாக மாற்றத் தேவையில்லை. அது உற்பத்தி நிகழ்முறையிலிருந்து சுற்றோட்டத் துறையினுள் செல்லும் போது, மீண்டும் பண-மூல தனமாக மாற்றப்பட வேண்டிய சரக்கு-மூலதனத்தின் வடிவில் செல்வதில்லை; திறனுடை-மூலதனமாக மாற்ற வேண்டிய, அதா வது புதிய உழைப்புச் சக்தியையும் மூலப் பொருட்களையும் வாங்க வேண்டிய பண-மூலதனமாகவே செல்கிறது. உழைப்புச் சக்தியிலும் உற்பத்திச் சாதனங்களிலும் நுகரப்படும் சுழல்-மூலதனத்தின் பண வடிவம் உற்பத்திப் பண்டத்தின் விற்பனையால் மாற்றீடு செய்யப் படுவதற்கு பதில், உற்பத்திப் பண்டத்தின் தசையுருவாலேயே மாற் றீடு செய்யப்படுகிறது; இவ்விதம், அதன் மதிப்பை மீண்டும் அதன் சுற்றோட்டத்திலிருந்து பண வடிவில் எடுப்பதன் மூலம் மாற்றீடு செய்யப்படுவதற்கு பதில், புதிதாய் உற்பத்தி செய்யப்பட்ட கூடுதல் பணத்தாலேயே மாற்றீடு செய்யப்படுகிறது.

இச்சுழல்-மூலதனம் £500 என்றும், புரள்வுக் காலம் 5 வாரம் என்றும், வேலைக் காலம் 4 வாரம் என்றும், சுற்றோட்டக் காலம் 1 வாரம் மட்டுமே என்றும் கொள்வோம். ஆரம்ப முதலே 5 வார காலத்துக்கான பணத்தில் திறனுடைச் சரக்கிருப்புக்கென ஒரு பகுதி யும், கூலிக்காக சிறிது சிறிதாய்ச் செலவிடுவதற்கென மற்றொரு பகுதியுமாக 5 வாரத்துக்கு வேண்டிய பணம் ஆரம்பத்திலேயே முன்னீடு செய்யப்பட வேண்டும். 6 ஆவது வாரத்தின் தொடக்கத் தில், £400 மீண்டிருக்கும், £100 விடுவிக்கப்பட்டிருக்கும். ஓயாமல் இப்படித் திரும்பத் திரும்ப நடைபெறும் முந்தைய

நேர்வுகளில் போலவே இங்கேயும் £100 ஆனது புரள்வின் போது குறிப்பிட்ட காலத்துக்கு விடுவிக்கப்பட்ட வடிவில் இருக்கக் காண லாம். ஆனால் அதுவும், மறு பகுதியான £400ஐப் போலவே, புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட கூடுதல் பணத்தால் ஆனதுதான். இங்கே மூலதனம் ஆண்டுக்கு 10 முறை புரள்கிறது. வருடாந்தர உற்பத்தி தங்கத்திலான £5,000 ஆகும். (இந்த உதாரணத்தில், சுற்றோட்டக் காலமாக அமைவது பணத்தை உற்பத்தி-அடிக்கூறு களாக மாற்றுவதற்குத் தேவைப்படும் காலமே தவிர, சரக்குகளைப் பணமாக மாற்றுவதற்குத் தேவைப்படும் காலமன்று.)

இதே நிலைமைகளில் புரள்கிற ஏனைய ஒவ்வொரு £500 மூலதனத்தையும் பொறுத்த வரை, ஓயாது புதிது புதிதாய் வரும் பண வடிவமானது 4 வாரத்துக்கு ஒரு முறை உற்பத்தி செய்யப் பட்டு சுற்றோட்டத்தில் செலுத்தப்படும் சரக்கு-மூலதனம் உரு மாறிப் பெறுகிற வடிவமே ஆகும். சரக்கு-மூலதனமாக சுற்றோட் டத்துள் நுழையும் இது விற்பனையாகிப் பணமாகிறது—அதாவது ஆரம்பத்தில் நிகழ்முறையில் அடியெடுத்து வைத்த போது அது குறித்த பண அளவு காலவட்ட முறையில் சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுக்கப்படுகிறது. இவ்வாறு திரும்பத் திரும்ப அது பண வடிவெடுக்கிறது. ஆனால் இங்கே இதற்கு மாறாக ஒவ்வொரு புரள்வுக் காலத்தின் போதும் கூடுதலாக £500 புதிய பணம் உற்பத்தி நிகழ்முறையிலிருந்து வெளிப்பட்டுச் சுற்றோட்டத்துள் நுழைகிறது, தொடர்ந்து மூலப் பொருட்களாகவும் உழைப்புச் சக்தி யாகவும் சுற்றோட்டத்திலிருந்து வெளிவருகிறது. ஒவ்வொரு தரமும் சுற்றோட்டத்தினுள் செலுத்தப்படும் பணமானது இந்த மூலதனம் நிகழ்த்துகிற சுற்றினால் அதிலிருந்து திருப்பி எடுத்துக் கொள்ளப் படுவதில்லை; மாறாக, ஓயாமல் திரும்பத் திரும்பப் புதிதாக உற்பத்தி செய்யப்படும் தங்கமும் வந்து சேருவதால் மேலும் மேலும் அதிகரித் துச் செல்கிறது.

இந்தச் சுழல்-மூலதனத்தின் மாறும் பகுதியைப் பார்ப்போம். முன்போலவே அதை £100 எனக் கொள்வோம். இந்த £100, சாதாரண சரக்கு உற்பத்தியில், 10 புரள்வுகளின் போது உழைப்புச் சக்திக்குத் தொடர்ந்து ஊதியமளிக்கப் போதுமானதாயிருக்கும். இங்கே தங்க உற்பத்தியிலும் அதே தொகை போதுமானது. ஆனால் உழைப்புச் சக்திக்கு ஊதியமாக அளிக்கப்படுவதும் 5 வாரத்துக்கு ஒரு முறை மீள்வதுமான இந்த £100 ஆனது அதன் உற்பத்திப் பண்டத்தின் மாறிய வடிவமாக அமைவதற்கு பதில், திரும்பத் திரும்பப் புதிதாக உற்பத்தியாகிற பண்டத்தையே சேர்ந்த ஒரு பகுதி யாக அமைகிறது. தங்க உற்பத்தியாளர் தனது தொழிலாளர்களுக்கு அவர்களே உற்பத்தி செய்யும் தங்கத்தின் ஒரு பகுதியை அப்படியே எடுத்து ஊதியமாகத் தருகிறார். ஆகவே, உழைப்புச் சக்திக்காக இவ்விதம் ஒவ்வோர் ஆண்டும் அவர் £1,000 செலவிடுகிறார்;

கூலியாகப் பெறுகிற இந்த £1,000ஐத் தொழிலாளர்கள் சுற்றோட்டத்தினுள் செலுத்துகிறார்கள். ஆகவே இந்தத் தொகை சுற்றோட்டத்தின் வழியாக அதன் ஆரம்ப முனைக்குத் திரும்புவதில்லை.

மேலும், நிலை-மூலதனத்தைப் பொறுத்த வரை, ஆரம்பத்தில் தொழிலை நிறுவும் போது அதற்கு ஒப்பளவில் பெரியதொரு பண-மூலதன முதலீடு தேவைப்படுகிறது. இந்த மூலதனம் இவ்வாறு சுற்றோட்டத்தினுள் செலுத்தப்படுகிறது. எல்லா நிலை-மூலதனத்தையும் போலவே, இதுவும் பல்லாண்டு காலத்தில் சன்னம் சன்னமாகவே மீள்கிறது. ஆனால் அது உற்பத்திப் பொருளின் — தங்கத்தின் — நேரடிப் பகுதியாக மீள்கிறதே தவிர, உற்பத்திப் பொருளை விற்று இவ்விதம் அதைப் பணமாக உருமாற்றம் பெறச் செய்வதன் மூலம் அல்ல. அதாவது சுற்றோட்டத்திலிருந்து பணத்தைத் திருப்பி எடுப்பதன் மூலம் அல்லாமல், உற்பத்திப் பொருளில் அதற்கு ஈடான பகுதி சன்னம் சன்னமாகத் திரட்டப்படுவதன் மூலம் இந்த நிலை-மூலதனம் பையப் பைய பண வடிவத்துக்கு மீள்கிறது. இப்படி மீட்கப்படும் இந்தப் பண-மூலதனம், நிலை-மூலதனத்திற்காக ஆரம்பத்தில் சுற்றோட்டத்தினுள் செலுத்தப்பட்ட தொகையை ஈடு செய்வதற்காகச் சுற்றோட்டத்திலிருந்து பையப் பைய திருப்பி எடுக்கப்படும் பணத் தொகை அன்று. கூடுதலாக வந்து சேரும் பணத் தொகையே ஆகும் இந்தப் பண-மூலதனம்.

முடிவில், உபரி-மதிப்பைப் பொறுத்த வரை, அதுவும் புதிதாக உற்பத்தி செய்யப்படும் தங்கத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியாகி சுற்றோட்டத்துள் செல்கிறது. நமது அனுமானத்தின் படி, இப்பகுதியானது வாழ்வுச் சாதனங்களுக்காகவும் சொகுசுப் பண்டங்களுக்காகவும் உற்பத்தித் திறனற்ற முறையில் செலவிடப்படும் பொருட்டு, ஒவ்வொரு புதிய புரள்வுக் காலத்தின் போதும் சுற்றோட்டத்தினுள் செலுத்தப்படுகிறது.

ஆனால், தங்கத்தின் வருடாந்தர உற்பத்தியானது தொடர்ந்து புதிது புதிதாய்ப் பணத் தொகைகளை சந்தையில் சேர்ப்பிக்கிறதே தவிர, பணத்தைச் சந்தையிலிருந்து திருப்பி எடுப்பதில்லை; உழைப்புச் சக்தியையும் மூலப் பொருட்களையும் மட்டும்தான் சந்தையிலிருந்து எடுத்துக் கொள்கிறது. நமது அனுமானத்தின் படி இந்த வருடாந்தரத் தங்க உற்பத்தி அந்தந்த ஆண்டிலும் தேய்மானமுறும் பணத்தை மாற்றீடு செய்ய மட்டுமே பயன்படுகிறது. இவ்விதம் இந்த வருடாந்தரத் தங்க உற்பத்தி சமுதாயப் பண இருப்பைக் குறையாமல் பார்த்துக் கொள்கிறது; இந்தச் சமுதாயப் பண இருப்பு பணச் சேர்ப்பும் சுற்றோட்டத்தில் இருக்கும் பணமும் ஆகிய இரு வடிவங்களில் நிலவுகிறது. இரு வடிவங்களுக்கும் இடையிலான விகிதம் மாறுபடுகிறதே ஒழிய, சமுதாயப் பண இருப்பின் மொத்த அளவு மாற்றமின்றி எப்போதுமே நிலையாக இருந்து வருகிறது.

சரக்குச் சுற்றோட்ட விதியின் படி, பணத்தின் அளவானது சுற்றோட்டத்துக்கு தேவைப்படும் பணத் தொகையையும் பணச் சேர்ப்பின் வடிவில் வைத்துக் கொள்ளப்படும் குறிப்பிட்ட தொகை யையும் கூட்டி வருவதற்குச் சமமாய் இருந்தாக வேண்டும். இந்தப் பணச் சேர்ப்பானது சுற்றோட்டம் சுருங்குவதற்கோ விரிவடை வதற்கோ ஏற்ப அதிகரிக்கவோ குறையவோ செய்கிறது; முக்கிய மாய் கொடுப்புச் சாதனத்தின் இன்றியமையாச் சேம நிதியங்கள் உருவாவதற்கு அது பயன்படுகிறது. கணக்குகள் ஒன்றுக்கொன்று நேர் செய்யப்படாத போது, பணமாகச் செலுத்தியாக வேண்டிய தாய் இருப்பதுதான் சரக்குகளின் மதிப்பு. இந்த மதிப்பின் ஒரு பகுதி உபரி-மதிப்பால் ஆனது என்பதால், அதாவது சரக்குகளை விற்பவர் அதற்காக எச்செலவும் செய்யவில்லை என்பதால், மேலே நாம் கூறியதில் எவ்வித மாற்றமும் உண்டாவதில்லை. எல்லா உற்பத்தியாளர்களும் தம் உற்பத்திச் சாதனங்களின் சுயேச்சையான உடைமையாளர்கள் என்றும், எனவே சுற்றோட்டம் நேரடி உற் பத்தியாளர்களிடையே நடைபெறுகிறது என்றும் கொள்வோம். அப்போது, அவர்களது மூலதனத்தின் மாறாப் பகுதி ஒரு புற மிருக்க, அவர்களது வருடாந்தர உற்பத்தியின் மதிப்பை முத லாளித்துவ நிலைமைகளுக்கொப்ப இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்: பகுதி a — இது அவசிய வாழ்வுச் சாதனங்களை மட்டும் மாற்றீடு செய்வது; பகுதி b — இதில் ஒரு பாகம் சொகுசுப் பண்டங்களாக நுகரப்படுவது, மற்றொரு பாகம் உற்பத்திப் பெருக்கத்துக்காக நுகரப்படுவது. அப்படியானால் பகுதி a மாறும்-மூலதனத்தையும் பகுதி b உபரி-மதிப்பையும் குறிக்கின்றன. ஆனால் அவர்களது மொத்த உற்பத்தியின் சுற்றோட்டத்துக்குத் தேவைப்படும் பணத் தொகையின் பருமன் இந்தப் பிரிவினையால் பாதிக்கப்படவில்லை. ஏனைய காரணிகள் சமமாயிருக்குமாயின், சுற்றோட்டத்தில் இருக் கும் சரக்குத் திரளின் மதிப்பில் மாற்றம் இருக்காது; ஆகவே அந்த மதிப்புக்குத் தேவைப்படும் பணத் தொகையிலும் மாற்றம் இருக் காது. புரள்வுக் காலங்கள் முன்போலவே பிரிக்கப்பட்டால், அவர் கள் முன்போல் அதே அளவு பணத்தையே சேம வைப்பாக வைத்துக் கொள்ள வேண்டியிருக்கும்; அதாவது, அவர்களது மூலதனத்தில் எப்போதும் பண வடிவில் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கும் பகுதியின் அளவில் மாற்றம் இருக்காது. ஏனென்றால், நமது அனுமானத்தின் படி, அவர்களது உற்பத்தி முன்போலவே சரக்கு உற்பத்தியாகத்தான் இருக்கும். எனவே சரக்குகளின் மதிப்பில் ஒரு பகுதி உபரி-மதிப்பால் ஆனது என்பதால், தொழிலை நடத்துவதற் குத் தேவைப்படும் பணத்தின் அளவில் எந்த மாற்றமும் ஏற்பட்டு விடாது.

M — C — M′ என்னும் சூத்திரத்தை இறுகப் பற்றிக் கொள்பவர் இந்த டூக். இவரது எதிராளி ஒருவர் இவரைக் கேட்கிறார்: முதலாளி

சுற்றோட்டத்தினுள் செலுத்துவதைக் காட்டிலும் எப்போதுமே அதிகமான பணத்தை அதிலிருந்து எடுக்கிறாரே, எப்படி அது? கேள்வியைப் பாருங்கள்! உபரி-மதிப்பு **உருவாக்கப்படுவது** பற்றி கேள்வி எழுப்பப்படவில்லை. பரம இரகசியமாய் இருப்பது இது ஒன்றுதான். ஆனால் முதலாளித்துவக் கண்ணோட்டத்தின் படி இது முற்றிலும் இயல்பான ஒன்றாகுமே தவிர, கேள்விக்கு உரியது அல்லவே அல்ல. உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் மதிப்புகளின் தொகை உபரி-மதிப்பைக் கொண்டுவந்து தன்னுடன் சேர்த்துத் தன் பருமனைப் பெருக்கிக் கொள்ளவில்லையானால், அது மூலதன மாகாது. ஆனால் அது மூலதனமாகும் என்பதே நமது அனுமான மாய் இருப்பதால், அதிலிருந்து உபரி-மதிப்பு உண்டாவதும் முற்றிலும் இயல்பான ஒன்றாகி விடுகிறது.

அப்படியானால், உபரி-மதிப்பு எங்கிருந்து வருகிறது என்ற கேள்விக்கு இங்கு இடமில்லை; இந்த உபரி-மதிப்பு பணமாக மாற்றப்படுவதற்கு வேண்டிய பணம் எங்கிருந்து வருகிறது என்ற கேள்விதான் எழ முடியும்.

முதலாளித்துவப் பொருளாதார இயலில், உபரி-மதிப்பு என்பதாக ஒன்று இருப்பதானது கூறாமலே விளங்குவதாகும். ஆகவே அப்படி ஒன்று இருப்பதாய் அது அனுமானித்துக் கொள்வதோடு கூட, சுற்றோட்டத்துள் செலுத்தப்படும் சரக்குத் திரளில் ஒரு பகுதி உபரி-உற்பத்தியாகும் என்றும், எனவே முதலாளி தமது மூலதனத்தில் ஒரு பகுதியாகச் சுற்றோட்டத்தினுள் செலுத்தாத மதிப்பாகும் என்றும் அனுமானித்துக் கொள்கிறது. ஆகவே, முதலாளி தமது உற்பத்திப் பொருளைச் சுற்றோட்டத்துள் செலுத்தும் போது, தமது மூலதனத்தையன்னியில் கூடுதலாக ஓர் உபரியையும் சுற்றோட்டத்துள் செலுத்துகிறார் என்றும், இந்த உபரியை அதிலிருந்து வெளியே எடுத்துக் கொள்கிறார் என்றும் கொள்ளப்படுகிறது.

முதலாளி சுற்றோட்டத்துள் செலுத்திடும் சரக்கு-மூலதனமானது உழைப்புச் சக்தி, உற்பத்திச் சாதனங்கள் ஆகியவற்றின் வடிவில் சுற்றோட்டத்திலிருந்து அவர் வெளியே எடுக்கும் திறனுடை-மூல தனத்தைக் காட்டிலும் அதிக மதிப்பைக் கொண்டதாகும் (இந்தக் கூடுதல் மதிப்பு எங்கிருந்து வருகிறது என்பதை விளக்காமல் மூடு மந்திரமாகவே வைத்துக் கொண்டாலும், இந்தக் கூடுதல் மதிப்பு வந்து சேருவதை முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம் மெய் யென்றே கொள்கிறது). A முதலாளி மட்டுமல்லாமல் B, C, D... முதலான எல்லா முதலாளிகளும் ஆரம்பத்திலும் பிறகு திரும்பத் திரும்பவும் தாம் முன்னீடு செய்கிற மூலதனத்தின் மதிப்பைக் காட்டிலும் எப்போதுமே அதிகமான மதிப்பை, தங்களது சரக்குகளின் பரிவர்த்தனையின் மூலம் சுற்றோட்டத்திலிருந்து எடுத்துக் கொள்ள முடிவது எப்படி என்பது இந்த அனுமானத்தின் அடிப்படையில் தெளிவாகி விடுகிறது. A, B, C, D... முதலானவர்கள் சுற்றோட்டத்

திலிருந்து திறனுடை-மூலதனத்தின் வடிவில் எடுப்பதைக் காட்டிலும் அதிகமான சரக்கு-மதிப்பை சரக்கு-மூலதனத்தின் வடிவில் தொடர்ந்து சுற்றோட்டத்துள் செலுத்துகின்றனர்—சுயேச்சையாகச் செயல்படும் மூலதனங்கள் எப்படிப் பலதரப்பட்டவையாய் இருக்கின்றனவோ அப்படி இந்தச் செயற்பாடும் பன்முகம் கொண்டதாய் இருக்கும். ஆகவே இந்த முதலாளிகள் தாம் முன்னீடு செய்யும் திறனுடை-மூலதனங்களது மதிப்புகளின் கூட்டுத் தொகைக்குச் சமமான மதிப்புத் தொகையை தொடர்ந்து தம்மிடையே பகிர்ந்து கொண்டாக வேண்டும் (அதாவது, ஒவ்வொருவரும் தமது திறனுடை-மூலதனத்தைச் சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுத்தாக வேண்டும்); இதே போல் இவர்கள் எல்லாரும் தத்தமது உற்பத்தி-அடிக்கூறுகளின் மதிப்புகளுக்குக் கூடுதலாகச் சரக்குகளின் வடிவில் எல்லாப் பக்கங்களிலிருந்தும் சுற்றோட்டத்துள் செலுத்தும் மதிப்புகளின் தொகையையும் தொடர்ந்து தம்மிடையே பகிர்ந்து கொண்டாக வேண்டும்.

ஆனால் சரக்கு-மூலதனத்தைத் திரும்பவும் திறனுடை-மூலதனமாக மாற்றும் முன்பும் அதில் அடங்கியுள்ள உபரி-மதிப்பைச் செலவிடும் முன்பும் அதைப் பணமாய் மாற்றியாக வேண்டும். இதற்கு வேண்டிய பணம் எங்கிருந்து வருகிறது? முதற் பார்வைக்கு இந்தக் கேள்வி கடினமானதாகத் தோன்றுகிறது; டூக்கும் சரி, ஏனைய எவரும் சரி, இதுகாறும் இதற்குப் பதிலளிக்கவில்லை.

பண-மூலதனத்தின் வடிவில் முன்னீடு செய்யப்படும் £500 சுழல்-மூலதனத்தை—அதன் புரள்வுக் காலம் என்னவானாலும்—சமுதாயத்தின், அதாவது முதலாளி வர்க்கத்தின் மொத்தச் சுழல்-மூலதனமாகக் கொள்வோம். உபரி-மதிப்பு £100 என்போம். முதலாளி வர்க்கம் முழுவதும் சுற்றோட்டத்துள் தொடர்ந்து £500 மட்டுமே செலுத்தி விட்டு, சுற்றோட்டத்திலிருந்து தொடர்ந்து £600 வெளியே எடுக்கிறதே, அது எப்படி?

£500 பண-மூலதனம் திறனுடை-மூலதனமாக மாற்றப்பட்ட பிறகு, இந்தத் திறனுடை-மூலதனம் உற்பத்தி நிகழ்முறைக்குள்ளேயே £600 பெறுமானமுள்ள சரக்குகளாக மாறுகிறது. ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட்ட பண-மூலதனத்திற்குச் சமமான £500 மதிப்புள்ள சரக்குகளோடு, புதிதாய் உற்பத்தியான £100 உபரி-மதிப்பும் சேர்ந்து இப்போது சுற்றோட்டத் துறைக்குச் செல்கிறது.

கூடுதல் மதிப்பாகிய இந்த £100 உபரி-மதிப்பானது சரக்குகளின் வடிவில் சுற்றோட்டத்துள் செலுத்தப்படுகிறது. இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் இந்தக் கூடுதல் சரக்கு-மூலதனத்தின் சுற்றோட்டத்துக்குத் தேவையான கூடுதல் பணம் எவ்விதத்திலும் இச்செயலால் கிடைப்பதில்லை.

என்னதான் சாமர்த்தியம் செய்து பார்த்தாலும் இந்தச் சிக்கலைச் சமாளிக்க முடிவதில்லை.

எடுத்துக்காட்டாக: மாறாச் சுழல்-மூலதனத்தைப் பொறுத்த வரை, எல்லாருமே ஒரே சமயத்தில் அதனை முதலீடு செய்வதில்லை, இது கண்கூடு. முதலாளி A தமது சரக்குகளை விற்கிறார்; அவரால் முன்னீடு செய்யப்பட்ட மூலதனம் இவ்வழியில் பண வடிவம் பெறுகிறது. இந்தச் சரக்குகளை முதலாளி B வாங்குகிறார்; அவரிடம் தயாராய் இருக்கும் பண-மூலதனம் இவ்வழியில் அவரது உற்பத்திச் சாதனங்களாய் உருமாறுகிறது — A உற்பத்தி செய்கிற உற்பத்திச் சாதனங்கள் இவை. A உற்பத்தி செய்யும் சரக்கு-மூலதனம் திரும்பவும் பண வடிவத்துக்கு மாறிச் செல்வதற்கு உதவுகிற அதே செயலானது Bஇன் மூலதனம் திறனுடை-மூலதன வடிவத்துக்கு மாறிச் செல்வதற்கும் உதவுகிறது — அதாவது பண வடிவில் இருக்கும் அவரது மூலதனம் உற்பத்திச் சாதனங்களாகவும் உழைப்புச் சக்தியாகவும் மாறுவதற்கும் உதவுகிறது. M — C என்னும் சாமானிய வாங்கல் நிகழ்முறை ஒவ்வொன்றிலும் நடைபெறுவது போலவே இந்த இருவழி நிகழ்முறையிலும் ஒரே ஒரு பணத் தொகைதான் செயல்படுகிறது. இதன் பிறகு A தமது பணத்தை மீண்டும் உற்பத்திச் சாதனங்களாக மாற்றும் போது, அவர் Cஇடமிருந்து அவற்றை வாங்குகிறார்; பிறகு Cஇந்தப் பணத்தை Bஇடம் செலுத்துகிறார்.... இவ்வாறே தொடர்ந்து நடைபெறுகிறது. இவ்வழியில் இந்தக் கொடுக்கல் வாங்கலுக்கு விளக்கமளித்து விட்டதாகத் தோன்றக் கூடும். ஆனால்:

சரக்குச் சுற்றோட்டத்தில் சுழலுகிற பணத்தின் அளவு தொடர்பாக நிலைநாட்டப் பெற்றிருக்கும் விதிகளில் எதுவுமே (முதல் பாகம், அத்தியாயம் III) உற்பத்தி நிகழ்முறையின் முதலாளித்துவத் தன்மையால் எவ்விதத்திலும் மாறி விடுவதில்லை.

எனவே, சமுதாயம் பண வடிவில் முன்னீடு செய்யும் சுழல்-மூலதனம் £500 ஆகும் என்று கூறும் போது, இது ஒரே சமயத்தில் முன்னீடு செய்யப்படும் தொகை ஆகும் என்பதோடு, பல்வேறு திறனுடை-மூலதனங்களுக்குமான பண-நிதியமாக மாறிமாறிப் பயன்படுவதால், £500ஐக் காட்டிலும் அதிகமான திறனுடை-மூலதனத்தை இயங்க வைக்கிறது என்பதும் ஏற்கெனவே கணக்கில் கொள்ளப்படுகிறது. எனவே இவ்வழியில் பிரச்சினைக்கு விளக்கமளிப்பதானது பிரச்சினைக்குரிய பணத் தொகை எங்கிருந்து வருகிறது என்று விளக்குவதற்கு பதில், அந்தப் பணத் தொகையை ஏற்கெனவே இருக்கிற ஒன்றாய் அனுமானித்துக் கொண்டு விடுவதால் மெய்யான விளக்கமாவதில்லை.

வேறொரு விதமான விளக்கம்: முதலாளி B தனிப்பட்ட சொந்த முறையில்,. அதாவது திறனிலா முறையில் நுகரும் பண்டங்களை முதலாளி A உற்பத்தி செய்கிறார். ஆகவே Bஇன் பணம் Aஇன் சரக்கு-மூலதனத்தைப் பணமாக மாற்றுகிறது; இவ்வாறு ஒரே பணத் தொகை Bஇன் உபரி-மதிப்பையும் Aஇன் மாறாச்

சுழல்-மூலதனத்தையும் ஈடேற்றம் செய்யப் பயன்படுகிறது. ஆனால் தீர்வு காண வேண்டிய பிரச்சினை ஏற்கெனவே தீர்க்கப்பட்டு விட்டதாக இன்னுங்கூட நேரடியாக அனுமானித்துக் கொண்டு விடுகிறது இந்த விளக்கம். தீர்வு காண வேண்டிய பிரச்சினை இது தான்: Bஇன் வருவாயாக இருக்கும் பணத்தை அவர் எங்கிருந்து பெறுகிறார்? அவரது உற்பத்திப் பொருளிலிருந்து உபரி-மதிப்பின் இந்தப் பகுதியை அவர் எப்படி ஈடேற்றம் செய்து கொள்கிறார்?

A ஆனவர் தமது தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து முன்னீடு செய்கிற மாறும் சுழல்-மூலதனப் பகுதி சுற்றோட்டத்திலிருந்து தொடர்ந்து அவரிடம் மீண்டு வந்து சேருகிறது என்றும், அதில் மாறும் அளவு கொண்ட ஒரு பகுதி மாத்திரமே கூலி கொடுப்பதற்காக அவர் வசம் எப்போதும் தங்குகிறது என்றும் கூறப்படலாம். ஆனால் முதலீட்டுக்கும் மீள்வுக்கும் இடையே எப்படியும் குறிப்பிட்ட காலம் கழிகிறது, இதற்கு இடையில் கூலியாகத் தரப்படும் பணம் வேறு சில காரியங்களுக்குப் பயன்படுவதோடு, உபரி-மதிப்பின் ஈடேற்றத்துக்கும் பயன்படலாம்.

ஆனால் முதலாவதாக, இரண்டுக்கும் இடைப்பட்ட இந்தக் காலம் எவ்வளவுக்கு எவ்வளவு நீள்கிறதோ, முதலாளி A அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமான பணத்தை எப்போதும் கையிருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நாமறிவோம். இரண்டாவதாக, தொழிலாளி பணத்தைச் செலவிட்டு சரக்குகள் வாங்கும் போது, அந்தச் சரக்குகளில் அடங்கியுள்ள உபரி-மதிப்பை உரிய விகிதத்தில் பணமாக மாறச் செய்கிறார். ஆதலால் மாறும்-மூலதன வடிவில் முன்னீடு செய்யப்படும் அதே பணம் உபரி-மதிப்பை உரிய விகிதத்தில் பணமாக மாற்றுவதற்கும் பயன்படுகிறது. இந்தப் பிரச்சினையை இங்கு இதற்கு மேல் ஆராயாமல், ஒன்றை மட்டும் சொன்னால் போதும்: அதாவது முதலாளி வர்க்கம் முழுவதற்கும் அதன் பரிவாரங்களுக்கும் அவசியமான நுகர்வானது தொழிலாளி வர்க்கத்தின் நுகர்வைப் போலவே வளர்ந்து செல்கிறது. எனவே தொழிலாளர்கள் சுற்றோட்டத்துள் செலுத்தும் பணத்துடன் கூடவே, முதலாளிகளும் தமது உபரி-மதிப்பை வருவாயாகச் செலவிடும் பொருட்டு சுற்றோட்டத்துள் பணத்தைச் செலுத்தியாக வேண்டும், இதற்காகச் சுற்றோட்டத்திலிருந்து பணம் எடுத்தாக வேண்டும். தேவைப்படும் பணத்தின் அளவைக் குறைப்பதற்கு வேண்டுமானால் இந்த விளக்கம் பயன்படுமே தவிர அந்தப் பணத்தின் தேவையை இது அகற்றி விடுவதில்லை.

இறுதியில், வேறொரு விதத்திலும் விளக்கம் சொல்லலாம்: எப்போதுமே நிலை-மூலதனம் முதன் முதலாய் முதலீடு செய்யப்படும் போது, பெரும் பணத் தொகை சுற்றோட்டத்துள் செலுத்தப்படுகிறது. அதைச் சுற்றோட்டத்துள் செலுத்தியவர் பையப் பையவே, சன்னம் சன்னமாகவே, பல ஆண்டுகளுக்குப் பிற்பாடு

அவரது மூலதனம் ஒவ்வோராண்டும் இன்னும் வேகமாக, ஒரு தரத்துக்கு பதில் பல தரம் புரளுமானால், அப்போதும் நிலைமை மாறி விடுவதில்லை. அவர் முன்னீடு செய்கிற பண-மூலதன மன்னியில், சொந்த நுகர்வுக்காக அவர் சுற்றோட்டத்துள் செலுத்த வேண்டியிருக்கிறது அல்லவா, அந்தப் பணம் எவ்வளவு என்பதும் எவ்வளவு காலத்துக்கு அது முன்னீடு செய்யப்பட வேண்டும் என்பதும்தான் இதனால் பாதிப்புக்கு உள்ளாகின்றன.

முதலாளி இந்தப் பணத்தை சுற்றோட்டத்துள் மூலதனமாகச் செலுத்துவதில்லை. ஆனால் உபரி-மதிப்பு ஈடேற்றம் பெற்று வந்து சேரும் வரை தம்மிடமுள்ளதைக் கொண்டே வாழக் கூடியவராய் இருப்பது முதலாளிக்கே உரிய முக்கியமான ஒரு தனி இயல்பாகும்.

நமது உதாரணத்தில் முதலாளி தமது மூலதனத்தின் முதலாவது வரவுகள் வருகிற வரை தமது சொந்த நுகர்வுக்காக செலவிட்டுச் சுற்றோட்டத்துள் செலுத்தும் பணத் தொகையானது அவரது உற்பத்தியால் வரப்பெற்றுப் பணமாக மாற்றிட வேண்டிய உபரி-மதிப்புக்குச் சரிசமமாய் இருப்பதாக அனுமானித்துக் கொண்டோம். தனிப்பட்ட முதலாளியைப் பொறுத்த வரை இந்த அனுமானம் தன்னிச்சையானது என்பது கண்கூடு. ஆனால் சாமானிய மறுவுற்பத்தியே நடைபெறுவதாகக் கொண்டு, முதலாளி வர்க்கம் முழுவதையும் கணக்கில் எடுத்துக்கொள்வோமாயின் இந்த அனுமானம் சரியானதே. சாமானிய மறுவுற்பத்தி என்பது தெரிவிப்பதையேதான் இந்த அனுமானமும் தெரிவிக்கிறது — உபரி-மதிப்பு முழுவதுமே, அது ஒன்று மட்டுமே திறனிலா முறையில் நுகரப்படுகிறது, தொடக்கத்திலுள்ள மூலதன இருப்பின் எந்தப் பகுதியும் இவ்விதம் நுகரப்படவில்லை என்பதைத்தான் இவை இரண்டும் தெரிவிக்கின்றன.

உயர்நிலை உலோகங்களது உற்பத்தி முழுதும் (இது £500க்குச் சமம் எனக் கொள்கிறோம்) பணத்தின் தேய்மானத்தை மாற்றீடு செய்வதற்கு மட்டுமே போதுமானதாய் இருக்குமென முன்பே அனுமானித்துக் கொண்டோம்.

தங்கம் உற்பத்தி செய்யும் முதலாளிகளின் உற்பத்திப் பொருள் முழுதுமே தங்கமாய் இருக்கிறது — மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்யும் பகுதி, மாறும்-மூலதனத்தை மாற்றீடு செய்யும் பகுதி, மற்றும் உபரி-மதிப்பாக அமையும் பகுதி ஆகிய யாவுமே தங்கமாய் இருக்கின்றன. ஆகவே சமுதாய உபரி-மதிப்பில் ஒரு பகுதி அப்படியே தங்கமாய் இருக்கிறது; வேறொரு பொருளாய் உற்பத்தியாகி பிறகு சுற்றோட்ட நிகழ்முறையின் போது தங்கமாக மாற்றப்படவில்லை. ஆரம்பத்திலிருந்தே அது தங்கமாய் இருக்கிறது. சுற்றோட்டத்திலிருந்து உற்பத்திப் பண்டங்களை வெளியே எடுக்கும் பொருட்டு இந்தத் தங்கம் சுற்றோட்டத்துள் செலுத்தப்படுகிறது. கூலியும், மாறும்-மூலதனமும், முன்னீடு செய்யப்படும் மாறா-மூலதனத்துக்கான

மாற்றீடும் கூட இதே போல் தங்கமாகவே சுற்றோட்டத்துள் செலுத்தப்படுகின்றன. ஆகவே முதலாளி வர்க்கத்தில் ஒரு பகுதியோர் தாம் முன்னீடு செய்யும் பண-மூலதனத்தைக் காட்டிலும் கூடுதலான (உபரி-மதிப்புத் தொகையினளவு கூடுதலான) மதிப்புள்ள சரக்குகளை சுற்றோட்டத்துள் செலுத்துகிறார்கள்; மற்றொரு பகுதியோர் தங்கத்தின் உற்பத்திக்காகத் தாம் சுற்றோட்டத்திலிருந்து எடுத்துக் கொள்ளும் சரக்குகளின் மதிப்பைக் காட்டிலும் கூடுதலான (உபரி-மதிப்புத் தொகையினளவு கூடுதலான) மதிப்புள்ள பணத்தை சுற்றோட்டத்துள் செலுத்துகிறார்கள். முதலாளிகளில் ஒரு பகுதியோர் சுற்றோட்டத்துள் தாம் செலுத்துவதைக் காட்டிலும் அதிகப் பணத்தை அதிலிருந்து வெளியே எடுக்கிறார்கள்; தங்கம் உற்பத்தி செய்யும் மற்றொரு பகுதியோர் உற்பத்திச் சாதனங்களது வடிவில் அதிலிருந்து தாம் எடுத்துக் கொள்வதைக் காட்டிலும் அதிகப் பணத்தை அதனுள் செலுத்துகிறார்கள்.

தங்கமாய் இருக்கும் உற்பத்திப் பொருளான இந்த £500இல் ஒரு பகுதி தங்க உற்பத்தியாளர்களது உபரி-மதிப்பாகும் என்றாலுங் கூட, இந்தத் தொகை முழுதுமே சரக்குச் சுற்றோட்டத்துக்கு வேண்டிய பணத்தை மாற்றீடு செய்வதென்ற ஒரே நோக்கம் கொண்டதாகும். இதில் எவ்வளவு தங்கம் சரக்குகளில் அடங்கியுள்ள உபரி-மதிப்பைப் பணமாக உருமாறச் செய்கிறது, எவ்வளவு தங்கம் சரக்குகளில் உள்ள ஏனைய மதிப்புக் கூறுகளைப் பணமாக மாறச் செய்கிறது என்பது இங்கு நமக்கு முக்கியமானது அல்ல.

தங்க உற்பத்தியை ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு மாற்றுவதால் நிலைமையில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டு விடாது. A என்னும் நாட்டின் சமுதாய உழைப்புச் சக்தியிலும் சமுதாய உற்பத்திச் சாதனங்களிலும் ஒரு பகுதி £500 மதிப்புள்ள உற்பத்திப் பண்டமாக, உதாரணமாய்த் துணியாக மாற்றப்படுகிறது. B என்னும் நாட்டிலிருந்து தங்கம் வாங்கும் பொருட்டு இந்தத் துணி அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறு A நாட்டில் ஈடுபடுத்தப்படும் திறனுடை-மூலதனமானது, அது தங்க உற்பத்தியில் நேரடியாக ஈடுபடுத்தப்பட்டால் சந்தைக்கு அனுப்பக் கூடியதைக் காட்டிலும் அதிகமாய்—பணம் அல்லாத—எந்தப் பண்டத்தையும் A நாட்டின் சந்தைக்கு அனுப்புவதில்லை. Aஇன் இந்த உற்பத்தி தங்க உருவில் £500ஐக் குறிக்கிறது; அது A நாட்டின் சுற்றோட்டத்துள் பணமாகவே நுழைகிறது. சமுதாய உபரி-மதிப்பில் இந்த உற்பத்தி தன்னகத்தே கொண்டுள்ள பகுதியானது A நாட்டைப் பொறுத்த வரை நேரடியாகப் பண வடிவிலேயே இருக்கிறதே அன்றி வேறெந்த வடிவிலும் இல்லை. தங்கம் உற்பத்தி செய்யும் முதலாளிகளுக்கு அவர்களது உற்பத்தியில் ஒரு பகுதி மட்டுமே உபரி-மதிப்பைக் குறிக்கிறது, இன்னொரு பகுதி மூலதனத்தின் மாற்றீட்டைக் குறிக்கிறது என்றாலும், இதில் எவ்வளவு தங்கம்

மாறாச் சுழல்-மூலதனத்தை அன்னியில் மாறும்-மூலதனத்தை மாற்றீடு செய்கிறது. எவ்வளவு தங்கம் உபரி-மதிப்பைக் குறிக்கிறது என்பதெல்லாம் கூலியும் உபரி-மதிப்பும் சுற்றோட்டத்திலுள்ள சரக்குகளின் மதிப்போடு கொண்டுள்ள விகிதங்களையே பொறுத்ததாகும். உபரி-மதிப்பாக அமையும் பகுதியானது முதலாளி வர்க்கத்தின் பல்வேறு உறுப்பினர்களிடையே பங்கிடப்படுகிறது. தொடர்ச்சியாக அவர்கள் இதனைத் தமது சொந்த நுகர்வுக்காகச் செலவிட்டு, புதிய உற்பத்திப் பண்டங்களின் விற்பனை மூலம் மீட்டு எடுத்துக் கொள்கிறார்கள் — இந்த வாங்கலும் விற்றலும்தான் தேவையான பணத்தை அவர்களிடையே சுற்றியோடச் செய்கிறது — என்றாலுங் கூட, சமுதாய உபரி-மதிப்பின் ஒரு பகுதி பணத்தின் வடிவில் — வெவ்வேறு விகிதாசாரங்களில் என்ற போதிலும் — முதலாளிகளது கையிலேயே இருந்து வருகிறது; கூலியில் ஒரு பகுதி பண வடிவில் எப்படியும் வாரத்தில் ஒரு பகுதியிலாவது தொழிலாளர்களது கையில் இருந்து வருகிறது அல்லவா, அது போலத்தான் இதுவும். முதலாளிகளது கையில் தங்கும் இப்பகுதிக்கு வரம்பிடுவது எது? பணப் பண்டத்தில் ஒரு பகுதி தங்கம் உற்பத்தி செய்யும் முதலாளிகளின் உபரி-மதிப்பாக ஆரம்பத்தில் அமைகிறதே, அந்தப் பகுதி இப்படி வரம்பிடவில்லை. மேலே நாம் கூறியதுபோல, £500 ஆன மேற்கண்ட உற்பத்தியானது பொதுவாக முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே எவ்விகிதத்தில் பங்கிடப்படுகிறது என்பதும், சுற்றியோட வேண்டிய சரக்கிருப்பு [commodity-supply] எவ்விகிதத்தில் உபரி-மதிப்பாலும் ஏனைய மதிப்புக் கூறுகளாலும் ஆனதாகும் என்பதும்தான் அதற்கு வரம்பிடுகிறது.

ஆயினும் உபரி-மதிப்பில் ஒரு பகுதி ஏனைய சரக்குகளில் அடக்கம் பெறுவதற்கு பதில், அவற்றுடன் கூடவே பண வடிவில் இருந்து வருகிறது. இந்தப் பகுதியானது ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் தங்கத்தைச் சேர்ந்த ஒரு கூறாகும் — ஆனால் வருடாந்தரத் தங்க உற்பத்தியில் ஒரு பகுதி சுற்றியோடி உபரி-மதிப்பை ஈடேற்றம் பெற வைக்கிறது அல்லவா, அந்த அளவுக்குத்தான் பண-வடிவிலான உபரி-மதிப்பு வருடாந்தரத் தங்க உற்பத்தியைச் சேர்ந்த ஒரு கூறாக முடியும். பணத்தின் மற்றொரு பகுதி முதலாளி வர்க்கத்தாரின் கையில் அவர்களது உபரி-மதிப்பின் பண வடிவமாய் வெவ்வேறு அளவுகளில் இருக்கிறது. பணத்தின் இப்பகுதி நாட்டில் இதற்கு முன்பே திரட்டப் பெற்றிருக்கும் பணத் திரளைச் சேர்ந்த ஒரு கூறாகுமே தவிர வருடாந்தரத் தங்க உற்பத்தியைச் சேர்ந்த ஒரு கூறல்ல.

நமது அனுமானத்தின் படி, வருடாந்தரத் தங்க உற்பத்தியான £500, பணத்தின் வருடாந்தரத் தேய்மானத்தை மாற்றீடு செய்வதற்கு மட்டும்தான் போதுமானது. இந்த £500 ஐ மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு, ஆண்டுதோறும் உற்பத்தியாகிற சரக்குத்

திரளில் இதற்கு முன்பே திரட்டப் பெற்றுள்ள பணத்தைக் கொண்டு சுற்றியோடும் பகுதியைக் கவனியாது ஒதுக்குவோமானால், உபரி-மதிப்பானது ஆண்டுதோறும் தங்கத்தின் வடிவில் உற்பத்தியாகி வந்து சேர்வதால், சரக்கு வடிவில் உற்பத்தியாகிற உபரி-மதிப்பைப் பணமாக மாற்றுவதற்கு வேண்டிய பணமானது சுற்றோட்ட நிகழ்முறையிலிருந்தே கிடைத்து விடுகிறது. முன்னீடு செய்யப்படும் பண-மூலதனத்தை மாற்றீடு செய்யும் £500 ஆகிய தங்க உற்பத்தியின் பிற கூறுகளுக்கும் இது பொருந்தும்.

இங்கே இரு விவரங்கள் கவனத்துக்குரியவை.

முதலாவதாக, முதலாளிகள் பணமாகச் செலவிடுகிற உபரி-மதிப்பும், மற்றும் அவர்கள் பணமாக முன்னீடு செய்கிற மாறும்-மூலதனமும் பிறவகைத் திறனுடை-மூலதனமும் உள்ளபடியே தொழிலாளர்களின் உற்பத்திப் பொருள்தான், அதாவது தங்க உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் உற்பத்திப் பொருள்தான் என்பது தெளிவாகிறது. கூலியாகத் தமக்கு "முன்னீடு செய்யப்படுகிற" பகுதியை மட்டுமல்லாமல், முதலாளித்துவத் தங்க உற்பத்தியாளர்களின் உபரி-மதிப்பை நேரடியாகக் குறிக்கிற பகுதியையும் தொழிலாளர்கள்தாம் ஒவ்வொரு முறையும் புதிதாக உற்பத்தி செய்து தருகிறார்கள். முடிவில், தங்க உற்பத்திக்காக முன்னீடு செய்யப்படும் மாறா-மூலதன மதிப்பை மட்டும் மாற்றீடு செய்கிற பகுதியை எடுத்துக் கொண்டால் அதுவும் தொழிலாளர்களின் வருடாந்தர உழைப்பைக் கொண்டுதான் பணத்தின் வடிவில் (அல்லது பொதுவாக உற்பத்திப் பண்டத்தின் வடிவில்) திரும்பி வந்து சேர்கிறது. தொழில் துவக்கப்படுகையில் அதற்காக முதலாளி பணத்தைச் செலவிடுகிறார். இந்தப் பணம் சுற்றியோடுகிற சமுதாயப் பணத் திரளைச் சேர்ந்ததாகுமே தவிர புதிதாக உற்பத்தி செய்யப்பட்டதல்ல. ஆயினும் புதிய உற்பத்திப் பண்டத்தால், புதிதாய் வருகிற தங்கத்தால் இந்தப் பணம் மாற்றீடு செய்யப்படுகையில் இது தொழிலாளியின் வருடாந்தர உற்பத்தியே ஆகும். முதலாளி முன்னீடு செய்கிறாரே, அதுவுங்கூட தொழிலாளி அவரது உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளராக இல்லாத காரணத்திலிருந்தும், உற்பத்தியின் போது அவர் பிற தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் வாழ்வுச் சாதனங்களை ஆண்டு அனுபவிக்கும் திறனுடையவராக இருக்க முடியாத காரணத்திலிருந்தும் ஏற்படுகிற ஒரு விளைவாகவே இங்கு தோற்றமளிக்கிறது.

இரண்டாவதாக, £500 ஆகிய இந்த வருடாந்தர மாற்றீட்டை அல்லாமல், ஒரு பகுதி சேர்ப்பின் வடிவிலும், ஒரு பகுதி சுற்றியோடும் பணத்தின் வடிவிலும் இருந்து வரும் பணத் திரளைப் பொறுத்த வரை, இந்த £500 தொடர்பாக ஆண்டுதோறும் நடப்பதுதான் அதற்கும் நடந்திருக்க வேண்டும், எப்படியும் ஆதியில் அப்படித்தான் நடந்திருக்க வேண்டும். இந்தப் பிரிவின் இறுதியில்

அதைச் சுற்றோட்டத்திலிருந்து மீட்டு எடுக்கிறார். உபரி-மதிப்பைப் பணமாக மாற்ற இந்தத் தொகை போதுமானதாய் இருக்கலாம் அல்லவா?

பதில் இதுதான்: இந்த £500 தொகை (தேவைப்படும் சேம நிதியத்துக்கான பணச் சேர்ப்பின் உருவாக்கமும் இதில் அடங்கும்) நிலை-மூலதனமாகப் பயன்படுத்தப்படலாம் — அதைச் சுற்றோட்டத்துள் செலுத்தியவரால் அல்லவென்றால், வேறு ஒருவரால் நிலை-மூலதனமாகப் பயன்படுத்தப்படலாம் — என்பது மெய்தான். மேலும், நிலை-மூலதனமாகப் பயன்படும் உற்பத்திப் பண்டங்களின் கொள்முதலுக்காகச் செலவிடப்படும் தொகையானது அப்பண்டங்களில் அடங்கியுள்ள உபரி-மதிப்புக்காகச் செலுத்தப்படும் பணத்தையும் கொண்டதாகும் — இப்படித்தான் முன்பே நாம் அனுமானித்துக் கொண்டோம். ஆனால் இந்தப் பணம் எங்கிருந்து வருகிறது என்பதே இங்கு எழும் கேள்வி.

பொதுவான பதில் ஏற்கெனவே தரப்பட்டுள்ளது: x × £1,000 பெறுமான சரக்குத் திரள் சுற்றியோட வேண்டியிருந்தால், இந்தச் சரக்குத் திரள் உபரி-மதிப்பைத் தன்னுள் கொண்டிருக்கிறதா இல்லையா என்பதால், இந்தச் சரக்குத் திரள் முதலாளித்துவ முறையில் உற்பத்தி செய்யப்பட்டதா இல்லையா என்பதால் இந்தச் சுற்றோட்டத்துக்குத் தேவைப்படும் பணத்தின் அளவில் எந்த மாற்றமும் ஏற்பட்டு விடாது. ஆகவே பிரச்சினைக்கு இடமே இல்லை. பணத்தின் ஓட்ட வேகம் [velocity of the currency of money] போன்ற மற்றெல்லா நிலைமைகளும் குறிப்பிட்டதாயிருக்க, x × £1,000 பெறுமான சரக்குகளைச் சுற்றியோடச் செய்திட திட்டமான ஒரு பணத் தொகை தேவைப்படுகிறது. மேற்கூறிய மதிப்பில் நேரடி உற்பத்தியாளர்களுக்கு உரியதாகும் பங்கு எவ்வளவு என்பதைப் பொறுத்ததாய் இல்லை இந்தப் பணத் தொகை. இங்கே பிரச்சினையேதும் இருக்குமானால், அது பின்வரும் பொதுப் பிரச்சினைதானே தவிர வேறு எதுவுமல்ல: நாட்டில் உற்பத்தியாகிற சரக்குகளது சுற்றோட்டத்துக்கு வேண்டிய பணம் எங்கிருந்து வருகிறது?

ஆயினும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் கண்ணோட்டத்தின் படி, இங்கு ஒரு விதமான பிரச்சினை என்று இல்லாவிட்டாலும், பிரச்சினை போன்றதாகத் தெரியும் ஒரு தோற்றம் எழவே செய்கிறது. நமது உதாரணத்தில் முதலாளிதான் இவை எல்லாம் புறப்படுகிற புறப்பாட்டு முனையாகத் தோற்றமளிக்கிறார் — அவர்தான் பணத்தைச் சுற்றோட்டத்துள் செலுத்துகிறார். தொழிலாளி தமக்கு வேண்டிய வாழ்வுச் சாதனங்களை வாங்குவதற்காகத் தருகிற பணம் முன்பு மாறும்-மூலதனமாகப் பண வடிவில் இருந்ததுதான். முதலாளிதான் உழைப்புச் சக்தியை விலை கொடுத்து வாங்குவதற்கான கொடுப்புச் சாதனமாக அதனை

ஆரம்பத்தில் சுற்றோட்டத்துள் செலுத்தினார். அது மட்டுமல்ல, ஆரம்பத்தில் மாறா-மூலதனம், நிலை-மூலதனம், சுழல்-மூலதனம் ஆகியவற்றின் பண வடிவமாக இருந்த பணத்தையும் முதலாளிதான் சுற்றோட்டத்துள் செலுத்துகிறார் — உழைப்புச் சாதனங்களையும் உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருட்களையும் விலை கொடுத்து வாங்குவதற்கான கொடுப்புச் சாதனமாக அவர் அப்பணத்தைச் செலவிடுகிறார். ஆனால் இதற்கப்பால் முதலாளி சுற்றோட்டத்தி லுள்ள பணத் தொகையின் புறப்பாட்டு முனையாகத் தோற்ற மளிக்கவில்லை. ஆக, முதலாளி என்றும் தொழிலாளி என்றும் இரு புறப்பாட்டு முனைகள்தாம் உண்டு. மூன்றாவது வகையைச் சேர்ந்த வர்களெல்லாம், இந்த இரு வர்க்கங்களிடமிருந்தும் தங்களது சேவை களுக்காகப் பணம் பெற்றுக் கொள்வோராக இருக்க வேண்டும்; அல்லது சேவைகள் புரியாமலே பணம் பெற்றுக் கொள்கிறவர் களாயின் நில-வாடகை, வட்டி முதலானவற்றின் வடிவில் உபரி-மதிப்பின் கூட்டு உடைமையாளர்களாய் இருக்க வேண்டும். உபரி-மதிப்பு முழுவதும் தொழில் துறை முதலாளியின் கையிலேயே தங்கி விடவில்லை, அதை அவர் வேறு சிலரோடு பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் இந்நிலைமைக்கும் இங்கு நம் முன் னுள்ள பிரச்சினைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவர் தமது உபரி-மதிப்பை எப்படிப் பணமாக மாற்றுகிறார் என்பதுதான் பிரச்சினையே தவிர, உபரி-மதிப்பாக வருவது பிற்பாடு எப்படிப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்பது அல்ல. இங்கு நாம் முத லாளியை உபரி-மதிப்பின் ஏக உடைமையாளராகவே கொண்டு இப்பிரச்சினையை அணுகலாம். தொழிலாளியைப் பொறுத்த வரை, ஏற்கெனவே கூறியது போல், சுற்றோட்டத்துள் அவர் செலுத்துகிற பணத்துக்கு அவர் இரண்டாம்பட்சப் புறப்பாட்டு முனையே ஆவார், முதலாளிதான் முதன்மையான புறப்பாட்டு முனை. மாறும்-மூலதனமாக முதலில் முதலாளி முன்னீடு செய்யும் பணம்தான் தொழிலாளியை வந்தடைந்து, வாழ்வுச் சாதனங்களை விலைக்கு வாங்குவதற்காகத் தொழிலாளியால் செலவிடப்பட்டு அதன் இரண்டாவது சுற்றோட்டத்துள் செல்கிறது.

ஆதலால் முதலாளி வர்க்கமேதான் பணச் சுற்றோட்டத்துக்கான ஒரே புறப்பாட்டு முனையாக இருந்து வருகிறது. உற்பத்திச் சாதனங்களுக்காக £400உம், உழைப்புச் சக்திக்காக £100உம் முதலாளிகள் கொடுப்பார்களாயின், மொத்தம் £500ஐ அவர்கள் சுற்றோட்டத்துள் செலுத்துகிறார்கள். உபரி-மதிப்பு வீதம் 100% எனக் கொண்டால், உற்பத்திப் பொருளில் £100க்குச் சமமான உபரி-மதிப்பு அடங்கியுள்ளது. சுற்றோட்டத்துள் தொடர்ந்து £500 மட்டும் செலுத்தி விட்டு, எப்படி அவர்களால் தொடர்ந்து £600ஐ அதிலிருந்து எடுக்க முடிகிறது? இல்லாததை எடுப்பது எப்படி? முன்னதாகவே சுற்றோட்டத்துள் செலுத்தாததை முதலாளி

வர்க்கம் முழுவதுமாகச் சேர்ந்து அதிலிருந்து எடுத்துக் கொள் கிறதே, எப்படி அது?

£400 பத்து முறை புரளும் போது, £4,000 மதிப்புள்ள உற்பத்திச் சாதனங்களையும் £1,000 மதிப்புள்ள உழைப்புச் சக்தியையும் சுற்றியோடச் செய்வதற்கு அது போதுமானதாய் இருக் கும். இன்னொரு தொகையான £100 அவ்வாறே £1,000 பெறு மானமுள்ள உபரி-மதிப்பின் சுற்றோட்டத்துக்குப் போதுமானதாய் இருக்கும். ஆனால் இங்கு நாம் இந்த விவரத்தைக் கவனியாது விட்டு விடுகிறோம். பணத் தொகைக்கும் அதைக் கொண்டு சுற்றி யோடும் சரக்குகளின் மதிப்புக்குமுள்ள விகிதம் இங்கு முக்கியமான தல்ல. இதனால் பிரச்சினை மாற்றமின்றி அப்படியேதான் உள்ளது. அதே காசுகள் தொடர்ந்து பல முறை சுற்றியோடியாக வேண்டும், இல்லையேல் £5,000 மூலதனம் சுற்றோட்டத்துள் செலுத்தப்பட வேண்டும். உபரி-மதிப்பைப் பணமாக மாற்றுவதற்கு மேலும் £1,000 தேவைப்படுகிறது. £1,000 ஆனாலும், £100 ஆனாலும் இந்தப் பணம் எங்கிருந்து வருகிறது என்பதே கேள்வி. எப்படிப் பார்த்தாலும் சுற்றோட்டத்துள் செலுத்தப்படும் பண-மூலதனம் அன்னியில் கூடுதலாய் வரப்பெறும் இந்தப் பணம் எங்கிருந்து வருகிறது?

மேலோட்டமான பார்வைக்குப் புரியாப் புதிராகத் தோன்றி னாலும் கூட இந்தக் கூடுதல் தொகையைச் சுற்றோட்டத்துள் செலுத்து வது முதலாளி வர்க்கமேதான். சரக்குகளில் அடங்கியுள்ள உபரி-மதிப்பின் ஈடேற்றத்துக்கு இந்தக் கூடுதல் தொகைதான் பயன் படுகிறது. ஆனால் இதைக் கவனிக்க வேண்டும்: முதலாளி வர்க்கம் இந்தக் கூடுதல் தொகையை முன்னீடு செய்யப்படும் பணமாக, அதாவது மூலதனமாக, சுற்றோட்டத்துள் செலுத்தவில்லை. தனிப் பட்ட முறையிலான தனது சொந்த நுகர்வுக்காகச் செலவு செய்வதற் கான கொடுப்புச் சாதனமாக அது இத்தொகையைச் செலவிடுகிறது. இவ்விதம் முதலாளி வர்க்கம் இந்தப் பணத்தின் சுற்றோட்டத்துக்குப் புறப்பாட்டு முனையாக இருக்கிறதே தவிர, இதனை அது மூலதன மாக முன்னீடு செய்யவில்லை.

தொழில் தொடங்குகிற தனிப்பட்ட ஒரு முதலாளியை, உதாரண மாக ஒரு சாகுபடியாளரை எடுத்துக் கொள்ளலாம். முதலாண்டில் அவர் £5,000 பண-மூலதனத்தை முன்னீடு செய்வதாகக் கொள் வோம். £4,000 உற்பத்திச் சாதனங்களுக்காகவும் £1,000 உழைப் புச் சக்திக்காகவும் செலவிடுவதாகக் கொள்வோம். உபரி-மதிப்பு வீதம் 100% என்போம். அவரால் தனதாக்கப்படும் உபரி-மதிப் பின் அளவு £1,000. பண-மூலதனமாக அவர் முன்னீடு செய்வ தெல்லாம் மேற்சொன்ன £5,000தான். அதே போது அவர் வாழவும் வேண்டும்; ஆனால் ஆண்டு முடியுமுன் அவர் பணமேதும் எடுத்துக் கொள்வதில்லை. அவரது நுகர்வுக்கு £1,000 ஆவதாகக்

கொள்வோம். இத்தொகை அவர் கைவசம் இருக்க வேண்டும். முதலாண்டில் இந்த £1,000 தொகையை அவர் தமக்குத் தாமே முன்னீடு செய்து கொள்வதாகக் கூறலாம். ஆனால் இங்கே இந்த முன்னீடு அகவயமான அர்த்தத்தையே குறிக்கிறது, அதாவது முதலாண்டில் அவருக்காகத் தொழிலாளர்கள் இலவசமாக உற்பத்தி செய்வதிலிருந்து எடுத்து அவர் தமது சொந்த நுகர்வுக்காகச் செலவிடுவதற்கு பதில் கைப்பணத்தைச் செலவிட்டாக வேண்டும் என்பதையே குறிக்கிறது. அவர் இந்தப் பணத்தை மூலதனமாக முன்னீடு செய்வதில்லை. தாம் நுகருகிற வாழ்வுச் சாதனங்களை விலைகொடுத்து வாங்குவதற்காக அவர் இந்தப் பணத்தைச் செலவிடுகிறார். இந்த மதிப்பை அவர் பணமாகச் செலவிட்டுச் சுற்றோட்டத்துள் செலுத்துகிறார், அதற்கு பதில் சரக்கு-மதிப்புகளைச் சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுத்துக் கொள்கிறார். இந்தச் சரக்கு-மதிப்புகள் அவரது சொந்த நுகர்வாகி விடுகின்றன. அவருக்கும் இம்மதிப்புகளுக்கும் இவ்விதம் அறவே தொடர்பறுந்து போகிறது. அவர் இந்த மதிப்புகளை விலைகொடுத்து வாங்குவதற்காகச் செலவிட்ட பணம் இப்போது சுற்றோட்டத்திலுள்ள பணத்தைச் சேர்ந்ததாகி விடுகிறது. ஆனால் அவர் இந்தப் பணத்தின் மதிப்பை உற்பத்திப் பண்டங்களின் வடிவில் சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுத்து விட்டார். இப்போது இந்த மதிப்பானது அதைத் தம்முள் கொண்டிருக்கும் பண்டங்களோடு சேர்ந்து அழிந்து விடுகிறது. அடியோடு மறைந்து விடுகிறது. ஆண்டின் முடிவில் அவர் £6,000 பெறுமான சரக்குகளைச் சுற்றோட்டத்தினுள் செலுத்தி விற்கிறார். இதன் மூலம் அவர் மீட்டுக் கொள்கிறவை என்னவென்றால்: (1) அவர் முன்னீடு செய்திருந்த £5,000 பண-மூலதனம்; (2) ஈடேற்றம் பெறுகிற உபரி-மதிப்பான £1,000. மூலதனமாக அவர் முன்னீடு செய்து, சுற்றோட்டத்துள் செலுத்துவது £5,000. சுற்றோட்டத்திலிருந்து அவர் வெளியே எடுப்பது £6,000—இதில் £5,000 அவரது மூலதனமாகும், £1,000 அவரது உபரி-மதிப்பாகும். கடைசியாகச் சொன்ன இந்த £1,000 ஆனது அவரே சுற்றோட்டத்துள் செலுத்திய பணத்தைக் கொண்டு பணமாக மாற்றப்பட்டதாகும். இந்தப் பணம் நுகர்வாளராக அவர் செலவிட்டதாகுமே அல்லாமல், முதலாளியாக முன்னீடு செய்ததல்ல. உற்பத்தி செய்யப்பட்ட உபரி-மதிப்பின் பண வடிவமாக இப்போது அது அவர் கைக்குத் திரும்பி வருகிறது. இதன் பின் இந்நிகழ்வு 'ஒவ்வோராண்டும் திரும்பவும் நடந்தேறுகிறது. ஆனால் இரண்டாவது ஆண்டு சொந்த நுகர்வுக்காக அவர் செலவிடும் இந்த £1,000 ஆனது அவரால் உற்பத்தி செய்யப்பட்ட உபரி-மதிப்பின் மாறிய வடிவமே, அதாவது பண வடிவமே ஆகும். ஆண்டுதோறும் அவர் இத்தொகையைச் செலவிடுகிறார்; ஆண்டுதோறும் இத்தொகை அவரிடம் திரும்பி வருகிறது.

சாமானிய சரக்குச் சுற்றோட்டத்தைப் பரிசீலிக்கையில் (முதல் பாகம், அத்தியாயம் III, பிரிவு 2) நாம் பார்த்தது போல, சுற்றோட்டத் துறைக்குள் குறிப்பிட்ட அளவிலான சரக்குகளின் பண வடிவம் சொற்ப காலத்துக்கு மட்டுமே இருக்கக் கூடியது என்றாலும் சொற்ப காலத்துக்கு ஒருவர் கையில் இருக்கும் படியான பணம் குறிப்பிட்ட சரக்கின் உருமாற்றத்தின் போது வேறொருவர் கைக்குச் சென்றேயாக வேண்டும். ஆகவே, முதலாவதாக, சரக்குகள் எல்லாப் பக்கமும் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றன அல்லது ஒன்றையொன்று மாற்றீடு செய்து கொள்கின்றன என்பதோடு, இம்மாற்றீட்டுடன் கூடவே இதற்கு ஊக்கமளிக்கும் விதத்தில் எல்லாப் பக்கமிருந்தும் பணப் படிவு ஏற்படுகிறது. ''ஒரு சரக்கு பிறிதொரு சரக்குக்கு இடம் விட்டு விலகும் போதெல்லாம், பணச் சரக்கு மூன்றாவது ஆளிடம் சிக்கிக் கொள்கிறது. சுற்றோட்டமானது ஒவ்வொரு மயிர்க் காம்பிலிருந்தும் பணத்தை வியர்வையாக வழியச் செய்கிறது.'' (முதல் பாகம், பக்கம் 160.) முதலாளித்துவச் சரக்கு உற்பத்தி நடைபெறுவதாகக் கொள்ளும் போது, மூலதனத்தின் ஒரு பகுதி எப்போதும் பண-மூலதன வடிவில் இருந்து வருவதும், அதே போல் உபரி-மதிப்பின் ஒரு பகுதி அதன் உடைமையாளர்களின் கையில் எப்போதும் பண வடிவில் இருந்து வருவதும் சரக்குச் சுற்றோட்டம் தொடர்பாக மேலே குறிப்பிட்ட அதே உண்மையைத்தான் சுட்டுகின்றன.

இது ஒரு புறமிருக்க, **பணச் சுற்று** [circuit of money] என்பது—அதாவது பணம் அது புறப்படும் முனைக்கே திரும்பி வருதல்—மூலதனப் புரள்வின் ஒரு கட்டமாக இருத்தலால், **பண ஓட்டம்**[39]

---

[39] பிசியோக்கிராட்டுகள் இந்த இரு நிகழ்வுகளையும் ஒன்றோடொன்று குழப்பி வந்த போதிலும், பணம் அதன் புறப்பாட்டு முனைக்குத் திரும்பி வந்து சேர்தல்தான் மூலதனச் சுற்றோட்டத்தின் அத்தியாவசிய இயல்பென, மறுவுற்பத்தியை ஊக்குவிக்கும் வடிவிலான சுற்றோட்டமாகுமென முதன் முதல் வலியுறுத்தியவர்கள் அவர்களே. ''*Tableau Economique*ஐ எடுத்துப் பாருங்கள். உற்பத்தித் திறனுள்ள வர்க்கமே ஏனைய வர்க்கத்தார் அதனிடமிருந்து உற்பத்திப் பண்டங்களை வாங்குவதற்கு வேண்டிய பணத்தை அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதையும், அடுத்த ஆண்டில் அதே பொருட்களை வாங்குவதற்காக அவர்கள் திரும்பி வரும் போது இந்தப் பணத்தை அதற்குத் திருப்பித் தருவதையும் காண்பீர்கள்.... ஆக, இங்கே நீங்கள் காண்பதெல்லாம் செலவாதலைத் தொடர்ந்து மறுவுற்பத்தியாதலும், மறுவுற்பத்தியாதலைத் தொடர்ந்து செலவாதலுமாகிய இந்தச் சுழலே தவிர வேறு எந்தச் சுழலுமல்ல. செலவாவதையும் மறுவுற்பத்தியாவதையும் அளந்திடும் பணச் சுற்றோட்டத்தால் நிகழும் சுழலே தவிர இது வேறு எதுவுமல்ல.'' (கெனே, *Dialogues sur le Commerce et sur les Travanux des Artisans*, தாரே பதிப்பு, பிசியோக்கிராட்டுகள், I, பக்கம் 208, 209.) ''மூலதனங்களின் தொடர்ச்சியான முன்னீடும் திரும்பி வருதலுமாகிய இதனைப் பணச் சுற்றோட்டம் என்றழைக்க வேண்டும். பயன் தருவதும் வளம் ஊட்டுவதுமான இந்தச் சுற்றோட்டமே சமுதாயத்தின் உழைப்புப் பணிகளுக்கு எல்லாம் உயிரூட்டுகிறது, அரசியல் சமுதாயத்தின் உயிரும் செயற்பாடும் அடங்கி விடாத படி பாதுகாக்கிறது—உயிர்ப் பிராணிகளது உடலிலான இரத்த ஓட்டத்துக்கு இதனை ஒப்பானதாக்குவது முற்றிலும் பொருத்தமே ஆகும்.'' (துர்கோ, *Reflexions, etc., Oeuvres*, தாரே பதிப்பு, பக்கம் 45.)

[currency of money] என்பதற்கு முற்றிலும் மாறான நிகழ்வாகும், எதிரான நிகழ்வாகும் என்று கூட சொல்லலாம். பணத்தின் ஓட்டம் என்பது பணம் திரும்பத் திரும்பக் கைமாறி புறப்பாட்டு முனையிலிருந்து மேலும் மேலும் விலகிச் செல்வதையே குறிக்கிறது. (முதல் பாகம், பக்கம் 163.) ஆயினும், வளர்வேகப் புரள்வானது [accelerated turnover] இயல்பாகவே வளர்வேக ஓட்டத்தையும் குறிப்பதாகிறது.

முதலில் மாறும்-மூலதனத்தை எடுத்துக் கொள்வோம். குறிப்பிட்ட பண-மூலதனம், உதாரணமாக £500 மாறும்-மூலதனத்தின் வடிவில் ஆண்டொன்றுக்குப் பத்து முறை புரளுமானால், சுற்றோட்டத்திலுள்ள பணத்தின் பரிமாணத்தில் இந்த ஈவுப் பகுதியானது அதன் மதிப்பைப் போல் பத்து மடங்கினை, அதாவது £5,000ஐச் சுற்றியோடச் செய்கிறது. அது முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையே ஆண்டொன்றுக்குப் பத்து முறை சுற்றியோடுகிறது. சுற்றியோடும் பணத்தின் பரிமாணத்தில் ஒரே ஈவுப் பகுதியைக் கொண்டு தொழிலாளிக்கு ஆண்டுக்குப் பத்து தரம் கூலி தரப்படுகிறது, தொழிலாளியும் பத்து தரம் விலை கொடுத்து வாங்குகிறார். அதே அளவு மாறும்-மூலதனமானது ஆண்டுக்கு ஒரு தரம் மட்டுமே புரளுமாயின், உற்பத்தியின் அளவுவீதம் மாறாதிருப்பதாகக் கொண்டால், £5,000 மூலதனத்தின் ஒரே ஒரு புரள்வு மட்டுமே நிகழும்.

மேலும்: சுழல்-மூலதனத்தின் மாறாப் பகுதியை £1,000 ஆகக் கொள்வோம். மூலதனம் பத்து முறை புரளுமானால், முதலாளி அவரது சரக்கையும், எனவே அதன் மதிப்பின் சுழலும் மாறாப் பகுதியையும் ஆண்டொன்றுக்குப் பத்து முறை விற்கிறார். சுற்றியோடும் பணத்தின் பரிமாணத்தில் ஒரே ஈவுப் பகுதியானது (£1000க்குச் சமமானது) ஆண்டொன்றுக்குப் பத்து முறை அதன் உடைமையாளர்களின் கையிலிருந்து முதலாளியின் கைக்கு மாறிச் செல்கிறது. இந்தப் பணம் பத்து முறை கைமாறுகிறது. இரண்டாவதாக, முதலாளி ஆண்டொன்றுக்குப் பத்து முறை உற்பத்திச் சாதனங்களை வாங்குகிறார். இதுவும் பணம் கைக்குக் கை மாறுகிற பத்து சுற்றோட்டங்களாகிறது. மொத்தம் £1,000 பணத் தொகையைக் கொண்டே, தொழில் துறை முதலாளி £10,000 பெறுமான சரக்குகளை விற்கவும் மீண்டும் £10,000 பெறுமான சரக்குகளை விலைக்கு வாங்கவும் செய்கிறார். £1,000 ஆகிய பணம் 20 சுற்றோட்டங்களின் மூலம், £20,000 பெறுமான சரக்கிருப்பைச் சுற்றியோடச் செய்கிறது.

இறுதியாக, புரள்வின் வேகம் அதிகமாகும் போது, உபரி-மதிப்பை ஈடேற்றம் செய்கிற பணப் பகுதியின் சுற்றோட்ட வேகமும் அதிகமாகிறது.

ஆனால், மறுதலையாக, பணச் சுற்றோட்ட வேகம் அதிகமாகும் போதெல்லாம் மூலதனமும், எனவே பணமும் புரள்கிற வேகமும்

அதிகமாக வேண்டிய அவசியமில்லை; அதாவது, மறுவுற்பத்தி நிகழ்முறை சுருங்கவும், முன்னிலும் துரிதமாகப் புதுப்பிக்கப்படவும் வேண்டிய அவசியமில்லை.

ஒரே பணத் தொகையைக் கொண்டு முன்னிலும் அதிகமான கொடுக்கல் வாங்கல்கள் நடத்தப்படும் போது, முன்னிலும் துரித மான பணச் சுற்றோட்டம் நிகழ்கிறது. மூலதன மறுவுற்பத்திக் காலங்களில் மாற்றம் இல்லாமலே, பணச் சுற்றோட்டத்துக்கான செய்நுட்ப வசதிகளில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக இப்படி நடைபெறலாம். மேலும், உள்ளபடியான சரக்குப் பரிவர்த்த னையைக் குறிக்காமலே பணம் சுற்றியோடும் படியான கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கையும் உயரலாம். (பங்குச் சந்தையில் நடைபெறும் ஊகவாணிபக் கொடுக்கல் வாங்கல்களை [marginal transactions] உதாரணமாய்க் குறிப்பிடலாம்.) மறு புறம் சில பணச் சுற்றோட்டங்களை முற்றிலும் விலக்கி விடலாம். எடுத்துக் காட்டாக விவசாயம் செய்பவரே நிலவுடைமையாளராகவும் இருப்பா ரானால், சாகுபடியாளருக்கும் நிலவுடைமையாளருக்கும் இடையி லான பணச் சுற்றோட்டம் இல்லாமற் போகிறது; தொழில் துறை முதலாளியே மூலதன உடைமையாளராகவும் இருக்கையில் அவருக் கும் கடன் கொடுப்போருக்கும் இடையிலான பணச் சுற்றோட்டம் அகற்றப்படுகிறது.

---

நாட்டின் பணச் சேர்ப்பின் ஆதிகால உருவாக்கத்தையும், ஒரு சிலர் அதைத் தமதாக்கிக் கொண்டு விடுவதையும் ஆராயத் தேவையில்லை.

கூலியுழைப்பையும், தொழிலாளிக்குப் பணமாக ஊதியமளிப் பதையும், பொதுவாகப் பண்ட வடிவக் கொடுப்புகள் பண வடிவக் கொடுப்புகளாக மாறுவதையும் அடிப்படையாகக் கொண்டதான முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையானது, சுற்றோட்டத்துக் கும் அதனால் தூண்டப்படும் (சேம நிதி போன்ற) பணச் சேர்ப் பின் உருவாக்கத்துக்கும் நாட்டில் போதுமான அளவில் பணம் புழங்கும் போதுதான், விரிவிலும் வீச்சிலும் வளர்வதும் பூரணத் துவம் பெறுவதும் சாத்தியம். முதலில் போதுமான பணச் சேர்ப்பு உருவாகிறது என்பதாகவும் அதன் பிறகே முதலாளித்துவப் பொரு ளுற்பத்தி தொடங்குகிறது என்பதாகவும் அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாதென்றாலும், இதுவே வரலாற்று வழிப்பட்ட முன்னிபந்தனை யாகும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையானது அதற்கு அவசியமான நிலைமைகள் வளர்வதைத் தொடர்ந்து தானும் கூடவே வளர முற்படுகிறது. உயர்நிலை உலோகங்கள் போதுமான அளவில் உற்பத்தியாகி வழங்கப் பெறுதல் இந்த அவசிய நிலைமை களில் ஒன்றாகும். பதினாறாம் நூற்றாண்டு முதல் உயர்நிலை

உலோகங்கள் அதிக அளவில் வழங்கப்படலாயின; முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சி வரலாற்றில் இது ஓர் அத்தியா வசியக் கூறாகும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி ஆரம்பமான பிறகு, அதற்கு அவசியமான பணப் பொருள் மேலும் தொடர்ந்து வழங்கப்படுவதைப் பொறுத்த மட்டில், உபரி-மதிப்பைத் தம்முள் கொண்ட பண்டங்கள் அந்த உபரி-மதிப்பு பணமாக மாற்றப்படு வதற்கு வேண்டிய பணம் இல்லாமலே ஒரு புறம் சுற்றோட்டத்துள் செலுத்தப்படுவதையும், முன்னதாகவே உற்பத்திப் பண்டம் பணமாக மாற்றப்படாமல் தங்கத்தின் வடிவில் உபரி-மதிப்பானது மறு புறம் சுற்றோட்டத்துள் செலுத்தப்படுவதையும் பார்க்கிறோம்.

பணமாக மாற்றப்பட வேண்டிய கூடுதல் சரக்குகளுக்குத் தேவை யான பணம் தயாராயிருக்கிறது. எப்படியெனில், மறு பக்கத்தில் சரக்குகளாக மாற்றப்பட வேண்டிய கூடுதல் தங்கம் (மற்றும் வெள்ளி), பரிவர்த்தனையின் மூலமல்லாமல், உற்பத்தியின் வாயி லாகவே சுற்றோட்டத்துள் செலுத்தப்படுகிறது.

## II. மூலதனத் திரட்டலும் விரிதிற மறுவுற்பத்தியும்

மூலதனத் திரட்டலானது விரிதிற மறுவுற்பத்தியின் வடிவில் நடைபெறுவதால், பணச் சுற்றோட்டம் தொடர்பாக அதனால் எந்தப் புதிய பிரச்சினையும் எழுவதில்லை என்பது தெளிவு.

முதலாவதாக, திறனுடை-மூலதனம் அதிகமாகும் போது அது செயல்படுவதற்குத் தேவைப்படும் கூடுதல் பண-மூலதனத்தைப் பொறுத்த வரை, ஈடேற்றம் பெறும் உபரி-மதிப்பில் ஒரு பகுதி இத்தேவையை நிறைவு செய்கிறது. முதலாளிகள் இந்த உபரி-மதிப்புப் பகுதியைத் தமது வருவாயின் பண வடிவமாக அல்லாமல், பண-மூலதனமாகச் சுற்றோட்டத்துள் செலுத்துகிறார்கள். இந்தப் பணம் ஏற்கெனவே முதலாளிகளது கையில் இருப்பதாகும். எங்கே அது ஈடுபடுத்தப்படுகிறது என்பதுதான் வேறுபடுகிறது.

திறனுடை-மூலதனம் இப்போது கூடுதலாயிருப்பதால், அதன் உற்பத்திப் பொருளாகிய கூடுதலான சரக்குத் திரள் சுற்றோட் டத்துள் செலுத்தப்படுகிறது. இந்தச் சரக்குத் திரளின் மதிப்பு அதன் உற்பத்தியின் போது நுகரப்பட்ட திறனுடை-மூலதனத்தின் மதிப் புக்குச் சமமாக இருக்கும் வரை, இந்தக் கூடுதல் சரக்கோடு கூட அதன் ஈடேற்றத்துக்குத் தேவையான கூடுதல் பணத்தில் ஒரு பகுதியும் சுற்றோட்டத்துள் செலுத்தப்படுகிறது. இந்தக் கூடுதல் பணத் தொகை, கூடுதல் பண-மூலதனமாகவே முன்னீடு செய்யப் பட்டுள்ளது; ஆகவே அது முதலாளியிடம் அவரது மூலதனப் புரள் வின் மூலம் திரும்பி வருகிறது. மேலே எழுந்த அதே கேள்வி இங்கும் எழுகிறது. இப்போது சரக்குகளின் வடிவில் இருக்கும் கூடுதல் உபரி-மதிப்பை ஈடேற்றம் பெறச் செய்வதற்கு வேண்டிய கூடுதல்

திரும்பவும் இந்த விவகாரத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள் வோம்.* ஆனால் இதற்கு முன்னதாக வேறு சிலவற்றைக் குறிப் பிட்டாக வேண்டும்.

---

மூலதனப் புரள்வினை ஆராய்கையில், பிற காரணிகள் மாறா மல் ஒரே மாதிரியாக இருக்குமாயின், புரள்வுகளின் கால அளவு கள் மாறும் போது பண-மூலதனத்தின் அளவுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டாக வேண்டும், அப்போதுதான் உற்பத்தியானது அதே அளவுவீதத்தில் தொடர்ந்து நடைபெற முடியும் என்று தெரிந்து கொண்டோம். பெருக்கமும் சுருக்கமுமான இந்த மாற்றங்களுக்குத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் பொருட்டு பணச் சுற்றோட்ட மானது போதுமான நெகிழ்திறனுடையதாய் இருத்தல் வேண்டும்.

மேலும், வேலை-நாளின் நீளம், மும்முரம், உற்பத்தித் திறன் ஆகியவை உட்பட ஏனைய காரணிகள் மாறாதிருப்பதாகவும், உற்பத்திப் பண்டத்தின் மதிப்பானது கூலிக்கும் உபரி-மதிப்புக்கு மிடையே பிரிக்கப்படும் விகிதம் மட்டும் மாறுவதாகவும், கூலி உயரும் போது உபரி-மதிப்பு குறைவதாவும், உபரி-மதிப்பு குறையும் போது கூலி உயர்வதாகவும் கொள்வோமாயின் சுற்றியோடும் பணத் திரள் இதனால் பாதிப்புக்கு உள்ளாவதில்லை. பணச் செலாவணியின் பெருக்கமோ சுருக்கமோ சிறிதளவும் ஏற்படாமலே இந்த மாற்றம் நடைபெற முடியும். குறிப்பாக, கூலி உயர்கிற நேர் வைப் பரிசீலிப்போம். நமது அனுமானங்களின் படி, அப்போது பொதுவாக உபரி-மதிப்பு வீதம் குறைந்து செல்லும். ஆனால் நமது அனுமானத்தின் படி, சுற்றியோடும் சரக்குத் திரளின் மதிப்பில் இதனால் எந்த மாற்றமும் ஏற்படாது. அப்போது மாறும்-மூலதன மாய் முன்னீடு செய்தாக வேண்டிய பண-மூலதனமும், எனவே இப் பணியை ஆற்றுகிற பணத்தின் அளவும் இயல்பாகவே அதிகரிக் கின்றன. ஆனால் உபரி-மதிப்பும், ஆகவே அதன் ஈடேற்றத்துக்குத் தேவைப்படும் பணத்தின் அளவும் மாறும்-மூலதனப் பணியைச் செய்வதற்குத் தேவைப்படும் பணத்தின் பருமன் அதிகரிக்கிற அதே அளவுக்குக் குறைகின்றன. இதனால் சரக்கு-மதிப்போ, சரக்கு-மதிப் பின் ஈடேற்றத்துக்குத் தேவைப்படும் பணத்தின் பருமனோ பாதிக்கப் படுவதில்லை. சரக்கின் அடக்க-விலை தனிப்பட்ட முதலாளிக்கு உயர்கிறது; ஆனால் சரக்கின் சமுதாய உற்பத்தி-விலை மாறாமல் அப்படியே இருக்கிறது. மதிப்பின் மாறாப் பகுதி ஒரு புறமிருக்க, சரக்குகளின் உற்பத்தி-விலை [price of production] கூலியாகவும் இலாபமாகவும் பிரிக்கப்படும் விகிதாசாரம் மட்டும் மாறி விடுகிறது.

ஆனால் மாறும் பண-மூலதனத்தின் முதலீடு அதிகமாவதானது

---

* பார்க்கவும்: இந்த நூலில் பக்கம் 453-54. — பதிப்பாசிரியர்.

(பணத்தின் மதிப்பு மாறாதிருப்பதாகக் கொள்ளப்படுமானால்) தொழிலாளர்களது கையில் முன்னிலும் அதிகப் பணம் வந்து சேரு வதைக் குறிப்பதாக வாதாடப்படுகிறது. தொழிலாளர்களது தரப் பிலிருந்து சரக்குகளுக்கான வேண்டல் இதனால் கூடுதலாகிறது. வேண்டல் கூடுதலாவதைத் தொடர்ந்து சரக்குகளின் விலை உயர வேண்டியதாகிறது என்கிறார்கள். அல்லது கூலி உயர்ந்தால், முதலாளிகள் தமது சரக்குகளின் விலைகளை உயர்த்துகிறார்கள் என்று கூறப்படுகிறது. இரண்டில் எது நடப்பினும், பொதுவாகக் கூலி உயர்வானது சரக்குகளின் விலையை உயரச் செய்கிறது. எனவே, விலைகளில் ஏற்படும் உயர்வுக்கு அளிக்கப்படும் விளக்கம் எதுவாயினும் சரக்குகளின் சுற்றோட்டத்துக்குக் கூடுதலான பணம் தேவைப்படுகிறது என்கிறார்கள்.

முதல் கூற்றுக்கு நாம் கூறும் பதில்: கூலி உயர்வதால், வாழ்க் கையில் அவசியப் பண்டங்களுக்கான [necessities of life] தொழி லாளர்களது வேண்டல் குறிப்பாக உயரவே செய்யும். சொகுசுப் பண்டங்களுக்கான அவர்களது வேண்டல் இதனிலும் குறைந்த அளவுக்கு அதிகரிக்கும். அல்லது, முன்பெல்லாம் அவர்களது நுகர்வின் எல்லைக்கு உட்படாதிருந்த பண்டங்களுக்கும் இப்போது அவர்களிடமிருந்து வேண்டல் எழும். இன்றியமையா வாழ்வுச் சாதனங்களுக்கான வேண்டலில் திடீரெனப் பெரிய அளவில் ஏற்படும் அதிகரிப்பு உடனடியாக அவற்றின் விலைகளை உயர்த்தி விடும். இதன் விளைவு: சமுதாய மூலதனத்தில் முன்னிலும் பெரிய பகுதி வாழ்க்கையின் அவசியப் பண்டங்களது உற்பத்தியில் ஈடு படுத்தப்படும்; முன்னிலும் சிறிய பகுதியே சொகுசுப் பண்டங்களின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும். ஏனெனில் உபரி-மதிப்பு குறைந்து விடுவதால், இந்தப் பண்டங்களுக்கான முதலாளிகளது வேண்டல் குறைந்து இவற்றின் விலை குறைந்து விடுகிறது. மறு புறம் தொழி லாளர்களே கூட சொகுசுப் பண்டங்களை வாங்க ஆரம்பிப்பதால், தொழிலாளர்களது கூலியின் உயர்வானது வாழ்க்கையின் அவசியப் பண்டங்களது விலை உயர்வுக்கு இட்டுச் செல்வதற்கு பதில் சொகுசுப் பண்டங்களை வாங்குவோரிடையில் மாற்றத்தை உண் டாக்குகிறது. சொகுசுப் பண்டங்களைத் தொழிலாளர்கள் முன்னை விட அதிகமாகவும், முதலாளிகள் ஒப்பளவில் முன்னைவிடக் குறை வாகவும் நுகருவதே இதனால் ஏற்படும் விளைவு. சுற்றியோடும் சரக்குத் திரளின் மதிப்பு இப்படி அல்லவுற்ற பிறகு முன்பு இருந்த நிலைக்கே திரும்புகிறது. கணப் பொழுதுக்கான ஏற்ற வற்றங் களைப் பொறுத்த வரை, இதுகாறும் வேலையில்லாமல் பங்குச் சந்தையில் ஊக வாணிப பேரங்களில் ஈடுபடுவதற்கும் வெளிநாடு களில் முதலீடாவதற்குமான வாய்ப்புக்காகக் காத்திருந்த பண-மூலதனம் இப்போது உள்நாட்டுச் சுற்றோட்டத்துள் இழுக்கப் படுவதுதான் அவற்றால் ஏற்படும் விளைவு.

இரண்டாவது கூற்றுக்கு நாம் கூறும் பதில்: முதலாளிகள் தமது சரக்குகளின் விலைகளை விருப்பம் போல் உயர்த்துவதற்கு சக்தி பெற்றிருப்பார்களானால், கூலி உயராமல் இருக்கும் போதும் விலைகளை அவர்கள் உயர்த்த முடியும், உயர்த்தவும் செய்வார்கள். சரக்குகளின் விலைகள் குறையும் போது கூலி உயரவே உயராது; முதலாளி வர்க்கம் தொழிற் சங்கங்களை எதிர்க்கவே எதிர்க்காது. ஏனெனில் கூலியில் ஏற்படும் ஒவ்வோர் உயர்வையும் பயன்படுத்தி முதலாளி வர்க்கம் சரக்கு விலைகளை அதனிலும் அதிகமாய் உயர்த்தி, இவ்விதம் அதிக இலாபம் பெற முடியுமானால், அதாவது இப்போது விசேஷமான சில குறிப்பிட்ட நிலைமைகளில் மட்டும், வட்டார நிலைமைகள் என்று சொல்லக் கூடிய நிலைமைகளில் மட்டும் செய்வதை முதலாளி வர்க்கம் எப்போதும் எல்லா நிலைமைகளிலும் செய்ய முடியுமானால், ஒருபோதும் அது தொழிற் சங்கங்களை எதிர்த்து நிற்காது.

சொகுசுப் பண்டங்களுக்கான வேண்டல் குறைகிறது (இப் பண்டங்களை விலைக்கு வாங்கிப் பயன்படுத்தும் முதலாளிகளின் வாங்குஞ் சக்தி சுருங்கி, அதனால் அவர்களது வேண்டல் குறைகிறது) என்பதால் முதலாளிகள் அவற்றின் விலைகளை உயர்த்த முடிவதாகக் கூறுவதானது வழங்கல்-வேண்டல் விதியின் அலாதியான பிரயோகமாகும். இது சொகுசுப் பண்டங்களை வாங்குகிறவர்கள் யார் என்பதில் மட்டுமான மாற்றமல்ல என்பதால், முதலாளிகளுக்கு பதில் தொழிலாளர்கள் என்ற மாற்றம் மட்டுமல்ல என்பதால், சொகுசுப் பண்டங்களுக்கான வேண்டல் குறைந்து அவற்றின் விலைகள் சரிகின்றன. (சொகுசுப் பண்டங்களை வாங்குகிறவர்கள் யார் என்பதில் மட்டும் மாற்றம் ஏற்படுவதாகக் கொண்டால், தொழிலாளர்களின் வேண்டலானது அவசியப் பண்டங்களின் விலைகள் உயருமாறு தூண்டாது; ஏனெனில் தொழிலாளர்கள் தமது அதிகரித்த கூலியில் சொகுசுப் பண்டங்களுக்காகச் செலவிடும் பகுதியை அவசியப் பண்டங்களுக்காகச் செலவிட முடியாது.) ஆகவே, சமுதாயப் பொருளுற்பத்தி நிகழ்முறையில் சொகுசுப் பண்டங்கள் வகிக்கும் பாத்திரத்தில் ஏற்படும் மாற்றத்துக்குப் பொருத்தமான விதத்தில் அப்பண்டங்களின் வழங்கல் குறைக்கப்படும் வரை, அவற்றின் உற்பத்தியிலிருந்து மூலதனம் விலக்கப்படுகிறது. அவற்றின் உற்பத்தி இவ்விதம் குறைக்கப்படுகையில், அவற்றின் விலை—மற்றபடி அவற்றின் மதிப்பு மாறாதிருக்க—இயல்பான மட்டத்துக்கு உயர்கிறது. சொகுசுப் பண்டங்களுக்கான வேண்டல் சுருங்குகிற, அல்லது அவற்றின் விலை இயல்பான நிலைக்கு வருகிற இந்த நிகழ்முறை நீடித்துக் கொண்டும், அவசியப் பண்டங்களின் விலைகள் உயர்ந்து கொண்டும் இருக்கும் வரை, ஏனைய உற்பத்திக் கிளைகளிலிருந்து எவ்வளவு மூலதனம் விலகி வெளியேறுகிறதோ அவ்வளவு மூலதனம் அவசியப் பண்டங்களின்

உற்பத்திக்குக் கிடைக்கிறது. வேண்டல் நிறைவு செய்யப்படும் வரை இது தொடர்கிறது. பிறகு திரும்பவும் சமநிலை ஏற்படுகிறது. இந் நிகழ்முறையின் முடிவில், சமுதாய மூலதனமும் ஆகவே பண-மூலதனமும் இதுகாறும் இருந்தது போல் இல்லாமல், வேறொரு விகிதத்தில் அவசியப் பண்டங்களின் உற்பத்திக்கும் சொகுசுப் பண்டங்களின் உற்பத்திக்கும் இடையே பிரிக்கப்பட்டிருக்கக் காண்கிறோம்.

இந்த ஆட்சேபணை எல்லாம் முதலாளிகளும் அவர்களுக்குத் துதிபாடும் பொருளாதார இயலாரும் எழுப்புகிற வெற்று வேட்டே அன்றி வேறல்ல.

இப்படி வெற்று வேட்டு எழுப்புவதற்கு ஏதாவது சாக்குப்போக்கு வேண்டும் அல்லவா? அதற்குப் பயன்படுகிறவை மூன்று வகைப் பட்டவை:

1) மற்றவை மாறாதிருக்க, சுற்றியோடும் சரக்குகளது விலைகளின் கூட்டுத் தொகை உயரும் போது (இந்த உயர்வு அதே அளவிலான சரக்குகளது விலைகளின் கூட்டுத் தொகையில் ஏற்படுவதாயினும் சரி, சரக்குகளது அளவு அதிகரிப்பதால் ஏற்படுவதாயினும் சரி), சுற்றோட்டத்திலுள்ள பணத்தின் அளவு அதிகரிக்கும் என்பது பணச் சுற்றோட்டத்தின் பொது விதியாகும். ஆனால் விளையும் பயனாகிய காரியத்தைக் காரணமாகவும், காரணத்தைக் காரியமாகவும் காட்டிக் குழப்படி செய்கிறார்கள். வாழ்வுக்கு அவசியமான பண்டங்களின் விலை உயரும் போது, கூலி உயருகிறது (அரிதாகவே உயருகிறது, விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே அதே விகிதத்தில் உயருகிறது). கூலி உயர்வானது சரக்குகளது விலை உயர்வதால் ஏற்படும் விளைவே தவிர, சரக்குகளது விலை உயர்வுக்கான காரணமல்ல.

2) கூலியானது சில பண்டங்களுக்கு மட்டுமோ, வட்டார அளவிலோ உயரும் போது—அதாவது சில உற்பத்திக் கிளைகளில் மட்டும் உயரும் போது—அதன் விளைவாக இந்தக் கிளைகளின் உற்பத்திப் பண்டங்களின் விலைகள் வட்டார அளவில் உயரக் கூடும். இதுவும் கூட பல நிலைமைகளைப் பொறுத்ததாகவே இருக்கும். உதாரணமாக, மிதமிஞ்சிய அளவுக்குக் கூலி குறைவாக இல்லாமலும், இதனால் மிதமிஞ்சிய அளவுக்கு இலாபம் அதிகமாக இல்லாமலும் இருத்தல், விலையுயர்வால் இந்தச் சரக்குகளுக்கான சந்தை சுருங்காதிருத்தல் (எனவே விலை உயருவதற்கு முன்னால் இச்சரக்குகளின் வழங்கல் சுருங்க வேண்டிய அவசியமில்லை), இப்படிப் பல நிலைமைகளை உதாரணமாய்க் குறிப்பிடலாம்.

3) பொதுவான கூலி உயர்வு ஏற்படும் போது, மாறும்-மூலதனம் முதன்மையாயுள்ள தொழிற் கிளைகளில் உற்பத்தியாகும் சரக்குகளின் விலை உயர்கிறது, ஆனால் மாறா-மூலதனமோ நிலை-மூலதனமோ முதன்மையாயுள்ள கிளைகளில் உற்பத்தியாகிறவற்றின் விலை குறைகிறது.

பணம் எங்கிருந்து வருகிறது?

மேலே சொல்லப்பட்ட அதே பதில்தான் இந்தக் கேள்விக்குரிய பொதுவான பதிலாகும். சுற்றோட்டத்திலுள்ள சரக்குகளது விலைகளின் மொத்தத் தொகை அதிகரித்துள்ளது. குறிப்பிட்ட அளவு சரக்குகளின் விலைகள் உயர்ந்திருப்பதல்ல இந்த அதிகரிப்புக்குக் காரணம்; இப்போது சுற்றோட்டத்திலுள்ள சரக்குத் திரள் முன்பு சுற்றோட்டத்திலிருந்த சரக்குத் திரளை விடப் பெரியதாகும் என்பதும், சரக்குத் திரளிலான இந்த அதிகரிப்பு விலைகளது வீழ்ச்சியால் சரிசெய்யப்பட்டு விடவில்லை என்பதுமே காரணம். கூடுதல் மதிப்பு கொண்ட இந்தக் கூடுதல் சரக்குகளின் சுற்றோட்டத்துக்குத் தேவைப்படும் கூடுதல் பணம், சுற்றியோடும் பணத் தொகை முன்னிலும் சிக்கனமான முறையில் உபயோகிக்கப்படுவதால் வரப் பெறலாம். கொடுப்புகள் முதலானவற்றைச் சரிக்கட்டுவதன் மூலமாகவோ முன்பிருந்த அதே அளவு நாணயங்களின் சுற்றோட்ட வேகத்தைக் கூடுதலாக்கும் நடவடிக்கைகளின் மூலமாகவோ இந்தச் சிக்கனம் சாத்தியமாகலாம். அல்லது, சேர்ப்பின் வடிவிலிருந்த பணத்தைச் சுற்றோட்ட ஊடக வடிவுக்கு மாற்றுவதன் மூலம் இந்தக் கூடுதல் பணம் பெறப்பட வேண்டும். இதன் பொருள் என்னவென்றால், ஓய்ந்திருக்கிற பண-மூலதனம் வாங்குஞ் சாதனமாகவோ கொடுப்புச் சாதனமாகவோ செயல்படத் தொடங்குகிறது என்பது மட்டுமல்ல. அல்லது, ஏற்கெனவே சேம நிதியாகச் செயல்படும் பண-மூலதனம் அதன் உடைமையாளருக்கு இந்த வேலையைச் செய்து கொண்டு அதே போது சமுதாயத்துக்குப் பயன்படும் விதத்தில் முனைப்புடன் சுற்றியோடி (கடன் கொடுப்பதற்காக உபயோகிக்கப்படும் வங்கிச் சேமிப்புகள் இப்படித்தான் சுற்றியோடுகின்றன), இரட்டைப் பணி ஆற்றுகிறது என்பது மட்டுமல்ல. சேமிப்பு நிதிகளாக நாணயங்கள் தேங்கி விடுவதை மட்டுப்படுத்தும் சிக்கன முறைகளையும் அது குறிக்கிறது.

"பணமானது தொடர்ந்து நாணயமாய் ஓடிப் புழங்க வேண்டுமானால், நாணயமானது தொடர்ந்து பணமாய் இறுகியாக வேண்டும். நாணயத்தின் தொடர்ச்சியான ஓட்டம் என்பது அது பெரிய அளவிலோ சிறிய அளவிலோ தொடர்ந்து நாணயச் சேம நிதிகளாகத் தேக்கமடைவதைப் பொறுத்தது; இந்தச் சேம நிதிகள் சுற்றோட்டத் துறை எங்கிலும் முளைத்தெழுகின்றன; சுற்றோட்டத்துக்கு இன்றியமையாத் தேவையும் ஆகின்றன; இந்தச் சேம நிதிகளின் உருவாக்கமும் வினியோகமும் கலைப்பும் மறு உருவாக்கமும் ஓயாமல் மாறி மாறி நடந்த வண்ணமுள்ளன. அவற்றின் நிலவல் இடையறாமல் மறைகிறது. அவற்றின் மறைவு இடையறாமல் நிலவுகிறது. இப்படி நாணயம் பணமாகவும் பணம் நாணயமாகவும் மாறுகிற இந்த ஓயாத மாற்றத்தைத்தான் முன்பு ஆதாம் ஸ்மித்தும் குறிப்பிட்டுக் காட்டினார் — சரக்குடைமையாளர் ஒவ்வொருவரும்

அவர் விற்கிற அந்தச் சரக்குடன் கூடவே, எதைக் கொடுத்து அந்தச் சரக்கை வாங்கினாரோ அந்தச் சர்வப் பொதுச் சரக்கில் ஒரு குறிப் பிட்ட அளவினையும் எப்போதும் தமது இருப்பில் வைத்திருக்க வேண்டும் என்று ஆதாம் ஸ்மித் கூறியதன் அர்த்தம் இதுவேதான். C — M — C என்னும் சுற்றோட்டத்தில் இரண்டாவது உறுப்பாகிய M — C என்பது வரிசையான பல வாங்கல்களாய்ப் பிரிகிறது என்றும், இந்த வாங்கல்கள் எல்லாம் ஒரே நேரத்தில் நடைபெறா மல் அடுத்தடுத்துக் காலப்போக்கில் நடைபெறுகின்றன என்றும், இதனால் Mஇன் ஒரு பகுதி நாணயமாகச் சுற்றியோடிக் கொண் டிருக்கும் போதே மறு பகுதி பணமாக ஓய்ந்திருக்கிறது என்றும் பார்த்தோம். பணம் இங்கு உண்மையில் முடக்கப்பட்ட நாணயமே ஆகும். சுற்றியோடுகிற நாணயச் செலாவணியில் தனித்தனிப் பகுதி கள் ஒரு நேரம் ஒரு வடிவிலும் வேறொரு நேரம் மற்றொரு வடிவிலுமாய் ஓயாமல் மாறி மாறிக் காட்சியளிக்கின்றன. ஆகவே சுற்றோட்ட ஊடகமானது பணமாக மாறுகிற இந்த முதலாவது மாற்றம் பணச் சுற்றோட்டத்தின் ஒரு செய்நுட்ப அமிசமாகுமே அன்றி வேறல்ல.'' (கார்ல் மார்க்ஸ், **அரசியல் பொருளாதார விமர் சனத்திற்கு ஒரு பங்களிப்பு**, 1859, பக்கம் 105, 106.) (''நாண யம்'' என்னும் சொல் இங்கு பணம் என்பதிலிருந்து வேறுபடும் ஒரு சொல்லாக, பணத்துக்குரிய பல்வேறு பணிகளில் சுற்றோட்ட ஊடகப் பணியில் மட்டும் ஈடுபடுகிற பணம் என்பதைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது.)

இந்த நடவடிக்கைகளெல்லாம் போதவில்லை என்னும் போது, கூடுதல் தங்கம் உற்பத்தி செய்யப்பட்டாக வேண்டும்; அல்லது, இதையே வேறு விதமாகச் சொன்னால், கூடுதல் உற்பத்திப் பண்டத்தில் ஒரு பகுதியை உயர்நிலை உலோகங்கள் வெட்டி யெடுக்கப்படும் நாடுகளுடைய உற்பத்திப் பொருளான தங்கத்துக்கு நேரடியாகவோ சுற்றடியாகவோ பரிவர்த்தனை செய்து கொண் டாக வேண்டும்.

சுற்றோட்டப் பொறிகளாகச் செயல்படுவதற்குத் தேவைப்படும் தங்கம், வெள்ளியின் வருடாந்தர உற்பத்தியில் செலவிடப்படும் உழைப்புச் சக்தி, சமுதாய உற்பத்திச் சாதனங்கள் இவற்றை எல்லாம் கூட்டிச் சேர்த்தோமானால் அது முதலாளித்துவப் பொரு ளுற்பத்தி முறையின், பொதுவாகச் சொன்னால் சரக்கு உற்பத் தியின் திறனிலாச் செலவில் ஒரு பெருங் கீற்றாகி விடும். கூடுதல் உற்பத்திச் சாதனங்களாகவும் நுகர்வுச் சாதனங்களாகவும் — மெய் யாகவே பெருஞ் செல்வமாக — அமையக் கூடியவை பலவும் இவ் விதம் சமுதாயப் பயன்பாட்டுக்குக் கிடைக்காத படி அகற்றப்படு கின்றன. உற்பத்தியின் அளவுவீதம், அல்லது அதன் விரிவாக் கத்தின் படித்தரம் குறிப்பிட்டதாயிருக்க, இந்தச் சுற்றோட்டப் பொறியமைவுக்கு ஆகிற செலவுகள் எந்த அளவுக்குக் குறைக்கப்

படுகின்றனவோ, சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன் அந்த அளவுக்கு உயர்கிறது. எனவே, கடன்-செலாவணி முறையின் வளர்ச்சியால் கிட்டும் வசதிகள் இந்தச் சேவைகளைச் செய்யுமாயின் அவை நேரடியாகவே முதலாளித்துவச் செல்வத்தை அதிகமாக்குகின்றன. சமுதாய உற்பத்தி நிகழ்முறையிலும் உழைப்பு நிகழ்முறையிலும் ஒரு பெரும் பகுதியை மெய்யான பணத்தின் தேவை இல்லாமலே நடந்தேறச் செய்வதன் மூலமோ, உண்மையில் செயல்படுகிற பணத்தின் செயல்திறனை உயர்த்துவதன் மூலமோ அவை இதைச் செய்கின்றன.

கடன்-செலாவணி முறை இல்லையானால், அதாவது உலோக நாணயச் சுற்றோட்டம் மட்டும்தான் இருக்கிறது என்னும் போது முதலாளித்துவப் பொருளுற்பத்தி அதன் இப்போதைய பரிமாணத்தில் (இந்தக் கண்ணோட்டத்திலிருந்து மட்டும் நோக்கினால் கூட) சாத்தியம்தானா என்ற அபத்தமான கேள்விக்கும் மேற்சொன்னதே பதிலளித்து விடுகிறது. சாத்தியமல்ல என்பதைக் கூறத் தேவையில்லை. உயர்நிலை உலோகங்களது உற்பத்திப் பரிமாணத்துக்கு இருக்கும் தடை வரம்புகள் குறுக்கிட்டிருக்கும். மறு புறம், கடன்-செலாவணி முறை பண-மூலதனத்தை வழங்குவதாகவோ இயங்க வைப்பதாகவோ இருக்கும் வரை, அதன் உற்பத்தித் திறன் குறித்து அதீத பிரமைகளுக்கு இடமளிக்கலாகாது. இப்பிரச்சினையை இங்கு இதற்கு மேல் பகுத்தாராய வேண்டியதில்லை.

---

உள்ளபடியான மூலதனத் திரட்டல் நடைபெறாத ஒரு நிலையை இப்போது நாம் ஆராய்ந்தாக வேண்டும். அதாவது உற்பத்தியின் அளவுவீதம் நேரடியாகப் பெருகாமல், ஈடேற்றம் பெறுகிற உபரி-மதிப்பில் ஒரு பகுதி திறனுடை-மூலதனமாய்ப் பிற்பாடு மாற்றப்படுவதற்காக நீண்ட காலத்துக்கோ குறுகிய காலத்துக்கோ சேமப் பண நிதியாகத் திரட்டப்படுகிறது.

இப்படித் திரட்டப்பெறும் பணம் கூடுதல் பணமாகி விடுவதால், மேற்கொண்டு இதற்கு விளக்கம் தேவையில்லை. இது தங்கம் உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் உபரித் தங்கத்தில் ஒரு பகுதியாகவே இருக்க முடியும்; உள்நாட்டு உற்பத்திப் பண்டத்தைப் பரிவர்த்தனை செய்து வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தங்கத்தில் ஒரு பகுதியாகவே இருக்க முடியும். பரிவர்த்தனை செய்யப்படும் உள்நாட்டு உற்பத்திப் பண்டம் வெளி நாட்டுக்குப் போய் விடுவதைக் கவனத்தில் கொண்டாக வேண்டும்.

ஆனால் நாட்டில் முன்பிருந்த அதே அளவு பணம் இப்போதும் இருப்பதாகக் கொள்வோமானால், திரட்டப்பட்டதும் திரட்டப்பட்டு வருவதுமான பணம் சுற்றோட்டத்திலிருந்து வந்ததாகவே இருத்தல் வேண்டும். இந்தப் பணத்தின் பணி மட்டும்தான் மாறியிருக்கிறது. சுற்றியோடிக் கொண்டிருந்த பணமானது பையப் பைய திரண்டு உருவாகும் உள்ளுறைப் பண-மூலதனமாக மாறியிருக்கிறது.

இங்கே திரட்டப்படும் பணமானது விற்கப்பட்ட சரக்குகளின் பண வடிவமாகும் என்பதோடு, அந்தச் சரக்குகளின் மதிப்பில் சரக்குடைமையாளருக்குக் கிடைக்கும் உபரி-மதிப்பாகி விடுகிற பகுதியின் பண வடிவமும் ஆகும். (கடன்-செலாவணி முறை இல்லை என்பதாகக் கொள்கிறோம்.) இந்தப் பணத்தைத் திரட்டுகிற முதலாளி வாங்காமலே விற்கிறவர் ஆகிறார்.

இந்நிகழ்முறையைத் தனிப்பட்ட ஒரு நிகழ்வாகவே நோக்குவோமானால் விளக்குவதற்கு ஒன்றுமில்லை. முதலாளிகளில் ஒரு பகுதியினர் தமது உற்பத்திப் பண்டங்களை விற்றுப் பெறுகிற பணத்தில் ஒரு பகுதியைத் தம்மிடமே வைத்துக் கொள்கிறார்கள். அதாவது அதைக் கொண்டு சந்தையிலிருந்து பண்டங்களை வாங்குவதில்லை. இன்னொரு பகுதியினரோ தொழிலை நடத்துவதற்குத் தொடர்ச்சியாகத் தேவைப்படுகிற பண-மூலதனத்தைத் தவிர, தமக்கு வருகிற பணம் முழுவதையும் உற்பத்திப் பண்டங்களாக மாற்றுகிறார்கள். உபரி-மதிப்பின் கலன்களாக சந்தையில் செலுத்தப்படும் உற்பத்திப் பண்டங்களில் ஒரு பகுதி உற்பத்திச் சாதனங்களாகவோ, மாறும்-மூலதனத்தின் மெய்க்கூறுகளான அவசிய வாழ்வுச் சாதனங்களாகவோ இருக்கிறது. ஆகவே அது உற்பத்திப் பெருக்கத்துக்கு நேரடியாகவே பயன்பட முடியும். ஏனெனில், முதலாளிகளில் ஒரு பகுதியினர் பண-மூலதனத்தைத் திரட்ட, மறு பகுதியினர் தமது உபரி-மதிப்பை முழுமையாய் நுகர்வதாக நாம் அனுமானித்துக் கொள்ளவில்லை; ஒரு பகுதியினர் பண வடிவில் திரட்டி உள்ளுறைப் பண-மூலதனத்தை உருவாக்கி வர, மறு பகுதியினர் மெய்யாகவே திரட்டுவதாக, அதாவது உற்பத்தியின் அளவுவீதத்தை விரிவாக்குவதாக, உள்ளபடியே திறனுடை-மூலதனத்தைப் பெருகச் செய்வதாக அனுமானித்துக் கொள்கிறோம். ஒரு பகுதி முதலாளிகள் பணத்தைத் திரட்டுகையில் மறு பகுதி முதலாளிகள் உற்பத்தியின் அளவுவீதத்தை விரிவாக்குவதும், ஒரு பகுதி உற்பத்தியின் அளவுவீதத்தை விரிவாக்குகையில் மறு பகுதி பணத்தைத் திரட்டுவதுமான இவ்விரு பணிகளும் மாறி மாறி நடைபெற்று வந்தபோதிலும், கிடைக்கக் கூடிய பண அளவானது சுற்றோட்டத்தின் தேவைகளுக்குப் போதுமானதாகவே இருந்து வருகிறது. அதோடு, ஒரு பக்கத்தில் பணம் திரட்டப்படும் நிகழ்வானது, ரொக்கப் பணம் இல்லாமலே கடன்-செலாவணி நோட்டுகளைத் திரட்டுவதன் மூலமாகவே நடைபெறக் கூடும்.

ஆனால் தனியொரு முதலாளிக்கு பதில், பொதுவாக முதலாளி வர்க்கம் முழுவதும் பண-மூலதனத்தைத் திரட்டுவதாகக் கொள்ளும் போது சிக்கல் உண்டாகிறது. முழுக்க முழுக்க முதலாளித்துவப் பொருளுற்பத்தியே நீக்கமற ஆதிக்கம் செலுத்துவதாய் நாம் செய்துள்ள அனுமானத்தின் படி, முதலாளி வர்க்கத்தை ஒதுக்கி விட்டுப் பார்த்தால் தொழிலாளி வர்க்கம் தவிர வேறு வர்க்கம் ஏதும்

இல்லை. தொழிலாளி வர்க்கம் விலைக்கு வாங்குவதெல்லாம் அதன் கூலியின் மொத்தத் தொகைக்குச் சமம். இந்தத் தொகை முதலாளி வர்க்கம் முழுவதுமாகச் சேர்ந்து முன்னீடு செய்யும் மாறும்-மூலதனத்தின் மொத்தத் தொகைக்குச் சமம். முதலாளி வர்க்கத்தின் உற்பத்திப் பண்டம் தொழிலாளி வர்க்கத்திடம் விற்கப் படுவதன் மூலம் இந்தப் பணம் முதலாளி வர்க்கத்துக்குத் திரும்பிச் செல்கிறது. இவ்வாறு அதன் மாறும்-மூலதனம் பண வடிவத்துக்கு மீள்கிறது. மாறும்-மூலதனத்தின் மொத்தத் தொகை, அதாவது ஓராண்டு காலத்தில் முன்னீடு செய்யப்படுவதல்ல, ஈடுபடுத்தப் படுகிற மாறும்-மூலதனத்தின் மொத்தத் தொகை x × £100 என்பதாகக் கொள்வோம். புரள்வின் வேகத்தைப் பொறுத்து, ஓராண்டு காலத்தில் இந்த மாறும்-மூலதன மதிப்பை முன்னீடு செய்ய எவ்வளவு அதிகமான அல்லது எவ்வளவு குறைவான பணம் தேவைப் படுகிறது என்பது இப்போது பரிசீலனையிலுள்ள பிரச்சினையைப் பாதிக்காது. இந்த x × £100 மூலதனத்தைக் கொண்டு முதலாளி வர்க்கம் குறிப்பிட்ட அளவு உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குகிறது, அல்லது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொழிலாளர்களுக்குக் கூலி கொடுக்கிறது — இது முதலாவது கொடுக்கல் வாங்கல். தொழிலாளர்கள் இதே தொகையைக் கொண்டு குறிப்பிட்ட அளவு சரக்குகளை முதலாளிகளிடமிருந்து வாங்குகிறார்கள்; இதன் மூலம் x × £100தொகையானது முதலாளிகளின் கைக்குத் திரும்பிச் செல்கிறது — இது இரண்டாவது கொடுக்கல் வாங்கல். இடையறாது திரும்பத் திரும்ப இவ்விதமே நடைபெறுகிறது. ஆகவே x × £100 ஆகிய இந்தத் தொகையானது, உற்பத்திப் பண்டத்தில் முதலாளி வர்க்கத்தின் உபரி-மதிப்பைக் குறிக்கும் பகுதி இருக்கட்டும், மாறா-மூலதனத்தைக் குறிக்கும் பகுதியைத் தொழிலாளி வர்க்கம் வாங்கிட ஒருபோதும் உதவ முடியாது. x × £100 ஆகிய இத்தொகையைக் கொண்டு, சமுதாய உற்பத்தியினது மதிப்பின் ஒரு பகுதியை மட்டுமே, முன்னீடு செய்யப்பட்ட மாறும்-மூலதனத்தின் மதிப்பைக் குறிக்கும் பகுதிக்குச் சமமானதை மட்டுமே, தொழிலாளர்களால் வாங்க முடியும்.

எந்த விகிதத்திலாயினும் கூடுதலாக வந்து சேரும் உயர்நிலை உலோகங்கள் தனிப்பட்ட பல்வேறு முதலாளிகளிடத்தும் வினியோக மாவதைத் தவிர வேறு எதையும் குறிக்காத சர்வப் பொதுவான இந்தப் பணத் திரட்டல் அன்னியில், முதலாளிகளது வர்க்கம் முழுதுமே பணம் திரட்ட முடிகிறதே, அது எப்படி?

முதலாளிகள் எல்லாரும் பதிலுக்கு எதையும் விலைக்கு வாங்காமலே தமது உற்பத்திப் பண்டத்தில் ஒரு பகுதியை விற்பதன் மூலம் இப்படி அவர்களால் பணம் திரட்ட முடிகிறது. அவர்கள் யாவரிடமும் குறிப்பிட்ட ஓரளவு பண நிதி இருப்பதிலும், சுற்றோட்ட ஊடகமாக இதனை அவர்கள் தமது சொந்த நுகர்வுக்காக சுற்றோட்டத்துள்.

செலுத்துவதிலும், இதில் ஒரு பகுதி சுற்றோட்டத்திலிருந்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் திரும்பி வருவதிலும் மாயமோ மந்திரமோ ஏதும் இல்லை. ஆனால் அப்போது இந்தப் பண நிதியானது, உபரி-மதிப்பு பணமாக மாற்றப்படுவதன் விளைவாய், சுற்றோட்டத்துக்கான நிதியாக இருக்கிறதே ஒழிய எவ்வகையிலும் உள்ளுறைப் பண-மூலதனமாக இருக்கவில்லை.

உள்ளபடியே நடைபெறுவதை உற்று நோக்குவோமாயின், வருங்கால உபயோகத்துக்காகத் திரட்டப்படும் உள்ளுறைப் பண-மூலதனமானது பின்வரும் கூறுகளால் ஆனது எனத் தெரிகிறது:

*1)* வங்கிச் சேமிப்புகள் [deposits in banks]: உண்மையில் வங்கியின் வசம் ஒப்படைக்கப்பட்டிருப்பது ஒப்பளவில் சொற்பத் தொகையே ஆகும். பண-மூலதனம் இங்கே பெயரளவுக்குத்தான் திரட்டப்படுகிறது; உண்மையில் திரட்டப்படுகிறவை பண பாத்தியதைகள்தாம். இந்தப் பாத்தியதைகள் எப்போதாவது பணமாக மாற்றப்படுகின்றன என்றால், சேமிப்பில் வந்து சேருவதில் வெளியே எடுக்கப்படுவது போக எஞ்சுகிற நிலுவை ஒன்று இருப்பது தான் இதற்குக் காரணம். வங்கியானது ஒப்பளவில் சிறு தொகையையே பணமாகத் தன் கைவசம் வைத்துக் கொள்கிறது.

*2)* அரசாங்கப் பிணையங்கள் [government securities]: இவை நாட்டின் வருடாந்தர உற்பத்தியின் மீதான பாத்தியதைகளாக எஞ்சியிருப்பவையே தவிர, மூலதனம் அல்ல.

*3)* பங்குகள் [stocks]: போலியாய் இல்லாதவை யாவும் ஏதேனும் தொழில் நிறுவனத்தைச் சேர்ந்த மெய்யான மூலதனத்தின் உடைமைப் பத்திரங்களும், அதிலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கிற உபரி-மதிப்பின் மீதான முறிகளும் [drafts] ஆகும்.

இம்மூன்றில் எதிலும் பணத் திரட்டல் நடைபெறவில்லை. ஒரு பக்கத்தில் பண-மூலதனத் திரட்டலாகத் தோன்றுவது மறு பக்கத்தில் பணத்தின் தொடர்ச்சியான செலவீடாகி விடுகிறது. பணம் அதன் உடைமையாளரால் செலவிடப்பட்டாலும் சரி, அவரிடம் கடன் பட்ட ஏனையோரால் செலவிடப்பட்டாலும் சரி, இங்கே எல்லாம் ஒன்றுதான்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியை அடிப்படையாகக் கொள்ளும் போது, பணம் சேர்க்க வேண்டுமென்றே பணம் சேர்க்கப்படுவதில்லை. அது ஒரு விளைவே ஆகும். வழக்கத்தைக் காட்டிலும் பணம் அதிக அளவில் சேர்ப்பாக வடிவெடுக்கக் கூடும்—இது சுற்றோட்டத்தில் ஏற்படும் தேக்கத்தால் ஏற்படும் விளைவு. அல்லது, மூலதனப் புரள்வுக்கு அவசியமாகிற பணத் திரட்டல்களின் விளைவாக இப்படி ஏற்படலாம். அல்லது உள்ளுறை வடிவில் இருப்பதும் திறனுடை-மூலதனமாகச் செயல்பட வேண்டியதுமான பண-மூலதனமே கூட தற்காலிகமாகப் பணச் சேர்ப்பாய் இருக்கக் கூடும்.

ஆகவே ஒரு புறம், பணமாக ஈடேற்றம் பெறும் உபரி-மதிப்பின்

ஒரு பகுதி சுற்றோட்டத்திலிருந்து எடுக்கப்பட்டு சேர்ப்பாகத் திரட்டப்படுகிறது என்றால், அதே போது உபரி-மதிப்பின் இன்னொரு பகுதி தொடர்ந்து திறனுடை-மூலதனமாக மாற்றப்பட்டு வருகிறது. கூடுதலாக வரப் பெறும் உயர்நிலை உலோகங்கள் முதலாளி வர்க்கத்தின் உறுப்பினர்களிடையே வினியோகமாவது தவிர, பண வடிவிலான திரட்டல் ஒருபோதும் எல்லா முதலாளிகளிடத்தும் ஒரே நேரத்தில் நடைபெறுவதில்லை.

வருடாந்தர உற்பத்தியின் ஒரு பகுதிக்கு — சரக்குகளின் வடிவில் அமைந்த உபரி-மதிப்பைக் குறிக்கும் பகுதிக்கு — பொருந்துவது அதன் மறு பகுதிக்கும் பொருந்தும். குறிப்பிட்ட பணத் தொகை அதன் சுற்றோட்டத்துக்குத் தேவைப்படுகிறது. ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளில் உபரி-மதிப்பைக் குறிக்கும் பகுதியைப் போலவே, இந்தப் பணத் தொகையும் முதலாளி வர்க்கத்துக்கே உரியதாகும். ஆரம்பத்தில் இது முதலாளி வர்க்கத்தாலேயே சுற்றோட்டத்துள் செலுத்தப்படுகிறது. சுற்றோட்டத்தின் மூலமாகவே இது அவ்வர்க்கத்தின் உறுப்பினர்களிடையே ஓயாமல் மறு வினியோகம் செய்யப்படுகிறது. பொதுவான நாணயச் சுற்றோட்டத்தில் நடைபெறுவது போலவே, இந்தத் தொகையில் ஒரு பகுதி ஒரு நேரம் ஒருவரிடமும் இன்னொரு நேரம் இன்னொருவரிடமுமாக வெவ்வேறு இடங்களில் தேங்குகிறது; அதே போது மறு பகுதி தொடர்ந்து சுற்றியோடுகிறது. திரட்டப்படுவதில் ஒரு பகுதி பண-மூலதனமாக அமையும் பொருட்டு வேண்டுமென்றே திரட்டப்படுவதாயினும் இல்லையாயினும் அதனால் இங்கு நிலைமை மாறிவிடவில்லை.

ஒரு முதலாளி இன்னொரு முதலாளியின் உபரி-மதிப்பில் ஒரு பகுதியை, அல்லது அவரது மூலதனத்தில் ஒரு பகுதியையே கூடக் கைப்பற்றக் கூடும்; இவ்விதம் பண-மூலதனமும் திறனுடை-மூலதனமும் ஒருதலைச்சார்பாய் திரட்டப்படுவதும் மையப்படுவதுமான [one-sided accumulation and centralisation] சுற்றோட்ட சாகசங்களை நாம் இங்கு கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. எடுத்துக்காட்டாய், A என்பவர் பண-மூலதனமாகத் திரட்டுகிற அபகரிக்கப்பட்ட உபரி-மதிப்பில் ஒரு பகுதி, B என்பவரின் உபரி-மதிப்பில் அவரிடம் வந்து சேராமற் போன பகுதியாய் இருக்கலாம்.

பகுதி III

# மொத்தச் சமுதாய மூலதனத்தின் மறுவுற்பத்தியும் சுற்றோட்டமும்

## அத்தியாயம் XVIII[40]

### முன்னுரை

### I. ஆய்வுப்பொருள்

மூலதன உற்பத்தியின் நேரடியான நிகழ்முறை அதன் உழைப்பு நிகழ்முறையும் தற்பெருக்க நிகழ்முறையும் ஆகும். சரக்கு-உற்பத்தியே [commodity-product] இந்நிகழ்முறையின் விளைவு, உபரி-மதிப்பின் உற்பத்தியே இதன் பிரதானக் குறி [compelling motive].

மூலதனத்தின் மறுவுற்பத்தி நிகழ்முறை என்பது இந்த நேரடி யான உற்பத்தி நிகழ்முறையாலும், மற்றும் முறையான சுற்றோட்ட நிகழ்முறையின் இரு கட்டங்களாலும் ஆனதாகும்; அதாவது கால வட்ட நிகழ்முறையாக, குறிப்பிட்ட கால வட்டங்களில் ஓயாமல் திரும்பத் திரும்ப நடைபெறும் நிகழ்முறையாக மூலதனத்தின் புரள் வாய் அமையும் முழுச் சுற்றால் ஆனதாகும்.

மூலதனச் சுற்றினை M .., M' என்ற வடிவில் பரிசீலித்தாலும் சரி, P ... P என்ற வடிவில் பரிசீலித்தாலும் சரி, நேரடி உற்பத்தி நிகழ் முறையான P என்பது எப்போதும் இந்தச் சுற்றில் ஒரே ஒரு கண்ணியாகுமே தவிர வேறல்ல. ஒரு வடிவில் அது சுற்றோட்ட நிகழ்முறையின் ஊக்கியாக விளங்குகிறது; மற்றொரு வடிவில் சுற்றோட்ட நிகழ்முறை அதன் ஊக்கியாக விளங்குகிறது. அது தொடர்ந்து திரும்பத் திரும்ப புத்தாக்கம் பெறுவதானது, அதாவது மூலதனம் திறனுடை-மூலதனமாகத் தொடர்ந்து மீண்டும் மீண்டும் உதித்தெழுவதானது, மேற்கூறிய இரு வடிவங்களில் எதை எடுத்துக் கொண்டாலும், சுற்றோட்ட நிகழ்முறையின் போது அதற்கு ஏற் படும் மாற்றங்களின் விளைவாய் நடந்தேறுகிறது. மறு புறம் உற்பத்தி நிகழ்முறை தொடர்ந்து மீண்டும் மீண்டும் நடைபெறுவதுதான் சுற் றோட்டத் துறையில் மூலதனம் ஓயாமல் திரும்பத் திரும்ப அடையும்

---

40 எங்கெல்ஸ் குறிப்பு: கையெழுத்துப் பிரதி II என்பதிலிருந்து.

மாற்றங்களுக்கு, பண-மூலதனமாகவும் சரக்கு-மூலதனமாகவும் மாறி மாறி அது தோற்றமெடுப்பதற்கு வேண்டிய நிபந்தனை ஆகும்.

ஆயினும், ஒவ்வொரு தனிப்பட்ட மூலதனமும் மொத்தச் சமுதாய மூலதனத்தின் தனிப்பட்ட ஒரு பின்னமே ஆகும்; தனி உயிருடன் கூடிய ஒரு பின்னம் என்று கூட சொல்லலாம்—தனிப்பட்ட முதலாளி ஒவ்வொருவரும் எப்படி முதலாளி வர்க்கத்தின் ஒரு தனிக் கூறாக இருக்கிறாரோ அதே போல. சமுதாய மூலதனத்தின் இயக்கம் என்பது அதன் தனிப்பட்ட பின்னப் பகுதிகளது இயக்கங்களின், அதாவது தனிப்பட்ட மூலதனங்களது புரள்வுகளின் ஒட்டுமொத்தமே ஆகும். தனியொரு சரக்கின் உருமாற்றமானது எப்படி சரக்குலகின் உருமாற்றத் தொடரில்—அதாவது சரக்குச் சுற்றோட்டத்தில்—ஒரு கண்ணியாகுமோ, அதே போல தனிப்பட்ட மூலதனத்தின் உருமாற்றமாகிய அதன் புரள்வும் சமுதாய மூலதனம் நிகழ்த்துகிற சுற்றில் ஒரு கண்ணியாகும்.

இந்த ஒட்டுமொத்த நிகழ்முறையில் திறனுடை நுகர்வும் (நேரடி உற்பத்தி நிகழ்முறை), அதனை நிகழச் செய்யும் வடிவ மாற்றங்களும் (பொருளாயத முறையில் சொன்னால், பரிவர்த்தனைகள்), மற்றும் தனிப்பட்ட சொந்த நுகர்வும், அதனை நிகழச் செய்யும் வடிவ மாற்றங்கள் அல்லது பரிவர்த்தனைகளும் அடங்குகின்றன. ஒரு புறம், மாறும்-மூலதனம் உழைப்புச் சக்தியாக மாற்றப்படுவதும், ஆகவே முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையில் உழைப்புச் சக்தி சேர்க்கப்படுவதும் அதில் உள்ளடங்குகின்றன. இங்கே தொழிலாளி தமது சரக்கான உழைப்புச் சக்தியை விற்பவராகவும், முதலாளி அதனை வாங்குபவராகவும் செயல்படுகின்றனர். ஆனால் மறு புறம், சரக்குகளின் விற்பனை என்னும் போது, அது தொழிலாளி வர்க்கம் அச்சரக்குகளை வாங்குவதையும், ஆகவே| தொழிலாளர்களது சொந்த நுகர்வையும் தன்னுள் கொண்டதாகிறது. இங்கே தொழிலாளி வர்க்கத்தினர் சரக்குகளை வாங்குவோராகவும் முதலாளிகள் தொழிலாளர்களுக்கு சரக்குகளை விற்போராகவும் விளங்குகின்றனர்.

சரக்கு-மூலனத்தின் சுற்றோட்டமானது உபரி-மதிப்பின் சுற்றோட்டத்தையும் தன்னுள் கொண்டுள்ளது; எனவே முதலாளிகளின் சொந்த நுகர்வுக்கு, அதாவது உபரி-மதிப்பின் நுகர்வுக்கு வேண்டிய விற்றல்-வாங்கல்களையும் அது தன்னுள் கொண்டுள்ளது.

மூலதனங்களின் சுற்றை அவற்றின் ஒட்டுமொத்தமாகிய சமுதாய மூலதனத்தின் சுற்றாக நோக்குமிடத்து, இவ்விதம் அதனை முழுமையாக நோக்குமிடத்து, அது மூலதனச் சுற்றோட்டத்தை மட்டுமல்லாமல் பொதுவான சரக்குச் சுற்றோட்டத்தையும் தன்னுள் கொண்டதாகிறது. பொதுவான சரக்குச் சுற்றோட்டம் என்பது ஆரம்பத்தில் பின்வரும் இரு அடக்கக் கூறுகளைக் கொண்டதாகவே

இருக்க முடியும்: 1) முறையான மூலதனச் சுற்று; 2) சொந்த நுகர்வில் சேரும் சரக்குகளின் சுற்று; அதாவது தொழிலாளி தன் கூலியையும் முதலாளி தன் உபரி-மதிப்பையும் (அல்லது அதன் ஒரு பகுதியையும்) செலவிட்டு வாங்குகிற சரக்குகளின் சுற்று. உபரி-மதிப்பு சரக்கு-மூலதனத்தின் ஒரு பகுதியாகும் என்பதால், மூலதனச் சுற்று உபரி-மதிப்புச் சுற்றோட்டத்தையும் தன்னுள் கொண்டதாய் இருந்தாக வேண்டும். இதே போல அது மாறும்-மூலதனம் உழைப்புச் சக்தியாக மாற்றப்படுவதையும், அதாவது கூலி கொடுத்தலையும் தன்னுள் கொண்டதாகும். ஆனால் இந்த உபரி-மதிப்பையும் கூலியையும் சரக்குகளுக்காகச் செலவிடுவதானது மூலதனச் சுற்றோட்டத்தில் ஒரு கண்ணியாவதில்லை. எப்படியும் கூலியைச் செலவிடுவது இச்சுற்றோட்டத்துக்கு அவசியமானது என்றாலுங் கூட, அது மூலதனச் சுற்றோட்டத்தில் ஒரு கண்ணியாவதில்லை.

முதல் பாகத்தில், முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையைத் தனிப்பட்ட ஒரு செயலாகவும் ஒரு மறுவுற்பத்தி நிகழ்முறையாகவும்— உபரி-மதிப்பின் உற்பத்தியாகவும், நேரே மூலதனத்தின் உற்பத்தியாகவும்—பகுத்தாய்ந்தோம். சுற்றோட்டத் துறையில் மூலதனமானது வடிவிலும்' உள்ளடக்கத்திலும் அடையும் மாற்றங்களை அனுமானித்துக் கொண்டோமே தவிர ஆராயவில்லை. ஒரு புறம் முதலாளி உற்பத்திப் பண்டத்தை அதன் மதிப்புக்குச் சமமான விலைக்கு விற்பதாகவும், உற்பத்தி நிகழ்முறையை மீண்டும் தொடக்குவதற்கு அல்லது தொடர்ந்து நடைபெறச் செய்வதற்குத் தேவையான பொருளாயத உற்பத்திச் சாதனங்களைச் சுற்றோட்டத் துறைக்குள்ளேயே பெற்றுக் கொள்வதாகவும் கொண்டோம். சுற்றோட்டத் துறையினுள் ஒரே ஒரு செயலை மட்டுமே, முதலாளித்துவப் பொருளுற்பத்தி நடைபெறுவதற்கு அவசியமான செயலாகிய உழைப்புச் சக்தியின் விற்றலையும் வாங்கலையும் மட்டுமே நாம் ஆராய்ந்தோம்.

இந்த இரண்டாம் பாகத்தின் முதல் பகுதியில், மூலதனம் அதன் சுழல் இயக்கத்தின் போது ஏற்கும் பல்வேறு வடிவங்களையும், இந்தச் சுழல் இயக்கத்தின் பல்வேறு வடிவங்களையும் பரிசீலித்தோம். முதல் பாகத்தில் வேலை நேரத்தைப் பரிசீலித்தோம், இந்த வேலை நேரத்தோடு இப்போது நாம் சுற்றோட்ட நேரத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாம் பகுதியில், மூலதனச் சுற்றினைக் காலவட்ட முறையில் நடைபெறும் ஒன்றாக, அதாவது மூலதனப் புரள்வாகப் பரிசீலித்தோம். மூலதனத்தின் வெவ்வேறு உட்கூறுகளாகிய நிலை-மூலதனமும் சுழல்-மூலதனமும் அவற்றின் வடிவ மாற்றங்களுக்கான சுழல் இயக்கத்தை எப்படி வெவ்வேறு காலவட்டங்களில் வெவ்வேறு விதமாக நிகழ்த்துகின்றன என்பதை விளக்கினோம். அதோடு வேலைக் காலம், சுற்றோட்டக் காலம் இவற்றின்

வெவ்வேறு அளவுகளை நெறிப்படுத்துகிற நிலைமைகளையும் பரிசீலித்தோம். மூலதனச் சுற்றின் கால அளவும், அச்சுற்றின் அடக்கக் கூறுகளுக்கு இடையிலான வெவ்வேறு விகிதாசாரங்களும், உற்பத்தி நிகழ்முறையின் பரிமாணங்கள் மீதும் வருடாந்தர உபரி-மதிப்பு வீதத்தின் மீதும் செலுத்தும் தாக்கத்தைத் தெளிவுபடுத்தினோம். மூலதனம் அதன் சுற்றின் போது ஓயாமல் ஒவ்வொன்றாகப் பூண்டும் பிறகு களைந்தும் விடுகிற வடிவங்களை முதல் பகுதியில் பரிசீலித்தோம். குறிப்பிட்ட பருமனுள்ள மூலதனமானது ஒன்றன்பின் ஒன்றாய் வரும் இந்த வடிவ வரிசையினிடையே மாறுபடும் விகிதங்களில்தான் என்றாலும் ஒரே நேரத்தில் வெவ்வேறு வடிவங்களுக்குரியனவாக — திறனுடை-மூலதனமாகவும் பண-மூலதனமாகவும் சரக்கு-மூலதனமாகவும் — பிரிக்கப்படுகிறது என்பதும், இவ்விதம் இவ்வடிவங்கள் மாறி மாறி வருவதோடு மொத்த மூலதன-மதிப்பின் வெவ்வேறு பகுதிகள் ஒருங்கே எந்நேரமும் இருந்து, இந்த வெவ்வேறு நிலைகளில் தொடர்ந்து செயலாற்றுகின்றன என்பதும் இரண்டாம் பகுதியில் காட்டப்பட்டது. குறிப்பாகப் பண-மூலதனம் முதல் பாகத்தில் வெளிப்படாத பிரத்தியேகத் தனியியல்புகளுடன் முன்வரக் கண்டோம். குறிப்பிட்ட சில விதிகள் இருக்கக் கண்டோம். இவற்றின் படி குறிப்பிட்ட மூலதனத்தின் பல்வேறுபட்ட பெரும் பெரும் அடக்கக் கூறுகள் — மூலதனப் புரள்வு நிலைமைகளுக்கு ஏற்ப — பண-மூலதனத்தின் வடிவில் ஓயாமல் திரும்பத் திரும்ப முன்னீடு செய்யப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் வர வேண்டும், அப்போதுதான் குறிப்பிட்ட பருமனுள்ள திறனுடை-மூலதனத்தை இடையறாது இயங்கச் செய்ய முடியும் என்பது அறிந்தோம்.

ஆனால் முதலாம் பகுதியிலும் சரி, இரண்டாம் பகுதியிலும் சரி, தனிப்பட்ட ஒரு மூலதனம் மட்டுமே, சமுதாய மூலதனத்தின் தனித்த ஒரு பகுதியின் இயக்கம் மட்டுமே ஆராயப்பட்டு வந்தது.

ஆனால், தனிப்பட்ட மூலதனங்களின் சுற்றுகள் பின்னிப் பிணைந்தே இருக்கின்றன, ஒன்றுக்கொன்று முன்தேவையாகவும் ஒன்றை ஒன்று அத்தியாவசியக் கூறாகவும் கொண்டுள்ளன. இப்படிப் பின்னிப் பிணைந்திருப்பதால்தான் அவை முழுமொத்த சமுதாய மூலதனத்தின் இயக்கமாகின்றன — சாமானியச் சரக்குச் சுற்றோட்டத்தில் சரக்கின் முழுமொத்த உருமாற்றமானது எப்படி சரக்குலகின் உருமாற்றங்களது தொடரமைப்பில் ஒரு கண்ணியாக இருக்கிறதோ, அதே போல தனிப்பட்ட மூலதனத்தின் உருமாற்றமானது இப்போது சமுதாய மூலதனத்தின் உருமாற்றத் தொடரமைப்பில் ஒரு கண்ணியாக விளங்குகிறது. ஆனால் சாமானிய சரக்குச் சுற்றோட்டமானது மூலதனச் சுற்றோட்டமும் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை; ஏனென்றால் சாமானிய சரக்குச் சுற்றோட்டம் முதலாளித்துவமல்லாத பொருளுற்பத்தியிலும் நடைபெறலாம். முழுமொத்தச் சமுதாய மூலதனத்தின் சுற்றென்பது,

முன்பே நாம் குறிப்பிட்டது போல தனிப்பட்ட மூலதனத்தின் சுற்றுக்குப் புறத்தே நடைபெறும் சரக்குச் சுற்றோட்டத்தையும்—அதாவது மூலதனத்தைக் குறிக்காத சரக்குகளது சுற்றோட்டத்தையும்—தன்னுள் கொண்டதாகும்.

இப்போது நாம் தனிப்பட்ட மூலதனங்கள் முழுமொத்த சமுதாய மூலதனத்தின் அடக்கக் கூறுகளே என்ற முறையில் இவற்றின் சுற்றோட்ட நிகழ்முறையினை (இந்நிகழ்முறையினை முழுமொத்தமாகப் பார்க்கையில் இது மறுவுற்பத்தி நிகழ்முறையின் ஒரு வடிவமே ஆகும்) பரிசீலித்தாக வேண்டும். அதாவது இந்த முழுமொத்தச் சமுதாய மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறையினை இப்போது நாம் பரிசீலித்தாக வேண்டும்.

## II. பண-மூலதனம் வகிக்கும் பங்கு

[பின்வருவது இந்தப் பகுதியில் பிற்பாடு வரும் பிரிவுக்குரியது என்ற போதிலும், இதனை இப்போதே ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம். அதாவது ஒட்டுமொத்த சமுதாய மூலதனத்தின் அடக்கக் கூறுகளில் ஒன்று என்ற வகையில் பண-மூலதனத்தைப் பரிசீலிப்போம்.]

தனிப்பட்ட மூலதனத்தின் புரள்வைப் பரிசீலித்த போது பண-மூலதனமானது இரு அமிசங்களை வெளிப்படுத்தக் கண்டோம்.

முதலாவதாக, தனிப்பட்ட ஒவ்வொரு மூலதனமும் களம் புகுந்து மூலதனத்துக்குரிய அதன் நிகழ்முறையைத் தொடங்குவது பண-மூலதன வடிவில்தான். இவ்விதம் மூலதன நிகழ்முறை முழுவதையும் உந்தி விடும் **முதல் விசையாக** [*primus motor*] பண-மூலதனம்தான்.

இரண்டாவதாக, முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பில் ஓயாமல் திரும்பத் திரும்பப் பண வடிவில் முன்னீடு செய்து புதுப்பிக்கப்பட வேண்டிய பகுதி அது இயங்க வைக்கும் திறனுடை-மூலதனத்துடன் கொண்டுள்ள விகிதமானது, அதாவது உற்பத்தியின் இடையறாத அளவுவீதத்துடன் கொண்டுள்ள விகிதமானது, புரள்வுக் காலம் எவ்வளவு, அதன் இரு உட்கூறுகளாகிய வேலைக் காலத்துக்கும் சுற்றோட்டக் காலத்துக்குமுள்ள விகிதம் எவ்வளவு என்பதற்கு ஏற்ப வேறுபடுகிறது. ஆனால், இந்த விகிதம் எவ்வளவாயினும், தொடர்ந்து எந்நேரத்திலும் திறனுடை-மூலதனமாக்ச் செயல்படக் கூடியதாய் நிகழ்முறையில் ஈடுபடும் மூலதன-மதிப்புப் பகுதிக்கு, முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பில் திறனுடை-மூலதனத்தோடு கூட எப்போதும் பண வடிவில் இருந்து வர வேண்டிய பகுதியானது எப்படியும் வரம்பிட்டு விடுகிறது. சராசரியாகக் கருதக் கூடிய முறையான புரள்வையே இங்கு நாம் மனத்திற் கொண்டுள்ளோம். சுற்றோட்டம் தடைபடுதல் விதிவிலக்கே என்பதால் ஈடு செய்வதற்கு வேண்டிய கூடுதல் பண-மூலதனத்தை கணக்கில் எடுக்காமல் விட்டு விடுகிறோம்.

**முதலாவது அமிசம் தொடர்பாக:** சரக்குச் சுற்றோட்டம் இல்லாமல் சரக்கு உற்பத்தி நடைபெற முடியாது. சரக்குகள் பண மாகத் தெரிவிக்கப் பெறாமல், அதாவது பணச் சுற்றோட்டம் இல்லாமல் சரக்குச் சுற்றோட்டம் நடைபெற முடியாது. சரக்கைச் சரக்கென்றும் பணமென்றும் பகுத்திடுவது உற்பத்திப் பண்டத்தை சரக்காகத் தெரிவிப்பு பெறச் செய்வதற்கான விதியாகும். இதே போல், முதலாளித்துவச் சரக்கு உற்பத்தி நடைபெற வேண்டு மானால்—சமுதாய அளவில் பார்த்தாலும் சரி, தனிப்பட்ட முறை யில் பார்த்தாலும் சரி—பண வடிவிலான மூலதனம், அதாவது பண-மூலதனம் இருக்க வேண்டியது, முளைத்தெழும் தொழில் ஒவ்வொன்றையும் உந்தி விடும் **முதல் விசை** என்ற விதத்தில் மட்டு மல்லாமல் அத்தொழிலைத் தொடர்ந்து இயக்கும் இடையறா விசை என்ற விதத்திலும் அவசியமாகிறது. முக்கியமாக சுழல்-மூலதன மானது மாறாத குறுங்கால அளவுகளில் ஓயாமல் திரும்பத் திரும்பப் பண-மூலதனம் விசையாகச் செயல்படுவதைக் குறிக்கிறது. முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பு முழுவதையும்—அதாவது உழைப்புச் சக்தி, உழைப்புச் சாதனங்கள், மூலப்பொருட்கள் ஆகிய சரக்குகளாய் அமையும் மூலதனக் கூறுகள் அனைத்தையும்—பணத்தைச் செலவிட்டு திரும்பத் திரும்ப விலைக்கு வாங்கியாக வேண்டும். இங்கே தனிப்பட்ட மூலதனத்தின் விவகாரத்தில் மட்டு மல்லாமல், சமுதாய மூலதனத்தின் விவகாரத்திலும் இதுவேதான் நிலைமை—சமுதாய மூலதனம் தனிப்பட்ட மூலதனங்களின் வடி வில்தான் செயல்படுகிறது. ஆனால் முதல் பாகத்தில் தெளிவு படுத்தப்பட்டது போல், மூலதனத்தின் செயற் களமானது, அதாவது உற்பத்தியின் அளவுவீதமானது, முதலாளித்துவ அடிப் படையிலும் கூட, அதன் **அறுதி** வரம்புகளைப் பொறுத்த வரை, செயலில் ஈடுபடும் பண-மூலதனத்தின் பருமனால் நிர்ணயிக்கப் படுவதாக இதிலிருந்து பெறப்பட்டு விடவில்லை.

மூலதனத்துள் சேர்ந்திருக்கும் உற்பத்தி-அடிக்கூறுகளின் விரி வகற்சி, குறிப்பிட்ட வரம்புகளுக்கு உட்பட்டிருக்கும் வரை, முன்னீடு செய்யப்படுகிற பண-மூலதனத்தின் பருமனைச் சார்ந்த தாய் இருக்கவில்லை. உழைப்புச் சக்திக்குத் தரப்படும் கூலி மாறா திருக்கையிலும் விரிவிலோ மும்முரத்திலோ அதனை முன்னிலும் அதிகமாகவோ குறைவாகவோ சுரண்டுவது சாத்தியமே. சுரண்டல் அதிகரிக்கையில் பண-மூலதனமும் அதிகரிப்பதாயினும் (அதாவது கூலி உயர்த்தப்படுவதாயினும்), அதே விகிதத்தில் அதிகரிப்ப தில்லை, ஆகவே அந்த அளவுக்கு அது ஓர் அதிகரிப்பாவதில்லை.

மண்ணும் கடலும் வனமும் தாதுப்பொருட்களும் இன்ன பிறவும் இயற்கை வழங்கிடுகிறவை, உற்பத்தித் திறனுள்ள முறையில் இவை பயன்படுத்தப்பட்ட போதிலும் இவை எல்லாம் மூலதன-மதிப்புக் கூறுகள் ஆவதில்லை. முன்னீடு செய்யப்படும் பண-மூலதனத்தை

அதிகரிக்காமலே, முன்னிலும் அதிகமாகி விடாமல் அதே அள வுள்ள உழைப்புச் சக்தியை முன்னிலும் அதிகமான பிரயாசை எடுக்கச் செய்து, இந்த இயற்கை வளங்களை விரிவிலோ மும்முரத் திலோ முன்னிலும் கூடுதலாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு, கூடுதல் பண-மூலதனம் இல்லாமலே திறனுடை-மூல தனத்தின் மெய்யான கூறுகளை அதிகமாக்க முடிகிறது. இருப்பினும் கூடுதல் துணைப் பொருட்களுக்காகக் கூடுதல் பண-மூலதனம் அவசியமாகலாம்; ஆனால் பண-மூலதன வடிவில் முன்னீடு செய் யப்படும் மூலதன-மதிப்பு, திறனுடை-மூலதனத்தின் அதிகரித்த பயனாற்றலுக்கேற்ற விகிதத்தில் அதிகமாவதில்லை, ஆகவே அந்த அளவுக்கு அது ஓர் அதிகரிப்பாவதில்லை.

உழைப்புச் சாதனங்கள் (அதாவது நிலை-மூலதனம்) அன்றாடம் பயன்படுகிற நேரத்தை நீட்டுவதன் மூலமும், அவற்றை இன்னும் மும்முரமாய்ப் பிரயோகிப்பதன் மூலமும், ஒரே அளவிலான உழைப்புச் சாதனங்களையும் ஒரே அளவிலான நிலை-மூலதனத்தை யும் இன்னும் திறமையான முறையில் பயன்படுத்தலாம்; நிலை-மூலதனத்துக்காகக் கூடுதலாய்ப் பணத்தை முதலீடு செய்யாமலே இதைச் செய்யலாம். அப்போது நிலை-மூலதனத்தின் புரள்வு முன்னிலும் துரிதமாய் நடந்தேறுவதோடு, அம்மூலதனத்தின் மறு வுற்பத்திக்குரிய கூறுகளும் முன்னிலும் துரிதமாய் வழங்கப்படு கின்றன.

இயற்கை வளங்களை மட்டுமல்லாமல், செலவு தேவையில்லாத இயற்கைச் சக்திகளையும் கூட உற்பத்தி நிகழ்முறையில் பயன்படுத்தி ஓரளவு கூடுதலான பயன்திறன் வாய்ந்த காரணிகளாக அவற்றைச் செயல்பட வைக்கலாம். இவை எந்த அளவுக்குப் பயன்திறன் வாய்ந்தவை என்பது முதலாளிக்குச் செலவில்லாமலே கிடைக்கிற வழிமுறைகளையும் விஞ்ஞான வளர்ச்சிகளையும் பொறுத்ததாகும்.

உற்பத்தி நிகழ்முறையில் உழைப்புச் சக்தியின் சமுதாய ஒன் றிணைப்பும், தனிப்பட்ட தொழிலாளர்களிடம் திரண்டுள்ள திற மையும் இதே போல் பயன்திறன் வாய்ந்தவையே. நிலவுடைமை யாளருக்குக் கிடைக்க வேண்டியது கிடைப்பதில்லை என்று கேரி கணக்கிட்டுக் காட்டுகிறார். ஏனென்றால் நிலம் அதன் இப் போதைய உற்பத்தித் திறனை வந்தடையும் பொருட்டு நினைவுக் கெட்டா காலம் தொட்டு அந்த மண்ணில் இடப்பட்டுள்ள மூல தனம் அல்லது உழைப்பு அனைத்துக்காகவும் கிடைக்க வேண்டியது நிலவுடைமையாளருக்குக் கிடைக்கவில்லையாம். (ஆனால் மண்ணி லிருந்து சூறையாடப்படும் உற்பத்தித் திறனைப் பற்றி பேச்சு மூச்சில்லை.) இந்த வாதத்தின் படி பார்த்தால் காட்டுமிராண்டி மனிதனை இக்காலத்துக் கம்மியராகப் பரிணமிக்கச் செய்வதற்காக மனித இனம் முழுவதற்கும் செலவான உழைப்புக்கேற்ப தனிப்பட்ட ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஊதியமளிக்க வேண்டியிருக்கும்.

மாறாக, மண்ணில் செலுத்தப்பட்டு நிலவுடைமையாளராலும் முதலாளியாலும் காசாக்கிக் கொள்ளப்பட்டிருக்கும் ஊதியமிலா உழைப்பு முழுவதையும் கூட்டிப் பார்த்தோமானால், இந்த மண்ணில் எக்காலத்திலும் முதலீடு செய்யப்பட்டதாகக் கருதக் கூடிய மூலதனம் முழுவதும் கடுவட்டியோடு எத்தனையோ தரம் மீண்டும் மீண்டும் திருப்பித் தரப்பட்டு, நெடுங்காலத்துக்கு முன்பே நிலச் சொத்துகளை [landed property] எல்லாம் சமுதாயம் எத்தனையோ மடங்கான ஈடு செலுத்தி மீட்டுக் கொண்டு விட்டதாகச் சொல்ல வேண்டியிருக்கும்.

உண்மைதான், உழைப்பினது உற்பத்தித் திறனின் [productive power] உயர்வு மூலதன-மதிப்பின் முதலீட்டைக் கூடுதலாக்காத வரை, அது முதற்கண் உற்பத்திப் பண்ட அளவை மட்டுமே அதிக மாக்குகிறது, அதன் மதிப்பை அல்ல. என்றாலும் அது அதே அளவு உழைப்பைக் கொண்டு மாறா-மூலதனம் முன்னிலும் அதிகமாய் மறுவுற்பத்தியாவதற்கும் இவ்விதம் இம்மூலதனத்தின் மதிப்பு பாது காக்கப்படுவதற்கும் வழி செய்கிறது. ஆனால் அதே போது அது மூல தனத்துக்குப் புதிதாகக் கிடைக்கும் பொருளாகி, இவ்விதம் கூடுத லான மூலதனத் திரட்டல் நடைபெறுவதற்கான அடிப்படை ஆகிறது.

சமுதாய உழைப்பு ஒழுங்கமைவதற்கும் இவ்விதம் சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன் உயருவதற்கும், பெருவீத உற்பத்தி அவசியமாகி விடுகிறது, ஆகவே தனிப்பட்ட முதலாளிகள் பெரும் பெரும் அளவில் பண-மூலதனத்தை முன்னீடு செய்வதும் அவசிய மாகி விடுகிறது. ஆனால் இவை எல்லாம் மூலதனங்கள் ஒரு சிலரது கையில் குவிந்து மையமுறுவதன் வாயிலாகவே ஓரளவுக்கு நடந்தேறி விடுகின்றன, செயல்படுகிற மூலதன-மதிப்புகளின் பருமன் அறுதியாக அதிகரிக்க வேண்டுமென்பதோ, ஆகவே இம் மூலதன-மதிப்புகள் முன்னீடு செய்யப்படுவதற்குரிய பண-மூல தனத்தின் பருமன் அதிகரிக்க வேண்டுமென்பதோ அவசிய மாவதில்லை என்பதை இந்நூலின் முதல் பாகத்தில் தெளிவுபடுத்தி யுள்ளோம். தனிப்பட்ட மூலதனங்கள் ஒரு சிலரது கையில் குவிந்து மையமுறுவதன் மூலம் அவற்றின் பருமன் அதிகரிக்க முடியும், சமுதாய அளவில் அவற்றின் ஒட்டுமொத்தத் தொகை அதிகரித் தாக வேண்டும் என்பதில்லை, தனிப்பட்ட மூலதனங்களது பரவ லில் [distribution] மட்டுமே மாற்றம் ஏற்படுகிறது.

முடிவில், புரள்வுக் காலம் குறுகுமாயின் குறைந்த பண-மூல தனத்தால் குறையாத அதே அளவுள்ள திறனுடை-மூலதனத் தையோ, குறையாத அதே அளவுள்ள பண-மூலதனத்தால் அதிக அளவிலான திறனுடை-மூலதனத்தையோ இயங்கச் செய்தல் சாத் தியமாவதை முந்தைய பகுதியில் தெளிவுபடுத்தினோம்.

ஆனால் தெளிவாகவே பண-மூலதனப் பிரச்சினைக்கும் மேற் கூறியவற்றுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. முன்னீடு செய்யப்படும்

மூலதனம் மதிபபுகளது குறிப்பிட்ட தொகையாகும். இந்த மதிப்புத் தொகை அதன் கட்டற்ற வடிவில், அதன் மதிப்பு வடிவில், குறிப்பிட்ட பணத் தொகையாக இருப்பது. இத்தொகை திறனுடை-மூலதனமாக மாற்றமடைந்ததும் இதில் உள்ளடங்கும் உற்பத்திச் சக்திகளுக்கு வரம்பிடுவது இத்தொகையின் மதிப்புக்குள்ள வரம்புகளல்ல; மாறாக, இந்த உற்பத்திச் சக்திகள் குறிப்பிட்ட எல்லைகளுக்கு உட்பட்டதாய் இருக்கும் வரை, வெவ்வேறு அளவிலான பரவலோடோ மும்முரத்தோடோ செயல்படக் கூடியவை. உற்பத்திச் சாதனங்களும் உழைப்புச் சக்தியுமாகிய உற்பத்தி-அடிக்கூறுகளது விலைகள் குறிப்பிட்டனவாய் இருக்க, சரக்குகளாக இருக்கும் இந்த உற்பத்தி-அடிக்கூறுகளைக் குறிப்பிட்ட அளவுகளில் வாங்குவதற்கு வேண்டிய பண-மூலதனத்தின் பருமன் நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது. அதாவது முன்னீடு செய்ய வேண்டிய மூலதனத்தின் மதிப்பளவு நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது. ஆனால் இந்த மூலதனம் மதிப்புகளின், உற்பத்திப் பண்டங்களின் படைப்பாளனாய் எந்த அளவுக்குச் செயல்படக் கூடியது என்பது நெகிழ்திறன் வாய்ந்தது, நிலைமைகளுக்கு ஏற்ப மாறிக் கொண்டிருப்பது.

**இரண்டாவது அமிசம் தொடர்பாக:** தேய்ந்தொழிந்த நாணயத்தை மாற்றீடு செய்யும் பொருட்டு பணப் பொருள் உற்பத்தி செய்யப்பட வேண்டும்; அல்லது கொள்முதல் செய்யப்பட வேண்டும். இதற்காக ஆண்டுதோறும் சமுதாய உழைப்பிலும் உற்பத்திச் சாதனங்களிலும் ஒரு பகுதியைச் செலவிட வேண்டியிருக்கிறது. இந்தப் பகுதியானது சமுதாயப் பொருளுற்பத்தியின் பரிமாணத்தை அந்த அளவுக்குக் குறையச் செய்கிறது என்பது கூறாமலே விளங்கும். ஆனால், ஒரு பகுதி சுற்றோட்ட ஊடகமாகவும், ஒரு பகுதி பணச் சேர்ப்பாகவும் செயல்படுகிற பண-மதிப்பைப் பொறுத்த வரை, இது ஏற்கெனவே கைவரப்பெற்ற ஒன்றாக இருப்பது; உழைப்புச் சக்தி, உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திச் சாதனங்கள், இயற்கைச் செல்வாதாரங்கள் ஆகியவற்றுடன் கூட அமைந்த ஒன்றாக இருப்பது. இவற்றுக்கெல்லாம் இந்தப் பண-மதிப்பு வரம்பிடுவதாகக் கருத முடியாது. இந்தப் பண-மதிப்பை உற்பத்தி-அடிக்கூறுகளாக மாற்றியும், ஏனைய நாடுகளோடு அதைப் பரிவர்த்தனை செய்தும், பொருளுற்பத்தியின் அளவுவீதத்தை விரிவாக்கலாம். ஆனால் இப்படி விரிவாக்குவதற்கு எப்போதும் போல் பணம் தொடர்ந்து உலகப் பணமாகச் செயல்படுதல் அவசியமாகும்.

திறனுடை-மூலதனத்தை இயங்கச் செய்வதற்குப் பண-மூலதனம் தேவை. எவ்வளவு தேவை என்பது புரள்வுக் காலத்தின் அளவைப் பொறுத்தது. புரள்வுக் காலம் வேலைக் காலமாகவும் சுற்றோட்டக் காலமாகவும் பிரியக் கூடியது என்றும், ஆகவே பணத்தின் வடிவில் உள்ளுறை மூலதனம் அல்லது நிறுத்தி வைக்கப்பெற்ற மூலதனமாய் இருக்கிற மூலதனம் அதிகரித்தாக வேண்டும் என்றும் முன்பே கண்டோம்.

புரள்வுக் காலம் வேலைக் காலத்தின் அளவால் நிர்ணயிக்கப்படு கிற வரை, மற்ற நிலைமைகள் சமமாயிருக்க, அது உற்பத்தி நிகழ் முறையின் பொருளாயதத் தன்மையால் நிர்ணயிக்கப்படுவதாகிறது, அதாவது இந்த உற்பத்தி நிகழ்முறையின் பிரத்தியேக சமூகத் தன்மையால் நிர்ணயிக்கப்படுவதாய் இருப்பதில்லை. ஆயினும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையில், ஒப்பளவில் நீண்ட காலம் தேவைப்படுகிற விரிவான நடவடிக்கைகளுக்காக ஓரளவு நெடுங்காலத்துக்குப் பெரும் பெரும் அளவுகளில் பண-மூலதனத்தை முன்னீடு செய்ய வேண்டியதாகிறது. ஆகவே இப்படிப் பட்ட தொழிற் கிளைகளில், உற்பத்தியானது தனிப்பட்ட முதலாளி யின் கையிலுள்ள பண-மூலதனத்தின் பருமனைப் பொறுத்த தாகிறது. இந்தத் தடைமதிலைக் கடன்-செலாவணி முறையும் [credit system] அது தொடர்பான நிறுவன அமைப்புகளாகிய பங்கு நிறுமங்கள் [stock companies] போன்றவையும் தகர்த்திடு கின்றன. ஆகவே பணச் சந்தையில் குலைவு ஏற்படுமாயின் அது இத்தகைய நிறுவனங்களை முடங்கச் செய்கிறது, அதே போல் இந் நிறுவனங்களும் பணச் சந்தையில் சீர்குலைவை உண்டாக்குகின்றன.

சமுதாயமயமாக்கப்பட்ட பொருளுற்பத்தியின் [socialised production] அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் — நீண்ட காலத் துக்கு உழைப்புச் சக்தியையும் உற்பத்திச் சாதனங்களையும் விலக்கி எடுத்துச் சென்றாலும், இடைக்காலத்தில் பயனுள்ள உற்பத்திப் பண்டமேதும் வழங்காத இந்த நடவடிக்கைகள் — எந்த அளவுவீதத் தில் எடுக்கப்படலாம் என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். அதாவது உழைப்புச் சக்தியையும் உற்பத்திச் சாதனங்களையும் ஓயாமல் தொடர்ச்சியாகவோ, ஆண்டுக்குப் பல தடவைகளிலோ விலக்கி எடுத்துச் சென்று விடுவதோடு, வாழ்வுச் சாதனங்களையும் உற்பத்திச் சாதனங்களையும் உற்பத்தி செய்து அளித்தும் வருகிற உற்பத்திக் கிளைகளுக்குத் தீங்கிழைக்காத அளவுவீதம் தீர்மானிக்கப் பட வேண்டும். சமுதாயமயமாக்கப்பட்ட பொருளுற்பத்தியிலும் சரி, முதலாளித்துவப் பொருளுற்பத்தியிலும் சரி, குறுகிய வேலைக் காலங்களுக்குரிய உற்பத்திக் கிளைகளில் வேலை செய்யும் தொழி லாளர்கள் குறுகிய காலத்துக்கு மட்டுமே பதிலுக்கு எந்த உற்பத்திப் பொருளையும் அளித்திடாமல் உற்பத்திப் பொருட்களை விலக்கி எடுத்துச் செல்வார்கள்; நீண்ட வேலைக் காலங்களுக்குரிய உற்பத் திக் கிளைகள் பதிலுக்கு எதையும் அளித்திடும் முன்னர் நெடுங் காலத்துக்கு உற்பத்திப் பொருட்களைத் தொடர்ச்சியாக விலக்கி எடுத்துச் சென்று விடுகின்றன. இப்படிப்பட்ட நிலைமை இவ்வாறு அந்தந்த உழைப்பு நிகழ்முறையின் பொருளாயதத் தன்மையிலிருந்து எழுவதாகுமே அன்றி, அதன் சமூக வடிவத்திலிருந்து அல்ல. சமுதாயமயமாக்கப்பட்ட பொருளுற்பத்தியில் பண-மூலதனம் இல் லாமற் போய் விடுகிறது. உழைப்புச் சக்தியையும் உற்பத்திச்

சாதனங்களையும் நேரடியாகச் சமுதாயமே வெவ்வேறு உற்பத்திக் கிளைகளுக்கும் பகிர்ந்தளிக்கிறது. உற்பத்தியாளர்கள் தங்கள் உழைப்பு நேரத்துக்கேற்ற அளவில் நுகர்வுப் பண்டங்களைச் சமுதாய இருப்புகளிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு உரிமையளிக்கும் காகிதச் சான்றோலைகளைப் பெறுகிறார்கள். ஆனால் இந்தச் சான்றோலைகள் பணமாக மாட்டா. அவை சுற்றோட்டத்துள் புகுந்து சுற்றியோடுவதில்லை.

பண-மூலதனத்துக்கான தேவை வேலைக் காலத்தின் நீட்டளவிலிருந்து எழுவதாய் இருக்கும் வரை, அது இரு நிபந்தனைகளால் ஆளப்படக் காண்கிறோம்: **முதலாவது நிபந்தனை**—பொதுவாகப் பணம்தான் (கடன்-செலாவணியைக் கவனியாது ஒதுக்கி விடுகிறோம்) தனிப்பட்ட ஒவ்வொரு மூலதனமும் திறனுடை-மூலதனமாத மாற்றம் பெறுவதற்காகக் களம் புகும் போது பூண்டிருக்க வேண்டிய வடிவமாகும். இது முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் தன்மையிலிருந்தே, பொதுவாகச் சரக்கு உற்பத்தியின் தன்மையிலிருந்தே பெறப்பட்டு விடுகிறது. **இரண்டாவது நிபந்தனை**—உழைப்புச் சக்தியும் உற்பத்திச் சாதனங்களும் ஒப்பளவில் நீண்ட காலத்துக்குத் தொடர்ச்சியாக சமுதாயத்திடமிருந்து விலக்கி எடுத்துக் கொள்ளப்படுகின்றன, ஆனால் பதிலுக்குப் பணமாக மாற்றக் கூடிய உற்பத்திப் பண்டமேதும் அவ்வளவு காலமும் அளிக்கப்படவில்லை என்கிற இந்த நிலைமைதான் எந்த அளவில் இந்தப் பண முன்னீடு தேவைப்படுகிறது என்பதை நிர்ணயிக்கிறது. இந்தப் பணத்தின் வடிவம் எதுவாகவும் இருக்கலாம்; உலோகப் பணம், கடன்-செலாவணிப் பணம், அடையாளப் பணம் இப்படி எதுவாகவும் இருக்கலாம்—முன்னீடு செய்யப்படும் மூலதனம் பணத்தின் வடிவில் முன்னீடு செய்யப்பட வேண்டும் என்ற முதலாவது நிபந்தனை இதனால் அகற்றப்படவில்லை. இரண்டாவது நிபந்தனையைப் பொறுத்த வரை, பதிலுக்குச் சமதை ஒன்றைச் சுற்றோட்டத்துள் செலுத்தாமலே உழைப்பும் வாழ்வுச் சாதனங்களும் உற்பத்திச் சாதனங்களும் சுற்றோட்டத்திலிருந்து விலக்கி எடுக்கப்படுகின்றனவே, இது எந்தப் பண ஊடகத்தால் நிகழ்த்தப்படுகிறது என்பதாலோ, எந்தப் பொருளுற்பத்தி முறையில் நடைபெறுகிறது என்பதாலோ எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

*அத்தியாயம் XIX*[41]

# இப்பொருள் குறித்து முந்தைய விளக்கங்கள்

## I. *பிசியோக்கிராட்டுகள்*

*மற்றவை மாற்றமின்றி அப்படியே இருக்க சாமானிய மறுவுற்பத்தி (அதாவது ஒரே அளவுவீதத்திலான மறுவுற்பத்தி) நடைபெறுவதாகக் கொள்வோமானால் தேசப் பொருளுற்பத்தியின் வருடாந்தர விளைவு குறிப்பிட்ட மதிப்பளவைக் குறிக்கும் இந்த வருடாந்தர விளைவு சுற்றோட்டத்தின் வாயிலாக எப்படி வினியோகமாக வேண்டும் என்பதை, கெனேயின் Tableau Economique விரிவான சில உருவரைகளில் வரைந்து காட்டுகிறது. முறையாகப் பார்த்தால், முந்தைய ஆண்டின் அறுவடைதான் உற்பத்திக் காலத்தின் தொடக்க நிலையாக அமைகிறது. சுற்றோட்டத்தின் எண்ணிறந்த தனிச் செயல்கள் எல்லாம் சமுதாயத்துக்குரிய தனிப் பெருந்திரள் இயக்கமாக உடனுக்குடன் ஒருசேரத் திரட்டப்படுகின்றன — பணிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு சமுதாயத்தின் பெரும் பொருளாதார வர்க்கங்களாய் இருப்பவற்றின் இடையிலான சுற்றோட்டமாக ஒன்றுசேர்கின்றன. இங்கு நாம் கவனம் செலுத்த வேண்டியவை வருமாறு: விளையும் பொருள் முழுதுமே பயன்பாட்டுக்குரிய பொருள் என்ற முறையில் கடந்த வருட உழைப்பின் புதிய விளைவே என்றாலும், அதன் ஒரு பகுதி அதே போது பழைய மூலதன-மதிப்பின் சேமிப்பகமாகி, பழைய தசையுருவிலேயே மீண்டும் காட்சியளிக்கிறது. இந்தப் பகுதி சுற்றியோடுவதற்கு பதில் அதன் உற்பத்தியாளர்களாகிய சாகுபடியாளர்களின் கையிலேயே தங்கி, மூலதனமாகத் திரும்பவும் தன் சேவையைத் தொடர்ந்து மேற்கொள்கிறது. வருடாந்தர விளைபொருளின் இந்தப் பகுதி மாறா-மூலதனமாகும். சம்பந்தமில்லாத கூறுகளையெல்லாம் கெனே இப்பகுதியில் சேர்க்கிறார் என்றாலும், அவரது பார்வை குறுகிய*

---

[41] *எங்கெல்ஸ் குறிப்பு: கையெழுத்துப் பிரதி VIII என்பதன் தொடக்கம்.*

வரம்புக்கு உட்பட்டிருக்கும் காரணத்தால் பிரதான விவரத்தை நழுவ விடாமல் கெட்டியாகப் பிடித்து முன்னிலையில் நிறுத்து கிறார். அவரது குறுகிய பார்வையின் படி உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும் விதத்தில் மனித உழைப்பை முதலீடு செய்வதற்குரிய ஒரே துறை வேளாண்மைத் துறை மட்டும்தான்; ஆகவே முதலாளித்துவக் கண்ணோட்டத்தின் படி மெய்யாகவே உற்பத்தித் திறனுள்ள ஒரே துறையாக இருப்பதும் அது மட்டும்தான். பொருளாதார மறு வுற்பத்தி நிகழ்முறை, அதன் பிரத்தியேக சமுதாயத் தன்மை எது வானாலும், எப்போதுமே இந்தத் துறையில் (வேளாண்மைத் துறை யில்) இயற்கையான மறுவுற்பத்தி நிகழ்முறையுடன் பின்னிப் பிணைந்து விடுகிறது. பின்னதன் கண்கூடான நிலைமைகள் முன்ன தன் நிலைமைகளைப் பளிச்செனத் தெரியச் செய்து, சுற்றோட்டம் எனும் மாயையால் எழும் சிந்தனைக் குழப்பத்தை அண்ட விடாமல் தடுத்து விடுகின்றன.

ஒரு கருத்தமைப்பு பெற்றிருக்கும் முத்திரைப் பெயர் ஏனைய வற்றின் முத்திரைப் பெயரை போலல்லாமல் பெரிதும் வேறு படுகிறது. இரண்டுக்குமுள்ள பல வேறுபாடுகளில் ஒன்று என்ன வெனில் முன்னது வாங்குகிறவரை மட்டுமல்லாமல் விற்கிறவரை யும் ஏமாற்றி விடுகிறது. கெனேயும் உடனடியாக வந்த அவரது சீடர்களும் அவர்கள் பெற்றிருந்த பிரபுத்துவ முத்திரைப் பெயர் அப்படியே மெய்யானது என்று நம்பி வந்தனர். அன்று என்ன, இன்றுங்கூட நம்முடைய பண்டிதர்களும் இப்படித்தான் நம்பி வருகிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், பிசியோக் கிராட்டுகளின் கருத்தமைப்புதான் முதலாளித்துவப் பொருளுற் பத்தியை முறைப்படி ஆராய்கிற முதலாவது கருத்தமைப்பு. தொழில் துறை மூலதனத்தின் பிரதிநிதியாக இருப்பது இங்கு சாகுபடியாளர் வர்க்கம்தான், இதுதான் இங்கு பொருளாதார இயக்கம் முழுவதை யும் வழிநடத்துகிறது. வேளாண்மையானது முதலாளித்துவ முறை யின் படி நடத்தப்படுகிறது, அதாவது முதலாளித்துவச் சாகுபடி யாளரின் பெருவீதத் தொழில் முயற்சியாக நடத்தப்படுகிறது; நிலத் தில் இறங்கி உழுது பயிரிடுகிறவர் கூலித் தொழிலாளி ஆகி விடு கிறார். பொருளுற்பத்தி என்பது பயனுள்ள பண்டங்களைப் படைப்ப தாக மட்டுமல்லாமல், அவற்றின் மதிப்பையும் படைப்பதாகிறது. உபரி-மதிப்பைச் சம்பாதிப்பதே இந்தப்பொருளுற்பத்தியின் தலை யாய குறி ஆகிறது; உபரி-மதிப்பின் பிறப்பிடம் உற்பத்தித் துறையே தவிர, சுற்றோட்டத் துறையன்று. சுற்றோட்டத்தின் வாயிலாக நடந் தேறுவது சமுதாய மறுவுற்பத்தி நிகழ்முறையாகும். இந்நிகழ்முறை யின் ஊர்திகளாக விளங்கும் மூன்று வர்க்கத்தாரில், ''உற்பத்தித் திறனுள்ள'' உழைப்பை நேரடியாகச் சுரண்டி உபரி-மதிப்பை*

* கெனே எழுதிய Tableau Economique நூலை மார்க்ஸ் தமது உபரி-மதிப்புத் தத்துவங்களில் இன்னும் விவரமாகப் பகுத்தாய்கிறார். (பார்க்கவும்: ஆங்கிலப் பதிப்பு:

உற்பத்தி செய்கிறவரான முதலாளித்துவச் சாகுபடியாளர், உபரி-மதிப்பைத் தமதாக்கிக் கொள்வது அன்றி வேறொன்றும் செய்யாத ஏனைய வர்க்கத்தாரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டப்படுகிறார்.

பிசியோக்கிராட்டுகளது கருத்தமைப்பின் முதலாளித்துவத் தன்மை, அது முகிழ்த்து மலர்ந்து வந்த அந்தக் காலத்திலேயே எதிர்ப்பினைக் கிளர்த்தி விட்டது; ஒரு புறம் லிங்கே, மாப்ளி ஆகியோரும், மறு புறம் சுதந்தர சிறு நிலக்காரர்களின் ஆதரவாளர் களும் அதை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தினர்.

---

மறுவுற்பத்தி நிகழ்முறையைப் பகுத்தாராய்கையில் ஆதாம் ஸ்மித் சரிந்து பின்னோக்கிச் செல்வதானது[42] மிகவும் குறிப்பிடத் தக்கதாகிறது. ஏனெனில் கெனேயின் பிழையற்ற பகுப்பாய்வுகளை ஆதாம் ஸ்மித் விரித்துரைத்து விளக்குகிறார். எடுத்துக்காட்டாக ''ஆரம்ப முன்னீடுகள்'' என்றும் ''வருடாந்தர முன்னீடுகள்'' என்றும் கெனே குறிப்பிடுகிறவற்றை ஆதாம் ஸ்மித் பொதுமைப் படுத்திச் செம்மை செய்து, முறையே அவற்றை ''நிலை''-மூலதனம் என்றும் ''சுழல்''-மூலதனம் என்றும் அழைக்கிறார்[43] என்பது மட்டுமல்லாமல், பிசியோர்க்கிராட்டுகள் புரியும் பிழைகளை அப் படியே தாமும் புரிந்திடும் அளவுக்கு அவர்களைப் பின்தொடர்ந்து செல்கிறார். எடுத்துக்காட்டாக, சாகுபடியாளர் வேறு எவ்வகை முதலாளியையும் விட அதிகமான மதிப்பை உற்பத்தி செய்கிறார் என்று கண்கூடாகக் காட்ட வேண்டுமென்று, அவர் பின்வருமாறு கூறுகிறார்: ''சாகுபடியாளரது மூலதனத்தைப் போல் அதே அள வுள்ள வேறு எந்த மூலதனமும் இதனிலும் அதிகமான அளவில் திறனுடை உழைப்பினை இயங்க வைப்பதில்லை. அவரது உழைக் கும் ஆட்கள் மட்டுமல்லாமல் அவரது உழைக்கும் கால்நடைகளும்

---

கார்ல் மார்க்ஸ், **உபரி-மதிப்புத் தத்துவங்கள்** [மூலதனத்தின் நான்காம் பாகம்], பகுதி I, மாஸ்கோ, 1963, பக்கம் 299-333 மற்றும் 367-69). — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

[42] *Kapital*, பாகம் I, 2, ஆஸ்கபே, பக்கம் 612, குறிப்பு 32 [தமிழ்ப் பதிப்பு, பக்கம் 793-94, குறிப்பு 108.]

[43] இங்கேயும் கூட சில பிசியோக்கிராட்டுகள் — குறிப்பாக துர்கோ — அவருக்கு வழியமைத்துக் கொடுத்திருந்தனர். துர்கோ ''முன்னீடுகள்'' என்பதற்கு மூலதனம் என்ற பதத்தை கெனேயையும் மற்ற பிசியோக்கிராட்டுகளையும் விட அடிக்கடி பயன்படுத்து கிறார்; இன்னும் அதிகமாகவே, தொழிலதிபர்களின் ''முன்னீடுகள்'' அல்லது ''மூல தனங்களை'' சாகுபடியாளர்களின் ''முன்னீடுகள்'' அல்லது ''மூலதனங்களுக்கு'' முழு தொத்தவை ஆக்குகிறார். எடுத்துக்காட்டாக: ''இவர்கள் (தொழில் முனைவர்கள்-ஆலையதிபர்கள்) எப்படியோ, அதே போல அவர்களும் (அதாவது முதலாளித்துவச் சாகுபடியாளர்களும்) திரும்பி வரும் மூலதனங்களை மட்டுமின்றிக் கூடுதலாகப் பெற வேண்டியது...'' (துர்கோ, *Oeuvres*, தாரே பதிப்பு, பாரிஸ், 1844, முதல் பாகம், பக்கம் 40.)

கூட திறனுடைத் தொழிலாளர்களாகி விடக் காண்கிறோம்.'' (உழைக்கும் ஆட்களுக்கு எவ்வளவு சிறப்பான பாராட்டு!) ''வேளாண்மையிலும் கூட இயற்கையானது மனிதனோடு சேர்ந்து உழைக்கிறது; அதன் உழைப்புக்குச் செலவேதும் இல்லை என்ற போதிலும், அதிக அளவில் செலவிட்டு அமர்த்தப்படும் தொழிலாளர்களின் உற்பத்தியைப் போலவே அதன் உற்பத்தியும் மதிப்பு பெற்றுள்ளது, வேளாண்மையின் மிக முக்கியச் செயற்பாடுகளின் நோக்கம், அவ்வளவாக இயற்கையின் வளமையை அதிகமாக்குவதல்ல (இதையும் அவை செய்யத் தவறுவதில்லை), அவ்வளமையை மனிதனுக்கு மிகவும் இலாபகரமான பயிர்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட வைப்பதே அவற்றின் நோக்கம் என்பதாகத் தெரிகிறது. புதர்களும் புற்பூண்டுகளும் மண்டிக் கிடக்கும் வயலானது மிக நன்றாகச் செய்நேர்த்தி செய்யப்படும் திராட்சைத் தோட்டம் அல்லது தானிய வயலைப் போல் பல சந்தர்ப்பங்களில் பெரிய அளவில் உற்பத்தி செய்வதுண்டு. உழுதலும் நடுதலும் இயற்கையின் செயல்திறன் வாய்ந்த வளமையைத் தூண்டுவதைக் காட்டிலும் அதிகமாய் ஒழுங்கியக்குவதை அடிக்கடி காணலாம். எவ்வளவுதான் உழைத்தாலும் அதன் பின் ஒரு பெரும் பகுதி வேலை இயற்கை அன்னைக்கென எப்போதும் எஞ்சியிருக்கவே செய்கிறது. ஆகவே, வேளாண்மையில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களும் உழைக்கும் கால்நடைகளும் (அவரது சொற்களேதான்!) பட்டறைத் தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களைப் போல், தமது சொந்த நுகர்வுக்கு வேண்டியதற்கும், தம்மை வேலைக்கமர்த்துகிற மூலதனத்துக்கும், இதோடு முதலாளிக்குக் கிடைக்க வேண்டிய இலாபத்துக்கும் சமமான மதிப்பை மறுவுற்பத்தி செய்வது மட்டுமல்லாமல், இதற்கும் அதிகமான மதிப்பையும் மறுவுற்பத்தி செய்திடக் காண்கிறோம். சாகுபடியாளரின் மூலதனத்தையும் இதற்குக் கிடைக்கும் எல்லா இலாபங்களையும் மட்டுமல்லாமல், இவற்றுக்கும் மேலாய் நிலவுடைமையாளரது நில-வாடகையையும் தவறாமல் இவை மறுவுற்பத்தி செய்தளிக்கக் காண்கிறோம். நிலவுடைமையாளர் இயற்கைச் சக்திகளது பயன்பாட்டை சாகுபடியாளரிடம் விட்டு வைக்கிறார். நில-வாடகையை இந்த இயற்கைச் சக்திகளால் விளையும் பயனாகக் கருத வேண்டும். நில-வாடகையானது இயற்கைச் சக்திகளது விரிவுக்கேற்ப அதிகமாகவோ குறைவாகவோ இருக்கிறது, அதாவது நிலத்தின் இயற்கையான வளமைக்கு அல்லது செயற்கையாகக் கூடுதலாக்கப்பட்ட அதன் வளமைக்கு ஏற்றதாகிறது. மனிதனின் படைப்பெனக் கொள்ளக் கூடியது அனைத்தையும் கழித்த பின், அல்லது ஈடு செய்த பின் எஞ்சுவது இயற்கையின் படைப்பே ஆகும். இது மொத்த உற்பத்தியில் நான்கிலொரு பங்குக்குக் குறைவாக இருப்பதில்லை, பல சந்தர்ப்பங்களில் மூன்றிலொரு பங்குக்கு அதிகமாகி விடுகிறது. இதற்குச் சம அளவிலான திறனுடை

உழைப்பு ஆலைத் தொழிலில் ஈடுபட்டு இவ்வளவு பெரிய அளவில் மறுவுற்பத்தி செய்திடுவது முடியாத காரியம். ஆலைத் தொழில்களில் இயற்கைக்கு வேலை இல்லை; மனிதனே அனைத்தையும் செய்கிறான். மறுவுற்பத்தியானது அதனைச் செய்திடும் கர்த்தாவின் வலிமைக்கேற்ற விகிதத்தில்தான் இருக்க முடியும். ஆகவே வேளாண்மையில் ஈடுபடும் மூலதனமானது ஆலைத் தொழிலில் அதே அளவில் ஈடுபடும் எந்த மூலதனத்தை விடவும் அதிகமான அளவில் திறனுடை உழைப்பை இயங்க வைப்பதோடு, அது ஈடுபடுத்துகிற திறனுடை உழைப்புடன் ஒப்பிடுகையில் கூடுதலான விகிதாசாரத்தில் மதிப்பினை ஆண்டுதோறும் நாட்டின் நிலமும் உழைப்பும் விளைவிக்கும் மதிப்போடு சேர்த்திடுகிறது.'' (புத்தகம் II, அத்தியாயம் 5, பக்கம் 242.)

புத்தகம் II, அத்தியாயம் 1இல் ஆதாம் ஸ்மித் சொல்கிறார்: ''விதையின் முழு மதிப்பும் கூட, முறையாகச் சொன்னால், நிலை-மூலதனமே ஆகும்.'' அப்படியானால் இங்கே மூலதனம் மூலதன-மதிப்புக்குச் சமமாகிறது, அது ''நிலை'' வடிவத்தில் உள்ளது. ''அது (விதை) விளைநிலத்துக்கும் களஞ்சியத்துக்குமிடையே போவதும் வருவதுமாய் உள்ளது என்றாலும் ஒருபோதும் உடைமையாளர்களை மாற்றிக் கொள்வதில்லை; ஆகவே முறையாகப் பார்த்தால் அது சுற்றியோடுவதில்லை. சாகுபடியாளர் இலாபம் சம்பாதிப்பது அதன் அதிகரிப்பின் மூலம்தானே தவிர, அதன் விற்பனையின் மூலமன்று.'' (பக்கம் 186.) மாறா-மூலதனத்தின் மதிப்பு புதுப்பிக்கப்பட்ட வடிவத்தில் திரும்பி வந்து தோற்றமளிப்பதை ஸ்மித் காலத்துக்கு முன்பு கெனே ஏற்கெனவே கண்டறிந்து கூறியிருந்தார். ஆனால் ஆதாம் ஸ்மித் இதனைக் காணாதிருப்பதும் மறுவுற்பத்தி நிகழ்முறையின் முக்கியக் கூறு ஒன்றை இவ்விதம் அவர் பார்க்கத் தவறுவதும் அவரது நிலை எவ்வளவு அபத்தமானது என்பதைப் புலப்படுத்துகிறது. முக்கிய விவரத்தை விட்டு விட்டு, சுழல்-மூலதனத்துக்கும் நிலை-மூலதனத்துக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குவதற்காக மற்றும் ஓர் எடுத்துக்காட்டு அளிக்க, அதுவும் தவறான எடுத்துக்காட்டு அளிக்க முன்வருவதோடு அவர் நின்று விடுகிறார். ''Avances primitives,'' ''avances annuelles'' என்பனவற்றை ''நிலை-மூலதனம்'' என்றும் ''சுழல்-மூலதனம்'' என்றும் ஸ்மித் மொழிபெயர்க்கிற போது ''மூலதனம்'' என்ற சொல்லில் முன்னேற்றம் அடங்கியிருக்கிறது—மூலதனம் என்னும் கருத்தமைப்பு பொதுமைப்படுத்தப்படுகிறது; பிசியோக்கிராட்டுகள் அதனை ''வேளாண்மைத்'' துறைக்கு மட்டும் பொருந்துவதாகக் கொண்ட அந்த விசேஷ நிலையிலிருந்து அது விடுவிக்கப்படுகிறது. ''நிலை''யாக இருத்தல், ''சுழலு''தல் என்கிற வேறுபாட்டைத் தலையாய வேறுபாடாகக் கொண்டு அதனை நிரந்தரமாக்கி விடுவதில் பின்னோக்கிச் செல்லும் சரிவு அடங்கியிருக்கிறது.

## II. ஆதாம் ஸ்மித்

### 1. ஸ்மித்தின் பொதுவான கண்ணோட்டங்கள்.

புத்தகம் I, அத்தியாயம் 6, பக்கம் 42இல் ஆதாம் ஸ்மித் சொல்கிறார்: ''ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒவ்வொரு சரக்கின் விலையும், அந்த மூன்று பகுதிகளில் (கூலி, இலாபம், வாடகை) ஏதேனும் ஒன்றாகவோ, அல்லது மூன்றுமாகவோ முடிவில் பகுக்கப்பட்டு விடுகிறது. வளர்ச்சியடைந்த ஒவ்வொரு சமுதாயத்திலும் மிகப் பெரும்பாலான சரக்குகளின் விலையில் இம்மூன்றுமே அடக்கக் கூறுகளாய்ச் சேருகின்றன.''[44] அல்லது, மேலும் தொடர்ந்து பக்கம் 63இல் அவர் சொல்வது போல்: ''கூலி, இலாபம், வாடகை ஆகியவை எல்லாம் எல்லா விதமான வருவாய்க்கும், அதே போல் **பரிவர்த்தனை செய்து கொள்ளத் தக்க மதிப்பு அனைத்துக்குமான மூன்று மூலத்தோற்றுவாய்கள்** ஆகும்.'' ''சரக்குகளது விலையின்'' அல்லது ''பரிவர்த்தனை செய்து கொள்ளத்தக்க மதிப்பு அனைத்தின் அடக்கக் கூறுகள்'' குறித்து ஆதாம் ஸ்மித் வகுத்திடும் இந்தச் சூத்திரத்தை கீழே இன்னும் விவரமாக ஆராய்வோம்.

அவர் மேலும் சொல்வதாவது: ''குறிப்பிட்ட ஒவ்வொரு சரக்கையும் தனித்தனியாக எடுத்துப் பார்க்கையில் இதுவே நிலைமை எனில், ஒவ்வொரு நாட்டிலும் உள்ள நிலத்திலிருந்தும் உழைப்பிலிருந்தும் கிடைக்கிற **வருடாந்தர மொத்த உற்பத்தியாக** அமைகிற அனைத்துச் சரக்குகளையும் ஒட்டுமொத்தமாக எடுத்துப் பார்க்கும் போதும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டோம். அந்த வருடாந்தர உற்பத்தியின் முழு **விலை அல்லது பரிவர்த்தனை செய்யத்தக்க மதிப்பு** என்பதும் அதே மூன்று பகுதிகளாகப் பகுக்கப் பெற்று நாட்டின் வெவ்வேறு வகைப்பட்ட வாசிகளிடையே, அவர்களது உழைப்பின் **கூலியாகவோ,** அவர்களது மூலதனத்தின் **இலாபமாகவோ,** அவர்களது நிலத்தின் வாடகையாகவோ **பிரித்தளிக்கப்பட** வேண்டும்.'' (புத்தகம் II, அத்தியாயம் 2, பக்கம் 190.)

---

[44] ''மிகப் பெரும்பாலான சரக்குகளின் விலை'' என்ற தொடரின் பொருளை வாசகர் தவறாகப் புரிந்து கொண்டு விடக் கூடாது என்பதற்காக, ஆதாம் ஸ்மித்தே இதனைப் பின்வருமாறு விளக்குவதைக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக, கடல் மீனின் விலையில் வாடகையேதும் சேருவதில்லை; கூலியும் இலாபமும் மட்டுமே சேருகின்றன; ஸ்காட்லாந்தியக் கூழாங்கற்களின் விலையில் கூலி மட்டுமே சேருகிறது. அவர் சொல்கிறார்: ''ஸ்காட்லாந்தின் சில பகுதிகளில் ஏழ்மைப்பட்டோரில் சிலர் ஸ்காட்லாந்தியக் கூழாங்கற்கள் எனப்படும் விதம் விதமான வண்ணங்களில் காணப்படும் அந்தச் சின்னஞ் சிறு கற்களைக் கடற்கரை சென்று சேகரிப்பதையே தம் தொழிலாகக் கொண்டுள்ளனர். கல்லைப் பட்டை தீட்டுகிறவர் அவர்களுக்குத் தரும் விலையானது முற்றிலும் அவர்களது உழைப்புக்கான கூலியே தவிர, அதில் எப்பகுதியும் வாடகையோ, இலாபமோ ஆவதில்லை.''

ஆதாம் ஸ்மித் எல்லாச் சரக்குகளின் தனித் தனியான விலையையும், மற்றும் ''ஒவ்வொரு நாட்டுக்கும் உரித்தான நிலம், உழைப்பு இவற்றின் வருடாந்தர உற்பத்தியின்...முழு விலை அல்லது பரிவர்த்தனை செய்யத்தக்க மதிப்பையும்'' இவ்வாறு கூலித் தொழிலாளர்கள், முதலாளிகள், நிலவுடைமையாளர்கள் ஆகியோருக்கான மூன்று வருவாய் ஆதாரங்களாகிய கூலி, இலாபம், வாடகை ஆகியவையாகப் பகுத்த பின்னர், நான்காவது கூறு ஒன்றை, அதாவது மூலதனத்தை சுற்றிவளைத்துக் கள்ளத்தனமாக நுழைத்தாக வேண்டியிருக்கிறது. மொத்த வருவாயையும் நிகர வருவாயையும் வேறுபடுத்துவதன் மூலம் அவர் இந்தக் காரியத்தைச் செய்தாக வேண்டியிருக்கிறது: ''ஒரு பெரிய நாட்டில் வசிப்போர் அனைவரின் மொத்த வருவாய் என்பது அவர்களது நிலம், உழைப்பு இவற்றின் வருடாந்தர மொத்த உற்பத்தியைக் குறிக்கிறது. நிகர வருவாய் என்பது, பராமரிப்புச் செலவைக் கழித்த பின்னர் (முதலாவதாக அவர்களது நிலை-மூலதனத்தையும் இரண்டாவதாக அவர்களது சுழல்-மூலதனத்தையும் கழித்த பின்னர்) அவர்களிடம் எஞ்சுவதாகும்; அதாவது தமது மூலதனத்தில் கை வைக்காமலே, நேரடி நுகர்வுக்கென ஒதுக்கி இருப்பில் வைத்துக் கொள்ளக் கூடியதாகும் அல்லது தமது வாழ்வுக்காகவும் வசதிகளுக்காகவும் கேளிக்கைகளுக்காகவும் அவர்கள் செலவழித்துக் கொள்ளக் கூடியதாகும். அவர்களது உண்மைச் செல்வமுங்கூட அவர்களது நிகர வருவாய்க்கு ஏற்பவே அல்லாமல் மொத்த வருவாய்க்கு ஏற்ப அமைவதில்லை.'' (மேலது, பக்கம் 190.)

நாம் இது பற்றிக் குறிப்பிட விரும்புவது வருமாறு:

1) ஆதாம் ஸ்மித் இங்கே சாமானிய மறுவுற்பத்தி பற்றியே பேசுகிறார், விரிதிற மறுவுற்பத்தி அல்லது திரட்டல் பற்றி அல்ல என்பது வெளிப்படை. செயல்படும் மூலதனத்தைப் ''பராமரிப்பதற்கான'' செலவுகள் பற்றியே பேசுகிறார். ''நிகர'' வருமானம் என்பது, சமுதாயத்தின் வருமானம் ஆனாலும் சரி, தனிப்பட்ட முதலாளியின் வருமானம் ஆனாலும் சரி, வருடாந்தர உற்பத்தியில் ''நுகர்வுக்கான நிதியில்'' சேரக் கூடிய பகுதிக்குச் சமம்; ஆனால் இந்த நிதி செயல்படும் ''மூலதனத்தில் கை வைக்கும்'' அளவுக்குப் பெரிதாய் இருக்கக் கூடாது. தனிப்பட்ட உற்பத்திப் பண்டமானாலும், சமுதாய உற்பத்திப் பண்டமானாலும் அதனுடைய மதிப்பில் ஒரு பகுதி இவ்விதம் கூலியாகவோ இலாபமாகவோ வாடகையாகவோ பகுக்கப்படாமல், மூலதனமாகப் பகுக்கப் பெறுகிறது.

2) ''மொத்த வருவாய்'' என்றும் ''நிகர வருவாய்'' என்றும் வேறுபடுத்திச் சொற்சிலம்பம் ஆடுவதன் மூலம் ஆதாம் ஸ்மித் தமது தத்துவத்திலிருந்தே நழுவி ஓடுகிறார். தனிப்பட்ட முதலாளியானாலும், முதலாளி வர்க்கம் முழுதுமோ தேசம் என்கிறோமே

அதுவோ ஆனாலும், உற்பத்தியின் போது நுகரப்படும் மூலதனத்துக்குப் பதிலாகப் பெற்றுக் கொள்வது ஒரு சரக்கு-உற்பத்திதான். இந்தச் சரக்கு-உற்பத்தி அதன் விகிதாசாரக் கூறுகளாலும் குறிக்கப் படலாம்—இச்சரக்கின் மதிப்பானது, ஒரு புறம் செலவிடப்பட்ட மூலதன-மதிப்பை மாற்றீடு செய்து, இவ்வாறு வருமானம் [income] ஆகிறது, அல்லது அப்படியே உரிய சொல்லில் சொன்னால், வருவாய் [revenue] ஆகிறது (*revenue* என்பது *revenir* என்பதன் முடிவெச்சம்—மீண்டு வருதல் என்று அர்த்தம்). ஆனால் அது மூலதனத்தின் மீதான வருவாய், அல்லது மூலதனத்தின் மீதான வருமானம் ஆகிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மறு புறம் அது "நாட்டின் வெவ்வேறு வகைப்பட்ட வாசிகளிடையே அவர்களது உழைப்பின் கூலியாகவோ, அவர்களது மூலதனத்தின் இலாபமாகவோ, அவர்களது நிலத்தின் வாடகையாகவோ பிரித்தளிக்கப்படும்" மதிப்புக் கூறுகளாகிறது. இந்த மதிப்புக் கூறுதான் சாதாரணமாக வருமானம் என்று அழைக்கப் படுகிறது. எனவே முழு உற்பத்திப் பண்டத்தின் மதிப்பானது ஒருவரின் வருமானமாகிறது—தனிப்பட்ட முதலாளியின் வருமானமோ, நாடு முழுதுக்குமான வருமானமோ ஆகிறது. ஆனால், இது ஒரு புறத்தில் மூலதனத்தின் மீதான வருமானமாகவும், அதே போது மறு புறத்தில் வருமானத்திலிருந்து வேறுபடும் "வருவாயாகவும்" இருக்கிறது. இவ்வாறு சரக்கின் மதிப்பை அதன் அடக்கக் கூறுகளாகப் பகுத்தாராய்கையில் விலக்கப்படுகிற ஒன்று, தெளிவின்றிப் பலவிதமாகப் பொருள்படக் கூடிய "வருவாய்" என்னும் சொல்லைக் கொண்டு, கொல்லைப்புறம் வழியாகக் கொண்டுவந்து சேர்க்கப்படுகிறது. ஆன்ால் உற்பத்திப் பண்டத்தின் மதிப்புக் கூறுகளாக ஏற்கெனவே அதில் இருப்பவற்றை மட்டுமே "கொண்டு வந்து சேர்க்க" முடியும். மூலதனமானது வருவாயாக வர வேண்டுமானால் முதற்கண் மூலதனம் செலவிடப்பட்டிருக்க வேண்டும்.

ஆதாம் ஸ்மித் மேலும் சொல்கிறார்: "மிகக் குறைந்த சாதாரண இலாப வீதம் என்பது, ஒவ்வொரு முதலீடும் அவ்வப்போது சந்திக்கும் இழப்புகளை ஈடு செய்வதற்குப் போதுமானதைக் காட்டிலும் எப்போதும் அதிகமானதாகவே இருந்தாக வேண்டும். இந்த உபரிதான் நிகர அல்லது அசல் இலாபம் எனப்படுவது." [அவசிய மூலதனச் செலவீட்டை எந்த முதலாளியாவது இலாபமாகக் கருதுவாரா?] "மொத்த இலாபம் என்பது இந்த உபரியை மட்டுமல்லாமல், அசாதாரணமாய் ஏற்படும் இத்தகைய இழப்புகளை ஈடு செய்வதற்காக வேண்டியதையும் கொண்டதாகும்." (புத்தகம் I, அத்தியாயம் 9, பக்கம் 72.) இதன் பொருள் என்ன? மொத்த இலாபத்தில் ஒரு பகுதியாகக் கருதப்படும் உபரி-மதிப்பில் ஒரு பகுதியானது பொருளுற்பத்திக்காக வேண்டிய காப்பீட்டு நிதியாக [insurance fund] அமைந்தாக வேண்டும் என்பதன்றி

வேறொன்றுமில்லை. உபரி-உழைப்பில் ஒரு பகுதி இந்தக் காப்பீட்டு நிதியைத் தோற்றுவிக்கிறது; அந்த அளவுக்கு அது மூல தனத்தை, அதாவது மறுவுற்பத்திக்கு அவசியமான நிதியை, நேரடியாக உற்பத்தி செய்கிறது. நிலை-மூலதனம் முதலானவற்றைப் ''பராமரிப்பதற்கான'' செலவுகளைப் பொறுத்த வரை (மேற்கண்ட மேற்கோள்களைப் பார்க்கவும்), நுகரப்படும் நிலை-மூலதனத்தைப் புதிய நிலை-மூலதனத்தைக் கொண்டு மாற்றீடு செய்வது என்பது பழைய மூலதன-மதிப்பைப் புத்துருப் பெறச் செய்வதாகுமே தவிர, புதிதாக மூலதனத்தை முதலீடு செய்தல் அல்ல. நிலை-மூலதனத்தின் மராமத்தையும் ஆதாம் ஸ்மித் இவ்வாறே பராமரிப்புச் செலவுகளில் சேர்த்துக் கொண்டு விடுகிறார் — இந்த மராமத்தைப் பொறுத்த வரை இதற்காகும் செலவு முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்துக்குரிய விலையோடு சேர்ந்து விடுகிறது. முதலாளி இந்தச் செலவு முழுவதையும் ஒரே அடியாக முதலீடு செய்ய வேண்டியதில்லை, மூலதனத்தின் செயற் காலத்தின் போது, தேவைப்படுகையில் பையப் பைய முதலீடு செய்தால் போதும். ஏற்கெனவே அவருக்குக் கிடைத்திருக்கும் இலாபங்களிலிருந்து எடுத்து அவர் முதலீடு செய்யலாம். ஆனால் அவரது இலாபத்தின் தோற்றுவாய் இவற்றால் மாறி விடுவதில்லை. காப்பீட்டு நிதி ஆனாலும், மராமத்து நிதி [repair fund] ஆனாலும் அதற்கு வேண்டிய உபரி-உழைப்பைத் தொழிலாளியே அளித்திடுகிறார் என்பதைத்தான் அதிலுள்ள மதிப்பு-அடக்கக் கூறு நிரூபிக்கிறது.

ஆதாம் ஸ்மித் அடுத்து என்ன சொல்கிறார் பாருங்கள்: நிலை-மூலதனம் முழுவதையும், மேலும் நிலை-மூலதனத்தின் பராமரிப்புக்கும் மராமத்துக்கும் மாற்றீட்டுக்கும் தேவைப்படும் சுழல்-மூலதனப் பகுதி முழுவதையும், உண்மையில் நுகர்வுப் பண்ட நிதியத்துக்கு [consumption-fund] உரிய தசையுருவில் இல்லாத அனைத்து மூல தனத்தையும், நிகர வருவாயிலிருந்து, அதாவது பிரத்தியேக அர்த்தத்திலான வருவாயிலிருந்து விலக்கி விட வேண்டும் என்கிறார்.

''நிலை-மூலதனத்தைப் பராமரிக்கும் செலவு முழுவதையும் சமுதாயத்தின் நிகர வருவாயிலிருந்து விலக்கி விட வேண்டும் என்பது தெளிவு. அவர்களது பயனுள்ள இயந்திரங்களுக்கும் தொழிற் கருவிகளுக்குமான அவசிய மூலப்பொருட்களையோ... அந்த மூலப் பொருட்களை முறையான வடிவத்தில் திருத்தியமைப்பதற்கு அவசியமான உழைப்பின் உற்பத்திகளையோ ஒருபோதும் சமுதாயத்தின் நிகர வருவாயைச் சேர்ந்ததாகக் கொள்ள முடியாது. உண்மையில், அந்த உழைப்பின் **விலைதான்** இந்த வருவாயில் சேரலாம். ஏனென்றால், இப்படி ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்கள் தங்கள் கூலியின் மதிப்பு முழுவதையும் நேரடி நுகர்வுக்காக அமைந்த இருப்பில் சேர்த்து விடலாம். ஆனால் இதர உழைப்பு வகைகளில், **விலையும்** (அதாவது இந்த உழைப்புக்குத் தரப்படும்

கூலியும்), உற்பத்திப் பண்டமும் (இந்த உழைப்பு உருக்கொண்டுள்ள உற்பத்திப் பண்டமும்) ஆகிய இரண்டுமே இந்த இருப்பில் சேர்ந்து விடுகின்றன. விலையானது தொழிலாளர்களது இருப்பில் சேருகிறது; உற்பத்திப் பண்டமானது இந்தத் தொழிலாளர்களது உழைப்பால் யாருடைய ஜீவிதமும் வசதியும் கேளிக்கையும் கூடுதலாக்கப்படுகின்றனவோ அந்த ஏனையோரது இருப்பில் சேருகிறது.'' (புத்தகம் II, அத்தியாயம் 2, பக்கம் 190, 191.)

இங்கே ஆதாம் ஸ்மித், உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களையும், நுகர்வுப் பண்டங்களின் நேரடி உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களையும் வேறுபடுத்திக் காட்டும் மிகவும் முக்கியமான ஒரு விவரத்தை வந்தடைகிறார். முன்னவர்கள் உற்பத்தி செய்யும் சரக்குகளது மதிப்பின் அடக்கக் கூறுகளில் ஒன்று கூலிகளின் மொத்தத் தொகைக்குச் சமமாகிறது, அதாவது உழைப்புச் சக்தியை வாங்குவதற்காக முதலீடு செய்யப்படும் மூலதனப் பகுதியின் மதிப்புக்குச் சமமாகிறது. இந்த மதிப்புப் பகுதியானது தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் உற்பத்திச் சாதனங்களின் குறிப்பிட்ட பங்களவைத் தசையுருவாகக் கொண்டுள்ளது. அவர்கள் கூலியாகப் பெறுகிற பணம் அவர்களது வருவாயாகும். ஆனால் அவர்களது உழைப்பு அவர்களோ மற்றவர்களோ நுகரத்தக்க சரக்குகள் எதையும் உற்பத்தி செய்தாகவில்லை. ஆகவே இந்த உற்பத்திப் பண்டங்கள் வருடாந்தர உற்பத்தியில் சமுதாய நுகர்வுப் பண்ட நிதியமாக அமையக்கூடிய பகுதியில் ஒரு கூறாக அமையவில்லை. ''நிகர வருவாய்'' என்பது இந்த சமுதாய நுகர்வுப் பண்ட நிதியமாகவே ஈடேற்றம் பெற முடியும். ஆனால் இந்த நிலைமை இருப்பது கூலியின் விவகாரத்தில் மட்டுமல்ல, உற்பத்திச் சாதனங்களது மதிப்பின் அடக்கக் கூறுகளில் ஒன்றாகிய உபரி-மதிப்பின் விவகாரத்திலும், அதாவது இலாபமாகவும் வாடகையாகவும் (முக்கியமாகவும் முதலாவதாகவும்) தொழில் துறை முதலாளியின் வருவாயாக அமையும் மதிப்புப் பகுதியான உபரி-மதிப்பின் விவகாரத்திலும் இதே நிலைமைதான் இருக்கிறது என்பதை இங்கே ஆதாம் ஸ்மித் குறிப்பிட மறந்து விடுகிறார். மதிப்பின் இந்த அடக்கக் கூறுகளும் நுகர முடியாத பண்டங்களான உற்பத்திச் சாதனங்களாக நிலவுகின்றன. இவை பணமாக உருமாறியாக வேண்டும், அதன் பிறகுதான் இரண்டாவது வகைத் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் நுகர்வுப் பண்டங்களை அவற்றின் விலைக்கு ஏற்ற அளவில் வாங்குவதற்கு இவை பயன்பட முடியும். அதன் பிறகுதான் இந்தப் பண்டங்களை அவற்றின் உடைமையாளர்களது சொந்த நுகர்வுப் பண்ட நிதியத்துக்கு மாற்ற முடியும். ஆனால் ஆண்டுதோறும் உற்பத்தியாகும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பில் ஒரு பகுதி, இந்த உற்பத்தித் துறைக்குள் செயல்படும் உற்பத்திச் சாதனங்களின்

மதிப்புக்கு, உற்பத்திச் சாதனங்களைப் படைக்கப் பயன்படும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்புக்குச் சமமான பகுதி, எனவே இங்கு ஈடுபடுத்தப்படும் மாறா-மூலதனத்தின் மதிப்புக்குச் சமமான பகுதி, அதற்குள்ள தசையுருவின் காரணத்தால் மட்டுமின்றி, அதன் மூலதனப் பணியின் காரணத்தாலும், வருவாயாக அமையும் மதிப்புக் கூறாக இருப்பது சாத்தியமல்ல என்பதையும் ஆதாம் ஸ்மித் பார்த்திருக்க வேண்டும்.

இரண்டாவது வகைத் தொழிலாளர்களைப் பொறுத்த வரை— நேரடியாகவே நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் இவர் களைப் பொறுத்த வரை—ஆதாம் ஸ்மித்தின் இலக்கணங்கள் போதிய அளவுக்குத் துல்லியமாய் இல்லை. ஏனெனில், இந்த உழைப்பு வகைகளில் உழைப்பின் விலையும் சரி, உற்பத்திப் பண்டமும் சரி, இரண்டுமே நேரடி நுகர்வுக்கென ஒதுக்கப்படும் இருப்புக்குப் "போய்ச் சேருகின்றன"; "**விலையானது**" (அதாவது கூலியாகப் பெறப்படும் பணம்) "**தொழிலாளர்களின்** இருப்புக் கும், **உற்பத்திப் பண்டமானது**, யாருடைய ஜீவிதமும் வசதியும் கேளிக்கையும் அந்தத் தொழிலாளர்களின் உழைப்பால் கூடுத லாக்கப்படுகின்றனவோ அந்த **ஏனையோரின்** இருப்புக்கும் போய்ச் சேருகின்றன" என்கிறார் ஆதாம் ஸ்மித். ஆனால் தொழிலாளி தமது உழைப்பின் "விலையை" (கூலியாகத் தரப்படும் பணத்தை) உண்டு வாழ முடியாது; இந்தப் பணத்தைக் கொண்டு நுகர்வுப் பண்டங்கள் வாங்கி நுகர்வதன் மூலம் அவர் அதனை ஈடேற்றம் பெறச் செய்கிறார். இந்தப் பண்டங்களில் ஒரு பகுதி அவரே உற்பத்தி செய்யும் சரக்கு வகைகளைச் சேர்ந்ததாக இருக்கலாம். மறு புறம், அவரது உற்பத்திப் பண்டம் உழைப்பைச் சுரண்டுவோரின் நுகர்வுக்கு மட்டுமே பயன்படக் கூடியதாகவும் இருக்கலாம்.

நாட்டின் "நிகர வருவாயிலிருந்து" இவ்வாறு நிலை-மூல தனத்தை அறவே விலக்கிய பின், ஆதாம் ஸ்மித் தொடர்ந்து சொல்கிறார்:

"நிலை-மூலதனத்தைப் பராமரிப்பதற்கு ஆகும் செலவு முழு வதும் தவிர்க்க முடியாதவாறு சமுதாயத்தின் நிகர வருவாயிலிருந்து விலக்கப்படுகிறது; ஆனால் சுழல்-மூலதனத்தைப் பராமரிப்பதற்கு ஆகும் செலவு இப்படி அல்ல. சுழல்-மூலதனத்தில் அடங்கும் நான்கு பகுதிகளான பணம், உணவுப் பண்டங்கள், மூலப் பொருட் கள், பூர்த்தியான பணி ஆகியவற்றில், கடைசி மூன்று பகுதிகள் அவ்வப்போது அதிலிருந்து எடுக்கப்பட்டு, சமுதாயத்தின் நிலை-மூலதனத்திலோ நேரடி நுகர்வுக்காக ஒதுக்கப்படும் அவற்றின் இருப்பிலோ சேர்க்கப்படுவதை முன்பே பார்த்தோம். நுகரக் கூடிய இந்தச் சரக்குகளில் முன்னதை" [நிலை-மூலதனத்தை] "பராமரிப் பதில் ஈடுபடுத்தப்படாத பகுதியெல்லாம் பின்னதற்கு" [நேரடி நுகர்வுப் பண்ட நிதியத்துக்கு] "போய்ச் சேருகிறது; சமுதாயத்தின்

நிகர வருவாயில ஒரு பகுதியாக அமைகிறது. ஆகவே சுழல்-மூல தனத்தின் அந்த மூன்று பகுதிகளின் பராமரிப்பானது நிலை-மூல தனத்தின் பராமரிப்புக்கு அவசியமாவதல்லாமல், சமுதாயத்தின் நிகர வருவாயிலிருந்து வருடாந்தர உற்பத்தியின் எந்தப் பகுதி யையும் எடுப்பதில்லை.'' (புத்தகம் II, அத்தியாயம் 2, பக்கம் 192.)

உற்பத்திச் சாதனங்களின் உற்பத்திக்குப் பயன்படாத சுழல்-மூலதனப் பகுதி நுகர்வுப் பண்டங்களின் — அதாவது வருடாந்தர உற்பத்தியில் சமுதாயத்தின் நுகர்வுப் பண்ட நிதியமாய் அமைய வேண்டிய பகுதியின் — உற்பத்திக்குப் போய் விடுகிறது என்று சொல்வது கூறியது கூறலேயாகும். இருப்பினும், அடுத்து வரும் கீழ்க்காணும் பகுதி முக்கியமானது:

''இந்த அமிசத்தில் சமுதாயத்தின் சுழல்-மூலதனம் தனியாளின் சுழல்-மூலதனத்திலிருந்து வேறுபடுகிறது. தனியாளின் சுழல்-மூல தனம் அவரது நிகர வருவாயின் எப்பகுதியும் ஆக முடியாமல் அறவே விலக்கப்படுகிறது; இந்நிகர வருவாய் முற்றிலும் அவரது இலாபங்களாலேயே ஆனதாக இருக்க வேண்டும். தனியாள் ஒவ்வொருவரது சுழல்-மூலதனமும் அவர் உறுப்பினராக இருக்கும் சமுதாயத்தினது சுழல்-மூலதனத்தின் ஒரு பகுதியாக அமைந்த போதிலும், இக்காரணத்தால் அது இச்சமுதாயத்தினரது நிகர வருவாயின் பகுதியாகவும் அமைய முடியாமற் போவதில்லை. ஒரு வணிகரின் கடையிலுள்ள சரக்கு முழுவதையும் நேரடி நுகர்வுக் கென ஒதுக்கப்பட்டிருக்கும் அவரது சொந்த இருப்பில் ஒருபோதும் சேர்க்கக் கூடாது என்றாலும், மற்றவர்களின் இருப்பில் அதைச் சேர்க்கலாம்; மற்றவர்கள் பிற நிதியங்களிலிருந்து பெறப்படும் வருவாயைக் கொண்டு இச்சரக்குகளின் மதிப்பை அதிலிருந்து கிடைக்கும் இலாபங்களும் அடங்கலாய் முறைப்படி அவருக்கு மாற் றீடு செய்து வரலாம், அவரது மூலதனமோ மற்றவர்களுடையதோ சிறிதும் குறைய வேண்டியதில்லை.'' (மேலது)

ஆக இங்கே நாம் தெரிந்து கொள்வது வருமாறு:

1) நிலை-மூலதனமும், அதன் மறுவுற்பத்திக்கும் (இப்பணி யினை அவர் மறந்து விடுகிறார்) பராமரிப்புக்கும் தேவைப்படும் சுழல்-மூலதனமும், தனிப்பட்ட ஒவ்வொரு முதலாளியின் நிகர [net] வருவாயிலிருந்தும் — இதில் அவரது இலாபம் மட்டுமே அடங்கியிருக்க முடியும் — அடியோடு விலக்கப்படுவது போலவே, நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் சுழல்-மூலதனமும் விலக்கப்படுகிறது. எனவே அவரது சரக்கு-உற்பத்தி யில் அவரது மூலதனத்தை மாற்றீடு செய்கிற பாகமானது அவரது வருவாயாக அமைகிற மதிப்பு அடக்கக் கூறுகளாகப் பகுபட முடியாது.

2) தனிப்பட்ட ஒவ்வொரு முதலாளியின் நிலை-மூலதனமும் சமுதாய நிலை-மூலதனத்தின் பகுதியாவது போலவே, தனிப்பட்ட

ஒவ்வொரு முதலாளியின் சுழல்-மூலதனமும் சமுதாயச் சுழல்-மூலதனத்தின் பகுதியாகிறது.

3) சமுதாயத்தின் சுழல்-மூலதனம் தனிப்பட்ட சுழல்-மூலதனங்களின் கூட்டுத் தொகையையே குறிக்கிறது என்றாலும், ஒவ்வொரு தனிப்பட்ட முதலாளியின் சுழல்-மூலதனத்தின் தன்மையிலிருந்தும் வேறான தன்மை வாய்ந்துள்ளது. தனிப்பட்ட ஒருவரின் சுழல்-மூலதனம் **அவரது சொந்த வருவாயின்** பகுதியாவது முடியாத காரியம். ஆனால் சமுதாயச் சுழல்-மூலதனத்தின் ஒரு பகுதி (அதாவது நுகர்வுக்குரிய சரக்குகளாலாகிய பகுதி) அதேபோது **சமுதாயத்தின் வருவாயில்** ஒரு பகுதியாகவும் அமையலாம்; அதாவது, மேலே அவர் சொன்னது போல, சமுதாய நிகர வருவாயை அது வருடாந்தர உற்பத்திப் பண்டத்தில் பகுதியளவு குறைத்தாக வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இங்கே ஆதாம் ஸ்மித் சுழல்-மூலதனம் என்று குறிப்பிடுவது ஆண்டுதோறும் . பத்தியாகிற சரக்கு-மூலதனமே ஆகும். நுகர்வுப் பண்டம் உற்பத்தி செய்யும் முதலாளிகள் இதனை ஆண்டுதோறும் சுற்றோட்டத்தில் செலுத்துகிறார்கள். அவர்களது இந்த வருடாந்தர சரக்கு-உற்பத்தி முழுதுமே நுகர்வுக்குரிய பண்டங்களாகும். ஆகவே இது சமுதாயத்தின் நிகர வருவாய்கள் (கூலியும் இவற்றில் அடங்கும்) ஈடேற்றம் பெறுவதற்கான அல்லது செலவிடப்படுவதற்கான நிதியமாகி விடுகிறது. ஆதாம் ஸ்மித் ஒரு வணிகரின் கடையிலுள்ள சரக்குகளை எடுத்துக்காட்டாகக் கொள்வதற்கு பதில், தொழில் துறை முதலாளிகளின் பண்டக சாலைகளில் சேமித்துக் குவிக்கப்பட்டிருக்கும் பண்டங்களைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்.

இந்நிலையில், முதலில் அவர் நிலை-மூலதனம் என்பதாகவும், இப்போது சுழல்-மூலதனம் என்பதாகவும் அழைப்பதன் மறுவுற்பத்தியை ஆராயும் போது அவர் மனத்துள் துள்ளியெழுந்த ஒளிரும் சிந்தனைப் பொறிகளை ஆதாம் ஸ்மித் ஒருசேர இணைத்திருப்பாரானால், பின்வரும் முடிவுக்கு வந்திருப்பார்:

I. சமுதாயத்தின் வருடாந்தர உற்பத்தி இரு துறைகளைக் [departments] கொண்டது: ஒன்று உற்பத்தி சாதனங்களின் துறை; மற்றது நுகர்வுப் பண்டங்களின் துறை. ஒவ்வொன்றையும் தனித் தனியாகப் பரிசீலிக்க வேண்டும்.

II. வருடாந்தர உற்பத்தியில் **உற்பத்திச் சாதனங்களால்** [means of production] ஆன பகுதியின் மொத்த மதிப்பு பின்வருமாறு பிரிக்கப்படுகிறது: மொத்த மதிப்பில் ஒரு பகுதி இந்த உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தியின் போது நுகரப்படும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பை மட்டும் குறிப்பதாகும். புத்துருப் பெற்றுத் திரும்பி வரும் மூலதன-மதிப்பே அது. மொத்த மதிப்பில் இன்னொரு பகுதியானது உழைப்புச் சக்தியில் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மதிப்பைக் குறிப்பதாகும்; அதாவது இந்த உற்பத்தித்

துறையைச் சேர்ந்த முதலாளிகள் கூலியாகக் கொடுக்கிறவற்றின் மொத்தத் தொகையைக் குறிப்பதாகும். முடிவில் இந்த மொத்த மதிப்பில் மூன்றாவது பகுதியானது இந்த உற்பத்தித் துறையைச் சேர்ந்த தொழில் துறை முதலாளிகளுக்குக் கிடைக்கும் இலாபங் களுக்கு (நில-வாடகையும் இவற்றில் அடங்கும்) ஆதாரமாகும்.

முதலாவது அடக்கக் கூறானது, ஆதாம் ஸ்மித்தின் கருத்துப்படி, முதலாவது துறையைச் சேர்ந்த தனிப்பட்ட எல்லா மூலதனங் களிலும் நிலை-மூலதனமாக இருப்பதன் மறுவுற்பத்தி செய்யப்பட்ட பகுதியாகும். இது தனிப்பட்ட முதலாளியின் "நிகர வருவாயிலோ" சமுதாயத்தின் "நிகர வருவாயிலோ" ஒரு பகுதியாக முடியாதவாறு "முற்றிலும் விலக்கப்பட்டிருப்பதாகும்." எப்போதுமே இது மூல தனமாகச் செயல்படுகிறதே தவிர வருவாயாக அல்ல. அந்த அளவுக்கு, தனிப்பட்ட ஒவ்வொரு முதலாளியின் "நிலை-மூல தனம்" சமுதாயத்தின் நிலை-மூலதனத்திலிருந்து எவ்விதத்திலும் வேறுபடவில்லை. ஆனால் சமுதாயத்தின் வருடாந்தர உற்பத்தி யினது மதிப்பில் உற்பத்திச் சாதனங்களைக் குறிக்கும் இதர பகுதி கள்—ஆகவே உற்பத்திச் சாதனங்களின் இந்த மொத்த அளவின் ஈவுகளாக நிலவும் மதிப்புக் கூறுகள்—உண்மையில் இந்த உற்பத்தி யில் பங்கு பெறும் எல்லாச் செயலிகளுக்குமான வருவாய்களாகின் றன (தொழிலாளர்களுக்குக் கூலியும், முதலாளிகளுக்கு இலாபங் களும் நில வாடகைகளும் ஆகின்றன). ஆனால் சமுதாயத்துக்கு அவை மூலதனம் ஆகின்றனவே தவிர வருவாய் ஆவதில்லை; சமுதாயத்தின் வருடாந்தர உற்பத்தியானது அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த தனிப்பட்ட முதலாளிகளுடைய உற்பத்திகளின் மொத்தத் தொகையேதான் என்ற போதிலும் நிலைமை இதுவே. முதலாவது துறையின் உற்பத்திப் பண்டங்களானவை பொதுவாக உற்பத்திச் சாதனங்களாக மட்டுமே பயன்படத்தக்கவை, அவற்றின் தன்மை அப்படிப்பட்டதாகும். தேவைப்படும் போது இவற்றில் சில நுகர் வுப் பண்டங்களாகவும் பயன்படக் கூடியனவாய் இருக்கலாம். இவையும் கூட புதிய உற்பத்திக்கான கச்சாப் பொருட்கள் அல்லது துணைப் பொருட்களாகவே பயன்படுகிறவை. ஆனால் அவை இப்படிப் பயன்படுவது—எனவே மூலதனமாகப் பயன்படுவது—அவற்றைப் பயன்படுத்துவோரின் கையில்தானே தவிர, உற்பத்தி யாளர்களுடைய கையிலன்று. இப்படிப் பயன்படுத்துவோர் யாரென்றால்:

III. இரண்டாவது துறையைச் சேர்ந்த முதலாளிகள். இவர்கள் **நுகர்வுப் பண்டங்களின்** [articles of consumption] நேரடி உற்பத்தி யாளர்கள். முதலாவது துறையின் உற்பத்திப் பண்டங்களாகிய நுகர் வுப் பண்டங்களின் உற்பத்தியின் போது நுகரப்படும் மூலதனத்தை (இந்த மூலதனம் உழைப்புச் சக்தியாக மாற்றப்படாத வரை, ஆகவே இந்த இரண்டாவது துறையைச் சேர்ந்த தொழிலாளர்களது

கூலிகளின் கூட்டுத் தொகையாக இல்லாத வரை) மாற்றீடு செய்கிறவை. இப்படி நுகரப்படும் இந்த மூலதனம், இப்போது நுகர்வுப் பண்டங்களின் வடிவில் அவற்றின் உற்பத்தியாளர்களான முதலாளிகளின் கையிலிருக்கும் இந்த மூலதனம்—சமுதாய அளவில் சொல்வதானால்—முதல் துறையைச் சேர்ந்த முதலாளிகளும் தொழிலாளர்களும் அவர்களது வருவாயை ஈடேற்றம் செய்து கொள்வதற்குப் பயன்படும் நுகர்வு-நிதியமாகிறது.

ஆதாம் ஸ்மித் அவரது பகுப்பாய்வை இந்தக் கட்டம் வரை கொண்டு வந்திருப்பாராயின், முழுப் பிரச்சினைக்குமான தீர்வை மிகவும் நெருங்கி வந்திருப்பார். குறி தவறாமல் பெருமளவுக்கு அவர் சரியாகவே செயல்பட்டார். சமுதாயத்தின் வருடாந்தர மொத்த உற்பத்தியாக அமைகிற சரக்கு-மூலதனங்களின் ஒரு வகையை (உற்பத்திச் சாதனங்கள்) சேர்ந்த குறிப்பிட்ட மதிப்புப் பகுதிகள், உண்மையில் அவற்றின் உற்பத்தியில் ஈடுபடும் தனிப்பட்ட தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் வருவாயாகின்றனவே தவிர சமுதாயத்தின் வருவாயில் ஓர் அடக்கக் கூறாவதில்லை என்பதையும், அதே போது மற்றொரு வகையை (நுகர்வுப் பண்டங்கள்) சேர்ந்த மதிப்புப் பகுதிகள் அவற்றின் தனிப்பட்ட உடைமையாளர்களான இம்முதலீட்டுத் துறையைச் சேர்ந்த முதலாளிகளுக்கு மூலதன-மதிப்பைக் குறிப்பதாயினும், சமுதாய வருவாயின் ஒரு பகுதியே ஆகும் என்பதையும் அவர் ஏற்கெனவே கண்டறிந்து சொல்லி விட்டார்.

மேற்கூறியவற்றிலிருந்து தெளிவாவது என்னவெனில்:

**முதலாவது:** சமுதாய மூலதனம் தனிப்பட்ட மூலதனங்களின் கூட்டுத் தொகைக்குச் சமமானதே என்றாலும், ஆகவே சமுதாயத்தின் வருடாந்தர சரக்கு-உற்பத்தி (அல்லது சரக்கு-மூலதனம்), இந்தத் தனிப்பட்ட மூலதனங்களின் சரக்கு-உற்பத்திகளது கூட்டுத் தொகைக்குச் சமமானதே என்றாலும், ஆகவே தனிப்பட்ட ஒவ்வொரு சரக்கு-மூலதனத்துக்கும் பொருந்துகிற பகுப்பாய்வு, சரக்குகளின் மதிப்பை அதன் அடக்கக் கூறுகளாகப் பகுத்திடும் இந்தப் பகுப்பாய்வு முழுச் சமுதாயத்துக்குமான சரக்கு-மூலதனத்துக்கும் பொருந்தியாக வேண்டும்—உள்ளபடியே பொருந்துகிறது என்பது முடிவில் நிரூபிக்கப்படுகிறது—என்றாலும், இந்த மதிப்பு அடக்கக் கூறுகள் சமுதாயத்தின் மொத்த மறுவுற்பத்தி நிகழ்முறையில் ஏற்கும் வெளித்தோற்ற வடிவம் வெவ்வேறானதாய் இருக்கிறது.

இரண்டாவது: சாமானிய மறுவுற்பத்தியின் அடிப்படையிலேயே கூட கூலியும் (மாறும்-மூலதனம்) உபரி-மதிப்பும் உற்பத்தியாவதோடு, புதிய மாறா-மூலதன மதிப்பும் நேரடியாக உற்பத்தியாகிறது. வேலை-நாள் இரண்டே இரண்டு பகுதிகளாகவே அமைகிறது—ஒரு பகுதியில் தொழிலாளி மாறும்-மூலதனத்தை மாற்றீடு செய்கிறார், அதாவது தமது உழைப்புச் சக்தியை வாங்குவதற்கு

ஆகிய செலவின் சமதையை உற்பத்தி செய்கிறார், மறு பகுதியில் அவர் உபரி-மதிப்பை (இலாபம், வாடகை முதலானவற்றை) உற்பத்தி செய்கிறார் என்றாலும், மேற்கூறியவாறு இந்த வேலை-நாளின் போது புதிய மாறா-மூலதன மதிப்பும் உற்பத்தியாகிறது.

உற்பத்திச் சாதனங்களின் மறுவுற்பத்திக்காக நாள்தோறும் செலவிடப்படும் உழைப்பு—இதன் மதிப்பு கூலியாலும் உபரி-மதிப்பாலும் ஆனது—நுகர்வுப் பண்டங்களின் உற்பத்திக்காக முதலீடு செய்யப்படும் மாறா-மூலதனப் பகுதியை மாற்றீடு செய்யும் புதிய உற்பத்திச் சாதனங்களில் ஈடேற்றம் பெறுகிறது.

பிரதான இடர்ப்பாடுகள்—இவற்றில் பெரும் பகுதியானவற்றுக்கு நாம் மேலே தீர்வு கண்டு விட்டோம்—எழுவது சாமானிய மறுவுற்பத்தியை ஆராயும் போதே அல்லாமல், திரட்டலை ஆராயும் போதல்ல. ஆதலால்தான் சமுதாயத்தினுடைய வருடாந்தர உற்பத்தியின் இயக்கத்தையும் சுற்றோட்டத்தின் வாயிலாய் நடந்தேறும் அதன் மறுவுற்பத்தியையும் கண்டறிய முற்படுகையில், ஆதாம் ஸ்மித்தும் (புத்தகம் II), அவருக்கு முன்பு கெனேயும் (*Tableau Economique*) சமானிய மறுவுற்பத்தியிலிருந்தே தமது ஆய்வினைத் தொடங்கினார்கள்.

## 2. பரிவர்த்தனை-மதிப்பை v+s ஆக ஆதாம் ஸ்மித் பகுத்திடுகிறார்

எந்தவொரு சரக்கின் விலை அல்லது பரிவர்த்தனை-மதிப்பும்—ஆகவே சமுதாயத்தின் வருடாந்தர மொத்தப் பொருளுற்பத்தியான எல்லாச் சரக்குகளின் விலை அல்லது பரிவர்த்தனை-மதிப்பானது (எங்குமே முதலாளித்துவப் பொருளுற்பத்தியே நடைபெறுவதாக ஆதாம் ஸ்மித் சரியாகவே அனுமானித்துக் கொள்கிறார்)—மூன்று அடக்கக் கூறுகளைக் கொண்டதாகும், அதாவது கூலி, இலாபம், வாடகை என்னும் மூன்று கூறுகளாகப் "பகுபடுவதாகும்" என்கிற ஆதாம் ஸ்மித் சூத்திரத்தைப் பின்வருமாறு சுருக்கிடலாம்: சரக்கு-மதிப்பானது v+s என்பதற்குச் சமம்; அதாவது முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனம் + உபரி-மதிப்பு என்பதற்குச் சமம். இலாபத்தையும் வாடகையையும் இவ்விதம் s என்னும் பொது அலகாகச் சுருக்குவதற்கு ஆதாம் ஸ்மித்தின் தெட்டத் தெளிவான அனுமதி நமக்கு உண்டு—பின்வரும் மேற்கோள்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன. v+s என்பதாக நாம் குறிப்பிடும் இரு அடிக்கூறுகளால் ஆனதே சரக்கு-மதிப்பு என்ற சூத்திரத்திலிருந்து தோற்ற அளவிலோ உண்மையிலோ விலகுவதாய் அமைகிற இரண்டாந்தரமான சிறு விவரங்களை முதலில் ஒதுக்கி விட்டு, இங்கே இம் மேற்கோள்களை அளிக்கிறோம்.

பட்டறைத் தொழிலில்: ''தொழிலாளர்கள் மூலப்பொருட்களோடு சேர்க்கும் மதிப்பு ... இரு பகுதிகளாக ... பகுபடுகிறது: ஒன்று அவர்களது கூலியாகி விடும் பகுதி, மற்றொன்று அவர்களை வேலைக்கு அமர்த்தும் முதலாளி மூலப்பொருட்களுக்காகவும் கூலிக்காகவும் முன்னீடு செய்யும் முழுத் தொகை மீதும் பெறுகிற இலாபமாகி விடும் பகுதி.'' (புத்தகம் I, அத்தியாயம் 6, பக்கம் 41.) ''பட்டறைத் தொழிலாளியின் கூலி பட்டறை அதிபரால் முன்னீடு செய்யப்படுகிறது என்றாலும், உண்மையில் இதனால் அதிபருக்குச் செலவு ஏதும் இல்லை, ஏனெனில் கூலியின் மதிப்பு பொதுவாக அவர் கைக்குத் திரும்பி விடுகிறது, அதோடு தொழிலாளியின் உழைப்பால் இலக்குப் பொருளின் மதிப்பு உயர்வதைத் தொடர்ந்து அவருக்கு இலாபமும் கிடைக்கிறது.'' (புத்தகம் II., அத்தியாயம் 3, பக்கம் 221.) ''பொருளுற்பத்தி செய்கிற தொழிலாளர்களின் பராமரிப்புக்காக'' அமைந்த முதலீட்டுப் பகுதி ''...அவருக்கு (அதிபருக்கு) மூலதனமாகப் பயன்பட்ட பின் ... அவர்களுக்கு (தொழிலாளர்களுக்கு) வருவாயாகி விடுகிறது.'' (புத்தகம் II, அத்தியாயம் 3, பக்கம் 223.)

மேற்கூறிய அதே அத்தியாயத்தில் ஆதாம் ஸ்மித் இதை வெளிப்படையாகவே சொல்கிறார்:

''அந்தந்த நாட்டின் நிலத்திலிருந்தும் உழைப்பிலிருந்தும் விளையும் வருடாந்தர உற்பத்தி முழுதும் ... இயல்பாகவே இரு பகுதிகளாய்ப் பிரிகிறது. அவற்றில் ஒரு பகுதி—பல நேரங்களில் இரண்டிலும் மிகப் பெரிதாய் இருக்கும் பகுதி—, அதாவது மூலதனமாக இருந்ததிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட உண்வுப் பண்டங்கள், மூலப்பொருட்கள், பூர்த்தியான படைப்புகள் முதலியவற்றைப் புதுப்பிப்பதற்காக அமைந்ததாகும். மற்றொரு பகுதி இம்மூலதனத்தின் உடைமையாளருக்கு அவரது மூலதனத்துக்கான இலாபமாகவும், வேறொருவருக்கு அவரது நிலத்துக்கான வாடகையாகவும் வருவாயாவதற்காக அமைந்ததாகும்.'' (பக்கம் 222.) மூலதனத்தின் ஒரு பகுதி மட்டும், அதாவது பொருளுற்பத்தி செய்யும் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கூலி கொடுப்பதற்காக முதலீடு செய்யப்படும் பகுதி மட்டும் அதே போது ஒருவரது வருவாயாகவும் அமைகிறது என்று சற்று முன்னர்தான் ஆதாம் ஸ்மித் நமக்குத் தெரிவித்தார். மாறும்-மூலதனமான இந்தப் பகுதி முதலில் அதன் உடைமையாளரான முதலாளியின் கையில் ''மூலதனமாகப் பயன்படுகிறது''; பிறகு அது பொருளுற்பத்தி செய்யும் தொழிலாளிக்கு ''வருவாயாகிறது''. முதலாளி தமது மூலதன-மதிப்பில் ஒரு பகுதியை உழைப்புச் சக்தியாக மாற்றுகிறார்; இதன் மூலம் அப்பகுதியை மாறும்-மூலதனமாக மாறச் செய்கிறார். இந்த மாற்றத்தின் விளைவாகத்தான் இந்த மூலதனப் பகுதி மட்டுமல்லாமல், அவரது மூலதனம் முழுதுமே தொழில் துறை மூலதனமாகச்

செயல்பட முடிகிறது. தொழிலாளி—உழைப்புச் சக்தியை விற்பவ ரான இவர்—கூலியின் வடிவில் அந்த உழைப்புச் சக்தியின் மதிப் பைப் பெற்றுக் கொள்கிறார். அவருக்கு உழைப்புச் சக்தியானது விற்பனைக்குரிய சரக்காகி விடுகிறது; இந்தச் சரக்கை விற்றே அவர் உயிர் வாழ்கிறார். ஆகவே உழைப்புச் சக்திதான் அவருக்கு வரு வாய்க்கான ஒரே ஆதாரம். உழைப்புச் சக்தி அதனை விலைக்கு வாங்குகிற முதலாளியின் கையில்தான் மாறும்-மூலதனமாகச் செயல்படுகிறது. அதனை வாங்குவதற்கான விலையை முதலாளி முன்னீடு செய்வது புறத்தோற்றமே; ஏனெனில் அதன் மதிப்பினை தொழிலாளி ஏற்கெனவே அவருக்குக் கிடைக்கச் செய்து விட்டார்.

பட்டறைத் தொழிலில் உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு இவ் விதம் v+s என்பதற்குச் சமமாகுமென (முதலாளிக்குக் கிடைக்கும் இலாபத்தைக் குறிக்கிறது s) தெளிவுபடுத்திய பின் ஆதாம் ஸ்மித் மேலும் நமக்குச் சொல்வதாவது: விவசாயத்தில் தொழிலாளர்கள், ''மூலதன உடைமையாளரின் இலாபத்தோடு கூடவே, தமது சொந்த நுகர்வுக்கு, அல்லது தம்மைக் கூலிக்கு அமர்த்துகிற [மாறும்] மூலதனத்துக்குச் சமமான மதிப்பை மறுவுற்பத்தி செய் வது'' அன்னியில் ... ''சாகுபடியாளரின் மூலதனத்துக்கும் அதற் குரிய இலாபங்களுக்கும் மேலே, நிலவுடைமையாளரின் வாடகை யும் காலம் தவறாமல் மறுவுற்பத்தி ஆகுமாறு செய்கின்றனர்.'' (புத்தகம் II, அத்தியாயம் 5, பக்கம் 243.) வாடகை நிலவுடைமை யாளரின் கைக்குப் போய்ச் சேருகிறது என்பது இங்கு நாம் பரிசீலிக் கும் பிரச்சினையுடன் சிறிதும் சம்பந்தப்படாத ஒன்று. அது அவரது கைக்குப் போய்ச் சேருவதற்கு முன்னால், சாகுபடியாளரின் கைக்கு, அதாவது தொழில் துறை முதலாளியின் கைக்கு வந்தாக வேண்டும். யாருக்கும் வருவாயாவதற்கு முன்னால் அது உற்பத்திப் பண்டத்தின் மதிப்பில் ஓர் அடக்கக் கூறாகி விட வேண்டும். இவ் விதம் ஆதாம் ஸ்மித்தின் கருத்துப்படி, இலாபமும் சரி, வாடகையும் சரி, உபரி-மதிப்பின் அடக்கக் கூறுகளே தவிர வேறல்ல. பொரு ளுற்பத்தி செய்யும் தொழிலாளி இவற்றைத் தமது கூலியோடு கூட, அதாவது மாறும்-மூலதனத்தின் மதிப்போடு கூட, ஓயாமல் மறுவுற் பத்தி செய்கிறார். எனவே வாடகையும் இலாபமும் உபரி-மதிப் பான s என்பதைச் சேர்ந்த பகுதிகளாகும். ஆக ஆதாம் ஸ்மித்தின் கருத்துப்படி எல்லாச் சரக்குகளின் விலையும் v+s என்பதாகப் பகுபடுகிறது.

எல்லாச் சரக்குகளின் விலையும் (எனவே வருடாந்தரச் சரக்கு- உற்பத்தியின் விலையும் கூட) கூலி + இலாபம் + நில-வாடகை [ground-rent] என்பதாகப் பகுபடுகிறது என்னும் சூத்திரம் ஸ்மித் தின் நூலில் மறைபொருள் வாசகங்களாய் இடையிடையே அமைந் துள்ள பகுதிகளிலுங் கூட பின்வரும் வடிவத்தையே ஏற்கிறது: ஒவ்வொரு சரக்கின் மதிப்பும், எனவே சமுதாயத்தின் வருடாந்தரச்

சரக்கு-உற்பத்தியின் மதிப்பும் கூட v+s என்பதற்குச் சமமாகும், அதாவது உழைப்புச் சக்தியில் முன்னீடு செய்யப்பட்டு, தொழிலாளர்களால் தொடர்ச்சியாக மறுவுற்பத்தி செய்யப்படும் மூலதன-மதிப்பு + தொழிலாளர்கள் அவர்களது உழைப்பின் மூலம் சேர்க்கிற உபரி-மதிப்பு என்பதற்குச் சமமாகும் என்கிற வடிவத்தையே ஏற்கிறது.

ஆதாம் ஸ்மித் ஆய்வின் இந்த இறுதி முடிவானது அதே போது சரக்கின் மதிப்பு பகுபடுகையில் கிடைக்கும் அடக்கக் கூறுகள் பற்றிய அவரது ஒருசார்பான பகுப்பாய்வுக்குரிய ஆதாரத்தையும் நமக்குப் புலப்படுத்துகிறது. (இது குறித்து மேலும் அறிய, கீழே பார்க்கவும்.) சரக்கு-மதிப்பின் அடக்கக் கூறுகள் பொருளுற்பத்தியில் ஈடுபட்டுள்ள வெவ்வேறு வர்க்கங்களுக்கான வெவ்வேறு வருவாய் ஆதாரங்களாக இருக்கிற நிலைமைக்கும், அடக்கக் கூறு ஒவ்வொன்றின் பருமனையும், அடக்கக் கூறுகளின் மதிப்புகளது கூட்டுத் தொகையினுடைய பருமனையும் நிர்ணயிப்பதற்கும் தொடர்பு ஏதுமில்லை.

ஆதாம் ஸ்மித் பின்வருமாறு கூறும் போது எல்லா மாறாட்டங்களும் சேர்ந்து ஒரேயடியாகக் குழப்படி செய்கின்றன: "கூலி, இலாபம், வாடகை ஆகியவையே எல்லா வருவாய்க்கும் மற்றும் பரிவர்த்தனைக்குரிய எல்லா மதிப்புக்குமான மூன்று மூல ஆதாரங்கள். ஏனைய வருவாய் எல்லாம் இறுதியாக இந்த மூன்றில் ஏதேனும் ஒன்றிலிருந்தே பிறப்பவை." (புத்தகம் I, அத்தியாயம் 6, பக்கம் 48.)

1) உழைக்கிறவர்கள் என்ற முறையிலோ, வேறு முறையிலோ நேரடியாக மறுவுற்பத்தியில் ஈடுபடாத சமுதாய உறுப்பினர்கள் வருடாந்தரச் சரக்கு-உற்பத்தியில் தமது பங்கை, அதாவது தமக்கு வேண்டிய நுகர்வுப் பண்டங்களை யாரிடமிருந்து பெறுகிறார்கள்? வருடாந்தரச் சரக்கு-உற்பத்தி முதலில் எந்த வர்க்கங்களிடம் போய்ச் சேருகிறதோ அந்த வர்க்கங்களிடமிருந்து—பொருளுற்பத்தி செய்யும் தொழிலாளர்கள், தொழில் துறை முதலாளிகள், நிலவுடைமையாளர்கள் ஆகியோரிடமிருந்து—பெறுகிறார்கள். அந்த அளவுக்கு அவர்களது வருவாய்கள் பொருள் நோக்கில் கூலி (பொருளுற்பத்தி செய்யும் தொழிலாளர்களின் கூலி), இலாபம், வாடகை ஆகியவற்றிலிருந்து பெறப்படுகிறவை; இவை மூல வருவாய் [primary revenues] அல்லாமல் அவற்றிலிருந்து வருவிக்கப்பட்டவையாகத் [derivative] தோன்றுகின்றன. ஆனால் வருவிக்கப்பட்ட இவ்வருவாய்களைப் பெறுகிறவர்கள் தாம் ஆற்றும் சமூகப் பணிகளின் பயனாகவே—மன்னர், மதகுரு, பேராசிரியர், விபசாரி, படையாள் இப்படிப் பலவாறும் பணி புரிந்தே—அவற்றைப் பெறுவதால் அவர்கள் இந்தப் பணிகளைத் தமது வருவாயின் மூல ஆதாரங்களாகக் கருதுகிறார்கள்.

2) இங்கே ஆதாம் ஸ்மித்தின் படுமோசமான பிழை உச்ச

நிலையை வந்தடைகிறது: சரக்குகளது மதிப்பின் அடக்கக் கூறுகளுக்கும் அவற்றில் சேர்க்கப்பட்டுள்ள உற்பத்திப் பண்ட மதிப்பின் தொகைக்கும் சரியாகவே இலக்கணம் கூறி, இந்த அடக்கக் கூறுகள் எப்படி வெவ்வேறான அத்தனை வருவாய் ஆதாரங்களாகின்றன என்று விளக்கிய பின்,[45] இவ்வாறு மதிப்பிலிருந்து வருவாய்களை வருவித்த பின், இதற்கு நேர் எதிர்த் திசையில் செல்ல முற்படுகிறார்—எதிர்த் திசையிலான இந்தக் கருத்தே இனி அவருக்கு ஆதிக்கக் கருத்தாகி விடுகிறது; "அடக்கக் கூறுகளாக" இருந்த இந்த வருவாய்களை "பரிவர்த்தனைக்குரிய மதிப்பனைத்துக்குமான மூல ஆதாரங்களாக" மாற்றி விடுகிறார்; இவ்விதம் கொச்சைப் பொருளாதாரத்துக்குக் கதவுகளை விரியத் திறந்து விடுகிறார். (நமது ரோஷரைப் பார்க்கவும்.*)

### 3. மூலதனத்தின் மாறாப் பகுதி

மூலதன-மதிப்பின் மாறாப் பகுதியை ஆதாம் ஸ்மித் எப்படிச் சரக்கு-மதிப்பிலிருந்து மாயமாய் மறைய வைக்கப் பார்க்கிறார் என்பதை இப்போது கவனிப்போம்.

"உதாரணமாக, தானியத்தின் விலையில் ஒரு பகுதி நிலவுடைமையாளருக்குரிய நில வாடகையைத் தருகிறது." இந்த மதிப்புக் கூறு நிலவுடைமையாளருக்குச் செலுத்தப்பட்டு வாடகையின் உருவில் அவருக்கு வருவாயாகிறது என்ற நிலைமைக்கும் அதன் தோற்றுவாய்க்கும் எவ்விதத் தொடர்புமில்லை—ஏனைய மதிப்புக் கூறுகள் கூலியாகவும் இலாபமாகவும் வருவாய்க்கு ஆதாரங்களாகின்றன என்ற உண்மைக்கும் அவற்றின் தோற்றுவாய்க்கும் எப்படி எவ்விதத் தொடர்பும் இல்லையோ அதே போலத்தான் இதுவும்.

"இன்னொரு பகுதி அதனை உற்பத்தி செய்வதில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களுக்கு" ["உழைக்கும் கால்நடைகளுக்கும்" என்று அவர் சேர்த்துக் கொள்கிறார்] "கூலி அல்லது பராமரிப்புச் செலவைத் தருகிறது. மூன்றாம் பகுதி சாகுபடியாளருக்குரிய இலாபத்தைத் தருகிறது. இந்த மூன்று பகுதிகளும் சேர்ந்து உடனடியாகவோ இறுதியாகவோ தானியத்தின் முழு விலை ஆவதாகத்

---

[45] எங்கெல்ஸ் குறிப்பு: இந்த வாக்கியம் இப்போது அமைந்துள்ள படி பார்க்கையில் இதற்கு முன்னும் பின்னும் இருப்பவற்றுக்கு முரணாகத் தோன்றினாலும், சிறிதும் மாற்றாமல் கையெழுத்துப் பிரதியில் உள்ளபடி அப்படியே இங்கு நான் தந்துள்ளேன். இப்போது முரண்பாடாகத் தோன்றிய போதிலும், பிற்பாடு "4. ஆதாம் ஸ்மித்தின் பார்வையில் மூலதனமும் வருவாயும்" என்ற தலைப்பில் வரும் பகுதியில் இது தீர்க்கப்படுகிறது.

* மார்க்ஸ் இங்கு குறிப்பிடுவது வி. ரோஷரின் *System der volkswirtschaft. Band I: Die Grundlagen der Nationalökonomie,* Dritte, vermehrte und verbesserte Auflage, ஸ்டட்கார்ட் மற்றும் ஆக்ஸ்பர்க், 1858.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

தெரிகிறது.''[46] [ஆம், உண்மையில் அப்படித்தான் தெரிகிறது.] இந்த முழு விலைக்கும், அதாவது விலையின் பருமனை நிர்ணயிப் பதற்கும், மூன்று வகையினரிடையே அது வினியோகமாவதற்கும் எவ்விதத் தொடர்புமில்லை. ''சாகுபடியாளரின் முதலீட்டை மாற் றீடு செய்ய, அல்லது அவரது உழைக்கும் கால்நடைகளின் தேய் மானத்தையும் உழுபடைக் கருவிகளின் தேய்மானத்தையும் ஈடு செய்ய ஒரு நான்காவது பகுதி அவசியமெனக் கருதலாம். ஆனால் உழைக்கும் குதிரை அல்லது உழுபடைக் கருவியின் விலையும் அதே மூன்று பகுதிகளால் ஆனது என்பதை—குதிரை வளருகிற நிலத் தின் வாடகை, அதைப் பேணிக் காத்து வளர்த்திடும் உழைப்பு, இந்த நிலத்துக்கான வாடகையும் இந்த உழைப்புக்கான கூலியுமாகிய இரண்டையும் முன்னீடு செய்கிற சாகுபடியாளரின் இலாபம் ஆகிய மூன்று பகுதிகளால் ஆனது என்பதை — பார்க்க வேண்டும். ஆகவே, தானியத்தின் விலையானது குதிரையின் விலையையும் அதைப் பராமரிப்பதற்கு ஆகும் செலவையும் தரலாமென்ற போதி லும், விலை முழுவதும் உடனடியாகவோ இறுதியாகவோ வாடகை, உழைப்பு,'' (கூலியைச் சொல்கிறார்) ''இலாபம் என்ற அதே மூன்று பகுதிகளாகப் பகுபடவே செய்கிறது.'' (புத்தகம் I, அத்தி யாயம் 6, பக்கம் 42.)

ஆதாம் ஸ்மித் அவரது விந்தையான கோட்பாட்டுக்கு ஆதர வாகச் சொல்வதெல்லாம் இவ்வளவேதான். சொன்னதையே திருப் பித் திருப்பிச் சொல்வதுதான் இதற்கு அவர் அளித்திடும் நிரூபணம். எடுத்துக்காட்டாக, தானியத்தின் விலை v+s என்பதால் மட்டும் ஆனதன்று எனவும், தானியத்தின் உற்பத்திக்காக நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் விலையும்—ஆகவே சாகுபடியாளர் உழைப்புச் சக்திக்காக முதலீடு செய்வதை அன்னியில் வேறொரு மூலதன-மதிப்பும்—தானியத்தின் விலையில் அடங்கியுள்ளது என வும் அவர் ஒப்புக் கொள்கிறார். ஆனால் தானியத்தின் விலையைப் போலவே இந்த உற்பத்திச் சாதனங்கள் யாவற்றின் விலைகளும் v+s என்பதாகப் பகுபடுகிறவையே என்கிறார். ஆயினும் இவை மட்டுமல்லாமல், இந்த உற்பத்திச் சாதனங்களை உருவாக்குவதற் காக நுகரப்பட்ட பிற உற்பத்திச் சாதனங்களின் விலைகளாகவும் அவை பகுபடுகிறவை என்பதையும் சேர்த்துக் கொள்ள மறந்து விடுகிறார். ஓர் உற்பத்திக் கிளையிலிருந்து வேறொரு கிளைக்கும்,

[46] ஆதாம் ஸ்மித் இங்கே இந்த உதாரணத்தைத் தேர்ந்தெடுப்பது துர்பாக்கியமே என்பதைக் கவனியாது விட்டு விடுகிறோம். கூலி, இலாபம், வாடகை என்பதாக தானியத்தின் மதிப்பு பகுபடுகிறது என்றால், உழைக்கும் கால்நடைகள் நுகருகிற தீவனம் உழைக்கும் கால்நடைகளின் கூலியாகக் காட்டப்படுவதும், உழைக்கும் கால்நடைகள் கூலித் தொழிலாளர்களாகக் காட்டப்படுவதும், இதனால் கூலித் தொழிலாளியே உழைக்கும் கால்நடையாகக் காட்டப்படுவதும்தான் இதற்குக் காரணம். (கையெழுத்துப் பிரதி II என்பதிலிருந்து.—எங்கெல்ஸ்.)

அதிலிருந்து மூன்றாவது கிளைக்கும் நம்மை அனுப்புகிறார். சரக்குகளின் விலை முழுவதுமே "உடனடியாகவோ," "இறுதியாகவோ" v+s என்பதாகப் பகுபடுகிறது என்கிற இந்த வாதம் வெறும் வாய் ஜாலமாகி விடாதிருக்க வேண்டுமானால், சரக்குகளின் விலையானது உடனடியாக c (நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் விலை) + v + s என்பதாகப் பகுபட்டாலும், இந்தச் சரக்குகளை இறுதியில் ஈடுசெய்கிறவை நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்களை முழு அளவுக்கு மாற்றீடு செய்பவையும் மாறும்-மூலதனத்தை மட்டுமே முதலீடு செய்து உற்பத்தியாகிறவையும் (அதாவது உழைப்புச் சக்திக்காக முதலீடு செய்யப்பட்டும் மூலதனத்தை மட்டும் கொண்டு உற்பத்தியாகிறவையும்) ஆன சரக்குகளே என்று அவர் நிரூபித்தாக வேண்டும். மாறும்-மூலதனத்தை மட்டும் முதலீடு செய்து உற்பத்தியாகிற சரக்குகளின் விலை உடனடியாகவே v+s என்றாகி விடுகிறது. ஆதலால் முதலில் குறிப்பிட்ட விலையான c+v+s என்பதும் (c என்பது மாறா-மூலதனப் பகுதியைக் குறிக்கிறது) இறுதியில் v+s ஆகப் பகுபடுவதாகி விடுகிறது. ஸ்காட்லாந்தியக் கூழாங்கற்களைச் சேகரிப்பவர்கள் பற்றிய உதாரணத்தைக் கூறியதன் மூலம் முன்பே தாம் இவ்வாறு நிரூபித்து விட்டதாக ஆதாம் ஸ்மித்தே நினைக்கவில்லை. அவரது கருத்துப்படி, இவர்கள் 1) எவ்வகையான உபரி-மதிப்பையும் உண்டாக்கவில்லை, தமது கூலியை மட்டுமே உற்பத்தி செய்கின்றனர்; 2) எந்த விதமான உற்பத்திச் சாதனங்களையும் உபயோகிக்கவில்லை (ஆனால் உண்மை என்னவென்றால், கூழாங்கற்களை எடுத்துச் செல்வதற்கு வேண்டிய கூடை, சாக்கு போன்ற உற்பத்திச் சாதனங்களை அவர்கள் உபயோகிக்கவே செய்கிறார்கள்).

ஆதாம் ஸ்மித் பிற்பாடு தாமே தமது தத்துவத்துக்கே விரோதமாகச் செல்வதை ஏற்கெனவே பார்த்தோம்; தமக்கே தாம் முரண்பாடாகச் செல்வதை உணராமலேதான் அவர் இப்படிச் செய்கிறார். இம்முரண்பாடுகளுக்கான மூல காரணம் அவரது விஞ்ஞான அடிக்கோள்களிலேயே காணக் கிடக்கிறது. உழைப்பாக மாற்றப்படும் மூலதனம் தனது மதிப்பைக் காட்டிலும் அதிகமான மதிப்பை உற்பத்தி செய்கிறது. எப்படி? ஆதாம் ஸ்மித் சொல்கிறார்: உற்பத்தி நிகழ்முறையின் போது தொழிலாளர்கள் தமது வேலையின் இலக்குப் பொருட்களுக்கு ஊட்டுகிற மதிப்பானது தமக்குத் தரப்படும் விலைக்கான சமமதையாக அமைவதோடு நில்லாமல் (இலாபமும் நில-வாடகையுமான) உபரி-மதிப்பாகவும் அமைந்திடுகிறது, தமக்கு அல்லாமல் தம்மை வேலைக்கு அமர்த்துவோருக்குப் போய்ச் சேரும் உபரி-மதிப்பாகவும் அமைந்திடுகிறது — அவர்கள் சாதிப்பதெல்லாம், சாதிக்க முடிந்ததெல்லாம் இவ்வளவு தான். ஒரு நாளைய தொழில் துறை உழைப்பு புரிந்திடும் இதே சாதனையை ஓராண்டு பூராவிலும் முதலாளி வர்க்கம் முழுதுமாகச்

சேர்ந்து இயங்க வைக்கும் உழைப்பும் புரிந்திடுகிறது. ஆகவே சமு தாயம் உற்பத்தி செய்யும் வருடாந்தர மதிப்பின் மொத்தத் தொகை யானது v+s என்பதாகவே பகுபட முடியும், அதாவது தமது உழைப் புச் சக்தியை விலைக்கு வாங்குவதற்காகச் செலவிடப்பட்ட மூல தன-மதிப்பை மாற்றீடு செய்வதற்கான சமதையாகவும், இதை அன் னியில் அவர்கள் தம்மை வேலைக்கமர்த்துவோரிடம் சேர்ப்பிக்க வேண்டிய கூடுதல் மதிப்பாகவுமே பகுபட முடியும். ஆனால் சரக்கு-மதிப்பில் இந்த இரு கூறுகளும் மறுவுற்பத்தியில் ஈடுபட்டுள்ள பல்வேறு வர்க்கங்களுக்கான வருவாய் ஆதாரங்களாகவும் அமை கின்றன; முதலாவது கூறு தொழிலாளர்களுடைய வருவாயான கூலியின் ஆதாரமாகும்; இரண்டாவது கூறு உபரி-மதிப்பின் ஆதார மாகும். இந்த உபரி- மதிப்பில் ஒரு பகுதியைத் தொழில் துறை முத லாளி தமக்குரிய இலாபமாக தாமே வைத்துக் கொள்கிறார்; இன் னொரு பகுதியை நிலப்பிரபுவுக்குரிய வருவாயான வாடகையாகத் தந்து விடுகிறார். வருடாந்தர மதிப்பு-உற்பத்தியில் v+s அல்லாமல் வேறு கூறு ஏதும் இல்லை எனில், இன்னொரு மதிப்புக் கூறு எங் கிருந்து வர முடியும்? இங்கு நாம் சாமானிய மறுவுற்பத்தியையே அடிப்படையாகக் கொண்டு பரிசீலனை செய்கிறோம். வருடாந்தர உழைப்பின் முழு அளவும் உழைப்புச் சக்திக்காக முதலீடு செய்யப் படும் மூலதன-மதிப்பின் மறுவுற்பத்திக்குத் தேவைப்படும் உழைப் பாகவும், உபரி-மதிப்பின் படைப்புக்குத் தேவைப்படும் உழைப்பா கவும் பகுபடுகிறது என்னும் போது, உழைப்புச் சக்திக்காக முதலீடு செய்யப்படாத ஒரு மூலதன-மதிப்பின் உற்பத்திக்கான உழைப்பு எங்கிருந்து வர முடியும்?

நடப்பது வருமாறு:

1) கூலித் தொழிலாளி உழைப்பின் இலக்குப் பொருளோடு சேர்க்கிற உழைப்பின் அளவைக் கொண்டு ஆதாம் ஸ்மித் சரக்கின் மதிப்பை நிர்ணயிக்கிறார். உழைப்பின் இலக்குப் பொருளை அவர் ''மூலப்பொருள்'' என்றே அழைக்கிறார். ஏனெனில் உழைப்பின் உற்பத்திப் பொருட்களை செப்பம் செய்தலையே தனது வேலை யாகக் கொண்டிருக்கும் பட்டறைத் தொழிலை அவர் ஆராய்கிறார். ஆனால் ஆய்வுப் பொருளின் தன்மை இதனால் மாறி விடுவதில்லை. தொழிலாளி ஒரு பொருளோடு சேர்க்கிற மதிப்பானது (''சேர்க் கிற'' என்னும் இந்தச் சொல் ஆதாம் ஸ்மித் பயன்படுத்துவது), அந்தப் பொருள் இந்தச் சேர்ப்பு நடைபெறும் முன்பே மதிப்புடைய தாய் இருந்ததா இல்லையா என்பதைச் சிறிதும் பொறுத்ததன்று. ஆகவே தொழிலாளி சரக்கின் வடிவில் ஒரு மதிப்பை உற்பத்தி செய்கிறார். ஆதாம் ஸ்மித்தின் கருத்துப்படி, இம்மதிப்பின் ஒரு பகுதி அவரது கூலிக்கான சமதையாகும். ஆகவே இந்தப் பகுதி அவரது கூலியினுடைய மதிப்பின் பருமனால் நிர்ணயிக்கப்படு கிறது. இந்தப் பருமன் எவ்வளவோ அதற்கேற்ப அவர் உழைப்பை அளித்துத் தமது கூலியின் மதிப்புக்குச் சமமான ஒரு மதிப்பை

உற்பத்தி அல்லது மறுவுற்பத்தி செய்தாக வேண்டும். அதே போது தொழிலாளி இப்படி வரையப்படும் வரம்புக்கு மேல் கூடுதல் உழைப்பையும் சேர்க்கிறார். அவரை வேலைக்கு அமர்த்தும் முதலாளிக்கான உபரி-மதிப்பை இந்தக் கூடுதல் உழைப்பு படைத்தளிக்கிறது. இந்த உபரி-மதிப்பு முழுவதும் முதலாளியின் கையிலேயே தங்கினாலும் ஒன்றுதான், அல்லது அதன் சில பகுதிகளை அவர் மூன்றாமவர்களுக்குத் தந்து விட்டாலும் ஒன்றுதான் — கூலித் தொழிலாளி சேர்த்திடும் உபரி-மதிப்பின் பண்புவழி (அது உபரி-மதிப்புதானா என்ற) நிர்ணயிப்போ, அளவுவழி (பருமன்) நிர்ணயிப்போ அதனால் சிறிதும் பாதிக்கப்படவில்லை. உற்பத்திப் பண்டத்தினது மதிப்பின் வேறு எந்தப் பகுதியையும் போலவே அதுவும் மதிப்புதானே தவிர வேறல்ல. ஆனால் தொழிலாளி அதற்குச் சமதை எதையும் பெறவில்லை, இனி பெறப் போவதுமில்லை என்பதில்தான், சமதை ஏதும் தராமலே முதலாளி அம்மதிப்பைத் தனதாக்கிக் கொண்டு விடுகிறார் என்பதில்தான் அது வேறுபடுகிறது. ஒரு சரக்கின் மொத்த மதிப்பு அச்சரக்கை உற்பத்தி செய்வதற்காகத் தொழிலாளி செலவிடுகிற உழைப்பின் அளவால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த மொத்த மதிப்பில் ஒரு பகுதியானது கூலியின் மதிப்புக்கு அது சமமாய் இருக்க வேண்டும் என்பதால், அதாவது கூலிக்கான சமதையாக வேண்டும் என்பதால் நிர்ணயமாகிறது. ஆகவே, இரண்டாம் பகுதியான உபரி-மதிப்பானது, உற்பத்திப் பண்டத்தின் மொத்த மதிப்பிலிருந்து கூலிக்குச் சமதையான மதிப்புப் பகுதியைக் கழித்த பின் எஞ்சுவதற்கு சமமாய் இருத்தல் வேண்டும் என்பதால் நிர்ணயமாகி விடுகிறது. இவ்விதம் சரக்கின் உற்பத்தியின் போது தொழிலாளியின் கூலிக்குச் சமதையாவதற்கும் மிகையாகப் படைக்கப்படும் மதிப்பளவுக்குச் சமமாகிறது.

2) தனிப்பட்ட ஒரு தொழில் நிறுவனத்தில் தனிப்பட்ட ஒரு தொழிலாளி உற்பத்தி செய்யும் சரக்குக்குப் பொருந்துவது எல்லாத் தொழிற் கிளைகளைது மொத்த வருடாந்தர உற்பத்தி முழுமைக்கும் பொருந்துவதாகும்: பொருளுற்பத்தி செய்யும் ஒரு தொழிலாளியின் ஒரு நாளைய உழைப்புக்குப் பொருந்துவது பொருளுற்பத்தி செய்யும் தொழிலாளர்களது வர்க்கம் முழுதுமாகச் சேர்ந்து இயங்க வைக்கும் வருடாந்தர உழைப்புக்கும் பொருந்துவதாகும். ஓராண்டு காலத்தில் செலவாகும் உழைப்பின் அளவால் நிர்ணயிக்கப்படும் மொத்த மதிப்பு ஒன்றை இவ்வர்க்கம் வருடாந்தர உற்பத்தியில் ''நிலை நிறுத்தி வைக்கிறது'' (ஆதாம் ஸ்மித்தின் பதப் பிரயோகம்). இந்த மொத்த மதிப்பு இரு கூறுகளாகப் பகுபடுகிறது. ஒரு கூறானது தொழிலாளி வர்க்கம் வருடாந்தர உழைப்பில் எப்பகுதியைக் கொண்டு தனது வருடாந்தரக் கூலிக்கான சமதையை — உண்மையில் இந்தக் கூலியையே — படைக்கிறதோ அப்பகுதியால்

நிர்ணயிக்கப்படுகிறது. மற்றொரு பகுதியானது முதலாளி வர்க்கத்துக்கான உபரி-மதிப்பைப் படைக்கத் தொழிலாளர்கள் பயன்படுத்தும் அந்த வருடாந்தரக் கூடுதல் உழைப்பினால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே, வருடாந்தர உற்பத்தியில் உள்ள வருடாந்தர மதிப்பு-உற்பத்தி இரண்டே கூறுகளால் ஆனது: அதாவது, தொழிலாளி வர்க்கம் பெறுகிற வருடாந்தரக் கூலியின் சமதையாலும், முதலாளி வர்க்கத்துக்கு ஆண்டுதோறும் வரப்பெறும் உபரி-மதிப்பாலும் ஆனது. ஆகவே வருடாந்தரக் கூலிதான் தொழிலாளி வர்க்கத்தின் வருவாய்; உபரி-மதிப்பின் வருடாந்தர அளவுதான் முதலாளி வர்க்கத்தின் வருவாய். இவை இரண்டும் இவ்விதம் வருடாந்தர நுகர்வு-நிதியத்தில் ஒப்பீட்டுப் பங்குகளைக் குறிப்பவை (சாமானிய மறுவுற்பத்தியையே இங்கு விவரிக்கிறோம் என்பதால் இந்தக் கருத்து சரியானதே), அந்நிதியத்தில் ஈடேற்றம் பெறுகிறவை. ஆக இங்கே மாறா-மூலதன மதிப்புக்கு—உற்பத்திச் சாதனங்களின் வடிவில் செயல்படும் மூலதனத்தின் மறுவுற்பத்திக்கு—இடமே இல்லாது போகிறது. சரக்குகளின் மதிப்பில் வருவாயாகப் பயன்படும் எல்லாக் கூறுகளும் சமுதாய நுகர்வு-நிதியத்தில் சேருவதற்காக உழைப்பால் வருடம்தோறும் உற்பத்தி செய்யப்படுகிற பொருட்களும் வெவ்வேறானவை அல்ல, இரண்டும் ஒன்றேதான் என்று ஆதாம் ஸ்மித் தமது நூலின் முன்னுரையில் தெளிவாகச் சொல்கிறார்: ''மக்கட் பெருந் திரளின் வருவாய் என்பது எவற்றால் ஆனது, அல்லது வெவ்வேறு சகாப்தங்களிலும் வெவ்வேறு நாடுகளிலும் மக்களது வருடாந்தர நுகர்வுக்கு வேண்டியவற்றைக் கிடைக்கச் செய்யும் நிதியங்களாய் இருப்பவை எப்படிப்பட்டவை என்பதை விளக்குவதே இந்த முதல் நான்கு புத்தகங்களின் குறிக்கோள்.'' (பக்கம் 12.) முன்னுரையின் முதல் வாக்கியத்திலேயே அவர் கூறுவதாவது: ''ஒவ்வொரு நாட்டிலும் அதன் நிதியமாக இருப்பது வருடாந்தர உழைப்புதான்; அந்நாடு ஆண்டுதோறும் நுகருகிற எல்லா அவசியப் பண்டங்களையும் சேவைகளையும் வாழ்க்கை வசதிகளையும் வழங்கிடும் மூல ஊற்று இந்நிதியம்தான்; எப்போதுமே இந்நிதியம் அந்த உழைப்பின் நேரடி உற்பத்திப் பொருட்களாலோ, அப்பொருட்களைக் கொண்டு பிற நாடுகளிலிருந்து வாங்கப்படுகிறவற்றாலோ ஆன்துதான்.'' (பக்கம் 11.)

இங்கே ஆதாம் ஸ்மித்தின் முதல் தவறு, வருடாந்தர உற்பத்தியின் மதிப்பைப் புதிதாய் உற்பத்தி செய்யப்பட்ட வருடாந்தர மதிப்புக்குச் சமமாக்குவதில் அடங்கியுள்ளது. பிந்தைய மதிப்பு கடந்த வருட உழைப்பின் உற்பத்தி மட்டுமே ஆகும். ஆனால் முந்தையது வருடாந்தர உற்பத்தியின் போது நுகரப்பட்ட எல்லா மதிப்புக் கூறுகளோடும், முந்தைய ஆண்டிலும் ஓரளவுக்கு அதற்கும் முற்பட்ட ஆண்டுகளிலும் கூட உற்பத்தியான மதிப்புக் கூறுகளும் அடங்கியதாகும், அதாவது உற்பத்திச் சாதனங்களது மதிப்பும்

அடங்கியதாகும். இந்த உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு திரும்பவும் வந்து தோற்றமளிப்பதாகுமே தவிர கடந்த ஆண்டில் செலவிடப் பட்ட உழைப்பினால் உற்பத்தியோ மறுவுற்பத்தியோ செய்யப்பட்ட தல்ல. இப்படிக் குழப்படி செய்வதன் மூலம் ஆதாம் ஸ்மித் வருடாந்தர உற்பத்தியினது மதிப்பின் மாறாப் பகுதியை மாயமாய் மறைய வைக்கிறார். அவரது இந்தக் குழப்படிக்கு ஆதாரமாயிருப்பது அவருடைய அடிப்படைக் கருத்தோட்டத்தில் உள்ள மற்றொரு பிழை யாகும்: உழைப்பின் இரட்டைத் தன்மையை [two-fold nature of labour]—அதாவது உழைப்புச் சக்தியைச் செலவிட்டு மதிப்பைப் படைக்கும் உழைப்பு, பயனுள்ள பண்டங்களை (பயன்-மதிப்பு களை) படைக்கிற, பயனுள்ள வேலையாகிற ஸ்தூலமான உழைப்பு என்ற இரட்டைத் தன்மையை—அவர் வேறுபடுத்திப் பார்க்க வில்லை. ஆண்டுதோறும் உற்பத்தியாகிற சரக்குகளின் மொத்த அளவு, அதாவது **வருடாந்தர மொத்த உற்பத்தி** எனப்படுவது, கடந்த ஆண்டில் செயல்பட்ட **பயனுள்ள** உழைப்பின் விளை வாகும். சமுதாய வழியில் பயன்படுத்தப்படும் உழைப்பானது பயனுள்ள பல்வேறு உழைப்பு வகைகளைக் கொண்டு கிளை கிளையாய் விரிந்துள்ள ஓர் அமைப்பைச் சேர்ந்ததாகச் செயல்படு வதால்தான் இந்தச் சரக்குகள் எல்லாம் உருவாகின்றன. இதனால் தான் சரக்குகளின் உற்பத்தியின் போது நுகரப்பட்டு பிறகு புதிய தசையுருவில் திரும்பவும் வந்து தோற்றமளிக்கும் உற்பத்திச் சாதனங் களது மதிப்பு கேடுறாமல் அச்சரக்குகளின் மொத்த மதிப்பில் அப்படியே பாதுகாக்கப்படுகிறது. ஆக, மொத்த **வருடாந்தர உற்பத் தியானது** ஓராண்டு காலத்தில் செலவாகிய **பயனுள்ள** உழைப்பின் விளைவாகும். ஆனால் வருடாந்தர **உற்பத்தியின் மதிப்பில்** ஒரு பகுதி மட்டுமே அவ்வாண்டில் படைக்கப்பட்டதாகும்; இந்தப் பகுதி தான் வருடாந்தர **மதிப்பு-உற்பத்தி** எனப்படுவது; அவ்வாண்டில் இயங்கிய உழைப்பின் அளவை அது குறிக்கிறது.

ஆகவே, ''ஒவ்வொரு நாட்டிலும் நிதியமாய் இருப்பது அதன் உழைப்புதான்; அந்நாடு ஆண்டுதோறும் நுகருகிற எல்லா அவசியப் பண்டங்களையும் சேவைகளையும் வாழ்க்கை வசதிகளையும் வழங்கி டும் மூல ஊற்று இந்நிதியம்தான்...'' என்று ஆதாம் ஸ்மித் மேலே மேற்கோளாய்க் காட்டிய பகுதியில் கூறுகையில், அவர் ஒருதலைச்சார்பான விதத்தில் அணுகி, பயனுள்ள உழைப்பின் கோணத்திலிருந்து மட்டும் பார்க்கிறார். இந்தப் பயனுள்ள உழைப்பு தான் இந்த வாழ்வுச் சாதனங்களுக்கெல்லாம் நுகர்வுக்குரிய வடிவம் அளித்தது என்பது மெய்தான். ஆனால் முந்தைய ஆண்டுகள் தயாரித்து அளித்த உழைப்புச் சாதனங்களின் இலக்குப் பொருட் களின் துணை இல்லையேல் இது முடிந்திருக்காது என்பதையும், ஆகவே ''வருடாந்தர உழைப்பு'' மதிப்பைப் படைத்தது என்றாலும் தான் உருவாக்கிய பண்டங்களின் மதிப்பு முழுவதையுமே படைத்து

விடவில்லை என்பதையும் புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட மதிப்பு உற்பத்திப் பண்டங்களின் மதிப்பை விடச் சிறியதே என்பதையும் ஸ்மித் மறந்து விடுகிறார்.

ஆதாம் ஸ்மித் இந்தப் பகுப்பாய்வில் அவருக்குப் பின் வந்தவர்கள் எல்லாம் சென்றதைக் காட்டிலும் அதிகம் சென்று விடவில்லை என நாம் குறை கூற முடியாதுதான் (எனினும் முன்பே பிசியோக்கிராட்டுகள் சரியான திசையில் ஓரடி எடுத்து வைத்ததைக் காண முடிந்தது). ஆனால் ஆதாம் ஸ்மித் பிற்பாடு குழப்பத்தில் சிக்கிக் கொண்டு விடுகிறார். பொதுவாகச் சரக்குகளின் மதிப்பு பற்றிய அவரது ''மகோன்னதக்'' கருத்தோட்டத்துக்கு வழி விடாமல் பாமரத்தனமான கருத்துகள் ஓயாமல் குறுக்கிடுவதே இதற்குரிய காரணம். மொத்தத்தில் அவரிடம் இந்தப் பாமரத்தனமான கருத்துகளே மேலோங்கி நிற்கின்றன. ஆயினும் அவரது விஞ்ஞான உள்ளுணர்ச்சியானது மகோன்னதக் கருத்தோட்டத்தை அவ்வப்போது திரும்பி வரச் செய்கிறது.

### 4. ஆதாம் ஸ்மித்தின் பார்வையில் மூலதனமும் வருவாயும்

ஒவ்வொரு சரக்கின் மதிப்பிலும் (ஆகவே வருடாந்தர உற்பத்தியிலும் கூட) கூலியின் சமதையாக மட்டுமே இருக்கிற பகுதி உழைப்புச் சக்திக்காக முதலாளி முன்னீடு செய்யும் மூலதனத்துக்குச் சமமாகும்; முதலாளி மூலதன-மதிப்பின் இந்தப் பகுதியை, கூலித் தொழிலாளர்கள் புதிதாக உற்பத்தி செய்து தரும் சரக்கு-மதிப்பின் ஒரு பகுதியைக் கொண்டு மீட்டுக் கொள்கிறார். விற்பனைக்கு இன்னும் தயாராயிராத, அல்லது தயாராயிருந்தாலும் முதலாளியால் இன்னும் விற்கப்படாமலிருக்கிற உற்பத்திப் பண்டத்தில் தொழிலாளிக்குரிய பங்குக்காக முதலாளி அவருக்குப் பணமாக ஊதியமளிக்கிறார் என்ற அர்த்தத்தில் மாறும்-மூலதனம் முன்னீடு செய்யப்பட்டாலும் சரி, அல்லது தொழிலாளி ஏற்கெனவே உற்பத்தி செய்திருக்கும் சரக்குகளை விற்றுக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு முதலாளி அவருக்கு ஊதியமளித்தாலும் சரி, அல்லது கடன்-செலாவணி முறைகளைப் பயன்படுத்தி முதலாளி இந்தப் பணத்தை முன்னதாகவே வாங்கி வைத்திருந்தாலும் சரி, இந்நிலைமைகள் யாவற்றிலும் முதலாளி மாறும்-மூலதனத்தைச் செலவிடுகிறார். இது பண வடிவில் தொழிலாளர்களின் கைக்குச் செல்கிறது. பதிலுக்கு இந்த மூலதன-மதிப்பின் சமதை முதலாளியின் கையில் இருக்கிறது. முதலாளியின் சரக்குகளது மதிப்பின் எந்தப் பகுதியில் தொழிலாளி அவற்றின் மொத்த மதிப்பில் தமக்குரிய பங்கைப் புதிதாக உற்பத்தி செய்திருக்கிறாரோ, அதாவது எந்தப் பகுதியில் அவர் தமது கூலியின் மதிப்பை உற்பத்தி செய்திருக்கிறாரோ அந்தப் பகுதி மேற்கூறிய சமதையாய் முதலாளியின்

கையில் இருக்கிறது. தொழிலாளி உற்பத்தி செய்திருக்கும் பொருளின் தசையுருவில் இம்மதிப்புப் பகுதியைக் கொடுப்பதற்குப் பதிலாக, முதலாளி அவருக்குப் பணமாகக் கொடுக்கிறார். முதலாளி முன்னீடு செய்த மூலதன-மதிப்பின் மாறும் பகுதி இப்போது அவரிடம் சரக்குகளின் வடிவில் இருக்கிறது; அதேபோது தொழிலாளி தாம் விற்ற உழைப்புச் சக்திக்கான சமதையை பண வடிவில் பெற்றுக் கொண்டு விட்டார்.

முதலாளி முன்னீடு செய்த மூலதனத்தில், உழைப்புச் சக்தியை வாங்கியதன் மூலம் மாறும்-மூலதனமாக மாற்றப்பட்ட பகுதியானது செயல்முனைப்புடன் உழைப்புச்சக்தியாக உற்பத்தி நிகழ்முறையில் பணியாற்றுகிறது. இந்த சக்தி இவ்வாறு செலவிடப்படுவதன் மூலம் சரக்குகளின் வடிவில் ஒரு புதிய மதிப்பாக உற்பத்தி செய்யப்படுகிறது; அதாவது மறுவுற்பத்தி செய்யப்படுகிறது; முன்னீடு செய்யப்பட்ட மூலதன-மதிப்பின் மறுவுற்பத்தி அல்லது புதிய உற்பத்தி இவ்விதம் நடைபெறுகிறது. அதே போது, தொழிலாளி தாம் விற்ற உழைப்புச் சக்தியின் மதிப்பு அல்லது விலையை, வாழ்வுச் சாதனங்களுக்காக, தமது உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்திக்குத் தேவைப்படும் சாதனங்களுக்காகச் செலவிடுகிறார். மாறும்-மூலதனத்திற்குச் சமமான ஒரு பணத் தொகை அவரது வருமானமாகிறது; வருவாயாகிறது. அவர் தமது உழைப்புச் சக்தியை முதலாளிக்கு விற்க முடியும் வரைதான் இந்த வருவாய் கிடைக்கிறது.

கூலித் தொழிலாளியின் சரக்காகிய அவரது உழைப்புச் சக்தி முதலாளியின் மூலதனத்தோடு சேர்க்கப்படுகிற அளவுக்கே, மூலதனமாகச் செயல்படுகிற அளவுக்கே, சரக்காகப் பயன்படுகிறது; மறு புறம், உழைப்புச் சக்தியை வாங்குவதற்காகப் பண-மூலதனமாக முதலாளி செலவிடும் மூலதனமானது உழைப்புச் சக்தியை விற்கும் கூலித் தொழிலாளியிடம் அவரது வருவாயாகச் செயல்படுகிறது.

பல்வேறு சுற்றோட்ட நிகழ்முறைகளும் உற்பத்தி நிகழ்முறைகளும் இங்கே பின்னிப் பிணைகின்றன; இவற்றை ஆதாம் ஸ்மித் வேறுபடுத்திக் காணவில்லை.

**முதலாவது: சுற்றோட்ட நிகழ்முறைக்குரித்தான** செயல்கள். தொழிலாளி தமது சரக்காகிய உழைப்புச் சக்தியை முதலாளியிடம் விற்கிறார். இதை வாங்குவதற்காக முதலாளி தருகிற பணமானது, அவரது கண்ணோட்டத்தில், உபரி-மதிப்பின் உற்பத்திக்காக முதலீடு செய்யப்படும் பணமாகும்; எனவே பண-மூலதனமாகும். இது முன்னீடு செய்யப்படுகிறதே தவிர செலவு செய்யப்படவில்லை. (இந்தப் பணம் முதலாளிக்கு எங்கிருந்து வருவதாயினும், இதுதான் "முன்னீடு" என்பதன்— பிசியோக்கிராட்டுகளது avance என்பதன்—மெய்யான அர்த்தம்.

உற்பத்தி நிகழ்முறையின் காரியங்களுக்காக முதலாளி தருகிற ஒவ்வொரு மதிப்பும்—இப்படி அவர் தருவது வேலை தொடங்கு வதற்கு முன்னால் நடைபெற்றாலும், வேலை முடிந்த பிறகு நடை பெற்றாலும்—அவரது கண்ணோட்டத்தில் முன்னீடே ஆகும்; உற்பத்தி நிகழ்முறைக்காகச் செய்யப்படும் முன்னீடே ஆகும்.) ஏனைய சரக்கு விற்பனை ஒவ்வொன்றின் போதும் நடைபெறுவது தான் இங்கேயும் நடைபெறுகிறது. விற்கிறவர் ஒரு பயன்-மதிப்பை (இங்கே தனது உழைப்புச் சக்தியை) கொடுத்து விட்டு, பண உருவில் அதன் மதிப்பைப் பெற்றுக் கொள்கிறார் (அதன் விலையை ஈடேற்றம் பெறச் செய்கிறார்); வாங்குகிறவர் தமது பணத்தைக் கொடுத்து விட்டு, பதிலுக்கு சரக்கை—இங்கே உழைப்புச் சக்தியை—பெற்றுக் கொள்கிறார்.

**இரண்டாவது:** விலைக்கு வாங்கப்படும் உழைப்புச் சக்தியானது இப்போது உற்பத்தி நிகழ்முறையின் போது செயல்படும் மூல தனத்தின் ஒரு கூறாகி விடுகிறது. தொழிலாளியே கூட இப்போது இந்த மூலதனத்தின் ஒரு தனிவகைத் தசையுருவாகத்தான் விளங்கு கிறார், உற்பத்திச் சாதனங்களது தசையுருவில் இருக்கும் மூலதனக் கூறுகளிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கக் கூடிய தசையுருவாக விளங்குகிறார். உற்பத்தி நிகழ்முறையின் போது தொழிலாளி தமது உழைப்புச் சக்தியைச் செலவிட்டு, உற்பத்திச் சாதனங்களது மதிப்பைப் பெருகச் செய்கிறார். இந்த உற்பத்திச் சாதனங்களைத் தமது உழைப்புச் சக்தியின் மதிப்புக்குச் சமமான மதிப்புள்ள உற் பத்திப் பொருட்களாய் (உபரி-மதிப்பை ஒதுக்கி விட்டுச் சொல் கிறோம்) மாற்றுகிறார். இவ்விதம் அவர் தமது கூலிக்காக முதலாளி முன்னீடு செய்துள்ள, அல்லது செய்தாக வேண்டியு மூலதனப் பகுதியை சரக்குகளின் வடிவில் முதலாளிக்கு உற்பத்தி செய்து தருகிறார், தமது கூலிக்கான சமதையை அவருக்கு உற்பத்தி செய்து தருகிறார். அதாவது உழைப்புச் சக்தியை வாங்குவதற்காகத் திரும் பவும் "முன்னீடு" செய்வதற்கான மூலதனத்தை முதலாளிக்காக மறுவுற்பத்தி செய்து தருகிறார்.

**மூன்றாவது:** ஒரு சரக்கை விற்கும் போது, அதன் விற்பனை விலையில் ஒரு பகுதி முதலாளி முன்னீடு செய்த மாறும்-மூல தனத்தை மாற்றீடு செய்கிறது; இதனால், ஒரு புறம் முதலாளி உழைப்புச் சக்தியைப் புதிதாக வாங்குவதும், மறு புறம் தொழி லாளி அதனைப் புதிதாக விற்பதும் சாத்தியமாகின்றன.

சரக்குகளை வாங்குவதும் விற்பதுமான எல்லா நிகழ்வுகளிலும்—இந்தப் பரிமாற்றங்கள் மட்டுமே பரிசீலிக்கப்பட்டு வரும் வரை—விற்பவர் தன் சரக்குகளுக்கு விலையாகப் பெறும் வரவு என்னா கிறது என்பதும், பயன்படும் பொருட்கள் அவற்றை வாங்கியவரின் கைக்கு வந்த பின் என்னாகின்றன என்பதும் முக்கியமல்ல. எனவே சுற்றோட்ட நிகழ்முறையை மட்டும் பொறுத்த வரை, முதலாளி

விலைக்கு வாங்கும் உழைப்புச் சக்தி அவருக்கு மூலதன-மதிப்பை மறுவுற்பத்தி செய்கிறது என்பதையும், மறு புறம் தன் உழைப்புச் சக்தியின் விலையாகத் தொழிலாளி பெறுகிற பணம் அவரது வருவாயாகிறது என்பதையும் நாம் பொருட்படுத்த வேண்டிய தில்லை. தொழிலாளியின் விற்பனைப் பண்டமான அவரது உழைப்புச் சக்தியினது மதிப்பின் பருமன் என்ன என்பது அது அவருக்கு வருவாயாகிறது என்பதாலோ, இந்த விற்பனைப் பண்டத்தை வாங்குகிறவர் அதனைப் பயன்படுத்துவதால் அவருக்கு மூலதன-மதிப்பு மறுவுற்பத்தி செய்யப்படுகிறது என்பதாலோ பாதிக்கப்படுவதில்லை.

உழைப்புச் சக்தியின் மதிப்பு—அதாவது இந்தச் சரக்கின் தக்க விற்பனை விலை—அதன் மறுவுற்பத்திக்குத் தேவைப்படும் உழைப்பின் அளவால் நிர்ணயிக்கப்படுகிறது. உழைப்பின் இந்த அளவானது இங்கே தொழிலாளியின் அவசிய வாழ்வுச் சாதனங்களின் உற்பத்திக்கு, அதாவது அவரது பராமரிப்புக்குத் தேவைப்படும் உழைப்பின் அளவால் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு, கூலியானது தொழிலாளி வாழ்வதற்கு ஆதாரமான வருவாயாகிறது.

''திறனுடைத் தொழிலாளர்களின் பராமரிப்புக்காக முதலீடு செய்யப்படும் **மூலதனப் பகுதி**...அவருக்கு (முதலாளிக்கு) மூலதனமாகப் பயன்பட்ட பின்...அவர்களுக்கு (தொழிலாளர்களுக்கு) வருவாயாகிறது'' (பக்கம் 223) என்று ஆதாம் ஸ்மித் கூறுவது முற்றிலும் தவறாகும். முதலாளி தாம் வாங்குகிற உழைப்புச் சக்திக்கு விலையாகத் தருகிற **பணமானது** ''அவருக்கு மூலதனமாகப் பயன்படுவது'' எப்படியென்றால், அவர் அதன் மூலமாகத் தமது மூலதனத்தின் பொருட் கூறுகளில் உழைப்புச் சக்தியைச் சேர்த்திடுகிறார்; இவ்விதம் தமது மூலதனத்தைத் திறனுடை-மூலதனமாகச் செயல்பட வைக்கிறார். நாம் கண்டுகொள்ள வேண்டிய வேறுபாடு இதுதான்: உழைப்புச் சக்தி தொழிலாளியின் கையில் ஒரு சரக்கே தவிர, மூலதனமன்று; தொடர்ந்து அதனை அவர் திரும்பத் திரும்ப விற்றுக் கொண்டிருக்க முடியும் வரை அது அவருக்கு வருவாயாகிறது. விற்கப்பட்ட பிறகு உற்பத்தி நிகழ்முறையின் போது முதலாளியிடம் அது மூலதனமாகச் செயல்படுகிறது. இங்கே இருமுறை பணியாற்றுவது உழைப்புச் சக்திதான். மதிப்பு என்னவோ அதற்கு விற்கப்படும் சரக்காக அது தொழிலாளியிடம் பணியாற்றுகிறது; அதை விலைக்கு வாங்கும் முதலாளியிடம் அது மதிப்பையும் பயன்-மதிப்பையும் உற்பத்தி செய்யும் சக்தியாகப் பணியாற்றுகிறது. ஆனால் தொழிலாளி தமது உழைப்புச் சக்தியின் பயனை முதலாளிக்குக் கிடைக்கச் செய்த பிறகே, உழைப்பின் உற்பத்திப் பொருளினது மதிப்பில் அது ஈடேற்றம் பெற்ற பிறகே, முதலாளியிடமிருந்து அவருக்குப் பணம் கிடைக்கிறது. அதற்குரிய விலையைத் தரும் முன்பே முதலாளி அதை வசப்படுத்திக் கொண்டு அனுபவிக்கிறார். எனவே முதலில் மாறும்-மூலதனத்தின் பண வடிவமாகவும்,

பிறகு கூலியாகவும் இப்படி இரு முறை .பணியாற்றுவது பணமல்ல. மாறாக உழைப்புச் சக்திதான் இரு முறை பணியாற்றுகிறது: முதலில் உழைப்புச் சக்தி விற்கப்படுகையில் சரக்காகப் பணியாற்றுகிறது (தரவேண்டிய கூலியின் அளவு குறிக்கப்படுகையில் பணமானது, மதிப்பின் கருத்தியல் அளவையாகவே செயல்படுகிறது, இப்போது அது முதலாளியின் கையில் இருந்தாக வேண்டும் என்ற அவசியம் கூட இல்லை); இரண்டாவதாக உற்பத்தி நிகழ்முறையின் போது மூலதனமாக, அதாவது முதலாளியிடம் பயன்-மதிப்பும் மதிப்பும் படைக்கிற அடிக்கூறாகப் பணியாற்றுகிறது. உழைப்புச் சக்திக்காகத் தொழிலாளிக்குத் தர வேண்டிய சமதையை முதலாளி பண வடிவில் அவருக்குத் தருமுன்பே சரக்கு வடிவில் இச்சமதையை உழைப்புச் சக்தி அவருக்கு உற்பத்தி செய்து தந்து விடுகிறது. தொழிலாளிக்கு ஊதியமளிக்க முதலாளி பயன்படுத்தும் நிதியத்தை இவ்விதம் தொழிலாளியே படைத்தளிக்கிறார். ஆனால் இதோடு முடிவடைந்து விடவில்லை.

தொழிலாளி தாம் பெறுகிற பணத்தைத் தமது உழைப்புச் சக்தியைப் பேணிக் காப்பதற்காகச் செலவிடுகிறார்; அதாவது முதலாளி வர்க்கத்தையும் தொழிலாளி வர்க்கத்தையும் அவற்றின் முழுமையில் கருதுவோமாயின், முதலாளி முதலாளியாக இருந்து வர உதவுகிற அந்த ஒரே சாதனம் தொடர்ந்து அவருக்குக் கிடைக்குமாறு காப்பாற்றுவதற்காகச் செலவிடுகிறார்.

இவ்வாறு உழைப்புச் சக்தியின் வாங்கலும் விற்றலும் தொடர்ந்து நடைபெறுவதானது, ஒரு புறத்தில் உழைப்புச் சக்தியை என்றென்றும் மூலதனத்தின் கூறுகளில் ஒன்றாய் நீடிக்கச் செய்கிறது; இதனால் தான் மூலதனமானது சரக்குகளின், மதிப்புள்ள பயனுடைப் பண்டங்களின் படைப்பாளியாகத் தோற்றமளிக்கிறது; இதனால்தான் உழைப்புச் சக்தியை வாங்குவதற்காகச் செலவிடப்படும் மூலதனப் பகுதி உழைப்புச் சக்தியின் உற்பத்திப் பொருளாலேயே தொடர்ந்து மீட்டமைக்கப்படுவதும், தொழிலாளிக்கு ஊதியமளிக்கிற மூலதன நிதியத்தைத் தொழிலாளியே தொடர்ந்து படைத்தளிப்பதும் சாத்தியமாகின்றன. மறு புறத்தில் உழைப்புச் சக்தி தொடர்ந்து திரும்பத் திரும்ப விற்கப்படுவதானது தொழிலாளியின் பராமரிப்புக்கு வகை செய்யும் ஆதாரமாகவும், இந்த ஆதாரம் வற்றாதிருப்பதற்கான வழியாகவும் அமைகிறது; இவ்விதம் தொழிலாளியின் உழைப்புச் சக்தி அவர் வாழ்வதற்கு வேண்டிய வருவாயை அடைந்திட அவருக்கு வாய்த்த சக்தியாகவும் விளங்குகிறது. வருவாய் என்பது இங்கே ஒரு சரக்கினை (உழைப்புச் சக்தியை) ஓயாமல் திரும்பத் திரும்ப விற்று மதிப்புகளை தன்தாக்கிக் கொள்வதையே குறிக்கிறது. விற்கப்படும் சரக்கு தொடர்ந்து மறுவுற்பத்தி ஆவதற்கு இந்த மதிப்புகள் வகை செய்கிறவை. தொழிலாளி படைக்கும் உற்பத்திப் பொருளின் மதிப்பில் எந்தப் பகுதிக்காக முதலாளி கூலியின் வடிவில் ஒரு சமதையை அவருக்குக் கொடுக்கிறாரோ அந்தப் பகுதி தொழிலாளிக்கான

வருவாய் ஆதாரமாகிறது என்று ஸ்மித் சொல்வது அந்த அளவுக்குச் சரிதான். ஆனால் இது சரக்கினது மதிப்பின் இந்தப் பகுதிக்குள்ள இயல்பையோ பருமனையோ மாற்றி விடுவதில்லை; உற்பத்திச் சாதனங்கள் மூலதன-மதிப்புகளாகச் செயல்படுகின்றன என்ற உண்மை அச்சாதனங்களின் மதிப்பை எப்படி மாற்றுவதில்லையோ, நேர்கோடு ஒன்று ஒரு முக்கோணத்தின் அடிக்கோடாகவோ ஒரு நீள்வட்டத்தின் விட்டமாகவோ பயன்படுகிறது என்ற உண்மை அந்த நேர்கோட்டின் இயல்பையோ நீட்டளவையோ எப்படி மாற்றுவதில்லையோ, அதே போலத்தான் இதுவும். உற்பத்திச் சாதனங்களின் மதிப்பைப் போலத்தான் உழைப்புச் சக்தியின் மதிப்பும் சுயேச்சையாகவே நிர்ணயமாகிறது. ஒரு சரக்கினது மதிப்பின் இந்தக் கூறானது இந்த மதிப்புப் பகுதியாய் அமையும் சுயேச்சையான ஒரு காரணியாக வருவாயால் **ஆவதும்** இல்லை; வருவாயாகப் **பகுபடுவதும்** இல்லை. தொழிலாளி ஓயாமல் மறுவுற்பத்தி செய்திடும் இந்தப் புதிய மதிப்பு அவருக்கு வருவாய் ஆதாரமாகிறது; ஆனால், மறுதலையாக, அவரது வருவாய் அவர் உற்பத்தி செய்யும் புதிய மதிப்பின் அடக்கக் கூறாவது இல்லை. அவர் படைக்கும் புதிய மதிப்பில் அவருக்குக் கிடைக்கும் பங்கின் பருமன் அவரது வருவாயின் மதிப்புப் பருமனை நிர்ணயிக்கிறதே அல்லாமல், பின்னது முன்னதை நிர்ணயிப்பதில்லை. புதிதாய்ப் படைத்த மதிப்பின் இந்தப் பகுதி அவருக்கு வருவாயாகிறது என்ற உண்மை அது என்னாகிறது என்பதைக் காட்டுகிறதே தவிர, அதன் பிரயோகத்தின் தன்மையை காட்டுகிறதே தவிர, இந்த மதிப்புப் பகுதியின் ஆக்கத்துடன் அதற்கு எந்தத் தொடர்பும் இல்லை, மற்றெந்த மதிப்பின் ஆக்கத்துடனும் எப்படி அதற்கு எந்தத் தொடர்பும் இல்லையோ அதே போல. எனது வரவு வாரத்துக்குப் பத்து ஷில்லிங் என்றால், அது பத்து ஷில்லிங் மதிப்பின் **இயல்பிலோ,** அம்மதிப்பின் **பருமனிலோ** எந்த மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை. ஒவ்வொரு சரக்கின் மதிப்பையும் போலவே உழைப்புச் சக்தியின் மதிப்பும் அதன் மறுவுற்பத்திக்கு வேண்டிய உழைப்பின் அளவால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த உழைப்பின் அளவானது தொழிலாளிக்கு வேண்டிய அவசிய வாழ்வுச் சாதனங்களின் மதிப்பால் நிர்ணயிக்கப்படுகிறது; எனவே அது அவரது வாழ்க்கை நிலைமைகளையே மறுவுற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் உழைப்புக்குச் சமம் என்பது இந்தச் சரக்கின் (உழைப்புச் சக்தியின்) விசேஷமாகும். ஆனால் உழைக்கும் கால்நடைகளின் மதிப்பு அவற்றைப் பராமரிப்பதற்கு அவசியமான வாழ்வுச் சாதனங்களின் மதிப்பால், அதாவது இந்த வாழ்வுச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய மனித உழைப்பின் அளவால் நிர்ணயிக்கப்படுகிறது என்பதைப் போன்றதாகுமே தவிர, இதில் அதிசயம் ஏதும் இல்லை.

ஆனால் ஆதாம் ஸ்மித் செய்திடும் தீய குழப்பத்துக்கு இந்த

''வருவாய்'' இனமே காரணமாகிறது. அவரது பார்வையில் பல் வேறு வருவாய் வகைகளும் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப் படும், புதிதாகப் படைக்கப்படும் சரக்கு-மதிப்பின் ''அடக்கக் கூறுகள்'' ஆகின்றன; மறுதலையாக இந்தச் சரக்கு-மதிப்பு முதலா ளிக்கு இரு பகுதிகளாகப் பகுபட்டு, உழைப்பை விலைக்கு வாங்கு வதற்காகப் பண வடிவில் முன்னீடு செய்யப்படுகிற அவரது மாறும்-மூலதனத்துக்கான சமதையும், எச்செலவுமின்றி கிடைத்து அவருக்கு உரியதாகிற உபரி-மதிப்பும் ஆகிய இவ்விரு மதிப்புக் கூறுகளும் வருவாய் ஆதாரங்களாகின்றன. செலவாகிற மாறும்-மூலதனத்துக் கான சமதை உழைப்புச் சக்திக்காக மீண்டும் முன்னீடு செய்யப் பட்டு, கூலியின் உருவில் தொழிலாளிக்கு அந்த அளவுக்கு வருவா யாகிறது. மறு பகுதியான உபரி-மதிப்பு முதலாளிக்கு மூலதன முன்னீடு எதையும் மாற்றீடு செய்யப் பயன்படுவதில்லை என் பதால், அது எவ்விதமான மூலதன-மதிப்பும் ஆக்கப்படாமல் நுகர்வுப் பண்டங்களுக்காக (அவசியப் பண்டங்கள், சொகுசுப் பண்டங்கள் ஆகிய இரண்டிற்காகவும்) அவரால் செலவிடப்பட லாம், அதாவது வருவாயாக நுகரப்படலாம். சரக்கு-மதிப்பே இந்த வருவாயின் முதல் நிலை. இந்த மதிப்பின் அடக்கக் கூறுகள் முதலாளி முன்னீடு செய்த மாறும்-மூலதன மதிப்புக்கு ஈடான சமதையாகவோ அம்மூலதன-மதிப்பை மிஞ்சும் மிகையாகவோ இருக்கும் அளவுக்கே முதலாளியின் கண்ணோட்டத்தில் இக்கூறுகள் வேறுபடுகின்றன. இரு கூறுகளுமே சரக்கு உற்பத்தியின் போது செலவிடப்படும் உழைப்புச் சக்தியால் — உழைப்பாய் இயங்கும் உழைப்புச் சக்தியால் — ஆனவையே. இரண்டுமே உழைப்பின் செல வீட்டால் ஆனவை, வருமானத்தாலோ வருவாயாலோ ஆனவை அல்ல.

சரக்கு-மதிப்பு வருவாய்க்கு ஆதாரமாக இருப்பதற்கு பதில் வருவாய் சரக்கு-மதிப்புக்கு ஆதாரமாவதற்கு வழிசெய்யும் இந்த மாறாட்டத்துக்குப் பிறகு, சரக்குகளின் மதிப்பு என்பது பல்வேறு வருவாய் வகைகளாலும் ''ஆனது'' போல் தோற்றமளிக்கிறது. இந்த வருவாய்கள் ஒன்றையொன்று சார்ந்திராதவை போல் சுயேச்சையாகவே நிர்ணயிக்கப்படுகின்றன; சரக்குகளின் மொத்த மதிப்பு இந்த வருவாய்களின் மதிப்புகளைக் கூட்டி வருகிற தொகை யினால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் சரக்கு-மதிப்பின் கூறு களாய்க் கொள்ளப்படுகிற இந்த வருவாய்களில் ஒவ்வொன்றின் மதிப்பும் நிர்ணயிக்கப்படுவது எப்படி என்னும் பிரச்சினை இப் போது எழுகிறது. கூலியைப் பொறுத்த வரை இது சாத்தியமே. ஏனெனில் கூலியானது உழைப்புச் சக்தியாகிய சரக்கின் மதிப்பைக் குறிக்கிறது. இந்த மதிப்பை (மற்றெல்லாச் சரக்குகளின் மதிப்பை யும் போலவே) இந்தச் சரக்கின் மறுவுற்பத்திக்குத் தேவைப்படும் உழைப்பால் நிர்ணயிக்கலாம். ஆனால் உபரி-மதிப்பை — அல்லது

ஆதாம் ஸ்மித் கூறுவது போல் அதன் இரு வடிவங்களான இலாபத்தையும் வாடகையையும்—எப்படி நிர்ணயிப்பது? இங்கே ஆதாம் ஸ்மித்திடமிருந்து நமக்குக் கிடைப்பதெல்லாம் வெறும் சொற்புரட்டுதான். ஒரு நேரம் அவர் கூலியையும் உபரி-மதிப்பையும் (அல்லது கூலியையும் இலாபத்தையும்) சரக்குகளது மதிப்பின் (அல்லது விலையின்) அடக்கக் கூறுகளாகக் காட்டுகிறார்; இன்னொரு நேரம்—அநேகமாய் அதே மூச்சில்—சரக்குகளது விலை ''பகுபடுவதால் கிடைக்கும்'' பகுதிகளாகக் காட்டுகிறார். ஆனால் இப்படிப் பகுபடுவதன் பொருள் என்னவென்றால், சரக்கு-மதிப்பு முதலில் நிர்ணயமாகிறது என்பதும், நிர்ணயமான இந்த மதிப்பின் வெவ்வேறு பகுதிகள், வெவ்வேறு வருவாய்களின் வடிவில், உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டுள்ள வெவ்வேறு ஆட்களுக்கு உரிய பங்குகள் ஆகின்றன என்பதுமே. இப்படிச் சொல்வதும் இந்த மூன்று ''அடக்கக் கூறுகளால்'' ''ஆனதே'' சரக்கு-மதிப்பு என்று சொல்வதும் எவ்விதத்தும் ஒன்றல்ல. நாம் மூன்று வெவ்வேறு நேர்கோடுகளின் நீளங்களைத் தனித்தனியாகத் தீர்மானித்து, பின்னர் இந்த மூன்று கோடுகளையும் ''அடக்கக் கூறுகளாகக்'' கொண்டு அவற்றின் கூட்டுத் தொகைக்குச் சமமான நான்காவது நேர்கோட்டை அமைப்பது ஒரு செயல். நம்மிடம் குறிப்பிட்ட ஒரு நேர்கோடு இருந்து, எதற்காகவோ அதனை மூன்று வெவ்வேறு பகுதிகளாகப் பிரிப்பது அல்லது ''பகுப்பது'' முற்றிலும் வேறொரு செயல். முதலாவதைப் பொறுத்த வரை, கோட்டின் நீளமானது, அது எவற்றின் கூட்டுத் தொகையோ அந்த மூன்று கோடுகளின் நீளங்களுக்கேற்ப தொடர்ந்து மாறுகிறது; இரண்டாவதைப் பொறுத்த வரை, கோட்டின் மூன்று பகுதிகளும் குறிப்பிட்ட நீளமுள்ள ஒரு கோட்டின் பகுதிகளாக இருப்பதானது அவற்றின் நீளங்களுக்குத் தொடக்க முதலே வரம்பிடுகிறது.

ஸ்மித்தின் விளக்கத்தில் பிழையற்றதாய் இருக்கும் பகுதியை நாம் கிரகித்துக் கொள்ள வேண்டும். அதாவது **வருடாந்தர உழைப்பினால் புதிதாகப் படைக்கப்படும் மதிப்பு**, சமுதாயத்தின் வருடாந்தரச் சரக்கு-உற்பத்தியில் அடங்கியிருப்பதான இந்த மதிப்பு, மாறும்-மூலதனத்தின் மதிப்பையும் (அதாவது மீண்டும் உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குவதற்கான மதிப்புப் பகுதியையும்) உபரி-மதிப்பையும் (சாமானிய மறுவுற்பத்தி நடைபெறுவதாகவும், ஏனைய நிலைமைகள் மாறாதிருப்பதாகவும் கொண்டால், முதலாளி தனது சொந்த நுகர்வுக்கான சாதனங்களாக இந்த உபரி-மதிப்பை மாற்றிக் கொள்ளலாம்) கூட்டி வருவதற்குச் சமம் என்பதைக் கிரகித்துக் கொள்ள வேண்டும். (தனியொரு சரக்கை எடுத்துக் கொண்டாலும் சரி, நாள் உற்பத்தி, வார உற்பத்தி போன்ற காலவாரி உற்பத்தியை எடுத்துக் கொண்டாலும் சரி, இதுதான் உண்மை.) இன்னொன்றையும் நாம் மனத்திற் கொள்ள வேண்டும். மதிப்பைப்

படைப்பதும் உழைப்புச் சக்தியின் செலவீடாக இருப்பதுமான உழைப்பு; பயன்-மதிப்பை படைப்பதான, அதாவது பயனுள்ள, காரிய நோக்கு வாய்ந்த முறையில் செலவிடப்படுவதான உழைப்புச் சக்தி—இவை இரண்டையும் ஆதாம் ஸ்மித் வேறுபடுத்தாமல் ஒன்றாக்கி விடுவதையும் நாம் மனத்திற் கொள்ள வேண்டும். அப் போது நாம் ஆதாம் ஸ்மித் கருத்தோட்டத்தின் சாரப் பொருளைப் புரிந்து கொள்ளலாம். அது வருமாறு: உழைப்பால் விளைவதே ஒவ்வொரு சரக்கின் மதிப்பும்; ஆகவே வருடாந்தர உழைப்பால் உற்பத்தி செய்யப்படுவதன் மதிப்பும், அதாவது சமுதாயத்தின் வருடாந்தரச் சரக்கு-உற்பத்தியின் மதிப்பும் உழைப்பால் விளைவது தான். உழைப்பனைத்தும் (1) அவசிய-உழைப்பு நேரம் (தொழி லாளி அவரது உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குவதற்காக முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்திற்கான சமதையை மட்டும் மறு வுற்பத்தி செய்வதற்கு ஆகும் நேரம் இது), (2) உபரி-உழைப்பு (இதைக் கொண்டு அவர் முதலாளிக்குக் கிடைக்கச் செய்யும் மதிப்புக்குச் சமதையாக முதலாளி ஒன்றும் தருவதில்லை என்பதால் இது உபரி-மதிப்பாகிறது) ஆகிய இரு கூறுகளாக எல்லா உழைப் பும் பகுபடுகிறது. ஆகவே சரக்கு-மதிப்பு அனைத்தும் இந்த இரு அடக்கக் கூறுகளாகவே பகுபட முடியும் என்பது தெளிவாகிறது. இவ்விதம் சரக்கு-மதிப்பு அனைத்தும் முடிவில் தொழிலாளி வர்க்கத்துக்குக் கூலியின் வடிவிலும், முதலாளி வர்க்கத்துக்கு உபரி-மதிப்பின் வடிவிலும் வருவாயாகிறது. மாறா-மூலதன மதிப்பைப் பொறுத்த வரை, அதாவது வருடாந்தர உற்பத்திப் பண்டத்தின் படைப்பில் நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்பைப் பொறுத்த வரை, புதிய உற்பத்திப் பண்டத்தின் மதிப்பில் இது எப்படிச் சேருகிறது என்பதற்கு (முதலாளி அவரது சரக்குகளை விற்கும் போது வாங்குவோரிடமிருந்து இம்மதிப்பை வசூலிக்கிறார் என்று சொல்வதைத் தவிர) விளக்கம் அளிக்க முடியவில்லை. ஆனால் இறுதியில் உற்பத்திச் சாதனங்கள் யாவும் உழைப்பின் உற்பத்திப் பொருட்களே என்பதால், மதிப்பின் இந்தப் பகுதியுங் கூட மாறும்-மூலதனத்துக்கான சமதையாலும் உபரி-மதிப்பாலும் ஆனதாகவே, அதாவது அவசிய-உழைப்பாலும் உபரி-உழைப் பாலும் விளைவதாகவே இருக்க முடியும். இந்த உற்பத்திச் சாதனங் களின் மதிப்புகள் இச்சாதனங்களைப் பிரயோகிப்பவர்களிடம் மூலதன-மதிப்புகளாகச் செயல்படுவது உண்மையானாலும், ஊடுரு விச் சென்று அடியாழத்தைப் பார்க்கையில், ஆதியில் அவை ஏனை யோரிடம்—முன்னொரு காலத்தில்தான் என்றாலும் கூட—அதே இரு மதிப்புக் கூறுகளாக, எனவே இருவேறு வருவாய் ஆதாரங் களாகப் பகுபடுகிறவையே என்பதற்கு இவ்வுண்மை தடையாவதில்லை.

ஆதாம் ஸ்மித் இங்கு கூறுவதில் ஒன்று சரியானதே: சமுதாய மூலதனத்தின், அதாவது தனிப்பட்ட மூலதனங்களது மொத்தத்

தொகையின் அசைவியக்கத்தின் போது தெரிகிற விதம் வேறு; ஒவ்வொரு தனிப்பட்ட மூலதனத்தையும் தனியே நோக்கும் போது, அதாவது ஒவ்வொரு தனிப்பட்ட முதலாளியின் நோக்குநிலையிலிருந்து பார்க்கும் போது தெரிகிற விதம் வேறு. தனிப்பட்ட முதலாளியின் பார்வையில் சரக்குகளின் மதிப்பானது (1) மாறாக் கூறாகவும் (ஆதாம் ஸ்மித் சொல்வது போல் நான்காவது கூறாகவும்), (2) கூலி, உபரி-மதிப்பு இவற்றின், அதாவது கூலி, இலாபம், வாடகை இவற்றின் கூட்டுத் தொகையாகவும் பகுபடுகிறது. ஆனால் சமுதாயத்தின் நோக்குநிலையிலிருந்து பார்க்கும் போது ஆதாம் ஸ்மித் நான்காவது கூறு என்று சொல்லும் மாறா-மூலதன மதிப்பு மறைந்து போகிறது.

## 5. தொகுப்புரை

கூலி, இலாபம், வாடகை ஆகிய மூன்று வருவாய்கள் சரக்குகளது மதிப்பின் மூன்று ''அடக்கக் கூறுகளாக'' அமைகின்றன என்ற அபத்தச் சூத்திரம், ஆதாம் ஸ்மித்தைப் பொறுத்த வரை, சரக்குகளின் மதிப்பானது இந்த மூன்று அடக்கக் கூறுகளாகப் ''பகுபடுகிறது'' என்ற, ஓரளவுக்கு ஏற்புடையதாகத் தோன்றும் கருத்திலிருந்து உதிப்பதாகும். இந்தக் கருத்தும் பிழையானதே— சரக்குகளின் மதிப்பு அவற்றின் உற்பத்தியின் போது நுகரப்படும் உழைப்புச் சக்திக்கான சமதையாகவும் அந்த உழைப்புச் சக்தியால் படைக்கப்படும் உபரி-மதிப்பாகவும் மட்டுமே பகுபடுவதாக வைத்துக் கொண்டாலும் கூட இந்தக் கருத்து பிழையானதே. ஆனால் இந்தப் பிழை இன்னும் ஆழமான, மெய்யானதோர் அடித்தளம் கொண்டதாகும். திறனுடைத் தொழிலாளி உழைப்புச் சக்தியைத் தமக்குச் சொந்தமான சரக்காக முதலாளியிடம் விற்கிறார் என்றாலும், முதலாளியின் கைக்குச் சென்றதும் அது அவருடைய திறனுடை-மூலதனத்தின் ஒரு கூறாகி அவ்வாறே செயல்படுகிறது என்ற உண்மையின் அடிப்படையில் அமைந்ததே முதலாளித்துவப் பொருளுற்பத்தி. சுற்றோட்ட நிகழ்முறையைச் சேர்ந்ததான இந்த நடவடிக்கை — உழைப்புச் சக்தியை விற்பதும் வாங்குவதுமான இது — உற்பத்தி நிகழ்முறையைத் தொடக்கி வைப்பதோடு அதன் பிரத்தியேகமான தன்மையையும் உள்ளிடையாகத் தீர்மானித்து விடுகிறது. பயன்-மதிப்பின் உற்பத்தியும் சரக்கின் உற்பத்தியுங்கூட (சுயேச்சையாகச் செயல்படும் திறனுடைத் தொழிலாளரும் சரக்கினை உற்பத்தி செய்யலாம்) இங்கே முதலாளிக்கு அறுதி உபரி-மதிப்பையும் ஒப்பீட்டு உபரி-மதிப்பையும் உற்பத்தி செய்வதற்கான ஒரு மார்க்கமே அன்றி வேறல்ல. ஆகவே பொருளுற்பத்தி நிகழ்முறையைப் பகுத்தாய்ந்த போது நாம் கண்ணுற்றது போல், அறுதி உபரி-மதிப்பு, ஒப்பீட்டு உபரி-மதிப்பு ஆகியவற்றின் உற்பத்திதான்

1) அன்றாட உழைப்பு நிகழ்முறையின் கால அளவையும், 2) முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் சமுதாய, தொழில் நுட்ப உருவமைப்பு முழுவதையுமே நிர்ணயிக்கிறது. மதிப்பை (மாறா-மூலதனத்தின் மதிப்பை) பழுதின்றிப் பாதுகாப் பதற்கும், முன்னீடு செய்யப்படும் மதிப்பை (செலவாகும் உழைப் புச் சக்திக்கான சமதையை) உள்ளபடியே மறுவுற்பத்தி செய்வதற் கும், முன்னதாகவோ பிற்பாடோ எந்தச் சமதையையும் முன்னீடு செய்யாமலே முதலாளி பெறுகிற மதிப்பாகிய உபரி-மதிப்பை உற்பத்தி செய்வதற்கும் இடையிலான வேறுபாடு முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையில்தான் ஈடேற்றம் பெற்றுக் கண் கூடாகிறது.

உபரி-மதிப்பின் — முதலாளி முன்னீடு செய்யும் மதிப்பின் சமதையைக் காட்டிலும் மிகுதியாக உள்ள மதிப்பின் — தனதாக்க மானது [appropriation] உழைப்புச் சக்தியை வாங்குவதும் விற்பது மான நடவடிக்கையால் தொடக்கப்பட்டாலும், உற்பத்தி நிகழ்முறை யின் போது நிகழும் செயலாகும், இந்நிகழ்முறையின் அத்தியா வசியக் கூறுகளில் ஒன்றாகும்.

உழைப்புச் சக்தியை வாங்குவதும் விற்பதுமாகிய இந்தத் தொடக்கச் செயலுக்கு, சுற்றோட்டச் செயலாகிய இதற்கு அடிப் படையாக அமைவது எது? சமுதாயத்தின் உற்பத்திப் பொருட்களது வினியோகத்துக்கு முன்னதாகவே நடைபெற்று அதற்கு முதற் கோளாய் இருக்கிற வேறொரு வினியோகமே, உற்பத்தி-அடிக் கூறுகளது வினியோகமே அடிப்படையாக அமைகிறது — அதாவது உழைப்புச் சக்தி தொழிலாளர்களது சரக்காகவும் உற்பத்திச் சாத னங்கள் தொழிலாளரல்லாதோரின் சொத்தாகவும் தனித்தனியே பிரிவதே அடிப்படையாக அமைகிறது.

ஆயினும் உபரி-மதிப்பு இப்படி தனதாக்கப்படுவதாலோ, மதிப் பின் உற்பத்தியானது முன்னீடு செய்யப்படும் மதிப்பின் மறு வுற்பத்தியாகவும் சமதை எதற்குமான மாற்றீடாயிராத புதிய மதிப் பின் (உபரி-மதிப்பின்) உற்பத்தியாகவும் இப்படிப் பிரிக்கப் படுவதாலோ மதிப்பின் சாரப்பொருளோ மதிப்பின் உற்பத்தியினுடைய இயல்போ எவ்விதத்திலும் மாறி விடுவதில்லை. மதிப்பின் சாரப் பொருளாய் இருப்பது எப்போதுமே மதிப்பின் உற்பத்திக்காகச் செலவாகிற உழைப்புச் சக்திதானே தவிர வேறு எதுவுமல்ல, அதாவது அந்த உழைப்பின் பயனுள்ள பிரத்தியேகத் தன்மையைச் சாராத உழைப்பே தவிர வேறு எதுவுமல்ல. மதிப்பின் உற்பத்தி என்பதே உழைப்புச் சக்தி இப்படிச் செலவாகிற நிகழ் முறையே தவிர வேறல்ல. எடுத்துக்காட்டாக ஒரு பண்ணை யடிமை [serf] ஆறு நாள் தனது உழைப்புச் சக்தியைச் செலவிடு கிறார்; அதாவது ஆறு நாள் உழைக்கிறார் — தனக்காகத் தனது சொந்த வயலில் மூன்று நாளும் பிரபுவுக்காகப் பிரபுவின் வயலில்

மூன்று நாளும் வேலை செய்கிறார் என்போம். இந்த நிலைமை யானது உழைப்புச் சக்தியை அவர் செலவிடுகிறார் என்கிற மேற் சொன்ன உண்மையை மாற்றி விடவில்லை. அவர் தனக்காகச் செய்யும் விருப்பமான உழைப்பு, தன் பிரபுவுக்காகச் செய்யும் கட்டாய உழைப்பு இவை இரண்டுமே உழைப்புதான். மதிப்புகளின் கோணத்திலிருந்து பார்த்தாலும் சரி, உழைப்பால் படைக்கப்பெறும் பண்டங்களின் கோணத்திலிருந்து பார்த்தாலும் சரி, அவரது ஆறு நாள் உழைப்பில் எந்த வேறுபாடும் இல்லை. அவரது ஆறு நாள் உழைப்பு நேரத்தின் இரு பாதிகளிலும் உழைப்புச் சக்தியைச் செல விடுமாறு அவரை உந்தி விடுகிற நிலைமைகளில்தான் வேறுபாடு உள்ளது. கூலித் தொழிலாளியின் அவசிய-உழைப்பையும் உபரி-உழைப்பையும் பொறுத்த வரையிலுங்கூட இதுவேதான் உண்மை.

உற்பத்தி நிகழ்முறை சரக்கில் முடிவடைகிறது. சரக்கை உரு வாக்குவதற்காக உழைப்புச் சக்தி செலவாகியது என்னும் உண்மை, பொருள் வழியில் சரக்குக்கு இருக்கும் படியான ஒரு குணமாக, சரக்கானது மதிப்புடையதாக இருக்கும் படியான ஒரு குணமாக இப்போது தோன்றுகிறது. எவ்வளவு உழைப்பு செலவாகியது என்பதைக் கொண்டு இந்த மதிப்பின் பருமன் அளக்கப்படுகிறது. சரக்கின் மதிப்பு அதன்றி வேறு எதுவாகவும் பகுபடுவதல்ல, வேறு எதனாலும் ஆனதல்ல. குறிப்பிட்ட நீளமுள்ள ஒரு நேர்கோட்டை வரைகிறேன் என்னும் போது, எடுத்ததுமே ஒரு நேர்கோட்டை ''உற்பத்தி'' செய்கிறேன் என்பதே உண்மை (முன்கூட்டியே நான் அறிந்துள்ளதே போல், சின்னமாக அமையும் முறையிலேதான் ''உற்பத்தி'' செய்கிறேன் என்ற போதிலும் இதுதான் உண்மை). என்னைச் சார்ந்திராத சுயேச்சையான நியதிகளை (விதிகளை) கொண்டுள்ள வரைபடக் கலையின் அடியொற்றி இதனைச் செய் கிறேன். இந்த நேர்கோட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்தால் (குறிப்பிட்ட ஒரு பிரச்சினை தொடர்பாக இப்படிப் பிரிக்க நேரிட லாம்) ஒவ்வொரு பகுதியும் ஒரு நேர்கோடாகத்தான் இருக்கும். இம்மூன்றும் எதன் பகுதிகளாகுமோ அந்த முழுக் கோடும் இப் படிப் பிரிக்கப்பட்டதால் அது நேர்கோடல்லாத எதுவாகவும்— உதாரணமாய் எவ்வகையான வளைகோடாகவும்— பகுபடவில்லை. குறிப்பிட்ட நீளமுள்ள நேர்கோட்டை இப்படிப் பிரிக்கும் போது, பிரிக்கப்படும் பகுதிகளின் கூட்டுத் தொகை பிரிக்கப்படாத நேர் கோட்டை விட அதிக நீளமுடையதாக முடியாது. ஆகவே பிரிக்கப் படாத கோட்டின் நீளம், அதன் பிரிக்கப்பட்ட பகுதிகளுக்கு மனம் போன போக்கில் நிர்ணயிக்கப்படும் நீளங்களால் நிர்ணயிக்கப்பட வில்லை. நேர்மாறாக, முழுக் கோட்டின் நீளம்தான் இந்தப் பகுதி களின் ஒப்பீட்டு நீளங்களுக்கு ஆரம்பத்திலிருந்தே வரம்பிடுகிறது.

இந்த அமிசத்தில், முதலாளி உற்பத்தி செய்யும் சரக்கு, சுயேச்சையான தொழிலாளியோ உழைக்கும் மக்களின் கூட்டுச்

சமுதாயங்களோ அடிமைகளோ உற்பத்தி செய்யும் சரக்கிலிருந்து எவ்விதத்தும் வேறுபட்டதன்று. ஆனால் இங்கு நாம் பரிசீலித்து வரும் விவகாரத்தில், உழைப்பின் முழு உற்பத்திப் பொருளும், அவ்வாறே அதன் முழு மதிப்பும் முதலாளிக்குச் சொந்தமாகும். ஏனைய ஒவ்வொரு உற்பத்தியாளரையும் போலவே, அவரும் தமது சரக்கை விற்றுப் பணமாக்க வேண்டும், அதன் பிறகுதான் அதைக் கொண்டு அவர் மேலும் தொடர்ந்து காரியம் புரிய முடியும். அதாவது அவர் தமது சரக்கைச் சர்வப் பொதுச் சமதையின் வடிவத்துக்கு மாற்றிக் கொண்டாக வேண்டும்.

சரக்காக உற்பத்தியாவது பணமாவதற்கு முன்னால் எந்நிலையில் உள்ளதென்று பார்ப்போம்: அது முழுக்க முழுக்க முதலாளிக்கே சொந்தமானது. மறு புறம், உழைப்பின் பயனுள்ள உற்பத்தி என்ற முறையில், பயன்-மதிப்பு என்ற முறையில், முற்றிலும் அது கடந்த காலத்தில் நடைபெற்ற உழைப்பு நிகழ்முறை ஒன்றின் உற்பத்திப் பொருளாகும். ஆனால் அதன் மதிப்பு அப்படியல்ல. இந்த மதிப்பின் ஒரு பகுதி சரக்கு உற்பத்தியின் போது செலவிடப்பட்டு புதிய வடிவில் திரும்பி வந்து தோற்றமளிக்கும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பாகும். இந்த மதிப்புப் பகுதி சரக்கின் உற்பத்தி நிகழ்முறையின் போது உற்பத்தி செய்யப்பட்டதல்ல; ஏனெனில் உற்பத்தி நிகழ்முறைக்கு முன்னரே, அதைச் சாராமல் சுயேச்சையாகவே உற்பத்திச் சாதனங்கள் இந்த மதிப்பைப் பெற்றிருந்தன. இம்மதிப்பின் ஊர்திகளாகவே அவை உற்பத்தி நிகழ்முறையினுள் புகுந்தன. அவை வெளிக்காட்டும் வடிவம் மட்டுமே இந்நிகழ்முறையின் போது மாற்றத்துக்கும் மாற்றீட்டுக்கும் உள்ளாயிற்று. சரக்கு-மதிப்பின் இந்தப் பகுதி முதலாளிக்கு, முன்பு அவர் முன்னீடு செய்ததும் சரக்கின் உற்பத்தியின் போது நுகரப்பட்டதுமான மாறா-மூலதன மதிப்பின் சமதையாகவே அமைகிறது. இந்த மதிப்புப் பகுதி முன்பு உற்பத்திச் சாதனங்களின் வடிவில் இருந்தது; இப்போது அது புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட சரக்கின் மதிப்பினுடைய அடக்கக் கூறாக இருக்கிறது. இந்தச் சரக்கு பணமாக உருமாறியவுடனே, இப்போது பண வடிவில் இருக்கும் இந்த மதிப்பை மீண்டும் உற்பத்திச் சாதனங்களாய் மாற்றியாக வேண்டும்; அதாவது உற்பத்தி நிகழ்முறையாலும் அந்நிகழ்முறையின் போது அது புரியும் செயலாலும் நிர்ணயிக்கப்படுவதான அதன் ஆரம்ப வடிவத்துக்கு மாற்றியாக வேண்டும். சரக்கின் மதிப்பினுடைய தன்மையானது இம்மதிப்பு மூலதனமாகச் செயல்படுகிறது என்பதால் எவ்விதத்திலும் மாறி விடுவதில்லை.

சரக்கு-மதிப்பின் இரண்டாவது பகுதி கூலித் தொழிலாளி முதலாளிக்கு விற்றிடும் உழைப்புச் சக்தியின் மதிப்பாகும். உற்பத்திச் சாதனங்களின் மதிப்பைப் போலவே உழைப்புச் சக்தியின் மதிப்பும் அந்த உழைப்புச் சக்தியைக் கொண்டு நடைபெற

வேண்டிய உற்பத்தி நிகழ்முறையைச் சாராமல் சுயேச்சையாகவே நிர்ணயிக்கப்படுகிறது. உற்பத்தி நிகழ்முறையினுள் உழைப்புச் சக்தி புகுமுன்பே சுற்றோட்டத் துறைக்குரிய ஒரு செயலின் போது (உழைப்புச் சக்தியை வாங்குவதும் விற்பதுமான செயலின் போது) அது நிர்ணயிக்கப்படுகிறது. கூலித் தொழிலாளியானவர் அவரது உழைப்புச் சக்தியின் உபயோகத்துக்காக முதலாளி அவருக்குத் தர வேண்டிய மதிப்புக்குச் சமமான சரக்கு-மதிப்பை அவரது வேலையின் மூலம்—அதாவது உழைப்புச் சக்தியைச் செலவிடுவதன் மூலம்—உற்பத்தி செய்கிறார். சரக்கின் வடிவில் அவர் இந்த மதிப்பை முதலாளிக்குத் தருகிறார்; இதற்கு உரியதை முதலாளியிடமிருந்து பணமாகப் பெற்றுக் கொள்கிறார். முதலாளிக்கு சரக்கு-மதிப்பின் இந்தப் பகுதி தாம் கூலிக்காக முன்னீடு செய்ய வேண்டிய மாறும்-மூலதனத்துக்கான சமதையாகவே இருக்கிறது என்பதால், இம்மதிப்புப் பகுதி உற்பத்தி நிகழ்முறையின் போது புதிதாகப் படைக்கப்பட்ட சரக்கு-மதிப்பாகும், உபரி-மதிப்பு எப்படியோ அதே போல இதுவும் உழைப்புச் சக்தியின் கடந்த காலச் செலவீட்டாலேயே ஆன சரக்கு-மதிப்பாகும் என்ற உண்மை எவ்விதத்திலும் மாறி விடவில்லை. உழைப்புச் சக்தியின் மதிப்பை முதலாளி கூலியாகத் தொழிலாளிக்குத் தருகிறாரே, அந்த மதிப்பு தொழிலாளிக்கு வருவாயின் வடிவம் பெறுகிறது என்பதாலும், இதனால் உழைப்புச் சக்தி தொடர்ச்சியாக மறுவுற்பத்தி செய்யப்படுவதோடு கூலித் தொழிலாளர் வர்க்கமும், ஆகவே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முழுவதன் அமைப்புக்கான அடிப்படையும் மறுவுற்பத்தி செய்யப்படுகிறது என்பதாலும் மேற்கூறிய உண்மை பாதிக்கப்படவில்லை.

ஆனால் இந்த இரு மதிப்புப் பகுதிகள் மட்டும் சேர்ந்து சரக்கு-மதிப்பின் முழு அளவாகி விடவில்லை. இவை இரண்டுக்கும் மேல் மூன்றாவது பகுதியான உபரி-மதிப்பும் இருக்கிறது. கூலியாக முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தை மாற்றீடு செய்யும் மதிப்புப் பகுதியைப் போலவே, இந்த உபரி-மதிப்பும் உற்பத்தி நிகழ்முறையின் போது தொழிலாளி புதிதாகப் படைக்கும் மதிப்பாகும், அதாவது இறுகிய [congealed] உழைப்பாகும். ஆனால் இது உற்பத்திப் பண்டம் முழுவதற்கும் உடைமையாளராகிய முதலாளிக்கு எச்செலவும் இல்லாமலே வரப்பெறுவதாகும். உபரி-மதிப்பு முழுவதையுமே முதலாளி வருவாயாகப் பெற்று நுகர முடிகிறது என்றால் அதற்கு இந்நிலைமையே காரணம். சில சமயம் முதலாளி இந்த உபரி-மதிப்பில் சில பகுதிகளை தமது பங்காளிகளான வேறு சிலருக்குத் தர வேண்டியதாகிறது—எடுத்துக்காட்டாக நிலவுடைமையாளருக்கு வாடகையாகத் தர வேண்டியதாகிறது. இப்பகுதிகள் இந்த மூன்றாமவர்களுக்கு வருவாய் ஆகின்றன. சரக்கு உற்பத்தியில் ஈடுபடுமாறு நமது முதலாளியைத் தூண்டியதே

வருவாயாகக் கிடைக்கும் இந்த உபரி-மதிப்புதான். ஆனால் உபரி-மதிப்பைத் தட்டிக் கொண்டு விட வேண்டுமென்ற அன்பு கெழுமிய அவரது ஆரம்ப நோக்கமும் சரி, பிற்பாடு வருவாயாக அவரோ ஏனையவர்களோ அதனைச் செலவிடுவதும் சரி, உபரி-மதிப்பை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. உபரி-மதிப்பானது இறுகி விட்ட ஊதியமிலா உழைப்பே ஆகும் என்ற உண்மையும் சரி, உபரி-மதிப்பின் பருமனும் சரி, இவற்றால் எல்லாம் மாறி விடவில்லை. உபரி-மதிப்பின் பருமனை நிர்ணயிப்பவை முற்றிலும் வேறானவையே அன்றி இவையல்ல.

ஆயினும் சரக்குகளின் மதிப்பு குறித்து ஆராய்ந்த ஆதாம் ஸ்மித் அதே நேரத்தில் இந்த மதிப்பின் வெவ்வேறு பகுதிகளும் மொத்த மறுவுற்பத்தி நிகழ்முறையில் ஆற்றும் பங்கினையும் ஆராய விரும்பியிருக்கலாம். இப்படி ஆராயும் போது இந்த மதிப்பின் சில பகுதிகள் வருவாயாகச் செயல்படுகையில், வேறு சில பகுதிகள் அதே போல் தொடர்ச்சியாக மூலதனமாகச் செயல்படுவதை அவர் கவனித்திருப்பார். அவருடைய தர்க்க முறையின் படி இப்பகுதிகளை சரக்கு-மதிப்பின் அடக்கக் கூறுகளாகவே, அதாவது சரக்கு-மதிப்பானது பகுபடுகையில் கிடைக்கும் கூறுகளாகவே கருத வேண்டியிருக்கும்.

ஆதாம் ஸ்மித் பொதுவாகச் சரக்கு உற்பத்தி என்பதெல்லாம் முதலாளித்துவச் சரக்கு உற்பத்தியெனவே கொண்டு விடுகிறார். உற்பத்திச் சாதனங்கள் எல்லாம் தொடக்கம் முதலாகவே அவருக்கு "மூலதனம்தான்"; உழைப்பு என்றால் கூலியுழைப்புதான். ஆகவேதான் "பயனுள்ள, உற்பத்தித் திறனுள்ள தொழிலாளர்களின் தொகை... அவர்களை வேலை வாங்குவதற்காகச் செயல்படுகிற மூலதனத்தின் அளவுக்கேற்ற அதே வீதத்தில்தான் எங்குமே உள்ளது" என்கிறார். (முன்னுரை, பக்கம் 12.) சுருங்கக் கூறின், ஆரம்பத்திலிருந்தே உழைப்பு நிகழ்முறையின் பல்வேறு காரணிகளும்—பொருட் காரணிகள், மனிதக் காரணிகள் இரண்டுமே—முதலாளித்துவப் பொருளுற்பத்திக் காலத்துக்கே உரித்தான முக இலட்சணங்களோடு காட்சியளிக்கின்றன. ஆகவே, சரக்குகளின் மதிப்பு பற்றிய பகுப்பாய்வானது, ஒரு புறம் எந்த அளவுக்கு இந்த மதிப்பு முதலீடாகியுள்ள மூலதனத்தின் சமதையாக மட்டும் அமைகிறது, மறு புறம் எந்த அளவுக்கு "கட்டற்ற" மதிப்பாக, முன்னீடு செய்யப்பட்ட மூலதன-மதிப்பு எதற்குமான மாற்றீடாய் இராத மதிப்பாக, அதாவது உபரி-மதிப்பாக அமைகிறது என்ற பரிசீலனையாகி விடுகிறது. இந்தக் கண்ணோட்டத்தில் சரக்கு-மதிப்பின் பகுதிகளை ஒப்புநோக்குகையில், சந்தடியின்றி இவ்விதம் அவை அம்மதிப்பின் சுயேச்சையான "அடக்கக் கூறுகளாகவும்," முடிவில் "அனைத்து மதிப்பின் மூலாதாரங்களாகவும்" மாற்றமடைகின்றன. மேலுமொரு முடிவு என்னவென்றால்: சரக்கு-மதிப்பு பல்வேறு

வகைப்பட்ட வருவாய்களால் ஆனது, அல்லது அவ்வருவாய் களாகப் ''பகுபடுகிறது.'' அப்படியானால் வருவாய்கள் சரக்கு-மதிப்புகளால் ஆனவை அல்ல; சரக்கு-மதிப்புதான் ''வருவாய் களால்'' ஆனது என்றாகிறது. ஆயினும், சரக்கு-மதிப்போ பணமோ மூலதன-மதிப்பாகச் செயல்படுவதால், சரக்கு-மதிப்பின் இயல்போ பணத்தின் இயல்போ எப்படி மாறி விடவில்லையோ, அதே போல் சரக்கு-மதிப்பானது பின்னொரு சமயம் குறிப்பிட்ட ஒருவருக்கு வருவாயாகப் பயன்படுவதால் அதன் இயல்பு மாறி விடுவதில்லை. ஆதாம் ஸ்மித் பரிசீலிக்க வேண்டியிருக்கும் சரக்கு ஆரம்பத்தி லிருந்தே சரக்கு-மூலதனமாகும் (சரக்கின் உற்பத்திக்காக நுகரப் பட்ட மூலதன-மதிப்போடு கூட உபரி-மதிப்பும் இதில் அடங்கும்). ஆகவே இது முதலாளித்துவ வழியில் உற்பத்தி செய்யப்பட்ட சரக்காகும்; முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் விளைவாகும். ஆகவே முதலில் இந்த நிகழ்முறையைப் பகுத்தாய்ந் திருக்க வேண்டும்; மதிப்பின் தற்பெருக்க நிகழ்முறையும் மதிப்பின் உருவாக்க நிகழ்முறையும் அதில் அடங்குவதால் அவற்றையும் பகுத் தாய்ந்திருக்க வேண்டும். பொருளுற்பத்தி நிகழ்முறையானது சரக் குச் சுற்றோட்டத்தை முதனிலையாகக் கொண்டிருப்பதால், சரக் கைத் தனித்தெடுத்து பூர்வாங்கமாய்ப் பகுத்தாயாமல் முதலாளித் துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையை விவரிக்க முடியாது. ஆனால் ஆதாம் ஸ்மித் சில நேரம் அவரது அசாதாரணமான ''ஆழ்நிலை'' ஆய்வினால் சரியானதைக் கண்டறிந்து விடும் போது கூட, மதிப் பின் உருவாக்கத்தை எப்போதுமே சரக்குகளைப் பற்றிய, அதாவது சரக்கு-மூலதனத்தைப் பற்றிய பகுப்பாய்வின் போது நடைபெறும் இடைநிகழ்வாகக் கொண்டுதான் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறார்.

## III. பிற்காலத்திய பொருளாதார அறிஞர்கள்[47]

ஆதாம் ஸ்மித்தின் தத்துவத்தை ரிக்கார்டோ அநேகமாய் சொல் லுக்குச் சொல் அப்படியே திருப்பிச் சொல்கிறார்: ''நாட்டின் உற்பத்திப் பொருட்கள் எல்லாம் நுகரப்படுகின்றன என்றே கொள்ள வேண்டும். ஆனால் அவை இன்னொரு மதிப்பை மறு வுற்பத்தி செய்வோரால் நுகரப்படுகின்றனவா, அல்லது எதையும் மறுவுற்பத்தி செய்யாதோரால் நுகரப்படுகின்றனவா என்பதில் மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு உள்ளது. வருவாயானது சேமிக்கப்பட்டு மூலதனத்தோடு சேர்க்கப்படுகிறது என்று நாம் கூறும் போது, இப்படி மூலதனத்தோடு சேர்க்கப்படுவதாகச்

[47] எங்கெல்ஸ் குறிப்பு: இதிலிருந்து இந்த அத்தியாயத்தின் முடிவு வரை, கையெழுத்துப் பிரதி II என்பதிலிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்டது.

சொல்லப்படும் வருவாய்ப் பகுதி திறனுடைத் தொழிலாளர்களால் நுகரப்படுகிறதே தவிர திறனிலாத் தொழிலாளர்களால் அல்ல என்பதையே குறிப்பிடுகிறோம்.'' (கோட்பாடுகள், பக்கம் 163.)

சரக்குகளின் விலையானது கூலியாகவும் உபரி-மதிப்பாகவும் (அல்லது மாறும்-மூலதனமாகவும் உபரி-மதிப்பாகவும்) பகுபடுகிறது என்கிற ஆதாம் ஸ்மித் தத்துவத்தை முழு அளவுக்கு ரிக்கார்டோ ஒத்துக்கொண்டார். ஸ்மித்துடன் பின்வருவன குறித்தே அவருக்கு சர்ச்சை ஏற்பட்டது: 1) உபரி-மதிப்பின் அடக்கக் கூறுகள்: ரிக்கார்டோ நில-வாடகையை உபரி-மதிப்பின் ஓர் அடிப்படைக் கூறு அல்ல என்று சொல்லி நீக்கி விடுகிறார்; 2) ரிக்கார்டோ சரக்கின் விலையை ஏற்கெனவே கூறிய அடக்கக் கூறுகளாகப் பிரிக்கிறார். ஆகவே மதிப்பின் பருமன்தான் முதன்மையானது. அடக்கக் கூறுகளின் கூட்டுத் தொகை குறிப்பிட்ட ஒரு பருமனுக்குச் சமமாகக் கொள்ளப்படுகிறது; குறிப்பிட்ட பருமனே தொடக்க நிலையா கிறது. ஆனால் ஆதாம் ஸ்மித், தமது மேலான சிந்தனைக்கு முரணாய் அடிக்கடி நேர்மாறான வழியிற் செல்கிறார்; அடக்கக் கூறுகளி லிருந்து தொடங்கி அவற்றின் கூட்டுத் தொகையின் மூலம் சரக்கு-மதிப்பின் பருமனை வந்தடைகிறார்.

ரிக்கார்டோவை எதிர்த்து ராம்சே கூறுகிறார்: ''...எப்போதுமே அவர் உற்பத்திப் பொருள் முழுதும் கூலிக்கும் இலாபத்துக்கு மிடையே பங்கிடப்படும் ஒன்றெனக் கருதுவதாகத் தெரிகிறது. நிலை-மூலதனத்தை மாற்றீடு செய்வதற்கு ஒரு பகுதி அவசியமாய் இருப்பதை அவர் மறந்து விடுகிறார்.'' (செல்வ வினியோகம் பற்றிய கட்டுரை, எடின்பரோ, 1836, பக்கம் 174.) மாறா-மூலதனம் என்று நாம் சொல்வதைத்தான் ராம்சே நிலை-மூலதனம் என்கிறார்: ''வருங்காலச் சரக்கை உருவாக்கிட உதவிய போதிலும், தொழிலாளர்களது பராமரிப்புக்கு உதவாத ஒரு வடிவத்தில் நிலை-மூலதனம் இருக்கிறது.'' (மேலது, பக்கம் 39.)

சரக்குகளின் மதிப்பையும், ஆகவே வருடாந்தர சமுதாயப் பொருளுற்பத்தியின் மதிப்பையும் கூட, ஆதாம் ஸ்மித் கூலியாகவும் உபரி-மதிப்பாகவும், அதாவது வருவாயாக மட்டும் பகுத்தாரே தவிர, இப்படிப் பகுப்பதால் வரப்பெறும் அவசிய முடிவினை எதிர்க்கவே செய்தார்—அதாவது இப்படிப் பகுக்கப்படுமாயின், வருடாந்தர உற்பத்தி முழுதுமே நுகரப்படும் படி நேரும் என்கிற முடிவினை அவர் எதிர்க்கவே செய்தார். சுயச் சிறப்பு வாய்ந்த சிந்தனையாளர்கள் ஒருபோதும் அசட்டு முடிவுகளை வந்தடைவ தில்லை. அவர்கள் இந்த வேலையை ஸேக்களிடமும் மக்குல்லோ களிடமும் விட்டு விடுகிறார்கள்.

ஸே மிகச் சுலபமாய் விவகாரத்தைத் தீர்த்து விடுகிறார். ஒருவருக்கு மூலதன முன்னீடாய் இருக்கும் ஒன்று வேறொருவருக்கு வருவாயா கவும் நிகர உற்பத்தியாகவும் இருக்கலாம், அல்லது இருந்திருக்கலாம்.

மொத்த உற்பத்திக்கும் நிகர உற்பத்திக்கும் இடையிலான வேறுபாடு முற்றிலும் அகவயமானதே அன்றி வேறல்ல. "உற்பத்தியாகிற எல்லாப் பண்டங்களின் மொத்த மதிப்பானது இவ்வாறு வருவா யாகவே சமுதாயத்தில் வினியோகமாகிறது." (ஸே, *Traite d'Economie Politique*, *1817*, *II.*, *பக்கம் 64*.) "உற்பத்திப் பண்டம் ஒவ் வொன்றுக்குமுள்ள மொத்த மதிப்பானது அப்பண்டத்தின் உற்பத் திக்குப் பங்காற்றியவர்களான நிலவுடைமையாளர்கள், முதலா ளிகள், தொழில்துறை வினைகளில் ஈடுபடுவோர் ஆகியோரது இலாபங்களால் ஆனதே. [தொழிலாளர்களுக்கான கூலி இங்கே profits des industrieux என்பதாகக் குறிக்கப் பெறுகிறது!] இவ்விதம் சமுதாயத்தின் வருவாயானது உற்பத்தி செய்யப்பட்ட மொத்த மதிப்புக்குச் சமமாகிறதே தவிர, பொருளாதார அறிஞர்களில் ஒரு பிரிவினர்" [பிசியோக்கிராட்டுகள்] "கூறி வந்தார்களே, அது போல மண்ணிலிருந்து கிடைக்கும் நிகர விளைபொருளுக்குச் சமமாக வில்லை." (*பக்கம் 63*.)

ஸேயின் இந்தக் கண்டுபிடிப்பை வேறு சிலர் செய்தது போல் புரூதோனும் தமதாக்கிக் கொண்டு அப்படியே எடுத்தாளுகிறார்.

ஆதாம் ஸ்மித்தின் கோட்பாட்டை ஸ்டோர்ஹும் கொள்கை யளவில் ஏற்றுக் கொள்கிறார். ஆனால் அதனை நடைமுறையில் ஸே கையாளும் போது தவறாகி விடக் காண்கிறார். "நாட்டின் வருவாய் நாட்டின் மொத்த உற்பத்திக்குச் சமமென்று ஒப்புக் கொண்டால், அதாவது மூலதனத்துக்காக" [மாறா-மூலதனத்துக் காக என்றிருக்க வேண்டும்] "ஏதும் கழிக்கப்பட வேண்டியதில்லை என்று ஒப்புக்கொண்டால், இந்த நாடு தனது வருங்கால வருவாய்க் குக் கேடு ஏதுமின்றி தனது வருடாந்தர உற்பத்தியின் முழு மதிப் பையும் திறனிலா முறையில் நுகரலாம் என்றும் ஒப்புக்கொண்டாக வேண்டும்....நாட்டின் மூலதனத்தை" [மாறா-மூலதனத்தை] "குறிக் கிற உற்பத்திப் பண்டங்கள் நுகர்வுக்குரியவை அல்ல." ("ஸ்டோர்ஹ், *Considerations sur la nature du revenu national*, *பாரிஸ்*, *1824*, *பக்கம் 147, 150*.)

மூலதனத்தின் மாறாப் பகுதி என்ற ஒன்று இருப்பதானது, விலை குறித்துத் தாம் ஏற்றுக் கொள்கிற ஆதாம் ஸ்மித் பகுப்பாய் வுக்கு எப்படி இசைவானதாக முடியும் என்று நமக்கு விளக்கமளிக்க ஸ்டோர்ஹ் மறந்து விடுகிறார். ஸ்மித்தின் விலைப் பகுப்பாய்வின் படி சரக்கு-மதிப்பில் அடங்குகிறவை கூலியும் உபரி-மதிப்பும்தானே தவிர, மாறா-மூலதனப் பகுதியேதும் இல்லை. இந்த விலைப் பகுப் பாய்வு அபத்தமான முடிவுகளுக்கு இட்டுச் செல்கிறது என்பது ஸேயின் மூலம்தான் அவருக்குத் தெரிய வருகிறது. இது பற்றி அவர் கடைசியாகச் சொல்வது இதுதான்: "அவசிய விலையை அதன் எளிய மூலக்கூறுகளாகப் பகுப்பது முடியாத காரியம்." Cours d'Economie Politique, *பீட்டர்ஸ்பர்க்*, *1815*, *II.*, *பக்கம் 141*.)

மூலதனத்துக்கும் வருவாய்க்குமுள்ள உறவில் சிஸ்மொந்தி முக்கிய கவனம் செலுத்துகிறார். இந்த உறவு பற்றிய அதிவினோத நிர்ணயிப்பை அவர் தமது Nouveaux principes நூலின் தனிச் சிறப்பாக்கிக் கொள்கிறார். ஆயினும் சிஸ்மொந்தி இந்தப் பிரச் சினையைத் தெளிவுபடுத்த விஞ்ஞான வழியில் ஒரு சொல்லும் சொல்லவில்லை; இம்மியளவும் பங்கு செலுத்தவில்லை.

பார்ட்டன், ராம்சே, ஷெர்பூலியே ஆகியோர் ஆதாம் ஸ்மித்தின் நிர்ணயிப்புக்கு அப்பால் செல்ல முயல்கிறார்கள், ஆனால் பயன் ஏதும் இல்லை. ஏனென்றால் அவர்கள் மாறா-மூலதன மதிப்புக்கும் மாறும்-மூலதன மதிப்புக்கும் இடையிலான வேறுபாட்டை நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாட்டி லிருந்து தெளிவாகப் பிரித்துக் காட்டத் தவறி விடுகிறார்கள். இதனால் ஆரம்பத்திலிருந்தே பிரச்சினையை ஒருதலைச்சார்பான தாக்கி விடுகிறார்கள்.

ஆதாம் ஸ்மித் தமக்குப் பின்னால் வருவோருக்கு விட்டுச் சென்ற கோட்பாட்டை இதே போல் ஜான் ஸ்டுவர்ட் மில்லும் தமக்கே உரிய பகட்டாரவாரத்தோடு திருப்பிச் சொல்கிறார். ஸ்மித் தின் சிந்தனைக் குழப்பம் இதனால் இன்றும் தொடர்ந்து நிலவு கிறது. அரசியல் பொருளாதாரத்தின் வைதிக விசுவாசக் கோட் பாடுகளில் ஒன்றாய் அவரது சூத்திரம் இருந்து வருகிறது.

## அத்தியாயம் XX

## சாமானிய மறுவுற்பத்தி

### I. பிரச்சினை பற்றிய விளக்கம்

சமுதாய மூலதனத்தின்[48] வருடாந்தரப் பணியையும் — தனிப்பட்ட மூலதனங்கள் இந்த மொத்த மூலதனத்தின் பின்னப் பகுதிகளே ஆகும், இந்தப் பின்னப் பகுதிகளின் இயக்கமானது அதனதன் தனிப்பட்ட இயக்கமாகவும், அதே போது மொத்த மூலதனத்தின் இயக்கமாக ஒன்றிணைக்கும் கரணையாகவும் அமைகிறது — வருடாந்தரப் பணியின் விளைவுகளையும் பரிசீலிப்போமானால், அதாவது ஓராண்டு காலத்தில் சமுதாயம் தயாரித்து அளிக்கும் சரக்கு-உற்பத்தியைப் பரிசீலிப்போமானால், சமுதாய மூலதனத்தின் மறுவுற்பத்தி நிகழ்முறை எப்படி நடைபெறுகிறது, இந்த மறுவுற்பத்தி நிகழ்முறையைத் தனிப்பட்ட மூலதனத்தின் மறுவுற்பத்தி நிகழ்முறையிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் சிறப்பியல்புகள் யாவை, இரண்டுக்கும் பொதுவான சிறப்பியல்புகள் யாவை என்பதெல்லாம் தெளிவாகி விடும். சமுதாயப் பொருளுற்பத்தியின் எந்தப் பகுதிகள் மூலதனத்தை மாற்றீடு செய்கின்றனவோ, அதாவது சமுதாய மறுவுற்பத்தியாக அமைகின்றனவோ அந்தப் பகுதிகளும், எந்தப் பகுதிகள் தொழிலாளர்களும் முதலாளிகளும் நுகர்ந்திடும் நுகர்வு-நிதியத்துக்குப் போய்ச் சேருகின்றனவோ அந்தப் பகுதிகளும் சேர்ந்ததே வருடாந்தரப் பொருளுற்பத்தி. ஆக, திறனுடை-நுகர்வு சொந்த நுகர்வு இரண்டுமே இதில் அடங்குகின்றன. மேலும் முதலாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கம் இவற்றின் மறுவுற்பத்தியும் (அதாவது பராமரிப்பும்) இவ்வாறு பொருளுற்பத்தி நிகழ்முறை முழுவதற்குமுள்ள அந்த முதலாளித்துவத் தன்மையின் மறுவுற்பத்தியும் கூட இதில் அடங்குகிறவையே.

நாம் ஆராய வேண்டிய சுற்றோட்ட வடிவம் இதுதான்:

$$C' - \begin{cases} M - C \ldots P \ldots C' \\ m - c \end{cases}$$

---

[48] எங்கெல்ஸ் குறிப்பு: கையெழுத்துப் பிரதி II என்பதிலிருந்து.

தவிர்க்க முடியாமல் இதில் நுகர்வும் ஒரு பங்கேற்றுச் செயல்படு கிறது. தொடக்க முனையாக இருப்பது C′=C+c என்பதாகிய சரக்கு-மூலதனம். மாறா-மூலதன மதிப்பு, மாறும்-மூலதன மதிப்பு ஆகியவற்றோடு உபரி-மதிப்பும் சேர்ந்ததே சரக்கு-மூலதனம். ஆகவே அதன் இயக்கத்தில் சொந்த நுகர்வு, திறனுடை நுகர்வு இரண்டும் அடங்குகின்றன. M — C ... P ... C′ — M′ என்ற சுற்றிலும், P ... C′ — M′ — C ... P என்ற சுற்றிலும் மூலதனத்தின் இயக்கமே தொடக்க முனையாகவும் இறுதி முனையாகவும் இருக்கிறது. நுகர்வும் சேர்ந்ததுதான் இது, ஏனெனில் உற்பத்திப் பொருளான சரக்கை விற்றாக வேண்டும். இந்த விற்பனை முடிவுறுவதாகக் கொண்டால், அதற்குப் பின் இந்தச் சரக்குகள் என்னாயினும் அதனால் தனிப்பட்ட மூலதனத்தின் இயக்கம் பாதிக்கப்படுவதில்லை. மறு புறம், C′ ... C′ என்னும் இயக்கத்தில், மொத்தப் பொருளுற்பத்தியான C′இன் மதிப்பில் ஒவ்வொரு பகுதியும் என்னாகிறது என்று காட்டியாக வேண்டும். இதனால் சமுதாய மறுவுற்பத்தி நிலைமைகள் புலப்படு கின்றன. இங்கே மொத்த மறுவுற்பத்தி நிகழ்முறையில் மூலதனத் தின் மறுவுற்பத்தி நிகழ்முறையைப் போலவே சுற்றோட்டத்தினால் நடந்தேறும் நுகர்வு நிகழ்முறையும் அடங்குகிறது.

இப்போது நம் முன்னுள்ள நோக்கம் நிறைவேற வேண்டு மானால், C′இன் தனிப்பட்ட ஒவ்வொரு அடக்கக் கூறும் மதிப்பு எனும் வகையிலும் பொருள் எனும் வகையிலும் எப்படி மாற்றீடு செய்யப்படுகிறது என்கிற கோணத்திலிருந்து இந்த மறுவுற்பத்தி நிகழ்முறையினை நாம் ஆராய்ந்தாக வேண்டும். முன்பு நாம் தனிப் பட்ட மூலதனத்தின் உற்பத்திப் பொருளினது மதிப்பினைப் பகுத்தாராய்ந்த போது, தனிப்பட்ட முதலாளி தமது சரக்கை விற்பதன் மூலம் தமது மூலதனத்தின் அடக்கக் கூறுகளைப் பணமாக மாற்றிக் கொள்வதாகவும் பிறகு உற்பத்தி-அடிக் கூறு களைச் சரக்குச் சந்தையிலிருந்து புதிதாய் வாங்கித் திறனுடை-மூலதனமாகத் திரும்பவும் மாற்றிக் கொள்வதாகவும் கொண் டோம். ஆனால் இப்போது அம்மாதிரி அனுமானித்துக் கொள்ள முடியாது. அந்த உற்பத்தி-அடிக்கூறுகள் இயற்கையாகவே பொருள் வகைப்பட்டவை என்பதால், அவற்றுக்காகப் பரிவர்த்தனை செய்யப்பட்டு அவற்றால் மாற்றீடு செய்யப்படும் பூர்த்தியான தனிப்பட்ட உற்பத்திப் பண்டங்களைப் போலவே அவையும் சமுதாய மூலதனத்தின் அடக்கக் கூறுகளாய் இருப்பவையே. எதிர்முனையில் தொழிலாளி தமது கூலியையும் முதலாளி தமது உபரி-மதிப்பையும் செலவிடுகையில் அவர்கள் சமுதாயச் சரக்கு-உற்பத்தியில் ஒரு பகுதியை நுகர்கிறார்கள். அவர்கள் நுகரும் இந்தப் பகுதி மொத்தச் சமுதாய உற்பத்தியின் இயக்கத்துடன் இரண்டறக் கலந்து விடுவ தோடு, தனிப்பட்ட மூலதனங்களின் இயக்கத்துடனும் பின்னிப் பிணைந்து விடுகிறது. ஆகவே இந்த நிகழ்முறைக்குக் காரண விளக்கம்

கூறுவதாகச் சொல்லி, இந்நிகழ்முறையையே அனுமானித்துக் கொள்வது முடியாத காரியம்.

நேரடியாக நம்முன் எழுகிற கேள்வி இதுதான்: உற்பத்தியின் போது நுகரப்படுகிற மூலதனம் வருடாந்தர உற்பத்தியிலிருந்து மதிப்பு வகையில் மாற்றீடு செய்யப்படுகிறதே, அது எப்படி? இந்த மாற்றீட்டின் இயக்கமானது முதலாளிகள் உபரி-மதிப்பையும் தொழிலாளர்கள் கூலியையும் நுகர்வதோடு பின்னிப் பிணைகிறதே, அது எப்படி? சாமானிய வீதத்திலான மறுவுற்பத்தியைப் பரிசீலிக்கிறோம் என்பதை முதற்கண் நினைவிற் கொள்ள வேண்டும். தவிரவும் உற்பத்திப் பண்டங்கள் அவற்றின் மதிப்புகளுக்கு ஏற்பவே பரிவர்த்தனை செய்யப்படுகின்றன என்றும், திறனுடை-மூலதனத்தினுடைய அடக்கக் கூறுகளின் மதிப்புகளில் புரட்சியேதும் இல்லை என்றும் அனுமானித்துக் கொள்கிறோம். விலைகள் மதிப்புகளிலிருந்து வேறுபடினும் அதனால் சமுதாய மூலதனத்தின் இயக்கங்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. தனிப்பட்ட முதலாளிகளிடையிலான மதிப்புறவுகள் அவர்கள் ஒவ்வொருவரும் செய்யும் முன்னீடுகளுக்கும் அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக உற்பத்தி செய்யும் உபரி-மதிப்பு அளவுகளுக்கும் விகிதாசாரப் பொருத்தமற்றுப் போய் விட்டாலும் கூட, பொதுவாக முன்போல் அதே அளவுகளில்தான் உற்பத்திப் பொருட்களிடையே பரிவர்த்தனை நடைபெறுகிறது. மதிப்பில் ஏற்படும் புரட்சிகளைப் பொறுத்த வரை, அவை பொதுவாகவும் சீராகவும் பரவி நடைபெறுமாயின் வருடாந்தர மொத்த உற்பத்தியின் மதிப்புக் கூறுகளிடையிலான உறவுகளில் அவற்றால் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. ஆனால் எந்த அளவுக்கு மதிப்பிலான இந்தப் புரட்சிகள் பொதுவாகவும் சீராகவும் பரவாதவையாய் உள்ளனவோ அந்த அளவுக்கு அவை ஒழுங்கின் குலைவுகளைக் குறிப்பவை ஆகின்றன. ஆனால், முதலாவதாக, மாறாதிருக்கும் மதிப்புறவுகளிலிருந்தான விலகல்களாக இவற்றைக் கருதுவதால்தான் ஒழுங்கில் ஏற்படும் குலைவுகளாக இவற்றைக் கொள்கிறோம். இரண்டாவதாக, வருடாந்தர உற்பத்தியின் மதிப்பில் ஒரு பகுதி மாறா-மூலதனத்தையும், மற்றொரு பகுதி மாறும்-மூலதனத்தையும் மாற்றீடு செய்கின்றன என்கிற விதி நிரூபிக்கப்பட்ட பிறகு, மாறா-மூலதனத்தின் மதிப்பிலோ மாறும்-மூலதனத்தின் மதிப்பிலோ எற்படக் கூடிய புரட்சி இந்த விதியில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தி விடாது. வருடாந்தர உற்பத்தி மதிப்பில் மாறா-மூலதனமாகவோ மாறும்-மூலதனமாகவோ செயல்படும் பகுதிகளின் ஒப்பீட்டுப் பருமனில் மட்டுமே மேற்கூறிய புரட்சி மாற்றத்தை எற்படுத்தும், ஏனெனில் தொடக்கத்தில் இருந்த மதிப்புகளுக்குப் பதில் வேறு மதிப்புகள் இப்போது வந்திருக்கும்.

தனிப்பட்ட முறையில் நாம் மதிப்பின் உற்பத்தியையும் மூலதனத்தினது உற்பத்திப் பொருளின் மதிப்பையும் பரிசீலித்துக் கொண்டிருந்த

வரை, இந்தப் பரிசீலனைக்கு உற்பத்திச் சரக்கின் தசையுருவம் எதுவாயினும் கவலையில்லை — அது இயந்திரமாகவோ தானியமாகவோ முகம் பார்க்கும் கண்ணாடியாகவோ இருக்கலாம். எடுத்துக்காட்டாகக் குறிக்கப்படும் பொருள்களாகவே இவை இருந்தன; பொருளுற்பத்தியின் எந்தக் கிளையை வேண்டுமானாலும் இதற்கு நாம் பயன்படுத்த முடிந்தது. நேரடிப் பொருளுற்பத்தி நிகழ்முறையையே நாம் ஆராய்ந்தோம்; ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இது ஏதேனுமொரு தனிப்பட்ட மூலதனத்தின் நிகழ்முறையாகவே வெளிப்படுகிறது. மூலதனத்தின் மறுவுற்பத்தியைப் பொறுத்த வரை, சரக்குகளின் உருவிலான உற்பத்திப் பொருளில் மூலதன-மதிப்பைக் குறிக்கும் பகுதி மறுபடியும் அதன் உற்பத்தி-அடிக் கூறுகளாக மாறுவதற்கு, அதாவது திறனுடை-மூலதனத்தின் வடிவத்துக்குத் திரும்புவதற்கு சுற்றோட்டத் துறையில் வாய்ப்பு பெறுவதாக அனுமானித்துக் கொள்வது போதுமானதாய் இருந்தது. இதே போல தொழிலாளியும் முதலாளியும் தங்களது கூலியையும் உபரி-மதிப்பையும் எச்சரக்குகளுக்காகச் செலவிடுகிறார்களோ அவை சந்தையில் அவர்களுக்குக் கிடைப்பதாக அனுமானித்துக் கொள்வது போதுமானதாய் இருந்தது. உள்ளடக்கத்தைக் கவனியாது புற வடிவை மட்டும் கருதும் இந்த முறையில் பிரச்சினையை முன் வைப்பது இப்போது நமக்குச் சரிப்பட்டு வராது; சமுதாயத்தின் மொத்த மூலதனத்தையும் அதன் உற்பத்திப் பண்டங்களின் மதிப்பையும் ஆராய்வதற்கு இது போதுமானதன்று. சமுதாய உற்பத்தியின் மதிப்பில் ஒரு பகுதி திரும்பவும் மூலதனமாக மாற்றப்படுவதும், மற்றொரு பகுதி முதலாளிகள், தொழிலாளர்கள் ஆகியோரது தனிப்பட்ட சொந்த நுகர்வுக்குப் போய்ச் சேருவதுமான இந்த நிகழ்வு மொத்தச் சமுதாய மூலதனத்தால் விளையும் பயனைத் தெரிவிக்கும் மொத்த உற்பத்தியின் மதிப்பினுள் நடந்தேறும் ஓர் இயக்கமாகி விடுகிறது. இந்த இயக்கம் மதிப்பு வகையிலான மாற்றீடு மட்டுமல்ல; இது பொருள் வகையிலான மாற்றீடும் ஆகும். ஆகவே இது சமுதாயத்தின் மொத்த உற்பத்தியினது மதிப்பின் அடக்கக் கூறுகளது ஒப்பீட்டு விகிதங்களைச் சார்ந்திருப்பது மட்டுமல்லாமல், அதே போல் அவற்றின் பொருள் வடிவமாகிய பயன்-மதிப்பையும் சார்ந்திருக்கிறது.

ஒரு புறம்[40] மூலதனத் திரட்டல் அல்லது விரிதிற மறுவுற்பத்தி [reproduction on an extended scale] என்பதே இல்லை என்ற அனுமானம் முதலாளித்துவ நிலைமைகளில் விசித்திரமான ஒன்றாகும் என்பதாலும், உற்பத்தி நிலைமைகள் வெவ்வேறு ஆண்டுகளில் மாறாமல் அப்படியே இருப்பது (இதுவே நமது அனுமானம்) இல்லை என்பதாலும், சரமானிய மறுவுற்பத்தி [simple reproduction],

---

40 [illegible] VIII [illegible]

அதாவது ஒரே அளவுவீதத்திலான மறுவுற்பத்தி வெறும் கருத்தியலான ஒன்றாகத் தோன்றுகிறது. மறுவுற்பத்தி நிகழ்முறையின் போது சரக்கு வடிவங்கள் மாறலாம் என்றாலும் கூட, குறிப்பிட்ட பருமனுள்ள சமுதாய மூலதனம் சென்ற ஆண்டு உற்பத்தி செய்த அதே அளவு சரக்கு-மதிப்பை இந்த ஆண்டும் உற்பத்தி செய்வதாகவும், அதே அளவு தேவைப் பண்டங்களை வழங்குவதாவும் கொள்கிறோம். ஆயினும் மூலதனத் திரட்டல் நடைபெறுவதாயினும் கூட, அந்தத் திரட்டலில் சாமானிய மறுவுற்பத்தி எப்போதும் ஒரு பகுதியே ஆகும். ஆகவே சாமானிய மறுவுற்பத்தியைத் தனிப்பட ஆராய முடிகிறது, மூலதனத் திரட்டலில் அது உள்ளபடியே ஒரு காரணியாக இருக்கிறது. பயன்-மதிப்புகளின் அளவு மாறாதிருப்பினும் வருடாந்தர உற்பத்தியின் மதிப்பு குறையலாம். அல்லது பயன்-மதிப்புகளின் அளவு குறைந்தாலும் வருடாந்தர உற்பத்தியின் மதிப்பு குறையாதிருக்கலாம். அல்லது உற்பத்தி மதிப்பின் அளவும் மறுவுற்பத்தி செய்யப்படும் பயன்-மதிப்புகளின் அளவும் ஒருங்கே குறையலாம். முன்னிலும் சாதகமான அல்லது பாதகமான நிலைமைகளில் மறுவுற்பத்தி நடைபெறுகிறது என்பதைத்தான் இவை குறிக்கின்றன. நிலைமைகள் பாதகமாய் இருக்குமாயின் மறுவுற்பத்தி அரைகுறையானதாய்—குறைபாடுள்ளதாய்—ஆகி விடக் கூடும். இவை எல்லாம் மறுவுற்பத்தியின் பற்பல கூறுகளது அளவு தொடர்பானவையே தவிர, இந்நிகழ்முறையில் மூலதனத்தை மறுவுற்பத்தி செய்வனவாகவோ, மறுவுற்பத்தி செய்யப்பட்ட வருவாயாகவோ அக்கூறுகள் ஆற்றும் பங்கினைக் குறிப்பவை அல்ல.

## II. சமுதாயப் பொருளுற்பத்தியின் இரு துறைகள்[50]

சமுதாயத்தின் மொத்த உற்பத்தியை, அதாவது சமுதாயத்தால் உற்பத்தி செய்யப்படுகிறவற்றின் ஒட்டுமொத்தத்தை இரு பெரும் துறைகளாகப் [departments] பிரிக்கலாம்:

I. **உற்பத்திச் சாதனங்கள்** [means of production]: திறனுடை நுகர்வில் சேர்ந்தாக வேண்டிய வடிவிலோ, இல்லையேல் சேரக் கூடியதான வடிவிலோ இருக்கும் சரக்குகள்.

II. **நுகர்வுப் பண்டங்கள்** [articles of consumption]: முதலாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கம் ஆகியவற்றின் சொந்த நுகர்வில் சேருவதற்கு ஏற்ற வடிவத்தில் இருக்கும் சரக்குகள்.

இந்த இரு துறைகளில் ஒவ்வொன்றுக்கும் உரித்தான பல்வேறு உற்பத்திக் கிளைகள் யாவும் சேர்ந்து ஒரு பெரும் உற்பத்திக் கிளையாகின்றன; உற்பத்திச் சாதனங்களின் உற்பத்திப் பெருங்கிளையும்,

---

[50] எங்கெல்ஸ் குறிப்பு: பிரதானமாக, கையெழுத்துப் பிரதி II என்பதிலிருந்து, அட்டவணைகள் கையெழுத்துப் பிரதி VIII என்பதிலிருந்து.

நுகர்வுப் பண்டங்களின் உற்பத்திப் பெருங்கிளையும் ஆகின்றன. இந்த உற்பத்திப் பெருங்கிளைகள் ஒவ்வொன்றிலும் ஈடுபடுத்தப் படும் மொத்த மூலதனம், சமுதாய மூலதனத்தின் ஒரு பெருந் துறையாகிறது.

ஒவ்வொரு துறையிலும் மூலதனம் இரு பகுதிகளைக் கொண்ட தாகும்:

*1) மாறும்-மூலதனம்:* இந்த மூலதனம், அதன் மதிப்பைப் பொறுத்த வரை, இவ்வுற்பத்திக் கிளையில் ஈடுபடுத்தப்படும் சமுதாய உழைப்புச் சக்தியின் மதிப்புக்குச் சமமாகும்; வேறு விதமாகச் சொன்னால், இது இந்த உழைப்புச் சக்திக்காகத் தரப்பட்ட கூலி யின் கூட்டுத் தொகைக்குச் சமமாகும். அதன் சாரப் பொருளைப் பொறுத்த வரை, இது செயல்படும் உழைப்புச் சக்தியால் ஆனதாகும்; அதாவது இந்த மூலதன-மதிப்பு இயங்கச் செய்திடும் உயிருள்ள உழைப்பால் ஆனதாகும்.

*2) மாறா-மூலதனம்:* இது இந்தக் கிளையில் உற்பத்திக் காரியங் களுக்காக ஈடுபடுத்தப்படும் உற்பத்திச் சாதனங்கள் யாவற்றின் மதிப் பாகும். இந்த உற்பத்திச் சாதனங்கள் திரும்பவும் பிரிக்கப்படுகின்றன: இயந்திரங்கள் உழைப்புக் கருவிகள், கட்டடங்கள், இழுவைக் கால் நடைகள் போன்றவை நிலை-மூலதனம் ஆகின்றன; கச்சாப் பொருட் கள், துணைப் பொருட்கள், பூர்த்தியாகாத பண்டங்கள் போன் றவை மூலப் பொருட்களாகிய மாறாச் சுழல்-மூலதனம் ஆகின்றன.

இரு துறைகளில் ஒவ்வொன்றிலும் இம்மூலதனத்தின் துணை கொண்டு படைக்கப்படும் மொத்த வருடாந்தர உற்பத்தியின் மதிப்பு என்பது, உற்பத்தி நிகழ்முறையின் போது நுகரப்பட்டு அதன் மதிப்புக்கேற்ப உற்பத்திப் பண்டத்துக்குப் பெயர்க்கப்படும் மாறா-மூலதனமான Cஐக் குறிக்கிற ஒரு பகுதியையும், ஓராண்டு கால உழைப்பு முழுவதாலும் சேர்க்கப்படும் மற்றொரு பகுதியையும் கொண்டதாகும். இந்த இரண்டாம் பகுதியும் பிரிக்கப்பட்டு, முன்னீடு செய்யப்படுகிற மாறும்-மூலதனமான v என்பதன் மாற்றீடும், அதன்பின் எஞ்சுகிற s என்னும் உபரி-மதிப்பும் ஆகிறது. தனிப் பட்ட ஒவ்வொரு சரக்கின் மதிப்பையும் போலவே, ஒவ்வொரு துறையின் வருடாந்தர மொத்த உற்பத்தியின் மதிப்பும் c+v+s ஆகிறது.

உற்பத்தியின் போது நுகரப்படும் மாறா-மூலதனத்தைக் குறிக்கும் மதிப்புப் பகுதியான c வேறு, உற்பத்தியில் ஈடுபடுகிற மாறா-மூலதனத்தின் மதிப்பு வேறு. மூலப் பொருட்கள் முழுமை யாக நுகரப்படுவதும் அவற்றின் மதிப்புகள் உற்பத்திப் பண்டத் துக்கு முழுமையாகப் பெயர்க்கப்படுவதும் மெய்தான். ஆனால் ஈடுபடுத்தப்படும் நிலை-மூலதனத்தில் ஒரு பகுதி மட்டுமே முழுமை யாக நுகரப்பட்டு, அதன் மதிப்பு இவ்விதம் உற்பத்திப் பண் டத்துக்குப் பெயர்க்கப்படுகிறது. இயந்திரங்களும் கட்டடங்களும்

இன்ன பிறவுமான நிலை-மூலதனத்தில் இன்னொரு பகுதியானது வருடாந்தரத் தேய்மானத்துக்குச் சமமான அளவு மதிப்பு குறைந்து விட்டாலுங்கூட, முன்போல் அப்படியே நீடித்துக் கொண்டும் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டும்தான் இருக்கிறது. இப்படித் தொடர்ந்து நீடிக்கிற இந்த நிலை-மூலதனப் பகுதி, உற்பத்திப் பண்ட மதிப்பை எடை போடுகையில் நமக்கு இல்லாத ஒன்றாகி விடுகிறது. மூலதன-மதிப்பின் ஒரு பகுதியாகிய இது புதிதாக உற்பத்தி செய்யப்படும் சரக்கு-மதிப்பைச் சாராமலும் சேராமலும் இருந்து வருகிறது. முன்பு தனிப்பட்ட மூலதனத்தின் உற்பத்திப் பண்டத்தின் மதிப்பினைப் பகுப்பாய்ந்த போது [முதல் பாகம், அத்தியாயம் VIII, பக்கம் 279-88] ஏற்கெனவே தெளிவு செய்யப் பட்ட ஒன்றே இது. ஆயினும் முன்பு நாம் கையாண்ட பகுப்பாய்வு முறையை இப்போது இங்கே கைவிட்டாக வேண்டும். தனிப்பட்ட மூலதனத்தினுடைய உற்பத்திப் பண்டத்தின் மதிப்பை ஆராய்கையில் நாம் கண்டது என்னவெனில், தேய்மானத்தின் மூலமாக நிலை-மூலதனத்திலிருந்து கழிக்கப்படும் மதிப்பு தேய்மானக் காலத்தில் உற்பத்தி செய்யப்படுகிற பண்டத்துக்குப் பெயர்க்கப்படுகிறது; இப்படிப் பெயர்க்கப்படும் மதிப்பைக் கொண்டு இந்த நிலை-மூலதனத்தின் எந்தப் பகுதியும் இக்காலத்தில் பொருள் வகையில் மாற்றீடு செய்யப்பட்டாலும் சரி, செய்யப்படா விட்டாலும் சரி, இந்த மதிப்புப் பெயர்ச்சி நடந்தேறுகிறது. ஆனால் சமுதாயத்தின் மொத்தப் பொருளுற்பத்தியையும் அதன் மதிப்பையும் ஆராய்கிற நாம் நிலை-மூலதனத்திலிருந்து தேய்மானத்தின் மூலம் உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படும் மதிப்புப் பகுதியை (நிலை-மூல தனமானது பொருள் வகையில் அதே ஆண்டில் மாற்றீடு செய்யப் படாத வரை) எப்படியும் இப்போதைக்காவது கணக்கில் சேர்க் காமல் விட்டு விட வேண்டியதாகிறது. இந்த அத்தியாயத்தில் பின்வரும் பிரிவுகளில் ஒன்றில் குறிப்பாக இந்த விவரம் குறித்து விவாதிப்போம்.

---

பின்வரும் அடிப்படையில் நாம் சாமானிய மறுவுற்பத்தி குறித்து ஆராய்வோம்: c என்பது மாறா-மூலதனத்தையும், v என்பது மாறும்-மூலதனத்தையும், s என்பது உபரி-மதிப்பையும் குறிக் கின்றன; உபரி-மதிப்பு வீதம் $= \frac{s}{v} = 100$ சதவீதம் எனக் கொள் கிறோம். இலக்கங்கள் மிலியன் கணக்கில் மார்க்கு, பிராங்கு, அல்லது பவுன் ஸ்டெர்லிங்கைக் குறிப்பவை.

I. உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தி:

மூலதனம்.........$4,000_c + 1,000_v = 5,000$

சரக்கு-உற்பத்தி..$4,000_c + 1,000_v + 1,000_s = 6,000$;

உற்பத்திச் சாதனங்களாய் இருப்பவை இவை.

II. நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தி:

மூலதனம்.........$2,000_c+500_v=2,500$

சரக்கு-உற்பத்தி...$2,000_c+500_v+500_s=3,000$;

நுகர்வுப் பண்டங்களாய் இருப்பவை இவை.

தொகுப்பு: வருடாந்தர மொத்தச் சரக்கு-உற்பத்தி:

I. $4,000_c+1,000_v+1,000_s=6,000$ (உற்பத்திச் சாதனங்கள்).

II. $2,000_c+500_v+500_s=3,000$ (நுகர்வுப் பண்டங்கள்).

மொத்த மதிப்பு 9,000. நிலை-மூலதனம் அதன் இயல்பான வடிவில் அப்படியே இருந்து வருகிறது, நமது அனுமானத்தின் படி மொத்த மதிப்பில் இது சேரவில்லை.

உபரி-மதிப்பு முழுவதுமே திறனிலா முறையில் நுகரப்படும் சாமானிய மறுவுற்பத்தியின் அடிப்படையில் அவசியமாகிற மாற்றங்களை ஆராய்வோமானால், இந்த மாற்றங்களுக்குத் துணை செய்யும் பணச் சுற்றோட்டத்தை இப்போதைக்குக் கவனியாது ஒதுக்குவோமானால், உடனே நமது ஆய்வுக்குக் கைகொடுத்து உதவும் மூன்று முக்கிய முடிவுகளை வந்தடைகிறோம்.

1) துறை IIஇல், தொழிலாளர்களின் கூலியைக் குறிக்கும் $500_v$ என்பதும் முதலாளிகளின் உபரி-மதிப்பைக் குறிக்கும் $500_s$ என்பதும் நுகர்வுப் பண்டங்களுக்காகச் செலவழிய வேண்டும். ஆனால் அவற்றின் மதிப்பானது துறை IIஐச் சேர்ந்த முதலாளிகள் வைத்திருக்கும் 1,000 பெறுமானமுள்ள நுகர்வுப் பண்டங்களில் உள்ளது; இப்பண்டங்கள் முன்னீடு செய்யப்படும் $500_v$ என்பதை மாற்றீடு செய்வதோடு, $500_s$ என்பதையும் குறிக்கின்றன. ஆதலால் துறை IIஐச் சேர்ந்த கூலியும் உபரி-மதிப்பும் இந்தத் துறைக்குள்ளேயே—இதே துறையின் உற்பத்திப் பண்டங்களுக்காக—பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றன. இவ்விதம் $(500_v+500_s)$ II=1,000 பெறுமான நுகர்வுப் பண்டங்கள் மொத்த உற்பத்தியிலிருந்து கழிந்து விடுகின்றன.

2) இதே போல் துறை Iஐச் சேர்ந்த $1,000_v+1,000_s$ நுகர்வுப் பண்டங்களுக்காக, அதாவது துறை IIஇன் உற்பத்திப் பண்டங்களுக்காகச் செலவழிய வேண்டும். எனவே அவை மாறா-மூலதனப் பகுதியான $2,000_c$ என்பதற்குச் சமமாய் துறை IIஇன் உற்பத்திப் பண்டத்தில் எஞ்சியிருக்கும் பகுதிக்காகப் பரிவர்த்தனை செய்யப்பட வேண்டும். துறை II இதற்குப் பதிலாய் துறை Iஇன் உற்பத்திப் பண்டமான உற்பத்திச் சாதனங்களின் வடிவில் சம மதிப்பைப் பெறுகிறது. இந்த உற்பத்திச் சாதனங்கள் துறை Iஐச் சேர்ந்த $1,000_v+1,000_s$ என்னும் மதிப்பை உருக் கொண்டவை. இவ்விதம் 2,000 $\text{II}_c$ என்பதும் $(1,000_v+1,000_s)$ I என்பதும் கணக்கிலிருந்து கழிந்து விடுகின்றன.

3) இன்னமும் எஞ்சியிருப்பது 4,000 $I_c$ மட்டும்தான். இது உற்பத்திச் சாதனங்களாய் இருப்பது. இந்த உற்பத்திச் சாதனங்கள் துறை Iஇல் நுகரப்படும் மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்கிறவை, இத்துறையில் மட்டுமே பயன்படக் கூடியவை. ஆகவே இவை துறை Iஐச் சேர்ந்த தனிப்பட்ட முதலாளிகளிடையே பரஸ்பரம் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றன; ($500_v+500_s$) II எப்படி துறை IIஐச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையிலான பரிவர்த்தனையின் மூலமோ, தனிப்பட்ட முதலாளிகளிடையிலான பரிவர்த்தனையின் மூலமோ கழிகின்றனவோ, அதே போல இவையும் கழிகின்றன.

இனி வரப்போவதைப் புரிந்து கொள்ள மேற்கூறியவை இப்போதைக்கு உதவியாக இருக்கும்.

## III. இரு துறைகளுக்கும் இடையிலான பரிவர்த்தனை
### $II_c$ என்பதற்கு எதிராக $I_{(v+s)}$[51]

இரு துறைகளுக்கும் இடையிலான பெரும் பரிவர்த்தனையிலிருந்து தொடங்குகிறோம். ($1,000_v+1,000_s$) I — உற்பத்தியாளர்களிடம் உற்பத்திச் சாதனங்களாய் அவற்றின் இயல்பான வடிவில் இருக்கும் இந்த மதிப்புகள், தசையுருவில் நுகர்வுப் பண்டங்களாய் இருக்கும் மதிப்புகளான 2,000 $II_c$ என்பதற்குப் பிரதியாகப் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. இவ்வழியில் துறை IIஐச் சேர்ந்த முதலாளி வர்க்கம் அதன் மாறா-மூலதனமான 2,000ஐ நுகர்வுப் பண்டங்களின் வடிவத்திலிருந்து நுகர்வுப் பண்டங்களை உண்டாக்கும் உற்பத்திச் சாதனங்களின் வடிவத்துக்கு மாற்றிக் கொள்கிறது. இப்படி வடிவ மாற்றம் பெற்ற பின் அது மீண்டும் உழைப்பு நிகழ்முறையின் காரணியாகி, மாறா-மூலதன மதிப்பாக மதிப்பின் தற்பெருக்கத்துக்காக வேண்டிச் செயல்பட முடிகிறது. மறு புறம், துறை Iஇன் உழைப்புச் சக்திக்கான சமதையும் ($1,000_v$) இத்துறையைச் சேர்ந்த முதலாளிகளின் உபரி-மதிப்பும் ($1,000_s$) இவ்விதம் நுகர்வுப் பண்டங்களாகி ஈடேற்றம் பெறுகின்றன. அவை இரண்டும் அவற்றின் உற்பத்திச் சாதனத் தசையுருவிலிருந்து வருவாயாக நுகரப்படக் கூடிய ஒரு தசையுருவுக்கு மாற்றம் பெறுகின்றன.

இந்தப் பரஸ்பரப் பரிவர்த்தனை பணச் சுற்றோட்டத்தின் துணை கொண்டு நடந்தேறுகிறது. பணச் சுற்றோட்டம் இந்தப் பரிவர்த்தனையை எந்த அளவுக்கு ஊக்குவிக்கிறதோ, இதனைப் புரிந்து கொள்வதையும் அந்த அளவுக்குக் கடினமாக்கி விடுகிறது என்றாலும் பணச் சுற்றோட்டமானது தீர்மானகர முக்கியத்துவம்

---

51 எங்கெல்ஸ் குறிப்பு: இங்கே மீண்டும் கையெழுத்துப் பிரதி VIII என்பதிலிருந்து.

வாய்ந்ததாக இருக்கிறது. ஏனெனில் மாறா-மூலதனமானது எந்நேரமும் பண வடிவத்துக்குத் திரும்பியாக வேண்டும், பண வடிவத்திலிருந்து உழைப்புச் சக்தியாகத் தன்னை மாற்றிக் கொள்ளும் பண-மூலதனமாக வேண்டும். சமுதாயப் பரப்பெங்கும் அக்கம்பக்கமாய் அமைந்து ஏககாலத்தில் இயங்கி வருகிற உற்பத்திக் கிளைகள் யாவற்றிலும் — அவை துறை Iஐச் சேர்ந்தவையானாலும் சரி, துறை IIஐச் சேர்ந்தவையானாலும் சரி — மாறும்-மூலதனத்தைப் பண வடிவில்தான் முன்னீடு செய்தாக வேண்டும். உழைப்புச் சக்தியானது உற்பத்தி நிகழ்முறையினுள் புகுமுன்பே முதலாளி அதனை வாங்குகிறார். ஆனால் பயன்-மதிப்புகளின் உற்பத்திக்காக அந்த உழைப்புச் சக்தி செலவழிந்து பிறகே குறிப்பிட்ட காலங்களில் அவர் அதற்கு விலை கொடுக்கிறார். உற்பத்திப் பண்ட மதிப்பின் எப்பகுதி உழைப்புச் சக்திக்கு விலை கொடுப்பதற்காகச் செலவான பணத்துக்குச் சமதையாகிறதோ, அதாவது மாறும்-மூலதனத்தைக் குறிப்பதாகிறதோ, அந்தப் பகுதியும் பண்ட மதிப்பின் பிற பகுதிகளைப் போலவே முதலாளிக்கே சொந்தமாகும். பண்ட மதிப்பில் மாறா-மூலதனத்தைக் குறிக்கும் பகுதியின் மூலம் தொழிலாளி தமது கூலிக்கான சமதையை ஏற்கெனவே முதலாளிக்குத் தந்து விட்டார். ஆனால் உற்பத்திச் சரக்குகள் திரும்பவும் பணமாக மாற்றப்பட்டால்தான், அதாவது அவை விற்கப்பட்டால்தான் முதலாளி அவரது மாறும்-மூலதனத்தைப் பண-மூலதன வடிவில் மீட்டுக் கொள்ள முடிகிறது. அப்போதுதான் பண-மூலதனத்தை அவர் திரும்பவும் முன்னீடு செய்து உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்க முடிகிறது.

ஆக துறை Iஇல் முதலாளிகள் எல்லாருமாகச் சேர்ந்து தொழிலாளர்களுக்கு, ஏற்கெனவே £1,000, அதாவது $1,000_v$ (பண வடிவிலான மதிப்பு என்று காட்டுவதற்காகவே £ என்கிறேன்) கொடுத்து விட்டனர். துறை Iஇன் உற்பத்திப் பண்டத்தின் மதிப்பைச் சேர்ந்த, அதாவது அந்தத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்த உற்பத்திச் சாதனங்களின் மதிப்பைச் சேர்ந்த பகுதியாகிய v என்பதற்கு பதில் கொடுக்கப்பட்டதாகும் இது. தொழிலாளர்கள் இந்த £1,000ஐக் கொண்டு, துறை IIஐச் சேர்ந்த முதலாளிகளிடமிருந்து அதே மதிப்புள்ள நுகர்வுப் பண்டங்களை விலைக்கு வாங்குகிறார்கள். இவ்விதம் அவர்கள் மாறா-மூலதனம் IIஇல் ஒரு பாதியைப் பணமாக மாற்றுகிறார்கள், IIஇன் முதலாளிகள் இந்த £1,000ஐக் கொண்டு Iஇன் முதலாளிகளிடமிருந்து 1,000 மதிப்புள்ள உற்பத்திச் சாதனங்களை வாங்குகிறார்கள். துறை Iஇன் முதலாளிகளைப் பொறுத்த வரை அவர்களது உற்பத்திப் பண்டத்தைச் சேர்ந்த பகுதி என்ற முறையில் உற்பத்திச் சாதனங்களின் தசையுருவில் இருந்த $1,000_v$ என்பதற்குச் சமமான மாறும்-மூலதன மதிப்பு இவ்விதம் மீண்டும் பணமாக மாற்றப்படுகிறது. இப்போது அது Iஇன்

முதலாளிகளிடம் மீண்டும் பண-மூலதனமாகச் செயல்பட முடியும். இந்தப் பண-மூலதனம் அவர்களால் உழைப்புச் சக்தியாக, அதாவது திறனுடை-மூலதனத்தின் அத்தியாவசியக் கூறாக மாற்றப்படுகிறது. இவ்வாறு அவர்களது சரக்கு-மூலதனத்தின் ஒரு பகுதி ஈடேற்றம் செய்யப்பட்டு, அதன் விளைவாக அவர்களது மாறும்-மூலதனம் அவர்களுக்குத் திரும்பி வருகிறது.

மாறா-மூலதனம் IIஇன் இரண்டாம் பாதிக்காக சரக்கு-மூலதனம் Iஇன் s-பகுதியைப் பரிவர்த்தனை செய்வதற்குத் தேவைப்படும் பணத்தைப் பொறுத்த வரை, அதைப் பல்வேறு வழிகளில் முன்னீடு செய்யலாம். உண்மையில் இந்தச் சுற்றோட்டம் இரு துறைகளிலும் இருந்து தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும் எண்ணற்ற தனித்தனி வாங்கல்-விற்றல்களைக் கொண்டதாகும். எப்படியும் பணம் இந்த முதலாளிகளிடமிருந்தே வருகிறது; ஏனெனில் தொழிலாளர்கள் சுற்றோட்டத்துள் செலுத்தும் பணம் என்னாகிறது என்பதற்கான கணக்கை ஏற்கெனவே நாம் கொடுத்தாயிற்று. துறை IIஐச் சேர்ந்த ஒரு முதலாளி, திறனுடை-மூலதனத்தை அன்னியில் தம் கைவசமுள்ள பண-மூலதனத்தைக் கொண்டு, துறை Iஐச் சேர்ந்த முதலாளிகளிடமிருந்து உற்பத்திச் சாதனங்கள் வாங்க முடியும். இதே போல, துறை Iஐச் சேர்ந்த ஒரு முதலாளி மூலதனச் செலவீட்டுக்காக அல்லாமல் சொந்தச் செலவீட்டுக்காக அமைந்த பண நிதியங்களைக் கொண்டு துறை IIஐச் சேர்ந்த முதலாளிகளிடமிருந்து நுகர்வுப் பண்டங்கள் வாங்க முடியும். மேலே இந்த அத்தியாயத்தின் முதல் இரண்டு பிரிவுகளில் நாம் காட்டியிருப்பது போல, திறனுடை-மூலதனத்தை அன்னியில் முதலாளிகளின் கைவசம் குறிப்பிட்ட அளவு பண இருப்பு எப்போதும் உள்ளதாகவும், மூலதன முன்னீட்டுக்கோ, வருவாயாகச் செலவிடுவதற்கோ இதனை அவர்கள் பயன்படுத்துவதாகவும் கொண்டாக வேண்டும். பணத்தில் ஒரு பாதியை (இந்த விகிதாசாரம் எவ்வளவாய் இருந்தாலும் இங்கு நமக்குக் கவலை இல்லை) IIஇன் முதலாளிகள் தமது மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்வதற்கான உற்பத்திச் சாதனங்களை வாங்குவதற்காக முன்னீடு செய்வதாகவும், மற்றொரு பாதியை Iஇன் முதலாளிகள் நுகர்வுப் பண்டங்களுக்காகச் செலவழிப்பதாகவும் வைத்துக் கொள்வோம். அப்போது துறை II ஆனது துறை Iஇடமிருந்து உற்பத்திச் சாதனங்களை வாங்குவதற்காக £500 முன்னீடு செய்கிறது; இதன் மூலம் அது (துறை Iஇன் தொழிலாளர்களிடமிருந்து வரும் மேற்சொன்ன £1,000 உட்பட) தனது மாறா-மூலதனத்தில் முக்கால் பங்கினைப் பொருள் வகையில் மாற்றீடு செய்கிறது. இப்படிக் கிடைக்கும் £500ஐக் கொண்டு துறை I துறை IIஇடமிருந்து நுகர்வுப் பண்டங்களை விலைக்கு வாங்குகிறது; இதன் மூலம் அது தனது சரக்கு-மூலதனத்தின் ஒரு பகுதியான s என்பதில் ஒரு பாதிக்கு c — m — c என்கிற சுற்றோட்டம்

பூர்த்தியாகும் படி செய்து, தனது உற்பத்திப் பண்டத்தை இவ்விதம் நுகர்வுப் பண்ட நிதியமாக ஈடேற்றம் பெறச் செய்கிறது. இந்த இரண்டாவது நிகழ்முறையின் மூலம் £500 துறை IIஇடம் திரும்பு கிறது; இத்துறையிடமுள்ள திறனுடை-மூலதனத்தை அன்னியில் இப்போது அதற்கு £500 பண-மூலதனமும் வந்து சேருகிறது. ஆனால் துறை I தனது சரக்கு-மூலதனத்தைச் சேர்ந்த s-பகுதியில் இன்னமும் விற்கப்படாமல் உற்பத்திப் பண்டமாகக் கிடங்கில் இருந்து வரும் ஒரு பாதி விற்பனையாகி விடுமென்ற நம்பிக்கை யுடன் தன் பணத்தில் £500ஐச் செலவிட்டு துறை IIஇடமிருந்து நுகர்வுப் பண்டங்களை வாங்குகிறது. துறை II இப்படித் தனக்கு வரும் £500ஐக் கொண்டு Iஇடமிருந்து உற்பத்திச் சாதனங் கள் வாங்கி, இவ்விதம் தனது மாறா-மூலதனம் முழுவதையும் (1000 + 500 + 500 = 2,000) பொருள் வகையில் மாற்றீடு செய்து கொள்கிறது. அதே போது துறை I தனது உபரி-மதிப்பு முழுவதையும் நுகர்வுப் பண்டங்களாக ஈடேற்றம் பெறச் செய்கிறது. இவ்வாறு £4,000 மதிப்புள்ள சரக்குகளின் பரிவர்த்தனை முழு வதும் £2,000 பணச் சுற்றோட்டத்தின் துணை கொண்டு நடை பெறுகிறது; வருடாந்தர உற்பத்தி முழுவதும் மொத்தமாகப் பெரும் பெரும் திரட்சிகளாய்ப் பரிவர்த்தனையாகி விடுவதாகக் கொள் வதால்தான் இந்த £2,000 பணச் சுற்றோட்டம் சாத்தியமாகிறது. இங்கு முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது இதுதான்: துறை II ஆனது நுகர்வுப் பண்ட வடிவில் மறுவுற்பத்தி செய்யப்படும் தனது மாறா-மூலதனத்தைத் திரும்பவும் உற்பத்திச் சாதனங்களின் வடிவத்துக்கு மாற்றிக் கொண்டு விடுவதோடு, உற்பத்திச் சாதனங் கள் வாங்குவதற்காக முன்னீடு செய்து சுற்றோட்டத்துள் விட்ட £500ஐ மீட்டுக் கொண்டும் விடுகிறது; இதே போல் துறை I உற்பத்திச் சாதனங்களின் வடிவில் மறுவுற்பத்தி செய்யப்படும் தனது மாறும்-மூலதனத்தைப் பண வடிவில் தனக்குத் திரும்பி வரச் செய்து நேரடியாய் உழைப்புச் சக்தியாக மறுபடியும் மாற்றப்படக் கூடிய பண-மூலதனமாக்கிக் கொள்வது மட்டுமல்லாமல், தனது சரக்கு-மூலதனத்தைச் சேர்ந்த s-பகுதி விற்றுப் போகும் என்ற நம்பிக்கையுடன் நுகர்வுப் பண்டங்கள் வாங்குவதற்காகச் செலவிட்ட £500ஐயும் திருப்பிப் பெற்றுக் கொள்கிறது. இந்த £500 இத் துறைக்கே திரும்பி வருவதற்கு இத்தொகை முன்பு இங்கு செல விடப்பட்டதல்ல காரணம்; இத்துறையின் சரக்கு-உற்பத்தியில் ஒரு பகுதி — உபரி-மதிப்பில் ஒரு பாதியும் இதில் சேர்ந்திருக்கிறது — பிற்பாடு விற்றுப் போனதலே காரணம்.

இந்த இரு நிலைகளிலுமே, IIஇன் மாறா-மூலதனமானது உற்பத்திப் பண்ட வடிவிலிருந்து உற்பத்திச் சாதனங்களின் தசையுரு விற்குத் திரும்பவும் மாற்றப்படுகிறது (இப்படி மாற்றப்பட்டால் தான் அது மூலதனமாகச் செயல்பட முடியும்) என்பது மட்டுமல்ல;

அதே போல் Iஇன் மாறும்-மூலதனம் அதன் பண வடிவத்துக்கும், Iஇன் உற்பத்திச் சாதனங்களது உபரி-மதிப்புப் பகுதி அதன் நுகரத் தக்க வடிவத்துக்கும், அதாவது அது வருவாயாகப் பயன்படுவதற்கு ஏற்ற வடிவத்துக்கும் மாற்றப்படுகின்றன என்பது மட்டுமல்ல. துறை II ஆனது நுகர்வுச் சாதனங்களின் வடிவில் இருக்கிற தனது உற்பத்திப் பொருளில் தனது மாறா-மூலதனத்தின் மதிப்புக்கு மாற்றீடாக அமையும் பகுதியை விற்பதற்கு முன்பே உற்பத்திச் சாதனங்களை வாங்குவதற்காக முன்னீடு செய்கிற £500 பண-மூலதனமும் அதனிடமே திரும்பி வந்து விடுகிறது; அதோடு துறை I ஆனது நுகர்வுப் பண்டங்கள் வாங்குவதற்காக நம்பிக்கையுடன் முன் கூட்டியே செலவிடுகிற £500 தொகையும் அதனிடமே வந்து விடுகிறது. துறை II அதன் சரக்கு-உற்பத்தியில் மாறா-மூலதனத்துக்குரிய பகுதியைச் செலவிட்டும், துறை I அதன் சரக்கு-உற்பத்தியில் உபரி-மதிப்புக்குரிய பகுதியைச் செலவிட்டும் முன்னீடு செய்கிற பணம் அவற்றிடமே திரும்பி வந்து விடுகிறது என்றால், ஒரு தொகுதி முதலாளிகள் சரக்கு வடிவில் துறை IIஇடம் இருக்கிற மாறா-மூலதனத்தைக் காட்டிலும் கூடுதலாய் £500ஐ சுற்றோட்டத்துள் செலுத்துவதும், மற்றொரு தொகுதி முதலாளிகள் சரக்கு வடிவில் துறை Iஇடம் இருக்கிற உபரி-மதிப்பைக் காட்டிலும் கூடுதலாய் அதே தொகையான £500ஐ சுற்றோட்டத்துள் செலுத்துவதும்தான் அதற்குக் காரணம். இரு துறைகளும் தத்தமது சரக்குகளின் வடிவில் சமதைகளைப் பரிவர்த்தனை செய்து கொண்டு, பரஸ்பரம் ஒன்றுக்கொன்று கொடுக்க வேண்டியதை முழு அளவில் கொடுத்துக் கணக்கு தீர்த்து விடுகின்றன. இரு துறைகளும் தமது சரக்குகளிடையே பரஸ்பரப் பரிவர்த்தனை நடைபெற வழி செய்யும் பொருட்டு தமது சரக்குகளது மதிப்புக்கும் கூடுதலாகச் சுற்றோட்டத்துள் செலுத்தும் பணமானது, ஒவ்வொன்றும் செலுத்தும் பங்களவுக்கேற்ற விகிதத்தில் சுற்றோட்டத்திலிருந்து அதற்குத் திரும்பி வருகிறது. எதற்கும் இதனால் சல்லிக் காசும் கூடி விடவில்லை. துறை IIஇடம் ஆரம்பத்தில் இருந்தது இதுதான்: நுகர்வுப் பண்டங்களின் வடிவில் மாறா-மூலதனம் 2,000 + பண வடிவில் 500. இப்போது அதனிடம் இருப்பது: உற்பத்திச் சாதனங்களின் வடிவில் 2,000 + பண வடிவில் 500. அதாவது ஆரம்பத்தில் இருந்ததுதான் இப்போதும் அதனிடம் இருக்கிறது. இதே போல் துறை Iஇடமும் ஆரம்பத்தில் இருந்ததுதான் இப்போதும் இருக்கிறது: (உற்பத்திச் சாதன வடிவிலான சரக்குகள் என்ற நிலையிலிருந்து இப்போது நுகர்வுப் பண்ட நிதியமாக உருமாறியுள்ள) உபரி-மதிப்பு 1,000 + பண வடிவிலான 500. பொதுவான முடிவு இதுதான்: தொழில் துறை முதலாளிகள் தமது சரக்குகளைச் சுற்றியோடச் செய்வதற்காகச் சுற்றோட்டத்துள் பணம் செலுத்துகிறார்கள்; இந்தப் பணம் சரக்கு-மதிப்பின் மாறாப் பகுதியை

செலவிடுவதால் வருவதாயினும் சரி, சரக்குகளின் வடிவில் இருக்கும் உபரி-மதிப்பில் வருவாயாக ஒதுக்கப்படுவதைச் செலவிடுவதால் வருவதாயினும் சரி, பணச் சுற்றோட்டத்துக்காக அந்தந்த முதலாளியும் முன்னீடு செய்வது அப்படியே அவரவருக்கும் திரும்பி வந்து விடுகிறது.

துறை Iஐச் சேர்ந்த மாறும்-மூலதனம் மீண்டும் பண வடிவத்துக்குத் திரும்புவதைப் பொறுத்த வரை, இந்த மூலதனத்தை Iஇன் முதலாளிகள் கூலியாக முதலீடு செய்த பின் முதலில் அது சரக்கு வடிவில்தான் அவர்களிடம் இருந்து வருகிறது, சரக்கு வடிவில்தான் தொழிலாளர்கள் அதை அவர்களிடம் தருகிறார்கள். இத்தொழிலாளர்களுக்கு அவர்களது உழைப்புச் சக்திக்குரிய விலையாக முதலாளிகள் இந்த மூலதனத்தைப் பண வடிவில் அவர்களுக்குக் கொடுத்தார்கள். இவ்விதம் முதலாளிகள் தம்மிடமுள்ள சரக்கு-உற்பத்தியின் மதிப்பினுடைய இந்த அடக்கக் கூறுக்குரிய விலையைக் கொடுத்து விடுகிறார்கள். இந்த மதிப்புக் கூறு பண வடிவில் செலவிடப்பட்ட மாறும்-மூலதனத்துக்குச் சமமானது. ஆகவே சரக்கு-உற்பத்தியின் இந்தப் பகுதிக்கும் அவர்களே உடைமையாளர்கள் ஆகிறார்கள். ஆனால் அவர்கள் வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் தொழிலாளி வர்க்கத்தார் வாங்குகிறவை தாம் படைத்திடும் உற்பத்திச் சாதனங்கள் அல்ல. துறை IIஇல் உற்பத்தியாகும் நுகர்வுப் பண்டங்களை அவர்கள் விலை கொடுத்து வாங்குகிறார்கள். எனவே உழைப்புச் சக்திக்கு ஊதியமளிக்கையில் Iஇன் முதலாளிகள் முன்னீடு செய்கிற மாறும்-மூலதனம் நேரடியாக இம்முதலாளிகளிடம் திரும்புவதில்லை. தொழிலாளர்கள் தமக்குத் தேவையானவற்றை விலைக்கு வாங்கும் நிகழ்வுகளின் வாயிலாக, உழைக்கும் மக்களுக்கு அவசியமானவையும் அவர்கள் கைக்கு எட்டக் கூடியவையுமான சரக்குகளையே தொழிலாளர்கள் வாங்குவதால், Iஇன் மாறா-மூலதனம் இச்சரக்குகளை உற்பத்தி செய்யும் முதலாளிகளிடம் போய்ச் சேருகிறது, அதாவது IIஇன் முதலாளிகளிடம் போய்ச் சேருகிறது. இம்முதலாளிகள் இப்பணத்தைச் செலவிட்டு உற்பத்திச் சாதனங்களை வாங்கும் போதுதான், அது இந்தச் சுற்று வழியில் Iஇன் முதலாளிகளது கைக்குத் திரும்பி வந்து சேருகிறது.

சாமானிய மறுவுற்பத்தி நடைபெறுவதாகக் கொண்டால், துறை Iஇல் சரக்கு-மூலதனத்தின் மதிப்புக் கூறுகளது கூட்டுத் தொகையாகிய v+s என்பதும் (ஆகவே Iஇன் மொத்தச் சரக்கு-உற்பத்தியில் இதற்கு ஒத்த விகிதாசாரமாகிய ஒரு பகுதியும்) $II_c$ என்னும் மாறா-மூலதனத்துக்குச் சமமாயிருக்க வேண்டும். இதே போல் இந்த மாறா-மூலதனமும் துறை IIஇன் மொத்தச் சரக்கு-உற்பத்தியில் ஒத்த விகிதாசாரப் பகுதியாக இருக்க வேண்டும். அதாவது, $I_{(v+s)} = II_c$.

## IV. துறை IIக்குள் பரிவர்த்தனை. அவசியப் பண்டங்களும் சொகுசுப் பண்டங்களும்

துறை IIஇன் சரக்கு-உற்பத்தியின் மதிப்பில் v+s என்னும் அடக்கக் கூறுகளை இன்னும் நாம் பரிசீலிக்கவில்லை. இந்தப் பகுப்பாய்வு இங்கே நம்மை எதிர்நோக்கும் மிக முக்கியக் கேள்வியுடன் சம்பந்தப்படாத ஒன்று. இந்தக் கேள்வி என்னவென்றால்: தனிப்பட்ட ஒவ்வொரு முதலாளியின் சரக்கு-உற்பத்தியினது மதிப்பையும் c+v+s என்பதாகப் பிரிவினை செய்கிறோமே, இந்தப் பிரிவினையானது வெவ்வேறு தோற்ற வடிவங்களின் விளைவாக ஏற்படுவதாகும் என்ற போதிலும், எந்த அளவுக்கு அது மொத்த வருடாந்தர உற்பத்தியின் மதிப்புக்கும் பொருந்தக் கூடியது? ஒரு புறம் $II_c$க்கு $I_{(v+s)}$ பரிவர்த்தனையாவதன் வாயிலாகவும், மறு புறம் Iஇன் வருடாந்தர உற்பத்தியானது $I_c$இன் மறுவுற்பத்திக்கு வகை செய்வது பற்றிப் பிற்பாடு நாம் செய்யப் போகும் பரிசீலனையின் வாயிலாகவும் நமக்கு இந்தக் கேள்விக்கான விடை கிடைக்கும். $II_{(v+s)}$ என்பது நுகர்வுப் பண்டங்களின் தசையுருவில் இருப்பதாலும், தொழிலாளர்களுக்கு அவர்களது உழைப்புச் சக்திக்குரிய விலையைத் தருவதற்காக முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தைப் பொதுவாக அவர்கள் நுகர்வுப் பண்டங்களுக்காகவே செலவிட வேண்டியிருப்பதாலும், மற்றும் சாமானிய மறுவுற்பத்தி நடைபெறுவதாகக் கொள்கிறோம் என்பதால் சரக்குகளது மதிப்பின் s-பகுதி நடைமுறையில் வருவாயாகவே நுகர்வுப் பண்டங்களுக்காகச் செலவிடப் படுவதாலும், IIஇன் தொழிலாளர்கள் IIஇன் முதலாளிகள் தரும் கூலியைக் கொண்டு தமது உற்பத்திப் பண்டத்திலேயே ஒரு பகுதியை, கூலியாகப் பெறப்படும் பண-மதிப்பு எவ்வளவோ அதற்கு இசைவான ஒரு பகுதியை வாங்குகிறார்கள் என்பது கூறாமலே விளங்கும். துறை IIஐச் சேர்ந்த முதலாளி வர்க்கம் உழைப்புச் சக்திக்கு விலை தருவதற்காக முன்னீடு செய்யும் பண-மூலதனம் பண வடிவத்திலேயே இவ்விதம் அதற்குத் திரும்பி வருகிறது. தொழிலாளர்களுக்குப் பணத்துக்கு பதில் மதிப்புச் சின்னங்களாய் அமையும் வெறும் வில்லைகளைக் கூலியாகத் தந்திருந்தாலும் இவ்வாறேதான் நடந்திருக்கும். தொழிலாளர்கள் உற்பத்தி செய்தவை என்றாலும் முதலாளிகளுக்குச் சொந்தமாகி விடும் இந்தச் சரக்குகளில் ஒரு பகுதியை அவர்கள் விலைக்கு வாங்குவதன் மூலம் இந்த மதிப்புச் சின்னங்களை ஈடேற்றம் பெறச் செய்தவுடன் இச் சின்னங்கள் முதலாளிகளின் கைக்குத் திரும்பி விடுகின்றன. இங்கே இந்தச் சின்னங்கள் தங்கம், வெள்ளி வில்லைகளாக இருப்பதால் அவை மதிப்பைக் குறிப்பது மட்டுமல்லாமல், மதிப்பைப் பெற்றிருக்கவும் செய்கின்றன. பண வடிவில் முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனமானது தொழிலாளி வர்க்கம் வாங்குவோராகவும் முதலாளி

வர்க்கம் விற்போராகவும் இருக்கிற ஒரு நிகழ்முறையின் போது எப்படித் திரும்பி வந்து சேருகிறது என்பதைப் பிற்பாடு இன்னும் விவரமாக ஆராய்வோம். ஆனால் இங்கே மாறும்-மூலதனம் இப்படி அதன் தொடக்க முனைக்குத் திரும்பி வருவது தொடர்பாய் எழும் வேறொரு பிரச்சினையைப் பரிசீலித்தாக வேண்டும்.

வருடாந்தர சரக்கு உற்பத்தியில் துறை II ஆனது பல்வேறு வகைப்பட்ட உற்பத்திக் கிளைகளைக் கொண்டதாகும். ஆயினும் இக்கிளைகளை அவற்றின் உற்பத்திப் பண்டங்களின் அடிப்படையில் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அ) நுகர்வுப் பண்டங்கள் — இவை தொழிலாளி வர்க்கத்தின் நுகர்வுக்குச் செல்கிறவை. வாழ்வதற்கு அவசியமான பண்டங்களாய் இருக்குமாயின் — தரத்திலும் மதிப்பிலும் பல சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களுடைய அவசியப் பண்டங்களிலிருந்து வேறுபட்டாலும் கூட — இவை முதலாளி வர்க்கத்தின் நுகர்வில் ஒரு பகுதியாய் இருப்பவை. நமது ஆய்வின் நோக்கம் கருதி இப்பிரிவுப் பண்டங்கள் அனைத்தையும் **அவசிய நுகர்வுப் பண்டங்கள்** [consumer necessities] என்று அழைக்கலாம். புகையிலையைப் போன்ற ஒரு பண்டம் உடலியலின் கண்ணோட்டத்தில் உண்மையில் அவசியமானதுதானா என்று பார்க்க வேண்டியதில்லை, பழக்கம் காரணமாய் அவசியமானதாய் இருந்தாலே போதும்.

ஆ) சொகுசுப் பண்டங்கள் [articles of luxury] — இவை முதலாளி வர்க்கத்தின் நுகர்வுக்கு மட்டுமே செல்கிறவை. ஆகவே உபரி-மதிப்பைச் செலவிட்டுப் பரிவர்த்தனை செய்வதன் மூலமே இவற்றைப் பெற முடியும்; இந்த உபரி-மதிப்பில் ஒருபோதும் தொழிலாளிக்குப் பங்கு கிடைப்பதில்லை.

முதல் பிரிவைப் பொறுத்த வரை, இதைச் சேர்ந்த சரக்குகளின் உற்பத்திக்காக முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனமானது, துறை IIஇன் முதலாளி வர்க்கத்தாரில் (அதாவது IIa என்பதன் முதலாளிகளில்) எப்பகுதியினர் இந்த அவசியப் பண்டங்களை உற்பத்தி செய்கிறார்களோ அந்தப் பகுதியினரிடம் (அதாவது IIa முதலாளிகளிடம்) பண வடிவில் நேரடியாய்த் திரும்பி வந்தாக வேண்டும். அவர்கள் இந்த அவசியப் பண்டங்களைத் தமது தொழிலாளர்களிடமே விற்கிறார்கள்; கூலியாக அவர்களுக்குத் தருகிற மாறும்-மூலதனம் எவ்வளவோ அவ்வளவுக்கு விற்கிறார்கள். துறை IIஐச் சேர்ந்த முதலாளி வர்க்கத்தாரில் a பிரிவினர் எல்லாரையும் பொறுத்த வரை, மாறும்-மூலதனத்தின் இந்த மீட்சி நேரடியாகவே நடந்தேறுகிறது. மீண்டு வரும் மாறும்-மூலதனம் உரிய விகிதத்தில் வினியோகமாகும் பொருட்டு, சம்பந்தப்பட்ட மிகப் பல்வேறுபட்ட தொழிற் கிளைகளைச் சேர்ந்த முதலாளிகளிடத்தே நடைபெறுகிற விற்றலும் வாங்கலுமான நடவடிக்கைகள் எவ்வளவுதான் எண்ணற்றவையாய் இருப்பினும் நேரடியான முறையில்தான் இந்த மீட்சி

நடந்தேறுகிறது. இவை எல்லாம் சுற்றோட்ட நிகழ்முறைகளாகும், தொழிலாளர்கள் செலவிடுகிற பணம்தான் இந்நிகழ்முறைகளுக்கு வேண்டிய சுற்றோட்ட ஊடகமாகிறது. ஆனால் IIb பிரிவில் இந்த மீட்சி வேறு விதமாய் நடந்தேறுகிறது. இப்பிரிவில் உற்பத்தி செய்யப்படும் மதிப்பு முழுதும், அதாவது $IIb_{(v+s)}$ முழுதும் தொழிலாளர்களால் வாங்க முடியாத சொகுசுப் பண்டங்களாய் இருக்கிறது. சொகுசுப் பண்டங்களையும் உற்பத்திச் சாதனங்களையும் தொழிலாளர்களே உற்பத்தி செய்கிறார்கள் என்றாலும், உற்பத்திச் சாதனங்களாய் இருக்கும் சரக்கு-மதிப்பாகிய $I_v$ஐப் போலவே இந்த சொகுசுப் பண்டங்களையும் தொழிலாளி வர்க்கம் வாங்க முடியாது. எனவே இப்பிரிவில் முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனம் அதன் பண வடிவில் முதலாளித்துவ உற்பத்தியாளர்களிடம் நேரடியாக மீள்வதற்கு வழியில்லை. Iஐப் போலவே இதற்கும் ஓர் இடையீட்டின் உதவி வேண்டியதாகிறது.

துறை II முழுமைக்கும் முன்பு போல் v=500 என்றும் s=500 என்றும் கொள்வோம். ஆனால் மாறும்-மூலதனமும் அதற்குரிய உபரி-மதிப்பும் பின்வருமாறு a, b பிரிவுகளிடையே வினியோகமாவதாய் வைத்துக் கொள்வோம்.

பிரிவு a—அவசியப் பண்டங்கள்: v=400; s=400; எனவே அவசியப் பண்ட வடிவிலான சரக்களவின் மதிப்பு$=400_v+400_s=800$; அல்லது IIa $(400_v+400_s)$.

பிரிவு b—சொகுசுப் பண்டங்கள்: இவற்றின் மதிப்பு $100_v+100_s=200$, அல்லது IIb $(100_v+100_s)$.

IIb பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்கள் தமது உழைப்புச் சக்திக்கு விலையாகப் பண வடிவில் பெறுவது 100. இதை £100 என்போம். இந்தப் பணத்தைக் கொண்டு அவர்கள் IIa பிரிவைச் சேர்ந்த முதலாளிகளிடமிருந்து அதே மதிப்பளவு கொண்ட நுகர்வுப் பண்டங்கள் வாங்குகிறார்கள். IIa பிரிவின் முதலாளிகள் இப்படித் தமக்கு வரப்பெறும் இந்தப் பணத்தைக் கொண்டு £100 பெறுமானமுள்ள IIb பிரிவுச் சரக்குகளை வாங்குகிறார்கள். IIb பிரிவைச் சேர்ந்த முதலாளிகளின் மாறும்-மூலதனம் பண வடிவில் இவ்விதம் அவர்களிடம் திரும்பி வந்து சேருகிறது.

IIa பிரிவைச் சேர்ந்த முதலாளிகள் அவர்களின் தொழிலாளர்களுடனேயே செய்து கொள்ளும் பரிவர்த்தனை மூலம் பண வடிவில் $400_v$ திரும்பி வந்து அவர்கள் வசமுள்ளது. இதன்றி அவர்களது உற்பத்திப் பண்டத்தில் உபரி-மதிப்பைக் குறிக்கும் பகுதியில் கால் பங்கு, IIb பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு விற்கப்பட்டு விடுகிறது. பிறகு பரிவர்த்தனை மூலம் இம்முதலாளிகளுக்கு சொகுசுப் பண்டங்களின் வடிவில் IIb $(100_v)$ கிடைக்கிறது.

IIa, IIb பிரிவுகளைச் சேர்ந்த முதலாளிகள் தத்தமது வருவாயிலிருந்து செய்கிற செலவினை ஒரே விகிதத்தில் அவசியப்

பண்டங்களுக்கும் சொகுசுப் பண்டங்களுக்கும் இடையே பகிர்ந்திடுவதாகக் கொள்வோமாயின் — உதாரணமாய் ஐந்தில் மூன்று பங்கை அவசியப் பண்டங்களுக்கு என்றும், ஐந்தில் இரண்டு பங்கை சொகுசுப் பண்டங்களுக்கு என்றும் பகிர்ந்திடுவதாகக் கொள்வோமாயின் — IIa பிரிவு முதலாளிகள் $400_s$ உபரி-மதிப்பிலிருந்தான வருவாயில் ஐந்தில் மூன்று பங்காகிய 240ஐ தாமே உற்பத்தி செய்கிற அவசியப் பண்டங்களுக்காகவும், ஐந்தில் இரு பங்காகிய 160ஐ சொகுசுப் பண்டங்களுக்காகவும் செலவிடுவார்கள். IIb பிரிவு முதலாளிகளும் தமது $100_s$ உபரி-மதிப்பை இதே முறையில் பகிர்ந்திடுவார்கள்: அவசியப் பண்டங்களுக்காக ஐந்தில் மூன்று பங்கு, அதாவது 60; சொகுசுப் பண்டங்களுக்காக ஐந்தில் இரு பங்கு, அதாவது 40. IIb பிரிவில் உற்பத்தி செய்யப்படுகிற இந்தச் சொகுசுப் பண்டங்கள் இங்கு இந்தப் பிரிவினுள்ளேயே பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றன.

$(IIa)_s$ என்பதற்கு பதில் சொகுசுப் பண்ட வடிவில் பெறப்படுகிற 160 எப்படி IIa பிரிவு முதலாளிகளின் கைக்குப் போகிறது என்று பார்ப்போம். அவசியப் பண்டங்களின் வடிவிலான (IIa) $400_s$ என்பதில் 100 ஆனது சொகுசுப் பண்டங்களின் வடிவிலான $(IIb)_v$ என்பதில் 100 என்னும் சம தொகைக்குப் பரிவர்த்தனை செய்யப்பட்டதை முன்பே பார்த்தோம். பிறகு அவசியப் பண்டங்களின் வடிவிலான 60 ஆனது சொகுசுப் பண்டங்களின் வடிவிலான (IIb) $60_s$ என்பதற்குப் பரிவர்த்தனை ஆயிற்று. ஆக மொத்தக் கணக்கு பின்வருமாறு:

IIa: $400_v + 400_s$; IIb: $100_v + 100_s$.

1) $400_v$ (a) என்பது IIa பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்களால் நுகரப்படுகிறது; அது அவர்களது உற்பத்திப் பொருளில் (அவசியப் பண்டங்களில்) ஒரு பகுதி ஆகும். தொழிலாளர்கள் அவற்றைத் தமது பிரிவைச் சேர்ந்த முதலாளித்துவ உற்பத்தியாளர்களிடமிருந்து விலைக்கு வாங்குகிறார்கள். இந்த முதலாளிகள் இதே தொழிலாளர்களுக்குக் கூலியாகக் கொடுத்த தமது மாறும்-மூலதன மதிப்பாகிய 400ஐப் பண வடிவில் (£400) மீட்டுக் கொள்கிறார்கள். அதைக் கொண்டு இப்போது அவர்கள் மீண்டும் உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்க முடியும்.

2) $400_s$ (a) என்பதில், உபரி-மதிப்பு (a) என்பதில் கால் பங்கான $100_v$ (b) என்பதற்குச் சமமான ஒரு பகுதி பின்வருமாறு சொகுசுப் பண்டங்களாக ஈடேற்றம் பெறுகிறது: b பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்கள் அதே பிரிவைச் சேர்ந்த முதலாளிகளிடமிருந்து கூலியாக £100 பெற்றார்கள். இந்தத் தொகையைக் கொண்டு அவர்கள் அவசியப் பண்ட வடிவிலான உபரி-மதிப்பு (a) என்பதில் கால் பங்கு சரக்குகளை விலைக்கு வாங்குகிறார்கள். இந்தப் பணத்தைக் கொண்டு a பிரிவைச் சேர்ந்த முதலாளிகள்

அதே மதிப்புக்கு சொகுசுப் பண்டங்கள் வாங்குகிறார்கள். இது $100_v$ (b) என்பதற்குச் சமமாகிறது; அதாவது சொகுசுப் பண்டங்களின் மொத்த உற்பத்தியில் சரிபாதி ஆகிறது. b பிரிவைச் சேர்ந்த முதலாளிகள் இவ்விதம் தமது மாறும்-மூலதனத்தைப் பண வடிவில் மீட்டுக் கொள்கிறார்கள். இப்போது அவர்கள் மீண்டும் உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்கி மீண்டும் மறுவுற்பத்தியைத் தொடங்க முடிகிறது. ஏனெனில், துறை IIஐச் சேர்ந்த மாறா-மூலதனம் முழுவதும் $II_c$ என்பதற்கு $I_{(v+s)}$ பரிவர்த்தனையானதன் மூலம் மாற்றீடு செய்யப்பட்டு விட்டது. ஆகவே சொகுசுப் பண்டத் தொழிலாளர்கள் தமது உழைப்புச் சக்தியை மீண்டும் விற்க முடிகிறதெனில், அவர்களது உற்பத்திப் பண்டத்தில் அவர்களது கூலிக்குச் சமதையாகிற ஒரு பகுதியை IIa பிரிவு முதலாளிகள் தமது நுகர்வு நிதியத்தில் சேர வைத்துப் பணமாக மாறச் செய்வதுதான் அதற்குக் காரணம். (துறை Iஇன் உழைப்புச் சக்தி விற்கப்படுகையிலும் இவ்வாறே நடைபெறுகிறது: $I_{(v+s)}$ என்பதற்குப் பரிவர்த்தனை ஆகிற $II_c$ என்பதில் சொகுசுப் பண்டங்கள், அவசியப் பண்டங்கள் ஆகிய இரு வகைகளும் உள்ளன. $I_{(v+s)}$ என்பதைக் கொண்டு மாற்றீடு செய்யப்படும் உற்பத்திச் சாதனங்கள் சொகுசுப் பண்டங்கள், அவசியப் பண்டங்கள் ஆகிய இரு வகைகளையும் உற்பத்தி செய்கிறவை.

*3)* a பிரிவுக்கும் b பிரிவுக்கும் இடையே நடைபெறும் பரிவர்த்தனையை இப்போது பரிசீலிக்க வேண்டும். இது இவ்விரு பிரிவுகளையும் சேர்ந்த முதலாளிகளுக்கிடையே மட்டும் நடைபெறுகிற பரிவர்த்தனை ஆகும். a பிரிவின் மாறும்-மூலதனத்தையும் ($400_v$), உபரி-மதிப்பில் ஒரு பகுதியையும் ($100_s$) b பிரிவின் மாறும்-மூலதனத்தையும் ($100_v$) இது வரை பரிசீலித்தோம். மேலும் முதலாளிகள் தமது வருவாயைச் செலவிடும் சராசரி விகிதம் இரு துறைகளிலுமே, சொகுசுப் பண்டங்களுக்கு ஐந்தில் இரு பங்கு, அவசியப் பண்டங்களுக்கு ஐந்தில் மூன்று பங்கு என்பதாகக் கொண்டோம். ஏற்கெனவே சொகுசுப் பண்டங்களுக்காகச் செலவிடப்பட்ட 100ஐ அன்னியில், பிரிவு a முழுவதற்குமாக இன்னும் சொகுசுப் பண்டங்களுக்காக 60ஐயும் நமது விகிதப்படி பிரிவு b முழுவதற்கும்மாக 40ஐயும் ஒதுக்க வேண்டியுள்ளது.

இவ்விதம் $(IIa)_s$ என்பது அவசியப் பண்டங்களுக்காக 240, சொகுசுப் பண்டங்களுக்காக 160 என்று பிரிக்கப்படுகிறது; அதாவது $240+160=400_s(IIa)$.

$(IIb)_s$ என்பது அவசியப் பண்டங்களுக்காக 60, சொகுசுப் பண்டங்களுக்காக 40 என்று பிரிக்கப்படுகிறது; அதாவது $60+40=100_s(IIb)$. சொகுசுப் பண்டங்களுக்கான 40ஐ இந்த வர்க்கத்தார் தமது உற்பத்தியிலிருந்தே (அவர்களது உபரி-மதிப்பில் ஐந்தில் இரு பங்கு) நுகருகின்றனர்: தமது உபரி-மதிப்பில் 60ஐ

எடுத்து $60_s$ (a) என்பதற்காகப் பரிவர்த்தனை செய்வதன் மூலம் அவசியப் பண்ட வடிவிலான 60ஐப் பெறுகின்றனர்.

ஆக, துறை IIஇன் முதலாளி வர்க்கம் முழுவதையும் எடுத்துக் கொண்டால், கிடைப்பது பின்வருமாறு [v+s என்பது a பிரிவில் அவசியப் பண்டங்களால் ஆனது; b பிரிவில் சொகுசுப் பண்டங் களால் ஆனது]:

IIa $(400_v+400_s)$+IIb $(100_v+100_s)=1,000$. இவ்வாறு இந்த இயக்கத்தால் ஈடேற்றம் பெறுவது: $500_v$ (a+b) [$400_v$ (a)+$100_s$ (a) என்பதில் ஈடேற்றம் பெறுவது]+$500_s$ (a+b) [$300_s$(a)+$100_v$ (b) +$100_s$ (b) என்பதில் ஈடேற்றம் பெறுவது]=1,000.

ஒவ்வொன்றையும் அதனளவில் நோக்கும் போது, a பிரிவிற் கும் b பிரிவிற்கும் பெறப்படும் ஈடேற்றம் வருமாறு:

$$\text{a) } \overbrace{400_v(a)}^{v}+\overbrace{240_s(a)+100_v(b)+60_s(b)}^{s}=800$$

$$\text{b) } \overbrace{100_s(a)}^{v}+\overbrace{60_s(a)+40_s(b)}^{s}\cdots\cdots\cdots=\frac{200}{1,000}$$

எளிமையாக்கும் பொருட்டு இரு பிரிவிலும் மாறும்-மூலதனமும் மாறா-மூலதனமும் ஒரே விகிதாசாரத்தில் இருப்பதாகக் கொள்வோ மாயின் (இப்படி இருந்தாக வேண்டும் என்ற அவசியம் இல்லை), $400_v$ (a) என்பதற்கு 1,600 மாறா-மூலதனமும், $100_v$ (b) என் பதற்கு 400 மாறா-மூலதனமும் பெறப்படுகின்றன. ஆக, துறை IIஇன் a, b பிரிவுகள் வருமாறு:

$$\text{IIa) } 1,600_c+400_v+400_s=2,400$$
$$\text{IIb) } 400_c+100_v+100_s=600,$$

இரண்டையும் கூட்டினால் கிடைப்பது:

$$2,000_c+500_v+500_s=3,000.$$

இதன் படி, 2,000 $I_{(v+s)}$ என்பதற்குப் பரிவர்த்தனை ஆகிற 2,000 $II_c$ நுகர்வுப் பண்டங்களின் வடிவில் இருப்பது, இந்த 2,000 $II_c$இல் 1,600 அவசியப் பண்டங்களின் உற்பத்திச் சாத னங்களுக்கும், 400 சொகுசுப் பண்டங்களின் உற்பத்திச் சாதனங் களுக்கும் பரிவர்த்தனை ஆகிறவை.

ஆகவே 2,000 $I_{(v+s)}$ இரு கூறுகளாகிறது: ஒன்று a பிரிவுக்குச் செல்லும் $(800_v+800_s)$ I, 1,600க்குச் சமமானது, அவசியப் பண்டங்களின் உற்பத்திச் சாதனங்களாலானது; மற்றொன்று b பிரிவுக்குச் செல்லும் $(200_v+200_s)$ I, 400க்குச் சமமானது, சொகுசுப் பண்டங்களின் உற்பத்திச் சாதனங்களாலானது.

முறையான உழைப்புச் சாதனங்களிலும், கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்கள் முதலானவற்றிலும் கணிசமான பகுதி இரு

துறைகளுக்கும் ஒரே மாதிரியாக இருப்பவை. ஆனால் மொத்த உற்பத்திப் பண்ட மதிப்பாகிய $I_{(v+s)}$இன் பல்வேறு கூறுகளும் பரிவர்த்தனையாவதைப் பொறுத்த வரை, இந்தத் துறைப் பிரிவினை யால் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை. மேற்சொன்ன $800I_v$, $200I_v$ ஆகிய இரண்டுமே $1,000II_c$ என்னும் நுகர்வுப் பண்டங் களுக்குப் பரிவர்த்தனையாவதன் மூலம் ஈடேற்றம் பெறுகின்றன; இந்த நுகர்வுப் பண்டங்களை விலைக்கு வாங்குவதற்காகவே கூலி செலவிடப்படுகிறது. எனவே இதன் பொருட்டு முன்னீடு செய்யப் படும் பண-மூலதனம் திரும்பி வந்ததும், Iஇன் முதலாளித்துவ உற்பத்தியாளர்களிடையே தக்கபடி அது வினியோகமாகிறது; அவ ரவரும் முன்னீடு செய்யும் மாறும்-மூலதனமும் விகிதப்படி பண மாக மாற்றீடு செய்யப்படுகிறது. மறு புறம், $1,000I_s$ என்பதன் ஈடேற்றத்தைப் பொறுத்த வரை, இம்முதலாளிகளும் அவரவரது sஇன் பருமனுக்கேற்ற விகிதத்தில் $II_c = 1,000$ என்பதன் இரண் டாம் பாதி முழுவதிலிருந்தும் நுகர்வுச் சாதனங்களின் வடிவில் $600II_a$ என்பதையும் 400IIb என்பதையும் பெறுவார்கள்.

ஆகவே IIa என்பதன் மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்வோர் பின்வருவதைப் பெறுவர்:

$600_c$ (IIa) என்பதிலிருந்து 480 (ஐந்தில் மூன்று பங்கு); $400_c$ (IIb) என்பதிலிருந்து 320 (ஐந்தில் இரு பங்கு); மொத்தம் 800.

IIb என்பதன் மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்வோருக்குக் கிடைப்பது:

$600_c$ (IIa) என்பதிலிருந்து 120 (ஐந்தில் மூன்று பங்கு); $400_c$ (IIb) என்பதிலிருந்து 80 (ஐந்தில் இரு பங்கு); மொத்தம் 200.

இரண்டையும் கூட்டினால் கிடைப்பது 1,000.

துறை I, துறை II ஆகிய இரண்டிலும் மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்கும் உள்ள விகிதத்தை இங்கு நாம் மனம் போன போக்கில் அனுமானித்துக் கொண்டோம். அதே போல் துறை I, துறை II, அவற்றின் பிரிவுகள் ஆகிய யாவற்றிலும் இந்த விகிதம் முழுதொத்திருப்பதாகக் கொண்டதும் மனம் போல் அமைந்ததுதான். எளிமையாக்கும் பொருட்டே இந்த விகிதம் முழு தொத்திருப்பதாகக் கொண்டோம். வெவ்வேறு விகிதங்களாய் இருப்பதாகக் கொண்டாலும், அதனால் இங்கு நம் முன்னுள்ள பிரச்சினையிலோ அதன் தீர்விலோ எவ்வித மாற்றமும் ஏற்பட்டு விடாது. சாமானிய மறுவுற்பத்தி நடைபெறுவதாகக் கொள்ளும் போது, மேற்கூறிய யாவற்றிலுமிருந்து பெறப்படும் தவிர்க்க முடி யாத முடிவுகள் வருமாறு:

1) வருடாந்தர உழைப்பினால் உண்டாக்கப்படுகிற உற்பத்திச் சாதனங்களது வடிவிலான புதிய மதிப்பானது (v+s என்பதாக இது பகுபடக் கூடியது), வருடாந்தர உழைப்பின் மற்றொரு பகுதி யால் உண்டாக்கப்படுகிறவையும் நுகர்வுப் பண்டங்களது வடிவில்

மறுவுற்பத்தியாகிறவையுமான பொருட்களின் மதிப்பில் அடங்கியுள்ள மாறா-மூலதனமாகிய cஇன் மதிப்புக்குச் சமமாகும். $II_c$ஐ விட இந்தப் புதிய மதிப்பு குறைவாய் இருந்தால், துறை IIஆல் அதன் மாறா-மூலதனத்தை முழு அளவில் மாற்றீடு செய்ய முடியாது; அதிகமாய் இருந்தால், பயன்படுத்த முடியாத ஓர் உபரி எஞ்சி நிற்கும். இரண்டுமே சாமானிய மறுவுற்பத்தி என்ற நமது அனுமானத்துக்கு ஒவ்வாதவை.

*2)* நுகர்வுப் பண்டங்களது வடிவில் மறுவுற்பத்தியாகிற வருடாந்தர உற்பத்திப் பொருளைப் பொறுத்த வரை, பண வடிவில் முன்னீடு செய்யப்படுகிற மாறும்-மூலதனமான vஐப் பெறுவோர் அதை எப்படி ஈடேற்றம் செய்ய முடிகிறது? சொகுசுப் பண்டம் உற்பத்தி செய்யும் தொழிலாளர்களாய் இருப்பின், அவசியப் பண்டங்களில் எப்பகுதி அவற்றின் முதலாளித்துவ உற்பத்தியாளர்களுக்கான உபரி-மதிப்பைப் பட்டவர்த்தனமாகவே உருக்கொண்டதாய் இருக்கிறதோ, அந்தப் பகுதியில்தான் அவர்கள் அதனை ஈடேற்றம் செய்ய முடிகிறது. ஆகவே vஇல் சொகுசுப் பண்ட உற்பத்திக்காக முன்னீடு செய்யப்படும் பகுதியானது, sஇல் அவசியப் பண்ட வடிவில் உற்பத்தியாகிற பகுதிக்கு மதிப்பில் சமமாகிறது. இதனால் vஇன் இப்பகுதி sஇன் முழு அளவைக் காட்டிலும் — அதாவது $(IIa)_s$ஐக் காட்டிலும் — குறைவானதாகவே இருந்தாக வேண்டும் என்பதும், சொகுசுப் பண்டங்களின் முதலாளித்துவ உற்பத்தியாளர்கள் முன்னீடு செய்யும் மாறும்-மூலதனமானது, sஇன் இப்பகுதியில் vஇன் அப்பகுதி ஈடேற்றம் பெறுவதன் மூலம்தான் பண வடிவில் திரும்பி வருகிறது என்பதும் தெளிவாகிறது. $I_{(v+s)}$ ஆனது எப்படி $II_c$ஆக ஈடேற்றம் பெறுகிறதோ அதைப் போன்றதே ஆகும் இது. ஒரே ஒரு வேறுபாடு என்னவென்றால், இங்கே $(IIb)_v$ ஆனது $(IIa)_s$இல் ஒரு பகுதியாக மட்டுமே, தனக்கு ஒத்த மதிப்புள்ள ஒரு பகுதியாக மட்டுமே ஈடேற்றம் பெறுகிறது. வருடாந்தர மொத்த உற்பத்தி எவ்விதம் பங்கிடப்படுவதாயினும், ஒவ்வொரு பங்கீட்டிலும் இந்த விகிதங்கள் பண்பு வழியில் நிர்ணயிக்கும் காரணிகளாய் இருப்பவை, ஏனெனில் இவை சுற்றோட்டத்தின் வாயிலாக நடந்தேறும் வருடாந்தர மறுவுற்பத்தி நிகழ்முறையினுள் செல்கிறவை. $I_{(v+s)}$ ஆனது $II_c$ ஆகத்தான் ஈடேற்றம் பெற முடியும்; இந்த ஈடேற்றத்தின் மூலம்தான் $II_c$ புதுப்பிக்கப் பெற்று திரும்பவும் திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறாகச் செயல்பட முடியும். இதே போல் $(IIb)_v$ ஆனது $(IIa)_s$இன் ஒரு பகுதியாக மட்டுமே ஈடேற்றம் பெற முடியும்; இந்த ஈடேற்றத்தின் மூலம்தான் $(IIb)_v$ ஆனது பண-மூலதன வடிவத்துக்குத் திரும்ப முடியும். இதெல்லாம் உண்மையில் மறுவுற்பத்தி நிகழ்முறையின் விளைவாக நடைபெறும் அளவுக்குத்தான், அதாவது எடுத்துக்காட்டாக IIb முதலாளிகள் vக்கான பண-மூலதனத்தை மற்றவர்களிடமிருந்து

கடனாகப் பெறாத அளவுக்குத்தான் பொருந்துகிறவை என்பதைக் கூறத் தேவையில்லை. அளவுவழியில் பார்க்குமிடத்து, பொருளுற்பத்தியின் அளவுவீதமும் மதிப்புறவுகளும் மாறாதிருக்கும் வரைதான், வெளிநாட்டு வர்த்தகம் இந்த நிலையான மதிப்புறவுகளை மாற்றாதிருக்கும் வரைதான், வருடாந்தர உற்பத்தியின் பல்வேறு பகுதிகளிடையிலான பரிவர்த்தனைகள் மேற்கூறிய விகிதங்களில் நடந்தேறும்.

இப்போது நாம் ஆதாம் ஸ்மித்தின் முறையை அனுசரித்து, $I_{(v+s)}$ ஆனது $II_c$ ஆகப் பகுபடுகிறது என்றும், $II_c$ ஆனது $I_{(v+s)}$ ஆகப் பகுபடுகிறது என்றும் சொல்வோமாயின், அல்லது இன்னுங்கூட அதிகமாகவும் இன்னுங்கூட அபத்தமாகவும் அவர் கூறி வந்தது போல் $I_{(v+s)}$ ஆனது $II_c$இனது விலையின் (அல்லது அவர் சொல்வது போல ''பரிவர்த்தனை-மதிப்பின்'') அடக்கக் கூறுகளாகிறது என்றும், $II_c$ ஆனது $I_{(v+s)}$இன் மதிப்பின் முழு அடக்கக் கூறாகிறது என்றும் சொல்வோமாயின் $(IIb)_v$ ஆனது $(IIa)_s$ ஆகப் பகுபடக் கூடியது என்றோ, $(IIa)_s$ ஆனது $(IIb)_v$ஆகப் பகுபடக் கூடியது என்றோ, $(IIb)_v$ ஆனது IIaஇனது உபரி-மதிப்பின் ஓர் அடக்கக் கூறாகிறது என்றோ சொல்ல வேண்டியிருக்கும்; இதே போல உபரி-மதிப்பு இவ்வாறு கூலியாக, அதாவது மாறும்-மூலதனமாகப் பகுபடக் கூடியது என்றும், மாறும்-மூலதனம் உபரி-மதிப்பின் ''அடக்கக் கூறு'' ஆகிறது என்றும் கூற வேண்டியிருக்கும். உள்ளபடியே ஆதாம் ஸ்மித் இப்படித்தான் அபத்தமாக்கி விடுகிறார். ஏனெனில் அவர் கருத்துப்படி கூலியானது வாழ்வதற்கு வேண்டிய அவசியப் பண்டங்களது மதிப்பால் நிர்ணயிக்கப்படுகிறது; இதே போல் இச்சரக்கு-மதிப்புகள் அவற்றில் அடங்கியுள்ள கூலியின் மதிப்பாலும் (மாறும்-மூலதனத்தாலும்) உபரி-மதிப்பாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. முதலாளித்துவத்தின் அடிப்படையில் ஒரு வேலை-நாளில் உற்பத்தியாகிற மதிப்பானது பின்னப் பகுதிகளாக, அதாவது v+s ஆகப் பகுபடுகிறதே, அதில் அவரது கவனமெல்லாம் அப்படிக் குவிந்து விடுவதால், ஏனையவற்றை அவர் கவனிக்கத் தவறி விடுகிறார். சாதாரண சரக்குப் பரிவர்த்தனையில், வெவ்வேறு தசையுருவங்களில் அமைந்த சமதைகள் ஊதிய உழைப்பால் ஆனவையாயினும் சரி, ஊதியமிலா உழைப்பால் ஆனவையாயினும் சரி, எல்லாம் ஒன்றுதான், எப்படியானாலும் ஒரே அளவு உழைப்புதான் அவற்றுக்குச் செலவாகிறது என்பதை அவர் கவனிக்கத் தவறி விடுகிறார். அதே போல, Aஇன் சரக்கு உற்பத்திச் சாதனமாகவும் bஇன் சரக்கு நுகர்வுப் பண்டமாகவும் இருப்பதாலோ, விற்பனையான பின் ஒரு சரக்கு மூலதனத்தின் அடக்கக் கூறுகளில் ஒன்றாகப் பயன்பட வேண்டியிருப்பதாலோ, பிறிதொரு சரக்கு நுகர்வுப் பண்ட நிதியத்தில் சேர்ந்து, (ஆதாம் ஸ்மித்தின் சொற்களில் சொல்வதெனில்) வருவாயாக நுகரப்பட

வேண்டியிருப்பதாலோ, இங்கு எந்த வேறுபாடும் ஏற்படுவதில்லை என்பதையும் அவர் மறந்து விடுகிறார்.' சரக்கை வாங்குகிற தனிப் பட்ட ஒருவர் அதை எப்படிப் பயன்படுத்துகிறார் என்பது சரக்குப் பரிவர்த்தனையின் கட்டுக்கோப்புக்கு, அதாவது சுற்றோட்டத் துறைக்கு உட்பட்டதல்ல; சரக்கின் மதிப்பு அதனால் எவ்விதத்திலும்' பாதிக்கப்படுவதில்லை. சமுதாயத்தின் மொத்த வருடாந்தர உற் பத்தியின் சுற்றோட்டத்தைப் பகுத்தாராயும் போது, எவ்விதம் பயன் படுவதற்காக ஒரு பண்டம் உற்பத்தி செய்யப்பட்டது, சமுதாய உற்பத்தியின் பல்வேறு அடக்கக் கூறுகளும் நுகரப்பட வேண்டிய முறை என்ன என்பதெல்லாம் கருதப்பட வேண்டியவை என்ற போதிலும், இவற்றால் சரக்கின் மதிப்பு எவ்விதத்திலும் மாறி விடுவதில்லை.

$(IIb)_v$ ஆனது $(IIa)_s$இல் அதே மதிப்புள்ள ஒரு பகுதிக்குப் பரிவர்த்தனை ஆவதையும், மேலும் தொடர்ந்து $(IIa)_s$, $(IIb)_s$ இவற் றுக்கு இடையில் நடைபெறும் பரிவர்த்தனைகளையும் மேலே நாம் பரிசீலிக்கையில், IIa, IIb இவற்றின் தனிப்பட்ட முதலாளிகளோ, அந்தந்தப் பிரிவுக்குமுரிய முதலாளிகளது ஒட்டுமொத்தத் தொகு தியோ அவர்களுடைய உபரி-மதிப்பை நுகர்வுப் பண்டங்களுக்கும் சொகுசுப் பண்டங்களுக்கும் இடையே ஒரே விகிதத்தில் பிரித்துக் கொள்வதாக நாம் அனுமானம் செய்து கொண்டு விடவில்லை. ஒருவர் ஒருவித நுகர்வுக்கு அதிகமாகவும், மற்றொருவர் வேறொரு வித நுகர்வுக்கு அதிகமாகவும் செலவிடலாம். சாமானிய மறுவுற்பத்தி நடைபெறுகையில் உபரி-மதிப்பு முழுவதற்கும் சமமான மதிப்பு களின் தொகை நுகர்வு-நிதியத்தில் ஈடேற்றம் பெறுவதாக மட்டுமே வைத்துக் கொண்டோம். வரம்புகள் இவ்வாறு குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு துறையினுள்ளும் ஒருவர் a பிரிவிலும் மற்றொருவர் b பிரிவிலும் அதிகம் செலவிடலாம். ஆனால் பரஸ்பரம் ஒன்றை யொன்று சரிக்கட்டிக் கொண்டு, a, b முதலாளிகளது தொகுதி ஒவ் வொன்றையும் மொத்தமாகக் கருதுகையில் இரு பிரிவுகளிலும் ஒவ் வொன்றும் ஒரே விகிதத்தில் பங்கெடுத்துக் கொள்ளக் காண்கி றோம். துறை IIஇன் உற்பத்தியினது மொத்த மதிப்பில், a, b ஆகிய இரு வகை உற்பத்தியாளர்களும் பெறுகிற விகிதாசாரப் பங்குகளும், ஆகவே இந்த உற்பத்திப் பண்டங்களைத் தயாரித்தளிக்கும் உற்பத் திக் கிளைகளுக்கிடையிலான அளவுவழிப்பட்ட உறவும் குறிப்பிட்ட அந்தந்த நேர்விலும் அவசியம் நிர்ணயமானவையாகவே இருந்தாக வேண்டும். எடுத்துக்காட்டாகக் கொள்ளப்பட்ட விகிதம் மட்டுமே அனுமானித்துக் கொள்ளப்பட்டது. இதற்கு பதில் வேறொரு விகி தத்தை எடுத்துக்காட்டாகக் கொண்டிருந்தால், அளவுவழிப்பட்ட நிர்ணயிப்புகள் மாறியிருக்குமே தவிர பண்புவழிப்பட்டவற்றில் எந்த மாற்றமும் இருக்காது. ஆனால் எக்காரணத்தாலாவது a, b இவற் றின் ஒப்பீட்டுப் பருமன்களில் மாற்றம் ஏற்படுமாயின், சாமானிய

மறுவுற்பத்தி நிலைமைகளும் அதற்கேற்ப மாறி விடும்.

$(IIb)_v$ ஆனது $(IIa)_s$இல் தனக்குச் சமமான ஒரு பகுதியில் ஈடேற்றம் பெறுவதால், வருடாந்தரப் பொருளுற்பத்தியில் சொகுசுப் பண்டங்களுக்குரிய பகுதி எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாகிச் செல்கிறதோ, அதாவது சொகுசுப் பண்டங்களின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்தியின் விகிதம் எவ்வளவுக்கு எவ்வளவு பெருகிச் செல்கிறதோ, $(IIb)_v$க்காக முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தின் பண வடிவமாகச் செயல்படக் கூடிய பண-மூலதனமாக அடையும் மாற்றமும், அதன் மூலம் IIb பிரிவில் வேலை செய்யும் தொழிலாளி வர்க்கப் பகுதியின் வாழ்வும் மறுவுற்பத்தியும்—அவர்களுக்கு வேண்டிய அவசிய நுகர்வுப் பண்டங்களின் வழங்கீடும்—முதலாளி வர்க்கத்தின் ஊதாரித்தனத்தை, அதாவது அவர்களது உபரி-மதிப்பில் ஒரு கணிசப் பகுதி சொகுசுப் பண்டங்களுக்காகப் பரிவர்த்தனை ஆவதைப் பொறுத்ததாகிறது.

நெருக்கடி ஒவ்வொன்றும் உடனே சொகுசுப் பண்டங்களின் நுகர்வைக் குறையச் செய்கிறது. $(IIb)_v$ ஆனது மீண்டும் பண-மூலதனமாக மாறுவதைத் தடுத்துத் தாமதப்படுத்துகிறது, இம்மாற்றம் சரிவர நடைபெற இடந்தருவதில்லை. சொகுசுப் பண்ட உற்பத்தியில் வேலை செய்து வந்த தொழிலாளர்களில் ஒரு பகுதியோரை இவ்விதம் அது வேலை இழக்குமாறு செய்கிறது. இதனால் அவசிய நுகர்வுப் பண்டங்களின் விற்பனையும் குறைய வேண்டியதாகிறது. இதன்றி, திறனிலாத் தொழிலாளர்கள் [unproductive labourers] பலரும் வேலை இழக்க நேர்வதைக் கூறத் தேவையில்லை. இத்தொழிலாளர்கள் முதலாளிகளது சொகுசுப் பண்டச் செலவு நிதியிலிருந்து ஒரு பகுதியை ஊதியமாகப் பெறுகிறவர்கள் (அந்த அளவுக்குத் தாமே சொகுசுப் பண்டங்களாய் இருப்பவர்கள்). அவசியப் பண்டங்களின் நுகர்வில் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பங்கு பெறுகிறவர்கள். செழிப்புக் காலங்களில், குறிப்பாக போலியான செழிப்புக் காலங்களில் நேர்மாறானது நடைபெறுகிறது. பண்டங்களில் வெளிப்படுகிற ஒப்பீட்டுப் பண மதிப்பு (மதிப்புகளில் உள்ளபடியான புரட்சியேதும் நடைபெறாமலே) இப்போது பிற காரணங்களாலும் குறைகிறது. இதனால், சரக்குகளின் மதிப்புகள் உயராமலே அவற்றின் விலைகள் உயருகின்றன. அவசியப் பண்டங்களின் நுகர்வு மட்டும்தான் அதிகமாகிறது என்பதில்லை. தொழிலாளி வர்க்கமும் (அதன் சேமப் பட்டாளமுங்கூட இப்போது அதோடு சேர்ந்து பண்ட நுகர்வில் முனைப்புடன் ஈடுபடுகிறது) சாதாரணமாக அதன் கைக்கெட்டாத சொகுசுப் பண்டங்களையும், சாதாரண காலங்களில் பெரும்பாலும் முதலாளி வர்க்கத்துக்கு மட்டும் ''அவசிய'' நுகர்வுப் பண்டங்களாய் இருக்கிற பண்டங்களையும் வாங்கி அனுபவிக்க முற்படுகிறது. விலைகள் இதனால் உயர வேண்டியதாகிறது.

பயன்திறனுள்ள நுகர்வு [effective consumption] அல்லது பயன் திறனுள்ள நுகர்வாளர் பற்றாக்குறையாகி விடுவதுதான் நெருக்கடிகளுக்குக் காரணம் என்கிறார்கள். கூறியதையே கூறும் சொற்புரட்டு ஆகுமே தவிர இது காரண விளக்கம் ஆகாது. பஞ்சையர் நுகர்வையும் மோசடிக்காரர் நுகர்வையும் ஒதுக்கி விட்டுப் பார்த்தால், முதலாளித்துவ அமைப்பானது பயன்திறனுள்ள நுகர்வைத் தவிர வேறு எந்த விதமான நுகர்வையும் அறியாதது. சரக்குகள் விற்பனையாகாமல் தேங்குகின்றன என்றால், விலை கொடுத்து வாங்கக் கூடியவர்கள், அதாவது பயன்திறனுள்ள நுகர்வாளர்கள் அவற்றுக்கு யாரும் கிடைக்கவில்லை என்றுதான் அர்த்தம். (ஏனெனில், இறுதியாகப் பார்க்கையில், திறனுடை நுகர்வுக்காகவோ சொந்த நுகர்வுக்காகவோதான் சரக்குகளை விலைக்கு வாங்குகிறார்கள்.) தொழிலாளி வர்க்கம் உற்பத்தி செய்வதில் மிகச் சிறு பகுதியே அதன் கைக்குக் கிடைக்கிறது, இன்னும் கூடுதலான ஒரு பங்கு அதற்குக் கிடைக்குமானால், அதாவது அதற்குக் கிடைக்கும் கூலி உயருமானால், கேடு தீர்ந்து விடும் என்று வாதாடி மேற்கூறிய சொற்புரட்டுக்கு நியாய விளக்கம் அளிக்க முயலுவார்களாயின், அவர்களுக்கு நாம் கூற விரும்புவது இதுதான்: பொதுவாக எல்லாருக்கும் கூலி எப்போது உயர்ந்து செல்கிறதோ, சமுதாயத்தின் வருடாந்தரப் பொருளுற்பத்தியில் நுகர்வுக்கென அமையும் பகுதியில் தொழிலாளி வர்க்கத்துக்கு எப்போது உள்ளபடியே பெரியதொரு பங்கு கிடைக்கிறதோ, அந்தக் காலகட்டம்தான் எப்போதுமே நெருக்கடிகளுக்குத் தயாரிப்பு செய்யும் காலகட்டமாகிறது. குற்றங்குறையற்ற ''சர்வ சாதாரண'' (!) அன்றாடப் பொது அறிவை ஆதாரமாய்க் கொண்டு வாதாடுவதாகக் கூறுகிற இவர்களது கண்ணோட்டத்தின்படி, இம்மாதிரியான ஒரு காலகட்டம் நெருக்கடி வராமல் அல்லவா தடுத்து நிறுத்த வேண்டும்? ஆக முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கு அவசியமான நிலைமைகள் எப்படிப்பட்டவை என்பது தெளிவாகிறது. யாருடைய நல்ல எண்ணத்தையோ, கெட்ட எண்ணத்தையோ சார்ந்திராத இந்நிலைமைகள் தொழிலாளி வர்க்கம் கணப்பொழுதுக்கு மட்டும் ஒப்பளவில் வளமான வாழ்வு [relative prosperity] வாழ்வதற்கு அனுமதி அளிக்கின்றன, அதுவுங்கூட வரப் போகும் நெருக்கடியின் முன்னறிவிப்பாக அமையும் பொருட்டு அனுமதி அளிக்கின்றன என்பது தெளிவாகிறது.[52]

அவசிய நுகர்வுப் பண்ட உற்பத்திக்கும் சொகுசுப் பண்ட உற்பத்திக்கும் இடையிலான விகித உறவானது, IIaக்கும் IIbக்கும் இடையில் $II_{(v+s)}$உம், $(IIa)_c$க்கும் $(IIb)_c$க்கும் இடையில் $II_c$உம் பங்கிடப்படுவதை அவசியமாக்குகிறது. இப்படிப் பங்கிடப்படுவதால்

---

[52] எங்கெல்ஸ் குறிப்பு: நெருக்கடிகள் பற்றிய ரோட்பெர்ட்டஸ் தத்துவத்தை ஆதரிக்கக் கூடியவர்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

உற்பத்தியின் தன்மையும் அளவுவழிப்பட்ட உற்பத்தி உறவுகளும் பாதிக்கப்படுகின்றன. இந்தப் பங்கீடு உற்பத்தியின் பொதுக் கட்டமைப்பை நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்றாகி விடுகிறது.

உபரி-மதிப்பைக் கைப்பற்றுவதே தனிப்பட்ட முதலாளிகளின் பிரதானக் குறி என்றாலும், சாமானிய மறுவுற்பத்தியின் அடிப் படை நோக்கம் நுகர்வே ஆகும். ஆனால் உபரி-மதிப்பானது—அதன் ஒப்பீட்டுப் பருமன் என்னவாயிருப்பினும்—இங்கே முதலாளி யின் சொந்த நுகர்வுக்கு மட்டுமே பயன்படுவதாகக் கொள்ளப் படுகிறது.

சாமானிய மறுவுற்பத்தியானது வருடாந்தர விரிதிற மறுவுற் பத்தியின் ஒரு பகுதியாகும், மிகவும் முக்கியமான பகுதியாகும். உபரி-மதிப்பைக் கைப்பற்றும் நோக்கமானது செல்வந்தராகும் நோக்கத்துக்குத் துணை புரிவதாகவும், அதே போது அதனிடமிருந்து வேறுபடுவதாகவும் உள்ளது. மெய்ந்நடப்பு இன்னும் கூட சிக்க லானது, ஏனென்றால் முதலாளி உபரி-மதிப்பின் வடிவில் அடிக் கும் கொள்ளையில் பங்காளிகளாய் இருப்போர் அவரைச் சார்ந் திராது நுகர்வாளர்களாகவும் செயல்படுகிறார்கள்.

## V. பரிவர்த்தனைக்குப் பணச் சுற்றோட்டம் துணை செய்தல்

சுற்றோட்டம் குறித்து இது வரை நாம் செய்து வந்திருக்கும் பகுப் பாய்வின் படி, அது உற்பத்தியாளர்களின் வெவ்வேறு பிரிவு களிடையே பின்வரும் விதத்தில் நடைபெறுகிறது:

1). துறை Iக்கும் துறை IIக்கும் இடையே:

$$\text{I.}\ 4000_c + \underbrace{1{,}000_v + 1{,}000_s}$$
$$\text{II.} \ldots\ldots\ldots\ 2{,}000_c \ldots\ldots + 500_v + 500_s$$

I $(1{,}000_v + 1{,}000_s)$ என்பதற்கு $\text{II}_c$ $(2{,}000)$ பரிவர்த்தனை யாகும் சுற்றோட்டம் இவ்விதம் தீர்ந்து போகிறது.

$4{,}000\text{I}_c$ஐ இப்போதைக்கு ஒதுக்கி விட்டுப் பார்த்தால், துறை IIக்குள் v+sஇன் சுற்றோட்டம் இன்னமும் தீர்ந்தாகவில்லை, $\text{II}_{(v+s)}$ ஆனது இப்போது IIa, IIb பிரிவுகளுக்கு இடையே பின் வருமாறு பங்கிடப்படுகிறது:

2) $\text{II}(500_v + 500_s) = \text{a}\ (400_v + 400_s) + \text{b}\ (100_v + 100_s)$.

$400_v$(a) அதனுடைய பிரிவுக்குள்ளேயே சுற்றியோடுகிறது; இதனை ஊதியமாகப் பெறும் தொழிலாளர்கள் தாங்களே உற்பத்தி செய்யும் அவசிய வாழ்வுச் சாதனங்களை தம்மை வேலைக்கு அமர்த்துவோரான IIa முதலாளிகளிடமிருந்து விலைக்கு வாங்கு கிறார்கள்.

a, b ஆகிய இரு பிரிவுகளையும் சேர்ந்த முதலாளிகள் தமது உபரி-மதிப்பில் ஐந்தில் மூன்று பங்கை IIaஇன் உற்பத்திப்

பண்டங்களுக்காகவும் (அவசியப் பண்டங்கள்), ஐந்தில் இரு பங்கை IIbஇன் உற்பத்திப் பண்டங்களுக்காகவும் (சொகுசுப் பண்டங்கள்) செலவிடுகிறார்கள். எனவே aஇன் உபரி-மதிப்பில் ஐந்தில் மூன்று பங்கு (அதாவது 240) IIa பிரிவுக்குள்ளேயே நுகரப்படுகிறது. இதே போல், b பிரிவின் உபரி-மதிப்பில் (சொகுசுப் பண்ட வடிவில் உற்பத்தி செய்யப்பட்டு அவ்வடிவத்தில் இருந்து வருவதான இந்த உபரி-மதிப்பில்) ஐந்தில் இரு பங்கு IIb பிரிவுக்குள்ளேயே நுகரப்படுகிறது.

இனி IIaக்கும் IIbக்கும் இடையே நடைபெற வேண்டிய பரிவர்த்தனை வருமாறு:

IIa தரப்பில்: $160_s$; IIb தரப்பில்: $100_v + 60_s$

இவை இரண்டும் சமமாய் இருப்பதால் அடிபட்டு விடுகின்றன. IIb தொழிலாளர்கள் பண வடிவில் பெறுகிற $100_v$ஐக் கொண்டு IIa பிரிவிலிருந்து அதே மதிப்புள்ள அவசியப் பண்டங்களை வாங்குகிறார்கள். அதே போல் IIb முதலாளிகள் தமது உபரி-மதிப்பில் ஐந்தில் மூன்று பங்குக்கு, அதாவது $60$க்கு IIaஇலிருந்து அவசியப் பண்டங்களை வாங்குகிறார்கள். IIa முதலாளிகள் — மேலே அனுமானித்துக் கொண்ட படி — தமது உபரி-மதிப்பில் ஐந்தில் இரு பங்கை, அதாவது $160_s$ஐ இவ்விதம் பண வடிவில் பெற்று, அதை IIbஇல் உற்பத்தியாகிற சொகுசுப் பண்டங்களை வாங்குவதற்காகச் செலவிடுகிறார்கள். (IIb முதலாளிகள் கூலி கொடுப்பதற்காக செலவிட்டதன் மாற்றீடாகிய உற்பத்திப் பொருளாக வைத்திருக்கும் $100_v$உம் மற்றும் $60_s$உம்). இதற்கான சூத்திர வடிவம் வருமாறு:

$$3)\ \text{IIa.}\ [400_v] + [240_s] + \overbrace{\phantom{100_v + 60_s}}^{160_s}$$
$$\text{b.}\ .\ .\ .\ .\ .\ .\ .\ .\ .\ .\ \underbrace{100_v + 60_s}_{} + [40_s],$$

அடைப்புக் குறியில் இருப்பவை அவற்றின் பிரிவுக்குள்ளேயே சுற்றியோடி நுகரப்படுகிறவை.

மாறும்-மூலதனமாக முன்னீடு செய்யப்படும் பண-மூலதனம் நேரடியாக மீள்வது, அவசியப் பண்டங்களை உற்பத்தி செய்யும் முதலாளித்துவத் துறையாகிய IIaஇல் மட்டும்தான். இந்த நேரடி மீள்வானது சரக்கு உற்பத்தியாளர்கள் முன்னீடு செய்யும் பணம் இயல்பான சரக்குச் சுற்றோட்டத்தின் போது அவர்களிடமே திரும்பி வந்து சேருகிறது என்று முன்பு நாம் எடுத்துரைத்த பொது விதியின் வெளிப்பாடே ஆகும். (தனி நிலைமைகளால் சில மாற்றங்களுக்கு உள்ளாகி இங்கு இது வெளியாகிறது.) நிற்க, யாராவது பண முதலாளி ஒருவர் சரக்கு உற்பத்தியாளரின் பின்னாலிருந்து தொழில் துறை முதலாளிக்குப் பண-மூலதனத்தை (இச்சொல்லுக்குரிய துல்லியமான அர்த்தத்தில், அதாவது பண வடிவிலான மூலதன-மதிப்பு என்ற அர்த்தத்தில்) முன்னீடு செய்வாரானால், இந்தப்

பணத்தின் மீள்வுக்குரிய மெய்யான இடம் இந்தப் பண முதலாளியின் சட்டைப் பையே என்பதும் மேற்படி விதியிலிருந்து பெறப்படுகிறது. இவ்வாறு, பணமானது அதன் சுற்றோட்டத்தில் அநேகமாய் எல்லாரது கைக்கும் சென்றாலும்கூட, சுற்றியோடும் பணத்தில் பெரும் பகுதி, வங்கிகள் முதலானவற்றின் வடிவில் ஒழுங்கமைக்கப்பட்டு ஒன்றுகுவிக்கப்பட்டிருக்கும் பண-மூலதனத் துறைக்குச் சொந்தமானது. முடிவில் பண வடிவில் தன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும் விதத்தில்தான் இந்தத் துறை தனது மூலதனத்தை முன்னீடு செய்கிறது. தொழில் துறை மூலதனம் மீண்டும் பண-மூலதனமாக மாற்றப்பட்டுப் பண வடிவில் இத்துறைக்கே திரும்பி வந்து சேருகிறது.

சரக்குச் சுற்றோட்டத்துக்கு எப்போதுமே அவசியமானவை இரண்டு: சுற்றோட்டத்தில் செலுத்தப்படும் சரக்குகள்; அதே போல் சுற்றோட்டத்தில் செலுத்தப்படும் பணம். "...சுற்றோட்ட நிகழ்முறை உற்பத்திப் பொருட்களின் நேரடிப் பண்டமாற்றைப் போன்றதன்று; அதாவது பயன்-மதிப்புகள் இடமும் கையும் மாறியவுடன் அது முடிந்து போய் விடுவதில்லை. குறிப்பிட்ட ஒரு சரக்கின் உரு மாற்றச் சுற்றிலிருந்து வெளியேறியதுமே பணம் மறைந்து விடுவதில்லை. சுற்றோட்டக் களத்தில் புதிய இடங்களில்—ஏனைய சரக்குகள் காலி செய்யும் இடங்களில் எல்லாம்—அது இடையறாது வந்தமர்கிறது...." (முதல் பாகம், அத்தியாயம் III, பக்கம் 160.)

எடுத்துக்காட்டாக, $II_c$க்கும் $I_{(v+s)}$க்கும் இடையிலான சுற்றோட்டத்தில், துறை II இதற்காகப் பண வடிவில் £500 முன்னீடு செய்ததாகக் கொண்டோம். உற்பத்தியாளர்களின் பெரும் சமுதாயக் குழுக்களுக்கிடையிலான சுற்றோட்டம் எண்ணிறந்த சுற்றோட்ட நிகழ்முறைகளாகப் பகுபடும் போது இந்நிகழ்முறைகளில் ஒரு நேரம் இந்தக் குழுவைச் சேர்ந்த ஒருவரும், ஒரு நேரம் அந்தக் குழுவைச் சேர்ந்த ஒருவரும் பண்டம் வாங்குகிறவராக முதலில் வருகிறார்கள், ஆகவே இவர்கள் பணத்தைச் சுற்றோட்டத்துள் செலுத்துகிறார்கள். தனிப்பட்ட நிலைமைகள் ஒரு புறமிருக்க, பல்வேறு சரக்கு-மூலதனங்களின் உற்பத்திக் காலங்களிலும், எனவே புரள்வுக் காலங்களிலும் இருக்கும் படியான வேறுபாடு—வேறு எதுவும் இல்லையானாலும்—இதனை அவசியமாக்கி விடுகிறது. ஆகவே துறை II இந்த £500ஐக் கொண்டு Iஇடமிருந்து அதே மதிப்புள்ள உற்பத்திச் சாதனங்களை வாங்குகிறது; துறை I £500 மதிப்புள்ள நுகர்வுப் பண்டங்களை IIஇடமிருந்து வாங்குகிறது. எனவே துறை IIக்குப் பணம் திரும்பி வந்து சேர்கிறது. ஆனால் பணத்தின் இந்த மீள்வினால் துறை I முன்னிலும் அதிகப் பணம் படைத்ததாகி விடவில்லை. அது முதலில் பணமாக £500ஐச் சுற்றோட்டத்தில் செலுத்தி, அதே மதிப்புள்ள சரக்குகளை அதிலிருந்து எடுத்துக் கொள்கிறது, பிறகு £500 பெறுமானமுள்ள சரக்குகளை விற்று

அதே அளவுள்ள பணத்தைச் சுற்றோட்டத்திலிருந்து பெற்றுக் கொள்கிறது. £500 இவ்வாறு அதனிடம் திரும்பி வந்து சேருகிறது. துறை II உண்மையில் சுற்றோட்டத்துள் பணமாக £500 ஐயும், சரக்குகளாய் £500 ஐயும், ஆக மொத்தம் £1,000 மதிப்பைச் செலுத்துகிறது. சுற்றோட்டத்திலிருந்து அது சரக்குகளாக £500 ஐயும் பணமாக £500 ஐயும் வெளியே எடுக்கிறது. சுற்றோட்டமானது துறை Iஇன் சரக்குகளது உருவில் £500 ஐயும், துறை IIஇன் சரக்குகளது உருவில் £500 ஐயும் பட்டுவாடா செய்வதற்குப் பணமாக அதற்குத் தேவைப்படுவது £500 மட்டும்தான். எனவே பிற உற்பத்தியாளர்களிடமிருந்து சரக்குகளை வாங்குவதற்காக ஒருவர் பணத்தை முன்னீடு செய்வாராயின், தமது சொந்தச் சரக்கை விற்கும் போது அவர் கைக்கு அந்தப் பணம் திரும்பி வந்து விடுகிறது. துறை I ஆனது துறை II இடமிருந்து £500க்கு சரக்குகள் வாங்கி, பின்னர் £500 மதிப்புள்ள சரக்குகளை துறை IIஇடம் விற்குமாயின், இந்த £500 துறை IIஇடம் தங்காமல் துறை Iக்கே திரும்பி வந்து விடும்.

துறை Iஇல் கூலியாக முதலீடு செய்யப்படும் மூலதனம், அதாவது பண வடிவில் முன்னீடு செய்யப்பட்ட மாறும்-மூலதனம், பண வடிவத்திலேயே நேரடியாகத் திரும்பாமல் சுற்று வழியில் திரும்பி வருகிறது. ஆனால் துறை IIஇல் £500 கூலியானது தொழிலாளர்களிடமிருந்து முதலாளிகளிடம் நேரடியாகத் திரும்பி விடுகிறது. வாங்குதலும் விற்றலும் அதே ஆட்களிடையே திரும்பத் திரும்ப நடைபெற்று, சரக்குகளை வாங்குகிறவராகவும் விற்கிறவராகவும் அவர்களே மாறி மாறிச் செயல்படுவார்களானால், இந்த மீள்வு அப்பொழுது நேரடியாக நடைபெறுகிறது. துறை IIஇன் முதலாளி உழைப்புச் சக்திக்குப் பண வடிவில் விலை கொடுக்கிறார். உழைப்புச் சக்தியை இவ்விதமாக அவர் தமது மூலதனத்தோடு இணைத்துக் கொண்டு, கூலி பெறுகிற தமது தொழிலாளர்கள் தொடர்பாய் அவர் தொழில் துறை முதலாளியின் பாத்திரம் ஏற்கிறார். சுற்றோட்டச் செயல் அவருக்குச் செய்வதெல்லாம் பண-மூலதனத்தைத் திறனுடை-மூலதனமாக மாற்றுவதுதான். ஆயினும் இதனால்தான் அவர் இப்படித் தொழில் துறை முதலாளியாகிறார். தொழிலாளி முதலில் விற்கிறவராகத்தான், தமது உழைப்புச் சக்தியை விலைக்குத் தருகிறவராகத்தான் அரங்கிற்கு வருகிறார். சுற்றோட்டச் செயலுக்குப் பிற்பாடுதான் அவர் வாங்குகிறவர் ஆகிறார். முதலாளி இப்பொழுது சரக்கு விற்கிறவராகச் செயல்பட, தொழிலாளி கையில் காசு உடையவராகி அவரிடமிருந்து சரக்கு வாங்குகிறார். முதலாளி முன்பு கூலிக்காக முதலீடு செய்த பணத்தை இவ்விதம் திரும்பப் பெற்றுக் கொள்கிறார். இந்தச் சரக்குகளது விற்பனையில் எந்த ஏமாற்றும் இல்லை, சரக்குகளிலும் பணத்திலுமான சமதைகள்தான் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றன. ஆகவே முதலாளி பணம் திரட்டிக் கொடுப்பதற்கான்

ஏற்பாடு அல்ல இது. தொழிலாளிக்கு அவர் முதலில் பணமாகவும், பிறகு சரக்குகளாகவும், ஆக இரு முறை ஊதியமளித்து விட வில்லை. முதலாளியின் பணம், தொழிலாளி அதனை அவரது சரக்குகளுக்காகப் பரிவர்த்தனை செய்தவுடனே முதலாளியின் கைக்கே திரும்பி வந்து விடுகிறது.

ஆயினும், மாறும்-மூலதனமாக மாற்றப்படும் பண-மூலதனம், அதாவது கூலிக்காக முன்னீடு செய்யப்படும் பணம் முக்கியமான பாத்திரம் வகிக்கிறது, பணத்தைச் சுற்றியோட வைப்பதில் அதற் குள்ள பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் தொழிலாளர் கள் அன்றாடங் காய்ச்சிகளாக வாழ்கிறவர்கள், தொழில் துறை முதலாளிகளுக்கு அதிக காலத்துக்குக் கடனளிக்க முடியாதவர்கள். வெவ்வேறு தொழிற் கிளைகளில் மூலதனங்களின் புரள்வுக் காலங் கள் எவ்வளவுதான் வேறுபட்டாலும், மாறும்-மூலதனமானது வாரம், மாதம் போன்ற குறிப்பிட்ட குறுங்காலங்களுக்கு சமுதாய மெங்கும் எண்ணிலடங்காத இடங்களில் ஏக காலத்தில் பண வடி வில் முன்னீடு செய்யப்பட்டாக வேண்டும். இந்தக் குறுங் காலங்கள் அதிவேகமாகத் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருப்பதால் மாறும்-மூலதனமும் அதே வேகத்தில் திரும்பத் திரும்ப முன்னீடு செய்யப் பட்டு வந்தாக வேண்டும் (இந்தக் காலங்கள் எவ்வளவுக்கு எவ் வளவு குறுகலானவையோ, சுற்றோட்டத்துள் ஏக காலத்தில் செலுத் தப்படும் மொத்தப் பண அளவும் ஒப்பளவில் அவ்வளவுக்கு அவ்வளவு குறைந்து விடுகிறது). பொருளுற்பத்தி முதலாளித்துவ வழியில் நடைபெறும் ஒவ்வொரு நாட்டிலும் இப்படி முன்னீடு செய்யப்படும் பணம் மொத்தச் சுற்றோட்டத்தில் ஒப்பளவில் தீர் மானகரமான பங்காகிறது. குறிப்பிட்ட அதே பணத் தொகை புறப் பட்ட இடத்துக்குத் திரும்பி வந்து சேருமுன் பலதரப்பட்ட பாதை களிலும் சென்று எண்ணற்ற பல தொழில்களிலும் சுற்றோட்டச் சாதனமாகச் செயல்படுவதால், மொத்தச் சுற்றோட்டத்தில் இந்தப் பண-மூலதனத்தின் பங்கு மேலும் குறிப்பிடத்தக்கதாகிறது.

---

$I_{(v+s)}$க்கும் $II_c$க்கும் இடையே நடைபெறும் சுற்றோட்டத்தை இப் போது வேறொரு கோணத்திலிருந்து பரிசீலிப்போம்.

துறை Iஇன் முதலாளிகள் கூலி கொடுப்பதற்காக £1,000 முன்னீடு செய்கிறார்கள். இந்தப் பணத்தைக் கொண்டு அத்துறையின் தொழிலாளர்கள் துறை IIஇன் முதலாளிகளிடமிருந்து £1,000 பெறுமானமுள்ள வாழ்வுச் சாதனங்கள் வாங்குகிறார்கள். துறை IIஇன் முதலாளிகள் அதே பணத்துக்கு துறை Iஇன் முதலாளிகளிட மிருந்து உற்பத்திச் சாதனங்கள் வாங்குகிறார்கள். இவ்வாறு, துறை IIஇன் முதலாளிகள் தங்கள் மாறா-மூலதனத்தில் ஒரு பாதியை சரக்கு-மூலதன வடிவத்திலிருந்து மீண்டும் திறனுடை-மூலதன

வடிவத்துக்கு மாற்றுகிறார்கள். அதே போது, துறை Iஇன் முதலாளிகள் தங்கள் மாறும்-மூலதனத்தைப் பணமாகத் திரும்பப் பெற்றுக் கொள்கிறார்கள். துறை IIஇன் முதலாளிகள் துறை Iஇலிருந்து உற்பத்திச் சாதனங்கள் பெறுவதற்காகப் பணமாக மேலும் £500 முன்னீடு செய்கிறார்கள். துறை Iஇன் முதலாளிகள் இந்தப் பணத்தைச் செலவிட்டு துறை IIஇலிருந்து நுகர்வுப் பண்டங்கள் வாங்குகிறார்கள். இவ்வாறு இந்த £500 துறை IIஇன் முதலாளிகளிடம் திரும்பி வருகிறது. அவர்கள் சரக்குகளாக மாற்றப்பட்ட தங்கள் மாறா-மூலதனத்தின் கடைசிக் கால் பங்கை மீண்டும் திறனுடை-மூலதனத் தசையுருவத்துக்கு மாற்றும் பொருட்டு, இந்தத் தொகையைத் திரும்பவும் முன்னீடு செய்கிறார்கள். இப்பணம் துறை Iக்குத் திரும்பிச் செல்கிறது; மீண்டும் துறை IIஇலிருந்து அதே அளவு நுகர்வுப் பண்டங்களைப் பெறுகிறது. இவ்வாறு £500 துறை IIக்குத் திரும்புகிறது. துறை IIஇன் முதலாளிகள் முன்போலவே இப்போதும் பணமாக £500உம் மாறா-மூலதனமாக £2,000உம் வைத்திருக்கிறார்கள். பின்னது சரக்கு-மூலதன வடிவத்திலிருந்து திறனுடை-மூலதன வடிவத்துக்குப் புதிதாக மாற்றப்பட்டதாகும். £1,500ஐக் கொண்டு, £5,000 பெறுமானமுள்ள சரக்கு சுற்றியோடுகிறது. அதாவது: 1) துறை Iஇன் முதலாளிகள் அவர்களது தொழிலாளர்களுக்கு £1,000 கொடுத்து அதே மதிப்புள்ள அவர்களது உழைப்புச் சக்தியை வாங்குகிறார்கள்; 2) துறை Iஇன் தொழிலாளர்கள் இந்த £1,000ஐக் கொடுத்து துறை IIஇலிருந்து வாழ்வுச் சாதனங்கள் வாங்குகிறார்கள்; 3) துறை IIஇன் முதலாளிகள் இதே பணத்தைக் கொண்டு துறை Iஇலிருந்து உற்பத்திச் சாதனங்கள் வாங்குகிறார்கள்; இவ்வழியில் துறை Iஇன் முதலாளிகளுக்கு £1,000 மாறும்-மூலதனம் பணமாகத் திரும்பி வரச் செய்கிறார்கள்; 4) துறை IIஇன் முதலாளிகள் துறை Iஇன் முதலாளிகளிடமிருந்து £500 பெறுமானமுள்ள உற்பத்திச் சாதனங்கள் வாங்குகிறார்கள்; 5) இதே £500ஐக் கொண்டு துறை Iஇன் முதலாளிகள் துறை IIஇலிருந்து நுகர்வுப் பண்டங்கள் வாங்குகிறார்கள்; 6) இதே £500ஐக் கொண்டு துறை IIஇன் முதலாளிகள் துறை Iஇலிருந்து உற்பத்திச் சாதனங்கள் வாங்குகிறார்கள். 7) இதே £500ஐக் கொண்டு துறை Iஇன் முதலாளிகள் துறை IIஇலிருந்து வாழ்வுச் சாதனங்கள் வாங்குகிறார்கள். இவ்வாறு £500 ஆனது துறை IIக்குத் திரும்பி வருகிறது. துறை IIதான் £2,000 பெறுமானமுள்ள சரக்குகளோடு கூடவே இந்த £500 பணத்தைச் சுற்றோட்டத்துள் செலுத்தியது, சுற்றோட்டத்திலிருந்து சரக்கு வடிவிலான சமதை எதையும் பெறாமலேயே செலுத்தியது.[53]

---

[53] எங்கெல்ஸ் குறிப்பு: இந்த விவரம் பக்கம் 394இல் [இந்தப் புத்தகத்தில் பக்கம் 528-30] தரப்பட்டுள்ளதிலிருந்து வேறுபடுகிறது. அங்கே துறை Iஉம் ஒரு

பின்வருமாறுதான் இந்தப் பரிவர்த்தனை நடந்தேறுகிறது:

1) உழைப்புச் சக்திக்காக துறை I பணமாகச் செலுத்துவது £1,000. ஆகவே சரக்கின்-மதிப்பு £1,000.

2) தொழிலாளர்கள் பணமாகத் தமக்குக் கிடைக்கும் கூலியான £1,000ஐக் கொண்டு துறை IIஇலிருந்து நுகர்வுப் பண்டங்கள் வாங்குகிறார்கள். ஆகவே சரக்கின் மதிப்பு £1,000.

3) தொழிலாளர்களிடமிருந்து பெறப்படும் £1,000ஐக் கொண்டு துறை II அதே மதிப்புள்ள உற்பத்திச் சாதனங்களைத் துறை Iஇலிருந்து வாங்குகிறது. ஆகவே சரக்கின் மதிப்பு £1,000.

இவ்விதம் £1,000 துறை IIஇடமே அதன் மாறும்-மூலதனத் தின் பண வடிவமாகத் திரும்பி வருகிறது.

4) துறை II £500 பெறுமானமுள்ள உற்பத்திச் சாதனங் களைத் துறை Iஇடமிருந்து வாங்குகிறது. ஆகவே சரக்கின் மதிப்பு £500.

5) இதே £500ஐக் கொண்டு துறை I நுகர்வுப் பண்டங்களைத் துறை II இடமிருந்து வாங்குகிறது. ஆகவே சரக்கின் மதிப்பு £500.

6) இந்த £500ஐக் கொண்டு துறை II உற்பத்திச் சாதனங் களைத் துறை I இடமிருந்து வாங்குகிறது. ஆகவே சரக்கின் மதிப்பு £500.

7) இந்த £500ஐக் கொண்டு துறை I நுகர்வுப் பண்டங்களைத் துறை IIஇடமிருந்து வாங்குகிறது. ஆகவே சரக்கின் மதிப்பு £500.

பரிவர்த்தனை ஆகிற மொத்தச் சரக்கு-மதிப்பு: £5,000.

சரக்கு வாங்குவதற்காக துறை II முன்னீடு செய்கிற £500 அதனிடம் திரும்பி வந்து சேருகிறது.

விளைவு வருமாறு:

1) துறை I இடம் பணமாக இருக்கும் மாறும்-மூலதனம் £1000. ஆரம்பத்தில் இதனை அது சுற்றோட்டத்துள் முன்னீடு செய்கிறது. இதன்றி அது தனது உற்பத்திப் பொருளின் வடிவில் £1,000ஐச் சொந்த நுகர்வுக்காகச் செலவிடுகிறது; அதாவது £1,000 மதிப் புள்ள உற்பத்திச் சாதனங்களை விற்றுக் கிடைக்கும் பணத்தைச் சொந்த நுகர்வுக்காகச் செலவிடுகிறது.

மறு புறம், பண வடிவில் இருக்கிற மாறும்-மூலதனம் மாற்றப் பட்டாக வேண்டிய தசையுருவாகிய உழைப்புச் சக்தியானது நுகர் வினால் பராமரிக்கப்பட்டு, மறுவுற்பத்தி செய்யப்பட்டு, அதன் உடைமையாளர்களது ஒரே விற்பனைப் பண்டமாகத் திரும்பவும் விலைக்கு வருகிறது. அதனை விற்றால்தான் அதன் உடைமையாளர் கள் உயிர்வாழ முடியும். கூலித் தொழிலாளர்களும் முதலாளிகளு மாகிய இந்த உறவும் மறுவுற்பத்தி செய்யப்பட்டு விடுகிறது.

---

சுயேச்சைத் தொகையான £500ஐச் சுற்றோட்டத்தினுள் செலுத்துகிறது. ஆனால் இங்கே துறை II மட்டும்தான் சுற்றோட்டத்துக்கு வேண்டிய கூடுதல் பணத்தை வழங்கு கிறது என்றாலும் இதனால் இறுதி விளைவு மாறி விடவில்லை.

2) துறை IIஇன் மாறா-மூலதனம் பொருள் வகையில் மாற்றீடு செய்யப்படுகிறது. துறை II முன்னீடு செய்து சுற்றோட்டத்துள் செலுத்தும் £500 அதனிடம் திரும்பி வந்து சேருகிறது.

துறை Iஇன் தொழிலாளர்களைப் பொறுத்த வரை, சுற்றோட்டம் C — M — C என்கிற சாமானிய வடிவில் நடைபெறுகிறது: $\overset{1}{C}$ (உழைப்புச் சக்தி) — $\overset{2}{M}$ (£1,000, துறை Iஇன் மாறும்-மூலதனத்தினுடைய பண வடிவம்) — $\overset{3}{C}$ (£1,000 பெறுமானமுள்ள அவசியப் பண்டங்கள்). இந்த £1,000 ஆனது சரக்குகளின் — வாழ்வுச் சாதனங்களின் — வடிவிலிருக்கும் துறை IIஇன் மாறா-மூலதனத்தை அதே மதிப்புள்ள பணமாக மாற்றுகிறது.

துறை IIஇன் முதலாளிகளைப் பொறுத்த வரை, C — M என்னும் செயல் நடைபெறுகிறது, அதாவது அவர்களது உற்பத்திச் சரக்கில் ஒரு பகுதி பணமாக மாற்றப்படுகிறது. பணமாக மாறியதும் இப் பகுதி மீண்டும் அவர்களது திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறுகளாக மாற்றப்படுகிறது, அதாவது அவர்களுக்குத் தேவையான உற்பத்திச் சாதனங்களில் ஒரு பகுதியாக மாற்றப்படுகிறது.

உற்பத்திச் சாதனங்களில் எஞ்சிய பகுதிகளை வாங்குவதற்காக துறை IIஇன் முதலாளிகள் பணத்தை (£500) முன்னீடு செய்கிறார்கள். $II_c$ என்பதில் இன்னமும் சரக்குகளின் (நுகர்வுப் பண்டங்களின்) வடிவில் இருந்து வருகிற பகுதியைப் பணமாக மாற்றி விடலாம் என்று எதிர்பார்த்தே அவர்கள் இப்படி முன்னீடு செய்கிறார்கள். M — C என்ற செயலில் துறை II ஆனது Mஐக் கொடுத்து Cஐ வாங்குகிறது. துறை I ஆனது Cஐ விற்கிறது. துறை IIஇன் பணம் திறனுடை-மூலதனத்தின் ஒரு பகுதியாக மாற்றப்படுகிறது. அதே போது துறை Iஇன் சரக்கு C — M என்ற செயலின் மூலம் பணமாக மாறுகிறது. ஆனால் இந்தப் பணம் துறை Iஇனுடைய மூலதன-மதிப்பைச் சேர்ந்த பகுதியைக் குறிக்கவில்லை, மாறாக உபரி-மதிப்பில் ஒரு பகுதியையே, பணமாக மாற்றப்பட்டு முற்றிலும் நுகர்வுப் பண்டங்களுக்காகச் செலவிடப்படுகிற உபரி-மதிப்புப் பகுதியையே குறிக்கிறது.

M — C ... P ... C′ — M′ என்னும் சுற்றில், M — C என்னும் முதற் செயல் ஒரு முதலாளியின் செயலாகும். C′ — M′ என்னும் கடைசிச் செயல் (அல்லது அதன் ஒரு பகுதி) இன்னொரு முதலாளியின் செயலாகும்; Mஐத் திறனுடை-மூலதனமாக மாற்றும் இந்த C ஆனது அதை விற்பவருக்கு (Cஐப் பணத்துக்குப் பரிவர்த்தனை செய்கிறவருக்கு) மாறா-மூலதனத்தையோ, மாறும்-மூலதனத்தையோ, உபரி-மதிப்பையோ சேர்ந்ததாய் இருப்பினும் ஒன்றுதான், அதனால் சரக்குச் சுற்றோட்டம் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

துறை Iஇன் முதலாளிகள் அவர்களது சரக்கு-உற்பத்தியில்

v+s என்னும் பகுதியைப் பொறுத்த வரை சுற்றோட்டத்தினுள் செலுத்துவதைக் காட்டிலும் அதிகப் பணத்தைச் சுற்றோட்டத்தி லிருந்து வெளியே எடுக்கிறார்கள். முதலாவதாக, £1,000 மாறும்-மூலதனம் அவர்களுக்குத் திரும்பி வருகிறது. இரண்டாவதாக, அவர்கள் £500 பெறுமானமுள்ள உற்பத்திச் சாதனங்களை விற் கிறார்கள் (மேலே பார்க்கவும்: பரிவர்த்தனை எண் 4); இதனால் அவர்களது உபரி-மதிப்பில் ஒரு பாதி பணமாக மாறுகிறது. பின்னர் (பரிவர்த்தனை எண் 6) அவர்கள் தமது உபரி-மதிப்பில் மறு பாதியான £500 பெறுமானமுள்ள உற்பத்திச் சாதனங்களை விற்கிறார்கள். இவ்வாறு அவர்களது உபரி-மதிப்பு முழுவதும் சுற் றோட்டத்திலிருந்து பணமாக வெளியே எடுக்கப்படுகிறது. எனவே வரிசையாக நடப்பது என்னவெனில்: (1) மாறும்-மூலதனம் மீண்டும் பணமாக மாற்றப்படுகிறது, இது £1,000; (2) உபரி-மதிப்பில் ஒரு பாதி பணமாக மாற்றப்படுகிறது, இது £500; (3) உபரி-மதிப்பில் மறு பாதி பணமாகிறது, இது £500; ஆக மொத்தம் $1,000_v+1,000_s$ பணமாக மாறி £2,000 ஆகிறது. துறை I ஆனது சுற்றோட்டத்துள் செலுத்தும் பணம் £1,000தான் ($I_c$ என்பதன் மறுவுற்பத்திக்குத் துணை செய்யும் பரிவர்த்தனை களை ஒதுக்கி விடுகிறோம்; இவற்றைப் பிற்பாடு பரிசீலிப்போம்), ஆனால் சுற்றோட்டத்திலிருந்து இது போல் இரு மடங்குப் பணத்தை வெளியே எடுக்கிறது. s ஆனது ஏனையோர் கைக்குத்தான் (II) செல்கிறது, பணமாக மாறியதும் அது நுகர்வுப் பண்டங்களுக்காகச் செலவிடப்பட்டு விடுகிறது. துறை Iஇன் முதலாளிகள் **சரக்குகளின்** வடிவில் எவ்வளவு மதிப்பை சுற்றோட்டத்தினுள் செலுத்துகிறார் களோ அதே அளவு மதிப்பையே அவர்கள் **பணமாக** சுற்றோட்டத் திலிருந்து வெளியே எடுக்கிறார்கள். இந்த மதிப்பு உபரி-மதிப் பாகும் என்பதால், அதாவது முதலாளிகளுக்குச் செலவில்லாமல் கிடைக்கும் மதிப்பாகும் என்பதால் இந்தப் பண்டங்களின் மதிப்பு கொஞ்சம் கூட மாறி விடவில்லை. சரக்குச் சுற்றோட்டத்தில் மதிப்புகளின் பரிவர்த்தனை இதனால் எவ்விதத்திலும் பாதிக்கப் படவில்லை. உபரி-மதிப்பு பண வடிவில் இருப்பது தற்காலிக மானதுதான்; முன்னீடு செய்யப்படும் மூலதனம் அதன் உருமாற்றங் களில் மேற்கொள்கிற மற்ற எல்லா வடிவங்களையும் போல் இந்தப் பண வடிவமும் அதிக காலத்துக்கு நீடிப்பதில்லை. துறை Iஇன் சரக்குகள் பணமாக மாற்றப்படுவதற்கும், பிறகு துறை Iஇன் பணம் துறை IIஇன் சரக்குகளாக மாற்றப்படுவதற்கும் இடைப் பட்ட காலத்துக்கு மேல் இந்தப் பண வடிவம் நீடிப்பதில்லை.

புரள்வுகள் இன்னும் குறுகிய காலத்தில் நடைபெறுவதாகக் கொள்வோமானால்—அல்லது சாமானிய சரக்குச் சுற்றோட்டத் தின் கண்ணோட்டத்தில், பணச் சுற்றோட்டம் இன்னும் விரை வாய் நடைபெறுவதாகக் கொள்வோமானால் — பரிவர்த்தனை

செய்யப்படும் சரக்கு-மதிப்புகளை சுற்றியோடச் செய்வதற்கு இன்னும் கூட குறைந்த பணமே போதுமானதாய் இருக்கும். போது மான பணத்தின் தொகை, வரிசையாய் நடைபெறும் பரிவர்த்தனை களின் எண்ணிக்கை குறிப்பிட்டதாயிருக்க, சுற்றியோடும் சரக்கு களின் விலைக்ள் அல்லது மதிப்புகளது கூட்டுத் தொகையால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த மதிப்புத் தொகையில் உபரி-மதிப்பு எவ்வளவு, மூலதன-மதிப்பு எவ்வளவு என்ற விகிதம் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

நமது எடுத்துக்காட்டில், துறை Iஇல் ஆண்டுக்கு நான்கு முறை கூலி தருவதாகக் கொண்டால், மொத்தம் $250 \times 4 =$ £1,000 ஆகிறது. எனவே $I_v - \frac{1}{2}II_c$ என்னும் சுற்றோட்டத்துக்கும், மாறும்-மூலதனமான $I_v$க்கும் துறை Iஇன் உழைப்புச் சக்திக்கும் இடையி லான சுற்றோட்டத்துக்கும் பணமாக £250 போதுமானதாயிருக் கும். இதே போல், $I_s$ என்பதற்கும் $II_c$ என்பதற்கும் இடையிலான சுற்றோட்டம் நான்கு புரள்வுகளில் நடைபெறுமானால், அதற்கு £250 மட்டுமே தேவைப்படும். மொத்தத்தில், £5,000 மதிப் புள்ள சரக்குகளின் சுற்றோட்டத்துக்குத் தேவைப்படும் பணம் அல்லது பண-மூலதனம் £500தான். அப்போது உபரி-மதிப் பானது ஒவ்வொரு தரமும் அரைப் பங்கு வீதம் இரண்டு தரம் பணமாக மாற்றப்படுவதற்கு பதில், ஒவ்வொரு தரமும் கால் பங்கு வீதம் நான்கு தரம் பணமாக மாற்றப்படும்.

பரிவர்த்தனை எண் 4இல் துறை IIக்கு பதில் துறை I வாங்கு வோராகச் செயல்பட்டு £500ஐச் செலவிட்டு அதே மதிப்புள்ள நுகர்வுப் பண்டங்களை வாங்குமானால், துறை IIஆனது பரிவர்த் தனை எண் 5இல் அதே £500ஐக் கொண்டு உற்பத்திச் சாதனங் களை வாங்கும். பரிவர்த்தனை எண் 6இல் அதே £500ஐக் கொண்டு துறை Iஆனது நுகர்வுப் பண்டங்களை வாங்கும். பரிவர்த்தனை எண் 7இல் அதே £500ஐக் கொண்டு துறை II ஆனது உற்பத்திச் சாதனங்களை வாங்கும். இவ்விதம் £500 முன்பு முடிவில் துறை IIக்குத் திரும்பி வந்தது போலவே இப் போது துறை I இடம் திரும்பி வருகிறது. முதலாளித்துவ உற்பத்தி யாளர்கள் தமது சொந்த நுகர்வுக்காகச் செலவிடும் பணத்தைக் கொண்டே இங்கே உபரி-மதிப்பு பணமாக மாற்றப்படுகிறது. இந்தப் பணம் எதிர்பார்க்கப்படும் வருவாயைக் குறிக்கிறது, அதாவது இன்னும் விற்கப்படாத சரக்குகளில் இருக்கும் உபரி-மதிப்பிலிருந்து எதிர்பார்க்கப்படும் வரவுகளைக் குறிக்கிறது. £500 திரும்பி வந்து அதனால் உபரி-மதிப்பு பணமாக மாற்றப்படவில்லை. ஏனெனில் $I_v$ சரக்குகளின் வடிவிலான £1,000ஐ அன்னியில் துறை I ஆனது பரிவர்த்தனை எண் 4இன் முடிவில் சுற்றோட்டத்துள் பணமாக £500 செலுத்துகிறது; இது சரக்குகளின் விற்பனையின் மூலம் வரும் வரவு அல்ல, கூடுதல் பணமாகும் என்பது நமக்குத் தெரியும்.

இந்தக் கூடுதல் பணம் துறை Iஇடம் திரும்பி வருகிறதே தவிர, அதாவது முன்பு துறை I கூடுதல் பணமாகச் செலுத்தியதைத் திரும்பப் பெறுகிறதே தவிர, அது தனது உபரி-மதிப்பைப் பணமாக மாற்றிக் கொண்டு விடவில்லை. துறை Iஇன் உபரி-மதிப்பு சரக்குகளான $I_s$ஆக இருக்கிறது, இந்த $I_s$ சரக்குகளின் விற்பனையின் மூலம்தான் துறை Iஇன் உபரி-மதிப்பு பணமாக மாற்றப்படுகிறது. சரக்கு விற்பனை மூலம் வரப்பெறும் பணம் ஒவ்வொரு தரமும் நுகர்வுப் பண்டங்கள் வாங்குவதற்காகத் திரும்பவும் செலவிடப்படுகிற வரைதான் உபரி-மதிப்பின் பண வடிவம் நீடிக்கிறது.

கூடுதல் பணத்தைக் கொண்டு (£500) துறை I துறை IIஇலிருந்து நுகர்வுப் பண்டங்கள் வாங்குகிறது. பணத்தைச் செலவிடும் துறை I அதற்கான சமதையை துறை IIஇலிருந்து பெறுகிற சரக்குகளின் வடிவில் வைத்திருக்கிறது. துறை II துறை Iஇலிருந்து £500 மதிப்புள்ள சரக்குகளை வாங்கும் போது முதன்முதல் துறை Iக்குப் பணம் திரும்பி வருகிறது. அதாவது துறை I விற்ற சரக்குகளின் சமதையாக அந்தப் பணம் அதற்குத் திரும்பி வருகிறது. ஆனால் இந்தச் சரக்குகளுக்காக துறை Iக்குச் செலவேதும் இல்லை, இவை துறை Iஇன் உபரி- மதிப்பாகும். **இத்துறை சுற்றோட்டத்துள் செலுத்தும் பணமே இவ்விதம் அதன் உபரி-மதிப்பைப் பணமாக மாற்றுகிறது.** இரண்டாவது முறை வாங்கும் போதும் (எண் 6), துறை I அப்பணத்தின் சமதையை துறை IIஇலிருந்து சரக்குகளின் வடிவில் பெறுகிறது. துறை II துறை Iஇலிருந்து உற்பத்திச் சாதனங்களை (எண் 7) வாங்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்போது துறை I ஆனது நுகர்வுப் பண்டங்களுக்காக உண்மையில் £1,000 செலுத்தியிருக்கும்; அதாவது துறை I அதன் சரக்குகளின் (உற்பத்திச் சாதனங்களின்) வடிவில் £500உம் பணமாக £500உம் செலுத்தியிருக்கும்; இவ்விதம் அது தனது உபரி-மதிப்பு முழுவதையும் வருவாயாக நுகர்ந்திருக்கும். அதே போது சரக்குகளின் (உற்பத்திச் சாதனங்களின்) வடிவில் £500 அதனிடம் தங்கியிருக்கும், பணமாகக் கைக்கு வந்த £500ஐ அது செலவிட்டுத் தீர்த்திருக்கும்.

மாறாக, துறை II அதன் மாறா-மூலதனத்தில் முக்கால் பங்கை சரக்கு-மூலதன வடிவத்திலிருந்து திறனுடை-மூலதன வடிவத்துக்குத் திரும்பவும் மாற்றியிருக்கும். ஆனால் அந்த மாறா-மூலதனத்தில் கால் பங்கு (£500) பண-மூலதன வடிவத்தில் அதனிடம் தங்கியிருக்கும்; உள்ளபடியே இது செயலற்று ஓய்ந்திருக்கும் பணமாகும்; பணியில் ஈடுபடாமல் நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பில் இருந்து வரும் பணமாகும். இந்த நிலைமை குறிப்பிட்ட காலத்துக்கு மேல் நீடிக்குமானால், துறை II அதன் மறுவுற்பத்தி அளவுவீதத்தை நான்கில் ஒரு பங்கு குறைத்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

உற்பத்திச் சாதனங்களாய் துறை Iஇன் வசமுள்ள இந்த 500 ஆனது சரக்குகளின் வடிவிலிருக்கும் உபரி-மதிப்பு அல்ல.

சரக்கு வடிவில் துறை I இடம் இருந்த £1,000 உபரி-மதிப்போடு கூடவே அது பணமாக வைத்திருந்து பணமாக முன்னீடு செய்த £500இன் இடத்தை வகிக்கும் மதிப்பாகும் இது. பணமாக இருக் கையில் இதனை எப்போது வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ள லாம். சரக்குகளாக இப்போது இது உடனடியாக விற்க முடியாத நிலையில் இருக்கிறது. இதிலிருந்து தெளிவாவது என்னவென்றால்: துறை I பறக்க விட்ட £500 பொற் பறவைகளும் முதலில் அத னிடம் திரும்பி வந்தாக வேண்டும்; அப்போதுதான் சாமானிய மறு வுற்பத்தி நடைபெற முடியும், சாமானிய மறுவுற்பத்தியில் துறை I, துறை II ஆகிய இரு துறைகளிலுமே மூலதனத்தின் ஒவ்வொரு கூறும் மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டியிருக்கிறது.

முதலாளியானவர் (இங்கே நாம் தொழில் துறை முதலாளி களைப் பற்றி மட்டுமே பேசுகிறோம், இவர்களை ஏனைய எல்லா வகை முதலாளிகளுக்கும் பிரதிநிதிகளாகக் கொள்கிறோம்) நுகர்வுப் பண்டங்களுக்காகப் பணத்தைச் செலவிடுவாரானால், அந்தப் பணத்தின் கதை அதோடு முடிந்து போகிறது. சரக்குகளுக்கு, அதாவது அவரது சரக்கு-மூலதனத்துக்குப் பரிவர்த்தனையாக அவர் அதனைச் சுற்றோட்டத்திலிருந்து பிடித்து வெளியே வரச் செய்தால் தான் அவரிடம் அது திரும்பி வர முடியும். அவரது வருடாந்தரச் சரக்கு-உற்பத்தி (அவரது சரக்கு-மூலதனம்) முழுவதன் மதிப்பை யும் போலவே, அதன் ஒவ்வொரு கூறின் மதிப்பும், அதாவது தனிப்பட்ட ஒவ்வொரு சரக்கின் மதிப்பும் அவரைப் பொறுத்த வரை, மாறா-மூலதன மதிப்பாகவும் மாறும்-மூலதன மதிப்பாகவும் உபரி-மதிப்பாகவும் பிரிக்கப்படக் கூடியது. ஆகவே தனிப்பட்ட ஒவ்வொரு சரக்கும் (சரக்கு-உற்பத்தியின் கூறுகள் என்ற முறை யில்) பணமாக மாற்றப்படுவதானது, அதே போது சரக்கு-உற்பத்தி அனைத்திலும் அடங்கியுள்ள உபரி-மதிப்பில் குறிப்பிட்ட ஒரு பகுதி பணமாக மாற்றப்படுவதையும் குறிக்கிறது. ஆகவே இந்நிலையில் முதலாளியின் உபரி-மதிப்பைப் பணமாக மாற்றுவதற்கு, அதாவது ஈடேற்றம் செய்வதற்கு வேண்டிய பணத்தை முதலாளியேதான் நுகர்வுப் பண்டங்களுக்காகச் செலவிடுவதன் மூலம் சுற்றோட்டத்தி னுள் செலுத்துகிறார் என்பது உள்ளதை உள்ளபடியே கூறுவ தாகிறது. இங்கே குறிப்பிடப்படுவது முன்பு முதலாளி தமது சொந் தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் சுற்றோட்டத்துள் செலுத் திய ரொக்கப் பணத்துக்கு (அல்லது அதில் ஒரு பங்குக்கு) சமமான குறிப்பிட்ட அளவு ரொக்கப் பணமே தவிர, முதலாளி செலுத்திய அதே நாணயங்களல்ல என்பதைக் கூறத் தேவையில்லை.

நடைமுறையில் இது இரு வழிகளில் நடைபெறுகிறது. குறிப் பிட்ட தொழில் இப்போதுதான் நடப்பு ஆண்டில் தொடங்கிய தென்றால், முதலாளி தமது தொழிலின் வரவுகளில் எந்தவொரு பகுதியையும் சொந்த நுகர்வுக்குப் பயன்படுத்தக் கூடிய நிலையை

அடைவதற்குச் சிறிது காலம். ஒரு சில மாதங்களேனும் வேண்டியிருக்கும். ஆயினும் ஒரு வினாடியுங்கூட அவர் தமது நுகர்வை நிறுத்தி வைப்பதில்லை. இன்னமும் தம் கைக்கு வராத உபரி-மதிப்பை எதிர்பார்த்து அவர் தமக்குத் தாமே பணத்தை முன்னீடு செய்து கொள்கிறார் (தம் கையிலிருந்தே முன்னீடு செய்தாலும் சரி, அல்லது வேறொருவரிடம் கடன் வாங்கி முன்னீடு செய்தாலும் சரி, இங்கு எல்லாம் ஒன்றுதான்). அவர் இவ்விதம் பணத்தை முன்னீடு செய்வதன் மூலம், பிற்பாடு உபரி-மதிப்பை ஈடேற்றம் செய்வதற்கு வேண்டிய சுற்றோட்ட ஊடகத்தையும் முன்னீடு செய்கிறார். இதற்கு பதில், அவருடைய தொழில் நீண்டதொரு காலமாய் முறையாக நடந்து வரும் தொழிலாய் இருக்குமாயின் பற்றுகளும் வரவுகளும் வெவ்வேறு வரையறைகளுடன் ஆண்டு முழுவதிலும் பரவியிருக்கும். ஆனால் ஒன்று மட்டும் இடை விடாது தொடர்ந்து நடைபெறுகிறது, முதலாளியின் நுகர்வே அது. வழக்கமான வருவாயை அல்லது மதிப்பீட்டின் படியான வருவாயை எதிர்பார்த்து இந்நுகர்வு நடைபெறுகிறது. இதன் பருமன் இந்த வருவாயில் குறிப்பிட்டதொரு விகிதாசாரமாகக் கணக்கிடப்பட்டதாகும். சரக்குகளின் ஒவ்வொரு பகுதி விற்கப்படுகிற போதும், அந்த ஆண்டில் கிடைக்க வேண்டிய உபரி-மதிப்பின் ஒரு பகுதியும் ஈடேற்றம் பெறுகிறது. ஆனால், உற்பத்தியாகிற சரக்குகளில் அடங்கிய மாறா-மூலதன மதிப்பையும் மாறும்-மூலதன மதிப்பையும் மாற்றீடு செய்வதற்கு மட்டுமே போதுமான சரக்குகள்தான் முழு ஆண்டிலும் விற்பனையாகுமானால் அல்லது வருடாந்தரச் சரக்கு-உற்பத்தி முழுதும் விற்கப்பட்டாலும் முன்னீடு செய்யப்பட்டு இந்தச் சரக்கில் அடங்கியுள்ள மூலதன-மதிப்பு மட்டுமே இந்த விற்பனையின் மூலம் ஈடேற்றம் பெறுகிற அளவுக்கு சரக்குகளின் விலைகள் சரிந்து விடுமானால், வருங்காலத்தில் கைவரப் போகும் உபரி-மதிப்பை எதிர்பார்த்தே பணம் செலவிடப்பட்டது என்பது தெட்டத் தெளிவாகவே வெளிப்பட்டு விடும். நமது முதலாளி நொடித்துப் போக நேருமானால், எதிர்பார்ப்பின் பேரில் அவர் தமது சொந்தச் செலவுகளுக்காக எடுத்துக் கொண்ட தொகைகள் அவரது தொழிலின் பரிமாணத்துக்கும், வழக்கமாக அல்லது இயல்பாக அதற்கு உரியதான உபரி-மதிப்பு வரவுக்கும் ஏற்றவைதானா என்பதை அவருக்குக் கடன் கொடுத்தவர்களும் நீதி மன்றத்தாரும் பரிசீலிப்பார்கள்.

முதலாளி வர்க்கத்தை முழுமையாக எடுத்துக் கொண்டால், அதன் உபரி-மதிப்பின் ஈடேற்றத்துக்கும் (அவ்வாறே அதன் மாறா-மூலதனம், மாறும்-மூலதனம் இவற்றின் சுற்றோட்டத்துக்கும்) தேவையான பணத்தை அது தானே சுற்றோட்டத்துள் செலுத்த வேண்டும் என்பது விபரீதமாகப் படவில்லை. அது மட்டுமல்லாமல், முதலாளித்துவப் பொருளுற்பத்திப் பொறியமைவு இயங்குவதற்கு இது ஒரு அத்தியாவசிய நிபந்தனை என்பதும் புலப்படுகிறது.

ஏனென்றால் இங்கே இருப்பவை இரு வர்க்கங்கள்தான் — தனது உழைப்புச் சக்தியைத் தவிர விற்பதற்கு வேறேதுமில்லாத தொழிலாளி வர்க்கம், சமூகப் பொருளுற்பத்திச் சாதனங்களையும் பணத்தையும் ஏகபோகமாய்ப் பெற்றுள்ள முதலாளி வர்க்கம் ஆகிய இரண்டும்தான். சரக்குகளில் அடங்கியுள்ள உபரி-மதிப்பின் ஈடேற்றத்துக்குத் தேவையான பணத்தைத் தொடக்கத்தில் தொழிலாளி வர்க்கம் அதன் செல்வாதாரங்களிலிருந்தே முன்னீடு செய்ய வேண்டும் என்றால் அது விபரீதமாகவே இருக்கும். தனிப்பட்ட முதலாளிதான் இந்தப் பணத்தை முன்னீடு செய்கிறார் — சரக்குகளை விலைக்கு வாங்குகிறவராகச் செயல்பட்டு அவர் நுகர்வுப் பண்டங்கள் வாங்குவதற்காகப் பணம் **செலவிடுகிறார்**; அல்லது தனக்கு வேண்டிய திறனுடை-மூலதனத்தின் கூறுகளென உழைப்புச் சக்தியையோ உற்பத்திச் சாதனங்களையோ வாங்குவதற்காகப் பணத்தை **முன்னீடு செய்கிறார்**. தமது பணத்துக்குச் சமதை எதையும் பெறாமல் அவர் பணம் தருவதில்லை. சுற்றோட்டத்துக்கு அவர் சரக்குகளை முன்னீடு செய்வது போலவேதான் சுற்றோட்டத்துக்குப் பணத்தையும் முன்னீடு செய்கிறார். முன்னீடு செய்வது சரக்கானாலும் பணமானாலும், சுற்றோட்டத்தின் தொடக்க முனையாகச் செயல்படுவது அவரேதான்.

உள்ளபடியே என்ன நிகழ்கிறது என்று விளங்காத படி இரு நிலைமைகள் மூடி மறைக்கின்றன:

1) தொழில் துறை மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறையில் **வணிக-மூலதனமும்** (பணமே எப்போதும் இதன் முதல் வடிவம், ஏனெனில் வணிகராய் இருப்பவர் ''உற்பத்திப் பண்டம்'' அல்லது ''சரக்கு'' எதையும் உற்பத்தி செய்வதில்லை) தனி வகை முதலாளிகளது சாமர்த்திய வேலைகளுக்கு இலக்காகும் **பண-மூலதனமும்** வந்து புகுதல்.

2) உபரி-மதிப்பு பற்பல இனங்களாகப் பிரிவினை செய்யப்படுதல். உபரி-மதிப்பு எப்போதுமே முதலில் தொழில் துறை முதலாளிகள் வசமே இருந்தாக வேண்டும். இந்த இனங்களுக்கு உரியோராய் தொழில் துறை முதலாளியுடன் கூடவே நிலவுடைமையாளரும் (நில-வாடகைக்காக) கடுவட்டிக்காரரும் (வட்டிக்காக) அதோடல்லாமல் அரசாங்கமும் அதன் அலுவலர்களும் சுகஜீவன வருமானக்காரர்களும் [rentiers] இன்ன பிறரும் வருகிறார்கள். இந்தக் கனவான்கள் தொழில் துறை முதலாளியின் சரக்குகளை வாங்குகிறவர்களாகவும், அந்த அளவுக்கு அவற்றைப் பணமாக மாற்றுகிறவர்களாகவும் இருப்பவர்கள். இவர்களும் சுற்றோட்டத்துள் ''பணத்தைச்'' செலுத்துகிறார்கள், இவர்களிடமிருந்து அவர் அதைப் பெறுகிறார். ஆனால் இவர்கள் அந்தப் பணத்தை ஆரம்பத்தில் எங்கிருந்து பெற்றார்கள், தொடர்ந்து எங்கிருந்து பெறுகிறார்கள் என்பது மறக்கப்பட்டு விடுகிறது.

## VI. துறை Iஇன் மாறா-மூலதனம்[54]

இனி நாம் பரிசீலிக்க வேண்டியது துறை Iஇன் மாறா-மூலதன மாகிய $4,000_c$. இந்த மதிப்பு இத்துறையின் சரக்குகளது உற்பத்தி யின் போது நுகரப்படும் உற்பத்திச் சாதனங்களது மதிப்புக்குச் சம மானது. இப்படி நுகரப்படும் இம்மதிப்பு இத்துறையின் சரக்கு-உற்பத்தியில் திரும்பி வந்து தோற்றமளிக்கிறது. திரும்பி வந்து தோற்றமளிக்கிற இந்த மதிப்பு துறை Iஇன் உற்பத்தி நிகழ்முறை யின் போது உற்பத்தியானதல்ல; இதற்கு முந்தைய ஆண்டின் உற்பத்தி நிகழ்முறையினுள் மாறா மதிப்பாக, அந்நிகழ்முறையின் உற்பத்திச் சாதனங்களது குறிப்பிட்ட மதிப்பாக நுழைந்ததாகும். இப்போது அது துறை Iஇன் சரக்கு-உற்பத்தியில் துறை IIஆல் கிரகிக்கப்பட்டது போக எஞ்சியிருக்கும் பகுதி அனைத்தின் மதிப் பாக நிலவுகிறது. இவ்வாறு துறை Iஐச் சேர்ந்த முதலாளிகளின் கையில் எஞ்சியிருக்கும் இந்தச் சரக்குகளின் மதிப்பானது அவர் களது வருடாந்தரச் சரக்கு-உற்பத்தி முழுவதன் மதிப்பில் மூன்றி லிரு பங்காகும். குறிப்பிட்ட வகை உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்யும் தனிப்பட்ட முதலாளியைப் பொறுத்த வரை, நாம் பின்வருமாறு கூறலாம்: அவர் தமது சரக்கு-உற்பத்தியை விற் கிறார்; அதனைப் பணமாக மாற்றுகிறார். அதனைப் பணமாக மாற்றுவதன் மூலம், அவர் தமது உற்பத்திப் பண்டத்தினது மதிப் பின் மாறாப் பகுதியையும் திரும்பவும் பணமாக மாற்றுகிறார். பண மாக மாற்றப்பட்ட இந்த மதிப்புப் பகுதியைக் கொண்டு, ஏனைய சரக்கு விற்போரிடமிருந்து அவர் தமக்குத் தேவையான உற்பத்திச் சாதனங்களை மீண்டும் வாங்குகிறார்; அதாவது தமது உற்பத்திப் பண்டத்தினது மதிப்பின் மாறாப் பகுதி மாறா-மூலதனமாகித் தனது திறனுடைச் செயற்பாட்டை மீண்டும் தொடங்குவதற்கேற்ற தசையுருவத்துக்கு மாற்றுகிறார். ஆனால் இப்படி அனுமானிப்பது இப்போது சாத்தியமற்றதாகிறது. துறை Iஇன் முதலாளி வர்க்கம் என்பது உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்யும் முதலாளிகள் எல்லாரையும் கொண்ட ஒட்டுமொத்தமாகும். மேலும், இவர்களது கையில் எஞ்சியிருக்கும் சரக்கு-உற்பத்தியான 4,000உம் சமுதாய உற்பத்திப் பண்டத்தில் வேறு எந்தப் பகுதிக்காகவும் பரிவர்த்தனை செய்ய முடியாத ஒரு பகுதியாகும். ஏனென்றால் வருடாந்தர உற்பத்திப் பண்டத்தில் வேறு எந்தப் பகுதியும் இப்போது எஞ்சி யிருக்கவில்லை. இந்த 4,000த்தைத் தவிர ஏனைய பகுதிகள் யாவும் ஏற்கெனவே பைசலாகி விட்டவை. ஒரு பகுதி சமுதாய நுகர்வு-நிதியத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டது, இன்னொரு பகுதி துறை IIஇன் மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்வதற்காகச் சென்று

---

[54] எங்கெல்ஸ் குறிப்பு: இங்கிருந்து. கையெழுத்துப் பிரதி II.

விட்டது. துறை II ஆனது துறை Iஉடன் பரிவர்த்தனை செய்து கொள்ளக் கூடியவை யாவற்றையும் ஏற்கெனவே பரிவர்த்தனை செய்து கொண்டு விட்டது.

துறை Iஇன் சரக்கு-உற்பத்தி முழுவதும் அதன் தசையுருவில் உற்பத்திச் சாதனங்களாகும், அதாவது மாறா-மூலதனத்தின் பொருட் கூறுகளாகும் என்பதை நினைவில் கொள்வோமானால், இந்தச் சிக்கல் எளிதில் தீர்ந்து விடுகிறது. ஏற்கெனவே துறை IIஇல் நாம் கண்ணுற்றதுதான் இங்கும் நம் முன்னே வந்து நிற்கிறது, தோற்றக் கோணம் மட்டும்தான் சற்றே வேறுபடுகிறது. துறை IIஇன் விவ காரத்தில் உற்பத்திப் பண்டம் முழுதும் நுகர்வுப் பண்டங்களாய் இருந்தது. உற்பத்திப் பண்டத்தில் ஒரு பகுதியை—கூலி + உபரி-மதிப்பு என்னும் பகுதியை—அதன் உற்பத்தியாளர்களே நுகர முடிந்தது. இங்கே, துறை Iஇன் விவகாரத்தில் உற்பத்திப் பண்டம் முழுவதும் உற்பத்திச் சாதனங்களாய்—கட்டடங்கள், இயந்திர சாத னங்கள், கலன்கள், கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்கள் முதலானவையாய்—இருக்கிறது. ஆகவே இவற்றில் ஒரு பகுதி, அதாவது இந்தத் துறையில் ஈடுபடுத்தப்படும் மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்யும் பகுதி நேரடியாக அதன் தசையுருவிலேயே திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறாகத் திரும்பவும் செயல்பட முடியும். சுற்றோட்டத்துள் செல்லும் போது இது துறை Iக்குள் ளேயே சுற்றியோடுகிறது. துறை IIஇல் சரக்கு-உற்பத்தியில் ஒரு பகுதி நேரடியாகவே அதன் உற்பத்தியாளர்களின் சொந்த நுகர்வுக் குச் செல்கிறது. இதே போல, துறை Iஇல் உற்பத்திப் பண்டத்தில் ஒரு பகுதி நேரடியாகவே அதன் முதலாளித்துவ உற்பத்தியாளர் களின் திறனுடை நுகர்வுக்குச் செல்கிறது.

துறை Iஇல் நுகரப்படும் மாறா-மூலதன மதிப்பானது அத்துறை யின் உற்பத்திப் பண்டத்தில் $4{,}000_c$ என்பதற்குச் சமமான பகுதி யில் திரும்பி வந்து தோற்றமளிக்கிறது; மாறா-மூலதனமாகத் தனது திறனுடைச் செயற்பாட்டை மீண்டும் தொடக்குவதற்கு ஏற்ற தசை யுருவில் வந்து தோற்றமளிக்கிறது. துறை IIஇல் சரக்கு-உற்பத்தி 3,000; இதில் கூலி + உபரி-மதிப்புக்குச் சமமான (1,000க்குச் சம மான) மதிப்புடைய பகுதி நேரடியாகவே துறை IIஇன் முதலாளி கள், தொழிலாளர்களது சொந்த நுகர்வுக்குப் போய் விடுகிறது. இந்தச் சரக்கு-உற்பத்தியில் அடங்கிய மாறா-மூலதன மதிப்பு (2,000க்குச் சமம்) மீண்டும் துறை IIஇன் முதலாளிகளது திற னுடை-நுகர்வில் சேர முடியாது; துறை Iஉடனான பரிவர்த்தனை யின் மூலம் இந்த மாறா-மூலதன மதிப்பு மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டும்.

மாறாக, துறை Iஇல், அதன் 6,000 சரக்கு-உற்பத்தியில் கூலி + உபரி-மதிப்புக்குச் சமமான (2,000க்குச் சமமான) மதிப் புள்ள பகுதியானது அதன் உற்பத்தியாளர்களது சொந்த நுகர்வுக்குப்

போக முடியாது, அதன் தசையுருவே இதற்குக் காரணம். இப்பகுதி முதலில் துறை IIஉடன் பரிவர்த்தனை செய்யப்பட்டாக வேண்டும். இதற்கு மாறாக இந்த உற்பத்திப் பண்டத்தினது மதிப்பில் 4,000க்குச் சமமான மாறாப் பகுதியானது, துறை Iஇன் முதலாளி வர்க்கத்தை ஒட்டுமொத்தமாய் எடுத்துக் கொண்டால் அவ்வர்க்கத்துக்கு வேண்டிய மாறா-மூலதனமாகி உடனே திரும்பவும் செயல்படுவதற்கு ஏற்ற தசையுருவில் இருக்கிறது. அதாவது, துறை Iஇன் உற்பத்திப் பண்டம் முழுவதும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் மாறா-மூலதனக் கூறுகளாக மட்டுமே செயல்படக் கூடிய தசையுரு கொண்ட பயன்-மதிப்புகளால் ஆனதாய் இருக்கிறது. எனவே 6,000 மதிப்புள்ள இந்த உற்பத்திப் பண்டத்தில் மூன்றிலொரு பங்கு (2,000) துறை IIஇன் மாறா-மூலதனத்தையும், மீதமுள்ள மூன்றிலிரு பங்கு துறை Iஇன் மாறா-மூலதனத்தையும் மாற்றீடு செய்கிறது.

துறை Iஇன் மாறா-மூலதனமானது பல்வேறுபட்ட ஏராளமான மூலதனத் தொகுதிகளைக் கொண்டதாகும்; உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்யும் பல்வேறு தொழிற் கிளைகளில் முதலீடாகியுள்ள — இரும்பு ஆலைகளில் இவ்வளவு என்றும், நிலக்கரிச் சுரங்கங்களில் இவ்வளவு என்றும், இப்படிப் பலவாறாகவும் முதலீடாகியுள்ள — மூலதனத் தொகுதிகளைக் கொண்டதாகும். இந்த மூலதனத் தொகுதிகளில், அல்லது இந்தச் சமுதாயத் தொகுதி மூலதனங்களில் ஒவ்வொன்றும் சுயேச்சையாக இயங்கும் மிகப் பல தனிப்பட்ட மூலதனங்களால் ஆனதாகும். முதலாவதாக, சமுதாயத்தின் மூலதனம் — இதனை 7,500 (மிலியனாகவோ வேறெதுவாகவோ இருக்கலாம்) என்போம் — பல்வேறு மூலதனத் தொகுதிகளைக் கொண்டது. சமுதாய மூலதனமான 7,500 தனித் தனிப் பகுதிகளாகப் பிரிந்து, ஒவ்வொன்றும் ஒரு தனித் தொழிற் கிளையில் முதலீடாகிறது. சமுதாய மூலதன-மதிப்பில் ஒவ்வொரு பகுதியும் ஒரு குறிப்பிட்ட தொழிற் கிளையில் முதலீடு செய்யப்பட்டிருப்பதாகும். இந்த ஒவ்வொரு பகுதியும் அதன் தசையுருவைப் பொறுத்தவரை, குறிப்பிட்ட அந்தத் தொழிற் கிளைக்கு வேண்டிய உற்பத்திச் சாதனங்களாலும், அத்தொழிற் கிளைக்குத் தேவையானதும் அதற்கேற்பப் பயிற்சி பெற்றதுமான உழைப்புச் சக்தியாலும் ஆனதாகும்; இந்த உழைப்புச் சக்தியானது, தனிப்பட்ட ஒவ்வொரு தொழிற் கிளையிலும் அது ஆற்ற வேண்டிய பிரத்தியேக வகை உழைப்புக்கேற்ப உழைப்புப் பிரிவினையால் பலவாறும் ஒழுங்கு செய்யப்பட்டதாகும். எந்த ஒரு தொழிற் கிளையிலும் முதலீடாகும் சமுதாய மூலதனப் பகுதி ஒவ்வொன்றும் அக்கிளையில் முதலீடாகி சுயேச்சையாகச் செயல்படும் தனிப்பட்ட மூலதனங்களின் ஒட்டுமொத்தமாகும். இவை எல்லாம் துறை I, துறை II ஆகிய இரண்டுக்குமே பொருந்துவதுதான்.

துறை Iஇல் அதன் சாக்கு-உற்பத்தியின் வடிவில் திரும்பி வந்து தோற்றமளிக்கும் மாறா-மூலதன மதிப்பைப் பொறுத்த வரை, அதன் ஒரு பகுதி அதனை உற்பத்தி செய்து கொடுத்த குறிப்பிட்ட அந்தத் தொழிற் கிளைக்கே (அல்லது தனிப்பட்ட அதே ஆலைக்கே, கூட) உற்பத்திச் சாதனங்களாகத் திரும்பி வருகிறது. தானியம் தானிய உற்பத்திக்கும், நிலக்கரி நிலக்கரி உற்பத்திக்கும், இயந்திர உருவிலான இரும்பு இரும்பு உற்பத்திக்கும் பயன்படுத்தப்படுவதை உதாரணமாய்க் குறிப்பிடலாம்.

ஆயினும் துறை Iஇன் மாறா-மூலதன மதிப்பாக அமையும் பூர்த்தியாகாத உற்பத்திப் பொருட்கள், அவற்றுக்குரிய குறிப்பிட்ட கிளைக்கோ, தனிப்பட்ட ஆலைக்கோ நேரடியாகத் திரும்பி வருவதில்லை. தம்மிடையே அவை இடம் மாற்றிக் கொள்வதோடு நின்று விடுகின்றன. அவை அப்படியே தமது தசையுருவில் துறை Iஇன் வேறு ஏதேனுமொரு தொழிற் கிளைக்குப் போய்ச் சேருகின்றன. அதே போது துறை Iஇன் ஏனைய தொழிற் கிளைகளின் உற்பத்திப் பொருட்கள் அவற்றைப் பொருள் வகையில் மாற்றீடு செய்கின்றன. இந்த உற்பத்திப் பொருட்களைப் பொறுத்த வரை அவற்றின் இடமாற்றம் மட்டுமே நடைபெறுகிறது. இப்பொருட்கள் யாவும் துறை Iஇல் மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்யும் கூறுகளாகத் திரும்பி வருகின்றன, அதே தொகுதிக்கு வருவதற்கு பதில் துறை Iஇன் பிறிதொரு தொகுதிக்கு வருகின்றன. இங்கே நடைபெறுவது துறை Iஇன் தனிப்பட்ட முதலாளிகளிடையிலான பரிவர்த்தனை என்பதால், இது ஒரு தசையுருவிலுள்ள மாறா-மூலதனத்துக்கும் வேறொரு தசையுருவிலுள்ள மாறா-மூலதனத்துக்குமான பரிவர்த்தனையாகும், ஒரு வகை உற்பத்திச் சாதனங்களுக்கும் வேறொரு வகை உற்பத்திச் சாதனங்களுக்குமான பரிவர்த்தனையாகும். துறை Iஇன் மாறா-மூலதனத்தின் வெவ்வேறு தனிப்பட்ட பகுதிகள் தமக்கிடையே நடத்திக் கொள்ளும் பரிவர்த்தனையே இது. உற்பத்திப் பொருட்கள் அவை உற்பத்தி செய்யப்படும் தொழிற் கிளையில் உற்பத்திச் சாதனங்களாய் நேரடியாகச் செயல்பட முடியாத போது, அவற்றின் உற்பத்தி இடத்திலிருந்து வேறொரு இடத்துக்கு மாற்றப்படுகின்றன, இவ்விதம் அவை ஒன்றையொன்று மாற்றீடு செய்து கொள்கின்றன. வேறு விதமாகச் சொல்வதெனில், முன்பு நாம் துறை IIஇன் விவகாரத்தில் நடைபெறக் கண்ணுற்றதற்கு ஒத்த நிகழ்வு இங்கும் நடைபெறக் காண்கிறோம்—அதாவது துறை Iஇன் ஒவ்வொரு முதலாளியும் இந்தச் சரக்குத் திரளிலிருந்து தனக்கு வேண்டிய உற்பத்திச் சாதனங்களை எடுத்துக் கொள்கிறார்—மாறா-மூலதனமான 4000இல் தமக்குள்ள பங்குக்கு ஏற்ற விகிதாசாரத்தில் இவற்றை எடுத்துக் கொள்கிறார். பொருளுற்பத்தியானது முதலாளித்துவ முறையில் அல்லாமல் சோஷலிச முறைக்கு மாற்றப்பட்டாலுங்கூட, மறுவுற்பத்தியின் பொருட்டு துறை Iஇன்

இந்த உற்பத்திப் பொருட்கள் உற்பத்திச் சாதனங்களாக இத் துறையின் பல்வேறு கிளைகளுக்கும் முறைப்படி மறுவினியோகம் செய்யப்படும். ஒரு பகுதி அது உற்பத்திப் பொருளாய் வெளிவந்த அதே தொழிற் கிளையிலேயே இருக்க, மற்றொரு பகுதி ஏனைய கிளைகளுக்குப் பெயர்ந்து செல்லும்; இவ்விதம் இந்தத் துறையின் பற்பல தொழிற் கிளைகளுக்கிடையே உற்பத்திப் பொருட்கள் போவதும் வருவதுமான ஓயாத ஓட்டம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும்.

## VII. இரு துறைகளிலும் மாறும்-மூலதனமும் உபரி-மதிப்பும்

இவ்வாறு ஓராண்டில் உற்பத்தி செய்யப்படும் நுகர்வுப் பண்டங்களின் மொத்த மதிப்பு = துறை IIஇல் அவ்வாண்டில் மறுவுற்பத்தியாகும் மாறும்-மூலதன மதிப்பும் துறை IIஇல் புதிதாக உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பும் (இவ்விரண்டின் கூட்டுத் தொகை துறை IIஇல் அவ்வாண்டில் உற்பத்தியாகும் மதிப்புக்குச் சமம்) + துறை Iஇல் அவ்வாண்டில் மறுவுற்பத்தியாகும் மாறும்-மூலதன மதிப்பும் துறை Iஇல் புதிதாய் உற்பத்தியாகும் உபரி-மதிப்பும் (இவ்விரண்டின் கூட்டுத் தொகை துறை Iஇல் அவ்வாண்டில் படைக்கப்பெறும் மதிப்புக்குச் சமம்).

சாமானிய மறுவுற்பத்தி நடைபெறுவதாகக் கொண்டால், ஆண்டுதோறும் உற்பத்தியாகும் நுகர்வுப் பண்டங்களின் மொத்த மதிப்பு இவ்விதம் வருடாந்தர மதிப்பு-உற்பத்திக்குச் சமமாய் இருக்கிறது, அதாவது சமுதாய உழைப்பினால் அவ்வாண்டில் உற்பத்தி செய்யப்படும் மொத்த மதிப்புக்குச் சமமாய் இருக்கிறது. சாமானிய மறுவுற்பத்தியில் இந்த மதிப்பு முழுவதுமே நுகரப்பட்டு விடுவதால் இது இப்படித்தான் இருந்தாக வேண்டும்.

மொத்த சமுதாய வேலை-நாள் இரு பகுதிகளாகப் பிரிகிறது: 1) அவசிய-உழைப்பு — ஓராண்டில் இது படைக்கும் மதிப்பு $1{,}500_v$; 2) உபரி-உழைப்பு — இது படைத்திடும் கூடுதல் மதிப்பு அல்லது உபரி-மதிப்பு $1{,}500_s$. இந்த மதிப்புகளின் கூட்டுத் தொகை 3,000; இது அவ்வாண்டில் உற்பத்தியாகும் நுகர்வுப் பண்டங்களின் மதிப்புக்குச் சமம். ஆகவே அவ்வாண்டில் உற்பத்தியாகும் நுகர்வுப் பண்டங்களின் மொத்த மதிப்பு = அவ்வாண்டில் மொத்த சமுதாய வேலை-நாளில் உற்பத்தியாகும் மொத்த மதிப்பு = சமுதாய மாறும்-மூலதனத்தின் மதிப்பு + சமுதாய உபரி-மதிப்பு = மொத்த வருடாந்தரப் புதிய உற்பத்திப் பொருள்.

ஆனால் இந்த இரு மதிப்புப் பருமன்களும் சமமாய் இருந்தாலும் கூட, நுகர்வுப் பண்டங்களான துறை IIஇன் சரக்குகளது மொத்த மதிப்பானது இந்தச் சமுதாய உற்பத்தித் துறையில் உற்பத்தி செய்யப்படவில்லை என்பது நமக்குத் தெரியும். அவை சமமாய்

இருக்கின்றன என்றால், துறை IIஇல் திரும்பி வந்து தோற்ற மளிக்கும் மாறா-மூலதன மதிப்பு துறை Iஇல் புதிதாக உற்பத்தி செய்யப்படும் மதிப்புக்கு (மாறும்-மூலதனத்தின் மதிப்பு+உபரி-மதிப்புக்கு) சமமாய் இருப்பதே அதற்குக் காரணம். ஆகவே $I_{(v+s)}$. என்பதைக் கொண்டு துறை IIஇன் உற்பத்திப் பண்டத்தில் அதன் உற்பத்தியாளர்களுக்கு மாறா-மூலதன மதிப்பைக் குறிக்கும் பகுதியை விலைக்கு வாங்க முடியும். ஆகவே துறை IIஇன் முதலாளிகளைப் பொறுத்த வரை அவர்களது உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு c+v+s என்பதாகப் பகுபட்டாலும், சமுதாயத்தின் கண்ணோட்டத் திலிருந்து ஏன் அதனை v+s என்பதாகப் பகுக்க வேண்டியுள்ளது என்பதற்கு இதுதான் காரணம். $II_c$ இங்கே $I_{(v+s)}$க்குச் சமமாக இருப்பதும், சமுதாய உற்பத்திப் பண்டத்தின் இந்த இரு அடக்கக் கூறுகளும் பரிவர்த்தனையின் மூலம் தமது தசையுருக்களைத் தம் மிடையே மாற்றிக் கொள்வதுமே காரணம். இம்மாற்றத்துக்குப் பிறகு, திரும்பவும் உற்பத்திச் சாதனங்களின் உருவில் $II_c$உம் நுகர்வுப் பண்டங்களின் உருவில் $I_{(v+s)}$உம் நிலவ முற்படுகின்றன.

வருடாந்தர உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு v+s என்பதாய்ப் பகுபடுகிறது என்று ஆதாம் ஸ்மித் வாதிடுவதற்கு இந்த நிலைமை தான் வழிகோலியது. (1) வருடாந்தர உற்பத்திப் பண்டத்தில் நுகர்வுப் பண்டங்களைக் குறிக்கும் பகுதிக்கு மட்டுமே இது பொருந்தும்; (2) இந்த மொத்த மதிப்பு துறை IIஇலேயே உற்பத்தி செய்யப் படுவதாகவும், இந்த உற்பத்திப் பண்டத்தின் மதிப்பானது துறை IIஇல் முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனத்தின் மதிப்பு+ துறை IIஇல் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்புக்குச் சமமாவ தாகவும் அர்த்தப்படுத்துகையில் இது பொருந்தாததாகி விடுகிறது. $II_{(c+v+s)}=II_{(v+s)}+I_{(v+s)}$ என்கிற அர்த்தத்தில் மட்டுமே, அதாவது $II_c=I_{(v+s)}$ என்பதால் மட்டுமே இது உண்மையாகிறது.

இதோடு மேலும் பெறப்படுவது என்னவென்றால்:

சமுதாய வேலை-நாள் என்பது (அதாவது தொழிலாளி வர்க்கம் முழுவதுமாய் ஓராண்டு பூராவிலும் செலவிடும் உழைப்பு) தனிப் பட்ட ஒவ்வொரு வேலை-நாளையும் போலவே, இரண்டே இரண்டு பகுதிகளாக, அதாவது அவசிய-உழைப்பாகவும் உபரி-உழைப்பாக வும் பிரிகிறது. ஆதலால் இந்த வேலை-நாளில் உற்பத்தியாகும் மதிப்பும் இரண்டே இரண்டு பகுதிகளாக—அதாவது மாறும்-மூலதனத்தின் மதிப்பு, அல்லது தொழிலாளி தமது மறுவுற்பத்திக் கான சாதனங்களை விலைக்கு வாங்குவதற்கு வேண்டிய மதிப்புப் பகுதியாகவும், முதலாளி தமது சொந்த நுகர்வுக்காகச் செலவிடுகிற உபரி-மதிப்புப் பகுதியாகவும்—பகுபடுகிறது. ஆயினும் சமுதாயத் தின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் சமுதாய வேலை-நாளின் ஒரு பகுதியானது பிரத்தியேகமாகப் **புதிய மாறா-மூலதனத் தின் உற்பத்திக்காக**, அதாவது உழைப்பு நிகழ்முறையில் உற்பத்திச்

சாதனங்களாகவும், ஆகவே அதனுடன் கூடவே நிகழும் மதிப்பின் தற்பெருக்க நிகழ்முறையில் மாறா-மூலதனமாகவும் செயல்படும் பொருட்களின் உற்பத்திக்காகச் செலவிடப்படுகிறது. நமது அனுமானத்தின் படி, மொத்தச் சமுதாய வேலை-நாளானது 3,000 பண மதிப்பாக வெளித்தோன்றுகிறது. இதில் மூன்றிலொரு பங்காகிய 1,000 மட்டும் நுகர்வுப் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும் துறை IIஇல் உற்பத்தியாகிறது. இந்த நுகர்வுப் பண்டங்களில்தான் முழு மாறும்-மூலதன மதிப்பும் முழு உபரி-மதிப்பும் முடிவில் ஈடேற்றம் பெறுகின்றன. இவ்வாறு இந்த அனுமானத்தின் படி, சமுதாய வேலை-நாளின் மூன்றிலிரு பங்கானது புதிய மாறா-மூலதனத்தின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகிறது. துறை Iஇன் தனிப்பட்ட முதலாளிகள், தொழிலாளர்களின் கண்ணோட்டத்திலிருந்து பரர்க்கையில் சமுதாய வேலை-நாளின் இந்த மூன்றிலிரு பங்கு—துறை IIஇல் சமுதாய வேலை-நாளின் கடைசி மூன்றாம் பகுதியைப் போலவே—மாறும்-மூலதன மதிப்பு, உபரி-மதிப்பு இவற்றின் உற்பத்திக்கு மட்டுமே பயன்படுகிறது என்றாலுங்கூட, சமுதாயத்தின் கண்ணோட்டத்திலிருந்தும் உற்பத்திப் பண்டத்தின் பயன்-மதிப்புக் கண்ணோட்டத்திலிருந்தும் பார்க்கையில், சமுதாய வேலை-நாளில் இந்த மூன்றிலிரு பங்கானது திறனுடை நுகர்வுக்கு உள்ளாகியிருக்கும் அல்லது ஏற்கெனவே இப்படி நுகரப்பட்டுவிட்ட மாறா-மூலதனத்தின் மாற்றீட்டுக்கு வேண்டியதை மட்டுமே உற்பத்தி செய்கிறது. மேலும் தனிப்பட்ட நிலையிலிருந்து அவற்றைப் பார்க்கையில், வேலை-நாளின் இந்த மூன்றிலிரு பங்கானது, மாறும்-மூலதனத்தின் மதிப்பு+உற்பத்தியாளருக்கான உபரி-மதிப்புக்குச் சமமான மொத்த மதிப்பை மட்டும் உற்பத்தி செய்கிறதே தவிர, கூலியையோ உபரி-மதிப்பையோ செலவிட்டு அனுபவிக்கக் கூடிய பயன்-மதிப்புகள் எதையும் உற்பத்தி செய்வதில்லை. ஏனென்றால் அதன் உற்பத்திப் பொருட்கள் யாவும் உற்பத்திச் சாதனங்களாகும்.

துறை Iஇலும் சரி, துறை IIஇலும் சரி, சமுதாய வேலை-நாளின் எந்தப் பகுதியும், இந்த இரு பெரும் உற்பத்தித் துறைகளில் ஈடுபடுத்தப்பட்டுச் செயல்படுகிற மாறா-மூலதன மதிப்பின் உற்பத்திக்குப் பயன்படுவதில்லை என்பதை முதற்கண் குறிப்பிட வேண்டும். 4,000 $I_c$ + 2,000 $II_c$ என்பதற்குச் சமமான மாறா-மூலதன மதிப்போடு கூட, 2,000 $I_{(v+s)}$ + 1,000 $II_{(v+s)}$ என்கிற கூடுதல் மதிப்பை மட்டுமே சமுதாய வேலை-நாளின் இரு பகுதிகளும் உற்பத்தி செய்கின்றன. உற்பத்திச் சாதனங்களின் வடிவில் உற்பத்தி செய்யப்படும் புதிய மதிப்பானது வருங்காலத்தில் மாறா-மூலதனமாகச் செயல்படுவதற்காக உற்பத்தியானதே தவிர இன்னமும் அது மாறா-மூலதனமாகி விடவில்லை.

துறை IIஇன் உற்பத்திப் பொருட்கள் யாவும் நுகர்வுப் பண்டங்கள்.

இந்த உற்பத்திப் பொருட்களை ஸ்தூலப் பொருட்களாய், பயன்-மதிப்புகளாய், அவற்றின் தசையுருவில் நோக்கும் போது, அவை சமுதாய வேலை-நாளில் மூன்றிலொரு பங்கின், துறை IIஆல் செலவிடப்படும் இந்த மூன்றிலொரு பங்கின் உற்பத்திப் பொருட்களாகும். இவை துணி நெசவு, ரொட்டி சுடுதல் போன்ற ஸ்தூல வடிவிலான உழைப்பால் இத்துறையில் உற்பத்தி செய்யப்படுகிறவை, உழைப்பு நிகழ்முறையில் செயலின் கர்த்தாவாகச் செயல்படும் உழைப்பின் உற்பத்திப் பொருட்கள். துறை IIஇன் உற்பத்திப் பொருட்களுடைய மதிப்பின் மாறாப் பகுதியைப் பொறுத்தவரை, முன்பு உற்பத்திச் சாதனங்களின் வடிவில் இருந்த அது இப்போது ஒரு புதிய பயன்-மதிப்பாக, நுகர்வுப் பண்டங்களாகிய புதிய தசையுருவாகத் திரும்பி வந்து தோற்றமளிக்கிறது. உழைப்பு நிகழ்முறையினால் அதன் மதிப்பு அதன் பழைய தசையுருவிலிருந்து புதிய தசையுருவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால் உற்பத்திப் பொருளுடைய மதிப்பில் மூன்றிலிரு பங்கான இந்த மதிப்பு—2,000க்குச் சமமான இது—துறை IIஇனது நடப்பு ஆண்டின் தற்பெருக்க நிகழ்முறையின் போது உற்பத்தி செய்யப்பட்டதல்ல.

உழைப்பு நிகழ்முறையின் கண்ணோட்டத்தில், துறை IIஇன் உற்பத்திப் பொருட்கள் யாவும் புதிதாகச் செயல்படும் உயிருள்ள உழைப்பாலும் அதற்கு அவசியமான உற்பத்திச் சாதனங்களாலும் விளையும் பயனாகும். இந்த உற்பத்திச் சாதனங்களைப் பொருட்கூறுகளாய்க் கொண்டு செயல்பட்டே உழைப்பு தன்னை நிறைவேற்றிக் கொள்கிறது. இவ்வாறே, தற்பெருக்க நிகழ்முறையின் நிலையிலிருந்து பார்ப்போமானால், துறை IIஇன் உற்பத்திப் பண்டத்து மதிப்பானது *(3,000)* இரு கூறுகளைக் கொண்டதாய் இருக்கிறது: ஒரு கூறு புதிதாகச் சேர்க்கப்பட்ட சமுதாய வேலை-நாளில் மூன்றிலொரு பங்கினால் உற்பத்தி செய்யப்பெற்ற புதிய மதிப்பு $(500_v + 500_s = 1,000)$; மற்றொரு கூறு மாறாத மதிப்பாய் இருப்பது. இப்போது நாம் பரிசீலிக்கிற துறை IIஇன் இந்த உற்பத்தி நிகழ்முறைக்கு முன்னதாகவே கழிந்து விட்ட கடந்த காலத்திய சமுதாய வேலை-நாளில் மூன்றிலிரு பங்கு இந்த மாறாத மதிப்பில் உருக்கொண்டுள்ளது துறை IIஇன் உற்பத்திப் பண்டத்து மதிப்பின் இந்த இரண்டாவது கூறானது உற்பத்திப் பண்டத்தின் ஒரு பகுதியாலேயே குறிக்கப்படுகிறது. 2,000 பெறுமானமுள்ள, அதாவது சமுதாய வேலை-நாளில் மூன்றிலிரு பங்குக்குரிய நுகர்வுப் பண்டத் தொகுதியில் இது இருப்பதாகும். இந்த மதிப்புக் கூறு திரும்பி வந்து இந்தப் புதிய பயன்-வடிவில் தோற்றமளிக்கிறது. ஆகவே துறை IIஇன் நுகர்வுப் பண்டங்களில் 2,000 $II_c$க்குச் சமமான பகுதி துறை Iஇன் பண்டமாகிய உற்பத்திச் சாதனங்களில் $I(1,000_v + 1,000_s)$க்குச் சமமான பகுதிக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகிறது என்றால், இந்தப் பரிவர்த்தனை உண்மையில் எதைக் குறிக்கிறது? இவ்வருட

உழைப்பைச் சேராததும் இவ்வருடத்துக்கு முன்பே கழிந்து விட்டது மான ஒரு சமுதாய வேலை-நாளில் மூன்றிலிரு பங்கானது இவ் வருடம் புதிதாகச் சேர்க்கப்பட்ட சமுதாய வேலை-நாளில் மூன்றி லிரு பங்குக்குப் பரிவர்த்தனை செய்யப்படுவதைத்தான் குறிக்கிறது. இவ்வருடத்துச் சமுதாய வேலை-நாளில் மூன்றிலிரு பங்கானது மாறா-மூலதன உற்பத்தியில் ஈடுபட வேண்டும், அதே போது அதன் உற்பத்தியாளர்களுக்கு மாறும்-மூலதன மதிப்பு + உபரி-மதிப்பு என்பதாக அமையவும் வேண்டும் என்றால், அது ஆண்டு தோறும் நுகரப்படும் நுகர்வுப் பண்டங்களின் மதிப்பில் ஒரு பகுதிக் காக, இவ்வருடத்துக்கு முன்பே செலவிடப்பட்டு ஈடேற்றம் பெற்ற ஒரு வேலை-நாளில் மூன்றிலிரு பங்கினைத் தன்னுள் கொண்ட பகுதிக்காகப் பரிவர்த்தனை செய்யப்பட்டாக வேண்டும். இது இந்த வருடத்திய வேலை-நாளில் மூன்றிலிரு பங்கை இவ்வருடத்துக்கு முன்பே செலவிடப்பட்ட ஒரு வேலை-நாளில் மூன்றிலிரு பங்குக் காக மாற்றிக் கொள்ளும் பரிவர்த்தனையாகும், இவ்வாண்டு உழைப்பு-நேரத்தைக் கடந்த ஆண்டு உழைப்பு-நேரத்துக்காக மாற்றிக் கொள்ளும் பரிவர்த்தனையாகும். ஒரு முழு சமுதாய வேலை-நாளில் மூன்றிலிரு பங்கானது மாறும்-மூலதனமோ உபரி-மதிப்போ ஈடேற்றம் பெறக் கூடிய பண்டங்களின் உற்பத்திக்காகச் செலவிடப் படாமல் ஓராண்டு காலத்தில் நுகரப்பட்ட மூலதனத்தின் மாற்றீட்டுக் கான உற்பத்திச் சாதனங்களின் உற்பத்திக்காக செலவிடப்பட்ட போதிலும், அந்த முழு சமுதாய வேலை-நாளின் மதிப்பு-உற்பத்தி யானது மாறும்-மூலதன மதிப்பு + உபரி-மதிப்பு என்பதாக எப் படிப் பகுபடுகிறது என்ற புதிருக்கு இதுவேதான் விளக்கம். துறை IIஇன் உற்பத்திப் பண்டத்து மதிப்பில் மூன்றிலிரு பங்கானது, துறை Iஇன் முதலாளிகளும் தொழிலாளர்களும் தாம் உற்பத்தி செய்கிற மாறும்-மூலதன மதிப்பு + உபரி-மதிப்புத் தொகையினை ஈடேற்றம் பெறச் செய்கிற இந்த மூன்றிலிரு பங்கானது (இது ஒரு முழு ஆண்டின் உற்பத்திப் பண்டத்து மதிப்பில் ஒன்பதிலிரு பங்காகும்), அதன் மதிப்பைப் பொறுத்த வரை, நடப்பு ஆண்டுக்கு முற்பட்டதோர் ஆண்டிற்குரிய சமுதாய வேலை-நாளில் மூன்றிலிரு பங்கின் உற்பத்திப் பண்டமாகும் என்பதே இதற்குரிய விளக்கம்.

துறை I, துறை II இவற்றின் சமுதாய உற்பத்திப் பண்டங் களை — உற்பத்திச் சாதனங்களும் நுகர்வுப் பண்டங்களுமானவற்றை— இப்பண்டங்களது பயன்-மதிப்பின் கோணத்திலிருந்து, ஸ்தூல மான தசையுருவின் கோணத்திலிருந்து பார்க்கையில், அவை இவ் வருடத்து உற்பத்திப் பண்டங்கள்தான். என்றாலும் இந்த உழைப் பினை உழைப்புச் சக்தியின் செலவாக, மதிப்பைப் படைக்கும் உழைப்பாகக் கருதாமல், பயனுள்ள ஸ்தூல உழைப்பாகக் கருதுகிற வரைதான், மேற்கூறியது உண்மையாகும். அதுவுங்கூட, உயிருள்ள உழைப்பு உற்பத்திச் சாதனங்களிடம் போய்ச் சேர்ந்து அவற்றின்

மீது செயல்படுவதன் பயனாய் அந்த உற்பத்திச் சாதனங்கள் புதிய உற்பத்திப் பண்டங்களாக, அதாவது இவ்வருடத்து உற்பத்திப் பண்டங்களாக உருமாற்றம் பெறுகின்றன என்ற அர்த்தத்தில்தான் உண்மையாகும். இதே போல் இவ்வருடத்து உழைப்பாலும் அதனைச் சாராத உற்பத்திச் சாதனங்கள் இல்லாமல், உழைப்புக் கருவிகளும் மூலப் பொருட்களும் இல்லாமல் உற்பத்திப் பண்டங்களாக உரு மாற்றம் பெற முடியாது.

## VIII. இரு துறைகளிலும் மாறா-மூலதனம்

உற்பத்திப் பண்டத்தின் மொத்த மதிப்பையும் (9,000) இம் மதிப்பின் இனப் பாகுபாட்டையும் பகுப்பாய்வு செய்வது தனிப் பட்ட மூலதனம் உற்பத்தி செய்யும் மதிப்பைப் பகுப்பாய்வு செய் வதைக் காட்டிலும் கடினமானதன்று. உண்மையில் இரண்டும் ஒன்றே தான்.

வருடாந்தர சமுதாய உற்பத்திப் பண்டம் முழுவதையும் எடுத்துக் கொண்டால், ஒவ்வொன்றும் ஓராண்டுக்கு நீடிக்கும் மூன்று சமுதாய வேலை-நாட்கள் அதில் அடங்கியுள்ளன. ஒவ்வொரு வேலை-நாளும் குறிக்கும் மதிப்பு 3,000. ஆகவே மொத்த உற்பத்திப் பண்டமானது $3{,}000 \times 3 = 9{,}000$ மதிப்பைக் குறிக்கிறது.

இந்த வேலை நேரத்தில் இங்கு நாம் பகுப்பாய்வு செய்கிற உற் பத்திப் பண்டத்தைத் தந்த ஓராண்டு உற்பத்தி நிகழ்முறைக்கு முன்ன தாகவே கழிந்து விட்ட பகுதிகள் வருமாறு: துறை Iஇல் 4/3 வேலை-நாள் (இதன் உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு 4,000); துறை IIஇல் 2/3 வேலை-நாள் (இதன் உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு 2,000). இரண்டையும் கூட்டி வரும் மொத்தம் $4/3 + 2/3 = 2$ சமுதாய வேலை-நாட்கள், இவற்றின் உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு 6,000. ஆக, $4{,}000\ \mathrm{I}_c + 2{,}000\ \mathrm{II}_c = 6{,}000_c$ ஆனது உற் பத்திச் சாதனங்களின் மதிப்பாக, அதாவது மாறா-மூலதன மதிப் பாக சமுதாய உற்பத்திப் பண்டத்தின் மொத்த மதிப்பில் திரும்பி வந்து தோற்றமளிக்கிறது.

மேலும் துறை Iஇல் ஓராண்டு கால சமுதாய வேலை-நாளில் மூன்றிலொரு பங்கு புதிதாகச் சேர்க்கப்படுவதாகும்; இது அவசிய-உழைப்பாகும், அதாவது மாறும்-மூலதன மதிப்பான $1{,}000\ \mathrm{I}_v$ஐ மாற்றீடு செய்வதும் துறை Iஇல் ஈடுபடுத்தப்பட்ட உழைப்பின் விலையைத் தருவதுமான உழைப்பாகும். இதே போல் துறை IIஇல் ஒரு சமுதாய வேலை-நாளில் ஆறிலொரு பங்கானது அவசிய-உழைப்பாகும், இதன் மதிப்பு 500. எனவே சமுதாய வேலை-நாளில் ஒரு பாதியின் மதிப்பு $1{,}000\ \mathrm{I}_v + 500\ \mathrm{II}_v = 1{,}500_v$ ஆகும், இது மொத்த வேலை-நாளில் முதல் பாதியின் — இந்த ஆண்டு சேர்க்கப்பட்டதும், அவசிய-உழைப்பானதுமாகிய இந்தப் பாதியின் — மதிப்புத் தெரிவிப்பாகும்.

இறுதியாக, துறை Iஇல் மொத்த வேலை-நாளில் மூன்றிலொரு பங்கு (இதன் உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு 1,000) உபரி-உழைப்பாகும்; துறை IIஇல் வேலை-நாளில் ஆறிலொரு பங்கு (இதன் உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு 500) உபரி-உழைப்பாகும். இவையிரண்டும் சேர்ந்து புதிதாய்ச் சேர்க்கப்பட்ட மொத்த வேலை-நாளின் மற்றொரு பாதியாகின்றன. எனவே உற்பத்தி செய்யப்பட்ட மொத்த உபரி-மதிப்பு 1,000 $I_s$+500 $II_s$=1,500$_s$.

இவ்வாறு:

சமுதாய உற்பத்திப் பண்டத்தினது மதிப்பின் மாறா-மூலதனப் பகுதி (c):

உற்பத்தி நிகழ்முறைக்கு முன்னதாகச் செலவிடப்பட்ட இரு வேலை-நாட்கள்; இவற்றின் உற்பத்திப் பண்ட மதிப்பு = 6,000.

நடப்பு ஆண்டில் செலவிடப்பட்ட அவசிய-உழைப்பு (v):

இந்த ஆண்டின் உற்பத்திக்காகச் செலவிடப்பட்ட ஒரு வேலை-நாளில் ஒரு பாதி; இதன் உற்பத்திப் பண்ட மதிப்பு = 1,500.

நடப்பு ஆண்டில் செலவிடப்பட்ட உபரி-உழைப்பு (s):

இந்த ஆண்டின் உற்பத்திக்காகச் செலவிடப்பட்ட ஒரு வேலை-நாளில் ஒரு பாதி; இதன் உற்பத்திப் பண்ட மதிப்பு = 1,500.

நடப்பு ஆண்டின் உழைப்பால் உற்பத்தி செய்யப்பட்ட மதிப்பு (v+s)=3,000. உற்பத்திப் பண்டத்தின் மொத்த மதிப்பு (c+v+s)=9,000.

ஆக, சமுதாய உற்பத்திப் பண்டத்தின் மதிப்பைப் பகுத்தாய்வதில் இடர்ப்பாடு ஒன்றுமில்லை. சமுதாய உற்பத்திப் பண்டத்தினது மதிப்பின் அடக்கக் கூறுகளை அதன் பொருட் கூறுகளோடு ஒப்பிடும் போதுதான் இடர்ப்பாடு தலைதூக்குகிறது.

மாறா மதிப்பானது புதிய மதிப்பாய் இல்லாமல் திரும்பி வந்து தோற்றமளிக்கும் மதிப்புப் பகுதியாகும். இது இவ்வருடத்து உற்பத்தியில் உற்பத்திச் சாதனங்களாய் இருக்கிற பகுதியின் மதிப்புக்குச் சமமாகும்; இந்தப் பகுதியில் உருக்கொண்டதாகும்.

இவ்வருடத்துப் புதிய மதிப்பு-உற்பத்தி=v+s. இது இவ்வருடத்து உற்பத்தியில் நுகர்வுப் பண்டங்களாய் இருக்கிற பகுதியின் மதிப்புக்குச் சமமாகும்; இந்தப் பகுதியில் உருக்கொண்டதாகும்.

ஆனால் இங்கே முக்கியமானதல்லாத சில விதிவிலக்குகளை ஒதுக்கி விடுவோமானால், உற்பத்திச் சாதனங்களும் நுகர்வுப் பண்டங்களும் இருவேறு வகைப்பட்ட சரக்குகள்; தசையுருவில் அல்லது பயன் வடிவில் அறவே வேறுபடுகிற பண்டங்கள்; ஆகவே முற்றிலும் வெவ்வேறான வகைப்பட்ட ஸ்தூல உழைப்பால் உற்பத்தி செய்யப்படுகிறவை. வாழ்வுச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கு

இயந்திரங்களைப் பயன்படுத்துகிற உழைப்பு, இயந்திரங்களைத் தயாரிக்கிற உழைப்பிலிருந்து வெகுவாய் வேறுபடுகிறது. 3,000 மதிப்புடைய மொத்த வருடாந்தர வேலை-நாள் முழுதுமே 3,000 பெறுமான நுகர்வுப் பண்டங்களது உற்பத்திக்காகச் செலவாவதாய்த் தோன்றுகிறது. மாறா மதிப்புப் பகுதி இந்த 3,000இல் திரும்பி வந்து தோற்றமளிக்கக் காணோம், ஏனெனில் $1,500_v+1,500_s$ ஆகிய இந்த 3,000 மாறும்-மூலதன மதிப்பாகவும் உபரி-மதிப்பாகவுமே பகுபடுகிறது. அதே போது மாறா-மூலதன மதிப்பாகிய 6,000 நுகர்வுப் பண்டங்களிலிருந்து அறவே வேறான உற்பத்திப் பண்டமாகிய உற்பத்திச் சாதனங்களில் திரும்பி வந்து தோற்றமளிக்கிறது. மற்றும் இந்தப் புதிய உற்பத்திப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக சமுதாய வேலை-நாளின் எந்தப் பகுதியும் செலவிடப்படுவதாகத் தெரியவில்லை. வேலை-நாள் முழுதுமே உற்பத்திச் சாதனங்களுக்கு பதில் வெறும் நுகர்வுப் பண்டங்களை மட்டும் செய்து தருகிற உழைப்பு வகைகளால் ஆனதாகத் தோன்றுகிறது. இதிலுள்ள மருமம் இதற்குள்ளாகவே வெட்ட வெளிச்சமாகி விடுகிறது. வருடாந்தர உழைப்பின் மதிப்பு-உற்பத்தியானது துறை IIஇன் உற்பத்திப் பண்டங்களின் மதிப்புக்கு, அதாவது புதிதாய் உற்பத்தியான நுகர்வுப் பண்டங்களின் மொத்த மதிப்புக்குச் சமமாகும். ஆனால் இந்த உற்பத்திப் பண்டங்களின் மதிப்பு, நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் துறை IIஇல் செலவிடப்பட்ட வருடாந்தர உழைப்புப் பகுதியை விட மூன்றிலிரு பங்கு அதிகமாகும். வருடாந்தர உழைப்பில் மூன்றிலொரு பங்கு மட்டுமே அவற்றின் உற்பத்தியில் செல்விடப்பட்டுள்ளது. இந்த வருடாந்தர உழைப்பில் மூன்றிலிரு பங்கானது உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தியில், அதாவது துறை Iஇல் செலவிடப்பட்டுள்ளது. இந்த ஓராண்டு காலத்தில் துறை Iஇன் மதிப்பு-உற்பத்தி = துறை Iஇல் உற்பத்தி செய்யப்படும் மாறும்-மூலதன மதிப்பு + உபரி-மதிப்பு. இந்த மதிப்பு-உற்பத்தி துறை IIஇன் நுகர்வுப் பண்டங்களில் திரும்பி வந்து தோற்றமளிக்கும் துறை IIஇன் மாறா-மூலதன மதிப்புக்குச் சமமாகும். என்வே அவற்றை ஒன்றுக்கு ஒன்று பரிவர்த்தனை செய்து, பொருள் வகையில் மாற்றீடு செய்து கொள்ளலாம். ஆகவே துறை IIஇன் நுகர்வுப் பண்டங்களது மொத்த மதிப்பானது துறை I, துறை II ஆகியவற்றின் புதிய மதிப்பு-உற்பத்தியின் கூட்டுத் தொகைக்குச் சமமாகும், அதாவது $II_{(c+v+s)} = I_{(v+s)} + II_{(v+s)}$; ஆகவே வருடாந்தர உழைப்பு உற்பத்தி செய்யும் புதிய மதிப்புகளின் கூட்டுத் தொகைக்கு, அதாவது v+sக்குச் சமமாகும்.

மறு புறம், உற்பத்திச் சாதனங்களின் (I) மொத்த மதிப்பானது உற்பத்திச் சாதனங்களின் (I) வடிவிலும் நுகர்வுப் பண்டங்களின் (II) வடிவிலும் திரும்பி வந்து தோற்றமளிக்கும் மாறா-மூலதன்

மதிப்புகளின் கூட்டுத் தொகைக்குச் சமமாகும்; வேறுவிதமாகச் சொன்னால், சமுதாயத்தின் மொத்த உற்பத்திப் பண்டத்தில் திரும்பி வந்து தோற்றமளிக்கும் மொத்த மாறா-மூலதன மதிப்பின் கூட்டுத் தொகைக்குச் சமமாகும். இந்த மொத்த மதிப்பானது துறை Iஇல் நடப்பு உற்பத்தி நிகழ்முறைக்கு முன்னரே செலவான 4/3 பங்கு வேலை-நாள் மற்றும் துறை IIஇல் நடப்பு உற்பத்தி நிகழ்முறைக்கு முன்னரே செலவான 2/3 பங்கு வேலை-நாள் ஆகிய இவை இரண்டின் மதிப்பளவுக்குச் சமமாகும், அதாவது மொத்தத்தில் இரு வேலை-நாட்களின் மதிப்பளவுக்குச் சமமாகும்.

ஆக, வருடாந்தர சமுதாய உற்பத்திப் பண்டத்தைப் பகுத்தாயும் போது ஏற்படுகிற இடர்ப்பாட்டுக்குக் காரணம் என்ன என்பது விளங்குகிறது: மாறா மதிப்புப் பகுதியோடு சேர்க்கப்படுகிற புதிய மதிப்பாகிய v+s ஆனது நுகர்வுப் பண்டங்களால் குறிக்கப்படுகை யில், இந்த நுகர்வுப் பண்டங்களிலிருந்து முற்றிலும் வேறு வகைப் பட்ட பண்டங்களாகிய உற்பத்திச் சாதனங்களால் மாறா மதிப்புப் பகுதி குறிக்கப்படுவதுதான் காரணம். இதனால் என்ன ஆகிறது என்றால், நுகரப்படுகிற பண்டத் திரளில் மூன்றிலிரு பங்கு— மதிப்பளவில் கருதுகையில்—சமுதாயத்துக்கு உழைப்புச் செலவு ஏதும் இல்லாமலே உற்பத்தி செய்யப்பட்டு, புதிய வடிவில் புதிய உற்பத்திப் பண்டமாகத் திரும்பி வந்து விடுவது போல் தோன்று கிறது. தனிப்பட்ட மூலதனத்தின் விவகாரத்தில் இப்படித் தோன்று வதற்கு வழியில்லை. தனிப்பட்ட முதலாளி ஒவ்வொருவரும் குறிப் பிட்ட ஒரு ஸ்தூல வகையைச் சேர்ந்த உழைப்பை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார். இவ்வுழைப்பு அதற்கென அமைந்த உற் பத்திச் சாதனங்களை உற்பத்திப் பண்டமாக உருமாற்றம் பெறச் செய்கிறது. இம்முதலாளி இயந்திர உற்பத்தியாளராய் இருப்பதாகக் கொள்வோம். ஓராண்டில் செலவாகும் மாறா-மூலதனம் $6,000_c$ என்றும், மாறும்-மூலதனம் $1,500_v$ என்றும், உபரி-மதிப்பு $1,500_s$ என்றும், உற்பத்திப் பண்டம் 9,000 என்றும் கொள்வோம். ஒவ்வொன்றும் 500 மதிப்புள்ள 18 இயந்திரங்களை உற்பத்திப் பண்டமாக வைத்துக் கொள்வோம். இவரது உற்பத்திப் பண்டம் அனைத்தும் ஒரே வடிவில், ஒரே வகைப்பட்ட இயந்திரங்களின் வடிவில் இருக்கிறது. (இவர் பல்வேறு வகைகளை உற்பத்தி செய் தால், ஒவ்வொரு வகையையும் தனித்தனியே கணக்கிட வேண்டும்.) இங்கே மொத்தச் சரக்கு-உற்பத்தியானது இயந்திரக் கட்டுமான வேலையில் ஓராண்டு காலத்தில் செலவிடப்படும் உழைப்பால், ஸ்தூலமான ஒரே வகை உழைப்பை ஒரே வகை உற்பத்திச் சாதனங் களுடன் இணைப்பதால் வரப்பெறுவதாகும். ஆகவே உற்பத்திப் பண்டத்தினது மதிப்பின் பல்வேறு பகுதிகளும் ஒரே தசையுரு கொண் டுள்ளன: $6,000_c$ ஆனது 12 இயந்திரங்களாகவும், $1,500_v$ ஆனது 3 இயந்திரங்களாகவும், $1,500_s$ ஆனது 3 இயந்திரங்களாகவும்

உருக்கொண்டுள்ளன. இந்த உதாரணத்தில் 12 இயந்திரங்களின் மதிப்பு $6,000_c$ ஆகும் என்பது விளங்குகிறது. இதற்குக் காரணம் இந்த 12 இயந்திரங்களில் அவற்றை உற்பத்தி செய்வதற்குச் செலவான உழைப்புக்கு பதில், இந்த இயந்திரங்களது உற்பத்திக்கு, முன்னதாகவே செய்து முடிக்கப்பட்ட உழைப்பு உருக்கொண்டிருக்கிறது என்பதல்ல. 18 இயந்திரங்களுக்கு வேண்டியிருந்த உற்பத்திச் சாதனங்களது மதிப்பு அப்படியே தன்னை 12 இயந்திரங்களாக உருமாற்றிக் கொண்டு விடவில்லை. மாறாக இந்த 12 இயந்திரங்களது மதிப்பானது ($4,000_c+1,000_v+1,000_s$ஆல் ஆகிய இம் மதிப்பானது) 18 இயந்திரங்களில் அடங்கிய மாறா-மூலதனத்தின் மொத்த மதிப்புக்குச் சமமாய் இருக்கிறது. ஆகவே இந்த 18 இயந்திரங்களில் 12ஐ இயந்திர உற்பத்தியாளர் விற்றாக வேண்டும், அப்போதுதான் அவர் செலவாகி விட்ட தமது மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்து கொள்ள முடியும், 18 புதிய இயந்திரங்களின் மறுவுற்பத்திக்குத் தேவைப்படுகிற இந்த மாறா-மூலதனத்தை அவர் திரும்பவும் பெற முடியும். செலவிடப்படும் உழைப்பு முழுக்க முழுக்க இயந்திர உற்பத்தியிலேயே ஈடுபடுத்தப்படும் போது, விளைவு மேற்கூறியவாறு இல்லாமல் பின்வருமாறு இருந்தால் அது காரண விளக்கம் கூற முடியாத விபரீதமே ஆகும்; ஒரு புறம் 6 இயந்திரங்கள் — இவற்றின் மதிப்பு $1,500_v+1,500_s$; மறு புறம் இரும்பு, செம்பு, திருகாணிகள், சுற்று வார்கள் போன்ற பலவும் — இவற்றின் மதிப்பு $6,000_c$. இவை யாவும் இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய உற்பத்திச் சாதனங்கள். உற்பத்தியாளரான தனிப்பட்ட முதலாளி இவற்றைச் சுற்றோட்ட நிகழ்முறையின் வாயிலாக மாற்றீடு செய்து கொள்ள வேண்டுமே தவிர தாமே உற்பத்தி செய்து கொள்வதில்லை என்பது யாவரும் அறிந்ததே. எனினும் மேம்போக்காகப் பார்க்கையில் சமுதாயத்தின் வருடாந்தர உற்பத்தியானது இந்த அபத்த முறையில்தான் நடைபெறுவதாக நினைக்கத் தோன்றுகிறது.

தனிப்பட்ட ஒரு மூலதனத்தின் உற்பத்திப் பண்டம், அதாவது சமுதாய மூலதனத்தில் ஒரு பின்னமாய் இருந்து அதே போது சொந்த வாழ்வினைப் பெற்று சுயேச்சையாகச் செயல்படுகிற கூறு ஒவ்வொன்றின் உற்பத்திப் பண்டமும் ஏதேனுமொரு வகைத் தசையுரு கொண்டதாகும். தசையுருவம் எதுவாயினும் இந்த உற்பத்திப் பண்டம் உண்மையில் பயன்-வடிவமுடையதாய், பயன்-மதிப்புடையதாய் இருந்தாக வேண்டும் — இந்த ஒரு நிபந்தனை நிறைவேற்றப்படுமாயின் அது சுற்றியோட வல்லதாகி சரக்கு உலகில் அங்கம் வகிப்பதற்கு வேண்டிய முத்திரையைப் பெறுகிறது. எந்த உற்பத்தி நிகழ்முறையிலிருந்து அது உற்பத்திப் பண்டமாக வெளிப்பட்டதோ அதே உற்பத்தி நிகழ்முறைக்குள் ஓர் உற்பத்திச் சாதனமாகத் திரும்பவும் நுழைய முடிகிறதா இல்லையா என்பது, அதாவது

அதன் மதிப்பில் மூலதனத்தின் மாறாப் பகுதியைக் குறிக்கும் பாகம், உள்ளபடியே மீண்டும் மாறா-மூலதனமாகச் செயல்படக் கூடிய தசையுருவம் பெற்றுள்ளதா இல்லையா என்பது தற்செய லானதாகுமே தவிர, இங்கு பொருட்படுத்த வேண்டியதில்லை. பெற்றிருக்கவில்லையெனில், உற்பத்திப் பண்டத்தினது மதிப்பின் இந்தப் பாகம் விற்றல்-வாங்கல் நடவடிக்கையின் மூலம் அப் பண்டத்தின் உற்பத்திக்கு வேண்டிய பொருட் கூறுகளின் வடிவத் துக்கு திரும்பவும் மாற்றப்படுகிறது; இவ்வாறு அது திரும்பவும் மாறா-மூலதனமாகச் செயல்படுவதற்கு ஏற்ற தசையுருவில் மறுவுற் பத்தி செய்யப்படுகிறது.

மொத்தச் சமுதாய மூலதனத்தினது உற்பத்திப் பண்டத்தின் விவகாரம் வேறு விதமானது. மறுவுற்பத்தியின் பொருட் கூறுகள் யாவும் அவற்றின் தசையுருவில் இந்த உற்பத்திப் பண்டத்தின் பகுதி களாய் இருந்தாக வேண்டும். உற்பத்திப் பண்டத்தில் திரும்பி வந்து தோற்றமளிக்கும் மூலதனப் பகுதியாகிய மாறா-மூலதனப் பகுதி முழுவதும் உள்ளபடியே மாறா-மூலதனமாகச் செயல்படக் கூடிய புதிய உற்பத்திச் சாதனங்களது தசையுருவில் திரும்பி வந்து தோற்ற மளிக்கிற அளவுக்குத்தான், மாறா-மூலதனத்தின் நுகரப்பட்ட பகுதிவ்ய மொத்த உற்பத்தியால் மாற்றீடு செய்ய முடியும். எனவே, சாமானிய மறுவுற்பத்தியே நடைபெறுவதாகக் கொண்டிருக்கிறோம் என்பதால், உற்பத்திப் பண்டத்தில் உற்பத்திச் சாதனங்களாய் இருக்கும் படியான பகுதியின் மதிப்பு சமுதாய மூலதனத்தினுடைய மதிப்பில் மாறாப் பகுதியாக இருப்பதற்குச் சமமாய் இருந்தாக வேண்டும்.

தவிரவும் தனிப்பட்ட முறையில் நோக்குமிடத்து, முதலாளி புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பைக் கொண்டு தமது உற்பத்திப் பண்டத்தினது மதிப்பில் உற்பத்தி செய்வதெல்லாம் தமது மாறும்-மூலதனத்தையும் உபரி-மதிப்பையும்தானே தவிர வேறு எதையு மல்ல. மதிப்பின் மாறாத பகுதியைப் பொறுத்த வரை, புதிதாகச் சேர்க்கப்படும் உழைப்பின் ஸ்தூலத் தன்மை காரணமாய் அது உற்பத்திப் பண்டத்துக்குப் பெயர்க்கப்பட்டு விடுகிறது.

ஆனால் சமுதாய அளவில் நோக்குமிடத்து, சமுதாய வேலை-நாளின் எந்தப் பகுதி உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய் கிறதோ அந்தப் பகுதி, எனவே எந்தப் பகுதி அவற்றுக்கு புதிய மதிப்பைச் சேர்ப்பதோடு அச்சாதனங்களின் உற்பத்தியின் போது நுகரப்படும் உற்பத்திச் சாதனங்களுடைய மதிப்பையும் அவற்றுக்குப் பெயர்த்திடுகிறதோ அந்தப் பகுதி, புதிய மாறா-மூலதனத்தைத் தவிர வேறு எதையும் உற்பத்தி செய்வதில்லை. துறை I, துறை II ஆகிய இரண்டிலும் நுகரப்படுகிற பழைய உற்பத்திச் சாதனங்களது வடிவிலான மாறா-மூலதனத்தை மாற்றீடு செய்வதே இந்தப் புதிய மாறா-மூலதனத்துக்குரிய பணி. சமுதாய வேலை-நாளின் இந்தப்

பகுதி திறனுடை நுகர்வுக்கான பண்டத்தை மட்டுமே உற்பத்தி செய்கிறது. ஆகவே இப்பண்டத்தின் முழு மதிப்பும் திரும்பவும் மாறா-மூலதனமாகச் செயல்படக் கூடிய மதிப்பாக மட்டுமே இருப்பதாகும். இந்த மதிப்பு திரும்பவும் மாறா-மூலதனத்தை அதன் தசையுருவில் வாங்குவதற்கு மட்டுமே பயன்படக் கூடியது, எனவே சமுதாய அளவில் நோக்குமிடத்து மாறும்-மூலதனமாகவோ உபரி-மதிப்பாகவோ பகுபட முடியாதது.

மறு புறத்தில் சமுதாய வேலை-நாளின் எந்தப் பகுதி நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்கிறதோ அந்தப் பகுதி சமுதாய மாற்றீட்டு மூலதனத்தின் எந்தப் பாகத்தையும் உற்பத்தி செய்வதில்லை. துறை I, துறை II இவற்றினது மாறும்-மூலதனத்தின் மதிப்பையும் உபரி-மதிப்பையும் மாற்றீடு செய்வதற்கு ஏற்ற தசையுருவங் கொண்ட பண்டங்களை மட்டுமே அது உற்பத்தி செய்கிறது.

சமுதாயக் கண்ணோட்டத்தின் படி பார்ப்பதாகச் சொல்லும் போது, அதாவது சமுதாய மூலதனத்தின் மறுவுற்பத்தி, தனிப்பட்ட சொந்த நுகர்வு ஆகிய இரண்டும் அடங்கிய மொத்த சமுதாயப் பண்டத்தைக் கருதும் போது, முதலாளித்துவப் பொருளாதார இயலின் வழிமுறையினைக் கடன் வாங்கிக் கையாளும் புரூதோனின் பாதைக்கு வழுக்கிச் சென்று விடக் கூடாது. அதாவது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்டுள்ள சமுதாயத்தை ஒரு முழு அமைப்பாக, ஒட்டுமொத்தமாக நோக்குகையில் அது தனது பிரத்தியேக வரலாற்று, பொருளாதாரத் தன்மையை இழந்து விடுவதாகப் பாவித்துக் கொண்டு இந்த விவகாரத்தை பரிசீலிக்கக் கூடாது. ஒருபோதும் இது சாத்தியமல்ல. இங்கு நாம் பரிசீலிக்க வேண்டியிருப்பது கூட்டாகச் செயல்படும் முதலாளியை. மொத்த மூலதனமானது தனிப்பட்ட முதலாளிகள் எல்லாரது பங்கு மூலதனங்களின் கூட்டாகக் காட்சியளிக்கிறது. இந்தக் கூட்டுப் பங்கு நிறுமத்துக்கும் [joint-stock company] ஏனைய பல கூட்டுப் பங்கு நிறுமங்களுக்கும் பொதுவானதாய் இருப்பது எதுவென்றால், அவரவருக்கும் தாம் அதற்குத் தந்தது தெரியுமே தவிர அதனிடமிருந்து தாம் பெறப் போவது யாருக்கும் தெரியாது என்பது தான்.

## IX. ஆதாம் ஸ்மித், ஸ்டோர்ஹ், ராம்சே இவர்களைத் திரும்பிப் பார்ப்போம்

சமுதாய உற்பத்திப் பண்டத்தின் மொத்த மதிப்பு $6,000_c + 1,500_v + 1,500_s = 9,000$. இங்கே உற்பத்திச் சாதனங்களின் மதிப்பை 6000உம், நுகர்வுப் பண்டங்களின் மதிப்பை 3,000உம் மறுவுற்பத்தி செய்கின்றன. ஆகவே சமுதாய வருவாயின் மதிப்பானது (v+s) மொத்த உற்பத்திப் பண்டத்தின் மதிப்பில்

மூன்றிலொரு பங்கே ஆகும். தொழிலாளர்கள் ஆனாலும் முதலாளிகள் ஆனாலும் நுகர்வாளர்கள் எல்லாருமாகச் சேர்ந்து சமுதாயத்தின் மொத்த உற்பத்திப் பண்டத்திலிருந்து இந்த மூன்றிலொரு பங்கு மதிப்பின் அளவுக்கு மட்டுமே சரக்குகளை, அதாவது உற்பத்திப் பண்டங்களை எடுத்து தங்கள் நுகர்வு-நிதியத்தில் சேர்த்துக் கொள்ளலாம். மறு புறம், உற்பத்திப் பண்டத்தின் மதிப்பில் 6,000, அல்லது மூன்றிலிரு பங்கானது பண்டமாக மாற்றீடு செய்யப்பட வேண்டிய மாறா-மூலதனத்தின் மதிப்பாகும். ஆகவே இந்த அளவுள்ள உற்பத்திச் சாதனங்கள் மீண்டும் உற்பத்தி-நிதியத்தில் சேர்க்கப்பட வேண்டும். ஸ்டோர்ஹ் இது அவசியம் என்பதை உணர்ந்து கொள்கிறார், ஆனால் அவரால் இதனை நிரூபிக்க முடியவில்லை: ''வருடாந்தர உற்பத்திப் பண்டத்தின் மதிப்பு பிரிக்கப்படுகிறது, ஒரு பகுதி மூலதனமாகிறது, மறு பகுதி இலாபமாகிறது என்பதும், வருடாந்தர உற்பத்திப் பண்டத்து மதிப்பின் இந்த ஒவ்வொரு பகுதியும் நாடு தனது மூலதனத்தைப் பராமரித்துக் கொள்வதற்கும் தனது நுகர்வு-நிதியத்தை வளப்படுத்திக் கொள்வதற்கும் தேவைப்படுகிற உற்பத்திப் பண்டங்களை வாங்குவதற்காகப் பயன்படுத்துகிறது என்பதும் தெளிவு...ஒரு நாட்டின் மூலதனமாக அமைகிற உற்பத்திப் பண்டங்களை நுகர்வதற்கில்லை.'' (ஸ்டோர்ஹ், *Considerations sur la nature du revenu national*, பாரிஸ், 1824, பக்கம் 134-35, 150.)

குருட்டுப் பாடமாகி விட்ட இந்த அதிவினோதச் சூத்திரத்தை, மெய்யானதென இதுநாள் வரை நம்பப்பட்டு வருகிற இதனை ஆதாம் ஸ்மித் வகுத்தளித்தார். அதன் ஒரு வடிவத்தை முன்பே பரிசீலித்தோம். இதன் படி சமுதாய உற்பத்திப் பண்டத்தின் மதிப்பனைத்தும் வருவாயாக, அதாவது கூலி + உபரி-மதிப்பு என்பதாக, ஸ்மித் கூறுவது போல் கூறுவோமானால் கூலி + இலாபம் (வட்டி) + நில-வாடகை என்பதாகப் பகுபடுகிறது. இன்னொரு வடிவத்திலும் அவர் இச்சூத்திரத்தை வகுத்தளித்தார், அது இன்னும் கூட செல்வாக்கு வாய்ந்தது. ''முடிவில்'' நுகர்வாளர்கள்தான் உற்பத்திப் பண்டத்தின் முழு மதிப்பையும் உற்பத்தியாளர்களுக்குத் தந்தாக வேண்டும் என்பதாக அது சாதிக்கிறது. அரசியல் பொருளாதார விஞ்ஞானம் என்கிறார்களே அதன் ஜெப மந்திரங்களில் ஒன்றாக, ஏன், என்றென்றும் சாசுவதமான சத்திய வாக்குகளில் ஒன்றாக அது இன்றுங்கூட கோலோச்சி வருகிறது. எவரும் நம்பும்படியான விதத்தில் பின்வருமாறு அதற்கு விளக்கம் அளிக்கப்படுகிறது: லினன் சட்டையை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். முதலாவதாக, லினன் நூற்பாளர் வெண்சணல் சாகுபடியாளருக்குத் தர வேண்டியவை யாவை? வெண்சணலின் முழு மதிப்பையும், அதாவது விதை, உரங்கள், உழைக்கும் கால்நடைகளுக்கான தீவனம் முதலானவற்றின் மதிப்பையும், அத்துடன்

வெண்சணல் சாகுபடியாளரின் கட்டடங்கள், வேளாண் கருவிகள் போன்ற நிலை-மூலதனமானது தன்னிடமிருந்து உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்து அளித்திடும் மதிப்புப் பகுதியையும் தந்தாக வேண்டும். மற்றும் வெண்சணல் உற்பத்திக்காகத் தரப்படும் கூலி, வெண்சணலில் அடங்கிய உபரி-மதிப்பு (இலாபம், நில-வாடகை), இறுதியாக வெண்சணலை அதன் விளைநிலத்திலிருந்து நூற்பகத்துக்குக் கொண்டுவருவதற்கு ஆகும் ஊர்திச் செலவுகள் ஆகியவற்றையும் அவர் வெண்சணல் சாகுபடியாளருக்குத் தந்தாக வேண்டும். அடுத்து நெசவாளர் இந்த லினன் நூற்பாளருக்கு வெண்சணலின் விலைக்காக மட்டுமல்லாமல், இயந்திர சாதனம், கட்டடங்கள் முதலானவற்றிலிருந்து—சுருங்கச் சொல்லின் நிலை-மூலதனத்திலிருந்து—வெண்சணலுக்குப் பெயர்க்கப்படும் மதிப்புப் பகுதிக்காகவும் ஈடு செய்தாக வேண்டும்; மேலும் நூற்பு நிகழ்முறையின் போது நுகரப்படும் எல்லாத் துணைப் பொருட்களுக்கும் உரிய மதிப்பு, நூற்பாளரின் கூலி, உபரி-மதிப்பு முதலானவற்றுக்காகவும் இவ்வாறே ஈடு செய்தாக வேண்டும், பிறகு மேலும் ஒரு கட்டத்தில் வெளுப்பாளர் வருகிறார். அதன் பின் பூர்த்தி நிலையை அடையும் லினனுக்கு ஆகும் போக்குவரத்துச் செலவுகளைக் குறிப்பிட வேண்டும். முடிவில் வருகிறவர் சட்டை தயாரிப்பாளர், முந்தைய உற்பத்தியாளர் எல்லாருக்கும் சேர வேண்டிய முழு விலையையும் இவர் தந்தாக வேண்டும். அவர்கள் இவருக்கு வழங்கியிருப்பது கச்சாப் பொருளான துணி மட்டும்தான். இவர் கைக்கு வந்த பின் அந்தத் துணியின் மதிப்புடன் மேற்கொண்டு மதிப்பு சேர்க்கப்படுகிறது. இப்படிச் சேர்க்கப்படும் புதிய மதிப்பில் ஒரு பகுதி துணியைச் சட்டைகளாக்கும் உற்பத்தி நிகழ்முறையின் போது உழைப்புச் சாதனங்களின் வடிவிலும் துணைப் பொருட்கள், இன்ன பலவற்றின் வடிவிலும் நுகரப்படுகிற மாறா-மூலதன மதிப்பாகும், மற்றொரு பகுதி இந்நிகழ்முறையின் போது செலவாகிற உழைப்பால் தோற்றுவிக்கப்படும் மதிப்பாகும். சட்டை தைப்போரது கூலியின் மதிப்பு, சட்டை தயாரிப்பாளரின் உபரி-மதிப்பு ஆகிய புதிய மதிப்புகளை இந்த உழைப்பு கொண்டுவந்து சேர்க்கிறது. முடிவில் வரப்பெறும் உற்பத்திப் பண்டமாகிய சட்டைகளின் மொத்த மதிப்பு £100 எனக் கொள்வோம். சமுதாயத்தின் வருடாந்தர உற்பத்திப் பண்டத்தின் மொத்த மதிப்பில் சட்டைக்காக இச்சமுதாயம் செலவிடும் பங்கு இவ்வளவே என்பதாக வைத்துக் கொள்வோம். இந்த £100 ஐச் சட்டை நுகர்வாளர்கள் தருகிறார்கள்; அதாவது சட்டைகளில் வந்தடங்கும் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தின் மதிப்பையும், மற்றும் வெண்சணல் சாகுபடியாளர், நூற்பாளர், நெசவாளர், வெளுப்பாளர், சட்டை தயாரிப்பாளர், ஊர்திக்காரர்கள் போன்றவர்கள் யாவருக்கும் சேர வேண்டிய கூலியையும் உபரி-மதிப்பையும் இந்த நுகர்வாளர்களே தருகிறார்கள்.

இதெல்லாம் சரிதான், சிறு குழந்தையுங்கூட புரிந்து கொள்ளக் கூடியதுதான். ஆனால் மேலும் என்ன சொல்லப்படுகிறது பாருங் கள்: மற்றெல்லாச் சரக்குகளின் மதிப்பு தொடர்பாகவும் இதுவே தான் நிலைமை. என்ன சொல்லியிருக்க வேண்டும்? எல்லா நுகர் வுப் பண்டங்களின் மதிப்பு தொடர்பாகவும், அதாவது நுகர்வு-நிதியத்தில் சேரும் சமுதாய உற்பத்திப் பண்டப் பகுதியின் மதிப்பு தொடர்பாகவும், அதாவது சமுதாய உற்பத்திப் பண்டத்தின் மதிப் பில் வருவாயாகச் செலவிடப்படக் கூடிய பகுதி தொடர்பாகவும் இதுவேதான் நிலைமை என்று சொல்லியிருக்க வேண்டும். இந்த எல்லாச் சரக்குகளது மதிப்புகளின் கூட்டுத் தொகை=அவற்றின் உற்பத்திக்காகச் செலவான எல்லா உற்பத்திச் சாதனங்களின் (மாறா-மூலதனப் பகுதிகள்) மதிப்பு+கடைசியாகச் சேர்க்கப்பட்ட உழைப்பினால் படைக்கப்பட்ட மதிப்பு (கூலி+உபரி-மதிப்பு). எனவே எல்லாரையும் ஒட்டுமொத்தமாகக் கருதுகையில் அவர்கள் இந்த மதிப்புகளின் முழுத் தொகையையும் தந்து விட முடியும். ஏனென்றால், ஒவ்வொரு தனிச் சரக்கின் மதிப்பும் c+v+s ஆகும் என்றாலும், நுகர்வு-நிதியத்தில் சேரும் எல்லாச் சரக்குகளது மதிப்பு களின் கூட்டுத் தொகையானது, அதன் அதிகபட்ச அளவை எடுத் துக் கொண்டால், சமுதாய உற்பத்திப் பண்டத்தின் மதிப்பில் v+s ஆகப் பகுபடும் பகுதிக்கு சம்மாகவே இருக்க முடியும்; வேறு வித மாகச் சொன்னால், ஓராண்டு காலத்தில் செலவிடப்படுகிற உழைப் பானது ஏற்கெனவே இருந்து வருகிற உற்பத்திச் சாதனங்களோடு, அதாவது மாறா-மூலதனத்தின் மதிப்போடு சேர்த்திருக்கும் மதிப்புக் குச் சமமாகவே இருக்க முடியும். மாறா-மூலதனத்தின் மதிப்பைப் பொறுத்த வரை, அது சமுதாய உற்பத்திப் பண்டத்திலிருந்து இரு வழிகளில் மாற்றீடு செய்யப்படுகிறது என்று பார்த்தோம். முதலா வதாக, நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் துறை IIஇன் முதலாளிகளும் அவர்களுக்கு வேண்டிய உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்யும் துறை Iஇன் முதலாளிகளும் தம்மிடையே செய்து கொள்ளும் பரிவர்த்தனை மூலமாக இந்த மாற்றீடு நடந்தேறுகிறது. ஒருவருக்கு மூலதனமாய் இருப்பது மற்றவருக்கு வருவாயாகும் என்னும் கூற்றுக்கு இதுதான் ஆதாரம். ஆனால் உண்மையில் அப்படி ஒன்றுமில்லை. 2,000 பெறுமானமுள்ள நுகர்வுப் பண்டங் களின் வடிவில் இருக்கிற 2,000 $II_c$ துறை IIஇன் முதலாளிகளுக்கு மாறா-மூலதன மதிப்பாகிறது. ஆகவே இவர்கள் தாமே இம்மதிப் பினை நுகர முடியாது, ஆயினும் இப்பண்டங்களது தசையுருவைக் கொண்டு பார்க்கையில் இவை நுகரப்படுவதற்காக இருப்பவை. மறு புறம், 2,000 $I_{(v+s)}$ ஆனது துறை Iஇன் முதலாளிகளும் தொழிலா ளர்களும் தம் கூலிக்காகவும் உபரி-மதிப்புக்காகவும் உற்பத்தி செய்த தாகும். அது உற்பத்திச் சாதனங்களின் தசையுருவில் இருக்கிறது, தனிப்பட்ட சொந்த நுகர்வாக நுகரப்பட முடியாத பண்டங்களாய்

இருக்கிறது. ஆக இங்குள்ள மதிப்புகளின் மொத்தத் தொகை 4,000. பரிவர்த்தனைக்கு முன்னரும் பின்னருமாய் இந்த மொத்த மதிப்பில் ஒரு பாதி மாறா-மூலதனத்தை மட்டும் மாற்றீடு செய்கிறது; மற்றொரு பாதி முற்றிலும் வருவாயாகி விடுகிறது.

இரண்டாவதாக, துறை Iஇன் மாறா-மூலதனம் பண்டமாக மாற்றீடு செய்யப்படுகிறது—பகுதியளவுக்கு துறை Iஇன் முதலாளிகளிடையிலான பரிவர்த்தனையின் மூலமும், பகுதியளவுக்கு தனிப்பட்ட அந்தந்தத் தொழிற் கிளையிலான பண்ட மாற்றீட்டின் மூலமும் இது நடைபெறுகிறது.

வருடாந்தர உற்பத்திப் பண்டம் முழுவதன் மதிப்பையும் முடிவில் நுகர்வாளர் தந்தாக வேண்டும் என்று சொல்வது எப்போது சரியாக இருக்கும்? நுகர்வாளர் என்ற சொல் வெகுவாய் வேறுபடும் இரு வகைப்பட்ட நுகர்வாளரையும்—தனிப்பட்ட சொந்த நுகர்வாளரையும் திறனுடை நுகர்வாளரையும்—குறிப்பதாகக் கொள்ளும் போதுதான் சரியாக இருக்கும். ஆயினும், உற்பத்திப் பண்டத்தில் ஒரு பகுதி **உற்பத்தித் திறனுள்ள முறையில்** நுகரப்பட வேண்டும் என்றால், அது **மூலதனமாகச் செயல்பட** வேண்டும், **வருவாயாக நுகரப்படக் கூடாது** என்பதே அதன் பொருள்.

ஆனால் 9,000 மதிப்புடையதான மொத்த உற்பத்திப் பண்டத்தை $6,000_c+1,500_v+1,500_s$ என்று பிரித்து, $3,000_{(v+s)}$ வருவாயாகப் பெற்றுள்ள தன்மையைக் கருதுவோமானால் மாறும்-மூலதனம் மறைந்து போவதாகத் தோன்றுகிறது; சமுதாயத்தின் நிலையிலிருந்து பார்க்கையில் மூலதனமானது மாறா-மூலதனத்தால் மட்டுமே ஆனதாகத் தோன்றுகிறது. ஏனெனில் ஆரம்பத்தில் $1,500_v$ஆகத் தோற்றமளித்த மூலதனப் பகுதியானது சமுதாய வருவாயில் ஒரு பகுதியாக, தொழிலாளி வர்க்கத்தின் வருவாயான கூலியாகப் பகுபட்டுப் போகிறது; இவ்வாறு அதன் மூலதனத் தன்மை மறைந்து விடுகிறது. ராம்சே உண்மையில் இம்முடிவுக்குத்தான் வருகிறார். சமுதாயத்தின் நிலையிலிருந்து நோக்கினால் மூலதனமாய் இருப்பது நிலை-மூலதனம் மட்டும்தான் என்கிறார் அவர். நிலை-மூலதனம் என்பதன் மூலம் அவர் மாறா-மூலதனத்தையே குறிப்பிடுகிறார். உழைப்புச் சாதனங்களாகவோ, கச்சாப் பொருட்கள், பூர்த்தியாகாத பொருட்கள், துணைப் பொருட்கள் போன்ற இலக்குப் பொருட்களாகவோ இருக்கும் உற்பத்திச் சாதனங்களாலான மதிப்புத் திரளை அவர் நிலை-மூலதனம் என்கிறார். மாறும்-மூலதனத்தைச் சுழல்-மூலதனம் என்கிறார். "சுழல்-மூலதனம் என்பது தொழிலாளர்களது உழைப்பின் உற்பத்திப் பொருள் பூர்த்தியாவதற்கு முன்னதாக அவர்களுக்கு முன்னீடு செய்யப்படும் வாழ்வுச் சாதனங்களும் ஏனைய அவசியப் பண்டங்களுமே ஆகும்....முறைப்படி சொன்னால் சுழல்-மூலதனமல்ல, நிலை-மூலதனம் மட்டுமே தேச செல்வத்தின் ஆதாரம்....சுழல்-மூலதனமானது பொருளுற்பத்தியில்

ஒரு நேரடிச் செயலி அல்ல, அதற்கு இன்றியமையாததும் அல்ல, பெருந்திரள் மக்களை வருத்தும் இந்தக் கேடுகெட்ட வறுமையின் காரணமாய் தேவையாகி விடுகிற ஒரு வசதியே தவிர வேறல்ல. தேசத்தின் நோக்குநிலையிலிருந்து பார்க்கையில் உற்பத்திச் செலவில் ஒரு கூறாகச் சேர்வது நிலை-மூலதனம் மட்டும்தான்.'' (ராம்சே, முன் வந்தது, பக்கம் 23 முதல் 26, பல இடங்கள்) ராம்சே நிலை-மூலதனத்திற்கு — மாறா-மூலதனத்தை அவர் நிலை-மூலதனம் என்கிறார் — பின்வருமாறு இன்னும் விவரமாய் விளக்கமளிக்கிறார்: ''அந்த உழைப்பால்'' (அதாவது ஒரு சரக்கில் செலுத்தப்பட்ட உழைப்பால்) ''உற்பத்தி செய்யப்பட்ட பண்டத்தில் எந்தவொரு பகுதியும் எவ்வளவு காலம் நிலை-மூலதனமாக இருக்கிறதோ, அதாவது வருங்காலச் சரக்கை உருவாக்க உதவிய போதிலும் தொழிலாளர்களது பராமரிப்புக்குப் பயன்படாத வடிவில் இருக்கிறதோ, அவ்வளவு காலம்.'' (முன் வந்தது, பக்கம் 59.)

மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாட்டை நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாட்டில் மூழ்கடித்து ஆதாம் ஸ்மித் உண்டுபண்ணும் பெருங் குழப்பத்தைத் திரும்பவும் ஒரு தரம் இங்கே காண்கிறோம். ராம்சேயின் மாறா-மூலதனம் உழைப்புச் சாதனங்களால் ஆனது; அவரது சுழல்-மூலதனம் வாழ்வுச் சாதனங்களால் ஆனது. இரண்டுமே குறிப்பிட்ட மதிப்புடைய சரக்குகள், உபரி-மதிப்பைப் படைக்கும் திறனில்லாதவை.

## X. மூலதனமும் வருவாயும்: மாறும்-மூலதனமும் கூலியும்[55]

வருடாந்தர மறுவுற்பத்தி முழுவதும், நடப்பு ஆண்டின் உற்பத்தி முழுவதும் அந்த ஆண்டின் பயனுள்ள உழைப்பின் உற்பத்திப் பொருளாகும். ஆனால் இந்த மொத்த உற்பத்தியின் மதிப்பானது வருடாந்தர உழைப்பின், அதாவது நடப்பு ஆண்டில் செலவான உழைப்புச் சக்தியின் உருவாக்கமாகிய மதிப்புப் பகுதியைக் காட்டிலும் அதிகமானது. நடப்பு ஆண்டில் சரக்கு வடிவில் புதிதாகப் படைக்கப்படும் மதிப்பாகிய **மதிப்பு-உற்பத்தியானது** இவ்வாண்டு முழுவதிலும் உற்பத்தி செய்யப்பட்ட சரக்குத் திரளின் மொத்த மதிப்பாகிய **உற்பத்திப் பண்ட மதிப்பைக்** காட்டிலும் குறைவானது. வருடாந்தர உற்பத்தியின் மொத்த மதிப்பிலிருந்து, நடப்பு ஆண்டின் உழைப்பினால் அதனோடு சேர்க்கப்பட்ட மதிப்பைக் கழித்துப் பெறப்படும் மிச்சமானது ஒரு புதிய நிலவல் வடிவில் திரும்பி வந்து தோற்றமளிக்கும் மதிப்புதானே தவிர, மறுவுற்பத்தி செய்யப்பட்ட மதிப்பல்ல. இந்த மிச்ச மதிப்பு வருடாந்தர உற்பத்திப்

---

55 எங்கெல்ஸ் குறிப்பு: பின்வருவது கையெழுத்துப் பிரதி VIII என்பதிலிருந்து.

பண்டத்துக்கு அப்பண்டத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்தே நிலவி வரும் பழைய மதிப்பிலிருந்து பெயர்க்கப்படும் மதிப்பாகும். அந்தப் பழைய மதிப்பு எவ்வளவு காலத்துக்கு முற்பட்டது என்பது அந்த வருடத்திய சமுதாய உழைப்பு நிகழ்முறையில் பங்கேற்ற மாறா-மூலதனத்தின் அடக்கக் கூறுகள் எவ்வளவு காலத்துக்கு அழியாமல் நீடித்திருக்கக் கூடியவை என்பதைப் பொறுத்தது. அந்தப் பழைய மதிப்பைக் குறிக்கும் உற்பத்திச் சாதனங்கள் நடப்பு ஆண்டுக்கு முந்தைய ஆண்டு உருவானவையாகவும் இருக்கலாம், பல்லாண்டு முன்னதாகவே உருவானவையாகவும் இருக்கலாம். எப்படியும் இந்த மிச்ச மதிப்பு முந்தைய ஆண்டுகளின் உற்பத்திச் சாதனங்களிலிருந்து நடப்பு ஆண்டின் உற்பத்திப் பண்டத்துக்குப் பெயர்க்கப்படும் மதிப்பே ஆகும்.

நமது குறிவரையை எடுத்துக் கொள்வோம். இது வரை நாம் பரிசீலித்த கூறுகள் துறை Iக்கும் துறை IIக்கும் இடையிலும் துறை IIக்குள்ளேயும் பரிவர்த்தனையான பின் வரப்பெறுவது இதுதான்:

I) $4{,}000_c + 1{,}000_v + 1{,}000_s$ (பின்னிரண்டுமான 2000 நுகர்வுப் பண்டங்களாகிய $II_c$இல் ஈடேற்றம் பெறுகிறது) $= 6{,}000$.

II) $2{,}000_c$ ($I_{(v+s)}$ உடன் நடைபெறும் பரிவர்த்தனை மூலம் மறுவுற்பத்தி செய்யப்படுவது) $+ 500_v + 500_s = 3{,}000$.

இரண்டையும் கூட்டி வரும் மொத்த மதிப்பு $= 9{,}000$.

இந்த ஆண்டில் புதிதாக உற்பத்தி செய்யப்படும் மதிப்பு vஇலும் sஇலும் மட்டுமே இருக்கக் காண்கிறோம். ஆகவே நடப்பு ஆண்டின் மதிப்பு-உற்பத்தி $= v+s = 2{,}000\ I_{(v+s)} + 1{,}000\ II_{(v+s)} = 3{,}000$. இவ்வாண்டு உற்பத்திப் பண்டத்தின் ஏனைய மதிப்புப் பகுதிகள் எல்லாம் நடப்பு ஆண்டின் பொருளுற்பத்தியின் போது நுகரப்படும் கடந்த காலத்து உற்பத்திச் சாதனங்களின் மதிப்பிலிருந்து பெயர்த்திடப்பட்டவையே. நடப்பு ஆண்டின் உழைப்பானது 3,000ஐத் தவிர வேறெந்த மதிப்பையும் உற்பத்தி செய்திடவில்லை. அதன் வருடாந்தர மதிப்பு-உற்பத்தி அனைத்துமே இவ்வளவுதான்.

$2{,}000\ I_{(v+s)}$ஆனது மேலே நாம் பார்த்தது போல் துறை IIஇன் $2{,}000\ II_c$க்கு மாற்றீடாகி அதைத் திரும்பவும் உற்பத்தி சாதனங்களின் தசையுரு பெறுமாறு செய்கிறது. துறை Iஇல் செலவாகிற மூன்றிலிரு பங்கு வருடாந்தர உழைப்பானது துறை IIக்கு வேண்டிய மாறா-மூலதனத்தை இவ்விதம் அதன் முழு மதிப்பிலும் தசையுருவிலும் புதிதாக உற்பத்தி செய்திருக்கிறது. சமுதாயத்தின் நிலையிலிருந்து பார்க்கையில் அவ்வாண்டில் செலவிடப்படும் உழைப்பில் மூன்றிலிரு பங்கானது புதிய மாறா-மூலதன மதிப்பை உற்பத்தி செய்கிறது, இம்மதிப்பு துறை IIக்கு ஏற்ற தசையுருவில் கைவரப் பெறுகிறது. இவ்வாறு சமுதாயத்தின் வருடாந்தர உழைப்பில் பெரும் பகுதியானது நுகர்வுப் பண்ட உற்பத்திக்காகச் செலவாகிற

மாறா-மூலதன மதிப்பை மாற்றீடு செய்வதற்கு வேண்டிய புதிய மாறா-மூலதனத்தை (உற்பத்திச் சாதனங்களது வடிவிலான மூலதன-மதிப்பினை) உற்பத்தி செய்வதற்காகச் செலவிடப்படுகிறது. இங்கே முதலாளித்துவச் சமுதாயத்தைக் காட்டுமிராண்டியின் சமுதாயத்தி லிருந்து வேறுபடுத்துவது எது? காட்டுமிராண்டியாக இருப்பவர் தம் உழைப்பில் ஒரு பகுதியை வருவாயாக, அதாவது நுகர்வுப் பண்டங் களாகப் பகுபடக் கூடிய (பரிவர்த்தனை செய்து கொள்ளக் கூடிய) எதுவும் கிடைக்காத விதத்தில் செலவிடும் உரிமையும் சிறப்பும்தான் வேறுபடுத்துவதாக சீனியர்[56] நினைக்கிறார். இது சரியல்ல. உண்மையில் வேறுபடுத்துவது என்னவென்றால்:

1) முதலாளித்துவ சமுதாயம் தனக்குக் கிடைக்கும் வருடாந்தர உழைப்பில் பெரும் பகுதியை உற்பத்திச் சாதன உற்பத்திக்காக (மாறா-மூலதன உற்பத்திக்காக்) செலவிடுகிறது. உற்பத்திச் சாத னங்களால் மூலதனமாகச் செயல்பட முடியுமே தவிர, கூலியின் வடிவிலோ உபரி-மதிப்பின் வடிவிலோ வருவாயாகப் பகுபட முடியாது.

2) வில்லும் அம்பும் கற்சுத்தியும் கோடரியும் கூடையும் போன்ற கருவிகள் செய்து கொண்டிருக்கும் காட்டுமிராண்டிக்கு, தான் செலவிடுகிற இந்த நேரம் நுகர்வுப் பண்ட உற்பத்திக்காகச் செல விடப்படவில்லை என்பது தெரிந்ததுதான். உற்பத்திச் சாதனங் களிலான தனது தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதைத் தவிர தான் வேறொன்றும் செய்யவில்லை என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். அதல்லாமல், நேரம் வீணாகிறதே என்று இந்தக் காட்டு மிராண்டி கொஞ்சங்கூட கவலைப்படாமல் இருப்பது பொரு ளாதார நோக்கில் படுபாதகப் பாவச் செயலாகும். ஒரே ஒரு அம்பு செய்து முடிக்க, டைலர்[57] கூறுவது போல, இவருக்கு ஒரு முழு மாதமே ஆவதும் உண்டு.

அரசியல் பொருளாதார அறிஞர்கள் சிலர் தத்துவார்த்த இக்கட்டிலிருந்து, அதாவது மெய்யான உறவுகளைப் புரிந்து கொள் வதிலுள்ள சிரமத்திலிருந்து விடுபட விரும்பி, தற்போது சகஜமாகி விட்ட ஒரு கருத்தை, அதாவது ஒருவருக்கு மூலதனமாய் இருப்பது இன்னொருவருக்கு வருவாயாய் இருக்கிறது என்பதான கருத்தை இதன் பொருட்டு கைக்கொள்கிறார்கள். இக்கருத்து ஓரளவுக்கே உண்மையானது. பொது விதியாக முன்வைக்கப்பட்டதும் இது முழு

---

[56] "வில், அம்பு செய்யும் காட்டுமிராண்டி ஒரு தொழிலைச் செய்கிறார், ஆனால் துறவைக் கடைப்பிடிக்க வில்லை." (சீனியர், *Principes fondamentaux de l'Economie Politique*, trad. Arrivabene, பாரிஸ், 1836, பக்கம் 342-43.) "சமுதாயம் எவ்வளவுக் கெவ்வளவு முன்னேறுகிறதோ, துறவு அவ்வளவுக்கவ்வளவு அவசியமாகிறது." (மேலது, பக்கம் 312). (பார்க்கவும்: முதல் பாகம், அத்தியாயம் XXIV, பிரிவு 3, பக்கம் 711.)

[57] எ. ப. டைலர், **மனித குலத்தின் ஆரம்ப கால வரலாறு...பற்றிய ஆராய்ச்சிகள்**, லண்டன், 1865, பக்கம் 198-99.

அளவுக்குப் பொய்யானதாகி விடுகிறது. (அதாவது வருடாந்தர மறுவுற்பத்தியின் போது நடைபெறும் பரிவர்த்தனை நிகழ்முறையையே முற்றிலும் தவறான முறையில் புரிந்து கொள்ளுமாறு செய்கிறது. ஆகவே ஓரளவுக்கு உண்மையாக இருப்பதற்கான மெய்யான காரணத்தைச் சரிவர புரிந்து கொள்ள முடியாத நிலைமையை உண்டாக்குகிறது.)

இந்தக் கருத்து ஓரளவுக்கு சரியாக இருப்பதற்கு அடிப்படையாக விளங்கும் மெய்யான உறவுகளை இப்போது தொகுத்துரைப்போம்; இந்த உறவுகள் குறித்து தற்போது சகஜமாகி விட்ட கருத்தோட்டம் எவ்வளவு தவறானது என்பது அப்போது தெரிய வரும்.

1) மாறும்-மூலதனம் முதலாளியின் கையில் மூலதனமாகவும், கூலித் தொழிலாளியின் கையில் வருவாயாகவும் செயல்படுகிறது.

மாறும்-மூலதனம் முதலில் முதலாளியின் கையில் **பண-மூலதனமாக** இருக்கிறது. அவர் அதைக் கொண்டு உழைப்புச் சக்தியை வாங்குகிறார், இவ்விதம் அது **பண-மூலதனமாகச்** செயல்படுகிறது. அவரது கையில் பண வடிவில் நீடிக்கும் வரை, அது பண வடிவிலுள்ள குறிப்பிட்ட மதிப்பேயன்றி வேறல்ல; ஆகவே மாறாப் பருமனே தவிர மாறும் பருமனல்ல. உழைப்புச் சக்தியாக மாற்றப் படக் கூடியதாய் இருப்பதால் உள்ளுறை நிலையில் மாறும்-மூலதனமாய் இருக்கிறது என்கிறோம். அது பண வடிவை விட்டொழித்து, முதலாளித்துவ நிகழ்முறையில் திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறாகச் செயல்படுகிற உழைப்புச் சக்தியாக மாறிய பிறகுதான் மெய்யான மாறும்-மூலதனமாகிறது.

**பணமானது** முதலில் முதலாளிக்கு மாறும்-மூலதனத்தின் பண வடிவமாகச் செயல்பட்டது. இப்பொழுது அது தொழிலாளியின் கைக்குச் சென்று அவரது கூலியின் பண வடிவமாகச் செயல்படுகிறது. இதனை அவர் வாழ்வுச் சாதனங்களுக்காகப் பரிவர்த்தனை செய்கிறார். இவ்விதம் அந்தப் பணம் தொழிலாளி ஓயாமல் திரும்பத் திரும்ப தமது உழைப்புச் சக்தியை விற்றுப் பெறுகிற **வருவாயின்** பண வடிவமாகச் செயல்படுகிறது.

வாங்குகிறவரின் பணம் (இங்கே முதலாளியின் பணம்) அவரது கையிலிருந்து, விற்பவரின் கைக்கு (இங்கே உழைப்புச் சக்தியை விற்பவரான தொழிலாளியின் கைக்கு) செல்கிறது — நடப்பதெல்லாம் அவ்வளவுதான். இது **மாறும்-மூலதனத்தின்** இரட்டைச் செயற்பாடு — முதலாளிக்கு மூலதனமாகவும் தொழிலாளிக்கு வருவாயாகவும் செயல்படுதல் — ஆகி விடாது. அதே **பணம்தான்** முதலில் முதலாளியின் கையில் அவரது மாறும்-மூலதனத்தின் பண வடிவமாக, அதாவது உள்ளுறை நிலையிலான மாறும்-மூலதனமாக இருக்கிறது; பிறகு முதலாளி அதனை உழைப்புச் சக்தியாக மாற்றியதும், தொழிலாளியின் கைக்குச் சென்று அவரது விற்கப்பட்ட உழைப்புச் சக்திக்கான சமதையாகப் பயன்படுகிறது. ஆனால்

விற்பவருக்கு ஒரு காரியத்துக்குப் பயன்படுகிற அதே பணம் வாங்கு கிறவருக்கு வேறொரு காரியத்துக்குப் பயன்படுவது எல்லாச் சரக்கு களின் விற்றல்-வாங்கலுக்கும் உரித்தான ஒரு தனி இயல்பேயன்றி வேறல்ல.

தவறான விதத்தில் சப்பைக்கட்டுவாதப் பொருளாதார அறிஞர் கள் [apologetic economists] இப்பிரச்சினையை முன்வைக்கிறார் கள். மேலும் தொடர்ந்து நிகழ்வதைத் தற்போதைக்குக் கவனியாது ஒதுக்கி விட்டு, சுற்றோட்டச் செயலை மட்டும் கவனிப்போமாயின், இவர்கள் புரியும் தவறு மிகத் தெளிவாய்ப் புலனாகிறது. இந்தச் சுற்றோட்டச் செயலானது M — L (=M — C) ஆக இருந்து, வாங்கு கிறவரான முதலாளிக்குப் பண்த்தை உழைப்புச் சக்தியாக மாற்றித் தருகிறது; L — M (=C — M) ஆக இருந்து, விற்பவரான தொழி லாளிக்கு உழைப்புச் சக்தியான சரக்கைப் பணமாக மாற்றித் தருகிறது. இங்கே அதே பணம் இரு மூலதனங்களை ஈடேற்றம் பெறச் செய்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். வாங்குகிற வரான முதலாளி தமது பண-மூலதனத்தை உயிருள்ள உழைப்புச் சக்தியாக மாற்றிக் கொள்கிறார்; இதனை அவர் தமது திறனுடை-மூலதனத்தில் இணைத்திடுகிறார். மறு புறத்தில் விற்பவரான தொழிலாளி தமது சரக்காகிய உழைப்புச் சக்தியைப் பணமாக மாற் றிக் கொள்கிறார்; இதனை அவர் வருவாயாகச் செலவிடுகிறார், இப்படிச் செலவிடுவதால்தான் அவரால் தமது உழைப்புச் சக்தி யைத் திரும்பத் திரும்ப விற்க முடிகிறது, இவ்விதம் தம்மையும் தமது உழைப்புச் சக்தியையும் பராமரித்துக் கொள்ளவும் முடிகிறது. அவரது உழைப்புச் சக்தி இவ்வாறு அவருக்குச் சரக்கு வடிவிலான மூலதனமாக அமைந்து தொடர்ச்சியாய் அவருக்கு வருவாய் கிடைக்குமாறு செய்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், உழைப்புச் சக்தியானது (ஓயாமல் தன்னைப் புதுப்பித்துக் கொண்டும் மறுவுற்பத்தி செய்து கொண்டும் இருக்கிற) அவரது ஆற்றலே தவிர, அவரது மூலதனம் அல்ல. அது தொடர்ச்சி யாகத் திரும்பத் திரும்ப அவர் விற்கக் கூடியதும் உயிர்வாழும் பொருட்டு விற்றாக வேண்டியதுமான ஒரே சரக்காகும். அதை விலைக்கு வாங்குகிற முதலாளியின் கைக்குச் சென்ற பிறகுதான் அது மூலதனமாக (மாறும்-மூலதனமாக) செயல்படுகிறது. ஒரு மனிதன் உயிர்வாழ வேறு வழி ஏதுமின்றி ஓயாமல் திரும்பத் திரும்ப தனது உழைப்புச் சக்தியை, அதாவது தன்னையே வேறொரு வருக்கு விற்க வேண்டியிருந்தால், இந்தப் பொருளாதார அறிஞர் களின் கருத்துப்படி, இந்நிலைமை அவர் ஒரு முதலாளி என்பதற்கு நிரூபணமாகிறதாம். எப்படி என்றால் எப்போதும் அவர் விற்பதற் கான ''சரக்கினை'' (தன்னையே) உடையவராய் இருக்கிறாராம். இப்படிப் பார்த்தால் அடிமையுங்கூட ஒரு முதலாளிதான், அடிமை யுடைமையாளரால் முற்றாகவும் முடிவாகவும் ஒரு சரக்காய்

விற்கப்பட்ட போதிலும் அடிமையும் ஒரு முதலாளிதான். எப்படி என்றால் உழைக்கும் அடிமையைச் சரக்காக விலைக்கு வாங்குகிறவர் அதனை அனுதினமும் திரும்பத் திரும்ப உழைக்க வைக்கிறார் என்பதோடு, இப்படி அது திரும்பத் திரும்ப உழைக்கக் கூடியதாய் இருக்கும் பொருட்டுத் தேவைப்படும் வாழ்வுச் சாதனங்களையும் அதற்குத் தருகிறார் — இந்தச் சரக்கின் இயல்பே இதனை அவசியமாக்கி விடுகிறது. (இந்த விவரம் குறித்து, சிஸ்மொந்தி எழுதுவதையும், மால்தசுக்கு வரைந்த கடிதங்களில் ஸே* கூறுவதையும் பார்க்கவும்.)

2) 1,000 $I_v$ + 1,000 $I_s$ என்பது 2,000 $II_c$ என்பதற்குப் பரிவர்த்தனை செய்யப்படுகையில் சிலருக்கு மாறா-மூலதனமாய் இருப்பது (2,000 $II_c$) வேறு சிலருக்கு மாறும்-மூலதனமும் உபரி-மதிப்பும் ஆகிறது; எனவே முற்றிலும் வருவாய் ஆகிறது. சிலருக்கு மாறும்-மூலதனமும் உபரி-மதிப்புமாய் இருப்பது (2,000 $I_{(v+s)}$), அதாவது முற்றிலும் வருவாயாக இருப்பது, வேறு சிலருக்கு மாறா-மூலதனமாகிறது.

முதலில் $I_v$ ஆனது $II_c$க்குப் பரிவர்த்தனை ஆவதைப் பரிசீலிப்போம். தொழிலாளர்கள் கோணத்திலிருந்து தொடங்குவோம்.

துறை Iஇன் கூட்டுத் தொழிலாளி தமது உழைப்புச் சக்தியை துறை Iஇன் கூட்டு முதலாளியிடம் 1,000க்கு விற்கிறார். இந்த மதிப்பு கூலியின் வடிவில் பணமாக அவருக்குக் கிடைக்கிறது. இந்தப் பணத்தைக் கொண்டு அவர் துறை IIஇலிருந்து அதே மதிப்புள்ள நுகர்வுப் பண்டங்களை வாங்குகிறார். துறை IIஇன் முதலாளி சரக்கு விற்பனையாளராகவே அவரை எதிர்நோக்குகிறார். அவர் தமது முதலாளியிடமிருந்தே வாங்கினாலும் கூட — எடுத்துக்காட்டாக, மேலே பக்கம் 535இல், 500 $II_v$இன் பரிவர்த்தனையில் அவர் இப்படித்தான் வாங்குகிறார் — இதே நிலைமைதான். அவரது சரக்கான உழைப்புச் சக்தி நிகழ்த்துகிற சுற்றோட்ட வடிவம், தேவைகளை நிறைவு செய்கிற நுகர்வுக்கான சாமானியச் சரக்குச் சுற்றோட்ட வடிவமாகும்: C (உழைப்புச் சக்தி) — M — C (நுகர்வுப் பண்டங்கள், அதாவது துறை IIஇன் சரக்குகள்). இந்தச் சுற்றோட்டச் செயலின் விளைவு என்னவென்றால்: தொழிலாளி துறை Iஇன் முதலாளிக்கு வேண்டிய உழைப்புச் சக்தியாகத் தன்னைப் பராமரித்துக் கொள்கிறார். அவர் இப்படித் தொடர்ந்து தன்னைப் பராமரித்துக் கொள்ள வேண்டுமானால், L(C) — M — C என்கிற இந்தச் சுற்றோட்ட நிகழ்முறை ஓயாமல் திரும்பத் திரும்ப நடைபெற்று வர வேண்டும். அவரது கூலி

---

* *மார்க்ஸ் இங்கே குறிப்பிடுவது: ழா. ப. ஸேயின் Lettres a M. Malthus sur differents sujets d'economie politique, notamment sur les causes de la stagnation generale du commerce, பாரிஸ், 1820.* — *ஆங்கிலப் பதிப்பாசிரியர்.*

நுகர்வுப் பண்டங்களாக ஈடேற்றம் பெறுகிறது; வருவாயாகச் செல விடப்படுகிறது. தொழிலாளி வர்க்கம் முழுவதையும் எடுத்துக் கொண்டால் கூலியானது தொடர்ச்சியாய் வருவாயாகச் செலவிடப் பட்டு வருகிறது.

$I_v$ ஆனது $II_c$க்குப் பரிவர்த்தனை ஆவதை இப்போது முதலாளி யின் கோணத்திலிருந்து பரிசீலிப்போம். துறை IIஇன் சரக்கு-உற்பத்தி முழுதுமே நுகர்வுப் பண்டங்களாகும், அதாவது வருடாந் தர நுகர்வில் போய்ச் சேருவதற்காக, ஆகவே யாரோ ஒருவருக் கான — இங்கே துறை Iஇன் கூட்டுத் தொழிலாளிக்கான — வரு வாயின் ஈடேற்றத்துக்குப் பயன்படுத்துவதற்காக உற்பத்தி செய்யப் பட்ட பண்டங்களாகும். துறை IIஇன் கூட்டு முதலாளிக்கு, அவரது சரக்கு-உற்பத்தியில் 2,000 மதிப்புள்ள ஒரு பகுதியானது இப் போது அவரது திறனுடை-மூலதனத்தைச் சேர்ந்த மாறா-மூலதன மதிப்பின் வடிவமாக உள்ளது. இந்தத் திறனுடை-மூலதனம் இந்தச் சரக்கு வடிவத்திலிருந்து திரும்பவும் அதன் தசையுருவுக்கு மாற்றப் பட்டாக வேண்டும். இப்படி மாற்றப்பட்ட பிறகே அது திறனுடை-மூலதனத்தின் மாறாப் பகுதியாக மீண்டும் செயல்பட முடியும். துறை IIஇன் முதலாளி இது வரை செய்திருப்பது எல்லாம் சரக்கு களாக (நுகர்வுப் பண்டங்களாக) மறுவுற்பத்தி செய்யப்பட்டிருக்கும் தமது மாறா-மூலதன மதிப்பில் ஒரு பாதியை (1,000) துறை Iஇன் தொழிலாளர்களுக்கு விற்று அதைப் பணமாக மாற்றிக் கொண்டதுதான். ஆக மாறா-மூலதன மதிப்பு $II_c$இன் இந்த முதல் பாதியாக மாற்றப்பட்டிருப்பது, துறை I உழைப்புச் சக்தியை வாங்கிக் கொள்வதற்குப் பண-மூலதனமாகப் பயன்பட்ட பணம் தானே தவிர, மாறும்-மூலதனமான $I_v$ அல்ல. துறை Iஇன் இந்தப் பணம் உழைப்புச் சக்தியை விற்பவர் கைக்கு வருகிறது, அவருக்கு இந்தப் பணம் வருவாய் ஆகிறதே தவிர மூலதனமாவதில்லை — அதாவது அவர் இதை வாங்கற் சாதனமாகச் செலவிட்டு நுகர்வுப் பண்டங்கள் வாங்குகிறார். இப்படித் துறை Iஇன் தொழிலாளர் களிடமிருந்து துறை IIஇன் முதலாளிகள் கைக்கு வருகிற இந்தப் பணம் (1,000) துறை IIஇன் திறனுடை-மூலதனத்தின் மாறாக் கூறாகச் செயல்பட முடியாது. இன்னமும் அது இத்துறையின் சரக்கு-மூலதனத்தின் பண-வடிவமாகவே இருக்கிறது, இனிமேல் தான் அது மாறா-மூலதனத்தின் நிலை-மூலதன அல்லது சுழல்-மூலதனக் கூறுகளாக மாற்றப்பட்டாக வேண்டும். ஆகவே துறை II ஆனது அதன் சரக்குகளை வாங்குவோரான துறை Iஇன் தொழி லாளர்களிடமிருந்து பெறுகிற பணத்தைக் கொண்டு 1,000 மதிப் புள்ள உற்பத்திச் சாதனங்களைத் துறை Iஇடமிருந்து வாங்குகிறது. துறை IIஇன் மாறா-மூலதன மதிப்பில் சரிபாதியானது இவ்விதம் அதன் தசையுருவில் மாற்றீடு செய்யப்பட்டு, திரும்பவும் துறை IIஇன் திறனுடை-மூலதனத்தின் கூறாகச் செயல்படக் கூடியதாகிறது.

இந்த எடுத்துக்காட்டில் சுற்றோட்டத்தின் பாதை இதுதான்: C — M — C: 1,000 பெறுமானமுள்ள நுகர்வுப் பண்டங்கள் — பணம் (1,000) — 1,000 பெறுமானமுள்ள உற்பத்திச் சாதனங்கள்.

ஆனால் C — M — C என்பது இங்கே மூலதனத்தின் அசைவியக்கத்தைக் குறிக்கிறது. C ஆனது தொழிலாளர்களுக்கு விற்கப்பட்டதும் M ஆக மாற்றமடைகிறது. பிறகு இந்த M ஆனது உற்பத்திச் சாதனங்களாக மாறுகிறது. சரக்குகள் அவற்றின் உற்பத்திக்கு ஆதாரமான பொருட் கூறுகளாகத் திரும்பவும் மாற்றப்படும் நிகழ்வாகும் இது. மறு புறத்தில் எப்படி துறை IIஇன் முதலாளி துறை Iஐப் பொறுத்த வரை சரக்குகளை வாங்குகிறவராகச் செயல்படுகிறாரோ அதே போல துறை Iஇன் முதலாளியும் துறை IIஐப் பொறுத்த வரை சரக்குகளை விற்பவராகச் செயல்படுகிறார். மாறும்-மூலதனமாகச் செயல்படுவதற்கென அமைந்ததாகிய 1,000ஐப் பணமாகத் தந்து துறை I ஆனது 1,000 பெறுமானமுள்ள உழைப்புச் சக்தியை ஆரம்பத்தில் வாங்கியது. அது பண வடிவிலான 1,000ஐச் செலவிட்டு அதற்கான சமதையை இவ்விதம் பெற்றுக் கொண்டது. இந்தப் பணம் இப்போது தொழிலாளிக்குச் சொந்தமானதாகிறது. அவர் இதனைச் செலவிட்டுத் துறை IIஇடமிருந்து சரக்குகள் வாங்குகிறார். இவ்வாறு துறை IIஇன் கல்லாப் பெட்டியை வந்தடையும் இந்தப் பணத்தைத் துறை I திரும்பப் பெற வேண்டுமானால், அதே மதிப்புள்ள சரக்குகளை அது துறை IIக்கு விற்பதொன்றே அதற்குரிய வழி.

மாறும்-மூலதனமாகச் செயல்படும் பொருட்டு, துறை I ஆனது ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தை (1,000) ஆரம்பத்தில் வைத்திருந்தது. இந்தப் பணம் அதே மதிப்புடைய உழைப்புச் சக்தியாக மாற்றப்படுகிறது, இதன் மூலம் அது மாறும்-மூலதனமாகச் செயல்படுகிறது. ஆனால் தொழிலாளி உற்பத்தி நிகழ்முறையின் விளைவாக 6,000 பெறுமானமுள்ள சரக்குகளை (உற்பத்திச் சாதனங்களை) கிடைக்கச் செய்கிறார். இதில் ஆறிலொரு பங்கு (அதாவது 1,000) பணமாக முன்னீடு செய்யப்பட்ட மாறும்-மூலதனப் பகுதிக்குச் சமதையாகும். மாறும்-மூலதன மதிப்பானது முன்பு பண வடிவில் இருந்த போது எப்படி மாறும்-மூலதனமாகச் செயல்படவில்லையோ, அதே போல இப்போது சரக்கு-வடிவில் இருக்கையிலும் மாறும்-மூலதனமாகச் செயல்படவில்லை. உயிருள்ள உழைப்புச் சக்தியாக மாற்றப்பட்ட பின்னரே, மேலும் இந்த உழைப்புச் சக்தி உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டு வரும் வரைதான், இம்மதிப்பு மாறும்-மூலதனமாகச் செயல்பட முடியும். பணமாக இருக்கையில் மாறும்-மூலதன மதிப்பு உள்ளுறை நிலையிலான மாறும்-மூலதனமாகவே இருந்தது. ஆனால் நேரடியாகவே உழைப்புச் சக்தியாக மாற்றப்படத்தக்க வடிவில் அது இருந்தது. சரக்காகிய பிறகும் இந்த மாறும்-மூலதன மதிப்பு உள்ளுறை நிலையிலான

பண மதிப்பாகத்தான் இருக்கிறது. சரக்காக இருப்பது விற்கப் பட்டாக வேண்டும்; அதன் பிறகே, அதாவது 1,000 மதிப்புள்ள சரக்காகத் துறை Iஇடம் இருப்பதை துறை II விலைக்கு வாங்கிய பிறகே இம்மதிப்பு அதன் ஆரம்பப் பண வடிவினைத் திரும்பவும் வந்தடைகிறது. இந்தச் சுற்றோட்ட அசைவியக்கம் வருமாறு: $1,000_v$ (பணம்) — 1,000 பெறுமானமுள்ள உழைப்புச் சக்தி — 1,000 மதிப்புள்ள சரக்குகள் (மாறும்-மூலதனத்தின் சமதை) — $1,000_v$ (பணம்); அதாவது M — C ... C — M (=M — L ... C — M). உற்பத்தி நிகழ்முறையானது C ... Cக்கு இடையில் நடைபெறுகிறது என்றாலும், அது சுற்றோட்டத் துறையைச் சேர்ந்ததல்ல. வருடாந்தர மறுவுற்பத்தியின் பல்வேறு கூறுகளும் ஒன்றுக்கொன்று செய்து கொள்ளும் பரிவர்த்தனையில் திறனுடை-மூலதனத்தின் எல்லாக் கூறுகளின் மறுவுற்பத்தியும், மாறாக் கூறுகள் மட்டுமன்றி மாறும் கூறான உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்தியும் அடங்கியிருப்பினும், உற்பத்தி நிகழ்முறையானது இந்தப் பரிவர்த்தனையில் இடம் பெறுவதில்லை. இந்தப் பரிவர்த்தனையில் பங்கு கொள்வோர் எல்லாரும் வாங்குவோராகவோ விற்போராகவோ அல்லது இரு வகையினருமாகவோதான் வருகிறார்கள். தொழிலாளர்கள் சரக்குகளை வாங்குவோராக மட்டும் இருக்க, முதலாளிகள் மாறி மாறி வாங்குவோராகவும் விற்போராகவும் விளங்குகின்றனர்; குறிப்பிட்ட சில வரம்புகளுக்கு உட்பட்டு அவர்கள் சரக்கு வாங்குவோராய் மட்டுமோ, சரக்கு விற்போராய் மட்டுமோ இருக்கக் காண்கிறோம்.

இவை யாவற்றின் விளைவு என்னவென்றால்: துறை I ஆனது அதன் மூலதனத்தின் மாறும் மதிப்புக் கூறினைப் பண வடிவுக்குத் திரும்பி விடுமாறு செய்கிறது — இந்தக் கூறு பண வடிவில் இருக்கும் போது மட்டுமே அதனை நேரடியாக உழைப்புச் சக்தியாய் மாற்ற முடியும். துறை I ஆனது மாறும்-மூலதன மதிப்பை தனது திறனுடை-மூலதனத்தின் மாறும் கூறாக எந்த வடிவில் முன்னீடு செய்ய முடியுமோ அதே வடிவில் திரும்பவும் பெறுகிறது. ஆனால் தொழிலாளி சரக்கை விற்பவராகத் திரும்பவும் செயல்பட வேண்டுமானால், அதற்கு முன் அவர் சரக்கு வாங்குகிறவராகத் திரும்பவும் செயல்பட்டாக வேண்டும்.

துறை IIஇன் மாறும்-மூலதனத்தை ($500\ II_v$) பொறுத்த வரை, இந்தத் துறையைச் சேர்ந்த முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான சுற்றோட்ட நிகழ்முறையானது நேரடியாகவே நடைபெறுகிறது. ஏனெனில் இந்நிகழ்முறை துறை IIஇன் கூட்டு முதலாளிக்கும் இதே துறையின் கூட்டுத் தொழிலாளிக்கும் இடையே நடைபெறுவதாகக் கொள்கிறோம்.

துறை IIஇன் கூட்டு முதலாளி $500_v$ஐ முன்னீடு செய்து அதே மதிப்புள்ள உழைப்புச் சக்தியை வாங்குகிறார். இங்கே வாங்குபவர் கூட்டு முதலாளி; விற்பவர் கூட்டுத் தொழிலாளி. தொழிலாளிக்கு

அவரது உழைப்புச் சக்திக்கான விலை பணமாகக் கிடைக்கிறது. அவர் தாமே உற்பத்தி செய்த சரக்குகளில் ஒரு பகுதியை இந்தப் பணத்தைக் கொண்டு வாங்குகிறார். இங்கே முதலாளி விற்பவ ராகிறார். துறை IIஇல் உற்பத்தியான சரக்கு-மூலதனத்தில் ஒரு பகுதியைக் கொண்டு, அதாவது சரக்கு வடிவிலான $500_v$ஐக் கொண்டு, தொழிலாளி தமது உழைப்புச் சக்திக்கான விலையாகத் தரப்பட்ட பணத்தை முதலாளிக்கு மாற்றீடு செய்கிறார். உழைப்புச் சக்தியாக உருமாறுவதற்கு முன்னால் முதலாளியிடம் பண வடிவில் இருந்த அதே v இப்போது அவரிடம் சரக்கு வடிவில் இருக்கிறது. தொழிலாளியோ தமது உழைப்புச் சக்தியின் மதிப்பைப் பணமாக ஈடேற்றம் செய்து கொண்டு விட்டார். இப்பொழுது அவர் இந்தப் பணத்தைத் தமது வருவாயாகச் செலவிட்டுத் தம் நுகர்வுக்கு வேண்டியவற்றைப் பெறும் பொருட்டு, தாமே உற்பத்தி செய்த நுகர்வுப் பண்டங்களில் ஒரு பகுதியை விலைக்கு வாங்கி அந்தப் பணத்தை ஈடேற்றம் பெறச் செய்கிறார். தொழிலாளி பண வடிவிலான தமது வருவாயைத் தந்து, முதலாளியின் சரக்குகளில் ஒரு பகுதியான $500_v$ஐ, அதாவது தாமே முன்பு சரக்கு வடிவில் மறுவுற்பத்தி செய்தளித்திருப்பதை வாங்குகிற பரிவர்த்தனை ஆகும் இது. இவ்விதம் இந்தப் பணம் துறை IIஇன் முதலாளியினது மாறும்-மூலதனத்தின் பண வடிவமாக அவரிடமே திரும்பிச் செல் கிறது. பண வடிவில் வருவாய்க்குச் சமதையாகிற ஒரு மதிப்பு இங்கே சரக்கு வடிவிலான மாறும்-மூலதன மதிப்பை மாற்றீடு செய் கிறது.

முதலாளி உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குகையில் தொழி லாளிக்குக் கொடுக்கும் பணத்தை அதற்குச் சமதை அளவிலான சரக்கை அவருக்கு விற்கும் போது அவரிடமிருந்து திரும்ப எடுத்துக் கொள்வதன் மூலம் முதலாளியின் செல்வம் பெருகி விடுவதில்லை. உழைப்புச் சக்தியை வாங்கும் போது முதலில் தொழிலாளிக்கு 500ஐக் கொடுத்து விட்டு, பின்னர் தமக்காகத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்கிறவற்றில் 500 பெறுமானமுள்ள சரக்குகளை அவருக்கு இலவசமாய்க் கொடுப்பாரானால், தொழிலாளிக்கு அவர் இரு முறை ஊதியமளிக்கிறார் என்றாகி விடும். இதற்கு நேர் மாறாக, தொழிலாளி தமது உழைப்புச் சக்தியின் விலையான 500ஐப் பெற்றுக் கொண்டு, அதற்கு பதில் 500 பெறுமானமுள்ள சரக்குகளின் உருவிலான சமதையை மட்டுமே அவருக்காக உற்பத்தி செய்வாரானால், முதலாளியின் நிலை இப்பரிமாற்றத்துக்கு முன் பிருந்ததை விட எவ்விதத்தும் மேம்பட்டு விடாது. ஆனால் தொழி லாளி 3,000 பெறுமானமுள்ள உற்பத்திப் பண்டத்தை மறு வுற்பத்தி செய்துள்ளார். உற்பத்திப் பண்டத்தினது மதிப்பில் ஒரு மாறாப் பகுதியை, அதாவது பண்டத்தின் உற்பத்திக்காகச் செலவான 2,000 பெறுமானமுள்ள உற்பத்திச் சாதனங்களின் மதிப்பை—

தாமதப்பட்டு விடுகிறது. அதே போல் துறை Iஇன் 1,000$_v$ அதன் பண வடிவுக்குத் திரும்புவதும் தாமதப்பட்டு விடுகிறது. துறை Iஇன் முதலாளி சேம வைப்புப் பணத்தை எடுத்துச் செல விட்டாலன்றி அவரால் பழைய அளவுவீதத்தில் தொழிலைத் தொடர்ந்து நடத்த முடியாது. பொதுவாகச் சொன்னால், மாறும்-மூலதன மதிப்பானது பண வடிவுக்குத் திரும்புவது வேகமாக நடை பெறுகிறதா, மெதுவாக நடைபெறுகிறதா என்பதைப் பொருட்படுத் தாமல், தடங்கலின்றித் தொடர்ந்து தொழிலை நடத்திச் செல்வதற்கு பண வடிவிலான சேம வைப்பு மூலதனம் [reserve capital] அவசியமாகும்.

நடப்பு வருட மறுவுற்பத்தியின் பல்வேறு கூறுகளும் பரிவர்த் தனை ஆவதை ஆராய வேண்டுமானால், முந்தைய வருட உழைப் பின் — ஏற்கெனவே முடிவுக்கு வந்து விட்ட ஆண்டினது உழைப் பின் — விளைவுகளையும் ஆராய்வது அவசியமாகும். இந்த வருட உற்பத்திப் பண்டத்தை அளித்திட்ட உற்பத்தி நிகழ்முறை நடந்து முடிந்தது, கடந்த காலத்துக்குரியதான அது கடந்த காலத்து உற்பத் திப் பண்டத்தில் மறைந்திருப்பது, இதனிலும் கடந்த காலத்துக்குரிய தாக இருப்பதாகும் இந்த உற்பத்தி நிகழ்முறைக்கு முன்னதாகவோ அதனுடன் கூடவோ நடைபெற்ற சுற்றோட்ட நிகழ்முறை, உள் ளுறை மாறும்-மூலதனம் உள்ளபடியான மாறும்-மூலதனமாக அடையும் உருமாற்றம், அதாவது உழைப்புச் சக்தியின் விற்றலும் வாங்கலும். இப்போது உழைப்புச் சந்தையானது இங்கே நாம் பரிசீலிக்கும் சரக்குச் சந்தையின் பகுதியாய் இருக்கவில்லை. தொழி லாளி ஏற்கெனவே தமது உழைப்புச் சக்தியை விற்று விட்டார் என்பதோடு, சரக்கு வடிவில் உபரி-மதிப்போடு கூட உழைப்புச் சக்தியின் விலைக்கான சமதையையும் கிடைக்கச் செய்து விட்டார். தவிரவும் அவருக்கு வர வேண்டிய கூலியும் அவர் கைக்கு வந்து விட்டது. பரிவர்த்தனையின் போது சரக்குகளை (நுகர்வுப் பண்டங் களை) விலைக்கு வாங்குபவராகவே அவர் செயல்படுகிறார். ஆனால் வருடாந்தர உற்பத்திப் பண்டத்தில் மறுவுற்பத்திக் கூறுகள் யாவும் அடங்கியிருக்க வேண்டும்; அது திறனுடை-மூலதனத்தின் எல்லாக் கூறுகளையும், யாவற்றுக்கும் மேலாய் மிக முக்கியக் கூறான மாறும்-மூலதனத்தையும் திரும்பி வரச் செய்தாக வேண்டும். மாறும்-மூலதனத்தைப் பொறுத்த வரை பின்வருவதே பரிவர்த் தனையின் விளைவு என்பதை மேலே நாம் பார்த்தோம்: சரக்கு களை விலைக்கு வாங்குகிறவர் என்ற முறையில் தொழிலாளி தமது கூலியைச் செலவிட்டு வாங்கும் சரக்குகளை நுகர்கிறார். இதன் மூலம் அவர் விற்பதற்குத் தம்மிடமுள்ள ஒரே சரக்கான உழைப்புச் சக்தியைப் பராமரித்துக் கொள்வதோடு மறுவுற்பத்தியும் செய்து கொள்கிறார். முதலாளி உழைப்புச் சக்தியை வாங்குவதற்காக முன்னீடு செய்கிற பணம் அவரிடமே திரும்பி வருவது போலவே,

உழைப்புச் சக்தியும் இந்தப் பணத்துக்காகப் பரிவர்த்தனையாகக் கூடிய சரக்காக உழைப்புச் சந்தைக்குத் திரும்பி வருகிறது. குறிப்பிட்ட உதாரணமாகிய 1,000 $I_v$இல் விளைவு என்ன வென்றால்: துறை Iஇன் முதலாளிகளிடம் பணமாக $1,000_v$ இருக்கிறது; துறை Iஇன் தொழிலாளர்களிடம் $1,000_v$ மதிப்புள்ள உழைப்புச் சக்தி விற்கப்படுவதற்காக இருக்கிறது. ஆகவே துறை Iஇன் மறுவுற்பத்தி நிகழ்முறை திரும்பவும் நடைபெற முடிகிறது. பரிவர்த்தனை நிகழ்முறையின் விளைவுகளில் இதுவும் ஒன்று.

மறு புறத்தில், துறை Iஇன் தொழிலாளர்கள் தம் கூலியைச் செலவிட்டு, $1,000_c$ பெறுமானமுள்ள நுகர்வுப் பண்டங்களை துறை IIஇடமிருந்து வாங்குகிறார்கள். இவ்விதம் அவர்கள் இப் பண்டங்களை சரக்கு வடிவிலிருந்து பண வடிவிற்கு மாற்றுகிறார்கள். துறை II $1,000_v$ பெறுமானமுள்ள சரக்குகளைத் துறை Iஇலிருந்து வாங்குகிறது. இதன் மூலம் அது தனது மாறா-மூல தனத்தை இந்தப் பண வடிவிலிருந்து தசையுருவிற்குத் திரும்பவும் மாற்றுகிறது. அதே போது துறை Iஇன் மாறும்-மூலதன மதிப்பு பண வடிவில் அதனிடம் திரும்பி வருகிறது.

துறை Iஇன் மாறும்-மூலதனம் மூன்று உருமாற்றங்களுக்கு உள்ளாகிறது. இந்த உருமாற்றங்கள் வருடாந்தர உற்பத்திப் பண்டத்தின் பரிவர்த்தனையில் தெரிவதே இல்லை, அல்லது சூசகமாகவே தெரிகின்றன.

1) முதல் வடிவம் பணமாகிய 1,000 $I_v$ ஆகும். இந்தப் பணம் அதே மதிப்புள்ள உழைப்புச் சக்தியாக மாற்றப்படுகிறது. இந்த மாற்றம் துறை Iக்கும் துறை IIக்கும் இடையிலான சரக்குப் பரிவர்த்தனையில் நேரடியாகத் தெரிவதில்லை என்றாலும் துறை Iஇன் தொழிலாளி வர்க்கம் பணமாகக் கையில் 1,000 வைத்துக் கொண்டு துறை IIஇன் சரக்கு விற்பனையாளரை எதிர்நோக்குகையில் மேற்படி மாற்றத்தின் விளைவு தெரிய வருகிறது. இதே போலத்தான் துறை IIஇன் தொழிலாளி வர்க்கமும் பணமாகக் கையில் 500 வைத்துக் கொண்டு, சரக்கு வடிவில் இருக்கும் 500 $II_v$ஐ விற்க வருகிறவரை எதிர்நோக்குகிறது.

2) இரண்டாவது வடிவத்தில்தான் மாறும்-மூலதனம் உள்ளபடியே மாறுகிறது, அதாவது மாறும்-மூலதனமாகச் செயல்படுகிறது. மதிப்பைப் படைக்கும் சக்தியானது இங்கே இதற்குப் பரிவர்த்தனையாகத் தரப்படும் மதிப்பின் இடத்தில் வந்தமர்கிறது. இந்த வடிவம் நாம் ஏற்கெனவே கடந்து வந்து விட்ட உற்பத்தி நிகழ்முறைக்கு மட்டுமே உரித்தானது.

3) மூன்றாவது வடிவத்தில்தான் மாறும்-மூலதனம் தனது மாறும் தன்மையை உற்பத்தி நிகழ்முறையின் விளைவில் நிரூபித்துக் காட்டுகிறது. வருடாந்தர மதிப்பு-உற்பத்தியே இந்த மூன்றாவது

வடிவம். துறை Iஇன் வருடாந்தர மதிப்பு-உற்பத்தி = $1,000_v$ + $+1,000_s = 2,000$ $I_{(v+s)}$ ஆகும். பணமாக இருந்த ஆரம்ப மதிப்பான 1,000 இப்பொழுது சரக்குகளாகி முன்பு இருந்ததைப் போல் இரு மடங்கான மதிப்பாக மாறியிருக்கிறது. ஆகவே சரக்குகளின் வடிவிலான மாறும்-மூலதன மதிப்பான 1,000 ஆனது, திறனுடை-மூலதனத்தின் ஒரு கூறாக இருந்து மாறும்-மூலதனம் உற்பத்தி செய்திருக்கும் மதிப்பில் ஒரு பாதியே ஆகும். சரக்குகளாய் இருக்கும் இந்த 1,000 $I_v$ மொத்த மூலதனத்தின் மாறும் பகுதியாக ஆரம்பத்தில் துறை I பண வடிவில் முன்னீடு செய்த $1,000_v$இன் சரிநிகரான சமதையாகும். ஆனால் சரக்குகளின் வடிவில் இருப்பதால் இது உள்ளுறை நிலையில் மட்டுமே பணமாகிறது; விற்கப்பட்ட பிறகுதான் உள்ளபடியே பணமாகிறது. இது இன்னுங்கூட சுற்றடியான வழியில்தான் மாறும் பண-மூலதனமாகிறது. சரக்காகிய 1,000 $I_v$ ஆனது $II_c$க்காக விற்கப்படும் போதும், உழைப்புச் சக்தியானது விலைக்கு வாங்கக் கூடிய சரக்காக, பணமான 1,000ஐக் கொடுத்து வாங்கக் கூடிய பண்டமாக சீக்கிரம் திரும்பி வரும் போதும்தான் முடிவில் இது மாறும் பண-மூலதனமாகிறது.

இந்த உருமாற்றங்கள் நடைபெற்று வருகையில் துறை Iஇன் முதலாளி மாறும்-மூலதனத்தை எந்நேரமும் தயாராய்க் கையில் வைத்திருக்கிறார்; (1) ஆரம்பத்தில் பண-மூலதனமாகவும், (2) பிறகு தமது திறனுடை-மூலதனத்தின் ஒரு மதிப்புக் கூறாகவும், (3) இதற்கும் பிறகு தமது சரக்கு-மூலதனத்தின் மதிப்பில் ஒரு பகுதியாகவும், அதாவது சரக்கு வடிவிலான மதிப்பாகவும், (4) முடிவில் திரும்பவும் பணமாகவும் வைத்திருக்கிறார். (இந்தப் பணத்தை இதற்குப் பரிவர்த்தனையாகக் கூடிய உழைப்புச் சக்தி மீண்டும் எதிர்நோக்குகிறது.) உழைப்பு நிகழ்முறையின் போது, மாறும்-மூலதனமானது மதிப்பைப் படைக்கும் முனைப்பான உழைப்புச் சக்தியாக முதலாளியிடம் இருக்கிறதேயல்லாமல், குறிப்பிட்ட பருமனுடைய மதிப்பாக அல்ல. ஆனால் தொழிலாளியின் சக்தி குறிப்பிட்ட காலம் செயல்படுவதற்கு முன்னால் முதலாளி அவருக்கு ஊதியமளிப்பதில்லை. ஆகவே உழைப்புச் சக்தியானது அதற்கு மாற்றீடாகப் படைக்கும் மதிப்பு தம் கைக்கு வந்த பிறகே முதலாளி அவருக்கு ஊதியமளிக்கிறார். அதோடு உபரி-மதிப்புங்கூட முதலாளியின் கைக்கு வந்து விடுகிறது.

**மாறும்-மூலதனமானது ஏதேனும் ஒரு வடிவில் எப்போதும் முதலாளியின் கைவசம் இருந்து வருவதால், எவருக்குமான வருவாயாக இது தன்னை மாற்றிக் கொள்வதாக எவ்விதத்திலும் சொல்வதற்கில்லை.** இதற்கு மாறாக, சரக்குகளாய் இருக்கிற 1,000 $I_v$தான் துறை IIஇடம் விற்கப்படுவதன் மூலம் பணமாக மாற்றமடைகிறது; துறை IIஇன் மாறா-மூலதனத்தில் ஒரு

பாதியைத் திரும்பவும் பண்ட வடிவம் பெறுமாறு மாற்றீடு செய்கிறது.

வருவாயாகத் தன்னைப் பகுத்துக் கொள்வது துறை Iஇன் மாறும்-மூலதனமும் அல்ல, பணமாக இருக்கும் $1,000_v$உம் அல்ல. பணமாக இருப்பதானது உழைப்புச் சக்தியாக மாற்றப் பட்டதுமே, அந்தப் பணம் துறை Iஇன் மாறும்-மூலதனத்தினுடைய பண வடிவமாகச் செயல்படுவது முடிவுற்று விடுகிறது—சரக்கை விலைக்கு வாங்குகிற எவரது பணமும் அவர் அதை ஏனையோரது சரக்குகளுக்காகப் பரிவர்த்தனை செய்து கொண்டதுமே, அவருக்குச் சொந்தமானதாய் இருப்பது எப்படி முடிவுற்று விடுகிறதோ, அதே போல. கூலியாகக் கிடைக்கிற பணம் தொழிலாளியின் கையில் அடைந்திடும் மாற்றங்கள் யாவும் பணமாக மாற்றப்படுகிற அவரது உழைப்புச் சக்தியின் மதிப்பு அடைந்திடும் மாற்றங்களே தவிர, மாறும்-மூலதனம் அடைந்திடும் மாற்றங்கள் அல்ல—தொழிலாளி படைக்கிற மதிப்பு ($2,000\ I_{(v+s)}$) அடைகிற மாற்றம், எப்படி தொழிலாளியுடன் சம்பந்தப்படாமல் முதலாளிக்கே சொந்தமான சரக்கு அடைகிற மாற்றமாகுமோ, அதே போல. ஆயினும் தொழி லாளிக்கு ஊதியமாகத் தரப்படும் பணம் இப்படித் தரப்பட்ட பிறகும் முதலாளியின் பணமே ஆகும் என்ற கருத்திலிருந்து விடு படுவது முதலாளிக்கும், அவரையும் விட அதிகமாய் அவரது தத்துவ விளக்கவுரையாளரான அரசியல் பொருளாதார அறிஞருக்கும் மெத்தக் கடினமாய் இருக்கிறது. நமது முதலாளி தங்க உற்பத்தியாள ராக இருப்பாராயின், மதிப்பு-உற்பத்தியின் இந்த மாறும் பகுதி யானது—அதாவது உழைப்புக்காக அவர் தருகிற விலைக்கான மாற்றீடாகச் சரக்கு வடிவில் அவருக்குக் கிடைக்கும் சமதை யானது—நேரடியாகப் பணத்தின் வடிவிலேயே இருக்கிறது. ஆகவே சுற்று வழியில் செல்ல வேண்டிய அவசியமில்லாமலே அது நேராகவே மாறும் பண-மூலதனமாகத் திரும்பவும் செயல்பட முடிகிறது. ஆனால் துறை IIஇன் தொழிலாளியைப் பொறுத்த வரை—சொகுசுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழிலாளியை ஒதுக்கி விட்டுப் பார்ப்போமானால்—$500_v$ ஆனது தொழிலாளி யின் நுகர்வுக்குச் செல்ல வேண்டிய சரக்குகளாய் இருக்கிறது. இந்தத் தொழிலாளியைக் கூட்டுத் தொழிலாளியாக நோக்குமிடத்து, யாரிடம் அவர் தமது உழைப்புச் சக்தியை விற்கிறாரோ அந்தக் கூட்டு முதலாளியிடமிருந்தே இச்சரக்குகளை விலைக்கு வாங்கு கிறார். துறை IIஇன் மூலதன-மதிப்பின் மாறும் பகுதியானது, அதன் தசையுருவில் அதைக் கருதுவோமாயின், பெரும்பாலும் தொழிலாளி வர்க்கத்தினர் நுகருவதற்காகச் செல்ல வேண்டிய நுகர்வுப் பண்டங்களாய் இருக்கிறது. ஆனால் தொழிலாளி இப்படித் தம் நுகர்வுக்காக வாங்கிச் செலவிடுவது மாறும்-மூலதன மல்ல. தொழிலாளியின் பணமாகிய கூலிதான் இப்படி நுகர்வுப்

பண்டங்களாய் ஈடேற்றம் பெறுகிறது. மாறும்-மூலதனமான 500 $II_v$ இதனால் பணமாக மாறி முதலாளியிடம் திரும்புகிறது. மாறா-மூலதனமான 2,000 $II_c$ எப்படி நுகர்வுப் பண்டங்களாக மறுவுற்பத்தி ஆகின்றதோ அதே போல, மாறும்-மூலதனமான $II_v$உம் நுகர்வுப் பண்டங்களாக மறுவுற்பத்தி ஆகிறது. முன்னதும் வருவாயாகப் பகுபடுவதில்லை, பின்னதும் பகுபடுவதில்லை. இரு சந்தர்ப்பங்களிலும் கூலிதான் வருவாயாகப் பகுபடுகிறது.

என்றாலும் வருடாந்தர உற்பத்திப் பண்டம் பரிவர்த்தனை ஆவதில் தலையாயதோர் உண்மை என்னவெனில் கூலியானது வருவாயாகச் செலவிடப்படுவதால், 1,000 $II_c$ திரும்பவும் பண-மூலதன வடிவம் பெறுகிறது; அதே சுற்றுவழியில் 1,000 $I_v$ இவ்வடிவைப் பெறுகிறது; 500 $II_v$உம் இவ்வடிவைப் பெறுகிறது—அதாவது மாறா-மூலதனமும் மாறும்-மூலதனமும் திரும்பவும் பண-மூலதன வடிவைப் பெறுகின்றன. (மாறும்-மூலதனமானது ஓரளவுக்கு நேரடியாகவும், ஓரளவுக்குச் சுற்றடியாகவும் இவ்வடிவினைப் பெறுகிறது.)

## XI. நிலை-மூலதனத்தின் மாற்றீடு

வருடாந்தர மறுவுற்பத்திக்கான பரிவர்த்தனைகளைப் பகுத்தாயும் போது வருவது ஒரு சிக்கலான பிரச்சினை. பிரச்சினையை எளிய வடிவத்தில் எடுத்துக் கொள்வோம்:

$$\text{I)}\ 4{,}000_c + 1{,}000_v + 1{,}000_s +$$
$$\text{II)}\ 2{,}000_c + 500_v + 500_s = 9{,}000.$$

முடிவில் இது பின்வருமாறு பகுபடுகிறது:

$$4{,}000\ I_c + 2{,}000\ II_c + 1{,}000\ I_v + 500\ II_v + 1{,}000\ I_s +$$
$$+ 500\ II_s = 6{,}000_c + 1{,}500_v + 1{,}500_s = 9{,}000.$$

மாறா-மூலதனத்தின் மதிப்பில் ஒரு பகுதி, கண்டிப்பான அர்த்தத்தில் (உற்பத்திச் சாதனங்களில் ஒரு தனிப் பிரிவு என்ற முறையில்) உழைப்புச் சாதனங்களாய் அமையும் பகுதி, உழைப்புச் சாதனங்களிலிருந்து உழைப்பின் உற்பத்திப் பொருளுக்கு (சரக்கிற்கு) பெயர்த்தளிக்கப்படுகிறது. இந்த உழைப்புச் சாதனங்கள் திறனுடை-மூலதனத்தின் கூறுகளாக, அவற்றின் பழைய தசையுருவிலேயே தொடர்ந்து செயல்படுகின்றன. இவற்றைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் மதிப்பில் ஒரு கூறாக மீண்டும் தோன்றுவது, உழைப்புச் சாதனத்திலிருந்து உழைப்பின் உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்தளிக்கப்படுவது, குறிப்பிட்ட காலத்திற்குத் தொடர்ச்சியாகச் செயல்படும் போது அவை சிறிது சிறிதாக அடைகிற தேய்மானமாகிய மதிப்பிறக்கம்தான். ஆகவே வருடாந்தர மறுவுற்பத்தியைப் பொறுத்த வரை, ஓராண்டுக்கு மேல்

நீடித்துழைக்கக் கூடிய நிலை-மூலதனக் கூறுகள் மட்டுமே பரிசீலனைக்குரியவையாகும். அந்த ஆண்டிற்குள் அறவே தேய்ந்தொழிந்து விடும் நிலை-மூலதனக் கூறுகளை வருடாந்தர மறுவுற்பத்தியைக் கொண்டு முழுமையாகப் புதுப்பித்து மாற்றீடு செய்தாக வேண்டும்; இம்மாதிரியான நிலை-மூலதனக் கூறுகள் இங்கே நாம் பரிசீலிக்கிற பிரச்சினையுடன் சம்பந்தப்படாதவை என்பதால் இவற்றை நாம் கவனிக்க வேண்டியதில்லை. நீடித்திருக்கக் கூடிய நிலை-மூலதன வடிவங்களான இயந்திரங்கள், கட்டடங்கள் போன்றவை முழுமையாகக் கருதுகையில் நீண்ட ஆயுள் படைத்தனவாய் இருப்பினும், அவற்றில் சில உறுப்புகளை ஓராண்டுக்குள்ளேயே அடியோடு மாற்றீடு செய்யும்படி நேரலாம், அடிக்கடி அப்படித்தான் நேர்கிறது. இந்த உறுப்புகள் ஓராண்டுக்குள் மாற்றீடு செய்ய வேண்டிய நிலை-மூலதனக் கூறுகளது இனத்தைச் சேர்ந்தனவாகி விடுகின்றன.

சரக்குகளின் மதிப்பில் ஒரு கூறாகிய இதனை மராமத்துச் செலவுகளோடு போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. சரக்கு விற்கப்படும் போது, மற்றெல்லா மதிப்புக் கூறுகளையும் போலவே இந்த மதிப்புக் கூறும் பணமாக மாற்றப்படுகிறது. ஆனால் அது பணமாக மாற்றப்பட்ட பிறகு, ஏனைய மதிப்புக் கூறுகளுக்கும் அதற்குமுள்ள வேறுபாடு வெளிப்படுகிறது. சரக்குகளின் மறுவுற்பத்தி தொடங்கும் பொருட்டு (அதாவது பொதுவாகச் சரக்குகளின் உற்பத்தி நிகழ்முறை தொடர்ச்சியாய் நடந்தேறும் பொருட்டு), சரக்குகளின் உற்பத்தியின் போது நுகரப்பட்ட கச்சாப் பொருட்களும் துணைப் பொருட்களும் பொருள் வகையில் மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டும். அவற்றுக்காகச் செலவிடப்பட்ட உழைப்புச் சக்தியும் புதிய உழைப்புச் சக்தியால் புதுப்பிக்கப்பட வேண்டும். ஆகவே சரக்குகளிலிருந்து பெறப்படும் பணத்தைத் தொடர்ச்சியாகத் திறனுடை-மூலதனத்தின் இந்தக் கூறுகளாக மாற்றிக் கொண்டிருக்க வேண்டும், அதாவது பண வடிவில் இருப்பதைச் சரக்கு வடிவுக்கு மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். கச்சாப் பொருட்களையும் துணைப் பொருட்களையும் குறிப்பிட்ட காலத்துக்கொரு முறை பெரிய அளவுகளில் வாங்கி திறனுடை இருப்பாக வைத்துக் கொள்வதானால், குறிப்பிட்ட காலத்துக்கு அவற்றைப் புதிதாக வாங்கத் தேவையில்லாமற் போகலாம், ஆயினும் இங்கு நாம் பரிசீலிக்கும் பிரச்சினை இதனால் மாறி விடப் போவதில்லை. இந்த இருப்பு நீடிக்கிற வரை, சரக்குகளை விற்று வரும் பணம், இந்தப் பொருட்களை வாங்குவதற்கு வேண்டிய அளவில், தனியே ஒதுக்கப் பெற்றுத் திரட்டப்பட்டு வரலாம். இவ்வாறு மாறா-மூலதனத்தின் இந்தப் பகுதி முனைப்பாகச் செயல்படாமல் நிறுத்தி வைக்கப்பட்ட பண-மூலதனமாகத் தற்காலிகமாய் இருந்து வருகிறது. இது பண வடிவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள

திறனுடை-மூலதனமாகுமே தவிர வருவாய்-மூலதனம் ஆகாது. உற்பத்திச் சாதனங்கள் மாற்றீடு செய்யப்படுகிற விதம்—சுற்றோட்டத்தைப் பொறுத்த வரை—மாறுபடலாமே தவிர, இந்த மாற்றீடு சர்வசதா காலமும் நடந்து கொண்டுதான் இருந்தாக வேண்டும். அவற்றைப் புதுப்பிப்பதற்கான அல்லது மாற்றீடு செய்வதற்கான சுற்றோட்டச் செயல்கள், அதாவது புதிதாகப் பொருட்களை வாங்கும் செயல்கள் நீண்ட கால இடைவெளி விட்டு நடைபெறலாம், இதற்காக ஒரு பெரும் தொகை ஒரேயடியாக முதலீடாகி இதற்கு இணையான திறனுடை இருப்பு இதனை ஈடு செய்யலாம். அல்லது குறுகிய கால இடைவெளி விட்டு பொருட்கள் வாங்கப்படலாம்—இப்போது முன்னிலும் சிறிய தொகைகள் முன்னிலும் அடிக்கடி செலவிடப்பட்டு சிறு சிறு திறனுடை இருப்புகள் வரப்பெறுகின்றன. இவற்றால் எல்லாம் நம் முன்னுள்ள பிரச்சினை மாறிவிடாது. மேலே கூறியவை யாவும் உழைப்புச் சக்திக்கும் பொருந்துகிறவையே. உற்பத்தியானது ஆண்டு முழுவதும் தொடர்ந்து ஒரே அளவுவீதத்தில் நடத்தப்படுமானால் நுகரப்படுகிற உழைப்புச் சக்தியைப் புதிய உழைப்புச் சக்தி தொடர்ச்சியாக மாற்றீடு செய்கிறது. வேளாண்மையில் நடைபெறுவது போல் பருவ கால அடிப்படையில் வேலை நடைபெறுமானால், அல்லது உழைப்பானது வெவ்வேறு அளவுகளில் வெவ்வேறு காலங்களில் ஈடுபடுத்தப்படுமானால், அதற்கேற்ப ஒரு நேரத்தில் சிறிய அளவிலும் ஒரு நேரத்தில் பெரிய அளவிலும் உழைப்புச் சக்தி வாங்கப்படுகிறது. ஆனால் சரக்குகளை விற்று வரும் பணத்தில் நிலை-மூலதனத்தின் தேய்மானத்திற்குச் சமமான சரக்கு-மதிப்பைக் குறிக்கும் பகுதியானது, திறனுடை-மூலதனத்தில் எந்த அடக்கக் கூறின் மதிப்பிறக்கத்தை அது சரிசெய்கிறதோ அந்தக் கூறாக உடனே திரும்பவும் மாற்றப்படுவதில்லை. அது திறனுடை-மூலதனத்தின் பக்கத்தில் வந்து தங்கி, தொடர்ந்து பண வடிவிலேயே இருந்து வருகிறது. மாறா-மூலதனத்தின் நிலையான கூறு அதன் பழைய தசையுருவிலேயே தொடர்ந்து உற்பத்தி நிகழ்முறையில் செயல்படுகிற சில அல்லது பல ஆண்டுகள் அடங்கிய மறுவுற்பத்திக் காலம் முடிவடையும் வரை இப்படிப் பணப் படிவாக [precipitation of money] வந்து தங்கும் இந்த நிகழ்வு திரும்பத் திரும்ப நடைபெறுகிறது. கட்டடங்கள், இயந்திரங்கள் போன்ற நிலை-மூலதனக் கூறு மேலும் மேலும் தேய்மானத்துக்கு உள்ளாகி, இனி உற்பத்தி நிகழ்முறையில் செயல்பட முடியாத நிலையை வந்தடைகிறது; அதற்குள் அதன் முழு மதிப்பும் பணமாக மாற்றீடு செய்யப்பட்டு விடுகிறது. நிலை-மூலதனத்தின் துணைகொண்டு உற்பத்தி செய்யப்படும் சரக்குகளுக்கு சிறிது சிறிதாக அந்நிலை-மூலதனத்தின் மதிப்பு பெயர்க்கப்படுகிறது. பிறகு இந்தச் சரக்குகள் விற்கப்படும் போது இம்மதிப்பு பணமாக மாறி, பணப் படிவுகளாக வந்து திரளுகிறது. இப்படித் திரளுகிற பணம்

நிலை-மூலதனத்தை (அதன் கூறுகளை என்றே சொல்ல வேண்டும், ஏனெனில் நிலை-மூலதனத்தின் வெவ்வேறு கூறுகளும் வெவ்வேறு ஆயுட் காலமுடையவை) பண்ட வகையில் மாற்றீடு செய்வதற்கும், இவ்வாறு திறனுடை-மூலதனத்தின் இந்த அடக்கக் கூறினைப் புதுப்பிப்பதற்கும் பயன்படுகிறது. ஆகவே இந்தப் பணம் மாறா-மூலதன மதிப்பில் ஒரு பகுதியின், அதாவது நிலை-மூலதன மதிப்பாகிய பகுதியின் பண வடிவமாகிறது. இவ்விதம் இந்தப் பணச் சேர்ப்பே முதலாளித்துவ மறுவுற்பத்தி நிகழ்முறையைச் சேர்ந்த ஒரு கூறாகிறது. நிலை-மூலதனத்தின் அல்லது அதன் பற்பல கூறுகளின் மதிப்பானது பண வடிவில் மறுவுற்பத்தி செய்யப்பட்டுச் சேமித்து வைக்கப்படுவதை இந்தப் பணச் சேர்ப்பு குறிக்கிறது. நிலை-மூலதனம் தேய்ந்து உயிரற்றதாகி, இதன் விளைவாய் இதன் முழு மதிப்பும் உற்பத்திச் சரக்குகளுக்குப் பெயர்க்கப்பட்டு விடும் நிலை வருகிற வரை, பண்ட வகையில் அது மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டிய நிலை வருகிற வரை, இந்தப் பணச் சேர்ப்பு தொடர்ந்து நடைபெறுகிறது. இந்தப் பணம் இப்பொழுது நிலை-மூலதனத்தின் உயிரற்ற கூறுகளை மாற்றீடு செய்யும் புதிய கூறுகளாக மாற்றப் படுகையில் பணச் சேர்ப்பின் வடிவை இழந்து, சுற்றோட்டத்தின் வாயிலாக நடைபெறுகிற மூலதன மறுவுற்பத்தி நிகழ்முறையில் தனக்குரிய செயற்பாட்டைத் திரும்பவும் தொடங்குகிறது.

சாமானியச் சரக்குச் சுற்றோட்டமானது எப்படி எவ்விதத்திலும் வெறும் பண்டப் பரிவர்த்தனை ஆவதில்லையோ, அதே போல் வருடாந்தர சரக்கு-உற்பத்தியின் உருமாற்றமும் அதன் பல்வேறு கூறுகளிடையே நேரடியாக நிகழ்கிற வெறும் பரிவர்த்தனையாக எவ்விதத்திலும் பகுபட்டு விடவில்லை. பணம் இதில் ஒரு பிரத்தியேகப் பங்கு ஆற்றுகிறது; முக்கியமாய் நிலை-மூலதனத்தின் மதிப்பு எவ்விதம் மறுவுற்பத்தியாகிறது என்பதில் இது வெளிப்படுகிறது. (உற்பத்தியானது சரக்கு உற்பத்தி வடிவில் இல்லாமல் கூட்டுத்துவத் தன்மையதாய் இருக்குமாயின் நிலைமை எப்படி முற்றிலும் வேறு விதமாய் இருக்கும் என்பதைப் பிற்பாடு ஆராய்வோம்.)

இப்போது நமது அடிப்படைக் குறிவரைக்குத் திரும்பி வருவோமானால், துறை IIக்கு உரியது வருமாறு: $2,000_c + 500_v + 500_s$. ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் நுகர்வுப் பண்டங்கள் யாவற்றின் மொத்த மதிப்பு 3,000 ஆகும். இந்த மொத்தச் சரக்கு வெவ்வேறு சரக்குக் கூறுகளால் ஆனது. ஒவ்வொரு கூறும் அதன் மதிப்பைப் பொறுத்த வரை, பின்வருமாறு பிரிபடுகிறது: $\frac{2}{3}_c + \frac{1}{6}_v + \frac{1}{6}_s$; சதவீதமாகப் பிரித்தால் கிடைப்பது: $66\frac{2}{3}_c +$ $+ 16\frac{2}{3}_v + 16\frac{2}{3}_s$. துறை IIஐச் சேர்ந்த பல்வேறு வகைச் சரக்குகளிலும் மாறா-மூலதனக் கூறு வெவ்வேறு விகிதங்களில் இருக்கலாம். மாறா-மூலதனத்தின் பகுதியாகிய நிலை-மூலதனமும் இதே போல் வெவ்வேறாக இருக்கலாம். நிலை-மூலதனப் பகுதிகளின்

ஆயுளும், எனவே அவற்றின் வருடாந்தரத் தேய்மானம், அல்லது அவற்றைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகிற மதிப்புப் பகுதியின் விகிதாசாரமும் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் இவை எல்லாம் இங்கே நம் கவனத்துக்குரியவை அல்ல. சமுதாய மறு வுற்பத்தி நிகழ்முறையைப் பொறுத்த வரை, நம் கவனத்துக்கு உரியதாய் இருப்பது துறைகள் IIக்கும் Iக்கும் இடையே நடை பெறும் பரிவர்த்தனைதான். இந்த இரு துறைகளும் இங்கே ஒன்றை யொன்று எதிர்நோக்குவது அவற்றின் ஒட்டுமொத்த சமுதாய உறவு களில்தான். ஆகவே, துறை IIஇன் சரக்கு-உற்பத்தியின் மதிப்பில் பகுதி cக்கு உள்ள விகிதாசாரப் பருமனானது (இப்போது நாம் பரிசீலிக்கும் பிரச்சினையில் இந்தப் பருமன் மட்டுமே நம் கவனத் துக்கு உரியதாகும்) துறை IIஐச் சேர்ந்த எல்லாப் பொருளுற்பத்திக் கிளைகளுக்குமான சராசரியைக் குறிப்பதாகி விடுகிறது.

ஆகவே, $2,000_c + 500_v + 500_s$ என்று வகைப்படுத்தப்படும் மொத்த மதிப்பையுடைய ஒவ்வொரு வகைச் சரக்கும் (ஒவ்வொரு வகையும் பெரும்பாலும் ஒத்த வகைச் சரக்குகளைக் கொண்டது) மதிப்பில் $66\frac{2}{3}\%_c + 16\frac{2}{3}\%_v + 16\frac{2}{3}\%_s$ என்பதற்குச் சமமாகும். c, v, s இவற்றில் எதுவாக வகைப்படுத்தப்பட்டாலும், ஒவ்வொரு 100 சரக்குக்கும் இது பொருந்தும்.

$2,000_c$ என்பதன் உருவாய் அமையும் சரக்குகளை, அவற்றின் மதிப்பைப் பொறுத்த வரை, பின்வருமாறு பிரிக்கலாம்:

1) $1,333\frac{1}{3}{}_c + 333\frac{1}{3}{}_v + 333\frac{1}{3}{}_s = 2,000_c$;

இதே போல் $500_v$ என்பதைப் பின்வருமாறு பிரிக்கலாம்:

2) $333\frac{1}{3}{}_c + 83\frac{1}{3}{}_v + 83\frac{1}{3}{}_s = 500_v$;

கடைசியாக, $500_s$ என்பதைப் பின்வருமாறு பிரிக்கலாம்:

3) $333\frac{1}{3}{}_c + 83\frac{1}{3}{}_v + 83\frac{1}{3}{}_s = 500_s$.

இப்போது 1), 2), 3) ஆகியவற்றில் c ஆக வருவதையெல் லாம் கூட்டினால் கிடைப்பது: $1,333\frac{1}{3}{}_c + 333\frac{1}{3}{}_c + 333\frac{1}{3}{}_c = 2,000$. மேலும் $333\frac{1}{3}{}_v + 83\frac{1}{3}{}_v + 83\frac{1}{3}{}_v = 500$. s ஆக வரு வதையெல்லாம் கூட்டினால் இதே போல் 500 கிடைக்கிறது. மூன்று கூட்டுத் தொகைகளையும் கூட்டினால் கிடைப்பது மேலே குறிப்பிட்ட வருடாந்தர உற்பத்தியின் மொத்த மதிப்பாகிய 3,000தான்.

ஆகவே, 3,000 என்னும் மதிப்பைக் குறிக்கிற துறை IIஇன் சரக்குத் திரளில் இருக்கிற மாறா-மூலதன மதிப்பு முழுதுமே $2000_c$இல் அடங்கி விடுகிறது, $500_v$ அல்லது $500_s$இல் மாறா-மூலதன மதிப்பு துளிக் கூட இல்லை. v குறித்தும், s குறித்தும் கூட இதுவேதான் உண்மை.

வேறு விதமாகச் சொன்னால், துறை IIஇன் சரக்குத் திரளில் மாறா-மூலதன மதிப்பைக் குறிக்கிற பகுதி முழுதுமே, எனவே

மாறா-மூலதனத்தின் தசையுருவுக்கோ பண வடிவத்துக்கோ திரும்ப மாற்றப்படக் கூடியதான இப்பகுதி முழுதுமே $2,000_c$இல் அடங்குவதாகும். ஆகவே துறை IIஇன் உற்பத்திச் சரக்குகளுடைய மாறா-மதிப்பின் பரிவர்த்தனை தொடர்பான ஒவ்வொன்றும் $2,000$ $II_c$இன் இயக்க எல்லைக்குள் அடங்குவதாகும். இந்தப் பரிவர்த்தனை I $(1,000_v+1,000_s)$ என்பதோடு மட்டும்தான் நடைபெற முடியும்.

இதே போல், துறை Iஐப் பொறுத்த வரை, மாறா-மூலதன மதிப்பின் பரிவர்த்தனை தொடர்பான ஒவ்வொன்றும் $4,000$ $I_c$ பற்றிய பரிசீலனையின் எல்லைக்குள் அடங்குவதாய் இருந்தாக வேண்டும்.

### 1. தேய்மானத்தைக் குறிக்கும் மதிப்புப் பகுதியானது பண வடிவில் மாற்றீடு செய்யப்படுதல்

இரு துறைகளின் சரக்கு-உற்பத்திகளை எடுத்துக் கொண்டு தொடங்குவோம்:

I. $4,000_c + \underbrace{1,000_v + 1,000_s}$

II. . . . . . . . . . . . . . $2,000_c + 500_v + 500_s$

$2,000$ $II_c$ ஆகிய சரக்குகள் அதே மதிப்புள்ள சரக்குகளான I $(1,000_v+1,000_s)$ என்பதற்குப் பரிவர்த்தனையாவதாகச் சொல்கிறோம், $2,000$ $II_c$ முழுவதுமே துறை Iஆல் உற்பத்தி செய்யப்படுகிற துறை IIஇன் மாறா-மூலதனத் தசையுருவக் கூறுகளாகத் திரும்பவும் மாற்றமடைகின்றன என்பதே இதன் அர்த்தம். ஆனால் இந்த மாறா-மூலதன மதிப்பைக் கொண்டுள்ள சரக்கு-மதிப்பாகிய $2,000$இல் நிலை-மூலதன மதிப்புத் தேய்மானத்தை ஈடு செய்கிற கூறு ஒன்றும் அடங்கியுள்ளது. தேய்மானத்துக்கு உள்ளாகும் நிலை-மூலதனம் உடனே பண்ட வடிவில் மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டியதில்லை. இந்தக் கூறு பணமாக மாறி, சிறுகச் சிறுகத் திரட்சியடைகிறது; (நிலை-மூலதனத்தைத் தசையுருவில் புத்தாக்கம் செய்வதற்கான காலம் வரும் வரை இது நடைபெற்று மொத்தத் தொகை வரப் பெறுகிறது. ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தொழிலிலோ, தொழிற் கிளையிலோ நிலை-மூலதனம் உயிரற்றதாகி மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டிய நிலையை வந்தடைகிறது. நிலை-மூலதனத்தின் வெவ்வேறு பகுதிகளும் வெவ்வேறு ஆயுட் காலம் பெற்றிருப்பதால், தனிப்பட்ட ஒரு மூலதனத்தை எடுத்துக் கொள்வோமாயின் ஒவ்வோர் ஆண்டிலும் அதன் நிலை-மூலதனத்தில் ஏதேனும் ஒரு பகுதியை மாற்றீடு செய்தாக வேண்டியிருக்கிறது. நாம் ஆராய்கிற வருடாந்தர மறுவுற்பத்தி சாமானிய மறுவுற்பத்தியே என்றாலும், அதாவது மூலதனத் திரட்டலே நடைபெறவில்லை

என்றாலும், அதன் ஆதியிலிருந்தே தொடங்கி ஆராயவில்லை. நாம் ஆராய்கிற ஆண்டு கழிந்துள்ள பலவற்றில் ஒன்றுதானே தவிர, முதலாளித்துவப் பொருளுற்பத்தி ஆரம்பமாகிற முதலாவது ஆண்டு அல்ல. ஆகவே துறை IIஐச் சேர்ந்த மிகப் பலவாறான உற்பத்திக் கிளைகளிலும் முதலீடாகியுள்ள பல்வேறு மூலதனங் களும் வெவ்வேறு வயதானவை. இந்த உற்பத்திக் கிளைகளில் செயலாற்றுவோரில் ஒவ்வோர் ஆண்டிலும் எப்படிப் பலரும் மரணமடைய நேர்கிறதோ, அதே போல நிலை-மூலதனங்கள் மிகப் பலவும் காலாவதியாகின்றன. திரட்டப்பட்டிருக்கும் பண-நிதி களைக் கொண்டு பண்ட வகையில் இவற்றை மாற்றீடு செய்து புதுப்பித்தாக வேண்டும். ஆகவே 2,000 $II_c$ ஆனது 2,000 $I_{(v+s)}$க்குப் பரிவர்த்தனையாவதில் சரக்கு வடிவில் உள்ள (நுகர்வுப் பண்டங்களாக இருக்கிற) 2,000 $II_c$ இத்துறையினது மாறா-மூல தனத்தின் இயற்கையான கூறுகளாக மாற்றப்படுதலும் அடங்கு கிறது. இந்த இயற்கையான கூறுகள் கச்சாப் பொருட்களும் துணைப் பொருட்களுமாக மட்டுமல்லாமல், நிலை-மூலதனத்தின் இயற்கையான கூறுகளாகிய இயந்திரங்கள், கருவிகள், கட்டடங்கள் போன்ற பலவுமாக இருப்பவை. நிலை-மூலதனத்தில் ஒரு பகுதி மட்டுமே ஒவ்வோர் ஆண்டும் பண்ட வகையில் மாற்றீடு செய்யப் பட வேண்டியிருப்பதால், 2,000 $II_c$ என்ற மதிப்பில் பணமாக மாற்றீடு செய்யப்பட வேண்டிய தேய்மானமானது செயல்படுகிற நிலை-மூலதனப் பருமனுக்கு எவ்விதத்திலும் ஒத்ததாயிருக்க வேண் டியதில்லை. இந்த மாற்றீட்டுக்கு வேண்டிய பணம் நடப்பு ஆண் டுக்கு முந்தைய ஆண்டுகளிலேயே துறை IIஇன் முதலாளிகளால் திரட்டி வைக்கப்பட்டிருப்பதாகும். ஆனால் இப்படி முன்கூட்டியே திரட்ட வேண்டியது முந்தைய ஆண்டுகளில் எப்படி அவசியமாய் இருந்ததோ, அதே போல நடப்பு ஆண்டிலும் அதே அளவுக்கு அவசியமாகி விடுகிறது.

I $(1,000_v+1,000_s)$ என்பதற்கும் 2,000 $II_c$க்கும் இடையி லான பரிவர்த்தனையில் யாவற்றுக்கும் முதலாய் நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால்: இரு மதிப்புகளின் கூட்டுத் தொகை யான $I_{(v+s)}$ என்பதில் மாறா-மதிப்புக் கூறு ஏதும் இல்லை; ஆகவே தேய்மானத்தை மாற்றீடு செய்வதற்கு வேண்டிய மதிப்புக் கூறு ஏதும் இல்லை — அதாவது மாறா-மூலதனத்தின் நிலையான அடக்கக் கூறிலிருந்து v+s மதிப்புத் தொகைக்கான தசையுருவாய் இருக்கிற சரக்குகளுக்குப் பெயர்க்கப்பட்டிருக்கும் மதிப்புக் கூறு ஏதும் இல்லை. மாறாக $II_c$இல்தான் இந்த மதிப்புக் கூறு இருந்து வரு கிறது. நிலை-மூலதனத்திலிருந்து பெயர்க்கப்பட்டு $II_c$இன் ஒரு பகுதியாய் இருக்கும் இந்த மதிப்புக் கூறு உடனடியாகப் பண வடிவத்திலிருந்து அதன் தசையுருவுக்கு மாற்றப்படாமல் தொடர்ந்து பண வடிவிலேயே சிறிது காலத்துக்கு நீடித்தாக வேண்டியதாய்

இருப்பது. ஆக I $(1,000_v+1,000_s)$ என்பதற்கும் 2,000 $II_c$ என்பதற்கும் இடையிலான பரிவர்த்தனையில் உடனடியாகவே எழும் சிக்கல் என்னவெனில்: துறை I உற்பத்தி செய்கிற உற்பத்திச் சாதனங்களின் தசையுருவில் இருக்கிற $2,000_{(v+s)}$ஐ அவற்றின் முழு மதிப்பாகிய 2,000க்கு துறை II உற்பத்தி செய்கிற நுகர்வுப் பண்டங்களாலான சமதைக்குப் பரிவர்த்தனை செய்தாக வேண்டும்; ஆனால் மறு புறத்தில் நுகர்வுப் பண்டங்களாகிய 2,000 $II_c$ஐ அவற்றின் முழு மதிப்புக்கு உற்பத்திச் சாதனங்களாகிய I $(1,000_v+ +1,000_s)$க்குப் பரிவர்த்தனை செய்ய முடியவில்லை, ஏனெனில் அவற்றின் மதிப்பில் ஓர் ஈவுப் பகுதியை—மாற்றீடு செய்ய வேண்டிய தேய்மானம் அல்லது நிலை-மூலதன மதிப்புத் தேய்வுக்குச் சமமான பகுதியை—இங்கு நாம் பரிசீலிக்கும் வருடாந்தர மறுவுற்பத்திக் காலத்தின் போது இதற்கு மேல் சுற்றோட்ட ஊடகமாகச் செயல்படாத பணப் படிவாகத் தங்கும் படிச் செய்தாக வேண்டும். ஆனால் சரக்கு-மதிப்பான 2,000 $II_c$இல் சேர்க்கப்பட்டிருக்கும் இந்தத் தேய்மானக் கூறுக்கான பணம் துறை Iஇலிருந்துதான் வர முடியும், ஏனென்றால் துறை II தனது சரக்குகளை விற்றாலன்றி பணம் செலுத்த முடியாது, ஆனால் $I_{(v+s)}$ ஆனது 2,000 $II_c$ஐச் சேர்ந்த சரக்குகள் அனைத்தையுமே விலைக்கு வாங்கிக் கொண்டு விடுகிறது. ஆகவே துறை I இப்படி வாங்கிக் கொள்வதன் மூலம் இந்தத் தேய்மானத்தைத் துறை IIக்குப் பணமாக மாற்றியாக வேண்டும். ஆனால் முன்பு நாம் கண்டறிந்து கொண்ட விதியின் படி, சுற்றோட்டத்துக்கு முன்னீடு செய்யப்படும் பணம் முதலாளித்துவ உற்பத்தியாளரிடமே திரும்பி வருகிறது, இதற்குச் சமமான சரக்குகளை அவர் சுற்றோட்டத்துள் செலுத்துகிறார். துறை I ஆனது $II_c$ஐ விலைக்கு வாங்கும் போது, துறை IIக்கு 2,000 பெறுமானமுள்ள சரக்குகளைத் தந்து அதோடு கூட உபரியாகப் பணமும் தருவது (பரிவர்த்தனையின் வாயிலாக அந்த உபரி தனக்குத் திரும்பி வர வழியில்லாமலே தருவது) முடியாத காரியம். அப்படித் தந்தால் $II_c$ சரக்குகளை அவற்றின் மதிப்புக்கும் கூடுதலான விலை கொடுத்து துறை I வாங்குகிறது என்றாகி விடும். துறை II ஆனது அதன் $2,000_c$ஐ I $(1,000_v+1,000_s)$ என்பதற்குப் பரிவர்த்தனை செய்து கொள்ளுமாயின், அது துறை Iஇடமிருந்து அதற்கு மேல் ஒன்றும் கேட்க முடியாது. இந்தப் பரிவர்த்தனையின் போது சுற்றியோடும் பணம் இவ்விரு துறைகளில் எது இப்பணத்தை சுற்றோட்டத்துள் செலுத்தியது, அதாவது எது முதலில் வாங்குகிறவராகச் செயல்பட்டது என்பதற்கு ஏற்ப, துறை I இடமோ துறை II இடமோ திரும்பி வருகிறது. அதே போது துறை II அதன் சரக்கு-மூலதனத்தின் முழு மதிப்பையும் உற்பத்திச் சாதனங்களின் தசையுருவுக்குத் திரும்பவும் மாற்றிக் கொண்டிருக்கும். ஆனால் துறை II தனது சரக்கு-மூலதனத்தை விற்றுப் பணமாக்கிக் கொண்ட

பின், அதன் ஓர் ஈவுப் பகுதியை நடப்பு ஆண்டின் மறுவுற்பத்திக் காலத்தில் மாறா-மூலதனத்தின் நிலைக் கூறுகளது தசையுருவுக்குத் திரும்பவும் மாற்றிக் கொள்வதில்லை என்பதே நமது அனுமானம். துறை II ஆனது துறை Iஇடம் 2,000 பெறுமானமுள்ளதை விற்று, 2,000க்கும் குறைவான பெறுமானமுள்ளதை, உதாரணமாக 1,800 பெறுமானமுள்ளதை அதனிடமிருந்து வாங்கினால் தான், துறை IIக்குச் சாதகமான ஒரு பண நிலுவை உருவாக முடியும். அப்போது துறை I ஆனது பணமாக 200ஐ வரவு வைத்துத் தனது பற்று நிலுவையை சரிக்கட்ட வேண்டியிருக்கும். ஆகவே துறை I 200 பெறுமானமுள்ள சரக்குகளைச் செலுத்தி, சுற்றோட்டத்துக்கு முன்னீடு செய்யும் பணம் அதனிடம் திரும்பி வராது. அதற்கு பதில் அந்தப் பணம் துறை IIஇன் நிலை-மூலதனத்தினுடைய தேய்மானக் கணக்கில் வரவாகிறது. இவ்விதம் துறை IIஇன் பண-நிதி ஒன்று திரளுகிறது. ஆனால் அதே போது மறு புறத்தில், துறை Iஇல் 200 பெறுமானத்துக்கு உற்பத்திச் சாதனங்கள் மிகையுற்பத்தி [overproduction] ஆகக் காண்கிறோம். இதனால் நமது குறிவரையின் அடிப்படையே தகர்ந்து போகிறது. அதாவது வெவ்வேறு உற்பத்தித் துறைகளுக்கும் இடையே முழுநிறை விகித ஒழுங்கு நிலவுவதாகவும் மாறாத ஓரே அளவுவீதத்தில் மறுவுற்பத்தி நடைபெறுவதாகவும் அனுமானித்துக் கொண்டோமே, அந்த அடிப்படையே தகர்ந்து போகிறது. ஒரு சிக்கலுக்குத் தீர்வு காண்பதன் மூலம் அதனிலும் மோசமான இன்னொரு சிக்கலுக்கு வழிகோலி விடுகிறோம்.

இந்த பிரச்சினை தனி விதமான சிக்கல்களை உண்டாக்குவதாலும், அரசியல் பொருளாதார அறிஞர்களால் இதுகாறும் ஆராயப்படாத பிரச்சினையாக இது இருந்து வருவதாலும், இப்பிரச்சினைக்கு சாத்தியமான எல்லாத் தீர்வுகளையும் (சாத்தியமான தீர்வுகளாய்த் தோன்றுகிறவற்றையேனும்), இல்லையேல் இப்பிரச்சினையைப் பற்றிய வரையறுப்புகள் யாவற்றையும் ஒவ்வொன்றாக எடுத்து ஆராய்வோம்.

முதலாவதாக, துறை II ஆனது 2,000 பெறுமானமுள்ள சரக்குகளை துறை I இடம் விற்பதாகவும், ஆனால் அதனிடமிருந்து 1,800 பெறுமானமுள்ளதை மட்டுமே வாங்குவதாகவும் மேலே நாம் அனுமானித்துக் கொண்டோம். சரக்கு-மதிப்பான 2,000 $II_c$இல் தேய்மானத்துக்கான மாற்றீடாக 200 அடங்கியுள்ளது. இந்த 200ஐப் பணமாகச் சேமித்து வைக்க வேண்டும். இவ்வாறு 2,000 $II_c$ ஆகிய மதிப்பானது துறை Iஇன் உற்பத்திச் சாதனங்களுக்குப் பரிவர்த்தனையாக வேண்டிய 1,800 ஆகவும், தேய்மானத்தை மாற்றீடு செய்வதற்கான 200 ஆகவும் பிரிக்கப்படுகிறது. $2,000_c$ ஆனது துறை I இடம் விற்கப்பட்ட பின், இந்த 200 பணமாக வைத்துக் கொள்ளப்படுகிறது. மதிப்பாகக் கருதுகையில்,

2,000 $II_c = 1,800_c + 200_c$(d) — இங்கே d என்னும் எழுத்து dechet* என்னும் சொல்லைக் குறிக்கிறது.

நாம் ஆராய வேண்டிய பரிவர்த்தனை வருமாறு:

$$\text{I.}\quad \underbrace{1,000_v + 1,000_s}$$

$$\text{II.}\quad 1,800_c + 200_c\text{(d)}.$$

துறை I ஆனது, அதன் தொழிலாளர்களுக்கு அவர்களது உழைப்புச் சக்திக்கான கூலியாகக் கிடைக்கும் £1,000 ஐக் கொண்டு, துறை IIஇடமிருந்து 1,000 $II_c$ பெறுமானமுள்ள நுகர்வுப் பண்டங்களை வாங்குகிறது. துறை II ஆனது இந்த £1,000 ஐக் கொண்டு துறை Iஇடமிருந்து 1,000 $I_v$ பெறுமானமுள்ள உற்பத்திச் சாதனங்களை வாங்குகிறது. துறை Iஇன் முதலாளிகள் இவ்வாறு தமது மாறும்-மூலதனத்தைப் பண வடிவில் மீட்டுக் கொள்கின்றனர்; அவர்கள் இந்தப் பணத்தைக் கொண்டு அடுத்த ஆண்டும் இதே அளவு உழைப்புச் சக்தியை வாங்க முடியும்; அதாவது தமது திறனுடை-மூலதனத்தின் மாறும் பகுதியைச் சரக்கு வகையில் மாற்றீடு செய்து கொள்ள முடியும்.

மேலும், துறை II ஆனது £400 ஐ முன்னீடு செய்து உற்பத்திச் சாதனங்களாகிய $I_s$ஐ வாங்குகிறது. துறை I ஆனது இந்த £400 ஐக் கொண்டு நுகர்வுப் பண்டங்களாகிய $II_c$ஐ வாங்குகிறது. துறை IIஇன் முதலாளிகள் சுற்றோட்டத்துக்கு முன்னீடு செய்த £400 இவ்வாறு அவர்களிடம் திரும்புகிறது; ஆனால் விற்கப்பட்ட சரக்குகளுக்கான சமதையாகவே திரும்புகிறது. துறை I ஆனது இப்போது £400 முன்னீடு செய்து நுகர்வுப் பண்டங்கள் வாங்குகிறது; துறை II துறை Iஇலிருந்து £400 பெறுமானமுள்ள உற்பத்திச் சாதனங்கள் வாங்குகிறது. இதனால் இந்த £400 துறை Iஇடம் திரும்புகிறது. ஆக இது வரையிலான கணக்கு வருமாறு:

துறை I ஆனது சரக்குகளாக $1,000_v + 800_s$ மதிப்பைச் சுற்றோட்டத்துள் செலுத்துகிறது; அதோடு பணமாக £1,000ஐக் கூலியாகவும் துறை II உடனான பரிவர்த்தனைக்காக £400உம் சுற்றோட்டத்துள் செலுத்துகிறது. பரிவர்த்தனை முடிந்த பிறகு, துறை I ஆனது பணமாக $1,000_v$உம், நுகர்வுப் பண்டங்களாகிய 800 $II_c$க்கான பரிவர்த்தனையாக $800_s$உம் பணமாக £400உம் வைத்திருக்கிறது.

துறை II ஆனது சரக்குகளாக (நுகர்வுப் பண்டங்கள்) $1,800_c$ ஐயும் பணமாக £400 ஐயும் சுற்றோட்டத்துள் செலுத்துகிறது. பரிவர்த்தனை முற்றுப் பெறும் போது, துறை Iஇன் சரக்குகளாக 1,800உம், பணமாக £400உம் அதனிடம் உள்ளன.

இப்போது, துறை I இடம் உற்பத்திச் சாதனங்களாக $200_s$உம், துறை II இடம் நுகர்வுப் பண்டங்களாக $200_c$(d)உம் எஞ்சியுள்ளன.

* Dechet என்பது தேய்மானத்தைக் குறிக்கும் ஜெர்மன் சொல். — பதிப்பாசிரியர்.

நமது அனுமானத்தின் படி, துறை I ஆனது £200ஐக் கொண்டு 200 மதிப்புள்ள நுகர்வுப் பண்டங்களான c(d)ஐ வாங்குகிறது. ஆனால் துறை II இப்படி வந்து சேரும் £200ஐ விடாமல் வைத்துக் கொள்கிறது; ஏனென்னில், $200_c$(d) ஆனது தேய்மானத்தைக் குறிப்பதாகும், இதனை உடனே திரும்பவும் உற்பத்திச் சாதனங்களாக மாற்ற வேண்டியதில்லை. ஆகவே, 200 $I_s$ஐ துறை Iஆல் விற்க முடியவில்லை. மாற்றீடு செய்யப்பட வேண்டிய துறை Iஇன் உபரி-மதிப்பில் ஐந்திலொரு பங்கை ஈடேற்றம் செய்ய முடியவில்லை, அதாவது உற்பத்திச் சாதனங்களான அதன் தசையுருவிலிருந்து நுகர்வுப் பண்டங்களாக உருமாற்ற முடியவில்லை.

இது சாமானிய மறுவுற்பத்தி என்ற நமது அனுமானத்துடன் முரண்படுவதாகும் என்பதோடு, $200_c$(d) ஆனது பணமாக மாற்றமடைவதற்குத் தன்னளவில் விளக்கமாக அமையக் கூடிய கருதுகோளாகவும் இல்லை, விளங்காத புதிர் என்றே அதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. $200_c$(d) என்பதை எவ்வழியில் பணமாக மாற்ற முடியும் என்று விளக்க முடியாததால், துறை I ஆனது தன்னிடம் எஞ்சியிருக்கும் $200_s$ என்பதைப் பணமாக்க முடியாத நிலையில் இருப்பதால், அது மேற்கூறிய மாற்றத்தை செய்து உதவுவதாக அனுமானித்துக் கொள்ள வேண்டியதாகிறது. இதனை இயல்பான பரிவர்த்தனைச் செயலாகக் கொள்வதானது, $200_c$ (d) என்பதை அந்தந்த ஆண்டிலும் பணமாக மாற்றும் பொருட்டு ஒவ்வோர் ஆண்டும் பொன்மாரியாக £200 விண்ணிலிருந்து பொழிவதாகக் கொள்வதற்கு ஒப்பானதே அன்றி வேறல்ல.

ஆனால் இங்கே இருப்பது போல் $I_s$ ஆனது அதன் ஆரம்ப நிலவல் வடிவில் இல்லாமல்—அதாவது உற்பத்திச் சாதனங்களது மதிப்பின் ஓர் அடக்கக் கூறாக, முதலாளித்துவ சரக்கு உற்பத்தியாளர்கள் விற்றுப் பணமாக மாற்ற வேண்டிய சரக்குகளின் மதிப்பில் ஓர் அடக்கக் கூறாக இல்லாமல்—முதலாளியின் பங்காளிகளது கையில், எடுத்துக்காட்டாக நிலவுடைமையாளர்களின் கையில் நில-வாடகையாகவோ வட்டிக்காரர்களின் கையில் வட்டியாகவோ இருக்குமானால், மேற்கூறிய கருதுகோள் அவ்வளவு அபத்தமானதாக உடனடியாகவே தெரிவதில்லை. என்றாலும் சரக்குகளாய் இருக்கும் உபரி-மதிப்பில் தொழில் துறை முதலாளி உபரி-மதிப்பின் ஏனைய சக்வுடைமையாளர்களுக்குத் தர வேண்டிய பகுதியை சரக்குகளது விற்பனையின் மூலம் ஈடேற்றம் செய்ய முடியாத நிலை நீண்ட காலத்துக்கு நீடித்தால், வாடகையும் வட்டியும் செலுத்துவது தடைபட்டு விடுவதால், நிலவுடைமையாளர்களோ வட்டிக்காரர்களோ வாடகையையும் வட்டியையும் செலவிட்டு வருடாந்தர மறுவுற்பத்தியின் குறிப்பிட்ட பகுதிகளை வேண்டும் போது பணமாக்குவதற்கான பிரம்மாஸ்திரமாகப் பயன்பட முடியாது. திறனிலாத் தொழிலாளர்கள் எனப்படுவோரான அரசு அலுவலர்கள்,

மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் முதலான பலரும் ''பொதுஜனப்'' பிரமுகர்களாகி, அரசியல் பொருளாதார அறிஞர்கள் விளக்காமல் விட்டதை விளக்குவோராகச் ''சேவை'' புரிவோர் செய்திடும் செலவுகளும் பயன்பட மாட்டா.

முதலாளித்துவ உற்பத்தியாளர்களின் இரு பெரும் துறைகளான துறை Iக்கும் துறை IIக்கும் இடையே நேரடிப் பரிவர்த்தனை நடப்பதற்கு பதில் இடையாளாக வியாபாரி கொண்டுவரப்பட்டு, அவர் தமது ''பணத்தைக்'' கொண்டு சிக்கல்களை சரிசெய்ய உதவுவதாகக் கொண்டாலும் கூட நிலைமை மேம்படுவதாக இல்லை. எடுத்துக் காட்டாக, நமது உதாரணத்தில் 200 $I_s$ ஆனது எப்படியும் துறை IIஇன் தொழில் துறை முதலாளிகளிடம் விற்கப்பட்டாக வேண்டும். அது எத்தனை வியாபாரிகளிடம் கைமாறிச் சென்றாலும் கடைசியாக வருகிற வியாபாரி, நமது கருதுகோளின் படி துறை II குறித்து, முன்பு துறை Iஇன் முதலாளித்துவ உற்பத்தியாளர்கள் வந்தடைந்த அதே இக்கட்டான நிலையைத்தான் வந்தடைய வேண்டியிருக்கும், அதாவது 200 $I_s$ஐத் துறை IIஇடம் விற்க முடியாத நிலையைத்தான் வந்தடைவார். 200 $I_s$ஐ வாங்குவதற்காக வியாபாரி செலவிடும் தொகை முடங்கி விடுவதால், துறை Iஉடன் அதனால் திரும்பவும் பரிவர்த்தனை நிகழ்முறையைத் தொடக்க முடியாமற் போகிறது.

நமது ஆய்வின் மெய்யான நோக்கம் ஒரு புறம் இருக்க, சமுதாய மறுவுற்பத்தி நிகழ்முறையை அப்படியே அதன் சிக்கலான ஸ்தூல வடிவில் பகுத்தாராய முற்படுகையில், ''விஞ்ஞான வழிப்பட்ட'' ஆய்வு போன்றதாய்த் தோன்றச் செய்வதற்கான தந்திரோபாயங்களை எல்லாம் விலக்கும் பொருட்டு, மறுவுற்பத்தி நிகழ்முறையினை அதன் அடிப்படை வடிவில்—பார்வையை மழுங்க வைக்கும் சிறுதிற நிலைமைகள் நீக்கப்பட்டு விட்ட இந்த அடிப்படை வடிவில்—பரிசீலிப்பது இன்றியமையாததாகும்.

மறுவுற்பத்தி இயல்பாக நடைபெறும் போது (சாமானிய மறுவுற்பத்தி ஆனாலும் சரி, விரிதிற மறுவுற்பத்தி ஆனாலும் சரி), முதலாளித்துவ உற்பத்தியாளர் சுற்றோட்டத்துக்கு முன்னீடு செய்யும் பணம் (அவரது சொந்தப் பணம் ஆனாலும் சரி, கடன் வாங்கிய தானாலும் சரி) அதன் தொடக்க முனைக்கே திரும்பி வந்தாக வேண்டும் என்பதே விதி. துறை I முன்னீடு செய்கிற பணத்தைக் கொண்டு 200 $II_c$(d) ஆனது பணமாக மாற்றப்படுகிறது என்னும் கருதுகோளை மேற்படி விதி முற்றாகவும் முடிவாகவும் நிராகரித்து விலக்கி விடுகிறது.

### *2. நிலை-மூலதனத்தின் பொருள் வகை மாற்றீடு*

மேலே நாம் பரிசீலித்த கருதுகோள் உதவாததாக விலக்கப்பட்ட

பின், நமது ஆய்வுக்கு எஞ்சுகிறவை யாவை? தேய்மானத்துக்கு உள்ளாகிய பகுதியைப் பணமாக மாற்றீடு செய்வதற்கும், மற்றும் முழுக்கத் தேய்ந்து காலாவதியாகி விட்ட நிலை-மூலதனத்தைப் பண்ட வகையில் மாற்றீடு [replacement in kind] செய்வதற்குமான சாத்தியக் கூறுகளே எஞ்சுகின்றன.

இது வரை நாம் அனுமானித்துக் கொண்டவை வருமாறு:

அ) துறை I கூலியாகத் தருகிற £1,000ஐ இத்துறையின் தொழிலாளர்கள் செலவிட்டு அதே மதிப்புள்ள $II_c$ஐ வாங்குவதாக, அதாவது அதைக் கொண்டு அவர்கள் நுகர்வுப் பண்டங்கள் வாங்குவதாக அனுமானித்துக் கொண்டோம்.

பணமாகத் துறை I இந்த £1,000ஐ முன்னீடு செய்கிறதெனக் கூறும் போது ஓர் உண்மை விவரத்தையே கூறுகிறோம். முதலாளித்துவ உற்பத்தியாளர்கள் அவர்கள் தர வேண்டிய கூலியைப் பணமாகத்தான் தந்தாக வேண்டும். தொழிலாளர்கள் இந்தப் பணத்தை செலவிட்டு நுகர்வுப் பண்டங்கள் வாங்குகிறார்கள். நுகர்வுப் பண்டங்களை விற்போருக்கு இந்தப் பணம் அவர்களது மாறா-மூலதனம் சரக்கு-மூலதன நிலையிலிருந்து திறனுடை-மூலதனமாக மாறுவதற்கு வேண்டிய சுற்றோட்ட ஊடகமாகப் பயன்படுகிறது. இந்தப் பணம் கடைக்காரர்கள், வீட்டு உடைமையாளர்கள், வரி வசூலிப்போர், மற்றும் தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் மருத்துவர்கள் போன்ற திறனிலாத் தொழிலாளர்கள் முதலான பலரது கைகள் வழியாகவும் செல்கிறது என்பது மெய்தான். ஆகவே இதில் ஒரு பகுதி மட்டுமே துறை Iஇன் தொழிலாளர்களது கையிலிருந்து துறை IIஇன் முதலாளி வர்க்கத்தாரின் கைக்கு நேரடியாகச் செல்கிறது. இக்காரணத்தினால் இதன் ஓட்டம் அதிகமாகவோ குறைவாகவோ தடைபடலாம். ஆகவே முதலாளிக்குப் புதிய பணச் சேம வைப்பு தேவைப்படலாம். என்றாலும் அடிப்படை வடிவத்தையே இங்கு நாம் பரிசீலனை செய்வதால், இவற்றை எல்லாம் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை.

ஆ) ஒரு நேரத்தில் துறை I ஆனது துறை IIஇலிருந்து சரக்கு வாங்குவதற்காகப் பணமாக மேலும் £400 முன்னீடு செய்வதாகவும் இந்தப் பணம் அதனிடம் திரும்பி வந்து விடுவதாகவும், மற்றொரு நேரத்தில் துறை IIஆனது துறை Iஇலிருந்து சரக்கு வாங்குவதற்காக £400 முன்னீடு செய்வதாகவும் அதுவும் இந்தப் பணத்தை மீட்டுக் கொள்வதாகவும் அனுமானித்துக் கொண்டோம். இப்படி அனுமானித்துக் கொள்வது அவசியமே. ஏனெனில் இதற்கு மாறாக, துறை I அல்லது துறை IIஇன் முதலாளி வர்க்கம் தனது சரக்குகளின் பரிவர்த்தனைக்குத் தேவையான பணத்தைத் தானே சுற்றோட்டத்துக்கு ஒருசார்பாய் முன்னீடு செய்வதாகக் கொள்வது தன்னிச்சையான அனுமானமாகி விடும். 200 $II_c$(d) என்பதைப் பணமாக மாற்றும் பொருட்டு துறை I ஆனது சுற்றோட்டத்துள் கூடுதலாய்ப்

பணம் செலுத்துவதாகக் கொள்ளும் கருதுகோளை அபத்தமென நிராகரிக்க வேண்டும் என்று மேலே உள் தலைப்பு 1இன் கீழ் தெளிவாக்கினோம். ஆகவே துறை IIஇன் நிலை-மூலதனத்தினது தேய்மானத்தை மாற்றீடு செய்யும் பொருட்டு அதன் உற்பத்திச் சரக்குகளில் அதற்கான ஒரு பகுதியைப் பணமாக மாற்றுவதற்கு வேண்டிய பணத்தை அத்துறையே செலுத்துகிறதென மேலும் பன்மடங்கு அபத்தமான முறையில் அனுமானிக்கும் கருதுகோளை ஏற்பதைத் தவிர வேறு வழி இல்லை என்பதாகவே தோன்றும். எடுத்துக்காட்டாக, முதலாளி Xஇன் நூற்பியந்திரம் உற்பத்தி நிகழ்முறையின் போது இழக்கிற மதிப்பானது அவரது நூலின் மதிப்பில் ஒரு பகுதியாகத் திரும்பி வருகிறது. தேய்மானத்தின் மூலம் அவரது நூற்பியந்திரம் இழக்கிற மதிப்பானது அவரது கைக்குத் திரும்பி வந்து பணமாகத் திரள வேண்டும். இப்போது Xஆனவர் Y என்பவரிடமிருந்து £200 பெறுமானமுள்ள பருத்தியை விலைக்கு வாங்குவதாகவும், இவ்வாறு சுற்றோட்டத்துக்குப் பணமாக £200ஐ முன்னீடு செய்வதாகவும் கொள்வோம். Y ஆனவர் இதன் பின் அவரிடமிருந்து £200 பெறுமானமுள்ள நூலை விலைக்கு வாங்குகிறார். இப்படி வருகிற இந்த £200 இப்போது Xக்கு அவரது இயந்திரத்தின் தேய்மானத்தை மாற்றீடு செய்வதற்கான நிதியமாகப் பயன்படுகிறது. ஆக, என்ன நடைபெறுகிறது என்றால்: முதலாளி X அவரது உற்பத்தியைக் கவனித்து உற்பத்திப் பண்டத்தைப் பெற்று அதை விற்றுப் பணமாக்குவதோடு கூட தமது நூற்பியந்திரத்தின் மதிப்பிறக்கத்துக்கு ஈடு கட்டுவதற்காகத் தனியே கைவசம் £200 வைத்துக் கொள்கிறார்; அதாவது தமது இயந்திரத்தின் மதிப்பிறக்கத்தால் £200 இழப்பதோடு கூட, முடிவில் புதிய நூற்பியந்திரம் வாங்குவதற்காகத் தமது கையிலிருந்து ஒவ்வோராண்டும் பணமாக £200 எடுத்துத் தனியே வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் பார்வைக்குத்தான் இது அபத்தமாய்த் தெரிகிறது. துறை IIஇன் முதலாளிகளது நிலை-மூலதனம் மிகப் பல்வேறுபட்ட மறுவுற்பத்திக் கட்டங்களில் இருப்பதாகும். சிலரது நிலை-மூலதனம் பண்ட வகையில் அடியோடு மாற்றீடு செய்தாக வேண்டிய கட்டத்தை அடைந்து விட்டது. மற்றவர்களது நிலை-மூலதனம் அந்தக் கட்டத்திலிருந்து அதிகமாகவோ குறைவாகவோ நெடுந்தொலைவில் இருப்பதாகும். இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்த முதலாளிகள் எல்லாருக்கும் பொதுவானதாய் இருக்கும் ஒரு விவரம் என்னவென்றால்: அவர்களது நிலை-மூலதனம் உள்ளபடியே மறுவுற்பத்தி செய்யப்படாமல், அதாவது பண்ட வடிவில் அதே மாதிரியான புதியதொன்றால் புதுப்பிக்கப்படாமல் இருப்பதும், அதற்குபதில் அதன் மதிப்பு பணமாகத் தொடர்ச்சியாய்த் திரட்டப் பெற்று வருவதும்தான். முதல் வகையினர் தொழில் தொடக்கப்பட்ட போது இருந்த அதே நிலையில்தான் (அல்லது அநேகமாய் அதே நிலையில்.

தான் — இரண்டில் எதுவாயினும் இங்கே ஒன்றுதான்) இப்போதும் இருக்கிறார்கள். தமது பண-மூலதனத்தை ஒரு புறத்தில் (நிலை-மூலதனமும் சுழல்-மூலதனமும் ஆகிய) மாறா-மூலதனமாகவும் மறு புறத்தில் உழைப்புச் சக்தியாகவும் (அதாவது மாறும்-மூலதனமாக வும்) மாற்றும் பொருட்டு பண-மூலதனத்துடன் சந்தைக்கு வந்தார் களே அப்போது இருந்த அதே நிலையில்தான் இப்போதும் இருக் கிறார்கள். திரும்பவும் அவர்கள் இந்தப் பண-மூலதனத்தை (அதாவது மாறா நிலை-மூலதனத்தின் மதிப்பையும் அதே போல் சுழல்-மூலதனம், மாறும்-மூலதனம் ஆகியவற்றின் மதிப்பையும்) சுற்றோட்டத்துள் செலுத்தி முன்னீடு செய்தாக வேண்டும்.

இப்போது, IIஇன் முதலாளி வர்க்கம் Iஉடன் பரிவர்த்தனை செய்வதற்காக சுற்றோட்டத்துள் செலுத்தும் £400இல் ஒரு பாதி IIஇன் இரு வகை முதலாளிகளில் இரண்டாவது வகையினரிட மிருந்து வருவதாக வைத்துக் கொள்வோம். இவர்கள் தமது சரக்கு களை விற்று தமது சுழல்-மூலதனமாய் அமையும் உற்பத்திச் சாதனங் களைப் பண்ட வகையில் புதுப்பிக்க வேண்டியிருப்பதோடு, தமது பணத்தைக் கொண்டு நிலை-மூலதனத்தையும் புதுப்பித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதே போது IIஇன் முதலாளிகளில் மற் றொரு பாதியினர் தமது நிலை-மூலதனத்தைப் பண்ட வகையில் புதுப்பித்துக் கொள்ளாமல், மாறா-மூலதனத்தின் சுழலும் பகுதியை மட்டும் தமது பணத்தைக் கொண்டு பண்ட வகையில் புதுப்பித்துக் கொள்கின்றனர். திரும்பி வரும் £400 ஆனது (துறை I இந்தப் பணத்தைக் கொண்டு நுகர்வுப் பண்டங்கள் வாங்கியவுடனே இது திரும்பி வருகிறது) துறை IIஇன் இந்த இரு பிரிவு முதலாளி களிடையே இப்போது வெவ்வேறு விதமாய்ப் பிரிக்கப்பட்டு வினி யோகமாவதாகச் சொல்வதில் முரண்பாடு ஏதும் இல்லை. இந்தப் பணம் துறை IIஇடம் திரும்பி வருகிறது; ஆனால் அதே ஆட்களின் கைக்குத் திரும்பி வருவதற்கு பதில், துறை IIஇன் முதலாளி களிடையே வெவ்வேறு விதத்தில் பங்கிடப்படுகிறது; ஒரு பிரிவின ரிடமிருந்து மற்றொரு பிரிவினருக்குச் செல்கிறது.

துறை IIஇன் முதலாளிகளில் ஒரு பிரிவினர் தமது உற்பத்திச் சரக்குகளைக் கொண்டு மாற்றீடு செய்து கொள்ளும் உற்பத்திச் சாத னப் பகுதியோடு கூடவே, பணமாக வருகிற £200ஐப் பண்ட வகை யில் புதிய நிலை-மூலதனக் கூறுகளாக மாற்றிக் கொள்கிறார்கள். இவர்கள் இப்படிச் செலவிடுகிற இந்தப் பணம் இந்த நிலை-மூல தனத்தால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளது மதிப்பில் தேய்மானத் தைக் குறிக்கும் பகுதியின் வடிவில் சிறுகச் சிறுக பல்லாண்டுக் காலப் போக்கில் அவர்கள் கைக்குத் திரும்புகிறது. அதாவது தொழிலின் தொடக்கத்தில் நடந்தது போலவே தொடர்ந்து நடைபெறுகிறது.

ஆனால் IIஇன் முதலாளிகளில் மற்றொரு பிரிவினர் £200க் குப் பிரதியாக Iஇடமிருந்து சரக்குகள் ஏதும் பெறவில்லை. அதற்கு

பதில் IIஇன் முதலாவது பிரிவினர் அவர்களது நிலை-மூலதனக் கூறுகளுக்காகச் செலவிட்ட பணத்தை I ஆனது IIக்குக் கொடுக்கிறது. IIஇன் முதலாவது பிரிவினர் தமது நிலை-மூலதன மதிப்பைத் தசையுருவில் புதுப்பித்துக் கொண்டு விடுகிறார்கள். ஆனால் இரண்டாவது பிரிவினர் பிற்பாடு தமது நிலை-மூலதனத்தைப் பண்ட வகையில் மாற்றீடு செய்வதற்காகத் தொடர்ந்து அதனைப் பணமாகத் திரட்டுவதில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மேற்கூறிய பரிவர்த்தனைகள் முடிந்த பிறகு, இரு தரப்புகளாலும் இன்னும் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படாமல் எஞ்சியுள்ள சரக்குகளின் அடிப்படையில் நாம் நமது பரிசீலனையைத் தொடர வேண்டும்; Iஇன் தரப்பில் எஞ்சியிருப்பது $400_s$; IIஇன் தரப்பில் எஞ்சியிருப்பது $400_c$.[58] II ஆனது 800 மதிப்புள்ள இந்தச் சரக்குகளின் பரிவர்த்தனைக்காக வேண்டி பணமாக 400 முன்னீடு செய்வதாகக் கொள்கிறோம். இந்த 400இல் பாதியை (=200) $II_c$ என்பதன் ஒரு பிரிவு—தேய்மான மதிப்பாகப் பணமாய் 200ஐத் திரட்டும் பிரிவு—செலவிட்டாக வேண்டும்; ஆக, இதே பிரிவுதான் இந்தப் பணத்தைத் தனது நிலை-மூலதனத்தின் தசையுருவிற்குத் திரும்ப மாற்றியாக வேண்டும்.

இரு துறைகளிலும் சரக்கு-மூலதன மதிப்பினை மாறா-மூலதன மதிப்பு, மாறும்-மூலதன மதிப்பு, உபரி-மதிப்பு என மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம். எப்படி இம்மூன்று கூறுகளையும் அந்தந்தத் துறையின் சரக்குகளிலான விகிதாசாரப் பங்குகளாகக் குறிப்பிடலாமோ, அதே போல மாறா-மூலதன மதிப்பினுள்ளேயே இன்னமும் நிலை-மூலதனத்தின் தசையுருவுக்கு மாற்றப்படாமல் தற்போதைக்குப் பணமாகவே திரட்டப்பட வேண்டியதாய் இருக்கும் கூறினையும் இம்மதிப்பின் விகிதாசாரப் பங்காகக் குறிப்பிடலாம். துறை IIஇன் உற்பத்திச் சரக்குகளில் குறிப்பிட்ட ஒரு பகுதி (இங்கே நமது உதாரணத்தில் மீதியாய் இருப்பதில் ஒரு பாதியான 200) இந்தத் தேய்மான மதிப்பினைச் சுமந்து வருகிற ஊர்தியே அன்றி வேறல்ல. இந்தத் தேய்மான மதிப்பானது பரிவர்த்தனையின் மூலம் சரக்கு வடிவிலிருந்து பண வடிவத்துக்கு மாறிப் பணப் படிவாய் வந்து திரண்டாக வேண்டும். (துறை IIஇன் முதலாளிகளைச் சேர்ந்த முதற் பிரிவினர் நிலை-மூலதனத்தைப் பண்ட வகையில் புதுப்பித்து மாற்றீடு செய்து கொள்கிறவர்கள். இவர்கள் தமது உற்பத்திச் சரக்குகளில் தேய்மான மதிப்பைக் குறிக்கும் கூறினைக் கொண்டு இந்தத் தேய்மான மதிப்பில் ஒரு பகுதியை ஈடேற்றம்

---

58 எங்கெல்ஸ் குறிப்பு: திரும்பவும் இந்த எண் விவரங்கள் முன்பு அனுமானித்துக் கொள்ளப்பட்டவற்றிலிருந்து வேறுபடுகின்றன. ஆனால் பிரச்சினையானது விகிதாசாரங்களைப் பற்றியதாய் இருப்பதால் இந்த வேறுபாட்டைப் பொருட்படுத்த வேண்டியதில்லை.

பெறச் செய்திருப்பார்கள். ஆகவே இந்தச் சரக்குக் கூறினில் ஒரு பகுதி மட்டுமே எஞ்சியிருக்கும். என்றாலும், பணமாக ஈடேற்றம் பெறச் செய்வதற்கு மேலும் 200 பாக்கியிருக்கும்.

இந்த இறுதிக் கட்டச் செயற்பாட்டின் போது துறை II சுற்றோட்டத்துள் செலுத்தும் £400இல் இரண்டாம் பாதியை (=£200) பொறுத்த வரை, அது Iஇலிருந்து மாறா-மூலதனத்தின் சுழலும் கூறுகளை வாங்கப் பயன்படுகிறது. இந்த £200இல் ஒரு பகுதியை துறை IIஇன் இரு பிரிவுகளும் சுற்றோட்டத்துள் செலுத்தலாம்; அல்லது, தனது நிலை-மூலதன மதிப்புக் கூறினைப் பண்ட வகையில் புதுப்பித்துக் கொள்ளாத பிரிவு மட்டும் சுற்றோட்டத்துள் செலுத்தலாம்.

ஆக, இந்த £400ஐக் கொண்டு துறை Iஇலிருந்து வாங்கப் படுகிறவை வருமாறு: 1) நிலை-மூலதனக் கூறுகளாகிற £200 பெறுமானமுள்ள சரக்குகள்; 2) துறை IIஇன் மாறா-மூலதனத்தின் சுழலும் பகுதியைப் பண்ட வகையில் மாற்றீடு செய்யும் £200 பெறுமானமுள்ள சரக்குகள். இவ்விதம் துறை I ஆனது அதன் வருடாந்தர உற்பத்திப் பண்டத்தில் துறை IIஇடம் விற்க வேண்டியவை யாவற்றையும் விற்றுள்ளது. ஆனால் அதில் ஐந்திலொரு பங்கானது (=£400) இப்போது பணமாகத் துறை I இடம் இருக்கிறது. இந்தப் பணம் ஈடேற்றம் பெற்ற உபரி-மதிப்பாகும்; வருவாயாக இது நுகர்வுப் பண்டங்களுக்காகச் செலவிடப்பட்டாக வேண்டும். இவ்விதம் துறை I ஆனது £400ஐக் கொண்டு துறை IIஇன் எஞ்சிய சரக்கு-மதிப்பை (=400) வாங்குகிறது. ஆகவே இந்தப் பணம் துறை IIஇடமிருந்து சரக்குகளை ஓடச் செய்து அத்துறைக்குத் திரும்பி வந்து சேர்கிறது.

மூன்று நேர்வுகளை இப்போது அனுமானித்துக் கொள்வோம். துறை IIஇன் முதலாளிகளில் தமது நிலை-மூலதனத்தைப் பண்ட வகையில் மாற்றீடு செய்து கொள்வோரைப் ''பிரிவு 1'' என்றும், நிலை-மூலதனத்தின் தேய்மான மதிப்பைச் சேமித்து வைப்போரைப் ''பிரிவு 2'' என்றும் குறிப்பிடுவோம். மூன்று நேர்வுகளாவன: (அ) துறை IIஇல் மீதச் சரக்குகளாக எஞ்சுகிற 400இல் ஒரு பங்கு, பிரிவு 1 முதலாளிகளுக்கும் பிரிவு 2 முதலாளிகளுக்குமான மாறா-மூலதனத்தின் சுழலும் கூறுகளில் குறிப்பிட்ட பகுதியை மாற்றீடு செய்ய வேண்டியதாகிறது (ஒவ்வொன்றிலும் ஒரு பாதி என்போம்); (ஆ) பிரிவு 1 முதலாளிகள் அவர்களின் சரக்குகள் யாவற்றையும் விற்று முடித்து விட்டார்கள்; ஆனால் பிரிவு 2 முதலாளிகள் இன்னும் 400ஐ விற்க வேண்டியிருக்கிறது; (இ) பிரிவு 2 முதலாளிகள் தேய்மான மதிப்பைச் சுமந்து வருகிற ஊர்தியான 200ஐத் தவிர மற்றவை யாவற்றையும் விற்று விட்டார்கள்.

பெறப்படும் வினியோகப் பரப்பீடுகள் [distributions] வருமாறு:

அ) இன்னமும் துறை II இடமுள்ள சரக்கு-மதிப்பாகிய 400இல்

பிரிவு 1 இடம் இருப்பது 100, பிரிவு 2 இடம் இருப்பது 300. இந்த 300இல் 200 தேய்மானத்தைக் குறிப்பது. அப்படியானால், துறை IIஇலிருந்து சரக்குகள் வாங்குவதற்காக துறை I திருப்பித் தரும் £400இல், பிரிவு 1 முதலாளிகள் ஆரம்பத்தில் 300 செலவிட்டனர்; அதாவது பணமாக 200ஐச் செலவிட்டு துறை Iஇலிருந்து பண்ட வகையில் நிலை-மூலதனக் கூறுகளைப் பெற்றனர்; மேலும் துறை Iஉடன் சரக்குப் பரிவர்த்தனை செய்வதற்காகப் பணமாக 100 செலவிட்டனர். அதே போது பிரிவு 2 முதலாளிகள் துறை Iஉடன் தமது சரக்குப் பரிவர்த்தனை நடைபெறுவதற்காக 400இல் ¼பங்காகிய 100ஐ மட்டும் முன்னீடு செய்கிறார்கள்.

பணமாய் இருக்கும் 400இல் பிரிவு 1 முதலாளிகள் 300ஐயும் பிரிவு 2 முதலாளிகள் 100ஐயும் முன்னீடு செய்கின்றனர்.

இந்த 400உம் பின்வருமாறு திரும்பி வருகிறது:

பிரிவு 1 முதலாளிகளுக்கு 100—அதாவது இவர்கள் முன்னீடு செய்த பணத்தில் மூன்றில் ஒரு பங்கு மட்டும்—திரும்பி வருகிறது. ஆனால் எஞ்சியுள்ள மூன்றில் இரு பங்குக்குப் பதிலாக 200 பெறுமானமுள்ள நிலை-மூலதனம் இவர்களிடம் இருக்கிறது. 200 மதிப்புள்ள இந்த நிலை-மூலதனக் கூறுக்குப் பிரதியாக, பிரிவு 1 முதலாளிகள் துறை Iக்குப் பணம் தந்துள்ளனர், ஆனால் அதையடுத்து சரக்கு ஏதும் தரவில்லை. பணமாய் இருக்கும் இந்த 200ஐப் பொறுத்த வரை, பிரிவு 1 முதலாளிகள் சரக்குகளை வாங்குகிறவர்களாக துறை Iஐ எதிர்நோக்குகின்றனரே தவிர, பிற்பாடு சரக்குகளை விற்கிறவர்களாக அதை எதிர்நோக்கவில்லை. ஆகவே இந்தப் பணம் பிரிவு 1 முதலாளிகளுக்குத் திரும்பி வர முடியாது, திரும்பி வருமானால் இம்முதலாளிகள் நிலை-மூலதனக் கூறுகளை துறை Iஇடமிருந்து இலவசமாய்ப் பெறுவோராகி விடுவார்கள்.

பிரிவு 1 முதலாளிகள் முன்னீடு செய்யும் பணத்தில் கடைசி மூன்றிலொரு பங்கைப் பொறுத்த வரை, இம்முதலாளிகள் முதலில் தமது மாறா-மூலதனத்தின் சுழலும் கூறுகள்ள வாங்குவோராகச் செயல்படுகிறார்கள். துறை I இந்தப் பணத்தைக் கொண்டு, இம்முதலாளிகளிடம் எஞ்சியிருக்கும் 100 பெறுமானமுள்ள சரக்குகளை வாங்குகிறது. இதனால் இந்தப் பணம் துறை IIஇன் பிரிவு 1 முதலாளிகளிடமே திரும்பி வருகிறது, ஏனெனில் முதலில் சரக்குகளை வாங்குவோராகச் செயல்பட்ட இவர்கள் இப்போது சரக்குகளை விற்போராகச் செயல்படுகிறார்கள். இந்தப் பணம் இப்படி இவர்களிடம் திரும்பி வரா விட்டால், துறை IIஇன் பிரிவு 1 முதலாளிகள் 100 பெறுமானமுள்ள சரக்குகளுக்கு விலையாகத் துறை Iக்கு முதலில் பணமாக 100உம், பிறகு அது போதாதெனச் சரக்குகளாக 100உம் கொடுக்கிறார்கள் என்றாகி விடும்; அதாவது துறை II அதன் சரக்குகளைத் துறை Iக்கு அன்பளிப்பாய்க் கொடுப்பதாகி விடும்.

மறு புறத்தில் பிரிவு 2இன் முதலாளிகள் பணமாக 100 முதலீடு செய்த பின் பணமாக 300ஐத் திரும்பப் பெற்றுக் கொள் கிறார்கள்: முதலில் வாங்குவோராக இவர்கள் சுற்றோட்டத்துள் பணமாக 100 செலுத்தி விட்டு, பிறகு விற்போராக அந்த 100ஐத் திரும்பப் பெறுகிறார்கள்; அதோடு 200 பெறுமானமுள்ள சரக்கு களை விற்போராகவே செயல்படுகிறார்கள், வாங்குவோராக அல்ல என்பதால் மேற்கொண்டு ஒரு 200உம் பெறுகிறார்கள். எனவே பணம் துறை Iஇடம் திரும்பிச் செல்ல முடியாது. துறை II (பிரிவு 1) நிலை-மூலதனக் கூறுகளை வாங்கும் போது சுற்றோட்டத்துள் செலுத்தும் பணம் இவ்விதம் நிலை-மூலதனத் தேய்மானத்தை நேர் செய்யப் பயன்படுகிறது. ஆனால் இந்தப் பணம் பிரிவு 1 முதலாளி களது பணமாக அல்லாமல், துறை Iஇன் பணமாகவே பிரிவு 2 முதலாளிகளின் கைக்கு வருகிறது.

ஆ) இந்த அனுமானத்தின் படி, பிரிவு 1 முதலாளிகள் பணமாக 200உம், பிரிவு 2 முதலாளிகள் சரக்குகளாக 400உம் பெற்றுக் கொள்ளுமாறு $II_c$இன் எஞ்சியுள்ள பகுதி வினியோகமாகி விடுகிறது.

பிரிவு 1 முதலாளிகள் அவர்களது உற்பத்திச் சரக்குகள் யாவற் றையும் விற்று விடுகிறார்கள், ஆனால் பணமாக அவர்களிடம் இருக்கும் 200 ஆனது அவர்களது மாறா-மூலதனத்தைச் சேர்ந்த நிலை-மூலதன அடக்கக் கூறினது—பண்ட வகையில் புதுப்பிக்கப் பட்டாக வேண்டிய இந்தக் கூறினது—மாறிய வடிவமாகும். ஆகவே அவர்கள் வாங்குவோராகச் செயல்பட்டு இந்தப் பணத்தைக் கொண்டு துறை Iஇடமிருந்து தனது நிலை-மூலதனத்தின் கூறு களாகக் கூடிய அதே மதிப்புள்ள சரக்குகளை வாங்கிக் கொள் கிறார்கள். (துறை Iக்கும் துறை IIக்கும் இடையிலான சரக்குப் பரிவர்த்தனைக்காக துறை I ஆனது பணமேதும் முன்னீடு செய்யா விடில்) பிரிவு 2 முதலாளிகள் சுற்றோட்டத்துள் அதிகபட்சமாக £200 மட்டும்தான் செலுத்தியாக வேண்டும், ஏனெனில் அவர்கள் தமது சரக்கு-மதிப்பில் பாதியளவுக்கு துறை Iஇடம் விற்போர் ஆவார்களே தவிர துறை Iஇடமிருந்து வாங்குவோர் ஆவதில்லை.

பிரிவு 2 முதலாளிகளுக்கு சுற்றோட்டத்திலிருந்து £400 திரும்பி வருகிறது: இவர்கள் சரக்கு வாங்குவோராக 200 முன்னீடு செய்து அதே மதிப்புள்ள சரக்குகளை விற்போராக அதே பணத்தைத் திரும்பப் பெறுகிற காரணத்தால் 200உம், துறை Iக்கு 200 மதிப் புள்ள சரக்குகளை விற்கிறார்களே தவிர அதே மதிப்புள்ளவற்றை Iஇடமிருந்து வாங்காத காரணத்தால் 200உம் அவர்களுக்குத் திரும்பி வருகிறது.

இ) பிரிவு 1 முதலாளிகளிடம் பணமாக 200உம் சரக்காக $200_c$உம் இருக்கின்றன. பிரிவு 2 முதலாளியிடம் சரக்காக $200_c$(d) இருக்கிறது.

இந்த அனுமானத்தின் படி, பிரிவு 2 முதலாளிகள் பணமாக

முன்னீடு ஏதும் செய்ய வேண்டியதில்லை. ஏனென்றால், துறை I தொடர்பாக இவர்கள் இப்போது விற்போராகவே செயல்படுகிறார்கள், வாங்குவோராக அல்ல. ஆகவே இவர்கள் தமது பண்டங்களை யாரேனும் விலைக்கு வாங்குகிற வரை காத்திருந்தாக வேண்டும்.

பிரிவு 1 முதலாளிகள் பணமாக £400 முன்னீடு செய்கிறார்கள்: துறை I உடனான சரக்குப் பரிவர்த்தனைக்காக £200உம், அதனிடமிருந்து சரக்கு வாங்குவதற்காக £200உம் முன்னீடு செய்கிறார்கள். இரண்டாவதாய்க் குறிப்பிட்ட பணமாகிய £200ஐக் கொண்டு இவர்கள் தமக்கு வேண்டிய நிலை-மூலதனக் கூறுகளை வாங்கிக் கொள்கிறார்கள்.

துறை I ஆனது பணமாக இப்படி வருகிற £200ஐக் கொண்டு பிரிவு 1 முதலாளிகளிடமிருந்து 200 மதிப்புள்ள சரக்குகளை வாங்குகிறது. ஆக, பிரிவு 1 முதலாளிகள் இந்தச் சரக்குப் பரிவர்த்தனைக்காகப் பணமாக முன்னீடு செய்யும் £200ஐ இவ்விதம் திரும்பப் பெற்றுக் கொள்கிறார்கள். துறை I ஆனது பிரிவு 1 முதலாளிகளிடமிருந்து பெறும் தொகையில் எஞ்சியுள்ள £200ஐக் கொண்டு 200 மதிப்புள்ள சரக்குகளைப் பிரிவு 2 முதலாளிகளிடமிருந்து வாங்குகிறது. இதன் மூலம் பிரிவு 2 முதலாளிகளது நிலை-மூலதனத் தேய்மானம் பணப் படிவாக அவர்களிடம் திரளுகிறது.

மேற்கூறிய (இ) நேர்வில், துறை II, பிரிவு 1 முதலாளிகள் இருப்பிலுள்ள சரக்குகளின் பரிவர்த்தனைக்காகப் பணமாக £200 முன்னீடு செய்வதற்கு பதில், துறை I இத்தொகையை முன்னீடு செய்வதாகக் கொள்வதால் நிலைமையில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டு விடாது. துறை I ஆனது முதலில் 200 பெறுமானமுள்ள சரக்குகளை துறை II, பிரிவு 2 முதலாளிகளிடமிருந்து வாங்குமானால் (விற்பதற்காக இம்முதலாளிகளிடம் இந்தச் சரக்கு மட்டுமே எஞ்சியுள்ளதாக நாம் அனுமானித்துக் கொண்டிருக்கிறோம்) இந்த £200 துறை I இடம் திரும்பி வராது, ஏனெனில் துறை II, பிரிவு 2 முதலாளிகள் திரும்பவும் வாங்குவோராகச் செயல்படவில்லை. ஆனால் அப்போது துறை II, பிரிவு 1 முதலாளிகள் சரக்கு வாங்குவதற்காகப் பணமாக £200உம், பரிவர்த்தனைக்காகச் சரக்குகளாக 200உம் வைத்திருப்பார்கள். துறை I உடனான பரிவர்த்தனைக்காக இவ்விதம் மொத்தம் 400 அவர்களிடம் இருக்கும். பணமாகிய £200 இப்போது அவர்களிடமிருந்து துறை Iக்குத் திரும்பிச் செல்லும். 200 பெறுமானமுள்ள சரக்குகளை துறை II, பிரிவு 1 முதலாளிகளிடமிருந்து வாங்குவதற்காக துறை I திரும்பவும் அதை முன்னீடு செய்தால், துறை II, பிரிவு 1 முதலாளிகள் சரக்குகளாய் இருக்கும் 400ஐச் சேர்ந்த இரண்டாம் பாதியை துறை Iஇடமிருந்து பெற்றுக் கொள்ளும் போது இந்த £200 துறை Iக்குத் திரும்பி வந்து சேரும். துறை II, பிரிவு 1 முதலாளிகள் நிலை-மூலதனக் கூறுகளை வாங்குவோராகவே இவ்விதம் பணமாக £200 செல

விடுகிறார்கள், ஆகவே இந்தப் பணம் அவர்களுக்குத் திரும்பி வராது. அதற்கு பதில் துறை II, பிரிவு 1இடம் எஞ்சியுள்ள சரக்காகிய $200_c$ஐப் பணமாக மாற்றவே அது பயன்படுகிறது. அதே போது சரக்குகளின் பரிவர்த்தனைக்காக துறை I முன்னீடு செய்யும் பணமாகிய £200 துறை II, பிரிவு 1 முதலாளிகள் மூலம் (துறை II, பிரிவு 2 முதலாளிகள் மூலம் அல்ல) துறை Iக்குத் திரும்பி வருகிறது. இவ்வாறு துறை Iஇன் 400 பெறுமானமுள்ள சரக்குகளுக்குப் பிரதியாக அதற்கு அதே பெறுமானமுள்ள சரக்குகளாலான சமதை திரும்பி வருகிறது. 800 பெறுமானமுள்ள சரக்குகளின் பரிவர்த்தனைக்காக இத்துறை முன்னீடு செய்யும் £200உம் அதற்குத் திரும்பி வந்து விடுகிறது. ஆகவே யாவும் சரிக்கட்டப் பெற்று விடுகின்றன.

---

I. $\underbrace{1{,}000_v + 1{,}000_s}$

II. $2{,}000_c$

இவற்றின் இடையிலான பரிவர்த்தனையில் எழும் சிக்கலானது இரு துறைகளிலும் எஞ்சுகிற

I........$400_s$,

II. (1) பணமாக 200 + சரக்குகளாக $200_c$ + (2) சரக்குகளாக $200_c$ இவற்றின் இடையிலான பரிவர்த்தனையில் எழும் சிக்கலாக, இன்னும் தெளிவாகக் கூறுவோமானால்

I. $200_s + 200_s$,

II. (1) பணமாக 200 + சரக்குகளாக $200_c$ + (2) சரக்குகளாக $200_c$ இவற்றின் இடையிலான பரிவர்த்தனையில் எழும் சிக்கலாகக் குறுக்கப்பட்டது.

துறை IIஇன் பிரிவு 1இல், சரக்குகளாய் இருக்கும் $200_c$ ஆனது சரக்குகளாய் இருக்கும் 200 $I_s$ என்பதற்குப் பரிவர்த்தனை செய்யப்படுகிறது என்பதாலும், சரக்குகளாய் இருக்கும் இந்த 400உம் இரு துறைகளிடையிலும் பரிவர்த்தனை செய்யப்படுகையில் சுற்றியோடுகிற பணம் முழுவதும் அதனை முன்னீடு செய்தவர்களிடமே—துறை Iஇடமோ துறை IIஇடமோ—திரும்பி விடுகிறது என்பதாலும், துறைகள் Iக்கும் IIக்கும் இடையிலான பரிவர்த்தனையின் கூறாகிய இந்தப் பணம் உண்மையில் இங்கு சிக்கலாய் நம்முன் எழுந்துள்ள பிரச்சினையின் கூறு அன்று. இதையே வேறு விதமாகச் சொல்லலாம்: (சரக்குகளாகிய) 200 $I_s$க்கும் (துறை II, பிரிவு 1 இன் சரக்குகளாகிய) 200 $II_c$க்கும் இடையிலான பரிவர்த்தனையில் பணமானது கொடுப்புச் சாதனமாகப் பயன்படுகிறதே தவிர வாங்கற் சாதனமாகப் பயன்படவில்லை, கறாராகச் சொல்வதெனில் "சுற்றோட்ட ஊடகமாகக் கூட" பயன்படவில்லை என்பதாகக் கொள்வோமாயின், 200 $I_s$, 200 $II_c$ (பிரிவு 1) ஆகிய இரு தொகுதி

சரக்குகளும் மதிப்பில் சரிசமமானவையாக இருப்பதால், 200 பெறுமானமுள்ள உற்பத்திச் சாதனங்கள் 200 பெறுமானமுள்ள நுகர்வுப் பண்டங்களுக்குப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுவதால், இங்கே பணமானது கருத்தளவில் மட்டுமே பயன்படுகிறது. உண்மையில் எத்தரப்பும் மிச்சத் தொகையாக சுற்றோட்டத்துள் பணம் செலுத்த வேண்டியதில்லை என்பது தெளிவாகிறது. ஆகவே பிரச்சினையை அதன் தூய வடிவில் காணும் பொருட்டு, துறை Iஇன் தரப்பிலிருந்து 200 $\mathrm{I}_s$ ஆகிய சரக்குகளையும், துறை IIஇன் தரப்பிலிருந்து இவற்றுக்குச் சமதையான 200 $\mathrm{II}_c$ (பிரிவு 1) ஆகிய சரக்குகயையும் நீக்கிவிட வேண்டும்.

ஒன்றையொன்று நேர்செய்து கொள்ளும் சம மதிப்புள்ள இந்த இரு சரக்குத் தொகுதிகளையும் (I மற்றும் II) நீக்கிய பின்னர், பிரச்சினை அதன் தூய வடிவில் வெளிப்படும் இந்நிலையில் பரிவர்த்தனைக்காக எஞ்சியிருப்பவை இவையே:

I. சரக்குகளாக $200_s$.

II. (1) பணமாக $200_c$+(2) சரக்குகளாக $200_c$

துறை II, பிரிவு 1 முதலாளிகள் பணமாக 200ஐக் கொடுத்து தமக்கு வேண்டிய நிலை-மூலதனக் கூறுகளான 200 $\mathrm{I}_s$ஐ வாங்குகிறார்கள் என்பது தெளிவாகிறது. துறை II பிரிவு 1 முதலாளிகளது நிலை-மூலதனம் இவ்விதம் பண்ட வகையில் புதுப்பிக்கப்படுகிறது; துறை Iஇன் 200 பெறுமானமுள்ள உபரி-மதிப்பானது சரக்கு வடிவிலிருந்து (உற்பத்திச் சாதனங்கள், அல்லது இன்னும் துல்லியமாகச் சொல்வதானால் நிலை-மூலதனக் கூறுகளின் வடிவிலிருந்து) பண வடிவுக்கு மாற்றப்படுகிறது. துறை I ஆனது இந்தப் பணத்தைக் கொண்டு துறை II, பிரிவு 2 முதலாளிகளிடமிருந்து நுகர்வுப் பண்டங்கள் வாங்குகிறது. இதனால் துறை IIக்கு ஏற்படும் விளைவு என்னவென்றால்: பிரிவு 1 முதலாளிகள் அவர்களது மாறா-மூலதனத்தின் நிலையான கூறு ஒன்றைப் பண்ட வகையில் புதுப்பித்துக் கொள்ள முடிகிறது; பிரிவு 2 முதலாளிகள் மற்றொரு கூறினை (அவர்களது நிலை-மூலதனத்தின் தேய்மானத்தை மாற்றீடு செய்கிற கூறினை) பணப் படிவாகப் பெற்றுக் கொள்ள முடிகிறது. இந்த மற்றொரு கூறும் பண்ட வகையில் புதுப்பிக்கப்பட வேண்டிய நிலையை வந்தடையும் வரை ஒவ்வோர் ஆண்டும் இவ்வாறே தொடர்ந்து நடைபெறுகிறது.

இதற்கெல்லாம் முன்னிபந்தனை என்னவென்பது தெளிவாகவே விளங்குகிறது. துறை IIஇன் மாறா-மூலதனத்தினுடைய நிலை-மூலதனப் பகுதி இரு கூறுகளாகப் பிரிகிறது—ஒரு கூறு (பிரிவு 1) ஒவ்வோர் ஆண்டிலும் அதன் முழு மதிப்புக்கும் திரும்பப் பணமாக மாற்றப்பட்டு, பண்ட வகையில் புதுப்பிக்கப்பட வேண்டியதாகிறது; மற்றொரு கூறு அதன் பழைய தசையுருவிலேயே தொடர்ந்து செயல்பட்டு வருவதால் அதன் தேய்மானமாகிய மதிப்பிறக்கம் அதன்

செயற்பாட்டைக் கொண்டு உற்பத்தியாகிற சரக்குகளுக்குப் பெயர்த் திடப்பட்டு முதலில் பணமாக மாற்றீடு செய்யப்பட்டாக வேண்டிய தாகிறது. துறை IIஇன் மாறா-மூலதனத்தினுடைய நிலை-மூலதனப் பகுதியின் இந்த முதற் கூறானது இந்த இரண்டாவது கூறுக்கு ஏற்படுகிற வருடாந்தரத் தேய்மானத்துக்குச் சமமாய் இருத்தல் வேண்டும் என்பதே மேற்கூறிய முன்நிபந்தனை ஆகும். இத்தகைய சமன்பாடு ஒரே அளவுவீதத்தில் நடைபெறுவதாகிய சாமானிய மறு வுற்பத்திக்கு உரிய ஒரு விதியாய் இருப்பதாகத் தெரிகிறது. அதாவது உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்கிற துறை Iஇல் விகிதா சார உழைப்புப் பிரிவினையானது மாறாதிருக்க வேண்டும் என்றா கிறது—ஏனெனில் துறை I ஆனது ஒரு புறத்தில் துறை IIஇன் மாறா-மூலதனத்தின் சுழலும் கூறுகளையும், மறு புறத்தில் அதன் நிலை-மூலதனக் கூறுகளையும் உற்பத்தி செய்து தருகிறது.

இதனை இன்னும் நெருங்கிச் சென்று ஆராய்வதற்கு முன்னால், $II_c$*(1)*இன் எஞ்சிய பகுதி $II_c$*(2)*இன் எஞ்சிய பகுதிக்குச் சமமாய் இல்லாமல், பெரிதாகவோ சிறிதாகவோ இருந்தால் என்ன ஆகும் என்பதைப் பார்க்க வேண்டும். இரு நேர்வுகளையும் தனித்தனியே பரிசீலிப்போம்.

## முதலாம் நேர்வு

I. $200_s$

II. *(1) (பணமாக)* $220_c + (2)$ *(சரக்குகளாக)* $200_c$

இங்கே $II_c$*(1)* பணமாக £*200*ஐக் கொடுத்து *200* $I_s$ சரக்குகளை வாங்குகிறது. துறை I இந்தப் பணத்தைக் கொண்டு *200* $II_c$*(2)* சரக்குகளை வாங்குகிறது; அதாவது பணப் படிவாகத் திரள வேண்டிய நிலை-மூலதனப் பகுதியை வாங்குகிறது. இவ்வாறு இந்தப் பகுதி பணமாக மாற்றப்பட்டு விடுகிறது. ஆனால் பண மாகவே இருக்கும் *20* $II_c$*(1)* பண்ட வகையிலான நிலை-மூலதன மாகத் திரும்பவும் மாற்றப்பட முடியாமற் போகிறது.

$I_s$இல் எஞ்சும் பகுதியை *200* ஆகக் கொள்வதற்கு பதில் *220* ஆகக் கொள்வோமானால், *2000* Iஇல் *1,800*க்கு பதில் *1,780* மட்டுமே முந்தைய பரிவர்த்தனையில் கழிக்கப்படுகிறது என்றாகும். அப்போது இந்தச் சங்கடத்துக்கு இடமில்லாமற் போகும் என்பதாக நினைக்கத் தோன்றும். இப்படிக் கொள்வோமாயின் எஞ்சுகிறவை வருமாறு:

I. $220_s$

II. *(1) (பணமாக)* $220_c + (2)$ *(சரக்குகளாக)* $200_c$.

துறை II, பிரிவு *1* முதலாளிகள் பணமாக £*220*ஐக் கொடுத்து *220* $I_s$ஐ வாங்குகிறார்கள். துறை I இந்த £*200*ஐக் கொண்டு

*200 II$_c$(2)* சரக்குகளை வாங்குகிறது. ஆனால் துறை Iஇடம் இப்போது பணமாக £20 எஞ்சி விடுகிறது. உபரி-மதிப்பில் ஒரு பகுதியான £20ஐத் துறை I பணமாக வைத்திருக்க முடியுமே தவிர, அதனை நுகர்வுப் பண்டங்களுக்காகச் செலவிட முடியாது. இவ்வாறு இன்னலானது II$_c$, பிரிவு 1இலிருந்து Iக்கு மாறுகிறதே அல்லாமல் ஒழிந்து விடவில்லை.

மறு புறம் II$_c$, பிரிவு 1 ஆனது II$_c$, பிரிவு 2ஐ விடச் சிறிய தெனக் கொள்வோமானால், கிடைப்பவை வருமாறு:

### இரண்டாம் நேர்வு

I. (சரக்குகளாக) 200$_s$.

II. (1) (பணமாக) 180$_c$+(2) (சரக்குகளாக) 200$_c$.

துறை II (பிரிவு 1) பணமாக £180ஐக் கொடுத்துச் சரக்குகளாக 180 I$_s$ஐ வாங்குகிறது. துறை I இந்தப் பணத்தைக் கொண்டு துறை IIஇலிருந்து (பிரிவு 2) அதே மதிப்புள்ள சரக்குகளான 180 II$_c$(2)ஐ வாங்குகிறது. ஒரு தரப்பில் விற்கப்பட முடியாமல் 20 I$_s$ தங்குகிறது, இதே போல் மறு தரப்பில் 20 II$_c$(2) தங்கி விடுகிறது. ஆக 40 பெறுமானமுள்ள சரக்குகளைப் பணமாக மாற்ற முடியாமற் போகிறது.

Iஇன் எஞ்சிய பகுதியை 180 ஆகக் கொள்வதாலும் பயனில்லை. அப்போது துறை Iஇல் உபரி-மதிப்பு ஏதும் எஞ்சியிருக்காது என்பது மெய்தான். ஆனால் முன்போலவே இப்போதும் II$_c$ (பிரிவு 2)இல் உபரியாக 20 விற்றுப் பணமாக்கப்பட முடியாமல் தங்கி விடும்.

II (1) ஆனது II (2)ஐக் காட்டிலும் பெரிதாயிருக்கும் முதலாம் நேர்வில், II$_c$(1) தரப்பில் ஓர் உபரி பணமாக எஞ்சுகிறது. இதை நிலை-மூலதனமாக மாற்ற முடியவில்லை அல்லது I$_s$இன் எஞ்சிய பகுதியை II$_c$ (1)ஆகக் கொள்வோமாயின், அதே உபரி I$_s$இன் தரப்பில் எஞ்சி விடுகிறது. இதை நுகர்வுப் பண்டங்களாக மாற்ற முடியவில்லை.

II$_c$ (1) ஆனது II$_c$ (2)ஐ விடச் சிறிதாயிருக்கும் இரண்டாம் நேர்வில் 200I$_s$, II$_c$ (2) ஆகிய இரு தரப்புகளிலும் பணப் பற்றாக் குறையாகி விடுகிறது, இரு தரப்புகளிலும் சம மதிப்புள்ள உபரி சரக்குகளாக எஞ்சுகிறது. அல்லது I$_s$இன் எஞ்சிய பகுதியை II$_c$ (1) ஆகக் கொள்வோமாயின் II$_c$ (2) தரப்பில் பணப் பற்றாக் குறையாகி விடுகிறது, சரக்குகளில் ஓர் உபரி தங்கி விடுகிறது.

I$_s$இன் எஞ்சிய பகுதியை எப்போதுமே II$_c$ (1) ஆகக் கொள்வோமாயின் (உற்பத்தியை சரக்காணைகள் தீர்மானிக்கின்றன என் பதாலும், துறை I ஆனது துறை IIஇன் மாறா-மூலதனத்துக்காக்

ஓராண்டில் நிலை-மூலதனக் கூறுகளை அதிகமாகவும் அடுத்த ஆண்டில் சுழல்-மூலதனக் கூறுகளை அதிகமாகவும் உற்பத்தி செய்வதால் மறுவுற்பத்தி எவ்வகையிலும் மாறி விடுவதில்லை என்பதாலும் இப்படி அனுமானித்துக் கொள்ள முடிகிறது) முதலாம் நேர்வில் $I_s$ஐ நுகர்வுப் பண்டங்களாக மாற்ற வேண்டுமானால் துறை I அதைக் கொண்டு துறை IIஇன் உபரி-மதிப்பில் ஒரு பகுதியை வாங்குவதும், துறை II அதனை நுகர்ந்து விடாமல் பணமாகத் திரட்டுவதும் அவசியமாகும். இரண்டாம் நேர்வில், துறை I இப்பணத்தைச் செலவிடுவதாக அனுமானித்துக் கொண்டாலன்றி பரிகாரம் காண முடியாது; இந்த அனுமானம் ஏற்கெனவே நாம் நிராகரித்து விட்ட ஒன்றாகும்.

$II_c$ *(1)* ஆனது $II_c$ *(2)*ஐ விடப் பெரிதாயிருக்குமானால், $I_s$இன் பண உபரியை ஈடேற்றம் செய்வதற்கு அயல் நாட்டுச் சரக்குகளை இறக்குமதி செய்தாக வேண்டும். இதற்கு மாறாக $II_c$ *(1)* ஆனது $II_c$ *(2)*ஐ விடச் சிறியதாய் இருக்குமானால், உற்பத்திச் சாதனங்களாகிய $II_c$இன் தேய்மானப் பகுதியை ஈடேற்றம் செய்வதற்காக துறை IIஇன் சரக்குகளை ஏற்றுமதி செய்தாக வேண்டும். ஆதலால் இரு நேர்வுகளிலுமே வெளிநாட்டு வர்த்தகம் அவசியமாகிறது.

மாற்றமில்லாத அளவுவீதத்திலான மறுவுற்பத்தியைப் பரிசீலிக்கையில் எல்லாத் தொழிற் கிளைகளின் உற்பத்தித் திறனும், எனவே அவற்றின் சரக்குகளது விகிதாசார மதிப்புறவுகளும் மாறாதிருப்பதாய்க் கொண்டாக வேண்டும் என்ற போதிலும், $II_c$ *(1)* ஆனது $II_c$ *(2)*ஐ விடப் பெரிதாகவோ சிறிதாகவோ இருக்கிற மேற்கூறிய இரு நேர்வுகளும் விரிந்து செல்லும் அளவுவீதத்திலான உற்பத்திக்குக் கருத்துக்குரியவையாகவே இருக்கும்; அங்கே இந் நேர்வுகள் தவிர்க்க முடியாதவை.

### *3. முடிவுகள்*

நிலை-மூலதனத்தின் மாற்றீடு தொடர்பாக, பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்:

ஏனைய எல்லா நிலைமைகளும் மாறாதிருக்க, அதாவது உற்பத்தியின் அளவுவீதம் மட்டுமல்லாமல் முக்கியமாய் உழைப்பின் உற்பத்தித் திறனும் மாறாதிருக்க, $II_c$இன் நிலை-மூலதனக் கூறில் சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு இன்னும் பெரிய பகுதி காலாவதியாகுமானால், எனவே இன்னும் பெரிய பகுதியைப் பண்ட வகையில் புதுப்பிக்க வேண்டியிருக்குமானால், இன்னும் காலாவதியாகாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கிற, காலாவதியாகும் நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற நிலை-மூலதனப் பகுதியானது (இந்த நிலை-மூலதனப் பகுதியை இப்போதைக்கு, அதாவது காலாவதியாகிற நாள் வரும் வரை பணமாக

மாற்றீடு செய்தாக வேண்டும்) அதே விகிதத்தில் சுருங்கிச் செல்ல வேண்டும். ஏனெனில் நமது அனுமானப் படி, துறை IIஇல் செயல்படும் நிலை-மூலதனப் பகுதியின் மொத்தத் தொகை (மதிப்பும் அடங்கலான மொத்தத் தொகை) மாறாமல் இருந்தாக வேண்டும். ஆயினும் இதனால் பின்வரும் நிலைமை எழுகிறது: முதலாவதாக, துறை Iஇன் சரக்கு-மூலதனத்தில் முன்னிலும் பெரிய பகுதி $II_c$இன் நிலை-மூலதனக் கூறுகளாய் இருப்பின், அதற்கேற்ப முன்னிலும் சிறிய பகுதியே $II_c$இன் சுழல்-மூலதனக் கூறுகளாய் இருக்கும். ஏனென்றால் $II_c$க்காக துறை I உற்பத்தி செய்கிற மொத்த அளவு மாறாமல் இருந்தாக வேண்டும். இந்தக் கூறுகளில் ஒன்று அதிகரித்தால் மற்றொன்று குறைகிறது, ஒன்று குறைந்தால் மற்றொன்று அதிகரிக்கிறது. மறு புறத்தில் துறை IIஇன் மொத்த உற்பத்தியும் மாறாமல் இருந்தாக வேண்டும். ஆனால் அதன் கச்சாப் பொருட்களும் பூர்த்தியாகாத உற்பத்திப் பொருட்களும் துணைப் பொருட்களும் (அதாவது துறை IIஇனது மாறா-மூலதனத்தின் சுழலும் கூறுகள்) குறைந்து விடும் போது இது எப்படிச் சாத்தியம்? இரண்டாவதாக, $II_c$இன் நிலை-மூலதனக் கூறில் முன்னிலும் பெரிய பகுதி பணமாகப் புதுப்பிக்கப்பெற்று, பணமாக இருப்பதானது திரும்பத் தசையுருவுக்கு மாற்றப்படுவதற்காக துறை Iக்குச் செல்கிறது. ஆகவே துறைகள் Iக்கும் IIக்கும் இடையே அவற்றின் சரக்குப் பரிவர்த்தனைக்காகச் சுற்றியோடுகிற பணத்தை அன்னியில், கூடுதல் பணமும் துறை Iக்குப் போய்ச் சேருகிறது. இந்தக் கூடுதல் பணம் வாங்கற் சாதனத்துக்குரிய ஒருசார்பான பணிக்கு வேண்டியதாகுமே அல்லாமல் பரஸ்பர சரக்குப் பரிவர்த்தனைக்கு வேண்டிய பணமல்ல. ஆனால் அதே போது சரக்குகளாகிய $II_c$இல் தேய்மான மதிப்புச் சமதையாய் இருக்கிற பகுதியானது—துறை Iஇன் சரக்குகளுக்கு அல்லாமல் அதன் பணத்துக்காகப் பரிவர்த்தனை செய்யப்படுகிற பகுதியானது—அதே விகிதத்தில் சுருங்குகிறது. வெறும் வாங்கற் சாதனமாக துறை IIஇலிருந்து துறை Iக்குச் செல்லும் பணம் அதிகரிக்கிறது. துறை IIஇன் சரக்குகளில் எவை தொடர்பாக துறை Iஐச் சேர்ந்தோர் வாங்குவோராக மட்டும் செயல்பட வேண்டியிருக்குமோ அவற்றின் தொகை குறைந்து போகிறது. ஆகவே $I_s$இல் முன்னிலும் பெரிய பகுதி—$I_v$ ஆனது ஏற்கெனவே துறை IIஇன் சரக்குகளாக மாறி விட்டது—துறை IIஇன் சரக்குகளாக மாற்றப்பட வேண்டியதாய் இராமல் தொடர்ந்து பணமாகவே இருந்து வருகிறது.

இதற்கு எதிரிடையான நேர்வை—குறிப்பிட்ட ஆண்டில் துறை IIஇல் காலாவதியான நிலை-மூலதனத்தின் மறுவுற்பத்தி குறைந்தும், அதற்கு மாறாகத் தேய்மானப் பகுதி கூடியும் போகிற நேர்வை—இதற்கு மேல் ஆராயத் தேவையில்லை.

மறுவுற்பத்தியானது மாறாமல் அதே அளவுவீதத்தில் நடை,

பெற்றாலும் கூட, நெருக்கடி—மிகையுற்பத்தி நெருக்கடி—மூளவே செய்கிறது.

சுருங்கக் கூறுமிடத்து, சாமானிய மறுவுற்பத்தி நடைபெறுகையில், ஏனைய நிலைமைகளும் மாறாதிருக்கையில்—முக்கியமாய் உழைப்பின் உற்பத்தித் திறனும், மொத்த அளவும், மும்முரமும் மாறாதிருக்கையில்—காலாவதியாகிற (எனவே புதுப்பிக்க வேண்டிய) நிலை-மூலதனத்துக்கும், தொடர்ந்து தன் பழைய தசையுருவில் செயல்பட்டு வருகிற (தன் தேய்மானத்துக்கு மாற்றீடு செய்வதற்கு வேண்டிய மதிப்பை மட்டும் உற்பத்திப் பண்டங்களோடு சேர்க்கிற) நிலை-மூலதனத்துக்கும் இடையிலான விகிதாசாரம் மாறாதிருப்பதாகக் கொள்ளா விட்டால், முதலாம் நேர்வில் மறுவுற்பத்தி செய்தாக வேண்டிய நிலை-மூலதனக் கூறுகளின் திரள் அதிகரித்துச் செல்ல, மறுவுற்பத்தி செய்தாக வேண்டிய சுழல்-மூலதனக் கூறுகளின் திரள் மாறாமல் அப்படியே இருக்கும். ஆகவே துறை Iஇன் மொத்த உற்பத்தி பெருகியாக வேண்டும், இல்லையேல் பண உறவுகளை [money-relations] ஒதுக்கி விட்டுப் பார்த்தாலும் கூட, மறுவுற்பத்தி பற்றாக்குறையாகி விடும்.

இரண்டாம் நேர்வில், துறை IIஇல் பண்ட வகையில் மறுவுற்பத்தி செய்தாக வேண்டிய நிலை-மூலதனத்தின் அளவு விகிதாசாரத்தில் குறைந்து, இதனால் துறை IIஇல் இப்போதைக்குப் பணமாக மட்டுமே மாற்றீடு செய்தாக வேண்டிய நிலை-மூலதனக் கூறு அதே விகிதத்தில் அதிகரிக்குமானால், துறை I மறுவுற்பத்தி செய்கிற துறை IIஇன் மாறா-மூலதனத்தின் சுழலும் கூறுகள் (துறை I இவற்றை மறுவுற்பத்தி செய்கிறது) அளவில் மாறாமல் இருக்கும், அதே போது மறுவுற்பத்தி செய்தாக வேண்டிய நிலை-மூலதனக் கூறுகளின் அளவு குறைந்து விடும். இதன் விளைவாக, துறை Iஇன் மொத்த உற்பத்தி குறைந்து விடும். இல்லையேல் (முன்பு பற்றாக்குறையாகியது போல்) இப்போது உபரியாகி விடும்—இந்த உபரியைப் பணமாக்குவதற்கு வழி இருக்காது.

அதே உழைப்பின் உற்பத்தித் திறனையோ, கால அளவையோ, மும்முரத்தையோ அதிகமாக்குவதன் மூலம் முதலாம் நேர்வில் முன்னிலும் கூடுதலாய் உற்பத்தி செய்து பற்றாக்குறையை இவ்விதம் சரி செய்யலாம் என்பது மெய்தான். ஆனால் துறை Iஇல் ஓர் உற்பத்திக் கிளையிலிருந்து இன்னோர் உற்பத்திக் கிளைக்கு மூலதனமும் உழைப்பும் இடம் பெயராமல் மேற்கூறிய மாற்றம் ஏற்பட முடியாது. இப்படிப்பட்ட இடப் பெயர்ச்சியால் குறுங்கால ஒழுங்குக் குலைவுகள் ஏற்படவே செய்யும். அது மட்டுமல்ல, உழைப்பின் கால அளவும் மும்முரமும் உயருகிற அதே அளவுக்கு துறை I ஆனது முன்னிலும் அதிகமான மதிப்பைக் கொடுத்து துறை IIஇடமிருந்து முன்னிலும் குறைவான மதிப்பை வாங்க வேண்டியிருக்கும், அதாவது துறை Iஇன் உற்பத்திப் பண்டத்துக்கு மதிப்பிறக்கம் ஏற்பட்டு விடும்.

இரண்டாம் நேர்வில் விளைவு இதற்கு நேர்மாறானதாய் இருக்கும். துறை I அதன் உற்பத்தியைச் சுருக்கிக் கொள்ள வேண்டியிருக்கும், இத்துறையின் தொழிலாளர்களும் முதலாளிகளும் இதனால் நெருக்கடிக்கு உள்ளாக நேரும்; அல்லது, உபரியாக உற்பத்தி செய்தாக வேண்டியிருக்கும், அப்போதும் விளைவு நெருக்கடிக்கு வழி கோலுவதாகவே இருக்கும். அதனளவில் நெருக்கடி தீயதல்ல, ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் அது தீயதாகவே இருக்கிறது.

இரு நேர்வுகளிலும் அந்நிய வர்த்தகம் உதவக் கூடும். முதலாவதில் துறை Iஇடம் பணமாக இருக்கும் சரக்குகளை நுகர்வுப் பண்டங்களாக மாற்றுவதற்கும், இரண்டாவதில் உபரியாய் இருக்கும் சரக்குகளைக் கழித்துக் கட்டுவதற்கும் அந்நிய வர்த்தகம் பயன் படக் கூடும். ஆனால் அந்நிய வர்த்தகம் சிற்சில கூறுகளையும் (அவற்றின் மதிப்பையும்) மாற்றீடு செய்வதோடு நில்லாமல், முரண்பாடுகளை மேலும் விரிவான மண்டலத்துக்குப் பெயர்த்து, மேலும் கூடுதலான வீச்சுடையதாக்குகிறது.

மறுவுற்பத்திக்கான முதலாளித்துவ வடிவம் ஒழிக்கப்படுமாயின் நிலை-மூலதனத்தின் (இங்கே நமது உதாரணத்தில் நுகர்வுப் பண்ட உற்பத்தியில் ஈடுபட்டு வரும் நிலை-மூலதனத்தின்) காலாவதியாகி விடுகிற, அதனால் பண்ட வகையில் மாற்றீடு செய்ய வேண்டியதாகிற பகுதியின் பருமன் அடுத்தடுத்து வரும் ஆண்டுகளில் வெவ்வேறானதாய் இருப்பது ஒன்றே பிரச்சினை என்றாகி விடும். குறிப்பிட்ட ஓராண்டில் இந்தப் பருமன் மிகப் பெரிதாகி விடுமானால் (மனிதர்களது விவகாரத்தில் ஆவதைப் போல் மரண விகிதம் சராசரியை விடப் பெரிதாகி விடுமானால்), அடுத்த ஆண்டில் நிச்சயமாய் அதே அளவுக்குச் சிறிதாகி விடும். இதனால் நுகர்வுப் பண்டங்களின் வருடாந்தர உற்பத்திக்கு வேண்டிய கச்சாப் பொருட்கள், பூர்த்தியாகாத உற்பத்திப் பொருட்கள், துணைப் பொருட்கள் ஆகியவற்றின் அளவு — ஏனையவை மாறாதிருப்பதாகக் கொள்வோமாயின் — குறைந்து விடுவதில்லை. ஆகவே உற்பத்திச் சாதனங்களின் மொத்த உற்பத்தி முதலாம் நேர்வில் அதிகரிக்கவும், இரண்டாம் நேர்வில் குறையவும் வேண்டியிருக்கும். தொடர்ச்சியான ஒப்பீட்டு மிகையுற்பத்தியைக் [relative over-production] கொண்டுதான் இதற்குப் பரிகாரம் காண முடியும். ஒரு புறத்தில், நேரடியாகத் தேவைப்படுவதைக் காட்டிலும் கூடுதலான அளவு நிலை-மூலதனத்தை உற்பத்தி செய்ய வேண்டியிருக்கும்; மறு புறத்தில் — இது மிகவும் முக்கியம் — கச்சாப் பொருள் முதலானவற்றை நேரடியான வருடாந்தரத் தேவையைக் காட்டிலும் கூடுதலாய் உற்பத்தி செய்து இருப்பில் வைக்க வேண்டியிருக்கும் (முக்கியமாய் வாழ்வுச் சாதனங்களின் விவகாரத்தில் இவ்வாறே நடைபெற வேண்டியிருக்கும்). இம்மாதிரியான மிகையுற்பத்தி சமுதாயமானது தன்னுடைய மறுவுற்பத்திக்கு

வேண்டிய பொருட் சாதனங்கள் மீது கட்டுப்பாடு செலுத்துவதற்கு ஒப்பானதாகும். ஆனால் முதலாளித்துவ சமுதாயத்தில் இது ஓர் அராஜக அமிசமாகி விடுகிறது.

நிலை-மூலதனத்தின் இந்த உதாரணம் மாறா அளவுவீதத்திலான மறுவுற்பத்தி தொடர்பாய் எடுப்பான ஒன்றாய்த் தெரிகிறது. நிலை-மூலதன உற்பத்திக்கும் சுழல்-மூலதன உற்பத்திக்கும் இடையிலான விகிதம் சரியாய் இல்லாமற் போவதுதான் நெருக்கடிகளுக்கான காரணம் என்கிற வாதம் பொருளாதார அறிஞர்களுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. நிலை-மூலதனத்தைப் பழுதின்றிப் பாதுகாத்து வந்தாலே போதும், இந்த விகித ஒழுங்கின்மை ஏற்பட்டு விட முடியும், ஏற்பட்டே ஆக வேண்டும் என்பது—ஏற்கெனவே செயல் பட்டு வரும் சமுதாய மூலதனத்தினுடைய சாமானிய மறுவுற்பத்தியின் அடிப்படையில் குற்றங் குறையின்றி முறைப்படி உற்பத்தி நடை பெறுவதாகக் கொள்ளும் போது கூட இந்த விகித ஒழுங்கின்மை ஏற்பட்டு விட முடியும், ஏற்பட்டே ஆக வேண்டும் என்பது —இவர்களுக்கு நூதனமான விஷயமாய் இருக்கிறது.

## XII. பணப் பொருளின் மறுவுற்பத்தி

ஒரு விவரத்தை—தங்கம், வெள்ளி இவற்றின் வருடாந்தர மறுவுற்பத்தியை—இது வரை நாம் கவனியாது விட்டு வந்துள்ளோம். சொகுசுப் பண்டங்களுக்கும் பொன் வேய்தல், முலாமிடுதல் போன்றவற்றுக்கும் வேண்டிய கச்சாப் பொருளாக மட்டும் பயன் படுகையில் தங்கமும் வெள்ளியும் ஏனைய பொருட்களைப் போன் றவையே, தனிப்பட அவை குறித்துச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால் பணப் பொருளாகவும், ஆகவே உள்ளுறைப் பணமாகவும் அவை ஆற்றுகிற பணி முக்கியத்துவம் வாய்ந்தது. எளிதாக்கும் பொருட்டு, இங்கு நாம் தங்கத்தை மட்டும் பணப் பொருளாக எடுத்துக் கொள்கிறோம்.

பழைய விவரங்களின் படி உலக அளவில் தங்கத்தின் வருடாந்தர மொத்த உற்பத்தி 800,000 முதல் 900,000 இராத்தலாக இருந் தது; இது 1,100 முதல் 1,250 மார்க்கு பெறுமானமுடையதாகும். ஆனால் 1871 முதல் 1875 வரையிலான ஆண்டுகளுக்குரிய சரா சரியின் அடிப்படையில், தங்கத்தின் வருடாந்தர மொத்த உற்பத்தி 170,675 கிலோகிராம் மட்டுமே என்கிறார் சோயட்பீர்;[59] இதன் மதிப்பு சுமார் 476 மிலியன் மார்க்கு ஆகும். இதில் ஆஸ்திரேலியா சுமார் 167 மிலியன் மார்க்கும், அமெரிக்க ஐக்கிய அரசு 166 மிலியன் மார்க்கும், ருஷ்யா 93 மிலியன் மார்க்கும் உற்பத்தி செய்தன. எஞ்சியதை ஏனைய பல்வேறு நாடுகளும்—ஒவ்வொன்றும்

[59] அ. சோயட்பீர், Edelmetall-Produktion, கோதா, 1879.

10 மிலியன் மார்க்கும் குறைவான அளவில் — உற்பத்தி செய்கின்றன. இதே காலத்தில் வருடாந்தர வெள்ளி உற்பத்தி 2 மிலியன் கிலோ கிராமுக்குச் சற்றே குறைவாய் இருந்தது; இதன் மதிப்பு 354½ மிலியன் மார்க்கு ஆகும். இதில் மெக்சிகோ சுமார் 108 மிலியனும்; அமெரிக்க ஐக்கிய அரசு 102 மிலியனும், தென் அமெரிக்கா 67 மிலியனும், ஜெர்மனி 26 மிலியனும் உற்பத்தி செய்தன.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி கோலோச்சும் நாடுகளில், தங்கமும் வெள்ளியும் உற்பத்தி செய்வது அமெரிக்கா மட்டுமே. ஐரோப்பாவைச் சேர்ந்த முதலாளித்துவ நாடுகள் தங்களுக்குத் தேவையான தங்கத்தில் அனேகமாய் முழுவதையும், வெள்ளியில் பெரும் பகுதியையும் ஆஸ்திரேலியா, அமெரிக்க ஐக்கிய அரசு, மெக்சிகோ, தென் அமெரிக்கா, ருஷ்யா ஆகியவற்றிலிருந்து பெறுகின்றன.

இங்கே நாம் முதலாளித்துவப் பொருளுற்பத்தி நடைபெறும் நாட்டின் வருடாந்தர மறுவுற்பத்தியைப் பரிசீலித்து வருகிறோம். இம்மாதிரியான ஒரு நாட்டில் தங்கச் சுரங்கங்கள் இருப்பதாகக் கொள்கிறோம். ஏன் இப்படிக் கொள்கிறோம் என்றால்:

அந்நிய வர்த்தகம் இல்லாமல் முதலாளித்துவப் பொருளுற்பத்தி இல்லை. ஆனால் குறிப்பிட்ட அளவுவீதத்தில் இயல்பான வருடாந்தர மறுவுற்பத்தி நடைபெறுவதாகக் கொள்ளும் போது, வெளிநாட்டு வர்த்தகமானது உள்நாட்டுப் பண்டங்களை பிற பயன்-வடிவோ தசையுருவோ கொண்ட வெளிநாட்டுப் பண்டங்களால் மாற்றீடு செய்வதற்கு மேல் ஒன்றும் செய்யவில்லை என்பதாகவும் கொள்கிறோம் — அதாவது வெளிநாட்டு வர்த்தகம் மதிப்புறவுகளைப் பாதிப்பதில்லை, ஆகவே ''உற்பத்திச் சாதனங்கள்,'' ''நுகர்வுப் பண்டங்கள்'' ஆகிய இரு வகைகளும் ஒன்றுக்கொன்று பரிவர்த்தனையாகிற மதிப்புறவுகளையோ இந்த ஒவ்வொரு வகையிலும் உற்பத்திப் பண்டத்தின் மதிப்பானது பகுபட்டுப் பிரியக் கூடிய மாறா-மூலதனம், மாறும்-மூலதனம், உபரி-மதிப்பு ஆகியவற்றுக்கிடையிலான விகித உறவுகளையோ பாதிப்பதில்லை என்பதாகவும் கொள்கிறோம். ஆகவே ஓராண்டில் மறுவுற்பத்தி செய்யப்படும் பண்டங்களுடைய மதிப்பின் பகுப்பாய்வில் அந்நிய வர்த்தகத்தைக் கொண்டுவந்து புகுத்துவதால் குழப்பம் ஏற்படுமே தவிர, பிரச்சினையிலோ அதன் தீர்விலோ புதிதாய் ஏதும் வந்து சேர்ந்துவிடாது. ஆகவே வெளிநாட்டு வர்த்தகத்தை இங்கு நாம் கவனியாது ஒதுக்கி விடலாம். தங்கத்தை இவ்வாறு நாம் வருடாந்தர மறுவுற்பத்தியில் நேரடியாகவே பங்கு கொள்ளும் ஒன்றாகக் கொள்ள வேண்டுமே தவிர, பரிவர்த்தனையின் வாயிலாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சரக்காகக் கருத வேண்டியதில்லை.

பொதுவாக உலோகங்களின் உற்பத்தியைப் போலவே தங்கத்தின் உற்பத்தியும் உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்கிற துறை

Iஐச் சேர்ந்ததாகும். தங்கத்தின் வருடாந்தர உற்பத்தி 30 எனக் கொள்வோம் (வசதியின் பொருட்டே இந்த அனுமானம்; நமது குறிவரையின் ஏனைய அளவு விவரங்களோடு ஒப்பிடுமிடத்து உண்மையில் இது பன்மடங்கு கூடுதலாய் இருக்கும்). இந்தத் தங்க மதிப்பு $20_c + 5_v + 5_s$ என்பதாகப் பகுபடக் கூடியதாய் இருப்பதாகக் கொள்வோம். $20_c$ ஆனது $I_c$இன் ஏனைய கூறுகளுடன் பரிவர்த்தனையாக வேண்டும்—இதனை நாம் பிற்பாடு பரிசீலிப்போம்.* ஆனால் $5_v + 5_s$(I) என்பது $II_c$இன் கூறுகளுடன், அதாவது நுகர்வுப் பண்டங்களுடன் பரிவர்த்தனையாக வேண்டும்.

$5_v$ஐப் பொறுத்த வரை, தங்கம் உற்பத்தி செய்கிற ஒவ்வொரு தொழில் நிறுவனமும் முதலில் உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குகிறது—ஏற்கெனவே நாட்டிலுள்ள பண இருப்பில் ஒரு பகுதியைக் கொண்டு வாங்குகிறதே தவிர, தானே உற்பத்தி செய்யும் தங்கத்தைக் கொண்டு அல்ல. தொழிலாளர்கள் இந்த $5_v$ஐக் கொண்டு துறை IIஇலிருந்து நுகர்வுப் பண்டங்கள் வாங்குகின்றனர்; துறை II இந்தப் பணத்தைக் கொண்டு துறை Iஇலிருந்து உற்பத்திச் சாதனங்கள் வாங்குகிறது. II ஆனது Iஇலிருந்து சரக்குப் பொருளாகவும் பிறவாகவும் (அதன் மாறா-மூலதனத்தின் அடக்கக் கூறாக) தங்கம் (பெறுமானம் = 2) வாங்குவதாகக் கொள்வோம். அப்போது $2_v$ ஆனது, ஏற்கெனவே சுற்றோட்டத் துறையைச் சேர்ந்த பணமாக துறை Iஇன் தங்க உற்பத்தியாளர்களிடம் திரும்பிச் செல்கிறது. துறை II ஆனது அதற்கு மேல் தங்கப் பொருள் ஏதும் துறை Iஇடமிருந்து வாங்கா விடில், துறை I அதன் தங்கத்தைப் பணமாகச் சுற்றோட்டத்துள் செலுத்துவதன் மூலம் துறை IIஇலிருந்து சரக்குகள் வாங்குகிறது—தங்கத்தால் எந்தச் சரக்கையும் வாங்க முடியும். துறை Iஐச் சேர்ந்தோர் முன்போல் விற்போராகச் செயல்படாமல், இப்போது வாங்குவோராகச் செயல்படுகின்றனர் என்பது ஒன்றே இரு பரிவர்த்தனைகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு. துறை Iஐச் சேர்ந்த தங்க உற்பத்தியாளர்கள் எப்போது வேண்டுமானாலும் தங்கள் சரக்கை விற்க முடியும்; எப்போதுமே அது நேரடியாகப் பரிவர்த்தனையாகக் கூடிய வடிவில் இருக்கிறது.

நூல் உற்பத்தியாளர் ஒருவர் அவரது தொழிலாளர்களுக்கு $5_v$ செலுத்துவதாகவும், அவர்கள் அதற்குப் பிரதியாக—உபரி-மதிப்பைத் அன்னியில்—உற்பத்திப் பண்டமாகிய நூலை (பெறுமானம் = 5) நூற்றளிப்பதாகவும் கொள்வோம். தொழிலாளர்கள் இந்த 5ஐக் கொடுத்து நுகர்வுப் பண்டம் $II_c$ஐ வாங்குகிறார்கள். துறை II பணமாக 5ஐத் தந்து துறை Iஇடமிருந்து நூல் வாங்குகிறது; இவ்வாறு $5_v$ நூற்பாளரிடம் பணமாகத் திரும்பிச் செல்கிறது. $I_g$ ஆனது (தங்க உற்பத்தியாளர்களை $I_g$ எனக் குறிப்பிடுவோம்)

* பார்க்கவும்: பக்கம் 627இல் எங்கெல்ஸ் அடிக்குறிப்பு.—பதிப்பாசிரியர்.

ஏற்கெனவே சுற்றோட்டத் துறையைச் சேர்ந்த பணமான $5_v$ஐத் தொழிலாளர்களுக்கு முன்னீடு செய்கிறது. தொழிலாளர்கள் அதனை நுகர்வுப் பண்டங்களுக்காகச் செலவிடுகின்றனர். ஆனால் 5இல் 2 மட்டுமே துறை IIஇலிருந்து $I_g$க்குத் திரும்புகிறது. ஆயினும் $I_g$ ஆனவர் நூல் உற்பத்தியாளரைப் போலவே மறுவுற்பத்தி நிகழ்முறையைத் திரும்பவும் தொடங்க முடியும், ஏனெனில் அவரது தொழிலாளர்கள் அவருக்குத் தங்கமாக 5 எனும் மதிப்பை வழங்கியுள்ளனர். இதில் 2ஐ அவர் விற்றார், 3ஐக் கையில் வைத்துள்ளார். ஆகவே இவர் இந்த 3ஐ நாணயமாக்கினால்[60] போதும், அல்லது வங்கி நோட்டுகளாக மாற்றினால் போதும்—அவரது மாறும்-மூலதனம் முழுவதும் துறை IIஇன் இடையீடு இல்லாமலே நேரடியாகப் பணமாய் அவர் கைக்குத் திரும்பி விடும்.

வருடாந்தர மறுவுற்பத்தியின் இந்த முதலாவது நிகழ்முறையிலேயே, உள்ளபடியோ சாராம்சத்திலோ சுற்றோட்டத் துறைக்கு உரியதான பணத்தின் அளவில் மாற்றம் ஏற்பட்டு விடுகிறது. $II_c$ ஆனது $2_v$ ($I_g$)ஐ மூலப் பொருளாக வாங்குவதாகவும், $I_g$ ஆனது அதன் மாறும்-மூலதனத்தின் பண வடிவமாக துறை IIஇல் 3 எனும் மதிப்பினைத் திரும்பவும் முதலீடு செய்வதாகவும் அனுமானித்துக் கொண்டோம். புதிய தங்க உற்பத்தியால் கிடைத்த பணத்தில் 3 எனும் மதிப்பு துறை Iக்குத் திரும்பாமல் துறை IIஇலேயே தங்கி விட்டது. நமது அனுமானத்தின் படி துறை IIஇன் தங்கத் தேவை நிறைவு செய்யப்பட்டு விடுகிறது. 3 என்பது தங்கச் சேர்ப்பாக அதனிடம் இருந்து வருகிறது, அது துறை IIஇன் மாறா-மூலதன அடக்கக் கூறாக முடியாது. உழைப்புச் சக்தியை வாங்குவதற்குப் போதுமான பண-மூலதனம் IIஇடம் ஏற்கெனவே இருந்தது. மேலும் இந்தக் கூடுதல் $3_g$ ஆனது, மதிப்புத் தேய்மானக் கூறினை ஒதுக்கி விட்டுப் பார்த்தால், $II_c$இனுள் (இந்த $II_c$இன் ஒரு பகுதிக்காகவே அது பரிவர்த்தனை செய்யப்பட்டது) செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. ($II_c$ *(1)* ஆனது $II_c$ *(2)*ஐக் காட்டிலும் சிறிதாக இருக்குமானால்—இது தற்செயலாய் நேர்வதாகும்—இந்த $3_g$ ஆனது அந்த அளவுக்கு தேய்மானக் கூறினை ஈடு செய்ய மட்டுமே பயன்பட முடியும்.) மறு புறம், தேய்மானக் கூறினை ஒதுக்கி விட்டுப் பார்த்தாலும் கூட, $II_c$இன் சரக்கு-உற்பத்தி முழுவதும் உற்பத்திச் சாதனங்களாகிய $I_{(v+s)}$க்காகப் பரிவர்த்தனை செய்யப்பட்டாக வேண்டும். ஆகவே அவசியப் பண்டங்களாக இருந்தாலும், நுகர்வுப் பண்டங்களாக இருந்தாலும் இந்தப் பணம் முழுவதும் $II_c$இலிருந்து $II_s$க்கு மாற்றப்பட்டாக வேண்டும்;

---

60 "கணிச அளவிலான பொற்பாளம்...அதன் உடைமையாளர்களால் சான் பிரான்சிஸ்கோவில் இருக்கும் நாணயச் சாலைக்குக் கொண்டுசெல்லப்படுகிறது." தூதரகம், பிரதிநிதியகம் இவற்றின் செயலர்களது அறிக்கைகள், 1879, பாகம் III., பக்கம் 337.

இதற்கு ஈடான சரக்கு-மதிப்பு $II_s$இலிருந்து $II_c$க்கு மாற்றப்பட்டாக வேண்டும். உபரி-மதிப்பில் ஒரு பகுதி பணச் சேர்ப்பாவதுதான் இதனால் ஏற்படும் விளைவு.

மறுவுற்பத்தியின் இரண்டாவது ஆண்டில், வருடாந்தரத் தங்க உற்பத்தியில் அதே விகிதப் பங்கு தொடர்ந்து பணமாகப் பயன் படுத்தப்படுமானால், 2 ஆனது Igஇடம் திரும்பி வரும்; 3 ஆனது பொருள் வகையில் மாற்றீடு செய்யப்படும்; அதாவது ஒரு சேர்ப் பாக துறை IIஇல் மீண்டும் செலுத்தப்படும்.

பொதுவாக மாறும்-மூலதனத்தைப் பொறுத்த வரை, வேறு எந்த முதலாளியையும் போலவே Ig முதலாளியும் உழைப்புச் சக்தியை வாங்குவதற்காக இந்த மூலதனத்தை எப்போதும் பணமாய் முன்னீடு செய்தாக வேண்டும். vஐப் பொறுத்த வரை, அதனைச் செலவிட்டு துறை IIஇடமிருந்து பண்டம் வாங்குவது தொழிலாளர் களே தவிர அவரல்ல; ஆகவே துறை II முன்முயற்சி எடுத்தாலன்றி அவர் பண்டம் வாங்குகிறவராக முன்வந்து இத்துறையினுள் தங்கத் தைச் செலுத்த வேண்டியிராது. துறை II ஆனது தனது மாறா-மூலதனமான $II_c$ஐப் பணப் பொருளாக மாற்றும் பொருட்டு அவரிடமிருந்து பணப் பொருள் வாங்க வேண்டியிருக்கும் போது, துறை Iஇன் ஏனைய முதலாளிக்குத் திரும்பி வருவது போலவே அவருக்கும் $(Ig)_v$இல் ஒரு பகுதி திரும்பி வருகிறது. துறை II இப் படி வாங்க வேண்டியிராத போது, அவர் தமது vஐ நேரடியாகத் தமது உற்பத்திப் பொருளிலிருந்தே தங்கமாக மாற்றீடு செய்து கொள் கிறார். ஆனால் பணமாக அவர் முன்னீடு செய்கிற v ஆனது துறை IIஇலிருந்து அவருக்குத் திரும்பாததன் அளவுக்கு ஏற்ப ஏற்கெனவே இருந்து வரும் சுற்றோட்டச் சாதனத்தில் ஒரு பகுதி (துறை Iஇடமிருந்து வரப்பெற்றதும், திரும்பவும் அத்துறைக்குப் போய்ச் சேராததுமான இந்தப் பகுதி) துறை IIஇல் பணச் சேர்ப் பாக மாற்றப்படுகிறது. இதனால் துறை Iஇன் உபரி-மதிப்பில் ஒரு பகுதி நுகர்வுப் பண்டங்களுக்காகச் செலவிடப்படாமற் போகிறது, ஓயாமல் புதிய தங்கச் சுரங்கங்கள் திறக்கப்படுகின்றன; அல்லது மூடப்பெற்ற பழைய சுரங்கங்கள் திரும்பத் திறக்கப்படுகின்றன. ஆகவே Ig முதலாளி v ஆக முதலீடு செய்ய வேண்டியிருக்கும் பணத்தில் ஒரு பகுதி புதிய தங்க உற்பத்திக்கு முன்னதாகவே இருந்து வரும் பணத்தைச் சேர்ந்ததாகவே இருக்கிறது. Ig முதலாளி இப் பணத்தைத் தமது தொழிலாளர்கள் மூலமாய் IIஇனுள் செலுத்து கிறார். இந்தப் பணம் Ig இடம் திரும்பி வரா விடில், அது துறை IIஇன் பணச் சேர்ப்பில் சேர்ந்து விடுகிறது.

ஆனால் $(Ig)_s$ஐப் பொறுத்த வரை, எப்போதுமே முதலாளி Ig வாங்குவோராகச் செயல்பட முடிகிறது. அவர் தமது sஐத் தங்க மாகச் சுற்றோட்டத்தினுள் செலுத்துகிறார்; அதற்குப் பிரதியாக நுகர்வுப் பண்டங்களான $II_c$ஐச் சுற்றோட்டத்திலிருந்து பெறுகிறார்.

இந்தத் தங்கத்தில் ஒரு பகுதி துறை IIஇல் மூலப்பொருளாகப் பயன்படுகிறது; இவ்விதம் இத்துறையினது திறனுடை-மூலதனத்தின் மாறாப் பகுதியாகிய cஇன் மெய்யான கூறாகச் செயல்படுகிறது. இப்படி நிகழாத போது, இந்தத் தங்கம் பணமாகவே நீடித்து வரும் $II_s$இன் பகுதியாகித் திரும்பவும் பணச் சேர்ப்பின் கூறாகிறது. அப்படியானால், ($I_c$ஐக் கவனியாது ஒதுக்குவோம், பிற்பாடு இதைப் பரிசீலனை செய்யலாம்[61]) முறைப்படியான திரட்டலுக்கு, அதாவது விரிதிற மறுவுற்பத்திக்கு இடமில்லாத சாமானிய மறுவுற்பத்தியிலும் கூட, பணச் சேமிப்பு அல்லது பணச் சேர்ப்பினைத் தவிர்க்க முடிவதில்லை என்பது தெளிவாகிறது. திரும்பத் திரும்ப ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பணச் சேர்ப்பு நடைபெறுகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி பற்றிய நமது பகுப்பாய்வின் தொடக்கத்தில் நாம் செய்து கொண்ட அனுமானத்திற்கு — அதாவது மறுவுற்பத்தி ஆரம்பமாகும் போதே துறை I, துறை IIஇன் முதலாளிகளிடம் சரக்குப் பரிவர்த்தனைக்கு ஏற்ற அளவில் ஏற்கெனவே பணம் கையிருப்பில் உள்ளதாக நாம் செய்து கொண்ட அனுமானத்திற்கு — இதுவேதான் அடிப்படை. சுற்றியோடுகிற பணம் தேய்வதால் ஏற்படுகிற தங்க இழப்பினைக் கழித்த பிற்பாடும் இவர்களிடம் இப்படி ஒரு சேமிப்பு இருந்து வருகிறது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி எவ்வளவுக்கு எவ்வளவு முன்னேறுகிறதோ முதலாளிகள் எல்லாரிடத்தும் அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய்ப் பணச் சேமிப்பு அதிகரிக்கிறது என்பதைக் கூறத் தேவையில்லை. ஆகவே, புதிய தங்க உற்பத்தியைக் கொண்டு ஆண்டுதோறும் இந்தப் பணச் சேர்ப்பு அதிகமாக்கப்பட வேண்டிய அளவும் குறைகிறது. ஆண்டுதோறும் புதிதாகச் சேர்க்கப்படும் தங்கத்தின் அறுதிப் பரிமாணம் பெரிதாய் இருப்பினும் பணச் சேர்ப்பு அதிகமாவதன் அளவு குறையவே செய்கிறது. ஆக, டூக் தெரிவித்த கருத்துக்கு எதிராய் எழுப்பப்பட்ட அதே ஆட்சேபத்துக்குத்தான்* மறுபடியும் திரும்பி வந்து சேருகிறோம்: சுற்றோட்டத்தினுள் செலுத்தப்படும் பணம் முழுதுமே, இறுதியாகப் பார்க்கையில், முதலாளி வர்க்கத்திடமிருந்தே வருவதாகக் கொள்ளப்பட வேண்டுமாதலால், ஒவ்வொரு முதலாளியும் வருடாந்தர உற்பத்தியிலிருந்து உபரி-மதிப்பைப் பணமாகப் பெற முடிவது எப்படி? அதாவது சுற்றோட்டத்துள் அவர் செலுத்துவதைக் காட்டிலும் அதிகமான பணத்தை அதிலிருந்து திரும்பப் பெற முடிவது எப்படி?

மேலே (அத்தியாயம் XVIIஇல்) விரித்து உரைக்கப்பட்ட கருத்துகளைத் தொகுத்து கூறி இக்கேள்விக்குப் பதிலளிக்கிறோம்:

---

[61] *எங்கெல்ஸ் குறிப்பு:* புதிதாக உற்பத்தி செய்யப்படும் தங்கம் துறை Iஇன் மாறா-மூலதனத்திற்குள் பரிவர்த்தனையாவது பற்றிய ஆய்வு ஏதும் கையெழுத்துப் பிரதியில் காணப்படவில்லை.

* *பார்க்கவும்: பக்கம் 434-35 — பதிப்பாசிரியர்.*

1) இங்கே தேவைப்படுகிற அனுமானம் ஒன்றே ஒன்றுதான், மறுவுற்பத்தியாகிற சரக்குத் தொகுதியின் பற்பல கூறுகளும் பரிவர்த்தனையாவதற்குப் போதுமான அளவில் அந்தந்த ஆண்டிலும் பணம் கிடைக்கிறது என்பதுதான். சரக்கு-மதிப்பில் ஒரு பகுதி உபரி-மதிப்பாய் இருப்பதனால் இது எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. உற்பத்தி முழுதும் தொழிலாளர்களுக்கே சொந்தம், ஆகவே அவர்களது உபரி-உழைப்பு அவர்களுக்கு உரியதாகுமே அல்லாமல் முதலாளிகளுக்கு உரியதல்ல என்பதாக வைத்துக் கொள்வோமாயின், சுற்றோட்டத்தில் உள்ள சரக்கு-மதிப்புகளின் அளவு அதனால் மாறுவதில்லை; மற்றவை மாறாதிருக்கும் வரை இச்சரக்குகளின் சுற்றோட்டத்துக்கு வேண்டிய பணத்தின் அளவும் மாறுவதில்லை. இவை இரண்டிலுமே, இந்த எல்லாச் சரக்கு-மதிப்புகளின் பரிவர்த்தனைக்கும் தேவைப்படும் பணம் எங்கிருந்து வருகிறது என்பதுதான் கேள்வியே தவிர, உபரி-மதிப்பைப் பணமாக மாற்றுவதற்குத் தேவைப்படும் பணம் எங்கிருந்து வருகிறது என்பதல்ல கேள்வி.

முன்பு பரிசீலித்ததையே திரும்பவும் ஒரு தரம் பரிசீலித்துப் பார்ப்போம். தனிப்பட்ட ஒவ்வொரு சரக்கும் c+v+s என்பதாகப் பகுபடுவதால், மூலதனமாகிய c+vஇன் சுற்றோட்டத்துக்காக ஒரு பணத் தொகையும், முதலாளிகளின் வருவாய் அல்லது உபரி-மதிப்பாகிய sஇன் சுற்றோட்டத்துக்காக மற்றொரு பணத் தொகையும் தேவைப்படுவது மெய்தான். தனிப்பட்ட முதலாளியானாலும் சரி, ஒட்டுமொத்தமாய் முதலாளி வர்க்கமானாலும் சரி, மூலதனமாக முன்னீடு செய்யப்படும் பணம் வேறு, வருவாயாகச் செலவிடப்படும் பணம் வேறு. இரண்டாவதாகக் குறிப்பிட்ட பணம் எங்கிருந்து வருகிறது? மொத்தமாய் முதலாளி வர்க்கத்தின் வசமுள்ள பணத்திலிருந்தே வருகிறது; அதாவது, ஒட்டுமொத்தமாய் சமுதாயத்தின் வசமுள்ள பணத்திலிருந்தே வருகிறது. இந்த ஒட்டுமொத்தப் பணத்தில் ஒரு பகுதி முதலாளிகளது வருவாயைச் சுற்றியோடச் செய்கிறது. புதிதாகத் தொழில் தொடங்கும் ஒவ்வொரு முதலாளியும் தமது பராமரிப்புக்கு வேண்டிய நுகர்வுப் பண்டங்களுக்காகச் செலவிடும் பணத்தை, அந்தத் தொழில் காலூன்ற முற்பட்டதும், தமது உபரி-மதிப்பைப் பணமாக மாற்றுவதற்குப் பயன்படுகிற பணத்தின் வடிவில் மீட்டுக் கொள்கிறார் என்று மேலே பார்த்தோம். ஆயினும் பொதுவாகப் பேசுமிடத்து, எல்லாச் சிக்கலுக்கும் பின்வரும் இரண்டும்தான் தோற்றுவாய்:

முதலாவதாக, நாம் மூலதனத்தின் சுற்றோட்டத்தையும் புரள்வையும் மட்டும் பார்ப்போமானால், அதாவது முதலாளியை முதலாளித்துவ நுகர்வாளராகவும் எல்லாரையும் போன்றவராகவும் நினைக்காமல் மூலதனத்தின் ஆளுருவாக மட்டும் கருதுவோமானால், அவர் தமது சரக்கு-மூலதனத்தின் அடக்கக் கூறுகளில் ஒன்றாய் உபரி-மதிப்பை ஓயாமல் சுற்றோட்டத்தினுள் செலுத்திக்

கொண்டிருப்பதைப் பார்க்கிறோமே தவிர, வருவாயாக அவர் கைவசம் பணம் இருப்பதைப் பார்ப்பதில்லை. உபரி-மதிப்பாகத் தமக்குக் கிடைத்திருப்பதை நுகர வேண்டுமெனச் சுற்றோட்டத்துள் அவர் பணத்தைச் செலுத்துவதைக் கவனிக்கத் தவறி விடுகிறோம்.

இரண்டாவதாக, முதலாளி வர்க்கம் குறிப்பிட்ட அளவு பணத்தை வருவாய் வடிவில் சுற்றோட்டத்துள் செலுத்துவதால், வருடாந்தர மொத்த உற்பத்தியைச் சேர்ந்த இந்தப் பகுதிக்குப் பிரதியாக அது ஒரு சமதையைக் கொடுப்பது போல் தோன்றுகிறது; இந்தப் பகுதி உபரி-மதிப்பைக் குறிப்பதாகும் என்பது புலப்படாமற் போகிறது. ஆனால் உபரி-மதிப்பை உருக்கொண்டுள்ள உபரி-உற்பத்தியானது எச்செலவும் இல்லாமலே முதலாளி வர்க்கத்துக்கு வந்து சேர்கிறது. ஒரு வர்க்கமாக முதலாளிகள் அதன் உடைமையாளர்களாகி இலவச மாகவே அதனை அனுபவிக்கிறார்கள். பணத்தின் சுற்றோட் டத்தால் இந்த உண்மையினை எவ்விதத்திலும் மாற்ற முடியாது. பணச் சுற்றோட்டத்தால் ஏற்படுகிற மாற்றமெல்லாம் என்ன வெனில், முதலாளி ஒவ்வொருவரும் அவரது உபரி-உற்பத்தியை அதே வடிவில் அப்படியே நுகர்வதற்கு பதில்—பொதுவாக இது சாத்தியமல்ல—அவர் வசப்படுத்தியுள்ள உபரி-உற்பத்திக்குச் சமமான அளவில் பல வகையான சரக்குகளையும் சமுதாயத்தின் வருடாந்தர உபரி-உற்பத்தியிலிருந்து எடுத்துத் தமதாக்கிக் கொள் கிறார். முதலாளி வர்க்கம் தனது வருவாயினைச் செலவிடும் பொருட்டு சுற்றோட்டத்துள் பணம் செலுத்துகிறது என்றால், இந்தப் பணத்தை அது சுற்றோட்டத்திலிருந்து திரும்ப எடுத்துக் கொள்ளவும் செய்கிறது என்பதையும், பணத்தைச் செலுத்துவதும் திரும்ப எடுத்துக் கொள்வதுமான இந்நிகழ்முறையை தொடர்ந்து மீண்டும் மீண்டும் நிகழ்த்திக் கொண்டிருக்க முடியும் என்பதையும் சுற்றோட்டப் பொறியமைவானது நமக்குத் தெளிவுபடுத்தியுள்ளது. ஆகவே ஒரு வர்க்கமாக முதலாளிகளை ஒட்டுமொத்தமாய் நோக்கு மிடத்து அவர்களது உபரி-மதிப்பைப் பணமாக மாற்றுவதற்கு வேண்டிய அளவில் எப்போதுமே அவர்களிடம் பணம் இருந்து வரக் காணலாம். முதலாளி இவ்விதம் அவரது நுகர்வுப் பண்ட நிதியத்துக்கு வேண்டிய சரக்குகளின் வடிவில் அவரது உபரி-மதிப்பைச் சரக்குச் சந்தையிலிருந்து வெளியே எடுத்துக் கொள்ளும் அதே நேரத்தில், இச்சரக்குகளை வாங்குவதற்காக அவர் செலவிடும் பணம் அவரிடமே திரும்பி வந்து சேருகிறது என்றால், சமதையாக எதையும் தராமலே சுற்றோட்டத்திலிருந்து சரக்குகளை எடுத்துக் கொள்கிறார் என்றுதான் இதற்கு அர்த்தம். அவர் இந்தச் சரக்கு களுக்காகப் பணம் தந்தாலும் கூட எச்செலவும் இல்லாமலேதான் இவை அவருக்குக் கிடைக்கின்றன. ஒரு பவுன் ஸ்டெர்லிங் கொடுத்து நான் சரக்குகள் வாங்குவதாகக் கொள்வோம். அந்தச் சரக்கு களை விற்பவர் எச்செலவும் இல்லாமலே எனக்குக் கிடைக்கிற

உபரி-உற்பத்திக்குப் பிரதியாக அந்தப் பவுனை என்னிடமே திருப்பித் தருகிறார் என்றால், இச்சரக்குகளை நான் இலவசமாகப் பெறுகிறேன் என்பது தெளிவாகவே விளங்குகிறது. ஓயாமல் இவ் வாறு நடைபெறுகிறது என்பதால் இவ்வுண்மை மாறி விடவில்லை— சரக்குகள் வாங்குவதற்காகத் தற்காலிகமாய் அந்தப் பவுன் என் கையை விட்டுப் பிரிந்த போதிலும், ஓயாமல் நான் சரக்குகளைச் சுற்றோட்டத்திலிருந்து எடுத்துக் கொண்டும் அதே போது அந்தப் பவுனை எப்போதும் என்னிடமே வைத்துக் கொண்டும் இருக் கிறேன் என்கிற உண்மை மாறி விடவில்லை. இலவசமாய் வரப் பெறும் உபரி-மதிப்புக்குரிய பணச் சமதையாக முதலாளிக்கு இந்தப் பணம் ஓயாமல் ஒவ்வொரு தரமும் திரும்பி வந்து சேருகிறது.

ஆதாம் ஸ்மித்தின் கருத்துப்படி, சமுதாய உற்பத்திப் பண்டத் தின் முழு மதிப்பும் வருவாயாக, v+sஆகப் பகுபடுகிறது என்றும், இவ்விதம் மாறா-மூலதன மதிப்பு பூஜியமாகக் கொள்ளப்படுகிறது என்றும் மேலே நாம் பார்த்தோம். தவிர்க்க முடியாத படி இதிலிருந்து பெறப்படுவது என்னவென்றால்: வருடாந்தர வரு வாயின் சுற்றோட்டத்துக்குத் தேவையான பணம், வருடாந்தர உற்பத்திப் பண்டம் முழுவதன் சுற்றோட்டத்துக்கும் போதுமான தாகவே இருக்கும். இதன் படி நமது எடுத்துக்காட்டில், 3,000 பெறுமானமுள்ள நுகர்வுப் பண்டங்களின் சுற்றோட்டத்துக்குத் தேவையான பணம், 9,000 பெறுமானமுள்ள வருடாந்தர உற்பத் திப் பண்டம் முழுவதன் சுற்றோட்டத்துக்கும் போதுமானதாய் இருக் கும். ஆதாம் ஸ்மித்தின் கருத்து இது. அப்படியே இதை தா. டூக்கும் திருப்பிச் சொல்கிறார். வருவாயின் ஈடேற்றத்துக்குத் தேவைப்படும் பணத்தின் அளவுக்கும் சமுதாய உற்பத்திப் பண்டம் முழுவதையும் சுற்றியோடச் செய்வதற்குத் தேவைப்படும் பணத்தின் அளவுக்கு மான விகிதம் பற்றிய ஒரு தவறான கருத்து இது. மொத்த வருடாந் தர உற்பத்தியின் பொருட் கூறுகளும் மதிப்புக் கூறுகளும் மறுவுற் பத்தியாகி ஆண்டுதோறும் மாற்றீடு செய்யப்படுவதைப் புரிந்து கொள்ளாததாலும் ஆலோசிக்காததாலும் ஏற்பட்ட விளைவாகிய இது முன்பே நிராகரிக்கப்பட்டதுதான்.

ஸ்மித்தும் டூக்கும் என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம்.

புத்தகம் II, அத்தியாயம் 2இல் ஸ்மித் சொல்கிறார்: "ஒவ் வொரு நாட்டிலும் சுற்றோட்டத்தை இருவேறு கிளைகளாகப் பிரிக்கலாம்: வணிகர்களுக்கிடையே நடைபெறும் சுற்றோட்டம், வணிகர்களுக்கும் நுகர்வாளர்களுக்கும் இடையே நடைபெறும் சுற்றோட்டம். காகிதமானாலும் உலோகமானாலும் எந்தக் காசை யும் ஒரு நேரம் முதலாவது சுற்றோட்டத்திலும் மற்றொரு நேரம் இரண்டாவது சுற்றோட்டத்திலும் ஈடுபடுத்தலாம் என்ற போதிலும், இரு சுற்றோட்டங்களும் ஓயாமல் ஒருங்கே நடைபெறுவதால், அந் தந்தக் கிளைக்கும் குறிப்பிட்ட அளவில் ஏதேனுமொரு வகைப்பட்ட

பணம் தேவைப்படுகிறது. வெவ்வேறு வணிகர்களிடையே சுற்றியோடும் சரக்குகளின் மதிப்பு வணிகர்களுக்கும் நுகர்வாளர்களுக்குமிடையே சுற்றியோடும் சரக்குகளின் மதிப்பை ஒருபோதும் விஞ்ச முடியாது. ஏனெனில் வணிகர்கள் வாங்குகிறவை எவையாயினும் முடிவில் அவை நுகர்வாளர்களிடம் விற்கப்பட்டாக வேண்டும். வணிகர்களிடையிலான சுற்றோட்டம் மொத்த விற்பனையின் மூலம் நடைபெறுவதால், ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் பொதுவாகக் கணிசமான பெருந் தொகை தேவைப்படுகிறது. மாறாக, வணிகர்களுக்கும் நுகர்வாளர்களுக்கும் இடையிலான சுற்றோட்டம் பொதுவாகச் சில்லறை விற்பனையின் மூலம் நடைபெறுவதால், பெரும்பாலும் இதற்கு மிகச் சிறு தொகைகளே தேவைப்படுகின்றன; ஒரு ஷில்லிங் அல்லது ஓர் அரைப் பென்னியே கூட போதுமானதாய் இருக்கும். ஆனால் சிறு தொகைகள் பெருந் தொகைகளை விட மிக விரைவாகச் சுற்றியோடுகிறவை.... ஆகவே, நுகர்வாளர்கள் எல்லாரது வருடாந்தர வாங்கல்கள் குறைந்தது'' [இந்தக் ''குறைந்தது'' பொருட் செறிவுடையதுதான்] ''வணிகர்கள் எல்லாரது வருடாந்தர வாங்கல்களுக்கு மதிப்பில் சரிசமமாய் இருப்பினும், பொதுவாக மிகச் சிறிய அளவுகளிலான பணத்தைக் கொண்டே நுகர்வாளர்கள் தமது வாங்கல்களை முடித்திட முடிகிறது....''

ஆதாம் ஸ்மித்தின் இந்த வாசகம் குறித்து தா. டூக் எழுதுகிறார் (*செலாவணிக் கொள்கை பற்றிய ஓர் ஆய்வு*, லண்டன், 1844, பக்கம் 34-36இல் பல இடங்கள்): ''இங்கே வேறுபடுத்திப் பிரித்துக் காட்டப்படுவதானது சாராம்சத்தில் சரியானதுதான், சந்தேகமில்லை....வணிகர்களுக்கும் நுகர்வாளர்களுக்குமிடையே நடைபெறும் பரிமாற்றம் — கூலியாகக் கொடுக்கப்படுவதும் இதில் அடங்கும். கூலிதான் நுகர்வாளரது பிரதான சாதனமாகிறது...வணிகர்களுக்கும் வணிகர்களுக்கும் இடையிலான பரிமாற்றங்கள் என்னும்போது உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளரிலிருந்து தொடங்கி இடைப்பட்ட தொழில் வகையிலும் பிற வகையிலுமான நிகழ்முறைகளின் எல்லாக் கட்டங்களையும் கடந்து சில்லறை வணிகர் அல்லது ஏற்றுமதியாளர் வரையிலும் நடந்தேறும் விற்றல்கள் யாவும் அடங்குவதாகப் புரிந்து கொள்ள வேண்டும் — இந்தப் பரிமாற்றங்கள் எல்லாம் மூலதன அசைவியக்கங்கள் அல்லது பெயர்ச்சி மாற்றங்களாகப் பகுபடுகிறவை. இங்கே மூலதனப் பெயர்ச்சி மாற்றங்கள் மிகப் பெருவாரியான பரிமாற்றங்களில் பணம், அதாவது வங்கி நோட்டுகள் அல்லது நாணயம் கைமாறுவதை — கற்பிதமாக அல்லாமல் பிண்டபூர்வமாய்க் கைமாறுவதைச் சொல்கிறேன் — குறிக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை, இம்மாற்றங்களால் உண்மையில் பணம் கைமாறுவதும் இல்லை. வணிகர்களுக்கும் வணிகர்களுக்கும் இடையிலான பரிமாற்றங்களின் மொத்த அளவு, இறுதியாகப்

பார்க்குமிடத்து, வணிகர்களுக்கும் நுகர்வாளர்களுக்கும் இடையிலான பரிமாற்றங்களின் அளவால் நிர்ணயிக்கப்படவும் வரம்பிடப்படவும் வேண்டும்.''

இந்தக் கடைசி வாக்கியம் தனித்து நிற்குமாயின், வணிகர்களுக்கும் வணிகர்களுக்கும் நடைபெறும் பரிவர்த்தனைகளுக்கும், வணிகர்களுக்கும் நுகர்வாளர்களுக்கும் நடைபெறும் பரிவர்த்தனைகளுக்கும் இடையே—அதாவது வருடாந்தர மொத்த வருவாயின் மதிப்புக்கும் இந்த வருவாயை உண்டாக்கும் மூலதனத்தின் மதிப்புக்கும் இடையே—ஒரு விகிதம் இருப்பதாக டூக் கூறுகிறார் என நினைக்கத் தோன்றும். அவர் அப்படி ஒன்றும் கூறவில்லை. ஆதாம் ஸ்மித்தின் கருத்தை அவர் வெளிப்படையாக ஆமோதித்து உறுதி செய்கிறார். ஆகவே அவரது சுற்றோட்டத் தத்துவத்தைத் தனிப்பட விமர்சிக்கத் தேவையில்லை.

2) தொழில் துறை மூலதனம் ஒவ்வொன்றும் செயல்படத் தொடங்கும் போது, அது தனது நிலை-மூலதனக் கூறு முழுவதற்குமான பணத்தை ஒரேயடியாக சுற்றோட்டத்துள் செலுத்துகிறது. ஆனால் இப்பணத்தை அது தனது வருடாந்தர உற்பத்திப் பண்டங்களை விற்று, நீண்ட பல ஆண்டுகளில் சிறிது சிறிதாய் மீட்டெடுக்கிறது. இவ்வாறு ஆரம்பத்தில் அது சுற்றோட்டத்துள் செலுத்தும் பணம் சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுக்கும் பணத்தைக் காட்டிலும் அதிகமாய் இருக்கிறது. தசையுருவில் மூலதனம் முழுதும் புதுப்பிக்கப்படும் ஒவ்வொரு தரமும் இதே போலத்தான் நடைபெறுகிறது. சில தொழில் நிலையங்களில் நிலை-மூலதனத்தைப் புதுப்பிக்க வேண்டியிருக்கிறது, அந்நிலையங்களில் ஒவ்வோர் ஆண்டிலும் இதே போலத்தான் சுற்றோட்டத்துள் அதிகமான பணம் செலுத்தப்பட்டு குறைவான பணம் வெளியே எடுக்கப்படுகிறது. நிலை-மூலதனம் பழுது பார்க்கப்படும், சன்னம் சன்னமாய்ப் புதுப்பிக்கப்படும் ஒவ்வொரு தரமும் பகுதியளவில் இதே போலத்தான் நடைபெறுகிறது. இவ்விதம் ஒரு புறத்தில் சுற்றோட்டத்துள் செலுத்தப்படுவதைக் காட்டிலும் அதிகமான பணம் வெளியே எடுக்கப்படுகிறது எனில், மறு புறத்தில் இதற்கு நேர் மாறானது நடைபெறுகிறது.

சில தொழிற் கிளைகளில், உற்பத்திக் காலம்—வேலைக் காலத்திலிருந்து வேறானதாகிய உற்பத்திக் காலம்—மிக நீண்டதாய் இருக்கிறது. இவற்றில் முதலாளித்துவ உற்பத்தியாளர்கள் இக்காலத்தின் போது சுற்றோட்டத்தினுள் தொடர்ந்து பணம் செலுத்துகிறார்கள். இந்தப் பணத்தில் ஒரு பகுதி வேலை செய்கிற உழைப்புச் சக்திக்கு விலை கொடுப்பதற்காகவும் மற்றொரு பகுதி உற்பத்திச் சாதனங்களை விலைக்கு வாங்குவதற்காகவும் செலுத்தப்படுகிறது. உற்பத்திச் சாதனங்கள் இவ்விதம் சரக்குச் சந்தையிலிருந்து நேரடியாக வெளியே எடுக்கப்படுகின்றன. நுகர்வுப் பண்டங்களில் ஒரு பகுதி,

தொழிலாளர்கள் தம் கூலியைச் செலவிடுவதால் சரக்குச் சந்தையி லிருந்து சுற்றடியாக வெளியே எடுக்கப்படுகிறது. மற்றொரு பகுதி முதலாளிகளால் சரக்குச் சந்தையிலிருந்து நேரடியாக வெளியே எடுக்கப்படுகிறது. முதலாளிகள் தமது சொந்த நுகர்வை ஒரு போதும் நிறுத்தி வைப்பதில்லை; ஆனால் இந்த நுகர்வுப் பண்டங் களுக்குச் சமதையான சரக்குகளை அவர்கள் சுற்றோட்டத்துள் விடுவதில்லை. இந்தக் காலத்தில் அவர்கள் சுற்றோட்டத்துள் செலுத்தும் பணம் சரக்கு-மதிப்பை — அதில் அடங்கிய உபரி-மதிப் பையும் சேர்த்து — பணமாக மாற்றுவதற்குப் பயன்படுகிறது. இந்தக் காரணி, முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் முன்னேறிய கட்டத் தில் கூட்டுப் பங்கு நிறுமங்களும் இன்ன பிறவும் மேற்கொள்கிற நீண்ட காலத் தொழில் முனைவுகள் தொடர்பாக மிகுந்த முக்கியத் துவம் பெறுகிறது. இருப்புப் பாதைகள் போடுதல், கால்வாய்கள் அமைத்தல், கப்பல் துறைகள் கட்டுதல், பெரிய நகராட்சிக் கட்டடங் கள் எழுப்புதல், இரும்புக் கப்பல் கட்டுதல், பெருவீத நிலவடிகால் அமைப்புகள் நிறுவுதல் முதலானவற்றை இம்முனைவுகளுக்கு உதாரணமாய்க் குறிப்பிடலாம்.

3) நிலை-மூலதனமாக முதலீடு செய்வதை விட்டு விடுவோ மானால், ஏனைய முதலாளிகள் உழைப்புச் சக்தியையும் சுழலும் அடிக்கூறுகளையும் வாங்குவதற்காக சுற்றோட்டத்துள் செலுத்து வதைக் காட்டிலும் அதிகமான பணத்தை சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுத்துக் கொண்டிருக்க, தங்கமும் வெள்ளியும் உற்பத்தி செய்யும் முதலாளிகள் சுற்றோட்டத்துள் பணம் மட்டுமே செலுத்து கிறார்கள் (கச்சாப் பொருளாகப் பயன்படுத்தப்படும் உயர்நிலை உலோகத்தைக் கவனியாது ஒதுக்கி விட்டு இப்படிச் சொல்கிறோம்). அதே போது அவர்கள் சுற்றோட்டத்திலிருந்து சரக்குகளை மட்டுமே வெளியே எடுக்கிறார்கள். தேய்மானமுறும் பகுதி தவிர்த்த மாறா-மூலதனமும், மாறும்-மூலதனத்தில் பெரும் பகுதியும், அவர்களால் சேமிக்கப்பட்டு வரும் பணச்சேர்ப்பு போக எஞ்சியுள்ள உபரி-மதிப்பும் ஆகிய எல்லாமே பணமாகச் சுற்றோட்டத்துள் செலுத்தப் படுகின்றன.

4) எல்லா வகையான பண்டங்களும் சரக்குகளாகச் சுற்றியோடு கின்றன — குறிப்பிட்ட ஓராண்டில் உற்பத்தி செய்யப்பட்டிராதவை யும் (மனைக்கட்டு, நிலம், வீடு போன்றவை), ஓராண்டுக்கும் அதிக மான உற்பத்திக் காலம் கொண்டவையும் (கால்நடை, கட்டுமான மரம், திராட்சைத் தேறல் போன்றவை) ஆகிய பலவும் சுற்றியோடு கின்றன. இவை குறித்தும் இவையொத்த பிற நிகழ்வுகள் குறித்தும் ஒன்றைத் தெளிவுபடுத்துவது முக்கியமாகும்: உடனடிச் சுற்றோட் டத்துக்குத் தேவைப்படும் பணத்தை அன்னியில், குறிப்பிட்ட அளவு பணம் உள்ளுறை நிலையில், செயல்படாத நிலையில் எப் போதுமே இருந்து வருவதைத் தெளிவுபடுத்த வேண்டும். உசுப்பி

விடப்படுமாயின் இந்தப் பணம் வெளிப்பட்டுச் செயல்பட முற்படக் கூடியது. அதோடு, மேற்கூறிய பண்டங்களின் மதிப்பு சன்னம் சன்னமாகவும் பையப் பையவுமே சுற்றியோடுகிறது. எடுத்துக் காட்டாக, வீடுகளின் மதிப்பு வாடகையின் வடிவில் பல்லாண்டு காலம் சுற்றியோடுகிறது.

மறு புறம், மறுவுற்பத்தி நிகழ்முறையின் எல்லா அசைவியக்கங் களும் பணச் சுற்றோட்டத்தின் வாயிலாக நடைபெறுபவை அல்ல. உற்பத்தியின் அடிக்கூறுகள் பெறப்பட்ட பின் உற்பத்தி நிகழ்முறை முழுதும் சுற்றோட்டத்திற்கு அப்பாற்பட்டதாகிறது. உற்பத்தியாளரது சொந்த நுகர்வுக்கும் திறனுடை நுகர்வுக்குமான உற்பத்திப் பண்டங்கள் யாவும் இதே போல் சுற்றோட்ட நிகழ்முறைக்கு அப்பாற்பட்டவையாகின்றன. விவசாயத் தொழிலாளர்களுக்கு உணவளிப்பதற்காக வழங்கப்படுகிற பண்டங்களும் இப்படிப் பட்டவையே.

ஆகவே, வருடாந்தரப் பொருளுற்பத்தியைச் சுற்றியோட வைப் பதற்கு வேண்டிய அளவிலான பணம் சமுதாயத்திடம் இருக்கிறது; இது சிறிது சிறிதாகச் சேமிக்கப்பட்டதாகும். தேய்ந்து வீணாகும் நாணயங்களால் ஏற்படும் இழப்பை ஈடு செய்கிற தங்கத்தை விலக்கி விடுவோமானால், இந்தப் பணம் நடப்பு ஆண்டில் உற்பத்தியாகிற மதிப்பைச் சேர்ந்ததல்ல.

இந்த விளக்கத்துக்கு முற்கோளாய் இருக்கும் அனுமானம் என்ன வென்றால்: பிரத்தியேகமாய் உயர்நிலை உலோகங்கள் மட்டுமே பணமாகச் சுற்றியோடுகின்றன என்பதும், அதோடு கூட ரொக்கப் பணத்துக்கு விற்பதும் வாங்குவதுமான மிக எளிய வடிவில் இந்தச் சுற்றோட்டம் நடைபெறுகிறது என்பதும்தான். ஆயினும் சாதாரண மான உலோக நாணயச் சுற்றோட்டத்தின் அடிப்படையிலும் கூட பணமானது கொடுப்புச் சாதனமாகவும் [means of payment] செயல்பட முடியும், வரலாற்றில் உண்மையில் இப்படிச் செயல் பட்டும் இருக்கிறது, இந்த அடிப்படையில் கடன்-செலாவணி அமைப்பும் கடன்-செலாவணிப் பொறியமைவின் அமிசங்களில் சிற்சிலவும் வளர்ந்திருக்கின்றன.

இந்த அனுமானம் ஆய்வுமுறை தொடர்பான காரணங்களை மட்டும் கருதிச் செய்யப்பட்டதல்ல என்றாலும், இந்தக் காரணங் களும் முக்கியமானவையே என்பதை டூக்கும் அவர் மரபினரும், அவர்தம் எதிராளிகளும் கூட, வங்கி நோட்டுகளின் சுற்றோட்டம் தொடர்பான சர்ச்சைகளில், முற்றிலுமான உலோகச் சுற்றோட்டம் எனும் கருதுகோளுக்கு ஓயாமல் திரும்ப வேண்டியிருந்ததானது நிரூபிக்கிறது. எல்லாம் முடிந்து போன பிறகே அவர்கள் இப்படித் திரும்ப வேண்டியதாயிற்று. அப்போதும் அவர்கள் மேம்போக் காகவே இதனைப் பரிசீலித்தார்கள். அவர்களால் இவ்வாறே பரிசீலிக்க முடிந்தது, ஏனென்றால் பகுப்பாய்விற்குத் தொடக்க

நிலையாக அமைய வேண்டிய இக்கருதுகோள் அவர்களுடைய ஆய்வினில் இடைக்குறிப்பாய் அமைவதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஆனால் பணச் சுற்றோட்டத்தை அதன் ஆதி வடிவில் பரிசீலிக்கும் எளிய ஆய்வானது—இந்தப் பணச் சுற்றோட்டம் இங்கே வருடாந்தர மறுவுற்பத்தி நிகழ்முறையின் உள்ளார்ந்த கூறாகிறது—பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துகிறது:

அ) முன்னேறிய முதலாளித்துவப் பொருளுற்பத்தியும், எனவே கூலிமுறை ஆதிக்க நிலையும் இருப்பதாகக் கொள்ளும் போது பண-மூலதனம் தெளிவாகவே மிக முக்கியப் பங்காற்றுகிறது, ஏனெனில் மாறும்-மூலதனம் இவ்வடிவில்தான் முன்னீடு செய்யப்படுகிறது. கூலி முறையின் வளர்ச்சியைத் தொடர்ந்து எல்லா உற்பத்திப் பண்டங்களும் சரக்குகளாக மாறி விடுகின்றன. ஆகவே அவை யாவும்—சில விதிவிலக்குகளைத் தவிர்த்து—அவற்றின் அசைவியக்கத்தின் ஒரு கட்டத்தில் பணமாக உருமாற்றம் பெற வேண்டியதாகிறது. சரக்குகள் இப்படிப் பணமாக மாறுவதற்குப் போதுமான அளவில் சுற்றோட்டத்தில் பணம் இருந்தாக வேண்டும். இந்தப் பணத்தில் பெரும் பகுதி கூலியாக வரப் பெறும் பணமாகும். உழைப்புச் சக்திக்கு விலை தரும் பொருட்டு தொழில் துறை முதலாளிகள் இதனை மாறும்-மூலதனத்தின் பண வடிவமாக முன்னீடு செய்கிறார்கள். பொதுவாகக் கூறுமிடத்து, இந்தப் பணம் தொழிலாளர்களது கையில் சுற்றோட்டச் சாதனமாக (வாங்கலுக்கான சாதனமாக) மட்டுமே செயல்படுகிறது. இந்த நிலைமை இயற்கைப் பொருளாதாரத்தில் [natural economy] காணக் கூடியதற்கு நேர்மாறானது. கொத்தடிமை முறையில் ஒவ்வொரு வடிவத்திலும் (பண்ணையடிமை முறை உட்பட) இயற்கைப் பொருளாதாரமே ஆதிக்க நிலையில் இருக்கிறது; ஆதிகாலச் சமுதாயங்களில் [primitive communities]—இவற்றில் கொத்தடிமை அல்லது அடிமை முறைக்குரிய நிலைமைகள் இருப்பினும் இல்லையேனும்—இயற்கைப் பொருளாதாரம் இன்னும் கூட அதிகமாய் ஆதிக்க நிலை வகிக்கிறது:

அடிமை முறையில், உழைப்புச் சக்தியை வாங்குவதில் முதலீடாகியுள்ள பண-மூலதனம் நிலை-மூலதனத்தின் பண வடிவமாகச் செயல்படுகிறது; அடிமையின் வாழ்வில் முனைப்பு வாய்ந்த காலம் கழிந்து செல்கையில் இது சிறிது சிறிதாகத்தான் மாற்றீடு செய்யப்படுகிறது. ஆதலால்தான் அதீனியர்கள் அந்தக் காலத்தில் அடிமையுடைமையாளருக்கு அவரது அடிமையைத் தொழில் துறையில் வேலை வாங்குவதன் மூலம் நேரடியாகவோ, அல்லது தொழில் துறையில் ஈடுபடும் பிற அதிபர்களிடம் (உதாரணமாக, சுரங்கத்தில் வேலை செய்வதற்காக) வாடகைக்கு விடுவதன் மூலம் சுற்றடியாகவோ கிடைக்கும் ஆதாயத்தை முன்னீடாகியுள்ள

பண-மூலதனத்திற்குக் கிடைக்கும் வட்டியாகவே (தேய்மான இழப் பீடாகவே) கருதினர். முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் தொழில் துறை முதலாளி உபரி-மதிப்பில் ஒரு பகுதியையும் நிலை-மூலதனத்தின் தேய்மானத்தையும் எப்படித் தமது நிலை-மூலதனத் திற்கான வட்டியாகவும் மாற்றீடாகவும் கணக்கு எழுதுகிறாரோ, அதே போலத்தான் அந்தக் காலத்தில் அதீனியர்களும் கருதினர். நிலை-மூலதனத்தை (வீடுகள், இயந்திரங்கள் முதலானவற்றை) வாடகைக்கு விடும் முதலாளிகளும் இதே முறையைத்தான் கைக் கொள்கிறார்கள். வெறும் வீட்டு வேலைக்கான அடிமைகளை—அவர்கள் அவசியப் பணிகளை ஆற்றினாலும் சரி, ஆடம்பரத்துக் காக வைத்துக் கொள்ளப்படும் சொகுசுப் பண்டங்களாய் இருந் தாலும் சரி—இங்கு நாம் குறிப்பிடவில்லை. அவர்கள் இக்கால வேலைக்கார வர்க்கத்துக்கு ஒப்பானவர்கள். ஆனால் அடிமை முறையும் கூட—கிரேக்கத்தையும் ரோமாபுரியையும் சேர்ந்த முன் னேறிய அரசுகளில் இருந்தது போல்—வேளாண்மை, பட்டறைத் தொழில், கப்பல் போக்குவரத்து முதலானவற்றில் திறனுடை உழைப்புக்கான பிரதான வடிவமாக இருக்குமாயின் இயற்கைப் பொருளாதாரத்துக்குரிய இயல்பு ஒன்றை விட்டொழிக்காமல் இருந்து கொள்கிறது. போர், கடற் கொள்ளை போன்றவற்றின் மூலம்தான் அடிமைச் சந்தையானது தனக்கு வேண்டிய உழைப்புச் சக்தியாகிய சரக்கின் வழங்கீடு சுருங்கி விடாமல் பார்த்துக் கொள் கிறது. இது பிறரது உழைப்புச் சக்தியை வலுவந்தமாகத் தனதாக்கு வதன் மூலம் நடைபெறும் கொள்ளையாகும், இதற்கு சுற்றோட்ட நிகழ்முறை வேண்டியதில்லை. அமெரிக்க ஐக்கிய அரசிலேயே கூட, கூலியுழைப்பு சார்ந்த வட மாநிலங்களுக்கும் அடிமை முறை சார்ந்த தென் மாநிலங்களுக்கும் இடையிலிருந்த எல்லைப் பிரதேசம் தென் பகுதிக்கான அடிமை வளர்ப்பு மண்டலமாக மாற்றப்பட்டு, அங்கே இவ்விதம் தயாராகிச் சந்தைக்கு வந்து சேரும் அடிமை வருடாந்தர மறுவுற்பத்திக் கூறாகிய பிறகு, நீண்ட காலம் வரை போதுமான தாய் இருக்கவில்லை. இதனால், சந்தையின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு ஆப்பிரிக்க அடிமை வாணிபத்தை முடிந்த வரை நெடுங்காலத்துக்கு நீட்டிக்க வேண்டியதாயிற்று.

ஆ) வருடாந்தர உற்பத்திப் பண்டத்தின் பரிவர்த்தனையில் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையில் பணம் ஓடிச் செல்வதும் மீண்டு வருவதுமான நிகழ்வுகள் தன்னியல்பாய் நடை பெறுகின்றன. நிலை-மூலதனம் அதன் முழு மதிப்புக்குமான அளவில் ஒரேயடியாக முன்னீடு செய்யப்படுகிறது. இம்மதிப்பை சுற்றோட்டத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் வெளியே எடுப் பதற்கு, அதாவது ஆண்டுதோறும் பணச் சேர்ப்புகளை உருவாக்கி நிலை-மூலதனத்தின் மதிப்பு முழுவதையும் மீண்டும் பண வடிவம் பெறச் செய்வதற்குப் பல்லாண்டு காலமாகிறது. இந்தப் பணச்

சேர்ப்புகளின் உருவாக்கம், ஆண்டுதோறும் புதிதாய் உற்பத்தி யாகும் தங்கத்தைக் கொண்டு இதற்கு இணையாக அமைந்திடும் சேர்ப்புகளின் உருவாக்கத்திலிருந்து முற்றிலும் வேறான ஒன்று. பணம் எவ்வளவு காலத்துக்கு முன்னீடு செய்யப்பட வேண்டும் என்பது சரக்குகளின் உற்பத்திக் காலத்தைப் பொறுத்தது. சரக்கை விற்றுச் சுற்றோட்டத்திலிருந்து பணத்தைத் திரும்ப வெளியே எடுக்கும் வரை, பணச் சேர்ப்பு ஒன்றை உருவாக்கி வர வேண்டும். பணம் எவ்வளவு காலத்துக்கு முன்னீடு செய்யப்பட வேண்டும் என்பது உற்பத்தி செய்யும் இடத்துக்கும் விற்பனைச் சந்தைக்கும் இடையிலான தூரத்தையும் கூட பொறுத்ததாய் இருக்கலாம். பல் வேறு தொழிற் கிளைகளிலும், ஒரே தொழிற் கிளையின் தனித்தனித் தொழில்களிலும் திறனுடை இருப்புகளின் நிலைமை அல்லது ஒப் பீட்டு அளவைப் பொறுத்து, எனவே மாறா-மூலதனத்தின் கூறுகள் விலைக்கு வாங்கப்படும் நேரத்தைப் பொறுத்து, சுற்றோட்டத்தி லிருந்து மீண்டு வரும் பணத்தின் அளவும் மீண்டு வருவதற்காகும் காலமும் வேறுபடுகின்றன. இவை எல்லாம் அந்தந்த ஆண்டின் மறுவுற்பத்தி நிகழ்முறையின் போது நடைபெறுகிறவை. தன்னியல் பாய் நடந்தேறும் அசைவியக்கத்தின் இந்தப் பல்வேறுபட்ட இயல்பு களையும் கவனித்து அனுபவ வாயிலாய்த் தெளிவாகப் புலப்படு மாறு செய்து கொண்டாலே போதும், கடன்-செலாவணிப் பொறி யமைவுகளை ஒழுங்குமுறை தவறாமல் பயன்படுத்திக் கொள் வதற்கும், கடனாகக் கிடைக்கக் கூடிய மூலதனத்தைத் தேடிப் பிடிப் பதற்குமான நடைமுறை ஏற்பாடுகளை உதித்தெழச் செய்து விடலாம்.

மேற்கூறியவற்றோடு கூட, மற்றபடி மாற்றமின்றி இயல்பான நிலைமைகள் இருந்து வரும் வரை தொடர்ந்து ஒரே அளவவீதத்தில் உற்பத்தி நடைபெறுகிற தொழில்களுக்கும், ஆண்டின் வெவ்வேறு பருவங்களில் வெவ்வேறு அளவுகளிலான உழைப்புச் சக்தியைப் பயன்படுத்துகிற வேளாண்மை போன்றவற்றுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## XIII. தெஸ்தூத் டெ திரேசியின் மறுவுற்பத்தித் தத்துவம்[62]

சமுதாய மறுவுற்பத்தியைப் பகுத்தாய்கிற அரசியல் பொருளா தார அறிஞர்களின் சிந்தனைக் குழப்பத்துக்கும் வாய்ச் சவடாலுக்கும் மாபெரும் தர்க்க சாஸ்திரி தெஸ்தூத் டெ திரேசியை சான்றாய்க் குறிப்பிடலாம் (பார்க்கவும்: முதல் பாகம், பக்கம் 226, குறிப்பு 154). ரிக்கார்டோவே இவரைப் பெரிதாக மதித்தார், ''சிறப்புக்குரிய நூலா சிரியராக'' இவரைக் குறிப்பிட்டார். (கோட்பாடுகள், பக்கம் 333.)

சமுதாய மறுவுற்பத்தி, சுற்றோட்டம் இவற்றின் ஒட்டுமொத்த நிகழ்முறை குறித்து இந்தச் ''சிறப்புக்குரிய நூலாசிரியர்'' அளித்திடும்

[62] எங்கெல்ஸ் குறிப்பு: கையெழுத்துப் பிரதி II என்பதிலிருந்து.

விளக்கங்கள் வருமாறு:

''இந்தத் தொழில் முனைவர்கள் எப்படி இவ்வளவு பெரும் இலாபம் பெற முடிகிறது, இவற்றை யாரிடமிருந்து பெறுகிறார்கள் என்றெல்லாம் கேட்பீர்கள். எனது பதில் இதுதான்: இவர்கள் உற்பத்தி செய்கிற ஒவ்வொன்றையும் அதன் உற்பத்திச் செலவை விடக் கூடுதலான விலைக்கு விற்பதன் மூலம் இலாபம் பெறுகின்றனர். யாருக்கு விற்கிறார்கள் என்றால்:

''1) தமக்குள் ஒருவருக்கு ஒருவர் விற்றுக் கொள்கின்றனர்; அவர்களது நுகர்வில் அவர்களது சொந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக அமையும் பகுதிக்காக வேண்டி இப்படி விற்றுக் கொள்கின்றனர்; தமது இலாபத்தில் ஒரு பகுதியை இதற்கான விலையாகத் தருகின்றனர்;

''2) கூலித் தொழிலாளர்களுக்கு விற்கின்றனர் — இத்தொழிலாளர்கள் இந்த முதலாளிகளிடம் ஊதியம் பெறுவோராகவும் இருக்கலாம்; வேலை செய்யாமலே இலாபமீட்டும் முதலாளிகளிடம் ஊதியம் பெறுவோராகவும் இருக்கலாம். இந்தக் கூலித் தொழிலாளர்களிடமிருந்து அவர்களது கூலி முழுவதையும் — சிறு சேமிப்புகள் போக எஞ்சுவது முழுவதையும் — திரும்பப் பெற்றுக் கொண்டு விடுகிறார்கள்.

''3) வேலை செய்யாத முதலாளிகளுக்கு [idle capitalists] விற்கின்றனர். இம்முதலாளிகள் தமது வருவாயில், தாம் நேரடியாக வேலைக்கமர்த்தும் கூலித் தொழிலாளர்களுக்கு இன்னமும் கூலியாகத் தந்திராத பகுதியினை விலையாகக் கொடுக்கின்றனர். மேற்சொன்ன தொழில் முனைவர்கள் வேலை செய்யாத முதலாளிகளுக்கு ஆண்டுதோறும் செலுத்தும் வாடகை முழுவதும் இவ்வாறு ஏதேனுமொரு விதத்தில் அவர்களிடமே திரும்பி விடுகிறது.'' (தெஸ்தூத் டெ திரேசி, *Traite de la volonte et de ses effets*, பாரிஸ், 1826, பக்கம் 239.)

ஆக, முதலாளிகள் முதலாவதாகத் தமது உபரி-மதிப்பில் ஒரு பகுதியை, தமது சொந்த நுகர்வுக்காக ஒதுக்கிக் கொள்கிற, அதாவது வருவாயாக நுகர்கிற பகுதியைப் பரிவர்த்தனை செய்து கொள்ளும் போது ஒருவரையொருவர் பயன்படுத்திச் செல்வந்தராகிறார்களாம். எடுத்துக்காட்டாக, அவர்களது உபரி-மதிப்பு அல்லது இலாபத்தின் இந்தப் பகுதி £400 எனக் கொள்வோம். £400இல் பங்கு பெற உரிமை படைத்த ஒவ்வொருவரும் அவ்வாறே உரிமை படைத்த இன்னொருவரிடம் தமது பங்கை 25 சதவீதம் கூடுதலாக விலை வைத்து விற்பதன் மூலம், £400 என்னும் இத்தொகை £500 ஆக வளர்ந்து விடுகிறதாம். ஆனால் எல்லாருமே இப்படிச் செய்வதால், அவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையான மதிப்புக்கே விற்றிருந்தால் ஏற்படும் அதே விளைவுதான் இப்போதும் ஏற்படும் £400 பெறுமானமுள்ள சரக்குகளின் சுற்றோட்டத்திற்காக அவர்களுக்கு £500 தேவைப்படுகிறது என்பதைத் தவிர வேறொன்று

மில்லை. அவர்களைச் செல்வந்தர்களாக்குவதற்கு பதில் ஏழ்மை யாக்கும் முறை என்றே இதைச் சொல்ல வேண்டும். எப்படியென்றால், இப்பொழுது அவர்கள் தமது மொத்தச் செல்வத்தில் பெரியதொரு பகுதியைத் திறனற்ற வடிவில், அதாவது சுற்றோட்ட ஊடகம் என்ற் பயனற்ற வடிவில் வைத்துக் கொள்ள வேண்டியதாகிறது. கூட்டிக் கழித்துப் பார்த்தால் முடிவில் பெறப்படுவது இதுதான்: பெயரளவில் அவர்களது சரக்குகளின் விலை பரவலாய் உயர்ந்த போதிலும், முதலாளி வர்க்கத்தார் தம் சொந்த நுகர்வுக்காகத் தம் மிடையே பங்கிட்டுக் கொள்வதற்கு £400 பெறுமானமுள்ள சரக்குகளையே பெறுகிறார்கள், ஆனால் £400 மதிப்புள்ள இந்தச் சரக்குகளின் சுற்றோட்டத்துக்கு £500 மதிப்புள்ள சரக்கு களை சுற்றியோடச் செய்வதற்குத் தேவையான பணத்தைப் பயன் படுத்துவதுதான் ஒருவருக்கொருவர் அவர்கள் செய்து கொள்ளும் சகாயம்.

''அவர்களது இலாபத்தில் ஒரு பகுதியையும்,'' ஆகவே பொது வாக இந்த இலாபத்தைக் குறிப்பதாகிய சரக்குக் கையிருப்பையும் அனுமானித்துக் கொண்டுதான் இவ்வளவும் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த இலாபம் எங்கிருந்து வருகிறது என்பதை நமக்கு விளக்கப் போவதாகச் சொல்லித்தான் தெஸ்தூத் இந்தப் பரி சீலனையை மேற்கொண்டார். இலாபத்தைச் சுற்றியோட வைப்பதற்கு வேண்டிய பணத்தின் அளவு பற்றிய பிரச்சினை இங்கு முக்கிய மானதல்ல. ஆகவே இலாபத்தைக் குறிப்பதாகிய சரக்குத் திரள் எங்கிருந்து உதிப்பதாகத் தெரிகிறது என்றால், முதலாளிகள் இச் சரக்குகளை ஒருவருக்கொருவர் விற்றுக் கொள்வது மட்டுமல்லா மல்—இதுவே கூட அபார நுட்பமும் ஆழமும் வாய்ந்த கருத்தாகும் எனினும்—மிக உயர்ந்த விலைக்கு விற்றுக் கொள்கிறார்கள் என் பதிலிருந்துதானாம். முதலாளிகள் செல்வந்தர்களாவதற்கான மூல காரணங்களில் ஒன்று இப்பொழுது நமக்குத் தெரிய வருகிறது. மாபெரும் வறுமைக்குக் காரணம் மாபெரும் ''pauvrete'' தான் [வறுமைதான்] என்ற இரகசியத்தைக் கண்டுபிடிக்கிறாரே ''இன்ஸ் பெக்டர் பிராசிக்,''* அதையொத்த கண்டுபிடிப்புதான் இது.

2) மேலும் இந்த முதலாளிகள் ''கூலித் தொழிலாளர்களுக்கு விற்கின்றனர்—இத்தொழிலாளர்கள் இந்த முதலாளிகளிடம் ஊதி யம் பெறுவோராகவும் இருக்கலாம்; வேலை செய்யாமலே இலாப மீட்டும் முதலாளிகளிடம் ஊதியம் பெறுவோராகவும் இருக்கலாம். இந்தக் கூலித் தொழிலாளர்களிடமிருந்து அவர்களது கூலி முழு வதையும்— சிறு சேமிப்புகள் போக எஞ்சுவது முழுவதையும்—திரும் பப் பெற்றுக் கொண்டு விடுகிறார்கள்.

திருவாளர் தெஸ்தூத்தின் கருத்துப்படி, முதலாளிகள் தொழிலாளர்

---

* ஜெர்மன் நகைச்சுவை எழுத்தாளர் பிரிட்ஸ் ராய்ட்டர் (1810-74) எழுதிய கதைகளில் வரும் பாத்திரம்.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

களுக்குக் கூலியை முன்னீடு செய்வதற்குரிய வடிவமான பண-மூலதனம் திரும்பி வருவதானது இந்த முதலாளிகள் செல்வந்தரா வதற்கு இரண்டாவது காரணமாகிறது.

ஆகவே, எடுத்துக்காட்டாக, முதலாளிகள் அவர்களது தொழி லாளர்களுக்கு £100 கூலி கொடுத்தால், பிற்பாடு அதே தொழி லாளர்கள் அந்த முதலாளிகளிடமிருந்து அதே £100 மதிப்புள்ள சரக்குகளை வாங்கினால், உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்கு வோரான முதலாளிகள் முன்னீடு செய்யும் பணமாகிய £100 பிறகு இம்முதலாளிகள் £100 பெறுமானமுள்ள சரக்குகளைத் தொழி லாளர்களிடம் விற்கும் போது இம்முதலாளிகளிடமே திரும்பி வருகிறது—இதன் மூலம் முதலாளிகள் செல்வந்தர்கள் ஆகிறார் களாம். முதலாளிகளுக்கு ஏற்கெனவே சொந்தமாயிருந்த £100 இந்தச் செயல்முறையினால் மீண்டும் அவர்களுக்கே சொந்தமாகிறது என்பது அறிவுடையவர் எவருக்கும் தெளிவாகவே விளங்கக் கூடியது. தொடக்கத்தில் முதலாளிகளிடம் பணமாக £100 இருக் கிறது. இந்த £100க்கு அவர்கள் உழைப்புச் சக்தியை வாங்கு கிறார்கள். விலைக்கு வாங்கிய உழைப்பானது இந்த £100 பணத் துக்கு பதில் உற்பத்தி செய்கிற சரக்குகளின் மதிப்பு நாம் அறிந்த வரை £100தான். முதலாளிகள் £100 பெறுமானமுள்ள இச்சரக் குகளைத் தொழிலாளர்களிடம் விற்பதன் மூலம் பணமாக £100ஐத் திரும்பப் பெறுகிறார்கள். ஆகவே முதலாளிகள் பணமாகத் திரும் பவும் £100 வைத்திருக்கிறார்கள்; தொழிலாளர்கள் தாமே உற் பத்தி செய்தவையான £100 பெறுமானமுள்ள சரக்குகள் வைத் திருக்கிறார்கள். இதனால் முதலாளிகள் எப்படி செல்வந்தர்களாக முடியும் என்பது புரியவில்லை. பணமாக £100 முதலாளிகளிடம் திரும்பி வரவில்லையானால் உழைப்புக்கு ஊதியமாகத் தொழி லாளர்களுக்கு அவர்களது பணமாக £100 தருவதாகவும் பிறகு இந்த உழைப்பின் உற்பத்திப் பொருளாகிய £100 பெறுமான முள்ள நுகர்வுப் பண்டங்களை இலவசமாகவே அவர்களுக்குத் தருவதாகவும் ஆகி விடும். ஆகவே இப்படி இந்தப் பணம் திரும்பி வருவதானது முதலாளிகள் இந்தப் பரிமாற்றத்தால் ஏன் முன்னி லும் ஏழ்மைப்பட்டோர் ஆகவில்லை என்பதை விளக்குமே தவிர, எப்படி இவர்கள் முன்னிலும் செல்வந்தர்கள் ஆகிறார்கள் என் பதை விளக்கவில்லை.

இன்னொரு கேள்வியும் இங்கே எழுகிறது: பணமாக இந்த £100 முதலாளிகளுக்கு எப்படிக் கிடைத்தது? தொழிலாளர்கள் தமக்கு வேண்டிய சரக்குகளைத் தாமே உற்பத்தி செய்து எடுத்துக் கொள்ளவதற்கு பதில் ஏன் இந்த £100க்குத் தமது உழைப்புச் சக்தியைப் பரிவர்த்தனை செய்து கொள்ள வேண்டியதாகிறது? ஆனால் தெஸ்தூத் உன்னத சிந்தனையாளர் ஆயிற்றே, இவை எல்லாம் கூறாமலே விளங்குமெனக் கொண்டு விடுகிறார்.

இந்தத் தீர்வு தெஸ்தூத்துக்கே திருப்தி அளிப்பதாய் இருக்காது. £100 பணத் தொகையைச் செலவிட்டு விட்டுப் பிற்பாடு அதே £100ஐத் திரும்பப் பெறுவதால், அதாவது பணமாகச் செலவு செய்த £100 அப்படியே திரும்பி வந்து சேருவதால் யாரும் செல்வந்தராகி விட முடியும் என்று உண்மையில் அவர் நம்மிடம் சொல்லவில்லை. இந்த முதலாளிகள் ''உற்பத்தி செய்கிற ஒவ்வொன்றையும் அதன் உற்பத்திச் செலவை விடக் கூடுதலான விலைக்கு விற்பதால்'' செல்வந்தர்களாகிறார்கள் என்றுதான் அவர் நம்மிடம் சொல்கிறார்.

ஆதலால், தொழிலாளர்களோடு செய்து கொள்கிற பரிவர்த்தனைகளின் போதும் கூடுதலான விலைக்கு விற்று முதலாளிகள் செல்வந்தர்களாக வேண்டும் என்றாகிறது. ''அவர்கள் கூலி கொடுக்கிறார்கள்....இந்த ஆட்கள் எல்லாரும் கூலியைச் செலவிடுவதால் எல்லாம் அவர்களிடம்'' (முதலாளிகளிடம்) ''திரும்பி வருகிறது; இந்த ஆட்கள் அவற்றுக்கு'' (உற்பத்திப் பண்டங்களுக்கு) ''கொடுக்கும் விலை அவற்றுக்காக அவர்கள்'' (முதலாளிகள்) ''கூலியின் உருவில் செலவிட்டதை விட அதிகமாகும்.'' (மேலது, பக்கம் 240.) அதாவது, முதலாளிகள் தொழிலாளர்களுக்கு £100 கூலி கொடுக்கிறார்கள்; பிற்பாடு இந்தத் தொழிலாளர்களே உற்பத்தி செய்தவற்றை அவர்களிடம் £120க்கு விற்கிறார்கள். இவ்விதம் அவர்கள் கூலியாகச் செலவிட்ட £100ஐத் திரும்பப் பெறுவதோடு கூட £20 ஆதாயமும் பெறுகிறார்கள். இது முடியாத காரியம். தொழிலாளர்கள் கூலியாகத் தமக்குக் கிடைக்கும் பணத்தைத்தான் விலையாகத் தர முடியும். அவர்கள் முதலாளிகளிடமிருந்து கூலியாக £100 பெற்றால் £100 பெறுமானமுள்ளதைத்தான் அவர்கள் வாங்க முடியுமே தவிர, £120 பெறுமான முள்ளதை அல்ல. இது நடைபெற முடியாது. ஆனால் வேறு வழி ஒன்று இருக்கிறது. தொழிலாளர்கள் £100ஐக் கொடுத்து முதலாளிகளிடமிருந்து சரக்குகள் வாங்குவதாகவும், ஆனால் உண்மையில் £80 பெறுமானமுள்ள சரக்குகளே அவர்களுக்குக் கிடைப்பதாகவும் வைத்துக் கொள்வோம். அப்படியானால் தொழிலாளர்கள் ஏமாற்றப்படுகிறார்கள், £20ஐப் பறிகொடுக்கிறார்கள் என்றாகிறது. முதலாளிக்குச் சுளையாக £20 ஆதாயம் கிடைக்கிறது, உழைப்புச் சக்திக்கு அதன் மதிப்பை விட 20 சதவீதம் குறைவாகவே அவர் விலை கொடுக்கிறார், அதாவது பெயர்க்கூலியை [nominal wages] சுற்றடியான வழியில் 20 சதவீதம் குறைத்து விடுகிறார் என்றாகிறது.

இதே காரியத்தை முதலாளி வர்க்கம் வேறு விதமாகவும் செய்யலாம் — தொழிலாளர்களுக்கு ஆரம்பத்திலேயே கூலியாக £80 மட்டும் கொடுத்து, பிறகு பணமாக அவர்களிடமிருந்து £80ஐப் பெற்று மெய்யாகவே £80 பெறுமானமுள்ள சரக்குகளை அவர்களுக்குத்

தரலாம். முதலாளி வர்க்கத்தை ஒட்டுமொத்தமாய் எடுத்துக் கொண்டால் இப்படிச் செய்வதே முறையானதாய் இருக்கும். ஏனெனில் திருவாளர் தெஸ்தூத்தே கூறுவது போல தொழிலாளி வர்க்கம் ''போதிய கூலி'' பெற்றாக வேண்டும் (பக்கம் 219), அதாவது குறைந்தது உயிரோடிருக்கவும் உழைக்கும் ஆற்றலை பராமரித்துக் கொள்ளவும், ''குறைந்தபட்சப் பிழைப்புக்கு வழி செய்து கொள்ளவும்'' (பக்கம் 180) போதிய கூலி பெற்றாக வேண்டும். தொழிலாளர்களுக்கு இந்தப் ''போதிய கூலி'' கிடைக்கா விட்டால், ''தொழில்கள் நசித்துப்போகும்'' (பக்கம் 208) என்று தெஸ்தூத்தே சொல்கிறார். தொழில்கள் நசித்துப் போதல் முதலாளிகள் செல்வந்தராவதற்குரிய வழியாக முடியாது. ஆனால் முதலாளிகள் தொழிலாளி வர்க்கத்துக்குக் கொடுக்கும் கூலி எவ்வளவாக இருந்தாலும் அது திட்டமான மதிப்புடையதாகும்—உதாரணமாய் £80 மதிப்புடையதாகக் கொள்வோம். முதலாளி வர்க்கம் தொழிலாளர்களுக்கு £80 ஊதியமளித்தால், அது அவர்களுக்கு இந்த £80க்குப் பிரதியாக £80 பெறுமானமுள்ள சரக்குகளைக் கொடுத்தாக வேண்டும். இந்த £80 முதலாளி வர்க்கத்துக்கே திரும்பி வருகிறது, இதனால் முதலாளிகள் செல்வந்தரார்களாகி விட முடியாது. முதலாளி வர்க்கம் தொழிலாளர்களுக்குப் பணமாக £100 ஊதியமளித்து இந்த £100க்குப் பிரதியாக அவர்களிடம் £80 மதிப்புள்ள சரக்குகளை விற்குமானால், அவர்களுக்கு இயல்பான [normal] கூலிக்கு மேல் பணமாக 25 சதவீதம் அதிகமாகவும், பிறகு அவர்களது பணத்துக்கு பதில் சரக்குகளாக அதே 25 சதவீதம் குறைவாகவும் தருகிறது என்றுதான் அர்த்தம்.

வேறு விதமாகச் சொன்னால், பொதுவாக முதலாளி வர்க்கம் தனது இலாபத்தைத் தருவித்துக் கொள்கிற நிதியமானது தொழிலாளர்களது இயல்பான கூலியிலிருந்து எடுக்கப்படுகிற பிடித்தங்களால் ஆனதாகக் கொள்ளப்படுகிறது. உழைப்புச் சக்திக்கு அதன் மதிப்பை விடக் குறைவான விலை தருவதன் மூலம், அதாவது கூலித் தொழிலாளர்களது இயல்பான மறுவுற்பத்திக்கு வேண்டிய வாழ்வுச் சாதனங்களின் மதிப்பையும் விடக் குறைவான விலை தருவதன் மூலம் செய்யப்படுகிற பிடித்தங்களாகும் இவை. தொழிலாளர்களுக்கு இயல்பான கூலி தரப்படுமாயின்—தரப்படுவதாகத் தான் தெஸ்தூத் வைத்துக் கொள்கிறார்—தொழில் துறை முதலாளிகளுக்கும் சரி, வேலை செய்யாத முதலாளிகளுக்கும் சரி, இலாப நிதியம் எதுவும் இருக்க வழி இல்லாமற் போய் விடும்.

ஆகவே முதலாளி வர்க்கத்தார் செல்வந்தர்கள் ஆவதன் இரகசியம் எல்லாம் கூலியிலிருந்து செய்யப்படுகிற பிடித்தங்களில் அடங்கி விடுவதாக தெஸ்தூத் கூறியிருக்க வேண்டும். அப்போது அவர் 1) என்றும் 3) என்றும் இலக்கமிட்டுக் குறிப்பிடுகிற பிற உபரி-மதிப்பு நிதியங்களுக்கு இடம் இல்லாமற் போய் விடும்.

எனவே தொழிலாளர்கள் ஒரு வர்க்கமாகப் பிழைத்திருப்பதற்கு அவசியமான நுகர்வுப் பண்டங்களின் மதிப்பாக அவர்களுடைய பணக் கூலி இருந்தாக வேண்டிய நாடுகளில் எல்லாம் முதலாளி களுக்கு நுகர்வு-நிதியமும் இருக்காது, திரட்டல்-நிதியமும் இருக் காது, எனவே முதலாளி வர்க்கம் இருந்து வருவதற்கு வேண்டிய நிதியமே இருக்காது, முதலாளி வர்க்கமே இருக்காது என்றாகிறது. தெஸ்தூத்தின் கருத்துப்படி பார்த்தால், நெடுங்காலமாய் நாகரிக நிலையில் இருந்து வரும் வளர்ச்சியடைந்த பணக்கார நாடுகள் யாவற்றிலும் மேற்கூறியவாறுதான் இருந்தாக வேண்டும்; ஏனென் றால் இந்நாடுகளில் எல்லாம், ''தொன்மை வாய்ந்த நமது சமு தாயங்களில் எல்லாம், தொழிலாளர்களுக்குக் கூலி கொடுப்பதற்கு வேண்டிய நிதியம்...அநேகமாய் மாறாப் பருமனுடையதாகவே இருக்கிறது.'' (மேலது, பக்கம் 202)

கூலியிலிருந்து பிடித்தம் செய்வதாக வைத்துக் கொண்டாலும் கூட, தொழிலாளிக்குப் பணமாக £100 கூலி கொடுத்து விட்டு, அதன் பின் இந்த £100க்குப் பிரதியாக அவருக்கு £80 பெறு மானமுள்ள சரக்குகள் தருவதன் மூலம்—இவ்வாறு 25 சத வீதம் கூடுதலான தொகையாகிய £100ஐக் கொண்டு £80 பெறுமானமுள்ள சரக்குகளைச் சுற்றியோட வைப்பதன் மூலம்—முதலாளி செல்வந்தராகி விட முடியாது. உபரி-மதிப்போடு கூட—உற்பத்திப் பொருளில் உபரி-மதிப்பைக் குறிக்கும் பகுதியோடு கூட—உற்பத்திப் பொருளில் தொழிலாளி கூலியாகப் பெற வேண் டிய பகுதியில் 25* சதவீதத்தையும் தனதாக்கிக் கொள்வதன் மூலம்தான் முதலாளி செல்வந்தராக முடியும். தெஸ்தூத் கூறுகிற அசட்டு முறையின் மூலம் முதலாளி வர்க்கம் எவ்விதத்திலும் இலாப மடைய முடியாது. கூலியாக அது £100 தருகிறது, பிறகு இந்த £100க்குப் பிரதியாக அது தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களிலிருந்து £80 பெறுமானமுள்ளவற்றை அவர்களுக்கு அளிக்கிறது. ஆனால் அடுத்தபடி நடைபெறும் நிகழ்முறையின் போது அது திரும்பவும் இதே காரியத்துக்காக £100 முன்னீடு செய்தாக வேண்டும். பணமாக £80 முன்னீடு செய்து அதற்குப் பிரதியாக £80 மதிப்புள்ள சரக்குகளை அளிப்பதற்குப் பதிலாக, அது பணமாக £100 முன்னீடு செய்து அதற்குப் பிரதியாக £80 மதிப் புள்ள சரக்குகளை அளித்திடுவது வீண் வேலைதான். அதாவது அது தனது மாறும்-மூலதனத்தின் சுற்றோட்டத்துக்குத் தேவையான தைக் காட்டிலும் 25 சதவீதம் கூடுதலான பண-மூலதனத்தை ஓயாமல் திரும்பத் திரும்ப முன்னீடு செய்து வருமே தவிர அதனால் பயன் ஏதும் இராது. செல்வந்தராவதற்கு இது அதிவினோத வழியே ஆகும்.

---

* கைத்தவறாகவே இருக்க வேண்டும்; 20 என்பதற்குப் பதில் ஆசிரியர் 25 என எழுதி விடுகிறார்—பதிப்பாசிரியர்.

3) இறுதியாக, தொழில் துறை முதலாளி வர்க்கம் ''வேலை செய்யாத முதலாளிகளுக்கு'' விற்கிறது; இம்முதலாளிகள் தமது வருவாயில் ஒரு பகுதியை விலையாகத் தருகிறார்கள். நேரடியாக அவர்களிடம் வேலை செய்யும் கூலித் தொழிலாளர்களுக்குத் தந்து விடாமல் வைத்திருக்கும் பகுதி இது. வேலை செய்யாத இம்முதலாளிகளுக்கு வாடகையாக ஆண்டு தோறும் செலுத்துவது ஏதேனுமொரு விதத்தில் அப்படியே தொழில் துறை முதலாளிகளிடம் திரும்பி வந்து விடுகிறது.

தொழில் துறை முதலாளிகள் நுகர்வதில் ''அவர்களது சொந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக அமையும் பகுதிக்காக வேண்டி அவர்களது இலாபத்தில் ஒரு பகுதியை'' விலையாகத் தருவதை மேலே பார்த்தோம். அவர்களுடைய இலாபத்தை £200 ஆகவும், இதில் அவர்களது தனிப்பட்ட சொந்த நுகர்வுக்காகச் செலவிடும் பகுதியை £100 ஆகவும் கொள்வோம். மீதமுள்ள மற்றொரு பாதி இலாபமாகிய £100 அவர்களுக்குச் சொந்தமாகாமல், வேலை செய்யாத முதலாளிகளுக்குச் சொந்தமாகிறது; அதாவது நில-வாடகை பெறுவோரும் பணத்தை வட்டிக்கு விடுவோருமான முதலாளிகளுக்குச் சொந்தமாகிறது. தொழில் துறை முதலாளிகள் இவ்விதம் இந்தக் கனவான்களுக்கு £100 தந்தாக வேண்டும். இப்படி வருவதில் இக்கனவான்கள் £80ஐத் தமது சொந்த நுகர்வுக்காகவும், £20ஐத் தமக்காக வேலை செய்கிற வேலைக்காரர்களுக்கும் இன்ன பிறருக்கும் ஊதியமளிப்பதற்காகவும் செலவிடுவதாக வைத்துக் கொள்வோம். இந்த £80ஐக் கொண்டு இவர்கள் தொழில் துறை முதலாளிகளிடமிருந்து நுகர்வுப் பண்டங்கள் வாங்குகிறார்கள். இவ்வாறு இம்முதலாளிகள் £80 மதிப்புள்ள சரக்குகளைக் கொடுத்து விட்டு, பதிலுக்குப் பணமாக £80 பெறுகிறார்கள்; அதாவது வேலை செய்யாத முதலாளிகளுக்கு வாடகை என்றும் வட்டி என்றும் பலவிதமாகச் சொல்லி இவர்கள் செலுத்திய £100இல் ஐந்தில் நான்கு பங்கைத் திரும்பப் பெறுகிறார்கள். இதல்லாமல், வேலை செய்யாத முதலாளிகளின் நேரடியான கூலி-ஊழியர்களாகிய வேலைக்காரர்களும் ஏனையோரும் அவர்களது எஜமானர்களிடமிருந்து £20 பெற்றுக் கொள்கிறார்கள்; இந்த வேலையாட்களும் இப்படிப் பெறுவதைக் கொண்டு தொழில் துறை முதலாளிகளிடமிருந்து £20 மதிப்புள்ள நுகர்வுப் பண்டங்கள் வாங்குகிறார்கள். இவ்வாறு இவர்களுக்கு £20 பெறுமானமுள்ள சரக்குகளைத் தருகிற தொழில் துறை முதலாளிகளிடம் பணமாக £20 திரும்பி வருகிறது, அதாவது வேலை செய்யாத முதலாளிகளுக்கு வாடகை, வட்டி போன்றவற்றுக்காக இவர்கள் செலுத்திய £100இல் கடைசி ஐந்திலொரு பகுதியும் இவர்களிடமே திரும்பி வருகிறது.

தொழில் துறை முதலாளிகள் வேலை செய்யாத முதலாளிகளுக்கு

வாடகை, வட்டி போன்றவற்றைச் செலுத்துகையில் தருகிற £100 ஆனது இந்த நிகழ்முறையின் முடிவில் பணமாக இவர்களிடமே திரும்பி வருகிறது. அதே போது இவர்களது உபரி-உற்பத்தியில் ஒரு பாதி — £100 மதிப்புள்ளது — இவர்களிடமிருந்து வேலை செய்யாத முதலாளிகளின் நுகர்வு-நிதியத்துக்குப் போய்ச் சேருகிறது.

வேலை செய்யாத முதலாளிகளுக்கும் அவர்களிடம் நேரடியாகக் கூலி பெறும் ஊழியர்களுக்கும் இடையில் £100 பகிர்ந்து கொள்ளப்படுவதை இங்கே நாம் பரிசீலிக்கும் பிரச்சினையுடன் எப்படியேனும் இணைத்திடுவதற்கு எந்த முகாந்தரமும் இல்லை என்பதால், இதனை நாம் தேவையற்றதாக ஒதுக்கி விடலாம். விவகாரம் தெட்டத் தெளிவானது: வேலை செய்யாத முதலாளிகளைச் சேர வேண்டிய வாடகை, வட்டி போன்றவற்றை — சுருங்கச் சொன்னால் உபரி-மதிப்பாகிய £200இல் இவர்களுக்கு உரித்தான பங்கினை — தொழில் துறை முதலாளிகள் பணமாக £100ஐத் தருவதன் மூலம் செலுத்தி விடுகிறார்கள். இப்படிக் கிடைக்கும் £100ஐக் கொண்டு இவர்கள் தொழில் துறை முதலாளிகளிடமிருந்து நேரடியாகவோ சுற்றடியாகவோ நுகர்வுப் பண்டங்கள் வாங்குகிறார்கள். இவ்வழியில் இவர்கள் தொழில் துறை முதலாளிகளுக்குப் பணமாக £100ஐத் திருப்பிச் செலுத்தி விட்டு, அவர்களிடமிருந்து £100 பெறுமானமுள்ள நுகர்வுப் பண்டங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

தொழில் துறை முதலாளிகள் வேலை செய்யாத முதலாளிகளுக்குப் பணமாகச் செலுத்துகிற £100 இவ்விதம் முழு அளவில் அவர்களிடமே திரும்பி வந்து சேருகிறது. பணம் இப்படித் திரும்பி வந்து சேருவதானது தெஸ்தூத் கற்பனை செய்வதைப் போல் தொழில் துறை முதலாளிகள் செல்வந்தராவதற்கான வழியாக முடியுமா? ஆரம்பத்தில் தொழில் துறை முதலாளிகளிடம் £200க்குச் சமமான மதிப்புத் தொகை — பணமாக 100உம், நுகர்வுப் பண்டங்களாக 100உம் — இருந்தது. இறுதியில் இம்முதலாளிகளிடம் ஆரம்ப மதிப்புத் தொகையில் ஒரு பாதி மட்டுமே உள்ளது. பணமாக £100 இவர்களிடம் திரும்பி வந்திருக்கிறது. ஆனால் நுகர்வுப் பண்டங்களாக இருந்த £100ஐ இவர்கள் இழந்திருக்கிறார்கள். இந்த நுகர்வுப் பண்டங்கள் வேலை செய்யாத முதலாளிகளின் கைக்குப் போய் விட்டன. எனவே தொழில் துறை முதலாளிகளின் செல்வம் £100 பெருகுவதற்கு பதில் £100 குறைந்துள்ளது. முதலில் பணமாக £100ஐத் தந்து விட்டு, பிறகு £100 பெறுமானமுள்ள நுகர்வுப் பண்டங்களுக்கான விலையாக இதே £100ஐப் பணமாக திரும்பப் பெறும் இந்தச் சுற்றுவழியைக் கையாள்வதற்குப் பதிலாக, அவர்கள் வாடகை, வட்டி போன்றவற்றை நேரடியாக உற்பத்திப் பண்டங்களாகவே தந்திருந்தால், சுற்றோட்டத்துள் அவர்கள் பணமாக £100ஐச் செலுத்தியிருக்க மாட்டார்கள், அது

அவர்களிடம் திரும்பி வந்துமிருக்காது. தர வேண்டியதைப் பண்டமாகவே தந்திருந்தால் காரியம் பின்வருமாறு நடந்தேறியிருக்கும்: £200 பெறுமானமுள்ள உபரி-உற்பத்தியில் ஒரு பாதியை அவர்கள் தம்மிடமே வைத்துக் கொண்டு, வேலை செய்யாத முதலாளியிடமிருந்து சமதை ஏதும் பெறாமலே மற்றொரு பாதியை அவர்களுக்குத் தந்திருப்பார்கள். தெஸ்தூத்தே கூட இதனைச் செல்வந்தராவதற்குரிய வழியாகக் காட்ட முயன்றிருக்க மாட்டார்.

தொழில் துறை முதலாளிகள் வேலை செய்யாத முதலாளிகளிடமிருந்து நிலத்தையும் மூலதனத்தையும் இரவலாக வாங்கிப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்; இதற்காக அவர்களுக்கு நில-வாடகை, வட்டி போன்றவற்றின் வடிவில் தங்கள் உபரி-மதிப்பின் ஒரு பகுதியைச் செலுத்த வேண்டியிருக்கிறது. இப்படி நில்த்தையும் மூலதனத்தையும் வாங்கிப் பயன்படுத்துவது அவர்களுக்கு இலாபகரமாகவே இருக்கிறது. இது பொதுவாகச் சரக்குகளையும் இச்சரக்குகளில் உபரி-உற்பத்தியாக அமைகிற, அதாவது உபரி-மதிப்பைக் குறிக்கிற பகுதியையும் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய அவசிய நிலைமைகளில் ஒன்றாகும். இந்த இலாபம் இரவல் வாங்கிய நிலத்தையும் மூலதனத்தையும் பயன்படுத்திக் கொள்வதால் வருவதே தவிர, இப்படி இரவல் வாங்குவதற்காகத் தரப்படும் விலையிலிருந்து வருவதன்று. பார்க்கப் போனால் இந்த விலை அந்த இலாபத்தில் செய்யப்படுகிற பிடித்தமே ஆகும். இவ்வாறு அல்லாமல் இலாபமானது விலையாகத் தரப்படுவதிலிருந்து வருவதாய் இருக்குமானால், தொழில் துறை முதலாளிகள் தமது உபரி-மதிப்பில் மற்றொரு பாதியையும் யாருக்கும் கொடுக்காமல் தாமே வைத்துக் கொள்வதன் மூலம் அவர்கள் செல்வந்தர் ஆவதற்கு பதில் வறியோரே ஆவதாக முடிவு கட்ட வேண்டியிருக்கும். சுற்றோட்டத்துள் செலுத்தப்படும் பணம் செலுத்துவோரிடமே திரும்பி வந்து சேருவது போன்ற சுற்றோட்ட நிகழ்வுகளை இந்நிகழ்வுகளின் துணைகொண்டு நடைபெறும் உற்பத்திப் பண்ட வினியோகத்துடன் போட்டுக் குழப்பினால் இப்படித்தான் குளறுபடி ஏற்படும்.

என்னதான் இருந்தாலும் தெஸ்தூத் மதிநுட்பம் வாய்ந்தவரே, அவர் கூறுவதாவது: "வேலை செய்யாத இந்தக் கனவான்களுக்கு எங்கிருந்து வருவாய் கிடைக்கிறது? இவர்களுக்குத் தரப்படுகிற வாடகையிலிருந்து வருவதுதானே இவர்களது வருவாய்? இவர்களுடைய மூலதனத்தைச் செயல்பட வைக்கிறார்களே — தனக்கு ஆகிற செலவைக் காட்டிலும் அதிகமாய் உற்பத்தி செய்கிற உழைப்புக்கு இவர்களுடைய நிதியைப் பயன்படுத்தி ஊதியமளிக்கிறார்களே — அந்தத் தொழில் துறை முதலாளிகள் தமக்குக் கிடைக்கும் இலாபத்திலிருந்து இவர்களுக்குத் தருகிற வாடகைதானே இந்தக் கனவான்களுக்குக் கிடைக்கும் வருவாய்? எல்லாச் செல்வத்துக்கும் ஆதாரம் எங்கு இருக்கிறதெனத் தேடுவோமானால் எப்போதுமே

இந்தத் தொழில் துறை முதலாளிகளிடம்தான் வந்து சேர்ந்தாக வேண்டும். ஏனையோரது கூலித் தொழிலாளர்களுக்கு உணவளிப்பது இவர்களே அன்றி வேறு யாருமல்ல.'' (பக்கம் 246.)

ஆக வாடகையும் இன்ன பிறவும் தொழில் துறை முதலாளிகளுடைய இலாபத்தில் செய்யப்படுகிற பிடித்தமே ஆகும் என்பது இப்போது தெரிய வருகிறது. முன்பு இவை எல்லாம் இவர்கள் செல்வந்தர்களாவதற்கான வழியாகக் கருதப்பட்டது.

ஆனால் நமது தெஸ்தூத்துக்கு மனச் சாந்தி அளிக்கும் விதத்தில் எப்படியும் ஒன்று எஞ்சியுள்ளது. இந்தத் தொழில் துறை முதலாளிகள் நல்லவர்களே, வேலை செய்யாத முதலாளிகளிடம் அவர்கள் வேறு விதமாய் நடந்து கொள்ளவில்லை, தம்முள் ஒருவரிடம் ஒருவரும் மற்றும் தொழிலாளர்களிடத்தும் எப்படி நடந்து கொள்கிறார்களோ அதே விதமாகத்தான் இம்முதலாளிகளிடமும் நடந்து கொள்கிறார்கள். எல்லாருக்குமே சரக்குகளை அதிக விலைக்குத்தான் (உதாரணமாய் 20 சதவீதம் அதிக விலைக்குத்தான்) விற்கிறார்கள். இரண்டு சாத்தியப்பாடுகளே உள்ளன. வேலை செய்யாத முதலாளிகள் ஆண்டுதோறும் தொழில் துறை முதலாளிகளிடமிருந்து பெறுகிற £100ஐத் தவிர வேறு பண வசதி பெற்றும் இருக்கலாம், பெறாமலும் இருக்கலாம். பெற்றிருந்தால் அவர்களிடம் தொழில் துறை முதலாளிகள் £100 பெறுமானமுள்ள சரக்குகளைக் கூடுதலான விலைக்கு (உதாரணமாய் £120க்கு) விற்கிறார்கள். இப்படி விற்பதன் மூலம் அவர்கள் வேலை செய்யாத முதலாளிகளுக்குச் செலுத்திய £100ஐத் திரும்பப் பெறுவதோடு, கூடுதலாய் £20 வசூலிக்கிறார்கள் — இந்த £20 அவர்களுக்குப் புதிதாகக் கிடைக்கும் மதிப்பாகிறது. இப்போதுள்ள கணக்கு நிலவரம் என்ன? £100 மதிப்புள்ள சரக்குகளை அவர்கள் இலவசமாகவே தருகிறார்கள் என்றாகிறது. ஏனென்றால் அவர்களது சரக்குகளுக்காகக் கிடைக்கும் விலையில் ஒரு பகுதியாகிய £100 அவர்களுடைய பணமே ஆகும். அவர்களுடைய சரக்குகளுக்கு அவர்களுடைய பணமே பிரதியாகத் தரப்படுகிறது. இதனால் £100 நஷ்டமாகிறது. அதே போது சரக்குகளின் மதிப்பைக் காட்டிலும் கூடுதலாய் £20 கிடைப்பதால், இந்தக் கூடுதல் தொகை இலாபமாகும். £100 நஷ்டத்திலிருந்து £20 இலாபத்தைக் கழிக்க வேண்டும். அப்போதும் £80 நஷ்டமே தவிர, இலாபம் ஏதும் இல்லை. வேலை செய்யாத முதலாளிகளை ஏமாற்றியதால் தொழில் துறை முதலாளிகளின் நஷ்டம் குறைந்திருக்கிறதே தவிர, நஷ்டமானது செல்வந்தர்களாவதற்கான வழியாக மாறி விடவில்லை. அதிக காலத்துக்கு இந்த ஏமாற்று நடைபெற முடியாது. ஏனெனில் வேலை செய்யாத முதலாளிகள் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் பணமாக £100ஐப் பெற்று, பணமாக £120ஐச் செலவிட்டு வருவது முடியாத காரியம்.

இன்னொரு வழி உள்ளது; தொழில் துறை முதலாளிகள் வேலை செய்யாத முதலாளிகளுக்குப் பணமாகத் தருகிற £100ஐத் திரும்பப் பெற்றுக் கொண்டு, அதற்குப் பிரதியாக £80 பெறுமானமுள்ள சரக்குகளை அவர்களிடம் விற்பதாகக் கொள்ளலாம். அப்போதும் கூட முன்போலவே தொழில் துறை முதலாளிகள் வாடகை, வட்டி முதலானவற்றின் வடிவில் இலவசமாய் £80 கொடுக்கவே செய்கிறார்கள். வேலை செய்யாத முதலாளிகளுக்கு அவர்கள் செலுத்த வேண்டியிருக்கும் கப்பத்தை இந்த மோசடி மூலம் குறைத்துக் கொள்கிறார்களே தவிர அதை இல்லாமற் செய்துவிடவில்லை. விலைகள் விற்கிறவர்களின் விருப்பத்தைப் பொறுத்தவை என்று சொல்லுகிற இந்தத் தத்துவத்தின் படி பார்த்தால், வேலை செய்யாத முதலாளிகள் தமது நிலத்துக்கும் மூலதனத்துக்குமான வாடகையாகவும் வட்டியாகவும் முன்போல் £100 பெறுவதற்கு பதில் வருங்காலத்தில் £120 கேட்டுப் பெறக் கூடிய நிலையில்தான் இருக்கிறார்கள்.

அபாரமான இந்தப் பகுப்பாய்வு நமது ஆழ்ந்த சிந்தனையாளருக்கு முற்றும் பொருந்துவதாகவே இருக்கிறது. ஒரு புறத்தில் இவர் ஆதாம் ஸ்மித் சொல்வதை ஏற்றுக் கொண்டு அவருடைய சொற்களை அப்படியே எடுத்தாண்டு "எல்லாச் செல்வத்துக்கும் உழைப்புதான் மூலகாரணம்" (பக்கம் 242) என்றும், தொழில் துறை முதலாளிகள் "தமது மூலதனத்தைக் கொண்டு உழைப்புக்கு ஊதியமளிக்க, உழைப்பானது அந்த மூலதனத்தோடு கூட இலாபத்தையும் சேர்த்து மறுவுற்பத்தி செய்து தருகிறது" (பக்கம் 246) என்றும் கூறுகிறார். அதே போது மறு புறத்தில் இவர் தொழில் துறை முதலாளிகள்தான் "ஏனைய எல்லாருக்கும் சோறு போடுகிறவர்கள்; அவர்கள் மட்டுமே பொதுச் செல்வத்தை பெருகச் செய்கிறவர்கள்; நாம் சுவைக்கும் நுகர்வுச் சாதனங்கள் யாவற்றையும் படைத்தளிக்கிறவர்கள்" (பக்கம் 242) என்பதாகவும் முடிவு கட்டுகிறார். அதாவது தொழிலாளர்கள் முதலாளிகளுக்குச் சோறு போடவில்லை, முதலாளிகள்தான் தொழிலாளர்களுக்குச் சோறு போடுகிறார்கள் என்கிறார். இதற்கு அவர் கூறும் அதியற்புத காரணம் என்னவென்றால், தொழிலாளர்கள் ஊதியமாகப் பெறுகிற பணம் அவர்களது கையில் தங்காமல், அவர்கள் உற்பத்தி செய்கிற சரக்குகளை வாங்குவதற்காக அவர்கள் தருகிற விலையாக ஓயாமல் முதலாளிகளிடமே திரும்பிச் சென்று விடுகிறது. தொழிலாளர்கள் "ஒரு கையால் வாங்கி மறு கையால் திருப்பித் தருகிறார்கள் — இவர்கள் செய்வதெல்லாம் இவ்வளவுதான். ஆகவே இவர்கள் நுகர்கிறவற்றை எல்லாம் இவர்களுக்கு ஊதியம் அளிப்போரால் உற்பத்தி செய்யப்படுகிறவையாகக் கொள்ள வேண்டும்." (பக்கம் 235.)

சமுதாய மறுவுற்பத்தியும் நுகர்வும் பணச் சுற்றோட்டத்தின் துணைகொண்டு நடைபெறுவதை சாங்கோபாங்கமாய் இப்படிப்

பகுத்தாய்ந்த பின், தெஸ்தூத் தொடர்ந்து மேலும் கூறுகிறார்: ''இதுதான் செல்வத்தின் முடிவில்லாத இந்த ஓட்டத்தைக் குற்றங் குறையற்றதாய்ச் செம்மை செய்கிறது. இந்த இயக்கத்தை நாம் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை'' (வாஸ்தவம்தான் என்பேன்!) ''என்றாலும் சுற்றோட்டம் எனச் சரியாகவே இதற்குப் பெயரிட்டிருக்கிறோம். ஏனெனில் மெய்யாகவே இது ஒரு சுற்றேதான், எங்கிருந்து புறப்படுகிறதோ அந்தப் புறப்பாட்டு முனைக்கே எப்போதும் திரும்பி வருகிறது. பொருளுற்பத்தி நிறைவு பெறுவது இம்முனையில் தான். '' (பக்கம் 239,240.)

'சிறப்புக்குரிய எழுத்தாளர்,' 'பிரெஞ்சு நாட்டுக் கழகம், பிலடெல்ஃபியா தத்துவஞானச் சங்கம் இவற்றின் உறுப்பினர்,' கொச்சைப் பொருளாதார அறிஞர்களில் மெய்யாகவே கீர்த்தி வாய்ந்தவராய் விளங்குகிறவர் — இந்த தெஸ்தூத் முடிவில் அவரது வாசகர்களை வேண்டுகிறார்; சமுதாய நிகழ்முறையின் போக்கினை எப்படி வியக்கத்தக்க முறையில் தெட்டத் தெளிவாகத் தெரியச் செய்திருக்கிறேன், எப்படி இந்த விவகாரத்தை வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறேன், பாருங்கள் என்கிறார். யாவும் இவ்வளவு வெளிச்சமாகத் தெரிவதற்கு என்ன காரணம் என்பதையும் அருள் கூர்ந்து வாசகர்களுக்கு விளக்கிச் சொல்கிறார். அதன் மூல வாசகத்தில் படிக்க வேண்டிய ஒன்று இது:

***"On remarquera, j' espere, combien cette maniere de considerer la consommation de nos richesses est concordante avec tout ce que nous avons dit a propos de leur production et de leur distribution, et en meme temps*** **quelle clarte elle repand sur toute la marche de la societe.** ***D'ou viennent cet accord et cette lucidite? De ce que nous avons rencontre la verite. Cela rappelle l' effet de ces miroirs ou les objets se peignent nettement et dans leurs justes proportions, quand on est place dans leur vrai point-de-vue, et òu tout parait confus et desuni, quand on en est trop pres ou trop loin."*** **(Pp.242 and 243.)**

***Voila le cretinisme bourgeois dans toute sa beatitude!****

---

* ''நமது செல்வம் நுகரப்படுவதை இந்த விதத்தில் பரிசீலிப்பதானது இச்செல்வத்தின் உற்பத்தி குறித்தும் வினியோகம் குறித்தும் இதுகாறும் நாம் கூறி வந்திருக்கும் யாவற்றோடும் எவ்வளவு இசைவுடன் பொருந்துகிறது என்பதையும், அதே போது சமுதாயம் சென்று கொண்டிருக்கும் பாதை முழுவதையும் எப்படி வெட்ட வெளிச்சமாக்கிக் காட்டுகிறது என்பதையும் காணத் தவற மாட்டீர்கள் என நம்புகிறேன். இந்த இசைவுக்கும் இந்தத் தெளிவுக்கும் காரணமாய் இருப்பது எது? உண்மையை நாம் நேர் நின்று உற்று நோக்குகிறோம் என்பதுதான். சில வகை ஆடிகளின் செயலை நமக்கு இது நினைவுபடுத்துகிறது — இந்த ஆடிகளின் குவிமையத்தைச் சரியான படி கண்டறிந்து அங்கிருந்து பார்ப்போமேயானால், பொருட்களை அவை இம்மியும் பிசகாமலும் மெய்யான ஒப்பளவுகளிலும் தெரியும் படி பிரதிபலித்துக் காட்டுகின்றன. அளவுமீறி நெருங்கிச் சென்றோ விலகி நின்றோ பார்ப்போமேயானால், யாவும் அவற்றில் தெளிவின்றிக் குழம்பியும் சின்னாபின்னமாய்க் குலைந்தும் தெரியக் காண்கிறோம்.''

முதலாளித்துவ மடமை இங்கே அதன் முழுப் பொலிவுடன் வெளிப்படுகிறது.

## அத்தியாயம் XXI[63]

# மூலதனத் திரட்டலும் விரிதிற மறுவுற்பத்தியும்

*தனிப்பட்ட முதலாளி தொடர்பாய் மூலதனத் திரட்டல் [accumulation] எப்படி நடைபெறுகிறதென்று முதல் பாகத்தில் பார்த்தோம். சரக்கு-மூலதனம் பணமாக மாற்றப்படுவதன் மூலம் உபரி-மதிப்பைக் குறிப்பதாகிய உபரி-உற்பத்திப் பொருளும் பணமாக மாற்றப்படுகிறது. இவ்விதம் பணமாக உருமாற்றம் பெறுகிற உபரி-மதிப்பை முதலாளியானவர் திரும்பவும் உருமாறச் செய்து தமது திறனுடை-மூலதனத்தின் இயற்கைக் கூறுகளை அதிகமாக்கிக் கொள்கிறார். இப்படி அதிகமாகிற மூலதனமானது பொருளுற்பத்தியின் அடுத்த சுற்றில் அதிக உற்பத்தியை அளிக்கிறது. ஆனால் தனிப்பட்ட மூலதனம் தொடர்பாக நிகழ்வது மொத்த வருடாந்தர மறுவுற்பத்தி தொடர்பாகவும் நிகழ்ந்தாக வேண்டும். சாமானிய மறுவுற்பத்தியை ஆராய்ந்த போது இப்படி நிகழக் கண்டோம்—அதாவது தனிப்பட்ட முதலாளியினுடைய நிலை-மூலதனத்தின் கூறுகள் திரும்பத் திரும்ப உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டுத் தேய்ந்து போய் அடுத்தடுத்துப் பணப் படிவாகத் திரண்டு பணச் சேர்ப்பாகிற நிகழ்வு சமுதாயத்தின் வருடாந்தர மறுவுற்பத்தியின் போதும் நிகழக் கண்டோம்.*

*தனிப்பட்ட ஒரு மூலதனம் $400_c+100_v$ ஆகவும், வருடாந்தர உபரி-மதிப்பு 100 ஆகவும் இருக்குமானால், அதன் சரக்கு-உற்பத்தி $400_c+100_v+100_s$ ஆக இருக்கும். மொத்தம் 600 ஆகிற இம்மதிப்பு பணமாக மாற்றப்படுகிறது. இந்தப் பணத்தில் $400_c$ மாறா-மூலதனத்தின் தசையுருவாக மாற்றப்படுகிறது; $100_v$ உழைப்புச் சக்தியாக மாற்றப்படுகிறது. உபரி-மதிப்பு முழுவதும் மூலதனமாய்த் திரட்டப்படுவதாகக் கொண்டால், எஞ்சியுள்ள $100_s$ திறனுடை-மூலதனத்தின் இயற்கைக் கூறுகளாக மாற்றப்பட்டு, கூடுதல் மாறா-மூலதனம் ஆகிறது. இங்கே சிலவற்றை அனுமானம் செய்து கொள்கிறோம்: 1) ஏற்கெனவே செயல்பட்டு வரும் மாறா-மூலதனத்தை*

---

63 *எங்கெல்ஸ் குறிப்பு: இது முதல் முடிவு வரை கையெழுத்துப் பிரதி* VIII.

விரிவாக்கவோ புதிய தொழில் ஒன்றைத் தொடங்கவோ குறிப்பிட்ட தொழில் நுட்ப நிலைமைகளில் இத்தொகை போதுமானதெனக் கொள்கிறோம். ஆனால் இந்நிகழ்முறை தொடங்கும் முன்பு, அதாவது உற்பத்தியின் விரிவாக்கத்தைக் குறிக்கும் மெய்யான மூலதனத் திரட்டல் நடைபெறும் முன்பு உபரி-மதிப்பைப் பணமாக மாற்றி நீண்ட காலத்துக்குப் பணச் சேர்ப்பாகச் சேர்க்க வேண்டியிருக்கலாம். 2) விரிதிற மறுவுற்பத்தி ஏற்கெனவே நடைபெற்று வருவதாகக் கொள்கிறோம். ஏனெனில் பணமானது (பணச் சேர்ப்பாகி வரும் உபரி-மதிப்பானது) திறனுடை-மூலதனத்தின் கூறுகளாக உருமாற்றம் பெற வேண்டுமானால், இக்கூறுகள் சந்தையில் சரக்குகளாய்க் கிடைத்தாக வேண்டும். அவை பூர்த்தியான பண்டங்களாகக் கிடைக்க வேண்டும் என்பதில்லை; சரக்காணையின் பேரில் செய்து தரப்படுகிறவையாக இருந்தால் போதும். தயாரான பிறகு தான் அவற்றுக்கு விலை தரப்படுகிறது; எப்படியும் அவற்றைப் பொறுத்த வரை விரிதிற மறுவுற்பத்தி, அதாவது இயல்பான உற்பத்தியின் விரிவாக்கம் மெய்யாகவே நடைபெறுகிற வரை அவற்றுக்கு விலை தரப்படுவதில்லை. அவை உள்ளுறை நிலையில், அதாவது அவற்றின் அடிக்கூறுகளது நிலையில் இருந்தால் போதும்; ஏனெனில் அவை உற்பத்தியாவதற்குத் தேவைப்படுவதெல்லாம் சரக்காணையின் தூண்டுதல்தான், அதாவது உருவாவதற்கு முன்பான வாங்கலும், விற்கப்படும் என்ற எதிர்பார்ப்பும்தான். ஒரு புறத்தில் இருக்கும் படியான பணம் மறு புறத்தில் விரிதிற மறுவுற்பத்தியை எழச் செய்கிறது என்றால், பணம் இல்லாமலே விரிதிற மறுவுற்பத்திக்கான சாத்தியப்பாடு ஏற்கெனவே இருப்பதுதான் அதற்குக் காரணம். பணமானது அதனளவில் மெய்யான மறுவுற்பத்திக்கான அடிக்கூறாய் இருக்கவில்லை.

உதாரணமாக, முதலாளி A ஓராண்டு காலத்திலோ பல்லாண்டு காலத்திலோ அடுத்தடுத்து உற்பத்தி செய்யும் குறிப்பிட்ட அளவு சரக்குகளை விற்பதாகக் கொள்வோம். இவ்விதம் அவர் உபரி-மதிப்பின் ஊர்தியாகச் செயல்படுகிற சரக்குத் திரளையும்—உபரி-உற்பத்தியையும்—அதாவது சரக்கு வடிவில் அவர் உற்பத்தி செய்திருக்கும் உபரி-மதிப்பையும் பணமாக மாற்றுகிறார்; இப்படிச் சிறிது சிறிதாகப் பணம் சேர்க்கிறார்; தனக்குத் தேவையான புதிய உள்ளுறைப் பண-மூலதனத்தை இவ்விதம் உருவாக்குகிறார்—திறனுடை-மூலதனத்தின் கூறுகளாய் உருமாறக் கூடியது, உருமாறுவதற்காக அமைந்தது என்பதால் இது உள்ளுறை மூலதனமாகிறது. ஆனால் உண்மையில் அவர் செய்வது வெறும் பணச் சேர்ப்பே தவிர வேறல்ல; பணச் சேர்ப்பு மெய்யான மறுவுற்பத்தியின் கூறு அல்ல. முதலாவதாக அவர் செய்வதெல்லாம் சுற்றியோடிக் கொண்டிருக்கும் பணத்தை சுற்றோட்டத்திலிருந்து தொடர்ந்து திரும்பத் திரும்ப வெளியே எடுப்பதுதான். இப்படி அவர் வெளியே எடுத்துப்

பெட்டியில் பூட்டி வைக்கும் பணம் முன்பு சுற்றோட்டத்துள் நுழையு முன் வேறொரு சேர்ப்பின் பகுதியாக இருந்திருக்கலாம். முதலாளி Aஇன் பணச் சேர்ப்பாகி உள்ளுறை நிலையில் புதிய பண-மூல தனமாய் இருக்கிற இது சமுதாயச் செல்வம் கூடுதலாவதைக் குறிக்க வில்லை. சேர்ப்பாகச் சேர்க்கப்படாமல் நுகர்வுப் பண்டங்கள் வாங்கு வதற்காகச் செலவிடப்பட்டிருந்தால் எப்படி இது சமுதாயச் செல்வ மாவதில்லையோ, அதே போலத்தான் சேர்ப்பாகப் பூட்டி வைக்கப் படுகிற போதும் சமுதாயச் செல்வமாவதில்லை. சுற்றோட்டத்தி லிருந்து வெளியே எடுக்கப்படும் பணம், ஆகவே சுற்றியோடிக் கொண்டிருந்த பணம் அதற்கு முன்பு பணச் சேர்ப்பின் பகுதியாகச் சேர்த்து வைக்கப்பட்டிருந்ததாகவும் இருந்திருக்கலாம்; கூலியின் பண வடிவமாகவும் இருந்திருக்கலாம்; உற்பத்திச் சாதனங்களோ ஏனைய சரக்குகளோ உருமாறியதால் வந்த பணமாகவும் இருந்திருக் கலாம்; அல்லது யாரேனும் ஒரு முதலாளியின் மாறா-மூலதனக் கூறுகளையோ வருவாயையோ சுற்றியோட வைத்ததாகவும் இருந் திருக்கலாம். எப்படி இருந்திருப்பினும் இந்தப் பணம் புதிய செல்வ மாகாது — சாமானிய சரக்குச் சுற்றோட்டத்தின் கோணத்திலிருந்து பார்க்கையில் குறிப்பிட்ட பணத் தொகையானது ஒரே நாளில் பத்து தரம் புரண்டு வெவ்வேறான பத்து சரக்கு-மதிப்புகளை ஈடேற்றம் பெறச் செய்தது என்பதால், அது தனது மெய்யான மதிப்புக்கு மட்டுமல்லாமல், அதைப் போல் பத்து மடங்கான மதிப்புக்கு எப்படி ஊர்தி அல்லது வாகனம் ஆவதில்லையோ அதேபோலத் தான் இதுவும். இந்தப் பணம் இல்லாமற் போயினும் அந்தச் சரக்கு கள் இருந்து வரத்தான் செய்கின்றன, புரள்வு ஒன்றானாலும் பத்தானாலும் பணம் அந்தக் குறிப்பிட்ட தொகையாகவேதான் இருக்கிறது (அல்லது தேய்ந்து போவதால் குறையவுங்கூட செய் கிறது). தங்க உற்பத்தியின் போது மட்டுமே — உற்புத்தியாகிற தங்க மானது உபரி-மதிப்பைத் தாங்கி வருகிற உபரி-உற்பத்தியும் அடங் கியதாய் இருக்கும் அளவுக்கு — புதிய செல்வம் (உள்ளுறைப் பணம் [potential money|) படைக்கப்படுகிறது. புதிதாக உற்பத்தியாகிற தங்கமனைத்தும் சுற்றோட்டத்தில் நுழைகிற அளவுக்குத்தான் அது புதிய உள்ளுறைப் பண-மூலதனங்களுக்கான பணப் பொருளை அதிகமாக்குகிறது.

பணமாகச் சேர்த்து வைக்கப்படும் இந்த உபரி-மதிப்பு புதிதாக வரப்பெறும் கூடுதல் சமுதாயச் செல்வமாகாது என்றாலும், அது புதிதாக வரப்பெறும் உள்ளுறைப் பண-மூலதனத்தைக் குறிப்ப தாகும். ஏனெனில் பண-மூலதனமாகச் செயல்படும் பொருட்டே அது பணமாகச் சேர்த்து வைக்கப்படுகிறது. (சிறிது சிறிதாய் உபரி-மதிப்பு பண்மாக மாற்றப்படும் இந்த வழி அல்லாமல் வேறொரு வழியிலும் புதிய பண-மூலதனம் உதிக்க முடியும் — இதைப் பிற் பாடு பரிசீலிப்போம்.)

சரக்குகளை விற்று விட்டு அதைத் தொடர்ந்து எதையும் வாங்காமலிருப்பதன் மூலம் பணம் சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்டு பணச் சேர்ப்பாக வைக்கப்படுகிறது. இந்தக் காரியம் பரவலாய் எங்கும் நடைபெறுவதாகக் கொண்டால், எல்லாரும் சரக்குகளை விற்றுப் பணம் சேர்க்கப் பார்ப்பார்களே தவிர யாரும் சரக்குகளை வாங்க முன்வர மாட்டார்களே, என்ன செய்வது என்பதாக நினைக்கத் தோன்றும். தனிப்பட்ட ஒவ்வொரு மூலதனமும் திரட்டலிலும் ஈடுபடுமாதலால், பணச் சேர்ப்பு பரவலாய் எங்கும் நடைபெறுவதாகவே கொள்ள வேண்டும்.

வருடாந்தர மறுவுற்பத்தியின் பல்வேறு பகுதிகளுக்குமிடையிலான சுற்றோட்ட நிகழ்முறையை நேர்கோட்டில் நடைபெறுவதாக வைத்துக் கொண்டால்—ஒரு சில விதிவிலக்குகள் தவிர இந்நிகழ்முறை எப்போதுமே எதிரெதிர் இயக்கங்களால் ஆனது என்பதால் இப்படி வைத்துக் கொள்வது சரியல்ல—விற்காமலே வாங்குகிறவராக மட்டும் இருக்கும் உற்பத்தியாளரிடமிருந்து தொடங்கி, ஏனைய எல்லாரும் இவருக்கு விற்பதாக அனுமானித்துக் கொள்ள வேண்டியிருக்கும். அப்போது சமுதாயத்தின் வருடாந்தர உபரி-உற்பத்தி முழுவதும் (அனைத்து உபரி-மதிப்பையும் இதுதான் தாங்கிச் செல்கிறது) அவருடைய கைக்குப் போய் விடும். ஏனைய எல்லா முதலாளிகளும் அவரது உபரி-உற்பத்தியை உரிய விகிதத்தில் தம்மிடையே பங்கிட்டுக் கொள்வார்கள்; இயல்பாகவே அவரது இந்த உபரி-உற்பத்தி பணமாகவும், அவரது உபரி-மதிப்பு பொன்னாகவும் இருக்கிறது. ஏனெனில் தங்க உற்பத்தியாளரின் உற்பத்திப் பண்டத்தில் அவரது செயல்படும் மூலதனத்தை மாற்றீடு செய்வதற்கான பகுதி ஏற்கெனவே அவர் கையை விட்டுப் போய் விடுகிறது. அப்படியானால் பொன்னுருவில் இருக்கிற தங்க உற்பத்தியாளரின் உபரி-மதிப்புதான் ஏனைய எல்லா முதலாளிகளும் அவர்களது வருடாந்தர உபரி-உற்பத்தியைப் பணமாக மாற்றிக் கொள்வதற்கு வேண்டிய பணப் பொருளுக்கான நிதியமாகிறது. ஆக அதன் மதிப்பின் பருமனானது சமுதாயத்தின் மொத்த வருடாந்தர உபரி-மதிப்புக்குச் சமமாய் இருந்தாக வேண்டும். அதோடு இந்த உபரி-மதிப்பு முதற்கண் பணச் சேர்ப்பின் உருவினைக் கொண்டதாய் இருந்தாக வேண்டும். எல்லாம் அபத்தமான அனுமானங்கள், பொதுவான பணச் சேர்ப்பு ஏக காலத்தில் உருவாகிற சாத்தியப்பாட்டிற்கு விளக்கம் கூற இவை உதவலாமே தவிர, மறுவுற்பத்தியினை (தங்க உற்பத்தியாளர்களுடையதைத் தவிர்த்து) ஓரடி கூட முன்னேற்றக் கூடியவை அல்ல.

சிக்கல் வாய்ந்ததாகத் தோன்றுகிற இதற்குத் தீர்வு காணுமுன், உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்கிற துறை Iஇலான மூலதனத் திரட்டலை நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்கிற

துறை IIஇலான மூலதனத் திரட்டலிலிருந்து வேறுபடுத்தியாக வேண்டும். துறை Iஐ முதலில் எடுத்துக் கொள்வோம்.

## I. துறை Iஇல் மூலதனத் திரட்டல்

### *1. பணச் சேர்ப்பின் உருவாக்கம்*

துறை Iஐச் சேர்ந்த பற்பல தொழிற் கிளைகளிலும் செய்யப் படுகிற முதலீடும் சரி, மற்றும் இந்தத் தொழிற் கிளை ஒவ்வொன்றி லும் செய்யப்படுகிற தனிப்பட்ட முதலீடுகளும் சரி, அடுத்தடுத்து வரப்பெறும் உபரி-மதிப்பை உள்ளுறைப் பண-மூலதனமாக உரு மாற்றம் பெறச் செய்யும் நிகழ்முறையின் வெவ்வேறு கட்டங்களில் இருக்கும் என்பது தெளிவு. இம்முதலீடுகள் மேற்சொன்ன நிகழ் முறையின் எக்கட்டத்தில் உள்ளன என்பது—அவற்றின் பரிமாணங் களும் தொழில்நுட்ப நிலைமைகளும் சந்தை நிலைமைகளும் இன்ன பிறவும் ஒரு புறமிருக்க—அவற்றின் வயதைப் பொறுத்ததாகும், அதாவது அவை எவ்வளவு காலமாய்ச் செயல்பட்டு வருகின்றன என்பதைப் பொறுத்ததாகும். உபரி-மதிப்பின் உருமாற்றத்தால் கிடைக்கும் பண-மூலதனம் ஏற்கெனவே செயல்பட்டு வரும் மூல தனத்தின் விரிவாக்கத்துக்கு வேண்டியதாகவும் இருக்கலாம், புதிய தொழில் முனைவுகளை நிறுவுவதற்கு வேண்டியதாகவும் இருக்க லாம்—உற்பத்தியின் விரிவாக்கம் இவ்விரு வழிகளில் எதில் வேண்டுமானாலும் நடைபெறலாம். ஆகவே ஒரு பிரிவு முதலாளி கள் தக்க பருமனுடையதாய் வளர்ந்து விட்ட அவர்களது உள் ளுறைப் பண-மூலதனத்தைத் திறனுடை-மூலதனமாக் மாற்றுவதில் ஈடுபட்டிருக்கிறார்கள், அதாவது உபரி-மதிப்பைக் காசாக்கிச் சேர்த்து வைத்திருக்கும் பணத்தைச் செலவிட்டு உற்பத்திச் சாதனங் களை, கூடுதல் மாறா-மூலதனக் கூறுகளை விலைக்கு வாங்குகிறார் கள். ஆனால் மற்றொரு பிரிவு முதலாளிகள் அவர்களது உள் ளுறைப் பண-மூலதனத்தைச் சேர்த்திடுவதில் ஈடுபட்டிருக்கிறார் கள். இந்த இரு பிரிவு முதலாளிகளும் வாங்குவோராகவும் விற் போராகவும் ஒருவரை ஒருவர் எதிர்நோக்குகிறார்கள்—ஒரு பிரி வினர் பிரத்தியேகமாய் வாங்குவோராகவும் மற்றொரு பிரிவினர் பிரத்தியேகமாய் விற்போராகவும் செயல்படுகிறார்கள்.

எடுத்துக்காட்டாக, முதலாளி A முதலாளி Bஇடம் (வாங்கு வோர் பலரையும் முதலாளி B குறிப்பவராய் இருக்கலாம்) மதிப்பு 600ஐ ($=400_c+100_v+100_s$) விற்பதாகக் கொள்வோம். சரக் காய் இருக்கும் 600ஐப் பணமான 600க்கு A விற்கிறார். A விற்கிற இந்தச் சரக்கில் 100 உபரி-மதிப்பைக் குறிப்பதாகும்; இந்த உபரி-மதிப்பை அவர் பணமாக மாற்றியதும் அதைச் சுற்றோட்டத் திலிருந்து வெளியே எடுத்துப் பணச் சேர்ப்பாக வைத்துக்

கொள்கிறார். ஆனால் பணமாக இருக்கும் இந்த 100 ஆனது, மதிப்பாகிய 100ஐத் தாங்கி வருகிற உபரி-உற்பத்தியின் பண வடிவமே தவிர வேறல்ல. இப்படிப் பணச் சேர்ப்பை உருவாக்கு வதானது எவ்விதத்திலும் பொருளுற்பத்தியாகாது, எனவே கூடுதல் உற்பத்தியும் ஆகாது. முதலாளி இங்கே செய்வதெல்லாம் அவ ருடைய உபரி-உற்பத்தியை விற்று வருகிற பணத்தை (100) சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுத்துக் கைக்குள் முடங்கி விடு மாறு இருத்துவதுதான். இப்படிச் செய்வது A மட்டுமல்ல, சுற் றோட்டத்தின் பல முனைகளிலிருந்தும் A', A'', A''' போன்ற ஏனைய பல முதலாளிகளும் இதே போல் ஆர்வத்துடன் பணச் சேர்ப்பை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். பணம் சுற்றோட்டத் திலிருந்து வெளியே எடுக்கப்பட்டு பற்பல தனிப்பட்ட சேர்ப்பு களாக, அதாவது உள்ளுறைப் பண-மூலதனங்களாகத் திரட்டப் படும் இந்தப் பற்பல முனைகளும் குறிப்பிட்ட காலத்துக்குப் பணத் திடமிருந்து அதன் சுற்றியோடும் ஆற்றலைப் பறித்து அதை முடங் கச் செய்து விடுவதால், இம்முனைகள் சுற்றோட்டத்தைத் தடுத்திடும் அத்தனைத் தடைகளாக அமைகின்றன. ஆனால் சாமானியச் சரக் குச் சுற்றோட்டம் முதலாளித்துவச் சரக்கு உற்பத்தியின் அடிப் படையிலானதாய் மாறுவதற்கு நெடுங் காலம் முன்னரே, பணச் சேர்ப்புகள் உருவாகத் தொடங்கி விட்டன என்பதை மனத்திற் கொள்ள வேண்டும். சமுதாயத்தில் இருக்கும் பணத்தின் அளவு சுற்றோட்டத்தில் செல்கிற பகுதியைக் காட்டிலும் — நிலைமை களைப் பொறுத்து அதிகரிக்கவோ குறையவோ செய்கிறதென் றாலும் — எப்போதுமே பெரியதாகும். அதே பணச் சேர்ப்புகளும் சேர்ப்புகள் உருவாக்கப்படுதலும்தான் முதலாளித்துவப் பொருளுற் பத்தியிலும் காணப்படுகின்றன, ஆனால் இப்போது முதலாளித் துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் உள்ளார்ந்ததோர் அடிக் கூறாகக் காணப்படுகின்றன.

கடன்-செலாவணி அமைப்பானது இந்த உள்ளுறை மூலதனங் களை எல்லாம் வங்கிகள் முதலானவற்றின் கையில் ஒன்றுகுவியச் செய்து பலரும் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய மூலதனமாக, ''கடனாகத் தரப்படக் கூடிய மூலதனமாக,'' அதாவது செயலற்று முடங்கிய நிலையில் இருத்தப்பட்டு வருங்காலத்துக்கான கற்பனை யாக்கப்படாமல், இப்போதே செயல்பட்டு வட்டி பெற்று ஒன்றுக்கு இரண்டாய்ப் பெருகும் படியான பண-மூலதனமாக்கிடுவதைக் காண்போரது மன மகிழ்ச்சி புரிந்து கொள்ளக் கூடியதே.

ஆயினும் முதலாளி A அவரது உபரி-உற்பத்தியைப் பொறுத்த மட்டில் விற்பவராகச் செயல்படுவதோடு நின்று விடும் அளவுக்குத் தான், அதைத் தொடர்ந்து வாங்குகிறவராக செயல்படாதிருக்கும் அளவுக்குத்தான், அவர் பணச் சேர்ப்பினை உருவாக்குகிறவர் ஆகிறார். அவரது உபரி-மதிப்பைப் பணமாக மாற்றும் பொருட்டு

அதைத் தாங்கி வருகிற உபரி-உற்பத்தியை அடுத்தடுத்து உற்பத்தி செய்து கொண்டிருக்க வேண்டும்—அவரிடம் பணச் சேர்ப்பு உருவாகுவதற்கு இது முன்னிபந்தனை ஆகும். இப்போது நாம் துறை Iஇனுள் நடைபெறும் சுற்றோட்டத்தை மட்டும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்; இங்கே உபரி-உற்பத்திப் பொருளின் தசையுருவம், அதே போல இந்த உபரி-உற்பத்தியை ஒரு பகுதியாகத் தன்னுள் கொண்டிருக்கும் மொத்த உற்பத்தியின் தசையுருவம் துறை Iஇன் மாறா-மூலதனக் கூறு ஒன்றின் தசையுரு ஆகும்—அதாவது உற்பத்திச் சாதனங்களைப் படைக்கிற உற்பத்திச் சாதனங்களது வகையைச் சேர்ந்ததாகும். இது என்னாகிறது என்பதை, அதாவது இதை விலைக்கு வாங்குகிற முதலாளிகளான B, B′, B″ முதலானோரிடம் இது ஆற்றுகிற பணி என்ன என்பதை சிறிது நேரம் கழித்துப் பார்ப்போம்.

யாவற்றுக்கும் முதலாவதாக இங்கே நாம் ஒன்றைக் கவனித்தாக வேண்டும்: முதலாளி A தமது உபரி-மதிப்புக்கு ஈடான பணத்தைச் சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுத்துப் பணச் சேர்ப்பாக வைத்துக் கொள்கிறார் என்ற போதிலும், அதே போது சரக்குகளை அவர் சுற்றோட்டத்துள் செலுத்தி விட்டுப் பதிலுக்கு வேறு சரக்குகளை வெளியே எடுக்காதிருக்கிறார். இதனால் B, B′, B″ போன்ற பிற முதலாளிகள் பணத்தைச் சுற்றோட்டத்துள் செலுத்திச் சரக்குகளை மட்டும் வெளியே எடுப்பது சாத்தியமாகிறது. நாம் இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கும் உதாரணத்தில் இந்தச் சரக்குகள் B, B′ முதலானோரின் மாறா-மூலதனத்தில் நிலை-மூலதனக் கூறாகவோ சுழல்-மூலதனக் கூறாகவோ சேருவதற்கு ஏற்ற தசையுரு பெற்றிருப்பவை; அவை இப்படிச் சேருவதற்கென்றே உற்பத்தி செய்யப்பட்டவை. B, B′ முதலானோரின் உபரி-உற்பத்தியை வாங்குவோரைப் பற்றி ஆராயும் போது இது குறித்து மேலும் சொல்ல வேண்டியிருக்கும்.

---

இடைக்குறிப்பாய் இங்கு ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும்; சாமானிய மறுவுற்பத்தியைப் பரிசீலித்த போது நாம் கண்ட ஒன்றை இங்கேயும் காண்கிறோம்; அதாவது வருடாந்தர உற்பத்தியின் பல்வேறு அடக்கக் கூறுகளுக்கு இடையிலான பரிவர்த்தனைக்கு, அதாவது அவற்றின் சுற்றோட்டத்துக்கு (இந்தச் சுற்றோட்டத்தில் அடங்குவது மூலதனத்தின் மறுவுற்பத்தி மட்டுமல்ல, மாறா-மூலதனமும் மாறும்-மூலதனமும் நிலை-மூலதனமும் சுழல்-மூலதனமும் பண-மூலதனமும் சரக்கு-மூலதனமும் ஆகிய பல்வேறு வடிவங்களிலும் அம்மூலதனம் மீட்டமைக்கப்படுதலும் அதில் அடங்குவதாகும்) சரக்குகள் வாங்கப்படுதலும், இந்த வாங்கலை நிறைவு செய்யும் விதத்தில் அடுத்து அவை விற்கப்படுதலும், அல்லது

சரக்குகள் விற்கப்படுதலும் இந்த விற்றலை நிறைவு செய்யும் விதத்தில் அடுத்து அவை வாங்கப்படுதலும் எவ்விதத்தும் அவசிய மல்ல—அதாவது சரக்குக்குப் பதிலாகச் சரக்கு என்னும் படியான சாமானியச் சரக்குப் பரிவர்த்தனை அவசியமல்ல என்பது தெளிவாகிறது. அரசியல் பொருளாதாரமானது, முக்கியமாக பிசியோக்கிராட்டுகள், ஆதாம் ஸ்மித் முதலாய்த் தடையிலா வாணிப மரபினர் இது அவசியமென அனுமானித்துக் கொண்டது சரியல்ல என்பது தெரிகிறது. நிலை-மூலதனம் முதலீடாகி விட்டால் பிறகு அதன் செயற் காலம் முழுவதிலும் அது மாற்றீடு செய்யப் படுவதில்லை, தொடர்ந்து பழைய வடிவத்திலேயே அது இயங்கி வர, அதன் மதிப்பானது கொஞ்சம் கொஞ்சமாய்ப் பணப் படிவாக வந்து திரளுகிறது என்பது நமக்குத் தெரியும். $II_c$இன் நிலை-மூல தனப் பகுதியானது காலவட்ட முறையில் புதுப்பிக்கப்படுவதற்கு ஒரு புறத்தில் அவசியம் தேவைப்படுவது எல்லாம் (மூலதன-மதிப்பாகிய $II_c$ முழுதும் மொத்தம் $I_{(v+s)}$ மதிப்புள்ள கூறுகளாகப் பரிவர்த்தனை செய்யப்படுகிறது), $II_c$இன் நிலை-மூலதனப் பகுதி யில் ஒரு கூறு—பண வடிவிலிருந்து திரும்பவும் தசையுருவினைப் பெறுகிற இந்தக் கூறு—விற்றலால் நிறைவு பெறாமல் **வாங்கப் படுதல் மட்டும்தான்,** இதற்கிணைவாக நடைபெறுவது $I_s$ ஆனது வாங்கலால் நிறைவு பெறாமல் விற்கப்படுதல் மட்டும்தான்; மறு புறத் தில் அவசியம் தேவைப்படுவது எல்லாம் $II_c$இன் இந்த நிலை-மூலதனப் பகுதியின் மற்றொரு கூறான தேய்மானக் கூறு—பணப் படிவாகத் திரளுகிற இக்கூறு—வாங்கலால் நிறைவு பெறாமல் **விற்கப்படுதல் மட்டும்தான்,** இதற்கிணைவாக நடைபெறுவது $I_s$ ஆனது விற்றலால் நிறைவு பெறாமல் வாங்கப்படுதல் மட்டும் தான். இந்தப் பரிவர்த்தன்னை இயல்பான முறையில் நடைபெறும் பொருட்டு, $II_c$ விற்றலின்றி வாங்குகிற மதிப்பானது அது வாங்க லின்றி விற்கிற மதிப்புக்குச் சமமாய் இருப்பதாகவும், $I_s$ வாங்க லின்றி $II_c$ பிரிவு *1*க்கு விற்கிற மதிப்பு அது விற்றலின்றி $II_c$ பிரிவு 2 இடமிருந்து வாங்குகிற மதிப்புக்குச் சமமாய் இருப்பதாகவும் அனுமானித்துக் கொண்டாக வேண்டும். (பக்கம் 615-16.) இல்லை யேல் சாமானிய மறுவுற்பத்தியானது குலைவுற்று விடும். விற்ற லின்றி ஒரு முனையில் நடைபெறும் வாங்கலானது வாங்கலின்றி இன்னொரு முனையில் நடைபெறும் விற்றலால் ஈடுசெய்யப் பட்டாக வேண்டும். $I_s$இல் எந்தப் பகுதி A, A′, A′′ முதலா னோரின் பணச் சேர்ப்புகளாகிறதோ அந்தப் பகுதி வாங்கலின்றி புரிந்திடும் விற்றல்கள், எந்தப் பகுதி B, B′, B′′ முதலானோரின் சேர்ப்புகளைக் கூடுதல் திறனுடை-மூலதனக் கூறுகளாய் உரு மாற்றுகிறதோ அந்தப் பகுதி விற்றலின்றி புரிந்திடும் வாங்கல் களை ஈடுசெய்வதாகவும் இங்கே அனுமானித்துக் கொண்டாக வேண்டும்.

வாங்குகிறவர் அதே மதிப்பளவுக்கு விற்கிறவராகவும், விற்கிறவர் அதே மதிப்பளவுக்கு வாங்குகிறவராகவும் ஆவதால் சமநிலை திரும்பவும் ஏற்படுகிற அளவுக்கு, பணம் திரும்பி வருகிறது: அதாவது வாங்குவதற்காகப் பணத்தை முன்னீடு செய்த தரப்புக்கு, திரும்பவும் வாங்குவதற்காக விற்பனை செய்த தரப்புக்கு, பணம் திரும்பி வருகிறது. ஆனால் சரக்குப் பரிவர்த்தனையைப் பொறுத்த வரை, அதாவது வருடாந்தர உற்பத்திப் பண்டத்தின் பல்வேறு பகுதிகளும் பரிவர்த்தனையாவதைப் பொறுத்த வரை, உள்ளபடியே சமநிலை ஏற்பட வேண்டுமானால் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும் சரக்குகளின் மதிப்புகள் சமமாய் இருத்தல் வேண்டும்.

ஒரு புறத்தில் விற்றலில்லா வாங்கல்களும் மறு புறத்தில் வாங்கலில்லா விற்றல்களுமான ஒருதரப்பான பரிவர்த்தனைகளே நடைபெறுவதால்—முதலாளித்துவ அடிப்படையில் வருடாந்தர உற்பத்தி இயல்பான முறையில் பரிவர்த்தனையாவதற்கு இத்தகைய ஒருதரப்பான உருமாற்றங்கள் அவசியம் என்பதை மேலே நாம் கண்ணுற்றோம்—விற்றலில்லா வாங்கல்களின் மதிப்பளவும் வாங்கலில்லா விற்றல்களின் மதிப்பளவும் ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொள்கின்றன என்கிற அனுமானத்தின் பேரில்தான் மேற்கூறிய சமநிலை ஏற்பட முடியும். சரக்கு உற்பத்தியே முதலாளித்துவப் பொருளுற்பத்திக்குரிய பொது வடிவமாய் இருப்பதால், இங்கு பணம் புரிந்திட வேண்டிய பணிகள், சுற்றோட்ட ஊடகமாக மட்டுமல்லாமல் பண-மூலதனமாகவும் பணம் புரிந்திட வேண்டிய பணிகள் நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன. முதலாளித்துவப் பொருளுற்பத்திக்குரிய பரிவர்த்தனையும், ஆகவே மறுவுற்பத்தியும் இயல்பான முறையில் நடைபெறுவதற்கு குறிப்பிட்ட சில நிலைமைகள் இவ்விதம் அத்தியாவசியமாகி விடுகின்றன. ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தியானது இயற்கையாகவே தன்னியல்பாய் நடந்தேறும் தன்மை பெற்றிருப்பதால் சமநிலை [balance] என்பதே தற்செயலான நிகழ்வாகி மேற்கூறிய நிலைமைகள் யாவும் இயல்பற்ற முறைகேட்டுக்கான நிலைமைகளாக, நெருக்கடிகள் வெடிப்பதற்கான சாத்தியப்பாடுகளாக மாறி விடுகின்றன.

மேலும், $I_v$ ஆனது அதற்கு $II_c$இல் ஈடான ஒரு மதிப்புக்குப் பரிவர்த்தனை செய்யப்படும் போது, முடிவில் துறை IIஇன் சரக்குகள் $II_c$க்காக துறை Iஇன் சரக்குகளில் அதற்குச் சமமான மதிப்புள்ளவற்றால் மாற்றீடு செய்யப்படுகின்றன என்றும், ஆகவே துறை IIஇன் கூட்டு முதலாளிக்கு அவரது சரக்கு விற்றல் பிற்பாடு அதே மதிப்புக்கு துறை Iஇலிருந்தான சரக்கு வாங்கலால் நிறைவு செய்யப்படுகிறது என்றும் பார்த்தோம். இந்த மாற்றீடு உள்ளபடியே நடைபெறுகிறது. ஆனால் I, II ஆகிய துறைகளின் முதலாளிகளது சரக்குகள் இவ்வாறு ஒன்று மற்றொன்றாய் உருமாற்றம்

அடைந்த போதிலும், அவர்களிடையே நேரடிப் பரிவர்த்தனை ஏதும் நடைபெறவில்லை. துறை IIஇன் முதலாளிகள் தமது சரக்குகளான $II_c$ஐத் துறை Iஇன் தொழிலாளி வர்க்கத்துக்கு விற்கிறார்கள். இந்தத் தொழிலாளி வர்க்கம் சரக்குகளை வாங்குவோராய் மட்டும் துறை IIஇன் முதலாளிகளை எதிர்நோக்குகிறது. இம் முதலாளிகள் சரக்கு விற்பவராக மட்டும் அவ்வர்க்கத்தை எதிர் நோக்குகிறார்கள். துறை IIஇன் முதலாளிகள் இப்படித் தமக்கு வரும் பணத்தைக் கொண்டு சரக்கு வாங்குவோராய்த் துறை Iஇன் முதலாளிகளை எதிர்நோக்குகிறார்கள். துறை Iஇன் முதலாளிகளோ $I_v$ மதிப்புள்ள சரக்குகளை விற்போராய்த் துறை IIஇன் முதலாளிகளை எதிர்நோக்குகிறார்கள். இந்தச் சரக்கு விற்றலைக் கொண்டுதான் முடிவில் துறை I அதன் மாறும்-மூலதனத்தைப் பண-மூலதன வடிவில் திரும்பப் பெற்றுக் கொள்கிறது. துறை Iஇன் மூலதனம் $I_v$ மதிப்புள்ள சரக்குகளை விற்பவராக மட்டுமே IIஇன் மூலதனத்தை எதிர்நோக்குகிறது என்றால், துறை Iஇன் தொழிலாளி வர்க்கத்தினது உழைப்புச் சக்தியை வாங்குவதன் மூலம் அது சரக்குகளை வாங்குவோராக அந்தத் தொழிலாளி வர்க்கத்தை எதிர்நோக்குகிறது. துறை Iஇன் தொழிலாளி வர்க்கம் சரக்குகளை (அதாவது வாழ்வுச் சாதனங்களை) வாங்குவோராக மட்டும் துறை IIஇன் முதலாளிகளை எதிர்நோக்குகிறது என்றால், அது சரக்கு விற்போராக மட்டும், அதாவது உழைப்புச் சக்தியை விற்போராக மட்டும் துறை Iஇன் முதலாளியை எதிர்நோக்குகிறது.

துறை Iஇன் தொழிலாளி வர்க்கம் உழைப்புச் சக்தியை ஓயாமல் தொடர்ந்து அளித்தல், துறை Iஇன் சரக்கு-மூலதனத்தில் ஒரு பகுதி மாறும்-மூலதனத்துக்குரிய பணமாகத் திரும்பவும் மாற்றப்படுதல், துறை IIஇன் சரக்கு-மூலதனத்தில் ஒரு பகுதியானது மாறா-மூலதனமான $II_c$இன் இயற்கையான பொருட் கூறுகளால் மாற்றீடு செய்யப்படுதல்—அவசிய முதனிலைகளாகிய இவையெல்லாம் ஒன்றுக் கொன்று தேவையாக இருப்பவை, மிகவும் சிக்கலான நிகழ்முறையின் விளைவாய் நடந்தேறுகிறவை, இதிலுள்ள மூன்று சுற்றோட்ட நிகழ்முறைகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை என்றாலும் ஒன்றையொன்று சாராமல் சுயேச்சையாக நடைபெறுகிறவை. இந்நிகழ்முறை அப்படி சிக்கல் வாய்ந்ததாய் இருப்பதால் இது முறைகேடான பாதையில் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏராளம்.

## 2. கூடுதல் மாறா-மூலதனம்

உபரி-மதிப்பைத் தாங்கி வரும் உபரி-உற்பத்தியானது அதனைத் தனதாக்கிக் கொள்வோருக்கு—இங்கே துறை Iஇன் முதலாளிகளுக்கு — செலவின்றிக் கிடைப்பதாகும். அவர்கள் அதை

அடைவதற்காக எவ்வடிவிலும் பணமோ சரக்குகளோ முன்னீடு செய்யத் தேவையில்லை. பிசியோக்கிராட்டுகளுக்கும் கூட அந்தக் காலத்திலேயே முன்னீடு என்பது திறனுடை-மூலதனத்தின் கூறு களில் உருக்கொண்ட மதிப்பின் பொது வடிவைக் குறிப்பதாகவே இருந்தது. ஆகவே துறை Iஇன் முதலாளிகள் முன்னீடு செய் வதெல்லாம் அவர்களது மாறா-மூலதனமும் மாறும்-மூலதனமும் தானே தவிர வேறல்ல. தொழிலாளி தம்து உழைப்பைக் கொண்டு இம்முதலாளிகளுடைய மாறா-மூலதனத்தைப் பழுதின்றிப் பாது காப்பது மட்டுமல்லாமல், சரக்குகளின் வடிவில் தாம் புதிதாகப் படைத்திடும் மதிப்பில் ஒரு பகுதியைக் கொண்டு அவர்களுடைய மாறும்-மூலதன மதிப்பை மாற்றீடு செய்வது மட்டுமல்லாமல், உபரி-உற்பத்தியின் வடிவிலுள்ள உபரி-மதிப்பையும் தமது உபரி-உழைப்பைக் கொண்டு படைத்தளிக்கிறார். இந்த முதலாளிகள் தொடர்ச்சியாக அடுத்தடுத்து இப்படிக் கிடைக்கும் உபரி-உற்பத் தியை விற்றுப் பணச் சேர்ப்பினை—கூடுதல் உள்ளுறைப் பண-மூலதனத்தை—திரட்டுகிறார்கள். இங்கு நாம் பரிசீலிக்கும் உதார ணத்தில் இந்த உபரி-உற்பத்தி தொடக்கத்திலிருந்தே உற்பத்திச் சாதனங்களின் உற்பத்திச் சாதனங்களாய் இருப்பதாகும். இந்த உபரி-உற்பத்தி B, B′, B′′ முதலானோரிடம் (துறை I) வந்து சேர்ந்த தும்தான் கூடுதல் மாறா-மூலதனமாகச் செயல்படுகிறது. ஆனால் அது விற்கப்படுவதற்கு முன்பே, பணச் சேர்ப்புகளைத் திரட்டுகிற A, A′, A′′ முதலானோரிடம் (துறை I) இருக்கும் போதே தோற்ற நிலையில் [virtual] கூடுதல் மாறா-மூலதனமாகத்தான் இருந்து வருகிறது. துறை Iஇல் நடைபெறும் மறுவுற்பத்தியினை மதிப் பளவை மட்டும் கொண்டு கருதுவோமானால், சாமானிய மறுவுற் பத்தியின் எல்லைக்குள் இருப்போரே ஆவோம். ஏனெனில், இந்தக் கூடுதல் உள்ளுறை மாறா-மூலதனத்தை (உபரி-உற்பத்தியை) உற் பத்தி செய்ய கூடுதல் மூலதனமேதும் செயல்பட்டாகவில்லை, சாமானிய மறுவுற்பத்தியின் அடிப்படையில் செலவிடப்படுவதற்கு மேல் கூடுதல் உபரி-உழைப்பு ஏதும் செலவிடப்படவும் இல்லை. வேறுபாடு எல்லாம் உபரி-உழைப்பு எவ்வடிவில் செயல்படுகிறது, அதனால் விளையும் குறிப்பான பயனின் ஸ்தூலமான தன்மை என்ன என்பதில்தான், உபரி-உழைப்பானது $II_c$க்கு பதில் $I_c$க்கு வேண்டிய உற்பத்திச் சாதனங்களுக்காக, அதாவது நுகர்வுப் பண்டங்களின் உற்பத்திச் சாதனங்களுக்கு பதில் உற்பத்திச் சாத னங்களின் உற்பத்திச் சாதனங்களுக்காகச் செலவிடப்படுகிறது. சாமானிய மறுவுற்பத்தியைப் பரிசீலிக்கையில் துறை Iஇன் உபரி-மதிப்பு முழுவதும் வருவாயாக, அதாவது துறை IIஇன் சரக்குகளை வாங்குவதற்காகச் செலவிடப்படுவதாய்க் கொண்டோம், ஆகவே இந்த உபரி-மதிப்பு மாறா-மூலதனமாகிய $II_c$ஐத் தசையுருவில் மாற்றீடு செய்வதற்குத் தேவையான உற்பத்திச் சாதனங்களாலேயே

ஆனதாய் இருந்தது. சாமானிய மறுவுற்பத்தியிலிருந்து விரிதிற மறுவுற்பத்திக்கு மாறிச் செல்ல வேண்டுமானால், துறை I ஆனது துறை IIக்கு வேண்டிய மாறா-மூலதனக் கூறுகளை முன்னிலும் குறைவாகவும், துறை Iக்கு வேண்டிய மாறா-மூலதனக் கூறுகளை அதே அளவுக்கு அதிகமாகவும் உற்பத்தி செய்தளிக்கும் நிலையில் இருந்தாக வேண்டும். இப்படி மாறிச் செல்லுதல் சிரமமின்றி நடை பெறுவதில்லை. துறை Iஇன் உற்பத்திப் பண்டங்களில் சில இரு துறைகளிலும் உற்பத்திச் சாதனங்களாகப் பயன்படக் கூடியனவாய் இருப்பதானது இந்தச் சிரமங்களைக் குறைக்க உதவுகிறது.

ஆகவே, மதிப்பளவின் கோணத்திலிருந்து மட்டும் கருதுவோமானால், விரிதிற மறுவுற்பத்திக்கு வேண்டிய பொருளாயத அடித் தளம் சாமானிய மறுவுற்பத்தியின் போதே நிறுவப்பட்டு விடுகிறது என்பது தெரிகிறது. துறை Iஇன் தொழிலாளி வர்க்கத்தினுடைய உபரி-உழைப்பை நேரடியாகச் செலவிட்டுதான் துறை Iஇன் உற்பத்திச் சாதனங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன, அதன் தோற்ற நிலையிலான கூடுதல் மூலதனம் படைக்கப் பெறுகிறது. A, A', A'' முதலானோர் (துறை I) திரட்டுகிற கூடுதல் உள்ளுறைப் பண-மூலதனமானது—பணமேதும் செலவு செய்யாமலே இம் முதலாளிகள் அடுத்தடுத்துப் பெறுகிற உபரி-உற்பத்தியை விற்பதன் மூலம் இது உருவாகிறது—துறை Iஇல் உற்பத்தியாகிற கூடுதல் உற்பத்திச் சாதனங்களது பண வடிவமே தவிர வேறல்ல.

ஆக இங்கே கூடுதல் உள்ளுறை மூலதன உற்பத்தியானது (இது அறவே வேறுவிதத்திலும் கூட உருவாக்கப்படலாம் என்பதைப் பின்னர் பார்ப்போம்) உற்பத்தி நிகழ்முறையைச் சேர்ந்த ஒரு நிகழ்வே தவிர வேறல்ல, திறனுடை-மூலதனக் கூறுகளது உற்பத்தியின் குறிப்பிட்ட ஒரு வடிவமே தவிர வேறல்ல.

ஆகவே சுற்றோட்டப் பரப்பின் பற்பல முனைகளில் கூடுதல் உள்ளுறைப் பண-மூலதனம் பெருவீதத்தில் உற்பத்தியாவதானது கூடுதல் உள்ளுறைத் திறனுடை-மூலதனம் பல முனைகளிலிருந்தும் உற்பத்தியாவதன் விளைவும் வெளிப்பாடுமே தவிர வேறல்ல. இந்தக் கூடுதல் திறனுடை-மூலதனம் உற்பத்தியாவதற்குத் தொழில் துறை முதலாளி கூடுதலாகப் பணம் ஏதும் செலவிடத் தேவையில்லை.

A, A', A'' முதலானோரின் (துறை I) தரப்பில் இந்தக் கூடுதல் உள்ளுறைத் திறனுடை-மூலதனம் அடுத்தடுத்து உள்ளுறைப் பண-மூலதனமாக (பணச் சேர்ப்பாக) மாற்றப்படுவதானது, இம் முதலாளிகள் அடுத்தடுத்து பெறுகிற உபரி-உற்பத்தி விற்கப்படுவதைப் பொறுத்தது; அதாவது வாங்கலால் நிறைவு செய்யப் படாமலே சரக்குகள் ஒருதரப்பாய்த் திரும்பத் திரும்ப விற்கப்படுவதைப் பொறுத்தது. சுற்றோட்டத்திலிருந்து திரும்பத் திரும்ப பணம் வெளியே எடுக்கப்பட்டுப் பணச் சேர்ப்பாகத் திரட்டப் படுவதன் மூலம் இந்த மாற்றம் நடைபெறுகிறது. சரக்குகளை

வாங்குகிறவர் தங்க உற்பத்தியாளராக இல்லாத வரை இந்தப் பணச் சேர்ப்பு எவ்விதத்திலும் உயர்நிலை உலோகங்களின் உருவிலான கூடுதல் செல்வம் ஆவதில்லை. ஏற்கெனவே சுற்றோட்டத்திலிருக்கும் பணத்தின் பணியில் ஏற்படும் ஒரு மாற்றத்தை மட்டுமே அது குறிக்கிறது. முன்பு சுற்றோட்ட ஊடகமாகச் செயல்பட்டது இப்போது பணச் சேர்ப்பாகப் பயன்படுகிறது; அதாவது உருவாகிக் கொண்டிருக்கும் புதிய உள்ளுறைப் பண-மூலதனமாகப் பயன்படுகிறது. இவ்வாறு கூடுதல் பண-மூலதனம் உருவாவதற்கும் நாட்டில் இருக்கும் உயர்நிலை உலோகங்களின் அளவுக்கும் காரண காரியத் தொடர்பேதும் இல்லை.

இதிலிருந்து மேலும் தெரிவது என்னவென்றால்: நாட்டில் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் திறனுடை-மூலதனம் (உபரி-உற்பத்தியின் படைப்பாளியாகிய உழைப்புச் சக்தியும் தன்னுடன் இணைக்கப்பட்டிருக்கும் இந்தத் திறனுடை-மூலதனம்) எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாய் இருக்கிறதோ, உழைப்பின் உற்பத்தித் திறனும், ஆகவே உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தியை வேகமாய் விரிவாக்குவதற்கான தொழில் நுட்பச் சாதனங்களும் எவ்வளவுக்கு எவ்வளவு வளர்ச்சியடைந்துள்ளனவோ, இவ்விதம் மதிப்பளவிலும் அம்மதிப்பைக் குறிக்கும் பயன்-மதிப்புகளின் பருமனளவிலும் உபரி-உற்பத்தியானது எவ்வளவுக்கு எவ்வளவு பெரியதாய் இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு

*1)* A, A', A'' முதலானோரிடம் உள்ள உபரி-உற்பத்தியின் வடிவிலான கூடுதல் உள்ளுறைத் திறனுடை-மூலதனம் அதிகமாகிறது;

*2)* பணமாக மாற்றப்படும் இந்த உபரி-உற்பத்தியின் அளவும், அதாவது A, A', A'' முதலானோரிடம் உள்ள கூடுதல் உள்ளுறைப் பண-மூலதனத்தின் அளவும் அதிகமாகிறது. ஃபுல்லர்ட்டனை உதாரணமாகக் கொள்வோமானால், மிகையுற்பத்தி என்பதாக அதன் வழக்கமான அர்த்தத்தில் ஒன்று இருப்பதையே அவர் ஒப்புக் கொள்ள விரும்பாமல், மூலதனத்தின், அதாவது பண-மூலதனத்தின் மிகையுற்பத்தி மட்டுமே இருப்பதாக ஒப்புக் கொள்வதானது மிகச் சிறந்த முதலாளித்துவப் பொருளாதார அறிஞர்களும் கூட அவர்களுடைய பொருளாதார அமைப்பின் பொறியமைவைப் பற்றி ஏதும் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள் என்பதைத்தான் நிரூபிக்கிறது.

A, A', A'' முதலான முதலாளிகளால் (துறை I) நேரடியாக உற்பத்தி செய்யப்பட்டுத் தமதாக்கப்படுகிற உபரி-உற்பத்தியே மூலதனத் திரட்டலுக்கான, அதாவது விரிதிற மறுவுற்பத்திக்கான மெய்யான அடிப்படை என்றாலும், B, B', B'' முதலான முதலாளிகளை (துறை I) அடைந்த பிறகுதான் அது உள்ளபடியே இந்த அடிப்படையாகச் செயல்படுகிறது — பணமாக உருமாற்றம் பெறும் கட்டத்தில்

இருந்து வரும் வரை, அதாவது சன்னம் சன்னமாய் வந்து திரளும் பணச் சேர்ப்பாகவும் உள்ளுறைப் பண-மூலதனமாகவும் இருந்து வரும் வரை சிறிதும் உற்பத்தித் திறனற்றதாகவே இருக்கிறது. இந்த உருமாற்றமானது உற்பத்தி நிகழ்முறைக்கு இணையாக நடைபெற்றாலும், இது இந்நிகழ்முறைக்குப் புறத்தேதான் நடைபெறுகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கு இது வெற்றுச் சுமையே ஆகும். உள்ளுறைப் பண-மூலதனமாகத் திரளுகிற இந்த உபரி-மதிப்பைப் பயன்படுத்தி இலாபம் ஈட்ட வேண்டும், அல்லது வருவாய் பெற வேண்டும் என்னும் ஆவலும் துடிப்பும்தான் முடிவில் கடன்-செலாவணி முறையையும் கடன்-பத்திரக் ''காகிதங்களையும்'' உதிக்கச் செய்கின்றன. பண-மூலதனமானது இவ்விதம் வேறொரு வடிவில் வந்து முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் போக்கின் மீதும் அதன் அபார வளர்ச்சியின் மீதும் பெரிய அளவில் செல்வாக்கு செலுத்துகிறது.

ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் மூலதனத்தின் மொத்த அளவு மேலும் மேலும் அதிகரிப்பதைத் தொடர்ந்து, அம் மூலதனத்தின் செயற்பாட்டால் விளைகிற உபரி-உற்பத்தியானது உள்ளுறைப் பண-மூலதனமாக மாற்றப்படுவதும் மேலும் மேலும் அதிகரிக்கிறது. ஆண்டுதோறும் மறுவுற்பத்தி செய்யப்படும் உள்ளுறைப் பண-மூலதனத்தின் பரிமாணம் இப்படி அறுதியாக அதிகரிக்கையில் அதனைத் துண்டாடுதலும் எளிதாகி விடுவதால், குறிப்பிட்ட எந்த ஒரு தொழிலிலும் (இத்தொழில் அதே முதலாளியைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம், பிறிதொரு முதலாளியைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம்—உதாரணமாக, பரம்பரைச் சொத்து பாகப் பிரிவினை செய்யப்பட்டு குடும்பத்தின் பிற உறுப்பினர்களைச் சேர்ந்ததாகலாம்) அதை முன்னிலும் துரிதமாக முதலீடு செய்ய முடிகிறது. பண-மூலதனத்தைத் துண்டாடுதல் என்பதாகச் சொல்லும் போது சுயேச்சையான புதிய தொழில் ஒன்றில் புதிய பண-மூலதனமாக முதலீடு செய்யும் பொருட்டு மூலச் சொத்திலிருந்து துண்டாடித் தனியே எடுக்கப்படுவதைக் குறிப்பிடுகிறோம்.

உபரி-உற்பத்தியை விற்கிற A, A', A'' முதலான முதலாளிகளுக்கு (துறை I) இந்த உபரி-உற்பத்தி பொருளுற்பத்தி நிகழ்முறையின் நேரடி விளைவாய்க் கிடைப்பதாகும். மாறா-மூலதனம், மாறும்-மூலதனம் இவற்றின் முன்னீடுகளைத் தவிர—சாமானிய மறுவுற்பத்திக்கும் கூட தேவையாயுள்ள இந்த முன்னீடுகளைத் தவிர—கூடுதலாக வேறு சுற்றோட்டச் செயல் எதுவும் தேவைப் படவில்லை. இம்முதலாளிகள் தமது உபரி-உற்பத்தியை விற்பதன் மூலம் விரிதிற மறுவுற்பத்திக்கு வேண்டிய அடித்தளத்தை அமைத்துக் கொண்டு, உள்ளபடியே கூடுதல் உள்ளுறை மூலதனத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள். ஆனால் B, B', B'' முதலான முதலாளிகளின் (துறை I) கதை வேறுவிதமானது. 1) A, A', A''.

முதலானோரின் உபரி-உற்பத்தி B, B', B'' முதலானோரை அடைந்த பிறகுதான் உள்ளபடியே அது கூடுதல் மாறா-மூலதனமாகச் செயல் படுகிறது. (திறனுடை-மூலதனத்தின் மற்றொரு கூறாகிய கூடுதல் உழைப்புச் சக்தியை, அதாவது கூடுதல் மாறும்-மூலதனத்தை இப் போதைக்குக் கருதாமல் விட்டு விடுகிறோம்.) 2) இந்த உபரி-உற் பத்தி இவர்களை வந்தடைவதற்கு ஒரு சுற்றோட்டச் செயல் தேவைப் படுகிறது; அதாவது இவர்கள் அதை விலைக்கு வாங்கியாக வேண் டும்.

விவரம் 1ஐப் பொறுத்த வரை, A, A', A'' முதலான முதலாளி களின் (துறை I) உபரி-உற்பத்தி (கூடுதல் உள்ளுறை மாறா-மூல தனம்) நடப்பு ஆண்டில் ஊற்பத்தி செய்யப்பட்டதாய் இருந்த போதிலும், அந்த உபரி-உற்பத்தியில் பெரியதொரு பகுதி அடுத்த ஆண்டோ அதற்குப் பிறகோதான் B, B', B'' முதலானோரிடம் (துறை I) தொழில் துறை மூலதனமாகச் செயல்படுவதாக இருக்க லாம் என்பது இங்கு நோக்கற்பாலது. விவரம் 2ஐப் பொறுத்த வரை ஒரு கேள்வி எழுகிறது: இந்தச் சுற்றோட்ட நிகழ்முறைக்கு தேவையான பணம் எங்கிருந்து வருகிறது?

B, B', B'' முதலான முதலாளிகள் (துறை I) உற்பத்தி செய் கிறவை பண்ட வடிவில் அவர்களது உற்பத்தி நிகழ்முறைக்கே திரும்புமாயின் அந்த அளவுக்கு அவர்களது உபரி-உற்பத்தியில் உரிய விகிதத்திலான ஒரு பகுதி அவர்களுடைய திறனுடை-மூலதன மாக நேரடியாய் (சுற்றோட்டத்தின் குறுக்கீடு ஏதும் இல்லாமல்) சேர்க்கப்பட்டு, மாறா-மூலதனத்தின் கூடுதல் கூறாகச் செயல்படுகிறது என்பது கூறாமலே விளங்கும். எந்த அளவுக்கு இது நடைபெறு கிறதோ அந்த அளவுக்கு இம்முதலாளிகள் A, A', A'' முதலான முதலாளிகளது (துறை I) உபரி-உற்பத்தியைப் பணமாக மாற்ற முடியாமற் போகும். ஆனால் இது அல்லாத பிற நேர்வுகளில் பணம் எங்கிருந்து வருகிறது? A, A', A'' முதலானோரைப் போலவே தான் B, B', B'' முதலானோரும் தத்தமது உபரி-உற்பத்திகளை விற்றுப் பணச் சேர்ப்புகள் திரட்டுகிறார்கள் என்பது நமக்குத் தெரிந்ததே. இப்படிப் பணச் சேர்ப்பாகத் திரட்டப்பட்டு உள் ளுறைப் பண-மூலதனமாக இருந்து வரும் அவர்களது பண-மூல தனம் இப்போது கூடுதல் பண-மூலதனமாகச் செயல்படுவதற்கான நேரம் வந்து விட்டதாகச் சொல்லலாம். ஆனால் இது வட்டமாகச் சுற்றிச் சுற்றி வருவதே ஆகும். B, B', B'' முதலானோர் (துறை I) சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுத்துத் திரட்டுகிற பணம் எங் கிருந்து வருகிறது என்னும் கேள்வி இன்னமும் நம்முன் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

துறை I, துறை IIஇன் முதலாளிகள் அவர்களுடைய உபரி-உற் பத்தியைப் பரிவர்த்தனை செய்து கொள்ள வேண்டுமானால், அவர்களிடம் குறிப்பிட்ட அளவு பணம் இருந்தாக வேண்டும்

என்பது சாமானிய மறுவுற்பத்தியை ஆராய்ந்த போதே நாம் தெரிந்து கொண்டதுதான். சாமானிய மறுவுற்பத்தியில் நுகர்வுப் பண்டங்களுக்காகச் செலவிடக் கூடிய வருவாயாக மட்டும் பயன் படுகிற பணம், இம்முதலாளிகள் அவரவரது சரக்குகளின் பரி வர்த்தனைக்காக முன்னீடு செய்கிற அதே அளவில் அவர்களிடமே திரும்பி வருகிறது. இங்கே விரிதிற மறுவுற்பத்தியிலும் அதே போலத்தான் பணம் திரும்பி வருகிறது, ஆனால் இந்தப் பணம் ஆற்றுகிற பணி மட்டும் மாறி விடுகிறது. A, A', A'' முதலாளிகளும் B, B', B'' முதலாளிகளும் (துறை I) உபரி-உற்பத்தியை கூடுதல் உள்ளுறைப் பண-மூலதனமாக மாற்றுவதற்குத் தேவையான பணத்தை ஒருவருக்கொருவர் அளித்துக் கொள்கிறார்கள், இப்படிப் புதிதாய் உருவாக்கும் பண-மூலதனத்தை மாறி மாறிச் சுற்றோட்டத்துள் வாங்கற் சாதனமாகச் செலுத்துகிறார்கள்.

இங்கு நாம் செய்து கொள்கிற அனுமானம் ஒன்றே ஒன்று தான் — நாட்டில் இருக்கிற பணத்தின் அளவு (சுற்றோட்டத்தின் வேகமும் இன்ன பிறவும் மாறாதிருப்பதாகக் கொள்வோமானால்) சுணக்கமில்லாச் சுற்றோட்டத்துக்கும் சேமப் பணச் சேர்ப்புக்கும் போதுமானதாய் இருப்பதாக மட்டும் அனுமானித்துக் கொள் கிறோம். சாமானிய சரக்குச் சுற்றோட்டத்துக்கும் இந்த அனுமானம் அவசியம் என்பதை முன்பே பார்த்தோம். இங்கே பணச் சேர்ப்பு கள் ஆற்றுகிற பணி மட்டும்தான் மாறுபடுகிறது. மேலும் தயாராய்க் கையில் இருக்க வேண்டிய பணத்தின் அளவு இங்கு அதிகமாதல் வேண்டும். ஏனென்றால்: முதலாவதாக, முதலாளித்துவப் பொரு ளுற்பத்தியில் எல்லாப் பண்டங்களுமே (புதிதாய் உற்பத்தியாகிற உயர்நிலை உலோகங்களையும் உற்பத்தியாளர்களே நுகர்கிற ஒரு சில பண்டங்களையும் தவிர்த்து ஏனையவை யாவும்) சரக்குகளாக உற்பத்தி செய்யப்படுவதால், இவை யாவற்றையும் பணமாய் உரு மாற்றியாக வேண்டும்; இரண்டாவதாக, முதலாளித்துவப் பொரு ளுற்பத்தியில் சரக்கு-மூலதனமானது அளவிலும் மதிப்பிலும் அறுதி நோக்கில் அதிகமாய் இருப்பதோடு ஈடிணையின்றி அதிவேகமாய் மேலும் மேலும் வளர்ந்தும் செல்வதாகும்; மூன்றாவதாக, மேலும் மேலும் அதிகரித்துச் செல்லும் மாறும்-மூலதனம் பண-மூலதனமாய் மாற்றப்பட்டாக வேண்டும்; நான்காவதாக, உற்பத்தி விரிவடைகிற அதே வேகத்தில் புதிய பண-மூலதனம் உருவாக வேண்டியிருப்ப தால், அதற்கு இணையாகப் பணச் சேர்ப்பு திரளுவதற்கு அவசிய மான பணப் பொருள் கிடைத்தாக வேண்டும்.

பொதுவாகச் சொன்னால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி யின் ஆரம்பக் கட்டத்தில் இதுவேதான் நிலைமை. இந்த ஆரம்பக் கட்டத்தில் கடன்-செலாவணி முறை இருந்தாலும் உலோகப் பணத் தின் சுற்றோட்டமே முதலிடம் வகிக்கிறது. கடன்-செலாவணி முறை மிகவும் வளர்ச்சி அடைந்து விடும் கட்டத்திலும் கூட உலோகப்

பணத்தின் சுற்றோட்டம் அதற்கு அடிப்படையாக இருந்து வரும் வரை இதுவேதான் நிலைமை. இங்கே, ஒரு புறத்தில் உயர்நிலை உலோகங்களின் கூடுதல் உற்பத்தி நீண்ட கால அடிப்படையில் மட்டுமல்லாமல் மிகக் குறுகிய காலங்களிலும் கூட சரக்குகளின் விலைகளைப் பாதித்து நிலையற்றதாக்கக் கூடும் — உயர்நிலை உலோகங்கள் அபரிமிதமாய் உள்ளனவா, பற்றாக்குறையாய் உள்ளனவா என்பதைப் பொறுத்தது இது. மறு புறத்தில் கடன்-செலாவணியின் பொறியமைவு அனைத்தும் பலவிதமான நடவடிக்கைகளையும் வழிமுறைகளையும் செய்நுட்ப உபாயங்களையும் கொண்டு உலோகப் பணச் சுற்றோட்டத்தை ஒப்பளவில் மேன்மேலும் குறைந்து செல்லும் குறைந்தபட்ச எல்லைக்குள் குறுகி விடச் செய்வதில் ஓயாமல் ஈடுபடுகிறது. ஆனால் இதே அளவுக்கு இப்பொறியமைவு மேன்மேலும் செயற்கையானதாகிறது; அதன் முறையான போக்கு குலைவதற்கான சாத்தியப்பாடு மேன்மேலும் அதிகமாகிறது.

பல்வேறு B, B′, B′′ முதலாளிகளது (துறை I) புதிய உள்ளுறைப் பண-மூலதனமானது மூலதனமாகச் செயல்படத் தொடங்கும் போது அவர்கள் தமது உற்பத்திப் பண்டங்களை (தமது உபரி-உற்பத்தியைச் சேர்ந்த பகுதிகளை) தமக்குள் ஒருவரிடமிருந்து ஒருவர் வாங்கவும் விற்கவும் நேரிடலாம். எந்த அளவுக்கு இப்படி ஆகிறதோ அந்த அளவுக்கு, அவர்கள் தமது உபரி-உற்பத்தியின் சுற்றோட்டத்துக்காக முன்னீடு செய்யும் பணம் அவர்களிடமே திரும்பி வருகிறது, தத்தமது சரக்குகளின் சுற்றோட்டத்துக்காக முன்னீடு செய்த அதே அளவில் அவர்களிடமே (வெவ்வேறு B, B′, B′′ முதலாளிகளிடம்) திரும்பி வருகிறது — இயல்பான நிலைமைகளில் இவ்வாறே நடைபெறுகிறது. பணம் கொடுப்புச் சாதனமாகச் சுற்றியோடுமானால், பரஸ்பர வாங்கல்களும் விற்றல்களும் ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொள்ளாமல் மிஞ்சுகிறவற்றை மட்டும் கொடுத்துக் கணக்கைத் தீர்த்துக் கொண்டாக வேண்டும். இங்கே யாவற்றுக்கும் முதலாவதாக உலோகப் பணச் சுற்றோட்டமானது [metallic circulation] அதன் மிகச் சாமானிய, மிகப் புராதன வடிவில் நடைபெறுவதாகக் கொள்வது முக்கியமானது; ஏனென்றால் அந்நிலையில், பணம் வருவதும் போவதும், மிச்சமாக நிற்பவை தீர்க்கப்படுவதும் — சுருங்கச் சொல்லின் கடன்-செலாவணி அமைப்பில் உணர்வுபூர்வமாய் ஒழுங்கியக்கப்படும் நிகழ்முறைகளாகத் தோற்றமளிக்கிறவை யாவும் — கடன்-செலாவணி அமைப்பைச் சாராமல் சுயேச்சையாய் இருப்பது போல் தெரிகின்றன. இவை பிற்காலத்துப் பிரதிபலிப்பின் வடிவுக்கு பதில் புராதன வடிவில் தோற்றமளிக்கின்றன.

### 3. கூடுதல் மாறும்-மூலதனம்

இது வரை கூடுதல் மாறா-மூலதனத்தை மட்டுமே பரிசீலனை

செய்தோம். இப்போது கூடுதல் மாறும்-மூலதனத்தைப் பரிசீலனை செய்தாக வேண்டும்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் உழைப்புச் சக்தி தட்டுப் பாடின்றி எப்போதும் கிடைக்கக் கூடியதாய் இருப்பதையும், அவசியமானால், தொழிலாளர்களின் தொகையையோ ஈடுபடுத்தப் படும் உழைப்புச் சக்தியின் அளவையோ அதிகமாக்காமலே தேவைப் படும் போது கூடுதலான உழைப்பைக் கறக்க முடிவதையும் முதல் பாகத்தில் விரிவாய் விளக்கிச் சொன்னோம். ஆகவே இங்கு இது குறித்து மேலும் கூறத் தேவையில்லை. புதிதாய் உருவாகிற பண-மூலதனத்தில் மாறும்-மூலதனமாக மாறக் கூடிய பகுதிக்கு அது உருமாற்றம் பெற்றாக வேண்டிய உழைப்புச் சக்தி தட்டுப்பாடின்றி கிடைப்பதாக அனுமானம் செய்து கொள்ளலாம். குறிப்பிட்ட ஒரு மூலதனம் மூலதனத் திரட்டல் இல்லாமலே, குறிப்பிட்ட சில வரம்புகளுக்குள் அதன் உற்பத்தியின் அளவுவீதத்தை விரிவாக்கிக் கொள்ள முடியும் என்பதையும் முதல் பாகத்தில் விளக்கினோம். ஆனால் இங்கே நாம் பரிசீலிப்பது அதன் பிரத்தியேக அர்த்தத்தி லான மூலதனத் திரட்டல். இந்த அர்த்தத்தில் உற்பத்தியின் விரி வாக்கம் என்பது உபரி-மதிப்பானது கூடுதல் மூலதனமாக மாற்றப் படுவதையும், இவ்வாறு பொருளுற்பத்தியினது மூலதன அடிப் படையானது விரிவாக்கப்படுவதையும் குறிப்பதாகும்.

தங்க உற்பத்தியாளர் பொன்னுருவிலான அவரது உபரி-மதிப் பில் ஒரு பகுதியை உள்ளுறைப் பண-மூலதனமாகத் திரட்ட முடியும்; தேவையான அளவுக்குத் திரட்டப்பட்டதும் நேரடியாகவே அதை அவர் புதிய மாறும்-மூலதனமாக மாற்ற முடியும்; உபரி-உற்பத்தியை விற்காமலே அவர் இதைச் செய்ய முடியும். இதே போல் அவர் இந்தப் பண-மூலதனத்தை மாறா-மூலதனக் கூறு களாகவும் மாற்ற முடியும். ஆனால் இப்படி மாற்றுவதற்கு அவரது மாறா-மூலதனத்தின் பொருட் கூறுகள் சந்தையில் கிடைத்தாக வேண்டும். இது வரை அனுமானம் செய்து கொண்டது போல், ஒவ்வொரு உற்பத்தியாளரும் அவரது உழைப்பின் பலனை இருப் பில் சேர்த்து வைத்து முடிவில் பூர்த்தியாகிற பண்டத்தைச் சந்தைக் குக் கொண்டு வந்தாலும் ஒன்றுதான், சரக்காணைகள் பெற்று அவற்றை நிறைவேற்றினாலும் ஒன்றுதான். இரு நிலைமைகளிலும், பொருளுற்பத்தி விரிவடைவதாக, அதாவது உபரி-உற்பத்தி கிடைப்ப தாகக் கொள்கிறோம்; ஒரு நிலைமையில் உள்ளபடியே கிடைத் திருப்பதாகவும், மற்றொன்றில் கொடுக்கக் கூடியதாய் உள்ளுறை நிலையில் கிடைத்திருப்பதாகவும் கொள்கிறோம்.

## II. துறை IIஇல் மூலதனத் திரட்டல்

A, A', A'' முதலானோர் (துறை I), அதே துறை Iஐச் சேர்ந்த

B, B', B'' முதலானோரிடம் தமது உபரி-உற்பத்தியை விற்பதாக இதுவரை அனுமானம் செய்து கொண்டோம். ஆனால் A (துறை I) தமது உபரி-உற்பத்தியை துறை IIஐச் சேர்ந்த Bஇடம் விற்றுக் காசாக்குவதாக வைத்துக் கொள்வோம். A ஆனவர் (I) உற்பத்திச் சாதனங்களை B என்பவரிடம் (II) விற்ற பின் நுகர்வுப் பண்டங்களை வாங்காதிருப்பதன் மூலமே, அதாவது Aஇன் வாங்கலில்லா ஒருதரப்பு விற்றலின் மூலமே இது நடைபெற முடியும். இப்போது $I_v$ மட்டுமல்லாமல், அதோடு $I_s$இல் ஒரு பகுதியேனும் நுகர்வுப் பண்டங்களாக இருந்து வரும் $II_c$க்குப் பரிவர்த்தனை செய்யப்படாவிடில், இந்த $II_c$ ஆனது சரக்கு-மூலதன வடிவிலிருந்து திரும்பவும் திறனுடை மாறா-மூலதனத்தின் தசையுருவிற்கு மாற்றம் பெற முடியாது. ஆனால் இந்தப் பரிவர்த்தனையைச் செய்யாமலே முதலாளி A தமது $I_s$ஐக் காசாக்கிக் கொள்கிறார், அதாவது தமது $I_s$ஐ விற்று துறை IIஇலிருந்து பெறுகிற பணத்தைக் கொடுத்து நுகர்வுப் பண்டங்களான $II_c$ஐ வாங்குவதற்கு பதில், சுற்றோட்டத்திலிருந்து அந்தப் பணத்தை வெளியே எடுத்துக் கொள்கிறார். இதனால் Aஇன் தரப்பில் (துறை I) கூடுதல் உள்ளுறைப் பண-மூலதனம் உருவாகிறதென்றாலும், மறு புறத்தில் Bஇன் (துறை II) மாறா-மூலதனத்தில் அதற்குச் சமமான ஒரு பகுதி சரக்கு-மூலதன வடிவில் முடங்கிப் போகிறது, அதாவது திறனுடை மாறா-மூலதனத்தின் தசையுருவிற்கு அதை மாற்ற முடியாமற் போகிறது. வேறு விதமாகச் சொன்னால், Bஇன் (துறை II) சரக்குகளில் ஒரு பகுதி விற்கப்பட முடியாததாகத் தேங்கி விடுகிறது — இப்பகுதியை விற்காமல் அவரால் தமது மாறா-மூலதனம் முழுவதையும் திரும்பவும் திறனுடை-மூலதன வடிவத்துக்கு மாற்ற முடியாது என்பது கூறாமலே விளங்குவதாகும். ஆகவே இந்தப் பகுதியின் அளவுக்கு மிகையுற்பத்தி ஏற்பட்டு விடுகிறது; இதனால் இப்பகுதியின் அளவுக்கு மறுவுற்பத்தியானது — விரிதிறமல்லாத ஒரே அளவுவீதத்திலான மறுவுற்பத்தியுங்கூட — தடைபட்டு விடுகிறது.

இங்கே Aஇன் (துறை I) தரப்பிலான கூடுதல் உள்ளுறைப் பண-மூலதனம், உண்மையில் உபரி-உற்பத்தியின் (உபரி-மதிப்பின்) பணமாக ஈடேற்றம் பெற்ற வடிவமே ஆகும். ஆனால் உபரி-உற்பத்தியை (உபரி-மதிப்பை) அதனளவில் கருதுவோமானால் இங்கு அது சாமானிய மறுவுற்பத்தியைச் சேர்ந்த நிகழ்வாக இருக்கிறது, இன்னமும் விரிதிற மறுவுற்பத்தியைச் சேர்ந்த நிகழ்வாகவில்லை. $I_{(v+s)}$ ஆனது எப்படியும் sஇல் ஒரு பகுதியையாவது தன்னுள் கொண்டிருக்க வேண்டும். இந்த $I_{(v+s)}$ முடிவில் $II_c$க்குப் பரிவர்த்தனையாக வேண்டும்; அப்போதுதான் $II_c$ இன் மறுவுற்பத்தி தொடர்ந்து ஒரே அளவுவீதத்தில் நடைபெற முடியும். முதலாளி A (துறை I) தமது உபரி-உற்பத்தியை முதலாளி Bக்கு (துறை II) விற்பதன் மூலம் அவரது மாறா-மூலதன மதிப்பில் சமமான பகுதியைத் தசையுருவில்

அவருக்குக் கிடைக்கச் செய்கிறார். ஆனால் அதேபோது பணத்தைச் சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுப்பதன் மூலம்—அதாவது விற்றலை வாங்கலால் நிறைவு செய்யாமல் விடுவதன் மூலம்—B(II)இன் சரக்குகளில் அந்தப் பணத்துக்குச் சமதையான ஒரு பகுதியை விற்க முடியாததாக்கி விடுகிறார். எனவே துறை Iஐயும் துறை IIஐயும் சேர்ந்த முதலாளிகள் அடங்கலான சமுதாய மறுவுற்பத்தி முழுவதையும் கருதுவோமானால் A(I)இன் உபரி-உற்பத்தி உள்ளுறைப் பண-மூலதனமாக உருமாறுவதானது B(II)இன் சரக்கு-மூலதனத்தில் அதே மதிப்புள்ள பகுதி திறனுடை-மூலதனமாக (மாறா-மூலதனமாக) உருமாற முடியாமற் போவதைக் குறிப்பதாகிறது; ஆகவே உள்ளுறை விரிதிற மறுவுற்பத்தியைக் குறிப்பதற்குப் பதில் சாமானிய மறுவுற்பத்தி தடைபட்டுப் பற்றாக்குறையாவதைக் குறிப்பதாகிறது. A(I)இன் உபரி-உற்பத்தி உருவாதலும் விற்கப் படுதலும் சாமானிய மறுவுற்பத்தியின் இயல்பான நிகழ்வுகளே ஆதலால், சாமானிய மறுவுற்பத்தியின் அடிப்படையிலே கூட இங்கு ஒன்றையொன்று சார்ந்துள்ள பின்வரும் நிகழ்வுகள் நிகழக் காண்கிறோம்: துறை Iஇல் கூடுதலான உள்ளுறைப் பண-மூலதனம் உருவாதல் (ஆகவே துறை IIஇன் நிலையிலிருந்து நோக்கும் போது குறை-நுகர்வு ஏற்படுதல்); திரும்பவும் திறனுடை-மூலதனமாய் மாற்றப்பட முடியாமல் துறை IIஇன் இருப்பில் சரக்குகள் குவிதல் (அதாவது துறை IIஇல் ஒப்பளவிலான மிகை-உற்பத்தி); துறை Iஇல் பண-மூலதனம் உபரியாதலும் துறை IIஇல் மறுவுற்பத்தி பற்றாக்குறையாதலும்.

இந்த விஷயத்தை மேலும் விரித்துரைக்கத் தேவையில்லை, ஒன்றை மட்டும் குறிப்பிடுவதுடன் நிறுத்திக் கொள்ளலாம்: மறுவுற்பத்தியைப் பரிசீலிக்கையில் துறை Iஇலும் துறைIIஇலும் உபரி-மதிப்பு அனைத்துமே வருவாயாகச் செலவிடப்படுவதாய் அனுமானித்துக் கொண்டோம், ஆனால் உள்ளபடியே நடப்பது என்னவென்றால், உபரி-மதிப்பில் ஒரு பகுதி வருவாயாகச் செலவிடப் படுகிறது, மற்றொரு பகுதி மூலதனமாக மாற்றப்படுகிறது—மெய்யான மூலதனத் திரட்டல் சாத்தியமாவது இந்த அடிப்படையில் தான். நுகர்வைக் குறைத்தே மூலதனத் திரட்டல் நடைபெறுவதாகப் பொத்தம்பொதுவாய்ச் சொல்லப்படும் கருத்து முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் தன்மைக்கே நேர் முரணானது, இது ஒரு மாயையே தவிர வேறல்ல. ஏனெனில் இக்கருத்து முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் இலட்சியமும் அதனை ஆட்டிப் படைக்கும் குறிக்கோளும் நுகர்வுதானே தவிர உபரி-மதிப்பைத் தட்டிப்பறித்து மூலதனமாக்குவது அல்ல, அதாவது மூலதனத் திரட்டல் அல்ல என்பதாகக் கற்பித்துக் கொண்டு விடுகிறது.

துறை IIஇல் நடைபெறும் திரட்டலை சற்றே நெருங்கிச் சென்று பார்ப்போம்.

$II_c$ தொடர்பாக எழுந்திடும் முதல் பிரச்சினை, அதாவது துறை IIஇன் சரக்கு-மூலதனத்தின் அடக்கக் கூறாக இருக்கும் $II_c$ஐத் திரும்பவும் துறை IIஇன் மாறா-மூலதனத்தினுடைய தசையுருவாக மாற்றும் பிரச்சினை சாமானிய மறுவுற்பத்தியைச் சேர்ந்ததாகும். முன்பு கூறிய குறிவரையை எடுத்துக் கொள்வோம்:

$(1,000_v + 1,000_s)$ I ஆனது

$2,000$ $II_c$க்காகப் பரிவர்த்தனை செய்யப்படுகிறது.

உதாரணமாக, துறை Iஇன் உபரி-உற்பத்தியில் ஒரு பாதி, அதாவது $\frac{1,000}{2}$s அல்லது $500$ $I_s$ இப்போது திரும்ப துறை Iஇன் மாறா-மூலதனமாக்கப்படுமானால், துறை Iஇலேயே இருத்திக் கொள்ளப்படும் இந்த ஒரு பாதி உபரி-உற்பத்தியானது $II_c$இன் எந்தப் பகுதியையும் மாற்றீடு செய்ய முடியாது. இந்த ஒரு பாதி நுகர்வுப் பண்டங்களாக மாற்றப்படுவதற்கு பதிலாக (இங்கு துறை Iக்கும் துறை IIக்கும் இடையிலான சுற்றோட்டத்தின் இப்பிரிவில் உள்ளபடியே பரஸ்பரப் பரிவர்த்தனை நடந்தேறுகிறது — அதாவது இரு தரப்பிலிருந்தும் சரக்குப் பரிமாற்றம் நடைபெறுகிறது, இது துறை Iஇன் தொழிலாளர்களைக் கொண்டு $1,000$ $II_c$ ஆனது $1,000$ $I_v$ ஆல் மாற்றீடு செய்யப்படுவதைப் போன்றதல்ல) துறை Iஇலேயே இருத்தப்பட்டுக் கூடுதல் உற்பத்திச் சாதனமாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. I, II ஆகிய இரு துறைகளிலும் ஒருங்கே அதனால் இப்படிப் பயன்பட முடியாது. முதலாளி தமது உபரி-உற்பத்தியின் மதிப்பைச் செலவிட்டு நுகர்வுப் பண்டங்கள் வாங்கிக் கொண்டு, அதே போது அந்த உபரி-உற்பத்தியை உற்பத்தித் திறனுள்ள முறையில் நுகர்வதும் — அதாவது அதைத் தமது திறனுடை-மூலதனத்தோடு இணைத்திடுவதும் — முடியாத காரியம். இவ்விதம் $2,000$ $I_{(v+s)}$க்குப் பதிலாக $1,500$ மட்டுமே, அதாவது $(1,000_v + 500_s)$ I மட்டுமே, $2,000$ $II_c$க்குப் பரிவர்த்தனை செய்யக் கூடியதாய் உள்ளது; $500$ $II_c$ஐச் சரக்கு வடிவிலிருந்து திரும்பவும் துறை IIஇன் திறனுடை (மாறா) மூலதனமாக மாற்ற முடியாமற் போகிறது. இதனால் துறை IIஇல் மிகை-உற்பத்தி ஏற்படுகிறது. மதிப்பளவில் இந்த மிகை-உற்பத்தியானது துறை Iஇல் ஏற்படுகிற உற்பத்திப் பெருக்கத்துக்குச் சமமாய் இருக்கும். துறை IIஇலான இந்த மிகை-உற்பத்தியினால் துறை Iஇல் ஏற்படும் பாதிப்பு எவ்வளவு கடுமையாகி விடலாம் என்பதையும் பார்க்க வேண்டும். துறை Iஇன் தொழிலாளர்கள் துறை IIஇன் நுகர்வுப் பண்டங்களுக்காகச் செலவிடுகிற பணமான $1,000$ துறை Iக்குத் திரும்பி வந்து சேருவது அரைகுறையாகவே நடந்தேறும் அளவுக்கு இந்தப் பாதிப்பு கடுமையாகி விடக் கூடும். இதனால் இந்த $1,000$ மாறும் பண-மூலதனமாகத் துறை Iஇன் முதலாளிகள் கைக்கு திரும்ப முடியாமற்

போகிறது. இதனால் இந்த முதலாளிகள் மாறா அளவுவீதத்தில் மறுவுற்பத்தி செய்வதுங்கூட தடைபடக் காண்பார்கள்; அதுவும் அந்த மறுவுற்பத்தியை விரிவாக்கும் முயற்சியாலேயே தடைபடக் காண்பார்கள். துறை Iஇல் சாமானிய மறுவுற்பத்தி மட்டுமே நடை பெற்றுள்ளது என்பதையும், அதன் அடிக்கூறுகள் நமது குறிவரை களில் குறிக்கப்பட்டிருக்கும் விதத்திலிருந்து வேறான விதத்தில் வகை சேர்க்கப்படுவதற்கு மேல்—வருங்காலத்திலான (உதாரணமாக வரு கிற ஆண்டிலான) உற்பத்திப் பெருக்கத்தின் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் வகைசேர்க்கப்படுவதற்கு மேல்—ஒன்றும் நடைபெற்று விடவில்லை என்பதையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

இந்தச் சிக்கலைப் பின்வரும் வழியில் சமாளிக்க முயன்று பார்க்கலாம்: உடனே திறனுடை-மூலதனமாக மாற்ற முடியாமல் முதலாளிகளின் இருப்பில் இருந்து வரும் 500 $II_c$ ஆனது மிகை-உற்பத்தி அல்ல; மாறாக, மறுவுற்பத்திக்கு வேண்டிய அவசியமான கூறு ஒன்றைக் குறிப்பது அது; இது வரை நாம் அதைக் கண்டு கொள்ளாமல் இருந்து விட்டோம். ஓரளவுக்கு துறை Iஇல் புதிய பண-மூலதனம் உருவாவதை சாத்தியமாக்கும் பொருட்டும், சன்னம் சன்னமாய்த் தேய்மானமடையும் நிலை-மூலதனத்தின் மதிப்பை தற்காலிகமாய்ப் பண வடிவில் ஓரளவு இருத்தி வைக்கும் பொருட் டும், பல முனைகளில் பணச் சேர்ப்பு திரட்டப்படுவதும் சுற்றோட் டத்திலிருந்து பணம் வெளியே எடுக்கப்படுவதும் அவசியமாகி விடுவதைக் கண்டோம். நாம் வரைந்த குறிவரைகளில் பணம் அனைத்தும் சரக்குகள் அனைத்தும் ஆரம்ப முதலே பிரத்தியேகமாக துறை I, துறை IIஇன் முதலாளிகளின் கையிலேயே இருந்து வரு கின்றன; வணிகர்களுக்கோ தன வணிகர்களுக்கோ வங்கியர் களுக்கோ சரக்கு உற்பத்தியில் நேரடியாக ஈடுபடாமல் நுகர்வில் மட்டும் ஈடுபடுகிற வேறு யாருக்குமோ இதில் இடமளிக்கப்பட வில்லை. எனவே மறுவுற்பத்தியின் பொறியமைவு தடைபடாமல் இயங்க வேண்டுமானால், சரக்கு உற்பத்தியாளர்களிடம் ஓயாமல் சரக்கிருப்புகள் உருவாதல் இன்றியமையாததாகி விடுகிறது. துறை IIஇன் முதலாளிகளது இருப்பில் உள்ள 500 $II_c$ இவ்விதம் நுகர் வுப் பண்டச் சரக்கிருப்பைக் குறிக்கிறது. மறுவுற்பத்திக்கு அவசிய மான நுகர்வு நிகழ்முறையைத் தொடர்ச்சியாக நடைபெற வைத்து, ஓராண்டிலிருந்து அடுத்த ஆண்டை வந்தடையச் செய்வது இந்தச் சரக்கிருப்புகளே. நுகர்வுப் பண்ட நிதியமானது இப்பண்டங்களை உற்பத்தி செய்து விற்பவர்களின் கையில்தான் இன்னமும் இருந்து வருகிறது. இந்த நுகர்வுப் பண்ட நிதியம் நடப்பு ஆண்டில் அறவே தீர்ந்து போய்; பூஜியத்திலிருந்து அடுத்த ஆண்டைத் தொடங்க முடியாது—ஒரு நாளிலிருந்து மறு நாளைக்குச் செல்லுகையில் எப்படி பூஜிய நிலையிலிருந்து தொடங்க முடியாதோ அதே போலத்தான் இங்கும் முடியாது. இந்தச் சரக்கிருப்புகள் அளவில்

மாறினாலும் இவற்றின் புதிய இருப்புகள் இடையறாது உருவாக்கப் பட வேண்டியிருப்பதால், துறை IIஇன் முதலாளித்துவ உற்பத்தி யாளர்கள் பண-மூலதனத்தை சேம வைப்பில் வைத்திருக்க வேண் டும்; அவர்களது திறனுடை-மூலதனத்தில் ஒரு பகுதி தற்காலிக மாய்ச் சரக்கு வடிவில் முடங்கி இருந்தாலும் அப்போதுதான் அவர் கள் உற்பத்தி நிகழ்முறையைத் தொடர்ந்து நடத்திச் செல்ல முடியும். இந்த முதலாளிகள் பொருளுற்பத்தியோடு கூட வாணிபத்தையும் தாமே நடத்துவதாக இங்கு அனுமானம் செய்து கொள்கிறோம். மறுவுற்பத்தி நிகழ்முறையில் அடங்கிய தனித்தனிப் பணிகள் யாவும் வெவ்வேறாய்ப் பிரிக்கப்பட்டு, வெவ்வேறு வகை முதலாளிகளின் சுயேச்சையான பணிகளாக்கப்படுகையில் வணிகர்களிடம் இருந் தாக வேண்டிய கூடுதல் பண-மூலதனத்தையும் இப்போது இந்த முதலாளிகள் இவ்விதம் தாமே வைத்துக் கொள்ள வேண்டிய தாகிறது.

இதற்குப் பின்வரும் ஆட்சேபம் எழுப்பப்படலாம்: 1) இவ் விதம் சரக்கிருப்பை உருவாக்குவதும் அப்படி உருவாக்க வேண்டிய அவசியமும் எல்லா முதலாளிகளுக்கும்—I, II ஆகிய இரு துறை களையும் சேர்ந்த எல்லா முதலாளிகளுக்கும்—ஏற்படும். சரக்கு களை விற்பவர்கள் என்று மட்டும் பார்த்தால், வெவ்வேறு வகைச் சரக்குகளை விற்பவர்கள் என்பது மட்டுமே அவர்களிடையிலான வேறுபாடு. துறை IIஇலான சரக்கிருப்பு அதற்கு முன்பே துறை Iஇலான சரக்கிருப்பு இருக்க வேண்டியதைக் குறிக்கிறது. ஒரு தரப்பிலுள்ள சரக்கிருப்பை நாம் கவனியாது விடுவோமானால் மற்றொரு தரப்பிலுள்ளதையும் கவனியாது விட்டாக வேண்டும். ஆனால் சரக்கிருப்புகளை இரு தரப்புகளிலும் நாம் கணக்கி லெடுத்துக் கொண்டால், பிரச்சினையில் எவ்விதமான மாற்றமும் இல்லை.

2) துறை IIஇன் தரப்பில் நடப்பு ஆண்டானது எப்படி அடுத்த ஆண்டுக்கான சரக்கிருப்போடு முடிவடைகிறதோ, அதே போல முந்தைய ஆண்டிலிருந்து பெற்ற சரக்கிருப்போடுதான் அந்த ஆண்டும் தொடங்குகிறது. ஆகவே வருடாந்தர மறுவுற்பத்தியை அதன் சூக்கும வடிவுக்குக் குறுக்கிப் பகுத்தாயும் போது இருதரப்பு களிலிருந்தும் சரக்கிருப்பை நீக்கி விட வேண்டும். குறிப்பிட்ட ஆண்டின் உற்பத்தியை அடுத்த ஆண்டுக்காக ஒதுக்கப்பட வேண் டிய சரக்கிருப்பும் அடங்கலாய் முழு அளவிலும் எடுத்து, முந்தைய ஆண்டிலிருந்து பெறப்படும் சரக்கிருப்பை அதிலிருந்து நீக்கி விடுவோமானால் ஒரு சராசரி ஆண்டுக்குரிய மொத்த உற்பத்தி நமது ஆய்வுக்குரியதாகிறது.

3) இப்போது நாம் சமாளிக்க வேண்டியிருக்கும் சிக்கலானது சாமானிய மறுவுற்பத்தியைப் பரிசீலிக்கையில் எழவில்லை. இங்கே நாம் ஒரு பிரத்தியேக நிகழ்வை ஆராய்கிறோம் என்பதையே

இவ்வுண்மை நிரூபிக்கிறது. துறை Iஇன் கூறுகள் (மறுவுற்பத்தியைப் பொறுத்த வரை) வேறொரு விதமாய் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதே இந்தப் பிரத்தியேக நிகழ்வுக்குக் காரணம். இக் கூறுகள் இப்படி வேறொரு விதமாய் ஒழுங்கு செய்யப்படவில்லையானால், விரிதிற மறுவுற்பத்தி நடைபெற முடியாமற் போய் விடும்.

### III. மூலதனத் திரட்டலின் குறிவரை விளக்கம்

பின்வரும் குறிவரையின் படி இப்போது மறுவுற்பத்தியைப் பரிசீலிப்போம்:

குறிவரை (அ): I. $4{,}000_c+1{,}000_v+1{,}000_s=6{,}000$ ] மொத்தம்
II. $1{,}500_c+\ 376_c+\ 376_s=2{,}252$ ] $8{,}252$.

முதலாவதாக, சமுதாயத்தின் வருடாந்தர மொத்த உற்பத்தி நமது முதல் குறிவரையில் இருந்ததை விடக் குறைந்திருக்கக் காண்கிறோம்; 9,000 ஆக இருந்தது 8,252 ஆகக் குறைந்திருக்கிறது. வேண்டுமானால் இன்னும் பெரியதாகவும் கூட ஒரு தொகையை எடுத்துக் கொள்ளலாம்; உதாரணமாகப் பத்து மடங்கு பெரியதாகவும் கூட எடுத்துக் கொள்ளலாம். முந்தைய குறிவரையில் இருந்ததை விட வேண்டுமென்றேதான் இப்பொழுது சிறிய தொகையாக எடுத்துக் கொள்கிறோம். விரிந்த அளவுவீதத்திலான மறுவுற்பத்தி (இங்கே இது முன்னிலும் அதிகமான மூலதனத்தை முன்னீடு செய்து நடைபெறும் உற்பத்தியாகவே கொள்ளப்படுகிறது) எவ் விதத்திலும் உற்பத்திப் பண்டத்தின் அறுதிப் பரிமாணத்துடன் சம்பந்தப்பட்டதல்ல. வலியுறுத்திக் காட்டும் பொருட்டும், குறிப்பிட்ட பரிமாணமுள்ள சரக்கு உற்பத்திக்கு குறிப்பிட்ட உற்பத்திப் பொருளின் பல்வேறு அடக்கக் கூறுகளது பணிகள் வேறு விதமாய் ஒழுங்கு செய்யப்படுதல், அல்லது வேறு விதமாய் நிர்ணயிக்கப்படுதலையே இது குறிப்பிடுகிறது என்பதையும், உற்பத்திப் பொருளின் மதிப்பைப் பொறுத்த வரை இது சாமானிய மறுவுற்பத்தியே ஆகும் என்பதையும் வலியுறுத்திக் காட்டும் பொருட்டும்தான் சிறிய தொகையாக எடுத்துக் கொள்கிறோம். இங்கே மாற்றப்படுவது சாமானிய மறுவுற்பத்தியின் குறிப்பிட்ட கூறுகளது பண்புவழி நிர்ணயமே தவிர பருமனளவு அல்ல. பிற்பாடு விரிதிற மறுவுற்பத்தி நடைபெறுவதற்கு இந்த மாற்றம்தான் பொருளாயத முன்னிபந்தனை ஆகிறது.[64]

---

[64] இது மூலதனத் திரட்டல் தொடர்பாக, ஜேம்ஸ் மில்லுக்கும், சா. பெய்லிக்கும் இடையில் எழுந்த சர்ச்சைக்கு முற்றாக முடிவு கட்டி விடுகிறது. இந்த சர்ச்சையை முதல் பாகத்தில் வேறொரு கோணத்திலிருந்து ஆராய்ந்தோம் (அத்தியாயம் XXIV., பிரிவு 5, பக்கம் 819-20, குறிப்பு 141). தொழில் துறை மூலதனத்தின் பருமனை மாற்றாமல்

மாறும்-மூலதனத்திற்கும் மாறா-மூலதனத்திற்கும் இடையிலான விகிதத்தை மாற்றிக் குறிவரையைத் திருத்தியமைக்கலாம். எடுத்துக் காட்டாக:

குறிவரை (ஆ) I. $4{,}000_c + 875_v + 875_s = 5{,}750$ ] மொத்தம்
II. $1{,}750_c + 376_v + 376_s = 2{,}502$ ] 8,252

இந்தக் குறிவரையானது சாமானிய மறுவுற்பத்திக்கான முறையில் அமைந்துள்ளது; அதாவது உபரி-மதிப்பு அனைத்தும் வருவாயாக நுகரப்படுகிறதே அல்லாமல், மூலதனமாகத் திரட்டப்படவில்லை. (அ), (ஆ) ஆகிய இரு நேர்வுகளிலுமே வருடாந்தர உற்பத்தியின் மதிப்பு ஒன்றுதான். ஆனால் (ஆ) நேர்வில் அதன் கூறுகளின் பணிவழி ஒழுங்கமைவானது மறுவுற்பத்தி பழைய அளவுவீதத் திலேயே திரும்பவும் தொடங்குவதற்கு ஏற்றதாய் இருக்கிறது; ஆனால் (அ) நேர்விலோ இந்த ஒழுங்கமைவு விரிதிற மறுவுற்பத் திக்கு வேண்டிய பொருளாயத அடிப்படையாகிறது. (ஆ) நேர்வில் $(875_v + 875_s)$ I அல்லது $1{,}750$ $I_{(v+s)}$ ஆனது உபரி ஏதுமில்லாமல் $1{,}750$ $II_c$க்குப் பரிவர்த்தனை ஆகிறது. (அ) நேர்விலோ $2{,}000$ $I_{(v+s)}$ என்பதற்குச் சமமான $(1{,}000_v + 1{,}000_s)$ I அல்லது $2{,}000$ $I_{(v+s)}$ ஆனது $1{,}500$ $II_c$க்குப் பரிவர்த்தனை ஆகும் போது துறை Iஇலான திரட்டலுக்கு வேண்டிய உபரியாக $500$ $I_s$ எஞ்சு கிறது.

இப்போது குறிவரை (அ) என்பதை மேலும் நெருங்கிச் சென்று ஆராய வேண்டும். துறை Iஉம் துறை IIஉம் அவற்றின் உபரி-மதிப்பில் ஒரு பாதியைத் திரட்டுவதாக, அதாவது வருவாயாகச் செலவிடாமல் கூடுதல் மூலதனத்தின் கூறுகளில் ஒன்றாய் மாற்று வதாக வைத்துக் கொள்வோம். $1{,}000$ $I_s$இல் ஒரு பாதி, அதாவது $500$ ஏதேனுமொரு வடிவில் திரட்டப்பட்டு கூடுதல் பண-மூலதன மாக முதலீடு செய்யப்படுவதால், அதாவது கூடுதல் திறனுடை-மூலதனமாக மாற்றப்படுவதால், $(1{,}000_v + 500_s)$ I மட்டுமே வரு வாயாகச் செலவிடப்படுகிறது. எனவே இப்போது $1{,}500$தான் $II_c$இன் இயல்பான அளவாகிறது. $1{,}500$ $I_{(v+s)}$க்கும் $1{,}500$ $II_c$க்கும் இடையிலான பரிவர்த்தனையை இதற்கு மேல் நாம் ஆராயத் தேவையில்லை; ஏனென்றால், சாமானிய மறுவுற்பத்தி நிகழ்முறை யாகிய இது ஏற்கெனவே நாம் ஆராய்ந்ததுதான். $4{,}000$ $I_c$ஐயும் நாம் பரிசீலிக்கத் தேவையில்லை; ஏனென்றால், புதிதாய்த் தொடங் கும் மறுவுற்பத்திக்காக அது மறுபடியும் ஒழுங்கமைவு செய்யப் படுவது சாமானிய மறுவுற்பத்தி நிகழ்முறையாக முன்பே நாம் பரிசீலித்ததுதான்.

---

அதன் செயற்பாட்டை விரிவாக்கும் சாத்தியப்பாடு தொடர்பானதாகும் இந்த சர்ச்சை. பிற்பாடு இதைத் திரும்பவும் பரிசீலிப்போம்.

இங்கு இன்னும் நாம் பரிசீலிக்க வேண்டியதாய் இருப்பது 500 $I_s$க்கும் $(376_v + 376_s)$ IIக்கும் இடையிலான பரிவர்த்தனைதான். இது ஒரு புறத்தில் துறை I, துறை II இவற்றின் உள்ளுறவுகளும் மறு புறத்தில் இரு துறைகளிடையிலான இயக்கமும் சம்பந்தப்பட்டதாகும். துறை IIஇலும் ஒரு பாதி உபரி-மதிப்பு மூலதனமாகத் திரட்டப்படுவதாக வைத்துக் கொள்கிறோம் என்பதால், 188 இங்கே மூலதனமாக மாற்றப்பட வேண்டும். இதில் நான்கில் ஒரு பகுதி, அதாவது 47 மாறும்-மூலதனமாதல் வேண்டும்—நிறைவட்டமாக்கும் பொருட்டு இதனை 48 ஆகக் கொண்டு மாறா-மூலதனமாவதற்காக எஞ்சுவதை 140 ஆகக் கொள்ளலாம்.

இங்கு ஒரு புதிய பிரச்சினை எழக் காண்கிறோம். ஒரு வகைச் சரக்கு இன்னொரு வகைச் சரக்குக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுவதாக அல்லது ஒரு வகைச் சரக்கு பணத்துக்காகவும் அதே பணம் மீண்டும் இன்னொரு வகைச் சரக்குக்காகவும் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுவதாக நடப்பிலுள்ள கருத்துக்கு, இப்படியொரு பிரச்சினை இருப்பதே விசித்திரமாகத் தோன்றும். 140 $II_s$ஐ $I_s$ சரக்குகளில் அதே மதிப்புள்ள ஒரு பகுதிக்காக மாற்றீடு செய்வதன் மூலமே அதைத் திறனுடை-மூலதனமாக மாற்ற முடியும். $I_s$இல் ஒரு பகுதி, அதாவது $II_c$க்குப் பரிவர்த்தனையாக வேண்டிய பகுதி இரு துறைகளிலுமோ, பிரத்தியேகமாய் துறை IIஇல் மட்டுமோ பயன்படக் கூடிய உற்பத்திச் சாதனங்களாய் இருக்க வேண்டுமென்பது கூறாமலே விளங்கும். துறை II ஒருதரப்பாக சரக்குகள் வாங்குவதன் மூலமே இந்த மாற்றீடு நடைபெற முடியும். ஏனென்றால் உபரி-உற்பத்தியான 500 $I_s$—இதை நாம் இன்னும் பரிசீலிக்கவில்லை—துறை Iக்குள் மூலதனத் திரட்டலுக்குப் பயன்பட வேண்டியதாகும். எனவே இது துறை IIஇன் சரக்குகளுக்குப் பரிவர்த்தனையாக முடியாது. அதாவது துறை I இந்த உபரி-உற்பத்தியைத் தனது மூலதனத் திரட்டலுக்காகப் பயன்படுத்திக் கொண்டு அதே போது அதை நுகர்வுக்காகவும் செலவிட முடியாது. துறை II பணத்தைச் செலவிட்டுதான் 140 $I_s$ஐ வாங்கியாக வேண்டும். இப்படி வாங்கியதும் அதன் சரக்குகள் துறை Iக்கு விற்கப்படாததால் அதற்கு அது செலவிட்ட பணம் திரும்பி வருவதில்லை. விரிதிற மறுவுற்பத்தியாய் இருக்கும் வரை ஒவ்வொரு புதிய வருடாந்தர உற்பத்தியின் போதும் ஓயாமல் இவ்வாறே தொடர்ந்து நடைபெறுகிறது. இதற்கு வேண்டிய பணம் துறை IIஇல் எங்கிருந்து கிடைக்கிறது?

ஆனால் புதிய பண-மூலதனம் உருவாவதற்கு துறை II சிறிதும் இடமளிக்கக் கூடியதாகத் தெரியவில்லை. முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் புதிய பண-மூலதனம் உருவாதல் மூலதனத் திரட்டலுடன் கூடவே நடைபெற்று இத்திரட்டலுக்கு இன்றியமையாததாய்

இருப்பதாகும். இங்கே இத்திரட்டல் முதலில் வெறும் பணச் சேர்ப்பாக நடந்தேறுகிறது.

முதலில் 376 $II_v$ஐ எடுத்துக் கொள்கிறோம். பண-மூலதனமாகிய 376 உழைப்புச் சக்திக்காக முன்னீடு செய்யப்படுகிறது; துறை IIஇன் சரக்குகள் வாங்கப்படுவதைத் தொடர்ந்து இத்தொகை பண வடிவிலான மாறும்-மூலதனமாக ஓயாமல் இத்துறையின் முதலாளியிடமே திரும்பி வருகிறது. முதலாளியின் பணப் பையிலிருந்து புறப்பட்டு அங்கேயே திரும்பி வந்து சேர்வதாகிய இச்செயல் ஓயாமல் திரும்பத் திரும்ப நடைபெறுகிறது. இப்படிச் சுற்றிச் சுற்றி வருவதால் இந்தப் பணம் கிஞ்சித்தும் அதிகமாவதில்லை. ஆகவே இது பணம் திரட்டுவதற்கான வழி ஆக முடியாது. இந்தப் பணத்தை சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுத்துப் பணச் சேர்ப்பாக்குவதும், அதாவது புதிய உள்ளுறைப் பண-மூலதனம் ஆக்குவதும் சாத்தியமல்ல.

போதும், சற்றே பொறுங்கள்: கொஞ்சம் இலாபம் ஈட்ட இங்கே இடம் இல்லையா, என்ன?

துறை Iக்கு இல்லாத ஓர் அனுகூலம் துறை IIக்கு இருப்பதை மறக்கலாகாது. துறை IIஇன் தொழிலாளர்கள் தாமே உற்பத்தி செய்யும் சரக்குகளை இத்துறையிடமிருந்து திரும்ப வாங்க வேண்டியிருக்கிறது. துறை II உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குவதோடு, அந்த உழைப்புச் சக்தியின் உடைமையாளர்களிடமே தனது சரக்குகளை விற்கவும் செய்கிறது. ஆகவே துறை IIஇன் முதலாளிகள்:

1) துறை Iஇன் முதலாளிகளைப் போலவே கூலியை அதன் இயல்பான சராசரி நிலைக்கும் கீழே தாழ்த்தி விட முடியும். இப்படிச் செய்வதன் மூலம் இம்முதலாளிகள் மாறும்-மூலதனத்தின் பண வடிவமாகச் செயல்படும் பணத்தில் ஒரு பகுதியை விடுவிக்கிறார்கள்; இந்நிகழ்முறை ஓயாமல் திரும்பத் திரும்ப நடைபெறுமாயின், இந்தப் பணம் துறை IIஇல் பணச் சேர்ப்புக்கும், எனவே கூடுதல் உள்ளுறைப் பண-மூலதனத்தின் உருவாக்கத்துக்கும் இயல்பானதோர் ஆதாரமாகலாம். எப்போதாவது நடைபெறும் வாணிகப் புரட்டில் [swindle] கிடைக்கும் இலாபத்தை இங்கு நாம் குறிப்பிடவில்லை, மூலதனம் உருவாகிற இயல்பான நிகழ்முறையையே குறிப்பிடுகிறோம். ஆனால் தொழிலாளிக்குத் தரப்படும் இயல்பான கூலியானது (மற்றவை மாறாதிருக்க, இந்தக் கூலி மாறும்-மூலதனத்தின் பருமனை நிர்ணயிக்கிறது) நிலைமைகளின் கட்டாயம் காரணமாய்த் தரப்படுவதாகுமே தவிர முதலாளிகளது தயாள சிந்தை காரணமாய்த் தரப்படுவதல்ல. ஆகவே மேற்கூறிய விளக்கத்துக்கு இடமில்லாது போகிறது. மாறும்-மூலதனமாகத் துறை II செலவிட வேண்டிய தொகையை $376_v$ ஆகக் கொள்வோமானால், புதிதாய் எழுகிற ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக

வேண்டி 376$_v$க்குப் பதில் 350$_v$ஐ துறை II முன்னீடு செய்வதாக ஓர் அனுமானத்தைத் திடுமென நுழைக்க நமக்கு உரிமையில்லை.

2) மறு புறம், துறை IIஐ ஒட்டுமொத்தமாய் எடுத்துக் கொள் வோமானால், Iக்கு இல்லாத மேற்குறிப்பிட்ட அனுகூலம் அதற்கு. இருக்கிறது; அதாவது அது யாரிடமிருந்து உழைப்புச் சக்தியை வாங்குகிறதோ, அவர்களிடமே, அதாவது தன் தொழிலாளர் களிடமே தன் சரக்குகளை விற்கிறது. தொழில் துறை வளர்ச்சி கண்டிருக்கும் நாடு ஒவ்வொன்றும் இந்த அனுகூலத்தை எப்படிச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்குத் தெளிவான சான்றுகளை வழங்குகிறது. இயல்பான கூலியைத் தருவதாகப் பெயர் பண்ணி விட்டு, மெய்ந்நடப்பில் எந்தச் சமதையும் தராமலே அதில் ஒரு பகுதியைத் தட்டிக் கொண்டு விட, அதாவது களவாடிக் கொண்டு விட முடிகிறது. சரக்கூதிய முறையின் [truck system] மூலமோ, சுற்றோட்ட ஊடகத்திலான கள்ளத்தனத்தின் மூலமோ இந்த ஏமாற்று வேலை சட்டத்தின் பிடியில் சிக்காமல் சாமர்த்திய மாகச் செய்யப்படுகிறது. உதாரணமாகப் பிரிட்டனிலும் அமெரிக்க ஐக்கிய அரசிலும் இதைக் காணலாம். (பொருத்தமான சில உதாரணங்கள் தந்து இதை மேலும் சற்று விவரமாய் எடுத்துரைக்க இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.) மேலே பிரிவு (1)இல் கூறப்பட்ட அதே காரியம்தான் இங்கும் நடைபெறு கிறது — மறைமுகமாகவும் தந்திரமாகவும் நடைபெறுகிறது. ஆகவே அதைப் போலவே இதுவும் நிராகரிக்கப்பட வேண்டியதுதான். இங்கே நாம் விவாதிப்பது உண்மையில் தரப்படும் கூலியே தவிர பெயர் அளவிலானதல்ல.

முதலாளித்துவப் பொறிநுட்ப அமைவினை எதார்த்தப் புற நிலையிலிருந்து ஆராய்கையில் எழுகிற தத்துவார்த்தச் சிக்கல்களைச் சமாளிக்கும் தந்திரோபாயமாக நாம் இவ்வமைப்பை விட்டகலாமல் விடாப்பிடியாக அதனுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் குற்றங்குறை களைப் பயன்படுத்தலாகாது என்பது தெரிந்ததே. ஆயினும் என்னை விமர்சிக்கும் முதலாளித்துவ விமர்சகர்களில் மிகப் பெரும் பாலார் என்னைச் சாடுகிறார்களே, உழைப்புச் சக்திக்கு அதற்குரிய உண்மை மதிப்பை முதலாளிகள் பெரும்பாலும் கொடுப்பதில்லை என்றாலும் அவர்கள் அதைக் கொடுப்பதாக (உதாரணமாய் மூலதனம், முதல் பாகத்தில்) கொள்வதன் மூலம் நான் இம்முதலாளி களுக்குப் பெரும் தவறிழைப்பது போல் அல்லவா என்னைச் சாடுகிறார்கள் — என்னென்பது இந்த விபரீதத்தை! (என்னிடம் நிறைய இருப்பதாகச் சொல்லிப் பாராட்டுகிறார்களே அந்தப் பெருந்தன்மையை வெளிப்படுத்தி ஷாஃபிளிடமிருந்து மேற்கோள் அளித்தால் பொருத்தமாய் இருக்கும்.)

ஆகவே 376 II$_c$ஆனது நாம் குறிப்பிட்டுள்ள இலக்கை நெருங் கிச் செல்வதற்கு சிறிது கூட பயன்படவில்லை.

ஆனால் 376 $II_v$ ஆனது அதனிலும் மோசமான நிலையில் இருப்பதாகத் தோன்றுகிறது. இங்கு ஒரே வகையைச் சேர்ந்த முதலாளிகளே, ஒருவரையொருவர் எதிர்நோக்கி, தாம் உற்பத்தி செய்த நுகர்வுப் பண்டங்களைத் தமக்குள் விற்கவும் வாங்கவும் செய்கின்றனர். இந்தப் பரிமாற்றங்களுக்குத் தேவைப்படுகிற பணம் சுற்றோட்ட ஊடகமாகச் செயல்படுவதாகும். இந்தப் பணம் மீண்டும் அதே பாதையில் செல்ல வேண்டுமானால், இயல்பான நிலைமைகளில் அது சம்பந்தப்பட்டவர்களிடம் அவர்கள் அதனைச் சுற்றோட்டத்துக்கு முன்னீடு செய்த அதே விகிதத்தில் திரும்பிச் சென்றாக வேண்டும்.

கூடுதல் உள்ளுறைப் பண-மூலதனமாகும் பொருட்டு இந்தப் பணம் சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுக்கப்படுவதற்கு இரண்டே இரண்டு வழிகள்தான் இருப்பதாகத் தோன்றுகிறது. முதலாவது: துறை IIஇன் முதலாளிகளில் ஒரு பகுதியினர் மறு பகுதியினரை ஏமாற்றி, அவர்களது பணத்தைக் களவாட வேண்டும். புதிய பண-மூலதனம் உருவாக வேண்டுமானால் முதலில் சுற்றோட்ட ஊடகம் விரிவகற்சி அடைய வேண்டுமென்ற அவசியம் இல்லை; சுற்றோட்டத்திலிருந்து பணத்தை சிலர் வெளியே எடுத்துப் பணச் சேர்ப்பாகத் திரட்ட வேண்டும் என்பது மட்டுமே அவசியமாகும் — இது நமக்குத் தெரியும். இப்படி வெளியே எடுக்கப்படும் பணம் களவாடப்பட்டதாய் இருக்குமாயின், துறை IIஇன் முதலாளிகளில் ஒரு பகுதியினர் கூடுதல் பண-மூலதனத்தை உருவாக்குவதானது மறு பகுதியினருக்கு நேரடியான இழப்பைக் குறிக்கிறது, அப்போதும் விளைவில் மாற்றம் ஏதும் இல்லை. துறை IIஇன் முதலாளிகளில் வஞ்சிக்கப்பட்ட பகுதியினர் தமது ஆடம்பரத்தை சற்றே குறைத்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதற்கு மேல் ஒன்றுமில்லை.

இரண்டாவது: $II_s$இல் அவசிய வாழ்வுப் பண்டங்களாய் இருக்கும் பகுதியைத் துறை IIக்குள்ளேயே நேரடியாகப் புதிய மாறும்-மூலதனமாய் மாற்ற வேண்டும். இது எப்படி நடைபெறுகிறது என்பதை இந்த அத்தியாயத்தின் முடிவில் (பிரிவு IVஇல்) பரிசீலிப்போம்.

### 1. முதல் எடுத்துக்காட்டு

#### A. சாமானிய மறுவுற்பத்திக்கான குறிவரை

$$\left.\begin{array}{ll} \text{I.} & 4{,}000_c + 1{,}000_v + 1{,}000_s = 6{,}000 \\ \text{II.} & 2{,}000_c + 500_v + 500_s = 3{,}000 \end{array}\right\} = \text{மொத்தம் } 9{,}000.$$

#### B. விரிதிற மறுவுற்பத்திக்கான தொடக்கக் குறிவரை

$$\left.\begin{array}{ll} \text{I.} & 4{,}000_c + 1{,}000_v + 1{,}000_s = 6{,}000 \\ \text{II.} & 1{,}500_c + 750_v + 750_s = 3{,}000 \end{array}\right\} = \text{மொத்தம் } 9{,}000.$$

குறிவரை Bஇல் துறை Iஇலான உபரி-மதிப்பில் ஒரு பாதி, அதாவது 500 மூலதனமாய்த் திரட்டப்படுவதாகக் கொள் வோமானால், முதலில் கிடைப்பது $(1,000_v+500_s)$ I, அதாவது 1,500 $I_{(v+s)}$. இதனை 1,500 $II_c$ஆல் மாற்றீடு செய்தாக வேண்டும். இப்போது துறை Iஇல் எஞ்சுவது $4000_c+500_s$. இதில் $500_s$ஐ மூலதனமாகத் திரட்ட வேண்டும். $(1,000_v+500_s)$ Iஐ 1,500 $II_c$ ஆல் மாற்றீடு செய்வதானது சாமானிய மறுவுற்பத்திக்குரிய நிகழ் முறை—ஏற்கெனவே நாம் பரிசீலித்ததுதான் இது.

500 $I_s$இல் 400 மாறா-மூலதனமாகவும், 100 மாறும்-மூல தனமாகவும் மாற்றப்பட வேண்டுமென வைத்துக் கொள்வோம். இவ்விதம் மூலதனமாக்கப்பட வேண்டிய $400_s$ஆனது துறை Iக்குள் எப்படிப் பரிவர்த்தனை ஆகிறது என்பதை ஏற்கெனவே ஆராய்ந் தோம். ஆகவே பேசாமல் அதனை $I_c$யோடு இணைத்து விடலாம்; அப்போது துறை Iக்கான குறிவரை வருமாறு:

I. $4,400_c+1,000_v+100_s$ ($100_s$ ஆனது $100_v$ஆக மாற்றப்பட வேண்டியது).

துறை IIஐப் பொறுத்த வரை, அது துறை Iஇலிருந்து (உற் பத்திச் சாதனங்களாக இருக்கும்) 100 $I_s$ஐ மூலதனத் திரட்டலுக் காக வாங்குகிறது. இந்த 100 $I_s$ இப்போது துறை IIக்கு கூடுதல் மாறா-மூலதனம் ஆகிறது; துறை II அதற்கு விலையாகத் தரும் பணமாகிய 100 துறை Iஇன் கூடுதல் மாறும்-மூலதனத்தின் பண வடிவமாகிறது. ஆக துறை Iஇடம் இப்போது $4,400_c+$ (பண மாக) $1,100_v=5,500$ மூலதனமாய் இருக்கிறது.

துறை II இப்போது $1,600_c$ மாறா-மூலதனத்தைப் பெற் றுள்ளது. இந்த மாறா-மூலதனத்தை இயங்க வைக்கும் பொருட்டு, அது மேலும் $50_v$ஐ முன்னீடு செய்து புதிய உழைப்புச் சக்தியை வாங்க வேண்டும். இது வரை 750 ஆக இருந்த அதன் மாறும்-மூல தனம் இவ்விதம் 800 ஆகிறது. துறை IIஇன் மாறா-மூலதனமும் மாறும்-மூலதனமும் மொத்தம் 150 கூடுதலாகிறது, இந்தக் கூடுதல் மூலதனம் இத்துறையின் உபரி-மதிப்பிலிருந்து பெறப்படுகிறது. 750 $II_s$இல் $600_s$ மட்டுமே IIஇன் முதலாளிகளுக்கான நுகர்வுப் பண்ட நிதியமாக எஞ்சுகிறது. துறை IIஇன் வருடாந்தர உற்பத் திப் பண்டம் பின்வருமாறு வினியோகமாகிறது:

II. $1,600_c+800_v+600_s$ (நுகர்வுப் பண்ட நிதியம்) $=3,000$.

நுகர்வுப் பண்டங்களாய் உற்பத்தியாகிற $150_s$ ஆனது இங்கு $(100_c+50_v)$ IIஆக மாற்றப்பட்டு, முழுவதும் தசையுருவிலேயே தொழிலாளர்களுடைய நுகர்வுக்குப் போய் விடுகிறது; மேலே விளக்கியது போல் இதில் 100ஐ (100 $I_v$) துறை Iஇன் தொழி லாளர்களும், 50ஐ (50 $II_v$) துறை IIஇன் தொழிலாளர்களும் நுகருகின்றனர். துறை IIஇன் உற்பத்திப் பண்டம் அனைத்தும்

திரட்டலுக்கேற்ற வடிவில் தயாரிக்கப்படுகையில், இத்துறையில் அவசிய நுகர்வுப் பண்டங்களின் வடிவில் உற்பத்தி செய்யப்பட வேண்டிய உபரி-மதிப்புப் பகுதி 100 கூடுதலாகிறது. மெய்யாகவே விரிதிற உற்பத்தி நடைபெறத் தொடங்குமானால், துறை Iஇடம் பணமாய் இருக்கும் மாறும்-மூலதனத்தில் ஒரு 100 ஆனது இத் துறையினது தொழிலாளி வர்க்கத்தின் கை மூலம் துறை IIக்குத் திரும்பிச் செல்கிறது. அதே போது துறை II ஆனது சரக்கிருப்பின் வடிவிலான $100_s$ஐத் துறை Iக்கும் சரக்கிருப்பின் வடிவிலான 50ஐ தனது தொழிலாளி வர்க்கத்துக்கும் அளித்திடுகிறது.

மூலதனத் திரட்டலுக்காக மாற்றியமைக்கப்பட்ட பின் இருக்கும் நிலவரம் வருமாறு:

I. $4,400_c + 1,100_v + 500$ நுகர்வுப்பண்ட நிதியம் = 6,000
II. $1,600_c + 800_v + 600$ நுகர்வுப்பண்ட நிதியம் = 3,000

மொத்தம் முன்பிருந்த அதே 9,000.

இதில் மூலதனமாவது:

I. $4,400_c + 1,100_v$(பணம்) = 5,500
II. $1,600_c + 800_v$(பணம்) = 2,400 ] = 7,900.

உற்பத்தி தொடங்கிய போது,

I. $4,000_c + 1,000_v = 5,000$
II. $1,500_c + 750_v = 2,250$ ] = 7,250.

இப்போது, இந்த அடிப்படையில் மூலதனத் திரட்டல் நடைபெறுமானால், அதாவது இந்த அதிகரித்த மூலதனத்தைக் கொண்டு உற்பத்தி தொடருமானால், அடுத்த ஆண்டின் முடிவில் இருக்கும் நிலவரம் வருமாறு:

I. $4,400_c + 1,100_v + 1,100_s = 6,600$
II. $1,600_c + 800_v + 800_s = 3,200$ ] = 9,800.

துறை Iஇல் இதே விகிதத்தில் மூலதனத் திரட்டல் தொடர்ந்து நடைபெற்றால் $550_s$ வருவாயாகச் செலவிடப்படும், $550_s$ மூலதனமாகத் திரட்டப்படும். அப்போது முதலில் 1,100 $I_v$ஐ 1,100 $II_c$ ஆனது மாற்றீடு செய்கிறது; 500 $I_s$ ஆனது அதே பெறுமானமுள்ள துறை IIஇன் சரக்குகளால் ஈடேற்றம் செய்யப்படுகிறது; ஆக மொத்தம் 1,650 $I_{(v+s)}$ ஆகிறது. ஆனால் மாற்றீடு செய்யப்பட வேண்டிய துறை IIஇன் மாறா-மூலதனத்தினது மதிப்பு 1,600 தான்; ஆகவே எஞ்சியுள்ள 50ஐ 800 IIஇலிருந்து எடுத்துச் சேர்க்க வேண்டும். இப்போதைக்குப் பண அமிசத்தை ஒதுக்கி விடுவோமானால், இந்தப் பரிமாற்றத்தின் விளைவாகப் பெறப்படுவது:

I. $4,400_c + 550_s$ (மூலதனமாக்கப்பட வேண்டியது): மேலும், $\text{II}_c$ ஆகிய சரக்குகளாக ஈடேற்றம் பெற்று முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்குமான நுகர்வுப் பண்ட நிதியமாவது = $= 1,650_{(v+s)}$.

II. $1,650_c$ (மேலே கூறியவாறு $\text{II}_s$இலிருந்து எடுத்துச் சேர்த்த $50) + 800_v + 750_s$ (முதலாளிகளுக்கான நுகர்வுப் பண்ட நிதியம்).

ஆனால் துறை IIஇல் c, v இவற்றுக்கிடையிலான பழைய விகிதமே மாறாது தொடருமானால் $50_c$க்கு கூடுதலாக $25_v$ முதலீடாக வேண்டும்: இதை $750_s$இலிருந்தே எடுக்க வேண்டும். ஆகவே எஞ்சுவது

II. $1,650_c + 825_v + 725_s$.

துறை Iஇல் $550_s$ஐ மூலதனமாக்க வேண்டும். பழைய விகிதமே தொடருமானால், இத்தொகையில் 440 மாறா-மூலதனமும் 110 மாறும்-மூலதனமும் ஆக வேண்டும். இந்த 110ஐ 725 $\text{II}_s$இலிருந்து எடுக்கலாம்; அதாவது 110 மதிப்புள்ள நுகர்வுப் பண்டங்களை துறை IIஇன் முதலாளிகளுக்கு பதில் துறை Iஇன் தொழிலாளர்கள் நுகருகின்றனர். இதனால் அந்த முதலாளிகள், தாங்கள் நுகர முடியாத இந்த $110_s$ஐ மூலதனமாக்க வேண்டியதாகிறது. 725 $\text{II}_s$இல் இப்போது 615 $\text{II}_s$ எஞ்சுகிறது. ஆனால் துறை II இவ்விதம் இந்த 110ஐக் கூடுதல் மாறா-மூலதனமாக மாற்றினால், அதற்கு கூடுதல் மாறும்-மூலதனம் 55 தேவைப்படுகிறது. இதையும் அதன் உபரி-மதிப்பிலிருந்தே பெற்றாக வேண்டும். 615 $\text{II}_s$இலிருந்து இந்தத் தொகையைக் கழித்தால், துறை IIஇன் முதலாளிகளது நுகர்வுக்கு எஞ்சுவது 560. நடைபெறுகிறவையும் நடைபெறக் கூடியவையுமான எல்லா மாற்றங்களுக்கும் பிறகு இருக்கும் படியான மூலதன-மதிப்பு:

I. $(4,400_c + 440_c) + (1,100_v + 110_v) = 4,840_c + 1,210_v = 6,050$
II. $(1,600_c + 50_c + 110_c) + (800_v + 25_v + 55_v) = 1,760_c + 880_v = 2,640$

ஆக மொத்தம் 8,690

யாவும் இயல்பாய் நடைபெற வேண்டுமானால், துறை Iஐ விட துறை IIஇல் மூலதனத் திரட்டல் துரிதமாய் நடைபெற வேண்டும்; இல்லையேல் $\text{I}_{(v+s)}$இல் எப்பகுதி $\text{II}_c$ ஆகிய சரக்குகளாக மாற வேண்டுமோ அப்பகுதி $\text{II}_c$ஐ விடத் துரிதமாக வளர்ந்து பெருகி விடும்; ஆனால் அது $\text{II}_c$க்கு மட்டுமே பரிவர்த்தனையாக முடியும்.

மறுவுற்பத்தி இந்த அடிப்படையில் தொடர்ந்து நடைபெற, ஏனைய நிலைமைகள் மாறாதிருக்குமானால், அடுத்த ஆண்டின் முடிவில் பெறப்படுவது:

$$\left.\begin{array}{l}\text{I. } 4,840_c + 1,210_v + 1,210_s = 7,260 \\ \text{II. } 1,760_c + 880_v + 880_s = 3,520\end{array}\right\} = 10,780.$$

உபரி-மதிப்பு அதே விகிதத்தில் பங்கிடப்படுமானால் வருவாயாகச் செலவிடுவதற்கு துறை Iஇடம் எஞ்சுவது: $1,210_v$+sஇல் பாதி (அதாவது 605)=1,815. மீண்டும் இந்த நுகர்வுப் பண்ட நிதியம் $II_c$ஐ விட 55 கூடுதலாய் இருக்கிறது. இந்த 55ஐ $880_s$இலிருந்து கழித்தாக வேண்டும்; எஞ்சுவது 825. மேலும் 55 $II_s$ ஆனது $I_c$ ஆக மாறுவதைத் தொடர்ந்து, $II_s$ ஆனது மேலும் குறைய வேண்டியதாகிறது, அதாவது மாறும்-மூலதனத்துக்காக 27½ஐ அதிலிருந்து கழிக்க வேண்டியதாகிறது. நுகர்வுக்கு எஞ்சுவது 797½ $II_s$.

இப்போது துறை I ஆனது $605_s$ஐ மூலதனமாக்க வேண்டும். இதில் 484 மாறா-மூலதனமும், 121 மாறும்-மூலதனமும் ஆக வேண்டும். இந்த மாறும்-மூலதனத்தை 797½ ஆக இருக்கும் $II_s$இலிருந்து எடுத்தாக வேண்டும்; எஞ்சுவது 676½ $II_s$. துறை II இன்னும் 121ஐ மாறா-மூலதனமாக மாற்றுகிறது; மாறும்-மூலதனமாவதற்காக இத்துறைக்கு மேலும் 60½ தேவைப்படுகிறது. இந்த மாறும்-மூலதனமும் 676½இலிருந்து பெறப்படுகிறது; நுகர்வுக்கு எஞ்சுவது 616.

ஆக பின்வரும் மூலதனங்கள் பெறப்படுகின்றன:

I. மாறா-மூலதனம்: 4,840 + 484 = 5,324
மாறும்-மூலதனம்: 1,210 + 121 = 1,331

II. மாறா-மூலதனம்: 1,760 + 55 + 121 = 1,936
மாறும்-மூலதனம்: 880 + 27½ + 60½ = 968

ஆக மொத்தம்:
$$\left.\begin{array}{l} \text{I. } 5,324_c + 1,331_v = 6,655 \\ \text{II. } 1,936_c + 968_v = 2,904 \end{array}\right] = 9,559.$$

ஆண்டு முடிவில் கிடைக்கும் உற்பத்திப் பண்டம்:

$$\left.\begin{array}{l} \text{I. } 5,324_c + 1,331_v + 1,331_s = 7,986 \\ \text{II. } 1,936_c + 968_v + 968_s = 3,872 \end{array}\right] = 11,858.$$

இதே போல் திரும்பவும் கணக்கிட்டு, பின்னங்களை முழு எண்களாக்குவோமாயின், அடுத்து வரும் ஆண்டின் முடிவில் கிடைக்கும் உற்பத்திப் பண்டம் வருமாறு:

$$\left.\begin{array}{l} \text{I. } 5,856_c + 1,464_v + 1,464_s = 8,784 \\ \text{II. } 2,129_c + 1,065_v + 1,065_s = 4,259 \end{array}\right] = 13,043.$$

இதற்கும் அடுத்த ஆண்டின் முடிவில் கிடைப்பது:

$$\left.\begin{array}{l} \text{I. } 6,442_c + 1,610_v + 1,610_s = 9,662 \\ \text{II. } 2,342_c + 1,172_v + 1,172_s = 4,686 \end{array}\right] = 14,348.$$

ஐந்தாண்டு கால விரிதிற மறுவுற்பத்தியின் விளைவாய், துறைகள் I, IIஇன் மொத்த மூலதனம் $5,500_c + 1,750_v = 7,250$ ஆக இருந்ததானது ஐந்தாண்டு கால விரிதிற மறுவுற்பத்தியின் விளைவாய் $8,784_c + 2,782_v = 11,566$ ஆக உயருகிறது. அதாவது

100:160 என்னும் விகிதத்தில் அதிகரிக்கிறது. மொத்த உபரி-மதிப்பு ஆரம்பத்தில் 1,750; இப்போது 2,782. நுகரப்படும் உபரி-மதிப்பு ஆரம்பத்தில் துறை Iஇல் 500; துறை IIஇல் 600; மொத்தம் 1,100. இதற்கு முந்தைய ஆண்டில் துறை Iஇல் 732; துறை IIஇல் 745; மொத்தம் 1,477. நுகரப்படும் உபரி-மதிப்பு 100:134 என்ற விகிதத்தில் அதிகரிக்கிறது.

### 2. இரண்டாம் எடுத்துக்காட்டு

9,000 மதிப்புள்ள வருடாந்தர உற்பத்திப் பண்டத்தை எடுத்துக் கொள்வோம். இது முற்றிலும் தொழில் துறை முதலாளி வர்க்கத்தின் கையில் சரக்கு-மூலதனமாய் இருப்பதாகவும், இதில் மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்குமான பொது சராசரி விகிதம் 1:5 ஆக இருப்பதாகவும் கொள்வோம். முதலாளித்துவப் பொருளுற்பத்தி குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்திருந்தால்தான் இது போன்ற விகிதம் சாத்தியம். சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனும் இதே போல் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். அது மட்டு மல்ல, உற்பத்தியின் அளவுவீதமும் முன்பே குறிப்பிடத் தக்கவாறு விரிவுற்றிருக்க வேண்டும்; கடைசியாக, தொழிலாளி வர்க்கத்தினிடையே ஒப்பீட்டு உபரி-மக்கள்தொகையை [relative surplus-population] உண்டாக்குகிற நிலைமைகள் யாவும் வளர்ச்சியுற்றிருக்க வேண்டும். அப்போது வருடாந்தர உற்பத்திப் பண்டம் (பின்னங்களை முழு எண்களாக்குவோமாயின்) பின்வருமாறு பங்கிடப் படும்:

$$\left.\begin{array}{l} \text{I. } 5{,}000_c + 1{,}000_v + 1{,}000_s = 7{,}000 \\ \text{II. } 1{,}430_c + 285_v + 285_s = 2{,}000 \end{array}\right] = 9{,}000.$$

துறை Iஇன் முதலாளி வர்க்கம் அதன் உபரி-மதிப்பில் ஒரு பாதியை, அதாவது 500ஐ நுகருவதாகவும், மறு பாதியை மூலதனமாகத் திரட்டுவதாவும் வைத்துக் கொள்வோம். அப்போது $(1{,}000_v + 500_s)$ I, அல்லது 1,500ஐ 1,500 $\text{II}_c$ ஆக மாற்ற வேண்டியிருக்கும். ஆனால் இங்கு $\text{II}_c$ ஆக இருப்பது 1,430தான் என்பதால், உபரி-மதிப்பிலிருந்து 70ஐ எடுத்துச் சேர்ப்பது அவசியமாகும். 285 $\text{II}_s$இலிருந்து இத்தொகையைக் கழித்த பின் எஞ்சுவது 215 $\text{II}_s$. இதிலிருந்து பெறப்படுவது:

I. $5{,}000_c + 500_s$ (மூலதனமாக வேண்டியது) $+ 1{,}500_{v+s}$ (முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்குமான நுகர்வுப் பண்ட நிதியம்).

II. $1{,}430_c + 70_s$ (மூலதனமாக வேண்டியது) $+ 285_v + 215_s$.

இங்கே 70 $\text{II}_s$ நேரடியாக $\text{II}_c$ உடன் சேர்க்கப்படுவதால், இந்தக் கூடுதல் மாறா-மூலதனத்தை இயங்கச் செய்வதற்கு வேண்டிய

மாறும்-மூலதனம் $= {}^{70}/_5 = 14$. இந்த 14உம் கூட 215 $II_s$இலிருந்து தான் வர வேண்டும். எஞ்சுகிற உபரி-மதிப்பு $= 201$ $II_s$. இப்போது துறை IIஇன் நிலவரம்:

$$II.\ (1{,}430_c + 70_c) + (285_v + 14_v) + 201_s.$$

1,500 $II_c$க்கு 1,500 $I_{(v+½s)}$ பரிவர்த்தனையாவது சாமானிய மறுவுற்பத்தியைச் சேர்ந்த நிகழ்முறைதான், ஆகவே இதைப் பற்றி மேலும் ஒன்றும் சொல்லத் தேவையில்லை. ஆனால் இதில் உள்ள சில விசேஷங்களைக் குறிப்பிட வேண்டும். மூலதனத் திரட்டலோடு கூடிய மறுவுற்பத்தியில் $I_{(v+½s)}$ ஆனது மாற்றீடு செய்யப்படுவது $II_c$ ஆல் மட்டுமல்ல, $II_c$ ஆலும் அதோடு $II_s$இன் ஒரு பகுதியாலும் மாற்றீடு செய்யப்படுகிறது என்பதிலிருந்து எழுகிறவை இந்த விசேஷங்கள்.

மூலதனத் திரட்டல் நடைபெறுவதாகக் கொள்வோமானால், $I_{(v+s)}$ ஆனது சாமானிய மறுவுற்பத்தியில் இருப்பது போல் $II_c$க்கு சமமாய் இல்லாமல் $II_c$ஐ விடப் பெரியதாய் இருக்க வேண்டும் என்பது கூறாமலே விளங்கும். ஏனெனில், முதலாவதாக துறை I தனது உபரி-உற்பத்தியில் ஒரு பகுதியைத் தனது திறனுடை-மூலதனத்தோடு இணைத்துக் கொண்டு, அதில் ஆறில் ஐந்து பங்கை மாறா-மூலதனமாக மாற்றுவதால், அதனால் அதே போது இந்த ஆறில் ஐந்து பங்கை துறை IIஇன் நுகர்வுப் பண்டங்களுக்காகப் பரிவர்த்தனை செய்து கொள்ள முடியாது. இரண்டாவதாக, துறை I ஆனது துறை IIஇனுள் நடைபெறும் மூலதனத் திரட்டலுக்குத் தேவைப்படும் மாறா-மூலதனத்துக்கு வேண்டிய பொருட் கூறுகளைத் தனது உபரி-உற்பத்தியிலிருந்து அளித்தாக வேண்டும்; இதே போல், துறை I ஆனது அதனுடைய உபரி-உற்பத்தியிலிருந்து எடுத்துக் கூடுதல் மாறா-மூலதனமாக்கிடும் பகுதியை இயங்கச் செய்வதற்கான மாறும்-மூலதனத்துக்கு வேண்டிய பொருட் கூறுகளை துறை II அளித்தாக வேண்டும். மாறும்-மூலதனமும் சரி, கூடுதல் மாறும்-மூலதனமும் சரி, உண்மையில் உழைப்புச் சக்தியால் ஆனதே என்பது நமக்குத் தெரியும். துறை Iஇன் முதலாளி தாம் அமர்த்திக் கொள்ளவிருக்கிற கூடுதல் உழைப்புச் சக்திக்கு வேண்டிய அவசியத் தேவைப் பண்டங்களை துறை IIஇலிருந்து வாங்கவோ, வாங்கிச் சேர்த்து வைக்கவோ வேண்டியதில்லை— அடிமையுடைமையாளர்கள் செய்ய வேண்டியிருந்தது போல் அவர்களும் செய்ய வேண்டியதில்லை, தொழிலாளர்கள் தாமே துறை IIஇலிருந்து அவற்றை வாங்கிக் கொள்கிறார்கள். ஆனால் முதலாளி இந்தக் கூடுதல் உழைப்புச் சக்திக்கு வேண்டிய நுகர்வுப் பண்டங்களை தாம் அமர்த்தப் போகிற உழைப்புச் சக்தியின் உற்பத்திக்கும் பராமரிப்புக்குமான சாதனங்களாக, அதாவது தமது மாறும்-மூலதனத்தின் தசையுருவாகக் கருதிக் கொள்வது இதனால்

தடைபட்டு விடவில்லை. முதலாளி—இங்கே துறை Iஇன் முதலாளி—உடனடியாகச் செய்வதெல்லாம் கூடுதல் உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குவதற்கு வேண்டிய புதிய பண-மூலதனத்தை சேமித்து வைப்பதுதான். அவர் இந்த உழைப்புச் சக்தியை வாங்கித் தமது மூலதனத்தோடு சேர்த்துக் கொள்கையில் தொழிலாளர்கள் கைக்கு வந்து விடும் இந்தப் பணம் துறை IIஇன் சரக்குகளை வாங்குவதற்கான சாதனமாகிறது, அவர்களுக்குத் தேவையான நுகர்வுப் பண்டங்கள் அவர்களுக்குக் கிடைக்கும் படி அப்போது தயாராய் இருந்தாக வேண்டும்.

இடைக் குறிப்பாய் இங்கே ஒன்றைக் குறிப்பிட வேண்டும். முதலாளியும் அவரது பத்திரிகையாளரும் உழைப்புச் சக்தியானது அதனுடைய பணத்தைச் செலவிடுகிற விதம் குறித்தும், இந்தப் பணத்தின் ஈடேற்றமாய் அது பெற்றுக் கொள்கிற துறை IIஇன் சரக்குகள் குறித்தும் அடிக்கடி மனக்கசப்பு அடைகிறார்கள். அப்போது முதலாளி தத்துவ விசாரத்தில் இறங்குகிறார், பண்பாடு என்பதாகப் பசப்புகிறார், பரோபகாரத்தை உபதேசிக்கிறார்—உதாரணமாய் அவர் வாஷிங்டனில் உள்ள பிரித்தானியத் தூதரகத்தின் செயலர் திரு டிரமண்டைப் பின்பற்றுகிறார். தி நேஷன் இதழில் 1879 அக்டோபரில் ஒரு சுவையான கட்டுரை வெளிவந்ததை திரு டிரமண்டு சுட்டிக் காட்டுகிறார். ஏனைய பலவற்றுடன் பின்வரும் வாசகங்களும் இந்தக் கட்டுரையில் இடம் பெற்றிருந்தன:

''விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் அதிவேகமாகப் பெருகி முன்னேறுகின்றன, ஆனால் தொழிலாளி மக்கள்தம் பண்பாட்டு வளர்ச்சி அந்த வேகத்தை எட்டாமல் பின்தங்குகிறது. அவர்கள் மீது பொழியப்படும் பேறுகளைப் பயன்படுத்திக் கொள்ள அவர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே இப்பேறுகளுக்கு அவர்களால் சந்தையாக முடிவதில்லை.'' [ஒவ்வொரு முதலாளியும் தமது சரக்குகளையே தொழிலாளி வாங்க வேண்டுமென விரும்புவது இயற்கைதான்.] ''தன்னைப் போல் அதே அளவே சம்பாதிக்கிற மதகுருவும் வழக்கறிஞரும் மருத்துவரும் விரும்புகிற அத்தனை வசதிகளும் தனக்கும் வேண்டுமெனத் தொழிலாளியும் விரும்ப வேண்டும், விரும்பாதிருக்க எந்த நியாயமும் இல்லை.'' [இந்த மதகுருமார்களும் வழக்கறிஞர்களும் மருத்துவர்களும் அநேக வசதிகளை விரும்புவதோடு மட்டும் மனநிறைவு கொள்ள வேண்டியதுதான்!] ''ஆனால் தொழிலாளியிடம் இந்த விருப்பம் கூட இருக்கவில்லை. நுகர்வாளர் என்ற முறையில் தொழிலாளியை உயர்த்தியாக வேண்டும், இதற்கு அறிவார்ந்த ஆரோக்கியமான வழிமுறை என்ன என்பதுதான் பிரச்சினை—இது எளிய காரியமன்று. ஏனென்றால் அவரது ஆசை நேரம் குறைய வேண்டும் என்பதற்கு மேல் செல்வதில்லை. கிளர்ச்சிக்காரர்கள் இதற்குத்தான் அவரைத் தூண்டி விடுகிறார்களே தவிர, அவரது உள்ளத்து ஆற்றல்களையும் தார்மிகத்

திறன்களையும் ஓங்கச் செய்து அவரது நிலைமையை உயர்த்த முயலுவதில்லை.'' (தாம் வசிக்கிற நாடுகளின் பட்டறைத் தொழில்கள், வாணிபம் முதலானவை பற்றி மேன்மை தங்கிய முடியரசின் தூதரக, பிரதிநிதியகச் செயலர்களின் அறிக்கைகள், லண்டன், 1879, பக்கம் 404.)

தொழிலாளியின் உள்ளத்து ஆற்றல்களையும் தார்மிகத் திறன்களையும் மேம்படச் செய்து அவரது நிலைமையை உயர்த்துவதற்கும், அவரை அறிவார்ந்த நுகர்வாளர் ஆக்குவதற்கும் தேவையான அறிவார்ந்த ஆரோக்கிய வழிமுறைகளின் இரகசியம் நீண்ட உழைப்பு நேரம்தான் போலும். அவர் முதலாளியின் சரக்குகளை வாங்கிப் பயன்படுத்தும் அறிவார்ந்த நுகர்வாளர் ஆக வேண்டுமானால், யாவற்றுக்கும் மேலாய் தமது உழைப்புச் சக்தியை அறிவுக்கு ஒவ்வாத ஆரோக்கியக் கேடான முறையில் முதலாளி நுகருவதை அனுமதித்தாக வேண்டும்—ஆனால் இந்தக் கிளர்ச்சிக்காரர் அவர் இப்படிச் செய்யாத படித் தடுத்து விடுகிறார்! அறிவார்ந்த நுகர்வு என்று எதைச் சொல்கிறார் இந்த முதலாளி? தயை புரிந்து இம் முதலாளி தாமே நேரடியாகத் தமது தொழிலாளர்களோடு வர்த்தகம் புரியும் போதெல்லாம், அதாவது சரக்கூதிய முறை கைக்கொள்ளப்படும் போதெல்லாம் இது கண்கூடாகிறது. தொழிலாளர்கள் குடியிருக்க வீடு கட்டி வாடகைக்கு விடுவதும் இந்த சரக்கூதிய முறையைச் சேர்ந்ததுதான். இப்போது முதலாளி முதலாளியாக மட்டுமல்லாமல் அதே போது வீட்டுடைமையாளராகவும் செயல்படுகிறார்—முதலாளி புரியும் பலப்பல தொழில்களில் இதுவும் ஒன்று.

தொழிலாளி வர்க்கத்தின் நிலைமைகளை உயர்த்துவதற்காக முதலாளிமார்கள் மேற்கொள்ளும் முயற்சிகளைக் கண்டு மனம் மயங்கிப் போகிற இந்த டிரமண்டு தமது அறிக்கையில் முன்மாதிரியான ஆலைகளாய் இருக்கும் லோவெல், லாரென்ஸ் ஆலைகளின் பருத்தித் துணி உற்பத்தி பற்றியும் குறிப்பிடுகிறார். ஆலைப் பெண்கள் உண்பதற்கும் உறைவதற்குமான இடங்கள் இந்த ஆலைகளின் உடைமையாளராகிய நிறுமத்துக்குச் சொந்தமாகும். இந்த இல்லங்களின் காப்பாளர்களாயிருக்கும் பெண்கள் அதே நிறுமத்திடம் வேலை செய்கிறார்கள். இந்த நிறுமம்தான் அவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கான விதிகளை வகுத்திடுகிறது. எந்தப் பெண்ணும் இரவு 10 மணிக்குப் பிறகு வெளியில் தங்க அனுமதிக்கப்படுவதில்லை. அடுத்தபடி கூறப்படுவது மிகவும் குறிப்பிடத்தக்கது, இந்த விதி மீறப்படாமல் பார்த்துக் கொள்வதற்காக தனிக் காவல் படையொன்று அப்பகுதியில் சுற்றுக்காவல் புரிகிறது. இரவு 10 மணிக்குப் பின்னர் எந்தப் பெண்ணும் வெளியே செல்லவோ உள்ளே வரவோ முடியாது. எந்தப் பெண்ணும் நிறுமத்தின் வளாகம் தவிர வேறெங்கும் வசிக்கலாகாது. ஒவ்வொரு

வீட்டுக்கும் வாரம் சுமார் 10 டாலர் வீதம் நிறுமத்திற்கு வாடகை கிடைக்கிறது. அறிவார்ந்த நுகர்வாளர் இப்பொழுது அவரது முழுச் சிறப்புடன் காட்சியளிக்கிறார்: ''உழைக்கும் பெண்களுக்காக நல்ல முறையில் ஏற்பாடாகியுள்ள விடுதிகள் பலவற்றில் பியானோ தவறாமல் இருக்கக் காணலாம். இந்தப் பெண் தொழிலாளர்கள் இசையிலும் பாட்டிலும் நடனத்திலும் கணிச அளவில் கவனம் செலுத்துகிறார்கள். ஓயாமல் 10 மணி நேரம் தறிகளில் வேலை செய்த பின் இப்பெண்களுக்கு அதிகம் தேவைப்படுவது ஓய்வு அல்ல, மாற்றமின்றி முழு நேரமும் ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்வதால் ஏற்படும் சலிப்புக்கு மாற்றுதான் அதிகம் தேவைப்படுகிறது.'' (பக்கம் 412.) ஆனால் தொழிலாளியை அறிவார்ந்த நுகர்வாளர் ஆக்குவதன் பிரதான இரகசியம் இன்னும் சொல்லப்படவில்லை. டர்னர்ஸ் ஃபால்ஸில் (கனக்டிகட் ஆறு) இருக்கும் கத்தித் தொழிற்கூடத்தை திரு டிரமண்டு பார்வையிடுகிறார். குறிப்பாக அமெரிக்க மேசைக் கத்திகள் ஆங்கிலேய மேசைக் கத்திகளைத் தரத்தில் விஞ்சுவதாக அந்த நிறுவனத்தின் பொருளாளர் திரு ஓக்மன் அவரிடம் கூறினார். மேலும் அவர் கூறியதாவது: ''விலையிலுங்கூட நாம் இங்கிலாந்தை விஞ்சப் போகும் நாள் நெருங்கி வருகிறது. இப்போது தரத்தில் நாம் முந்தி விட்டதை எல்லாரும் ஒப்புக் கொள்கிறார்கள். விலையை நாம் குறைத்தாக வேண்டும்; உருக்கின் விலை குறைந்து உழைப்பின் விலையும் குறையுமானால் கத்தியின் விலையை உடனே குறைப்போம்.'' (பக்கம் 427.) கூலியைக் குறை, வேலை நேரத்தை அதிகமாக்கு—தொழிலாளியை அறிவார்ந்த நுகர்வாளராய் மேன்மையுறுமாறு உயர்த்தும் ''அறிவார்ந்த ஆரோக்கிய வழிமுறைகளின்'' சாரம் இவற்றில்தான் அடங்கியுள்ளது. தொழிலாளர்கள் இப்படி மேன்மையுற்று உயர்வார்களாயின், பண்பாட்டு வளர்ச்சியும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் முன்னேற்றமும் அவர்கள் மீது பொழிகின்ற பேறுகளுக்கு அவர்கள் சந்தையாகி விடுவார்கள்.''

---

துறை I ஆனது அதன் உபரி-உற்பத்தியிலிருந்து எப்படி துறை IIக்குக் கூடுதல் மாறா-மூலதனத்தை அளிக்கிறதோ, அதே போல் துறை IIஉம் துறை Iக்குக் கூடுதல் மாறும்-மூலதனத்தை அளிக்கிறது. மாறும்-மூலதனத்தைப் பொறுத்த வரை, துறை II ஆனது தனக்காகவும் துறை Iக்காகவும் இதனைத் திரட்டுகிறது; அதன் மொத்த உற்பத்தியிலும் குறிப்பாக அதன் உபரி-உற்பத்தியிலும் பெரும் பகுதியை அவசிய நுகர்வுப் பண்டங்களாக மறுவுற்பத்தி செய்வதன் மூலம் மூலதனம் திரட்டுகிறது.

மேன்மேலும் அதிகரிக்கும் மூலதனத்தின் அடிப்படையிலான உற்பத்தியில், $I_{(v+s)}$ ஆனது $II_c$ + மீண்டும் மூலதனமாக்கப்படும்

உபரி-உற்பத்திப் பகுதி + துறை IIஇல் உற்பத்தியை விரிவாக்குவதற்குத் தேவையான கூடுதல் மாறா-மூலதனப் பகுதி ஆகிய இந்தக் கூட்டுத் தொகைக்குச் சமமாய் இருந்தாக வேண்டும். இந்த விரிவாக்கத்தின் குறைந்தபட்ச அளவானது, துறை Iஇல் மெய்யான மூலதனத் திரட்டல்—அதாவது மெய்யான உற்பத்தி விரிவாக்கம்—நடைபெறுவதற்கு அவசியம் தேவைப்படுகிற அளவுக்குச் சமமாகும்.

நாம் கடைசியாகப் பரிசீலித்த உதாரணத்துக்குத் திரும்பி வருவோம். அதன் விசேஷம் என்னவெனில், $II_c$ ஆனது $I_{(v+\frac{1}{2}s)}$ஐ விடச் சிறியது; அதாவது துறை Iஇன் உற்பத்திப் பண்டத்தில் நுகர்வுப் பண்டங்களுக்காக வருவாயாகச் செலவிடப்படும் பகுதியை விடச் சிறியது; இதனால் 1,500 $I_{(v+s)}$ பரிவர்த்தனை செய்யப்படும்போது, துறை IIஇன் உபரி-உற்பத்தியில் ஒரு பகுதி (=70) அதே போது ஈடேற்றம் செய்யப்படுகிறது. 1,430க்குச் சமமான $II_c$ஐப் பொறுத்த வரை, பிற நிலைமைகள் மாறாமல் இருக்கையில் அது $I_{(v+s)}$இலிருந்து அதற்குச் சமமான பருமனுடைய ஒரு மதிப்பால் மாற்றீடு செய்யப்பட வேண்டும்; அப்போதுதான் துறை IIஇல் சாமானிய மறுவுற்பத்தி நடைபெற முடியும். இது குறித்து இதற்கு மேல் பரிசீலனை செய்யத் தேவையில்லை. கூடுதலாக வரும் 70 $II_s$ஐப் பொறுத்த வரை நிலைமை வேறு. துறை Iஐப் பொறுத்த வரை வருவாயைத் தந்து நுகர்வுப் பண்டங்கள் பெறுகிற பரிவர்த்தனையாக மட்டும் இருப்பது, அதாவது நுகர்வுக்கான சரக்குப் பரிவர்த்தனையாக மட்டும் இருப்பது, துறை IIஐப் பொறுத்த வரை (சாமானிய மறுவுற்பத்தியில் இருப்பது போல்) மாறா-மூலதனம் சரக்கு-மூலதன வடிவிலிருந்து மீண்டும் அதன் தசையுருவிற்குத் திரும்பும் மாற்றமாக மட்டுமல்லாமல், நேரடித் திரட்டல் நிகழ்முறையாகவும், அதாவது உபரி-உற்பத்தியின் ஒரு பகுதி நுகர்வுப் பண்ட வடிவிலிருந்து மாறா-மூலதன வடிவிற்கு அடைகிற மாற்றமாகவும் இருக்கிறது. (உபரி-மதிப்பின் உருமாற்றத்துக்கான சேமப் பண வைப்பாகிய) £70ஐக் கொண்டு துறை I ஆனது 70 $II_s$ஐ வாங்குகிறது. பதிலுக்கு துறை II ஆனது 70 $I_s$ஐ வாங்காமல் £70ஐப் பண-மூலதனமாகத் திரட்டினால், இந்தப் பண-மூலதனம் எப்போதுமே கூடுதல் உற்பத்திப் பண்டத்தைக் குறிப்பதாகவே இருக்கும் (இதனை ஓர் ஈவுப் பகுதியாகக் கொண்ட துறை IIஇன் உபரி-உற்பத்தியைக் குறிப்பதாகவே இருக்கும்)—இது உற்பத்தித் துறைக்குத் திரும்பிச் செல்வதில்லை என்றாலும் கூட நிலைமை இதுவேதான். ஆனால் துறை IIஇல் நடைபெறும் இந்தப் பணத் திரட்டல் உற்பத்திச் சாதனங்களாகிய 70 $I_s$ விற்கப்பட முடியாமல் தேங்கி விடுவதைக் குறிப்பதாகவும் இருக்கும். இவ்வாறு துறை Iஇல் ஒப்பீட்டு மிகையுற்பத்தி ஏற்படும்; இந்த மிகையுற்பத்தி துறை IIஇல் மறுவுற்பத்தி விரிவடையாமல் இருக்கும் நிகழ்வுடன் இணைந்ததாகும்.

இது ஒருபுறமிருக்கட்டும். துறை Iஇலிருந்து பணமாக வந்த 70 துறை IIஆல் 70 $I_s$ வாங்கப்படுவதன் மூலம் முழுமையாகவோ பகுதியாகவோ துறை Iக்குத் திரும்பிச் செல்லும் வரை, இந்தப் பணம் துறை II இடம் முழுமையாகவோ பகுதியாகவோ கூடுதல் உள்ளுறைப் பண-மூலதனமாகிறது. துறை Iக்கும் துறை IIக்கும் இடையிலான ஒவ்வொரு பரிவர்த்தனையிலும்—இரு துறைகளும் தத்தமது பண்டங்களைத் தமக்குள் பரிவர்த்தனை செய்து கொள் வதன் மூலம் பணம் அது புறப்பட்ட இடத்துக்கே திரும்புகிற வரை—இவ்வாறே நடைபெறுகிறது. ஆனால் இயல்பான நிலைமை களில் பணம் தற்காலிகமாகவே இப்படிப் பங்காற்றுகிறது. தற் காலிகமாக விடுவிக்கப்படும் இந்தப் பண-மூலதனம்—ஏனைய தொழில் முனைவுகளில் முடங்கியிருக்கும் உபரி-உற்பத்திப் பண்டங் களை இயங்க வைப்பதற்குப் பயன்பட வேண்டிய இந்தப் பண-மூலதனம்—கடன்-செலாவணி அமைப்பினுள் இழுக்கப்பட்டு, துறை Iஇல் புதிய தொழில் முனைவுகளை நிறுவுவதற்குப் பயன் படலாம். (கடன்-செலாவணி அமைப்பில், தற்காலிகமாக விடுவிக் கப்படும் கூடுதல் பணம் அனைத்தும் உடனடியாகவே கூடுதல் பண-மூலதனமாகத் துடிப்புடன் செயல்பட முடியும்). துறை IIஇன் மாறா-மூலதனத்தோடு 70 $I_s$ஐ இணைத்துக் கொள்வதற்கும் அத் துறையின் மாறும்-மூலதனம் 14 கூடுதலாக வேண்டும் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். வேறுவிதமாகச் சொன்னால் உபரி-உற்பத்தியில் அவசிய வாழ்வுச் சாதனங்களாய் அமைந்திடும் பகுதி யின் விரிவாக்கத்தை இது குறிக்கிறது.

---

இரண்டாவது எடுத்துக்காட்டில் உற்பத்திப் பண்டமாகிய 9,000ஐ மறுவுற்பத்திக்காக வேண்டி பின்வரும் வழியில் பிரித்தால் தான் 500 $I_s$ஐ மூலதனமாக்க முடியும் என்று பார்த்தோம். இங்கு சரக்குகளை மட்டும் கருத்தில் கொண்டு, பணச் சுற்றோட்டத்தைக் கவனியாது விட்டு விடுகிறோம்.

I. $5{,}000_c$ + (மூலதனமாக்க வேண்டிய) $500_s$ + நுகர்வுப் பண்ட நிதியமான $1{,}500_{(v+s)}$ = சரக்குகளாக இருக்கும் 7,000.

II. $1{,}500_c + 299_v + 201_s$ = சரக்குகளாக இருக்கும் 2,000.

ஆக மொத்தம் சரக்குகளாக இருக்கும் 9,000.

உபரி-மதிப்பை மூலதனமாக்கும் நிகழ்முறை பின்வருமாறு நடந் தேறுகிறது:

துறை Iஇல் மூலதனமாக்கப்படும் $500_s$ ஆனது ஆறில் ஐந்து பங்கு = $417_c$ + ஆறில் ஒரு பங்கு = $83_v$ என்பதாகப் பிரிகிறது. $83_v$ ஆனது $II_s$இலிருந்து அதற்குச் சமமான ஒரு தொகையை ஈர்க் கிறது. இத்தொகை மாறா-மூலதனக் கூறுகளை வாங்கி $II_c$உடன் சேர்க்கிறது. $II_c$இல் 83 கூடுதலாகும் போது, $II_v$ ஆனது 83இல்

ஐந்திலொரு பங்கு = 17 கூடுதலாகிறது. ஆக, இந்தப் பரிவர்த்தனைக்குப் பிறகு பெறப்படுவதாவது:

$$\text{I. } (5{,}000_c+417_s)_c+(1{,}000_c+83_s)_v=5{,}417_c+1{,}083_v=6{,}500$$
$$\text{II. } (1{,}500_c+83_s)_c+(299_v+17_s)_v=1{,}583_c+316_v=1{,}899$$

மொத்தம் 8,399

துறை Iஇல் 6,000 ஆக இருந்த மூலதனம் 6,500 ஆக—அதாவது 1/12 பங்கு—அதிகரித்துள்ளது. துறை IIஇல் 1,715 ஆக இருந்த மூலதனம் 1,899 ஆக—அதாவது ஏறத்தாழ 1/9 பங்கு—அதிகரித்துள்ளது.

இந்த அடிப்படையில் இரண்டாவது ஆண்டில் நடைபெறும் மறுவுற்பத்தியின் பயனாய் மூலதனம் பின்வருமாறு ஆகிறது:

$$\text{I. } (5{,}417_c+452_s)_c+(1{,}083_v+90_s)_v=5{,}869_c+1{,}173_v=7{,}042.$$
$$\text{II. } (1{,}583_c+42_s+90_s)_c+(316_v+8_s+18_s)_v=1{,}715_c+342_v=$$
$$=2{,}057.$$

மூன்றாவது ஆண்டின் முடிவில் பெறப்படுவதாவது:

$$\text{I. } 5{,}869_c+1{,}173_v+1{,}173_s$$
$$\text{II. } 1{,}715_c+342_v+342_s.$$

முன்போலவே துறை I அதன் உபரி-மதிப்பில் ஒரு பாதியை மூலதனமாகத் திரட்டினால், $I_{(v+\frac{1}{2}s)}=1{,}173_v+587_{(\frac{1}{2}s)}=1{,}760$. $II_c$இன் மொத்த அளவாகிய 1,715ஐக் காட்டிலும் இது 45 கூடுதலாகும். இந்த அளவு உற்பத்திச் சாதனங்களை $II_c$க்குப் பெயர்ப்பதன் மூலம் இதை மீண்டும் சரிக்கட்டியாக வேண்டும்; $II_c$ இவ்வாறு 45 கூடுதலாகிறது. இதனால் $II_v$ ஆனது $45\times 1/5=9$ கூடுதலாக வேண்டியதாகிறது. மேலும் மூலதனமாக்கப்பட்ட 587 $I_s$ ஆனது ஆறில் ஐந்து பங்காகவும் ஆறில் ஒரு பங்காகவும், அதாவது $489_c$ ஆகவும் $98_v$ ஆகவும் பிரிகிறது. இந்த 98 ஆனது துறை IIஇன் மாறா-மூலதனத்தோடு புதிதாய் 98 சேர்க்கப்படுவதைக் குறிக்கிறது; இதனால் IIஇன் மாறும்-மூலதனம் ஐந்திலொரு பங்கு = 20 கூடுதலாகிறது. ஆக இப்போது பெறப்படுவதாவது:

$$\text{I. } (5{,}869_c+489_s)_c+(1{,}173_v+98_s)_v=6{,}358_c+1{,}271_v=7{,}629$$
$$\text{II. } (1{,}715_c+45_s+98_s)_c+(342_v+9_s+20_s)_v=1{,}858_c+371_v=$$
$$=2{,}229.$$

மொத்த மூலதனம் = 9,858.

துறை Iஇன் மொத்த மூலதனம் 6,000 ஆக இருந்தது; மூன்றாண்டு கால விரிதிற மறுவுற்பத்தியினால் 7,629 ஆக அதிகரிக்கிறது. துறை IIஇன் மொத்த மூலதனம் 1,715 ஆக இருந்தது.

இப்போது 2,229 ஆக அதிகரிக்கிறது. 7,715 ஆக இருந்த மொத்த சமுதாய மூலதனம் 9,858 ஆக அதிகரிக்கிறது.

### 3. மூலதனத் திரட்டலில் $II_c$இன் மாற்றீடு

$II_c$க்கு $I_{(v+s)}$ பரிவர்த்தனை ஆவதில், இவ்விதம் பல்வேறு நேர்வுகள் எதிர்ப்படுகின்றன.

சாமானிய மறுவுற்பத்தியில் இவையிரண்டும் சமமாயிருக்கவும், ஒன்றையொன்று மாற்றீடு செய்யவும் வேண்டும்; இல்லையேல் சாமானிய மறுவுற்பத்தி சரளமாய் நடைபெற முடியாது என்று மேலே பார்த்தோம்.

மூலதனத் திரட்டலில் முதற்கண் கருத்தில் கொள்ள வேண்டியது திரட்டல் வீதத்தைத்தான் [rate of accumulation]. மேற்கண்ட நேர்வுகளில் துறை Iஇல் திரட்டல் வீதம் ½ $I_s$ எனக் கொண்டோம். அது ஆண்டுக்கு ஆண்டு மாறாதிருப்பதாகவும் வைத்துக் கொண்டோம். திரட்டப்படுகிற இந்த மூலதனம் மாறும்-மூலதனமாகவும், மாறா-மூலதனமாகவும் பிரிக்கப்படுகிற விகிதாசாரத்தை மட்டுமே மாற்றினோம். அப்போது மூன்று நேர்வுகள் பெறப்பட்டன:-

1) $I_{(v+½s)}=II_c$. ஆகவே $II_c$ ஆனது $I_{(v+s)}$ஐ விடச் சிறியது. எப்போதும் இப்படித்தான் இருந்தாக வேண்டும்; இல்லையேல் துறை I மூலதனம் திரட்ட முடியாது.

2) $I_{(v+½s)}$ என்பது $II_c$ஐக் காட்டிலும் பெரியது. $II_s$இல் உரியதொரு பகுதியை $II_c$உடன் சேர்த்துக் கூட்டி, $II_c$ஐ $I_{(v+½s)}$க்குச் சமமாக்குவதன் மூலம் இந்நேர்வில் மாற்றீடு நடந்தேறுகிறது. இங்கு துறை IIக்கு மாற்றீடு என்பது அதன் மாறா-மூலதனத்தின் சாமானிய மறுவுற்பத்தியல்ல. அதற்கு இம்மாற்றீடு மூலதனத் திரட்டலைக் குறிக்கிறது; அதன் உபரி-உற்பத்தியில் ஒரு பகுதியை சேர்த்துக் கொண்டு அதன் மாறா-மூலதனம் அதிகமாவதைக் குறிக்கிறது. உபரி-உற்பத்தியின் இப்பகுதியை அது துறை Iஇன் உற்பத்திச் சாதனங்களுக்குப் பரிவர்த்தனை செய்து கொள்கிறது. துறை IIஇன் மாறா-மூலதனம் இவ்விதம் அதிகரிப்பது அதன் மாறும்-மூலதனமும் அதே உபரி-உற்பத்தியிலிருந்து உரியதொரு பகுதியைச் சேர்த்துக் கொண்டு அதிகமாவதைக் குறிக்கிறது.

3) $I_{(v+½s)}$ என்பது $II_c$ஐக் காட்டிலும் சிறியது. துறை II இந்நேர்வில் அதன் மாறா-மூலதனத்தைப் பரிவர்த்தனையின் வாயிலாகவே முழுமையாக மறுவுற்பத்தி செய்திடவில்லை; இதனால் ஏற்படும் பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்காக அது துறை Iஇடமிருந்து சரக்கு வாங்கியாக வேண்டும். ஆனால் துறை IIஇன் மாறா-மூலதனம் இவ்விதம் முழு அளவில் மாற்றீடு செய்யப்பட்டு விடுவதால் இத்துறை இதற்கு மேல் கூடுதலாக மாறும்-மூலதனம் திரட்டத் தேவையில்லை. மறு புறத்தில் துறை Iஇன் முதலாளிகளில்,

கூடுதல் பண-மூலதனம் மட்டும் திரட்டுகிற பகுதியினர் இத்திரட்டலில் ஒரு பகுதியை இப்பரிமாற்றத்தின் வாயிலாக ஏற்கெனவே செய்து முடித்து விடுகிறார்கள்.

$I_{(v+s)}$ ஆனது $II_c$க்குச் சமமாய் இருக்க வேண்டியது சாமானிய மறுவுற்பத்திக்கான முன்னிபந்தனை. இந்த முன்னிபந்தனை முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கு ஒவ்வாததாய் இருக்கிறது. ஆயினும் 10-11 ஆண்டுகளைக் கொண்ட தொழில் துறைச் சகடத்தில் ஏதேனும் ஓராண்டில் மொத்த உற்பத்தியானது அதற்கு முந்தைய ஆண்டில் இருந்ததைக் காட்டிலும் குறைவானதாகி, முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில் சாமானிய மறுவுற்பத்தியே கூட நடைபெறாதிருக்கும் சாத்தியப்பாட்டிற்கு இதனால் இடமில்லாமற் போவதில்லை. அதே போது இரண்டாவதாக, மக்கள்தொகையின் இயற்கையான வருடாந்தர அதிகரிப்பை மனத்திற் கொள்வோமாயின், உற்பத்தித் திறனற்ற வேலையாட்கள் இந்த அதிகரிப்புக்கு ஏற்ப அதிக எண்ணிக்கையில் மொத்த உபரி-மதிப்பான 1,500ஐப் பகிர்ந்து கொள்கிற அளவுக்குத்தான் சாமானிய மறுவுற்பத்தி நடைபெற முடியும். ஆனால் இந்நிலைமைகளில் மூலதனத் திரட்டலானது, அத்தாவது மெய்யான முதலாளித்துவப் பொருளுற்பத்தியானது சாத்தியமற்றதாகி விடுகிறது. ஆகவே முதலாளித்துவத் திரட்டல் நடைபெற்று வருகையில், $II_c$ ஆனது $I_{(v+s)}$க்குச் சமமாய் இருக்க வழியே இல்லை என்றாலும் முதலாளித்துவத் திரட்டல் நடைபெறும் போதும் கூட, அதற்கு முன்சென்ற பல உற்பத்திக் காலங்களில் நடந்தேறிய திரட்டல் நிகழ்முறைகளின் விளைவாக $II_c$ ஆனது $I_{(v+s)}$க்குச் சமமாவது மட்டுமல்லாமல், அதை விடப் பெரியதும் ஆகி விட முடியும். அப்படி ஆகும் போது துறை IIஇல் மிகையுற்பத்தி ஏற்படுகிறது. அப்போது பெரும் தகர்வு ஒன்று உண்டாகி அதன் விளைவாய் துறை IIஇன் மூலதனத்தில் ஒரு பகுதி துறை Iக்கு மாற்றப்பட்டாலன்றி சமநிலையை அடைய முடியாது.

துறை IIஇன் மாறா-மூலதனத்தில் ஒரு பகுதி அத்துறையிலேயே மறுவுற்பத்தி செய்யப்படுவதால்—வேளாண்மைத் துறையில் சொந்தத்தில் தாமே விளைவித்த விதையைப் பயன்படுத்திச் சாகுபடி செய்வதை இங்கு உதாரணமாய்க் குறிப்பிடலாம்—$I_{(v+s)}$க்கும் $II_c$க்குமுள்ள உறவு மாறி விடுவதில்லை. இரு துறைகளுக்கும் இடையிலான பரிவர்த்தனையில் எப்படி $I_c$க்கு எந்தச் சம்பந்தமும் இல்லையோ, அதே போல் $II_c$இன் இந்தப் பகுதிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. துறை IIஇன் உற்பத்திப் பண்டங்களில் ஒரு பகுதி உற்பத்திச் சாதனங்களாகத் துறை Iக்குப் போய்ச் சேரக் கூடியதாய் இருப்பதானாலும் இந்த உறவில் எந்த மாற்றமும் ஏற்படுவதற்கில்லை. துறை I அளித்திடும் உற்பத்திச் சாதனங்களில் ஒரு பகுதி துறை IIஇலிருந்து போய்ச் சேருகிற பண்டங்களுக்கு ஈடுகட்டி

விடுவதால், இப்பகுதியைத் தொடக்கத்திலேயே இரு பக்கங்களி லிருந்தும் கழித்தாக வேண்டும். அப்போதுதான் சமுதாயப் பொரு ளுற்பத்தியின் இருபெரும் துறைகளாய் அமைகிற உற்பத்திச் சாதன உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வுப் பண்ட உற்பத்தியாளர்களுக்கும் இடையிலான பரிவர்த்தனையை அப்பழுக்கற்ற அதன் தூய வடி வில் பரிசீலிக்க முடியும்.

ஆக முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் $I_{(v+s)}$ ஆனது $II_c$க்குச் சமமாய் இருக்க முடியாது; அதாவது இவை இரண்டும் பரிவர்த் தனையிலும் ஒன்றையொன்று நேர்செய்து கொள்ள முடியாது. மறு புறத்தில் துறை Iஇன் முதலாளிகள் $I_s$இலிருந்து எடுத்து வருவா யாகச் செலவிடும் பகுதியை $I_{\frac{s}{x}}$ என்பதாகக் கொள்வோமாயின், $I_{\left(v+\frac{s}{x}\right)}$ ஆனது $II_c$க்குச் சமமாகவோ, அதை விடப் பெரியதாகவோ, சிறியதாகவோ இருக்கலாம். ஆனால் $I_{\left(v+\frac{s}{x}\right)}$ ஆனது எப்போதுமே $II_{(c+s)}$ஐ விடச் சிறியதாகவே இருந்தாக வேண்டும், துறை IIஇன் முதலாளி வர்க்கம் எல்லா நிலைகளிலும் $II_s$இலிருந்து எடுத்து நுகர்ந்தாக வேண்டிய பகுதிக்குச் சமமான அளவுக்குச் சிறிதாகவே இருந்தாக வேண்டும்.

மூலதனத்தை திரட்டல் பற்றிய இந்த விளக்கத்தில் மாறா-மூல தனத்தின் மதிப்பு, அதன் துணை கொண்டு உற்பத்தி செய்யப்படும் சரக்கு-மூலதன மதிப்பில் ஒரு பகுதியாய் இருக்கிற அளவுக்குத் துல்லியமாய்க் குறிக்கப்படவில்லை என்பதை இங்கே சொல்லியாக வேண்டும். புதிதாய்த் திரட்டப்படுகிற மாறா-மூலதனத்தின் நிலை-மூலதனப் பகுதியானது, இந்த நிலை-மூலதனக் கூறுகள் தன்மையில் வேறுபடுவதற்கு ஏற்பக் கொஞ்சம் கொஞ்சமாகவும் காலவட்ட முறையிலும்தான் சரக்கு-மூலதனத்துக்குப் போய்ச் சேருகிறது. ஆகவே கச்சாப் பொருட்களும் பூர்த்தியாகாத பண்டங்களும் இன்ன பிறவும் பெரிய அளவில் சரக்கு உற்பத்தியில் ஈடுபடும் போதெல் லாம், பெரும் பகுதி சரக்கு-மூலதனம் மாறா-மூலதனத்தின் சுழல்-மூலதனக் கூறுகள், மாறும்-மூலதனம் ஆகியவற்றுக்கான மாற்றீடு களாகவே ஈடுபடுகிறது. (சுழல்-மூலதனக் கூறுகள் அவையவற்றுக்கு உரிய தனி விதத்தில் புரள்வதால், இந்தப் பரிசீலனையை நாம் இவ்விதத்தில் நடத்த முடிந்தது. சுழல்-மூலதனப் பகுதியும், அதற்குப் பெயர்க்கப்படும் நிலை-மூலதன மதிப்புப் பகுதியும் சேர்ந்து ஓர் ஆண்டில் நிகழ்த்தும் புரள்வுகளின் எண்ணிக்கை, அளிக்கப்படும் சரக்குகளின் மொத்தத் தொகையையும் வருடாந்தர உற்பத்தியில் நுழைந்திடும் மூலதனமனைத்தின் மதிப்பையும் ஒன்றுக்கொன்று சமமாக்கும் விதத்தில் அமைவதாக அனுமானித்துக் கொண்டோம்.) ஆனால் கச்சாப் பொருள் ஏதுமின்றி துணைப் பொருட்கள் மட்டும் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில், உதாரணமாய் இயந்திரக்

கட்டுமானம் போன்ற தொழில்களில், உழைப்புக் கூறு (=v) சரக்கு-மூலதனத்தில் ஏனையவற்றைக் காட்டிலும் பெரிய அடக்கக் கூறாகத் திரும்பி வந்திருக்க வேண்டும். இலாப வீதத்தைக் கணக்கிடுகையில் உபரி-மதிப்பு மொத்த மூலதனத்துடன் ஒப்பிடப்படுகிறது — நிலை-மூலதனக் கூறுகள் குறிப்பிட்ட காலத்தில் உற்பத்திப் பண்டத்துக்குப் பெயர்த்தளிக்கும் மதிப்பு அதிகமா, குறைவா என்பதைப் பொருட்படுத்துவதில்லை. ஆனால் காலவட்ட முறையில் உற்பத்தி செய்யப்படும் சரக்கு-மூலதனத்தின் மதிப்பைக் கணக்கிடுகையில், மாறா-மூலதனத்தின் ஒரு பகுதியாகிய நிலை-மூலதனம் சராசரியாகத் தேய்மானத்தின் மூலம் உற்பத்திப் பண்டத்துக்கு பெயர்த்தளிக்கிற மதிப்பு எவ்வளவோ அந்த அளவுக்கு மட்டுமே நிலை-மூலதனத்தை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## IV. கூடுதல் குறிப்புகள்

துறை IIக்குப் பணம் ஆரம்பத்தில் வருவது எங்கிருந்து? துறை Iஇல் நடைபெறும் தங்க உற்பத்தியின் மூலம் வரப்பெறுகிற v+s ஆனது $II_c$இல் ஒரு பகுதிக்குப் பரிவர்த்தனை ஆவதிலிருந்து வருகிறது. தங்க உற்பத்தியாளர் உபரி-மதிப்பை மூலதனமாகத் திரட்டுகிற, அல்லது அதனை துறை I அளித்திடும் உற்பத்திச் சாதனங்களாக உருமாற்றுகிற அளவுக்குத்தான், அதாவது தமது உற்பத்தியை விரிவாக்குகிற அளவுக்குத்தான் அவரது v+s ஆனது துறை II இனுள் நுழையாதிருக்கிறது. மறு புறத்தில் தங்க உற்பத்தியாளர் பணம் திரட்டுவதால், முடிவில் விரிதிற மறுவுற்பத்திக்கு எந்த அளவுக்கு வழி வகுக்கப்படுகிறதோ, தங்க உற்பத்தியின் உபரி-மதிப்பிலிருந்து வருவாயாகச் செலவிடப்படாத பகுதி அந்த அளவுக்குத் தங்க உற்பத்தியாளரின் கூடுதல் மாறும்-மூலதனமாக துறை IIக்கு வந்து சேருகிறது, இங்கு புதிய பணச் சேர்ப்புகளின் உருவாக்கத்தை அவசியமாக்குகிறது, அல்லது துறை Iஇடம் நேரடியாக விற்காமலே அதனிடமிருந்து வாங்குவதற்குப் பயன்படும் புதிய வாங்கற் சாதனமாகிறது. தங்க உற்பத்தியில் இந்த $I_{(v+s)}$ஆல் வரப்பெறும் பணத்திலிருந்து ஒரு பகுதித் தங்கத்தைக் கழித்து விட வேண்டியிருக்கும்: இந்தத் தங்கம் துறை IIஇன் உற்பத்திக் கிளைகள் சிலவற்றில் கச்சாப் பொருளாகவும் இதையொத்த பிற பொருளாகவும் தேவைப்படுகிறது; அதாவது அந்த உற்பத்திக் கிளைகளது மாறா-மூலதனத்தின் மாற்றீட்டுக் கூறாகத் தேவைப்படுகிறது. வருங்காலத்தில் மறுவுற்பத்தியை விரிவாக்கும் பொருட்டு, முன்கூட்டி சேர்ப்புகளை உருவாக்குவதற்கான ஒரு கூறு இரு துறைகளுக்கும் இடையில் நடைபெறும் பரிவர்த்தனையில் பின்வரும் விதத்தில் இடம் பெறுகிறது: $I_s$இல் ஒரு பகுதி துறை IIக்கு ஒரு தரப்பாய் விற்கப்பட்டு, அதாவது பதிலுக்கு அத்துறையிலிருந்து எதுவும் வாங்காமலே விற்கப்பட்டு,

துறை IIக்குக் கூடுதல் மாறா-மூலதனமாகப் பயன்படுமானால்
துறை I இலும், துறை I ஆனது கூடுதல் மாறும்-மூலதனத்திற்காக
வேண்டி ஒருதரப்பாக சரக்கு வாங்குமானால் துறை IIஇலும் வரப்
பெறுகிறது. தவிரவும் துறை I வருவாயாகச் செலவிடும் உபரி-
மதிப்பில் ஒரு பகுதி $II_c$ஆல் ஈடுசெய்யப்படக் கூடாது. இந்த
உபரி-மதிப்புப் பகுதியைக் கொண்டு $II_s$இல் ஒரு பகுதியை
விலைக்கு வாங்குவதன் மூலம் பணமாக மாற்றவும் வேண்டும்.
$I_{(v+s)}$ ஆனது $II_c$ஐ விடப் பெரியதாய் இருக்குமானால், $II_c$இன்
சாமானிய மறுவுற்பத்திக்காக வேண்டிய $II_s$இலிருந்து துறை I
நுகர்ந்ததை துறை Iஇலிருந்து சரக்குகள் வாங்கி மாற்றீடு செய்யத்
தேவையில்லை. துறை IIஇன் முதலாளிகள் தமக்குள் பரிவர்த்
தனைகள் செய்து கொள்வதன் மூலம், அதாவது $II_s$ஐ மட்டும்
ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை செய்து கொள்வதன் மூலம்
பணச் சேர்ப்பு எந்த அளவுக்கு உருவாக முடியும் என்ற கேள்வி
எழுகிறது. $II_s$இல் ஒரு பகுதியை மாறும்-மூலதனமாய் நேரடியாகவே
மாற்றுவதன் மூலம் (துறை Iஇல் $I_s$இன் ஒரு பகுதி மாறா-மூல
தனமாய் மாற்றப்படுகிறதல்லவா, அது போலத்தான் இதுவும்)
துறை IIக்குள் நேரடித் திரட்டல் நடைபெறுகிறதென்று நமக்குத்
தெரியும். துறை IIஇல் அடங்கிய பல்வேறு தொழிற் கிளைகளுக்
குள் மூலதனத் திரட்டலின் வயது இனங்கள் வேறுபடுகின்றன; ஒவ்
வொரு தொழிற் கிளையிலுங்கூட தனிப்பட்ட முதலாளிகளுக்கு
இவ்வயது இனங்கள் வேறுபடக் காணலாம். இந்நிலையில் துறை I
தொடர்பாகத் தரப்படும் விளக்கமே, உரிய மாற்றங்களோடு, துறை
IIக்கும் பொருந்துவதாகிறது. இந்த முதலாளிகளில் சிலர் இன்ன
மும் பணம் சேர்க்கும் கட்டத்தில் இருப்பவர்கள், அதாவது வாங்
காமல் விற்பவர்கள்; மற்றவர்கள் உள்ளபடியே மறுவுற்பத்தியை
விரிவாக்கும் நிலையில் இருப்பவர்கள், அதாவது விற்காமல் வாங்கு
கிறவர்கள். கூடுதல் மாறும் பண-மூலதனம் முதலில் கூடுதல்
உழைப்புச் சக்திக்காகவே முதலீடாகிறது என்பது மெய்தான்.
ஆனால் இந்தப் பண-மூலதனம் தொழிலாளர் நுகர வேண்டிய
கூடுதல் நுகர்வுப் பண்டங்களின் சேர்ப்பு-உடைமையாளர்களிட
மிருந்து வாழ்வுச் சாதனங்கள் வாங்குவதற்குப் பயன்படுகிறது. இந்
தச் சேர்ப்பு-உடைமையாளர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு சேர்ப்பை
உருவாக்குகிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு அந்தப் பணம்
அவர்களிடமே தங்கி விடுகிறது, புறப்பட்ட இடத்துக்குத் திரும்பிச்
செல்வதில்லை. அவர்கள் அதனைச் சேர்ப்பாகச் சேர்த்து வைக்
கிறார்கள்.

# பெயர் அட்டவணை

அரிவாபீன் [Arrivabene], ஜியோவனி (1787-1881) — 580.
ஆதாம்ஸ் [Adams], வில்லியம (1797-1872) — 222, 225.
எட்மண்ட்ஸ் [Edmonds] தாமஸ் (1803-1889) — 19.
ஓவன் [Owen], ராபர்ட் (1771-1858) — 19.
ஃபுல்லர்ட்டன் [Fullarton], ஜான் (1780-1849) — 662.
கார்பெட் [Corbet], தாமஸ் — 180.
கிர்ச்சோஃப் [Kirchhof], பிரெடெரிக் — 233, 319, 324, 325, 327, 329, 339.
குட் [Good], வி. வால்டர் — 312.
குர்சேல்-செனாவில் [Courcelle-Seneuil], ழான் குஸ்தவ் (1813-1892) — 318.
கூச் [Gooch], டி. — 234.
கெனே [Quesnay], பிரான்சுவா (1694-1774) — 130, 171, 248, 249, 250, 261, 451, 473, 474, 477, 488.
கேரி [Carey], ஹென்றி சார்லஸ் (1793-1879) — 468.
கொசாக் [Kozak], தியோஃபில் — 9.
சால்மர்ஸ் [Chalmers], தாமஸ் (1780-1847) — 201.
சிஸ்மொந்தி [Sismondi], ழான் ஷார்ல் லியொனார்டு சிமொந்த் டெ (1773-1842) — 25, 145, 182, 517, 583.
சீனியர் [Senior], நாசா வில்லியம் (1790-1894) — 580.
சுப்ரோவ் [Chuprov], ஏ. (1842-1908) — 70.
செல்லர் [Zeller ], ஜே. — 8.
சோயட்பீர் [Soetbeer], கியோர்கு அதோல்ஃப் (1814-1892) — 622.
டிரமண்டு [Drummond], வி. ஏ. டபிள்யூ. (1833-1907) — 685, 686, 687.
டுபோன் டெ நெமூர் [Dupont de Nemours], பியேர் சாமுவேல் (1739-1817) — 249.
டூக் [Tooke], தாமஸ் (1774-1858) — 147, 434, 627, 630, 631.
டைலர் [Tylor], எட்வர்டு பர்னெட் (1832-1917) — 580.
தலம்பர்ட் [Alembert d'], ழான் லெ ரோண்டு (1717-1783) — 103.
தாம்ப்சன் [Thompson], வில்லியம் (1785-1833) — 19, 424, 427.
துர்கோ [Turgot], ஆன் ராபர்ட் (1727-1781) — 249, 451, 475.
தெஸ்தூத் டெ திரேசி [Destutt de Tracy], அந்துவான் லூயி குளோடு, கோண்ட் (1754-1836) — 588, 637-49.
நியூமன் [Newman], சாமுவேல் பிலிப்ஸ் (1797-1842) — 601.
பாட்டர் [Potter], அ. — 244.
பாட்டர்சன் [Patterson], ராபர்ட் (1821-1886) — 301.
பார்ட்டன் [Barton], ஜான் (18ஆம் நூற்றாண்டின் முடிவு, 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம்) — 299, 300.
பிட்ஸ்மாரிஸ் [Fitzmaurice] — 233.
பிரீஸ்ட்லி [Priestley], ஜோசப் (1733-1804) — 21, 22, 25.
புருதோன் [Proudhon], பியேர் ஜோசப் (1809-1865) — 8, 19, 516.
பெய்லி [Bailey], சாமுவேல் (1791-1870) — 139, 673.
பெஸ்ஸமர் [Bessemer], ஹென்றி, சர் (1813-1898) — 318.
பேக்வெல் [Backwell], ராபர்ட் (1725-1795) — 315.
மக்குல்லோஹ் [MacCulloch], ஜான் ராம்சே (1789-1864) — 17, 328, 515.
மக்லியோடு [Macleod], ஹென்றி டன்னிங் (1821-1902) — 301.
மாப்ளி [Mably], காப்ரியல் பொன்னோ டெ (1709-1785) — 475.
மார்க்ஸ்-அவெலிங் [Marx-Aveling], எலினார் (டுஸ்ஸி) (1855-1898) — 8, 9.

மார்க்ஸ் [Marx], கார்ல் (1818-1883)- 1-28, 103, 200, 266, 374, 405, 456, 475, 546.

மார்க்ஸ் [Marx], ஜென்னி (1814-1881) — 28.

மால்தஸ் [Malthus], தாமஸ் ராபர்ட் (1766-1834) — 583.

மில் [Mill], ஜான் ஸ்டுவர்ட் (1806-1873) — 300.

மில் [Mill], ஜேம்ஸ் (1773-1836) — 328, 673.

முல்லர் [Muller], ஆதாம் ஹைன்றிஹ் (1779-1829) — 243.

மெயர் [Meyer], ருடோல்ஃப் ஹெர்மன் (1839-1899) — 8, 9.

ரஸ்ஸல் [Russell], ஜான், பிரபு (1792-1878) — 16.

ராம்சே [Ramsay], ஜார்ஜ் (1800-1871) — 207, 300, 515, 517, 573, 577, 578.

ராவ் [Rau], கார்ல் ஹைன்றிஹ் (1792-1870) — 10.

ராவென்ஸ்டோன் [Ravenstone], பிர்சி (இறப்பு 1830) — 20.

ரிக்கார்டோ [Ricardo], டேவிட் (1772-1823) — 15-26, 196, 283, 287, 289, 294, 295, 298, 299, 300, 391, 515, 637.

ரோட்பெர்ட்டஸ் [Rodbertus], ஜொஹான் கார்ல் (1805-1875) — 8-12, 14-21, 24, 25, 543.

ரோஷர் [Roscher], வில்ஹெல்ம் (1817-1894) — 492.

ரோஸ்கோ [Roscoe], ஹென்றி என்ஃபீல்டு, சர் (1833-1915) — 21.

லவலேய் [Laveleye], எமிலி லுயீ விக்டர் டெ (1822-1892) — 323.

லவாசீ [Lavoisier], அந்துவான் லாரென் (1743-1794) — 22, 23, 25.

லவெர்ன் [Lavergne], லியோன்ஸ் டெ (1809-1880) — 315.

லஸ்ஸால் [Lassalle], பெர்டினாண்டு (1825-1864) — 10.

லார்டுனர் [Lardner], டயோனிசியஸ் (1793-1859) — 222, 223, 233, 235, 236, 237.

லாலோர் [Lalor], ஜான் (1814-1856) — 182, 185, 186.

லிங்கே [Linguet], சைமன் நிக்கோலஸ் ஹென்றி (1736-1794) — 475.

லிஸ்ட் [List], பிரெடெரிக் (1789-1846) — 10.

லெ திரொஸ்னே [Le Trosne], குயிலாம் பிரான்சுவா (1728-1780) — 249.

வில்லியம்ஸ் [Williams], ஆர். பி. — 221.

வேலாண்டு [Wayland], பிரான்சிஸ் (1796-1865) — 297.

ஷாஃபிள் [Schaffle], ஆல்பர்ட் எபர் ஹார்டு பிரெடெரிக் (1831-1903) — 9, 677.

ஷீல் [Scheele], கார்ல் வில்ஹெல்ம் (1742-1786) — 21, 22.

ஷெர்பூலியே [Cherbuliez], அந்துவான் எலிசே (1797-1869) — 517.

ஷொர்லெமர் [Schorlemmer], கார்ல் (1834-1892) — 21.

ஸ்க்ரோப் [Scrope], ஜார்ஜ ஜூலியஸ் புலே (1797-1876) — 244.

ஸ்டர்ராக் [Sturrock], ஆர்ச்சிபால்டு — 234.

ஸ்டுவர்ட் [Steuart], ஜேம்ஸ் (1712-1780) — 12.

ஸ்டெய்ன் [Stein], லோரென்ஸ் ஃபோன் (1815-1890) — 211.

ஸ்டோர்ஹ் [Storch], ஹைன்றிஹ் பிரெடெரிக் (1766-1835) — 194, 516, 573, 574.

ஸ்மித் [Smith], ஆதாம் (1723-1790) — 4, 13, 14, 18, 20, 182, 218, 248-282, 285, 289, 300, 475-508, 513, 514, 515, 516, 540, 563, 573, 574, 578, 630, 631, 632, 648, 657.

ஸே [Say], ழான் பப்திஸ்ட் (1767-1832) — 196, 515, 516, 583.

ஹாட்ஸ்கின் [Hodgskin], தாமஸ் (1787-1869) — 20, 322.

ஹோல்ஸ்வொர்த் [Holdsworth], டபிள்யு. ஏ. — 225, 231.

# மூலதனம், இரண்டாம் பாகத்தில் மேற்கோளாய்த் தரப்பட்டுள்ள ஆதாரங்களின் அட்டவணை

## I. நூலாசிரியர்கள்


**ஆதாம்ஸ் [ADAMS]**, வி. பி. *சாலைகளும் இருப்புப் பாதைகளும். இவற்றின் பௌதிக, தார்மிக விளைவுகள்.* லண்டன், 1862.—222, 225.

**கார்பெட் [CORBET]**, தாமஸ். *தனியாட்களது செல்வத்தின் காரணங்கள், முறைகள் பற்றிய ஆய்வு; அல்லது வர்த்தகம், ஊக வாணிபம் தொடர்பான கோட்பாடுகள் பற்றிய விளக்கம்.* லண்டன், 1841.—180.

**கிர்ச்சோஃப் [KIRCHHOF]**, பிரெடெரிக். *Handbuch der landwirtschaftlichen Betriebslehre. Ein Leitfaden fur praktische Landwirthe zur zweckmassigen Einrichtung und Verwaltung der Landguter.* டிரெஸ்டென், 1852.—233, 319, 324-29, 339.

**குட் [GOOD]**, வி. வால்டர். *அரசியல், வேளாண்மை, வாணிபப் பொய்க் கூற்றுகள்.* லண்டன், 1866.—312, 313.

**குர்செல்-செனாவில் [COURCELLE-SENEUIL]**, ழூ. கு. *Traite theorique et pratique des entreprises industrielles, commercialles et agricoles ou Manuel des affaires.* இரண்டாம் பதிப்பு, பாரிஸ், 1857.—318.

**கெனே [QUESNAY]**, பிரான்சுவா. *Analyse du Tableau Economique.* In: *Collection des principaux Economistes.* V. II. *Physiocrates.* Partie I. Ed. Daire. பாரிஸ், 1846.—130, 171, 249, 295, 451, 474, 488.

**சால்மர்ஸ் [CHALMERS]**, தாமஸ். *சமுதாயத்தின் நல்லொழுக்க நிலை மற்றும் நல்லொழுக்க வாய்ப்புகள் தொடர்பாக அரசியல் பொருளாதாரம் பற்றி.* இரண்டாம் பதிப்பு, 1832.—201.

**சிஸ்மொந்தி [SISMONDI]**, ழா.ஷா.லி. சிமொந்த் டெ. *Nouveaux Principes d'Economie Politique ou de la Richesse dans ses Rapports avec la Population.* பாகம் I. பாரிஸ், 1819.—25, 146.

**சீனியர் [SENIOR]**, நாசா வில்லியம். *Principes Foundamentaux de l'Economie Politique,* Trad. J. Arrivabene. பாரிஸ், 1836.—580.

**சுப்ரோவ் [CHUPROV]**, ஏ. *இருப்புப் பாதை நிர்மாணம்.* பகுதி I. மாஸ்கோ, 1875.—70.

**சோயட்பீர் [SOETBEER]**, அதோல்ஃப். *Edelmetall-Produktion und Werthverhaltniss zwischen Gold und Silber seit der Entdeckung Amerika's bis zur Gegenwart.* Ergangzungschaft Nr. 75 zu "Petermann's Mitteilungen." கோதா, 1879.—622.

**டுபோன் டெ நெமூர் [DUPONT DE NEMOURS]**, பியேர் சாமுவேல். *Maximes du docteur Quesnay, ou Resume de ses principes d'economie sociale.* In: *Collection des principaux Economistes.* V. II. *Physiocrates.* பகுதி I, தாரே பதிப்பு. பாரிஸ், 1846.—249.

**டுக் [TOOKE]**, தாமஸ். *செலாவணிக் கொள்கை பற்றிய ஓர் ஆய்வு; விலைகளோடு செலாவணிக்குள்ள தொடர்பும், பண வெளியீட்டை வங்கித் தொழிலிலிருந்து பிரிப்பதன் உசிதமும்.* லண்டன், 1844.—631.

**டைலர் [TYLOR]**, எ. ப. *மனித குலத்தின் ஆரம்ப கால வரலாறு மற்றும் நாகரிகத்தின் வளர்ச்சி தொடர்பான*

ஆராய்ச்சிகள். லண்டன், ஜான் முர்ரே, 1865.—580.

**தாம்ப்சன் [THOMPSON]**, வில்லியம். மனித இன்ப வாழ்வுக்கு மிகவும் ஏற்றவையான செல்வ வினியோகக் கோட்பாடுகள் பற்றிய ஆய்வு. லண்டன், 1850.—19, 424-27.

**துர்கோ [TURGOT]**, ஆ. ரா. *Reflexions sur la formation et la distribution des richesses:* In: *Oeuvres*, தாரே பதிப்பு. பாகம் I. பாரிஸ், 1844. — 249, 451, 475.

**தெஸ்தூத் டெ திரேசி [DESTUTT DE TRACY]**, அந்துவான். *Elements d'ideologie. IVe et Ve Parties. Traite de la volonte et de ses effets.* பாரிஸ், 1826.—637-649.

**நியூமன் [NEWMAN]**, சாமுவேல் பிலிப்ஸ். அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள். ஆண்டோவர் மற்றும் நியூ யார்க், 1835.—201.

**பாட்டர் [POTTER]**, அ. அரசியல் பொருளாதாரம்: அதன் குறிக்கோள்களும் பயன்பாடுகளும் கோட்பாடுகளும்: அமெரிக்க மக்களின் நிலைமையுடன் தொடர்புபடுத்தி ஒரு பரிசீலனை, மாணவர்கள் உபயோகத்திற்காக ஒரு சுருக்கத்துடன். நியூ யார்க், 1840.—244.

**பார்ட்டன் [BARTON]**, ஜான். சமுதாயத்தில் உழைக்கும் வர்க்கங்களின் நிலைமையில் தாக்கம் உண்டாக்கும் காரணிகள் பற்றிய கருத்தோட்டங்கள். லண்டன், 1817.—299.

(**பெய்லி [BAILEY]**, சாமுவேல்). மதிப்பின் இயல்பு, அளவைகள், காரணங்கள் பற்றிய விமர்சன ஆய்வுரை: பிரதானமாக திரு ரிக்கார்டோவும் அவரைப் பின்பற்றுவோரும் எழுதியவை தொடர்பாக. அபிப்பிராயங்களின் அமைதலும் வெளியீடும் பற்றிய கட்டுரைகள் என்பதன் ஆசிரியர் எழுதியது. லண்டன், 1825.—139.

**மார்க்ஸ் [MARX]**, கார்ல். மூலதனம். அரசியல் பொருளாதார விமர்சனப் பகுப்பாய்வு. முதல் பாகம்.—2, 15, 18, 38, 88, 104, 147, 160, 164, 184, 200, 204, 213, 227, 237, 245, 266, 268, 283, 297, 403, 405, 422, 427, 437, 451, 464, 465, 475, 524, 546, 580, 667, 673.

—மூலதனம். அரசியல் பொருளாதார விமர்சனப் பகுப்பாய்வு. மூன்றாம் பாகம்.—3, 15, 24, 28.

—கூலியுழைப்பும் மூலதனமும். *Neue Rheinische Zeitung*, எண்: 264, 269. கொலோன், 1849.—10.

—தத்துவத்தின் வறுமை. திருவாளர் புருதோன் எழுதிய வறுமையின் தத்துவத்துக்கு பதில். பாரிஸ்-பிரசல்ஸ், 1847.—10, 19, 20, 29.

—உபரி-மதிப்புத் தத்துவங்கள்.—3, 25, 207.

—அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு. பெர்லின், 1859.—2, 7, 11, 13, 17, 27, 456.

**முல்லர் [MULLER]**, ஆதாம் ஹைன்றிஹ். *Die Elemente der Staatskunst 2. Theil*, பெர்லின், 1809.—243.

**மெயர் [MEYER]**, ருதோல்ஃப். *Der Emancipationskampf des vierten Standes.* முதல் பாகம். பெர்லின், 1874.—8-9.

**ராம்சே [RAMSAY]**, ஜார்ஜ். செல்வ வினியோகம் பற்றிய கட்டுரை. எடின்பரோ, 1836.—515-17, 577, 578.

**ரிக்கார்டோ [RICARDO]**, டேவிட். அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள், மற்றும் வரிவிதிப்பு. 3 ஆம் பதிப்பு. லண்டன், 1821.—196, 283, 294, 298, 299, 515.

**ரொட்பெர்ட்டஸ்-ஜகெட்செள [RODBERTUS-JAGETZOW]**, கார்ல். *Briefe und sozialpolitische Aufsatze.* Hrsg. von Dr. R. Meyer. பெர்லின், 1881.—9.

—*Das Kapital.* Hrsg. V. Theophil Kozak, பெர்லின், 1884.—9.

—*Einige Briefe von Dr. Rodbertus an J.Z.* In: *Zeitschrift fur die gesamte Staatswissenschaft.* Hrsg. von Fricker-

Leipzig, Schaffle-Stuttgart, A. Wagner-Berlin. Bd. 35. திழுபிஞ்சன், 1879.—8.

—*Soziale Briefe an von Kirchmann. Dritter Brief: Widerlegung der Ricardoschen Lehre von der Gruntrente und Bergrundung einer neuen Renten theorie.* பெர்லின், 1851.—11.

—*Zur Erkenntniss unsrer staatswirtschaftlichen Zustande.* Heft I. Neubrandenburg und Friedland, 1842.—8, 16, 27.

**ரோஸ்கோ** [ROSCOE], ஹெ. எ. மற்றும் **ஷொர்லெமர்** [SCHORLEMMER], கா. *Ausfuhrliches. Lehrbuch der Chemie,* முதல் பாகம், பிரான்ஷ்வீக், 1877.—21.

**லவேலெய்** [LAVELEYE], எமிலி டெ. *Essai sur l'Economie Rurale de la Belgique.* 2ஆம் பதிப்பு, பாரிஸ், பிரசல்ஸ், லீப்சிக், 1863.—323.

**லவெர்ன்** [LAVERGNE], லியோன்ஸ் டெ. *இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து இவற்றின் கிராமப் பொருளாதாரம்.* லண்டன், 1855.—315.

**லார்டுனர்** [LARDNER], டயோனிசியஸ். *இரயில் போக்குவரத்துப் பொருளாதாரம்: புதிய போக்குவரத்துக் கலை, அதன் மேலாண்மை, வாய்ப்புகள், வர்த்தக-நிதி-சமூக உறவுகள் பற்றிய ஆய்வுரை.* லண்டன், 1850.—222, 233-37.

**லெ திரொஸ்னே** [LE TROSNE], குயிலாம் பிரான்சுவா. *De l'Interet social.* In: *Collection des prinicopaux Economistes.* VII, *Physiocrates,* பிரிவு II, தாரே பதிப்பு. பாரிஸ், 1846.—249.

**வில்லியம்ஸ்** [WILLIAMS], ஆர். பி. *திரந்தரப் பாதையின் பராமரிப்பு மற்றும் புத்தாக்கம் குறித்து.* கட்டடப் பொறியாளர்கள் கழகத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகள், விவாதங்களின் சுருக்கத்துடன். V. XXV, லண்டன், 1866.—221, 235.

**வேலாண்டு** [WAYLAND], பிரான்சிஸ். *அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படை அமிசங்கள்.* பாஸ்டன், 1843.—297.

**ஸ்டோர்ஹ்** [STROCH], ஹென்றி. *Cours d'Economie Politique; ou Exposition des prinicipes qui determinent la prosperite des nations.* பாகம் 2, செயின்ட் பீட்டர்ஸ்பர்க், 1815.—516.

—*Considerations sur la nature du revenue national.* பாரிஸ், 1824.—516, 574.

**ஸ்மித்** [SMITH], ஆதாம். *நாடுகளின் செல்வம். இதன் இயல்பும் காரணங்களும் பற்றிய ஆய்வு.* அபர்தீன் பதிப்பு, 1848.—13, 182, 249-82, 475-87, 488-517, 630-32.

**ஸே** [SAY], ழான் பப்திஸ்ட். *Traite d'Economie Politique, ou simple Exposition de la Maniere dont se forment, se distribuent et se consomment les Richesses.* 3ஆம் பதிப்பு, இரண்டாம் பாகம். பாரிஸ், 1817.—196, 516.

**ஹாட்ஸ்கின்** [HODGSKIN], தாமஸ். *ஜனரஞ்சக அரசியல் பொருளாதாரம்.* லண்டன், 1827:—322.

**ஹோல்ஸ்வொர்த்** [HOLDSWORTH], டபிள்யூ. ஏ. *உடைமையாளரும் வாடகையாளரும் பற்றிய சட்டம்.* லண்டன், 1857.—225, 231.

## II. ஆசிரியர் பெயரில்லாதவை

*தேச இடர்ப்பாடுகளின் மூலகாரணமும் பரிகாரமும். அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகளிலிருந்து பெறப்படுவது. ஜான் ரஸ்ஸல் பிரபுவுக்கு ஒரு கடிதம்.* லண்டன், 1821.—16.

*மனவ தர்ம சாஸ்திரம் அல்லது குல்லுகர் உரையின் வழியமைந்த மனுநீதி; சமயத் துறையிலும் குடியியல் துறையிலுமான கடமைகளது இந்திய நெறிமுறையும் அடங்கியது. மூலத்திலிருந்து சொல்லுக்குச் சொல் அப்படியே மொழி பெயர்க்கப்பட்டது. முன்னுரை வழங்

கியவர் சர் வில்லியம் ஜோன்ஸ்; சமஸ்கிருத வாசகத்துடன் ஒத்துப் பார்த்தவர் திரு கிரேவ்ஸ் சாம்னி ஹாட்டன் எம். ஏ. எஃப். ஆர். எஸ்...கிழக்கிந்தியக் கல்லூரியில் இந்து இலக்கியப் பேராசிரியர். 3ஆம் பதிப்பு, சென்னை, 1863.—314.

## III. செய்தி ஏடுகள், காலவட்ட இதழ்கள்

எக்கானமிஸ்ட். லண்டன், 1847 மே 8.—177.
—1866 ஜூன் 16.—335.
—1866 ஜூன் 30.—336.
—1866 ஜூலை 7.—336.
மணி மார்க்கெட் ரெவ்யூ. 1867.—233.
Neue Rheinische Zeitung, Organ der Demokratie, கொலோன், 1848/49.—10.
Zeitschrift f.d. gesamte Staatswissenschaft. தியூபிஞ்சன், 1879.—8.

## IV. பாராளுமன்ற அறிக்கைகளும் ஏனைய அதிகாரபூர்வப் பிரசுரங்களும்

இரயில் போக்குவரத்து பற்றிய முடியரசு ஆணையம். ஆணையர்கள் முன்னால் பதிவான சாட்சியக் குறிப்புகள், லண்டன், 1867.—180, 221, 227, 234, 333-34.
கிழக்கிந்தியா (சென்னை-ஒரிசாப் பஞ்சம்). மதிப்பார்ந்த காமன்ஸ் சபை உரைக்கான தகவலறிக்கை. 1867 ஜூலை 4.—314.
கிழக்கிந்தியா (வங்கத்திலும் ஒரிசாவிலும் ஏற்பட்ட பஞ்சம்). வங்கத்திலும் ஒரிசாவிலும் ஏற்பட்ட பஞ்சம் தொடர்பான ஆய்வறிக்கைகளும் கடிதங்களும்; பஞ்ச ஆணையத்தின் அறிக்கையும் வங்கத் துணைநிலை ஆளுநர் மற்றும் இந்தியத் தலைமை ஆளுநரின் குறிப்புகளும் அடங்கியது. 1867 மே 31.—183.
கிழக்கிந்தியா (வங்கத்திலும் ஒரிசாவிலும் ஏற்பட்ட பஞ்சம்). பீகாரில் ஏற்பட்ட பஞ்சம் தொடர்பான ஆய்வறிக்கைகள்; திரு எஃப். ஆர். காக்கரெலின் அறிக்கையும் அடங்கியது. பிரிவு III. 1867 மே 31.—183.
மாட்சிமை தங்கிய அரசியாரின் தூதக, பிரதிநிதியகச் செயலர்கள் தாம் வசிக்கும் நாடுகளின் தொழில், வாணிபம் முதலானவை பற்றி அளித்த அறிக்கைகள். லண்டன். எண் 8 (1865).—320.
—எண் 14 (1879).—625, 685-86.
வங்கிச் சட்டங்கள் பற்றிய பொறுக்குக் குழுவின் அறிக்கை; குழுவின் நிகழ்ச்சிக் குறிப்புகள், சாட்சியக் குறிப்புகள், இணைப்பு, அட்டவணை ஆகியவற்றுடன். பகுதி I. அறிக்கையும் சாட்சியமும். 1857 ஜூலை 30.—310-11.

# பொருள் அட்டவணை

அடிமை முறை [Slavery]
— அடிமைகளை வாங்குவதும் விற்பதும் — 43;
— அடிமை முறையின் அடிப்படையிலான சரக்கு உற்பத்தி — 143-44, 149, 511;
— அடிமை முறையில் உழைப்புச் சக்தியை வாங்குவதற்காக முதலீடாகிற மூலதனம் — 635;
— அடிமை முறையும் இயற்கைப் பொருளாதாரமும் — 636;
— அடிமை முறையில் நேரடி வலுவந்தம் — 636.

அமெரிக்க ஐக்கிய அரசு [U.S.A.]
— உள்நாட்டுப் போர் — 183;
— இங்கிலாந்துக்குப் பருத்தி ஏற்றுமதி — 186;
— தங்க, வெள்ளி உற்பத்தி — 622;
— அடிமை முறை — 636.

அரசு மூலதனம் [State capital]
— தொழில் துறை முதலாளிகளின் பணிகளை அரசு செய்தல் — 128;
— முதலாளித்துவத்துக்கு முற்பட்ட அமைப்புகளில் அரசின் பொருளுற்பத்தி — 143-44, 309;
— நாட்டின் வருடாந்தர உற்பத்தி மீதான பாத்தியதைகளாக அரசாங்கப் பிணையங்கள் — 460.

அராபியர் [Arabs] மீது உலக வர்த்தகத்தின் தாக்கம் — 47-48.

அன்னிய வர்த்தகம் [Foreign trade] — பார்க்கவும்: வர்த்தகம்.

இங்கிலாந்து [England]
— இந்தியாவுடன் வர்த்தக, கடன் உறவுகள் — 417-18;
— இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் திரட்டப்பட்ட செல்வம் (தாம்ப்சன் கூறுவது) — 424-27.

இந்தியா [India]
— இந்தியா மீது முதலாளித்துவ உலக வாணிபத்தின் தாக்கம் — 47-48;
— இந்திய ரயத்துகளின் சரக்கு உற்பத்தி — 144;
— இந்திய கிராம சமுதாயத்தில் கணக்குப் பதிவு — 174;
— இந்தியப் பொருளாதாரத்தின் மீது அமெரிக்க உள்நாட்டுப் போரின் தாக்கம் — 183;
— 1866ஆம் வருடப் பஞ்சம் — 183;
— இந்தியாவில் பஞ்சமும் கால்நடை வளர்ப்பும் — 314-15;
— இங்கிலாந்துடன் வர்த்தக, கடன் உறவுகள் — 335-36;
— ஆங்கிலேய பருத்திப் பொருட்களும் நூலும் இந்தியாவுக்கு ஏற்றுமதி — 417.

இயந்திர சாதனம் [Machinery]
— இயந்திர சாதனத்தை ஈடுபடுத்துவதும் உழைப்பின் உற்பத்தித் திறனும் — 183.
— சரக்கு-மூலதனமாகவும் நிலை-மூலதனமாகவும் இயந்திர சாதனம் — 208-09, 251-54, 298;
— இயந்திர சாதனத்தினுடைய மதிப்பின் புரள்வுக்குள்ள விசேஷத் தன்மை — 213, 256;
— கௌரவ மதிப்பிறக்கம் — 222;
— இயந்திர சாதனத்தின் வெவ்வேறு பகுதிகள் தேய்மானமடைவதும் மாற்றீடு செய்யப்படுவதும் — 223-24, 594-95;
— மாற்றீட்டு நிதியைப் பயன்படுத்தி இயந்திர சாதனத்தை மேம்படுத்துதல் — 224-25;
— இயந்திர சாதனத்தை சுத்தம் செய்வதற்காகும் உழைப்பு — 226-27;
— மராமத்து வேலை — 227-29;
— இயந்திர சாதனப் பிரயோகமும் வேலைக் காலமும் — 311.
மேலும் பார்க்கவும்: உற்பத்திச் சாதனங்கள், தொழில் நுட்பம்.

இயற்கைப் பொருளாதாரம் [Natural economy]
— சிறு விவசாயியின் இயற்கைப் பொருளாதாரம் — 150;

— இயற்கைப் பொருளாதாரமும், பணப் பொருளாதாரமும், கடன்-செலாவணிப் பொருளாதாரமும் — 151;
— புராதன கிராம சமுதாயங்களின் இயற்கைப் பொருளாதாரம் — 635.

இரயில் போக்குவரத்து [Railways] — பார்க்கவும்: போக்குவரத்து.

இலாபம் [Profit]
— மதிப்பு விதியும் சராசரி இலாப வீதமும் — 27;
— ரிக்கார்டோவின் இலாபத் தத்துவம் — 295.

உண்டியல் [Bill of Exchange]
— உண்டியல் வடிவில் பண-மூலதனம் திரட்டப்படுதல் — 111.

உபரி-உழைப்பு — பார்க்கவும்: உபரி-மதிப்பு.

உபரி-உற்பத்தி — பார்க்கவும்: உபரி-மதிப்பு.

உபரி-மதிப்பு [Surplus-value]
— உபரி-மதிப்புத் தத்துவமே அரசியல் பொருளாதாரத்தின் சாரம். — 3, 10;
— உபரி-மதிப்பின் தோற்றுவாய் குறித்து வாணிப ஊக்கவாதிகள் — 12;
— உபரி-மதிப்பு தொடர்பான ரோட்பெர்ட்டஸ் கருத்துகளுக்கு விமர்சனம் — 11-12, 25-26;
— உபரி-மதிப்பு குறித்தும் அதன் தோற்றுவாய் குறித்தும் ஆ. ஸ்மித் — 12-14;
— உபரி-மதிப்பு குறித்து ரிக்கார்டோ — 15-20, 26-27, 294-96;
— சமதையின்றி தனதாக்கப்படும் மதிப்பின் பொது வடிவமாக உபரி-மதிப்பு — 13-15;
— இருபதாம், முப்பதாம் ஆண்டுகளைச் சேர்ந்த முதலாளித்துவத்துக்கு எதிரான ஆங்கில இலக்கியம் உபரி-மதிப்பு குறித்து சொல்வது — 16-17;
— மார்க்சின் உபரி-மதிப்புத் தத்துவம் அரசியல் பொருளாதாரத்தில் ஒரு புரட்சி — 20-24;
— சாமானிய மறுவுற்பத்தியில் உபரி-மதிப்பின் சுற்றோட்டம் — 87, 88-92;
— உபரி-மதிப்பை மூலதனமாக்குதல் — 103-09, 140, 156-57, 422, 669;
— உபரி-மதிப்பின் சுற்று — 114, 120-24, 127;
— வருவாயாகவும், திரட்டப்பட வேண்டிய பகுதியாகவும் உபரி-மதிப்பு பிரிதல் — 128, 669;
— மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடும் உபரி-மதிப்பின் ஆக்கமும் — 289-90, 298-99;
— வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் — 389, 398-99, 412-13;
— மாறும்-மூலதனத்தின் பருமனும் உபரி-மதிப்பின் அளவும் — 392, 393;
— உபரி-மதிப்பின் திரட்டலும் தொழிலின் விரிவாக்கமும் — 423;
— உபரி-மதிப்பின் வினியோகம் — 440, 543, 557;
— உபரி-மதிப்பின் ஈடேற்றத்திற்குத் தேவையான பணம் — 440-42, 554-55;
— உற்பத்தியின் காப்பீட்டு நிதி — 480-81;
— உற்பத்தி நிகழ்முறையின் அவசியக் கூறாக உபரி-மதிப்பின் தனதாக்கம் — 509;
— சாமானிய மறுவுற்பத்தியில் உபரி-மதிப்பு நுகரப்படுதல் — 525;
— உபரி-மதிப்பும் உள்ளுறைப் பண-மூலதனமும் — 652.

உயர்நிலை உலோகங்கள் [Precious metals] — பார்க்கவும்: தங்கம், பணம்.

உலகச் சந்தை [World-market ] – பார்க்கவும்: சுற்றோட்டம், சந்தை, வர்த்தகம்.

உழைப்பின் உற்பத்தித் திறன் [Productive power of labour]
— உழைப்பின் உற்பத்தித் திறனும் மதிப்பு உறவுகளில் தொடர்ச்சியான மாற்றமும் — 96;
— உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்படும் வளர்ச்சியும், உற்பத்தி-அடிக்கூறுகள் விலை மலிவாதலும் — 123;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையும், உழைப்பின் உற்பத்தித் திறனும் — 183-84;
— உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தும் வழிமுறைகள் — 183-84;
— உழைப்பின் உற்பத்தித் திறனும் உற்பத்திச் சாதனத் திரளும் — 183-84;

— உழைப்பின் உற்பத்தித் திறன் அது படைக்கும் மதிப்புக்கு எதிர் விகித மானது — 183-84;
— உழைப்பின் உற்பத்தித் திறனும் பண்டப் போக்குவரத்தும் — 193-94;
— உழைப்பின் உற்பத்தித் திறனும் விடாத்தொடரான பொருளுற்பத்தியும் — 371;
— உழைப்பின் உற்பத்தித் திறனும் உற்பத்தி விரிவாக்கமும் — 422;
— உழைப்பின் உற்பத்தித் திறனும் உற்பத்தியின் அளவுவீதமும் — 469;
— உழைப்பின் உற்பத்தித் திறனும் மூலதனத் திரட்டலும் — 469;
— உழைப்பின் உற்பத்தித் திறனும் மூலதனத்தினது அங்கக இயைபின் வளர்ச்சியும் — 684;
— உழைப்பின் உற்பத்தித் திறன் உற்பத்திப் பொருளின் அளவினை அதிகமாக்குகிறது, மதிப்பை அல்ல — 469.

உழைப்பு [Labour]
— உழைப்பும் மதிப்பின் படைப்பும் — 23, 26, 38-39, 509-10;
— உழைப்பும் உழைப்புச் சக்தியும் — 26-27, 152;
— கட்டாய உழைப்பு — 43, 309, 509-10, 635-36;
— உபரி-உழைப்பு என்பது மூலதனத்துக்காக இலவசமாய்ச் செய்யும் உழைப்பு — 49-50;
— முதலாளித்துவ சமுதாயமும் கூலி உழைப்பும் — 137-38, 152, 453-54;
— சுற்றோட்டத் துறையில் ஆற்றப்படும் உழைப்பின் தன்மை — 168-73;
— உழைப்பு நிகழ்முறை காலத்தால் அளவிடப்படுதல் — 392;
— உழைப்பின் இரட்டைத் தன்மை — 498, 506-07. மேலும் பார்க்கவும்: *உழைப்பின் உற்பத்தித் திறன்*.

உழைப்புச் சக்தி [Labour-power]
— உழைப்புச் சக்தியை வாங்குவதும் விற்பதும் முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கு இன்றியமையாத அடிப்படை நிபந்தனை — 23, 37-38, 47-48, 98, 107, 139, 149-52, 453-54, 464, 507-09;
— உழைப்புச் சக்தியின் மதிப்பு — 26, 152, 502, 504, 505-06;
— உழைப்புச் சக்தியிலும் உற்பத்திச் சாதனங்களிலும் செய்யப்படும் முதலீட்டின் விகிதம் — 35;
— உழைப்புச் சக்தி சரக்காக மாறுதல் — 39;
— உழைப்புச் சக்தியின் வாங்கல் விற்றலும், முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலான வர்க்க உறவுகளும் — 41;
— உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்தியும் தொழிலாளியின் நுகர்வும் — 46, 77-78, 121, 215, 269, 463;
— உழைப்புச் சக்தியை உற்பத்திச் சாதனங்களோடு இணைக்கும் விதம் சமுதாயத்தின் பொருளாதார அமைப்பைத் தீர்மானிக்கிறது — 48-49;
— உழைப்புச் சக்தி மூலதனமாக மாறுதல் — 49, 116, 149-52, 270, 489, 500, 502, 581;
— உழைப்புச் சக்தியும் மதிப்பின் தற்பெருக்கமும் — 49-50, 98, 278-79, 284-85;
— உழைப்புச் சக்தியும் விவசாய உற்பத்தியாளர் கூலித் தொழிலாளியாகப் பரிணமித்தலும் — 150-51;
— உழைப்புச் சக்தியை ஆதாம் ஸ்மித் திறனுடை-மூலதனத்தில் சேர்க்காது விலக்குதல் — 268-70, 277-80;
— கூலித் தொழிலாளி தமது உழைப்பை முதலாளிக்கு முன்னீடு செய்தல் — 286;
— திறனிலாத் தொழிலாளர்கள் — 542;
— வேளாண்மையில் உழைப்புச் சக்தியை ஈடுபடுத்துதல் — 596, 637. மேலும் பார்க்கவும்: *கூலித் தொழிலாளர்களின் சேமப் பட்டாளம்.*

*உழைப்புச் சாதனங்கள் (உழைப்புக் கருவிகள்)* [Instruments of labour] — பார்க்கவும்: *உற்பத்திச் சாதனங்கள்.*

*உற்பத்தி* [Production] - பார்க்கவும்: *முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை.*

*உற்பத்திக் காலம்* [Time of production]
— உற்பத்திக் காலமும் உழைப்பு நிகழ்முறைக்கு ஆகும் காலமும் — 158, 159, 160, 161, 162, 316-17;
— உற்பத்திக் காலமும் உற்பத்திச் சாதனங்கள் செயல்படும் காலமும் — 158-60;

— உற்பத்திக் காலமும் மூலதனத்தின் புரள்வு வேகமும் — 307, 317-18;
— விவசாயத்தில் உற்பத்திக் காலத்துக்கும் வேலைக் காலத்துக்கும் இடையிலான வேறுபாடு — 318-19, 320, 321-22;
— உற்பத்திக் காலமும் துண்டு மரங்களுக் கான மர வளர்ப்பும் — 323-24.

உற்பத்திச் சாதனங்கள் [Means of production]
— உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தி ஏனைய சரக்குகளின் உற்பத்தியிலிருந்து சமுதாய உழைப்புப் பிரிவினையின் காரணத்தால் விலகிப் போதல்— 45-47.
— உழைப்புச் சக்தியை உற்பத்திச் சாத னங்களோடு இணைக்கும் விதம் சமு தாயத்தின் பொருளாதார அமைப் பைத் தீர்மானித்தல் — 48-49;
— உழைப்புச் சாதனங்களின் மதிப்பு உற் பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படு தல் — 67, 204-06;
— உற்பத்திச் சாதனங்களும் உழைப்புச் சக்தியும் உழைப்பு நிகழ்முறையின் அடிக்கூறுகள் — 107, 213-14;
— உழைப்புச் சாதனங்களும் நிலை-மூல தனமும் — 207-09;
— உழைப்புச் சாதனங்கள் நிலையாக நீடித்திருக்கும் திறன் — 207-09;
— தசையுருவிலான உழைப்புச் சாதனங் களின் குணங்களை முதலாளித்துவப் பொருளாதார அறிஞர்கள் மூலதனத் தின் குணங்களோடு குழப்பிக் கொள் ளுதல் — 209-11;
— ஓரிடத்தில் நிலைத்திருக்கும் உழைப்புச் சாதனங்கள் — 211-12, 276-77;
— உழைப்புச் சாதனங்களிலான புரட்சி கள் — 222, 242;
— கூடுதல் பணச் செலவின்றி உழைப்புச் சாதனங்களை இன்னும் திறமையான முறையில் பயன்படுத்தல் — 468;
— துறை Iஇன் உற்பத்திப் பொருட்களும் வருவாயும் — 482-84, 485-86.

ஏகபோகம் [Monopoly]
— பெருவீத உற்பத்தி ஏகபோகத்துக்கு அடிப்படை — 140.

கடன்-செலாவணி [Credit]
— பணப் பொருளாதாரமும் கடன்-செலா வணிப் பொருளாதாரமும் — 151;
— கடன்-செலாவணியும் வழங்கலும் — 185-86;
— கடன்-செலாவணியும், மறுவுற்பத்தி யின் மெய்யான இயக்கம் மருமமாத லும் — 193;
— கடன்-செலாவணியின் வளர்ச்சி — 238, 309, 423, 457, 471;
— கடன்-செலாவணியின் வளர்ச்சியும் பணம் மூலதனமாகச் செயல்படுதலும் — 238, 663;
— கடன்-செலாவணியின் வளர்ச்சியும் பிறரது மூலதனத்தை முன்னீடு செய் தலும் — 311;
— கடன்-செலாவணியும் மூலதனக் குவிப்பும் — 312, 655;
— கடன்-செலாவணியும் வெவ்வேறு உண்டியல் மாற்றுக் காலக்கெடு களும் — 335-36;
— பணம் ஓடுவதும் மீள்வதுமான நிகழ்வு களைக் கடன்-செலாவணியின் துணைச் சாதனங்களாகப் பயன்படுத்துதல் — 636-37;
— கடன்-செலாவணியும் உலோகப் பணச் சுற்றோட்டமும் — 665-66.

கடன்-செலாவணி அமைப்பு [Credit system] — பார்க்கவும்: கடன்-செலா வணி.

காப்பீடு [Insurance]
— காப்பீட்டு நிறுமங்கள் — 178;
— அழிவுகளுக்கானக் காப்பீடு — 231-32;
— மறுவுற்பத்திக்கான காப்பீட்டு நிதி — 480-81.

கால்நடை வளர்ப்பு [Cattle-breeding] — 312-13, 315, 325-26, 327-28;
— கால்நடை வளர்ப்புத் தொழிலில் உற் பத்தியை விரிவாக்க மாற்றீட்டு நிதி யைப் பயன்படுத்துதல் — 225;
— கால்நடை வளர்ப்பில் வேலைக் காலத் தைக் குறைக்கும் வழி — 315, 321, 322-23, 324-25.
மேலும் பார்க்கவும்: வேளாண்மை.

கிராம சமுதாயம் [Community]
— ருஷ்யாவில் கிராம சமுதாயமும் கூலி யுழைப்பும் — 44;
— கிராம சமுதாயத்தின் சரக்கு உற்பத்தி — 144, 149, 510-11;
— புராதன இந்திய கிராம சமுதாயங் களில் கணக்குப் பதிவு — 174;

— ஆதிகாலச் சமுதாயங்களின் • இயற்கைப் பொருளாதாரம் — 635.

குவிப்பு [Concentration]

— குவிப்பும் கணக்குப் பதிவுச் செலவுகளும் — 174-75;
— இருப்புகளின் சமுதாயக் குவிப்பு — 186;
— போக்குவரத்துத் தொழிலின் குவிப்பு — 195;
— வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ சகாப்தத்தில் குவிப்பு — 309, 333;
— குவிப்பும் கடன்-செலாவணியும் — 312, 655;
— உற்பத்தி மையங்கள், சந்தைகள் ஆகியவற்றின் குவிப்பு — 332.
— வங்கிகளின் வடிவில் பண-மூலதனக் குவிப்பு — 546.

கூட்டுப் பங்கு மூலதனம் [Joint-stock capital]

— சமுதாய மூலதனத்தின் பகுதியாக கூட்டுப் பங்கு மூலதனம் — 127-28, 573;
— பங்குகளின் தன்மை — 212, 460;
— முதலாளித்துவக் குழுமங்களாக கூட்டுப் பங்கு நிறுமங்கள் — 309, 633;
— வீடுகட்டும் கூட்டுப் பங்கு நிறுமங்கள் — 309-10;
— கூட்டுப் பங்கு நிறுமங்களும் பணச் சந்தையும் — 471;
— பங்குகளின் வடிவில் உடைமையுரிமைகளின் சுற்றோட்டம் — 212, 277.

கூட்டு-வேலை [Co-operation]

— கூட்டு-வேலையும் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரித்தலும் — 184;
— கூட்டு-வேலையும் வேலைக் காலமும் — 311.

கூலி [Wages]

— கூலி குறித்து அறிவார்ந்த முதலாவது தத்துவத்தை மார்க்ஸ் வகுத்தளித்தல் — 24;
— கூலியும் உற்பத்திப் பொருளின் மதிப்பும் — 26, 93;
— உழைப்புச் சக்தியின் விலை மாறுவேடம் பூண்ட வடிவமாகக் கூலி — 39, 149;
— தொழிலாளியினது வருங்கால உழைப்பின் மாறிய வடிவமாகக் கூலி — 94-95.
— கூலியிலிருந்து மிச்சம் பிடித்தல் — 154;
— கூலியும் விலைகளும் — 447-50;
— கூலியும் சுரண்டல் மேலும் மும்முரமாதலும் — 467;
— தொழிலாளியின் வருவாயினது வடிவமாகக் கூலி — 512;
— கூலிக்காக முன்னீடு செய்யப்படும் பணம் சுற்றோட்டத்தில் வகிக்கும் பங்கு — 547-48, 635;
— இயல்பான சராசரிக்கும் கீழே கூலி குறைந்து போதல் — 676.

கூலித் தொழிலாளர்களின் சேமப் பட்டாளம் [Reserve army of wage-labourers] — 415, 542, 667, 683.
மேலும் பார்க்கவும்: உழைப்புச் சக்தி.

சகடம் [Cycle]

— முன்னீடு செய்யப்படும் மூலதன மதிப்பினது புரள்வுகளின் சகடம் — 239-329;
— நிலை-மூலதனப் புரள்வுகளின் சகடமும் நெருக்கடிகளும் — 242-43;
— சகடத்தின் அடுத்தடுத்த கட்டங்கள் — 243;
— வேளாண்மையில் புரள்வுச் சகடம் — 328-29;
— தொழில் துறைச் சகடத்தில் வருடாந்தர உற்பத்தியின் ஏற்ற இறக்கங்கள் — 692.
மேலும் பார்க்கவும்: நெருக்கடிகள்.

சந்தை [Market]

— உலகச் சந்தையும் தொழில் துறை மூலதனத்தின் சுற்றோட்டமும் — 144;
— உலகச் சந்தையின் வளர்ச்சியும் சரக்கிருப்புகளின் பருமனும் — 186;
— சந்தையும் விற்றலுக்காகும் காலமும் — 330-31;
— போக்குவரத்தும் சந்தையின் குவிப்பும் — 333;
— போக்குவரத்தும் உலகச் சந்தையும் — 334;
— பணச் சந்தையில் நெருக்கடிகளும் உற்பத்தி நிகழ்முறையில் அசாதாரண நிலைமைகளும் — 418.
மேலும் பார்க்கவும்: வர்த்தகம்.

சமுதாய உழைப்புப் பிரிவினை [Division of social labour]

— சமுதாய உழைப்புப் பிரிவினையும் சரக்கு உற்பத்தியும் — 47;

— சமுதாய உழைப்புப் பிரிவினையும் உழைப்பின் உற்பத்தித் திறனிலான அதிகரிப்பும் — 184;
— சமுதாய உழைப்புப் பிரிவினையும் வேலைக் காலமும் — 311.

சமுதாய உற்பத்தி [Social product]
— சமுதாய உற்பத்தியின் இரு துறைகள் — 485, 522-23;
— சமுதாய உற்பத்தியின் அடக்கக் கூறுகளை மதிப்பு வகையிலும் பொருள் வகையிலும் மாற்றீடு செய்தல் — 519, 520;
— சமுதாய உற்பத்தியின் இயைபு — 568-70;
— மூலதனமாகவும் வருவாயாகவும் சமுதாய உற்பத்திப் பண்டம் — 577.

சமுதாயமயமாக்கப்பட்ட பொருளுற்பத்தி [Socialised production] — பார்க்கவும்: பொதுவுடைமைச் சமுதாயம்.

சரக்கிருப்பு [Supply]
— சரக்கிருப்பின் உருவாக்கம் — 179-86;
— முறையான சரக்கிருப்பு — 186-93;
— திறனுடைச் சரக்கிருப்பும் உற்பத்தி நிகழ்முறையின் தொடர்ச்சியும் — 158-59, 179, 186, 246;
— சரக்கு-மூலதனமும் சரக்கிருப்பும் — 179, 180, 186-89, 246;
— சரக்கிருப்பின் உருவாக்கம் குறித்து ஆதாம் ஸ்மித் — 182;
— சரக்கிருப்பின் வடிவங்கள் — 182;
— சரக்கிருப்பும் நுகர்வுப் பண்ட நிதியமும் — 182;
— சரக்கிருப்பின் பரிமாணம் — 184-86, 190-91;
— சரக்கிருப்பின் உருவாக்கத்துக்கும் பாதுகாப்புக்குமானச் செலவுகள் — 186-93;
— சரக்கிருப்பின் சமுதாயக் குவிப்பு — 187;
— சரக்கிருப்பின் உருவாக்கமும் சரக்குச் சுற்றோட்டமும் — 187-90;
— சரக்கிருப்பும் சுற்றோட்டத்திலான தேக்கமும் — 191, 192-93;
— சரக்கிருப்பின் புத்தாக்கம் — 191-92;
— சமுதாயமயமாக்கப்பட்ட பொருளுற்பத்தியில் சரக்கிருப்பு — 621;
— சரக்கிருப்பின் அளவு உப்பிப் பெருகுதல் — 193;
— சரக்கிருப்பின் பரிமாணமும் வாங்கல்கள் திரும்பத் திரும்ப நடைபெறுதலும் — 246;
— வேளாண்மையில் சரக்கிருப்பு — 324-26;
— திறனுடைச் சரக்கிருப்பின் அளவும் மூலதனப் புரள்வும் — 326-27;
— வேலைக் காலமும் திறனுடைச் சரக்கிருப்பும் — 382-83;
— வருடாந்தர மறுவுற்பத்தியையும் சரக்கிருப்பையும் பகுத்தாய்தல் — 671-73.

சரக்கு [Commodity]
— சரக்கும் பணமும் — 23, 38, 62-63, 467;
— முதலாளித்துவத்தில் சரக்கு உற்பத்தி சர்வப் பொதுவானதாதல் — 44, 48, 151, 176-77, 186-87, 658, 667.
— சரக்கும் சமுதாய உழைப்புப் பிரிவினையும் — 47;
— சரக்கு உற்பத்தி முதலாளித்துவப் பொருளுற்பத்தியாக மாறுதல் — 47, 144;
— முதலாளித்துவ வழியில் உற்பத்தி செய்யப்படும் சரக்கும் உபரி-மதிப்பும் — 49-50;
— சரக்கு-மூலதனத்தின் கூறாகிற சரக்கு — 49-50, 52-53, 122-23, 187;
— சரக்கு உற்பத்தியில் பணச் சேர்ப்பு — 110-11;
— முதலாளித்துவத்துக்கு முற்பட்ட பொருளுற்பத்தி முறைகளில் சரக்கு உற்பத்தி — 143-44, 509-10;
— சுயேச்சையான சிறு சரக்கு உற்பத்தியாளர்களிடையில் வாங்கலும் விற்றலும் — 169-70, 171-72;
— ஆதாம் ஸ்மித் பார்வையில் சரக்கு உற்பத்தியும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியும் — 513-14.
மேலும் பார்க்கவும்: சரக்கு-மூலதனம்.

சரக்கு உற்பத்தி [Commodity production] — பார்க்கவும்: சரக்கு.

சரக்கு-மூலதனம் [Commodity-capital]
— உபரி-மதிப்பை உற்பத்தி செய்யும் மூலதன-மதிப்பின் நிலவல் வடிவமாக சரக்கு-மூலதனம் — 50, 55, 62-63, 122;

— சரக்கு-மூலதனத்தின் ஈடேற்றமும், உபரி-மதிப்பும் மூலதன-மதிப்பும் வெவ்வேறாகப் பிரிதலும் — 56, 115-16, 121-22;
— சரக்கு-மூலதனமும் பண-மூலதனமும் — 62-63, 106-07;
— தொழில் துறை மூலதனத்தின் பணி வழி வடிவமாக சரக்கு-மூலதனம் — 66, 71-72, 106-07;
— சரக்கு-மூலதனச் சுற்றின் பொதுச் சூத்திரம் — 114, 124-25;
— சரக்கு-மூலதனத்தின் சுற்றும் உபரி-மதிப்பின் சுற்றும் — 115-16, 122, 127;
— சரக்கு-மூலதனமும், விலைக்கும் மதிப்புக்கும் இடையிலான வேறுபாடும் — 120;
— சரக்கு-மூலதனத்தின் சுற்றும் அதன் மறுவுற்பத்தியும் — 122;
— நுகர்வானது சரக்கு-மூலதனச் சுற்றுக்கு இன்றியமையா நிலைமையாதல் — 122-23, 128-29, 518-19;
— சரக்கு-மூலதனத்தின் மதிப்பிறக்கம் — 142-43;
— சரக்கு-மூலதனமும் சரக்கிருப்பும் — 180, 182, 187;
— சரக்கு-மூலதனத்தின் துரித வளர்ச்சி — 667.

மேலும் பார்க்கவும்: சரக்கு.

*சரக்கூதிய முறை* [Truck system] — 677, 686.

*சாமானிய மறுவுற்பத்தி* [Simple reproduction]

— சாமானிய மறுவுற்பத்தியும் முதலாளியின் சொந்த நுகர்வும் — 87, 92, 428, 525, 542, 544;
— சாமானிய மறுவுற்பத்தியும் உபரி-மதிப்பின் சுற்றோட்டமும் — 86, 88-92;
— சாமானிய மறுவுற்பத்தியும் புதிய மாறா-மூலதன மதிப்பின் உற்பத்தியும் — 487-88, 563-64, 579-80;
— மூலதனத் திரட்டலின் மெய்யான காரணியாக சாமானிய மறுவுற்பத்தி — 522;
— சாமானிய மறுவுற்பத்தியும் சமுதாயப் பொருளுற்பத்தியின் இரு துறைகளும் — 522;
— சாமானிய மறுவுற்பத்தியின் குறிவரை — 524-26;
— சாமானிய மறுவுற்பத்தியில் விகிதாசாரங்கள் — 531, 539, 563, 570-71, 616-17, 689-90;
— சாமானிய மறுவுற்பத்தியும் நெருக்கடிகளும் — 619-20;
— சாமானிய மறுவுற்பத்தியும் பணத்தை சேமித்து வைத்தலும் — 627;
— சாமானிய மறுவுற்பத்தியும் விரிதிற மறுவுற்பத்தியும் — 660, 672-73.

*சீனா* [China]

— சீனத்தின் மீது முதலாளித்துவ உலக வர்த்தகத்தின் தாக்கம் — 47-48;
— சீனக் கைவினைஞர்கள் — 133;
— சீன விவசாயிகளின் சரக்கு உற்பத்தி — 144.

*சுழல்-மூலதனம்* [Circulating capital]

— சுழல்-மூலதனத்தின் பண வடிவம் — 112, 372;
— மூலதன-மதிப்பின் சுற்றோட்டம் — 205-06, 218;
— சுழல்-மூலதனத்துக்கும் நிலை-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடு — 206, 209-10, 218-19, 248-49, 256-58, 262-63, 368;
— சுழல்-மூலதனத்தின் முன்னீட்டுக் காலம் — 216;
— சுழல்-மூலதனம் கூடுதலாக முதலீடு செய்யப்படுதல் — 307, 314, 344;
— வேளாண்மையில் புரள்வுக் காலத்தைக் குறைக்கும் வழிமுறைகள் — 322-23;
— சுழல்-மூலதனத்தின் அளவிலான மாற்றங்கள் — 342-43;
— சுழல்-மூலதனத்தின் மாறாப் பகுதி, மாறும் பகுதி இவற்றின் புரள்வு — 387-88.

*சுற்றோட்டக் காலம்* [Time of Circulation]

— சுற்றோட்டக் காலமும் திறனுடை-மூலதனமும் — 160-61;
— சுற்றோட்டக் காலமும் விற்பனையும் — 164-65, 330-31;
— சுற்றோட்டக் காலமும் விலைகளில் ஏற்படும் மாற்றமும் — 336.

மேலும் பார்க்கவும்: வாங்கலும் விற்றலும்.

*சுற்றோட்டச் செலவுகள்* [Costs of circulation]
— சுற்றோட்டச் செலவுகளும் சரக்குகளின் மதிப்பும் — *172-73, 177-78, 188-89, 194;*
— சுற்றோட்டச் செலவுகளும் வர்த்தகத் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் சுரண்டப்படுவதும் — *172-73;*
— கணக்குப் பதிவுக்காகும் செலவு — *173-76;*
— பணமும் சுற்றோட்டச் செலவுகளும் — *176-77, 456-57;*
— திறனிலாச் செலவுகளும் தனிப்பட்ட முதலாளிகள் செல்வந்தராவதும் — *178;*
— சுற்றோட்டச் செலவுகளும் சரக்கிருப்பும் — *179, 180, 187, 192;*
— திறனிலாச் செலவுகளின் மாற்றீடு — *194;*
— போக்குவரத்துச் செலவுகளின் திறனுடைத் தன்மை — *195-96.*

*சுற்றோட்டம்* [Circulation]
— சரக்கு உற்பத்தியும் சரக்குச் சுற்றோட்டமும் — *44;*
— முதலாளித்துவத்தில் சரக்குகளின் சுற்றோட்டம் — *44, 46, 79, 164-65, 514;*
— உபரி-மதிப்பு, மூலதன-மதிப்பு இவற்றின் சுற்றோட்டம் — *55-56, 58-59, 88-90;*
— பொதுவான சரக்குச் சுற்றோட்டத்தின் பகுதியாக மூலதனச் சுற்றோட்டம் — *78-79, 91-92;*
— திறனுடை-மூலதனத்தின் சுற்றுக்குள் நடைபெறும் சுற்றோட்டம் — *84-85;*
— சாமானிய மறுவுற்பத்தியில் உபரி-மதிப்பின் சுற்றோட்டம் — *86, 88, 90-91;*
— சுற்றோட்டமும் வாங்கலுக்கும் கொடுப்புக்குமான நிதியின் உருவாக்கமும் — *101-02;*
— பண-மூலதனமும் சுற்றோட்ட வேகமும் — *143;*
— தொழில் துறை மூலதனத்தின் சுற்றோட்டமும் உலகச் சந்தையும் — *144;*
— சுற்றோட்ட நிகழ்முறையும் சரக்கு உற்பத்தியின் வளர்ச்சியும் — *144-45;*
— சுற்றோட்டத்துக்குத் தேவையான பணத்தின் அளவு — *147-48, 375, 428-29, 434, 437, 450, 454-55;*
— மறுவுற்பத்தி நிகழ்முறையின் ஒரு கட்டமாக சுற்றோட்டம் — *164-65, 167, 462;*
— சுற்றோட்டமும் சரக்கிருப்பின் உருவாக்கமும் — *188, 189, 192-93;*
— உழைப்புச் சாதனங்களின் வடிவிலான நிலை-மூலதன மதிப்புப் பகுதியின் சுற்றோட்டம் — *205-06, 212;*
— சரக்கு-மூலதனமும் பண-மூலதனமும் சுற்றோட்ட மூலதனமாதல் — *252, 254-55, 270;*
— போக்குவரத்துச் சாதனங்களில் மேம்பாடும் சுற்றோட்டக் காலமும் — *334, 335-36;*
— பணத்தின் சுற்றோட்டமும் கூலியும் — *547-48, 635;*
— கடன்-செலாவணியும் உலோகப் பணச் சுற்றோட்டமும் — *666.*
மேலும் பார்க்கவும்: *பரிவர்த்தனை.*

*சுற்றோட்ட மூலதனம்* [Capital of circulation]
— திறனுடை-மூலதனத்துக்கு மாறாக சுற்றோட்ட மூலதனம் — *252, 257-58, 262, 268, 272.*
மேலும் பார்க்கவும்: *சுற்றோட்டம், சரக்கு-மூலதனம், பண-மூலதனம்.*

*சூயஸ் கால்வாய்* [Suez canal]
— சூயஸ் கால்வாயும் உலக வர்த்தகமும் — *336.*

*சேம நிதி* [Reserve fund]
— பணத் திரட்டல் நிதி சேம நிதியாதல் — *112;*
— சேம நிதியும் உபரி-மதிப்பும் — *113, 457-58;*
— சேம நிதியும் வங்கிச் சேமிப்பும் — *453;*

*சேம மூலதனம்* [Reserve-capital] — பார்க்கவும்: *சரக்கிருப்பு.*

*சேமிப்பு* [Storage]
— சேமிப்புச் செலவுகள் — *160, 177-78, 330.*
மேலும் பார்க்கவும்: *சரக்கிருப்பு.*

*சேர்ப்பு* [Hoard] — பார்க்கவும்: *பணம்.*

*தங்கம்* [Gold]

— தங்க உற்பத்தி — *64, 429-30, 622-24;*

— உயர்நிலை உலோகங்களின் உற்பத்தியில் மூலதனச் சுற்று — *71, 430-31;*

— சுற்றோட்ட ஊடகங்கள் என்ற முறையில் தங்கத்தையும் வெள்ளியையும் உற்பத்தி செய்வதற்காகச் செலவாகும் உழைப்புச் சக்தியும் சமுதாய உற்பத்திச் சாதனங்களும்.— *456-57, 470;*

— தங்கம், வெள்ளியின் வருடாந்தர மறுவுற்பத்தி — *622.*

மேலும் பார்க்கவும்: *பணம்.*

*திறனுடை-மூலதனம்* [Productive capital]

— திறனுடை-மூலதனமும், மதிப்பும் உபரி-மதிப்பும் உற்பத்தியாதலும் — *36-37, 66, 99;*

— உற்பத்தி-அடிக்கூறுகளின் பங்கீடு — *43;*

— திறனுடை-மூலதனச் சுற்றின் பொதுச் சூத்திரம் — *84, 113;*

— திறனுடை-நுகர்வும் திறனுடை-மூலதனச் சுற்றும் — *98-99;*

— விரிதிற மறுவுற்பத்திக்கான சூத்திரம் — *105;*

— திறனுடை-மூலதனம் நிலை-மூலதனமாகவும் சுழல்-மூலதனமாகவும் பிரிதல் — *206, 217-18, 248-49, 256, 258-59, 264-66;*

— திறனுடை-மூலதனமல்லாத சுற்றோட்ட மூலதனம் — *249-50, 252, 254-55, 266;*

— திறனுடை-மூலதனத்தின் வெவ்வேறு கூறுகளும் உழைப்பின் நிகழ்முறையின் போது வெவ்வேறு விதமாக நடந்து கொள்ளுதல் — *256-58;*

— ஓயாது பணியாற்றும் திறனுடை-மூலதனத்தின் அளவு — *355-56;*

— கூடுதல் பண-மூலதனம் இல்லாமலே. திறனுடை-மூலதனக் கூறுகள் பல்கிப் பெருகுதல் — *467-68;*

— கூடுதல் திறனுடை-மூலதனத்தின் உற்பத்தி — *661-62.*

*தேய்மானம்* [Wear and tear]

— தேய்மானமும் மராமத்துச் செலவுகளும் — *155-56;*

— உற்பத்திச் சாதனங்களின் கௌரவ மதிப்பிறக்கம் — *222, 242;*

— ஈட்டு நிதி — *234-38;*

— நிலை-மூலதனத்தின் தேய்மானமும் உற்பத்திப் பொருட்களின் விலையும் — *259;*

— தேய்மானத்தின் மாற்றீடு — *599-605.*

மேலும் பார்க்கவும்: *மாற்றீடு.*

*தொழில் துறை மூலதனம்* [Industrial capital]

— தொழில் துறை மூலதன இலக்கணமும் இம்மூலதனச் சுற்றின் வகைகளும் — *66, 105-06;*

— தொழில் துறை மூலதனமும் பொருளுற்பத்தியின் முதலாளித்துவத் தன்மையும் — *71-72, 79;*

— தொழில் துறை மூலதனமும் ஏனைய மூலதன வகைகளும் — *71-72;*

— தொழில் துறை மூலதனமும் பண-மூலதனமும் — *140;*

— தொழில் துறை மூலதனத்தின் சுற்றும் சரக்குச் சுற்றோட்டமும் — *143-45;*

— உலகச் சந்தையும் தொழில் துறை மூலதனத்தின் சுற்றோட்டமும் — *144, 149-50;*

— தொழில் துறை மூலதனத்தின் பருமன் மாறாமலே அதன் செயற்பாடு விரிவடைதல் — *673-74.*

*தொழில் நுட்பம்* [Technique]

— முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையும் தொழில் நுட்பப் புரட்சிகளும் — *49, 72, 138, 222, 242;*

— தொழில் நுட்பமும் உற்பத்தி விரிவாக்கமும் — *103;*

— தொழில்நுட்ப மேம்பாடுகளைப் புகுத்தலும் மூலதனத் திரட்டலும் — *156-57.*

மேலும் பார்க்கவும்: *இயந்திர சாதனம், உற்பத்தி சாதனம்*

*தொழிலாளி* [Worker], *தொழிலாளி வர்க்கம்* [Working class] — *பார்க்கவும்: வர்க்கங்கள், உழைப்புச் சக்தி.*

*தொழிற் சங்கங்கள்* [Trade unions] — *449.*

*நில-வாடகை* [Ground rent] — *பார்க்கவும்: வாடகை.*

*நிலவுடைமை* [Landownership]

— ருஷ்யாவில் பண்ணையடிமை முறையின் ஒழிப்புக்குப் பிறகு நிலவுடைமை — *44;*

— நெடுங்காலத்துக்கு முன்பே நிலவுடைமையை சமுதாயம் மீட்டுக் கொண்டு விட்டது — 469.

*நிலை-மூலதனம்* [Fixed capital]

— நிலை-மூலதனச் சுற்றோட்டத்தின் விசேஷத் தன்மைகள் - 204-05, 207 217-18, 367-68;
— நிலை-மூலதனமும் உழைப்புச் சாதனங்களும் — 207;
— உழைப்புச் சாதனங்களின் தசையுருவில் உள்ளார்ந்துள்ள குணங்கள் முதலாளித்துவப் பொருளாதார அறிஞர்களின் உள்ளத்தில் நிலை-மூலதனத்துக்குரிய குணங்களோடு குழம்பிப் போதல் — 209-10;
— நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடு — 204-05, 209-10, 217-18, 245-46, 256, 262-63, 267, 367;
— நிலை-மூலதனமும் ஓரிடத்தில் நிலைத்து விடும் உழைப்புச் சாதனங்களும் — 211, 276-77;
— உற்பத்தியின் அளவுவீதமும் நிலை-மூலதனத்தின் பருமனும் — 216;
— நிலை-மூலதன மராமத்துகள் — 226-28;
— நிலை-மூலதனத்தின் புரள்வுக் காலமும் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தினது புரள்வுகளின் சகடமும் — 241-42, 328;
— மூலதனம் நிலை-மூலதனமாவும் சுழல்-மூலதனமாகவும் பிரிதலும் மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடும் — 281, 287-88;
— நிலை-மூலதனமும் புரள்வுக் காலத்தின் நீட்டிப்பும் — 313-14;
— நிலை-மூலதனமும் உற்பத்திக் காலம் சுருங்குதலும் — 317;
— நிலை-மூலதனத்தின் மாற்றீடு — 221-23, 239-40, 594-99.

மேலும் பார்க்கவும்: சுழல்-மூலதனம், திறனுடை-மூலதனம்.

*நுகர்வு* [Consumption]

— திறனுடை-நுகர்வு — 33, 45, 56, 64, 75, 77, 99, 100, 204-05;
— தொழிலாளியின் நுகர்வும் உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்தியும் — 46, 77-78, 122-23, 272-73, 463;
— முதலாளித்துவத்துக்கு முற்பட்ட உற்பத்தி முறைகளும் நுகர்வும் — 47-48;
— திறனுடை நுகர்வுக்கு இன்றியமையாத் தேவையாக தொழிலாளியின் சொந்த நுகர்வு — 77-78, 99-101, 122-23, 215, 272-73, 463;
— முதலாளியின் சொந்த நுகர்வும் சாமானிய மறுவுற்பத்தியும் — 86, 540-41, 543;
— கொச்சை அரசியல் பொருளாதாரம் நுகர்வை முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் நோக்கமாக கருதுதல் — 90;
— நுகர்வும் மிகையுற்பத்தி நெருக்கடிகளும் — 99, 100-01, 542-44;
— சரக்கு-மூலதனச் சுற்றின் அவசிய நிலைமையாக நுகர்வு — 128-29, 520;
— சொந்த நுகர்வு-நிதி — 123, 273, 486-87.

மேலும் பார்க்கவும்: பயன்-மதிப்பு.

*நெருக்கடிகள்* [Crises]

— நெருக்கடிகளுக்கு தொழிலாளி வர்க்கத்தின் குறை-நுகர்வே காரணம் எனக் கொள்ளல் — 25, 543;
— முதலாளித்துவத்தில் மிகையுற்பத்தி சாத்தியமல்ல என்று நிரூபித்திட முதலாளித்துவப் பொருளாதார அறிஞர்களின் முயற்சிகள் — 99;
— நெருக்கடிகளும், உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இடையிலான முரண்பாடும் — 99, 100-01;
— நெருக்கடிகளின் வெளிப்பாடுகள் — 101-03;
— நெருக்கடிகளும் ஆலைத் தளவாடங்களின் மாற்றீடும் — 222;
— கால வட்ட நெருக்கடிகளின் பொருளாயத அடிப்படை — 242-43;
— நெருக்கடிகளும் அடுத்தப் புரள்வுச் சகடத்தின் பொருளாயத அடிப்படையும் — 242-43;
— நெருக்கடிகளும் வேலையின்மையும் — 415, 543;
— பணச் சந்தையில் நெருக்கடிகளும் உற்பத்தி நிகழ்முறையில் அசாதாரண நிலைமைகளும் — 417-18;
— நெருக்கடிகளும் கூலியும் — 543;
— சாமானிய மறுவுற்பத்தியில் நெருக்கடிகள் — 619-20;

— நெருக்கடிகளின் சாத்தியப்பாடும் மறுவுற்பத்தி மீண்டும் இயல்பாய் நடைபெறுவதற்கு அவசியமான நிலைமைகளும் — 658.

மேலும் பார்க்கவும்: முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அராஜகம், சகடம்.

பங்குச் சந்தை [Stock exchange]

— ஊக-வாணிபக் கொடுக்கல் வாங்கல்கள் — 453.

—பணச் சந்தை [Money-market]

— பணச் சந்தையும் விலை உயர்வும் — 376-77;

— பணச் சந்தையும் ஊக-வாணிப இரயில்வே திட்டங்களும் — 414;

— பணச் சந்தையில் நெருக்கடிகளும் உற்பத்தி நிகழ்முறையில் அசாதாரண நிலைமைகளும் — 418;

— பணச் சந்தையும் கூட்டுப் பங்கு நிறுமங்களும் — 471.

மேலும் பார்க்கவும்: கடன்-செலாவணி.

பண்ணையடிமை முறை [Serfdom]

— பண்ணையடிமை முறையின் அடிப்படையிலான அரசு உற்பத்தி — 144;

— விவசாயப் பண்ணையடிமையின் உழைப்பு — 509-10.

பணம் [Money]

— சரக்கும் பணமும் — 23, 38, 63-64, 467;

— பணம் மூலதனமாக மாறுதல் — 23-24, 40, 47, 60-61;

— பணத்தின் பணிகளும் மூலதனத்தின் பணிகளும் — 37-38, 42, 60-61, 101-02;

— சர்வப் பொதுச் சமதையாக பணம் — 40, 58, 60;

— உயர்நிலை உலோகங்கள் பணமாதல் — 49;

— பணமும் சரக்குகளின் பயன் வடிவமும் — 64, 76;

— பணம் பண்ணுவதே முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பிரதானக் குறி — 75, 76;

— மதிப்பின் நிலவல் வடிவமாகப் பணம் — 75, 76;

— சேர்ப்பின் வடிவமாகப் பணம் — 87, 102, 103, 110, 192-93, 423, 429;

— சேர்ப்பின் உருவாக்கமும் மெய்யான திரட்டலும் — 103, 110, 157, 423, 596-97, 625-26, 650-51;

— முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் முதலாவது சகாப்தத்தில் கடன்-செலாவணிப் பணம் — 147;

— கொடுப்புச் சாதனமாகப் பணம் — 147, 245;

— சேமப் பண வைப்பு பணச் சுற்றோட்டத்தின் முதனிலையாதல் — 192-93;

— கடன்-செலாவணி முறையும் பணத்தைச் சேர்த்து வைத்தலும் — 237-38;

— சுற்றோட்டத்துக்கு தேவையான பண அளவு — 147, 375, 429, 434, 437, 450, 453;

— சரக்குகள் மற்றும் பணத்தின் சுற்றோட்டத்தை ஆளும் விதிகள் — 147, 434, 437;

— பணத்தின் சுற்றும் அதன் ஓட்டமும் — 451-52;

— பணத்தை உற்பத்தி செய்வதற்கோ வாங்குவதற்கோ ஆகும் செலவுகள் — 470;

— முதலாளிகள் தமது சரக்குகளின் சுற்றோட்டத்துக்காக முன்னீடு செய்யும் பணம் — 530, 605;

— சுற்றியோடும் பணத் திரளும் வங்கிகளும் — 546;

— பணமும் கூலியும் — 548;

— திரட்டப்படும் பணத்தின் அளவு — 627;

— பணம் ஓடிச் செல்வதும் மீண்டு வருவதும் கடன்-செலாவணி அமைப்பும் — 636-37;

— பணமும் மறுவுற்பத்தியும் — 651;

மேலும் பார்க்கவும்: சுற்றோட்டம், தங்கம், சேம நிதி.

பண-மூலதனம் [Money-capital]

— பண-மூலதனச் சுற்றுக்கான சூத்திரம் — 33;

— பண-மூலதனச் சுற்றின் கட்டங்கள் — 33-64, 66, 67;

— பண-மூலதனச் சுற்றும் திறனுடை-மூலதனமும் — 45-46, 81-83;

— பண-மூலதனமும் சரக்கு-மூலதனமும் — 63, 66, 106-07;

— பண-மூலதனமும் தொழில் துறை மூலதனமும் — 66, 71-72, 106;

— பண-மூலதனத்தின் சுற்றும், முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பிரதானக் குறியும் — 75-76, 79, 128;
— பண-மூலதனத்தின் சுற்றோட்டமும் சுற்றும் — 79;
— பண-மூலதனத்தின் பணியாக சேர்ப்பு வடிவம் — 101-02, 110-11;
— தொழில் துறை மூலதனத்தின் சுற்றுக்குள் பண-மூலதனம் — 102;
— உள்ளுறைப் பண-மூலதனம் — 103, 110-11, 423-24, 460, 595-96;
— பண-மூலதனத்தை முடக்குதலும் விடுவித்தலும் — 140-43;
— முன்னீடு செய்ய வேண்டிய பண-மூலதனத்தின் அளவு — 109, 140-41, 344;
— பண-மூலதனமும் கடன்-செலாவணி அமைப்பும் — 372, 455;
— நெருக்கடிக்குப் பின்னர் பண-மூலதனம் மிதமிஞ்சியதாதல் — 373;
— பண-மூலதனமும் வருடாந்தர சமுதாயப் பொருளுற்பத்தியும் — 425;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அளவுவீதமும், பண-மூலதனத்தின் செயல்பாடும் — 467;
— பண-மூலதனமும் வங்கிகளும் — 545-46;
— உள்ளுறை (உள்ளியல்) பண-மூலதனம் — 651-52, 653-54, 654-56, 659-66, 668-69;
— புதிய பண-மூலதனத்தின் உருவாக்கம் — 678.

மேலும் பார்க்கவும்: *முன்னீடு செய்யப்படும் மூலதனம்.*

*பயன்-மதிப்பு* [Use-value]
— பயன்-மதிப்பாகிய சரக்கு — 77-78, 99.
— பயன்-மதிப்பின் உற்பத்தி முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் நோக்கமன்று — 92-93;
— பயன்-மதிப்பும் சரக்குகளின் சுற்றோட்டக் காலமும் — 97-98, 164-65.

*பரிவர்த்தனை* [Exchange]
— பொருளுற்பத்தி முறையும் பரிவர்த்தனை முறையும் — 152;
— சமுதாயப் பொருளுற்பத்தியின் இரு துறைகளுக்கும் இடையிலான பரிவர்த்தனை — 526-31, 546-47, 548-57, 564-67;
— வியாபாரிகளிடையிலான பரிவர்த்தனைகளும் வியாபாரிகளுக்கும் நுகர்வாளர்களுக்கும் இடையிலான பரிவர்த்தனைகளும் — 630-31;
— பரிவர்த்தனையிலான சமநிலை — 658.

மேலும் பார்க்கவும்: *சுற்றோட்டம்.*

*பிசியோக்கிராட்டுகள்* [Physiocrats] — 473-77;
— சரக்கு-மூலதனத்தின் சுற்று கெனேயின் Tableau Economique என்பதன் அடிப்படையாதல் — 130;
— நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடு குறித்து கெனே — 248-50, 261;
— வேளாண்மையில் ஈடுபடுத்தப்படும் மூலதனம் மட்டுமே உண்மையில் திறனுடை-மூலதனமாகும் என்று பிசியோக்கிராட்டுகள் கருதினர் — 248, 279, 297, 473-74;
— பிசியோக்கிராட்டுகளின் கருத்துப்படி உபரி-மதிப்பின் தோற்றுவாய் — 279, 289-90;
— கெனேயின் Tableau Economique படி சாமானிய மறுவுற்பத்தி — 473-74;
— பிசியோக்கிராட்டுகளின் கருத்தமைப்பே முதலாளித்துவப் பொருளுற்பத்தி பற்றிய முறையான முதல் கருத்தமைப்பு — 474-75;
— மறுவுற்பத்தி பற்றி பிசியோக்கிராட்டுகளின் பகுப்பாய்வு — 473-75;
— பிசியோக்கிராட்டுகளது கண்ணோட்டத்தின் படி முன்னீடு — 500-01, 660.

*பொதுவுடைமைச் சமுதாயம்* [Communist society]
— கூட்டுத்துவப் பொருளுற்பத்தியில் கணக்குப் பதிவு — 174;
— சமுதாயமயமாக்கப்பட்ட பொருளுற்பத்தியில் சரக்கிருப்பு — 621-22.
— உழைப்பு நிகழ்முறையில் உற்பத்திச் சாதனங்கள் ஆற்றும் பங்கிலான வேறுபாடு மறையாதிருத்தல் — 257-60;
— சமுதாயமயமாக்கப்பட்ட பொருளுற்பத்தியில் உழைப்புச் சக்தி, உற்பத்திச் சாதனங்கள் இவற்றின் வினியோகம் — 471-72;
— பொதுவுடைமைச் சமுதாயத்தில் மறுவுற்பத்தி — 471-72, 597, 620-21, 622;

— பொதுவுடைமைச் சமுதாயத்தில் பொருளுற்பத்தி திட்டமிடப்படுதல் — 471-72;
— சமுதாயமயமாக்கப்பட்ட பொருளுற்பத்தியில் துறை Iஇன் பண்டங்களது விளியோகம் — 559-62;
— மறுவுற்பத்தி நிகழ்முறையின் மீது சமுதாயத்தின் கட்டுப்பாடு — 621-22.

*போக்குவரத்து* [Transport]
— போக்குவரத்துத் தொழிலின் பயன்-விளைவு — 71, 207;
— போக்குவரத்துத் தொழிலில் உற்பத்தியும் நுகர்வும் — 71, 207;
— போக்குவரத்தினது பயன்-விளைவின் பரிவர்த்தனை-மதிப்பு — 71;
— போக்குவரத்துத் தொழிலுக்கான சுற்றின் சூத்திரம் — 71;
— போக்குவரத்து வசதிகளின் வளர்ச்சியும் சரக்கிருப்புகளும் — 185;
— போக்குவரத்துச் செலவுகள் — 193-98;
— போக்குவரத்துத் தொழிலானது சுற்றோட்ட நிகழ்முறையின் உள்ளே உற்பத்தி நிகழ்முறையின் நீடிப்பாதல் — 198;
— போக்குவரத்துத் தொழில் சுயேச்சையானதோர் உற்பத்திக் கிளை — 197-98;
— போக்குவரத்தில் கௌரவ மதிப்பிறக்கம் — 222;
— போக்குவரத்தின் வளர்ச்சியும் புதிய உற்பத்தி மையங்களும் — 331-32;
— போக்குவரத்தின் வளர்ச்சியும் மூலதனப் புரள்வும் — 332-33, 334-35.

*போக்குவரத்துத் தொழில்* [Transport industry] — *பார்க்கவும்: போக்குவரத்து.*

*போட்டி* [Competition]
— சரக்கு-மூலதனங்களிடையிலான போட்டி — 101;
— போட்டியும் பழைய உழைப்புச் சாதனங்களைப் புதியவற்றால் மாற்றீடு செய்தலும் — 222;
— போட்டியும் மூலதன முதலீட்டின் குறைந்தபட்ச அளவும் — 342.

*மதிப்பிறக்கம்* [Depreciation] — *பார்க்கவும்: மூலதன மாற்றீடு, தேய்மானம்.*

*மதிப்பு* [Value]
— ஆதாம் ஸ்மித்தும் ரிக்கார்டோவும் மதிப்பை உழைப்பாகவும் உபரி-மதிப்பை உபரி-உழைப்பாகவும் பெயர்த்தல் — 18;
— சராசரி இலாப வீதமும் மதிப்பு விதியும் — 27;
— உழைப்புச் சக்தியை வாங்குதலும் மதிப்பை மூலதனமாக மாற்றுதலும் — 36-37;
— உழைப்புக்கு எவ்வித மதிப்பும் இருக்க முடியாது — 39;
— மதிப்பு உறவுகளில் மாற்றங்கள் — 96-97, 137-39, 520;
— விலையும் மதிப்பும் வெவ்வேறாய் இருத்தல் — 120, 520;
— சமுதாய மூலதன-மதிப்பிலான புரட்சிகள் — 137-39, 140;
— மதிப்பையும் பரிவர்த்தனை-மதிப்பையும் பெய்லி ஒன்றெனக் கருதுதல் — 139;
— சமுதாய உற்பத்திப் பண்டத்தின் மதிப்பும் அதன் பொருட் கூறுகளும் — 568.

மேலும் பார்க்கவும்: *உபரி-மதிப்பு.*

*மராமத்துகள்* [Repairs]
— மராமத்துகளுக்காகும் செலவு — 155-56, 226, 227-28, 229, 590;
— மராமத்துச் செலவின் கணக்கீடு — 228;
— சாதாரண மராமத்துகளும் முக்கிய மராமத்துகளும் — 229-30;
— முறையான மராமத்துகளும் மாற்றீடும் — 233;
— பகுதியளவிலான மறுவுற்பத்தியோடு இணைந்த மராமத்துகள் — 235.

*மறுவுற்பத்தி* [Reproduction]
— முதலாளித்துவ மறுவுற்பத்தியானது கூலித் தொழிலாளி வர்க்கம், முதலாளி வர்க்கம் ஆகியவற்றின் மறுவுற்பத்தியாதல் — 45, 503, 518, 550;
— மறுவுற்பத்தியும் சுற்றோட்டமும் — 53-54, 191, 263-64, 462-66;
— ஈட்டேற்றம் பெற்ற மூலதனத்தை மூலதன-மதிப்பாகவும் உபரி-மதிப்பாகவும் பிரித்தல் — 58-59;
— திறனுடை-மூலதனச் செயல்பாட்டினது காலவட்டப் புத்தாக்கமே மறுவுற்பத்தி — 84, 121;
— மறுவுற்பத்தியும் நுகர்வும் — 99-101;

— மறுவுற்பத்தியும் நெருக்கடிகளும் — 101, 618-20, 658;
— மறுவுற்பத்தி நிதியின் உருவாக்கம் — 123;
— உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு மாற்றத்தால் மறுவுற்பத்தியின் அளவு வீதத்தில் ஏற்படும் விளைவு — 140-43;
— மறுவுற்பத்தியும் திறனிலாப் பணிகளும் — 169-70;
— கடன்-செலாவணியும் மறுவுற்பத்தியின் மெய்யான இயக்கமும் — 193;
— உயிருள்ள உழைப்புச் சாதனங்களின் மறுவுற்பத்திக்காகும் காலம் — 223;
— வேளாண்மையில் மறுவுற்பத்தி — 322-23, 474;
— மறுவுற்பத்திக் காலத்தின் குறைப்பும் வருடாந்தர உபரி-மதிப்பு வீதமும் — 412-13;
— மறுவுற்பத்தியும் சமுதாயப் பொருளுற்பத்தியின் இரு துறைகளும் — 485, 522-23;
— மறுவுற்பத்தியும், சமுதாயப் பொருளுற்பத்தியினது அடக்கக் கூறுகளின் மதிப்பையும் சாரத்தையும் மாற்றீடு செய்தலும் — 518, 519-20;
— மறுவுற்பத்தியும் சேர்த்து வைத்தலும் — 596-97;
— தங்கம், வெள்ளியின் வருடாந்தர மறுவுற்பத்தி — 622-23.

மேலும் பார்க்கவும்: மூலதன மாற்றீடு.

மாறா-மூலதனம் [Constant capital]
— மூலதனம் நிலை-மூலதனமாகவும் சுழல்-மூலதனமாகவும் பிரிதலும், மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடும் — 280-81, 287-88;
— சுழல்-மூலதனத்தின் மாறாப் பகுதி, மாறும் பகுதி இவற்றின் புரள்விலான வேறுபாடு — 386-87;
— உற்பத்தியில் ஈடுபடுகிற மாறா-மூலதனமும் நுகரப்படுகிற மாறா-மூலதனமும் — 523-24;
— புதிய மாறா-மூலதனத்தின் உற்பத்தி — 482, 563-64, 579-80;
— மாறா-மூலதனத்தின் துணைகொண்டு உற்பத்தி செய்யப்படும் சரக்கு-மூலதனத்தின் மதிப்பில் ஒரு பகுதியாக மாறா-மூலதனம் — 693.

மாறும்-மூலதனம் [Variable capital]
— மாறும்-மூலதனமாக உழைப்புச் சக்தி — 214, 272-73, 488-90;
— மாறும்-மூலதனம் குறித்து ஆதாம் ஸ்மித்தின் பிழையான கருத்துகள் — 272-73, 279-81, 287-88;
— சுழல்-மூலதனத்தின் மாறாப் பகுதி, மாறும் பகுதி இவற்றின் புரள்வு — 386-87;
— முன்னீடு செய்யப்படுகிற மாறும்-மூலதனமும் ஈடுபடுத்தப்படுகிற மாறும்-மூலதனமும் — 393-94;
— கூலிக்காகச் செலவிடப்படும் மாறும்-மூலதனம் துறைகள் I, II ஆகியவற்றின் முதலாளிகளது கைக்குத் திரும்புதல் — 531, 547-48, 591-92;
— மாறும்-மூலதனம் முன்னீடு செய்யப்படும் கால அளவு — 547-48.

மிகையுற்பத்தி [Over-production] — பார்க்கவும்: நெருக்கடிகள்.

முதலாளி [Capitalist]
— முதலாளியினது சொந்த நுகர்வின் வளர்ச்சி — 91;
முதலாளியானவர் தொழில் துறை மூலதனத்தின் ஆளுருவமாய் இருத்தல் — 153;
— முதலாளியும் தொழிலாளியும் — 541-42, 586, 683-86;
— முதலாளியின் நுகர்வும் வருவாயும் — 555-56;
— முதலாளியும் பணச் சுற்றோட்டமும் — 440;
— முதலாளியும் மாறும்-மூலதனமும் — 581, 591-92;
— தெஸ்தூத் டெ திரேசியின் பார்வையில் தொழில் துறை முதலாளியும் வேலை செய்யாத முதலாளியும் — 637-49;
மேலும் பார்க்கவும்: மூலதனம், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை, வர்க்கங்கள்.

முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம் [Bourgeois political economy]
— உபரி-மதிப்பு தொடர்பான ரோட்பெர்ட்டஸ் கருத்துகளுக்கு விமர்சனம் — 11-25;
— உபரி-மதிப்பின் ஆதாரம் குறித்து வாணிப வாதிகள் — 12;

— உபரி-மதிப்பு குறித்தும் அதன் தோற்று வாய் குறித்தும் ஆதாம் ஸ்மித் — 12-15;
— மதிப்பு குறித்தும் உபரி-மதிப்பு குறித் தும் ரிக்கார்டோ — 15-17, 23, 285-87, 514-15;
— ஓவனின் கம்யூனிசத்துக்கு ரிக்கார்டோ வின் பொருளாதாரத் தத்துவமே அடிப் படை — 19;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் நோக்கம் குறித்து முதலாளித்துவ அர சியல் பொருளாதாரம் — 90, 120;
— கொச்சை அரசியல் பொருளாதாரம் மூலதனத்தின் சுற்றோட்டத்தை அதன் சுற்றாகக் காட்டுதல் — 92;
— முதலாளித்துவ அரசியல் பொரு ளாதாரத்துக்கே உரிய மாய்மாலம் — 163-64, 297-98, 391;
— முதலாளித்துவ அரசியல் பொரு ளாதாரத்துக்கு சுற்றோட்டமே மதிப் பின் தற்பெருக்கத்துக்கான ஆதாரம் — 163-64;
— மாறா-மூலதனம், மாறும்-மூலதனம் என்னும் கருத்தினங்களை நிலை-மூல தனம், சுழல்-மூலதனம் என்னும் கருத் தினங்களோடு போட்டுக் குழப்புதல் — 209, 279, 285, 286-87, 295, 296-97, 578;
— பொருட்களின் நேரடி இயல்புகளை மூலதனத்தின் குணங்களோடு குழப்பு தல் — 209, 265;
— பண-மூலதனத்தையும் சரக்கு-மூல தனத்தையும் திறனுடை-மூலதனத்தின் சுழலும் பகுதியோடு குழப்புதல் — 217-18, 268;
— நிலை-மூலதனம், சுழல்-மூலதனம் குறித்து ஆதாம் ஸ்மித் — 248-82, 300, 475-76, 477, 478-79;
— நிலை-மூலதனம், சுழல்-மூலதனம் குறித்து ரிக்கார்டோ — 283-99;
— பிசியோக்கிராட்டுகளும் ஆதாம் ஸ்மித் தும் தொழிலாளர்களின் உழைப்பை யும் உழைக்கும் கால்நடைகளின் உழைப்பையும் ஒரே நிலையில் வைத் துப் பேசுதல் — 280, 282, 475-76, 492;
— ரிக்கார்டோவின் இலாபத் தத்துவம் — 295;
— மறுவுற்பத்தியை பிசியோக்கிராட்டுகள் பகுத்தாய்தல் — 474-75;
— மறுவுற்பத்தியை ஆதாம் ஸ்மித் பகுத் தாய்தல் — 475-514, 573-78;
— சரக்குகளது விலையின் அடக்கக் கூறு. கள் தொடர்பாக ஸ்மித் புரிந்திடும் பிழை — 478, 488-89, 490-92, 512-16, 630;
— ஆதாம் ஸ்மித்தின் பார்வையில் வரு வாயே பரிவர்த்தனைக்குரிய மதிப்பின் மூல ஆதாரம் — 489-90, 504-05, 513-14;
— ஆதாம் ஸ்மித் சரக்கு உற்பத்தியையும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியை யும் ஒன்றெனக் கருதுதல் — 513-14;
— சப்பைக்கட்டுவாதப் பொருளாதார அறிஞர்கள் உழைப்புச் சக்தியை மூல தனமாகவும், தொழிலாளியை முத லாளியாகவும் காட்டுதல் — 582;
— தடையிலா வாணிப மரபினர் மூல தனச் சுற்றோட்டத்தை சரக்குகளின் பரிவர்த்தனையோடு போட்டுக் குழப்பு தல் — 657.

மேலும் பார்க்கவும்: வாணிப ஊக்க வாதம், பிசியோகிராட்டுகள்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை [Capitalist mode of production]
— புதிதாய் உற்பத்தி செய்யப்படும் சரக் கின் மதிப்பு அதன் உற்பத்தி-அடிக் கூறுகளின் மதிப்பை விட அதிகம் — 23-24, 34, 152-53;
— உழைப்புச் சக்தியை வாங்குவதும் விற் பதும் முதலாளித்துவப் பொருளுற் பத்தி முறைக்குத் தேவையான அடிப் படை நிலைமையாதல் — 26, 39-40, 47-49, 99-100, 108-09, 152, 456-57, 465, 508-09;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையும் உழைப்புச் சக்தியை உற் பத்திச் சாதனங்களிலிருந்து பிரித்து வேறாக்குதலும் — 43;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தியும் சரக்கு உற்பத்தியும் — 47-48, 144-45, 152, 658, 665;
— தொழிலாளர்களும் உற்பத்திச் சாத னங்களும் உற்பத்திக் காரணிகளாதல் — 45-46;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையும் சமுதாயத்தின் பொருளாதார அமைப்பைப் புரட்சிகரமாய் மாற்று தலும் — 47-48, 72;

— முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் பிரதானக் குறி — 76-77, 90-91, 104, 128, 156, 200, 462, 509, 589, 669;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறை குறித்து கொச்சை அரசியல் பொருளாதாரம் — 90;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தி படைத்திடும் பண்டங்களின் அளவு உற்பத்தியின் அளவுவீதத்தைப் பொறுத்தது — 100;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையும் தொழில் நுட்பமும் — 47-48, 72, 103, 140, 222;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் தொடர்நிலை — 134, 137, 370-71;
— விவசாயத் தொழிலாளி கூலித் தொழிலாளியாகப் பரிணமித்தல் — 152;
— பொருளுற்பத்தி முறையும் பரிவர்த்தனை முறையும் — 152;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையும் சந்தையும் — 197;
— உற்பத்தி அராஜகமும் உற்பத்திச் சக்திகள் விரயமாதலும் — 225, 416, 621-22;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் முரண்பாடுகள் — 415-16;
— நெருக்கடியும் உற்பத்தி நிகழ்முறையின் அசாதாரண நிலைமைகளும் — 418;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் திறனிலாச் செலவுகள் — 171, 177, 180, 194, 456;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையும் கடன்-செலாவணியும் — 457;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையும் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமையும் — 542-43;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையும் அன்னிய வர்த்தகமும் — 623;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் சமநிலையின் தற்செயல் தன்மை — 658;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையைப் பகுத்தாயும் வழிமுறை — 676, 677.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அராஜகத் தன்மை [Anarchy of capitalist production]
— முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அராஜகமும் உற்பத்திச் சக்திகள் விரயமாதலும் — 225;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அராஜகமும் உற்பத்திக் குலைவுகளும் — 414;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அராஜகமும் மிகையுற்பத்தியும் — 621-22;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அராஜகமும் நெருக்கடிகளும் — 658.
மேலும் பார்க்கவும்: நெருக்கடிகள்.

முதலாளி வர்க்கம் [Bourgeois] — பார்க்கவும்: முதலாளி.
மேலும் பார்க்கவும்: மூலதனம், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை, வர்க்கங்கள்.

முன்னீடு செய்யப்படும் மூலதனம் [Advanced capital]
— முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் குறைந்தபட்சப் பருமன் — 105, 109-10, 111, 141, 157, 342;
— நிலை-மூலதனம் முன்னீடு செய்யப்படும் கால அளவு — 210-11, 218-19;
— முன்னீடு செய்யப்படும் மூலதனமும் ஆண்டுதோறும் புரளும் மூலதன-மதிப்பும் — 241;
— முன்னீடு செய்யப்படும் மூலதனமும் கொடுப்புக் காலவரைகளும் — 245-46;
— முன்னீடு செய்யப்படும் மூலதனமும் சமுதாய உபரி-மதிப்பின் வினியோகமும் — 284;
— முன்னீடு செய்யப்படும் மூலதனமும் உற்பத்திச் செயல்களின் கால அளவும் — 302-03, 304, 307-09;
— முன்னீடு செய்யப்படும் மூலதனமும் வேலைக் காலத்தின் நீட்டளவும் — 306-07, 416;
— முன்னீடு செய்யப்படும் மூலதனமும் கடன்-செலாவணி அமைப்பும் — 309, 310-11;
— முன்னீடு செய்யப்படும் மூலதனமும் வேலைக் காலத்திலான குறுக்கீடுகளும் — 320-21;

— முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் பண வடிவம் — 337, 339-40, 350, 451, 469-70;
— மாறும்-மூலதனத்தின் முன்னீடு — 392-93, 499-500, 501-02.

மூலதனங்களின் மையப்பாடு [Centralisation of capitals]
— பண-மூலதனம், திறனுடை-மூலதனம் ஆகியவற்றின் ஒருதரப்பான திரட்டலும் மையப்பாடும் — 461;
— உற்பத்தியின் அளவுவீதமும் மூலதனங்களின் மையப்பாடும் — 469;
— தனிப்பட்ட மூலதனங்களின் பரவலிலான மாற்றமாக மூலதனங்களின் மையப்பாடு — 469.

மூலதனச் சுற்று [Circuit of capital]
— மூலதனச் சுற்றின் நோக்கமும் விளைவும் — 62, 75-76, 131;
— மூலதனச் சுற்றில் குறுக்கீடுகள் — 66, 135-36;
— மூலதனச் சுற்றின் பல்வேறு கட்டங்களிலும் குறிப்பிட்ட கால அளவுக்கு மூலதனம் நிலைத்திருத்தல் — 66;
— சுற்றோட்டம், உற்பத்தி ஆகியவற்றின் ஐக்கியமாக மூலதனச் சுற்று — 78-79, 131, 135-36;
— மூலதனச் சுற்றிலான குலைவுகளும் சேம நிதியும் — 112;
— மூலதனச் சுற்றின் மூன்று சூத்திரங்கள் — 131;
— மூலதனச் சுற்றின் மூன்று வடிவங்களது ஐக்கியமாக மூலதனச் சுற்று — 131, 135-37.
— மூலதனச் சுற்றும் மூலதனப் புரள்வும் — 202, 403-04;
— உயர்நிலை உலோகங்களின் உற்பத்தியில் மூலதனச் சுற்று — 430-31;
— சமுதாய மூலதனத்தின் சுற்று — 463-64, 466.

மூலதனத் திரட்டல் [Accumulation of capital]
— தொழில் துறை மூலதனத்தின் நோக்கமும் பிரதானக் குறியுமாக மூலதனத் திரட்டல் — 76-77, 669;
— பணச் சேர்ப்பு மூலதனத் திரட்டலின் காரணியாதல் — 102, 110-11, 157, 627, 650;
— உபரி-மதிப்பின் உற்பத்தியை விரிவாக்கும் வழிவகையாக மூலதனத் திரட்டல் — 103-04, 156;
— உபரி-மதிப்பை மூலதனமாக்கும் நிகழ்வாக மூலதனத் திரட்டல் — 106;
— வங்கி வைப்புகள், பிணையங்களின் வடிவில் பண-மூலதனத் திரட்டல் — 111, 157;
— சேமப் பண நிதி — 111, 213, 224, 421-22, 457, 596-97;
— மூலதனத் திரட்டலும் உழைப்பினது உற்பத்தித் திறனின் வளர்ச்சியும் — 469;
— முதலாளித்துவத்தில் மூலதனத் திரட்டலின் அவசியம் — 658;
— சாமானிய மறுவுற்பத்தி மூலதனத் திரட்டலின் மெய்யான காரணியாதல் — 518-22;
— மூலதனத் திரட்டலில் உபரி-உழைப்பின் செலவீடு — 660;
— மூலதனத் திரட்டல் இல்லாமலே தொழிலை விரிவாக்குதல் — 667;
— மூலதனத் திரட்டல் வீதம் — 691.

மூலதனத்தின் அங்கக இயைபு [Organic composition of capital]
— மூலதனத்தின் அங்கக இயைபும் சமுதாய உபரி-மதிப்பின் வினியோகமும் — 284;
— மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்குமுள்ள விகித உறவாக மூலதனத்தின் அங்கக இயைபு — 284-85;
— மூலதனத்தின் அங்கக இயைபும் சுற்றோட்ட நிகழ்முறையும் — 284-85;
— மூலதனத்தின் அங்கக இயைபினது வளர்ச்சிக்கான நிபந்தனைகள் — 683-85.
மேலும் பார்க்கவும்: மூலதனத்தின் மதிப்பு-இயைபு.

மூலதனத்தின் மதிப்பு-இயைபு [Value composition of capital]
— மூலதன-மதிப்பின் பருமன் மீது மூலதனத்தின் மதிப்பு-இயைபு ஏற்படுத்தும் விளைவு — 90;
— மூலதனம் வளர்வதற்கேற்ப அதன் மதிப்பு-இயைபு மாற்றமடைதல் — 109-10;
— மூலதனத்தின் மதிப்பு-இயைபும் முன்னீடு செய்ய வேண்டிய குறைந்தபட்ச மூலதன அளவும் — 109, 110.

மேலும் பார்க்கவும்: மூலதனத்தின் அங்கக இயைபு.

மூலதனப் புரள்வு [Turnover of capital]
— மூலதனத்தின் சுற்றும் புரள்வும் — 202;
— புரள்வுக் காலம் — 202-03;
— புரள்வுகளின் எண்ணிக்கைக்கான சூத்திரம் — 203;
— நிலை-மூலதனப் புரள்வின் விசேஷத் தன்மை — 212-13;
— மூலதனப் புரள்வும் நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடும் — 217-18, 246-47, 263-64, 367-68;
— வெவ்வேறு நிலை-மூலதனக் கூறுகளின் வெவ்வேறு புரள்வுக் காலங்கள் — 220;
— முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் மொத்தப் புரள்வு — 239;
— முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பின் புரள்வுக் காலமும் அதன் அடக்கக் கூறுகளின் மெய்யான புரள்வுக் காலமும் — 241;
— புரள்வுச் சகடம் — 242, 328-29;
— மாறும்-மூலதனம், மாறா-மூலதனத்தின் சுழலும்கூறு ஆகியவற்றின் புரள்வு — 261-62;
— புரள்வு வேகம் — 307, 317-18, 334;
— வேளாண்மையில் புரள்வுக் காலத்தைக் குறைத்தல் — 322-23;
— விற்றலுக்காகும் காலமும் மூலதனத்தின் புரள்வுக் காலமும் — 330-31;
— மூலதனப் புரள்வும் போக்குவரத்து வளர்ச்சியும் — 332-33;
— சுழல்-மூலதனத்தின் மாறாக்கூறு, மாறும்கூறு இவற்றின் புரள்விலான வேறுபாடு — 386-87;
— மூலதனப் புரள்வும் முன்னீடு செய்யப்படும் மூலதனத்துக்கும் ஈடுபடுத்தப்படும் மூலதனத்துக்கும் இடையிலான உறவும் — 396-97;
— வளர்வேகப் புரள்வும் வளர்வேகப் பண ஓட்டமும் — 451-52;
— புரள்வுக் காலத்தைக் குறுக்குதல் — 469;
— புரள்வுக் காலமும் உற்பத்தி நிகழ்முறையின் பொருளாயதத் தன்மையும் — 471.

மூலதனம் [Capital]
— மூலதனப் பெருக்கம் அதனைப் பாதுகாத்திட இன்றியமையாத் தேவையாதல் — 104;
— மதிப்பை உண்டாக்கும் மதிப்பாக மூலதனம் — 108;
— சமுதாய மூலதனத்தின் தனி இயல்புகள் — 128-29, 137-39;
— சமுதாய மூலதனத்தின் மதிப்பிலான புரட்சிகள் — 138-40, 141-42;
— மூலதனத்தை இயக்கமாக மட்டுமே புரிந்து கொள்ள முடியும் — 139;
— சமுதாய மூலதனத்தின் அசைவியக்கங்கள் — 463-64, 465;
— சமுதாய மூலதனம் தனிப்பட்ட முதலாளிகள் அனைவரின் கூட்டுப்பங்கு மூலதனமாதல் — 573.
மேலும் பார்க்கவும்: முன்னீடு செய்யப்படும் மூலதனம், பணம், பண-மூலதனம், திறனுடை-மூலதனம்.

மூலதன மாற்றீடு [Replacement of capital]
— மூலதன மாற்றீடும் உற்பத்தி விரிவாக்கமும் — 222-23;
— மூலதன மாற்றீடும் மராமத்துகளும் — 230-34;
— மூலதன மாற்றீட்டின் அளவு — 235-37;
— மூலதன மாற்றீடும் முன்கூட்டியே பணம் திரட்டுதலும் — 237;
— நிலை-மூலதனத்தின் மாற்றீடு — 222-24, 236-37, 594-99;
— உற்பத்திச் சாதனங்களின் மாற்றீடும் கௌரவ மதிப்பிறக்கமும் — 242;
— பணச் சேர்ப்பின் தேய்மானத்திற்கான மாற்றீடு — 429;
— மூலதன மாற்றீடும் மறுவுற்பத்தி நிகழ்முறையும் — 519-20.
மேலும் பார்க்கவும்: மறுவுற்பத்தி, தேய்மானம்.

ருஷ்யா [Russia]
— ருஷ்யாவில் நிலவுடைமை உறவுகள் குறித்து மார்க்ஸ் ஆராய்ச்சி — 5;
— பண்ணையடிமை அமைப்பிலிருந்து முதலாளித்துவ அமைப்புக்கு மாறிச் செல்லுதல் — 44;
— கிராம சமுதாயத்தின் நிலவுடைமை — 44;

— பண்ணையடிமை முறையில், சரக்கு உற்பத்தி — 144;
— வேளாண்மையில் வீட்டுத் தொழில்கள் — 319-20.

வங்கிகள் [Banks]
— வைப்புகள் — 111, 157, 455, 460, 655;
— வங்கித் தொழில் செயற்பாடுகளின் குவிப்பு — 174-75;
— வைப்புகளைத் திரும்பப் பெறுதலும் பணச் சந்தையும் — 383;
— வங்கிகளும் பண-மூலதனத்தின் சுற்றோட்டமும் — 456-57, 545-46;
— வங்கிகளின் ஆஸ்திகள் — 455, 460.

வணிக-மூலதனம், [Merchant's capital]
— மொத்த வர்த்தகமும் பெருந்திரள் உற்பத்தியும் — 100, 145;
— வணிக-மூலதனமும் சரக்கு உற்பத்தியும் — 145;
— வணிக-மூலதனத்தின் பணிகளும் சமுதாயத்தின் வேலை நேரத்திலான சிக்கனமும் — 170-171;
— வர்த்தகத் தொழிலாளர்கள் சுரண்டப்படுதல் — 171-73.
மேலும் பார்க்கவும்: வாங்கலும் விற்றலும், வர்த்தகம்.

வர்க்கங்கள் [Classes]
— முதலாளித்துவ மறுவுற்பத்தியானது கூலித் தொழிலாளி வர்க்கம், முதலாளி வர்க்கம் ஆகியவற்றின் மறுவுற்பத்தியாதல் — 43-44, 503, 518, 550;
— முதலாளித்துவத்தில் தொழிலாளி வர்க்கம் சுரண்டப்படுதல் — 48-49, 467, 677, 685-87;
— தொழில் துறை மூலதனமும், முதலாளிகளுக்கும் கூலித் தொழிலாளர்களுக்கும் இடையிலான வர்க்கப் பகைமையும் — 72;
— தொழிலாளி வர்க்கமும் மிகையுற்பத்தி நெருக்கடிகளும் — 416, 542-43.
மேலும் பார்க்கவும்: முதலாளி, விவசாயிகள்.

வர்த்தகம் [Trade]
— வர்த்தகத்தின் வளர்ச்சி முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கு முதனிலையாதல் — 44, 47-48, 144;
— கீழையுலகின் மக்கள் சமுதாயங்கள் மீது உலக வர்த்தகத்தின் தாக்கம் — 47-48;
— வணிக-மூலதனத்தின் பணியாக வர்த்தகம் — 145, 170-71, 172-73;
— உலக வர்த்தகமும் போக்குவரத்து வசதிகளின் வளர்ச்சியும் — 334-36;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தியும் அன்னிய வர்த்தகமும் — 621, 623;
— அன்னிய வர்த்தகமும் மறுவுற்பத்தியின் பகுப்பாய்வும் — 623.
மேலும் பார்க்கவும்: சந்தை, வணிக-மூலதனம்.

வருவாய் [Revenue]
— நிகர வருவாயும் நுகர்வு நிதியும் — 479-81;
— சமுதாயத்தின் வருடாந்தர வருவாய்-உற்பத்திப் பொருளின் மதிப்பு — 482, 486;
— வருவிக்கப்பட்ட வருவாய்கள் — 491;
— வருவாய் குறித்து ஆதாம் ஸ்மித்தின் பிழையான கருத்துகள் — 490-92, 513-14;
— ஆதாம் ஸ்மித் கண்ணோட்டத்தில் வருவாயும் மூலதனமும் — 499-508;
— தொழிலாளியின் வருவாய் — 499, 500-03, 504, 511-12.

வாங்கலும் விற்றலும் [Purchase and sale]
— மறுவுற்பத்தியின் அளவுவீதமும் ஈடேற்றக் காலமும் — 53, 179;
— வாங்கல் விற்றல் பணிகள் வணிகருக்கு மாற்றப்படுதல் — 170-71;
— சரக்கிருப்பின் அளவும் விற்பனை அளவும் — 188-89;
— விற்றலுக்காகும் காலமும் சந்தையிலான ஏற்ற இறக்கங்களும் — 331;
— சந்தையிலிருந்தான தொலைவும் விற்றலுக்காகும் காலமும் — 331, 417.
மேலும் பார்க்கவும்: வணிக-மூலதனம், வர்த்தகம்.

வாடகை [Rent]
— வாடகை பற்றி ரோட்பெர்ட்டஸ் கண்ணோட்டம் — 11-12, 16-17, 18-19;
— வாடகை என்பதற்கு ஆதாம் ஸ்மித் தரும் இலக்கணம் — 14;
— வாடகை பற்றி ரிக்கார்டோ கண்ணோட்டம் — 15-16;

— ஊக வாணிபக் கட்டடத் தொழிலும் வாடகையின் வளர்ச்சியும் — 309-10

வாணிப ஊக்கக் கொள்கை [Mercantalism]

— உபரி-மதிப்பு என்பதன் விளக்கம் — 12;
— திறனுடை நுகர்வை போதித்தல் — 77, 78;
— பண-மூலதனத்தின் சுற்று வாணிப ஊக்கக் கொள்கைக்கு ஆதாரமாதல் — 80-81, 128-30;
— சரக்கு உற்பத்தி வாணிப ஊக்கக் கொள்கையில் அவசியக்கூறு — 80-81.

வாழ்வுச் சாதனங்கள் [Means of subsistence]

— தொழிலாளர்களின் வாழ்வுச் சாதனங் களை ஆதாம் ஸ்மித் சுழல்-மூலதனம் என்று வகைப்படுத்தல் — 279;
— தொழிலாளியும் முதலாளியும் நுகர்ந் திடும் வாழ்வுச் சாதனங்கள் — 297;
— அவசிய நுகர்வுப் பண்டங்களும் சொகு சுப் பண்டங்களும் — 533, 543-44;
— நெருக்கடியும் சொகுசுப் பண்டங் களின் நுகர்வும் — 542;
— அவசியப் பண்டங்களை திறனிலாத் தொழிலாளர்கள் நுகர்தல் — 542.

விரிதிற மறுவுற்பத்தி [Reproduction on an extended scale]

— விரிதிற மறுவுற்பத்தியும் அதிகரித்த சொந்த நுகர்வும் — 100-01;
— விரிதிற மறுவுற்பத்தியும் அதன் விகிதா சாரங்களும் — 103, 661, 683;
— விரிதிற மறுவுற்பத்தியும் உள்ளுறைப் பண-மூலதனமும் — 103, 423;
— விரிதிற மறுவுற்பத்தியும் உழைப்பின் உற்பத்தித் திறனும் — 121, 122, 130;
— விரிதிற மறுவுற்பத்தியும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பிலான சரிவும் — 140;
— விரிதிற மறுவுற்பத்தியும் மூலதனத் திரட்டலும் — 140, 422, 667-68;
— விரிதிற மறுவுற்பத்தியும் மூலதன மாற் றீட்டுக்கான சேமப் பண நிதியும் — 224;
— விரிவிலும் மும்முரத்திலுமான உற்பத் திப் பெருக்கம் — 422;
— விரிதிற மறுவுற்பத்தியும் சாமானிய மறுவுற்பத்தியும் — 659-60, 672-73, 687-88;
— விரிதிற மறுவுற்பத்தியின் குறிவரை கள் — 673-94.

விலை [Price]

— சரக்குகளின் விலையும் சுற்றோட்டத்தி லிருக்கும் பணத்தின் அளவும் — 146, 375-76, 428-29, 450;
— சந்தை-விலைகளும் வாங்கல்-விற்றல் செயல்களும் — 384-85, 416;
— கூலியும் உற்பத்தி-விலையும் — 446;
— கூலியுயர்வும் விலையுயர்வும் — 448-49;
— மதிப்புகளிலிருந்து விலைகள் விலகிச் செல்வதும் சமுதாய மூலதனத்தின் அசைவியக்கமும் — 519;
— செழுமைக் காலங்களில் விலைவாசி உயர்வு — 542.

விவசாயிகள் [Peasantry]

— பண்ணயடிமை முறை அடிப்படையி லான சரக்கு உற்பத்தி — 144, 149;
— முதலாளித்துவப் பொருளுற்பத்தியும் விவசாய உற்பத்தியாளர் கூலித் தொழிலாளர்களாகப் பரிணமித்தலும் — 152;
— விவசாயியினது பொருளாதாரத்தில் சரக்கிருப்புகள் — 182-83;
— புரள்வுக் கால நீடிப்பால் சிறு சாகுபடியாளர்களிடையிலும் விவசாயி களிடையிலும் ஏற்படும் ஒழுங்குக் குலைவுகள் — 313-15;
— விவசாயிகளின் வீட்டுத் தொழில்கள் — 319-20;
— வேளாண்மையைத் துணைத் தொழில் களோடு இணைத்தல் — 319-20.

வேண்டலும் வழங்கலும் [Demand and supply]

— தொழில் துறை முதலாளியின் வேண் டல்-வழங்கலும் முதலாளி வர்க்கமும் — 152-57;
— கூலியிலிருந்து தொழிலாளி மிச்சம் பிடித்தலும், அவசியப் பண்டங்களுக் கான அவரது வேண்டலும் — 154;
— முதலாளியின் வேண்டல்-வழங்கலும் மூலதனப் புரள்வும் — 155;
— உற்பத்தியின் அளவுவீதமும் வேண்ட லும் — 187;

— வழங்கல்-வேண்டலின் பரிமாணம் — 190-91;
— அவசியப் பண்டங்களுக்கான வேண்டலும் அவற்றின் விலையும் — 448.

*வேலைக் காலம்* [Working period]

— வேலைக் காலத்தின் அளவும் சுழல்-மூலதன முதலீடும் — 304-05, 418;
— நீண்ட வேலைக் காலம் தேவைப்படுகிற தொழில் முயற்சிகள் — 307-08;
— வேலைக் காலத்தைக் குறைக்கும் வழிவகைகள் — 307-08, 309;
— முன்னீடு செய்யப்படும் மூலதனமும் வேலைக் காலத்தின் குறைப்பும் — 309;
— வேளாண்மையில் வேலைக் காலத்தைக் குறைக்கும் வழிவகைகள் — 312-14;
— உற்பத்திக் காலமும் வேலைக் காலமும் — 312-24;
— வேலைக் காலமும் நிலை-மூலதனமும் — 364-67;
— வேலைக் காலத்தின் குறைப்பும் திறனுடைச் சரக்கிருப்பும் — 379-80;
— வேலைக் காலமும் பொருளாயத உற்பத்தி நிலைமைகளும் — 416, 470-71.

*வேலை-நாள்* [Working-day]

— வேலை-நாளும் வேலைக் காலமும் — 302;
— வேலை-நாளின் கால அளவும் நிலை-மூலதனத்தை ஈடுபடுத்துதலும் — 313-14;
— வேலை-நாளும் உபரி-மதிப்பின் உற்பத்தியும் — 508-09.

*வேலையின்மை* [Unemployment]

— வேலையின்மையும் மிகையுற்பத்தி நெருக்கடியும் — 415, 542.

*வேளாண்மை (பயிர்த்தொழில்)* [Agriculture]

— சாகுபடியாளரது பொருளாதாரத்தின் சரக்கு உற்பத்தித் தன்மை — 150-51;
— இயற்கைப் பொருளாதாரம் — 151, 152;
— கச்சாப் பொருள் உற்பத்தி — 185-86;
— உற்பத்தி விரிவாக்கம் — 225;
— வேளாண்மையில் ஈடுபடுத்தப்படும் மூலதனம் குறித்து கெனே — 248;
— வேளாண்மைக்கு வரிகளும் வாடகையும் ஊறு செய்தல் — 312-13;
— வேளாண்மையில் வேலைக் காலம் — 312-13, 318-19;
— வேளாண்மையில் உற்பத்திக் காலத்துக்கும் வேலைக் காலத்துக்கும் இடையிலான வேறுபாடு — 318-19, 320, 322, 327-28;
— விவசாயத் தொழிலாளியின் நிலைமை — 320;
— வேளாண்மையில் புரள்வுக் காலத்தை குறுக்குதல் — 322-25·
— உற்பத்திக் காலமும் காடு வளர்ப்பும் — 323-24, 327-28;
— வேளாண்மையில் புரள்வுச் சகடம் — 328-29;
— வேளாண்மையில் பொருளாதார வழியிலும் இயற்கை வழியிலுமான மறுவுற்பத்தி நிகழ்முறை — 473-74;
— வேளாண்மையில் உழைப்புச் சக்தியை ஈடுபடுத்தல் — 596, 638;
— வேளாண்மையில் மாறா-மூலதனத்தின் மறுவுற்பத்தி — 692-94.

மேலும் பார்க்கவும்: *கால்நடை வளர்ப்பு*.

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

ISBN No. : 81-234-0588-X
CODE No. : A993

PRICE: Rs.900.00